கணபதி துணை.

இளங்கோவடிகளருளிச்செய்த

சிலப்பதிகார மூலமும்

அரும்பதவுரையும்

அடியார்க்குநல்லாருரையும்

இவை

உத்தமதானபுரம்

மஹாமஹோபாத்தியாய

வே. சாமிநாதையரால்

பல பிரதிரூபங்களைக்கொண்டு

பரிசோதித்து,

பலவகை ஆராய்ச்சிக் குறிப்புக்களுடன்

திருக்கைலாயபரம்பரைத்

திருவாவடுதுறையாதீனகர்த்தரவர்களாகிய

ஸ்ரீலஸ்ரீ,

சுப்பிரமணிய தேசிகரவர்களுடைய

உதவியைக்கொண்டு

சென்னை:

கமர்ஷியல் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பெற்றன.

ரௌத்திரி ஹ்ரு

1920.

(Copyright Registered)

இரண்டாம்பதிப்பு.] [இதன்விலை ரூபா. 8-12-0.

Formes 1 to 74 printed at the Ganesa Press
and
the remaining portion at the Commercial Press.

இப்புத்தகத்தில் அடங்கியவை.

பக்கம்.

க. இப்பதிப்பில் எடுத்துக்காட்டிய நூற்பெயர்கள் முதலிய வற்றின் முதற்குறிப்பகராதி. 5

உ. முகவுரை. 7

ங. இளங்கோவடிகள் வரலாறு. 17

ச. அரும்பதவுரையாசிரியர் வரலாறு. 19

ஞ. அடியார்க்குநல்லார் வரலாறு. ,,

ட. சிலப்பதிகாரத்தாலும் உரைகளாலும் தெரிந்தஅரசர் பெயர் முதலியன. 20

ண. சிலப்பதிகாரக்கதைச் சுருக்கம். 22

அ. சிலப்பதிகாரமூலமும் அரும்பதவுரையும் அடியார்க்கு நல்லாருரையும். க - ஞசுங

பதிகம் ... க

உரைப்பாயிரம் ... சு

அடியார்க்கு நல்லாருரைச் சிறப்புப்பாயிரம் ... கக

உரைபெறு கட்டுரை ... ங0

நூற்சிறப்புப் பாயிரம் ... ங உ

க. புகார்க்காண்டம்.

க. மங்கலவாழ்த்துப்பாடல் ... ங ங

உ. மனையறம் படுத்தகாதை ... ச உ

ங. அரங்கேற்றுகாதை ... ஞசு

ச. அந்திமாலைச்சிறப்புச்செய்காதை ... கஉ ங

ஞ. இந்திரவிழவூரெடுத்தகாதை ... க ங உ

ட. கடலாடுகாதை ... கஎ ஞ

ண. கானல்வரி ... உ0 ங

அ. வேனிற்காதை ... உ உ0

சு. கனாத்திறமுரைத்தகாதை ... உ ச க

க0. நாடுகாண்காதை ... உ ஞ ச

இப்புத்தகத்தில் அடங்கியவை.

உ. மதுரைக்காண்டம்.

பக்கம்.

கக. காடுகாண்காதை ... உகக
கஉ. வேட்டுவவரி ... ஙகங
கங. புறஞ்சேரியிறுத்தகாதை ... ஙஙஉ
கச. ஊர்காண்காதை ... ஙடுசு
கஞ. அடைக்கலக்காதை ... ஙகக
கசு. கொலைக்களக்காதை ... சகசு
கஎ. ஆய்ச்சியர்குரவை ... சசக
கஅ. துன்பமாலை ... சசுஉ
கக. ஊர்சூழ்வரி ... சசுக
உ0. வழக்குரைகாதை ... சஅ0
உக. வஞ்சினமாலை ... சஅஎ
உஉ. அழற்படுகாதை ... சகஙு
உங. கட்டுரைகாதை ... ஞ0க

ஈ. வஞ்சிக்காண்டம்.

உச. குன்றக்குரவை ... ஞகங
உஞ. காட்சிக்காதை ... ஞஉக
உசு. கால்கோட்காதை ... ஞஙங
உஎ. நீர்ப்படைக்காதை ... ஞசஎ
உஅ. நடுகற்காதை ... ஞசு0
உக. வாழ்த்துக்காதை ... ஞஎங
ஙo. பிரம்தருகாதை ... ஞஅஉ
நூற்கட்டுரை ... ஞகங

கூ. விளங்காமேற்கோளகராதி. ஞகூச
கo. அரும்பதமுதலியவற்றின் அகராதி. ஞகூக
கக. பிழையும் திருத்தமும். எஞச

இப்பதிப்பில் எடுத்துக்காட்டிய நூற்பெயர்கள் முதலியவற்றின் முதற்குறிப்பகராதி.

அக்க - அக்கீகுமாரன்வதைப்படலம்.
அகத் - அகத்திணையியல்.
அகநா - அகநானூறு.
அடியார் - அடியார்க்குநல்லாருரை.
அறநெறி - அறநெறிச்சாரம்.
ஆசார - ஆசாரக்கோவை.
ஆசிவக - ஆசிவகவாதச்சருக்கம்.
ஆத்திரையன் - ஆத்திரையன்போரா
ஆற்று - ஆற்றுப்படலம். [சிரியன்.
இ . கொ - இலக்கணக்கொத்து.
இரணிய - இரணியவதைப்படலம்.
இராச - இராசபாரம்பரியம்.
இராசராச - இராசராசசோழனுலா.
இ . வி - இலக்கண விளக்கம்.
இளம்-இளம்பூரணருரை.
இறை - இறையனாரகப்பொருளுரை.
இன்னு - இன்னுநாற்பது.
உத்தர - உத்தரகாண்டம்.
உயிர்மயங்கு - உயிர்மயங்கியல்.
உரிச் - உரிச்சொல்லியல்.
எச், எச்ச - எச்சவியல்.
எழுச்சி - எழுச்சிப்படலம்.
ஐங்குறு - ஐங்குறுநூறு.
ஒழிபு - ஒழிபியல்.
கடவுள் - கடவுள்வாழ்த்து.
கடை - கடைதிறப்பு.
கந்த - கந்தபுராணம்.
கம்ப - கம்பராமாயணம்.
கருத்தமன் - கருத்தமன் மணம்புண
ர்ந்து கபிலற் பெற்றவத்தியாயம்.
கல் - கல்லாடம்.
கல்யாண - கல்யாணச்சருக்கம்.
கலிங்க, கலிங்கத்து - கலிங்கத்துப்
கலி, கலித் - கலித்தொகை. [பரணி.
களம் - களம்பாடியது.
களவு - களவியல்.
காமதக - காமதகனப்படலம்.
கௌவி - கௌவியாக்கம்.
கும்பகருணன்வதை - கும்பகருணன்
வதைப்படலம். [லம்.
குலமுறை - குலமுறைகௌத்துபட
குலோத்துங்க - குலோத்துங்கசோழ
னுலா. [கரப்புணரியல்.
குற்றியல், குற்றியலுகர - குற்றியலு
குறள், திருக் - திருக்குறள்.
குறிஞ்சி - குறிஞ்சிப்பாட்டு.
குறுந் - குறுந்தொகை.
கூர்ம - கூர்மபுராணம்.
கோயில் - கோயில்பாடியது.
கோலங்காண் - கோலங்காண்படலம்.
சதகம் - திருச்சதகம்.
சிலப் - சிலப்பதிகாரம்.
சிறுபஞ்ச - சிறுபஞ்சமூலம்.
சிறுபாண் - சிறுபாணாற்றுப்படை.
சீபரி - சீபரிபூரணப்படலம்.
சீய - சீயவதைச்சருக்கம்.
சீவக - சீவகசிந்தாமணி.
சுயம் - சுயம்வரச்சருக்கம்.
சுவேதவராக - சுவேதவராக கற்ப
முறைத்தவத்தியாயம்.
சூ - சூத்திரம்.
சூளா - சூளாமணி.
செய் - செய்யுள், செய்யுளியல்.
சே - சேனாவரையருரை.
சேது - சேதுபுராணம்.
சௌனகாதியர் - சௌனகாதியர்
அன்பினிலையுரைத்தவத்தியாயம்.
தக்க - தக்கயாகப்பரணி.
தணிகை - திருத்தணிகைப்புராணம்.
தரும - தருமவாதச் சருக்கம்.
திக் - திக்குவிசயப்படலம்.
திணைமா - திணைமாலைநூற்றைம்பது.

திருக்குறிப்பு - திருக்குறிப்புத் தொண்டநாயனார் புராணம்.
திருச்சிற், திருச்சிற்றம் - திருச்சிற்றம்பலக்கோவையார்.
திருவம்பல - திருவம்பலச்சருக்கம்.
திருவவதார - திருவவதாரப்படலம்.
திருவா - திருவாசகம். [ஞம்.
திருவாதவூர் - திருவாதவூர்புரா
திருவாரூர் - திருவாரூர்ச்சிறப்பு.
திருவால - திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணம்.
திருவிளை - திருவிளையாடற்புராணம்.
திவ் - திவ்யப்பிரபந்தம்.
தும்பை - தும்பைப்படலம்.
தூது - தூதுச்சருக்கம்.
தே - தேவாரம்.
தேவிபுர - தேவிபுரச்சருக்கம்.
தொகை - தொகைமரபு.
தொல் - தொல்காப்பியம்.
ந - நச்சினார்க்கினியருரை.
நகர - நகரப்படலம்.
நம்பி, நாற்கவி - நாற்கவிராயநம்பியகப்பொருள்விளக்கம்.
ந. வி, நன். விருத்தி - நன்னூல் விருத்தியுரை.
நற் - நற்றிணை. [நன் - நன்னூல்.
நா - திருநாவுக்கரசுநாயனார்.
நாடு - நாட்டுப்படலம்.
நாலடி - நாலடியார்
நாற்மணி - நான்மணிக்கடிகை.
நீல, நீலகேசி - நீலகேசித்திரட்டு.
நெடுநல் - நெடுநல்வாடை.
ப, பக் - பக்கம்.
பட், பட்டினப் - பட்டினப்பாலை.
பத், பத்து - பத்துப்பாட்டு.
பதி - பதிகம்.
பதிற் - பதிற்றுப்பத்து.
பரி - பரிபாடல்.
பரி, பரிமேல் - பரிமேலழகருரை.
பழ - பழமொழி.
பா - பாடபேதம்.
பாகவத - பாகவதபுராணம்.
பாடாண் - பாடாண்படலம்.
பி. ம் - பிரதிபேதம்.
பிர, பிரயோக - பிரயோகவிவேகம்.
பிறப்பு - பிறப்பியல்.
பு.வெ-புறப்பொருள்வெண்பாமாலை.
புள்ளி - புள்ளிமயங்கியல்.
புறத்,புறத்திணை - புறத்திணையியல்.
புறநா - புறநானூறு.
பெயர் - பெயரியல்.
பெரிய - பெரியதிருமொழி, பெரிய
பெருங் - பெருங்கதை. [புராணம்.
பெரும்பாண் - பெரும்பாணாற்றுப்
பேர் - பேராசிரியருரை. [படை.
பொருந - பொருநராற்றுப்படை.
மணி - மணிமேகலை.
மதுரை - மதுரைக்காஞ்சி.
மந்திர, மந்திரசாலை - மந்திரசாலைச் சருக்கம்.
மயிலேறும்பெருமாள் - மயிலேறும் பெருமாள்பிள்ளையுரை.
மயிலை - மயிலைநாதருரை.
மரபு - மரபியல்.
மலைபடு - மலைபடுகடாம்.
மனோன்மணீயம் - மனோன்மணீயம்பிள்ளைத்தகாதை.
முதற்போர் - முதற்போர்ச்சருக்கம்.
முருகு - திருமுருகாற்றுப்படை.
மூலை - மூலைப்பாட்டு.
மெய் - மெய்ப்பாட்டியல்.
மேற் - மேற்கோள்.
யா. கா - யாப்பருங்கலக்காரிகை.
யா. வி - யாப்பருங்கலவிருத்தி.
வாகை - வாகைப்படலம்.
வாசுதேவனை - வாசுதேவனைப்படைத்தணையழைத்த சருக்கம்.
விக்கிரம - விக்கிரமசோழனுலா.
வி. பாரதம் - வில்லிபுத்தூராழ்வார் பாரதம்.
விளி - விளிமரபு.
வெட்சி - வெட்சிப்படலம்.

உ

கணபதி துணை.

முகவுரை.

"சந்தனப் பொதியத் திடவரைச் செந்தமிழ்ப்
பரமா சாரியன் பதங்கள்
சிரமேற் கொள்ளுதும் திகழ்தரப் பொருட்டே."

தமிழ்ப்பாஷையிலுள்ள பழையகாப்பியமைந்தனுள் ஒன்றாகிய சிலப்பதிகாரமென்பது சேரமுனியாகிய இளங்கோவடிகளால் இயற்றப்பெற்றது; பழைய உரையாசிரியர்களால் எடுத்துக்காட்டப்படும் பிரமாணநூல்களுளொன்று; சொற்சுவை பொருட்சுவைகளிற் சிறந்து விளங்குவது; எவ்வெப்பொருளைச் சொல்லினும் அவ்வப்பொருளை நேரிற்கண்டாற்போல மனத்திற்குத் தோற்றும் வண்ணம் நன்குபுலப்படுத்தும் தெள்ளிய இனிய நன்னடையையுடையது; காவிரிப்பூம்பட்டினத்திலிருந்த பெருங்குடிவாணிகர் மரபினராகிய கற்பிற்சிறந்த கண்ணகி அவள்கணவன்கோவலன் என்பவருடைய சரித்திரத்தை விரித்துக்கூறுவது; தமிழ்நாட்டரசர் மூவருடைய இராசதானிகளாகிய புகார் (காவிரிப்பூம்பட்டினம்), மதுரை, வஞ்சியென்னும் மூன்றன்பெருமைகளையும்விளக்குவது; பண்டைக்காலத்திருந்த பலவகை மாந்தருடைய ஒழுக்கம்முதலியவற்றை இக்காலத்தார் எளிதில் தெரிந்துகொள்ளுதற்குச் சிறந்த கருவியாக்வுள்ளது; அரசர் நீதியிற் சிறிது பிழைப்பினும் அவரை அறக்கடவுள் கூற்றுயுய்ன்று கொல்லுமென்பதும், கற்புடைமகளிரை மக்களேயன்றித் தேவரும் முனிவரும் துதித்தல் இயல்பென்பதும், இருவினையும் செய்தமுறையே செய்தோனை நாடிவந்து தம் பயனை நுகர்விக்குமென்பதுமாகிய இம்மூன்றினையும் முக்கியப்பொருளாகக்கொண்டு இளங்கோவடிகளாற் செய்யப்பட்டது ; இவற்றைச் சிலம்புகாரணமாகத் தெரிவித்தலின் இந்நூல் சிலப்பதிகாரமென்னும் பெயர் பெற்றது.

இன்னும் முத்தமிழும் விரவப்பெற்றதாதலின், இந்நூல் இயலிசை நாடகப்பொருட்டொடர்நிலைச்செய்யுளென்றும், நாடகவுறுப்புக்களை உடைத்தாதலின் நாடகக்காப்பியமென்றும், உரைப்பாட்டும் இசைப்பாட்டும் இடையிடையே விரவப்பெற்றதாதலின் உரையிடையிட்டபாட்டுடைச் செய்யுளென்றும் பெயர்பெறும். தொல்காப்பியம் செய்யுளியல், களஉ-ஆம் சூத்திரவுரையில் நச்சினார்க்கினியர், "பாட்டிடைவைத்த குறிப்பினானுமென்பது ஒரு பாட்டினை இடையிடைக்கொண்டு நிற்குங் கருத்தினான் வருவனவும் எ - று; அவை தகடூர் யாத்திரையும் சிலப்பதிகாரமும் போல்வன" என்றும், "தொன்மைதானே, உரையொடு புணர்ந்த பழமை மேற்றே" (வீ. சூ-உஉ) என்பதனுரையில் "அவை பெருந்தேவனார்செய்த பாரதமும் தகடூர் யாத்திரையும் போல்வன; சிலப்பதிகாரமும் அதன்பாற்படும்" என்றும் எழுதியிருத்தல் இங்கே அறியத்தக்கது.

"சிந்தா மணியாஞ் சிலப்பதிகா ரம்படைத்தான்" (தணிகையுலா, நுஉசு) எனச் சிலேடையில் இந்நூற்பெயர் அழகுற அமைந்திருத்தலும், வஞ்சினமாலையில் நு-ஆம் அடி முதலியவற்றிற் கூறப்பெற்றுள்ள கற்புடைமாதர்கள், பட்டினத்துப்பிள்ளையார் புராணத்துப் பூம்புகார்ச் சருக்கத்தும் "பழிமான மூந்தம் மனையறங் காத்தலும் பார்த்திபரைத், தொழுமா தரவும் பெறுங்கற்பி னூற்று நித் தோர்க்குச் செம்பொன், பொழிமான துங்கன் குலோத்துங்க சோழன் புகார்ப்பிறந்தா, ரெழுமாத ரோடிவ ளெண்மாத ராவள்" என்னும் குலோத்துங்கசோழன்கோவை சஉசு-ஆம் பாடலிலும் பாராட்டப்பெற்றிருத்தலும் அறிந்து இன்புறற்பாலன.

ஊர்காண்காதை கஅ0-ஆம் அடிமுதலியவற்றிலும் அவற்றின் உரைகளிலும் காணப்படும் நவமணியிலக்கணங்கள் திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணத்தில், மாணிக்கம் விற்ற திருவிளையாடலிலும் காணப்படுகின்றன.

இக்கதை நடந்தகாலமும் இளங்கோவடிகள் காலமும் ஒன்றென்றும் இது முதலில் தமிழிலேயே அவராற்செய்யப்பட்டதென்றும் இந்நூற் பதிகச்செய்யுளாலும், வரந்தருகாதையாலும் விளங்கு

கின்றமையின், இச்சரித்திரம் வேறுபாஷையிலிருந்துவந்ததென்று சொல்வதற்கிடமில்லை. இதனாலேயே இதன் பல பகுதிகள் காதை யென்னும் பெயர் பெற்றனபோலும்.

இச்சிலப்பதிகாரம், இளங்கோவடிகளாலேயே செய்யப்பட்ட தற்குக் காரணமும் கதைச்சுருக்கமும் அமைந்துள்ள பதிகச்செய் யுளை முதலிற்பெற்று, மங்கலவாழ்த்துப்பாடல் முதலிய பத்துறுப் புக்களையுடைய புகார்க்காண்டமும், காடுகாண்காதைமுதலிய பதின் மூன்று உறுப்புக்களையுடைய மதுரைக்காண்டமும், குன்றக் குரவை முதலிய ஏழுறுப்புக்களையுடைய வஞ்சிக்காண்டமுமாகப் பகுக்கப்பெற்றுள்ளது. இதில் இயற்றமிழின் பாகுபாடான வெண்பா, அகவற்பா, கலிப்பா என்பவைகளும், இசைத்தமிழின் பாகுபாடான ஆற்றுவரி, ஊசல்வரி, கந்துகவரி முதலியபாக்களும், நாடகத் தமிழின் பாகுபாடான உரைப்பாட்டுக்களும் வந்துள்ளன. இவற் றுள் மிகுதியாகவுள்ளவை அகவற்பாக்களே. இவை, தொல்காப் பியம் செய்யுளியல், கருவி-ஆம் சூத்திரவுரையில் இளம்பூரணரால் பெரியபாட்டுக்கு உதாரணமாகக் காட்டப்பெற்றுள்ளன.

இந்நூற்கு அரும்பதவுரையென்றும், அடியார்க்குநல்லாருரை யென்றும் இரண்டுரைகளுண்டு. இந்திரவிழவூரெடுத்தகாதையில், "ஐம்பெருங் குழுவு மெண்பே ராயமும்" [ப. கசுஎ] என்பதன் விசேடவுரையில், 'இனி...எனக்காட்டுவர் அரும்பதவுரையாசிரியர்' என்று அடியார்க்குநல்லார் எழுதியிருத்தலால், இவ்விரண்டுரையுள், அரும்பதவுரையே மூந்தியதென்று தெரிகிறது. இப்படியே அரும் பதவுரையிலுள்ள சிலகுறிப்புக்களால் அவ்வுரைக்குமுன்பும் இந் நூற்கு வேறு பழையவுரையொன்றிருந்திருக்கலாமென்றும் தோற் றுகிறது. அவ்வுரை இக்காலத்து அகப்படவில்லை. இந்நூலிற் சில சில இடங்களில் அரும்பதவுரையாசிரியர் கொண்டபாடம் வேறாக வும், அடியார்க்குநல்லார்கொண்டபாடம் வேறாகவுமுள்ளன. அடி யார்க்குநல்லார் உரையுள்ள பகுதிவரையில் அவர் கொண்ட மூல பாடமே இப்புத்தகத்திற் பதிப்பிக்கப்பெற்றிருக்கிறது. அரும்பத வுரையாசிரியர் கொண்டபாடம் வேறாயுள்ள இடங்களில் அப்பாடத் தைப்புலப்படுத்தற்கு ஆங்காங்கு அவ்வுரையின்முன், 'பா' (பாட பேதம்) என்னும் குறிப்பு அமைக்கப்பட்டுள்ளது.

அரும்பதவுரை, ஆங்காங்குள்ள திரிசொற்களின் பொருளை மட்டுமே ஒருவாறுபுலப்படுத்திச் சிற்சிலவிடத்து மேற்கோள்களை உடையதாய் மிகச் சுருக்கமாக இந்நூல் முழுமைக்கும் அமைந்துள்ளது. அவ்வுரையாசிரியர் பெயரும் அவர் இருந்தவிடமும் அவர்காலம் முதலியனவும் ஒருவாற்றானும் தெரிந்துகொள்ளக்கூடவில்லை.

பல வருடங்களுக்குமுன்பு மிகவும் பழையதாகிய இந்த அரும்பதவுரைப்பிரதியொன்று எனது நண்பர் தேரழுந்தூர் ஸ்ரீ சக்கரவர்த்தி இராஜகோபாலாசாரியரவர்களிடமிருந்து கிடைத்தது. அது மிகவும் பழுதுபட்டு ஏடுகள் குறைந்தும் உள்ள ஏடுகள் தேய்ந்தும் முன்னுள்ளவைகள் பின்னும் பின்னுள்ளவைகள்முன்னுமாக மாறி எழுதப்பட்டும் அதிகமாகப் பிழைகள் விரவியும் இருந்தது. அதனைத் ஒப்புநோக்கிப் பொருளை ஒழுங்குபடுத்துவதற்கு இன்னும் கையெழுத்துப் பிரதிகள் கிடைத்தால் அனுகூலமாகவிருக்குமென்று பலவிடங்களிலே தேடிப்பார்த்தும் வேறுபிரதி அகப்படவில்லை. அந்த ஒரு பிரதியையமட்டும் சோதித்துப் பதிப்பித்தற்கு எனக்குச் சிறிதும் மனமில்லையாயினும், இவ்வொருபிரதியும் சில நாளில் இறந்துவிடின் அதனைத் இவ்வுரை இறந்தேவிடுமாகையால் இதனைச் சோதித்துப் பதிப்பிக்கவேண்டுமென்று சில அன்பர்கள் தூண்டினமையால், துணிந்து பரிசோதித்து 1892-ஆம் வருஷத்தில் வெளிப்படுத்தலானேன். அப்பதிப்பில் அரும்பதவுரை இறுதியில் தனிப்பகுதியாகப் பதிப்பிக்கப்பெற்றிருந்தது; இந்தப் பதிப்பிற் சிலகாரணங்களால் மூலமுள்ள பக்கங்களிலேயே கீழே உரை பதிப்பிக்கப்பெற்றிருக்கின்றது. இதிலுள்ள மேற்கோள்களுள் அடியார்க்குநல்லார் உரையால் விளங்குவனவற்றின் முதல் இறுதிகளைமட்டும் விளக்கி அவற்றின் இடையில்(.....)இவ்வொற்றைப் புள்ளிகளிரைகள் போடுவித்தும், அவ்வுரையிற்காணப்படாத மேற்கோள்களை முற்றுங்காட்டியும், ஏடுகளிற் பழுதுபட்டுப்போன இடங்களைப் புலப்படுத்துவதற்கு அவ்வவ்விடங்களில் மேற்கூறிய ஒற்றைப்புள்ளிகளிரையை அமைத்தும், விளங்காதபாகத்தின் முதல் இறுதிகளில் [ ] இவ்விருதலைப்பகரம்சேர்த்தும், படிப்பவர்களுக்குப் பொருள்புலப்படுதற்கு மூலத்தின் வரியெண்களையேனும் முதலையேனும் அவ்வவ்விடங்களில் அமைத்தும் பதிப்பித்திருக்கிறேன்.

அடியார்க்குநல்லாருரை முதலிலிருந்து வழக்குரைகாதை வரையுமேயுள்ளது. மேற்கூறிய அரும்பதவுரையை அது பெரும் பாலுந்தழுவியும், சிறுபான்மைமறுத்தும், சிலவிடத்துப் பதவுரை யாயும் சிலவிடத்துப் பொழிப்புரையாயும் எழுதப்பட்டு, சொன் னயம் பொருணயங்களை இனிது புலப்படுத்தி, உரியவிடங்களில் இயற்றமிழ்ப்பகுதியாகிய ஐந்திலக்கணங்களையும், இசைத்தமிழ் நாடகத்தமிழின் பகுதிகளையும் பலநூன்மேற்கோள்முகமாக நன்கு விளக்கும் விசேடவுரையோடு கூடி மிகவிரிவாக அமைந் துள்ளது. இவ்வுரையில், இக்காலத்தில் விசேடித்து வழங்காத இசைத்தமிழ் நாடகத்தமிழிலக்கணங்களும் அவற்றிற்குரிய சூத் திரங்களும், பரிபாஷைகளும், இன்னும் வேறு பலவும் நிறைந் திருக்கின்றனவாதலால், இது நூலாராய்ச்சி செய்வோருக்கு மிகவும் பயன்படும். இவ்வுரையாசிரியர்க்கு நிரம்பையர்காவல ரென்று ஒரு பெயருண்டென்பதும், இவ்வுரை அக்காலத்திருந்த போப்பண்ணகாங்கேயர்கோன் என்ற ஒரு பிரபுவாற் செய்விக்கப் பட்டதென்பதும் கக-ஆம்பக்கத்துள்ள உரைச்சிறப்புப்பாயிரச்செய் யுட்களால் தெரிகின்றன.

இந்நூலை அடியார்க்குநல்லாருரையுடன் பலபிரதிரூபங்களைக் கொண்டு பரிசோதித்து எழுதுவோராலேற்றவழுக்களை இயன்ற வரையில் மாற்றி யாவருக்கும் பயன்படும்படி அச்சிடவேண்டு மென்று பெருநாளைக்குமுன்பே உண்டானவிருப்பம் நாள்தோறும் பெருகி என்மனத்தைக்கவர்ந்துகொண்டமையால், சீவகசிந்தாமணி யை முதலில் அச்சிட்டகாலந்தொடங்கிப் பல கையெழுத்துப்பிரதிக ளைத்தேடி அவற்றின்உதவியால் பரிசோதித்துவந்தேன்; அவற்றுள் ஒருபிரதியிலேனும் ஏழாவது கானல்வரிக்கும், இருபதாவது வழக் குரைகாதைமுதலிய பிற்பாகத்திற்கும்உரை காணப்படவில்லை. சில இடத்துள்ளவிசேடவுரைக்குறிப்பாற் கானல்வரிக்கு அடியார்க்குநல் லார் உரையெழுதியிருந்தாரென்றும், பின்னுள்ளவற்றிற்கும் எழுத ஆயத்தமாகவிருந்தாரென்றும் தெரிந்தமையால், அவைகளிருந்தால் எப்படியும்பெறலாமென்றெண்ணித் திருவாவடுதுறையாதீனம் தரு மபுரவாதீனம் திருவண்ணாமலையாதீனம் செங்கோல்மடம் முதலிய ஆதீனமடங்களிலும், சென்னையிலும் தஞ்சையிலுமுள்ள பழைய கையெழுத்துப்புத்தகசாலைகளிலும், ஆழ்வார்திருநகரி ஸ்ரீவைகுண்

டம் வெள்ளூர் திருச்செந்தூர் ஆறுமுகமங்கலம் ஊர்க்காடு ஊற்றுமலை கடையநல்லூர் கிருஷ்ணபுரம் பூழியன்குடி கல்லிடைக்குறிச்சி விக்கிரமசிங்கபுரம் களக்காடு மேலகரம் செங்கோட்டை தென்காசி திருநெல்வேலி வண்ணார்பேட்டை பாளையங்கோட்டை கும்பகோணம் கொட்டையூர் சீகாழி சிதம்பரம் சேலம் பாகற்பட்டி தஞ்சை திரிசிரபுரம் திருப்பாதிரிப்புலியூர் தழாவூர் மதுரை மிதிலைப்பட்டி செவ்வூர் சென்னபட்டணம் திருமயிலை முதலிய பற்பலவூர்களிலுள்ள பரம்பரைத்தமிழ்வித்துவான்கள் வீடுகளிலும் சென்றுதேடியும் இத்தமிழ்நாட்டில் நான் செல்லக் கூடாத இடங்களிலும் * இங்கிலாந்து பாரிஸ்நகரம் இவற்றிலிருக்கும் கையெழுத்துப் புத்தகசாலைகளிலும் ஆங்காங்குள்ள அன்பர்களைக்கொண்டு தேடுவித்தும் பார்த்தேன். அங்ஙனம்செய்தும் அவற்றின் உரைப்பகுதி கிடைக்கவில்லை. ஆதலால், தேடுவதிற் பயனில்லையென்றெண்ணிக் கிடைத்தவுரையையும் மூலமுழுவதையும் மேற்கூறிய 1892-ஆம்வருஷத்தில் முதன்முறை அச்சிட்டுமுடித்தேன்; அடியார்க்குநல்லாருரையில்லாத பகுதிகள் அரும்பதவுரையின் பேருதவியைக்கொண்டே ஒருவாறு பரிசோதிக்கப் பெற்றன.

இவற்றிலுள்ள இசைநாடகப்பகுதிகள், எனக்குக் கிடைத்த **சச்சபுடவேண்பா**, தாளசமுத்திரம், †**சுத்தானந்தப்பிரகாசமுதலிய** பழைய தமிழ்நூல்களைக்கொண்டும் இசையிலும் பரதத்திலும் வல்லோரைவினவியும் ஒருவாறு ஆராய்ச்சிசெய்யப்பெற்றன. அங்ஙனம் செய்யப்பட்டும் சிலபாகமட்டும் சற்றே விளங்கின. இசை நாடகங்களுக்குரிய பரிபாஷைகளிற் பெரும்பாலன வடமொழியிலும் தென்மொழியிலும்வேறுவேறு உருவங்களோடு கூடியிருத்தலால் இவற்றிலுள்ள சொற்கள்பல வடநூல்களிலுல் தெரிந்து கொள்ளக்

* இங்கிலாந்திலுள்ள கையெழுத்துப்புத்தகசாலைகளில்தேடிப்பார்த்தகனவான் கொழும்பு நகரத்துப் பிரபு சிகாமணியாக விளங்கிய ஸ்ரீ பொ. குமாரசாமி முதலியாரவர்கள்; பாரிஸ்நகரத்துள்ள கையெழுத்துப் புத்தகசாலையில் தேடிப்பார்த்து உதவிசெய்தவர், புரொபெஸர், ஜூலியன் வின்ஸன் என்பவர்.

† இந்நூல் திருவல்லிக்கேணி ஸோமயாஜி ஸ்ரீவேங்கடராமஐயங்காரவர்களாற்கொடுத்தது.

கூடவில்லை. அன்றியும் ஊர்காண்காதை பிலுள்ள நவமணியிலக்க ணமும் வேறுசிலவும் விசாரித்ததில் இப்பொழுதுள்ள வடநூல்க ளிற் கூறிய இலக்கணத்தோடு சிற்சில மாறுபாடுள்ளனவாகத் தெரிந் தன. இந்நூலில் அடியார்க்குநல்லார் ஒவ்வொன்றையும் பழைய தமிழ்நூல் மேற்கோள்களைக்கொண்டு நன்குபுலப்படுத்தியிருந்தும் அப்பழைய நூல்களும் அவற்றின்கருத்தை ஒருவாறு எடுத்துச் சொல்வோரும் இக்காலத்தில்லாமையால்அவைஅறிதற்கரியனவாயி ருக்கின்றன. அன்றியும் இவற்றில்வந்திருக்கிற இயற்றமிழ்ச் சொற் களுட்சில இக்காலத்து வழங்காதொழிந்தமையால் அவற்றிற்குப் பொருள் ஒருதலையாகப் புலப்படவில்லை; அவற்றினுருவமும்விளங்க வில்லை ஆயினும் இப்படியே மூன்பு விளங்காதிருந்தவைகள்பல பின்பு இந்நூலாலும் இவ்வுரையாலும் ஒருவாறுவிளங்கிவருத லால் இதுபோலப் பழையநூல்களையும் உரைகளையும் ஒழுங்காக ஆராய்ச்சி செய்யச்செய்ய அவைகளும் விளங்குமென்பது என் துணிபாதலின் உலகவழக்கு, செய்யுள்வழக்கு என்னும் இரண் டையும் கருவியாகக்கொண்டு பலமுறை ஆராய்ச்சிசெய்து பிரதி களில் இருந்தவாறே பதிப்பித்தேன்.

மேற்கூறிய பழைய பிரதிகளுட்பல, இனி வழுப்படவேண்டு மென்பதற்கிடமில்லாமற் பிழைபொதிந்து, அநேகவருடங்களாகத் தம்மைப்படிப்போரும் படிப்பிப்போருமில்லையென்பதையும் நூல் களைப் பெயர்த்தெழுதித் தொகுத்து வைத்தலையே விரதமாகக் கொண்ட சிலபுண்ணியசாலிகளாலேயே தாம் உருக்கொண்டிருத் தலையும் நன்கு புலப்படுத்தின. ஒன்றொடொன்று ஒவ்வாது பிறழ் ந்து குறைவுற்றுப் பழுதுபட்டுப் பொருட்டொடர்பின்றிக்கிடந்த இப்பிரதிகளைப் பரிசோதித்த துன்பத்தை உள்ளுங்கால் உள்ளம் உருகும்.

இதன் முதற்பதிப்பு வெளியாகி ஏறக்குறைய மூப்பது வருஷங் களாகியும் முன்அகப்படாத பகுதிகளின் உரையுள்ள பிரதி இது வரை கிடைக்கவில்லை. இனி எப்பொழுதுகிடைப்பினும் அதனைப் பரிசோதித்து வெளிப்படுத்தலாமென்பது எனது கருத்தாதலின் அதனைவைத்திருப்போர் தயைசெய்து அனுப்புவார்களாயின் உட னே அவர்களுக்கு இயன்ற உதவிபுரிந்து அதனை அச்சிட்டு அவர் கள்பெயருடன் வெளிப்படுத்தச் சித்தமாக இருக்கிறேன்.

இந்நூலைக்கொண்டு வேறுநூல்களையும், அவற்றைக்கொண்டு இதனையும் ஆராய்ந்து உண்மைகாண்டற்குக்கருவியாக மூலத்திலும் உரையிலும் காணப்பட்ட பலவிஷயங்களும் தொகையகராதிமுதலியனவாக முதற்பதிப்பில் அதன் முகவுரையின் பின்னர்ப் பதிப்பிக்கப் பெற்றிருந்தன. இப்பதிப்பில் அவைகளையும், மூலத்திலும் இருவகை உரைகளிலும் காணப்பட்டு முன்பு பதிப்பிக்கப்பெறுமலிருந்த அரும்பதங்களையும், அருந்தொடர்களையும், சில உவமான உவமேயங்களையும், பழையசெய்திகளையும், வழக்கங்களையும் ஒருங்குசேர்த்து ஒரே அகராதியாக நூலின்பின் ' அரும்பதமுதலியவற்றின் அகராதி' என்னும் பெயருடன் பதிப்பிக்கலானேன். இவ்வகராதியில் சில அரும்பதங்களுக்கு உரையும் எழுதப் பெற்றிருக்கிறது. இந்நூற் பகுதிகளை ஒத்த பிறநூற்பகுதிகளும், இந்நூற்பகுதிகள் மேற்கோளாக வந்துள்ள இடங்களும் மூலமுள்ள பக்கத்தில் அரும்பதவுரைக்குக் கீழே குறிக்கப்பெற்றுள்ளன. முதற்பதிப்பில் 'என' என்று கொண்ட ஆசிரியப்பாக்களின் இறுதியசை இந்தப் பதிப்பில் 'என்' என்று கொள்ளப்பட்டது.

முதற்பதிப்பின் பரிசோதனைக்குக்கிடைத்த கையெழுத்துப் பிரதிகளின் விவரம் :—

அடியார்க்குநல்லாருரையோடுகூடியவை:

			பிரதி	
திருவாவடுதுறையாதீனத்துப்				
	ஸ்ரீ	ஆதீனத்து மஹாவித்துவான்		
	ஸ்ரீ	வி. மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள்	,,	க
திரிசிரபுரம்	,,	சி. தியாகராசசெட்டியாரவர்கள்	,,	க
திருநெல்வேலி	,,	சாலிவாடீசுவர ஓதுவாரவர்கள்	,,	க
சேலம்	,,	இராமசாமி முதலியாரவர்கள்	,,	க
சிதம்பரம்	,,	சாமி ஐயங்காரவர்கள்	,,	க
சென்னை	,,	தொ. வேலாயுதமுதலியாரவர்கள்	,,	க
,,	,,	சூ. அப்பன்செட்டியாரவர்கள்	,,	க
,,	,,	குருசாமி ஐயாவர்கள்	,,	க
திருமயிலை	,,	அண்ணுசாமி உபாத்தியாயரவர்கள்	,,	க
யாழ்ப்பாணம்	,,	சி. வை. தாமோதரம்பிள்ளையவர்கள்	,,	ஞ
,,	,,	தி. குமாரசாமிச் செட்டியாரவர்கள்	,,	உ
,,	,,	வி. கனகசபைப்பிள்ளையவர்கள்	,,	க
		ஆக உரைப்பிரதி		கச

மூலப்பிரதிகள்.

	ஸ்ரீ வி. மீனுட்சிசுந்தரம்பிள்ளையவர்கள்	பிரதி	க
மிதிலைப்பட்டி	,, அழகியசிற்றம்பலக்கவிராயரவர்கள்	,,	க
திருநெல்வேலி	,, சாலிவாடீசுவர ஓதுவாரவர்கள்	,,	க
ஆறுமுகமங்கலம்	,, குமாரசாமி பிள்ளையவர்கள்	,,	க
திரிசிரபுரம்	,, அண்ணாசாமி பிள்ளையவர்கள்	,,	க
திருமயிலை	,, அண்ணாசாமி உபாத்தியாயரவர்கள்	,,	க
யாழ்ப்பாணம்	,, தி. குமாரசாமிச்செட்டியாரவர்கள்	,,	க
,,	,, வி. கனகசபைப்பிள்ளையவர்கள்	,,	க

ஆக மூலப்பிரதி ஆ

இத்தப்பதிப்பின் பரிசோதனைக்குக்கிடைத்த கையெழுத்துப் பிரதிகள்.

கொழும்புத்துறை	ஸ்ரீ குமாரசாமிச் செட்டியாரவர்கள்	தந்த பிரதி	க
ஆழ்வார்திருநகரி	ம-ா-ா-ஸ்ரீ பெரியதிருவடிக்கவிராயரவர்கள்	தேடித்தந்த	,, க
திருத்தணிகைச்சரவணப்பெருமாளையர்போராகிய	குருசாமி ஐயர்	தந்த*	,, க

இந்தக்கையெழுத்துப் பிரதிகளையுதவியவர்கள்பால் மிக்க நன்றி பாராட்டுகிறேன்.

இவற்றின் பரிசோதனையாலும் வேறுவகையான ஆராய்ச்சியாலும் இந்நூல் மூலமும் இருவகையுரைகளும் இப்போது அடைந்த திருத்தங்கள் சில.

இதனைப்பதிப்பிக்குங்காலத்து எனக்குச் சிறிதும் கவலையுண்டாகாதபடி, சென்னை இராசதானிக்கலாசாலைத்தமிழ்ப்பண்டிதர் ம-ா-ா-ஸ்ரீ இ. வை. அனந்தராமையரவர்களும், மயிலாப்பூர் பி. எஸ். ஹைஸ்கூல் முதல் தமிழ்ப்பண்டிதர் சிரஞ்சீவி, ம வே. துரைசாமி ஐயரும், முதற்பதிப்பிற்கு உடனிருந்து உதவிய திருமாளூர் ஸ்ரீ கிருஷ்ணையரவர்கள் குமாரர் சிரஞ்சீவி, கே. அருணசலஐயரும், சென்னை இராசதானிக் கையெழுத்துப் புத்தகசாலைத் தமிழ்ப் பண்டிதர் சிரஞ்சீவி, ஜி. சேஷாத்திரிஐயரும் ஆராய்தல் ஒப்புநோக்குதல் முதலிய பேருதவிகளை உள்ளன்புடன் செய்து வந்தார்கள்.

* இப்பிரதியில் அரும்பதவுரையின் சில ஏடுகள் இருந்தன.

உபகாரச்சம்பளம் பெற்றமையை அறிந்து எனக்கு ஒருவிதத் திலும் கவலையுண்டாகாதபடி ஆதரித்து நூற்பரிசோதனை விஷயத் தில் ஊக்கமளித்துவரும் திருக்கைலாயபரம்பரைத் திருவாவடு துறையாதீனகர்த்தரவர்களாகிய ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரவர் களையும், நூற்பரிசோதனைக்கு உடனிருந்து உதவி புரிபவர்கள் விஷயத்தில் நான் கவலையுறுவண்ணம் அவர்களுக்குப் பல வருடங் களாக மாதவேதனமளித்து ஆதரித்துவரும் ஸ்ரீசேது ஸம்ஸ்தானாதி பதிகளும், மதுரைத்தமிழ்ச் சங்கத்தலைவர்களும், சென்னைச் சட்டநிருபணசபை அங்கத்தினர்களுமான கௌரவம்பொருந்திய மகாராஜராஜஸ்ரீ பா. இராஜராஜேசுவர சேதுபதி மகாராஜா அவர் களையும் ஒருபொழுதும் மறவேன்.

இந்நூல் மூலமும் உரைகளும் கணேச அச்சுக்கூடத்திற் பதிப் பிக்கப்பெற்றன ; அதற்குவேண்டிய அனுகூலங்களைச் செய்துகொ டுத்த ம-ள-ள-ஸ்ரீ முருகேச முதலியாரவர்கள்பால் நன்றியறிவுடை யேன்.

தொழிலாளிகளுடைய மூட்டுப்பாடு மிகுதியாயுள்ள இக்காலத் தில் இப்புத்தகத்தின் ஏனைப்பகுதிகளைத் திருத்தமாக மிக்க விரை வில் நிறைவேறும்படி செய்வித்து உதவிய கமர்ஷியல் அச்சுக்கூடத் தாருடைய அன்புடைமை மிகவும் பாராட்டத்தக்கது.

இப்பதிப்பிற் காணும் பிழைகளைப் பொறுத்துக்கொள்ளும்படி விவேகிகளைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இம்முயற்சியிற் புகுத்தி நடத்தி ஊக்கமளித்து என்னைப் பாது காக்கும் தமிழ்த் தெய்வத்தை அனவரதமும் வந்திக்கின்றேன்.

"தியாகராஜவிலாஸம்"
திருவேட்டீசுவரன் பேட்டை.
6—12—1920.

இங்ஙனம்:
வே. சாமிநாதையன்

உ

இந்நூலாசிரியராகிய
இளங்கோவடிகள் வரலாறு.

இந்நூலாசிரியராகிய இளங்கோவடிகள் சேரநாட்டில் வஞ்சிநகரத் திருந்து அரசுசெய்த **சேரலாதனென்னும்** அரசனுடைய புத்திரர்; சேரன் **செங்குட்டுவனுடையதம்பி**; இதனால் இவர் முதலில் இளங்கோவென்று சொல்லப்பட்டுப் பின்பு துறவுபூண்டமையால் இளங்கோவடிகளென்று பெயர் பெற்றார்; இவர் துறவுபூண்டதற்குக்காரணம் இப்புத்தகத்தின் கடை-ஆம் பக்கம் முதலியவற்றாலும், இந்நூல் செய்ததற்குக்காரணம் இதன் பதிகத்து முதற்பாகத்தாலும் அதன் உரைகளாலும் விளங்கும்; துறவுபூண்ட பின்பே இந்நூல் இவராற் செய்யப்பட்டது. பத்தினியைத் துதித்தலையும் சில தருமங்களை உலகத்தார்க்குத் தெரிவிக்கவேண்டுமென்பதையும் எண்ணி இவர் இந்நூலைச் செய்தனர்; தமது மரபிலுள்ளாருடைய உயர்ச்சியைக் கூறுதல் பேர்லவே ஏனைச் சேர பாண்டியர்களுடைய உயர்வுகளையும் சிறிதும் வேறு பாடின்றி இவர் நன்றாகச்சொல்லியிருத்தலால், இவரது மனத்தூய்மை நன்கு புலப்படுகின்றது. இந்நூலினிடையிடையே சொல்லப்படுபவர்களுடைய சரித்திரநிகழ்ச்சியாற் போந்த நற்பயனையும் தீப்பயனையும் ஆங்காங்கு உலகத்தாரைநோக்கிச்சொல்லிப்போதல் இவர்க்கு இயல்பு. பின்னும் யாரேனும் மிக்க துன்பமனுபவித்ததாகச் சொல்லுங்கால் அத்துன்பத்திற்குக் காரணமாக முற்பிறப்பில் அவர்கள் தீவினை செய்ததைக்குறித்து இவர்மனம் இரங்கிற் றென்பதை ஆங்காங்குள்ள பாடற்பகுதிகள் நன்கு புலப்படுத்தும். இவர் மலைநாட்டினராதலால் இந்நூலில் அந்நாட்டுச்சொற்கள்பல அவ்வவ்விடத்து வந்துள்ளன.

இவர் இக்கதை நிகழ்ந்தகாலத்திருந்தவராதலாற் காவிரிப்பூம்பட்டினத் திலும் மதுரையிலும் நடந்த சரித்திரங்களை அறிந்தோர்வாய்க்கேட்டும் மலை நாட்டில் நிகழ்ந்தவற்றைக்கேட்டதோடு தாமே நேரிற்கண்டும் இந்நூலைச் செய்தனர். இங்ஙனம் செய்தாரென்பதை இந்நூற்பதிகமும், உரை-ஆவது கூ0-ஆவது காதைகளும் விளக்கும்.

இக்கதையோடு தொடர்புள்ளதாகிய மணிமேகலையின் கதையையும் இந்நூலினிறுதியிற்சேர்த்துப் பாடக்கருதியிருந்த இவர், 'இக்கதையைமணி மேகலையென்றபெயரால் ஒரு காப்பியமாக யான் செய்துமுடித்தேன்'என்று மதுரைத்தமிழாசிரியர் **கூலவாணிகன்சாத்தனார்** சொல்லக்கேட்டு அவ் வாறு செய்யாது விடுத்தனர்.

சமயம்.—கால்கோட்காதையிற் செங்குட்டுவன் இமயஞ் செல்லப் புறப்பட்டபொழுது, "நிலவுக்கதிர் முடித்த நீளிருஞ் சென்னி, யுலகுபொதி யுருவத் துயர்ந்தோன் சேவடி, மறஞ்சேர் வஞ்சி மாலை யொடுபுனைந், திறைஞ் சாச் சென்னி யிறைஞ்சி வலங்கொண்டு" [அடி, நிகூ,எ] எனவும், "ஆடக

மாடத் தறிதுயி லமர்ந்தோன், சேடங் கொண்டு சிலர்நின் றேத்தித், தெண் ணீர் கரந்த செஞ்சடைக் கடவுள், வண்ணச் சேவடி மணிமுடி வைத்தலி, னுங்கது வாங்கி யணிமணிப் புயத்துத், தாங்கினனுகி" [அடி, சுஉ-எ] என வும், செங்குட்டுவனே நோக்கி இமயத்தினின்றும் வந்தமுனிவர்கள் கூறிய தாக, "செஞ்சடை வானவ னருளினில் விளங்க, வஞ்சித் தோன்றிய வானவ கேளாய்" [அடி, கூஅ-கூ] எனவும், வரந்தருகாதையில் மாடலன் கூறிய தாக "ஆனே றூர்ந்தோ னருளினிற் றோன்றி, மாநிலம் விளக்கிய மன னவ னுதலின்" [அடி, கசக - உ] எனவும் இவரே கூறியிருத்தலாலும், இவர் அவனுடைய தம்பியாதலாலும் இவரது சமயம் சைவமென்று தோற்று கின்றது. இவருக்கு அடிகளென்று பெயர் வந்திருத்தலையும், பதிகத்தில், "சூணவாயிற் கோட்டத்தி" என்பதிற் கோட்டமென்றதற்கு 'அருகன்கோ யில்' என்று அடியார்க்கு நல்லார் பொருள் செய்திருத்தலையும், இந்நூலிற் சிலவிடத்துச் சைனமதக்கொள்கையை இவர் மிகுத்துக்கூறியிருத்தலையும் கொண்டு இவரதுசமயம் சைனமென்று ஐயுறுதற்கும் இடம் உண்டு.

காலம்.— "உரையிடை யிட்ட பாட்டுடைச் செய்யு, ளுரைசா லடிக ளருள மதனைக், கூல வாணிகன் சாத்தன் கேட்டனன்" என இந்நூற் பதிகத்திறுதியிலும், "இளங்கோ வேந்த னருளிக் கேட்ப, வளங்கெழு கூல வாணிகன் சாத்தன், மாவண் டமிழ்த்திற மணிமே கலைதுற, வாதைம் பாட்டினு ளறியவைத் தனனென்" என மணி மேகலையின் பதிகத்திறுதியிலும் கூறியிருத்தலால், இளங்கோவடிகளும் சாத்தனரும் ஒருவர்முன்னிலையில் ஒருவர் முறையே சிலப்பதிகாரத் தையும் மணிமேகலையையும் அரங்கேற்றினரென்று போதருதலானும், தொல் காப்பியச்செய்யுளியலில், "ஞகாரை முதலா" என்னும் (உசo) சூத்திரத் தின் விசேடவுரையில், 'சீத்தலைச்சாத்தனுரான்செய்யப்பட்ட மணிமே கலை' எனப்போராசிரியரெழுதியிருத்தலால் மேற்கூறியசாத்தனர் கடைச் சங்கப்புலவருளொருவராகிய சீத்தலைச்சாத்தனரென்று தெரிதலானும், இளங் கோவடிகள் காலம் கடைச்சங்கப்புலவர் காலமென்று நிச்சயிக்கப்படுகிறது.

இளங்கோவடிகளுக்குத் தமையனுகிய செங்குட்டுவன் பத்தினிக்கடவு ளாகிய கண்ணகியார்க்குக் கோயில்சமைத்து விழாக்கொண்டாடியகாலத்து இலங்கையரசனுகிய கயவாகுவென்பவன் உடனிருந்தானென்று வரந்தரு காதையாலும், அக்கயவாகுவும் இலங்கையிற் கண்ணகியார்க்குக் கோயில் கட்டுவித்து விழாக்கொண்டாடினனென்று இந்நூற்பதிகத்தைச்சார்ந்த உரைபெறுகட்டுரையாலுந் தெரிகின்றன. இற்றைக்குச் சற்றேறக்குறைய கஅ00-வருடங்களுக்கு முன்பு கயவாகுவென்னுமரசனொருவன் இருந்தா னென்று இலங்கைச்சரித்திரமாகிய மகாவம்சத்தாற் புலப்படுகின்றது. பின் னும் சற்றேறக்குறைய அ00-வருடங்களுக்குமுன்பு கயவாகுவென்னும் மற்றொராசனிருந்ததாகவும் அச்சரித்திரத்தால் தெரியவருகின்றது. ஆயினும், இந்நூலிற் கூறிய வேறு சில அரசர்களுடைய காலத்தை ஆராயும்போது இந்நூலாசிரியர்காலம் முதற்கயவாகுவின் காலமென்றே துணியப்படுகிறது.

அரும்பதவுரையாசிரியர் வரலாறு.

இவருடைய பெயர்முதலியவற்றுள் யாதொன்றும் தெரியவில்லை. இவ்வரும்பதவுரையையே பெருங்கருவியாகக்கொண்டு இந்நூலுக்கு அடியார்க்குநல்லார் உரைசெய்தனரென்பது இவ்விரண்டுரைகளையும் வைத்து ஒப்புநோக்கின் நன்கு விளங்கும்; ஆயினும் இந்நூலில் இவ்விரண்டு உரையாசிரியர்களுங்கொண்ட பாடம் சிலசிலவிடத்து வேறுபட்டுள்ளன; அவ்வேறுபாடுகள் அவ்வவ்விடத்துள்ள உரைநடைகளால் நன்கு புலப்படும். அடியார்க்கு நல்லாருரையிற் காணப்படாத பல மேற்கோள்களும் சிலநூற் பெயர்களும் இவ்வுரையிற் காணப்படுகின்றன. வாக்கியங்களின் முதலிறுதிகளேயேனும், முதலேமட்டுமேனும், சொற்களேயேனும் எழுதிப்பொருள் எழுதுவதும், ஒன்றையுமெழுதாது பொருளேமட்டும் எழுதிக்கொண்டு போவதும் இவ்வுரையாசிரியருடைய கொள்கையாக இருக்கின்றன. இதிற்சங்கச்செய்யுட்களுடைய கருத்துமுதலியவற்றை இவர் ஆங்காங்கு விளக்கியிருப்பதுடன் சிலசிலவிடத்து மிகச் செவ்விதாகப் பதசாரமும் எழுதியிருக்கிறார். அடியார்க்கு நல்லாருரையாற் புலப்படாத சிலவிஷயங்கள் இவ்வரும்பதவுரையால் விளங்குகின்றன. இவ்வுரையிற் பல விடங்களில் வாக்கியங்கள்பூர்ணமாக எழுதப்படவில்லை. சில பாகங்களுக்கு ஒருவகையாக உரையெழுதிப் பின்புவேறு உரையெழுதும்பொழுது அதனேப்புலப்படுத்தற்குரிய உம்மை முதலியன கிடையா. இவ்வுரையிலுள்ள முடிவுகளும் பொருளும் இல்லையாயின், அடியார்க்கு நல்லாருடைய உரைகிடையாத பாகங்களுக்குப் பொருள்காண்பது அரிது.

அடியார்க்குநல்லார்வரலாறு.

இவருடைய வருணம் சமயம் ஊர் காலம் ஆகிய இவற்றுள் ஒன்றும் புலப்படவில்லை; ஆனலும் நச்சினர்க்கினியரால் மறுக்கப்படுவனவற்றுட்சில இவருடைய கொள்கையாக இருத்தல்பற்றி இவரதுகாலம் நச்சினர்க்கினியருடைய காலத்திற்கு முந்தியதாயிருக்கலாமென்று ஊகிக்கப்படுகின்றது. இவர், மற்றையுரையாசிரியர்கள்போலன்றித் தாம் எடுத்துக்காட்டும் மேற்கோள்கள் இன்ன இன்ன நூல்களின்கண் உள்ளன வென்று பெரும்பாலும் புலப்படுத்தியிருக்கிறார். சிலசிலவிடத்துப் பதப்பிரயோசனமும் அலங்காரமும் மெய்ப்பாடுகளும் வேறு சிலகுறிப்புக்களும் இவராலெழுதப்பட்டுள்ளன.

ஐந்திணைக்குமுரிய முதற்பொருள் கருப்பொருள் உரிப்பொருளாகியஇவற்றுள் ஒவ்வொன்றின்வகை பலவற்றிற்கும் இந்நூலிலிருந்தேஉதாரணங்காட்டி விளக்கியிருக்கின்றனர். இந்நூல் செய்யப்படும்பொழுதிருந்த இசைத்தமிழ் நாடகத்தமிழ் நூல்கள் பலவும் இவர்காலத்து இறந்துபோனமையால், இவர் அவ்விசைநாடகப்பகுதிகட்குஇசைநுணுக்கம், இந்திரகாளியம், பஞ்சமரபு, பரதசேனபதியம், மதிவாணர்நாடகத்தமிழ்நூல் என்னும் ஐந்துநூல்களே

யுமே மேற்கோளாகக்கொண்டனர். இந்நூலுள் இந்திரவிழவூரெடுத்தகாதையில், "சித்திரைச் சித்திரைத் திங்கள் சேர்ந்தென" (அடி,சுரு) என்றும், கட்டுரைகாதையில்"ஆடித் திங்கட் பேரிருட் பக்கத்,தழல்சேர் குட்டத் தட்டமி ஞான்று, வெள்ளி வாரத்து" (அடி, கஙஉ - நு) என்றும் சொல்லப்பட்டுள்ள காலவரையறையைக் கொண்டும், அவ்வவ்விடத்து நிகழ்ந்தவற்றைக்கொண்டும் ஊகித்துக் கோவலன் கண்ணகி இருவரும் இன்னகாலத்துக் காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து புறப்பட்டார்களென்றும், இன்ன இன்னகாலத்து இன்னது இன்னது செய்தார்களென்றும் எழுதிக்கொண்டு போகிறார்; (பக்கம். உஉ, உசுக, ஙசநு-சு, ஙஎசு-எ, ஙகo) இதனால் இவருடைய கணிதநூற்பயிற்சி விளங்குகின்றது.

இவருடைய உரைநடை சிற்சிலவிடத்து எதுகை மோனை முதலியவற்றோடுகூடி இனியசுவையபயத்து செய்யுள்நடையாக அமைந்துள்ளது. ஒவ்வொரு பகுதியையும் தனித்தனியே படிட்போர்க்கு அவ்வப்பகுதி ஆங்காங்குள்ள உரையாலேயே புலப்படவேண்டுமென்பது இவருடைய கருத்தாதலால் முன்னெழுதியவற்றையே பின்னுமெழுதுவர்.இவர் கருத்து இன்னதாதலை இப்புத்தகத்தின் ஙஅஙஉ-ஆம் பக்கம் முதலியவற்றிற்காண்க.மூலத்தில் எவ்விடத்தேனும் திசைச்சொற்கள் வந்திருப்பின் அவற்றைத் தனித்தனியே எடுத்துக்காட்டி இன்னசொல் இன்னநாட்டுவழக்கென்றும், முற்காலத்து வழங்கிய பழமொழிகளின்கருத்து எவ்விடத்தேனும் வந்திருக்குமாயின்அவற்றைத் தனித்தனியே எடுத்துக்காட்டி இன்னது இன்ன பழமொழியென்றும் புலப்படுத்துவர். ஒருதலையாகப்பொருள்கொள்ளாது பலரும் தத்தமக்குத் தோற்றியவாறே பொருள் கொள்ளக்கிடந்த போற்றியென்பதை இவர் இகரவீற்றுவியங்கோளாகக்கொண்டு போற்றுவாயாகவென்று பொருள் செய்திருக்கிறார்; (பக்.ஙசஅ) நச்சினார்க்கினியரும் காட்டியென்பதை இகரவீற்றுவியங்கோளாகக்கொண்டார்ர் (சீவகசிந்தாமணி, சுசுசு.) இவர்,'கானல்வரியில் விரியக்கூறுதும்' (பக்.அஅ,கoo.) என்றும்,'முன்னர் ஆணி என்பதனுட் கூறினும்' (பக்.உஙஙு.) என்றும் எழுதியிருத்தலால், இவர் கானல்வரிக்கு உரை செய்திருந்தனரென்பதும், 'அழற்படுகாதைக்கண்ணே விரித்துக்கூறுதும்' (பக்.ககசு.) என்றும், 'கட்டுரைகாதையுள் விரியக்கூறுவாம்' (பக்.உஉஎ.) என்றும் எழுதியிருத்தலால், அழற்படுகாதைமுதலியவற்றிற்கும் உரை செய்யவெண்ணியிருந்தாரென்பதும் வெளியாகின்றன.

இந்த நூலாலும் உரைகளாலுந் தெரிந்த அரசர் பெயர் முதலியன:—

(க) அரசர் :—அநாகுலன், அவந்திநாட்டரசன், அழும்பில்வேள், இளஞ்செழியன், உத்தரகௌத்தன், உத்தரன், உருத்திரன், கங்கர், கட்டியர், கடுங்கோன், கயவாகு, கரிகால்வளவன், கருநாடர், கலிங்கர், கன்னர், கனகன், காய்சினவழுதி, கொங்கணர், கொங்கர், கோசர், சிங்கன்,சித்திரன், சிவேதன், சேரலாதன், தனுத்தரன், தொண்டியோர், பழையன், பெருநற்கிள்ளி, பைரவன், மகதநாட்டரசன், மாகீர்த்தியாகியசிலந்திருதிருவிற்பாண்டியன், மாந்தரஞ்சேரலிரும்பொறை, மாளுவவேந்தர், முசுகுந்தன், யவனர், வச்சிரநாட்டரசன், வசு, விசயன், விசித்திரன், வெற்றிவேற்செழியன்.

(உ) நாடுகள் :—கலிங்கம், குடகம், குண்டுர்க் கூற்றம், குணகாரை நாடு, குமரிநாடு, குறும்பூணாடு, குன்றநாடு, கொங்கு, கொல்லம், சோணாடு, தெங்கநாடு, தென்பாலி, நாகநாடு, பாண்டியநாடு, பின்பாலைநாடு, மகத நாடு, மத்திமதேசம், மதுரைநாடு, முத்தூர்க்கூற்றம், முன்பாலைநாடு, வச்சி ரநாடு.

(ஊ) ஊர்கள் :—அவந்தி, இடும்பில், இரவிபுரம், இலங்கை, உஞ்சை, உறந்தை, கச்சி, கபாடபுரம், கபிலபுரம், காப்பியக்குடி, குணவாயில், கொடுங்கோளூர், கொடும்பாளூர், கொற்கை, சிங்கபுரம், செந்தில், சேடி, சோ, தங்கால், தலைச்சங்காடு, திருவனந்தபுரம், திருவரங்கம், தொண்டி, நெடுங்குளம், நேரிவாயில், பறையூர், புகார், மதுரை, மாங்காடு, வஞ்சி, வயலூர், வாரணவாசி, வியலூர்.

(எ) மலைகள்:—அழகர்மலை, இமயம், ஏரகம், குடமலை, குமரிக் கோடு, கொல்லி, சிறுமலை, செங்குன்று, திருச்செங்கோடு, நீலகிரி, பெரு மலை, பொதியில், மேரு, வெண்குன்று, வெள்ளியம்பெருமலை, வேங்கடம்.

(ஏ) ஆறுகள்:—அயிரை, கங்கை, காவிரி, குமரி, சிலம்பாறு, சோணை, தொழுனை, பஃறுளி, பேராறு, பொருநை, வையை.

(ஐ) பொய்கைகள்:—இட்டசித்தி, சூரியகுண்டம், சோமகுண்டம், பவகாரணி, புண்ணியசரவணம்.

(ஒ) கோயில்கொண்ட தெய்வங்கள் :—அருகன், அறுமுகன், இந் திரன், ஐயை, ஐராவதம், கண்ணகி, கற்பகம், காமன், கைலாயம், சந்திரன், சாத்தன், சாதவாகனன், சிவபெருமான், சூரியன், திருமால், பலதேவன், புத்தன், மங்கலாதேவி, வச்சிரம், வேல்.

(ஓ) புலவர் :—அகத்தியனார், அறிவனார், ஆதிவாயிலார், இருந்தை யூர்க்கருங்கோழிமோசியார், இறையனார், கேரன்தையார், சிகண்டியார், சிறு பாண்டரங்கனார், செயிற்றியனார், துவரைக்கோமான், தொல்காப்பியனார், நாரதனார், நிதியின்கிழவன், பரதசேனபதியார், பாண்டியன்மதிவாணனார், மதுரைக்கூலவாணிகன்சாத்தனார், மதுரையாசிரியன்மாறனார், முரஞ்சி யூர்முடிநாகராயர், யாமளேந்திரர், வெள்ளூர்க்காப்பியனார்.

சிலப்பதிகாரக் கதைச்சுருக்கம்.

[க.—புகார்க்காண்டம்.]

சோழவளநாட்டிற் காவிரிநதி கடலொடுகலக்கும்சங்கழ்கமென்னுந் துறையையுடையதும் சோழர்களுடைய பழைய இராசதானியாகவுள்ளதும் பெரியோர்களாற் சிறப்பித்துப் பாராட்டி மிகப் புகழப்படுவதுமாகிய காவிரிப்பூம்பட்டினத்தில் சோழன்கரிகாலன் அரசாட்சிசெய்துவருகையில், இப்பர் கவிப்பர் பெருங்குடியரென்னும் மூவகைவணிகருட் பெருங்குடியர் குலத்திலுதித்தோனாகிய மாசாத்துவானென்பான், தன்மகன் கோவலனுக்கு அங்ஙகரில் அம்மரபிலுதித்த மாநாய்கன் மகள் கண்ணகியை மிக்கசிறப்புடன் மணம்புரிவிக்க, கோவலன் கண்ணகிபால் மிகவும் அன்புவைத்து நலம்பாராட்டி இன்புற்றுத் தருக்கி மகிழ்ந்து நடக்கும் நாட்களில் ஒருநாள், அக்கோவலன்தாயாகிய பெருமூனக்கிழத்தியென்பவள், கோவலனும் கண்ணகியும் இல்வாழ்க்கையைச் செவ்விதாகநடத்திக் கைதேர்ந்து உயர்ச்சி பெற்று விளங்குதலைக் காணவேண்டி வேறொரு மாளிகையில் இல்லறம்நடத்துவதற்கு வேண்டும் பொருள்களை நிரப்பி வேலைசெய்பவர்களையும் நியோகித்து அவ்விருவரையும் அதிலிருத்த, அவர்கள் மனவொருமையோடு அதிலிருந்து அறவோர்க்களித்தல் அந்தணரோம்பல் துறவோர்க்கெதிர்தல் முதலியவற்றைச்செய்து இல்லறத்தை ஒழுங்காக நடத்திவருவாராயினர்.

இப்படியிருக்கையில், கோவலன், மிக்க அழகுடையவளும் ஆடல் பாடல் முதலியவற்றில் மிகத்தேர்ச்சிபெற்றவளுமாகிய மாதவியென்னும் நாடகக்கணிகையை விரும்பித் தன்பாலுள்ள பலவகைப்பொருள்களையும் நாள்தோறுங்கொடுத்து அவளோடும் இடைவிடாது மருவி மகிழ்வானுயினன். கண்ணகி பிரிவாற்றாது வருந்தி அவ்வருத்தத்தைச் சற்றும் வெளிப்படுத்தாமல் அவன்பாற் சிறிதேனும் வெறுப்பின்றி இல்லறவொழுக்கத்தை வழுவாது நடத்திவந்தாள்; அக்காலத்து வழக்கப்படி அங்ஙகரத்தில் இந்திரனுக்குத் திருவிழா நடத்தப்பட்டது. அதன்முடிவில் அங்ஙகரத்தார் தத்தம் பரிவாரங்களோடு கடலாடுதற்குச் சென்றார்கள்; கோவலனும் மாதவியுடன் கடற்கரையையடைந்து ஓரிடத்திருந்து அவள்கையிலிருந்த வீணையைவாங்கிப் பலவகைப்பட்ட வரிப்பாட்டுக்களைப் பாடிக்கொண்டு அவ்வீணையைவாசித்தான்; அவன்பாடியபாட்டுக்கள் பலவகைப்பட்ட அகப்பொருட்சுவையைத் தழுவியிருந்தமையின் மாதவி, 'இவன் வேறுமகளிர்பால் விருப்புடையன்' என்றெண்ணிப் புலந்து அவன்கையிலுள்ள வீணையைவாங்கித் தான்வேறு குறிப்பில்லாதவளாகஇருப்பினும் அவன் வேறுகுறிப்புள்ளவனெனத் தனக்குத் தோற்றினமையின், தானும் வேறுகுறிப்புடையாள்போலவே அகப்பொருட் சுவையைத்தழுவிய பலவகைப்பட்ட வரிப்பாட்டுக்களைப் பாடிக்கொண்டு அவ்வீணையை வாசித்தாள்; அதனைக்கேட்ட கோவலன், வேறொருவர்மேல் மனம்வைத்து அவள் பாடினானென்றெண்ணி ஊழ்வினையின் முயற்சியால் வெறுப்புற்று அவளோடு அளவளாவாமல் தன்வீட்டையடைந்து, தேவந்தி

யென்னும் பார்ப்பனத்தோழியோடு சல்லாபஞ் செய்துகொண்டிருந்த கண்ணகியைக்கண்டு, அவளுடன் பள்ளியறையிற்புகுந்து அவள்மேனிவாட்டத்தையும் மனவருத்தத்தையுந்தெரிந்து, 'பொய்யை மெய்யாகக் காட்டியொழுகும் பரத்தையோடுமருவி ஒழுகியகாரணத்தால் முன்னேர்தேடிவைத்த பொருட்குவியல்களையெல்லாம் தொலைத்து வறுமையடைந்தேன்; அஞ்சு எனக்கு மிக்க நாணத்தைத்தருகின்றது' என்றுசொன்னான். அதனைக் கேட்டகண்ணகி, மாதவிக்குக்கொடுத்தற்குப் பொருளில்லாமையால் அவன் தளர்ந்துசொன்னானென்றுகருதி, 'அடியேனிடத்து இரண்டு சிலம்புகள் உள்ளன; அவற்றைக் கைக்கொண்டருள்க' என்று சொன்னாள்; அவன், 'மதுரையையடைந்து இச்சிலம்பை வாணிகமூலதனமாகக்கொண்டு வியாபாரஞ் செய்துமிக்கபொருள்தேடுதற்கெண்ணினேன்; நீயும்உடன்வரவேண்டும்' என்றான்; அவளும் உடன்பட, கோவலன் அன்றிரவின்கடையாமத்திற் கண்ணகியை அழைத்துக்கொண்டு ஒருவருமறியாதபடி புறப்பட்டுக் காவிரியின் வடகரைவழியாக மேற்கேசென்று ஒருபூஞ்சோலையையடைந்து அதில் தவஞ்செய்துகொண்டிருந்த ஆருகதசமயத் தவமுதியோளாகிய கவுந்தியைக்கண்டு வணங்கி, 'மதுரையிலுள்ள பெரியோர்கள்பால் அறநூற்கேள்விகளைக் கேட்டற்கும் அறிவினைத் தொழுதற்குமாக உடன்வருவேன்' என்றுசொல்லிய அவளோடும்வழிக்கொண்டு அரங்கமடைந்து அங்குவந்த சாரணர்களைத்தரிசித்து ஓடமேறிக் காவிரியின் தென்கரைசேர்ந்து ஒருபொழிலிலிருந்தான்; அப்பொழுது அங்குவந்து கண்ணகியையும் கோவலனையும் அவமதித்துப் பேசிய ஒருபரத்தையையும் ஒருதூர்த்தனையும் கவுந்தி தரிவடிவங்கொள்ளும்படி சபித்து, அவர்கள் அவ்வாறுனமையறிந்து இரங்கிய கோவலன் கண்ணகியிவர்கள் வேண்டுகோளால் அவர்களுக்கு அவ்வடிவு ஒருவருடத்தில் நீங்கும்படி சாபவிடைசெய்தாள். பின்புமூவரும் உறையூரையடைந்தார்கள்.

[உ.—மதுரைக்காண்டம்.]

அடைந்தவர்கள் அன்று அங்கரிற்றங்கி மறுநாட்காலையிற் புறப்பட்டுச் சிறிதுதூரஞ்சென்று ஓரிடத்திருந்து இளைப்பாறி அங்குவந்த ஓர்தணனுல் வழிதெரிந்துகொண்டு அப்பாற்சென்றார்கள். செல்லும்பொழுது ஒருநாட்காலையிற்கோவலன், கவுந்தியையும்கண்ணகியையும் ஓரிடத்தில் வைத்துவிட்டுக் காலைக்கடன் கழித்தற்பொருட்டு ஒரு பொய்கையையடைந்து நிற்கையில், தன் பிரிவாற்றாது வருந்திய மாதவியாலனுப்பப்பட்டு அவளோலையுடன் காவிரிப்பூம்பட்டினத்தினின்றும் அங்குவந்த கௌசிகனென்னும் அந்தணனைக்கண்டு தன்பிரிவால் தன் தாய் தந்தை முதலியோரும் மாதவியும் படுகிறவருத்தங்களை அவனுல் தெரிந்து பிகவருத்தமுற்றுத் தான்புறப்பட்டதற்குக்காரணங்களையும்தன்வணக்கத்தையும் தன்னுடைய தாய்தந்தைக்குச் சொல்லிப் பாதுகாத்துவரும்படி அவனையனுப்பிவிட்டுக் கவுந்தியையும் கண்ணகியையுமடைந்து அவர்களுடன் புறப்பட்டு இடையிற் சந்தித்த பாணர்களுடன் அளவளாவி அவர்களால் வழியின் அளவு தெரிந்துகொண்டு போய் வையையாற்றையடைந்து அதனைத் தொழுது புனையேறி அக்கரை சென்று மதுரையின் மதிற்புறத்ததாகிய முனிவர் இருக்கையில் தங்கினான்.

மற்றைநாட்காலையிலெழுந்து கவுந்தியை வணங்கித் தங்களுக்கு முன்பு நேர்ந்த துன்பங்களைச் சொல்லி வருந்திப் பின்பு அவள் தேற்றத்தேறிக் கண்ணகியை அவள்பால் வைத்துவிட்டுத் தான் வாணிகஞ்செய்தற்குரிய

இடமறிதற்பொருட்டு மதுராநகரத்தின் உள்ளேசென்று அதன்வளங்களை யெல்லாங்கண்டு மீண்டு கவுந்தியையடைந்து அங்ஙகர்ச்சிறப்புமுதலியவற்றைச் சொல்லி அப்பால் அங்கேவந்த தனது நட்பாளனாகிய மாடலனென்னு மந்தணனோடு சல்லாபஞ்செய்துகொண்டிருந்தான். அப்பொழுது கவுந்தி, அங்குவந்த இடைச்சியர் தலைவியாகிய மாதரியைக்கண்டு அவளது நல்லொழுக்கத்தைநோக்கி, 'இவளிடத்திற் கண்ணகியை அடைக்கலமாகக்கொடுக்கலாம்' என்று நிச்சயித்து அவளையழைத்துக் கண்ணகியின்கற்புமேம்பாட்டையும் அவள்மென்மைத்தன்மையையும் உயர்ந்தோர்களாற் கொடுக்கப்படும் அடைக்கலப்பொருளைப்பாதுகாத்தோர் அடையும்பயனையும் அவட்கு விளங்கச் சொல்லிக் கண்ணகியை அவளிடம் ஒப்புவிக்க, அவள்மகிழ்ச்சியுடன் ஏற்று விடைபெற்றுக் கண்ணகியைக் கோவலனுடனழைத்துக்கொண்டு ஆயர்பாடியிலிருக்கும் தன்வீட்டையடைந்து அவ்விருவரையும்புதியமனையொன்றிலடைவித்து மிகவுபசரித்துத் தன்மகள் ஐயைஎன்பவளைக் கண்ணகிக்குத் துணையாகவைத்துச் சமைத்தற்குரிய பொருள்கள் பலவற்றையும் கொணர்ந்து கொடுப்பக் கண்ணகி அவற்றைச் செவ்விதாகச்சமைத்து முறைப்படியுண்பிக்கக் கோவலன் இனிதாகவுண்டு கண்ணகியை அருகழைத்து அணைத்து, 'நீ இந்தப்பாலைவழியில் வந்ததை எண்ணி நம் தாய்தந்தையர் என்ன துன்பமுற்றார்களோ! மிக்க இன்பத்தை அனுபவித்துவந்த நாம் இந்தக் கொடியதுன்பத்தையனுபவித்தது கனவோ? நனவாயின், இதற்குக்காரணமாக முன்புசெய்த தீவினையாதோ? யான் ஒன்றுமறிந்திலேன்; வீணாரோடும் விடாரோடுங்கூடிப் பிறரைப் புறங்கூறுங் கூட்டத்திற்புகுந்து நல்லொழுக்கத்தைத்துறந்த மகாபாவியாகிய எனக்கு இனித் தீக்கதியன்றி நற்கதியுண்டாமோ? இருமுதுகுரவர்க்கும்ஏவல்செய்தலையொழிந்தேன்; உனக்கும் துன்பஞ்செய்தேன்; இக் கூடாவொழுக்கம் தீதென்று சிறிதுமெண்ணினேன்' என்று பலவாறிரங்கி, 'சுற்றமுதலியவற்றைநீங்கி நாணமுதலியவற்றையும் கற்பையும் பெருந்துணையாகக்கொண்டு என்னோடு வந்து எனது தனிமையைத்தீர்த்த பொன்னே கொடியே புனைபூங் கோதாய், நாணின் பாவாய் நீணில விளக்கே, கற்பின் கொழுந்தே பொற்பின் செல்வீ! இனி, உன்னுடைய சிலம்புகளுள் ஒன்றைக்கொண்டுபோய் விரைவில் விற்றுவருவேன்; வருமளவும் தனிமையால் வருந்துதலையொழிவாயாக' என்றுசொல்லி, ஒருசிலம்பைவாங்கிக்கொண்டு அவள் தனியே யிருத்தலைக் கண்டு மனம்வெதும்புதலால்லே பெருகிய தன்கண்ணீரை அவள்கண்டால் வருந்துவள்என்று மறைத்தவனாகி அவ்விடத்தைநீங்கிப் பிரிதற்குத்துணிவில்லாத மனமுடையவனாய்ச் சென்று எதிர்ப்பட்ட துன்மிதித்தங்களை அறியாமற் கடைத்தெருவிற்புகுந்து எதிரே நூறு பொற்கொல்லர் பின்னேவர முன்வந்த ஒருபொற்கொல்லனைக்கண்டு 'இவன் அரசனுற்பெயர்பெற்றோன்' என்றெண்ணி அவனருகிற்சென்று, 'அரசன்றேவியணிதற்குத் தகுதியான சிலம்பினை விலைமதிக்கும் வன்மையுடையாயோ?' என்று வினவி, அவன் மிக்கபணிவுடன் தான் வல்லனுதலைக் குறிப்பிக்கக் கோவலன் தான்கொணர்ந்த சிலம்பைக் காட்டினன். அவன்பார்த்து, 'இதனை அரசனுக்கு யான்தெரிவித்துவருமளவும் என்வீட்டிற்கு அயலதாகிய இவ்விடத்தே நீர் இரும்' என்று ஓரிடத்தைக் காட்டிச் செல்ல, கோவலன் அவ்விடத்தேயிருந்தான். சென்றபொற்கொல்லன் முன்பு அரசன்மனைவியின் சிலம்புகளுள் ஒன்றைவஞ்சித்துத் திருடிக்கொண்டவனாதலால், யான் முன்பு வஞ்சித்துக்கவர்ந்துகொண்ட சிலம்பு

என்னிடத்தேயுள்ளதென்று இராசாவுக்கு வெளிப்படுவதற்கு முன்னமே அதனோடு ஒத்த சிலம்பைக்கொணர்ந்த இப்புதியவனால் என்மீதுண்டாகும் ஐயத்தைப் போக்கலாம்' என்று தன்னுள்ளே நிச்சயித்து, தன் மனைவியின் ஊடல்தீர்த்தற்பொருட்டுத் தன்கோயிலைநீங்கி அவள்கோயிலைநோக்கிக் காம பரவசனுய்ச்செல்லும் பாண்டியன்நெடுஞ்செழியனைக்கண்டு வணங்கித்துதித்து, 'கண்ணக்கோல் முதலியன இல்லாமலே கோயிற்கண் இருந்த சிலம்பைத் திருடியவன் அடியேனுடைய சிறியகுடிலின்புறத்தே அச்சிலம்போடு வந்திருக்கிறன்' என்றுசொல்லப் பாண்டியன் உடனே காவலாளர்களையழைத்து, 'என்மனைவியின்சிலம்பு இவன் கூறிய கள்வன்கையிடத்ததாயிருப்பின், அவனைக்கொல்லுதற்கு அச்சிலம்போடு கொண்டுவருக' என்றுசொல்லக்கருதியவன், வினைபலிக்குங்காலமாதலால் மயங்கி, 'அவனைக்கொன்று அச்சிலம்பைக் கொண்டுவாரும்' என்று கட்டளையிட்டான். பொற்கொல்லன் தன்னெண்ணம் பலித்ததென்று மகிழ்ந்து அக்காவலாளருடன் சென்று கோவலனையடைந்து அவனை நோக்கி, 'இவர்கள் அரசன்கட்டளையாற் சிலம்புகாணவந்தவர்கள்' என்றுசொல்லிக் கோவலனுடைய முகக்குறி முதலியவற்றைக்கண்டு அவன் கள்வனல்லனென்றுசொல்லும் காவலாளர்களை இகழ்ந்துரைத்து அவனைக் கள்வனென்று வற்புறுத்துதற்குக் களவுநூல்களிலுள்ளவுதுக்களையெல்லாம் அவர்களுக்குவமித்துக்காட்டினன்; அப்பொழுது அவர்களுள் கொலையஞ்சாதொருவன் விரைந்துசென்று அறிவின்மையினுற் கோவலனைத் தன் கைவாளால் வெட்டிவீழ்த்தினன்.

இப்பால் கண்ணகியிருந்த இடைச்சேரியில் பலவகையான உற்பாதங்கள் உண்டாயின; அதுகண்ட மாதரிமுதலியோரால் உற்பாதசாந்தியாகத் திருமாலைக்குறித்துக் குரவைக்கூத்து ஆடப்பட்டது; அதன்முடிவில் மாதரி நீராடுதற்பொருட்டு வையையாற்றிற்குச் சென்றுள்; அப்பொழுது, சிலம்புதிருடியவனென்று துணிந்து கோவலனை அரசனேவலாளர் கொன்ற செய்தியை மதுரையிலிருந்துவந்த ஒருத்திசொல்லக்கேட்டுக் கண்ணகி பதைபதைத்து மூர்ச்சித்துப் பலவாறுபுலம்பித் தானும் அவனுடன் இறத்தற்குத் துணிந்து இடைச்சியர்மத்தியில்நின்று சூரியனை நோக்கி, 'கதிர்ச்செல்வனே! நீயறிய என்கணவன் கள்வனே?' என்றுள்; அவன், 'நின்கணவன் கள்வனல்லன்; அவனைக் கள்வனென்ற இவ்வூரை விரைவில் தீயுண்ணும்' என்று அசரீரியாகக் கூறினன். அதனைக்கேட்ட கண்ணகி மிகுந்த கோபத்தோடு தன்னிடமிருந்த மற்றொரு சிலம்புடனே புறப்பட்டுக் கண்டார்நடுங்கும்படி வீதிவழியே சென்று ஆங்குள்ள மகளிரைநோக்கிப் பலவாறுபுலம்பி, 'என்கணவனை முன்போலக்கண்டு அவன்சொல்லும் நல்லுரையைக் கேட்பேன்; அங்ஙனமல்லாதேனுயின், என்னை இகழுமின்' என்று சபதஞ்செய்துகொண்டுசென்று வெட்டுண்டுகிடந்த கோவலனைச் சிலர்காட்டக்கண்டு அளவில்லாத துயரத்தை அடைந்து அவனை முன்னிலைப்படுத்திப்பலவிதமாகப் பிரலாபித்து அவனுடம்பைத் தழுவிக்கொள்ள அவ்வளவில் அவன் உயிர்பெற்றெழுந்து நின்று மதிபோன்றமுகம் வாடியதேயென்றுசொல்லிக் கையாலே அவள்கண்ணீரை மாற்ற, அவள் அவனுடைய பாதங்களை இரண்டுகைகளாலும் பூண்டு பணிந்தாள்; உடனே அவன், 'நீ இங்கிருக்க' என்றுசொல்லி அவ்வுடம்பை யொழித்துவிட்டுச் சுவர்க்கம்புகுதற்குத் தேவர்களோடுகூடிச் சென்றுன்.

இங்கே இப்படியிருக்கப் பாண்டியன்நெடுஞ்செழியன்மனைவி, நீக்கலுக் கள்பலவற்றைக்கண்டு அவற்றைத் தன்கணவனுக்குச் சொல்லிக்கொண்டிருந்தாள்; அப்பொழுது, கண்ணகி கோபந்தணியாதவளாய் அரண்மனைவாயிலை

அடைந்து வாயிலோனால் தன்வரவை அரசனுக்கு அறிவித்து. அவன் அனுமதிப் படி அவன்முன்சென்று, அவன்கேட்பத் தன் ஊர் பேர்முதலியவற்றையும், ஆராயாது கோவலனைக் கொல்வித்த கொடுங்கோன்மையையும் மிக்கதுணிவா கச் சொல்லிக் கோவலன் கள்வனல்லனென்றுதெளிவித்தற்பொருட்டு, தன் சிலம்பினுள்ளேயுள்ள பரல் மாணிக்கமென்றாள்; அவன், தன்தேவிசிலம்பின் பரல்முத்தென்று சொல்லி,கொல்லப்பட்ட கோவலனிடமிருந்துகிடைத்தசிலம் பை வருவித்துவைப்ப, கண்ணகிஅதனையுடைத்தாள்;உடைக்கவே ஆதனினின் றும்மாணிக்கப்பரல்தெறித்தது;அதுகண்டு அரசன்நடுநடுங்கி,'இழிந்த பொற் கொல்லன் சொல்லைக்கேட்ட கொடுங்கோன்மையையுடைய நானே அரசன் ! நானே அரசன்!! ஐயோ ! மிகப்புகழ்பெற்ற இந்த அருமந்தகுலம் என்னைப் பழியடைந்ததே! என் ஆயுள்இன்றே அழியக்கடவது' என்றுசொல்லி மிகவும் துக்கித்துமயங்கித் தானிருந்த ஆசனத்தில்வீழ்ந்துஇறந்தான்; அதனையறியாத அவன்மனைவி பாதுகாத்திருள வேண்டுமென்று கண்ணகியின் பாதத்தில்வீழ்ந் தாள்; வீழவே கண்ணகி, 'நான் பத்தினியாயிருத்தல் உண்மையாயின், இவ் வூரை அழித்துவிடுவேன்பார்'என்று சபதம்செய்து தனதுஇடக்கொங்கையை வலக்கையால் திருகியெடுத்து அதனை அங்கரத்தின்மீதுஎறிந்தாள்; எறியவே அக்கினிதேவன் பார்ப்பனக்கோலத்தோடுவந்து,'மகாபத்தினி!உனக்குப்பிழை செய்தநாளில் இவ்வூரை எரித்துவிடும்படி முன்னமே ஓரேவல் பெற்றுளேன்; இப்பொழுது யாரையழித்தல்வேண்டும்?'என்றுகேட்ப,அவள், "பார்ப்பாரற வோர் பசுப்பத் தினிப்பெண்டிர், மூத்தோர் குழவி யெனுமிவரைக் கைவிட் டுத், தீத்திறத்தார் பக்கமே சேர்க"என்று சொல்ல, அப்பொழுதே அங்கரில் அவள் சொல்லியவண்ணம் தீப்பற்றிக்கொண்டது. உடனே அங்கரைக்காக் கும் வருணப்பூதங்கள்நான்கும் பெயர்ந்துசென்றன;அங்கரத்துள்ள இடங் கள்பலவும்எரியத்தொடங்கவே அவ்வெம்மையை ஆற்றுதவளாகிமதுரையின் அதிதேவதை கண்ணகிபால்வந்து நின்று அவளைநோக்கி, "யான் இங்கரின் தெய்வம்;உனக்குச் சிலவற்றைச்சொல்லவந்தேன்;அவற்றை நீகேட்பாயாக; இங்கரத்து முன்பிருந்தபாண்டியர்களுள் ஒருவரேனும் சிறிதும் கொடுங் கோன்மையுடையாரல்லர்;இங்நெடுஞ்செழியனும் அத்தன்மையனே; ஆயினும் இதுவந்தவரலாற்றைச் சொல்லுவேன்:முன்பு கலிங்கநாட்டிலுள்ளசிங்கபுரத் தரசனுகிய வசுவென்பவனும் கபிலபுரத்தரசனுகிய குமரனென்பவனும் தம் மூட்பகை கொண்டு ஒருவரையொருவர் வெல்லக்கருதியிருந்தார்; அப்பொ ழுது சிங்கபுரத்துக் கடைவீதியிற்சென்று இயல்பாகப் பண்டம்விற்றுக் கொண்டிருந்த சங்கமனென்னும் வணிகனை அங்கரத்தரசனிடம் தொழில் செய்துகொண்டிருக்கும் பரத னென்பவன் இவன் பகைவனுடைய ஒற்ற னென்று பிடித்து அரசனுக்குக்காட்டிக் கொலைசெய்துவிட்டான்; அப்பொ ழுது அந்தச்சங்கமன்மனைவியாகிய நீலியென்பவள் மிகுந்த துயரமுற்றுப் பதினான்குநாள் பலவிடத்தும் அலைந்து பின்பு ஒருமலையின்மேல் ஏறிக் கண வனைச் சேர்தற்பொருட்டுத் தன்னுடைய உயிரை விடுதற்கு நினைத்த வள், 'எமக்குத்துன்பஞ்செய்தோர் மறுபிறப்பில் இத்துன்பத்தையே அடைவார்களாக' என்று சாபமிட்டிறந்தாள்; அப்பரதன் இக்கோவலனுக்குப் பிறந்தான்; ஆதலால் நீங்கள் இத்துன்பமடைந்தீர்கள்! நீ இற்றைக்குப் பதி னான்காவது தினத்தின் பகல்சென்றபின்பு உன்னுடையகணவனைக்கண்டுசேர் வை" என்றுசொல்லி , அவளைத்தேற்றிச்செல்ல, கண்ணகி மதுரையை நீங்கி வையைக்கரைவழியே மேற்றிசை நோக்கிச்சென்று மலைநாடடைந்து அதிலுள்ள திருச்செங்குன்றென்னும் மலைமேலேறி ஒரு வேங்கைமரத்து நிழலினின்று பதினான்காவதுதினத்தின் பகல்சென்றபின்புஅங்கே தெய்வவடி

வத்தோடுவந்த கோவலனைக் கண்டுகளித்து அவனுடன் விமானத்தின்மேல் ஏறித் தேவர்கள் போற்றும்படி சுவர்க்கமடைந்தாள்.

[கூ.—வஞ்சிக்காண்டம்.]

கண்ணகி, இவ்வாறு கணவனோடு விமானமேறிச் சுவர்க்கம் போகக் கண்ட வேட்டுவமகளிரும் வேடர்களும் மிகுந்த ஆச்சரியமடைந்து தமது குறிச்சியிற் கண்ணகி பொருட்டு ஒருகுரவைக்கூத்து நடப்பித்தார்கள்; பின்பு அவ்வேடர்கள், அந்த அதிசயத்தைத் தம்நாட்டு அரசனுகிய செங்குட்டுவனுக்குத்தெரிவிக்க வேண்டுமென்றெண்ணிப் பலவகையான காணிக்கைப்பொருள் களையும் கைக்கொண்டு சென்று, மலைவளங்காண்டற்குத் தனதுதேவிவேண் மாளோடும் தம்பி இளங்கோவடிகளோடும் புறப்பட்டு நால்வகைத்தானையும் சூழவந்து பேராற்றங்கரையிலுள்ள மணற்குவியலிலிருக்கும் சேரன்செங்குட் டுவனைக்கண்டுவணங்கிச் சொன்னார்கள்; அதுகேட்டு அவ்வரசன் அதிசயிக்க, அங்குவந்திருந்த மதுரைத்தமிழாசிரியராகிய சாத்தனார், மதுரையிற் கோவ லன் கொலையுண்டதையும் அங்கே கண்ணகியால்நடந்தவற்றையும்மதுராபதி தெய்வம் முன்வந்து சொல்லியதையும் அவர்களுக்கு விரித்துச்சொன்னார்; செங்குட்டுவன், பாண்டியன் இறந்ததற்கு இரங்கித் தன்தேவியின் வேண்டு கோளால் கண்ணகியாகிய பத்தினிக்கடவுளைப் பிரதிஷ்டித்து வழிபடுதற்கு எண்ணி, அவளுருவஞ்செய்தற்குச் சிலைகொணர்தற்பொருட்டு மந்திரி களோடும் ஆலோசித்து, முன்னம் இமயமலையினின்றும்வந்த முனிவர்கள் 'ஆரியமன்னராகிய கனகனும் விசயனும் தமிழ்நாட்டரசரையிகழ்ந்தார்' என்று சொல்லக்கேட்டவளுதலால், அவ்வரசர்களைவென்று அவர்கள்முடியில் அச் சிலையையேற்றிக் கொண்டுவருவேனென்று சபதம்செய்து, உடனே சேனைக ளுடன் புறப்பட்டு நீலகிரியையடைந்துஅங்குத்தங்கி இமயமலையினின்றும் வந்த முனிவர்கள்கூறிய ஆசியைப்பெற்று அப்பாற்சென்று கங்காநதியை யடைந்து தனது நட்பரசராகிய கன்னர்கள் கொணர்ந்துவைத்திருந்த ஓட மேறி அக்கரைசென்று அவ்விடத்திற்றங்கி அங்கே போர்செய்தற்குவந்த கனகவிசயரையும் அவருக்குத்துணையாகவந்த உத்தரன் முதலியஅரசரையும் வென்று தாபதவேடமுதலியவற்றைக் கொண்டோடிய அவ்வரசர்களைப் பிடித்துஅகப்படுத்திக்கொண்டு தன்மந்திரியாகிய வில்லவன்கோதையையும் சேனையையும் அனுப்பி இமயமலையினின்றும் சிலைவருவித்து அதனைக் கனக விசயர் முடியிலேற்றி விதிப்படி கங்கையில் நீர்ப்படை செய்து அதன் தென் கரை சேர்ந்து சேனையோடுந்தங்கிஅங்குக்கங்கையாடிவந்தமாடலனுற் கோவ லன்வரலாறுமுதலியவற்றையும் நெடுஞ்செழியனுக்குப்பின்பு இளங்கோவேள் தன் அரசாட்சிசெய்துவருதலையுமறிந்து அம்மாடலனுக்குத் தன் நிறையாகிய ஐம்பதுதுலாம்பொன் தானஞ்செய்து தன்னுல்வெல்லப்பட்ட கனகவிசயரைச் சோழனுக்கும் பாண்டியனுக்கும் காட்டிவரும்படி நீலன்முதலிய ஒற்றர் களையனுப்பிவிட்டுச் சேனையுடன் புறப்பட்டு இடையிலுள்ள வளங்களையெல் லாம் பார்த்துக்கொண்டு வஞ்சிநகரமடைந்து ஆங்குள்ளவர்களோடும் அள வளாவி மகிழ்வுற்றிருந்தான்; அப்படியிருக்கையில், ஒருநாள், முன்பு அனுப் பப்பட்ட நீலன்முதலிய ஒற்றர்கள் வந்து, 'தோல்வியடைந்து மாறுவேடம் பூண்டுசென்ற கனகவிசயர்முதலியோரைப் பிடித்துகொண்டு வந்ததைச் சோழனும் பாண்டியனும் இகழ்ந்துசொன்னார்கள்' என்றுசொல்லக்கேட்டு மிகுந்தகோபங்கொண்டு, அங்குவந்திருந்த மாடலனை 'நீ கோபத்தினிக; இளமை யாக்கை செல்வமுதலியவை நிலையா; நலம்பதத்தையடைவிக் கும் யாகத்தை இனிச்செய்தல்வேண்டும்' என்று பல ஏதுக்கள்மூகமாக

எடுத்துச் சொல்லக்கேட்டு அக்கோபத்தணிந்து, அம்மாடலன் சொல்லிய வண்ணம் யாகத்திற்குரியவற்றை அமைக்கும்படி சிலரையனுப்பி, ஆரியவ ரசர் முதலியோரைச் சிறையினின்றுநீக்கி அவர்களுக்குவேண்டியவற்றை உபகரிக்கும்படி வில்லவன்கோதைக்குச்சொல்லி ஆன்றோர்பலருடன்சென்று சிறந்த கம்மியர்களாற்செய்யப்பட்ட ஓரால யத்தில் இமயச்சிலையாலியற்றப் பட்டுள்ள வடிவத்திற் பத்தினிக்கடவுளாகிய கண்ணகியைப் பிரதிஷ்டை பண்ணி விதிப்படி நித்தியபூசைமுதலியவற்றை நடத்தும்படி கட்டளை யிட்டு அங்கேயிருந்தான். அப்படியிருக்கும்பொழுது, முன்னம், கோவலன் கொலையுண்டது முதலியவற்றை மாடலனுற்கேட்ட தேவந்தியும் கண் ணகியின் செவ்வித்தாயும் அவளடித்தோழியும் காவிரிப்பூம்பட்டினத்தி லின்று நீங்கி மதுரையையடைந்து அங்கே கண்ணகியைக் காணுமல் மாதரி மகள் ஐயையைக் கண்டு அவளையழைத்துக்கொண்டு வையைக்கரைவழியே சென்று மலைநாடுபுகுந்து கண்ணகி கோயிலையடைந்து அங்கிருந்த செங்குட் டுவனைக்கண்டு தங்களை இன்னுரென்று அறிவித்துக் கண்ணகியின் பிரிவாற்ரு மையால் வருந்திப் புலம்பினர்கள்; அப்பொழுது கண்ணகி தெய்வவடிவத் தோடு வெளிப்பட்டுச் செங்குட்டுவனுக்குக்காட்சிகொடுத்து வாழ்த்தினள்; பின்பு மாதவிமகளாகிய மணிமேகலையின் துறவைத்தேவந்தி சொல்லக் கேட்ட செங்குட்டுவன், அவள்மேல்ஆவேசித்த சாத்தனென்னுந்தெய்வத்தின் கட்டளையால் மாடலன் தன்கையிலுள்ள கமண்டலநீரை அங்கு வந்திருந்த மூன்று இளம்பெண்கள்மீதும் தெளிப்ப உடனே கண்ணகியைக்குறித்துப் புலம்பிய அம்மூவரையும் கண்ணகிதன்ரு ய் கோவலன்தன்ரு ய் மாதரி என்னும் மூவருடைய பிறப்பினராகஅறிந்து, அவர்கள் அவ்வாறுபிறத்தற்குக் கா ரணத்தை மாடலன்சொல்லக்கேட்டுப் பத்தினிக்கடவுளுக்கு நித்தியபூசை செய்யும்படி தேவந்திக்குச்சொல்லித் தான் அக்கடவுளை மூன்றுமுறை வலம் வந்து வணங்கி நின்றான்; அப்பொழுது ஆரியமன்னரும் மாளவவேந்தரும் இலங்காபுரத்தரசனுகிய கயவாகுவும் அங்குவந்து அக்கடவுளைநோக்கி, 'இச் செங்குட்டுவனைப்போல எங்களுடையநாட்டில் யாங்கள் உனக்குச்செய்யும் பூசையில் நீஎழுந்தருளி எங்களுக்கு அருள் செய்யவேண்டும்' என்றுபிரார்த் திப்ப, 'நீங்கள்விரும்பியபடியே வந்தேன்'என்றுஅப்பொழுது ஒருகுரல் உண்டாயிற்று. அதனைக்கேட்ட செங்குட்டுவனும் மற்றையரசர்களும் மிகு ந்தசந்தோஷமடைந்தார்கள். பின்பு, செங்குட்டுவன் மாடலனுடு யாக சாலைக்குச் சென்றான். அப்பால், இளங்கோவடிகள் பத்தினிக்கடவுள் கோயிலுக்குச்சென்றார்; அவருக்குமுன்பு பத்தினிக்கடவுள் தேவந்திமேற் ரூன்றி அவருடைய வரலாறுகளைச் சொல்லி உவப்பித்தாள்.

கோவலன் வெட்டுண்டுவிழுந்தகாலந்தொடங்கிப் பாண்டி நாட்டில் மழை இல்லாதுபோயிற்று; வறுமையும் நோயும் அதிகரித்தன; அதுதெரிந்து கொற்கை நகரத்திருந்த அரசனுகிய இளஞ்செழியன் பத்தினிக்கடவுளுக்கு ஆயிரம்பொற்கொல்லரைப் பலியிட்டுக் களவேள்வியாற்சாந்திசெய்து விழா வெடுத்தலால், அந்நாட்டில் மிகவும் மழைபெய்தது. முற்கூறிய வறுமையும் நோயும் நீங்கின. அதனைக்கேள்வியுற்றுக் கொங்குமண்டலத்தரசரும், இலங் காபுரத்தரசனுகிய கயவாகுவும், சோழநாட்டில் உறையூரிலிருந்த அரசனு கிய பெருநற்கிள்ளியும் கண்ணகிக்குக் கோயில்கட்டுவித்து நித்தியபூசை விழாமுதலியவற்றைச்செய்துவழிபட அவர் நாடுகள் மிகுந்த வளமுற்றன.

கணபதி துணை.

சிலப்பதிகார மூலமும்
அரும்பதவுரையும்
அடியார்க்குநல்லாருரையும்.

பதிகம்.

[1] குணவாயிற் கோட்டத் தரசுதுறந் திருந்த
குடக்கோச் சேர லிளங்கோ வடிகட்குக்
குன்றக் குறவ ரொருங்குடன் கூடிப்
[2] பொலம்பூ வேங்கை நலங்கிளர் கொழுநிழ
ற லொருமூலை பிழுந்தாளோர் திருமா பத்தினிக்
கமரர்க் கரசன் றமர்வந் தீண்டியவள்
காதற் கொழுநனைக் காட்டி யவளொடுங்

அரும்பதவுரை.

காப்பு.

கரும்பு மிளகீருங் கட்டிக் கனியும்
விரும்பும் விநாயகனே வேண்டி—யரும்பவிழ்தார்ச்
சோமான் * செய்த சிலப்பதிகா ரக்கதையைச்
சாரமாய் நாவே தரி.

க. குணவாயிற் கோட்டம் - திருக்குணவாயிற் கோயில்.

உ. சேரலென்றது செங்குட்டுவனை. சேரற்கு இளங்கோவாகிய அடிக ளென்க. இளங்கோவடிகள் தாம் துறந்திருந்து இக்காவியஞ் செய்தார்.

ச. கொழுநிழற்கண் நின்று (எ) காட்டி.

---

[1] இப்பெயர், மென்றொடர்க்குற்றியலுகரம் இயல்புகணத்துக்கண் நிரிந்துவரு மென்பதற்கு மேற்கோள்; (தொல்காப்பியம், குற்றியல், சூ. கூ - நச்.)

[2] இந்தாலுட் சிலசிலவிடங்களில் அரும்பதவுரையாசிரியர்கொண்ட பாடம் வேறுகவும் அடியார்க்குநல்லார்கொண்ட பாடம் வேறுகவுமுள்ளன; பதிப்பிக்கப்பெற் றுள்ள தனிமூலப்பகுதிகள் அடியார்க்குநல்லார்கொண்ட பாடத்திற்கு ஏற்றவை.

[3] 'பொலம்பூ.....நீயென' —இத்தப்பகுதி புதுமையென்னும் மெய்ப்பாட் டிற்கு மேற்கோள்; (தொல். மெய். சூ. எ - இளம்.)

(பிரதிபேதம்.) * 'சொன்ன சிலப்பதிகா ரக்கவியை.'

கட்புலங் காண விட்புலம் போய
திறும்பூது * போலுமஃ திறிந்தரு ணீயென
கஎ வவனுழை யிருந்த தண்டமிழ்ச் சாத்தன்
† யானறி குவனது பட்டதென் றுரைப்போ
னரங் கண்ணிச் சோழன் மூதூர்ப்
பேராச் சிறப்பிற் புகார்நக ரத்துக்
கோவல னென்பானோர் வாணிக னவ்வூர்
கஙி நாடக மேத்து நாடகக் கணிகையொ
டாடிய கொள்கையி னரும்பொருள் கேடுறக்
கண்ணகி யென்பாண் மனைவி யவள்காற்
பண்ணமை ‡ சிலம்பு பகர்தல் வேண்டிப்
பாடல்சால் சிறப்பிற் பாண்டியன் பெருஞ்சீர்
உ0 மாட மதுரை புகுந்தன னதுகொண்டு
மன்பெரும் பீடிகை மறுகிற் செல்வோன்
பொன்செய் கொல்லன் றன்கைக் காட்டக்
கோப்பெருந் தேவிக் கல்லதை யிச்சிலம்
பியாப்புற வில்லீயீங் கிருக்கென் றேகிப்
உஙி பண்டுதான் கொண்ட சில்லரிச் சிலம்பினைக்
கண்டனன் பிறனோர் கள்வன் கையென
வினைவினை கால மாதலின் யாவதுஞ்
சினையலர் வேம்பன் றேரா னுகிக்
கன்றிய காவலர்க் கூஉயக் கள்வனைக்
ரு.0 கொன்றச் சிலம்பு கொணர்க வீங்கெனக்
கொலைக்களப் பட்ட கோவலன் மனைவி
நிலைக்களங் காண னெடுங்கணீ § ருருத்துப்

அ. கட்புலம் - கண்ணென்கின்ற புலம். விட்புலம் - விண்ணென்கின்ற
கசு. பேராச்சிறப்பு - நீங்காதபெருமை. [இடம்.
கஙி. நாடகமேத்துநாடகக்கணிகை - நாடகத்தை ஆடிச் சிறப்பிக்கும்
கக. ஆடிய கொள்கையின் - இவன் ஆடிய கோட்பாட்டால். [கணிகை.
உ0. புகுந்தனன் - புகுந்தனனுய். உக. பீடிகை - வணிகர்தெரு.
உட. யாப்புறவில்லீ - பொருத்தமில்லீ.
உஙி. பண்டுதான்கொண்ட - முன்புதான் களவிற்கொண்ட.
உக. கன்றிய காவலர் - காவலில் தழும்பியவர். [நீருருத்து.
ஙஉ. நிலைக்களம் - நிலையிடம். நெடுங்கணீருருத்து - நெடுங்கண்ணால்

(பி - ம்.) * 'போலுமஃதீ தருள்.' † 'யானதிகுவனது.' ‡ 'பொதிசிலம்பு.' § 'உருப்பட்.

பத்தினி யாகலிற் பாண்டியன் கேடிற
முத்தார மார்பின் முலைமுகந் திருகி
நீலகெழு கூட னீளெரி யூட்டிய
பலர்புகழ் பத்தினி யாகு மிவளென
வினைவிளை கால மென்றீ ரியாதவர்
வினைவிளை வென்ன விறலோய் கேட்டி
யதிராச் சிறப்பின் மதுரை மூதூர்க்
கொன்றையஞ் சடைமுடி மன்றப் பொதியிலில்
வெள்ளியம் பலத்து ணள்ளிருட் கிடந்தே
னரைஞ ருற்ற வீரபத் தினிமுன்
மதுரைமா தெய்வம் வந்து தோன்றிக்
கொதியழற் சிற்றங் கொங்கையின் விளைத்தோய்
முதிர்வினை நுங்கட்கு முடிந்த தாகலின்
மூன்றைப் பிறப்பிற் பைந்தொடி கணவனெ
சிங்கா வண்புகழ்ச் சிங்க புரத்துச்
சங்கம னென்னும் வாணிகன் மனைவி
யிட்ட சாபங் கட்டிய தாகலின்
வாரொலி கூந்தனின் மணமகன் றன்னை
யீரேழ் நாளகத் தெல்லை நீங்கி
வானோர் தங்கள் வடிவி னல்லதை
யீனோர் வடிவிற் காண்ட லில்லெனக்

நூக. பத்தினியாகலின் - ஆக்கலும் அழித்தலும் வல்லளாதலின்.

நூச. முலைமுகம் - முலையிடம்.

நூசு. பலர்புகழ் பத்தினியாகும் இவளென்று சாத்தன்சொல்ல.

நூகூ. அதிராச் சிறப்பு - பகைவரால் அதிர்ச்சியில்லாத சிறப்பு.

சூ0. கொன்றையஞ்சடைமுடி, ஆகுபெயர்.

சூ0 - சூக. (பாடபேதம்:) 'மன்றப் பொதியில் வெள்ளியம்பலம்' - மன்றத்தின்கட் பொதியிலாகிய வெள்ளியம்பலம்.

சூஉ. வீரபத்தினி - சீறியகற்புடையாள்.

சூசு. பைந்தொடி, முன்னிலைப்பெயர். சூள. சிங்காமை - சுருங்காமை.

சூசு - கூ. கணவனெடி கட்டியதென்க. நூ0. கூந்தல் - கூந்தால்.

நூக. ஈனோர் - இவ்வுலகத்தின்மக்கள். காண்டல் இல்லென - காண்ட லில்லையென்றுசொல்ல.

---

[1] 'நீல.....பத்தினி' இப்பகுதி கற்பென்னும் பொருளிற்கு மேற்கோள்; (தொல். பொருளியல், சூ. நூசு - ந.)

(பி - ம்.) * 'நிலகிளர்.' † 'முதுவினை.' ‡ 'வடிவினனல்லதை.'

கோட்டமில் கட்டுரை கேட்டனன் யாவென
நரு வரைசெயல் பிழைத்தோர்க் கறங்கூற் முவதூஉ
முரைசால் பத்தினிக் குயர்ந்தோ ரேத்தலு
[1] முழ்வினை யுருத்துவந் தூட்டு மென்பதூஉஞ்
சூழ்வினைச் சிலம்பு காரண மாகச்
சிலப்பதி காரண மென்னும் பெயரா
சுஎ னுட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுளென
முடிகெழு வேந்தர் மூவர்க்கு முரிய
கடிக னீரே யருளுகென் முற்கவர்
மங்கல வாழ்த்துப் பாடலுங் குரவர்
மணையறம் படுத்த காதையு நடுகலின்
சுரு மங்கை மாதவி * யரங்கேற்று காதையு
மந்தி மாலைச் சிறப்புச்செப் காதையு
மிந்திர விழவூ ரெடுத்த காதையுங்
† கடலாடு காதையும்
மடலவிழ், கானல் வரியும் வேனில்வந் திறுத்தென
சஎ மாதவி பிரங்கிய காதையுந் தீதுடைக்
கனைத்திற முரைத்த காதையும் விஞைத்திறத்து
நாடுகாண் காதையுங் காடுகாண் காதையும்
வேட்டுவ வரியுந் தோட்டலர் கோதையொடு
புறஞ்சேரி யிறுத்த காதையுங் கறங்கிசை
எரு யூர்காண் காதையுஞ் சீர்சா னங்கை
யடைக்கலக் காதையுங் கொலைக்களக் காதையு

நருு. உரை சால் பத்தினிக்கு - புகழமைந்த பத்தினியை. [பட்டிவந்து.

நள. ஊழ் வினை - முறைமையாகிய பழவினை. உருத்துவந்து - வெளிப்

நஅ. சூழ்வினை - சூழ்ந்த சிற்பத்தொழில்.

சுஎ. பாட்டுடைச் செய்யுள் - உருவாகிய பாட்டுக்களையுடைய காவியம்.

சுக. முடிகெழு வேந்தர் மூவர்க்குமுரியது - புகாரினும் மதுரையினும் வஞ்சியினும் நிகழ்தலான் மூவர்க்குமுரியது. [ஞக அவனுக்கு.

சுஉ. அடிகளென்றது இளங்கோவடிகளை. என்முற்கு - என்று சொன்னை

சுங. மங்கலவாழ்த்து - கலியாணவாழ்த்து. சுக. மடல் - பூ.

எக. விஞைத் திறத்து - கலந்தியடிகள் விஞையிதிறத்தையுடைய.

எசு. தோடு அலர்.

---

[1] 'ஏவிப்பினு மூழ்வினை யூட்டாது கழியாது' (இறை. சூ. உ - உரை) என்பது இவ்வடியுடன் ஒப்புநோக்கற்பாலது.

(பி - ம்.) * 'அரங்கேற்றுக்காதை.' † 'கடலாட்டுக்காதை.'

மாய்ச்சியர் குரவையுந் தீத்திறங் கேட்ட
துன்ப மாலையு * நண்பக னடுங்கிய
வூர்சூழ் வரியுஞ் சிர்சால் வேந்தனெடு
அ0 வழக்குரை காதையும் வஞ்சின மாலையு
மழற்படு காதையு மருந்தெய்வந் தேர்ன்றிக்
கட்டுரை காதையு மட்டலர் கோதையர்
குன்றக் குரவையு மென்றிவை யீனத்துடன்
காட்சி கால்கோ ணீர்ப்படை நடுகல்
அரி வாழ்த்து வரந்தரு காதையொ
டிவ்வா றைந்து
மூரையிடை யிட்ட பாட்டுடைச் செய்யு
ளுரைசா லடிக ளருள மதுரைக்
கூல வாணிகன் சாத்தன் கேட்டனன்
கூ0 இது, பால்வகை தெரிந்த பதிகத்தின் மரபென்.

எஅ. நண்பகல் நடுங்கிய - கண்ணகி நண்பகற்கண்ணே நடுங்கிய.
அஉ. கட்டுரை - விளங்கச் சொல்லுதல். [லை.
அஉ - கூ. மட்டலர் கோதையர் குன்றக்குரவை - குறத்தியாடியகுர
அள. பாட்டும் உரையும் கலந்துவந்த காவியம்.

[1] வஞ்சிமூதூர் மணிமண்டபத்திடைத் தந்தையோடிருந்தழி அரசு வீற்றிருக்குந் திருப்பொறியுண்டென்று ஒரு நிமித்திகன் சொல்ல, முன்னே னுகிய செங்குட்டுவனிருப்ப இவ்வாறு முறைபிறழக்கூறியது பொறாது குண வாயிற் கோட்டத்துக் கடவுளர் முன்னர்த்துறந்திருந்த இளங்கோவடிகளுக்குக் கண்ணகி வானவர்போற்றத் தன் கணவனேடுகூடியதுகண்டு செங்குட்டுவ னுக்குரைத்த குறவர்வந்து, 'எல்லாமறிந்தோய்! இதனை அறிந்தருள்' என்று கூறிப்போக, பின்பு செங்குட்டுவனைக்கண்டு போந்து அடிகளுழை வந்த சாத் தன் அதுபட்டவாறெல்லாங் கூற, அதுகேட்டு, அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்றென்பதூஉம், பத்தினிமகளிர் [2] பெய்யெனப்பெய்யுமழை யென்ப தூஉம், ஊழ்வினை உருத்துவந்து ஊட்டுமென்பதூஉம் இக்கதையகத்து உண் மையின், அதனை யாம் ஒருசெய்யுளாகச் செய்வோமென்று இளங்கோவடிகள் கூற, மூவேந்தர்நாட்டினும் நிகழ்ந்த கதையாகலான் எனை இருவேந்தரியல்பும் வேத்தியலும் பொதுவியலும் 'எல்லாமுணர்ந்த நீரே அருளவேண்டும்' என்று சாத்தன்சொல்ல; இம்மூப்பதுவகைத்தாகிய செய்யுளை இளங்கோவடிக ளருளக் கூலவாணிகன் சாத்தன் கேட்டனனென்க.

---

[1] சிலப்பதிகாரம், கூ0 - ஆம் காதை, களங - டி. ஆம் அடிகள் முதலியவற்றைப்பார்க்க.
[2] "தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை."—(திருக்குறள், டுடி.)
(பி - ம்.) * 'நன்பகல்.'

சிலப்பதிகாரம்

அடியார்க்குநல்லாருரை.

உரைப்பாயிரம்.

குணவாயில்.....[1] வாழ்வீரீங்கென.

இவ்வியலிசைநாடகப் பொருட்டொடர்நிலைச்செய்யுளை அடிகள் செய்கின்ற காலத்து இயற்றமிழ்நூல் தொல்காப்பியமாதலானும், பிறர் கூறியநூல்கள் நிரம்பா இலக்கணத்தனவாதலானும் அந்நூலின் முடிபே இதற்கு முடிபென்றுணர்க. அந்நூலிற் செய்யுளியலின் கண்ணே ஆசிரியர் பாவும் இனமுமென * நான்கினீக்கியபாவினைத் தொகைவரையறையான் இரண்டென அடக்கியும், விரிவரையறையான் ஆறெனவிரித்தும், அவற்றை அறம்பொருளின்பத்தாற்கூறுகவென்றுங்கூறிப்பின்பு அம்மைமுதலிய † எட்டுவனப்பும்தொடர்நிலைச்செய்யுட்கு இலக்கணமென்றுகூறியவர், [2] "இழுமென் மொழியான் விழுமியது துவலினும், பரந்த மொழியா னடிகிமிர்ந் தொழுகினும்" என்பதனால், குவிந்து மெல்லென்றசொல்லானும் பரந்து வல்லென்ற சொல்லானும் அறம்பொருளின்பம்பயப்ப வீடென்னும் விழுமிய பொருள்பயப்ப ஒருகதை மேற் கொச்சகத்தானும் ஆசிரியத்தானும் வெண்பா வெண்கலிப்பாவானும் மற்றும் இன்னோரன்ன செய்யுட்களானும் கூறுகவென்றமையான், இத்தொடர்நிலைச்செய்யுள் அங்ஙனங் கூறிய [3] தொடர்நிலையென வுணர்க.

மூன்றுநூல்களிற் காப்பியமென்னும் வடமொழிப்பெயரின்றேனும் ஆசிரியர், [4] "வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ, யெழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே" என்றும், 'ஆகும்மே' என்ற இலேசினான் உப்பத்துணரற்பாலதனை மாணாக்கன் ஐயந்தீர்தற்கன்றே பின்னும் [5] "சிதைந்தன வினு மிபைந்தன வரையார்" என்றுரைனக் கொள்க. அன்றியும் பெரியதனைப் பெருங்காப்பியமென்றேகூறி

---

1 "வாழ்வீரீங்கென" என்பது இந்நூலின் இறுதிக்கண்ணது.

2 தொல்காப்பியம், செய்யுளியல், சூ. உங்க.

3 நச்சினார்க்கினியர் இந்நூலைத் தொன்மையென்பர்; (தொல். செய். சூ. உஙஎ.)

4 தொல்காப்பியம், எச்சவியல், சூ. ஞி.

5 ,, ,, ,, சூ.

(பி - ம்.) * 'நான்கினீக்கியப்பாவினை.' † 'எட்டுத்தொடர்.'

மறுக்கவேண்டுதலானும், சான்றோர் செய்யுட்களிலும், [1] ''கூத்திய
ரிருக்கையுஞ் சுற்றிய தாகக், காப்பிய வரசனைக் கலந்தவை சொல்லி''
என இரண்டாம் ஊழியதாகிய [2] கபாடபுரத்தின் [3] இடைச்சங்கத்துத்

---

[1] உதயணன்கதை, சு - வத்தவகாண்டம், கூ - யாழ்பெற்றது, சக - உ.

[2] ''தெதாஹஜயஂஷிவ்யஂஜ—ஃதீஜணிவிஹ—ஷ்ஷிதிழ
ய்—ஃதீஂகவாடஂவொஂஃயாநாஂமதாஜ்ஞ கூஷ்யஃவாநாஸ்ஃ''

என்னும் ஸ்ரீ வான்மீகிமுனிவர் திருவாக்கு இங்கே அறிதற்பாலது; (கிஷ்கிந்தாகாண்டம், சக - ஆம் ஸர்க்கம், ககூ - ஆம் ஸ்லோகம்.)

[3] இடைச்சங்கமும் மற்றை இரண்டுசங்கங்களுமிருந்த இடமுதலியவற்றைப் பின்வரும் ஆசிரியப்பாவானுமுணர்க:—''வேங்கடங் குமரி தீம்புனற் பௌவத், திந்நான் கெல்லையி னிருந்தமிழ் பயின்ற, செந்நாப் புலவர் செய்தியீண் டுரைப்பி, னுடகக்குமி மாடக் கூடலின், முன்னர்ச் சங்கக் கன்மாப் பலகையிற், றிரிபுர மெரித்த விரிசடைக் கடவுண், மன்றன் மராத்தார்க் குன்றெறி யிளஞ்சேய், திண்டிறற் புலமைக் குண்டி கைக் குமுமுனி, புவிபுகழ் மருதங் கவினிய முரஞ்சிப், பதிமுடி நாக னிதியின் கிழவ, னினையர்நா ணூற்மு நாற்பத்தொன் பதின்ம, ரனையர் நானூன் காயிர நூற்றொடு, நாற் பத்தொன் பதின்மர் பார்க்கிற்செந் தமிழ்ஞார், புரிந்தன செய்யுட் பெரும்பரி பாடலு, முதுமை யகத்த நாரையுங் குருகுங், கதியுறச் செய்த களரியா விரையு, மாங்வ ரிருந் தது மத்தொகை யாகு, மீங்கிவர் தம்மை யிரீயபாண் டியர்கள், காய்சின வழுதிமுதற் கடுங்கோ னீறு, வேஞ் லாவகை யெண்பத்தொன் பதின்மர், கவியரங் கேறிஞ ரெழுவ ராகு, மகத்துவ முடைய வகத்திய மிலக்கணம், வடவடு காட்சி நடிவட் சங்கத், தகத் தியர் தொல்காப் பியத்தமிழ் மூனிவ, ரிருந்தை யூரிற் கருங்கோழி மோசியா, ரெள்ளாப் புலமை வெள்ளூர்க் காப்பிய, னிறவா விசையிற் சிறுபாண் டரங்கன், றேசிக மதுரை யா சிரியன் மாறன், றவரொப் பாய துவரைக் கோமான், றேருங் கவிபுனை கீரந்தை யாரிவ, ரொன்பதோ டடுத்த வைம்பதின்ம ராகுந், தவலருங் கேள்வித் தின்மைய ருள்ளிட், டிவர்மூ வாயிரத் தெழுநூற் றுவரே, வையகம் பரவச் செய்த செய்யுளு, மிருங்கலி கடிந்த பெருங்கவித் தொகையொடு, குருகுவெண் டாளி தெருள்வியாழ மாலை, யந்தா னிலக்கண மகந்திய மதனெடு, பின்னுட் செய்த பிறங்குதொல் காப்பிய, மதிநலங் கவின்ற மாபு ராணம், புதுநலங் கனிந்த பூத புராணம், வல்விதி னுணர்ந்த நல்லிசை நுணுக்கந், தாவாக் காலத் தமிழ்ப்பயின் றதுவு, மூவா யிரத்தோ டெழுநூற் றியாண்டு, பரீய சங்க மிரீயபாண் டியர்கள், வெண்டேர்ச் செழியன் முதலா விறல்கெழு, திண்டேர்க் கொற்ற மூடத்திரு மாறன், முரசுடைத் தானை மூவா வந்த, மரசுநிலை யிட்டோ ரைம்பத்தொன் பதின்ம, ரிவ்வகை யரசரிற் கவியரங் கேறின, ரைவகை யரசர் ராயிடைச் சங்கம், விண்ணகம் பரவு மேதகு கீர்த்திக், கண்ணகன் பரப்பிற் கபாடபுர மென்ப, வருங்கடைச் சங்க மிருந்தோர் யாரெனிற், சிறுமே தாவியார் சேந்தம் பூதனு, றறிவுடை யரனுப் பெருங்ஞன் ஞாகிழார், பாடல் சான்ற விளந்திரு மாறன், கூடலூ சிரியர் நல்லந் துவனுர், பரவுதமிழ் மதுரை மருதனிள நாக, ரவிர்கணக் காயர் நவிளக் கீரர், கீரங் கொற்றர் கிளர்தே ஞார்கிழா, ரோருங் கலிமண ஞ்ரா சிரியர், நல்ஞர்ப் புளியங் காய்ப்பெருஞ் சேந்தர், செல்ஞ ராசிரியர் முண்டம் பெருங்குமரர், முசிறியா சிரியஞ் நீல கண்டனு, ரசைவிரி குன்றத் தாசிரிய ரன்றி, நாத்தலங் கனிக்குஞ் சீத்தலைச் சாத்தர், மூப்பா லுணரு மூப்பூரி குடிகிழா, ருருத்திர சன்மர் மருத்துவ ராகிய, நாம நாற்கவித் தாமோ தரனுர், மாதவ னுசோ டோதுமிள நாகர், கடியுங் காமப் படியங் கொற்றனு, ருருஞ்செய ஞர்வாழ் பெருஞ்சுவ னுருடன், புவிபுகழ் புலமைக் கபிலர் பரண, ரின்னுத் தடிந்த நன்னுக ரன்றிய, மொல்காப் பெருமைத் தொல்காப் பியத்துக், குரையிடை யிட்ட விரகர்கல் லாடர், பேர்மூல முணரு மாமூஞ் தம்மொடு, விச்சை கற்றிடு நச்செள்ளை யாரிமுதற், றேணூற் றெடுப்பச் செந்தமிழ் பகர்ந்தோர், நாணூற்

தொல்காப்பியம் புலப்படுத்திய மாகீர்த்தியாகிய நிலந்தருதிருவிற்பாண்டியனவைக்களத்து அகத்தியனுரும், தொல்காப்பியனுரும், இருந்தையூர்க்கருங்கோழிமோசியாரும், வெள்ளூர்க்காப்பியனுரும், சிறுபாண்டரங்கனுரும், * மதுரையாசிரியன்மாறனுரும், துவரைக்கோமகனும், கீரந்தையாருமென்றித் † தொடக்கத்தார் ஐம்பத்தொன்பதின்மருள்ளிட்ட மூவாயிரத்து எழுநூற்றுவர்தம்மாற்பாடப்பட்ட ‡ கலியும் குருகும் வேண்டாளியுமுதலிய ‡ செய்யுளிலக்கியம் ஆராய்ந்துசெய்த [1] உதயணன்கதையுள்ளும், [2] "கருதுவ தங்கொன் றுண்டோ காப்பியக் கவிகள் காம, வெரியெழ விகற்பித் திட்டார்" எனச் சிந்தாமணியுள்ளும், [3] "நாடகக் காப்பிய நன்னூ னுணிப்போர்" என மணிமேகலையுள்ளும் பிறவற்றுள்ளுங் கூறினமையானும், சொற்றொடர்நிலை பொருட்டொடர்நிலையென்னுந் தொடர்நிலைச்செய்யுட்கும் காப்பியமென்று பெயர்கூறுதலும் ஆசிரியர் கருத்தினவுணர்க.

இதனுள் முற்கூறிய வனப்பென்பது § பெரும்பான்மையும் பல கூறுப்புந் திரண்டவழிப்பெறுவதோர் அழகாதலிற் பலசெய்யுளும் உறுப்பாய்த் திரண்டுபெருகிய தொடர்நிலைச்செய்யுட்கு இவ்வெட்டும் அலங்காரமாயின ; ஆகலின் இக்காப்பியத்திற்கும் தோலென்பது ஒரு சொல்லலங்காரமாகவேயுணர்க.

இனி, இதன்செய்யுள் காதையென்று வழங்குதலிற் கதையையுடையது காதையாமாகலின், ஆசிரியம் வெண்பா வெண்கலிப்பா

வர்முதலெழுபத்தொன் பதின்மர், பீடுபெற வுலகிற் பாடிய செய்யுண், முத்தொள்ளாயிர நற்றிணை நெடுந்தொகை, யகநா னூறு புறநா னூறு, குறுந்தொகை கிற்றிசை பேரிசை வரியோ, டறம்புகல் பதிற்றுப்பத் தைம்பதோ டிருபாற்; பெறுமம்பரி பாடலுங் குறுங்கலி நூற்றைம், பதுமுத லாகிய நலவையுங் கலிக, ளக்கா லத்தவர்க் கக்கத்திய மதனெடு, மிக்கா மிலக்கணம் விளங்குதொல் காப்பிய, மெண்ணூற்றே ழள்ளிய நிருந்த தாயிரத், தெண்ணூற் றைம்பது வருட மென்ப, விடர்ப்படா திவர்கோச் சங்க மிரீஇயினர், முடத்திரு மாறன் முதலா வுக்கிரப், பெருவழுதி யீறுப் பிறங்கு பாண்டிய, நரபதிக ளாஞ நாற்பத்தொன் பதின்ம, ரிவருட் கவியரங் கேறினர் மூவர், புவியிற் சங்கம் புகழ்வட மதுரை, யாதிமூச் சங்கத் தருந்தமிழ்க் கவினு, நோதிய செய்யு ளுலவாப் பெரும்பொருள், வாளாக் கேட்டுந் தோளாச் செவிக்குங், கேட்டுந் தெரியா வோட்டை நெஞ் சினுக்கு, நுழையா வாதவி னுழைபுலன் றன்னெடும், விழைவார்க் குரைக்க வேண்டுவர் தெரிந்தே."—இச்செய்யுள் பாண்டிநாட்டிலுள்ள செவ்வூர்ச் சிற்றம்பலக்கவிராயரவர்கள் வீட்டிலிருந்த பழைய ஏட்டுப்புத்தகமொன்றில் எழுதப்பட்டிருந்தது. இவ்வகவலிலுள்ள சிலபகுதி மறுத்தற்குரியனவாக இருந்தும் ஒருசாராருடைய கொள்கைதெரிவதற்கே இஃது இங்கே பதிப்பிக்கலாயிற்று.

[1] உதயணன்கதையென்பது பெருங்கதையென்னும், கதையென்னும் இவ்வுரையுள் மேல் எடுத்தாளப்படும்.

[2] சீவகசிந்தாமணி, கிரௌஞ்சபு. [3] மணிமேகலை, சக்ர - ஆம் காதை, அ0.

(பி - ம்.) * 'மதுரைப்பன்மாறனுரும்.' † 'தொடர்க்கத்தரான பதின்மருள்ளிட்ட.' ‡ 'செய்யுளிலக்கியசாராய்ந்த.', 'செய்யுளிலக்கியமாராய்ந்த.' § 'பெரும்பான்மையாய்ப்.

வென்னும் இவற்றோடு சிறுபான்மையின் ஒருசார் கொச்சகக்கலி யெங்கிவருதலானும், காண்டமெனக் குறிபெறுதலானும் இதனைக் கதையென்றல் வழியுடைத்தென்பார்க்கு அற்றன்று; கதையென்பது பொய்ப்பொருள் புணர்த்துக்கூறுவது; என்னை? [1] "கதையெனக் கருதல் செய்யான் மெய்யெனத் தானுங் கொண்டான்" என்றமை யானும், [2] வழக்கினுள்ளும் இஃது ஒருகதையென்பவாகலானும், [3] "நாடகக்காப்பியம்" என்றலானும் கதையென்பதல்லது. இனி, அது நல்ல புலவராற் பொருளொடுபுணராப் பொய்ம்மொழியால் நாட்டப்பட்டுவருவதாகலின், இஃது அவ்வாறன்றி **யோனி**யென்னும் நாடகவுறுப்பும் நாடகமுந்தழுவி, உள்ளோன் தலைவனுக உள்ளதொரு பொருண்மேற் சித்திரிக்கப்படாது பட்டாங்கு கிளந்து பலவினப் பாட்டான் வருதலின், ஈது அன்னதன்றென்பார்க்குக் காப்பியமென்றலுமாம்.

இனி, இசைத்தமிழ்நூலாகிய **பெருநாரை பெருங்குருகு**ம் பிறவும் தேவவிருடி **நாரதன்**செய்த **பஞ்சபாரதீய**முதலாவுள்ள தொன்னூல்க ளிறந்தன. நாட்டகத்தமிழ்நூலாகிய **பரதம் அகத்தீய**முதலாவுள்ள தொன்னூல்களுமிறந்தன. பின்னும் **முறுவல் சயந்தம் குணநூல் சேயிற்றிய**மென்பனவற்றுள்ளும் ஒருசார் சூத்திரங்கள்நடக்கின்ற அத்துணையல்லது முதல் நடு இறுதி காணுமைபின், அவையும் இறந்தனபோலும். இறக்கவே வரும், * பெருங்கலமுதலிய பிறவுமாம். இவற்றுட் † பெருங்கலமாவது பேரியாழ்; அது **கோட்டின**தளவு பன்னிருசாணும், **வணரளவு** சாணும், **பத்தரளவு** பன்னிருசாணும், இப்பெற்றிக்கேற்ற **ஆணிகளும், திவவும், உந்தியும்பெற்று** ஆயிரங்கோல் தொடுத்தியல்வது; என்னை? [3] "ஆயிர நரம்பிற் றுதியா ழாகு, மேணியுறுப்பு மொப்பன கொளலே, பத்தர தளவுங் கோட்டின தளவு, மொத்த வென்ப விருமூன் றிரட்டி, வணர்சா ணெழித்தென வைத்தனர் புலவர்" என **நூல**வள்ளும், [4] "தலமுத லூழியிற் றுனவர் தருக்கறப், புலமக ளாளர் புரிநரப் பாயிரம், வலிபெறத் தொடுத்த வாக்கமைபேரியாழ்ச், செலவு முறை யெல்லாஞ் செய்கையிற் றெரிந்து, மற்றையாழுங் கற்றுமுறை பிழையான்" எனக் **கலத**யினுள்ளுங் கூறினராகலாற் பேரியாழ் முதலிய ஏனவும் இறந்தனவெனக்கொள்க.

---

[1] சிவகசிந்தாமணி, உகசக. [2] மணிமேகலை, கசு - ஆம் காதை, அ0.

[3] "ஆயிர நரம்பிற் றுதியா ழாகும்" என்பதுமட்டும் பிங்கலத்தில் ஒரு சூத்திரமாகக் காணப்படுகின்றது. [4] பெருங்கலை, யாழ்பெற்றது, கக - கி.

(பி - ம்.) * 'அருங்கலம்.' † 'பெருங்காப்பியம்.'

இனித் தேவவிருடியாகிய **குறுமுனி**பாற் கேட்ட மாணிக்கர் பன்னிருவருட் **சிகண்டி**யென்னும் அருந்தவமுனி, இடைச்சங்கத்து **அகாகுல**னென்னும் தெய்வப்பாண்டியன் தேரோடு விசும்புசெல் வோன் **திலோத்தமை**யென்னுந் தெய்வமகளைக்கண்டு தேரிற் கூடின விடத்துச் சனித்தானைத் தேவரும் முனிவரும் * சரியாகிற்கத் தோன் றினமையிற் **சாரகுமாரனென** அப்பெயர்பெற்றகுமரன் இசையறிதற் குச்செய்த **இசைநுணுக்கமும்**, [1] **பாரசவமுனிவரில்** † **யாமளேந்திரர்** செய்த **இந்திரகாளியமும்**, **அறிவனர்**செய்த **பஞ்சமரபும்**, **ஆதிவாயிலார்** செய்த **பரதசேனாபதீயமும்**, கடைச்சங்கமிரீஇய பாண்டியருட் கவி யரங்கேறிய **பாண்டியன்மதிவாணனர்**செய்த முதனூல்களினுள்ள **வசைக்கூத்திற்கு** மறுதலையாகிய **புகழ்க்கூத்தியன்ற மதிவாணர் நாடகத்தமிழ்நூல**மென இவ்வைந்தும் இந்நாடகக்காப்பியக் கருத் தறிந்த நூல்களன்றேனும் ஒருபுடை யொப்புமைகொண்டு முடித் தலேக்கருதிற்று இவ்வுரையெனக்கொள்க.

உலகத்துக் காப்பியஞ்செய்வோன் அறனும் பொருளும் இன்பமும் வீடுங் கூறல்வேண்டுமன்றே; இந்நாடகக்காப்பியத்தினுள் அறனும் பொருளும் இன்ப முங்கூறிச் சிறிதாயினும் வீடுகூறிற்றிலர்; என்னேயெனின், [2] "யானறிகுவனது பட்டதென்னு" உரைத்தசாத்தனர் நாற்பொருளும் பயப்பப் பெருங்காப்பிய மாகச் செய்யக்கருதியிருக்கின்றூர்க்கு, அடிகள், [3] "நாட்டுதும் யாமோர் பாட் டுடைச் செய்யுள்" என உளப்பாட்டுத்தன்மையாற்கூறச் ‡ சாத்தனர் இவர் ஏனையிருவேந்தரையும் புகழ்ந்துரையாரென்பதுகருதி மூவேந்தர்க்கும் உரிய தாகலின் [4] "நீரே யருளுக" என்று ஏகாரவினுப்பொருண்மையான் அவர் கருத்தறிகழ்ச்சி விளங்குவான்கூற, அவர் அதனேயேதுணிந்து தமது மூத் தமிழ்க்கல்வியும் வித்தகக்கவியும் காட்டுதற்குத் தாம்வகுத்துகொண்ட மூவகை உள்ளுறையின் விளைவுதோன்ற, மங்கலவாழ்த்துப்பாடன்முதல் வரந்தருகாதை யிறுதி முப்பதுவகைத்தாக வரையறுத்து, அதனே அதிகாரமாகப்பொதிந்து முன்வைத்துப் பின்னர், அறனும் பொருளும் இன்பமுங்கூறி அடைக்கலக் காதையிறுதிக்கண், [5] "போதி யறவோன் றன்முன், மணிமே கலையை மாதவி யளிப்பவும்" எனக் கோவலன் முன்கண்டகனவின்கண் நிகழ்ந்ததை எதிர்கால நிமித்தமாக மாடலற்குக் கூறுதலானும், நீர்ப்படையுள், [6] "மாதவி..... மணிமே கலையை வான்றுய ருறுக்குங், கணிகையர் கோலங் காணு தொழி யெனத், தோதைத் தாமங் குழலொடு சூழ்ந்து, போதித் தானம் புரிந்தறங் கொள்

---

[1] பாரசவர் - ஒருவகைச்சாதியார்.

[2] சிலப். பதிகம், கக.

[3] ,, ,, கூo.

[4] சிலப். பதிகம், கூஉ.

[5] ,, அடைக்கலக்காதை, கoக - ச.

[6] ,, நீர்ப்படைக்காதை, கoக - அ.

(பீ-ம்.) * 'சரியதிற்கத்தோன்றினமையிற் சயந்தகுமாரனெனப் பெயர்பெற்ற.'

† 'யாமளேந்திரர்செய்த டஞ்சமரபும் ஆதிவாயிலார்.' ‡ 'சாத்தனர்.'

ளவும்" என்றலானும், வாழ்த்தின்கண் [1] "மாதவி தன்னுறவுங் கேட்டாயோ தோழீ, மணிமே கலைதுறவுங் கேட்டாயோ தோழீ" எனத் தேவந்திகூறுதலானும், வரந்தருகாதையில், [2] மணிமே கலையார், யாதவ டுறத்தற் கேதுவீங் குரை" என [3] "மையீ ரோதி" முதல் [4] "போதித் தானம் புரிந்தறம் படித்தனள்" வன்பதீருகப் பக்குவஞ்சொல்லி, [5] "பருவ மன்றியும் பைந்தொடி நங்கை, திருவிழை கோல நீங்கினள்" என்றமையானும் மணிமேகலை துறந்தாளென்பதுணர்ந்து அத்துறவினைப் பின்வைத்து அதனேடு நாற்பொருளும் பூரித்துப் பெருங்காப்பியமாக முடித்தலிலக்கருதி அடிகள் சாத்தனார்க்கு இவ்வுரையையுரைத்துழி, அவர் மணிமேகலைபெயரான் அவள்துறவே துறவாக அமைவுமிடம்பயப்ப ஒரு காப்பியஞ் செய்தமைத்தனமெனக்கேட்டு, அவ்வடிகள் விரும்பி இவ்வீரண்டினையும் ஒருகாப்பியமாக்கி உலகின்கண் நடாத்துவான் வேண்டவும் இருவர்செய்தலின், இரண்டாகி நடந்தனவென்க.

எழுத்தின் றிறனறிந்தோ வின்சொற் பொருளி
னழுத்தந் தனிலோன் றறிந்தோ—முழுத்தும்
பழுதற்ற முத்தமிழின் பாடற் றுரையின்
றெழுதத் துணிவதே யான்.

உரைப்பாயிரமுற்றிற்று.

அடியார்க்குநல்லாருரைச்சிறப்புப்பாயிரம்.

க [6] பருந்து நிழலுமெனப் பாவு முரையும்
பொருந்துநெறி யெல்லாப் பொருளுந்—தெரிந்திப்
படியார்க்கு நல்லமிர்தம் பாலித்தா னன்னூ
லடியார்க்கு நல்லானென் பான்.

உ ஒருந் தமிழொரு மூன்று முலகின் புறவுகுத்துச்
* சேரன் றெரித்த சிலப்பதி காரத்திற் சேர்ந்தபொரு
ளாருந் † தெரிய விரித்துரைத் தானடி யார்க்கு நல்லான்
காருந் தருவு மனையா னிரம்பையர் காவலனே.

ங காற்றைப் பிடித்துக் கடத்தி லடைத்தக் கடியபெருங்
காற்றைக் குரம்பைசெய் வார்செய்கை போலுமற் காலமெனுங்
கூற்றைத் தவிர்த்தருள் பொப்பண்ண காங்கேயர் கோனளித்த
சோற்றுச் செருக்கல்ல வோதமிழ் மூன்றுரை சொல்வித்தமே.

---

[1] சிலப். வாழ்த்து, அடித்தோழியரற்று. [5] சிலப். வரந்தருகாதை, நூறு - சூ.
[2] ,, வரந்தருகாதை, ச - டு. [6] இம்மூன்றும் பண்டைக்காலத்தனவே; இயற்
[3] ,, ,, க0. றியவர்பெயர் தெரியவில்லை. இவை ஒவ்வோ
[4] ,, ,, உஅ. ருரைப்பின் உரையிலுமிரு தனவும் இருந்தன.
(பி - ம்.) * 'சேரன் றெருத்த.' † 'தெளிய.'

பதிகம்.

அடியார்க்குநல்லாருரை.

க - உ. குணவாயில்.....அடிகட்கு

அடிகளென்றது, துறத்தலான். * அத்துறவின் வரலாறு யாதோவெனின்,—குமரியொடு வடவீமயத் தொருமொழிவைத் துலகாண்ட சேரலாதற்குத் திகழொளி ஞாயிற் றேழ்பரி நெடுந்தேர்ச் சோழன் றன்மக ணற்சோணீன்ற மக்க ளிருவருண் மூத்தோன் றன்னைப் பின்ன ரியற்றிப் பின்னோன் றன்னையும் † பெருநம்பியாகென அன்னவர் தம்மொடு தென்னர் செம்பியர் தன்னடி போற்றத் தமனிய மண்டபத்துச் சிங்கஞ் சுமந்த பொங்கணை மீமிசை யுவரித் திரையிற் கவரி யிரட்ட வேந்த னிருந்துழிச் சார்ந்த நிமித்திகன் அடிமுதன் முடிவரை நெடிதுநோக்கி யின்றேள் கழியப் பொன்றிகு மூலைஞ் சேர்தி நீயெனச் சேரலற் குரைத்தவன் மைந்தரை நோக்கி நந்தாச் செங்கோ லந்தமி லின்பத் தரசா ளுரிமை யிவ்வையோற் குண்டென வுரைவன னனிவெகுண் டழுக் காற்றெழுக்கத் திழுக்கு நெஞ்சினன் கண்ணெரி தவழ வண்ணல் நோக்குங் கொங்கவிழ் நறுந்தார்க் கொடித்தேர்த் தானைச் செங்குட்டுவன்றன் செல்ல னீங்கப்பகல்செல் வாயிற் படியோர் தம்மு னகலிடப் பார மகல நீக்கிச் சிந்தை செல்லாச் சேணெடுந் தூரத் தந்தமி லின்பத்தரைசாள் வேந்தாயினனென்பது. இக்கதையைப் பதிற்றுப்பத்தினுள் அஞ்சாம்பத்தின்முடிவின்கண், "வடவ ருட்கும்" என்னுங் கவியுள்ளும், இந்நூலுள் வாழ்த்தின்கண்ணும், வரந்தரு காதைக்கண்ணுங் காண்க.

குணவாயில் - திருக்குணவாயிலென்பதோரூர்; அது வஞ்சியின் கீழ்த்திசைக்கணுள்ளது; அஃது ஆகுபெயர். அது குணக்கண்வாயில் குணவாயில்; குணக்கின்கண்வாயில் குணவாயிலெனச் சாரியைபெறுதும் பெற்றும் வரினும் அமையும். என்னை? [1] "ஏழனுருபிற்குத் திசைப்பெயர் முன்னர்ச், சாரியைக் கிளவி யியற்கையு மாகும்" என்றாராகலின். வாயிற்கோட்டமென்பது [2] "லகார வீறுதினகார வியற்றே" என்பதனால், ஏழனுருபின்கண்வந்த சாரியை லகாரவீறு, வருமொழிமுதல் வல்லெழுத்துவர னகாரம் வேற்றுமைக்கண் திரிந்து றகாரமாயிற்றே போலத் ‡ திரிந்தது. கோட்டம் - அருகன்கோயில்.

---

[1] தொல். உருபியல், சூ. உக. [2] தொல். புள்ளிமயங்கியல், சூ. எக.

(பி - ம்.) * 'துறவிற்குக்காரணம்யாதோர்.' † 'பெருநரம்பாகென.'

‡ 'திரிந்துவாயிற்கோட்டமாயிற்று.'

இம்முதலிரண்டற்கும் இத்திணையுங்கூறியது எழுத்துச்சந்திமுடிவும் சொன்முடிவுமெனக் கொள்க.

இனிப் பொருளாராய்ச்சி எண்வகைய :—அவை திணை, பால், செய்யுள், நிலம், காலம், வழு, வழக்கு, இடமென்பன. அவற்றுள், திணை இரண்டு ; அவன : அகத்திணை புறத்திணையென்பன. பால் பதினொன்று ; அவை : கைக்கிளைமுதல் பெருந்திணையிறுவாய் [1] ஏழும், வெட்சிமுதல் பாடாண்டிணை இறுவாய் [2] ஏழும். செய்யுள் அறுவகை ; அவன : வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, பரிபாடற்பா, மருட்பாவென்பன. நிலன் நால்வகை ; அவன : மூல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தலென்பன. காலம் பன்னிரண்டு ; அவன : [3] சிறுபொழுதாறும் [4] பெரும்பொழுதாறும். வழு பதினொன்று ; அவன : அகத்திணைவழுவேழும், புறத்திணை வழுவேழும். வழக்கு இருவகை ; அவன : நாடகவழக்கும், உலகியல்வழக்குமென்பன. இடம் இருவகை ; அவன : வழக்கிடமும், செய்யுளிடமும்.

இவற்றுள் நிறுத்தமுறையானே அகத்திணைப்பொருட்பகுதிமுதலியன இப்பதிகச்செய்யுளுண் முடியாமையின், அவை முடியுமிடங்கூறுதற்கு, ஆசிரியர் அகப்பொருட்பகுதி கூறுவார், [5] "மாயோன் மேய காடுறை யுலகமும், சேயோன் மேய மைவரை யுலகமும், வேந்தன் மேய தீம்புன லுலகமும், வருணன் மேய பெருமண லுலகமு, மூல்லை குறிஞ்சி மருத நெய்தலெனைச், சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே" என மூல்லைத்திணையை முதலாகநாட்டுதலின் அம்முறையே அகத்திணைப் பொருட்பகுதி முடியுமிடம் ஈண்டு எடுத்துக்காட்டப்படும்.

[6] "முதலெனப் படுவது நிலம்பொழு திரண்டிய னியல்பென மொழிப வியல்புணர்ந் தோரே" என்பதனால், முதற்பொருள் இருவகைப்படும். மூல்லைத்திணை நிலமுதற்பொருள். [7] "காரு மாலையு மூல்லை" என்பதனால், அத்திணைக்குரிய பெரும்பொழுதும் சிறுபொழுதுங் கொள்ளப்படும். பெரும்பொழுது : [8] "காரோவந்தது" என்பதனாற் காரும், சிறுபொழுது : [9] "மாலைதானியாயின்" என்பதனால் மாலையுங்கூறினர். கருப்பொருள், [10] "தெய்வ முணவே மாமரம் புட்பறை, செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ, யவ்வகை பிறவுங் கருவென மொழிப" என்பதனாலுணர்க. இந்நிலத்திற்குக் கருப்பொருள் :

---

[1] ஏழாவன: கைக்கிளைத்திணை, மூல்லைத்திணை, குறிஞ்சித்திணை, மருதத்திணை, நெய்தற்றிணை, பாலைத்திணை, பெருந்திணையென்பன; இவை அகத்திணையெனப்படும்.

[2] ஏழாவன: வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாணெனபன; இவை புறத்திணையெனப்படும்.

[3] சிறுபொழுதாறுவன: மாலை, யாமம், வைகறை, காலை, நண்பகல், எற்பாடென்பன.

[4] பெரும்பொழுதாறுவன: கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனிலென்பன.

[5] தொல். அகத்திணையியல், சூ. நி.

[6] ,, ,, ,, சூ.

[7] ,, ,, ,, சூ.

[8] சிலப். கால்கோட்காதை, கசஅ.

[9] ,, கானல்வரி, "பையுணெய்"

[10] தொல். அகத்திணையியல், சூ. கஅ.

[1] "கன்று குணிலாக் கனியுகுத்த மாயவன்" என்பதனுற் றெய்வமும், [2] "அலை விலை யுணவின்" என்பதனுல் உணவும், [3] "நீர்நசைஇ வேட்கையின் மானின்று விளிக்கும்" என்பதனுன்மாவும், [4] "கொல்லைப் புனத்துக் குருந்தொசித்தான்" என்பதனுன் மரமும், [5] "கானவாரணங் கதிர்வர வியம்ப" என்பதனுற் புள்ளும், [6] "ஏறங் கோட்பறை" என்பதனுற் பறையும், [7] "கோகுல மேய்த்து" என்பதனுற் செய்தியும், [8] "சூடமுதல்.....வேண்டிய பெயரே" என்பதனுல் மூல்லையாழும், பண்: [9] "மூல்லைத்தீம் பாணி யென்மூர்" என்பதனுற் சாதாரியும் கூறினர். உரிப்பொருள்: [10] "புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்க, லூடல் லிவற்றி னிமித்த மென்றிவை, தேருங் காலைத் திணைக்குரிப் பொருளே" என்பதனுலுணர்க. [11] "இருந்தேங்கி வாழ்வா ருயிர்ப்புறத்தாய்" என்பதனுல் இருத்தலும், [11] "பேரருளி னீழல்" என்பதனுல் இருத்தனிமித்த மும் கூறினர். பிறவுமென்றதனுல் நிலமக்களும் நீர்நிலையும் வார்கொடியும் பூவுங் கொள்ளப்படும்; இவற்றுள், [12] "இனஞ்சூழ் கோவலர்" என்பதனுல் நிலமக்களும், [13] "புடைநெறிப் போயோர் பொய்கையிற் சென்று" என்பதனுல் நீர் நிலையும், [14] "ஆய்கொடிக் கவலையும்" என்றதனுல் வார்கொடியும், [15] "காயாமலர் மேனி", [16] "மூல்லை நிகர்மலர்" என்பவற்றுற் பூவும் கூறினர்.

குறிஞ்சித்திணை நிலமுதற்பொருள். பெரும்பொழுது: [17] "அருவி யொலிக்கு .....மலைகாண் குவம்" என்பதனுற் கூதிர்ப்பொழுதும், சிறுபொழுது: [18] "சுன்றத்துச் சென்று வைகியும்" என்றதனுல் நள்ளியாமமும், கருப்பொருள்: [19] "நீலப்பறவைமேல்.....புதல்வன் வரும்" என்பதனுல் தெய்வமும், [20] "ஐவன வெண்ணெலும்.....கொய்பூந் தினையும்" என்பதனுல் உணவும், [21] "புலியொடு பொருஉம் புகர்முகம்" என்பதனுன் மாவும், [22] "கோங்கம் வேங்கை" என்பதனுன்மரமும், [23] "கானக் கோழியுந் தேன்மொழிக் கிள்ளையும்" என்பதனுற் புள்ளும், [24] "தொண்டகந் தொடுமின் சிறுபறை தொடுமின்" என்பதனுற் பறையும், [25] "கொய்பூந் தினையும்", [26] "நறவுக் கண்ணுடைத்த" என்பவற்றுற் செய்தியும்; [27] "அந்தீங் குறிஞ்சி" என்பதனுல் யாழும், [28] "குறிஞ்சி பாடுமின்" என்பதனுற் பண்ணும், உரிப்

---

1 சிலப். ஆய்ச்சியர்குரவை, "கன்று"
2 ,, கொலைக்களக்காதை, ஈ.
3 ,, காடுகாண்காதை, எ அ
4 ,, ஆய்ச்சியர்குரவை, "செந்தில்லே"
5 ,, புறஞ்சேரியிறுத்தகாதை, ஈஎ.
6 ,, ...
7 ,, ஆய்ச்சியர்குரவை, "கோவாம"
8 ,, ,, "சூடமுதி"
9 ,, ,, "செந்தில்லே"
10 தொல். அகத்திணையியல், சூ. கச.
11 சிலப். கானல்வரி, "பிரிந்தார்"
12 ,, கொலைக்களக்காதை, ச.
13 ,, காடுகாண்காதை, ககூ.
14 ,, ,, அ.
15 சிலப். வேட்டுவவரி, "ஆய்பொன்னரி."
16 ,, கனாத்திறமுரைத்தகாதை, கஉ.
17 ,, காட்சிக்காதை, சூ - எ.
18 ,, குன்றக்குரவை, "குருவி"
19 ,, ,, "வேலனார்"
20 ,, காடுகாண்காதை, அ0 - அக.
21 ,, காட்சிக்காதை, உக.
22 ,, ,, கஎ.
23 ,, ,, ஙச.
24 ,, குன்றக்குரவை, "குருவி"
25 ,, காடுகாண்காதை, அக.
26 ,, காட்சிக்காதை, உஎ.
27 ,, நடுகற்காதை, நடு.
28 ,, குன்றக்குரவை, "குருவி"

[1] "கன்று குணிலாக் கனியுகுத்த மாயவன்" என்பதனுற் றெய்வமும், [2] "அவி விலை யுணவின்" என்பதனுல் உணவும், [3] "நீர்நசைஇ வேட்கையின் மானின்று விளிக்கும்" என்பதனுன் மாவும், [4] "கொல்லைப் புனத்துக் குருந்தொசித்தான்" என்பதனுன் மரமும், [5] "கானவாரணங் கதிர்வர வியம்ப" என்பதனுற் புள்ளும், [6] "எறிந கோட்பறை" என்பதனுற் பறையும், [7] "கோகுல மேய்த்து" என்பதனுற் செய்தியும், [8] "குடமுதல்.....வேண்டிய பெயரே" என்பதனுல் முல்லையாழும், பண்: [9] "முல்லைத்தீம் பாணி யென்மூர்" என்பதனுற் சாதரியும் கூறினர். உரிப்பொருள்: [10] "புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல், ஊடல் இவற்றி னிமித்த மென்றிவை, தேருங் காலைத் திணைக்குரிப் பொருளே" என்பதனுலுணர்க. [11] "இருந்தேங்கி வாழ்வா ருயிர்ப்புறத்தாய்" என்பதனுல் இருத்தலும், [11] "பேரருளி னீழல்" என்பதனுல் இருத்தனிமித்த முங் கூறினர். பிறவுமென்றதனுல் நிலமக்களும் நீர்நிலையும் வார்கொடியும் பூவுங் கொள்ளப்படும்; இவற்றுள், [12] "இளைசூழ் கோவலர்" என்பதனுல் நிலமக்களும், [13] "புடைநெறிப் போயோர் பொய்கையிற் சென்று" என்பதனுல் நீர் நிலையும், [14] "ஆய்கொடிக் கவலையும்" என்றதனுல் வார்கொடியும், [15] "காயாமலர் மேனி", [16] "முல்லை நிகர்மலர்" என்பவற்றுற் பூவும் கூறினர்.

குறிஞ்சித்திணை நிலமுதற்பொருள். பெரும்பொழுது: [17] "அருவி யொலிக்கு .....மலைகாண் குவம்" என்பதனுற் கூதிர்ப்பொழுதும், சிறுபொழுது: [18] "குன்றத்துச் சென்று வைகியும்" என்றதனுல் நள்ளியாமமும், கருப்பொருள்: [19] "நிலப்பறவைமேல்.....புதல்வன் வரும்" என்பதனுல் தெய்வமும், [20] "ஐவன வெண்ணெலும்.....கொய்பூந் திணையும்" என்பதனுல் உணவும், [21] "புலியொடு பொருஉம் புகர்முகம்" என்பதனுன் மாவும், [22] "கோங்கம் வேங்கை" என்பதனுன் மரமும், [23] "கானக் கோழியுந் தேன்மொழிக் கிள்ளையும்" என்பதனுற் புள்ளும், [24] "தொண்டகந் தொடுமின் சிறுபறை தொடுமின்" என்பதனுற் பறையும், [25] "கொய்பூந் திணையும்", [26] "நறவுக் கண்ணுடைத்த" என்பவற்றுற் செய்தியும்; [27] "அந்தீங் குறிஞ்சி" என்பதனுல் யாழும், [28] "குறிஞ்சி பாடுமின்" என்பதனுற் பண்ணும், உரிப்

---

1 சிலப். ஆய்ச்சியர்குரவை, "கன்று"
2 ,, கொலைக்களக்காதை, ஙு.
3 ,, காடுகாண்காதை, எஅ
4 ,, ஆய்ச்சியர்குரவை, "செந்நிலை"
5 ,, புறஞ்சேரியிறுத்தகாதை, ஙஎ.
6 ,,
7 ,, ஆய்ச்சியர்குரவை, "கோவாம்"
8 ,, ,, "குடமுதற்"
9 ,, ,, "செந்நிலை"
9 தொல். அகத்திணையியல், சூ. கச.
1 சிலப். கானல்வரி, "பிரிந்தார்"
2 ,, கொலைக்களக்காதை, சி.
3 ,, காடுகாண்காதை, ககஉ.
4 ,, ,, அஉ.
15 சிலப். வேட்டுவவரி, "ஆய்பொன்னரி."
16 ,, கனாத்திறமுரைத்தகாதை, கரஉ.
17 ,, காட்சிக்காதை, சூ - எ.
18 ,, குன்றக்குரவை, "குருவி"
19 ,, ,, "வேலனார்"
20 ,, காடுகாண்காதை, அ0 - அக.
21 ,, காட்சிக்காதை, உக.
22 ,, ,, கஎ.
23 ,, ,, நிக.
24 ,, குன்றக்குரவை, "குருவி"
25 ,, காடுகாண்காதை, அக.
26 ,, காட்சிக்காதை, உள.
27 ,, தடுகதிர்காதை, ஙடு.
28 ,, குன்றக்குரவை, "குருவி"

பொருள்: [1] "அஞ்சலோம் பெண்டிர் நலனுண்டு" என்பதனைப் புணர்த்தலும், [1] "நல்காதார்" என்பதனைப் புணர்த்தனிமித்தமும், [2] "குன்றவருங்கண்டு நிற்க" [3] "குறத்தியர் பாடிய" என்பனவற்றுள் நிலமக்களும், [4] "அருவி யாடியு மகன்சுனை குடைந்தும்" என்பதனுள் நீர்நிலையும், [5] "எலவல்லியு மிருங்கறி வல்லியும்" என்பதனுள் வார்கொடியும், [6] "விரவு மலர்தூவு மின்" என்பதனைப் பூவும் கூறினர்.

மருதத்திணை நிலமுதற்பொருள். [7] "இன்னிள வேனில் வந்த திவ் ணென" என்பதனைப் பெரும்பொழுதும், [8] "வான்கண் விழியா வைகறை யாமத்து" என்பதனைச் சிறுபொழுதும், கருப்பொருள்: [9] "மலைச்சிற கரிந்த வச்சிர வேந்தற்கு" என்பதனுள் தெய்வமும், [10] "குமரிக் கூட்டிற் கொழும் பல் லுணவு" என்பதனுள் உணவும், [11] "கழாமயிர் யாக்கைச் செங்கட் காரான்" என்பதனுள் மாவும், [12] "மருதோங்கு மூன்றுறை" என்பதனுள் மரமும், [13] "கம்புட் கோழியுங் கூஉக்குர லுரையும்" என்பதனைப் புள்ளும், [14] "தெண்கிணைப் பொருநர் செருக்குட னெடுத்த" என்பதனைப் பறையும், [15] "ஏரெடு நின்றோர்" [16] "அரிந்துகால் சூவித்தோர்" என்பனவற்றுள் செய்தியும், யாழ்: [17] "அதிரா மரபின் யாழ்கை வாங்கி" என்பதனுள் மருத யாழும், பண்: [18] "வைகறைப் பாணியும்" என்பதனுள் மருதப்பண்ணும், உரிப்பொருள்: [19] "சிலம்புள கொண்மென" என்பதனுள் ஊடலும், [20] "விடுத லறியா விருப்பினன்", [21] "போற்ரு வொழுக்கம் புரிந்தீர்" என்பனவற்றுள் ஊடனிமித்தமும், [22] "கருங்கை வினைஞருங் களமரும்", [23] "சின்மொழிக் கடைசியர்", என்பனவற்றுள் நிலமக்களும், [24] "பூநா றிலஞ்சிப் பொருகய லோட்டி" என்பதனுள் நீர்நிலையும், [25] "கோதை மாதவி" என்பதனுள் வார்கொடியும், [26] "வெண்பூ மல்லிகை.....தண்செங் கழுநீர்" என் பதனைப் பூவும் கூறினர்.

நெய்தற்றிணை நிலமுதற்பொருள். பெரும்பொழுது: காரும் இருவகை வேனிலும்: இவை ஆசிரியர் எடுத்தோதாமையின் அடிகள் கூறிற்றிலர்போ லும். சிறுபொழுது: [27] "வையமோ கண்புதைப்ப வந்தாய் மருண்மாலை"

---

1 சிலப். குன்றக்குரவை, "ஆங்கொன்று"
2 ,, ,, "குருவி"
3 ,, நீர்ப்படைக்காதை, உரை.
4 ,, குன்றக்குரவை, "குருவி"
5 ,, கானல்வரிக்காதை, உரை.
6 ,, குன்றக்குரவை, "குருவி"
7 ,, வேனிற்காதை, உ.
8 ,, நாடுகாண்காதை, க.
9 ,, ஊர்காண்காதை, உரை.
10 ,, நாடுகாண்காதை, உரை.
11 ,, ,, உரை.
12 ,, ஊர்காண்காதை, உ.
13 ,, நாடுகாண்காதை, உரை.
14 ,, ,, உரை.
15 சிலப். நாடுகாண்காதை, உரை.
16 ,, ,, உரை.
17 ,, வேனிற்காதை, உரை.
18 ,, புறஞ்சேரியிறுத்தகாதை, உரை.
19 ,, கனாத்திறமுரைத்தகாதை, உரை.
20 ,, அரங்கேற்றுகாதை, உரை.
21 ,, கொலைக்களக்காதை, உரை.
22 ,, நாடுகாண்காதை, உ.
23 ,, ,, உரை.
24 ,, ,, உரை.
25 ,, ஊர்காண்காதை, உரை.
26 ,, ,, உரை.
27 ,, கானல்வரி, "பையுண்மாலை"

என்பதனுல் மாலையும், கருப்பொருள்: தெய்வம்: [1] "கடற்றெய்வங் காட்டிக் காட்டி" என்பதனுல் வருணனும், உணு: [2] "விலைமீ னுணங்கற் பொருட்டாக" என்பதனுன் மீன்விலையுணவுங்கூறினுர். மா, உமணர் பகடன்றி இந் நிலத்திற்கு விலங்கின்மையின் ஆசிரியர் கூறிற்றிலர்போலும். இனி முதலையும் சுறவும் [3] மாவென்பர்; [4] "கெண்கூட யஞ்சினை மேய்ந்து கிளர்ந்து போய், மூண்ட கீத்துறை சேர்ந்த முதலைமா, வண்டல் வார்கரை மாமக ரக்குழாங், கண்டு நின்று கனலுங் கழியெலாம்" எனக் காட்டுவாருளராயினும், அவை மீனெனப்படுவவல்லது மாவெனப்படா; [5] "பொறைமலி பூம் புன்னை" என்பதனுல் மரமும், [6] "அன்னந் துணையோ டாட" என்பதனுற் புள்ளுங்கூறினுர். பறை கூறிற்றிலர்; மீன்கோட் பறையென்க. [7] "கடல் புக் குயிர்கொன்று வாழ்வர்" என்பதனுற் செய்தியும், [8] "சித்திரப்படத்துள் .....குற்ற நீங்கிய யாழ்" என்பதனுல் யாழும், பண்: [9] "நூலையர் விளரி' என்பதனுல் விளரிப்பண்ணும், உரிப்பொருள்: [9] "கொளவல்லா யென்னுவி கொள்" என்பதனுல் இரங்கலும், [10] "பேரருளினீழ, லிருந் தேங்கி வாழ்வார்" என்பதனுல் நிமித்தமும், [11] "சேரிப் பரதர் வலைமுன்றில்," [12] "பவள வுலக்கை," [13] "எறிவலைக ளார்ப்ப" என்பனவற்றுல் பரதரும் பரத்தியரும் நூலையரும் நூலச்சியருமாகிய நிலமக்களும், [14] "ஈர்ந்தண் டுறை" என்பதனுல் நீர்நிலையும், [15] "அம்மெ ணிணர வடும்புகாள்" என்பதனுல் வார்கொடியும், [16] "நறுஞாழல் கையி னேந்தி" என்பதனுற் பூவுங் கூறினுர்.

"சொல்லிய முறையாற் சொல்லவும் படும்" என்பதனுற் சொல்லாத முறையாற் சொல்லவும்படுமென அருத்தாபத்திகோடலானும், [17] "நடுவுநிலைத் திணையே நண்பகல் வேனிலொடு, முடிவுநிலை மருங்கின் முன்னிய நெறித்தே" என்பதனுனும், [18] "முல்லையுங் குறிஞ்சியு முறைமையிற் றிரிந்து, நல்லியல் பிழந்து நடுங்குதுய ருறுத்துப், பாலை யென்பதோர் படிவங் கொள்ளுங், காலை யெய்தினிர்" என்பதனுனும்போந்த இப்பெற்றித்தாகிய பாலைத்திணை நிலமுதற்பொருள். பெரும்பொழுது: [19] "வேனிற் கிழவனெடு வெங்கதிர் வேந்தன், முனலங் திருகித் தன்மையிற் குன்றி" என்பதனுல் இருவகைவேனிலும், சிறுபொழுது: [20] "படுங்கதி ரமயம் பார்த்திருந் தோர்க்கு" என்பதனுல்

---

1 சிலப். கானல்வரி, "கரியமலர்"
2 ,, ,, "வலைவாணர்"
3 என்பவர், இளம்பூரணரும், இறையனு ரகப்பொருளுரையாசிரியரும், அகப் பொருள்விளக்க ஆசிரியரும், வீரசோழியமுடையாரும்.
4 சூளாமணி, நாட்டுச்சருக்கம், உஉ.
5 சிலப். கானல்வரி, "துறைமேய்"
6 ,, ,, "அன்னந்"
7 ,, ,, "கடல்புக்"
8 ,, ,, முதற்கட்டுரை.
9 ,, ,, "நூலையர்"
10 சிலப். கானல்வரி, "பிரிந்தார்"
11 ,, ,, "வாரித்தரள"
12 ,, ,, "பவள"
13 ,, ,, "எறிவலை"
14 ,, ,, "நேர்ந்தநம்"
15 ,, ,, "தம்முடைய"
16 ,, ,, "நினங்கொள்"
17 தொல். அகத்திணையியல், சூ. கூ.
18 சிலப். காடுகாண்காதை, சுசு - எ.
19 ,, ,, சுஉ - ங.
20 ,, புறஞ்சேரிஇறுத்தகாதை, சுசு.

* நண்பகலுங்கூறினர். கருப்பொருள்: தெய்வம், ஆசிரியர் புலப்பட ஏடுத் தோத்திற்றிலரேனும், [1] "கடுங்கதிர் திருகலின்" எனவும், [2] "வெங்கதிர் வேந்தன் ருனலுக் திருகி" ஏனவும், [3] "ஐயை கோட்டத் தெய்யர் வொருசிறை" என வும், [4] "கொற்றவையுங் கொடுமரமுன் செல்லும்" எனவுங் கூறுதலாலும், பிறவாற்றாலும் பரிதியஞ்செல்வனும், திகிரியஞ் செல்வியுமெனக்கொள்க. உணு: [5] "ஆரிடை யத்தத் தியங்குந ரல்லது, மாரி வளம்பெரு வில்லே ருழவர்" என்பதனால், ஆறறிந்துஞ் சூறைகொண்டும் உண்ணுமூணவாம். மா: [6] "மானின்று விளிக்கும்" என்பதனால் உழைமான் முதலியனவும், [7] "அலர்தலை மராமு முலறுதலை யோமையும்" என்பதனால் மரமும், [8] "கானவாரணங் கதிர்வர வியம்ப" என்பதனாற் புள்ளும், [9] "துண்ணென் றுடியொடு" என்பதனாற் பறையும், [10] "பொருள்கொண்டு புண்செயின்" என்பதனாற் கெய்தியும், [11] "செந்திறம் புரிந்த செங்கோட்டி யாழ்" என்பதனால் யாழும், பண்: [12] "ஆசான் றிறத்தின்" என்பதனாற் காந்தாரபஞ்சமமுங் கூறினர்; உரிப்பொருள்: [13] "தொடிவளைச் செங்கை தோவிற் காட்டி" எனவும், [14] "ஆரிடை யுழந்த மாதரை நோக்கி" எனவுங் கூறினமையாற் போக்கும், வாளாது [15] "போக்கெல்லாம் பாலே" என்றலின், உடன்போக்கும் கொள்ளப் பட்டன. நிலமக்கள்: [16] "கண்ணி லெயினர்" எனவும், [17] "இளமா வெயிற்றி" எனவுங்கூறலின், எயினரும் எயற்றியரும்; ஈண்டு நீரின்மை நிலை: "நீர்நசைஇ வேட்கையின் மானின்று விளிக்கும்" என்பதனாலும், [18] "நீரின்றி வேனி றெறுநிலம் பாலே" என்பதனாலும் நீரின்மையே இந்நிலத்திற்குச் சிறப்பென வுணர்க. [19] "அறுநீர்ப் பைஞ்சுனை யாமறப் புலர்தலி, னுகுநெற் பொரியும் வெம்மை" என அப்பாட்டினும், [20] "மரையா மரல்கவர" எனக் கலி யுள்ளுங் கூறினர். [21] "ஆய்கொடிக்கவலையும்" என்பதனால் வார்கொடியும், [22] "கொம்பர் நல்லில வங்கள்கு விந்தன" என்பதனாற் பூவுங்கூறினர்.

1 சிலப். வேட்டுவவரி, க.
2 ,, காடுகொண்காதை, சுஉ - சு.
3 ,, வேட்டுவரி, ச.
4 ,, ,, "கள்ளோயாட்டி"
5 ,, காடுகொண்காதை, உ0சு - க0.
6 ,, ,, எஅ.
7 ,, ,, எடு.
8 சிலப். புறஞ்சேரியிறுத்தகாதை, சுஎ.
9 ,, வேட்டுவரி, "துண்ணென்"
10 ,, ,, "பொருள்"
11 ,, புறஞ்சேரியிறுத்தகாதை, க0சு.
12 ,, ,, ககஉ.
13 ,, ,, சுசு.
14 ,, ,, சு0.

15 "போக்கெல்லாம் பாலே புணர்தன வுங்குறிஞ்சி
ஆக்கஞ்சே ருட ணிமருதம்—நோக்கொன்றி
யில்லிருக்கை முல்லே யிரங்க னறுநெய்தல்
சொல்லிருக்கு மைம்பாற் றெகை."

இச்செய்யுள் நாற்கவிராயநம்பியகப்பொருள்விளக்கவுரையின் இறுதியிலும், திருவாய்மொழியீட்டின் "அஞ்சிறையமட நாராய்" என்பதன் அவதாரிகைக்குரிய ஜீயரருட்பாடவுரையிலுங் காணப்படுகின்றது; இன்னநூலிலுள்ளதென்று தெரியவில்லை.

16 சிலப். வேட்டுவவரி, "துண்ணென்"
17 ,, ,, "இளமா"
18 திவாகரம், ஐந்தாவது, இடப்பெயர்த் தொகுதி.
19 அகநானூறு, க.
20 கலித்தொகை, சு.
21 சிலப். காடுகாண்காதை, அஉ.
22 ,, வேட்டுவரி, "செம்பொன்."

இச்சொல்லப்பட்ட ஐந்திணையின் முதல் கரு உரிப்பொருளும் பிறவுமாகிய அகத்திணைப்பொருட்பயன் * உடம்பொடு புணர்த்தியுணர்த்திப் புறத்திணைப் பொருட்பயனும் பிறவும் இவ்வாறு * உடம்பொடு புணர்த்தியுணர்த்துங்காற் பூனூல்துரைக்கப்பட்டுக் கேட்போர்க்கு இன்பம்பயவாது உணர்வுசலிக்குமாத லின் வந்தன வந்துழிக்காட்டுதலிக்கருதிற்று இவ்வுரையெனக்க.

இனி, இசைநாடகத்தமிழ்நூலது பகுதியும், இவைபோலப் பெருவழக்கின் மூதலானும், நிலத்தோடும், கலத்தோடும், கண்டத்தோடும், கருவியோடும், நிலையோடும், இயக்கத்தோடும், இருவகை பலவகைவிலக்குறுப்புக் கை கால் வட்டணை பொருள் யோனி விருத்தி சுந்தி சுவை சாதி குறிப்பு சத்துவம் அவி நயம் சொல் சொல்வகை வண்ணம் வரி சேதமென்பனவற்றோடும் கதை யோடும் பலசூத்துக்கூறுங்கால் உய்த்துணர்வில்லோர்க்குச் செவிச்சுவை பயக்குமாதலானும் ஈண்டுவிரியாது விரித்தலிக்கருதிற்று இவ்வுரையெனக் கொள்க.

இனிப் பதிகச்செய்யுளுள்; முதலீரடியும்போல யாண்டும்விரியாது உரை பெருகுமென்பதனைக் கருதியெனக்கொள்க.

க - கூ. குணவாயில்.....அறிந்தருணீயென

(இதன்பொருள்.) திருக்குணவாயிற்கோயிற்கண்ணே அரசபோகத்தைத் துறந்து தவவுருத்தாங்கியிருந்த குடதிசைக்கோவாகிய செங்குட்டுவனென் னுஞ் சேரற்கு இளங்கோவாகிய அடிகட்குக் குறவரெல்லாரும் திரண்டு சென்று எம்தூர் மலைப்பக்கத்துப் பொன்போலும் பூவினையுடையவேங்கை மரத்தின் நிழற்கண்ணே ஒருமூலையிழந்துவந்துநின்றாள் ஒரு மாபத்தினி; அவள்பொருட்டு இந்திரன்றமர் ஈண்டி வந்து அவள்கொழுநனைக் காட்டி அவ ளோடும் அவர் எம்கட்புலங்காண் விட்புலம்போயவது ஓர்திசயமாயிருந்தது; அதனை நீ அறிந்தருளுவாயாக என்றவளகிலேயென்க.

குன்றக்குரவர் - ஏழனுருபுத்தொகை; குன்றம் - கொடுங்கோளூர்க்கு அயல தாகிய செங்குன்றென்னுமலை. அது திருச்செங்கோடென்பவாலெனின், அவ ரறியார்; என்னை? அத்திருச்செங்கோடு வஞ்சிநகர்க்கு வடகீழ்த்திசைக் கண்ணதாய் அறுபதின்காதவாறுண்டாகலானும், [1] அரசனும் உரிமையும் மலைகாண்குவமென்றுவந்து கண்ட அன்றே வஞ்சிபுகுதலானும் அது கூடா மையினென்க.

பொலம்பூ, உவமத்தொகை. நலம் - குளிர்ச்சி. இளர்தல் - மிகுதல். திரு மாபத்தினி - அழகியவீரபத்தினி; குவ்வுருபு பொருட்டு; அது [2] "வரி சைக்கு வருந்தும்" என்றுற்போலநின்றது. தமர் - தேவர். ஒடு உட னிகழ்ச்சி. கட்புலம் - கண்ணினதறிவு; கண்ணென்கின்றபுலமுமாம். விட் புலம் - விண்ணிடம். இறும்பூது - அதிசயம்; [3] "இறும்பூதுசாரன்ற" என்றார் மணிமேகலையிலும்.

---

[1] அரசன் - செங்குட்டுவன்; உரிமை - வேண்மாள். இவர்கள் மலைகண்டவின்றே வஞ்சிபுகுந்ததனை இந்நூற் காட்சிக்காதையிற்காண்க.

[2] புறநானூறு, ஈஎ. [3] மணிமேகலை, உ0 - ஆம் காதை, (பி - ம்,) * 'உடம்படுபுணர்த்தி,'

சென்றெனவும்; நின்றுளெனவும் வருவிக்க.

குறவர் கூடிப் பத்தினிக்கு ஈண்டி வந்து கோள் செய்ய அது இறும்பூதுபோலு மென்றுரென்க.

ஈண்டி வந்து காட்டிக் காணப் போயவென்னும்பெயரெச்சம் அதுவென் னுஞ் சுட்டுப்பெயரோடு முடிந்தது.

போய அது போயதென விகாரம்.

இதனுட் பத்தினியென்பதூஉம், தமரென்பதூஉம், கொழுநனென்பதூஉம் சுன்றக்குறவரறிந்தமை சுன்றக்குரவையுட்காண்க.

இது மருட்கையென்னு மெய்ப்பாடு.

கo - கக. அவனுழை.....உரைப்போன்

(இ - ள்.) குறவர் இளங்கோவடிகளைநோக்கி அறிந்தருளென்றவளவிலே செங்குட்டுவன் அதிசயித்து முகநோக்கப் பரிசில்காரணமாகவந்து அவனுழை யிருந்த சாத்தன் அதனைக்குறிப்பானறிந்து அதுவினைந்ததெல்லாம் யானறிகுவ னென்றுரைக்கின்றவனென்க.

அதுவென்றது, ஒருமூலையிழந்ததனை. பட்டது - விளைந்தது.

கஉ - உo. ஆரங்கண்ணி.....புகுந்தனன்

(இ - ள்.) ஆத்தித்தாரையுடைய செம்பியனது பழையநகரங்களில்வைத்து மாறுத விழவுச்சிறப்பினையுடைய புகாராகிய நகரத்திடத்துக் கோவலனென்று பெயர்கூறப்படுவானொருவாணிகன் தன்னூர்க்கண் நாடகந்தானேத்தும் நாடகப் பொதுமகளாகிய மாதவியென்பாளோடுகூடிய ஒழுக்கத்தாலே பெறுதற்கரிய பொருள் தொலைதலின், அவன்மனைவி கண்ணகியென்று பெயர்கூறப்படுவாள்; அவளுடைய காலணியாகிய ஓசையமைந்த சிலம்பினை விற்றல்வேண்டித் தமிழி னது பாடல்சிறந்த சிறப்பினையுடைய பாண்டியனது மிக்கபுகழையுடைய மாட மதுரைக்கண்ணே சென்றுபுக்கானென்க.

நாடகமேத்துமென்றது - நாடகம் தான் இவளாற்சிறப்பெய்துதலின் ஏத் திற்றென்றவாறு. இனி ஏத்துநாடகமென்மாற்றி பதினோராடலாக்கி உரைப் பினு மமையும்; இனி நான்கனுருபுவிரித்து உருப்பசிமுதலியோர்யாவரும் ஏத்து மெனவுமாம். கணிகையர்பலராதலின், இவளை நாடகக்கணிகையென்றார்; பதியிலாளென்பது தோன்ற. ஆடுதல் - அனுபவித்தல்; [1] "இளையார்விளை யாட" என்றார் சிந்தாமணியினும். அருமபொருள் - அறனும் இன்பமுந்தரும் பொருள். [2] "அப்பொரு, டின்னுங் காலைத்துன் னுதன வில்லையே" என்றார் பிறரும். கேடுற - அழிவுற. [3] "வஞ்சியும் வறிதே", "மதுரையும் வறிதே", "உறந்தையும் வறிதே" என்றாராகலின், இதனைப் பேராச்சிறப்பினையுடைய புகா ரென்றார். காற்சிலம்பு பகர்தல்வேண்டியனவே தலைக்கோலமுதலிய அணிக ளனைத்தும் முன்னமேதொலைந்தது - விளங்கிநின்றது. சிறப்பிற்பாண்டிய

---

[1] சீவகசிந்தாமணி, கருசு. [2] சீவகசிந்தாமணி, கருஉரு. [3] சிறுபாணாற்றுப் படை, இo, சுஉ, அசு.

னென்றும், பெருஞ்சீர்மாடமதுரையென்றும் அடிகள்புகழ்ந்தார்; இவையும் பழவினையால் அழிந்தவென்னுமிரக்கந்தோன்ற. மாடமதுரை புகுந்தனனென்பது - காட்டினன்றி ஒருரின்கண் உயிரும் பொருளுமிழந்தானென்பது மேல் வினையத் தோன்றிநின்றது.

நகரத்துவாணிகன் கொள்கையாற் கேடுறுதலிற் பகர்தல்வேண்டி மனைவியோடுபுகுந்தனனென்க.

உ0 - உஉ. அதுகொண்டு.....காட்ட

(இ - ள்.) அங்ஙனம் முன்னுட்புகுந்தனனாய்ப் பிற்றைஞான்று அதனைக் கொண்டுபோய் விற்கைக்குப் பீடிகைமறுகிற் செல்கின்றவன் கூற்றுவன்வந்தாற்போல முன்வந்த பொற்கொல்லனைக்கண்டு அவன்கையிற்காட்டவென்க.

கண்டென ஒருசொல்வருவிக்க. அதுகொண்டென்றார், அச்சிலம்பால் மேல்வினைவன தோன்ற; அது அநியாயபுரத்தே புகுகின்றவன் கூற்றத்தையும் உடன்கொண்டு புக்கானென்றுற்போன்றிருந்தது. மன், கழிவின்கண்வந்தது.

செல்வோன் கண்டு காட்டவென்க.

உங - சு. கோப்பெருந் தேவி.....கள்வன் கையென

(இ - ள்.) அங்ஙனங் காட்டக்கண்ட பொற்கொல்லன் இப்பெருவிலைச் சிலம்பு கோப்பெருந்தேவிக்கே ஆவதன்றிப் பிறர் பூணுந்தரமல்லவாதலான், இதனை யான் அரசற்குணர்த்திவருந்துணையும் இக்கோட்டத்திருக்கவெனச் சொல்லிப்போய்த் தான் முன்பு பணிக்களரியில் வஞ்சித்துக்கொண்டு நிலைநிற்றலான் ஆராய்ச்சி சிறிதுபிறந்துவருகின்றசிலம்பினைப் பிறர்நாட்டு ஒருகள்வன் கையிற் கண்டேனென்று அரசற்குரைப்பவென்க.

தான்கொண்டவென்றார், தன்னெஞ்சறியத் தான்கொண்டதனை இங்ஙனங்கூறினனென்பதுதோன்ற. ஈங்கிருக்கவென்றார், பிறிதோரிடத்தாயின் ஊர்காவலர் ஆராய்வரென்றுகருதினனென்பதுதோன்ற. என்றேகியென்றார், அவன்கருத்தும் முயற்சியுந்தோன்ற. சில்லரிச்சிலம்பினீயென்றார், தொழிற் பன்மைதோன்ற. பிறனேர் கள்வன்கையிற்கண்டனனென்றார், தன்னையும் கள்வனென்றமைதோன்ற.

உஎ - ங0. வினைவினை.....ஈங்கென

(இ - ள்.) அங்ஙனம் அவன்சொல்லக்கேட்ட பாண்டியன் தான் முற்பவத்திற்செய்த தீவினைவந்து பலிக்கின்றகாலமாதலாலே ஒன்றையுந்தேராளுய்க் காவலில் அடிப்பட்டோரையழைத்து இவன்சொன்ன அக்கள்வனைக்கொல்ல அச்சிலம்பையும் அவனையும் இப்பொழுதே இங்கே கொண்டுவருவீராகவெனச் சொல்லக்கருதினவன் காமபரவசனுய் இச்சிலம்பு இவளுடல்தீர்க்கு மருந்தாமென்னுங்கருத்தால் வாய்சோர்ந்து கொன்று அச்சிலம்பை இப்பொழுதே கொணர்கவென்றுகூறவென்க.

இதனுனன்றே [1] "தென்னவன் றீதிலன் றேவர் கோமான் கோயி, னல்விருந் தாயினன்" என்றகருத்துமெனக்கொள்க. அச்சிலம்பெனக் கோப்

[1] சிலப். வாழ்த்துக்காதை, செங்குட்டுவற்குக் கண்ணகி கடவுணல்லணிகாட்டியது.

பெருந்தேவி சிலம்பைச்சுட்டிக் கூறினளுயிற் கள்வனைக்கொன்று சிலம்பைக் கொணர்கவென்றனெனினுங் குற்றமில்லை ; அக்கருத்தினளன்றே வழக்குரை காதையுள்ளும் "கள்வனைக் கோறல் கடிங்கோ லன்று" (சுசு) என்றதுமென்க. இங்ஙனங்கூறியது, [1] "பாட்டிடை வைத்த குறிப்பி னானும், பாவின் றொழுந்த கிளவி யானும், பொருளொடு புணராப் பொய்ம்மொழி யானும், பொருளொடு புணர்ந்த நகைமொழி யானுமென், றுரைவகை நடையே நான்கென மொழிப" என்பதனானென்க. இதனை மேல்வருவனவற்றிற்குங் கொள்க.

இதனை ஆராயுநெறி பலவுளவாகவும், அவற்றில் ஒன்றையும் தேர்ந்திலனென்பார் யாவதும் தேராளாகியென்றார்; முன்னார்க் [2] கைகுறைத்தன்மு தலிய முறைசெய்தோன் இதனைத் தேர்ந்திலனென்று அடிகள் இரங்கிக்கூறினர். கன்றியகாவலனென்றார், அவரும் முன்னார்த் தீதுசெய்யாரென்பது தோன்ற.

காலமாதலின் தேராளாகிக் கூஉய்க் கொன்று கொணர்கவென்றனென் றியைக்க.

நக - சு. கொலைக்களம்.....இவனென

(இ - ள்.) அங்ஙனம் கொன்றுகொணர்கவென்று அரசன்கூறக்கேட்ட காவலரும் வினைவிளைகாலமாதலிற் கொல்லக் கொலையிடத்தேபட்ட கோவலன் மனைவி தனக்குநிலையிடங்காணளாய் அவடான் பத்தினியாதலிற் பாண்டியன் முன்னர்ச்சென்று அவனுயிர்கேடுறக் கண்ணீருகுத்து அவனுரையும் தன்முலை முகத்தெழுந்த தீயையுண்ணப்பண்ணிய பலரும்புகழப்படும் பத்தினிகாணும் இக்குறவர்சொன்னவளென்றுகூற வென்க.

பாண்டியனும் கூடலுங்கேடுற வுருத்து ஊட்டியவென்க. கண்ணும் முலையும் உருத்த நீரானும் நெருப்பானும் அடுதலும் சுடுதலுஞ்செய்தானென்ப தாயிற்று. இக்கருத்தானன்றே வாழ்த்தினுள்ளும் "தொல்லை வினையாற் றுய ருழந்தாள் கண்ணினீர், கொல்ல வுயிர்கொடுத்த கோவேந்தன்" என்பதனாலும்.

நஎ - அ. வினைவிளை.....என்ன

(இ - ள்.) நீர் முன்னே வினைவிளைகாலமென்று சொல்லிப்போந்தீர் ; அவர்க்கு வினைவிளைந்தகாலம் என்னையென்று அரசன் வினவவென்க.

---

[1] தொல். செய்யுளியல், சூ. களசு.

[2] பாண்டியன் தன்கைகுறைத்ததை மேற் கட்டுரைகாதை [சக - நிஉ] யிலும், "நாடுவிளங் கொண்புகழ் நடுதல் வேண்டித்தன், னடு மழைத் தடக்கை யறுத்து முறை செய்த, பொற்கை நறுந்தார்ப் புனைதேர்ப் பாண்டியன்" (தொல். களவு. சூ. க - இளம்.; நம்பி. சூ. சடு - உரை; இ - வி. சூ. சகடு - உரை, மேற்) என்பதிலும், "எனக்குத் தகவன்று லென்பதே நோக்கித், தனக்குக் கரியான் றனையத் தவறின்றி, நினைத்துத்தன் கைகுறைத்தனன் பாண்டியன் காண், மென்செய்யார் மாணுவினை" என்னும் கஉஉ - ஆம் பழமொழிச் செய்யுளிலுங்காண்க. இதனை நிசள - ஆம் திருக்குறளுரையில் "தன்கைகுறைத்தான்" எனப் பரிமேலழகரும் குறிப்பித்தனர். இக் கதையையுட்கொண்டே "தீமைசெய் தாய்போற் செங்கை குறைத்தாய் முறை யேயோ" என்றார் பரஞ்சோதிமுனிவரும்.

கூஅ - நிச. விறலோய்.....யானென

(இ - ள்.) விறலோய், கேட்பாயாக; நடுக்கமில்லாத சிறப்பினையுடைய மதுரையாகிய மூதூரிடத்து மன்றப்பொதியில்களில் இறைவனுறைகின்ற வெள்ளியம்பலத்துள் யான் துயின்றேனுக; செறிந்த இருளின்கண்ணே அந்நகர்க்குக் கீர்வற்றெய்வமாகிய மதுரைமாதெய்வம் பெரியவருத்தமுற்ற வீரபத்தினிமுன்னர்வந்து வெளிப்பட்டு நினது மிக்கசினத்தால் வெவ்விய அழலை நின்கொங்கையிடத்தே விளைவித்தாய், பைந்தொடி, நுங்கட்கு முற்பட்ட நல்வினை முடிந்ததாகலான், நின்கணவனுடனே நினக்கு முற்பிறப்பின்கண்ணே சூன்முறுதுகழையுடைய நல்ல கலிங்கநாட்டுச் சிங்கபுரமென்னு நகரின்கட் சங்கமனென்னும் வாணிகனுடைய [1] மனைவியிட்டகாரபம் இப்பிறப்பின் கண்ணே வந்துமூண்டதாகலின், நீண்டு செறிந்ததோர் கூந்தலையுடையாய், நின்கணவனை இவ்வேளையன்றி நீ இனிப் பதினெலாநாட் பகல் நீங்கியபொழுதிற் காண்பை; காணுங்கால் வானோர்வடிவிற்காண்பதல்லது மக்கள்வடிவிற் காண்பதில்லையென்றுகூற அவ்வஞ்சமற்ற கட்டுரையினை யான்கேட்டேனென்றுகூறவென்க.

கேட்டி, இகரவீற்று முன்னிலையொருமை வினைத்திரிசொல்; [2] "இ ஐ ஆய்" என்னுஞ் சூத்திரத்தான்முடிக்க. அதிராச்சிறப்பு - பகைவரால் நடுக்கமில்லாதசிறப்பு; [3] "நீர்மூற்றி மதில்பொருஉம்" என்பதனுணர்க. கொன்றையஞ்சடைமுடி, ஆகுபெயரான் இறைவன். பொது இல் - பொதியில்; உகரவீறு இகரமாய்த்திரிந்து உடம்படுமெய்யும் பெற்று, [4] "இளந்தவல்ல" என்னும் அதிகாரப்புறனடையான் முடிந்தது. மன்றப்பொதியிலில் வெள்ளியம்பலத்தென்றது, பொன்னம்பலமுமுண்டாகலின்; என்னே? [5] "கண்ணிலாக் கவர்வன கனக கூடமும், வெண்ணிலாச் சொரிவன வெள்ளி வேயுஞ்சு, தண்ணிலாத் தவழ்மணித் தலமுஞ் சார்ந்தரோ, மண்ணினு லியன்றில மதிலு மாடமே" என்றார் சூளாமணியுள்ளும். நள்ளிருள் - செறிந்தவிருள்; [6] உரிச்சொல் ஈறுதிரிந்தது; இனி வினைத்தொகையாக்கி அணுகரணத்தையுடைய இருளென்பதுஞ் சிறந்தது; "நன்னென் றிறுத்த நடுவுகொள் யாமத்து" என்றாராகலின். ஆரஞர் - பெரியவருத்தம்; ஆவது கணவனை யிழத்தல்; [7] "மக்களிழந்த விடும்பையினு மனையா ளிழந்த விடும்பையினு, மிக்க விடும்பை வேல்வேந்தே விதவை யிடும்பை யெனவிளம்பித், தக்க வதனு லென்கழுத்திற் முலி நீதந் தருளென்று, தொக்க மணிநீண் முடியானைத் தொழுது பின்னுமிவை கொல்லும்" என்றார் பிறரும். வீரபத்தினி, மறக்கற்புடையாள். கோப்பெருந்தேவி, அறக்கற்புடையாள்; ஆக [8] ஆறியகற்புஞ் சீறியகற்புமெனக் கற்பு இரு

---

[1] மனைவி - நீலி; இவள் சாபமிட்ட செய்திமுதலியவற்றை இந்நூற் கட்டுரைகாதையாலும், மணிமேகலை, உசு - ஆம் காதையாலும் உணர்க.

[2] தொல். வினையியல், சூ. உசு. [3] கலித்தொகை, சுஎ.

[4] " குற்றியலுகரப்புணரியல், சூ. எஅ.

[5] சூளாமணி, நகரவருணனைச்சருக்கம், எ. [6] உரிச்சொலீ நளி.

[7] உத்தர. திக்கு. காசுள. [8] "ஆறிய கற்பிற் றேறிய நல்லிணை, வண்டார் கூந்த லொண்டொடி கணவ" என்றார்(சூ.ப)பதிற்றுப்பத்திலும்.

வகை. கொதியழல் - வெவ்வழல். கீற்றம் - மிகுசினம். வினைத்தோய், முன்னிலைத்தொழிற்பெயர். முதிர்தல் - முற்படுதல். எனவே நல்வினைமுடிதலாலென்க. [1] "ஏனவினையுலப்ப" என்றார் பிறரும். இனி முதிர்வினையால் இவை முடிந்தவென்ன வழக்காறுக்கினும் அமையும். பைந்தொடியும் கூந்தலும் அண்மைவிளி. சிங்கல் - குன்றல். வார்தல் - நெடுமை. ஒலி - தழைத்தல். எல்லை - பகற்பொழுது. கோட்டம் - வஞ்சம். கட்டுரை - பொருள்பொதிந்த சொல், உறுதியையுடைய சொல்லுமாம். வினைவினைவு யாதென்றுவினவுவுற்குப் பாண்டியன்வினைவினைவு கூறிற்றிலர்; என்னை? அது கட்டுரை காதையில் விளங்கவுரைக்கப்படும்.

நிநி - சுo. அரைசியல்.....செய்யுளென

அங்ஙனம் அரசனுடு சாத்தனார்கூறக்கேட்ட அடிகள் பொருட்பகுதியை மூவகை உள்ளுறையாக வகுத்துக்கூறுவார்:

(இ-ள்.) நூலொழுக்கிற்றிய அரசியலுட் சிறிது ஒழுக்கம் பிழைப்பினும் அவ்வரசரை அறக்கடவுடானே கூற்றமாய்க் கொல்லுமென்பதூஉம், புகழமைந்த கற்புடைமகளே மக்களேயன்றித் தேவருமுனிவருமுதலாயுள்ளோர் சென்றேத்துதல் இயல்பாகலும், முன்செய்த இருவினையும் செய்தமுறையே செய்தோனே நாடிவந்து உருக்கொண்டுநின்று நுகர்விக்குமென்பதூஉமாகிய இம்மூன்றுபகுதியும் இச்சிலம்புகாரணமாக முறைமையிற் பிறந்தனவாதலிற் சிலப்பதிகாரமென்னும் பெயரான் ஒருகாப்பியமாக நாம் நிறுத்துதுமென்று அவ்வடிகள்சொல்லவென்க.

அறம் அறக்கடவுள். பத்தினிக்கு - பத்தினியை. உருத்து - உருக்கொண்டு; முதிர்ந்தென்றுமாம். வினை - தொழில். நாட்டுதும், உயர்திணைக்கண் வந்த இடவழுவமைதித் தனித்தன்மை; அஃது உளப்பாட்டுத் தன்மைபோன்றிருந்தது. பாட்டுடைச்செய்யுள் - பலபாக்களோடு உரைப்பாட்டையும் இசைப்பாட்டையுமுடைய இயலிசைநாடகப் பொருட்டொடர்நிலைச்செய்யுள். அறம் கொல்லுமென்பது, [2] "என்பிலதனை வெயில்போலக் காயுமே, யன்பி லதனை யறம்" என்பதனாலுணர்க.

ஆவதூஉம், ஏத்தலும், ஊட்டலும் இச்சிலம்புகாரணமாகப் பிறந்தனவென ஒருசொல் வருவித்துமுடிக்க.

சுக - உ. முடிகெழு.....யருளுகென் றூற்கு

(இ-ள்.) முடிபொருந்திய தமிழ்நாட்டு வேந்தர்மூவர்க்கும் உரியதாகலின், அடிகள் நீரேயருளிச்செய்கவென்று விளுவிய சாத்தற்கென்க.

கெழுவென்னுஞ்சாரியை, [3] "ஆனவென வரூஉம் புள்ளி யிறுதிமு, னும்முங் கெழுவு முளப்படப் பிறவு, மன்ன மரபின மொழியிடைத் தோன்றிச், செய்யுட் டொடர்வயின் மெய்பெற நிலையும்" என்னுஞ்சூத்திரத்துள், அன்ன மரபின் மொழியிடைத்தோன்றி என்பதனால் அவ்விருபுள்ளியீற்றுச்சொல்லும் அல்லாதனவும் சாரியைபெற்று முடிவனவுள்வென்றாராகலின், புள்ளியீறல்

[1] நாலடியார், ரு. [2] திருக்குறள், எஎ. [3] தொல். குற்றியலுக்ரப்புணரியல், சூ. எசு.

லாதவழிவந்த சாரியைச்சொல்லெனக்கொள்க. சாரியையாவது சொல் தொடர்ந்துசெல்லு நெறிக்கணின்று அதற்குப் பற்றுக்கோடாகச் சிறிது பொருள்பயந்தும் பயவாததுமாய் நிற்பது. அவற்றுள் இது சிறிதுபொருள் பயப்ப நிற்பது; பொருந்துதலென்னும் பொருண்மைசாரும். மூவர்க்கு மூரியது, புகாரினும் மதுரையினும் வஞ்சியினும் நிகழ்ந்ததாகலின். அடிகள், அண்மைவிளி. என்றூற்கு - தான் பாடக்கருதி விளுவினசாத்தற்கு; அங்ஙனங் கூறுது இங்ஙனங் கூறினரென்க. என்சொல்லியவாறுவெனின்,—இச்செய்கின்ற காப்பியம் மூவேந்தர்க்குமூரியதென்பதனால், ஏனையோரை இவர் புகழ்ந்துரையாராகலின், யாம் காப்பியஞ்செய்யக்கடவேமென்பதுகருதி நீரே அருளுகென ஏகாரவினுப்பொருண்மைதோன்ற இதுகருதி இதுசொன்னற்கு அவர் கருதியபொருளிற்கு உடம்படாது சொல்லிற்கு உடம்பட்டாரென்பதாயிற்று.

இனித் தாம் வகுத்துக்கொண்டதனைக் கூறுவார்.

சுஉ - ங. அவர் மங்கல வாழ்த்துப் பாடலும்

(இ - ள்.) அவர்மணத்தில் மகளிர் வாழ்த்துதலையுடைய பாடலும்,

மங்கலம் - கலியாணம். இதனை மங்கலவாழ்த்துக் காதையுமென்னாது பாடலுமென்றது என்னையோவெனின்,—இஃது ஆசிரியப்பாவால் வாராது கொச்சகக்கலியால் வருதலானும், கதையையுடைய காதையாமாதலானும், அவ்வாறு இதிற் கதை நிகழ்ச்சியின்மையானும், வாழ்த்தும் உரையும் பாடலுமாய் வருதலானும் இங்ஙனம் பெயர்கொடுத்தாரெனவுணர்க. அஃது அற்றுக; மேலும் கானல்வரி, வேட்டுவவரி, ஆய்ச்சியர்குரவை, துன்பமாலை, ஊர்சூழ்வரி, வஞ்சினமாலை, குன்றக்குரவை இவையிற்றையும் காதையென்றிலராலெனின்,—அவற்றைக்கூறுதலும் சில வேறுபாடு கருதிப்போலும். ஏன்னை வேறுபாடெனின்,—அவை தத்தமுடிவிற் கூறுதும்.

சுஙட - சு. குரவர் மணியறம் படுத்த காதையும்

(இ - ள்.) இருமுதுகுரவரும் இவரை இல்வாழ்க்கையில் அடிப்படுத்த வேண்டி வேறுபடவிட்ட காதையும்,

சுசு - நு. நடநவின் மங்கை மாதவி யரங்கேற்று காதையும்

(இ - ள்.) ஐயாண்டில் தண்டியம்பிடித்து ஏழாண்டு நடநவின்மாதவி மங்கைப்பருவத்தே அரங்கேற்றினகாதையும்,

சுசு. அந்தி மாலைச் சிறப்புச்செய் காதையும்

(இ - ள்.) அந்திக்காலத்துமாலையைச் சிறப்புச்செய்த காதையும்,

சுஎ. இந்திர விழவு ரெடுத்த காதையும்

(இ - ள்.) அந்நகரின்கண் இந்திரனுக்கு விழவெடுத்தகாதையும்,

சுஅ. கடலாடு காதையும்

(இ - ள்.) அங்ஙனமெடுத்த விழவினுதியிற் கடலாடினகாதையும்,

சுக. மடலவிழ் காணல்வரியும்

(இ - ள்.) அங்ஙனம் கடலாடிய கோவலனும் மாதவியும் கழிக்கான லிடத்து யாழ்ப்பாட்டு நிகழ்த்திய காணல்வரியும்,

இஃது இசைப்பாவாற்பெற்றபெயர். இதனுள்ளும் கதைநிகழ்மையுணர்க.

சுஙு - எ0. வேனில்வந் திறுத்தென மாதவி பிரங்கிய காதையும்

(இ - ள்.) இளவேனில்வந்து தலைப்பட்டதாகப் பிரிந்தமாதவி வருந்திய காதையும்,

எ0 - எக. தீதுடைக் கனவுத்திற மூரைத்த காதையும்

(இ - ள்.) கண்ணகி தான்கண்ட தீங்கையுடைய கனவின்திறத்தைத் தேவந்திக்கு உரைத்தகாதையும்,

இது கலிவெண்பாட்டாகலின், [1] "ஒருபொரு ணுதலிய வெள்ளடி யியலாற், றிரிபின்றி வருவது கலிவெண் பாட்டே" என்பதனாற் கனவிலையுரைத்தற் பொருண்மூடியாகிய பாலதனைக்கூறுதலிற் காதையாயிற்றெனவுணர்க.

எக - உ. விழுத்திறத்து நாடுகாண் காதையும்

(இ - ள்.) கண்ணகியார் மதுரைமூதூர்யாதென விழுவின திறத்தை யுடைய சோணாட்டின்வளனே அவர்கண்டகாதையும்,

இனிக் கவுந்தியடிகள் வினவினதிறமெனவும், பிறர்வினவுந்திறத்தை யுடைய எனவுமையும்.

எஉ. காடுகாண் காதையும்

(இ - ள்.) அங்ஙனம் மருதநிலமாகிய நாட்டினைக்கண்டு இன்புற்றவர் பாலைநிலமாகிய காட்டினைக்கண்டு துன்புற்றகாதையும்,

எங. வேட்டுவவரியும்

(இ - ள்.) வேட்டுவமகளாகியசாலினி கொற்றவை உருக்கொண்டாடிய கோலச்சாரியும்,

"இருவகை பல்வகை யென்னும் விலக்கோ, டரியவற்றுப் புப்பதிஞெரார்ட்டுக் - குரவை வரி, * சொக்க மவிநய நாடக மென்றிவற்றும், தக்கவனே யாடலா சான்" என்றமையான், வரியென்பது கோலச்சாரி; இது வேட்டுவமகளாகிய சாலினி கொற்றவை யுருக்கொண்டு ஆடுதலின்; [2] "கொற்றவை கொண்ட வணிகொண்டு நின்றவிப், பொற்றொடி மாதர் தவமென்னே கொல்லோ" என்பதனாலறிக. கூத்துள்படுதலின், நாடகவரிப்பெயராய், வேட்டுவவரி நிகழ்தலின் இது வேட்டுவவரியாயிற்று.

இது கூத்தாற்பெற்றபெயர்.

எங-ச. தோட்டலர்.....இறுத்த காதையும

(இ - ள்.) கண்ணகியோடு மதுரைப் புறஞ்சேரியிற் சென்று விட்ட காதையும்.

---

[1] தொல். செய். சூ. கஙஙு. [2] வேட்டுவவரி. (பி - ம்.) * 'சோகும்', 'சேதும்.'

எச - நி. கறங்கிசை யூர்காண் காதையும்

(இ - ள்.) முழங்காநின்ற முரசொலியையுடைய மதுரையைக் கோவலன் கண்டகாதையும்.

எடு - கூ. சீர்சா னங்கை யடைக்கலக் காதையும்

(இ - ள்.) அழகெல்லாமமைந்த கண்ணகியாகியநங்கையை மாதரிபாற் கவுந்தியடிகள் அடைக்கலங்கொடுத்தகாதையும்.

எசு. கொலைக்களக் காதையும்

(இ - ள்.) கோவலன் கொலைக்களப்பட்டகாதையும்,

எள. ஆய்ச்சியர் குரவையும்

(இ - ள்.) தம் சேரிக்கு உற்பாதசாந்தியாக மாதரிமுதலாயுள்ள ஆய்ச்சியர் குரவைக்கூத்தாடின முறைமையும்,

"குரவை யென்பது கூறுங் காலைச், செய்தோர் செய்தகாமமும் விறலு, மெய்த வுரைக்கு மியல்பிற் றென்ப" எனவும், "குரவை யென்ப தெழுவர் மங்கையர், செந்நிலை மண்டலக் கடகக் கைகோத், தந்நிலைக் கொட்பினின் முடலாகும்" எனவுஞ் சொன்னூராகலின், இதுவும் ஆய்ச்சியரிடத்து நிகழ்தலான் ஆய்ச்சியர்குரவையெனக் கூத்தாற் பெற்றபெயர்.

எஎ - அ. தீத்திறங் கேட்ட துன்ப மாலையும்

(இ - ள்.) அங்ஙனம் அவன் கொலையுண்ட தீத்திறத்தைக் கண்ணகி கேட்டுத் துன்புற்ற இயல்பும்,

இதுவும் ஊர்சூழ்வரியும் சிறிது கதைநிகழ்ச்சியுளவெனினும் மருட்கை யென்னு மெய்ப்பாடும் அவலம் அரற்றுக் கவலை கையாறென்னுமிவையும் நிகழ்தலியல்பினுன் இதனை மாலையென்றாரெனக் கொள்க.

எஅ - கூ. நண்பக னடுங்கிய வூர்சூழ்வரியும்

(இ - ள்.) எல்லாருங்காண நாணிறந்து வெளிப்பட்டவருவினெடு கண்ணகி ஊர்சூழ்வந்த ஊர்சூழ்வரியும்,

கண்ணகி ஊர்சூழவருவதனைப் பத்தினிப்பெண்டிர் - கண்கூடாகக் காண்டலின் இஃது ஊர்சூழ்வரி யென்பதாயிற்று.

இதுவும் கூத்தாற் பெற்றபெயர்.

எக - அ0. சீர்சால் வேந்தனெடு வழக்குரை காதையும்

(இ - ள்.) புகழமைந்த தென்னனெடு கண்ணகி வழக்குரைத்தகாதையும்,

உரைகாரரை, வினைத்தொகை; இறப்பு.

அ0. வஞ்சின மாலையும்

(இ - ள்.) அங்ஙனந்தானுரைத்த வழக்குந்தோற்று உயிருந்தோற்றநெடுஞ் செழியன்றேவியைநோக்கிக் கண்ணகி வஞ்சினங்கூறிய இயல்பும்,

வஞ்சினமாவது - மேற்கோள். இக்கலிவெண்பாட்டுப்பத்தினித்தன்மைத்தாகிய ஒருபொருளையே கருதிக்கூறிய இயல்பையுடைத்தாகலின், மாலையென்றார்.

அக. அழற்படு காதையும்

(இ - ள்.) அங்ஙனம் வஞ்சினங்கூறினவள்முலைமுகத்து எழுந்ததீ அவளே விய இடமெங்கும் பட்டு எரித்தகாதையும்,

அக - உ. அருந்தெய்வந் தோன்றிக், கட்டுரை காதையும்

(இ - ள்.) அங்ஙனம் அழற்படுதலின் அதற்காற்றாது மதுரைமாதெய்வம் அவ்வழறணித்தற்குவந்து இவளது பவத்தொடர்பு கட்டுரைத்தகாதையும்,

அஉ - ங. மட்டலர் கோதையர் குன்றக் குரவையும்

(இ - ள்.) மதுவொழுகமலர்ந்த கோதையினையுடைய குறத்தியர் இவளே வேங்கைநிழற்கண் கண்டதற்கு உற்பாதசாந்தியாக முருகவேளைநோக்கி அக் குன்றின்கண்ணாடிய குரவையும்,

ஆய்ச்சியர்குரவையிற் கூறியது இதற்குங்கூறுக. கோதையென்று பாடங் கூறிக் கோதைக்கு அவர்களெடுத்த குரவையெனினும் அமையும்.

அங. என்றிவை யீரைந்துடன்

(இ - ள்.) என்று சொல்லப்பட்ட இவ்விருபத்துநான்குடனே,

அச. காட்சி—(இ - ள்.) காட்சிக்காதையும்,

கற்காட்சியும், குறவர் பாடுடக் காட்சியுமென்க.

அச. கால்கோள்—(இ - ள்.) கற்கொண்ட காதையும்,

கற்கோள் கால்கோளென விகாரம்.

அச. நீர்ப்படை—(இ - ள்.) அக்கொண்டகல்லினைக் கங்கையாற்று நீர்ப்படுத்தினகாதையும்,

அச. நடுகல்—(இ - ள்.) அக்கல்லினை நட்டகாதையும்,

அஞ. வாழ்த்து—(இ - ள்.) அங்ஙனநடுங்கல்லான பிரதிட்டையும் விழவும் பெற்ற பத்தினிக்கடவுள் செங்குட்டுவனையும் நெடுஞ்செழியனையும் பெருங்கிள்ளியையும் வாழ்த்தினகாதையும்,

அஞ. வரந்தரு காதையொடு.

(இ - ள்.) அங்ஙனம்வாழ்த்தியகடவுள் அவரோடு கனகவிசயர்முதலிய ஆரியமன்னருள்ளிட்டார்க்கு வரங்கொடுத்தகாதையோடே,

ஒடு, ஒப்பலொப்புரை ; எண்ணெடுவுமாம். தருதல் - கொடை.

அசு. இவ்வா றைந்தும்—(இ - ள்.) மூப்பதுமென்றெண்ணப்பட்ட,

அஎ. உரையிடை யிட்ட பாட்டுடைச் செய்யுள்

(இ - ள்.) உரையிடையிட்டனவும் பாட்டுடையனவுமாகிய செய்யுளை,

அஃதாவது, காதையொடு இவ்வாறைந்தும் உரையிடையிட்ட பாட் டுடைச்செய்யுளென்க. உம்மை முற்று.

அஅ. உரைசா லடிக ளருள

(இ - ள்.) புகழமைந்த இளங்கோவடிகள் அருளிச்செய்ய, அருளுகென்றற்கு அருளவென்க.

அஆ - கூ. மதுரைக் கூலவாணிகன் சாத்தன் கேட்டனன்

(இ - ள்.) மதுரைக் கூலவாணிகனான சாத்தன் கேட்டனன்; கூலம் எண்வகைத்து; அவை:— நெல்லு, புல்லு, வரகு, தினை, சாமை, இறுங்கு, தோரை, இராகி; பதினெண்வகைத்தென்பர் கூத்தநூலார்.

கூ0. இது—(இ - ள்.) இவ்வரையறை

கூ(). பால்வகை தெரிந்த பதிகத்தின் மரபென்

(இ - ள்.) அறப்பால், பொருட்பால், காமத்துப்பாலாகிய அப்பால்களின் வகையைத்தெரிந்த செய்யுளின் பதிகத்தினது மரபு இதுவென்க.

என்னென்னும் அசைச்சொல் ஆசிரியப்பாவிற்கு முடிபு சிறப்புடைத்து.

அடிகட்கு அறிந்தருணீயென இருந்தசாத்தன் உரைப்போன் இவளென, வினைவினைவு யாதென்ன, விறலோய், கேட்டனனியானென, அறங்கூற்றுவதூஉம் உயர்ந்தோரேத்தலும் ஊட்டுமென்பதூஉங் காரணமாகப் பெயரான் நாட்டுதும் யாம் ஒரு பாட்டுடைச்செய்யுளென, அருளுகென்றற்கு அருளக் கேட்டனனென்க.

அறுப்பத்தெட்டாமடியுட் "கடலாடு காதையும்" எனக் குறளடியும், (அடு) "வாழ்த்து வரந்தரு காதையொடு" எனச்சிந்தடியும் (அசு) "இவ்வாறைந்தும்" எனக் குறளடியும் வந்து, [1] "ஈற்றய லடியே யாசிரிய மருங்கிற், றோற்ற முச்சீர்த் தாகு மென்ப" என்ற ஆசிரியர், [2] "இடையும் வரையார் தொடையுணர் வோரே" என்றதனுற் குட்டச் செந்தூக்காயிற்று.

இது, நாற்பொருளுள்ளும் அகத்திணைக்கண்ணது இன்பமாகலானும், புறத்திணைக்கண்ணது பொருளும் அறனுமாகலானும் வீடொழிந்த முடிபு கூறிற்றது. அதனானன்றே, [3] "மணிமே கலைமே லுரைப்பொருண் முற்றிய சிலப்பதிகாரம்" என்பாரானதுவு மென்க.

பதிகம் முற்றிற்று.

---

[1] தொல்காப்பியம், செய்யுளியல், சூ. சுஅ.

[2] " " " சுசு.

[3] இதனைச் சிலப்பதிகார இறுதிக்கட்டுரையிற் காண்க.

உரைபெறுகட்டுரை.

க. அன்றுதொட்டுப் பாண்டியனுடு மழைவறங்கூர்ந்து வறுமை யெய்தி வெப்புநோயுங் குருவுந் தொடரக் கொற்கையிலிருந்த வெற்றி வேற்செழியன் நங்கைக்குப் பொற்கொல்லராயிரவரைக்கொன்று கள வேள்வியால் விழுவொடுசாந்திசெய்ய நாடுமலிய மழைபெய்து நோயுந் துன்பமு நீங்கியது.

உ. அதுகேட்டுக் கொங்கிளங்கோசர் தங்கணுட்டகத்து நங்கை க்கு விழுவொடுசாந்திசெய்ய மழைதொழிலென்றும் மாறுதாயிற்று.

ங. அதுகேட்டுக் கடல்சூழிலங்கைக் கயவாகுவென்பான் நங் கைக்கு நாட்பலிபீடிகைக்கோட்டமுந்துறுத்தாங்கு அரந்தைகெடுத்து வரந்தருமிவளென ஆடித்திங்க ளகவையிருங்கோள் பாடிவிழாக்கோள் பன்முறை யெடுப்ப மழைவீற்றிருந்து வளம்பலபெருகிப் பிழையா விளையு ணுடாயிற்று.

ச. அதுகேட்டுச் சோழன்பெருங்கிள்ளி கோழியகத்து எத்திறத் தானும் வரந்தருமிவளோர் பத்தினிக்கடவுளாகுமென நங்கைக்குப் பத்தினிக்கோட்டமுஞ்சமைத்து நித்தல்விழாவணி நிகழ்வித்தானே.

உரைபெறுகட்டுரை முற்றிற்று.

உ. கொங்கிளங்கோசர் - குறும்புசெலுத்துவார் சிலவீரர்.

ங. நாட்பலிபீடிகைக் கோட்டம் - நித்தலும் பலியிடுமிடத்தையுடைய கோட்டம். அரந்தை - துக்கம். பிழையாவிளையுள் - குன்றுவிளையுள்.

ச. கோழி - உறையூர். எத்திறத்தானும் - வேண்டினூர் வேண்டியவாறெல் லாம். நித்தல்விழாவணி - நித்தமாகிய அணிவிழா.

உரைபெறுகட்டுரை - உரைத்துப்போதுகின்ற கட்டுரை.

க. அன்றுதொட்டு.....நோயுந்துன்பமுநீங்கியது

அன்றென்றது கதையை உட்கொண்டு நின்றது; [1] "வெள்வா ளெறிந்தனன் விலங்கூடறுத்தது, புண்ணுமிழ் குருதி பொழிந்துடன் பரப்ப, மண்ணக மடந்தை வான்மூயர் கூரக், காவலன் செங்கோல் வீழிய வீழ்ந்தனன், கோவலன்" என்றாராகலின்.

(இ - ள்.) பாண்டியனுடு அன்றுதொடங்கி மழைவறத்தன்மிக்கு அதனை வறுமையுற்றுத் தொழுநோயும் குருவும் இடைவிடாதுநலிதலிற் கொற்கைக்கணிருந்த இளஞ்செழியன் நங்கைக்கு ஆயிரம்பொற்கொல்லரைப் பலியிட்டுக் களவேள்வியாற் சாந்திசெய்து விழவெடுத்தலானே அவனுடு மிகவும் மழைபெய்து முற்கூறியவறுமையும் நோயுநீங்கிற்று.

வெப்பு - தொழுநோய்; "வெப்பின்முப்பழச்சுனை" என்றாராகலின். இது வெதுப்பெனினு மமையும்.

உ. அதுகேட்டு.....மாறுதாயிற்று

(இ - ள்.) அங்ஙனம் செழியன் நன்மைசெய்து அவைநீங்குதலின் அதனைக்கேட்டுக் கொங்குமண்டிலத்து இளங்கோவாகிய கோசரும் நங்கைக்கு அங்ஙனம் சாந்தியும் விழவுஞ்செய்தலான் அவைநீங்குதலோடே மழை பெய்தற்றொழில் பெய்யுநாளென்னும் வழுவாதாயிற்று.

பெய்யுநாளென்றது திங்கண்மும்மாரியை; பருவநாளெனினுமமையும்.

ஊ. அதுகேட்டு.....நாடாயிற்று

(இ - ள்.) அதுகேட்டுக் கடலை அகழாகவுடைய இலங்காபுரத்துக் கயவாகுவென்று பெயர்கூறப்பட்ட அரசன் நங்கைக்கு அங்ஙனம் நாடோறும் பலி கொள்ளுதலையுடைய பலிபீடத்தை முந்தச்செய்து பின்பு கோட்டமுமமைத்து முற்கூறிய துன்பங்களைக்கெடுத்து நமக்கு வேண்டும்வரங்களை இவள்தருமென்று துணிந்து ஆடித்திங்களிடத்தே ஆட்டைவிழாவாகத் தன்னகரவீதிதோறும் உலாச்செய்விக்க மழை குறைவின்றி நிலைபெறுதலானே அன்றே பொய்யாதுவிளையும் விளைவினையுடைய நாடாயிற்று அவனும்.

பாடி - நகரி.

எ. அதுகேட்டு.....நிகழ்வித்தானே

(இ - ள்.) அதனைக்கேட்டுச் சோழநாட்டு உறையூரிடத்தே பெருநற்கிள்ளியரசனுகியவளவன் இவள் பத்தினிக்கடவுளாதலின், எத்திறத்தானும் நமக்கு அரந்தையைக்கெடுத்து வரந்தருமெனக்கருதி நங்கைக்கு அங்ஙனம் கோட்டமுமமைத்து நித்தல்விழவும் நடத்தினனென்க.

எத்திறத்தானுமென்றார், இவள்பிறந்த உரிமைபற்றி, கோழியென்றது, ஒருகோழி நிலமுக்கியத்தால் யானையோடு பொருது அதனைப் போர்தொலைத்தல்

[1] சிலப். கொலைக்களக்காதை, உகஙு - எ. [2] சீவகசிந்தாமணி, எடு.

கண்டு அங்கிலத்திற்செய்த நகர்க்குப் பெயராயிற்று ; [1] "முறஞ்செவி வாரண முன்சம முருக்கிய, புறஞ்சிறை வாரணம்" என்பர்மேலும். நித்தல்விழா - சீபலி. அரத்தை - துன்பம்.

உரைபெறுகட்டுரை-இவைமுற்கூறிய கட்டுரைச்செய்யுள். [2] "உரையிடை யிட்ட பாட்டிடைச் செய்யு, ளுரைசா லடிகளருள" என்றமையால் காப்பியங் கட்குச் சிறுபான்மை இவ்வுறுப்புக்களும் சில வருமெனக்கொள்க. என்னை? [3] "உரையும் பாடையும் விரவியும் வருமே" என்பது அணியியலாகலின்.

உரைபெறுகட்டுரை முற்றிற்று.

நூற்சிறப்புப்பாயிரம்.

வெண்பா.

நீடிருங் குன்ற நிழல்காலு மண்டிலத்துக்
கோடுகோ டாய்த்தோன்றுங் கொள்கைத்தே -- கூடலார்
கொண்டாடுஞ் செஞ்சொற் குடக்கோ முனிசேரன்
றண்டா வுரைமுத் தமிழ்.

கட்டளைக்கலித்துறை.

நலத்தகு நால்வரென் றோதிய நான்முகத் தோன்படைத்த
குலத்தகி காரவணிகர் குலபதி கோத்ததமிழ்ப்
புலத்தகி காரருறைபதி பூம்புகார் போற்றநின்ற
சிலப்பதி காரஞ்*செய் தானெடுஞ் சேரர் சிகாமணியே.

இவ்விரண்டும் பழைய செய்யுட்களே; இயற்றியவர்பெயர் விளங்கவில்லை.

---

[1] சிலப். நாடுகாண்காதை, உரை - அ. [2] சிலப். பதிகம், அடி-அ

[3] "ஒருதிறப் பாட்டினும் பலதிறப்பாட்டினு, முரையும் பாடையும் விரவியும் வருமே" தண்டியலங்காரம், பொதுவணியியல், சூ. கக: என்பதில் இவ்வடி காணப்படு கின்றது.

(பி - ம்.) * 'செய்தான்சேரனன்பர் சிகாமணியே.'

மூதலாவது

புகார்க்காண்டம்.

க.—மங்கலவாழ்த்துப்பாடல்.

[1] திங்களைப் போற்றுதுந் திங்களைப் போற்றுதுங்
† கொங்கலர்தார்ச் சென்னி குளிர்வெண் குடைபோன்றிவ்
வங்க ணுலகளித்த லான்
[2] ஞாயிறு போற்றுது ஞாயிறு போற்றுதுங்
காவிரி நாடன் றிகிரிபோற் பொற்கோட்டு
மேரு வலந்திரித லான்
[3] மாமழை போற்றுது மாமழை போற்றுது
நாமநீர் வேலி யுலகிற் கவனளிபோன்
மேனின்று தான்சுரத்த லான்
பூம்புகார் போற்றுதும் பூம்புகார் போற்றுதும்
வீங்குநீர் வேலி யுலகிற் கவன்குலத்தோ
டோங்கிப் பரந்தொழுக லான்
ஆங்கு,
பொதியி லாயினு மிமய மாயினும்

க. திங்களைப்போற்றுதும் திங்களைப்போற்றுதுமென்னுமடுக்கு, சிறப்பின்கண் வந்தது.

கூ. அங்கணுலகு - அழகிய உலகிடம். [பொருளுக்கும் மேலாகின்று.

அ. நாமநீர் - அச்சத்தைத்தருகின்ற கடல். கூ. மேனின்று - எல்லாப்

கக. வீங்குநீர் - நிறைந்த நீர்.

க - கூ. இவை நான்கு சிந்தியல் வெண்பாவும் செம்பியனையும் புகாரினையும் சிறப்பித்தன.

கசு. ஆங்கு - ஆதலால்.

---

[1] "முந்நீர்நாப்பண்" (சுஅ) என்னும் புறப்பாட்டு இதனுடன் ஒப்பிடற்பாலது. இது குடைமங்கலத்திற்கு மேற்கோள்; (தொல். புறத். சூ. கூ0 - இளம்; சூ. ஙசு - நச்.)

[2] இது திகிரியைப்புனைந்துரைத்ததற்கு மேற்கோள்; (தொல். புறத். சூ. ஙசு - நச்.)

[3] "மதிவாழி ரவிவாழி மழைவாழியே" (தக்க. கடவுள். கூ - உரை) என்பதற்கு இது மேற்கோள். இத்தொடர், "திங்களைப்போற்றுதும்" என்பது முதலிய மூன்றையும் பின்பற்றிநிற்குமுறை இங்கே அறிதற்பாலது.

(பி - ம்.) * 'புகார்காண்டம்.' † 'கொங்கலராச்'

கடு [1] பதியெழு வறியாப் பழங்குடி * கெழீஇய
பொதுவறு சிறப்பிற் புகாரே யாயினு
நடுக்கின்றி நிலீஇய வென்ப தல்லதை
யொடுக்கங் கூறு ருயர்ந்தோ ருண்மையின்
முடித்த கேள்வி முழுதுணர்ந் தோரே

உ0 அதனால்,

[2] நாகநீ ணகரொடு நாகநா டதனொடு
போகநீள் புகழ்மன்னும் புகார்நக ரதுதன்னின்
மாகவா னிகர்வண்கை மாநாய்கன் குலக்கொம்ப
† ரீகைவான் கொடியன்ன ரீராருண் டகவையாள்

உடு அவளுந்தான்,

‡ போதிலார் திருவினுள் புகழுடை வடிவென்றுந்
தீதிலா வடமீனின் றிறமிவ டிறமென்று
மாதரார் தொழுதேத்த வயங்கிய பெருங்குணத்துக்
காதலாள் பெயர்மன்னுங் கண்ணகியென் பாண்மன்னோ

கூ0 ஆங்கு,

கசு. பொதுவறு சிறப்பு - தனக்கே உரிய சிறப்பு.

கச - கூ. பொதியில் இமயம் புகாரென்ற மூன்றனையும் ஒருவாற்றான் ஒப்புரைக்கின்றார்.

கள - உ0. (பர்) நிலீஇயர் நிற்பதாக. கேள்வியான் முழுதுணர்ந்தோர் அப் படிப் புகழினல்லது இம்மூன்றிடத்திற்கும் ஒடுக்கங் கூறார்; உயர்ந்தோருண் மையானென்க. புகார்ச்சிறப்புக்கூறியவாறு. அதனால் - ஆதலால்.

உக - உ. நாகருலகத்துடனும் தேவருலகத்துடனும் போகம் நீள்புகழ் இவை பொருந்தும்.

உங. மாக வான் - விண்ணின் மேகம்.

உச. ஈகை - பொன்.

உசு. போதிலார் திரு - போதில் நிறைந்த திரு; இவள்வடிவென வருவிக்க.

உஎ - கூ. வயங்கிய பெருங்குணத்துக் காதலாள் - விளங்கிய பெருங் குணத்தாற் காதலித்தவள்.

இவளை முன்கூறிற்று; கதைக்குநாயகியாதலின்.

---

[1] "பதியெழு வறியாப் பழங்குடி கெழீஇ" (மலைபடு. எஎகூ.)

[2] இவ்வடி, "மேலதாகர் கீழதாகர் போன்மயங்கி வீழவே" (தக்க. இ0இ) என்பதற்கு மேற்கோள்.

(பி - ம்.) * 'தழீஇய.' † 'ஈய்கை.' ‡ 'போதில்வாழ்.'

நீல விதானத்து நித்திலப்பூம் பந்தர்க்கீழ்
நிo [1] வானூர் மதியஞ் சகடணைய வானத்துச்
சாலி யொருமீன் றகையாளைக் கோவலன்
மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத்
தீவலஞ் செய்வது காண்பார்க ணெஞ்சென்னை
விரையினர் மலரினர் விளங்கு மேனிய
நிடு ருரையினர் பாட்டின ரொகிந்த நோக்கினர்
சாந்தினர் புகையினர் * தயங்கு [2] கோதைய
ரேந்திள முலையின ரிடித்த சுண்ணத்தர்.
விளக்கினர் கலத்தினர் விரிந்த பாலிகை
மூளைக்குட நிரையினர் முகிழ்த்த மூரலர்
கூo போதொடு விரிகூந்தற் பொலனறுங் கொடியன்னார்
காதலற் † பிரியாமற் கவவுக்கை ஞெகிழாமற்
றீதறு கெனவேத்திச் சின்மலர் கொடுதூவி
‡ யங்க ணுலகி னருந்ததி யன்னாள
மங்கல நல்லமளி யேற்றினர் தங்கிய
கூநி விப்பா லிமயத் திருத்திய வாள்வேங்கை
யுப்பாலப் பொற்கோட் டிழையதா வெப்பாலுஞ்
செருமிகு § சினவேற் செம்பிய
ரொருதனி யாழி ** யுருட்டுவோ னெனவே.

நிo - நிகூ. சந்திரன் உரோகிணியைச்சேர அருந்ததியினது தகையாளைக் கோவலன் கலியாணம்பண்ணுவது.

நிசு - கூ. விரையினர் மலரினராகிய விளங்குமேனியர்; பிறவுமன்ன. இவை விளைக்குறிப்புப்பெயர்.

கூo. இச்சொல்லப்பட்ட கொடியன்னார்.

கூகூ. உலகினருந்ததி, இல்பொருளுவமை.

கூசூ. உழையதாம்படி (கூஅ) உருட்டுவோனென (கூச) அமளியேற்றினரென்க.

---

[1] "அங்க ணிருவிசும்பு விளங்கத் திங்கட், சகடம் வேண்டிய துகடீர் கூட்டத்து .....வதுவை மண்ணிய மகளிர்" (அகநானூறு, கசுக.)

[2] "பலவகை வீரித்த வெதிர்பூங் கோதையர், பலர்தொகு பிடித்த தாதுகு சுண்ணத்தர்" (மதுரைக்காஞ்சி, நகூஅ - கூ.)

(பி - ம்) * 'தயங்குமேனியர்.' † 'பிரியாமைக் கவவுக்கை ஞெகிழாமை.' ‡ 'அங்க ணன்விசும்பினருந்ததியன்னாள.' § 'நெடுவேல்.' ** 'உருட்டுகோன்.'

புணர்த்துரைத்தற்கு, "குடைநிழல் மரபு" என்றதனால் கொடையும் திருவியும் உயர்ச்சியும் புனைந்துகூறியவாறுயிற்று.

கஙூ - கூ. ஆங்கு .....முழுதுணர்ந்தோரே

(இ - ள்.) அப்படிப்போற்றினல்லது, முனிவனுரலின் முடித்தகேள்வி யான் எண்ணத்துப்பொருளையுமுணர்ந்தபெரியோர், பொதியில் இம்மயம் புகா ரென்னும் இம்மூன்றும் ஒருதன்மையவாதலான், ஆதியிற்றோன்றிச் சலிப் பின்றி நிலைபெற்றனவென்று கூறினல்லது, அவற்றிற்கு அந்தமுண்டென்று கூறார்; அவற்றில் உயர்ந்தோருண்டாகலானென்க.

ஆயினுமென்பது ஓரெண்ணிடைச்சொல்; [1] "இளந்த வல்ல வேறுபிற தோன்றினுங், இளந்தவற் றியலா னுணர்ந்தனர் கொளலே" என்னும் புற னடையாற் கொள்க. பதியெழுவறியா - பதியினின்றும் பெயர்தலையறியாத; எனவே பகையின்மைகூறிற்று. பழங்குடி - தொன்மரபு; ஆதிகாலத்தேறிய குடியுமாம். கெழீஇய - பொருந்தின. பொதுவறுசிறப்பு - தனக்கே உரியசிறப்பு. ஓடுக்கம் - முடிபு. உயர்ந்தோர் - முனிவனும், இறைவனும், அரசனும்; இனி உயர்ந்தோர் - அகத்தியனும் இருடிகளும் பழங்குடியிலுள்ளாருமென்றுமாம்; என்றது இமயத்தோடும் பொதியிலோடுமுள்ள இருடிகளையும் புகாரிலுள்ள வணிகரையும் உவமித்தவாறும். உண்மையின் - உண்டாகலின். முடித்தகேள்வி - கரைகண்டகேள்வி.

இவற்றுற் செம்பியன்சிறப்பும் புகார்ச்சிறப்பும் கூறியவாறுயிற்று.

உ0. அதனால் - (இ - ள்.) அஃது அத்தன்மையதாகலான்,

என்றது, புகார் நிலைபேறுடையதாகலாற் போகமும் புகழும் நிலைபேறுடை யவென்றவாறு.

உக - ச. நாகநீ ணகரொடு.....அகலையாள்

(இ - ள்.) சுவர்க்கம் [2] பவணமென்னும் இவற்றிற்குள்ள புகழும் போக மும் நிலைபெற்ற அப்புகாரென்னு நகரின்கண் மழைபோல்வழங்கும் கையை யுடைய மாகாய்கனுடைய குலத்திற்றோன்றிய கொம்புங்கொடியும்போல்வாள்; பன்னீராண்டிற்குட்பட்ட பிராயத்தாளாயினளென்க.

நாகநீணகர் - சுவர்க்கம். நாகநாடு - பவணம். போகநீள்புகழ், உம்மைத் தொகை; இருபெயர்க்கண்வந்தது; எதிர்நிரனிறை. மன்னும் - நிலைபெறும்; இடைநிலைவிளக்கு. மாக வான்-விசும்பின்மேகம். மாநாய்கன், சிறப்புப்பெயர். ஈகை - பொன்; வான்கொடி - வானவல்லி; பொன்மெய் வானவல்லியென்க. அவற்றோடுமொக்க மன்னும் புகாரெனினுமமையும்.

உரு. அவளுந்தான் - (இ - ள்.) அவள்தான்,

உம்மை இசைநிறை.

---

[1] தொல்காப்பியம், இடைச்சொல்லியல், சூ. ச அ.

[2] பவணம் - நாகலோகம். சுவர்க்கத்திலும் நாகலோகம் போகத்திற் சிறந்ததென் பது சைனநூற்றுணிபு.

உசு - கூ. போதிலார்.....என்பாண்மன்னே

(இ - ள்.) போதிற்பொருந்திய திருமகளுடைய புகழுடையவடிவு இவள் வடிவையொக்குமென்றும், பழுதில்லாத அருந்ததியுடைய புகழையுடைய கற்பு இவள் கற்பையொக்குமென்றும் உலகின்மாதரார் தன்னேத்தொழுதேத் தும்படி விளங்கிய பெருங்குணங்களைக் காதலிப்பாள்; அவள்யாரெனிற் கண் ணகியென்று பெயர்கூறப்படுவாளென்க.

பெயராற் வேறுபடுமென்பதாம். திருவினுள், ஒருபெயர். தீது - [1] பிறர் நெஞ்சு புகுதல். திறம் - கற்பு. மன்னும், இடைச்சொல். புகழ், இடைநிலை விளக்கு. பின்வருகின்ற இவளென்பதனே முன்னுங்கூட்டுக. மன்னும் ஓவும் இடைச்சொல்.

நஏ - ச. ஆங்கு.....அகவையான்

(இ - ள்.) அப் புகாரினிடத்து * நெடுநிலமுழுவதையும் தனியேயாளும் கரிகாலனேமுதற்குடியாகவைத்து எண்ணுதலியுடைய ஒப்பற்றகுடிகளின் மிக் கோங்கிய செல்வத்தையுடையான்; அவன்யாரெனின், தன்னுடையபொருளே இல்லாதார்க்குளும் மாசாத்துவானென்று பெயர்கூறப்படுவான்; அவ்விரு நிதிக்கிழவனுடையமகன் பதினமுண்டிற்கு உட்பட்ட பிராயத்தானென்க.

பன்னிரண்டும் பதினமுமாகிய பிராயத்தின் முதிர்தல் மரபன்மையின், அகவையாள் அகவையானென்றார். ஒப்பின்மையின்மிகுதிகூறுவார் ஒரு தனிக்குடியென்றார். ஓடு - இன்; உருபுமயக்கம்; உறழ்பொருட்; இதுவும் புற னடையான் முடிந்தது. வருநிதி - நல்வினையாற் [2] கலத்தினுங் காலினும் வரு நிதி; நியாயத்தால் வருநிதியுமாம். பிறர்க்கு - பொருளற்றூர்க்கு; நிதியற்றூர்க் கும் நல்வினைசெய்தார்க்குமென்றுமாம். மாசாத்துவான், இயற்பெயர். இரு நிதிக்கிழவன், சிறப்புப்பெயர்.

நஇ. அவனுந்தான்—(இ - ள்.) அவன்றன்.

ஈண்டும் உம்மை இசைநிறை.

நகூ - கூ. மண்டேய்த்த.....என்பான்மன்னே.

(இ - ள்.) மண்ணேத்தொலைத்த புகழினையுடையான், பண்ணேத்தொலைத்த மொழியினராகிய மதிபோலுமுகத்தினையுடைய மடவார் தம் காதலால் உலகிற் கண்டேத்தப்படுஞ்செவ்வேலென்று அவனிசையைத் தமதாயத்தின்கட் பாராட் டிப் பரப்பிக் கர்மக்குறிப்பினுல் உட்கொண்டு ஏத்துதற்குரியான்; அவன்யா ரெனின், கோவலனென்று பெயர்கூறப்படுவானென்க.

'மண்டேய்த்த' என்றூர், புகழ்வளரப் பூமி சிறுகலான்; மண் இடத்திற் சிறிது என்றூர் வள்ளுவனுமும். புகழினுன், எழுவாய். பண்டேய்த்த-பண்ணேக் கெடித்த. செவ்வேலென்றூர், வேல் இருவருளராகலின். முருகவேனைச் செவ்

---

[1] மணிமேகலை, உஉ - ஆம் காதை, சகூ - ஆம் அடி முதலியவிற்றைப்பார்க்க.

[2] சிலப். மனையறம். எ. (பி - ம்.) * 'தேமிதிலம்.'

வேனென்றது, [1] "ஞாயிறு கடற்கண் டாஅங்கு" என்பதனுள். போக்கி - எங்கும் போகப்பண்ணி; பரப்பியென்றபடி. கொண்டு - காமக்குறிப்பினுள் உட்கொண்டு. கிழமை - உரிமை.

இனி, மடவாரென்பதற்குப் பூமாதும் கலைமாதும் சயமாதும் புகழ்மாதும் புவிமாதுமென்று கூறி, இவர், அழகிற்கும் அறிவிற்கும் ஆண்மைக்கும் புகழுக்கும் பொறைக்கும் இவனென்றுட்கொண்டு ஏத்துங் கிழமையானினுமமையும்; [2] "கலியின தகலமுங் காட்சிக் கின்பமுஞ், சிலையின தகலமும் வீணைச் செல்வமு, மலையினி னகலிய மார்ப னல்லதிவ், வுலகினி லிலையென வொருவ னுயிர்ஞன்" என்றாற்போல.

இனி, மொழியினுளென்றுபாடமாயின், மடவார் திரணடுவே மொழியாலே புகழினுன் செவ்வேளென்று இசையைப்பரப்ப ஏனையோரும் காதன்மையாற் கொடை அழகு வீரம் இவற்றிற்குரியான் யாவனெனிற் கோவலனென்று பெயர் சொல்லப்படுவானென்றவுமொன்று; இப்பொருளுக்கு, போக்கி - போக்கவென்க.

கண்ணகியை முற்கூறினுர், பத்தினியை ஏத்துதல் உட்கோளாகலான்.

சுo - சுஉ. அவரை.....மகிழ்ந்துழி

(இ - ள்.) அத்தன்மையாரைக் குரவரிருவரும் ஒருபெருநாளிலே மணவணி காணவேண்டி மண மகிழ்ந்தனர்; மகிழ்ந்த அளவிலே யென்க.

உழி - அளவு.

சுஙூ - சு. யானை.....ஈந்தார் மணம்

(இ - ள்.) அவர் அணியிழையாரை யானையெருத்தத்து இருத்தி அம்மானகர்க்கு இவர்மணமென்னுமகிழ்ச்சியைக் கொடித்தாரென்க.

எருத்தம் - புறக்கழுத்து. இரீஇ - இருத்தி. ஈந்தாரெனவே அறிவித்தாரென்பதாயிற்று. சிலமகளிரையணிந்து யானையேற்றி அறிவித்தல் மரபு.

சுஙு - எ. அவ்வழி,.....அணியெழுந்தது

(இ - ள்.) அவ்விடத்து, முரசுமுதலிய இயம்பின; முருடுமுதலிய அதிர்ந்தன; பணிலமுதலிய முழங்குதல் எழுந்தன; வெண்குடைகள் அரசனுயர் வெழுந்தபடி எழுந்தன; மங்கல்வணி ஒரேங்கும் எழுந்ததென்க.

முருடு - பத்தல்; மத்தளமுமாம். அகலுள் - தெருவுமாம்,

சுஅ- கூ. மாலைதாழ்.....பந்தர்க்கீழ்

(இ - ள்.) மாலைதங்கிய செண்ணியையுடைய வயிரமணித் தூணிரைபொருந்திய மண்டபத்து நீலப்பட்டு மேற்கட்டியின்கீழ்நிறுத்தின முத்தின்பந்தரிடத்தேயென்க.

நீலவிதானங்கூறினுர், முத்து ஒளிபெறுதல்நோக்கி; அஃது அக்காலத்து முத்துநோக்குவார் ஒப்புக்கு விரித்து நோக்குப. பூ - பொலிவு.

ஙo - ஙூ. வாணுர்.....நோன்பென்னை

---

[1] திருமுருகாற்றுப்படை, உ. [2] சீவகசிந்தாமணி, சுகக.

(இ - ள்.) மதியம் சகடணைந்தநாளிலே பார்ப்பான் மறையிற் சோதிடாங் கத்துள் வணிகர்க்குக் கூறியநெறியிலே சடங்குகாட்ட இவர் இங்ஙனம் தீவலஞ் செய்கின்ற இதனைக் காண்கின்றவர் கண்கள் முற்பவத்திற்செய்த தவம் யாது காணென்பாராயும்,

காண்கின்றவர்கள்நோன்பு என்னையெனினுமமையும். சகடு - உரோகிணி. மாமுதுபார்ப்பான் - பிதாமகன் ; புரோகிதனுமாம்.

நுச - நு. விரையினர்.....நோக்கினர்

(இ - ள்.) விளங்குமேனியர், விரையினராய் மலரினராய் உரையின ராய்ப் பாட்டினராய் ஒதுங்கிப்பார்த்த பார்வையினராயும்,

நுசு - எ. [1] சாந்தினர்.....சுண்ணத்தர்

(இ - ள்.) ஏந்திளமுலையினர், சாந்தினராய்ப் புகையினராய்க் கோதைய ராய்ச் சுண்ணத்தினராயும்,

நுஅ - கூ. விளக்கினர்.....மூரலர்

(இ - ள்.) முகிழ்த்தமூரலர், விளக்கினராய்க் கலத்தினராய் மூவேப்பா லிகையினராய் நிறைகுடத்திட்ட கை புல்லினும் போதினும் நெகிழாமற் புணர்ந்தனராயும் நிரையினர்கள்,

ஒருசொல் வருவிக்க.

சுo - சுஅ. போதொடு.....எனவே

(இ - ள்.) கூந்தலையுடைய கொடியன்னார், இவளும் தன்காதலனைத் தன் கண்ணினும் நெஞ்சினும் பிரியாமற் புணர்வோளாக ; இவள்காதலனும் இவளை அகத்திட்டகை * புல்லினும் போதினும் நெகிழாமற் புணர்வோனாக ; இருவரன் பும் சருவதா ஒருவரன்பாகவென நினைந்து தம் வழிபடுதெய்வத்தை மனத்தால் வணங்கி அவ்வகையேத்திப் பின்பு சிலமலரைத்தூவி, இப்பால் இமயத்திருத் திய வேங்கை பொற்கோட்டு உப்பாலிடத்ததாயே நிற்பதாக ; எப்பாலும் தன் போர்மேம்பட்ட வேலையுடைய கரிகாலன் மாறில்லாத தன்திகிரியை உருட்டு வோனாகவெனச் சொல்லி, உலகில் அருந்ததியன்னாளை அமளியேற்றினாரென்க.

கொடியன்னார், பிரியாமல் நெகிழாமல் தீதறுகென ஏத்தித் தூவி அருந் ததியன்னாளை உழையதாக உருட்டுவோனாகவென அமளியேற்றினாரென்க.

இது பிராசாபத்தியம்.

பா, மயங்கிசைக் கொச்சகக்கலிப்பா.

க.—மங்கலவாழ்த்துப்பாடல் முற்றிற்று.

---

[1] மதுரைக்காஞ்சி, நாகூஅ - சூ.

(பி - ம்.) * 'புல்லும்போதுநெகிழாமல்.'

இரண்டாவது
மலையறம்படுத்தகாதை.

உரைசால் சிறப்பி னரைசுவிழை திருவிற்
பரதர் மலிந்த பயங்கெழு மாநகர்
முழங்குகடன் ஞால முழுவதும் வரினும்
வழங்கத் தவாஅ வளத்த தாகி
(இ) யரும்பொரு டரூஉம் விருந்திற் றேஎ
மொருங்குதொக் கன்ன வுடைப்பெரும் பண்டம்
கலத்தினுங் காலினுங் * தருவன ரீட்டக்
குலத்திற் குன்றாக் கொழுங்குடிச் செல்வ
ரத்தகு திருவி னருந்தவ முழுத்தோ
(கஎ) ருத்தர குருவி ணெப்பத் தோன்றிய
கயமலர்க் கண்ணியுங் காதற் கொழுநனு
மயன்விதித் தன்ன மணிக்கா லமளிமிசை
நெடுநிலா மாடத் திடைநிலத் திருந்துழிக்
கழுநீ ராம்பன் முழுநெறிக் குவளை

க. உரைசால் சிறப்பு - புகழமைந்த சிறப்பு.

உ. பரதர் - கடலோடிகள்.

ச. வழங்க - உபசரிக்க. தவா - கெடாத.

(இ). விருந்திற்றேம் - பரதேசங்கள்.

சு. அத்தேயங்களிற் பொருள்களின் தொகுதிகூறுவார், தேம் ஒருங்கு தொக்கன்னவென்றார்.

அ. குலத்திற்குன்று - குலதருமத்திற்குன்றாத. செல்வர் - இருவர் பிதாக்களும்.

கூ - கஎ. அத்தகு.....தோன்றிய - அங்ஙனம் தக்க திருவினையுடைய அருந்தவமுழுத்தோர் போகபூமியில் தோன்றுமாறுபோலத் தோன்றிய.

எ. கலத்தினுங் காலினுந் தருவனரீட்டுதலால் (இ) விருந்திற்றேஎம் (சு) ஒருங்குதொக்கன்னபண்டம் (ச) வழங்கத் தவாஅப்பெருக்கத்ததாகி (க) அரசுவிழை திருவினையுடைய (உ) கடலோடிகள் மலிந்தநகர் (கஎ) உத்தரகுருவினையொக்கும்படி (கூ) செல்வர்க்குத் தோன்றிய கண்ணகியுங்கோவலனும்.

இவர்தோன்றுதலான் நகர் உத்தரகுருவை ஒத்தது.

(பி - ம்.) * 'தருவனரீட்டி'

கடு யரும்புபொதி யவிழ்ந்த சுரும்பிமிர் தாமரை
வயற்பூ வாச மளஇ யயற்பூ
மேதகு தாழை விரியல்வெண் டோட்டுக்
கோதை * மாதவி சண்பகப் பொதும்பர்த்
தாதுதேர்ந் துண்டு மாதர்வாண் முகத்துப்
உ0 புரிகுழ லளகத்துப் † புகலேக் கற்றுத்
திரிதரு சுரும்பொடு செவ்வி பார்த்து
மாலைத் தாமத்து மணிநிரைத்து வகுத்த
கோலச் சாளரக் குறுங்க ணுழைந்து
வண்டொடு புக்க மணவாய்த் தென்றல்
உடு கண்டுமகிழ் வெய்திக் காதலிற் சிறந்து
விரைமலர் வாளியொடு ‡ வேனில்வீற் றிருக்கு
நிரைநிலை மாடத் தரமிய மேறிச்
சுரும்புணக் கிடந்த நறும்பூஞ் சேக்கைக்
கரும்பும் வல்லியும் பெருந்தோ ளெழுதி
ஈ0 முதிர்கடன் ஞால முழுவதும் விளக்குங்
கதிரொருங் கிருந்த காட்சி போல
வண்டுவாய் திறப்ப நெடுநிலா விரிந்த
வெண்டோட்டு மல்லிகை விரியன் மாலையொடு
கழுநீர்ப் பிணையன் முழுநெறி பிறழத்
ஊடு தாரு மாலையு மயங்கிக் கையற்றுத்
தீராக் காதலிற் றிருமுக நோக்கிக்
கோவலன் கூறுமோர் குறியாக் கட்டுரை
[1] குழவித் திங்க ளிமையவ ரேத்த
வழுகொடு மூடித்த வருமைத் தாயினு
ஏ0 § மூரித னின்னே டுடன்பிறப் புண்மையிற்

ஊடு. இருவரது புணர்ச்சி கூறுவார், 'தாரு மாலையு மயங்கி' என்றார். கையற்று - செயலற்று; புணர்ச்சியால் அவசமாகி.

கக. கண்ணகியும் கோவலனும் (ஈக) இடைநிலத்திருந்துழித் (உச) தென்றல் (உடு) கண்டுமகிழ்வெய்திச் சிறந்து (உஎ) எறியிருந்து (உஈ) எழுதிக் (ஊடு) கையற்றெனக்கூட்டுக.

இனி நயப்புக் கூறுகின்றது.

ச0. உரிதின் - உரித்தாக.

---

[1] குழவியென்னும் இளமைப்பெயர் திங்களையடுத்துவருமென்பதற்கு இது மேற்கோள்; (தொல். மரபு. சூ. உச - பேர்; நன். மயிலை. சூ. ஈஅஎ.)

(பி - ம்.) * 'மாதவிச்,' † 'பூவிலேக்கற்று,' ‡ 'வேனில்வீற்றிருத்தநெடுநிலை,' § 'உரி இதுநின்னேடு', 'உரிதினினின்னேடு.'

பெரியோன் றருக திருதுத லாகென
[1] வடையார் முனையகத் தமர்மேம் படுநர்க்குப்
படைவழங் குவதோர் பண்புண் டாகலி
னுருவி லாள னொருபெருங் கருப்புவி
சுடு லிருகரும் புருவ மாக * வீக்க
மூவா மருந்தின் முன்னர்த் தோன்றலிற்
றேவர் கோமான் றெய்வக் காவற்
† படைதினக் களிக்கவத னிடைதினக் கிடையென
வறுமுக வொருவனோர் பெறுமுறை யின்றியு
சூ0 மிறுமுறை காணு ‡ மியல்பினி னன்றே
யஞ்சுடர் நெடுவே லொன்றுநின் முகத்துச்
செங்கடை மழைக்க ணிரண்டா § வீத்தது
மாயிரும் பீலி மணிநிற ** மஞ்ஞைநின்
சாயற் கிடைந்து தண்கா னடையவு
சூடு மன்ன நன்னுதன் மென்னடைக் கழிந்து
நன்னீர்ப் பண்ணை †† நனிமலர்ச் செறியவு
மளிய தாமே சிறுபசுங் கிளியே
குழலும் யாழு மமிழ்துங் குழைத்தநின்
மழலைக் கிளவிக்கு வருந்தின வாகியு
சூ0 மடநடை மாதுநின் ‡‡ மலர்க்கையி னீங்கா
துடனுறைவு மரீஇ யொருவா வாயின
நறுமலர்க் கோதைநின் னலம்பா ராட்டுநர்
மறுவின் மங்கல வணியே யன்றியும்

சஉ - நு. காமனுக்கு வென்றிகொடுத்தலால் அமர்மேம்படுநரதுமுறைமை இவட்குக் கூறப்பட்டது.

சசு. இவளைத் திருமகளாக்கி அமிர்தின்முன்பிறத்தல் கூறப்பட்டது.

சக - நுஉ. இவ்வாறு ஒருநிமையின்றியேயும் குமரவேள் தன்கையில் வேலொன்றையும் இரண்டாக்கித்தந்தது எம்மை வருத்தும் இயல்பினனன்றே.

நுநு. நன்னுதல், முன்னிலைப்பெயர். நுசு. செறிதல் - ஒளித்தல்.

நுஅ. குழைத்தல் - கூட்டுதல்; இல்பொருளுவமை.

நுஎ. கிளி (சுக) கீங்காவாயின; அதனால் (நுஎ) அளியவென்க.

சுஉ. நலம்பாராட்டுநர் - ஒப்பிப்பார். சுசு. மங்கலவணி - இயற்கையழகு.

---

[1] 'அடையார்...சுக்க' என்னும் பகுதி, தக்கயாகப்பரணியில், சுஉஉ - ஆம் தாழிசையுரையில் மேற்கோளாகக் காட்டப்பெற்றுள்ளது.

(பி - ம்.) * 'ஈர்த்தனன்.' † 'படைதினக்களித்தனனதன்.' ‡ 'இயல்பினன்றே.' § ஈத்தனன்.' ** 'மஞ்ஞைசாயற்கு' †† 'தளிர்மலர்.' ‡‡ 'மலர்க்கைநீங்காதுடனுறைபு.'

பிறிதணி யணியப் பெற்றதை யெவன்கொல்
சுரு பல்லிருங் கூந்தற் சின்மல ரன்றியு
மெல்லவிழ் மாலையொ டென்னுற் றனர்கொ
னுன நல்லகி னறும்புகை யன்றியு
மான்மதச் சாந்தொடு வந்ததை யெவன்கொ
றிருமுலைத் தடத்திடைத் தொய்யி லன்றியு
எ0 மொருகாழ் * முத்தமொ டுற்றதை யெவன்கொ
றிங்கண்முத் தரும்பவுஞ் சிறுகிடை வருந்தவு
மிங்கிவை யணிந்தன ரென்னுற் றனர்கொன்
மாசறு பொன்னே வலம்புரி முத்தே
காசறு விரையே கரும்பே தேனே
எரு யரும்பெறற் பாவா யாருயிர் மருந்தே
பெருங்குடி வாணிகன் பெருமட மகளே
மலையிடைப் பிறவா மணியே யென்கோ
வலையிடைப் பிறவா வழிழ்தே யென்கோ
யாழிடைப் பிறவா விசையே யென்கோ
அ0 தாழிருங் கூந்தற் றையா னின்னையென்
றுலவாக் கட்டுரை பலபா ராட்டித்
தயங்கிணர்க் கோதை தன்னொடு தருக்கி
வயங்கிணர்த் தாரோன் மகிழ்ந்துசெல் வழிநாள்
வாரொலி கூந்தலப் பேரியற் கிழத்தி
அரு மறப்பருங் கேண்மையோ டுறப்பரி சாரமும்
விருந்து புறந்தரூஉம் பெருந்தண் வாழ்க்கையும்
வேறுபடு திருவின் வீறுபெறக் காண
வுரிமைச் சுற்றமோ டொருதனி புணர்க்க

சுச. பிறிதணி அணிதலாற் பெற்றபயன் என். [நாற்றம்.
சுசு. எல் - ஒளி. என்னுற்றனர் - என்னவுறவுடையார். சுஎ. நானம் - சுஅ. மான்மதம் - புழுகு கத்தூரிமுதலாயின. வந்ததை - வந்தவுறவு.
எ0. உற்றதை - உறவு. எஉ. என்னுற்றனர் - என்னபித்தேறினர்.
அக. உலவாமை - ஒழியாமை. அஉ. தருக்கி - மிக்கு.
அச. (பா) பேரிற்கிழத்தி - கோவலன் மாதர.
அரு. கேண்மை - சுற்றத்தாரைப்பேணுதல். (பா) அறப்பரிகாரம் - துறத் தாரைப் பூசித்து அறத்தைப் பரிகரித்தல். அசு. பெருந்தண்வாழ்க்கை-இல்லறம். அஎ. வேறுபடுதிருவின் - நானுவிதமான செல்வத்தோடே. வீறு - பெருமை.
அஅ. உரிமைச்சுற்றம் - அடிமைத்திரள். ஒருதனியாகப் புணர்க்கவென்க.

(பி-ம்.) * 'முத்துடன்.'

யாண்டுசில கழிந்தன விற்பெருங் * கிழமையிற்
கூ0 காண்டகு சிறப்பிற் கண்ணகி தனக்கென்.

வேண்பா.

[1] † தூமப் பணிகளொன்றித் தோய்ந்தா லெனவொருவார்
காமர் மனைவியெனக் கைகலந்து - நாமந்
தொலையாத வின்பமெலாந் துன்னினூர் மண்மே
னிலையாமை கண்டவர்போ னின்று.

க - உ. [2] உரைசால்.....மாநகர்

(இ - ள்.) புகழமைந்த சிறப்பினையுடைய அரசரும் விரும்பும் செல்வத்தையுடைய பரதரான் மிகுதிபெற்ற பயன்மிக்க மாநகரென்க.

அரசென்பது, [3] "குடிமை யாண்மை" என்னுஞ் சூத்திரத்து 'நிலையின வாயினு, மஃறிணை மருங்கிற் கிளந்தாங் கியலும்' என்பதனால் முடிந்தது; சிறப்புமை விரிக்க.

இனிப் பரதர் மிகுதிபெறுதற்குக் காரணமான நகரெனினுமாம். பயம் - மன்னர் விழைச்சி.

ங - கக. முழங்குகடல்.....கொழுநனும்

(இ - ள்.) மாநகர், கலத்தானும் காலானும் ஈட்டுதலானே பெறுதற்கரிய பொருளைத்தரலும் புதுமையையுடைய தீவுமுதலிய தேயங்கள்வந்துகூடி ஒருங்குதொக்காற்போன்றுள்ள பண்டம் முழங்குகடல்சூழ்ந்த ஞாலமுழுதும் ஒக்கவரினும் வழங்கத்தொலையாதவளத்தினையுடையதாகலின், அங்ஙனம் அறத்தினுஞ்சிய பொருளால் [4] தலைப்படுதானத்தைச் செய்தோ ரெய்தும் உத்தரகுருவினையொக்கும்படி குலத்திற்குன்றுத செல்வர்க்குத் தோன்றிய பெரியமலர் போலும் கண்ணையுடையாளும் அவள் காதலிக்கப்படும் கொழுநனுமென்க.

---

[1] இவ்வெண்பாப் பலபிரதிகளிலில்லை.

[2] இந்த "உரைசால் சிறப்பின்" என்னும் அடிக்குமுன்னர், "திருவின் செல்வியொடு பெருநில மடந்தையை, யொருதனி யாண்ட செருவடு திண்டோட், கரிகாற் பெரும்பெயர்த் திருமா வளவனைப், பாலை பாடிய பரிசிலன் றெடுத்த, மாலைத் தாகிய வளங்கெழு செல்வத், தாறைந் திரட்டியு மாயிரங் குடிகளும், வீறுசான் ஞாலத்து வியலணி யாகி, யுயர்ந்தோ ருலகிற் பயந்தரு தானமு, மில்லது மிரப்பு நல்லோர் குழுவுந், தெய்வத் தானமுந் திருந்திய பூமியு, மைய ருறையுளு மறவோர் பள்ளியும், விண்ணவ ருலகினி னண்ணிடு நகரமொ, டெண்ணுவரம் பறியா விசையொடு சிறந்த்" என்னும் அடிகள் பதின்மூன்றும், மிதிலைப்பட்டி அழகியசிற்றம்பலக்கவிராயரவர்கள் வீட்டுச் சிலப்பதிகார மூலப்பிரதியில் இருந்தன.

[3] தொல்காப்பியம், இளவியாக்கம், சூ. நிசூ.

[4] தலைப்படுதானம் - உத்தமதானம்; "அறத்தி னூதிய வருபெரும் பொருளைப், புறத்துறைக் குற்றமூன் றுயத்தநற் றவர்க்குக், கொள்கெனப் பணித்து குறையிரந் தவர்வயி, னுள்ளமுவந்தீவ துத்தம தானம்" என்பது திவாகரம்.

(பி - ம்.) * 'கேண் மையிற்.' - † தூமப்பணிபலவுந்தோலாதவேலேந்து.'

அத்தகு திருவினென்பதற்கு அவ்வளத்திற்குத் தக ஒழுகும் மனைவியோ டேயெனினுமமையும்.

அரும்பொருளாவன:—[1] "நீரின் வந்த நிமிர்பரிப் புரவியுங், காலின் வந்த கருங்கறி மூடையும், வடமலைப் பிறந்த மணியும் பொன்னுங், குடமலைப் பிறந்த வாசமு மகிலுந், தென்கடன் முத்துங் குணகடற் றுகிருங், கங்கை வாரியுங் காவிரிப் பயனு, மீழத் துணவுங் காழகத் தாக்கமு, மரியவும் பெரியவும்" எனப் பட்டினப்பாலையுட் சொன்னவும் பிறவும்.

[2] "இருவகைப் பிரிவு நிலைபெறத் தோன்றினு, மூரிய தாகு மென்மனூர் புலவர்" என்பதனாற் கலத்தினும் காலினு மென்றார்; கலம் - மரக்கலம். கால் - வட்டை. இதனானே பின்னிரண்டரமபோரும் கலத்தொடுசேறல் பின்னர் ழிக்கு மரபெனக்கொள்க.

அருந்தவம் - ஈண்டுத்தானம். உத்தரகுரு - போகபூமி; அஃது அறு வகைப்படும்; என்னை: [3] "ஆதி யரிவஞ்ச நல்லரி வஞ்ச, மேமதவஞ்சமிரண வஞ்சன், தேவ குருவ மூத்தர குருவமெனப், போக பூமி யறுவகைப் படுமே" என்றாராகலின். அதிற்பிறந்து [4] போகதுகருமாறு, [5] முடிபொருட்டொடர்நிலை யுள் தானப்பயன் கூறும்வழிக்காண்க.

ஈட்டதலால் ஒருங்குதொக்கன்ன பண்டம் வழங்கத்தவா வளத்ததென ஒட்டுக.

குலத்திற்குன்றுதல்-பூப்பின்கட்பிரிதல்; அன்றி [6] நடுவின்றி நன்பொருள் வெஃகலுமாம். குலத்திற்குன்றுமை - [7] "நெடுநுகத்துப் பகல்போல, நடுவு நின்ற நல்லெனெஞ்சினோர், வடுவஞ்சி வாய்மொழிந்து, தமவும் பிறவு மொப்ப நாடிக், கொள்வதூஉமிகைகொளாது கொடுப்பதூஉங் குறைகொடாது" என்ப தெனக்கொள்க. செல்வர் - இருவர் பிதாக்களும்.

மாநகர், வளத்ததாகலின் ஒக்கும்படி செல்வர்க்குத்தோன்றிய கண்ணியும் கொழுநனுமென்க.

கஉ - ங. மயன்விதித் தன்ன.....இருந்தழி

(இ - ள்.) அங்ஙனந்தோன்றிய கண்ணியும் கொழுநனும் மாடத்து இடை நிலைக்கண்ணே மயன் நிருமித்துவைத்தாற் போன்ற மணிக்காலமளிமிசையே இருந்தழியென்க.

---

[1] பட்டினப்பாலை, கசஅ - கூஉ. [2] தொல்காப்பியம், அகத்திணையியல், சூ. கக.

[3] திவாகரம், கஉ - வது.

[4] போகபூமியிற் பிறந்து போகதுகருமாற்றைப் பின்வரும் திவாகரச்சூத்திரத்தா லுணர்க; "பதினு முட்டைக் குமரனும் விதிவழிப், பன்னீ ராட்டைக் குமரியு மாகி, யொத்த வன்பினு மொத்த நலத்தினும், கற்பக நன்மர நற்பய னுத்வ, வாகிய செய்த வத்தளவு மவ்வழிப், போக துகர்வது போக பூமி."

[5] முடிபொருட் டொடர் நிலையென்றது, அறமுதலிய நற்பயனேயுங் கூறும் சீவக சிந்தாமணி முதலியவற்றை.

[6] திருக்குறள், களக. [7] பட்டினப்பாலை, உ0சு - க0.

உழி - அளவு. மயன் - தெய்வத்தச்சன். நெடுநிலை - எழுநிலை; இடை நிலம் - நாலாநிலம்.

கச - உரு. கழுநீ ராம்பல்.....சிறந்து

(இ - ள்.) முழுநெறியாகிய மேதகு குவளையுடைய அரும்புகள் சுரும்பு இமிர இதழவிழ்ந்த கழுநீர்முதலிய நீர்ப்பூக்களின் வாசத்தைக் கலந்துண்டு அவற்றின் வேறுய கோட்டுப்பூமுதலியவற்றுள் தாழையினது விரிந்த வெள்ளிய தோட்டினையும் சண்பகப்பொதும்பரிலுண்டாகிய கோதைபோலும் மாதவிப் பூவின் தாதினையும் ஆராய்ந்துண்டுபோந்து வாண்முகத்து மாதருடைய புரிந்த குழற்சியையுடைய அளகத்துண்டாகிய கலவைமணம்பெறுதற்கு ஏக்கற்றுப் புகுதற்கு வழிகாணுமற் சுழலுகின்ற சுரும்பொடும் வண்டொடும் மணித்தாமத் தாலே ஒழுங்குபடநிரைத்து வருத்த அழகினையுடைய சாளரக்குறும்புழையாற் செவ்வியறிந்து நுழைந்துபுக்க மணவாய்த் தென்றலைக்கண்டு மகிழ்ச்சியெய் திப் புணர்ச்சியைவிரும்பிக் காதன்மிகுதலாலென்க.

சாதிபற்றி ஆம்பலென்றுரினும் ஈண்டுக்கூறியது சேதாம்பலை வுணர்க; இஃது அவற்றோடு ஒருதன்மைத்தாகிய பகற்போதன்றெனினும் அவை விரியுங்காலத்து இது குவிதலின்மையிற் கலந்துண்டென்றார். இதழொழுக்கப் படாதவெனவே செவ்விகூறிற்று; [1] "நீர்ப்பெருங்குண்டுசினைப்பூத்தகுவளைக், கூம்புவிடு முழுநெறி" என்றார் புறப்பாட்டினும். கோதை-மாலை; ஒழுங்கு மாம். வெண்டோட்டுத்தாழையுமாம்; சண்பகப்பொதும்பர்க் கோதைமாதவி யென்க; பொதும்பர் - மரச்செறிவு. இவை சண்பகத்தோடு மலர்தலின் தேர்ந்துண்டென்றார்.

வாண்முகத்தளகமென்பாருமுளர். புகல - புகுதற்கு. ஓடு - ஒருவினை. செவ்விபார்த்து நுழைந்து புக்கவென்க. செவ்வி - இவர்மகிழுஞ்செவ்வி.

பின்னின்ற உண்டென்பதனை அளைஇ உண்டெனவும், தேர்ந்துண்டெனவும் இரண்டிடத்தும் ஓட்டுக. அன்றி அளைஇ வண்டொடுபுக்கதென்றலெனினுமமை யும். மணவாய்த்தென்றல் - மணத்தைத் தன்னிடத்தேயுடைய தென்றல்.

அளைஇ உண்டு தேர்ந்துண்டு ஏக்கற்றுத் திரிதருசுரும்பொடும் வண்டொ டும்புக்க தென்றலென்க.

உசு - எ. விரைமலர்.....ஏறி

(இ - ள்.) அங்ஙனம் அவர் காதன்மிகுதலாலே இடைநிலத்துநின்றும் மேல் நிரைத்துவருத்த நிலங்களில் மணத்தினையுடைய மலர்வாளியோடே காமன்வீற்றிருக்கும் மேனிலமாகிய நிலாமுற்றத்தின்மேல் ஏறியென்க.

வேனில், ஆருபெயராற் காமன். பகையின்றிக் கல்வியொடு செல்வத் திடை † நஞ்சுற்றகாம துகர்ந்திருத்தலின், வாளியும் காமனும் வருந்தாதிருந்தமை தோன்ற வீற்றிருந்தானென்றார்; இஃது உதாரமென்னுமலங்காரம்; என்னை?

[1] புறநானூறு, ககசு. † சீவகசிந்தாமணி, கக.

[1] "உதார மென்ப தோதிய செய்யுளிற், குறிப்பி னெருபொரு ணெறிப்படத் தோன்றல்" என்பது அணியியலாகலின்.

உஅ - ஙக. சுரும்புணக் கிடந்த.....காட்சிபோல

(இ - ள்.) அங்ஙனம் நிலாமுற்றத்து ஏறினவர்கள், சுரும்புகளுண்டற்குப் பாரித்துவைத்தாற்போலக் கிடந்த நறும்பூஞ் சேக்கைக்கண்ணே கடல்சூழ் ஞாலமுழுவதையும் விளக்கும் [2] ஞாயிறும் திங்களும் சேர இருப்பக்கண்ட காட்சிபோல இருந்து கரும்பு வல்லியென்பனவற்றைப் பெரிய தோளிலே யெழுதியென்க.

கரும்பையும் வல்லியையும் தோளில் எழுதியெனவே தொய்யிலொன்றையும் மூலமேலெழுதியென்பதாயிற்று. பூவின்செவ்வி கூறுவார், சுரும்புண்கிடந்த வென்றார்.

இனி [3] அதிகாரப்புறனடையால், உகரங்கெடுத்து உண என்பதனீப் பெயர்ப்படுத்துச் சுரும்புகடாம் பலவகையுணவும் உளவழி அவ்வக்காலத்து ஆண்டுச்சென்று ஏறியும் இழிந்தும் சுழன்றும் மெய்வருந்தாது அவையெல்லாம் ஒருகாலத்து ஒருவழியுண்ணும் உணவுகிடந்த தன்மையொத்த பூஞ்சேக்கை யெனவுமமையும். இது, பூக்களின் சாதிப்பன்மையும் செவ்வியுங்கூறிற்றாகும்.

முதிர்தல் - மூற்றுதல்; சூழ்தலுமாம்; [4] "நீர்முற்றி மதில்பொருஉம்" என்றார் பிறரும்; முதிர்ந்த கடலுமாம்.

ஒருங்கிருத்தல், இல்பொருளுவமம். போல இருந்தென ஒருசொல்வருவிக்க.

இனிப் புணர்ச்சி கூறுவார்.

ஙஉ - எ. வண்டுவாய்.....கட்டுரை

(இ - ள்.) அங்ஙனமிருந்தவர்கள், வண்டுகள் புரிநெகிழ்க்க வாயவிழ்ந்த வெள்ளிய இதழையுடைய மல்லிகையினது பெரிய இளக்கத்தையுடைய மாலையோடே இதழொடியாது கட்டின கழுநீர்ப்பிணையலும் சூலிந்தலைய மார்பிலிட்ட இவ்விருவகைமாலையும் மயங்கப்பட்டு இருவரும் செயலற்ற புணர்ச்சியிறுதிக் கண்ணே கோவலன் திருமகளைப்போல்வாளுடைய முகத்தைநோக்கித் தனது அறிவுமுதலியனவற்றைக் குறியாத நலம்பாராட்டலென்னும் பொருள்பொதிந்த உரையைக் கூறுமென்க.

நிலாவிரிந்த, உவமத்தொகை; ஒளியுமாம். விரியல் - மலர்ச்சி. பிறழ - சரிய. மயங்கி - மயங்கப்பட்டு; இடக்கர். தீரா, தீர்தலென்னும் விடற்பொருண்மையெதிர்மறை. கூறும், முற்று. ஓர், இடைச்சொல்.

---

[1] இச்சூத்திரம் தண்டியலங்காரத்திலும் (பொதுவணியியல், சூ. உக.) காணப்படுகின்றது.

[2] "மதியமு ஞாயிறுங் கதிரிற் றோடிக், கடனிற விசும்பி னுடனின் றுங்கு" (பெருங்கதை, க. ஙஉ: உஉ - ஙஎ) என்பதும், "வெங்கதிர்க் கனலியுந் தண்கதிர் மதிய முந் தங்கதி வழுவித் தலைப்பெய்தாற்போலவும்" (இறை.சூ. உ - உரை) என்பதும் இங்கே அறியற்பாலன.

[3] தொல்காப்பியம், குற்றியலுகரப்புணரியல், சூ. எஅ. [4] கலித்தொகை, சுஎ.

இனிக் குறியாக்கட்டுரை - முன். கருதப்படாத கட்டுரையெனினும் பொருந்தும். [1] "குறியா வின்ப மெளிதி னின்.....எய்தும்" என்றார்; கட்டுரை - நலம்பாராட்டலென்னும் பொருள்பொதிந்தவுரை.

எறியிருந்து எழுதிப் பிறழ மயங்கிக் கையற்றுக் கூறுமென்க.

அக்கட்டுரை மேற்கூறுவார்.

நூஅ - சக. குழவித் திங்கள்.....ஆகென.

(இ - ள்.) பிறை, இறைவன் இமையவரேத்தாநிற்கத் தன்மூடிக்கு அழகு செய்தல்காரணத்தாற் சூடிய பெறுதற்கருமையுடைத்தெனினும் அதனை அவன் நினக்குத் திருவுதலாகத் தரக்கடவன்; அஃது எற்றுலெனின், அப் பிறை நின்னோடு உடன் பிறப்புண்டாகலின் நினக்கு உரித்தாதலானென்க.

பெரியோன் - இறைவன். உரிது - உரித்து; [2] "உரிதினிற், கொண்டாங்குப் பெயர்தல் வேண்டும்" என அகப்பாட்டினுள்ளுங் கூறினார்.

திங்கட்குழவியென்றது [3] "சொல்லிய வல்ல பிறவவண் வரினும்" என்னும்மாபியற் புறனடையான் முடியும். [4] "அப்பிறை, பதினெண் கணனு மேத்தவும் படுமே" என்றார்புறப்பாட்டினும். அருமைத்து, அஃறிணைவினைக் குறிப்புமுற்று. தருகவென்றது சூடினபிறை இரண்டுகலையாதலின், அதனை எண்ணுட்டிங்களாக்கித் தருகவென்பது கருத்து; என்னை [5] "மாக்கடனடுவ ணெண்ணுட் பக்கத்துப், பசுவெண் டிங்க டோன்றி யாங்குக், கதுப்பயல் விளங்குஞ் சிறுநுதல்" என்றாராகலின்.

இதனுள் மேற்கூறுகின்ற கரும்பையும் வச்சிரத்தையும் அவ்வவ்வுறுப்புக் கட்கேற்பத் திருத்தி ஈக்க அளிக்கவென்பதாயிற்று; என்றது கரும்பிற்கு நிறனும், வச்சிரத்துக்கு நேர்மையும் உண்டாக்கியென்றவாறு.

இஃது எதிரதுபோற்றலென்னும் தந்திரவுத்திவகை.

இங்ஙனங்கூறினார்; பிறை திருவொடு பாற்கடலிடைப் பிறத்தலின், இவளைத் திருமகளாகமதித்து.

சஉ - ஙி. அடையார் முனையகத்து.....ஈக்க

(இ - ள்.) அநங்கன் போர்செய்தற்கு எடுத்த ஒப்பில்லாத கருப்புவில் லொன்றையும் நினக்குக் கரிய இருபுருவமாகத் திருத்தித் தரக்கடவன்; அஃது எற்றுலெனின், பகைவர்முனையிடத்தே தம்மை மேம்படுப்பார்சிலர்க்குப் படைக்கலமுதலிய கொடுத்தல் அரசர்க்கு இயல்பாதலானென்க.

தன்னுல் ஒறுக்கப்படாத தெவ்வரை அழிக்குங்கால் இவருறுப்பாகிய படைக்கலங்கொண்டன்றி அழிக்கலாகாமையின், இங்ஙனம் கூறினர். ஈக்க, [6] "ஈத்துவக்கும்" என்றுற்போலநின்றது. முனிவராகிய மூரட்பகையை அழித்தற்கு வல்வில்லே வேண்டுதலின், ஒருபெருங்கருப்புவில்லென்றார். என்றது,

---

[1] அகநானூறு, உ. [2] தொல். மரபியல், சூ ககo. [5] குறுந்தொகை, கஉக.
[3] ,, கo. [4] புறநானூறு, கடவுள்வாழ்த்து. [6] திருக்குறள், உஉஅ.

காமனுக்குக் [1] காமநூலும் [2] ஆலியும் வில்லாதலின், அதன் வண்மைகூறினர். ஒருபெருங்கருப்புவில் இருகரும்புருவமாகவென்றது சேமவில்லியுங் கூட்டி; [3] "வானுர்.....வேண்டினன்" என்றுராகலின்.

சசு - அ. மூவா மருந்தின்.....இடையென

(இ - ள்.) இந்திரன் அசுரரையழித்துச் சுரரைக் காத்தற்காக எடுத்த வச்சிரப்படையை நினக்கு இடையாகவெனத் திருத்தித் தரக்கடவன்; அஃது எற்றுலெனின், இமையவர்க்கு மரணமின்மையைப் பயக்கும் அமிழ்தினிற்கு நீ முற்பிறத்தலானென்க.

ஆகவென ஒருசொல் வருவிக்க. மூவா, மூத்தவென்னும் பெயரெச்சவெதிர்மறை. எனவே மூப்புக்கும் பிணிக்கும் மருந்தென்பதாயிற்று; என்றது அமிர்தத்தை. மருந்தின், உருபுமயக்கம். நீ அமுதாகலின், நினக்குமுன்னர் வச்சிரம் பிறத்தலாலெனினுமமையும்.

வச்சிரமும் அமுதமும் கடல்கடைகின்றகாலத்துப் பிறந்தவெனப் புராணங்கூறும்; வச்சிரம் இருதலைச்சூலமாய் நடுவுபிடியாமிருத்தலான் அதனிடையை நுசுப்புக்கு உவமங்கூறுப.

இறைவன் காமன் இந்திரனென்னுமிவர், பிறை கரும்பு வச்சிரமென்னுமிவற்றை நுதல் புருவம் இடையாகத் தருக ஈக்க அளிக்க உடன்பிறப்புண்மையிற் பண்புண்டாகலின் முன்னர்த் தோன்றலினென உய்த்துரைக்க.

சகு - நஉ. அறுமுக வொருவன்.....ஈத்தது.

(இ - ள்.) முருகவேள் தன்கையில் அழகிய சுடரையுடைய நெடிய வேலொன்றையும் நின்முகத்து மழைக்கண் இரண்டுமாம்படி ஈதற்குக் காரணம் வேறில்லையாகவும் ஈத்தது யான் இறந்துபடுமுறைமையைத் தன்கண்ணுற் காணவேண்டுதல் காரணத்தானென்க.

[4] "துள்ளுநர்க் காண்மார்" என்றுற்போல. பெறுமுறையின்றியும் - அவ்வாறு தான் ஈத்தற்கு உரிமையின்றுகவும். வேலொன்று இரண்டாகவீத்தல் - நிருமித்துத்தருதல்; [5] "ஒக்கிய முருகன் வைவேலொன்றிரண் டுணைய கண்ணுள்" என்றுராகலின்.

இனிப் பெறுமுறையின்றியுமென்பதற்குத் தனக்குப்பெருங்கூறு ஒன்றும் இல்லையாகவுமெனினுமமையும். இறுமுறை - முடியுமுறை; வருந்துந்தன்மையெனினுமமையும்.

இவை [6] புகழுவமையலங்காரம்; அஃதாவது "இறையோன் சுடைமுடிமேலெந்நாளுந் தங்கும், பிறையோர் திருநுதலும் பெற்ற - தறைபுனல்சூழ், பூவலயந் தாங்கு மரவின் படம்போலும், பாவைதின் னல்குற் பரப்பு" என்வரும்.

---

[1] காமநூல் - பூவிசேடம்; இதனை மன்மதந்திரமென்பர் வடநூலார்; இது மன்மதனுக்கு வில்லென்பதை அரவிசயத்திற்காண்க; "கயக்க ணின்ற பூவின் மிக்க காம காண்டங் கன்னல்வில்" (கந்த. காமக்கள. சூஉ) என்பதும் இங்கே கருதற்பாலது. [2] ஆலி - கரும்பு. [3] சீவகசிந்தாமணி, உ0சூடு. [4] கவித்தொகை, ச. [5] சீவகசிந்தாமணி, கஉசூக. [6] புகழுவமையரிவது உவமைமயப்புகழ்த்துவமிப்பது.

இவற்றுட் கட்புலனுய் எழுதப்படும் உறுப்புக்களைப் பாராட்டி, இனிக் கட்புலனும் ஆகாதுமாய் எழுதப்படாதன பாராட்டுவான்.

நிஙூ - சுக. மாயிரும் பீலி.....ஒருவாவாயின

(இ - ள்.) நன்னுதால், மாதே, மயிற்குலம் நின்னுடைய சாயற்கு எதிர்ந்து வந்து பொருது தோற்றுத் தண்ணிய காட்டிடத்தேபோய் ஒடுங்காநிற்கவும், அன்னம் மெல்லிய நடையினைக்கண்டு எதிர்ந்துவந்து தோற்றுத் தீனதுநடை யழிந்து நல்லநீர்பொருந்தின பண்ணையிற் செறிந்தமலரிற்புக்கு மறையவும், சிறிய பசிய கிள்ளைகள்தாம் குழலிசையினையும் யாழிசையினையும் அமுதத்தினை யும் கலந்து குழைத்தாலொத்த நினது முதிராத மழலைக்கிளவிக்கு எதிர்ந்து வந்து தோற்றனவாயும் நின்னை வழிபட்டு அக்கிளவிகற்பக்கருதி நினதுகையி னின்றும் நீங்காவாய் நின்னுடனே வெறுப்புத்தோன்றுமல் உறைதலையும் பொ ருந்திப் பிரியாவாயினவாகலின், அவை அளிக்கத்தக்கனகாணென்றுனென்க.

மாயிரு, [1] "கோயில்" போலநின்றது; [2] அதிகாரப்புறனடைவிதி. மா - கருமை. இருமை - பெருமை. மணி - நீலமணி. [3] சாயல் - மென்மை. தண் கான் - இழிந்தகாடு. நன்னுதல், [4] "எஞ்சிய விரண்டி னிறுதிப் பெயரே, நின்ற வீற்றய னீட்டம் வேண்டும்" என்பதனுல் நீட்டித்தது. நளி - செறிவு. செறிதல் - ஒடுங்குதல். குழைத்த, இல்பொருளுவமை; [5] "கரும்புந் தேனும் மமுதும் பாலுங் கலந்த தீஞ்சொல்" என்றுற்போல. இனிக் குழைத்த, குழைவித்தவெனினுமமையும்; வருத்தியவென்பதாம்; "குழைமுற்றின வா ழைக் கொழுங்கனி குழைத்தும்" என்றுராகலின். மாது, முன்னிலை; விளி; [6] "ஓவு முவ்வு மேயொடு சிவணும்" என்பதனுன் முடிந்தது.

அடையவும், செறியவுமே இவை ஒருவாவாயினவாகலான் அளியவென்க.

கிளியும் இவள்வளர்ப்பனபலவாகலாற் பன்மைகூறினர்.

சுஉ - ச. நறுமலர்க் கோதை.....எவன்கொல்

(இ - ள்.) இத்தன்மையையாகிய கோதாய், நின்னைப் புனைந்து அழகு செய்யுமகளிர் குற்றமற்ற நினது புனையாத அழகன்றியும் வேறுசில அணிகளை அணிந்ததனற்பெற்ற உதவி யாதுதானென்றுனென்க.

[7] "ஐயா யாகும்" என்பதனுற் கோதை கோதாயென விளியேற்றது. மங்கல வணி - மாங்கலியமென்பாருமுளர்.

சுநி - சுஉ. பல்லிருங் கூந்தல்.....என்னுற்றனர்கொல்

(இ - ள்.) பலவகைத்தாகிய கூந்தலிற் சிலமலரைப்பெய்தலேயன்றி அதன் மேலும் ஒளிபொருந்தி அவிழ்கின்ற மாலையைப் புனைதற்கு அந்தமாலையோடு அவர்கள் என்ன உறவுடையார்களோவென்றுனென்க.

---

1 சீவகசிந்தாமணி, கடுடு.
2 தொல். குற்றியலுகரப்புணரியல், சு. எஅ.
3 ,, உரிச்சொல்லியல், சூ. உசு.
4 ,, விளிமரபு, சூ. உஎ.
5 சீவகசிந்தாமணி, உசசுஅ.
6 தொல்காப்பியம், விளிமரபு, சூ. நி.
7 ,, ,, ,, சு.

சின்மலர் - மங்கலமலர்; கற்புமுல்லை முதலியவை; அருச்சனை மலருமாம்.

சுஎ - அ. நான நல்லகில்.....எவன்கொல்

(இ - ள்.) அவர், கூந்தற்கு நெய்யையுடைய நல்ல அகிற்புகையை ஊட்டு தன்மேலும் மான்மதச்சாந்தை அணிதற்கு அதனெடு தமக்குளதாகிய அந்தக் கண்ணோட்டம் யாதுதான்னென்றனென்க.

மான்மதம் - கத்தூரி.

சுசு - எ. திருமுலைத் தடத்திடை.....எவன்கொல்

(இ - ள்.) அவர் அழகிய முலைத்தடத்தின்மேல் தொய்யிலெழுதுதன் மேலும் தனிமுத்துவடத்தைப் பூட்டுவதற்கு அதனெடு அவர்க்குண்டான [1] கெழுதகைமை யாதுதானென்றனென்க.

திரு - [2] முலைமேற்றோன்றும் வீற்றுத்தெய்வம். தடம் - பரப்பு. தொய்யில்-பத்திக்கீற்று. காழ் - வடம். முத்தக்காழெனமாற்றுக.

எக - உ. திங்கள்.....என்னுற்றனர்கொல்

(இ - ள்.) இங்ஙனமாகிய மங்கலவணியும் சின்மலரும் அகிற்புகையும் தொய்யிலும் பாரமாய் அரும்பவும் வருந்தவும் இவ்விடத்து இவைகண்டுவைத்தும் பிறிதணியும்-மாலையும் சாந்தும் முத்தும் அணிந்தாராதலின், அவர்கள் என்னபேய்கொண்டார்களோவென்றனென்க.

எசு. மாசறுபொன்னே—(இ - ள்.) கட்கு இனிமையான் மாசற வோடிய பொன்னை யொப்பாய்;

வலம்புரிமுத்தே—(இ - ள்.) ஊற்றின் இன்பத்தான் முத்தையொப் பாய்; மரபின் தூய்மைகூறுவான் [3] வலம்புரிமுத்தென்றன்.

எச. காசறு விரையே—(இ - ள்.) உயிர்ப்பின் இனிமையாற் குற்ற மற்ற விரையையொப்பாய்;

கரும்பே—(இ - ள்.) சுவையினினிமையாற் கரும்பை யொப்பாய்;

தேனே—(இ - ள்.) இனியமொழியையுடைமையால் தேனையொப்பாய்;

இவற்றுற்சொல்லியது, ஒளியும் ஊறும் நாற்றமும் சுவையும் ஓசையு மாகலின், [4] "கண்டுகேட் டுண்டுயிர்த் தூற்றறியு மைம்புலனு, மொண்டொடி கண்ணே யுள" என நலம்பாராட்டப்பட்டன.

எரி - அக. அரும்பெறற் பாவாய்.....பாராட்டி

---

[1] கெழுதகைமை - உரிமை.

[2] "ஆமணங்கு குடியிருந் தஞ்சுணங்கு பரந்தனவே" (சீவக. கஎக.)

[3] "வலம்புரி முத்திற் குலமீபுரி பிறப்பும்" (ஆத்திரையன். வொதுப்பாயிரம்.)

[4] திருக்குறள், கஉஅ.

(இ - ள்.) பாவாய், மருந்தே, மடமகளே, தையால், நின்னே யான் மணியே [1] யென்கோ ! அமுதேயென்கோ ! இசையேயென்கோவெனச்சொல்லித் தொலையாத நலம்பாராட்டாகிய பொருள்பொதிந்த உரையைப் பலபாராட்டியென்க.

உயிர்மருந்து-மிருதசஞ்சீவினி. இவற்றுற்சொல்லியது என்னையெனின்,—காட்சியின் உயிர்மயக்குறுதலிற் கொல்லியிற்பாவாயென்றும், அவ்வாறு அழியுமுயிரை இமைப்பிற் றருதலின் ஆருயிர்மருந்தேயென்றுங்கூறி, மலையிடைப் பிறக்குமணி குழையாமையின் அதிற்பிறவா மணியே யென்பேனே! அலையிடைப் பிறக்கும் அமிர்திற்கு இவ்வடிவின்மையின் அதனிற்பிறவாத அமுதேயென்பேனே ! யாழ் கட்கு இன்னுதாகலின் அதனிடைப்பிறவாத இசையேயென்பேனெனத் தெரிதருதேற்றவுவமையென்னுமலங்காரமும், மலை கடலென [2] விரோதமும், பின்வருநிலையென்னு மலங்காரமும் புலப்படுத்தினரெனவுணர்க.

அடி - கூ. தயங்கிணர்.....செல்வுழிநாள்

(இ - ள்.) வயங்கிணர்த்தாரோன் இங்ஙனம் கோதையொடு தருக்கி மகிழ்ந்து செல்லாநின்றநாளிலே ஒருநாள்,

[3] தயங்கல் வயங்கலிரண்டும் விளக்கமாதலிற் பரியாயமென்னும் அலங்காரமும், தலையாய எதுகைத்தொடையின்பமும் புலப்படுத்தினமையுணர்க.

அடி - கூ. வாரொலி.....கண்ணகி தனக்கென்

(இ - ள்.) ஈண்டி ஒலித்த கூந்தலையுடைய வீரபத்தினியை இருநிதிக்கிழவன் மனைக்கிழத்தி, சுற்றந்தழாலோடே துறவறத்திற்குச் செய்யும் பரிசாரமும் விருந்தினரைப் புறங்கண்டுபுகுத்தலும் ஒழிந்த செய்கைகளுமாகிய இவற்றோடுபொருந்திய இல்வாழ்க்கையைப் [4] பலபடைப்பாகிய செல்வத்தோடே நடத்திக் கைவந்து உயர்ச்சிபெறுதலைக் காணவேண்டி அடிமைத்திரளோடே வேறே கூட்ட, அத்தைக் கண்டகண் அங்ஙனம் காட்சிதரும் சிறப்பினையுடைய கண்ணகிக்கு இற்பெருங்கிழமையிற் சிலவாண்டு கழிந்தனவென்க.

மறப்பு - பொச்சாப்பு. இதனை எல்லாவற்றோடுமொட்டுக.

இதன்கருத்து:—கேண்மையோடெனவே சுற்றந்தழாலும், அறப்பரிசாரமுமெனவே அறவோர்க்களித்தலும் அந்தணரோம்பலும் துறவோர்க்கெதிர்தலுமென்பதாயிற்று. இவற்றோடே பொருந்திய வாழ்க்கையெனவே அருளுடைமை, அன்புடைமை, இனியவைகூறன்முதலிய இல்லறப்பகுதியெல்லாமடங்கும். இக்

---

[1] என்கோ - என்பேனே. [2] மாறனலங்காரம், சூ. கஉ - உரையைப் பார்க்க.

[3] "இளங்கோவடிகள், மனையறம்படுத்தகாதையுள், 'தயங்கிணர்...செல்வுழி' என்றவற்றுள், தயங்கல் வயங்கல் இரண்டும் விளக்கமாதலின் அதற்கு விரித்துரையெழுதிய அடியார்க்குநல்லாராகிய ஆசிரியர் அதனையும் பரியாயமென்னும் அலங்காரமாகக் குறித்தார்; அஃது இப்பொருளணியுள் முந்துறக்கூறிய பொருட்பின்வருநிலையுள் அடங்குமென்றறிக;" (மாறனலங்காரம், சூ. ககஙக - உரை.)

[4] "படைப்புப்புட்பல படைத்துப் பலரோ டுண்ணு, முடைப்பெருஞ் செல்வர்" (புறநானூறு, கஎஅ.)

கருத்தானன்றே, கோலக்கனக்காலதயிற் கண்ணகியார், [1] "அறவோர்க் களித்தலு மந்தண ரோம்பலுந், துறவோர்க் கெதிர்தலுந் தொல்லோர் சிறப்பின், விருந்தெதிர் கோடலு மிழந்த வென்னே" என்றதுமென்க.

கூந்தலையுடைய பேரியற்கிழத்தி யெனினுமமையும்; பேரியற்கிழத்தி-கோவலன்மாதா. [2]

கண்ணகிக்குச் சிலயாண்டு கழிந்தனவெனவே மாதவிக்குப் பலயாண்டு கழிதலும் தொள்ளப்பட்டது. இன்னும் மேற் கனத்திறமுரைத்தகாதையில், தேவந்தி, [3] "கண்ணகி நல்லாளுக் குற்றகுறை யுண்டென்று" என்புழி எச்சவும்மைவிரிக்க, இவட்கு அவள் இளமைப்பருவந்தொடங்கி நிகழும் பார்ப்பனத்தோழியாய் மாநாய்கன் மனைவளர்தலின், ஒருகாலத்தே கூடிபுக்குச் செல்கின்றழிப் பிரிவும் ஒருகாலத்தாயிற்றென்பதாகலின், [3] "நாளீராண்டு நடந்ததற் பின்னர்" என்பதனை இருவர்க்குமாக்கி மாதவிக்கு எட்டினிறந்த பலயாண்டு சேறலிற் கண்ணகிக்குச் சிலயாண்டு கழிந்தவெனப் பொருள்கூறலுமொன்று; இத்துணை மிக்க பலமின்று; ஏற்குமேற்கொள்க. இது போலி.

[4] செல்வர்க்குத்தோன்றிய கண்ணியும் கொழுநனும் தென்றலைக் கண்டு மகிழ்ந்து சிறந்து ஏறிக் காட்சிபோலச் சேக்கையிலிருந்து எழுதி மயங்கிக் கையற்று முகநோக்கிக் குறியாக்கட்டுரை கூறுகின்றவன் திங்கள் முதலியவற்றை முதன்முதலில்வரச் சொல்லிப் பலபாராட்டி மகிழ்ந்து செல்வழி ஒருநாள் பேரியற்கிழத்தி புணர்க்கக் கண்ணகிதனக்குப் பெருங்கிழமையோடு ஆண்டு சில கழிந்தனவெனக்கூட்டுக.

எல்லாவடியும் நேரடியாய் வந்து முடிதலின், இது நிலைமண்டிலவாசிரியப்பா.

உ.—மணிமேகலை துறவறம்பூண்ட காதை முற்றிற்று.

---

[1] சிலப்பதிகாரம், கொலைக்களக்காதை, எக - ங.

[2] ,, கனத்திறமுரைத்தகாதை, சக.

[3] ,, வரந்தருகாதை, அநி.

[4] இம்முடியிலுள்ள செய்தெனெச்சங்களுட் சிலவற்றைச் செயவெனெச்சத்திரிபாகக்கொள்க; பின்னும் இங்ஙனம் கொள்ளவேண்டிய இடங்களுண்டு.

மூன்றாவது

அரங்கேற்றுகாதை.

[1] தெய்வ மால்வரைத் திருமூனி யருளா
வெய்திய சாபத் திந்திர சிறுவனெடு
தலைக்கோற் றானத்துச் சாப நீங்கிய
மலைப்பருஞ் சிறப்பின் வானவர் மகளிர்
சிறப்பிற் குன்றாச் செய்கையொடு பொருந்திய
பிறப்பிற் குன்றாப் பெருந்தோண் மடந்தை

கூத்தியதமைதி கூறுகின்றது:—

க. தெய்வமால்வரை - பொதியின் மலை; தெய்வத்தன்மையையுடைய வரை; உருபுதொக்குத் தெய்வமால்வரையென்றாயிற்று.

திருமூனி - அகத்தியன். அருளா - அவன் சாபமிட்டருள.

உ. எய்திய - அச்சாபத்தை யெய்திய.

க. அருளாலென்று பாடமோதி அருளாற் சாபநீங்கியவென்றுமாம்.

உ. இந்திரசிறுவன் - சயந்த குமாரன். இந்திர சிறுவனெடென்றதனால் சயந்தகுமாரனேடே உருப்பசியும் சாபநீங்கிப் போனாளென்க; [2] "திருந்திய.....வாகிவந் தனனென" என்றாராகலின்.

ங. தலைக்கோற்றானம் - நாடக வரங்கு.

ச. மலைப்பருஞ் சிறப்பின் வானவர் மகளிரென்றது - இப்படியால் ஒப்பில்லாத சிறப்பினையுடைய வானவர் மகளிர்; ஆவார் - தளியிலார்; உருப்பசிவந்து சாபத்தாற் பிறக்கையால் அவள்வழியுள்ளாரையும் வானவர்மகளிரென்றாயிற்று. அவருள்,—

ஞ. சிறப்பு - வரிசை. செய்கை - தொழில்.

ட. பிறப்பு - அம்மாதவிவழிவந்த பிறப்பு. பெருந்தோண்மடந்தை - மகளிர்க்குத் தோள்பெருக்கை இலக்கணம்; என்னை? [3] "அகலல்குறூள் கண்ணென மூவழிப் பெருகி" என்றாராகலின்.

---

[1] "தெய்வ மால்வரைத் திருமூனி யருளால்" எனப்புழித் தெய்வவரையென்று ஒட்டிதத்தெய்வத்தன்மையுடையவரையெனப் பொருள்தருகின்றது இன்னோசைதருதற்கு மாலென்பதனேடும் ஒட்டிஞற்போல"—(தொல். புணரியல், சூ. கூ - ந.)

[2] அரும்பதவுரையில், இப்படியே மூதலிறுதிகள்மட்டுங் கொடுக்கப்பெறும் சூத்திர முதலியவற்றின் முழுவடிவங்களே அடியார்க்கு நல்லாருரையிற் காண்க.

[3] கலித்தொகை, கூ.

தாதவிழ் புரிகுழன் மாதவி தன்னை
[1] யாடலும் பாடலு மழகு மென்றிக்
கூறிய மூன்றி னொன்றுகுறை படாம
கo வேழாண் டியற்றியோ ரீரா றாண்டிற்
கக சூழ்கழன் மன்னற்குக் காட்டல் வேண்டி
கஉ யிருவகைக் கூத்தி னிலக்கண மறிந்து

எ. தாதவிழ் புரிகுழல் மாதவி தன்னையென்றது - பூக்கள் தாதுக்களை அவிழ்க்கும் புரிந்த குழலையுடைய மாதவியாகியவள் தன்னை.

அ - கூ. ஆடலும்.....குறைபடாமலென்றது - கூத்தும் பாட்டும் அழகுமென்று சொல்லப்பட்ட இம்மூன்றினுள்ளும் ஒன்றும் குறைபடாமல்.

கo. ஏழாண்டு இயற்றி ஓரீராறாண்டில் - மையுண் கண்ணி மடந்தைமற்ற வீளை ஐயாண்டு நிரம்பியபின்றைக் காண்போர் காண அரங்கிற் சிரமம் இரு பொழுது ஏழாண்டியற்றுவித்து இப்படியாற் பன்னீராண்டுபிராயம் புக்கபின்பு.

கக. சூழ்கழன் மன்னற்குக் காட்டல் வேண்டி - வீரக்கழலினையுடையகோழன் கரிகாற்பெருவளத்தான் அவையரங்கேறிக் காட்டல்வேண்டியென்றவாறு.

இனி, ஆடலாசிரியனமைதி கூறுகின்றது:—

கஉ - உரு. இருவகைக் கூத்தின்.....ஆடற்கமைந்த வாசான் றன்னெடுமென்றது - தேசியும் மார்க்கமுமென்று சொல்லப்படாநின்ற இரண்டு வகைப்பட்ட அகக்கூத்தினது இலக்கணங்களையறிந்து பலவகைப்பட்ட புறநடங்களையும் விலக்குறுப்புக்களைச் சேரப்புணர்க்கவும் வல்லனாகி அல்லிய மூதாலாகக் கொடுகொட்டி ஈருகக்கிடந்த பதினொருகூத்துக்களும் அக்கூத்துக்களுக்குரிய பாட்டுக்களும் அவற்றுக்குஅடைத்தவாச்சியக்கூறும் நூல்களின் வழியே தெரியவறிந்து அக்கூத்தும் பாட்டும் தாளங்களும் தாளங்களின் வழியே வந்த தூக்குக்களும் தம்மிற்கூடி நிகழுமிடத்துப் பிண்டி பிணையல் எழிற்கை தொழிற்கையென்னும் அந்தராங்கிணையும் நூல்களினகத்துக்கொண்ட கூறு பாட்டையறிந்து அகக்கூத்தினிடத்துக் கூடைக்கதியாகச்செய்ததை வாரக்கதி யிற்புகுதாமலும் வாரக்கதியாகச்செய்ததை கூடைக்கதியிற்புகுதாமலும் புறக்கூத்தில் ஆடனிகழுமிடத்து அவினய நிகழாமலும் அவினயநிகழுமிடத்து ஆடல் நிகழாமலும் குரவைக்கூத்தும் வரிக்கூத்தும் தம்மில்விரவாதபடியும் செலுத்த வல்ல ஆடலாசிரியனுமென்றவாறு.

இது, பொழிப்புரை. என்சொல்லிய வாறுவெனின்,—

கஉ. இருவகைக்கூத்தாவன:—தேசி மார்க்கம் எனவிவை; "மார்க்க மென்ப தூவடுகின் பெயரே" இவற்றது இலக்கணமாவது:—"அறுவகை நிலையும்..... ஆகு மென்ப." இவை ஈங்குரைப்பிற் பெருகும்; விரிந்தநூலிற்கண்டுகொள்க.

இவ்வுறுப்புக்களையுடைய கூத்தை இலக்கணத்துடனே பொருந்தக் கற்றென்றவாறு.

---

[1] "ஆடல் பாடல் அழகென்பவற்றுக்களித்து" (திருக்குறள், கூகூ - பரி.)

பலவகைக் கூத்தும் விலக்கினிற் புணர்த்துப்
பதினே ராடலும் பாட்டுங் கொட்டும்
கரு விதிமாண் கொள்கையின் விளங்க வறிந்தாங்

கஙு. பலவகைக்கூத்தும் விலக்கினிற் புணர்த்தலாவது - நகைக்கூத்து முதலாகப் பலவகைப்பட்ட புறநடங்களையும் வேந்துவிலக்கும் படைவிலக்கும் ஊர்விலக்குமென்று சொல்லாநின்ற விலக்குக்களாகிய பாட்டுக்களுக்கு உறுப்பாய் வருவனவற்றுடனே பொருந்தப்புணர்த்தல்; என்றது பாட்டுக்களுக்கு வரவுறுக்கும்படியை.

விலக்குறுப்பாவன :—பொருள், யோனி, விருத்தி, சந்தி, சுவை, சாதி, குறிப்பு, சத்துவம், அவினயம், சொல், சொல்லின்கூறுபாடு, வண்ணம், வரி, சேதமென இவைபதினைந்தும் ; என்னை ? ''விலக்குறுப் பென்பது.....ஈரே ழுறுப்பே.'' இவை ஈங்குரைப்பிற் பெருகும்.

கச - ரு. பதினேராடலும்.....அறிந்தென்றது - அல்லியமுதற் கொடுகொட்டி ஈறுகக்கிடந்த பதினெருகூத்தும், அக்கூத்துக்களுக்குரிய பாட்டுக்களும் அக்கூத்துக்களின் விகற்பங்களுக்கெல்லாமமைந்த வீரச்சியக் கூறுகளும் நூலின்வழியே விளங்கவறிந்து.

கசு. அவற்றுள், பதினெராடலாவன:—''கடைய.....,பதினேர் கூத்து'' இவை தெய்வவிருத்தி ; இரண்டு கூறுபடும் :—''அல்லியம்.....ஆறு'', ''கடிகடையம்.....ஐந்து'' இவை அசுரரைக்கொல்ல அமரராடினை. இவையிற்றின்விரிவு நூல்களுட்காண்க.

பாட்டுமென்றது - அகநாடகங்களுக்கும் புறநாடகங்களுக்குமுரிய உருக்களுமென்றவாறு.

அகக்கூத்திற்குரிய உருவாவன :—கந்தமுதலாகப் பிரபந்தவுருவீறாக இருபத்தெட்டும்.

புறநாடகங்களுக்குரிய உருவாவன :—தேவபாணி முதலாக அரங்கொழி செய்யுளந்தமாகச் சென்றுறை விகற்பங்களெல்லாமென்றவாறு.

கொட்டுமென்றது - கூத்து விகற்பங்களுக்குஅமைந்த வாச்சியக்கூறுகளுமென்றவாறு.

அவை: கீதானுகம், நிருத்தானுகம், உபயானுகமெனவிவை.

இவற்றுள், கீதானுகம் - கீதத்துக்குவாசித்தல் ; நிருத்தானுகம் - நிருத்தத்துக்குவாசித்தல் ; உபயானுகம் - இரண்டுக்கும் வாசித்தல்.

கரு. விதிமாண் கொள்கையின் விளங்கவறிந்தென்றது - நூல்களில் விதித்தவழியே விளங்கவறிந்து.

ஆங்கென்பது, அசைச்சொல்.

காட்டலும் பாட்டலும் பாணியுந் தூக்குங்
கூடிய * நெறியின கொளுத்துங் காலைப்

கசு. ஆடலுமென்றது - அகக்கூத்தினும் புறக்கூத்தினுமுள்ள ஆடலு மென்றவாறு.

கீற்றுகடி சரிமுதலாகத் தேசிக்குரியகால்களும், சுற்றுதல் எறிதல் உடைத் தன்முதலான வடிகிற்குரிய கால்களும், உடற்றுக்குமுதலாய உடலவர்த்தனை யுமுடைய அகக்கூத்துக்குரியன.

ஈங்குச் சிங்களமென வழங்கிவருகின்ற கூத்துச் சொல்லிற்றிலரெனின், "சிங்கள.....மெய்தும்" என்னுஞ்சூத்திரத்தால் அதற்கு வேறுகால்க ளின்மையினென்பது ; [1] பாலைக்கு நிலமில்லாததுபோல வென்க.

புறக்கூத்திற்குரிய கூத்தாவன:—பெருநடை சாரியை பிரமரி இவைமுதலா யினவும் பதினோராடலுமான கூத்துக்களுமாம். —

இவ்வகையால் அகக்கூத்துக்களுக்கும் புறக்கூத்துக்களுக்குமுரிய ஆடலு மென்றவாறு.

பாடலுமென்றது-பண்ணல்முதலான எட்டுவகைப்பட்ட குறிக்கோளும்.

அவை:—"இன்பம்.....பயனே" என எண்வகைப்பட்ட பயனையுமுடைய பாடலுமென்றவாறு.

பாணியுமென்றது - தாளங்களுமென்றவாறு.

அவை:— சச்சபுடமுதலான பஞ்சதாளமும், அரைமாத்திரையுடைய ஏக தாளமுதலாகப் பதினைமாத்திரையுடைய பார்வதிலோசனமீறுகச்சொன்ன நாற்பத்தொருதாளமும், ஆறன்மட்டம் எட்டன்மட்டமென்பனவும், தாள வொரியல் தனிநிலையொரியலென்பனவும், ஒன்றன்பாணிமுதலாக எண்கூத் தப்பாணியிறுதியாகக்கிடந்த பதினொருபாணி விகற்பங்களும் முதனடை வார முதலாயினவுமென்றவாறு.

தூக்குமென்றது - இத்தாளங்களின்வழிவரும் செந்தூக்கு, மதலைத்தூக்கு, தணிவுதூக்கு, கோயிற்றூக்கு, நிவப்புத்தூக்கு, கழாற்றூக்கு, நெடிந்தூக் கென்று சொல்லப்பட்ட ஏழுதூக்குக்களுமென்றவாறு.

கள. கூடியநெறியினவென்றது - இச்சொல்லப்பட்ட கூத்தும் பாட்டும் தாளமும் தூக்கும் தம்மிற்கூடிய நெறியையுடைய அகக்கூத்தும் புறக்கூத்து மூதலியனவென்றவாறு.

கொளுத்துங்காலையென்றது - ஆடுவிக்குமிடத்தும் பாடுவிக்குமிடத்து மென்றவாறு.

---

[1] தொல்காப்பியம், அகத்திணையியல், சூ. உ - உரை. (பி - ம்.) * 'நெறிபிற்'

பிண்டியும் பிணையலு மெழிற்கையுந் தொழிற்கையுங்
கொண்ட வகையறிந்து கூத்துவரு காலைக்
உ0 கூடை செய்தகை வாரத்துக் கோதலும்
வாரஞ் செய்தகை கூடையிற் கோதலும்
பிண்டி செய்தகை யாடலிற் கோதலு
மாடல் செய்தகை பிண்டியிற் கோதலுங்
குரவையும் வரியும் விரவல செலுத்தி
உரி யாடற் கமைந்த வாசான் றன்னெடும்

கஅ. பிண்டி - ஒற்றைக்கை ; அவை, பாதாகைமுதலாகஇருபத்துநான்கு.

பிணையல் - இரட்டைக்கை ; அவை, அஞ்சலிமுதலாகப் பதின்மூன்று.

எழிற்கை - அழகுபெறக்காட்டுங்கை.

தொழிற்கை - தொழில்பெறக்காட்டுங்கை.

"அவைதா, மெழிற்கை.....பொருளா குமே."

கக. கொண்டவகையறிதல் - பிண்டியும் பிணையலும் புறக்கூத்திற்குரிய கையென்றும், எழிற்கையும் தொழிற்கையும் அகக்கூத்திற்குரிய கையென்று மறிதல்.

கூத்துவருகாலையென்றது - கூத்துக்களின்வரவுநிகழுமிடத்தென்றவாறு.

உ0 - உக. கூடை செய்தகை.....கோதலுமென்றது - அகக்கூத்தினிடத்து ஒற்றையிற்செய்த கைத்தொழில் இரட்டியிற்புகாமலும், இரட்டியிற் செய்த கைத்தொழில் இரட்டிக்கிரட்டியிலும் ஒற்றையிலும் புகாமலுங்கோதல். இன்னும் தேசியிற்கைத்தொழில் மார்க்கத்திற்புகுதாமலும், மார்க்கத்திற்கைத் தொழில் தேசியிற் புகுதாமலுங் கோதலென்றுமாம். ஒற்றையும் இரட்டியும் தேசிக்கூறுதலானும், இரட்டியும் இரட்டிக்கிரட்டியும் வடுகிற் கூறுதலானு மென்றுமாம்.

உஉ - ஙு. பிண்டி.....கோதலுமென்றது - புறக்கூத்தினிடத்துப் பிண்டியென்றது பொருட்கையென்றும், பிணையலென்றது தொழிற்கையென்று மறிந்து ஆடல்நிகழுமிடத்து அவினயநிகழாமலும், அவினய நிகழுமிடத்து ஆடல்நிகழாமலுங் கோதலென்றவாறு.

உச. குரவையும்.....செலுத்தியென்றது - குரவைக்கூத்திற்குரிய கால்களும் வரிக்கூத்திற்குரிய கால்களும் தம்மில் விரவாதபடிசெலுத்தியென்ற வாறு ; "குரவையென்பது.....இயல்பிற்றாகும்", "வரியெனப்.....வழங்கல்" என்பவாகலின்.

உரி. ஆடற்கமைந்த வாசான் றன்னெடுமென்றது - இக்கூத்துக்களை இப்படியால் அவற்றுடனேபொருந்த ஆடவும் ஆடுவிக்கவும்வல்ல ஆடலாசிரிய னெடுமென்றவாறு.

யாழுங் குழலுஞ் சீரு மிடறுந்
தாழ்குரற் றண்ணுமை யாடலொ டிவற்றி
னிசைசந்த பாட லிசையுடன் படுத்து

இனி, இசையாசிரியனமைதி கூறுகின்றது:—

உசு ஙகூ. யாழுங்குழலும்.....இசையோன்றனும் - யாழ்ப்பாடலும் வங்கியப்பாடலும், இருவகைத்தாளக்கூறுபாடிகளும், மிடற்றுப்பாடலும், மந்தமாகிய சுரத்தினையுடைய தண்ணுமையும், அகக்கூத்துப் புறக்கூத்துப் பதினோராடலென்னுங்கூத்துக்களும் வல்லனாய் இவற்றுடனே சேரச்செய்த உருக்களை இசைகொள்ளும்படியும் இரதம் பொருந்தும்படியும் புணர்க்கவும்வல்லனாய் இருவகைப்பட்ட பாடல்களுக்கும் பொருளான இயக்கம் நான்கினியமைத்துத் தேசாந்தரங்களிற் பாடைகளையுமறிந்து அந்தப்பாடைகள் இசைபூணும்படியையுமறிந்து இயற்புலவன் நினைவும் நாடகப்புலவன் ஈடும் வரவுகளும் இவற்றுக்கு அடைத்த பாடல்களும் தம்மிற்சந்திக்குமிடத்துக் குற்றங்தீர்ந்தநூல்வழக்காலே வகுக்கவும் விரிக்கவும் வல்லனாயுள்ள இசைப்புலவனுமென்றவாறு.

இது, பொழிப்புரை; என்சொல்லியவாறுவெனின்,—

உசு. யாழுமென்றது - "கோட்டின தமைதியும்.....வகையே" என முடிக்கப்பட்ட யாழ்ப்பாடலுமென்றவாறு.

குழலுமென்றது - பருமையும் நீளமும் இலக்கணத்துடனமைந்து விரலிடையிட்ட விரனுளர்துளையும் ஊதுதுளையுமுடைத்தாய்ச் சுரபேதங்கள் நிலைகுலையாமல் அளவறுக்கப்பட்டுநின்ற வங்கியப்பாடலுமென்றவாறு.

சீருமென்றது - "செம்முறை.....நிமிர்த்தல்" என்றுசொல்லப்படாநின்ற வண்ணக்கூறுபாட்டையும் இருவகைத்தாளக்கூறுபாட்டையும் பாலைநிலையினையும் பண்ணுநிலையினையும் நிலைப்படையகத்துந் தூய்தாகக் காட்டுந்தன்மையுமென்றவாறு.

மிடறுமென்றது - மூலாதாரந்தொடங்கிய மூச்சைக் காலாற்கிளப்பிக் கருத்தாலியக்கி ஒன்றெனத்தாக்கி இரண்டெனப்பகுத்துப் பண்ணீர்மைகளைப் பிறப்பிக்கப்பட்ட பாடலியலுக்கு அமைந்த மிடற்றுப்பாடலுமென்றவாறு.

உள. தாழ்குரற்றண்ணுமையென்றது - தாழ்ந்த குரலினையுடைய தண்ணுமைக்கருவிமுதலாயின வாசித்தலுமென்றவாறு.

ஆடலொடென்றது - அகக்கூத்துப் புறக்கூத்துப் பதினோராடலென்று சொல்லப்படாநின்ற ஆடலுடனென்றவாறு.

ஒடுவென்றது, உடனிகழ்ச்சி; இச்சொல்லப்பட்டவற்றுடனேயென்றவாறு.

உள - அ. இவற்றினிசைந்த.....படித்தென்றது - இச்சொல்லப்பட்ட கூத்துக்களுக்குச் சேரச்செய்த உருக்களை இசைகொள்ளும்படியும் இரதம் பொருந்தும்படியும் புணர்க்கவல்லனாயென்றவாறு.

வரிக்கு மாடற்கு முரிப்பொரு ளியக்கித்
கூ0 தேசிகத் திருவி னிசை கடைப்பிடித்துத்
தேசிகத் திருவி னிசை யெல்லா
மாசின் றுணர்ந்த வறிவின ஞகிக்
கவியது குறிப்பு மாடற் றெருதியும்
பகுதிப் பாடலுங் *கொளுத்துங் காலை
கூறி வசையறு கேள்வி வகுத்தனன் விரிக்கு
மசையா மரபி னிசையோன் றனனு.
மிமிழ்கடல் வரைப்பிற் றமிழக மறியத்
தமிழ்முழு தறிந்த தன்மைய னகி

உக. வரிக்கு...இயக்கியென்றது - செந்துறை வெண்டுறையென்ன ப் படாகின்ற இருவகைப்பாடல்களுக்கும் பொருளாயமைந்த இயக்கநான்கினையு மமைத்தென்றவாறு.

கூ0. தேசிகத்.....பிடித்தென்றது - இயற்சொல் திரிசொல் திசைச் சொல் வடசொலென்று சொல்லப்படாகின்ற சொற்கள் இசைபூணும்படியைக் கடைப்பிடித்தென்றவாறு.

கூக - உ. தேசிகத்.....ஆகியென்றது - இச்சொற்களிற் புணர்ப் புண்ட இசைவேறுபாடுகளெல்லாம் குற்றந்தீர உணரவல்ல அறிவினையுடை யனாகியென்றவாறு.

கூகூ. கவியதுகுறிப்புமென்றது-இயற்புலவன் கினைத்த கோட்பாடுமென்ற வாறு.

ஆடற்றெருதியுமென்றது - ஆடலாசிரியனீடும் வரவுகளின் தொகுதியு மென்றவாறு.

கூச. பகுதிப்பாடலுமென்றது - இவற்றுக்கு அமைந்த பாடற்பகுதியு மென்றவாறு.

கொளுத்துங்காலையென்றது - இக்கூத்துக்களே ஆசிரியன்குறிப்புக்கும் பாடலுள்ளிட்டனவற்றுக்கும் சேரவியற்றுமிடத்தென்றவாறு.

கூறி - கூ. வசையறு.....தானுமென்றது - இச்சொல்லப்பட்டவற் றைக்குற்றந்தீர்ந்த நூல்வழக்கால் வகுக்கவும் விரிக்கவும்வல்ல பாடலாசிரியனு மென்றவாறு.

இசையுடன்படித்து இயக்கிக் கடைப்பிடித்து அறிவினனாகி விரிக்கும் இசையோனென்க.

இனிக் கவிஞனமைதி கூறுகின்றார்:—

கூள - அ. இமிழ்கடல்.....ஆகியென்றது-ஆரவாரத்தினையுடைய கடல் சூழ்ந்தநிலத்தில் வடக்கும் தெற்கும் குடக்கும் குணக்கும் வேங்கடங்குமரி தீம்புனற்பௌவமெனத் தமிழோராற் எல்லைகூறப்பட்டாகின்ற தமிழ்த்தேசத்தா ரறிய மூன்றுதமிழும் போமென்னுந் தன்மையையுடையனாகியென்றவாறு.

(பீ-ம்.). * கொளுத்துக்காலை

வேத்தியல் பொதுவிய லென்றிரு திறத்தி
சo ஞட்டிய நன்னூ னன்கு கடைப்பிடித்
திசையோன் வக்கிரித் திட்டதை யுணர்ந்தாங்
கசையா மரபி னதுபட வைத்து
[1] மாற்றோர் செய்த வசைமொழி யறிந்து
[2] நாத்தொலை வில்லா நன்னூற் புலவனு
சறி மாடல் பாட லிசையே தமிழே

கூக - சo. வேத்தியல்.....கடைப்பிடித்தென்றது - வேத்தியலென்றும் பொதுவியலென்றும் இரண்டுகூறுபாட்டினையுடைய நாடகநூல்களை நன்றாகக் கடைப்பிடித்தென்றவாறு.

சக - உ. இசையோன்.....வைத்தென்றது - இசைப்புலவன் ஆளத்திவைத்த பண்ணின்சுரமையை முதலும் முறைமையும் முடிவும் நிறைவும் குறையும் நிழமையும் வலிவும் மெலிவும் சமனும் வரையுறையும் நீர்மையுமென்னும் பதினெருபாகுபாட்டினுணுமறிந்து அவன் அவை தாளநிலையில் எய்தவைத்த நிறம் தன் கவியினிடத்தே தோன்றவைக்கவல்லனெனறவாறு.

சஙு - ச. மாற்றோர் செய்த.....புலவனுமென்றது - சத்துருக்களாற் செய்யப்பட்ட வசையையாயுள்ளனவறிந்து அவைதோற்றுதபடி வசையின் மொழிகளால் நாடகக்கவிசெய்யவல்ல நல்லநூல்களையுணர்ந்த புலவனுமென்றவாறு; "இன்ன.....தருமே" என்றுராகலின்.

தன்மையனுகிக் கடைப்பிடித்து உணர்ந்துவைத்து அறிந்து தொலைவில்லாத புலவனென்க.

இனித்தன்னுமையாசிரியனமைதி கூறுகின்றது:—

சரி - ரிரி. ஆடல்பாட.....முதல்வனுமென்றது - எல்லாக்கூத்துக்களும், எல்லாப்பாட்டுக்களும், எல்லாஇசைகளும், வடவெழுத்தொரீஇவந்த எழுத்தாலேகட்டப்பட்ட ஓசைக்கட்டளைக்கூறுபாடுகளும், எல்லாப்பண்களும், இருவகைத்தாளங்களும், எழுவகைத்தூக்குக்களும், இவையிற்றின்முடங்களும், இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொலென்னுஞ்சொற்களுமென்று சொல்லப்பட்டனவற்றையுணர்ந்து ஒருருவை இரட்டிக்கிரட்டி சேர்த்தவிடத்து நெஞ்சாதபடி நிரம்பநிறுத்தவும் அவ்விடத்துப் பெறுமிரட்டியை ஒப்பாக உருவானவழி நிற்குமானநிறுத்திக் கழியுமானங்கழிக்கவும்வல்லனாய் இப்படி நிகழ்ந்த உருக்களில் யாழ்ப்பாடலும் குழலின்பாடலும் கண்டப்பாடலும் இயைந்துநடக்கிறபடி கேட்போர் செவிக்கொள அமைத்தகாரணத்தாற் குறியறிந்து சேரவாசித்தலும் மற்றைக் கருவிகளிற் குற்றநிரப்புதலும் அக்கருவிகளின் மிகுதியடக்குதலும் ஆக்குமிடத்தும் அடக்குமிடத்தும் இசையின்இரந்திரந் தோன்றுதபடிசெய்தலும் செய்யுமிடத்துக் கைத்தொழில் அழகுபெறச்செய்து

---

[1] இவ்வடியின்பின், 'மாத்திரை யறிந்து மகிழ்தரு மரபின்' என ஓரடி மிகுதியாக ஒருபிரதியிற் காணப்பட்டது.

பண்ணே பாணி தூக்கே முடமே
தேசிக மென்றிவை யாசி னுணர்ந்து
கூடை நிலத்தைக் குறைவின்று * மிகுத்தாங்கு
வார நிலத்தை வாங்குபு வாங்கி
வாங்கிய வாரத் தியாழுங் குழலு
மேங்கிய மிடறு மிசைவன கேட்பக்
கூருகிர்க் கரணங் குறியறிந்து † சேர்த்தி

காட்டலும் வல்லனுய் அழகுதக்க தண்ணுமைக் கருவியினையும் அரியதொழி லினையுமுடைய ஆசிரியனுமென்றவாறு.

இதுபொழிப்புரை; என்சொல்லியவாரூவெனின்;—

சசு. ஆடலென்றது - எல்லாக்கூத்துக்களும்.

பாடலென்றது - பண்ணல்முதலிய பாடலியல்புகளும்.

இசையாவது - நரப்படைவாலுரைக்கப்பட்ட பதினேராயிரத்துத் தொள் ளாயிரத்துத்தொண்ணூற்றொன்றுகிய ஆதியிசைகளும்; அவையாவன: ''உயி ருயிர்.....கடனே'' என்னுஞ் சூத்திரத்தாலுறழ்ந்து கண்டுகொள்க.

தமிழாவது - வடவெழுத்தொரீஇவந்த எழுத்தானே கட்டப்பட்ட வாக்கி யக்கூறுகளும், இயலிசைகாடகங்களுமென்று சொல்லப்படாநின்ற மூன்று தமிழ்களும்.

சசு. பண்ணென்றது - நரப்படைவால் நிறந்தோன்றப் பண்ணப்படா நின்றபண்ணும், பண்ணியற்றிறமும், திறமும், திறத்திறமும்.

பாணியென்றது - இருவகைத்தாளவிகற்பங்களும்.

தூக்கென்றது - செந்தூக்குமுதலாய எழுதூக்குக்களும்.

முடமென்றது - இவையிற்றின் குற்றங்களும்.

சஎ. தேசிகமென்றது - இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொ லென்று சொல்லப்படாநின்ற சொற்பிரயோகம்.

இவையாசினுணர்ந்தென்றது - இச்சொல்லப்பட்ட ஒன்பதும் இலக் கணவழியே நுண்ணிதாக வறிந்தென்றவாறு.

சஅ - கூ. கூடைநிலத்தைக்.....வாங்கியென்றது - ஒருருவை இரட்டித் திரட்டி சேர்த்தவிடத்து நெகிழாதபடி நிரம்பநிறுத்தவும் அவ்விடத்துப்பெ றும் இரட்டியை ஒப்பாக உருவானவழி நிற்குமானநிறுத்திக் கழியுமானங்கழிக் கவும் வல்லனுயென்றவாறு.

கூ-கூஉ. வாங்கிய.....சேர்த்தியென்றது - இப்படி நிகழ்ந்த உருக்களில் யாழ்ப்பாடலும் குழலிசையும் கண்டப்பாடலும் இயைந்து நடக்கின்றபடி கேட்போர்க்குச் செவிகொள்ளாநிற்கத் தண்ணுமைக்கருவியமைந்த கரணத்தாற் குறியறிந்து சேரவாசிச்கவல்லனுயென்றவாறு.

(பி - ம்.) * 'மிகுத்துவார' † 'செறுத்தி'

யாக்கலு மடக்கலு மீத்திறம் பட்டாமைச்
சித்திரக் கரணஞ் சிதைவின்று செலுத்து
மத்தகு தண்ணுமை யருந்தொழின் முதல்வனுஞ்
சொல்லிய வியல்பினிற் சித்திர வஞ்சனை
புல்லிய வறிந்து புணர்ப்போன் பண்பின்
வர்த்தனை நான்கு * மயலறப் பெய்தாங்

நிங. ஆக்கல் - மற்றக்கருவிகளின் குறையை நிரப்புகை.

அடக்கல் - மற்றக்கருவிகளின் மிகுதியை அடக்குதல்.

மீத்திறம்படாமை - ஆக்குமிடத்தும் அடக்குமிடத்தும் இரந்திரந்தோன்றுமற் செய்கை.

நிச. சித்திரக்கரணஞ் சிதைவின்று செலுத்தும் - இவ்வினைத்துஞ் செய்யுமிடத்துக் கைத்தொழில் அழகுபெறச்செய்து காட்டவல்லவென் றவாறு.

நிநி. அத்தகு.....முதல்வனுமென்றது - இச்சொல்லப்பட்ட கூறுபாடுகளில் ஒன்றும் குறைவின்றியேயிருக்கும் தண்ணுமைக் கருவியாசிரியனுமென்றவாறு.

உணர்ந்து மிகுத்து வாங்கிச் சேர்த்திச் செலுத்தும் தண்ணுமைமுதல்வனென்க.

இனிக் குழலோனைமேற் கூறுகின்றது:—

நிசு. சொல்லிய வியல்பாவது - நூல்களிற்சொன்ன முறைமை யென்றவாறு.

நிசு - எ. சித்திரவஞ்சனை புல்லியவறிந்தென்றது - சித்திரப்புணர்ப்பும் வஞ்சனைப்புணர்ப்புமென்று சொல்லப்படாநின்ற இரண்டுகூற்றினையுமறிந்தென்றவாறு.

இவற்றுள், சித்திரப்புணர்ப்பாவது - இசைகொள்ளுமெழுத்துக்களின் மேலே பண்ணீர்மை நிறுத்தல்.

வஞ்சனைப்புணர்ப்பாவது - இசைகொள்ளாவெழுத்தின்மேல் வல்லொற்று வந்துழி மெல்லொற்றுப்போல் நெகிழ்த்துப்புணர்த்தல்.

நிஎ. புணர்ப்போன் பண்பினென்றது - புணர்க்கத்தக்க பாட்டாசிரியனையொத்த அறிவினையுடையனாகியென்றவாறு.

நிஅ. வர்த்தனை.....பெய்தாங்கென்றது - வங்கியத்து விரலுளர்ந்து ஊதுந்துளைகள் தர்ச்சனிமுதலாக விட்டுப்பிடிப்பது ஆரோகணமாதலானும் கணிட்டன்முதலாக விட்டுப்பிடிப்பது அவரோகணமாதலானும் இரண்டுகூறும் இப்படிச்செய்தல் வர்த்தனையாதலின் இப்படியால்[1] நூற்றுமூன்றுபண்ணீர்மை களையும் தங்கிலகுலையாமல் நிரம்பக் காட்டவல்லனாயென்றவாறு.

ஆங்கு - அவ்விடத்து. தர்ச்சனி - சுட்டாமுட்டி. கீனிட்டன் - சிறுவிரல்.

---

[1] கூஎ - ஆம் பக்கம் பார்க்க. (பி - ம்.) * 'மயலறத்தெரிந்தாங்கெற்றிய'

கேற்றிய குரலினி யென்றிரு நரம்பி
சுஅ ஞெப்பக் கேட்கு முணர்வின ஞகிப்
பண்ணமை முழவின் கண்ணெறி யறிந்து
தண்ணுமை முதல்வன் றன்னெடும் பொருந்தி
வண்ணப் பட்டடை யாழ்மேல் வைத்தாங்
கிசையோன் பாடிய விசையி னியற்கை
சுஎ வந்தது வளர்த்து வருவ தொற்றி
யின்புற வியக்கி யிசைபட வைத்து

நிகு - சுஅ. ஏற்றிய குரலினி.....ஆகியென்றது - பதிஞற்கோவையி னிடத்துக் குரனரம்பிரட்டிக்கவரும் அரும்பாலியும் இனிகரம்பு இரட்டிக்க வரும் மேற்செம்பாலியும்போல அல்லாத பாலைகளேயும் இசைதூல்வழக்காலே இணைநரம்புதொடுத்துப்பாடும் அறிவினையுடையனெனென்றவாறு.

சுக. பண்ணமை.....அறிந்தென்றது - பண்ணுதலமைந்த முழவின்கண் ணெறியினையறிந்தென்றவாறு.

சுஉ. தண்ணுமை.....பொருந்தியென்றது தண்ணுமையாசிரியன்றன் னெடும் பொருந்தியென்றவாறு.

உம்மையாற் பொருந்துமிடமும் பொருந்தியென்க.

சுங. வண்ணப்.....வைத்தென்றது.....

பட்டடையென்றது நரம்புகளில் இளிக்குப்பெயர்; என்னே? எல்லாப்பண் ணிற்கும் அடிமனையாதலின். வண்ணமென்றது - நிறம்; நிறத்தினையுடைய பட்டடையென்றவாறு; இதனை யாழ்மேல்வைத்தென்க

ஆங்கென்றது, அசை.

சுச. இசையோன்.....இயற்கையென்றது - இக்கிரமத்தினுலே பண் களை யாழ்மேல்வைத்து அதன்வழியே இசைக்காரன்பாடிய பாட்டினியல்பை யென்றவாறு.

சுரு. வந்தது வளர்த்தென்றது - பாடுகின்ற பண்வரவுகளுக்குச் சுரம் குறைவுபடாமனிறுத்தியென்றவாறு.

வருவதொற்றியென்றது - அந்தப்பண்ணுக்கு அயல்விரவாமல் நோக்கி யென்றவாறு.

சுசு. இன்புறவியக்கியென்றது - வண்ணமுதலாகக் காட்டப்பட்ட பாட லியல் வழக்கெல்லாம் இரதம்பொருந்த நிரம்பக்காட்டியென்றவாறு.

இசைபடவைத்தென்றது - முற்சூறிய முதலும் முறையுமுதலான பண் ணிலக்கணம் பதினெண்ணினையும் நிரம்பவைக்கவல்லனெனென்றவாறு.

வார நிலத்தைக் கேடின்று வளர்த்தாங்
கீர நிலத்தி னெழுத்தெழுத் தாக
வழுவின் றிசைக்குங் குழலோன் றனு
எ0 மீரேழ் தொடுத்த செம்முறைக் கேள்வியி
னேரேழ் பாலை நிறுத்தல் வேண்டி
வன்மையிற் கிடந்த தார பாகமு
மென்மையிற் கிடந்த குரலின் பாகமு
மெய்க்கிளை நரம்பிற் கைக்கிளை கொள்ளக்
எரி கைக்கிளை யொழிந்த பாகமும் பொற்புடைத்
தளராத் தாரம் விளரிக் கீத்துக்
கிளைவழிப் பட்டன ளாங்கே கிளையுந்
தன்கிளை யழிவுகண் டவள்வயிற் சேர

சுஎ. (பா) வாரநிலத்தைக் கேடின்று பார்த்தென்றது-முதனடை வாரம் கூடைதிரளென்று சொல்லப்படாநின்ற இயக்கநான்கினும் முதனடை மிகவும் தாழ்ந்த செலவினையுடைத்தாதலானும், திரள் மிகவும் முடுகியநடையினையுடைத் தாதலானும், இவைதவிர்ந்து இடைப்பட்டவாரப்பாடல் சொல்லொழுக்கமும் இசையொழுக்கமுமுடைத்தாதலானும், கூடைப்பாடல் சொற்செறிவும்இசைச் செறிவுமுடைத்தாகலானும், சிறப்புநோக்கி இவ்விரண்டினுள்ளும் வாரப் பாடலை அளவுநிரம்ப நிறுத்தவல்லனெனறவாறு.

எனவே, கூடைப்பாடலும் அமைவதாயிற்று. நிலம் - இடைநிலம்.

சுஎ - அ. ஆங்கு ஈர நிலத்தினெழுத்தெழுத்தாகவென்றது - பாடலிடத் துச்சொன்னீர்மையின் எழுத்துக்கள் சிதையாமல் எழுத்தை எழுத்தாகஇசைக் குங்குழலோனென்றவாறு; அன்றியும் ச ரி க ம ப த நி **என்பாருமுளர்.**

சுகூ. வழுவின்றிசைக்குங் குழலோன்றனுமென்றது-இச்சொல்லப்பட்ட இயல்புகளை இலக்கணப்படியே வாசித்துக்காட்டவல்ல வங்கியவாசிரியனு மென்றவாறு.

அறிந்து மயலறப்பெய்து உணர்வினஞகி அறிந்து பொருந்தி வைத்து வளர்த்து ஒற்றி இயக்கி வைத்துப் பார்த்து இசைக்குங் குழலோனென்க.

இனி, யாழாசிரியனமைதி கூறுகின்றது:—

எ0 - எக. ஈரேழ் தொடுத்த.....வேண்டியென்றது - ஆயப்பாலையாய் நின்ற பதினற்கோவை பொலிந்து செப்பமுடைத்தாய்ப் பாடலியல்பு ஒத்த மைந்த சிறப்புடைத்தாகலிஞல் அதிலே செம்பாலை படுமலைப்பாலை செவ்வழிப் பாலை அரும்பாலை கோடிப்பாலை விளரிப்பாலை மேற்செம்பாலையென்று சொல்லப் பட்ட எழுபாலையினையும் இணைநரம்பாகத்தொடுத்து நிரம்பநிறுத்திக்காட்டல் காரணமாகவென்றவாறு.

எஉ - அ. வன்மையிற்கிடந்த.....அவள்வயிற் சேரவென்றது - "தார பாகமும்.....என்மனார் புலவர்" என்னுஞ்சூத்திரத்தாலே வரப்பட்ட பாலை

வேனி மகளிருங் * கிளைவழிச் சேர
அ0 மேல துழையிளி கீழது கைக்கிளை
வம்புறு மரபிற் செம்பாலை யாய
திறுதி யாதி யாக வாங்கவை
பெறுமுறை வந்த † பெற்றியி னீங்காது
படுமலை செவ்வழி பகரரும் பாலையெனக்
அரு குரல்குர லாகத் தற்கிழமை திரிந்தபின்
முன்னதன் வகையே முறைமையிற் றிரிந்தாங்
கிளிமுத லாகிய ‡ வெதிர்படு கிழமையுங்
கோடி விளரி மேற்செம் பாலையென
நீடிக் கிடந்த கேள்விக் கிடக்கையி

யின்முடிவுதானமாய் வலிந்த நிலைமையினையுடைய தாரம்பெற்ற இரண்டலகில் ஓரலகையும் விளரிப்பாலையின் முதல்தாரமாதலின் மேனிற்கிற குரனரம்பு பெற்ற நாலலகில் இரண்டலகையும் தாரநரம்பில் அந்தரக்கோலிலே கைக்கிளையாகிறுதித்த தாரந்தான் கைக்கிளையாயிற்று. அந்தநரம்பில் ஒழிந்த ஓரலகையும் பண்டைவிளரியிலே கூட்ட அவ்விளரி துத்தநரம்பாயிற்று. இப்படியாற் பன்னிருகாற்றிரிக்கப் பன்னிருபாலையும் பிறக்கும்; பன்னிருபாலையினுருத் தொண்ணூற்றொன்றும் பன்னிரண்டுமாய்ப் [1] பண்கள் நூற்றுமூன்றுதற்குக் காரணமாமெனக்கொள்க.

இவ்விடத்துத் தாரநரம்பின் அந்தரக்கோலைத் தாரமென்றது, "தன்னு மும்.....வழிப்படர" என்னுஞ் சூத்திரத்தாலெனக்கொள்க.

எகூ ஏனி மகளிருங் கிளைவழிச் சேரவென்றது-இதனைப் பெண்டிர்க்குரிய தானமாகிய பதிஞற்கோவையிலே கூட்டவென்றவாறு.

கூட்டும்படி:—

அ0 - அக. மேலதுழையிளி.....செம்பாலையாயதென்றது - உழை முதற் கைக்கிளையிறுதியாக மெலிவுநான்கும் சமமேழும் வலிவுமூன்றுமாய்ச் செம்பாலையாயதெனக.

அஉ - கூ. இறுதி யாதி..... நீங்காதென்றது - தாரமுதலாகப் பெறு முறையாய்வந்தபடியே நீங்காமலென்றவாறு.

அசு - ஙு. படுமலை செவ்வழி.....திரிந்தபினென்றது - கைக்கிளைகுர லாய்ப் படுமலைப்பாலையும், துத்தம்குரலாய்ச் செவ்வழிப்பாலையும், குரல்குரலாய் அரும்பாலையும் தற்கிழமைதிரிந்தபினெனக.

அரும்பாலைக்கு நரம்பு இரட்டித்த பெற்றித்தென்றவாறு.

அசு - கூ. முன்னதன் வகையே.....கிடக்கையினென்றது - முன்பிற் படியே தாரம் குரலாகக்கோடிப்பாலையும், விளரிகுரலாக விளரிப்பாலையும், இளி குரலாக மேற்செம்பாலையுமாயின.

இனி, மேற்செம்பாலை இளிநரம்பு இரட்டித்த நிலைமையினையுடைத்தாய் இப்படிச்சமைந்த பதினற்கோவைப்பாலை நிலையிலென்றவாறு.

---

[1] பக்கம், கூஙி. (பி - ம்.) * 'இளைவயிற்சேர' † 'பெற்றியீங்காது' ‡ 'ஏர்படு'

கூ0 னிணைநரம் புடையன வணைவுறக் கொண்டாங்
கியாழ்மேற் பாலை யிடமுறை மெலியக்
குழன்மேற் கோடி வலமுறை * மெலிய
வலிவு மெலிவுஞ் சமனு மெல்லாம்
பொலியக் கோத்த புலமை யோனுட
கூடு னெண்ணிய நூலோ ரியல்பினின் வழாஅது
மண்ணக மொருவழி வகுத்தனர் கொண்டு
புண்ணிய நெடுவரைப் போகிய நெடுங்கழைக்
கண்ணிடை யொருசாண் வளர்ந்தது கொண்டு
நூனெறி மரபி னரங்க மளக்குந்
க00 கோலள விருபத்து நால்விர லாக

கூ0. இணைநரம் புடையன வணைவுறக் கொண்டாங்கென்றது - இப்பதிஞற் கோவைப்பாலைநிலையிலும் பண்ணுநிலையிலும் இரட்டித்த குரல்குரலாகிய அரும் பாலையும் இளிகுரலாகிய மேற்செம்பாலையும்போல அல்லாத ஐந்துபாலையும் உழை குரலாகச் செம்பாலைக்கு உழைபெய்தும் கைக்கிளைகுரலாகப் படுமலைக்குக் கைக்கிளைபெய்தும் துத்தம் குரலாகச் செவ்வழிப்பாலைக்குத் துத்தம்பெய்தும் தாரம்குரலாகக் கோடிப்பாலைக்குத் தாரம்பெய்தும் விளரிகுரலாக விளரிப் பாலைக்கு விளரிபெய்தும் பாடப்படுமென்றவாறு.

கூக - உ. யாழ்மேற் பாலை.....மெலியவென்றது - யாழினிடத்து அரும் பாலைமுதலியன இடமுறை மெலியவும் குழலினிடத்துக் கோடிப்பாலைமுதலி யன வலமுறைமெலியவும் பாடப்படுமென்றவாறு.

கூங - ச. வலிவு.....புலமையோனென்றது - இப்படியால் வலிவும் மெலிவும் சமனுமென்று சொல்லப்படாநின்ற தானநிலையினையுடைய இசைக் கூறுபாடுகளுக்கெல்லாம் நரப்படைவுகொடாமலும் பண்ணீர்மை முதலாயின குன்றுமலும் புணர்க்கவல்லனாய் அப்புணர்ப்பிற்கு அமைந்த எழுத்துக்களால் இசைசெய்யவல்ல யாழாசிரியனுமென்றவாறு.

எக. நிறுத்தல்வேண்டிப் (கூச) பொலியக்கோத்த புலமையோனென்க.

கூச. உடனென்றது - ஆடலாசிரியன்முதலாயுள்ளாருடனென்றவாறு.

இனி, அரங்கினமைதி கூறுகின்றது:—

கூடு - கூ. எண்ணியநூலோர்.....வகுத்தனர்கொண்டென்றது-எண்ணப் பட்ட நாடகநூலாசிரியர் வகுத்த இயல்புகளின் வழுவாதவகை அரங்குசெய் யத் துவர் வரி வளை பொருத்தன்முதலிய நிலக்குற்றங்கள் நீங்கினவிடத்திலே நலந்தெரிந்து இவ்விடமென்று வகுத்துக்கொண்டென்றவாறு.

கூள - க00. புண்ணிய நெடுவரைப்.....நால்விரலாகவென்றது - பொதி யில்வரைமுதலான புண்ணிய நெடுவரைப்பக்கங்களில் நெடிதாகி உயரவளர்ந்த மூங்கிலிற் கண்ணெமி கண்ணிடை ஒருசாணுக வளர்ந்தீதுகொண்டு நூல்களிற்

(பி - ம்.) * 'வலிய'

வெழுகோ லகலத் தெண்கோ னீளத்
தொருகோ லுயரத் துறுப்பின தாகி
யுத்தரப் * பலகையோ டரங்கின் பலகை
வைத்த விடைநில நாற்கோ லாக
கஎடு வேற்ற வாயி லிரண்டுடன் பொலியத்
தோற்றிய வரங்கிற் றெழுதன † ரேத்தப்
பூதரை யெழுதி மேனிலை வைத்துத்
தூணிழற் புறப்பட மாண்விளக் கெடுத்தாங்

சொல்லுகிறபடியே அரங்கஞ்செய்ய அளக்குங்கோல் உத்தமன்கைப்பெருவிரல் இருபத்துநாலுகொண்டது ஒருமுழமாகக் கோல் நமுக்கியென்றவாறு;

"ஒத்த வணுமூத லுயர்ந்துவரு கணக்கி, லுத்தமன் பெருவிர லிருபத்து நாலு, கொண்டது கோலெனக் கோற்குறிப் புணர்ந்த, தண்டாக் கேள்வித் தலைவர் கிளந்தனர்" என்றாராகலின்.

கஎக - உ. எழுகோல்.....உறுப்பினதாகியென்றது - அக்கோலால் எழுகோலகலமும் எட்டுக்கோல் நீளமும் ஒருகோல் குறட்டியரமுமாயென்க; என்னை? "அக்கோலேழகன்று.....உயரவுமூரித்தே" என்றாராகலின்.

கஎங-சு. உத்தரப் பலகை.....அரங்கிலென்றது-தூணத்துக்குமீதுவைத்த உத்தரப்பலகைக்கும் அரங்கினிடத்து அகலத்துக்கிட்டபலகைக்கும் இடைநின்றநிலம் நான்குகோலாக உயரங்கொண்டு இத்தன்மையவாய அளவுக்குப் பொருந்த வகுத்த வாயிலிரண்டினையுடையதாகச்செய்த அரங்கிலென்றவாறு.

வாயிலிரண்டு :— புகச்சமைத்தவாயிலும் புறப்படச்சமைத்தவாயிலுமெனக்கொள்க.

கஎசு. தோற்றியவரங்கு - இப்படியாற்சமைக்கப்பட்ட நூலிற்சொல்லுகிறபடியே எல்லாவிலக்கணமும் தோற்றின அரங்கென்க.

கஎசு - எ. தொழுதனர்.....வைத்தென்றது - அந்தணர் அரசர் வணிகர் சூத்திரரென்று சொல்லப்படாநின்ற நாலுவருணத்துப்பூதரையும் மேனிலத்தே யாவரும் புகழ்ந்து வணங்க எழுதி வைத்தென்றவாறு;
என்னை? "கூறிய வரங்கில்.....இயற்பிற் முமே" என்றாராகலின்.

கஎஅ. தூணிழற்.....கெடுத்தென்றது - தூண்களினிழல் நாயகப்பதீதியின்கண்ணும் அவையின்கண்ணும் படாதபடி மாட்சிமைப்பட்ட விளக்கையேற்றி யென்றவாறு.

(பி - ம்.) * 'பல்கையோடோங்கின' † 'ஏத்தி'

[1] கொருமுக வெழினியும் பொருமுக வெழினியுங்
கக0 கரந்துவர லெழினியும் புரிந்துடன் வகுத்தாங்
கோவிய விதானத் துரைபெறு நித்திலத்து
மாலைத் தாமம் வளையுட னுற்றி
விருந்துபடக் கிடந்த வருந்தொழி லரங்கத்துப்
[2] பேரிசை மன்னர் பெயர்புறத் தெடுத்த
ககஉ சீரியல் வெண்குடைக் காம்புநனி கொண்டு
கண்ணிடை நவமணி யொழுக்கி * மண்ணிய
நாவலம் பொலந்தகட் டிடைநிலம் போக்கிக்

கக0 - கக. ஒருமுகவெழினியும்.....வகுத்தென்றது - இடத்தூணினிலையிடத்து ஒருமுகவெழினியும் இரண்டுவலத்தூணினிலையிடத்துப் பொருமுகவெழினியும் மேற் கரந்துவரலெழினியுமாகச் செயற்பாட்டுடனே வகுத்தென்றவாறு.

ககக. ஓவியவிதானத்து - சித்திரவிதானமான பலதொழில்களையுமுடைத்தாகி.

ககக - உ. உரைபெறு.....நாற்றியென்றது - நல்லவாகிய முத்துமாலைகளாற் சல்லியும் தூக்குமாக நாற்றியென்றவாறு.

ககங. விருந்துபடக்.....அரங்கத்தென்றது - அழகினும் புதுமைத்தாகச் சமைத்த அரங்கினகத்தென்றவாறு.

கூசு. வகுத்தனர் கொண்டு (கக0எ) வைத்து (கக0அ) எடுத்து (ககக) வகுத்து (ககஉ) நாற்றிக் (ககங) கிடந்த அரங்கமென்க.

நாற்றுதற்கு இடமாகிக் கிடந்த அரங்கமென்க.

ககச - ஙி. பேரிசைமன்னர்.....நனிகொண்டென்றது - பெரியசீர்த்தியையுடைய அரசர் பொருதுடைந்து புறங்கொடுத்தவழிப் பறிக்கப்பட்ட அழகிய நற்கொற்றக்குடையின்காம்பைத் தலைக்கோலாகக் கொண்டென்றவாறு.

என்றது : தலைக்கோல் கொள்ளுமிடத்து மாற்றுவேந்தரெயிற்புறத்து வெட்டினமூங்கிலும் புண்ணியவரையின் மூங்கிலும் மாற்றரசர் குடைக்காம்பு மாமென்.....

இது கூறிற்று, வேத்தியலும் பொதுவியலுமாதலான்.

ககசு - எ. கண்ணிடை.....போக்கியென்றது - கண்களோறும் நவரத்தினங்களாற் கட்டி இடைநிலங்களைச் சாம்பூநதமென்னும் பொற்றகட்டாலே செறிய் மலக்கமாகக்கட்டியென்றவாறு.

* மலக்கமாகக்கட்டலாவது - மாறுகக்கட்டுவது.

---

[1] "எழினி தானே மூன்றென மொழிப", "அவைதா, மொருமுக வெழினியும் பொருமுக வெழினியுங்,கரந்துவர லெழினியு மெனமூ வகையே"(சீவக. சுஎடு-ந. மேற்.)

[2] இவ்வடிமுதலியவை இந்நூல் உஅ - ஆம் காதையிலுள்ள கூஅ - ஆம் அடிமுதலியவற்றை ஒத்துள்ளன. (பி - ம்.) * நண்ணிய'

காவல் வெண்குடை மன்னவன் கோயி
லிந்திர சிறுவன் சயந்த னெனென
கஉ() வந்தனை செய்து வழிபடு தலைக்கோல்
புண்ணிய நன்னீர் பொற்குடத் தேந்தி
மண்ணிய பின்னர் மாலை யணிந்து
நலந்தரு நாளாற் பொலம்பூ ணுடை
யரசுவாத் தடக்கையிற் பரிசினர் கொண்டு
கஉஙி முரசெழுந் தியம்பப் பல்லிய மார்ப்ப
வரைசொடு பட்ட வைம்பெருங் குழுவுந்
தேர்வலஞ் செய்து கவிகைக் கொடுப்ப
வூர்வலஞ் செய்து புகுந்துமுன் வைத்தாங்

ககஅ - உ0. காவல்வெண்குடை.....தலைக்கோலென்றது - இத்தலைக் கோலை தேவேந்திரன்மகன் சயந்தனுகநினைத்து மந்திரவிதியாலேபூசித்து வழிபட்டு இராசாவின் கோயிலிலே காப்பமைத்து இருத்தக்கடவதென்றவாறு.

சயந்தனுதற்குக்காரணம் [1] மேலே சொன்னோம்.

கஉக - உ. புண்ணிய நன்னீர்.....மாலையணிந்தென்றது - நாடகக்கணி கை தலைக்கோல் கொள்ளுஞான்று புண்ணியதீர்த்தங்களினீரைப் பொற்குடத்தி லேயெடுத்துக்கொண்டுவந்து இத்தலைக்கோலை அபிடேகம்பண்ணிய பின்பு மாலை களுஞ் சூட்டியென்றவாறு.

முன்புசொல்லிப்போந்த (உஙி) நாடகவாசிரியன்முதலானோர் (ககஙி) அர ங்கத்தின்கண்ணே (கஉஅ) இத்தலைக்கோலைவைத்துப் (கஉக) பொற்குடத்தால் (கஉஉ) நீராட்டியபின்பு மாலைசூட்டியென்க.

கஉங. நலந்தருநாளாலென்றது - நல்லநாளிலென்றவாறு.

இதனை நல்லநாளில் (கஉஉ) மண்ணியபின்னரென முன்னேசேர்க்க.

கஉங - ச. பொலம்பூணுடை.....கொண்டென்றது - பொற்பட் டத்தையும் ஆபரணங்களையுமுடைய பட்டவருத்தனத்தின்கையில் வாழ்த் துடனே கொடுத்தென்றவாறு.

கஉஙி - அ. முரசெழுந்தியம்பப்.....முன்வைத்தாங்கென்றது - வீர முரசுமுதலாயினவும் பலவாச்சியங்களுமார்ப்ப அரசனும் மந்திரி புரோ கித சேனாபதித்தொடக்கத்தாருங்கூட வீதியின்கணின்ற தேரினையும் இவ்வைரா பதத்தினையும் உடன்கொண்டுவலஞ்செய்து தேரின்மேனின்ற பாடுவானது கை யிலே இத்தலைக்கோலைக் கொடுத்துத் தேரினைக்கொண்டு நகரியைவலமாகவந்து அரங்கத்தின்கட்புகுந்து தலைக்கோலை எதிர்முகமாக வைத்தபினென்றவாறு.

என்னை ? "பிணியுங் கோரு.....தக்க தென்ப" என்றார் செயிற்றியனார்.

---

[1] இப்புத்தகத்தின் இசு - ஆம் பக்கம் பார்க்க.

கியல்பினின் வழாஅ விருக்கை முறைமையிற்
கஙo குயிலுவ மாக்க * ணெறிப்பட நிற்ப
வலக்கான் முன்மிதித் தேறி யரங்கத்து
வலத்தூண் சேர்தல் வழக்கெனப் பொருந்தி
°யிற்நெறி †வகையா லிடத்தூண் சேர்ந்த
°தொன்னெறி ‡யியற்கைத் தோரிய மகளிருஞ்
கஙடு சீரியல் பொலிய நீரல நீங்க
வார மிரண்டும் வரிசையிற் பாடப்
பாடிய வாரத் தீற்றினின் றிசைக்குங்
கூடிய குயிலுவக் கருவிக ளெல்லாங்

இனி, அரங்கிலேபுதுந்து ஆடுகின்ற இயல்புகூறுகின்றது:—

கஉக. இயல்பினின்.....முறைமையினென்றது - வரிசைக்கேற்ற இருக்கைமுறைகளிலே இருந்தபினென்றவாறு.

கஙo. குயிலுவமாக்கள் நெறிப்பட நிற்பவென்றது - குயிலுவக்கருவியாளர் நிற்கக்கடவ முறைமையிலேநிற்பவென்றவாறு.

முறைமையிலேநிற்கையாவது:— "ஆடிட முக்கோல்.....நிலையிட மொருகோல்" என்று கூறின முறைவழுவாதேநிற்கை.

குயிலுவர் - இடக்கைமுதலான கருவியாளர்.

கஙக - உ. வலக்கான்முன்.....பொருந்தியென்றது - நாடகக்கணிகையாகிய அரங்கேறுகின்ற மாதவி அரங்கத்திலே வலக்கால் முற்படவிட்டேறிப் பொருமுகவெழினிக்கு நிலையிடஞன வலப்பக்கத்துத் தூணிடத்தே சேர்தல் வழக்கென்னுமிடத்தாலே சேர்ந்தென்றவாறு.

கஙஙு - ச. இந்நெறி வகையா.....தோரியமகளிருமென்றது - மாதவி வந்தேறினின்றபடி இடத்தூணிலையாகிய ஒருமுகவெழினியிடம்பற்றிய பழைய நெறியியற்கையினையுடைய தோரிய மடந்தைமுதலாயினருமென்றவாறு.

தோரியமடந்தையராவார் - ஆடிமுதிர்ந்தார்; என்னே ? "இந்நெறி வகையால்.....தோரிய மகளே" எனவும், "தலைக்கோ லரிவை.....தோரிய மகளே" எனவுஞ் சொன்னராகலின்.

கஙடு - சு. சீரியல்.....பாடவென்றது - நன்மையுண்டாகவும் தீமை நீங்கவும்வேண்டித் தெய்வப்பாடல் பாடவென்றவாறு.

வாரமிரண்டாவன:—ஒரொற்றுவாரம், ஈரொற்றுவாரமென்னுஞ் செய்யுள்; அவை தாளத்து ஒருமாத்திரையும் இரண்டுமாத்திரையும் பெற்றுவரும்.

கஙள - அ. பாடிய வாரத்து.....கருவிகளெல்லாமென்றது - தெய்வப்பாடலின் ஈற்றிலேநின்று கூடி இசைக்கப்படாநின்ற கருவிகளெல்லாமென்றவாறு.

இக்கருவிகள் எவ்வண்ணங்கூடியிசைத்தனவோவெனின்:—

(பி - ம்.) * 'தெறிபட' † 'வகையில்' ‡ 'இயற்கையிற்றோரியமகளும்'

குழல்வழி நின்ற தியாழே யாழ்வழித்
கசo தண்ணுமை நின்றது தகவே தண்ணுமைப்
பின்வழி நின்றது முழவே முழவொடு
கூடிநின் * றிசைத்த தாமந் திரிகை
யாமந் திரிகையோ டந்தர மின்றிக்
கொட்டிரண் டுடையதோர் † மண்டில மாகக்
கசசு கட்டிய † மண்டிலம் பதிஞென்று போக்கி
வந்த முறையின் வழிமுறை வழாம

கசுக. குழல்வழி நின்றதியாழேயென்றது - வங்கியத்தின்வழியே நின்றது யாழ்ப்பாடலென்றவாறு.

எனவே மிடற்றுவழி யாழாதலின் மிடற்று மட்டுமும் யாழ்வழித்தெனக் கொள்க.

கசுக - சo. யாழ்வழி.....தகவேயென்றது - யாழ்ப்பாடலின்வழியே தண்ணுமைக்கருவி நின்றதென்றவாறு.

கசo - சக. தண்ணுமைப் பின்வழிநின்றது முழவேயென்றது - மத்தளக் கருவியின்வழியே குடமுழவுநின்றதென்றவாறு.

கசக - உ. முழவொடு கூடிநின்றிசைத்ததாமம் திரிகையென்றது - முழவொடுகூடிநின்ற வாச்சியக் கூறுகளை அமைத்தது ஆமந்திரிகை யென்னுங்கருவி யென்றவாறு.

ஆமந்திரிகையாவது - இடக்கை. நின்றது கருவியென்னுது ஓசையென்க.

அஃதேல் மிடற்றுப்பாடல் சொல்லிற்றிலராலெனின், வாரப்பாடல் பாடியபின்னெனவே மிடற்றுப்பாடலுமடங்கும்.

கசஉ. ஆமந்திரிகையோடந்தரமின்றியென்றது-இவ்வாமந்திரிகையோடே முன்சொன்ன குயிலுவக் கருவிகளனைத்தும் பருந்தும் நிழலும்போல ஒன்றுய் நிற்பவென்றவாறு.

கசச. கொட்டிரண்டுடையதோர்மண்டிலமாகவென்றது - ஒரு தாளத்துக்கு இரண்டுபற்றுக வென்றவாறு.

கசரு. கட்டிய மண்டிலம் பதிஞென்று போக்கியென்றது - பஞ்சதாளப் பிரபந்தமாகக் கட்டப்பட்ட தேசியொத்தை ஒருதாளத்துக்கு இரண்டுபற்றுகப் பத்தும் தீர்வு ஒன்றுமாகப் பதிஞெருபற்றுலே தேசிக்கூத்தை ஆடிமுடித்தென்றவாறு.

கசசு. வந்த முறையின் வழிமுறைவழாமலென்றது - இப்படிச் செய்கை நாடகநூல்களிலமைந்த முறையாகலான், அம்முறை வழுவாமலென்றவாறு.

---

† "குழல்வழி யாழெழீஇத் தண்ணுமைப் பின்னர், முழவியம்ப லாமந் திரிகை" (சீவக. கூசு, சுவயம், நஉ மேற்.); "குழலெழீஇ யாழெழீஇத் தண்ணுமை.....ஆமந் திரிகை' என்று கூத்தநூலுடையாரும் சொன்னர்" (இறை சூ. சo - உரை, மேற்.)

(பி - ம்.) * 'இசைத்தியாமந்திரிகை' † 'மண்டலம்' ‡ 'வந்தமுறைமையின்.'

லந்தரக் கொட்டே னடங்கிய * பின்னர்
மீத்திறம் படாமை வக்காணம் வகுத்துப்
பாற்பட நின்ற பாலைப் பண்மே
கரு0 ஞன்கி ஞெரீஇய நன்கன மறிந்து
மூன்றளந் தொன்று † கொட்டி யதனை
யைது மண்டிலத்தாற் கூடை போக்கி
வந்த வாரம்வழி ம்யங்கிய பின்றை
யாறு நாலு மம்மூறை போக்கிக்

கசள. அந்தரக் கொட்டே னடங்கிய பின்னரென்றது - ... ...
அந்தரக்கொட்டென்றும் முகமென்றும் ஒத்தென்றும் இதற்குப்பெயர்.
இந்த ஒத்தலாடியபின்னரல்லது உருவுகாட்டுகை வழக்கல்லவென்றவாறு;
என்னை ? "முகமா தெதிரி யோகப் பொருட்டே" என்பதனுற் காண்க.

கசஅ - கூ. மீத்திறம்.....பாலைப்பண்மேலென்றது - மங்கலப் பண்ணுய் நரப்படைவுமுடைத்தாயிருக்கிற பாலைப்பண்ணை அளவுகெடாதபடி ஆளத்தியிலேவைத்து அதன்மேலே யென்றவாறு.

கரு0. நான்கி ஞெரீஇய நன்கனமறிந்தென்றது - மங்கலச்சொல்லினையுடைத்தாய் நாலுறுப்பும் குறைபாடில்லாத உருவுக்குச் சொற்படுத்தியும் இசைப்படுத்தியுமறிந்து பாட்டும் கொட்டும் கூத்தும் நிகழ்த்தியென்றவாறு.

நாலுறுப்பாவன :—உக்கிரம் தருவை ஆபோகம் பிரகலை எனவிவை.

நாலுறுப்பும் குறைபாடில்லாத உருவெனவேண்டியது, மூன்றுறுப்பாலே வருவனவுமுளவாதலின். அவை இரண்டாமடியே ஈற்றடியாகப் பரிமுடிவன; அவை மங்கலத்துக்குப் பொருந்தாவென்க.

கருக. மூன்றளந் தொன்று கொட்டியென்றது - மூன்றெழுத்துடைய மட்டத்திலேயெடுத்து ஒரொத்துடைய ஏகதாளத்திலே முடித்தென்றவாறு.

கருஉ. ஐதுமண்டிலத்தாலென்றது - அழகிய மண்டிலநிலையாலென்றவாறு;
என்னை ? "கொண்ட.....வருதக வுடைத்தே" என்பவாகலின்.

கருஉ. கூடை போக்கியென்றது - தேசிக்கு ஒற்றித்தொத்தலும் இரட்டித்தொத்தலுமேயாகலின், தேசிக்கூறெல்லாம் ஆடி முடித்தென்க.

இனி, மார்க்கங் கூறுகின்றது :—

கருச. ஆறுநாலுமம்மூறை போக்கியென்றது - பஞ்சதாளப்பிரபந்தமாகக் கட்டப்பட்ட வடுகிலொத்தையும் தேசியிலொத்தைக் காட்டிலும்போல இரட்டிக்கிரட்டியாக ஆடியென்றவாறு.

(பி - ம்.) * 'பின்றைமீத்திறப்படாமை வர்த்தனைவகுத்து' † 'கொட்டியவதனை யைந்துமண்டலத்தால்'

கநிரு கூறிய வைத்தின் கொள்கை போலப்
பின்னையு மம்முறை * பேரிய பின்றைப்
பொன்னியல் பூங்கொடி புரிந்துடன் † வகுத்தென
நாட்டிய நன்னூ னன்கு கடைப்பிடித்துக்
காட்டின ளாதலிற் காவல் வேந்த
கசுo னிலைப்பூங் கோதை யியல்பினின் வழாமைத்
தலைக்கோ லெய்தித் தலையரங் கேறி
‡ விதிமுறைக் கொள்கையி னுயிரத் தெண்கழஞ்
சொருமுறை யாகப் பெற்றன ளதுவே

கநிரு - சு. கூறிய வைத்தின்.....பின்றையென்றது - சொல்லிப்போந்த தேசிபோலவடிகும் § மட்டத்தாளமுதலாக ஏகதாளம் அந்தமாக வைசாகநிலையிலே ஆடி முடித்தபின்னரென்றவாறு;

என்னை? "வைசாக.....வல்லையார்" என்றாராகலின்.

கநிள. பொன்னியல்.....வகுத்தெனவென்றது - பொலிவினையுடைத்தொரு பொற்கொடியானது கூத்தாடினற்போலவென்றவாறு.

கநிஅ - கூ. நாட்டிய.....ஆதலினென்றது - தாண்டவம் நிருத்தம் நாட்டியமென்னும் மூன்று கூறுபாட்டினும் நாட்டியமென்பது புறநடத்தையாதலின், அதனை நூல்களிற் சொன்னமுறைமை வழுவாமல் அவிநயங்காட்டிப் பாவகந்தோன்ற விலக்ஷணப்புப் பதினலின் வழுவாமல் ஆடிக்காட்டினளாதலினென்றவாறு.

அன்றியும், நாட்டிய நன்னூல்.....காட்டினளாதலின் - இக்காதையிற் கூறிய மூத்தமிழ் வகையும் காட்டினளாதலினென்றுமாம்.

கசுo. (பா) இலைப்பூங் கோதை யியல்பினின் வழாஅதென்றது - இம்மாதவியுடைய கூத்துக்கும் பாட்டுக்கும் அழகுக்கும் தக்கபடியென்றவாறு.

அன்றியும், அரசனுடைய மாலையுடனே முறைமையாகிய ஆயிரத்தெண்கழஞ்சுபொன்னும் சிறப்பாகப்பெற்றுள்;

என்னை? "மூட்டில் பாணரு.....பெறுப" என்றாராதலின்.

இலைப்பூங்கோதை - பச்சைமாலை; இத்துடனே தலைக்கோலெய்தியென்றுமாம். பச்சைமாலைக்கிடை ஆயிரத்தெண்கழஞ்சாதலின், இது பரியத்துக்குப் படிக்கலனென்றுமாம்.

கசுக. தலைக்கோலெய்தியென்றது - வரிசைக்குத் தக்கபடி தலைக்கோற் பெயர்பெற்றென்றவாறு.

தலையரங்கேறியென்றது - முன்னரங்கேறப்பெற்றென்றவாறு.

கசுஉ - கூ. விதிமுறை.....பெற்றனளென்றது - இந்நாடகக்கணிகையர்க்குத் தலைவரிசை ஆயிரத்தெண்கழஞ்சுபொன் பரியம்பெறுகை வழக்காதலின், இவளும் ஆயிரத்தெண்கழஞ்சுபொன் பரியம்பெற்றுளென்றவாறு.

(பி - ம்.) * 'பெரிய' † 'வகுத்து' ‡ 'விதிமுறையாகிய', 'விதிமுறையாக' § 'அடதாளம்'.

நூறுபத் தடுக்கி யெட்டுக் கடைநிறுத்த
கசுரு வீறுயர் பசும்பொன் பெறுவதிம் மாலை
மாலை வாங்குநர் சாலுநங் கொடிக்கென
மானமர் நோக்கியோர் கூனிகைக் கொடுத்து
[1] நகர நம்பியர் திரிதரு மறுகிற்
பகர்வனர் போல்வதோர் பான்மையி னிறுத்த
களo மாமலர் நெடுங்கண் மாதவி மாலை
கோவலன் வாங்கிக் கூனி தன்னொடு
மணமனை புக்கு மாதவி தன்னை
டணைவுறு வைகலி னயர்ந்தனன் மயங்கி
† விடுத லறியா விருப்பின் ஞயினன்
களரு வடுநீங்கு சிறப்பிற்றன் மனையக மறந்தென்.

—:—

கசுக. ஒருமுறையாகப்பெற்றனளென்றது - ஒருநாளைக்குப் பரியமாக வென்று அரசனுற் பெறப்பட்டாளென்றவாறு.

பெறுகை - பெறுகின்றப்படுகையுமாம். ஆயிரங்கழஞ்சு பரியத்திற்கும், எண்கழஞ்சு அழிவுக்குமாக்கி நிச்சயித்து.

அதுவேயென்றது - அன்று தொடங்கி நாடோறும் அந்தப்படியே பரிய மாகவென்றவாறு. அன்றியும், அந்தமாலையென்றுமாம்.

கசுச - கூ. நூறுபத்தடக்கி...பான்மையினிறுத்தவென்றது - இப்பொன் தந்து இம்மாலைவாங்குவான் மாதவிக்குமணவாளப்பிள்ளையாவனென்றுசொல்லி மான்விழிபோன்ற நோக்கினையுடையாளோர் கூனிகைக்கொடுத்துநகரியிற்பெருந் தெருவிலே விலைக்குவிற்பாரைப்போல்வதோர் பண்பினிறுத்தவென்றவாறு.

இவளுக்குப்பரியமென்னுதே மாலைக்குப்பரியமென்றது இடக்கரடக்கு.

கசுரு. வீறுயர்பசும்பொன் - மாற்றற்றபசும்பொன். இம்மாலை இராசாவின் பக்கற்பெற்ற பச்சைமாலை.

களo - எஉ. மாமலர் நெடுங்கண்...மணமனைபுக்கென்றது - பெரியதாமரை மலர்போன்ற கண்ணையுடைய மாதவிமாலையைப் பரியம் ஆயிரத்தெண்கழஞ்சு பொன்னையுங்கொடுத்து வாங்கிக் கோவலன் கூனியுடனே மாதவியுடைய மண மனையிலே புகுந்தென்றவாறு.

களஉ - சு. மாதவிதன்னொடு.....விருப்பினஞயினனென்றது - இக்கோவ லன் மாதவிதன்னுடனே அணைந்தபொழுதே அயர்ந்து மயங்கியிருந்து மனையை யும் அவளையும் விட்டு நீங்கமுடியாத விருப்பத்தையுடையனாயினனென்றவாறு.

களரு. வடுநீங்கு.....மறந்தென்றது - குற்றமற்றசிறப்பினை யுடைய தன் அகத்தையும் மனையாளையுமறந்தென்றவாறு.

என்னென்றது, ஈற்றசை.

—:—

[1] பெருங்கதை, க, கஙஇ: உகக. (பி - ம்.) * 'நாற்றுப்பத்து' † 'விடுதலியா'

வெண்பா.

எண்ணு மெழுத்து மியலிலந் தும்பண் ணுன்குஞ்
பண்ணின்ற கூத்துப் பதிணென்று — மண்ணின்மேற்
போக்கிணுள் பூம்புகார்ப் பொற்றொடி மாதவித்தன்
வாக்கிணு லாடரங்கின் வந்து.

[கூத்தியது அமைதி.]

க - எ. தெய்வ மால்வரை.....மாதவித் தன்னை

தெய்வமால்வரை - தெய்வத்தன்மையையுடைய பெரியவரையென உருபு தொக்கது; வரை - பொதியில்; திருமுனி - அகத்தியன்; வரை பொதியிலாதலும், திருமுனி அகத்தியனுதலும் பெறுமாறு என்னை? இமயமும் இறைவனுமாகற்பாலவெனின்,—அற்றன்று; மேல், [1] "திருமுனி யருள, வெய்திய சாபத்திந்திர சிறுவனெடி, தலைக்கோற் றுனத்துச் சாப நீங்கிய" என இக்காதையிலும், [2] "நயந்தெரி பாடலுந், தோரிய மடந்தை வாரம் பாடலு, மாயிரங் கண்ணேன் செவியக நிறைய, நாடக முருப்பசி நல்காளாகி, மங்கல மிழப்ப வீணை மண்மிசைத், தங்குக விவளெனச் சாபம் பெற்ற, மங்கை மாதவி வழிமுதற் றோன்றிய, வங்கர வல்குல்" எனக் கடலாடுகாதையிலும் கூறினராதலானும், நூன்முகத்துள்ளும் "திருந்திய பொதியி லருந்திற லகத்தியன், சுந்தர மணிமுடி யிந்திரன் மகனை, மாணு விறலோய் வேணு வாகென, விட்ட சாபம் பட்ட சயந்தன், சாபவிடை யெமக்கரு டவத்தோ யென்று, மேனின் றெழுது மேதக வுரைப்ப, வருந்தவ மாமுனி தமிழ்க்கூத் தியர்க்குத், திருந்திய தலைக்கோற் றுனந் தீருமென், றவனினி துரைப்ப வாகிவந் தனனென்" என்றுராகலானும் பொதியிலும் அகத்தியனுமென்பதாயிற்றெனக்கொள்க.

அருள நீங்கியவென்க; அவன் சாபமிட்டருள வென்றுமாம்.

அருளாற்பாடமாயின் - அவனது அருளாற் சாபநீங்கியவென்க.

(இ - ள்.) தெய்வத்தன்மையையுடைய பெரிய பொதியின்மலைக்கண் திருமுனியாகிய அகத்தியன் முன்பாலிட்ட [3] சாபம் இந்திரசிறுவனுடனே அம்முனியருளத் தலைக்கோற்றுனத்து நீங்கிய மாறுபடுதலரிய சிறப்பினையுடைய அரம்பையரில் வரிசையிற் குறைவற்ற நாடகத்தொழிலொடுபொருந்திய உருப்பசியாகிய அம்மாதவி மரபில்வந்த பிறப்பிற் குன்றுதலில்லாத பெரியதோளினையும் தாதுகளவிழும் பூக்களையுடைய கடைகுழன்றுசருண்ட குழலினையுமுடைய மாதவியாகிய மடந்தைதன்னையென்க.

பெருந்தோளென்றுர், மகளிர்தோள் பெருத்தல் மரபாதலின். என்னை? [4] "அகலல்கு றேள்கண்ணென மூவழிப் பெருகி" என்றுராகலின்:

---

[1] சிலப். அரங்கேற்றுகாதை, க-ங. [2] சிலப். கடலாடுகாதை, கஅ - உடி.

[3] இந்திரனவைக்களத்து ஒருவஸ்ரையொருவர் விழைந்து அகத்தியமுனிவராற் சாடம்பெற்ற சயந்தனும் உருப்பசியும் முறையே விந்தமலையில் மூங்கிலாயும், காஞ்சி நகரத்துத் தேவகணிகையாயும் பிறந்தனரென்று, "வானவர் கோமான் வானிடை யிருந்து" என்னும் ஆசிரியப்பாவாற் சுத்தானந்தப்பிரகாசப்பரதநாவாசிரியர் கூறினர்.

[4] கலித்தொகை, கூஅ. (பி - ம்.) * 'டண்ணலைநந்தகூத்து'

அ - கூ. ஆடலும் பாடலும்.....குறை படாமல்

(இ - ள்.) கூத்தும் பாட்டும் அழகுமென்றுசொல்லப்பட்ட இம்மூன்றினுள்ளும் ஒன்றுங் குறைவுபடாமல்,

இவை குறைவுபடாமைக்குக் காரணமுடையளாகலினென்க.

கo - ககூ. ஏழாண் டியற்றி.....வேண்டி

(இ - ள்.) ஐயாண்டில் தண்டியம்பிடிப்பித்து ஏழாண்டு இயற்றுவித்துப் பன்னீராண்டில் வீரக்கழல்சூழ்ந்த காலினையுடைய சோழன்கரிகாற் பெருவளத்தானுக்கு அவனவையரங்கேறிக்காட்டலை விரும்பியென்க.

என்னை? "பண்ணியம்வைத் தானைமுகன் பாதம் பணிந்துநாட், புண்ணிய வோரை புகன்றனகொண்—டெண்ணியே, வண்டிருக்குங் கூந்தன் மடவரலை யையாண்டிற், றண்டியஞ்சேர் விப்பதே சால்பு" எனவும், [1] 'வட்டணையுந் தூசியு * மண்டலமும் பண்ணமைய, வெட்டுட னீரிரண்டாண் டெய்தியபின்-கட்டளைய, கீதக் குறிப்பு மலங்கார முங்கிளரச், சோதித் தரங்கேறச் சூழ்" எனவும், "நன்னர் விருப்புடையோ ணற்குணமு மிக்குயர்ந்தோள், சொன்ன குலத் தாலமைந்த தொன்மையளாய்ப்—பன்னிரண்டாண், டேய்ந்ததற்பி னுடனுடன் பாடலழ கிம்மூன்றும், வாய்ந்தவரங் கேற்றல் வழக்கு" எனவும் கூறினர் பரதசேனாபதியார்.

[ஆடலாசிரியன் அமைதி.]

கஉ-உரு. இருவகைக் கூத்தின்.....ஆசான் றன்னெடும்

(இ - ள்,) இருவகைத்தாகிய அகக்கூத்தின் இலக்கணங்களையறிந்து பல வகைப்பட்ட புறநடங்களையும் விலக்குறுப்புக்களைச் சேரப்புணர்க்கவும் வல்ல ஞெகி அல்லியமுதற் கொடுகொட்டியீறாகக்கிடந்த பதினெருகூத்துக்களும் அக் கூத்துக்களுக்குரிய பாட்டுக்களும் அவற்றுக்குஅடைத்த வாச்சியங்களின் கூறு களும் நூல்களில் விதித்தவழியே தெரிந்து கூத்தும் பாட்டும் தாளங்களும் தாளங்களின் வழிவந்த தூக்குக்களும் தம்மிற்கூடின நெறியையுடைய அகக் கூத்தும் புறக்கூத்துமுதலாயின நிகழ்த்துமிடத்துப் பிண்டி பிணையல் எழிற்கை தொழிற்கையென்று சொல்லப்பட்ட நான்கினையும் நூலினகத்துக்கொண்ட கூறுபாட்டையறிந்து அகக்கூத்து நிகழுமிடத்துக் கூடைக்கதியாகச்செய்தகை வாரக்கதியுட்புகாமலும், வாரக்கதியாகச்செய்தகை கூடைக்கதியுட்புகாமலும், புறக்கூத்தினிடத்து ஆடனிகழுமிடத்து அவிநயநிகழாமலும், அவிநயநிகழு மிடத்து ஆடனிகழாமலும், குரவைக்கூத்தும் வரிக்கூத்தும் தம்மில்விரவாத படியுஞ் செலுத்தி அமைந்த ஆடலாசிரியனுமென்க.

இது பொழிப்புரை.

கஉ. இருவகைக் கூத்தாவன:—வசைக்கூத்து, புகழ்க்கூத்து; வேத்தியல், பொதுவியல்; வரிக்கூத்து, வரிச்சாந்திக்கூத்து; சாந்திக்கூத்து, விநோதக்

[1] சீவகசிந்தாமணி, கூஎந - ந. மேற்.

(பி - ம்.) * 'பண்ணமைய வெண்மையாண், டிட்டுட னீராருண் டெய்தியபின் - வட்டணையுங், கீதக்'

கூத்து; ஆரியம், தமிழ்; இயல்புக்கூத்து, தேசிக்கூத்தெனப் பலவகைய. இவை விரிந்தநூல்களிற்காண்க.

கஉ. ஈண்டு இருவகைக்கூத்தாவன:—சாந்தியும், விநோதமும். என்னை? [1] "அவைதாம், சாந்திக் கூத்தும் விநோதக் கூத்துமென், மூய்ந்துற வகுத்தன னகத்தியன் முனே" என்றுராகலின்.

[1] "சாந்திக் கூந்தே தலைவ * னின்ப, மேந்திநின் முடிய வீரிரு நடமவை, சொக்க மெய்யே யவிநய நாடக, மென்றிப் பாற்படூஉ மென்மனூர் புலவர்" என்பதனுல் நாயகன் சாந்தமாக ஆடியகூத்துச் சாந்திக்கூத்தெனப்படும். இவற்றுள்,—

சோக்கமென்றது - சுத்தநிருத்தம். அது நூற்றெட்டுக்கரணமுடைத்து.

மெய்க்கூத்தாவது:— தேசி வடுகு சிங்களமென மூவகைப்படும். இவை மெய்த்தொழிற்கூத்தாகலின், மெய்க்கூத்தாயின. இவை அகச்சுவைபற்றி யெடுத்தலின், அகமார்க்கமென நிகழ்த்தப்படும்.

அகச்சுவையாவன:—இராசதம், தாமதம், சாத்துவிகமென்பன. "குணத்தின் வழியதகக் கூத்தெனப் படுமே" என்றுர் குணநூலுடையார்; [1] "அகத்தெழு சுவையா னகமெனப் படுமே" என்றுர் சயந்தநூலுடையாருமெனக்கொள்க.

அவிநயக்கூத்தாவது:— † கதை தழுவாது பாட்டினதுபொருளுக்குக் கைகாட்டி வல்லபஞ்செய்யும் பலவகைக்கூத்து.

நாடகம் - கதைதழுவிவருங் கூத்து.

விநோதக்கூத்தாவது:—குரவை, கலிநடம், குடக்கூத்து, கரணம், நோக்கு, தோற்பாவை என்பர். இவற்றுள்,—

குரவையென்றது:— காமமும் வென்றியும் பொருளாகக் குரவைச்செய்யுள் பாட்டாக எழுவரேனும் எண்மரேனும் ஒன்பதின்மரேனும் கைபிணைந்தாடுவது; [2] "குரவையென்பது.....இப்பல்பிற் றென்ப" என்றுராகலின்.

குரவை - வரிக்கூத்தின் ஒருறுப்பு; அவை வந்தவழிக்கண்டுகொள்க.

கலிநடமென்றது - கழாய்க்கூத்து.

குடக்கூத்தென்றது - மேற்பதிஞெராடலுட் காட்டப்படும்.

கரணமாவது - படிந்தவாடல்.

நோக்கென்றது - பாரமும் நுண்மையும் மாயமுமுதலாயினவற்றை உடையது.

தோற்பாவையென்றது - தோலாற் பாவைசெய்து ஆட்டுவிப்பது.

இன்னும் நகைத்திறச்சுவையென்பதனோடு கூட்டி ஏழென்பாருமுளர்; அஃதாவது விதூடகக்கூத்து. இதனை வசைக்கூத்தென்பாருமுளர்.

வசை - வேத்தியல், பொதுவியலென இரண்டுவகைப்படும்; அவைமுந்நூல்களிற் கண்டுகொள்க.

---

[1] சீவகசிந்தாமணி. ஊஎஉ - ந. மேற். [2] இப்புத்தகம் உஎ - ஆம் பக்கம் பார்க்க. (பி - ம்.) * 'அவிநயம்' † 'நிருத்தக்கை'

வெறியாட்டுமுதலாகத் தெய்வமேறியாடுகின்ற அத்திறக்கூத்துக்களும் கூட்டி ஏழென்பாருமுளர்.

என்னை? "எழுவகைக் கூத்து மிழிகுலத் தோரை, யாட வகுத்தன னகத்தியன் முனே" என்றுராகலின்.

இவற்றின் இலக்கணங்களாவன:— [1] "அறுவகை நிலையு மைவகைப் பாதமு, [2] மீரெண் வகைய வங்கக் கிரியையும், [4] வருத்தனை நான்கு [5] நிருத்தக்கை முப்பது, மத்தகு தொழில வாகு மென்ப." இவை விரிப்பிற்பெருகும்.

கஈ. பல்வகைக்கூத்தாவன:—வென்றிக்கூத்து, வசைக்கூத்து, விநோதக் கூத்துமுதலியன; என்னை? "பல்வகை யென்பது பகருங் காலை, வென்றி வசையே விநோத மாகும்" என்றுராகலின்.

"அவற்றுள், மாற்று ஞெகிக்கமு மன்ன ஞயர்ச்சியு, மேற்படக் கூறும் வென்றிக் கூத்தே."

"பல்வகை யுருவமும் பழித்துக் காட்டல், வல்லவ ஞதல் வசையெனப் படுமே."

[6] "எனவிவை தாளத்தி னியல்பின வாகும்."

"விநோதக் கூத்து வேறுபா டுடைத்து, வென்றி விநோதக் கூத்தென விளம்புவர்." இதன்கருத்து: கொடித்தேர்வேந்தரும் குறுநிலமன்னருமுதலாக உடையோர் பகைவென்றிருந்தவிடத்து விநோதங்காணுங் கூத்தென்பதாம்.

விலக்கினிற்புணர்த்து - விலக்குறுப்பிலேடு பொருந்துவித்து ;

---

[1] அறுவகைநிலையாவன:—க.வைணவம், உ. சமநிலை, ஈ. வைசாகம், ச. மண்டலம், ஞ.ஆலீடம், சு.பிரத்தியாலீடமென்பன.

[2] ஐவகைப்பாதமாவன:—க.சமநிலை, உ.உற்கடிதம், ஈ. சஞ்சாரம், ச. காஞ்சிதம், ஞ. குஞ்சிதமென்பன.

[3] அங்கக்கிரியைபதினுறுவன:—க.சரிகை, உ. புரிகை, ஈ. சமகவி, ச. திரிகை, ஞ.ஊர்த்துவகவிகை, சு. பிருட்டகம், எ. அர்த்தபிருட்டகம், அ. சுவத்திகம், கூ. உல்லோலம், கம.சூர்த்தனம், ககஉ.வேட்டனம், கஉ. உபவேட்டனம், ஈகஈ. தானபதப்பிராமரிருத்தம், கச. உக்ஷேபணம், கஞ. அவக்ஷேபணம், ககசு. நிகுஞ்சனமென்பன.

[4] வருத்தனைநான்காவன:—க. அபவேட்டிதம், உ. உபவேட்டிதம், ஈ. வியாவர்த்திதம், ச. பராவர்த்திதமென்பன.

[5] நிருத்தக்கைமுப்பதாவன:—க. சதுரச்சிரம், உ. உத்துவீதம், ஈ. தலமுகம், ச. சுவத்திகம், ஞ. விப்பிரகீர்ணம், சு. அருத்தரேசிதம், எ. அராளகடகாமுகம், அ. ஆவித்தவத்திரம், கூ. சூசீமுகம், கம. இரேசிதம், ஙக. உத்தானவஞ்சிதம், கஉ. பல்லவம், கஈ. நிதம்பம், கச. கசதந்தம், கஞ. இலதை, ககசு. கரிக்கை, கஎ. பக்கவஞ்சிதம், கஅ. பக்கப்பிரதியோகம், ஙகூ. கருடபக்கம், உம. தண்டபக்கம், உங. ஊர்த்துவமண்டலி, உஉ. பக்கமண்டலி, உஈ. உரோமண்டலி, உச. உரப்பார்சுவார்த்தமண்டலி, உஞ, மூட்டிகச்சுவத்திகம், உசு. நளினீபதுமமோசம், உஎ. அலபதுமம், உஅ. உற்பணம், உகூ. இலளிதை, ஈம. வலிதையென்பன. இவை, சுத்தானத்தப்பிரகாசமென்னும் பழைய தமிழ்ப்பரதநூலிற் காணப்பட்டன.

[6] வென்றிக்கூத்தும் வசைக்கூத்தும் தாள இயல்புடையனவென்றபடி.

இன், சாரியை ; மூன்றனுருபு ஐந்தனொடுமயங்கிற்று.

வென்றிக்கூத்துமுதலாகிய பலவகைப்பட்ட புறநடங்களையும் வேந்து விலக்குப் படைவிலக்கு ஊர்விலக்கென்று சொல்லப்பட்ட விலக்குக்களாகிய பாட்டுக்களுக்கு உறுப்பாய்வருவனவற்றுடனே பொருந்தப்புணர்த்தி,

பொருந்தப் புணர்த்தல் - ஈண்டுப் பாட்டுக்களுக்கு வரவுவகுத்தல்.

விலக்குறுப்பாவன:—பதினொன்குவகைப்படும்; அவை [1] பொருள், யோனி, விருத்தி, சந்தி, சுவை, சாதி, குறிப்பு, சத்துவம், அவிநயம், சொல், சொல்வகை, வண்ணம், வரி, சேதமெனவிவை;

என்னை? "விலக்குறுப் பென்பது விரிக்குங் காலைப், பொருளும் யோனியும் விருத்தியுஞ் சந்தியுஞ், சுவையுஞ் சாதியுங் குறிப்புஞ்சத் துவமும், மவிநயஞ் சொல்லே சொல்வகை வண்ணமும், வரியுஞ் சேதமு மூளப்படத் தொகையி, யசைய வெண்ணி னீரே மூறுப்பே" என்றாராகலின்.

அவற்றுள்,— பொருள் நான்குவகைப்படும்; என்னை? "அறம்பொரு ளின்பம் வீடென நான்குந், திறம்படு பொருளெனச் செப்பினர் புலவர்" என்றாராகலின்.

இவை நாடகத்திற் பிரிந்தும் கூடியும் வருங்காற் பெயர்வேறுபடும். அவை நாடகம், பிரகரணப்பிரகரணம், பிரகரணம், அங்கமெனப்பெயராம்.

என்னை? "அவைதாம், நாடகம் பிரகர ணப்பிர கரண, மாடிய பிரகரண மங்க மென்றே, யோதுப ரன்னூ லுணர்ந்திசி னோரே" என்றார் மதிவாணனாரும். "அறமுத லூன்கு மொன்பான் சுவையு, முறைமுன் னுடைய மூன்னே னுகும்" எனவும், "அறம்பொரு ளின்ப மரசர் சாதி" எனவும், "அறம்பொருள் வாணிகர் சாதியென் றறைப" எனவும், "அறமேற் சூத்திர ரங்க மாகும்" எனவும் சொன்னூர் செயிற்றியனார். இவை நான்கும் நாடகமென்றறிக.

யோனி நான்குவகைப்படும்:—உள்ளோன்தலைவனுக உள்ளதோர் பொருண்மேற் செய்தலும், இல்லோன்தலைவனுக உள்ளதோர் பொருண்மேற் செய்தலும், உள்ளோன் தலைவனுக இல்லதோர் பொருண்மேற் செய்தலும், இல்லோன் தலைவனுக இல்லதோர் பொருண்மேற் செய்தலுமெனவிவை;

என்னை? "உள்ளோற் குள்ளது மில்லோற் குள்ளது, முள்ளோற் கில்லது மில்லோற் கில்லது, மெள்ளா துரைத்தல் யோனி யாகும்" என்றாராகலின்.

விருத்தி நான்குவகைப்படும்:— அவை சாத்துவதி, ஆரபடி, கைசிகி, பாரதியெனவிவை.

இவற்றுள்,—சாத்துவதியாவது அறம் பொருளாகத் தெய்வமானிடர் தலைவராக வருவது.

ஆரபடியாவது:—பொருள் பொருளாக வீரராகியமானிடர் தலைவராகவீருவது.

கைசிகியாவது:—காமம் பொருளாகக் காமுகராகியமக்கள் தலைவராகவருவது.

[1] இப்பத்தகம், கக - ஆம் பக்கம் பார்க்க.

பாரதியாவது:—சூத்தன் தலைவனுக நடன் நடி பொருளாகக் காட்டியும் உரைத்தும் வருவது.

இச்சொல்லப்பட்ட நால்வகை விருத்தியுள்ளும் பாரதிவிருத்தி, அந்த மூன்று விருத்தியும்போலப் பிறிதின்றலைவர் பிறிதுபொருள்பற்றி விருத்தி கூறுது பெறுளாலே விருத்திகூறுமெனக்கொள்க.

சந்தீ ஐந்துவகைப்படும்:—அவை முகம், பிரதிமுகம், கருப்பம், விளைவு, துய்த்தலெனவிவை.

இவற்றுள் முகமாவது:— [1] எழுவகைப்பட்ட உழவினுற் சமைக்கப்பட்ட பூழியுளிட்டவித்துப் பருவஞ்செய்து முளைத்து முடிவதுபோல்வது.

பிரதிமுகமாவது:—அங்ஙனம் முளைத்தல் முதலாய் இலைதோன்றி நாற் முப்முடிவதுபோல்வது.

கருப்பமாவது:—அந்நாற்று முதலாய்க் கருவிருந்து பெருகித் தன்னுட் பொருள்பொதிந்து கருப்பமுற்றிருப்பது போல்வது.

விளைவாவது:—கருப்பமுதலாய் விரிந்து கதிர் திரண்டிட்டுக் காய் தாழ்ந்து முற்றி விளைந்துமுடிவதுபோல்வது.

துய்த்தலாவது:—விளையப்பட்ட பொருளை அறுத்துப் பேர்ரிட்டுக் கடா விட்டித் தூற்றிப் பொலிசெய்து கொண்டுபோய் உண்டு மகிழ்வதுபோல்வது.

இவை ஐந்துசந்தியும் நாட்டியக்கட்டுரை.

சுவை ஒன்பதுவகைப்படும்:—அவை வீரச்சுவையவிநயம், பயச்சுவையவி நயம், இழிப்புச்சுவையவிநயம், அற்புதச்சுவையவிநயம், இன்பச்சுவையவி நயம், அவலச்சுவையவிநயம், நகைச்சுவையவிநயம், நடுவுநிலைச்சுவையவி நயம், உருத்திரச்சுவையவிநயமென; அவற்றுள்,—

"வீரச்சுவை யவிநயம் விளம்புங் காலை, மூரிந்த புருவமுஞ் சிவந்த கண் ணும், பிடித்த வாளுங் கடித்த வெயிறு, மடித்த வுதடுஞ் சுருட்டிய நுதலும், திண்ணென வுற்ற சொல்லும் பகைவரை, யெண்ணல் செல்லா விகழ்ச்சியும் பிறவு, நண்ணு மென்ப நன்குணர்ந் தோரே."

"அச்ச வவிநய மாயுங் காலை, யொடுங்கிய வுடம்பு நடுங்கிய நிலையு, மலங் கிய கண்ணுங் கலங்கிய வுளனுங், கரந்துவர வுடைமையுங் கையெதிர் மறுத்த லும், பரந்த நோக்கமு மிசைபண் பினவே."

"இழிப்பி னவிநய மியம்புங் காலை, யிடுங்கிய கண்ணு மெயிறுபுறம் போ தலு, மொடுங்கிய முகமு முளுற்றுக் காலுஞ், சோர்ந்த யாக்கையுஞ் சொன்னி ரம் பாமையு, நேர்ந்தன வென்ப நெறியறிந் தோரே."

"அற்புத வவிநய மறிவரக் கிளப்பிற், சொற்சோர் வுடையது சோர்ந்த கையது, மெய்ம்மயிர் குளிர்ப்பது வியத்தக வுடைய, தெய்திய திமைத்தலும் விழித்தலு மிகவாதென், றையமில் புலவ ரறைந்தன ரென்ப."

---

[1] ஆரம்பத்திற்கு ஏழங்கமுண்டென்று வடநூலாரிற் சிலர் உரைவராதலின் அதற் குப்பொருந்த எழுவகைப்பட்ட உழவென்றார்.

"காம வவிநயங் கருதுங் காலைத், தூவுள் ளுறுத்த வடிவுந் தொழிலுங், காரிகை கலந்த கடைக்கணுங் கவின்பெறு, மூரன் முறுவல் சிறுநிலா வரும்பலு, மலர்ந்த முகனு மிரந்தமென் கிளவியுங்; கலந்தன பிறவுங் கடைப்பிடித் தனரே."

"அவலத் தவிநய மறிவரக் கிளப்பிற், கவலையொடு புணர்ந்த கண்ணீர் மாரியும், வாடிய நீர்மையும் வருந்திய செலவும், பீடழி யிடும்பையும் பிதற்றிய சொல்லு, நிறைகை யழிதலு நீர்மையில் கிளவியும், பொறையின் முகலும் புணர்த்தினர் புலவர்."

"நகையி னவிநய நாட்டுங் காலை, மிகைபடு நகையது பிறர்நகை யுடையது, கோட்டிய முகத்தது.....,விட்டுமுரி புருவமொடு விலாவுறுப் புடையது, செய்வது பிறிதாய் வேறுசே திப்பதென், றையமில் புலவ ராய்ந்தன ரென்ப."

"நாட்டுங் காலை நடிவுநிலை யவிநயங், கோட்பா டறியாக் கொள்கையு மாட்சியு, மறந்தரு நெஞ்சமு மாறிய விழியும், பிறழ்ந்த காட்சி நீங்கிய நிலையுங், குறிப்பின் முகலுந் துணுக்க மில்லாத், தகைமிக வுடைமையுந் தண்ணெனவுடைமையு, மளத்தற் கருமையு மன்பொடு புணர்தலுங், கலக்கமொடு புணர்ந்த நோக்குங் கதிர்ப்பும், விலக்கா ரென்ப வேண்டுமொழிப் புலவர்"

[1] உருத்திரச்சுவை யவிநயம்.....

[2] அஃதாவது விறலென்பது; சத்துவமென்பாருமுளர். அச்சத்துவந்தான் [3] பத்துவகைப்படும். என்னை? மெய்ம்மயிர்சிலிர்த்தல், கண்ணீர்வார்தல், நடுக்கமடித்தல், வியர்த்தல், தேற்றம், களித்தல், விழித்தல், வெதும்பல், சாக்காடு, சூரற்சிதைவு எனவிவை.

சத்துவமாவது - குறிப்புவரையறை; ஆவது, சுத்தசுவையாகின்ற ஒன்பதினும் பாவிக்கும் அத்துணையே மெய்ம்மைத்தாய் வருவதெனக்கொள்க.

என்னை? வேம்பென்று காட்டப்புக்கால் அவ்வேம்பின் இரதங்காட்டாதே அதுதான் இறைவனுக்கு மெய்யின்கண்வருவது.

கருணையென்றுற் பாவித்துக்காட்டுமதன்றி மெய்யாகக் கண்ணீர்வந்தழுவது.

அல்லாத சுவைகளும் வந்த சத்துவமும் இப்படி ஒட்டிக்கண்டுகொள்க.

அவைதாம் அச்சுவைகளில் எண்ணம் வந்தால் தோற்று முடம்பில்; உடம்பின்மிகத்தோற்றும் முகத்து; முகத்தின்மிகத்தோற்றும் கண்ணில்; கண்ணின்மிகத்தோற்றும் கண்ணின்கடையகத்தென்றவாறு.

[4] சாதியாவது.....

---

[1] உருத்திரச்சுவையவிநயச்சூத்திரம் ஒருபிரதியிலும் இல்லை. அச்சுவையின் மெய்ப்பாடுகளை, "கைபிசையா வாய்மடியாக் கண்சிவவா வெய்துயிரா, மெய்குலையா வேரா வெருண்டெழுந்தான்" என்பதனுணர்க.

[2] அஃதென்றது அச்சுவையுணர்வு உள்ளத்து நிகழ்ந்தவழித்தோன்றும் மேற் கூறிய உடம்பின்வேறுபாட்டை.

[3] இத்தொகையும் இதன்வகையும் வடநூல் வீதிக்கு மாறுக உள்ளன.

[4] நிறுத்தமுறையே சுவையின்பின்னர் வகைகாட்டுதற்குரிய சாதி பத்துவகைப் படும்; அவை, நாடகம், பிரகரணம், பாணம், பிரகசனம், டிமம், வியாயோகம், சமவகாரம், வீதி, அங்கம், ஈகாமிருகமெனவிவை.

குறிப்பாவது - சுவையதன்கட்டோன்றுவது.

சந்துவாவது - அக்குறிப்பின்கண் நிகழ்கின்ற நிகழ்ச்சி.

அவிநயமென்றது - பாவகம்; அஃது இருபத்துநான்குவகைத்து; வரலாறு:—வெகுண்டோனவிநயம், ஐயமுற்றோனவிநயம், சோம்பினோனவிநயம், களித்தோனவிநயம், உவந்தோனவிநயம், அழுக்காறுடையோனவிநயம், இன்பமுற்றோனவிநயம், தெய்வமுற்றோனவிநயம், ஞஞ்ஞையுற்றோனவிநயம், உடன்பட்டோனவிநயம், உறங்கினோனவிநயம், துயிலுணர்ந்தோனவிநயம், செத்தோனவிநயம், மழைபெய்யப்பட்டோனவிநயம், பனித்தலைப்பட்டோனவிநயம், வெயிற்றலைப்பட்டோனவிநயம், நாணமுற்றோனவிநயம், வருத்தமுற்றோனவிநயம், கண்ணேவுற்றோனவிநயம், தலைநோவுற்றோனவிநயம், அழற்றிறம்பட்டோனவிநயம், சிதமுற்றோனவிநயம், வெப்பமுற்றோனவிநயம், நஞ்சுண்டோனவிநயமெனவிவை. அவற்றுள்,—

"வெகுண்டோ னவிநயம் விளம்புங் காலை, மடித்த வாயு மலர்ந்த மார்புந், துடித்த புருவமுஞ் சுட்டிய விரலுங், கன்றின வுள்ளமொடு கைபுடைத் திடுதலு, மன்ன நோக்கமோ டாய்ந்தனர் கொளலே."

"பொய்யில் காட்சிப் புலவோ ராய்ந்த, வைய முற்றே னவிநய மூரைப்பின், வாடிய வுறுப்பு மயங்கிய நோக்கமும், பீடழி புலனும் பேசா திருத்தலும், பிறழ்ந்த செய்கையும் வான்றிசை நோக்கலு, மறைந்தனர் பிறவு மறிந்திஞ்ஞேரே."

"மடியி னவிநயம் வகுக்குங் காலை, நொடியொடு பலகொட் டாவிமிக வுடைமையு, மூரி நிமிர்த்தலு முளிவொடு புணர்தலுங், காரண மின்றி யாழ்ந்துமடிந் திருத்தலும், பிணியு மின்றிச் சோர்ந்த செலவோ, டணிதரு புலவ ராய்ந்தன ரென்ப."

"களித்தோ னவிநயங் கழறுங் காலை, யொளித்தவை யொளியா னுரைத்த லின்மையுங், கவிழ்ந்துஞ் சோர்ந்துந் தாழ்ந்துந் தளர்ந்தும், வீழ்ந்த சொல்லொடு மிழற்றிச் சாய்தலுங், களிகைக் கவர்ந்த கடைக்கணேக் குடைமையும், பேரிசை யாளர் பேணினர் கொளலே."

"உவந்தோ னவிநய முரைக்குங் காலை, நிவந்தினி தாகிய கண்மல ருடைமையு, மினிதி னியன்ற வுள்ள முடைமையு, முளிவி னகன்ற முறுவனகையுடைமையு, மிருக்கையுஞ் சேறலுங் கானமும் பிறவு, மொருங்குட னமைந்த குறிப்பிற் றன்றே."

"அழுக்கா றுடையோ னவிநய முரைப்பி, னிழுக்கொடு புணர்ந்த விசைப்பொரு ளுடைமையுங், கூம்பிய வாயுங் கோடிய வுரையு, மோம்பாது விதிர்க்குங் கைவகை யுடைமையு, மாரணங் காகிய வெகுளி யுடைமையுங், காரண மின்றி மெலிந்தமுக முடைமையு, மெலிவொடு புணர்ந்த விடும்பையு மேவரப், பொலியு மென்ப பொருந்துமொழிப் புலவர்."

"இன்பமொடு புணர்ந்தோ னவிநய மியம்பிற், றுன்ப நீங்கித் துவர்த்த யாக்கையுங், தயங்கித் தாழ்ந்த பெருமகிழ் வுடைமையு, மயங்கி வந்த செலவு

நனி யுடைமையு, மழகுள் ளுறுத்த சொற்பொலி வுடைமையு, மெழிலொடு புணர்ந்த நறுமல ருடைமையுங், கலங்கள்சேர்ந் தகன்ற தோண்மார் புடை மையு, நலங்கெழு புலவர் நாடின ரென்ப.''.

[1] ''தெய்வ முற்றே னவிநயஞ் செப்பிற், கைவிட் டெறிந்த கலக்க முடை மையு, மடித்தெயிறு கௌவிய வாய்த்தொழி லுடைமையுங், துடித்த புருவமுந் துளங்கிய நிலையுஞ், செய்ய முகமுஞ் சேர்ந்த செருக்கு, மெய்து மென்ப வியல்புணர்ந் தோரே.''

''ஞஞ்ஞை யுற்றே னவிநய நாடிற், பன்மென் றிறுகிய * நாவழி வுடை மையு, நுரைசேர்ந்து கூம்பும் வாயு நோக்கினர்க், குரைப்போன் போல வுணர்வி லாமையும், விழிப்போன் போல விழியா திருத்தலும், விழுத்தக வுடைமையு மொழுக்கி லாமையும், வயங்கிய திருமுக மழுங்கலும் பிறவு, மேவிய தென்ப விளங்குமொழிப் புலவர்:'' இஃது ஏழுறுமாக்களவிநயம்.

''சிந்தையுடம் பட்டோ னவிநயந் தெரியின், முந்தை யாயினு முணரா நிலைமையும், பிடித்த கைமே லடைத்த கவினு, முடித்த லுறுத கரும நிலைமை யுஞ், சொல்லுவது யாது முணரா நிலைமையும், புல்லு மென்ப பொருந்து மொழிப் புலவர்.''

''துஞ்சா நின்றே னவிநயந் துணியி, னெஞ்சுத லின்றி யிருபுடை மரு ங்கு, மலர்ந்துங் கவிழ்ந்தும் வருபடை யியற்றி, மலர்ந்துயிர்ப் புடைய வாற் றலு மாகும்.''

''இன்றுயி லுணர்ந்தோ னவிநய மியம்பி, னொன்றிய குறுங்கொட் டாவிய முயிர்ப்புந், தூங்கிய முகமுந் துளங்கிய வுடம்பு, மோங்கிய திரிபு மொழிந்தவுங் கொளலே.''

''செத்தோ னவிநயஞ் செப்புங் காலை, யத்தக வச்சமு மழிப்பு மாக்கலுங், கடித்த நிரைப்பலின் வெடித்துப் பொடித்துப், போந்ததுணி வுடைமையும் வலித்த வுறுப்பு, மெலிந்த வகடு மென்மைமிக வுடைமையும், வெண்மணி தோன்றக் கருமணி கரத்தலு, முண்மையிற் புலவ ருணர்ந்த வாறே.''

''மழைபெய்யப் பட்டோ னவிநயம் வகுக்கி, னிழிதக வுடைய வியல்புநனி யுடைமையு, மெய்கூர் நடுக்கமும் பிணித்தலும் படாத்தை, மெய்பூண் டொடுக்கி யமுகத்தொடு புணர்த்தலு, மொளிப்படி மனனி லுலறிய கண்ணும், விளியி னுந் துளியினு மடிந்தசெவி யுடைமையுங், கொடுகிவிட் டெறிந்த குளிர்மிக வுடைமையும், நடுங்கு பல்லொலி யுடைமையு முடியக், கனவுகண் டாற்று னெழு தலு முண்டே.''

''பனித்தலைப் பட்டோ னவிநயம் பகரி, னடுக்க முடைமையு நகைபடு நிலைமையுஞ், சொற்றளர்ந் திசைத்தலு மற்றமி லவதியும், போர்வை விழைதலும் புந்திநோ வுடைமையும், † நீரும் விழியுஞ் சேறு முனிதலு, மின்னவை பிறவு மிசைந்தனர் கொளலே.''

---

[1] சிலப்பதிகாரம். ஈ0 - ஆம் காதை, ஈஅ - ஆம் அடியுதலியவற்றைப்பார்க்க. (பி - ம்.) * நாவனி † நீராம் விழியும்.

"உச்சிப் பொழுதின் வந்தோ னவிநய, மெச்ச மின்றி யியம்புங் காலைச், சொரியா நின்ற பெருந்துய ருழந்து, தெரியா நின்ற வுடம்பெரி யென்னைக், கிவந்த கண்ணு மயர்ந்த நோக்கமும், பயந்த தென்ப பண்புணர்ந் தோரே."

"நாண முற்றே னவிநய நாடி, னிறைஞ்சிய தலையு மறைந்த செய்கை யும், வாடிய முகமுங் கோடிய வுடம்புங், கெட்ட வொளியுங் கீழ்க்க ணேக்கமு, மொட்டின ரென்ப வுணர்ந்திசி னோரே."

"வருத்த முற்றே னவிநயம் வகுப்பிற், பொருத்த மில்லாப் புன்க ணுடை மையுஞ், சோர்ந்த யாக்கையுஞ் சோர்ந்த முடியுங், கூர்ந்த வியர்வுங் குறும்பல் லுயாவும், வற்றிய வாயும் வணங்கிய வுறுப்பு, முற்ற தென்ப வுணர்ந்திசி னோரே."

"கண்ணே வுற்றே னவிநயங் காட்டி, னண்ணிய கண்ணீர்த் துளிவிரற் றெறித்தலும், வீழ்ந்த புருவத்தொடு வாடிய முகமும், வெள்ளிடை நோக்கின் விழிதரு மச்சமுந், தெள்ளிதிற் புலவர் தெளிந்தனர் கொளலே."

"தலைநோ வுற்றே னவியஞ் சாற்றி, னிலைமை யின்றித் தலையாட் டிடை மையுங், கோடிய விருக்கையுந் தளர்ந்த வேரொடு, பெருவிர லிடுக்கிய தூதலும் வருந்தி, யொடுங்கிய கண்ணெடு பிறவுந், திருந்து மென்ப செந்நெறிப் புல வர்."

"அழற்றிறம் பட்டோ னவிநய மூரைப்பி, னிழற்றிறம் வேண்டு நெறிமை யின் விருப்பு, மழலும் வெயிலுஞ் சுடரு மஞ்சலு, நிழலு நீருஞ் சேறு முவத் தலும், பனிநீ ருவப்பும் பாதிரித் தொடையலு, நுனிவிர லீர மருநெறி யாக்க லும், புக்க துன்பொடு புலர்ந்த யாக்கையுந், தொக்க தென்ப துணிவறிந் தோரே."

சீத முற்றே னவிநயஞ் செப்பி, னேதிய பருவர லுள்ளமோ டிழத்தலு, மீர மாகிய போர்வை யுறுத்தலு, மார வெயிலுழந் தழலும் வேண்டலு, மூரசியு முரன்று முயிர்த்து முரைத்தலுந், தக்க பிறவுஞ் சாற்றினர் புலவர்."

"வெப்பி னவிநயம் விரிக்குங் காலைத், தப்பில் கடைப்பிடித் தன்மையுந் தாகமு, மெரியி னன்ன வெம்மையோ டியையவும், வெருவரு மியக்கமும் வெம் பிய விழியும், நீருண் வேட்கையு நிரம்பா வலியு, மோருங் காலை யுணர்ந்தனர் கொள்ளே."

"கொஞ்சிய மொழியிற் கூரெயி றமடித்தலும், பஞ்சியின் வாயிற் பனி நுரை கூம்பலுந், தஞ்ச மாந்தர் தம்முக நோக்கியோ, ரின்சொ லியம்புவான் போலியம் பாமையும், நஞ்சுண் டோன்ற னவிநய மென்ப."

"சொல்லிய வன்றியும் வருவன வுளவெனிற், புல்லுவழிச் சேர்த்திப் பொருந்துவழிப் புணர்ப்ப" எனவரும்.

இனி, சொல்வருமாறு:—அது மூன்றுவகைப்படும்; உட்சொல், புறச் சொல், ஆகாயச்சொல்லென.

அவை நெஞ்சொடுகூறல், கேட்போர்க்குரைத்தல், தானே கூறலென்பன; ஏன்னை? "நெஞ்சொடு கூறல் கேட்போர்க் குரைத்தல், தஞ்சம் வரவறிவு தானே கூறலென், றம்மூன் றென்ப செம்மைச் சொல்லே" என்றாராகலின்.

சொல்வகை நான்குவகைப்படும்:—சுண்ணம், சுரிதகம், வண்ணம், வரிதக மென.

சுண்ணம் - நான்கடியான் வருவது.

சுரிதகம் - எட்டடியான் வருவது.

வண்ணம் - நாலுன்கடியான்வருவது.

வரிதகம் - முப்பத்திரண்டடியான் வருவது.

என்னை? "சுண்ண நான்கடி சுரிதக மெட்டடி, வண்ண நாலுன்கு வரிதக மெண்ணுன்கென், றெண்ணிய வடித்தொகை யெய்தவும் பெறுமே" என்று ராகலின்.

வண்ணம் ஒருவகையான் மூன்றுவகைப்படும்:—பெருவண்ணம், இடை வண்ணம், வனப்புவண்ணமென. அவற்றுட் பெருவண்ணம் ஆறுய்வரும். இடைவண்ணம் இருபத்தொன்றுய் வரும். வனப்புவண்ணம் * நாற்பத்தொன் றுய்வரும்.

வரி எட்டுவகைப்படும்:—கண்கூடுவரி, காண்வரி, உள்வரி, புறவரி, இளர் வரி, தேர்ச்சிவரி, காட்சிவரி, எடுத்துக்கோள்வரியென. என்னை? "கண்கூடு காண்வரி யுள்வரி புறவரி, இளர்வரி யைந்தோ டொன்ற வுரைப்பிற், காட்சி தேர்ச்சி யெடுத்துக் கோளென, மாட்சியின் வரூஉ மெண்வகை நெறித்தே" என்றுராகலின். அவற்றின் பகுதியெல்லாம் [1] **கானல்வரியிற் கூறுதும்.**

இவ்வரியென்பதனைப் பல்வரிக்கூத்தென்பாருமுளர்; என்னை? "சிந்துப் பிழுக்கை யுடன்சந்தி யோர்முலே, கொந்தி கவுசி குடப்பிழுக்கை, †கந்தன்பாட் டாலங்காட் டாண்டி ‡பருமண னெல்லிச்சி, சூலந் தருநட்டம் தூண்டிஆடன் சீலமிகு, மாண்டி யமண்புனவே டாளத்தி கோப்பாளி, பாண்டிப் பிழுக்கை யுடன் பாம்பாட்டி - மீண்ட, கடவுட் சடைவீர மாகேசங் காமன், மகிழ்ந்து வாமன ரூபம் - விகடநெடும், பத்திரங் கொற்றி பலகைவாள் பப்பரப்பெண், டத்தசம் பாரந் தகுணிச்சங்-கத்து, மூறையீண் டிருஞ்சித்து முண்டித மன் னப், பறைபண் டிதன்புட்ப பாண - மிறைபரவு, பத்தன் குரவையே பப்பறை காவதன், பித்தலெடு மாணி பெரும்பிழுக்கை - யெத்துறையு, மேத்திவருங் கட்களி யாண்டு விளையாட்டுக், கோத்த பறைக்குடும்பு கோற்கூத்து - மூத்த, கிழவன் கிழவியே கிள்ளுப் பிரூண்டி, யழகுடைய §பண்ணிவிக டாங்கந் - திகழ்செம்பொ, னம்மீனே பந்து கழங்காட லாலிக்கும், வண்ணக் காளி விறற் கொந்தி - யல்லாத, வாய்ந்த தனிவண்டு வாரிச்சி பிச்சியுடன், சாந்த மூடைய சடாதாரி - யேய்ந்தவிடை, தக்கபிடார் நிர்த்தந் தளிப்பாட்டுச் சாதுரங்கந், தொக்க தொழில்புனைந்த ** சோணுண்டு - மிக்க, மலையாளி வேதாளி வாணி குதிரை, சிலையாடு வேடு சிவப்புத் - தலையிற், றிருவிளக்குப் பிச்சி திருக்குன்

---

[1] கானல்வரிக்கு அடியார்க்குநல்லாரியற்றிய உரைகிடைத்திலது; ஆனலும் இந் நூல், அ - ஆம் காதை எச - ஆம் அடிமுதலியவற்றலும் அவற்றின் உரையிற்கண்ட மேற்கோள்களாலும் கண்கூடுவரிமுதலிய எட்டன்பகுதிகள் நன்கு விளங்கும்.

(பி -ம்.) * 'நூற்பத்தொன்பது.' † 'கந்தியின்பாட்டு' ‡ 'படுமனனெல்லி. § 'பள்ளிவிக்கட்டாங்கந்' ** சொன்னுண்டு.

றயிற்பெண், டிருண்முகத்துப் பேதை யிருளன் - பொருமுகத்துப், பல்லாங் குழியே பகடி பகவதியா, ணல்லார்தந் தோள்வீச்சு நற்சாழ - லல்லாத, வுந்தி யவலிடி பூராளி யோகினிச்சி, குந்திவரும் பாரன் குணலைக்கூத் - தந்தியம்போ, தாடுங் களிகொய்யு மூள்ளிப்பூ வையனுக்குப், பாடும்பாட் டாடும் படுபள்ளி - நாடறியுங், கும்பீடு நாட்டங் குணுட்டங் குணுலையே, துஞ்சாத சும்மைப்பூச் சோனக - மஞ்சரி, யேற்ற வுழைமை பறைமைமுத லென்றெண்ணிக், கோத்த வரிக் கூத்தின் குலம்" என்றுராகலின்.

சேதம்:—ஆரியம் தமிழென இருவகைத்து; என்னே? "ஆரியந் தமி ழெனுஞ் சீர்நட மிரண்டினு, மாதிக் கதையை யவற்றிற் கொப்பச், சேதித் திடு வது சேதமென் றுரும்" என்றுராகலின்.

இனி, விலக்குறுப்பென்ற சொற்குப்பொருள் யாதோவெனின்;—தலைவன் செலுத்துகின்ற கதையை விலக்கியும் அக்கதையை நடாத்தியும் முன்புசெய்த கதைக்கே உறுப்பாகுவதென்க.

கசு - டு. பதினேராடலும்.....அறிந்தாங்கென்றது - அல்லியமுதற் கொடுகொட்டி ஈறாய்க்கிடந்தனவும், அவற்றுக்குரிய பாட்டுக்களும், அக்கூத் துக்களின் விகற்பங்களுக்கெல்லாம் அமைந்த வாச்சியக்கூறுகளும், மாட்சி மைப்பட்ட நூல்களில்விதித்த முறைமையாலே விளங்க அறிந்தென்க.

கச. பதினேராடலாவன:—"கடையமயி ராணிமரக் கால்வின்தை கந்தன், குடைகுடிமா லல்லியமல் கும்பஞ்—சுடர்விழியாற், பட்டமதன் பேடுதிருப் பாவையரன் பாண்டரங்கங், கொட்டியிவை காண்பதினேர் கூத்து."

இவைதெய்வவிருத்தி.

இவை இரண்டுகூறுபடும்; என்னே? "அல்லியங் கொட்டி குடைகுடம் பாண்டரங்க, மல்லுட னின்முடு லாறு", "துடிகடையம் பேடு மரக்காலே பாவை, வடிவுடன் வீழ்ந்தாட லிலந்து."

இவை அசுரரைக்கொல்ல அமரராடின.

"அல்லிய மாயவ னுடிற் றதற்குறுப்புச், சொல்லுப வாரு மெனல்."

"கொட்டி கொடுவிடையோ னுடிற் றதற்குறுப், பொட்டிய நான்கா மெனல்."

"அறுமுகத்தோ னுடல் குடைமற் றதற்குப், பெறு முறுப்பு நான்கா மெனல்."

"குடத்தாடல் குன்றெடுத்தோ னுட லதனுக், கடைக்குப வைந்துறுப் பாய்ந்து."

"பாண்டரங்க முக்கண னுடிற் றதற்குறுப், பாய்ந்தன வாரு மெனல்."

"கெடியவ னுடிற்று மல்லாடன் மல்லிற், கொடியா வுறுப்போரைந் தாம்."

* "துடியாடல் வேள்முருக னுட லதனுக், கொடியா வுறுப்போ ரைந் தாம்."

(பி - ம்.) * 'துடியாடனங்கை யெழுவரதாடல்'

"கடைய மயிராணி யாடிற் றதனுக், கடைய வுறுப்புக்க ளாறு."

"காமன தாடல்பே டாட லதற்குறுப்பு, வாய்மையி ஞராயி ஞன்கு."

"மாயவ ளாடன் மரக்கா லதற்குறுப்பு, நாமவகை யிற்சொலுங்கா ஞன்கு."

"பாவை திருமக ளாடிற் றதற்குறுப், போவாம லொன்றுடனே யொன்று,"

"புரமெரித்தல் சூர்மாத் தழிவுபடுத்தல் கஞ்ச, னுரனெரித்தல் வாணனேவா னுய்த்தல் - பெரிய, வரன்முத லாகவே லன்முதன் மாயோ, னமர்முத லாடிய வாறு" எனக்.....கண்டுகொள்க.

பாட்டுமென்றது - அகநாடகங்களுக்கும் புறநாடகங்களுக்கும் உரியவுருக் களுமென்க.

அகநாடகங்களுக்குரிய வுருவாவன:—கந்தமுதலாகப் பிரபந்தவுரு ஈறு யுள்ள இருபத்தெட்டும். இவற்றுள்,—

கந்தமென்றது-அடிவரையறையுடைத்தாய் ஒருதாளத்தாற் புணர்ப்பது....

.....

பிரபந்தமென்றது-அடிவரையறையின்றிப் பலதாளத்தாற் புணர்ப்பது.

புறநாடகங்களுக்குரிய உருவாவன:—தேவபாணிமுதலாக அரங்கொழி செய்யுளீறுகவுள்ள செந்துறைவிகற்பங்க ளெல்லாமென்க.

கொட்டுமென்றது - கூத்துவிகற்பங்களுக்கு அமைந்த வாச்சியக்கூறுகளு மென்றவாறு.

அவை கீதாங்கம், நிருத்தாங்கம், உபயாங்கமென்பன. அவற்றுள்,—

கீதாங்கம் - கீதத்துக்கு வாசிப்பது.

நிருத்தாங்கம் - நிருத்தத்திற்கு வாசிப்பது.

உபயாங்கம் - இரண்டிற்கும் வாசிப்பது.

கரு. ஆங்கு, அசைநிலை.

கசு. ஆடலும் - முற்கூறிய அகக்கூத்தினும் புறக்கூத்தினுமுள்ள ஆடலு மென்றவாறு.

கீற்று கடிசரிமுதலாகிய [1] தேசிக்குரிய கால்களும், சுற்றுதல் எறிதல் உடைத்தல் முதலாகிய [2] வடுகிற்குரிய கால்களும், உடற்றூக்குமுதலாகிய [3] உடலவர்த்தனையும் அகக்கூத்துக்குரியன.

---

[1] தேசிக்குரியகால்கள், உசு:— க. கீற்று, உ. கடிசரி, ஙு. மண்டலம், ச. வர்த்தனை, ஞ. கரணம், சு. ஆவீடம், எ. குஞ்சிப்பு, அ. கட்டிப்புரியம், கூ. களியம், கo. உள்ளாளம், கக. கட்டுதல், கஉ. கம்பித்தல், கங. ஊர்தல், கச. நடுக்கல், கஞ. வாங்குதல், கசு. அப்புதல், கள. அனுக்குதல், கஅ. வாசிப்பு, ககூ. குத்துதல், உo. தெளித்தல், உக. மாறுகால், உஉ. இட்டுப்புகுதல், உங. சுற்றிவாங்குதல், உச. உடற்புரிவு.

[2] வடுகிற்குரியகால்கள், கச:—க. சுற்றுதல், உ. எறிதல், ஙு. உடைத்தல், ச. ஓட்டுதல், ஞ. கட்டுதல், சு. வெட்டுதல், எ. போக்கல், அ. நீக்கல், கூ. முறுக்கல், கo. அனுக்கல், கக. வீசல், கஉ. குடிப்புக்கால், கங. கத்தரிகைக்கால், கச. கூட்டுதல்.

[3] உடலவர்த்தனை, கங:— க. மெய்சாய்த்தல், உ. இடைநெரித்தல், ஙு. சுழித்தல், ச. அணைத்தல், ஞ. தூக்குதல், சு. அசைத்தல், எ. பற்றல், அ. விரித்தல், கூ. குவித்தலெனவிவை, "மெய்சாய் விடைநெரிவு மேற்சுழிவோ டாங்கணைத்தல், கைதூக் கசைத்தல் கலபற்றல் - ஒகைகள், விரித்தல் குவித்தலிவை கைகளமா மென்று, தெரித்தனர் தண்டமிழோர் தேர்ந்து." (சுத்தானந்தப்பிரகாசம்.)

ஈண்டுச் சிங்களமென்று வழங்கிவருகின்ற கூத்துச் சொல்லித்திலராலெனின், "சிங்கள மிருவகை நிலையினு மெய்தும்" என்னுஞ்சூத்திரத்தான் இதற்கு வேறு கால்களின்மையினென்க; [1] பாலைக்கு நிலமில்லாததுபோல.

புறக்கூத்துக்குரிய ஆடல்களாவன:—பெருநடை, சாரியை, பிரமரி இவை முதலாயினவும், பதினோராடலிற் கூத்துக்களுமாம்.

இவ்வகையால் அகக்கூத்துக்களுக்கும், புறக்கூத்துக்களுக்குமுரிய ஆடலு மென்றவாறு.

ஙசு. பாடலுமென்றது - [2] பண்ணன்முதலிய எட்டுவகைப்பட்ட குறிக்கோளும், "இன்பந் தெளிவே நிறையோ டொளியே, வன்சொ லிறுதி மந்த முச்சமென, வந்த வெட்டும் பாடலின் பயனே" என்றுசொல்லப்பட்ட எண்வகைப்பயனுமுடைய பாடலும்.

பாணியுமென்றது - தாளங்களுமென்றவாறு; "கொட்டு மசையுந் தூக்கு மளவு, மொட்டப் புணர்ப்பது பாணி யாகும்" என்றுராகலின்.

இவை மாத்திரைப்பெயர்கள்; கொட்டு அரைமாத்திரை; அதற்குவடிவு, க; அசை ஒருமாத்திரை; அதற்குவடிவு, எ; தூக்கு இரண்டுமாத்திரை; அதற்குவடிவு, உ; அளவு மூன்றுமாத்திரை; அதற்குவடிவு, ஃ எனக்கொள்க.

என்னை? "ககரங் கொட்டே யெகர மசையே, * யுகரந் தூக்கே யளவே யாய்தம்" என்றுராகலின்.

இவற்றின்தொழில் வருமாறு:—கொட்டாவது - அமுக்குதல்; அசையாவது - தாக்கியெழுதல்; தூக்காவது:—தாக்கித் தூக்குதல்; அளவாவது—தாக்கினவோசை நேரே மூன்றுமாத்திரை பெறுமளவும் வருதலெனக்கொள்க.

அரைமாத்திரையுடைய ஏகதாளமுதலாகப் பதினறுமாத்திரையுடைய பார்வதிலோசனமீறுகச் சொன்ன நாற்பத்தொருதாளமும் புறக்கூத்திற்குரிய; ஆறன்மட்டமென்பனவும், எட்டன்மட்டமென்பனவும் தாளவொரியலென்பனவும், தனிநிலையொரியலென்பனவும், ஒன்றன்பாணிமுதலாக எண்கூத்துப் பாணியீறுகக் கிடந்த பதினொருபாணிவிகற்பங்களும், முதனடைவாரமுதலாயினவும் அகக்கூத்திற்குரியவென்க.

ஙசு. தூக்குமென்றது - இத்தாளங்களின் வழிவரும் செந்தூக்கு, மதலைத்தூக்கு, துணிபுத்தூக்கு, கோயிற்றூக்கு, நிவப்புத்தூக்கு, கழாற்றூக்கு, நெடுந்தூக்கெனப்பட்ட ஏழுதூக்குக்களுமென்க; என்னை? "ஒருசீர் செந்தூக் கிருசீர் மதலை, முச்சீர் துணிபு நாற்சீர் கோயி, லைஞ்சீர் நிவப்பா மறுசீர் கழாலே, யெழுசீர் நெடுந்தூக் கென்மனார் புலவர்" என்றுராகலின்.

ஙள. கூடிய நெறியினவென்றது - முற்சொல்லப்பட்ட கூத்தும் பாட்டும் தாளமும் தூக்கும் தம்மிற்கூடின நெறியையுடைய அகக்கூத்தும் புறக்கூத்து முதலாயினவென்க.

---

[1] பாலைக்கு நிலமின்மையை, தொல்காப்பியம், அகத்திணையியல், சூ. உ - உரை யிற்காண்க.

[2] சிலப்பதிகாரம், கானல்வரி. க. (பி - ம்.) * 'ஙகரஞ்'

கொளுத்துங்காலை - ஆட்டுவிக்குமிடத்தென்க.

கஅ. பிண்டியுமென்றது - ஒற்றைக்கையுமென்றவாறு.

முற்கூறிய சொல்விகற்பமாகிய உட்சொல், புறச்சொல் ஆகாயச்சொ லென்னு மூன்றினையும், அவிநயத்தோடே நாட்டிச்செய்யுமிடத்துச் செய்யு முறைமைதான் நான்குவகைப்படும்; கையும் கருத்தும் மிடறும் சரீரமுமென. என்னை? "அவைதாங், கையே கருத்தே மிடறே சரீரமென், றெய்தீமூன் பமைத்த விவையென மொழிப" என்றுராகலின்.

அவற்றுட் கைதான் இரண்டுவகைப்படும்; இணையாவினைக்கையும் இணைக் கையுமென. இவை ஒற்றைக்கை இரட்டைக்கையென்றும் வழங்கப்படும்.

இன்னும் [ஒருசாரார்] ஒற்றைக்கை இரட்டைக்கையென்னு மிவற்றை, இவ்வகையோடும் [1] ஆண்கை [2] பெண்கை [3] அலிக்கை [4] பொதுக்கையென்னும் நான்கினையுங்கூட்டி ஆறென்பாருமுளர். என்னை? "மெய்பெறத் தெரிந்து மேலாராய்ந்த, கைவகை தன்னைக் கருதுங் காலை, யிணையா வினைக்கை யிணைக்கை யென்ன, வணையு மென்ப வறிந்திசி னோரே", ".....மொழிநரு முளரே", "இணையா தியல்வ திணையா வினைக்கை, யிணைந்துடன் வருவ திணைக்கை யாகும்" என்று பிறரும் கூறினராகலின்.

இனி அவற்றுள் இணையாவினைக்கை முப்பத்துமூன்று வகைப்படும்; அவை:- பதாகை-க, திரிபதாகை-உ, கத்தரிகை-ங, தூபம்-ச, அராளம்-ஞ, இளம்பிறை-ண, சுகதுண்டம்-ள, முட்டி-அ, கடகம்-க, சூசி-கo, கமலகோசிகம்-கக, காங்கூலம்-கஉ, கபித்தம்-கங, விற்பிடி-கச, குடங்கை-கஞ, அலாபத்திரம்-கண, பிரமரம்-கள, தாம்பிரசூடம்-கஅ, பிசாசம்-கக, முகுளம்-உo, பிண்டி-உக, தெரிநிலை-உஉ, மெய்ந்நிலை-உங, உன்னம்-உச, மண்டலம்-உஞ, சதுரம்-உண, மான்றலை-உள, சங்கு-உஅ, வண்டு-உக, இலதை-ஙo, கபோதம்-ஙக, மகரமுகம்-ஙஉ, வலம்புரி-ஙங என. என்னை? "இணையா வினைக்கை யியம்புங் காலை, யணைவுறு பதாகை திரிபதா கையே, கத்தரிகை தூப மராள மிளம்பிறை, சுகதுண் டம்மே முட்டி கடகஞ், சூசி பதும கோசிகந் துணிந்த, மாசில் காங் கூலம் வழுவறு கபித்தம், விற்பிடி குடங்கை யலாபத் திரமே, பிரமரந்

---

[1] ஆண்கைமுதலிய நான்கன்வகையினை வரும்வெண்பாக்களால் உணர்க:— க. "முட்டி நிகர மலர்பதுமஞ் சந்தஞ்சம், விட்ட நிலந்தி மிருசூசி - ஒட்டுஞ், சதுரம் பதாகந் தருதிரிப தாக, மதிகமுறு மாண்கைநவ மாம்."

[2] "கடகஞ் சுகதுண்டங் காங்கூல மன்னு, மடைவாம் பிறைக்கை யராளந்- தடமருவு, மன்னபக்கந் தாம்பிர சூடமொடு மான்றலையே, யின்னவெட்டும் பெண் ணுரு மே."

[3] "சரிப்பதிரம் வண்டு தனிமுகுளங் கத்தரிகை, விற்பனஞ்சேர் கோசங்க வித்த மூட - னறப்புதுமே, யாருமவிக் கைக ளாறென் றுரைப்பரே, பாகனைய சொல்லாய் பரிந்து."

[4] "உன்னமா மண்டல.....வலம்புரியே, மெய்ந்நிலையாஞ் சங்கிலதை மேம்பட வே - மன்னிவரு, தூமொழி பிண்டியாய்ச் சொன்னார் பொதுக்கையெனத், தாமமுறுங் சூழலாய் தான்" இவை சுத்தானந்தப்பிரகாசத்திலுள்ளன.

தன்ஞெடி தாம்பிர சூடம், பிசாச முசூளம் பிண்டி தெரிநிலை, பேசிய மெய்ந் நிலை யுன்ன மண்டலஞ், சதுர மான்றலை சங்கே வண்டே, யதிர்வி லிலதை கபோத மகாமுகம், வலம்புரி தன்ஞெடி முப்பத்து மூன்றென், றிலங்குமொழிப் புலவ ரிசைத்தன ரென்ப" என்ஞராகலின்.

இவற்றுள், பிண்டியென்றது ஒன்ஞய் ஆசூபெயரான் ஒற்றைக்கைக்குப் பெயராயிற்று.

பிணையல் - இணைதலாதலால் இணைக்கையாயிற்று. ஆதலாற் பிண்டியும் பிணையலுமென்ஞரெனக்கொள்க.

இவற்றுட் பிண்டிக்குக்காட்டிய முப்பத்துமூன்று வகையினுள்,—

பதாகைக்கையாவது - நான்குவிரலும் தம்முள் ஒட்டிநிமிரப் பெருவிரல் குஞ்சித்துநிற்பது; என்னை? "பதாகை யென்பது பகருங் காலைப், பெருவிரல் குஞ்சித் தலாவிர லுன்ஞ, மருவி நிமிரு மரபிற் றென்ப" என்ஞராகலின்.

இக்கைகளின் தொழில் முதலியவிரிப்பின் உரைபெருகுமாதலின், விடுக்கப் பட்டன; விரிந்தநூல்களிற் கண்டுகொள்க. (க)

திரிபதாகையாவது - பதாகைக்கையின் [1] அணிவிரல் மூடக்ஞவது; என்னை? "திரிப தாகை தெரியுங் காலை, யறைப தாகையி னணிவிரன் மூடக்கினஃ், தாமென மொழிப வறிந்திசி னோரே" என்ஞராகலின். (உ)

கத்தரிகையாவது - திரிபதாகையின் மூடங்கிய அணிவிரற்புறத்தாகிய நடுவிரலைச் சுட்டுவிரலோடு பொருந்தநிமிர்ப்பது; என்னை? "கத்தரி கையே காண்டக விரிப்பி, னத்திரி பதாகையி னணியின் புறத்தைச், சுட்டக மொட்ட விட்டுநிமிர்ப் பதுவே" என்ஞராகலின். (ஙூ)

தூபமென்றது - நிமிர்ந்த நடுவிரலும் சுட்டுவிரலும் பாதிப்படவளையநிற் பது; என்னை? "தூப மென்பது துணியுங் காலை, வளங்குகத் தரிகை விரலகம் வளைந்து, தளங்கு மென்ப துணிபதிந் தோரே" என்ஞராகலின். (ச)

அராளமாவது - பெருவிரல் குஞ்சித்துச் சுட்டுவிரல் மூடக்கி ஒழிந்த விரன்மூன்றும் நிமிர்ந்துவளைவது; என்னை? "அராள மாவ தறிவரக் கிளப் பிற், பெருவிரல் குஞ்சித்துச் சுட்டுவிரன் மூடக்கி, விரல்கண் மூன்று நிமிர்த் தகம் வளைத்தற், குரிய தென்ப வுணர்ந்திசி னோரே" என்ஞராகலின். (ஞ)

இளம்பிறை: "சுட்டும் [2] பேடி [3] மகாமிகை சிறுவிர, லொட்டி யகம்வளைய வொசித்த பெருவிரல், விட்டு நீங்கும் விதியிற் றென்ப." (சு)

சுகதுண்டம்:—"சுகதுண்ட மென்பது தொழில்பெறக் கிளப்பிற், சுட்டு விரலும் பெருவிர லூனு, மொட்டி யுகிர்றுனை கௌவி முன்வளைக், தகாமிகை முடங்கப் பேட்டொடு சிறுவிர, லுன்மிக நிமிர்ந்த தகுதித் தென்ப." (எ)

---

[1] அணிவிரல் - பவித்திரவிரல்.

[2] பேடி - நடுவிரல்; இதுபேடியெனவும் வழங்கப்படும்.

[3] அகாமிகை - பவித்திரவிரல்.

முட்டி:—"முட்டி யென்பது மொழியுங் காலைச், சுட்டு நடுவிர லகாமிகை சிறுவிர, லிறுக முடக்கி யிவற்றின் மிசைப் பெருவிரன், முறுகப் பிடித்த முறைமைத் தென்ப." (அ)

கடகம்:—"கடக முகமே கருதுங் காலைப், பெருவிர னுனியுஞ் சுட்டுவிர னுனியு, மருவ வளைந்தவ் வுகிர்நுனி கௌவி, யொழிந்த மூன்றும் வழிவழி நிமிர, மொழிந்தன ரென்ப முடிபறிந் தோரே." (க)

சூசி:—"சூசி யென்பது தூணியுங் காலை, நடுவிரல் பெருவிர லென்றிவை தம்மி, லடைவுட னூன்றிச் சுட்டுவிர னிமிர, வொழிந்தன வழிவழி முடங்கி நிற்ப, மொழிந்தனர் மாதோ முடிபறிந் தோரே." (கo)

பதுமகோசிகம்:—"பதும கோசிகம் பகருங் காலை, யொப்பக் கைவளைத் தைந்து விரலு, மெய்ப்பட வகன்ற விதியிற் முகும்." (கக)

காங்கூலமாவது - மூன்றுவகைப்படும்; குவிகாங்கூலம், முகிழ்காங்கூலம், விரிகாங்கூலமென. என்னை? [1] "காங்கூ லம்மே கருதுங் காலைச், சுட்டும் பேடும் பெருவிரன் மூன்று, மொட்டிமூன் குவிய வகாமிகை முடங்கிச், சிறு விர னிமிர்ந்த செய்கைத் தாகும்", "முகிழ்காங் கூல முந்துற மொழிந்த, குவி காங் கூலங் குவிவிழந் ததுவே", "மலர்காங் கூல மதுமலர்ந் ததுவே." (கஉ)

கபித்தமாவது - சுட்டுவிரனுனியும் பெருவிரனுனியும் உகிர்நுனி கௌவிப் பிடித்து ஒழிந்த மூன்றுவிரலும் மெல்லெனப் பிடிப்பது; என்னை? "கபித்த மென்பது காணுங் காலைச், சுட்டுப் பெருவிர லொட்டிநுனி கௌவி, யல்ல மூன்று மெல்லப்பிடிப் பதுவே" என்றாகலின். (கங)

விற்பிடி:—"விற்பிடி யென்பது விரிக்குங் காலைச், சுட்டொடு பேடி யகா மிகை சிறுவிர, லொட்டி யகப்பால் வளையப் பெருவிரல், விட்டு நிமிரும் விதி யிற் முகும்." இதற்குச் சிகரமென்றும் பெயர். (கச)

குடங்கையாவது - எல்லாவிரலுங்கூட்டி உட்குழிப்பது; என்னை? "குடங்கை யென்பது கூறுங் காலை, யுடங்குவிரற் கூட்டி யுட்குழிப் பதுவே" என்றாகலின். (கஙி)

அலாபத்திரமாவது - சிறுவிரன்முதலாகியவைந்தும் வளைந்துமறிவது; என்னை? "அலாபத் திரமே யாயுங் காலைப், புரைமையின் மிகுத்த சிறுவிரன் முதலா, வருமுறை யைந்தும் வளைந்துமறி வதுவே" என்றாகலின். (கசு)

பிரமரமாவது - அநாமிகைவிரலும் நடுவிரலும் தம்மிற்பொருந்தி வலஞ் சாயப் பெருவிரல் நடுவிரலினுள்ளேசேரச் சுட்டுவிரலும் சிறுவிரலும் பின்பே வளைந்துநிற்பது; என்னை? "பிரமர மென்பது பேணுங் காலை, யநாமிகை நடு வீர லறவுறப் பொருந்திக், தாம்வலஞ் சாயத் தகைசால் பெருவிர, லொட்டிய நடுவுட் சேரச் சிறுவிரல், சுட்டு வளைந்துபின் முேன்றிய நிலையே" என்றாரா கலின். (கஎ)

---

[1] காங்கூலமென்றது குவிகாங்கூலத்தை.

தாம்பிரசூடமாவது - நடுவிரலும் சுட்டுவிரலும் பெருவிரலும் தம்மில் நுனியொத்துக் கூடி வளைந்து சிறுவிரலும் அணிவிரலும் முடங்கிநிமிர்வது; என்னை? "தாம்பிர சூடமே சாற்றுங் காலைப், பேடே சுட்டுப் பெருவிர னுனி யொத்துக், கூடி வளைந்து சிறுவிர லணிவிர, லுடனதின் முடங்கி நிமிரநிற் பதுவே" என்றுராகலின். (கஅ)

பிசாசமாவது - பெருவிரலும் சுட்டுவிரலுமன்றி ஒழிந்த மூன்றுவிரலும் தம்மிற்பொலிந்துநிற்பதெனக்கொள்க.

அப்பிசாசந்தான் மூன்றுவகைப்படும்; அகநிலைப்பசாசம், முகநிலைப் பசாசம், உகிர்நிலைப்பசாசமென. அவற்றுள்,

அகநிலைப்பசாசம் சுட்டுவிரல்நுனியிற் பெருவிரலகப்படுவது.

முகநிலைப்பசாசம் அவ்விரன்முகங்கூடி உகிர்விட்டுநிற்பது.

உகிர்நிலைப்பசாசம் சுட்டுவிரலும் பெருவிரலும் உகிர்நுனி கௌவிநிற்பது.

என்னை? "பசாச மென்பது பாற்படக் கிளப்பி, னகநிலை முகநிலை யுகிர் நிலை யென்னத்,தொகநிலை பெற்ற மூன்றுமென மொழிப", "அவைதாஞ், சுட்டு விரனுனியிற் பெருவிர லகப்பட, வொட்டி வளைத்த தகநிலை முகநிலை, யவ்விர னுனிகள் கௌவிப் பிடித்தல், செவ்வி தாகுஞ் சிறந்த வுகிர்நிலை, யுகிர்நுனை கௌவிய தெழிந்த மூன்றுந், தகைமையி னிமிர்த்தலம் மூன்றற்குந் தகுமே" என்றுராகலின். (கக)

முகுளமாவது - ஐந்துவிரலும் தம்மில் தலைகுவிந்து உயர்ந்துநிற்பது; என்னை? "முகுள மென்பது மொழியுங் காலை, யைந்து விரலும் தலைகுவிந் தேற்ப, வந்து நிகழு மாட்சித் தாகும்" என்றுராகலின். (உ0)

பிண்டியென்றது - சுட்டுவிரல் பேடிவிரல் அநாமிகை சிறுவிரல் ஒட்டி நெகிழமுடங்க அவற்றின்மேலே குறுக்கிடப் பெருவிரல் கட்டி விலங்கி விரல்வழி முறையொற்றல்; என்னை? "பிண்டி யென்பது பேசுங் காலைச், சுட்டுப் பேடி யநாமிகை சிறுவிர, லொட்டி நெகிழ முடங்க வவற்றின்மிசை, விலங்குறப் பெருவிரல் விட்டுங் கட்டியு, மிலங்குவிரல் வழிமுறை யொற்றலு மியல்பே" என்றுராகலின். (உக)

தெரிநிலையாவது - எல்லாவிரலும் விரிந்து குஞ்சித்துநிற்பது; என்னை? "தெரிநிலை யென்பது செப்புங் காலை, யைந்து விரலு மலர்ந்துகுஞ் சித்த, கைவகை யென்ப கற்றறிந் தோரே" என்றுராகலின். (உஉ)

மெய்ந்நிலையாவது - சிறுவிரலும் அணிவிரலும் நடுவிரலும் சுட்டுவிரலும் விட்டுநிமிரச் சுட்டுவிரன்மேற் பெருவிரல் சேரவைப்பது; என்னை? "மெய்ந் நிலை யென்பது விளம்புங் காலைச், சிறுவிர லநாமிகை பேடொடு சுட்டிவை, யுறுத லின்றி நிமிரச் சுட்டின்மிசைப், பெருவிரல் சேரும் பெற்றித் தென்ப" என்றுராகலின். (உங)

உன்னமாவது - சிறுவிரலும் பெருவிரலும் தம்முட்கூட ஒழிந்த மூன்று விரலும் விட்டு நிமிர்வது; என்னை? "உன்ன நிலையே யுணருங் காலைப், பெரு

விரல் சிறுவிர லென்றிவை யீனைய, வருமுறை மூன்று மலர்ந்துநிமிர் வதுவே" என்றுராகலின். (உச)

மண்டலம்:—"மண்டல மென்பது மாசறக் கிளப்பிற், பேடு தூனியும் பெருவிர னூனியுங், கூடி வளைந்ததம் முகிர்தூனை கௌவி, யொழிந்த மூன்று மொக்க வளைவதென, மொழிந்தன ரென்ப முழுதுணர்ந் தோரே", என்றுராக லின். (உடு)

சதுரமாவது - சுட்டுவிரலும் நடுவிரலும் அணிவிரலும் தம்மூட் சேர்ந்து இறைஞ்சப் பெருவிரல் அகம்வரைவைத்துச் சிறுவிரல் பின்பே நிமிர்ந்துநிற்பது; என்னை? "சதுர மென்பது சாற்றுங் காலை, மருவிய மூன்று நிமிர்ந்தகம் வளை யப், பெருவிர லகமுறப் பொற்பச் சேர்த்திச், சிறுவிரல் பின்பே நிமிர்ந்த செவ் வியி, னிறுமுறைத் தென்ப வியல்புணர்ந் தோரே" என்றுராகலின். (உசு)

மான்றலையாவது - பெருவிரலும் சிறுவிரலுமொழிந்த மூன்றும் தம்மில் ஒத்துஒன்றி மூன்னே இறைஞ்சிநிற்பது; என்னை? "மான்றலை யென்பது வருக்குங் காலை, மூன்றிடை விரலு நிமிர்ந்தக மிறைஞ்சிப், பெருவிரல் சிறுவிர லென்றிவை நிமிர்ந்து, வருவ தென்ப வழக்கறிந் தோரே" என்றுராகலின். (உஎ)

சங்காவது - பெருவிரல் நிமிர ஒழிந்த நான்குவிரலும் வளைந்துநிற்பது; என்னை? "சங்கெனப் படுவது சாற்றுங் காலைச், சிறுவிரன் முதலாச் செறிவிர னுன்கும், பெறுமுறை வளையப் பெருவிர னிமிர்ந்தாங், கிறுமுறைத் தென்ப வியல்புணர்ந் தோரே" என்றுராகலின். (உஅ)

வண்டாவது - பெருவிரலும் அணிவிரலும் வளைந்து தூனியொன்றிச் சிறு விரல் நிமிர்ந்து சுட்டுவிரலும் நடுவிரலும் நெகிழ வளைந்துநிற்பது; என்னை? "வண்டென் பதுவே வருக்குங் காலை, யநாமிகை பெருவிர னனிமிக வளைந்து, தாதூனி யொன்றித் தகைசால் சிறுவிரல், வாலிதி னிமிர மற்றைய வளைந்த, பாலினை தென்ப பயன்றெரிந் தோரே" என்றுராகலின். (உக)

இலதையாவது - நடுவிரலும் சுட்டுவிரலும் கூடிநிமிரப் பெருவிரல் அவற் றின்கீழ்வரைசேர ஒழிந்த இரண்டுவிரலும் வழிமுறை பின்னே நிமிர்ந்து நிற்பது; என்னை? "இலதை யென்ப தியம்புங் காலைப், பேடியுஞ் சுட்டும் பிணைந்துட னிமிர்ந்து, கூடிய பெருவிரல் கீழ்வரை குறுகக், கடையிரு விரலும் பின்னர் நிமிர்ந்த, நடையின தென்ப நன்னெறிப் புலவர்" என்றுராகலின். (ஈ0)

கபோதமென்றது - பதாகைக்கையிற் பெருவிரல் விட்டுநிமிர்வது; என்னை? "காணுங் காலைக் கபோத மென்பது, பேணிய பதாகையிற் பெருவிர னிமிரும்" என்றுராகலின். (ஈக)

மகரமுகமாவது - பெருவிரலும் சுட்டுவிரலும் நிமிர்ந்துகூட ஒழிந்த மூன்றுவிரலும் தம்முளொன்றி அதற்குவேறுநிற்பது; என்னை? "மகரமுக மென்பது வருக்குங் காலைச், சுட்டொடு பெருவிரல் கூட வொழிந்தவை, யொட்டி நிமிர்ந்தாங் கொன்று வாகும்" என்றுராகலின். (ஈஉ)

வலம்புரியாவது - சிறுவிரலும் பெருவிரலுநிமிர்ந்து சுட்டுவிரலின் அகம் வளைந்து ஒழிந்தவிரண்டும் நிமிர்ந்து இறைஞ்சிநிற்பது; என்னை? "வலம்புரிக்

நின்றியங்கு மெய்யெழுத்தாற் - றுய்ய, வொருநாடி நின்றியங்கி யுந்திமே லோங்கி, வருமா லெழுத்துடம்பின் வந்து.”

கையே வாய்ந்த கனிட்ட, னலந்திகழ் பெருவிர னயமுற நிமிர்ந்து, சுட்டுவிரன் மூடங்கிச் சிறுவிர னடுவிரல், விட்டுநிமிர்ந் திறைஞ்சும் விதியிற்றென் றது, கூறுவர் தொன்னூற் குறிப்புணர்ந் தோரே” என்றுராகலின். (கங)

இச்சொல்லப்பட்ட முப்பத்துமூன்றும் பிண்டிக்கையெனக்கொள்க.

* இணையாவினைக்கையெனினும் ஒற்றைக்கையெனினும் பிண்டிக்கையெனினுமொக்கும்.

இத்தன்மையவாகிய பிண்டிக்கையுமென்க.

கஅ. பிணையலுமென்றது - இரட்டைக்கையுமென்றவாறு.

அஃதாவது, இணைக்கை. அது பதினேந்துவகைப்படும்.

அவையாவன :—அஞ்சலி, புட்பாஞ்சலி, பதுமாஞ்சலி, கபோதம், கற்கடகம், சுவத்திகம், கடகாவருத்தம், நிடதம், தோரம், உற்சங்கம், புட்பபுடம், மகரம், சயந்தம், அபயவத்தம், வருத்தமானமென்றிவை; என்னை? “எஞ்சுதலில்லா - வினைக்கை யியம்பி, லஞ்சலி தன்னெடு புட்பாஞ் சலியே, பதுமாஞ் சலியே கபோதங் கற்கடகம், நலமாஞ் சுவத்திகங் கடகா வருத்த, நிடதந் தோர மூற் சங்க மேம்பட, வுறுபுட் படுபட மகரஞ் சயந்த, மந்தமில் காட்சி யபய வத்த,மெண்ணிய வருத்த மானந் தன்னெடு, பண்ணுங் காலைப் பதினேந் தென்ப” என்றுராகலின். அவற்றுள்,—

அஞ்சலியென்றது - இரண்டுகையும் பதாகையாய் அகமொன்றுவது; என்னை? “அஞ்சலி யென்ப தறிவுறக் கிளப்பி, னெஞ்ச லின்றி யிருகையும் பதாகையாய், வந்தகம் பொருந்து மாட்சித் தென்றன, ரந்தமில் காட்சி யறிந்திசி னோரே” (க)

புட்பாஞ்சலியாவது - இரண்டுகையும் குடங்கையாய்வந்து ஒன்றுவது; என்னை? “புட்பாஞ் சலியே பொருந்தவிரு குடங்கையுங், கட்டி நிற்குங் காட்சிய தென்ப” என்றுராகலின். (உ)

பதுமாஞ்சலியாவது - இருகையும் பதுமகோசிகமாகக் கூட்டுவது; என்னை? “பதுமாஞ் சலியே பதும கோசிக, மெனவிரு கையு மியைந்துநிற் பதுவே” என்றுராகலின். (ங)

கபோதமென்றது - இரண்டுகையும் கபோதமாகக்கூட்டுவது; என்னை? “கருதுங் காலைக் கபோத விணைக்கை, யிருகையுங் கபோத மிசைந்துநிற் பதுவே” என்றுராகலின். (ச)

கற்கடகமென்றது-தெரிநிலைக்கையிரண்டும் அங்குலியிணைந்து வருவதெனக்கொள்க; என்னை? “கருதுங் காலைக் கற்கட கம்மே, தெரிநிலை யங்குலி யிருகையும் பிணையும்” என்றுராகலின். (ஞ)

(பி - ம்.) * ‘இணையாவினைக்கை’

சுவத்திகமென்றது - மணிக்கட்டிற்பொருந்திய பதாகை யிரண்டையும் மணிக்கட்டிலேற்றிவைப்பது; என்னை? "சுவத்திக மென்பது சொல்லுங் காலை, மணிக்கட் டமைந்த பதாகை யிரண்டையு, மணிக்கட் டேற்றி வைப்ப தாகும்" என்றுராகலின். (சு)

கடகாவருத்தமாவது - இரண்டுகையும் கடகமாய் மணிக்கட்டுக்கு ஏற இயைந்து நிற்பது; என்னை? "கருதிய கடகா வருத்தக் கையே, யிருகையுங் கடக மணிக்கட் டியைவது" என்றுராகலின். (எ)

நிடதமாவது - முட்டியாக இரண்டுகையும் சமஞ்செய்வது; என்னை? "நிடத மென்பது நெறிப்படக் கிளப்பின், முட்டி யிரண்டுகை யுஞ்சம மாகக், கட்டி நிற்குங் காட்சித் தென்ப" என்றுராகலின். (அ)

[1] தோரமாவது - இரண்டுகையும் பதாகையாக்கி அகம்புறமொன்றி முன் தாழ்ந்துநிற்பது; என்னை? "தோர மென்பது துணியுங் காலை, யிருகையும் பதாகை யகம்புற மொன்ற, மருவிமுன் முழும் வழக்கிற் றென்ப" என்றுராகலின். (கூ)

உற்சங்கமாவது - ஒருகை பிறைக்கையாகக்கொண்டு ஒருகை அராளமாக்கி இரண்டுகையும் மணிக்கட்டிலேற்றிவைப்பது; என்னை? "உற்சங்க மென்ப துணருங் காலை, யொருகை பிறைக்கை யொருகை யராளந், தெரிய மணிக்கட்டி லேற்றிவைப் பதுவே" என்றுராகலின். (கo)

புட்பபுடமாவது - குடங்கையிரண்டும் தம்மிற் பக்கங் காட்டி நிற்பது; என்னை? "புட்பபுட மென்பது புகலுங் காலை, யொத்த விரண்டு குடங்கையு மியைந்து, பக்கங் காட்டும் பான்மைத் தென்ப" என்றுராகலின். (கக)

மகரமென்றது - கபோதமிரண்டுகையும் அகம்புறமொன்றவைப்பது; என்னை? "மகர மென்பது வாய்மையி னுரைப்பிற், கபோத மிரண்டு கையு மகம்புற, மொன்ற வைப்பதென் றுரைத்தனர் புலவர்" என்றுராகலின். உச் சித்தமென்பதும் இதன தபெயர். (கஉ)

சயந்தமென்றது..... (கங)

அபயவத்தமாவது—இருகையும் சுகதுண்டமாக நெஞ்சுறநோக்கி நெகிழ் ந்துநிற்பது; என்னை? "அபயவத் தம்மே யறிவுறக் கிளப்பின், வஞ்சமில் சுக துண்ட மிருகையு மாட்சியி, னெஞ்சுற நோக்கி நெகிழ்ந்துநிற் பதுவே" என்றுராகலின். (கச)

வருத்தமானமாவது - முகுளக்கையிற் கபோதக்கையை எதிரிட்டுச் சேர்ப் பது; என்னை? "வருத்த மானம் வகுக்குங் காலை, முகுளக் கையிற் கபோதக் கையை, நிகழச் சேர்த்து நெறியிற் றென்ப" என்றுராகலின். (கரு)

இச்சொல்லப்பட்ட பதினைந்தும் பிணையற்கையெனக்கொள்க.
இணைக்கையெனினும் இரட்டைக்கையெனினும் பிணையலெனினுமொக்கும்.
இத்தன்மையுவாகிய பிணையலுமென்க.

---

[1] இது உடோளமென்னுங் கூறப்படும்.

கஅ. எழிற்கையுந் தொழிற்கையுமென்றது: எழிற்கை - அழகுபெறக்காட்டுங்கை. தொழிற்கை - தொழில்பெறக்காட்டுங்கை.

உம்மையாற் பொருட்கையும் கூறப்பட்டது.

பொருட்கை - பொருளுறக்காட்டுங்கை; என்னை? "அவைதா, மெழிற்கை யழகே தொழிற்கை தொழிலே, பொருட்கை கவியிற் பொருளா கும்மே" என்றாகலின்.

ககக. தொண்ட வகையறிந்து: கொண்டவகையறிதலாவது பிண்டியும் பிணையலும் புறக்கூத்துக்குரியகையென்றும், எழிற்கையும் தொழிற்கையும் அகக்கூத்துக்குரியகையென்றுமறிதல்.

கூத்துவருகாலையென்றது - கூத்துக்களின் வரவு நிகழுமிடத்தென்க.

உ0 - உக. கூடை செய்தகை.....கோதலுமென்றது - அகக்கூத்து நிகழுமிடத்து ஒற்றையிற்செய்த கைத்தொழில் இரட்டையிற் புகாமலும் இரட்டையிற்செய்த கைத்தொழில் ஒற்றையிற்புகாமலுங் கோதல். இன்னும் தேசியிற் கைத்தொழில் மார்க்கத்துப் புகாமலும் மார்க்கத்துக்கைத்தொழில் தேசியிற்புகாமலும் கோதலென்றுமாம்; ஒற்றையும் இரட்டையும் தேசிக்கூறுகலானும் இரட்டையும் இரட்டைக்கிரட்டையும் வடுகிற் கூறுகலானுமென்க.

உஉ - ஙூ. பிண்டி செய்தகை.....கோதலுமென்றது புறக்கூத்தினிடத்துப், பிண்டியென்றது - பொருட்கையென்றும், பிணையலென்றது - தொழிற்கையென்றுமாம்.

இதன்கருத்து: ஆடல் நிகழுமிடத்து அவிநயநிகழாமலும் அவிநயநிகழுமிடத்து ஆடனிகழாமலுங்கோதல்.

உச. குரவையும்.....செலுத்தியென்றது - குரவைக்கூத்திற்குரிய கால்களும் வரிக்கூத்திற்குரிய கால்களும் தம்மில் விரவாதபடியே கூத்தை நடத்தியென்க.

[1] "குரவை.....இயல்பிற் றென்ப."

"வரியெனப் படுவது வகுக்குங் காலைப், பிறந்த நிலனுஞ் சிறந்த தொழிலு, மறியக்கூறி யாற்றுழி வழங்கல்."

உடு. ஆடற்கு.....தன்னெஞ்சு மென்றது - இக்கூத்துக்களை இப்படியால் அவற்றுடனேபொருந்த ஆடவும் ஆடுவிக்கவும் வல்ல ஆடலாசிரியனெஞ்சு மென்றவாறு.

அறிந்து புணர்த்து விளங்கவறிந்து அறிந்து செலுத்தி அமைந்த ஆசான்என்க.

[இசையாசிரியன் அமைதி.]

உசு-ஙசு. யாழுங்குழலுஞ்.....இசையோன் முனும்

[1] இப்புத்தகம் உள் சுo ஆம்பக்கங்களிற் பார்க்க.

(இ - ள்.) யாழ்ப்பாடலும் வங்கியப்பாடலும் இருவகைத்தாளக் கூறுபாடுகளும் மிடற்றுப்பாடலும் மந்தமாகியசுரத்தினையுடைய தண்ணுமையும் அகக்கூத்துப் புறக்கூத்துப் பதினோராடலென்னுங் கூத்துக்களும் வல்லனுய் இவற்றுடனே சேரச்செய்த உருக்களை இசைகொள்ளும்படியும் இரதம் பொருந்தும்படியும் புணர்க்கவும் வல்லனுய் இருவகைப்பட்ட பாடல்களுக்கும் பொருளான இயக்கம் நான்கினையுமமைத்துத் தேசாந்தரங்களிற் பாடைகளையுமறிந்து அந்தப்பாடைகள் இசைபூணும்படியையுமறிந்து இயற்புலவனினையும் நாடகப்புலவனிவரவுகளும் இவற்றுக்கு அடைத்த பாடல்களும் தம்மிற்சந்திப்பிக்குமிடத்துக் குற்றந்தீர்ந்த நூல்வழக்காலே வகுக்கவும் விரிக்கவும் வல்லனுயுள்ள இசைப்புலவனுமென்றவாறு.

இது பொழிப்புரை.

உசு. யாழுமென்றது - யாழ்ப்பாடலுமென்றவாறு.

யாழ் நால்வகைப்படும்; அவை:—பேரியாழ், மகரயாழ், சகோடயாழ், செங்கோட்டியாழென்பன. இவை நாலும் பெரும்பான்மைய; சிறுபான்மையான் வருவன பிறவுமுள, என்னை? "பேரியாழ் பின்னு மகரஞ் சகோடமுடன், சீர்பொலியுஞ் செங்கோடி செப்பினர் - தார்பொலிந்து, மன்னுந் திருமார்ப வண்கூடற் கோமானே, பின்னு முளவே பிற" என்றுராகலின்.

இந்நால்வகை யாழிற்கும் நரம்புகொள்ளுமிடத்துப் பேரியாழிற்கு இருபத்தொன்றும், மகரயாழிற்குப் பத்தொன்பதும், சகோடயாழிற்குப் பதினைஞ்ஞும், செங்கோட்டியாழிற்கு ஏழுங்கொள்ளப்படும்; என்னை? "ஒன்று மிருபது * மொன்பதும் பத்துடனே, நின்றபதி ஞன்கும் பின்னேழுங் - குன்றுத, நால்வகை யாழிற்கு நன்னரம்பு சொன்முறையே, மேல்வகை நூலோர் விதி" என்றுராகலின்.

இனி இவ்வியாழென்னும் ஒன்றிற்குஅமைந்த பலவுறுப்பாகிய "கோட்டினதமைதியுங் கொளுவிய வாணியு, மாட்டிய பத்தரின் வகையு மாடகமும், தந்திரி யமைதியுஞ் சாற்றிய பிறவு, முன்றிய நூலின் முடிந்த வகையே" வகுக்கப்பட்டனவெல்லாம் காலல்வரியில், "குற்றமீங்கிய யாழ்" என்பதன்கண் விரியக்கூறுதும்.

உசு. குழலுமென்றது - வங்கியப்பாடலுமென்றவாறு.

குழல் - வங்கியம்; அதற்கு மூங்கில், சந்தனம், வெண்கலம், செங்காலி, கருங்காலியென ஐந்துமாம்; என்னை? "ஓங்கிய மூங்கி லுயர்சந்து வெண்கல மே, பாங்குறுசெங் காலி கருங்காலி - பூங்குழலாய், கண்ணு னுவந்த கழைக்கிவைக ளாமென்றுர், பண்ணமைந்த நூல்வல்லோர் பார்த்து" என்றுராகலின்.

இவற்றுள் மூங்கிலிற்செய்வது உத்தமம்; வெண்கலம் மத்திமம்; ஏனைய அதமமாம். மூங்கில் பொழுதுசெய்யும்; வெண்கலம் வலிது; மரம் எப்பொழுதும் ஒத்துநிற்கும்.

(பி - ம்.) *'ஓரேழ்மேற்பத்துடனே நின்றபதினேழு நேரிங்காம்'

இக்காலத்துக் கருங்காலி செங்காலி சந்தனம் இவற்றுற் கொள்ளப்படும்; கருங்காலிவேண்டுமென்பது பெருவழக்கு. இவை கொள்ளுங்கால் உயர்ந்த ஒத்த நிலத்திற் பெருகவளர்ந்து காலுகாற்றுமயங்கின் காதமில்லையாமாதலான் மயங்காநிலத்தின்கண் இளமையும் நெடும்பிராயமுமின்றி ஒருபுருடாயுப்புக்க பெரிய மரத்தைவெட்டி ஒருபுருடாகாரமாகச்செய்து அதனை நிழலிலே ஆறஇட்டு வைத்துத் திருகுதல் பிளத்தல் போழ்ந்துபடுதலின்மையையறிந்து ஓர் யாண்டு சென்றபின் இலக்கணவகையான் வங்கியஞ்செய்யப்படும்; என்னை? "உயர்ந்த * சமதலத் தோங்கிக்கா ணுன்கின், மயங்காமை நின்ற மரத்தின் - மயங்காமே, முற்றிய மாமரந் தன்னை முதறடிந்து, குற்றமிலோ ராண்டிற் கொளல்" என்றுராகலின்.

இதன் பிண்டியிலக்கணம்:—நீளம் இருபதுவிரல்; சுற்றளவு காலரைவில். இது தூலயிடுமிடத்து நெல்லரிசியில் ஒருபாதி மரனீறுத்திக்கடைந்து வெண்கலத்தாலே அணைசுபண்ணி இடமுகத்தையடைத்து வலமுகம் வெளியாகவிடப்படும்; என்னை? "சொல்லு மிதற்களவு நாலைந்தாஞ் சுற்றளவு, நல்விரல்க ணுலரையா நன்னுதலாய் - மெல்லத், தூலயளவு நெல்லரிசி † தூம்பிட மாய, வூல வலமேல் வங்கிய மென்" என்றுராகலின்.

இனித் தூலயளவிலக்கணம்:—அளவு இருபதுவிரல். இதிலே தூம்புமுகத்தின் இரண்டுநீக்கி முதல்வாய்விட்டு இம்முதல்வாய்க்கு ஏழங்குலம்விட்டு வூல வாயினுமிரண்டுநீக்கி நடுவினின்ற ஒன்பதுவிரலினும் எட்டுத்தூலயிடப்படும். இவற்றுள் ஒன்று முத்திரையென்றுகழித்துநீக்கி நின்ற எழினும் எழுவிரல் வைத்து ஊதப்படும். தூலகளின் இடைப்பரப்பு ஒருவிரலகலம் கொள்ளப்படும்; என்னை? "இருவிரல்க ணீக்கி முதல்வாயேழ் நீக்கி, மருவு தூலயெட்டு மன்னும் - பெருவிரல்க, ணுலஞ்சு கொள்க பரப்பென்ப நன்னுதலாய், கோலஞ் செய் வங்கியத்தின் கூறு" என்றுராகலின்.

இவ்வங்கியம் ஊதுமிடத்து வூலவாய்சேர்ந்ததூலயை முத்திரையென்று நீக்கி முன்னின்ற எழினையும் எழுவிரல்பற்றி வாசிக்க.

எழுவிரலாவன:-இடக்கையிற்பெருவிரலும் சிறுவிரலுநீக்கி மற்றைமூன்று விரலும், வலக்கையிற் பெருவிரலொழிந்த நான்குவிரலும் ஆக எழுவிரலு மென்க. என்னை? "வூலவா யருகொன்று முத்திரையாய் நீக்கித், தூலயேழி னின்ற விரல்கள் - வினையாட், டிடமூன்று நான்குவல மென்றுர்கா ணேகா, வடமாரு மென்மூலையாய் வைத்து" என்றுராகலின்.

இவ்வங்கியத்து எழுதூலகளில் இசைபிறக்குமாறு:—அஃது எழுத்தாற் பிறக்கும். எழுத்து, சரிகமபதநி என்பன. இவ்வேழெழுத்தினையும் மாத்திரைப்படுத்தித்தொழில்செய்ய இவற்றுள்ளே எழிசையும்பிறக்கும்.

எழிசையாவன:—சட்சம், ரிடபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிடாதமென்பன. இவைபிறந்து இவற்றுள்ளே பண்கள் பிறக்கும்;

(பி - ம்.) * 'சமநிலத்' † 'தூபமிடமாய்'

என்னை? ''சரிக மபதநியென் றேழெழுத்தாற் முனம், வரிபரந்த கண்ணிணைய் வைத்தூத் - தெரிவரிய, வேழிசையுந் தோன்று மிவற்றுள்ளே பண்பிறக்குஞ், சூழ்முதலாஞ் சுத்தத் தூவே'' என்றுராகலின்.

இத்தன்மைத்தாகிய குழலுமென்க.

உசு. தீருமென்றது - ''செம்மூறை யுறழ்பே மெய்ந்நிலே கொட்ட, னீட்ட னிமிர்த்தல்'' என்றுசொல்லப்படாநின்ற வண்ணக்கூறுபாட்டையும் இரு வகைத்தாளக்கூறுபாட்டையும் பாலிநிலையிலையும் பண்ணுநிலையினையும் நிலைப் படப்படுத்துத் தூய்தாகக் காட்டுந் தன்மையுமென்க.

இதன்பகுதியெல்லாம் ஈண்டுரைப்பிற்பெருகும்; வந்தவழிக்கண்டுகொள்க. அஃதன்றித் தூவகையோத்தினுள்ளுங்காணலாகும்.

உசு. மிடறுமென்றது - * சரீரவீணையுமென்றவாறு.

அதனை, ''பூதமுதற் சாதனத்தாம் புற்கலத்தின் மத்திமத்து, நாதமுத லாமெழுத்து நாலாகி - வீதி, வருவரத்தாற் முனத்தால் வந்து வெளிப்பட், டிருவரத்தாற் முேற்ற மிசைக்கு'' என்பதனுணர்க.

புற்கலம் - உடம்பு. அப்புற்கலத்துக்கு முதலாயுள்ள பூதமாவன: மண் நீர் தீ வளி வானெனவிவை; என்னை? ''மண்ணுட னீர்நெருப்புக் கால்வான மென்றிவைதா, மெண்ணிய பூதங்க ளென்றறிந்து - நண்ணிய, மன்னர்க்கு மண்கொடுத்து மாற்றூர்க்கு விண்கொடுத்த, தென்னவர்கோ மானே தெளி'' என்றுராகலின்.

இப்பூதங்களைந்தானும் புற்கலமாமென்ற ஆசானே மாணாக்கன் பணிந்து பூதங்கடாம் ஒன்றேடொன்று கூடுவனவல்ல; மண் செறிதலைக் குணமாக வுடைத்து; நீர் நெகிழ்தலைக் குணமாகவுடைத்து; தீத் தெறுதலைக் குணமாக வுடைத்து; காற்று ஓரிடத்தும் நிலைபெற்றுறைற்பதன்று; ஆகாயமென்பது ஒருருவுண்டில்லையன்று; அன்றியும் ''செப்பிய பூதங்கள் சேர்ந்தோர் குறி யன்றே, யப்பரிசு மண்ணைந்து நீர்நாலா - மொப்பரிய, தீயாகின் மூன்றிரண்டு காற்றம் பரமொன்று, வேயாருந் தோளி விளம்பு'' என்பதனால் மண் ஐந்து பயனுடைத்து; நீர் நான்குபயனுடைத்து; தீ மூன்றுபயனுடைத்து; காற்று இரண்டுபயனுடைத்து; வான் ஒருபயனுடைத்து; ஆதலால் இவை ஒன்றே டொன்று கூடுவனவல்லவாகவும் இவற்றின் கூட்டமுடம்பென்றீராதலால் இவ்வைந்தின்கூட்டம் உடம்பாவது எவ்வாறேவெனின்,—இதற்குவிடை, ''மெய்வாய்கண் மூக்குச் செவியெனப் பேர்பெற்ற, வைவாயு மாயவற்றின் மீதடுத்துத் - தூய்ய, சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தா, லவை முதற் புற்கலமாம்'' என்பது. இது பூதங்கள் பரிணமித்து உடம்பாமாறு கூறுகின்றது:—

பூதங்களைந்தும் தத்தம் தன்மைநீங்கி மண் உடம்பாயும், நீர் வாயாயும்; தீக் கண்ணுயும், காற்று மூக்காயும், ஆகாயம் செவியாயும் நின்று உடம்பாம்.

(பி - ம்.) * 'சரீரவீணை'

பொறிகடோறும் விளியோகப்பட்ட புலன் சுவைமுதல் ஐந்துவகைப்படும். இவ்வைந்தும் பொறியைந்தினுமேறி, மண்ணுல் உடம்பு ஊருயும், நீரால் வாய் சுவையாயும், தீயாற் கண் ஒளியாயும், காற்றுல் மூக்கு நாற்றமாயும், வானுற் செவி ஓசையாயும்வந்து உடம்பாம். அன்றியும் மண்ணின்பகுதி நரம்பு இறைச்சி ஞன்பு மயிர் தோலெனவைந்து. நீரின்பகுதி நீர் மூளை சுக்கிலம் நிணம் உதிரமெனவைந்து.

"பசிசோம்பு மைதுனங் காட்சிநீர் வேட்கை, தெசிகின்ற நீக்குணமோ ரைந்து - மொசிகின்ற, போக்கு வரவுநோய் கும்பித்தன் மெய்ப்பரிசம், வாக் குடைய காற்றின் வகை" என்பது தீயின்குணமும் காலின்குணமுமுணர்த்து கின்றது; ஆவன: பசி சோம்பு மைதுனம் காட்சி நீர்வேட்கையெனவிவை நீக்குணம். போக்கு வரவு நோய் கும்பித்தல் பரிசமெனவிவை காற்றின் குணம்.

"ஓங்கும் வெகுளி மதமான மாங்கார, நீங்கா வுலோபமுட னிவ்வைந் தும் - பாங்காய, வண்ண முலிமடவாய் வானகத்தின் கூறென்ரு, ரெண்ணி மிக நூலுணர்ந்தோ ரென்." இஃது ஆகாயத்தின்குணமுணர்த்துகின்றது; ஆவன: வெகுளி மதம் மானம் ஆங்காரம் உலோபமெனவிவை. இப்பூதகுணம் இருபத்தைந்துங் கொண்டு உடம்பாம்.

"ஒப்பார் பிராண னபான னுதானனுடன், றப்பா வியானன் சமான னே - யிப்பாலு, நாகன் றனஞ்சயன் கூர்மன் கிருகரன், றீதிலாத் தேவதத்த னே" என்பது தசவாயுக்களேயுமுணர்த்துகின்றது; ஆவன:—பிராணன் அபா னன் உதானன் வியானன் சமானன் நாகன் கூர்மன் கிருகரன் தேவதத்தன் தனஞ்செயனெனவிவை.

"இடைபிங் கலைசுழுனை காந்தாரி யத்தி, புடைநின்ற சிங்குவை சங்கினி பூடாவோ, டங்குகு கன்னி யலம்புடை யென்றுரைத்தார், தங்குதச நாடிக டாம்." தசநாடிகளாவன:—இடை, பிங்கலை, சுழுமுனை, காந்தாரி, அத்தி, சிங்குவை, சங்கினி, பூடா, குரு, கன்னி, அலம்புடை எனவிவை;

"பூத வகைகளோ ரைந்தாய்ப் பொறியைந்தாய், வாதனையோ ரையைந் தாய் மாருதமு - மேதகுசீர்ப், பத்தாகு நாடிகளும் பத்தாகும் பாரிடத்தே, முத்திக்கு வித்தா முடம்பு" என்பது பூதபரிணமமுணர்த்துகின்றது:—பூதங்க ளைந்தாவன:—மண் முதலாயின; பொறியைந்தாவன:—செவிமுதலாயின; புலனைந்தாவன:—சத்தமுதலாயின;வாதனையைந்தாவன:—நரம்புமுதலிய ஐந்தும், நீர்முதலிய ஐந்தும், பசிமுதலிய ஐந்தும், போக்குமுதலிய ஐந்தும், வெகுளிமுதலிய ஐந்தும். தசவாயுக்களாவன:—பிராணன்முதலியபத்தும். தசநாடிகளாவன:—இடை பிங்கலைமுதலிய பத்தும். மூலாதாரத்து எழுபத் தீராயிரநாடிகளும் பீர்க்கங்கூட்டின் மூன்றுகண்ணும் போல இடை பிங்கலை சுழுமுனையென்னும் மூன்றுநாடிகளுமாய் நடுவுநின்ற சுழுமுனையொழிய இரண் டானும் மேலேக்கியேறி இரண்டுமூக்கானும் ஓரோர் பாரிசத்து ஐந்து நாழிகை யாகக் கொண்டு ஒருமாத்திரையில் நூற்றிருபத்தைந்து சுவாதமாய் ஒருசுவா

தத்திலே பன்னிரண்டங்குலியளவு புறப்பட்டு நாலங்குலி தேய்ந்து எண் விரலடங்குகின்றது பிராணவாயுவெனக்கொள்க.

மாத்திரையாவது:—இரண்டரை நாழிகையை * எட்டுக்கூறிட்டு ஒருகூ றென்றறிக.

அபானவாயு மலமூத்திரங்களைப் பெய்விக்கும். உதானன் கண்டத்தானத் தில் நிற்கும். வியானவாயு போக்குவரவு செய்து இயங்கப்பண்ணும். சமான வாயு அறுவகைச்சுவையையும் அன்னத்தையும் பிரித்து எழுவகைத் தாதுவின் கண்ணும் கலப்பிக்கும். கூர்மன் இமைப்பும் விழிப்பும் உறக்கமும் உணர்ச்சியும் பண்ணும். நாகன் விக்கலிடுவிக்கும். கிருகரன் கோபத்தைப்பண்ணுவிக்கும். தேவதத்தன் உடம்பெரிப்பைப் பண்ணுவிக்கும். தனஞ்சயன் பிராணன் போன பின்னும் உடம்பைவிடாதேகின்று மூன்றுநாள் உதிப்பித்து உச்சந்தலையிற் பிற கூற்றிலே மூன்றுநெற்கிடை வெடித்துப்போமென்றறிக.

நாடிகள் எழுபத்தீராயிரத்திலும் தசநாடிகள் பிரதானமெனக்கொள்க.

என்னை? "இடைபிங் கலையிரண்டு மேறும் பிராணன், புடைநின் றபானன் மலம் போக்குந் - தடையின்றி, யுண்டனகீ ழாக்கு முதானன் சமானனெங் ருங், கொண்டெறியு மாறிரதக் கூறு" எனவும், "கூர்ம னிமைப்புவிழி கோணு கன் விக்கலாம், பேர்வில் வியானன் பெரிதியக்கும் - போர்மலியுங், கோபங் கிருகரனுங் கோப்பி னுடம்பெரிப்புத், தேவதத்த னுருமென்று தேர்" எனவும், "ஒழிந்த தனஞ்சயன்பே ரோதி லுயிர்போய்க், கழிந்தாலும் பின்னுடலைக் கட்டி - யழிந்தழிய, மூன்நா ளுதிப்பித்து முன்னியவான் மாவின்றிப், பின்னு வெடித்துவிடும் பேர்ந்து." எனவும் இசைநுணுக்கமுடைய சிகண்டியாரும் கூறினராகலின்,

இங்ஙனம் பூதங்களானும் பொறிமுதலியவற்றானும் வாயுக்களானும் நாடி களானும் பரிணமித்துச் சுக்கில சுரோணிதங்களாலே உடம்புகொண்டு இரு வினையும் தன்னகத்தடக்கி உயிர்பிறக்குமென்றறிக.

"துய்ய வுடம்பளவு தொண்ணூற்று றங்குலியா, மெய்யெழுத்து நின்றி யங்கு மெல்லத்தான் - வையத், திருபாலு நாற்பதோ டேழ்பாதி நீக்கிக், கருவாகு மாதாரங் காண்" என்பது இசைக்குப் பிறப்பிடமாயுள்ள ஆதாரமுணர் த்துகின்றது:—

சரீரத்தளவு தன்கையால் தொண்ணூற்றறங்குலம்; இதனுள் மேலே நாற்பத்தேழரையங்குலமும் கீழே நாற்பத்தேழரையங்குலமும்விட்டு நடுநின்ற ஓரங்குலம் மூலாதாரம். இதன்மேலே நால்விரல்விட்டுப் பின்னுதாரநின் றியங்குமெனக்கொள்க.

"ஆதாரம் பற்றியசைவ முதலெழுத்து, மூதார்ந்த மெய்யெழுத்து மூன் கொண்டு - போதாரு, மூந்தி யிடைவளியா யோங்குமிடை பிங்கலையால், வந்து மே லோசையாம் வைப்பு", "ஐவகைப் பூதமு மாய சரீரத்து, மெய்பெற

(பி - ம்.) * 'இருபத்தெட்டு'

நின்றியங்கு மெய்யெழுத்தாற் - றுய்ப, வொருநாடி நின்றியங்கி யுந்திமே லோங்கி, வருமா லெழுத்துடம்பின் வந்து.''

இனி ஆளத்தியாமாறுணர்த்துகின்றது:—''மகரத்தி னெற்றூற் சுருதி விர வும், பகருங் குறினெடில்பா ரித்து-நிகரிலாத், தென்னு தெனுவென்று பாடுவதே லாளத்தி, னன்னுவிச் சொல்லின் வகை.'' முதலிற்பாடுமிடத்து மகரத்தினெற் றூலே நாதத்தை உச்சரிக்குமாறு பகரிற் பாரித்து முற்கூறிய நாதத்தினைத் தொ ழில்செய்யுமிடத்துக் குற்றெழுத்தாலும் நெட்டெழுத்தாலுஞ்செய்யப்படும்.

அவை அச்சு பாரணையென்று பெயர்பெறும். அச்சுக்கு எழுவாய் குற் றெழுத்து. பாரணைக்கு எழுவாய் நெட்டெழுத்து. அச்சு தாளத்துடனிகழும். பாரணை கூத்துடனிகழும்.

ஆளத்திசெய்யுமிடத்துத் தென்னுவென்றும் தெனுவென்றும் இரண்ட சையுங்கூட்டித் தென்னுதெனுவென்றும் பாடப்படும். இவைதாம் காட்டா ளத்தி, நிறவாளத்தி, பண்ணுளத்தியெனமூன்றுவகைப்படும்.

இவற்றுட் காட்டாளத்தி அச்சுடனிகழும். நிறவாளத்தி நிறம்சுலேயா மற் பாரணையுடனிகழும். பண்ணுளத்தி பண்ணேயே கருதி வைக்கப்படும்

''சுன்றுக் குறிலேந்துங் கோடா நெடிலேந்து, நின்றூர்ந்த மந்தரத் தவ் வொடு - நன்றுக, ளீளத்தா லேழு நிதானத்தா னின்றியங்க, வாளத்தி யாமென் றறி'' என்பது ஆளத்திக்கு இன்னும்படிவதோரிலக்கணமுணர்த்துகின்றது:— சுன்றுக்குறிலேந்துங் கோடாநெடிலேந்துமென்றது குற்றெழுத்தாலும் நெட் டெழுத்தாலும் ஆளத்திசெய்யப்படும் எ - று. குற்றெழுத்தைந்தாவன:—அ இ உ எ ஒ; நெட்டெழுத்தைந்தாவன:—ஆ ஈ ஊ ஏ ஓ எனவிவை. நின்றூர்ந்த வென்றது - மெய்யெழுத்தாகிய பதினெட்டெழுத்தினுள்ளும் மவ்வும் நவ்வும் தவ்வுமென மூன்றெழுத்துமல்லா மற்றையெழுத்துக்கள் ஆளத்திக்கு வரப் பெரு எ - று. இம்மூவகைமெய்யினுள்ளும் மவ்வினம் சுத்தத்திற்குரித்து; நவ்வினம் சாளரத்திற்குரித்து; தவ்வினம் தமிழ்க்குரித்து; விரவவும்பெறும்.

இங்ஙனம் மூலாதாரந்தொடங்கிய எழுத்தினுதம் ஆளத்தியாய்ப் பின் இசையென்றும் பண்ணென்றும் பெயராம்; என்னே? ''பாவோ டணைத லிசை யென்றூர் பண்ணென்றூர், மேவார் பெருந்தான மெட்டானும் - பாவா, யெடுத் தன் முதலா விருநான்கும் பண்ணிப், படுத்தமையாற் பண்ணென்று பார்.'' பல இயற்பாக்களுடனே நிறத்தை இசைத்தலால் இசையென்றுபெயராம்.

பெருந்தானமெட்டினும் கிரியைகளெட்டாலும் பண்ணிப்படுத்தலாற் பண்ணென்று பெயராயிற்று.

பெருந்தானமெட்டாவன: நெஞ்சும் மிடறும் நாக்கும் மூக்கும் அண்ணுக் கும் உதடும் பல்லும் தலையுமெனவிவை.

கிரியைகளெட்டாவன:—எடுத்தல் படுத்தல் நலிதல் கம்பிதம் குடிலம் ஒலி உருட்டு தாக்கு எனவிவை.

இங்ஙனம்பிறந்து பண்ணப்படும் பண்ணும் இசையுமாகிய இவற்றைப் பயக்கும் மிடறு, ஆகுபெயரான் மிடற்றுப்பாடற்காயிற்று.

உஎ. தாழ்குரற் றண்ணுமையென்றது - தாழ்ந்த குரலினையுடைய தண்ணுமைக்கருவிமுதலாயின வாசித்தலுமென்க.

அவையான:—பேரிகை, படகம், இடக்கை, உடுக்கை, மத்தளம், சல்லிகை கரடிகை, திமிலை, குடமுழா, தக்கை, கணப்பறை, தமருகம், தண்ணுமை, தடாரி, அந்தரி, முழவு, சந்திரவளையம், மொந்தை, முரசு, கண்விடு தூம்பு, நிசாளம், துடுமை, சிறுபறை, அடக்கம், தகுணிச்சம், விரலேறு, பாகம், உபாங்கம், நாழிகைப்பறை, துடி, பெரும்பறையெனத் தோலாற்செய்யப்பட்ட கருவிகள்.

என்னை ? "பேரிகை படக மிடக்கை யுடுக்கை, சீர்மிகு மத்தளஞ் சல்லிகை கரடிகை, திமிலை குடமுழாத் தக்கை கணப்பறை, தமருகந் தண்ணுமை தாவி டடாரி, யந்தரி முழவொடு சந்திர வளைய, மொந்தை முரசே கண்விடு தூம்பு, நிசாளந் துடுமை சிறுபறை யடக்க, மாசி றகுணிச்சம் விரலேறு பாகந், தொக்க வுபாங்கந் [1] துடிபெரும் பறையென, மிக்க நூலோர் விரித்துரைத் தனரே" என்பராகலின்

இவை அகமுழவு அகப்புற்முழவு புறமுழவு புறப்புறமுழவு * பண்ணமை முழவு நாண்முழவு காலைமுழவென எழுவகைப்படும்.

அவற்றுள் அகமுழவாவான :—முன்சொன்ன [2] உத்தமமான மத்தளம் சல்லிகை இடக்கை கரடிகை பேரிகை படகம் குடமுழா வெனவிவை.

அகப்புறமுழவாவன:— முன்சொன்ன மத்திமமான தண்ணுமை தக்கை தகுணிச்சமுதலாயின.

புறமுழவான:— முன்சொன்ன அதமக்கருவியான கணப்பறைமுதலாயின.

புறப்புறமுழவாவன:—முற்கூறப்படாத நெய்தற்பறைமுதலாயின.

பண்ணமைமுழவாவன :—முன்சொன்ன வீரமுழவுநான்கும். அவையாவன:—முரசு நிசாளம் துடுமை திமிலையெனவிவை.

நாண்முழவாவன:—நாட்பறை; ஆவது நாழிகைப்பறை.

காலைமுழவாவன முன் துடியென்றது.

இனி இவற்றுள், மத்தளம்:—மத்து ஓசைப்பெயர்; இசையிடலுகிய கருவி கட்கெல்லாம் தளமாதலான் மத்தளமென்று பெயராயிற்று.

இக்கருவி பலகூத்துக்களுக்கு உரித்தாகாலானும் பாடலெழுத்தான் உள்ளே பிறத்தலானும் முழவுகளெல்லாம் இதனுள்ளே பிறத்தலானும் இதனை † நான்முகனென்பர்.

சல்லிகையென்றது - சல்லென்ற ஓசையையுடைத்தாதலாற் பெற்ற பெயர்.

---

[1] முன்புகூறிய நாழிகைப்பறை இவ்விடத்துக்கூறப்பட்டிலது.

[2] "தரித்த மதங்க மோடு மத்தளஞ் சல்வி, பெருத்த கரடிகையே பேரி - யுரத்தி, படகங் குடமுழவம் போங்காய வேழு, மடைவே முதற்கருவி யாம்" என்பது சுத்தானந்தப்பிரகாசம். (பி - ம்.) * 'பண்மைமுழவு', † 'நான்முகனுமென்றவாறு'

ஆவஞ்சியெனினும் குடிக்கையெனினும் இடக்கையெனினுமொக்கும்; அதற்கு ஆவினுடைய வஞ்சித்தோலைப் போர்த்தலால். ஆவஞ்சியென்று பெயராயிற்று; குடிக்கையாகவடைத்தலாற் குடிக்கையென்றுபெயராயிற்று ; வினைக் கிரியைகள் இடக்கையாற்செய்தலின் இடக்கையென்றுபெயராயிற்று.

கரடி கூத்தினுற்போலும் ஓசையையுடைத்தாதலாற் கரடிகையென்று பெயராயிற்று.

பிறவற்றையும் இங்ஙனம் உய்த்துணர்ந்துகொள்க.

இவற்றுள் முதலிற் கரங்கொள்வது மத்தளமாதலின் முதற்கருவியாயிற்று.

இடைக்கருவி சல்லி; இடைகொளவைத்தாகலின்.

கடைக்கருவி உடுக்கை; கடைக்கட்டட்டுக்கு உரித்தாகலின்.

இங்ஙனமாகிய கருவிகட்கெல்லாம் முதலாதலுேக்கித் தண்ணுமையொன்றினையுமே கூறினர்.

உ௬. ஆடலொடென்றது - அகக்கூத்துப் புறக்கூத்துப் பதினேராட லென்று சொல்லப்படாநின்ற ஆடலுடனே எ - று.

ஓடு, உடனிகழ்ச்சி; "ஓடுவென் கிளவி யுடனிகழ் வாகும்" என்பதாகலின்.

இச்சொல்லப்பட்டவற்றுடனே யென்றவாறு.

உ௬ - அ. இவற்றி னிசைந்த.....படுத்தென்றது - இச்சொல்லப்பட்ட கூத்துக்களுக்குச் சேரச்செய்த உருக்களை இசைகொள்ளும்படியும் சுவைபொருந்தும்படியும் புணர்க்கவல்லனுகி எ - று.

உக. வரிக்கும் ஆடற்கும் உரிப்பொருளியக்கியென்றது - செந்துறை வெண்டுறை என்னப்படாநின்ற இருவகைப்பாடல்களுக்கும் உரிமைப்பொருளாயமைந்த இயக்கம் நான்கினையுமமைத்தென்றவாறு.

ங0. தேசிகத்திருவின் ஓசை கடைப்பிடித்தென்றது - இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொலென்றுசொல்லப்பட்ட சொற்கள் இசைபூணும் படியைக் கடைப்பிடித்தறிந்தென்றவாறு.

ஙக - உ. தேசிகத் திருவின்.....அறிவினனுகி யென்றது-இச்சொற்களிற் புணர்ப்புண்ட இசைவேறுபாடுகளெல்லாம் குற்றந்தீர உணரவல்ல அறிவினையுடையனுகி எ - று.

ஙங. கவியது குறிப்புமென்றது - இயற்புலவனிணைந்தகோட்பாடுமென்க.

ஆடற் றொகுதியுமென்றது - ஆடலாசிரியனீடும் மேல்வரவுகளின் தொகுதியும் எ - று.

ஙச. பகுதிப்பாடலுமென்றது - இவற்றின்பகுதிக்கு அமைந்த பாடலுமென்றவாறு.

கொளுத்துங் காலையென்றது - இக்கூத்துக்களை ஆசிரியன் குறிப்புக்கும் பாடலுள்ளிட்டவற்றுக்கும் சேரவியற்றுமிடத்தென்றவாறு.

கூறி - கூ. வகையறுகேள்வி.....இசையோள்ளுணுமென்றது - இச் சொல்லப்பட்டவற்றைக் குற்றந்தீர்ந்த நூல்வழக்காலே வகுக்கவும் விரிக்கவும் வல்ல பாடலாசிரியனுமென்க.

இசையுடன்படுத்து இயக்கிக் கடைப்பிடித்து உணர்ந்த அறிவினனுகி விரிக்கும் இசையோனென்க.

[கவிஞன் அமைதி.]

கூஎ - சச. இமிழ்கடல்.....நன்னூற்புலவனும்

கூஎ - அ. இமிழ்கடல்.....தன்மையனுகியென்றது - ஆரவாரத்தையுடைய கடல்சூழ்ந்தநிலத்திலே வடக்கும் தெற்கும் குடக்கும் குணக்கும் வேங்கடம் குமரி தீம்புனற்பௌவமெனத் தமிழ்நாட்டிற்கு எல்லைகூறப்பட்ட தமிழ்த்தேசத்தாராயிய மூன்றுதமிழும் போமென்னுந் தன்மையையுடையனுகி எ - று.

கூக - சக. வேத்தியல்.....பிடித்தென்றது - வேத்தியலென்றும் பொதுவியலென்றுங் கூறப்பட்ட இரண்டுகூறுபாட்டினையுடைய நாடகநூலை நன்றுகக் கடைப்பிடித்து எ - று.

வேத்தியல் அகம், பொதுவியல் புறமென்பாரும், பிறிதுகூறுவாருமுளர். அவை முடிந்தநூல்களிற் கண்டுகொள்க.

சக - உ. இசையோன்.....அதுபட வைத்தென்றது - இசைப் புலவன் ஆளத்தினைவைத்த பண்ணீர்மையை முதலும் முறையும் முடிவும் நிறையும் குறையும் கிழமையும் வலிவும் மெலிவும் சமனும் வரையறையும் நீர்மையுமென்னும் பதினெருபாகுபாட்டினுணுமறிந்து அறிந்தவண்ணம் அவன்தாளநிலையில் எய்தவைத்த நிறம் தன்கவியினிடத்தே தோன்றவைக்கவல்லனுய் எ - று.

கூக - ச. மாற்றேர் செய்த.....நன்னூற் புலவனுமென்றது - பகைவராற்செய்யப்பட்ட வசையின் அளவறிந்து அவை தோற்றுதபடியிலே வசையின்மொழிகளான் நாடகக்கவி செய்யவல்ல நல்ல நூலல்லவல்ல புலவனும் எ - று.

"இன்ன னல்லோன் செய்குவ னுயிற், றேற்று மாந்த ராரியம் போலக், கேட்டார்க் கெல்லாம் பெருநகை தருமே" என்றுர்.

தன்மையனுகிக் கடைப்பிடித்து உணர்ந்து வைத்து அறிந்து தொலைவில்லாத புலவனுமென்க.

[தண்ணுமையோன் அமைதி.]

சஞ - ஞஞ. ஆடல் பாட லிசையே.....முதல்வனும்

(இ - ள்.) எல்லாக்கூத்துக்களும் எல்லாப்பாட்டுக்களும் எல்லாஇசைகளும் வடவெழுத்தொரீஇ வந்த எழுத்தானே கட்டப்பட்ட வாக்கியக்கட்டளைக் கூறுபாடுகளும் எஞ்ஞாப்பண்களும் இருவகைத்தாளங்களும் எழுவகைத்தூக்குக்களும் இவற்றின்சூற்றங்களும் இயற்சொல்முதலிய நால்வகைச்சொற்களு

மென்று சொல்லப்பட்டனவற்றை நுண்ணிதாக உணர்ந்து ஒரோருருவை இரட்டிக்கிரட்டி சேர்த்தவிடத்து நெகிழாதபடி நிரம்பநிறுத்தவும் அவ்விடத்துப் பெறும் * இரட்டியைப் பாகவுருவானவழி நிற்குமானநிறுத்திக் கழியுமானங்கழிக்கவும் வல்லஞாய் இப்படி நிகழ்ந்த உருக்களிற் யாழ்ப்பாடலும் குழலின்பாடலும் கண்டப்பாடலும் இயைந்து நடக்கின்றபடி கேட்போர் செவிக் கொள்ள அமைந்த காரணத்தாற் குறியறிந்து சேரவாசித்து மற்றைக் கருவிகளிற் குறைநிரப்புதலும் மிகுதியடக்குதலும் ஆக்குமிடத்தும் அடக்குமிடத்தும் இசையில் இரந்திரந்தோன்றுதபடியே செய்தலும் செய்யுமிடத்துக் கைத் தொழில் அழகுபெறச் செய்துகாட்டலும் வல்லஞாய் அழகுதக்க தண்ணுமைக் கருவியினையும் அரிய தொழிலினையுமுடைய ஆசிரியனுமென்றவாறு.

இது பொழிப்புரை.

சடு. ஆடலென்றது - எல்லாக்கூத்துக்களும் எ - று.

பாடலென்றது - பண்ணன்முதலிய எல்லாப்பாடலியல்பும் எ - று.

இசையென்றது - நரப்படைவாலுரைக்கப்பட்ட பதிஞ்ஞாயிரத்துத் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றொன்றுகியாதியிசைகளும் எ - று.

அவையாவன:—"உயிருயிர் மெய்யள வுரைத்தவைம் பாலினு, முடமி ழியலிசை யேழுடன் பகுத்து, மூவேழ் பெய்தந்.....,தொண்டு மீண்ட பன்னீ ராயிரங், கொண்டன ரியற்றல் கொளவல்லோர் கடனே" என்னும் சூத்திரத்தாலுறழ்ந்து கண்டுகொள்க.

தமிழென்றது - வடவெழுத்தொரீஇ வந்த எழுத்தானே உறழ்ந்து கட்டப் பட்ட வாக்கியக்கூறுகளும், இயலிசைநாடகமென்று சொல்லப்பட்ட மூவகைத் தமிழ்களும் எ - று.

சசு. பண்ணென்றது - நரப்படைவால் நிறந்தோன்றப் பண்ணப்படா நின்ற பண்ணும் பண்ணியற்றிறமும் திறமும் திறத்திறமும் எ - று.

பாணி யென்றது - இருவகைத்தாள விகற்பங்களும் எ - று.

தூக்கென்றது - செந்தூக்கு முதலாய ஏழு தூக்குக்களும் எ - று.

முடமென்றது - இவற்றின் குற்றங்களும் எ - று.

சஎ. தேசிகமென்றது - இயற்சொன்முதலிய நான்குசொற்கூறும் சொற் பிரயோகமும் எ - று.

என்றிவையாசிரியனுணர்ந்தென்றது - என்றுசொல்லப்பட்ட ஒன்பதும் இலக்கணவழியே நுண்ணிதாக அறிந்து எ - று.

ஆசு - சிறுமை.

ஆசின்றென்பது பாடமாயிற் குற்றமின்றியுணர்ந்தென்க; என்னை ? [1] "ஆசே சிறுமையுங் குற்றமு மாகும்" என்பராகலின். இன்றியென்றது இன்றியிற்று; செய்யுளாதலின்.

[1] திவாகரம்.

(பி - ம்.) * 'இரட்டியேயாய்ப்பாகவுரு'; 'இரட்டியை ஒப்பாகி'

சஅ - கூ. கூடை நிலத்தை.....வாங்கியென்றது - ஒருருவை இரட்டிக் கிரட்டி சேர்த்தவிடத்து நெகிழாதபடி கிரம்பநிறுத்தவும் அவ்விடத்துப் பெறும் இரட்டியைப் பாக உருவானவழி நிற்குமானம் நிறுத்திக் கழியுமானம் கழிக்க வும் வல்லனாய் எ - று.

நிo - நிஉ. வாங்கிய வாரத்து.....சேர்த்தியென்றது - இப்படி நிகழ்ந்த உருக்களில் யாழ்ப்பாடலும் குழலிசையும் கண்டப்பாடலும் இயைந்து நடக் கின்றபடி கேட்போர் செவிக்கொள்ளத் தண்ணுமைக்கருவியமைந்தகரணத்தாற் குறியறிந்து சேரவாசித்து எ - று.

நிக. ஆக்கலாவது - மற்றைக்கருவிகளிற் குறையைநிரப்புதல்.

அடக்கலாவது - மற்றைக்கருவிகளின் மிகுதியை அடக்குதல்.

மீத்திறம் படாமையாவது - ஆக்குமிடத்தும் அடக்குமிடத்தும் இரந்திரம் தெரியாமற் செய்வதென்க.

நிக. சித்திரக்.....செலுத்துமென்றது - இவ்வீரத்தும் செய்யுமிடத் துக் கைத்தொழில் அழகுபெறச்செய்து காட்டும் எ - று.

நிநி. அத்தகு.....முதல்வனுமென்றது - இச்சொல்லப்பட்ட கூறு களில் ஒன்றும் குறைவின்றியேயிருக்கும் தண்ணுமைக்கருவியாசிரியனும் எ-று.

உணர்ந்து மிகுத்து வாங்கிச் சேர்த்திச் செலுத்தும் தண்ணுமைமுதல்வனு மென்க.

[தழலோன் அமைதி.]

நிசு - சுகூ. சொல்லியவியல்பிற்.....குழலோன்றனும்

நிசு. சொல்லியவியல்பினென்றது - நூல்களிற்சொன்ன முறைமையா லேயென்க.

நிசு - எ. சித்திர வஞ்சனை.....அறிந்தென்றது - சித்திரப்புணர்ப்பும் வஞ் சனைப்புணர்ப்புமென்று சொல்லப்பட்ட இரண்டுகூற்றினையுமறிந்தென்க.

இவற்றுட் சித்திரப்புணர்ப்பாவது:—இசைகொள்ளும் எழுத்துக்களின் மேலே வல்லொற்றுவந்தவழி மெல்லொற்றுப்போலப் பண்ணீர்மைநிறுத்தல்.

வஞ்சனைப்புணர்ப்பாவது :—இசைகொள்ளாவெழுத்துக்களின்மேலே வல் லொற்று வந்தவழி மெல்லொற்றுப்போல நெகிழ்த்துப்புணர்த்தல்.

நிஎ. புணர்ப்போன்பண்பினென்றது - பாடலாசிரியனையொத்த அறிவினை யுடையனாகியென்க.

நிஅ. வர்த்தனை.....பெய்தாங்கென்றது - வங்கியத்து விரலுளர்ந் தூதும் துளைகள் தர்ச்சனி முதலாக விட்டுப்பிடிப்பது ஆரோகணமாதலானும் கனிட்டன்முதலாக விட்டுப்பிடிப்பது அவரோகணமாதலானும் இரண்டு கூறும் இப்படிச்செய்தல் வர்த்தனையாகலான் இப்படியால் [1] நூற்றுமூன்று பண்ணீர் மைகளையும் தங்கிலகுலீலயாமற் காட்டவல்லனெனென்க.

---

[1] இப்புத்தகம் ககஉ - ஆம் பக்கம் பார்க்க.

தர்ச்சனி - சுட்டுவிரல். கனிட்டன் - சிறுவிரல் ஆங்கு - அவ்விடத்து.

டுகூ - சூ0. ஏற்றிய குரலினி.....உணர்வினனுகியென்றது - பதினற்கோவையினிடத்துக் குரனரம்பு இரட்டிக்கவரும் அரும்பாலையையும், இளிநரம்பு இரட்டிக்கவரும் மேற்செம்பாலையையும், இவைபோல அல்லாத பாலைகளையும், இசைநூல்வழக்காலே இணைநரம்புதொடுத்துப்பாடும் அறிவினையுமுடையனுகியென்க.

சூக. பண்ணமை.....அறிந்தென்றது - பண்ணுதலைமந்தமுழவின் கண்ணைறியினையறிந்தென்றவாறு.

சூஉ. தண்ணுமை.....பொருந்தியென்றது - தண்ணுமை முதல்வனுடன் பொருந்தியென்றவாறு.

தன்னெடுமென்ற உம்மையாற் பொருந்துமிடமும் பொருந்தியென்க.

சூங. வண்ணப் பட்டடை யாழ்மேல் வைத்தாங்கென்றது.....

பட்டடை - நரம்புகளில் இளிக்குப் பெயர்; என்னை? எல்லாப்பண்ணிற்கும் அடிமையாதலின். வண்ணம் - நிறம். இதனை யாழ்மேல்வைத்தென்க. ஆங்கு, அசை. இளிக்கிரமத்தாலே பண்களை யாழ்மேல் வைத்தெனக்கூட்டினுமையும்.

சூச. இசையோன்.....இயற்கையென்றது - அங்ஙனம்வைத்து அதன்வழியே இசைக்காரன்பாடிய பாட்டினியல்பையென்க.

சூரு. வந்தது வளர்த்தென்றது - பாடுகின்ற பண்வரவுகளுக்குச் சுரம் குறைவுபடாமை நிறுத்தியென்க.

வருவதொற்றியென்றது - அந்தப்பண்ணுக்கு அயல்விரவாமல் நோக்கியென்க.

ஒற்றல் - நினைதல்.

சூசு. இன்புற வியக்கியென்றது - வண்ணமுதலாகக் காட்டப்பட்ட பாடலில் இயன்ற * அழகெல்லாம் நிரம்பக்காட்டியென்க.

இசைபட வைத்தென்றது - முற்கூறிய முதலும் முறையுமுதலாய பண்ணிலக்கணம் பதினைறையும் நிரம்பவைத்தென்க.

சூள. வார.....வளர்த்தென்றது - முதனடைவாரம் கூடைதிரளென்று சொல்லப்படும் இயக்கநான்கினும் முதனடை மிகவும் தாழ்ந்தசெலவினை உடைத்தாகலானும், திரள் மிக முடுகிய நடையினை உடைத்தாகலானும், இவைதவிர்ந்து இடைப்பட்ட வாரப்பாடல் சொல்லொழுக்கமும் இசையொழுக்கமுமுடைத்தாகலானும், கூடைப்பாடல் சொற்செறிவும் இசைச்செறிவுமுடைத்தாகலானும் சிறப்புநோக்கி அவ்விரண்டினுள்ளும் வாரப்பாடலை அளவுநிரம்ப நிறுத்தவல்லனுயென்க; எனவே கூடைப்பாடலும் அமைவதாயிற்று.

நிலம் - இடம்.

(பி-ம்.) * 'வழக்கெல்லாம்'

கூள - அ. ஆங்கு.....எழுத்தாகவென்றது - பாடலினிடத்துச் சொன்னீர்மைகளின் எழுத்துக்கள் சிதையாமலே எழுத்தெழுத்தாக இசைக்குங் குழலோனென்க.

அன்றியும் சரிகமபதநி யென்பாருமுளர்.

கூக. வழுவின்றிசைக்குங் குழலோன்றானுமென்றது - இச்சீர்ல்லப்பட்ட இயல்புகளே இலக்கணப்படியில் வழுவாமல் வாசித்துக்காட்டவல்லீ வங்கியத் தானுமென்க.

அறிந்து மயலறப்பெய்து உணர்வினஞகி அறிந்து பொருத்தி வைத்து வளர்த்து ஒற்றி இயக்கி வைத்துப் பார்த்து இசைக்குங்குழலோனென்க.

[யாழாசிரியன் அமைதி.]

எ0 - கூசு. ஈரேழ் தொடுத்த.....புலமையோனுடன்

எ0 - எக. ஈரேழ் தொடுத்த.....வேண்டியென்றது - ஆயப் பாலியாய்ன்ற பதினற்கோவை, கோலினீது செப்பமுடைத்தாய்ப் பெண் டிர்க்குரிய தானமுடைய பாடலியல்பொத்தமைந்த சிறப்புடைத்தாகலான் இதி லே செம்பாலை படுமலைப்பாலை செவ்வழிப்பாலை அரும்பாலை [1] கோடிப்பாலை விள ரிப்பாலை மேற்செம்பாலையெனப்பட்ட ஏழுபாலையினையும் இணைநரம்புதொடுத்து நிரம்ப நிறுத்திக் காட்டல்காரணமாகவென்க.

எஉ - அ. வன்மையிற் கிடந்த.....சேரவென்றது

"தாரபாகமும் குரலின் பாகமு, நேர்நடு வண்கிளை கொள்ள நிற்ப, முன் னர்ப் பாகமும் பின்னர்ப் பாகமும், விளரிகுர லாகு மென்மனர் புலவர்" என் னுஞ்சூத்திரத்தின்விதிபற்றி வட்டப்பாலையின்முடிவுதானமாய் வலிந்தநிலைமை யினையுடையதாரம்பெற்ற இரண்டலகில் ஓரலகையும் இப்பாலையின் முதல்தான் மாய்மெலிவினிற்கும்குரல்நரம்பு பெற்ற நாலலகில் இரண்டலகையும் தாரநரம் பில் அந்தரக்கோலிலே கைக்கிளையாகநிறுத்தத் தாரந்தான் கைக்கிளையாயிற்று. அந்த நரம்பில் ஒழிந்த ஓரலகையும் பண்டை விளரியிலேகூட்ட அவ்விளரி துத்த நரம்பாயிற்று. இப்படிப் பன்னிருகாற்றிரிக்கப் பன்னிருபாலையும் பிறக்கும்.

பன்னிருபாலையினுரு தொண்ணூற்றொன்றும் பன்னிரண்டுமாய்ப் பண்கள் [2] நூற்றுமூன்றுதற்குக் காரணமாமெனக்கொள்க.

இவ்விடத்துத் தாரநரம்பின் அந்தரக்கோலைத் தாரமென்றார்; "தன்ன மூந் தாரமுந் தன்வழிப் படர" என்னுஞ்சூத்திரத்தானைக்கொள்க.

எக. ஏணை.....வழிச் சேரவென்றது - இதனைப் பெண்டிர்க்குரியதான மாகிய பதிஞற்கோவையிலே பொருந்தக்கூட்டவேண்டுமென்றவாறு.

கூட்டும்படி:—

---

[1] இதனை இக்காலத்துக்கொடிப்பாலையென வழங்குகின்றனர்.

[2] இப்புத்தகம் ககo - ஆம் பக்கம் பார்க்க.

அ0 - அக. மேலது.....செம்பாலையாயதென்றது - உழை முதற் கைக்கிளை இறுதியாக மெலிவுநான்கும் சமம் ஏழும் வலிவு மூன்றுமாய் உழைமுதலாகச் செம்பாலையாயதென்க.

அஉ - கூ. இறுதி யாதி.....நீங்காதென்றது - தாரமுதலாகப் பெறுமுறையாய்வந்தபடியே நீங்காமலென்றவாறு.

அசு -நி. படுமலை.....திரிந்தபினென்றது - கைக்கிளைகுரலாகப் படுமலைப்பாலையும், துத்தம் குரலாகச்செவ்வழிப்பாலையும், குரல்குரலாக அரும்பாலையும் தற்கிழமை திரிந்தபினென்க.

அரும்பாலைக்குக் குரல் நரம்பு இரட்டித்தபெற்றித்தென்க.

அசு - கூ. முன்னதின்.....கிடக்கையினென்றது - முன்பிற் படியே தாரம் குரலாகக் கோடிப்பாலையும், விளரி குரலாக விளரிப்பாலையும், இளி குரலாக மேற்செம்பாலையுமாய் மேற்செம்பாலை இளிநரம்பிரட்டித்த நிலைமையினையுடைத்தாய் இப்படிச்சமைந்த பதினற்கோவைப்பாலை நிலையினென்றவாறு.

கூ0. இணைநரம்பு.....கொண்டாங்கென்றது - இப்பதினற்கோவைப் பாலைநிலையினும் பண்ணின்றநிலையினுமிரட்டித்த குரல்குரலாகிய அரும்பாலையும் இளிகுரலாகிய மேற்செம்பாலையும்போல் அல்லாதன ஐந்துபாலையும் உழைகுரலாகச் செம்பாலைக்கு உழைபெய்தும் கைக்கிளை குரலாகப் படுமலைக்குக் கைக்கிளைபெய்தும் துத்தம் குரலாகச் செவ்வழிக்குத் துத்தம்பெய்தும் தாரம் குரலாகக் கோடிப்பாலைக்குத் தாரம்பெய்தும் விளரி குரலாக விளரிப்பாலைக்கு விளரிபெய்தும் பாடப்படுமென்றவாறு.

கூக - உ. யாழ்மேற் பாலை.....முறை மெலியவென்றது - யாழினிடத்து அரும்பாலைமுதலாயின இடமுறைமெலியவும் குழலினிடத்துக் கோடிப்பாலை முதலாயின வலமுறைமெலியவும் பாடப்படுமென்றவாறு.

கூஙூ - ச. வலிவு மெலிவும்.....உடனென்றது - இப்படியால் வலிவும் மெலிவும் சமனுமெனப்படாநின்ற தானநிலையினையுடைய இசைக்கூறுபாடுகளுக்கெல்லாம் நரப்படைவு கெடாமலும் பண்ணீர்மை முதலாயின சூன்மூமலும் புணர்க்கவல்லஞாய் அப்புணர்ப்பிற்கு அமைந்த எழுத்துக்களால் இசை செய்யவல்ல யாழாசிரியனுமென்றவாறு.

(எக) நிறுத்தல்வேண்டிப் (கூச) பொலியக்கோத்த புலமையோனென்க.

[அரங்கின் அமைதி.]

கூநி - ககஙூ. எண்ணிய நூலோர்..... ..அரங்கத்து

கூநி - கூ. எண்ணிய நூலோர்.....கொண்டென்றது - எண்ணப்பட்ட சிற்பநூலாசிரியர் வகுத்த இயல்புகளின் வழுவாதவகை அரங்கு செய்தற்கு நிலக்குற்றங்கள் நீங்கினவிடத்திலே நிலம்வகுத்துக்கொண்டென்க.

மண்ணகநிலமாவது:—"தந்திரத் தரங்கிங் கியற்றுங் காலை, யறனழித் தியற்று வழகுடைத் தாகி, நிறைகுழிப் பூழி குழிநிறை வாற்றி, நாற்றமுஞ்

சுவையு மதுரமு மாய்க்கனந், தோற்றிய திண்மைச் சுவட துடைத்தா, யென் புமி கூர்ங்கல் களியுவ ரீஎ, தன்ப ரீறு துகளிவை யின்றி, பூரகத் தாகி யுளே மான் பூண்ட, தேரகத் தோடுந் தெருவுமுக நோக்கிக், கோடல் வேண்டு மாட ராங் கதுவே" என்பது; தந்திரவழி அரங்கு இவ்வுலகத்துச் செய்யுமிடத்துத் [1] தெய்வத்தானமும் பள்ளியும் அந்தணரிருக்கையும் கூபமும் சூளனும் காவு முதலாகவுடையன அழியாத இயல்பினையுடைத்தாய் நிறுக்கப்பட்ட குழிப்பூழி குழிக்கொத்துக் கல்லப்பட்டமண் நாற்றமும் மதுரநாறி இரதமும் மதுரமாகித் தானும் திண்ணிதாய் என்பும் உமியும் பரலுஞ் சேர்ந்திலம் களித்தரை உவர்த்தரை ஈளத்தரை பொல்லாச்சாம்பற்றரை பொடித்தரை என்னுசொல் லப்பட்டன ஒழிந்து ஹரின் நடிவணதாகித் தேரோடுமவீதிகளெதிர்முகமாக் கிக்கொள்ளல்வேண்டுமென்க.

நிலந்தான் வன்பால் மென்பால் இடைப்பாலென்று மூன்றுவகைப்படும். அவற்றுள்,

வன்பாலாவது குழியின்மண் மிகுவது.

மென்பாலாவது குறைவது.

இடைப்பாலாவது ஒப்பு.

ஈண்டு இவை பெரும்பான்மையாற் கொள்ளப்படும்.

அதுவேயென்ற இலேசினானே துவர்ப்புப் பயமும், புளிப்பு நோயும், காழ்ப்புப் பசிநீடுதலும், கைப்புக் கேடும், உவர்ப்புக் கலக்கமும்பண்ணுமாதலான் நீக்கப்பட்டன.

என்னை ? "உவர்ப்பிற் கலக்கமாங் கைப்பின்வருங் கேடு, துவர்ப்பிற் பய மாஞ் சுவைக - ளவற்றிற், புளிநோய் பசி காழ்ப்புப் பூங்கொடியே தித்திப், பளி பெருகு மாவ தரங்கு" என்றார் பாதசேனபதியார்.

இதனுள் நாற்றமென்பன கொள்ளிலையும் செங்நெல்லும் சண்பகமும் சரபுன்னையுமெனவிவை. ஒழிந்தன தீமைப்பால.

இங்ஙனம் ஒருவகையான் அரங்கிற்கு நிலம்வகுத்துக்கொண்டென்க.

கூவ - கஂ. [2] புண்ணிய..... .....விரலாகவென்றது - பொதியின்மலை முதலாய புண்ணியவரைப்பக்கங்களிலே நெடிதாகி உயரவளர்ந்த மூங்கிலிற் கண்ணொடு கண்ணிடை ஒருசாணுக வளர்ந்ததுகொண்டு நூல்களிற்சொல்லு கின்றபடியே அரங்குசெய்ய அளக்குங்கோல் உத்தமன்கைப்பெருவிரலில் இருபத்துநாலுகொண்டது ஒருகோலாக நறுக்கியென்க.

---

[1] ஆடலும் பாடலுங் கொட்டும் பாணியும், நாடிய வரங்கு சமைக்குங் காலைத், தேவர் குழாமுஞ் செபித்த பள்ளியும், புள்ளின் சேக்கையும் புற்று நீங்கிப், போர்க் களி யானைப் புரைசா ராது, மாவின் பந்தியொடு மயங்கல்செய் யாது, செருப் புகு மிட்டமுஞ் சேரியு நீங்கி, துண்மை யுணர்ந்த திண்மைத் தாகி, மதுரச் சுவைமிகூஉ மதுர நாறித், தீரா மாட்சி நிலத்தொடு பொருத்திய, வித்திறத்த தாகு மரங்கினுக் கிடமே."

[2] "அரங்கி னுயரமு மகலமு நீளமும், பொருந்த நாடி யுரைக்குங் காலைப், பெருந் திண் மால்வரைச் சிறுகுழை கண்ணிற், கண்ணிடை யொருசாண் வளர்ந்தது கொண்டே, இருபத்து நால்விரற் கோலள வதனு, லெழுகோ லகலத் தெண்கோ னீளத், தொருகோ லுயரத் துறுப்பின தாகி, யுத்தரப் பலகையோ டரங்கின் பலகை,

என்னை? "ஒத்த வணுமுதற் றுயர்ந்துவரு கணக்கி, னுத்தமன் பெருவிர லிருபத்து நாலுள, கோலே கோடல் குறியதிற் றோரே" என்றாகலின்.

இதனுள் அணுமுதற் பெருவிரலளவு உயர்ந்துவருமாறு: அணு எட்டுக் கொண்டது தேர்த்துகள்; தேர்த்துகள் எட்டுக்கொண்டது இம்மி; இம்மி எட்டுக்கொண்டது எள்ளு; எள்ளு எட்டுக்கொண்டது நெல்லு; நெல்லு எட்டுக் கொண்டது பெருவிரலெனக்கொள்க.

உத்தமரரவார்: கழிய நெடுமையும் கழியக் குறுமையுமில்லோர்.

கஅக - உ. எழுகோல்.....உறுப்பினதாகியென்றது - இக் கோலால் எழுகோலகலமும் எண்கோணீளமும் ஒருகோற் குறட்டியாமுமுடைய தாயென்க.

என்னை? "அக்கோ லேழகன் றெட்டு நீண்டி, மொப்பா லுயர்வு மொருகோ லாகு, நற்கோல் வேந்த னயக்குறு வாயின், முக்கோ ருறு முயரவு மூரித்தே" என்றார் செயிற்றியனார்; "அக்கோ லொருகோ லளவுறக் கல்வி, பிக்க கம்மியர் வடகலை விதிமுறைக், கூறின ரன்றியுங் குறிவகைக் கேற்றன, வேற்க செய்க வியல்புணர்ந் தோரே" எனக்கூறினாருமுளர்.

கஅஉ - சு. உத்தரப்பலகை.....அரங்கினென்றது தூணத்துக்கு மீது வைத்த உத்தரப்பலகைக்கும் அரங்கினிடத்து அகலத்துக்கிட்டபலகைக் கும் இடைநின்றநிலம் நான்கு கோலாக உயரங்கொண்டு இத்தன்மையவாய அளவுக்குப்பொருந்தவுத்த வாயில் இரண்டினையுடைத்தாகச்செய்யப்பட்ட அரங்கினிடத்தென்க.

கஅஙு. வாயிலிரண்டென்றது:—அரங்கிற்கு உட்புகவும் புறப்படவுஞ்ச மைத்தவாயிலெனக்கொள்க.

'எற்ற' என்றதனால் கரந்துபோக்கிடனும், கண்ணுளார் குடிளைப்பள்ளியும், அரங்கமும், அதனெதிர் மன்னர் மாந்தரோடிருக்கும் அவையரங்கமும், இவற் றினைச்சூழ்ந்த புவிநிறைமாந்தர் பொருந்தியகோட்டியும் முதலாயின கொள்க.

கஅசு. தோற்றியவரங்கென்றது - இப்படியாகச் சமைக்கப்பட்டு நூல் சொல்லுகின்றபடியெல்லாம் தோற்றியவரங்கென்க.

கஅசு - எ. தொழுதனரேத்த.....மேனிலைவைத்தென்றது— அந்தணர் அரசர் வணிகர் சூத்திரரென்று சொல்லப்பட்ட [1] நால்வகைவரு ணப்பூதரையும் எழுதி மேனிலத்தே யாவரும் புகழ்ந்து வணங்க வைத்தென்க.

வைத்த விடைநில நாற்கோ லாகப், பூதரை யெழுதி மேனிலை வைத்து, நந்தி யென் னுந் தெய்வமு மமைத்துத், தூணிழற் புறப்பட மாண்விளக் கெடுத்து,.....கோவும் யானையுங் குரங்கும் பிச்சனும், பாவையும் பாங்குடைப் புருடா மிருக மும், யாவையு மெழுதி யிந்நிலம் விளங்கப், பாவையர்க் கியற்றவ தரங்கெனப் படுமே" என்றார் சுத்தானந்தப்பிரகாசத்திலும்.

[1] நால்வகைவருணப்பூதங்கள்: க. வச்சிரதேகன். உ. வச்சிரதந்தன். ங. வரு ணன். ச. இரத்தகேசுவரன்.

என்னை ? [1] கூறிய * வுறுப்பிற் குறியொடு புணர்ந்தாங், காடுநர்க் கியற்று மரங்கி னெற்றிமிசை, வழுவில் பூத நான்கு முறைப்பட, வெழுதின ரியற்ற லியல்புணர்ந் தோரே" என்றுராகலின்.

இப்பூதநான்கின் உண்டியும் அணியும் ஆடையும் மாலையும் சாந்தமும் பொழுதும் செயலுமுதலியவெல்லாம் அழற்படுகாதைக்கண்ணே விரித்துக் கூறுதும்.

கஅ. தூணிழற்.....எடுத்தாங்கென்றது - தூண்களின்நிழல் நாயகப் பத்தியின்கண்ணும் அவையின்கண்ணும் படாதபடி மாட்சிமைப்பட்ட நிலை விளக்குநிறுத்தியென்க.

என்னை ? "விளக்கியல் வனப்பும்" என்றுராகலின்.

கஉக - கஎ. ஒருமுகவெழினியும்.....வகுத்தாங்கென்றது - இடத்தூணிலேயிடத்தே உருவுதிரையாக ஒருமுகவெழினியும் இரண்டுவலத்தூணி டத்தும் உருவுதிரையாகப் பொருமுகவெழினியும், மேற்கட்டித்திரையாகக் கரந்துவரலெழினியும் செயற்பாட்டினே வகுத்தென்க.

மேற்கட்டித்திரையாய்நிற்பது ஆகாயசாரிகளாய்த் தோன்றுவார்க்கெனக் கொள்க; என்னை ? "முன்னிய வெழினிதான் மூன்று வகைப்படும்" என்றுர் மதிவாணனர் ; "அரிதரங்கிற், செய்தெழினி மூன்றமைத்துச் சித்திரத்தாற் பூதரையு, மெய்த வெழுதி யியற்று" என்றுர் பரதசேனபதியாரும்.

ககக. ஓவிய விதானத்தென்றது - சித்திரவிதானத்தையுமுடைத்தாயென்க.

ககக - உ. உரைபெறு.....நாற்றியென்றது - சந்திரன் குரு அங்காரகனென்னும் வெண்ணீர்மை பொன்னீர்மை செங்கீர்மையென்னும் புகழ்மையைத் தமக்குரிமையாகப்பெற்ற முத்துமாலைகளாற் * சரியும் தூக்கும் தாமமுமாக நாற்றியென்க.

ககஙு. விருந்துபட.....அரங்கத்தென்றது - புதுமையுடைத்தாகச் சமைத்த அரிய தொழிலையுடைய அரங்கின்கணென்க.

வகுத்தனர்கொண்டு வைத்து எடுத்து வகுத்து நாற்றிக்கிடந்த அரங்க மென்க.

[தலைக்கோல் அமைதி.]

ககச - உஅ. பேரிசை மன்னர்.....வைத்தாங்கு

ககச - ஙு. பேரிசை மன்னர்.....கொண்டென்றது - பெரிய புகழை யுடைய அரசர்பொருட்டைந்து புறங்கொடுத்தவழிப்பெற்ற அழகிய இயல்பினை யுடைய வெண்கொற்றக்குடைக்காம்பைத் தலைக்கோலாகக்கொண்டென்க.

இனி மாற்றுர் எயிற்புறத்து மினைக்கண் வெட்டிக்கொண்ட மூங்கிலென்று மாம்.

---

[1] சிவகசிந்தாமணி, கூஎஉ - த. மேற். (பி - ம்.) * 'அரங்கிற்' † 'சல்லியும்'

இது கூறிற்று, வேத்தியலும் பொதுவியலுமாகலான்.

இவற்றுட் பொதுவியற்கு மலியின் மூங்கிலுமாம்.

ககசு - எ. கண்ணிடை.....போக்கியென்றது - கண்தோறும் நவமணிகளாற்கட்டி இடைநிலங்களைச் சாம்பூநதமென்னும் பொற்றகட்டாற்செறியு மலக்கமாகக்கட்டியென்க.

மலக்கம் - மாறு.

என்னே ? "புண்ணியமால் வெற்பிற் பொருந்துங் கழைகொண்டு, கண்ணிடைக் கண்சாண் கனஞ்சாரு - மெண்ணிய, நீளமெழு சாண்கொண்டு நீராட்டி நன்மைபுனை, நாளிற் றலைக்கோலை நாட்டு", "ஆவு தகத்தியனூர் சாபத்தா னூன் மூங்கில்" என்னூர் பரதசேனாபதியார்.

ககஅ - உ0. காவல் வெண்குடை.....தலைக்கோலென்றது - அரசன் கோயிலிலே காப்பமைத்திருத்தி இந்திரன்மகன் சயந்தனுக நினைத்து மந்திரவிதியாலே பூசித்து வழிபடும் இத்தலைக்கோலையென்க

சயந்தனுதல் [1] முன்னர்க் கூறிப்போந்தாம்.

கஉக - உ. புண்ணிய நன்னீர்... .....மாலையணிந்தென்றது - நாடகக்கணிகை தலைக்கோல் கொள்ளுஞான்று புண்ணிய நதிகளினீரைப் பொற்குடத்திலே முகந்துவந்து இத்தலைக்கோலை நீராட்டிப் பின்பு மாலைகளுஞ் சூட்டியென்க.

முன்கூறிப்போந்த ஆடலாசிரியன் முதலாயினர் அரங்கத்தின்கண்ணே இத்தலைக்கோலைவைத்துப் பொற்குடத்தாணீராட்டியபின் மாலைசூட்டியென இயைக்க.

கஉங. நலந்தருநாளாலென்றது - இதற்குப்பொருந்திய நல்லநாளினாலென்க.

அவையாவன :—பூராடம் கார்த்திகை பூரம் பரணி இரேவதி திருவாதிரை அவிட்டம் சித்திரை விசாகம் மகம் எனவிவை.

நாளென்னுது 'நலந்தருநாள்' என்ற இலேசினால் இராசிமுதலியனவும் கொள்க.

இராசிகளாவன :—இடபம் சிங்கம் துலாம் கற்கடகம் விருச்சிகம் மிதுனம் எனவிவை.

என்னே ? "பூராடங் கார்த்திகை பூரம் பரணிகளுஞ், சோ திரையவிட்டஞ் சித்திரையோ - டாருமுற, மாசியிடப மரிதுலை வான்கடகம், பேசிய தேண்மிதுனம் பேசு" என்னூர் மதிவாணனாரும்.

நாளால் நீராட்டியென முன்னுஞ்சேர்க்க.

கஉங - ச. பொலம்பூண்... ....கொண்டென்றது - பொன்னாற்செய்த பூணையும் பட்டத்தினையுமுடைய பட்டவருத்தனத்தின் கையிலே வாழ்த்துடனேகொடுத்தென்க.

---

[1] இப்புத்தகம் எஅ - ஆம்பக்கம் பார்க்க.

கஉடு - அ. முரசெழுந் தியம்ப..... .....வைத்தாங்கென்றது - வீர முரசுமுதலாய மும்முரசுகளும் எழுந்துமுழங்க அவையேயன்றிப் பலவாச்சியங்களுமுழங்க அரசனும் அமாத்தியர் புரோகிதர் சேனாபதித்தொடக்கத்தாருங் கூட வீதியின்கணின்ற தேரினை இந்தயானையோடும் உடன்கொண்டு வலஞ் செய்து தேர்மிசைநின்ற கவியின்கையிலே இத்தலைக்கோலைக் கொடுப்ப வுரை வலமாகவந்து அரங்கத்தின்கட்புகுந்து தலைக்கோலை எதிர்முகமாக வைத்துபினென்றவாறு.

என்னை? "பிணியுங் கோளு நீங்கிய நாளா, லணியுங் கவினு மாசற வியற்றித், தீதுதீர் மரபிற் றீர்த்த நீரான், மாசது தீர மண்ணுகீ ராட்டித், தொடலையு மாலையும் படலையுஞ் சூட்டிப், பிண்ட முண்ணும் பெருங்களிற்றுத் தடக்கைமிசைக், கொண்டு சென்றுநீஇக் கொடியெடுத் தார்த்து, முரசு முருடு முன்முன் முழங்க, வரசு முதலான வைம்பெருங் குழுவுந், தேர்வலஞ் செய்து கவிகைக் கொடுப்ப, வூர்வலஞ்செய்து புகுந்த பின்றைத், தலைக்கோல் கோட றக்க தென்ப" என்றூர் செயிற்றியனூர்.

[அரங்கிற்புதுநீர் ஆடுகின்றவியல்பு.]

சுஉக - எடு. இயல்பினின் வழாஅ.....மனையகமறந்தென்.

கஉக. இயல்பினின்..... .....முறைமையினென்றது-அரசன்முதலியோர்யாவரும் வரிசைக்கேற்ற இருக்கைமுறைமைகளிலே இருந்தபின்னரென்க.

கசுஅ. குயிலுவ.....நிற்பவென்றது - குயிலுவக் கருவியாளர்தாம் நிற்கக்கடவ முறைமைகளிலே நிற்கவென்க.

முறைமையாவது:—"ஆடிட முக்கோ லாட்டுவார்க் கொருகோல், பாடுநர்க் கொருகோ லந்தர மொருகோல், குயிலுவர் நிலையிட மொருகோல்" என்று நூலிற்கூறின முறைமையென்க.

குயிலுவராவார் - இடக்கைமுதலாய கருவியாளர்.

கசுக - உ. வலக்கான் ....பொருந்தியென்றது-நாடகக்கணிகையாகிய அரங்கேறுகின்றமாதவி அரங்கத்திலே வலக்கால் முற்பட விட்டேறிப் பொருமுகவெழினிக்கு நிலையிடனான வலப்பக்கத்தூணிடத்தே சேர்தல் வழக்கென்னுமிடத்தாலே சேர்ந்தென்றவாறு.

கசுக - ச. இந்நெறிவகையால்..... .....மகளிருமென்றது - மாதவி வந்தேறிநின்றபடியே இடத்தூண்நிலையிடமாகிய ஒருமுகவெழினியிடம்பற்றிய பழையநெறியியற்கையையுடைய தோரிய மடந்தையருமென்க.

தோரியமடந்தையராவார் - ஆடிமுதிர்ந்தவர்; "இந்நெறி வகையா லீடத் தூண் சேர்வோ, டொன்னெறி மரபிற் றோரிய் மகளே" எனவும், "தலைக்கோலரிவை குணத்தொடு பொருந்தி, நலத்தகு பாடலு மாடலு மிக்கோள், * சொலப்படு கோதைத் தோரிய மகளே" எனவும் சொன்னராகலின்.

(பி - ம்.) * 'இயற்படு'

கஙரு - சு. சீரியல் .. . . பாட வென்றது - நன்மையுண்டாகவும் தீமைநீங்கவும்வேண்டித் தெய்வப்பாடல் இரண்டினையும் பாடவென்றவாறு.

இனிச் சீரியல்பொலிய நீரலநீங்கவென்பதற்குத் தாளவியல்பு பொலிவு பெற அவதாளநீங்கவென்றுமாம்.

வாரமிரண்டாவன: ஒரொற்றுவாரம், ஈரொற்றுவாரமென்னுஞ்செய்யுள். அவை தாளத்து ஒருமாத்திரையும் இரண்டுமாத்திரையும் பெற்றுவரும்.

கஙஎ - அ. பாடியவாரத்து... ....கருவிகளெல்லாமென்றது- தெய்வப்பாடலின் இறுதியிலேநின்று கூடி இசையாநிற்கும், கருவிகளெல்லா மென்றவாறு.

இக்கருவிகள் எவ்வண்ணங்கூடியிசைத்தனவோவெனின்,—

கஙக. குழல்வழிநின்றதியாழேயென்றது - வங்கியத்தின்வழியேநின்றது யாழ்ப்பாடலென்றவாறு.

எனவே, மிடற்றுவழியது யாழாகலான் மிடற்றுவழிப்பாடலும் குழல் வழித்தெனக்கொள்க.

கஙக - சஅ. யாழ்வழித் தண்ணுமை நின்றது தகவேயென்றது - யாழ்ப் பாடலின்வழியே அதற்குத்தகத் தண்ணுமையாகிய மத்தளநின்றதென்க.

கசஅ - சக. தண்ணுமை.....முழவேயென்றது - மத்தளக்கருவியின் பின்வழியே குடமுழாநின்றதென்க.

கசக - உ. முழவொடு.....ஆமந் திரிகையென்றது - முழ வொடுகூடி நின்று வாச்சியக் கூறுகளை அமைத்தது ஆமந்திரிகையென்னுங்கருவி யென்றவாறு.

ஆமந்திரிகை - இடக்கை. நின்றிசைத்தது கருவியென்னுது ஓசையென்க. அஃதேல் மிடற்றுப்பாடல் சொல்லிற்றிலரெனின், வாரப்பாடல் பாடியபின்ன ரெனவே மிடற்றுப்பாடலுமடங்கும்.

கசஙு. ஆமந்திரிகையோடந்தரமின்றியென்றது - இவ்வாமந்திரிகையோ டேமுன்சொன்ன குயிலுவக்கருவிகளனைத்தும் பருந்தும்கிழலும்போல ஒன்றுய் நிற்பவென்றவாறு.

கசச. கொட்டு... .....ஆகவென்றது - ஒருதாளத்திற்கு இரண்டு பற்றுகவென்க.

கசஞ. கட்டிய.....போக்கியென்றது - பஞ்சதாளப்பிரபந்த மாதக் கட்டப்பட்ட தேசியொத்தை ஒருதாளத்திற்கு இரண்டுபற்றுகப் பத்தும் தீர்வு ஒன்றுமாகப் பதினெருபற்றுலே தேசிக்கூத்தையாடிமுடித்தென்க.

கசசு. வந்த.....வழாமலென்றது - இப்படிச்செய்கை நாடக நூல்களினமைந்தமுறைமையாகலான் அம்முறைமை வழுவாமலென்க.

கசள. அந்தரக் கொட்டுட னடங்கிய பின்னரென்றது.....

இதனை அந்தரக்கொட்டென்றும், முகமென்றும் ஒத்தென்றும் கூறுப. இந்த ஒத்து ஆடினபின்னரல்லது உருக்காட்டுதல் வழக்கல்லவென்ப; என்னை? "முகமா தெதிரி யோகப் பொருட்டே" என்றாராகலின்.

கசஅ - கூ. மீத்திறம் படாமை... .....பண்மேலென்றது - மங்கலப்பண்ணுய் நரப்படைவுமுடைத்தாயிருக்கின்ற பாலைப்பண்ணை அளவுகோடாதபடி ஆளத்தியிலேவைத்து அதன்மேலேயென்க.

கநிo நான்கு ஞரீஇய நன்கனமறிந்தென்றது - மங்கலச்சொல்லினையுடைத்தாய் நாலுறுப்பும் குறைபாடில்லாத உருவுக்குச் சொற்படுத்தியும் இசைப்படுத்தியுமறிந்து பாட்டும் கொட்டும் கூத்தும் நிகழ்த்தியென்க.

நாலுறுப்பாவன :—உக்கிரம், தூருவை, ஆபோகம், பிரகலியென்பன. ஈண்டு நாலுறுப்புக்களும் குறைபாடில்லாத உருவெனவேண்டியது, மூன்றுறுப்பாலே வருவனவுமுளவாதலின். அவை இரண்டாமடியே ஈற்றடியாகப் பாடிமுடிவன. அவை மங்கலத்துக்குப் பொருந்தாவெனக்கொள்க.

கநிக. மூன்றளந்தொன்று கொட்டியதனையென்றது - அதனை மூன்றுத்துடையமட்டதாளத்திலே எடுத்து ஒரொத்துடைய ஏகதாளத்திலேமுடித்தென்க.

கநிஉ. ஐதுமண்டிலத்தாலென்றது - அழகிய மண்டிலநிலையாலென்க.

தேசிக்கூத்தெல்லாம் மண்டிலநிலையாதலின், ஐதுமண்டிலத்தாலென்றார். என்னை? "கொண்ட தேசிப் பகுதி யெல்லா, மண்டில நிலையின் வருதக வுடைத்தே" என்றாராகலின்.

கூடை போக்கியென்றது - தேசிக்கு ஒற்றித்தொக்தலும் இரட்டித் தொக்தலுமேயாகலின் அவற்றை ஆடி முடித்தென்க.

இவைகளல்லது இரட்டிக்கிரட்டி வரப்பெறுதென்க.

கநிசு. வந்தவாரம் வழிமயங்கியபின்றையென்றது - முதனடையினும் வாரத்தினும் தேசிக்கூத்தெல்லாம் ஆடிமுடித்தென்க.

முடிக்கை - பண்மாறு.

இனி மார்க்கம் கூறுகின்றது:—

கநிசு. ஆறு.....போக்கியென்றது - பஞ்சதாளப்பிரபந்தமாகக்கட்டப்பட்ட வடுகிலொத்தையும் தேசியிலொத்தைக்காட்டினும்போல இரட்டிக்கிரட்டியாக ஆடியென்க.

கநிநி - சூ. கூறிய வைந்தின்.....பின்றையென்பது - சொல்லிப்போந்த தேசியைப்போல வடுகும் மட்ட தாளமுதலாக ஏகதாள மீறுக வைசாகநிலையிலே ஆடிமுடித்தபின்னரென்க.

---

[1] கீதவடிவுகள் மூன்றென்பர் சுத்தானந்தப்பிரகாசமுடையார்; மூன்றுவன: உக்கிரம், தூருவை, ஆபோகமென்பன. தூருவையென்றது துருமையெனவும் ஆபோகமென்றது ஆயோகமெனவும் பிரதிகளில் வேறுபட்டிருக்கின்றன.

என்னை ? ''வைசாக நிலையே வடுகிற்கும் வரையார்'' என்பராகலின்.

கருஎ. பொன்னியல் பூங்கொடி புரிந்துடன் வருத்தனவென்றது - பொன்னனியன்றதோர் பூங்கொடி கூத்துநடித்தாற்போலவென்றவாறு.

கருஅ - கூ. நாட்டிய நன்னூல்.....ஆதலினென்றது - தாண்டவம் நிருத்தம் நாட்டியமென்னும் மூன்றுகூறுபாட்டினும் நாட்டியமென்றது புற நடத்தையாகலின், அதனை நூல்களிற்சொன்ன முறைமை வழுவாமல் அவி நயித்துப் பாவகந்தோன்ற விலக்குறுப்புப் பதினுலின் நெறிவழுவாமல் ஆடிக் காட்டினளாதலானென்றவாறு.

அன்றி, நாட்டியநன்னூல்.....ஆதலினென்றதற்கு இக்கதையிற் கூறிய முத்தமிழ்வகையையும் காட்டினளாதலினென்றுமாம்.

கருக - கூ0. காவல் வேந்தன்..... . ...வழாமையென்றது - அர சன், இம்மாதவியுடைய கூத்துக்கும் பாட்டிக்கும் அழகுக்குமேற்ற முறைமை யினுல் ஒன்றும் வழுவாமலென்றவாறு.

என்சொல்லியவாறுமோவெனின்,—நாடகமகள் அரங்கேறக்கண்ட அர சன் அவள்மேற் காமக்குறிப்புடையனுதலியல்பு. அங்ஙனம் மாதவியாடல் பாடல் அழகென்னுமிவைமுதலிய கண்களிப்பக்கண்டும் செவிகளிப்பக்கேட்டும் நெஞ்சமழிந்து காமக்குறிப்புமீதூரவும் நாம் இவனை வரையின் நலைபிறக்கு மென்பதுகருதி வரையாளுயினு னென்பதாம்.

இலைப்பூங்கோதையைத் தலைக்கோற்கு அடையாக்கினுமமையும். அன்றி, இலைப்பூங்கோதை - அரசனுடையமாலை; அதனுல் தன்கூத்தும் பாட்டுமென் னும் இவைமுதலியவற்றினியல்பின் ஒன்றும்நீங்காமலென்றுமாம். இயல்பி னின் - இயல்பினுல்.

ககூக. தலைக்கோலெய்தியென்றது - தன்வரிசைக்குத்தக்கபடியே தலைக் கோற் பெயர்பெற்றென்றவாறு.

தலையரங்கேறியென்றது-முன்னரங்குமுதலிய எல்லாமுதன்மையும் பெறு வதற்குக்காரணமாகிய தலையரங்கேறியென்றவாறு.

ககூஉ - ஙு. விதிமுறை.....பெற்றனளென்றது-இந்நாடகக்கணிகையர்க் குத் தலைவரிசை ஆயிரத்தெண்கழஞ்சுபொன் பரிசம்பெறுகை நூல்வழக்காத லின் இவளும் அவ்வாயிரத்தெண்கழஞ்சுபொன் பரிசம்பெற்றுளென்றவாறு.

என்னை? ''மூட்டில் பாணரு மாடியன் மகளிரு, மெட்டொடு புணர்ந்தவா யிரம்பொன் பெறுப'' என்பராகலின்.

ஒருமுறையாகப் பெற்றனள் - ஒருநாளைக்குப் பரிசமாகவென்று அரசனுற் பெற்றனளென்க.

பெறுகை - நிலைப்பிடிகையுமாம். ஆயிரம் பரிசத்துக்கும் எண்கழஞ்சு மெய்ப்போகத்துக்குமாக நிச்சயித்தென்க.

ககூங. அதுவேயென்றது - அன்றுதொடங்கி அதுவே பரிசமானதென்க.

கசுஎ. தூறுபத் தடுக்கி எட்டுக்கடைநிறுத்தவென்றது - தூற்றைறப்பதின் மடங்காக அடுக்கி அதன்கடைக்கண்ணே எட்டடைநிறுத்தினவென்றவாறு.

கசுஏ - கூ. வீறுயர்பசும்பொன்... .....நிறுத்தவென்றது - வீறுபெற் றுயர்ந்த பசும்பொன்னே விலையாகப்பெறுவது இம்மாலே; இம்மாலேபெற்ற பொன்தந்து இதனை வாங்கிச்சூடுநர் மாதவிக்கு மணமகனுதலமையுமென்று சொல்லி மான்போன்ற நோக்கினையுடையாளோர்கூனிகைக்கொடுத்து நகரியிற் பெருந்தெருவிலே விலைக்கு விற்பாரைப்போல்வதொரு பண்பினுல் நிறுத்த வென்றவாறு.

இவளுக்குப்பரிசமென்னுது மாலைக்குப்பரிசமென்று மிகுத்துக்கூறினுர். வீறுயர்பசும்பொன் - மாற்றுன் உயர்ச்சிபெற்ற பசியபொன்; ஆவது இளிச் சிறை. மாலை - அரசன்பாற்பெற்ற பசும்பொன்மாலை. இது படிக்கட்டாள.

கஎ0 - எஉ. மாமலர்நெடுங்கண்.. .....மணமனைபுக்கென்றது - திருமலரென்று சொல்லப்பட்ட தாமரைமலர் போன்ற கண்ணையுடைய மாதவி யுடைய பரிசமாலையைக் கோவலனெனப்படும் வாணிகன்வாங்கிக் கூனியுடனே அவள்மனையிற்சென்றுபுக்கென்றவாறு.

வாங்கிப் புக்கென இயைக்க.

கஎஉ - ச. மாதவி தன்னுெடு.....ஆயினனென்றது - இங்ஙனம்புக்க கோவலன்மாதவிதன்னுடன் மணந்த அப்பொழுதே அயர்ந்தனனுய் மயங்கி அவளை நீங்குதல் கூடாதவிருப்பினையுடையனுயினனென்க.

வைகல் - ஈண்டு ஒருபொழுது. விடுதலறியா - விடாத; ஒருசொல்

கஎடு. வடிநீங்கு சிறப்பிற்றன் மனையக மறந்தென்றது-குற்றமற்ற கற்புச் சிறப்பினையுடைய மனைவியையும் மனையகமறந்தென்க.

ஆடல் முதலியன காட்டல்வேண்டி ஆடலோனும் இசையோனும் இயற் புலவனும் தண்ணுமையோனும் குழலோனும் யாழோனுங்கூடி வகுத்தனர் கொண்டு தொழுதனரேத்த எழுதி வைத்து எடுத்து வகுத்து நாற்றிக் கிடந்த அரங்கத்துக் கொண்டு ஒழுக்கிப் போக்கி ஆகெனச் செய்து ஏந்தி அணிந்து கொண்டு இயம்ப ஆர்ப்பச் செய்து கொடுப்ப வைத்தபின் நிற்ப ஏறிப் பொருந் திச் சேர்ந்தமகளிரும் பொலிய நீங்கப் பாட இசைக்கும், கருவிகளெல்லாம். நின்றது; நின்றது; நின்றது; நின்றிசைத்தது; பதினெண்ணுபோக்கி அம் மூறைபோக்கி வகுத்தெனக் கடைப்பிடித்துக் காட்டினளாதலின், எய்தி ஏறிப் பெற்றனள்; பெற்று நிறுத்தக் கோவலன்வாங்கி மனைபுக்கு அயர்ந்து மயங்கி மறந்து விருப்பினனுயினனென்க.

பா, நீலமண்டிலம்.

கூ.—அரங்கேற்றுகாதை முற்றிற்று.

நான்காவது

அந்திமாவஸ்சிறப்புச்செய்காதை.



விரிகதிர் பரப்பி யுலகமுழு தாண்ட
வொருதனித் திகிரி யுருவோற் காணே
னங்கண் வானத் தணிநிலா விரிக்குந்
திங்களஞ் செல்வன் *யாண்டுளன் கொல்லெனத்
திசைமுகம் † பசந்து செம்மலர்க் கண்கண்
முழுநீர் வார முழுமெயும் பனித்துத்
திரைநீ ராடை யிருநில மடந்தை
[1] யரைசுகெடுத் தலம்வரு மல்லற் காலைக்
கறைகெழு குடிகள் கைதலை வைப்ப
வறைபோகு குடிகளொ டொருதிறம் பற்றி
வலம்படு தானை மன்ன ரில்வழிப்
புலம்பட விறுத்த விருந்தின் மன்னரிற்
முழுத்துணை ‡ துறந்தோர் தனித்துய ரெய்தக்
§ காதலர்ப் புணர்ந்தோர் களிமகிழ் வெய்தக்

உ. திகிரி - தோழி.

நு - சு. திசைமுகம் - திசையாகியமுகம். மலர்க்கண் · மலர்ராகிய கண் ; கண்ணீர்-கள்ளாகியநீர். பனித்தென்றார், மாலைக்காலத்துப் பனியுமுண்டாகலான்.

அ. அரசு - தன்கொழுநன் ; என்றது ஆதித்தனை. கூ. கறை - கடமை.

கo - கஙு. அறைபோகு குடிகள் - கீழற்றப்போன குடிகள். விருந்தின் மன்னர் - வேற்றரசர் ; இன், போல. தாழ்தல் - தங்குதல்.

கறைகெழுகுடிகள் கண்ணகிமுதலான தாழ்துணைதுறந்தோர்க்கு உவமை; விருந்தின்மன்னர் மாதவிமுதலான காதலர்ப்புணர்ந்தோர்க்குவமை.

---

[1] இலப். உள: க்ஙஉ. (பி - ம்.) * 'யாங்குளன்கொல்.' † 'பயந்து.' ‡ 'இழந்தோர்.' § 'காதலிற்புணர்ந்தோர்களிமகிழ்பெய்த.'

கடி [1] குழல்வளர் முல்லையிற் கோவலர்தம்மொடு
மழலைத் தும்பி வாய்வைத் தூத
வறுகாற் குறும்பெறிந் தரும்புபொதி வாசஞ்
சிறுகாற் செல்வன் மறுகிற் றூற்ற
வெல்வீ மகளிர் மணிவிளக் கெடுப்ப

உ0 மல்லன் மூதூர் மாலைவந் திறுத்தென
[2] வினைய ராயினும் பகையரசு கடியுஞ்
செருமாண் டென்னர் குலமுத லாகலி
னந்தி வானத்து வெண்*பிறை தோன்றிப்
புன்கண் மாலைக் குறும்பெறிந் தோட்டிப்

கடி - சு. குழல்வளர்முல்லை.....ஊத - கோவலரூதும் குழலிலும் வளர்கின்ற முல்லையிலும் கோவலரும் தும்பியும் வாய்வைத்தூத; இது நிரல் நிறை; (பா) அன்றிக் கோவலர்குழலினுண்டாகிய முல்லைப்பண்ணை..... பூவிலே தும்பி ஊதவென்றுமாம்.

கள - உ0. அறுகால்-ஆறுகாலையுடையவண்டு. குறும்பெண்ணூர், தென்றல் தளிர்ப்பித்தும் பூப்பித்துஞ்செய்யத் தான் நடுவே புகுந்து உண்டலான். சிறு காற்செல்வன் - மந்தமாருதமாகிய செல்வன். இறுத்தென - இறுத்ததாக.

அ - உ0. அல்லற் காலையிலே பிரிந்தோர்தூயரெய்தப் புணர்ந்தோர் மகிழ் வெய்தத் தும்பிஊத வாசத்தைச் செல்வன் தூற்ற மகளிர் விளக்கெடுப்ப விருந் தின்மன்னரைப்போல மாலைவந்திறுத்ததென்க.

உசு. மாலையைக் குறும்பெண்ணூர், [3]இடைநின்றகாலம்பார்த்து வருதலான்.

உசு. மீனரசு - மீனுகிய அரசு; அரசனுலாவப்படுமிடமும் அரசெனப் படும். வெள்ளிவிளக்கம் - வெண்மையாகிய ஒளி; நிலா.

---

[1] "குழல்வளர்... .....ஊத' என்புழிக் குழல்வளர்முல்லையென்று கூறிய பொழுதே ஆயருதுங்குழலிலே எழுந்த முல்லையென்னும் பண்ணையும் மயிரிலே இடந்த முல்லையென்னும் பூவையும் ஒருகாலத்தே புலப்படுத்தி இரண்டற்கும் பிரிவில வாய் நின்றவாறுகாண்க. இங்ஙனம் ஒருசொல் ஒருகாற் கூறுதற்கண் இரண்டுபொருளே உணர்த்துதல் வழுவேனுமமைகவென அமைத்தார்; இதனை உவமவியலுள், 'ஓரிக் கூறலும்' என்னுஞ்சூத்திரத்துச் செய்யுட்கு இலக்கணமாகக்கூறுமாறும் உணர்க. இங்ஙனம் சான்றோர் செய்யுட்களுட்பல விடத்தும் வருமாறுணர்க" (தொல். எச்ச. சூ. கூசஎ-நி);"'குழல்வளர்.....ஊத' இதுசொல்வேறுபடாது பொருள் வேறுபட்டது" (இ - கொ. சூ. கூகூ - உரை.)

[2] "இனைய தாயினுங் கினையரா வெறியு, மருநரை யுருமிற் பொருநரைப் பொருச்' செருமாண் பஞ்சவர்" (புறநா. நிஅ) [3] கலித்தொகை, ககஅ - அ.

(பி - ம்.) * 'பிறைத்தோன்றி'

பான்மையிற் றிரியாது பாற்கதிர் பரப்பி
மீனர சாண்ட வெள்ளி விளக்கத்
தில்வளர் முல்லையொடு மல்லிகை * யவிழ்ந்த
பல்பூஞ் சேக்கைப் பள்ளியுட் பொலிந்து
செந்துகிர்க் கோவை சென்றேந் தல்கு
† லந்துகின் மேகலை யசைந்தன வருந்த
[1] நிலவுப்பயன் கொள்ளு நெடுநிலா முற்றத்துக்
கலவியும் புலவியுங் ‡ காதலற் களித்தாங்
கார்வ நெஞ்சமொடு கோவலற் கெதிரிக்
கோலங் கொண்ட மாதவி யன்றியுங்
குடதிசை மருங்கின் வெள்ளயிர் தன்னொடு
குணதிசை மருங்கிற் காரகி றுறந்து
[2] வடமலைப் பிறந்த வான்கேழ் வட்டத்துத்
தென்மலைப் பிறந்த சந்தன மறுகத்
தாமரைக் கொழு § முறித் தாதுபடு செழுமலர்க்

(உங) பிறை தோன்றி (உசு) மீனரசாளுதலாலுண்டாகிய விளக்கம்; பிறை, மாலைக்குறும்போட்டிக் கதிர்பரப்பிச் சந்திரனுட்டையாண்ட விளக்கத்திலேயென்க.

உஅ. சேக்கைப்பள்ளி - சேருமிடம்.

ஙூ. அந்துகின் மேகலை - புடைவைமேற் சூழ்ந்த மேகலை.

ஙூங. கோவலற்கு எதிரி - கோவலனே எதிரேற்று; எனவே முயக்கம்கூறியது.

ஙூச. கோலங் கோடல் - முயக்கத்தாற்குலைந்த ஒப்பனையைத் திருத்தல்.

(உசு) வெள்ளிவிளக்கத்து (ஙக) நிலாமுற்றத்துப் (உஅ) பொலிந்து (ஙூ) அசைந்தனவருந்தக் (ஙூங) கோவலற்கெதிர்தலாற்(ஙூச)கோலங்கொண்டமாதவியென்க.

ஙூரு - சு. வெள்ளயிர் - புகைக்குங்கண்டுசருக்கரை ; கண்டுசருக்கரையோடு அகிலைப்புகைத்தல் மரபு.

ஙூள. வான்கேழ் வட்டம் - அழகுகெழுமிய நிலாவட்டம்.

ஙூஅ. மறுக - தேய்த்துத்திமிர.

---

[1] "நிலவுப்பயன் கொள்ளு நெடுவெண் முற்றத்து" (நெடிதல். ஙூரு); "வெண்ணில வின் பயன்றுய்த்தும்" (பட். கக்ச.)

[2] "வடவரை தந்த வான் கேழ் வட்டம்" (அகநா. ஙூசஙு.)

(பி - ம்.) * 'மலர்ந்த' † 'ஐத்துகில்' ‡ 'காதலர்க்களித்தாஅங்கு' § 'மூயிதாது

சo காமரு குவளைக் கழுநீர் மாமலர்ப்
பைந்தளிர்ப் படலை பரூஉக்கா ழாரஞ்
[1] சுந்தரச் சுண்ணத் துகளொடு மளைஇச்
சிந்துபு பரிந்த செழும்பூஞ் சேக்கை
மந்தமா ருதத்து மயங்கினர் மலிந்தாங்
சுடு காவியங் கொழுந ரகலத் தொடுங்கிக்
காவியங் கண்ணுற் களித்துயி லெய்த
வஞ்செஞ் சீறடி * யணிசிலம் பொழிய
மென்றுகி லல்குன் மேகலை நீங்கக்
கொங்கை முன்றிற் குங்கும மெழுதாண்
ரo [2] மங்கல வணியிற் † பிறிதணி மகிழாள்
கொடுங்குழை துறந்து வடிந்துவீழ் காதின
டிங்கள் வாண்முகஞ் சிறுவியர் பிரியச்
செங்கய னெடுங்க ணஞ்சன மறப்பப்
‡ பவள வாணுத லிலக மிழப்பத்
ரஉ தவள வாணகை கோவல னிழப்ப
மையிருங் கூந்த னெய்யணி மறப்பக்
கையறு நெஞ்சத்துக் கண்ணகி யன்றியுங்
§ காதலர்ப் பிரிந்த மாதர் நோதக
[3] வூதலைக் குருகி னுயிர்த்தன ரொடுங்கி

ஙசு - சக. தாமரைக் கொழுமுறியினையும் அதன் மலரினையும் குவளையையும் கழுநீர்மலரினையுமுடைய படலைமாலை.

இவ்வகை விரவித்தொடுத்தமாலைக்குப் படலைமாலையென்றுபெயர்.

சக - ஙஎ. படலை ஆரம் இவை சிந்தி வேறுபட்ட. சுந்தரம் - அழகு.

(ஙச) மாதவியன்றியும் (சசு) (பா) காவியங்கண்ணார் (ஙசு) அகிற்புகை துறந்து (சச)மலித்து மயங்கிக் (சசு) களித்துயிலெய்தவென்க.

சஎ. சீறடியைச் சிலம்பொழிய. பிறவற்றிற்கும் இவ்வாறுரைக்க.

ரo - ரஉ. மங்கலவணி - இயற்கையழகு. குழையைத்துறந்து வடிந்து தாழ்ந்த காது. (பா) வியர்ப்பு இரிய - கூட்டமில்லாமையின் வியர்வுநீங்க.

ரஎ. கையதுநெஞ்சம் - செயலறவினையுடைய நிலைவு.

(சஎ) சிலம்புமுதலியன (ஈஅ) நீங்க (ரசு) நெய்யணிமறப்பச் (ரஎ) செயலறவையுடையளான கண்ணகியென்க.

ரஅ. காதலர்ப்பிரிந்தமாதர் - தங்கள் கொழுநரைப்பிரிந்த மகளிர். நோதக - கண்டார்க்கு நோவுதக.

---

[1] "சுந்தரச்சுண்ணத்து" (சிலப். இ: கரிரு) [2] சிலப். உ: ஙசு - சு; [3] மணி. உ: சசு. (பி - மீ.) * 'அணிச்சிலம்பு' † 'பிறிதணியணியாள்' ‡ 'அளக்வாணுதல்' § 'காதலிற்'

வேனிற் பள்ளி மேவாது கழிந்து
கூதிர்ப் பள்ளிக் குறுங்க ணைடைத்து
மலயத் தாரமு மணிமுத் தாரமு
மலர்மூலை யாகத் தடையாது வருந்தத்
தாழிக் குவளையொடு தண்செங் கழுநீர்
வீழ்பூஞ் சேக்கை மேவாது கழியத்
[1] துணைபுண ரன்னத் தூவியிற் * செறித்த
விணையணை மேம்படத் திருந்துதுயில் பெறுஅ
துடைப்பெருங் கொழுநரொ டேற்ற காலத்
திடைக்குமி ழெறிந்து கடைக்குழை யோட்டிக்
கலங்கா வுள்ளங் கலங்கக் கடைசிவந்து
விலங்கிமிர் நெடுங்கண் புலம்புமுத் துறைப்ப
வன்ன மென்னடை நன்னீர்ப் பொய்கை
[2] யாம்ப லூறுந் தேம்பொதி நறுவிரைத்
தாமரைச் செவ்வாய்த் தண்ணறற் கூந்தற்

சுக. அடைத்து - அடைப்ப.

சுசு. துணைபுணரன்னத்தூவியினென்னுர்; "பலவன்னத்தூவி போலே" என்றமையால். அந்த அணைக்கிட்ட பஞ்சின்மென்மைக்கு.....

சுஅ. தங்களையுடைய கொழுநரோடு ஊடுதலையுடைய காலத்து.

எ0. கலங்கா வுள்ளம் கலங்க - அவர் கலங்காவுள்ளம் அணையிலே கலங்க.

எக. புலம்பு - தனிமை. முத்து - கண்ணீர்த்துளி.

(கூஎ) கண்ணகியன்றியும் (கூஅ) பிரிந்தமாதர் (சுஎ) இணையணைமேம்படத் திருந்துதுயில்பெறுது (சுஅ) முன்பு ஊடினகாலத்து (எக) விலங்கிமிர்ந்த நெடுங்கண் இப்பிரிந்தகாலத்துப் புலம்பாலுண்டாகிய முத்துறைப்பவென்க.

எக. விலங்குபாட்மாயின், பக்கமென்க.

எஉ - சு. அன்னமாகிய மென்னடையையும், ஆம்பலூறும் நறுவிரையையும் தாமரையாகிய செவ்வாயையும், அறலாகிய கூந்தலையுமுடைய பொய்கையாகிய பெண்.

---

[1] "துணைபுண ரன்னத்தின் தூவிமெல் லணையசை இ" (கலித்தொகை, எஉ.)

'ஆம்பலூறுந்.....செவ்வாய்' என்புழி, 'தேம்பொதி நறுவிரையாம் பலூறுந் தாமரைச் செவ்வாய்' என இளங்கோவடிகள் பாடிய அந்திமாலைச்சிறப்புச் செய்காதையினும் கண்டவை யென்றுணர்க" (மாறனலங்காரம், சூ. கஉசு-உரை.)"

(பி - ம்.) * 'சிறந்த்'

எடு பாண்வாய் வண்டு [1] நோதிறம் பாடக்
* காண்வரு குவளைக் கண்மலர் விழிப்பப்
[2] புள்வாய் முரசமொடு பொறிமயிர் வாரணத்து
முள்வாய்ச் சங்க † முறைமுறை யார்ப்ப
உரவுநீர்ப் பரப்பி னூர்துயி லெடுப்பி
அ0 யிரவுத் தலைப்பெயரும் வைகறை காறு
மரையிருள் யாமத்தும் பகலுந் துஞ்சார்
விரைமலர் வாளியொடு கருப்புவில் லேந்தி
மகர வெல்கொடி மைந்தன் றிரிதர
நகரங் காவ னணிசிறந் ததுவென்.

எடு - அ. வண்டாகிய பள்ளியுணர்த்துவான் புறநீர்மையென்கின்றபண் ணைப்பாட, குவளை கண்மலர்போல விழிப்ப. புள்வாயாகிய முரசம். முள் வாய் - கூர்த்தவாய்.

எக. உரவுநீர்ப்பரப்பின் ஊர் - கடற்பரப்பை ஒத்தவூர். துயிலெடுப்பி யென்னூர், பிரிந்தார்க்கும் புணர்ந்தார்க்கும் துயிலாமை காமனல்வருதலால்.

அ0. இரவுத்தலை : தகரவொற்று விகாரம்; தலை - இடம்; இராத்திரியில்.

அக. பகுக்கப்படுதலின், பகல். மதுரைக்காஞ்சியில், [3] "மற்றை யாமம் பகலுறக் கழிப்பி" என்பதுமது; (பா) பகலுந்துஞ்சான் - எல்லாருந்துஞ்சும் அரையிருள்யாமத்தும் ஒருமாத்திரைப்பொழுதும்துஞ்சாமல்.

எடு - அ0. வண்டுபாடக் குவளைவிழிப்ப இரவு போம்வைகறையென்க.

அக - ஙு. இரவும்பகலுந்துஞ்சான் மைந்தன் திரிதரவென்க.

(ஙுசு.) மாதவியன்றியும் (சசு) காவியங்கண்ணர் களித்துயிலெய்தவும் (டுஎ) கண்ணகியன்றியும் (டுஅ) பிரிந்தமாதர் (டுகூ) உயிர்த்து ஒடுங்கிக் (சுo) கழிந்து (சுக) குறுங்கண் அடைத்து (சுஉ-ஙு) ஆரம் மூலைக்கண் அடையாதுவருந்தக் (சுச) கழுநீர் (சுடு) சேக்கையிலே மேவாதுகழியக் (சுஎ) கண்டுயில்பெறாமல் (எக) உறைப்ப (எடு) வண்டுபாடக் (எசு) குவளை விழிப்ப (எஅ) ஆர்ப்ப (அ0) இரவுபோம் வைகறையளவும் (அக) யாமத்தும் பகலும்துஞ்சாஞகி (அங) மக ரக்கொடி மைந்தன் (அஉ) வாளியொடு வில்லியேந்தித் (அங) திரிதலானே (அச) நகர் காவல் சிறந்ததென்க.

---

[1] நோதிற மென்பதே சரியான வடிவமென்று தோற்றுகின்றது; பரி. கக0 - ஆம் பக்கம் பார்க்க.

[2] சிலப். சுo: ககடு - சுo. [3] 'மதுரைக்காஞ்சி,' சுடுங;

(பி - ம்.) * 'காமருகுவளை' † 'முறையெழுந்தார்ப்ப'

க - உ. விரிகதிர் பரப்பி.....காணேன்

(இ - ள்.) விரிந்த கதிர்களைப்பரப்பித் தொக்க உலகமனைத்தையும் ஒரு திகிரியாலுண்டவிளிவில்லாதோனை ஈண்டுக் காண்கின்றிலே னென்க.

கதிர் - ஆரும், கிரணமும் முழுதுமென்னுமுற்றும்மை தொக்கது. ஒரு தனித்திகிரி - ஒப்பற்ற ஒற்றைத்தேராழி; சக்கரமுமாயிற்று; சிலேடை. இவன் ஓராழியான் ஏழுலகையுமாண்டானென்பதுதோன்றத் தேராழியைத் திகிரி யென்றார். ஆண்ட திகிரியையுடைய உரவோனெனினுமமையும்.

ங - ச. அங்கண் வானத்து.....கொல்லென

(இ - ள்.) அழகிய இடத்தையுடைய வானின்கண் நல்லநிலாவை விரிக்கும் திங்களாகிய செல்வன் எவ்விடத்துள்ளானோதானென்றென்க.

அத்து, ஏழனுருபின்கண்வந்த சாரியை. நிலா - ஒளி. அம், புறனடையாற்கொள்க. இது பண்புத்தொகைக்கண்வந்தது. [2] திங்களுஞ்செல்வன்: [3] "காலமூலகம்' என்னுஞ்சூத்திரத்துள், ஞாயிறுதிங்களென்பன உயர்திணை மேலனவாய்ப் பால்பிரிந்திசையாவெனவும், [4] "நின்றுங் திசைத்த லிவணியல் பின்று" எனவே நின்றமுறைமையானே ஈறுபெற்றுநின்று உயர்திணையாயிசைத் தல் இவணியல்பின்றெனவுங்கூறிய ஆசிரியர், [5] "இசைத்தலு முரிய வேறிடத்தான" எனக் காலமுதலாகியசொல் உயர்திணையாயிசைத்தலு முரிய, ஈறு திரிந்து வாய்பாடு வேறுபட்டவழியென்றாராகலின், இதுவும் ஈறுதிரிந்து திங் களுஞ்செல்வனென்றுயிற்றென்க. மேலும் இவ்வாறுவருவனவற்றிற்கும்இதுவே விதியென்க. கொல், ஐயம்.

ஙி - அ. திசைமுகம் பசந்து.....அல்லற் காலே

(இ - ள்.) கடலே ஆடையாகவுடைய பெரிய நிலமடந்தை தன்கொழுநனைக் காணுதுதிசையாகிய தன்முகநான்கும் பசப்பூரப்பட்டு மலர்க்கண்கள்நீர்வார மெய்ம்முழுதும்பனித்து நெஞ்சம் சுழல்கின்ற இடுக்கட்பொழுதிலென்க.

திசைமுகம் - திக்காகியமுகம். பசந்து - பொன்னிறங்கொண்டு. முழு மெயும் - மெய்முழுதுமென்றுமாறுக. பனித்து - நடுங்கி, பனிகொண்டு; பனியென்பதொருநோயுமுண்டு; அது சூடுநாட்டுவழக்கு; பனி பெய்யப் பட்டு என்றபடி; அக்காலத்துப் பனிபெய்யுமாகலின். அரசு - தன்கொழுந னாகியபகலோன்; அரசென்பதனை, [6] "சூடிமையாண்மை" என்னுஞ் சூத்திரத்து 'நிலையின வாயினும்' என்பதனுன்முடிக்க. கெடுத்து - காணப்பெறாது; [7] "எற்கெடுத்திரங்கி" என்றாற்போல. அலம்வரும் - சுழலும். அல்லற்காலே - இடுக்கட்பொழுதில். பசந்தென்றார், மாலைக்காலத்துப்பரந்த பச்சைவெயிலே;

---

[1] தொல்காப்பியம், புள்ளிமயங்கியல், சூ. ககo. [5] தொல். இளவியாக்கம், சூ. சுo.
[2] சிலப். அ: நிகூ ஆம் அடியின் உரை. [6] " " நிஎ.
[3] தொல். இளவியாக்கம், சூ. நிஅ. [7] மணிமேகலை, நி, ஈசு.
[4] " " " சூ. நிகூ.

கள

[1] "செல்சுடர்ப் பசுவெயிற் முன்றி யன்ன" என்றார் மதுரைக்காஞ்சியினும். இக்காலத்து இதனைக் காடுகிழாள்வெயிலென்ப. செம்மலர்க்கண்கண் முழுநீர் வாரவென்பதற்குச் செம்மலரிடமெல்லாம் கள்ளாகியநீர் முழுதும் வாரவென வும், சிவந்த மலர்போலும் கண்களிரண்டும் நீர்வாரவெனவும் சிலேடைப் பொருண்மைகாண்க.

கூ - கஉ. கறைகெழு குடிகள்.....மன்னரிஞ்

(இ - ள்.) தம் பெயருக்குவருமிறையையறிந்து பொருந்தியிறுக்கும் இறை க்குடிகள் துயரமுற அங்ஙனமிறுதி குறும்புசெய்யும் வில்லேருழவரை ஒருதலை யாகப்பற்றி வெற்றிபொருந்திய தானைமன்னரில்லாத இடமறிந்து அவர்நில மெல்லாங்கெடும்படி புதிதாக வந்துவிட்ட குறுநிலமன்னரைப்போலவென்க.

கறை = கடமை; [2] "கறைபன் னீராண் டுடன்விடுமின்" என்றார் சிந்தா மணியினும். கெழு, [3] "முடிகெழுவேந்தர்" என்பதனுள் முடித்தாம். துயரு றுதலென்னும் பொருணிகழ்ச்சியைத் தலைமேற் கைவைக்கவென்னும் தொழி னிகழ்ச்சியாற் கூறினார்; [4] "கையால் வயிறதுக்குவார்" என்றற்போல. அறை போதல் - இழறுத்தல். ஓம்பு, ஐ. வலம் - வெற்றி. இல்வழி - இல்லாதகாலத்தே; இடட்பொருள் காலத்தோடு மயங்கிற்று. புலம் - அவர்நிலம். இறுத்த - வந்து விட்ட; [5] "சேணியறுத்தவாய் போல" என்றாராகலின். விருந்து - புதுமை.

கஙு - உo. தாழ்துணை துறந்தோர்.....மாலைவந் திறுத்தென

(இ - ள்.) தம்மனத்திற்றங்கிய கொழுநர்தம்மைப் பிரிந்திருக்கின்றமகளிர் கறைகெழுகுடிகளைப்போல ஒடுங்கித் துயரமுறத் தம் காதலரைப் புணர்ந்திருக் கின்றமகளிர் அறைபோகு குடிகளைப்போலத் தருக்கி மகிழ்ந்து இன்பமுறக் குழ லிலேவளர்கின்ற முல்லையென்னும் பண்ணிலே கோவலரும் குழலிலே வளர்கின்ற முல்லைமலரிலே தும்பியும் வாய்வைத்தூத அரும்புகள் உள்ளடக்கிய வாசத்தை இடையிடையேபுக்கு வண்டுகளுண்ணுதபடி கடிந்தோட்டித் தென்றலஞ்செல் வன் அதனை மறுகெல்லாந்தூற்ற ஒளிவளையையுடைய மகளிர் இருவகைவிளக்கு மெடுப்ப வளமிக்க மூதூர்க்கண்ணே விருந்தின் மன்னரைப்போல மாலையென்னுங் குறும்பு வந்துவிட்டதாகவென்க.

தாழ்தல் - தங்குதல். துணை - தோட்டுணையென்றுமாம். களிமகிழ்வு, வினைத்தொகை. குழல் - ஊதுங்குழலும், மயிருமும்; முல்லை - மலரும், பண் ணும். முல்லையில், சாரியைநிற்ப உருபுதொக்கது. தும்பி - வண்டில் ஒருசாதி. ஊதுதல், கோவலர்க்கும் தும்பிக்கும் பொது. ஊதுங்குழலினும் முல்லையி னும் கோவலரோடு தும்பி வாய்வைத்தூதவெனினுமமையும்; இது நிரனிறை. எல் - ஒளி. மல்லல் - வளன். அறுகாலைக் குறும்பென்றார், தென்றல் தளிர்ப் பித்தும் பூப்பித்துஞ்செய்ய அவற்றைத் தான்புகுந்துண்டலான். சிறுகாற் செல்வனென்றதை [6] முற்கூறியவாற்றுன்முடிக்க.

---

[1] மதுரைகாஞ்சி, சகக.
[2] சீவகசிந்தாமணி, ரoசு.
[3] சிலட். பதிகம், சுக - உரை.
[4] சீவகசிந்தாமணி. உகடு.
[5] கலித்தொகை, கoஅ.
[6] இப்புத்தகம், பக்கம்; கஉசு.

அல்லற்காலை விருந்தின்மன்னரில் தனித்துயரெய்தக் களிமகிழ்வெய்த வாய்வைத்தூத மறுகிற்றூற்ற மணிவிளக்கெடுப்ப மாலை வந்திறுத்தெனவென்க.

உக - சு. இளைய ராயினும்.....வெள்ளி விளக்கத்து

(இ - ள்) தாம் பிராய்த்தான் இளையராயினும் பகைவேந்தரை முற்றக்கடிய வல்ல செருவின்மேம்பட்டதென்னர்குலத்திலே முதற்றோன்றுதலாலே அந்திப் பொழுதே செவ்வானினிடத்தே வெண்பிறை, தான்தோன்றி வருத்தத்தைத் தரும் மாலையாகிய குறும்பை எறிந்து ஓட்டி அரசியலிற்றப்பாது தனது வெள்ளியகதிராகிய புகழைப்பரப்பிச் சந்திரன் நாட்டையாண்ட வெண்மையையுடைய விளக்கத்திலேயென்க.

தென்னர் குலமுதலாதலினென்பதற்குத் தென்னர்குலத்திற்கு முதலாகையாலேயெனினுமமையும். சோமகுலத்தென்னரென்றது தென்னர்குலச்சோமனென்றார்; அவன், அளியினெஞ்சு வலியினும் தெறலினும் ஒவ்வாமையானும் குறைவும் நிறைவும் மறுவுமுடைமையானும் இவர்க்கு அவை இன்மையானும் உயர்ச்சிநோக்கி. பிறை [1] தென்னர்குலமாதலின், வளவர் குலத்து இரவியாண்ட நிலமழிய வந்துவிட்ட மாலைக்குறும்பை எறிந்து ஓட்டி ஆண்டதென்க அன்றி ஓட்டித் தான் மீனிராச்சியத்தை ஆண்டதெனினுமமையும். அந்தி - மாலைப்பின் பொழுது. வாளாது வானத்துப்பிறையென்றது வெண்பிறையெனப் பண்படுத்தமையான், [2] எடுத்தமொழி இனஞ்செப்பிச் செவ்வானத்து வெண்பிறைதோன்றிய தென்பதாயிற்று. புன்கண் - வருத்தம். மாலையைக் குறும்பென்றார்; இடைநின்றகாலத்துப் புகுந்து வருத்துதலின். குறும்பெறிந்தோட்டி - குறும்பை அறுத்தோட்டி. பான்மையிற்றிரியாது - அரசியலின்வழாது. பாற்கதிர் - பால் போலுங்கதிர்; அதற்குப் புகழெனவும் ஒருபொருடோன்றும். மீனரசு - சந்திரன்; உடுபதியென்பவாதலின். அன்றி மீனிராச்சியமெனினுமமையும்.

உஎ - ஙச. இல்வளர் முல்லையொடு.....மாதவி யன்றியும்

(இ - ள்.) முல்லையொடு மல்லிகையும் ஒழிந்த தாழிக்குவளைமுதலிய பல பூவும் அவிழ்ந்த பள்ளியிடத்தே பொலிவுபெற்று அழகேந்திய அல்குறன்னிடத்தில் துகில்செல்லப்பட்டுச் சென்துகிர்க்கோவையாகிய மேகலை அசைந்தனவாய் இரக்காநிற்க நிலாவினது பயணைக் கொள்ளுதற்குக்காரணமாகிய உயர்ந்த நிலாமுற்றத்தின்கண்ணே தன்காதலனுக்கு ஒருகாற் கலவியையும் மறுகாற் புலவியையும் மாறியளித்து அவ்விடத்து ஆர்வமிக்க நெஞ்சத்தோடு கோவலனே எதிரேற்றுமுயங்கி அம்முயக்கத்தால் முன்குலைந்த ஒப்பனையைப் பின்னும் வேட்கை விளைக்குங் கோலமாகத் திருத்திய மாதவியன்றியுமென்க

இல்வளர் - மனைவளர். ஓடு, எண்ணேடு. சேக்கைப்பள்ளி - சேரும் சயனம். துகிர்க்கோவை - பவளக்கோவை. துகின்மேகலை - துகின்மேற்சூழ்ந்த

---

[1] "சேர்ந்தார் புறங்கொண்டு செந்நிலத் தன்றுதின்று டோர்மறித்துப், பேர்த்தான் றனது குலமுதலாய பிறைக்கொழுந்தே" (இறை. சூ. சக - உரை - மேற்)

[2] தொல்காப்பியம், கிளவியாக்கம், சூ. சுக.

மேகலையென்பாருமுளர். அசைந்தன வருந்த நிலவுப்பயன் கொள்ளுமென இடக்கரடக்கிக்கூறினர். எதிரியெனவே முயக்கம்கூறினர். இனி, சென்று அகன்றெனச் செல்லுதலே அகறலாக்கி, அகன்றேந்தல்குலிடத்துத் துகின்மேற் சூழ்ந்தமேகலை அசைந்தனவாய் இரங்கவெனினுமமையும். மேகலை - பவளக் கோவை எட்டினுற் செய்தது; [1] "எண்கோவை மேகலை காஞ்சி யெழுகோவை" என்றாராகலின்; [2] "தவழும் புதல்வரை யொருகையாற் றழீஇப், பவழஞ் சேர்ந்த பல்கா ழல்குலர்" என்றார் கதையினும்.

விளக்கத்திலேபொலிந்து அளித்து எதிரிக் கோலங்கொண்ட மாதவியென்க.

அவிழ்ந்த பூஞ்சேக்கையெனவே செவ்வியும், பொலிந்தெனவே அழகும் இளமையுங்கூறிற்று.

நடு - சு. குடதிசை மருங்கின்.....காரகி றுறந்து

(இ - ள்) மேற்றிசையிடத்துண்டானவளமுறியோடே கீழ்த்திசையிடத்து உண்டான அகின்முதலியவற்றுற் புகைக்கும் புகையைத்துறந்தென்க.

குடதிசை அயிர் - யவனதேசத்து அயிர்; அயிர் - கண்டசருக்கரை. குண திசையகில்; காரகில். குடதிசை, குணதிசை; வெள்ளயிர், காரகிலென் பனவற்றுட் செய்யுளின்பமும் அலங்காரமுமுணர்க. அகிலென்றது, ஆகு பெயராற் புகையை; [3] "இருங்கா ழகிலொடு வெள்ளயிர் புகைப்ப" என்றார் நெடுநல்வாடையினும். புகையுறுப்பு ஆறுவகையாகவும் தலைமைபற்றி இவ்விரண் டினையும் கூறினர்.

நஎ - அ. வடமலைப் பிறந்த.....சந்தனமறுக

(இ - ள்.) வடதிசைக்கண்ணதாகிய இமயமலைக்கட்பிறந்த சிலாவட்டத் திலே தென்றிசைக்கண்ணதாகிய பொதியமலையிற்பிறந்த சந்தனம் சுழல வென்க.

வான்கேழ்வட்டம் - மிக்க ஒளியையுடைய சிலாவட்டம், [4] "வடவரைதந்த வான்கேழ் வட்டம்" என்றார், * நெடுநல்வாடையிலும். மறுக - சுழல; அரைக்கவென்றபடி. அகிறுறந்து சந்தனமறுகவென்க. இவற்றின் விரோதமு முணர்க.

நக - சசு. தாமரைக் கொழுமுறி.....கலித்துயி லெய்த

(இ - ள்.) தாமரைக்கொழுமுறியினையும், அதன் மலரினையும், குவளையை யும், கழுநீர்மலரினையும், பச்சிலையுடனே கலந்துதொடுத்த படலைமாலையுடனே கோவையுற்ற பருமுத்தமும் நிறத்த சுண்ணத்தோடு சிந்திக் கலந்துகிடந்த வள விய பூஞ்சேக்கையிடத்து அங்ஙனம்புணர்ந்த உபகரணப்புணர்ச்சியிறுதியில்

---

[1] (பா) "எண்கோவைமேகலைகாஞ்சியெழுகோவை, பண்கொள்கலாபம்பதினைது - கண்கொள், பருமம் பதினெட்டு முப்பத் திரண்டு, விரிசிகை யென்றுணரற்பாற்று."

[2] பெருங்கதை, உஞ்சைக்காண்டம், சசு - ஊர்தியிட்டது, கசடு-சு.

[3] நெடுநல்வாடை, திசு. [4] நெடுநல்வாடை, (பா) இக.

(பி - ம்.) * 'பெருங் குறிஞ்சியிலும்'

மயங்கியமகளிர் தென்றலான்மயக்கந்தீர்ந்து தம் காதன்மிகுதியான் மயங்கித் தமது ஆவிபோலுங்கொழுநர்மார்பிடத்தே காவிபோலும் கண்மலர்களைப் பொருந்தவைத்து இன்பக்களியான அனந்தல்கூடவென்க.

கொழுமுறி - இளந்தளிர். காமம்வருமென்பது விகாரத்தாற் காமருவென நின்று கண்டார்க்கு விருப்பம்வருமென்பதாயிற்று; காண்வரு பாடமாயிற் காட்சி வருமென்க. குவளை - நீலோற்பலம். மா - நிறம். பைந்தளிர் - பச்சிலை. படலை - இலைத்தொடை. பருஉக்காழாரம் - பருமுத்துவடம். சுந்தரம் - நிறம். அளைஇ - கலந்து. சிந்துபு அளைஇயென மாறுக. மயங்கினர்மலிந்து - மயங்கினராய்க் காதன்மிக்கெனினுமமையும். ஆங்கு - அங்ஙனம். களித்துயில் - இன்பத்துயில்.

சஎ - நிஎ. அஞ்செஞ் சீறடி.....கண்ணகி யன்றியும்

(இ - ள்.) சீறடி தன்னேயணியுஞ்சிறப்பைச் சிலம்பு பெருதொழிய, அல்குல் தன்னேயணியுஞ்சிறப்பை மேகலை பெருதுநீங்க, முகம் தன்னேயணியும் சிறப்பைச் சிறுவியர் பெருது பிரிய, சிவந்து நெடிதான கயல்போலுங்கண் தன்னேயணியுஞ்சிறப்பை அஞ்சனம் பெருதுமறப்ப, நுதல் தன்னேயணியுஞ் சிறப்பைத் திலகம்பெருமலிழப்ப, தன்னேக்கூடினுற்பெறுந் தவளவாணகையைக் கோவலன்பெருது இழப்ப, தன்னே அணிந்தாற்பெறுங் கூந்தலின்மணத்தைப் புழுகுநெய் பெருதுமறப்ப, இவை இங்ஙனமாம்படி தான் எழுதாளாய் மகிழாளாய்க் காதினளாய்க் கையற்ற நெஞ்சத்தையுடையளாகிய கண்ணகியன்றியுமென்க.

அகில், அல்குற்கு அடை; [1]"துப்புறழ் தொண்டைச் செவ்வாய்" போல நின்றது. மேகலை - எண்கோவை. கொங்கைமுன்றில் - முலைமுற்றம். மங்கலவணியிற்பிறிதணி - மங்கலவணியின்வேருனவணி. கொடுமை - வளைவு. வடிந்து வீழ்காதினனென்பது அணியாமையினும் பிறந்த அழகு கூறிற்று. வியர் பிரிய, விகாரம். அன்றி வியர்ப்பு இரியவெனினுமமையும்; இரிதல் - நீங்குதல். நெய் - புழுகுநெய். ஒழிய நீங்கப் பிரிய மறப்ப இழப்பவென்பன பரியாய வாய்பாட்டான்வந்து இழப்பவென்னும் பொருளவாயின. இவ்வினேயெச்சங்களே எழுதாள் மகிழாள் காதினளென்னும் வினேப்பெயரான்முடித்து இப்பெயர்கட்குப் பண்பொட்டுவிரித்து இவற்றைக் கையற்றவென்னும் பெயரெச்சத்தோடுமுடித்து இப்பெயரெச்சத்தை நெஞ்சென்னும் பெயரோடுமுடித்து இதனேயுடைய கண்ணகியென்க. இனித் தவளவாணகை கோவலனிழப்பவென்றதனுன் அவன்பிரியவென்பதாம்; ஆகவே இவ்வுறுப்புக்கள் அவன்பிரிவுக்கு உடம்பட்டனவென்று முனிந்து ஒழிய நீங்கப் பிரிய மறப்ப இழப்ப இவற்றோடு குழையையுந் துறந்தகாதினள் எழுதாள், மகிழாளாதலான் இவையும் பயனிழப்பத் தானும் அழகும் இன்பமுமிழத்தலாற் கையற்றநெஞ்சினேயுடைய கண்ணகியென உரைப்பினுமமையும்; [1] "அருங்கல.....அதுக்கினுள்" எனவும், [2] "மஞ்சுசூழ்.....சீறினுள்" எனவும் சிந்தாமணியினுங்கூறினுராகலின்.

---

[1] சீவகசிந்தாமணி, கஎ. [2] சீவகசிந்தாமணி, கசுஎஉ, கசுஎசு.

நிஅ - எக. காதலர்ப் பிரிந்த..... .....புலம்புமுத்துறைப்ப

(இ - ள்.) அங்ஙனம் கையற்ற கண்ணகியேயன்றியும், தம் காதலரைப்பிரிந்த மாதர் பிரிவால் துன்பமுறுதலானே ஊதுகின்ற துருத்தியின் உலைமூக்குப்போல அழலெழ உயிர்த்தனராய்ச் செருக்கடங்கி இவ்விளவேனிற்காலத்திற்கு அமைந்த நிலாமுற்றத்தில் மேவாதொழிந்து கூதிர்க்காலத்திற்கமைந்த இடைநிலத்து ஒடுங்கிஆண்டித் தென்றலுலவம்புகாமற் சாளரக்கண்களையடைத்துச் சந்தனமும் முத்தும் ஆகத்துமுலையில் அடையப்பெறுது வருந்தக் குவளை செங்கழுநீர் முதலிய குளிர்ந்த மலர்கள் தாம் விரும்பிய பூஞ்சேக்கையிற் பள்ளித்தாமமாய் மேவப்பெறுமல் வருந்தித்தன்சேவலோடுபுணர்ந்த அன்னப்பேடை அப்புணர்ச்சியான் உருகியுதிர்த்த வயிற்றின்மயிர் எஃகிப்பெய்த பல்வகையணைமீதே மேன்மை பெறத் தம்கொழுநரகலத்தே துயிலும் களித்துயிலப்பெறுமல் அவரோடு முன்பு ஊடியகாலத்து இடைநின்ற குமிழையெறிந்து கடைநின்றகுழையைத் தூரந்து [1]பெருமையும் உரனுமுடைமையாற் கலங்காதநெஞ்சமும் கலங்கும்படி கடைசிவந்து குறுக்கிட்டுப்பிறழும் நெடியகண்கள் அங்ஙனம்பிறழ்ந்து உவகை முத்தைச் சிந்தாது புலம்புமுத்தைச் சிந்தவென்க.

நோதக - கண்டார்க்கு நோவுதக. ஊதுலைக்குருகு - துருத்தி; வெளிப்படை. அலர்தல் - பரத்தல். ஆகத்துமுலையென்க; முலையாகமுமாம். கழிய வென்பது ஈண்டு வருந்தவென்பதாயிற்று. துணை - சேவல். தூவி - மயிர். இணையணை - பலவான அணை; [2] "ஐந்துமூன்றமித்த" என்புராகலின். திருந்து துயில் - முற்கூறிய களித்துயில். உடைப்பெருங்கொழுநர் - தங்களையுடைய பெரியகொழுநர். ஊடற்காலத்து - முன் ஊடுங்காலங்களில். கலங்காவுள்ளம் - பெருமையும் உரனுமுடையவுள்ளம். விலங்கிநிமிர் - குறுக்கிட்டுப்பிறழும். நிமிர்நெடுங்கண், விணைத்தொகை. புலம்புமுத்து - துன்பக்கண்ணீர்; உவகைக்கண்ணீருமுண்டாகலின்; புலம்பு - தனிமையுமாம். உறைப்ப - உகுப்ப

கண்ணகியன்றியும் மாதர் ஒடுங்கிக் கழிந்து அடைத்து வருந்தக் கழியப் பெறுது முத்துறைப்பவென்க.

எஉ - சு. அன்னமென்னடை.....மலர் விழிப்ப

(இ - ள்.) அன்னமாகிய மென்னடையினையும் தேம்பொதிநறுவிரை ஆம்பலுமாம் தாமரையாகிய வாயினையும் தண்ணறலாகிய கூந்தலினையுமுடைய பொய்கை யென்பாள், பாண்தன்மையைத் தம்மிடத்தேயுடைய வண்டுகளாகிய பள்ளியுணர்த்துவார் புறநீர்மையென்னும் திறத்தாற் பள்ளியெழுச்சிபாட, அழகுவரும் குவளையாகிய கண்மலர்விழிப்பவென்க.

ஆம்பல், வாய்க்கு அடை; [3] "துப்புறழ் தொண்டைச் செவ்வாய்" போல; பண்ணுமாம். நாறும் - தோன்றும்; [4] "அருமணி மரகதத் தங்க ணுறிய" எனச் சிந்தாமணியிலும், "மரகத மணிக்கயத் தங்க ணுறிய, வழுணிறப்

[1] தொல். களவு. சூ. எ. [2] சீவக. அருஅ. [3] சீவக. கoஎ. [4] சீவக. கஅரு.

பொன்னிதழ் ஆயிரம் விரித்து" எனக் [1]கதையினும் கூறினராகலின். தேம்-இனிமையும், தேனும். நறுவிரை - நல்லமணம். பாண் - பாண்சாதி. நோதிறம் - நொந்ததிறம்; ஆவது புறநீர்மை. அது, பாலைப்பண்ணின் றிறமைந்துள் ஒன்றென்க; என்னை? "தக்கராக நோதிறங் காந்தார பஞ்சமமே, துக்கங் கழிசோம ராகமே - மிக்கதிறற் - காந்தார மென்றைந்தும் பாலைத் திறமென்மூர், பூந்தாரகத்தியனூர் போந்து" என்பவாகலின்.

குவளைக்கண்மலர் - குவளையாகிய கள்ளையுடையமலர்; குவளைக் கண்மலரு மாயிற்று. விழித்தல் - மலர்தலும், கண்விழித்தலுமாயிற்று

இனித் தேம்பொதி நறுவிரைத்தாமரையாகிய ஆம்பலுறும் செவ்வாயெனினுமமையும்.

இனிப்பெண்பாலாதலிற் பண்தோற்றும்வாயென வாய்க்கு அடையாக்கலு மொன்று. பாணைப் பாட்டாக்கி வண்டின்வாய்க்கு அடையாக்கினுமமையும்.

பாட விழிப்பவென இயையும். அன்னமென்றதுமுதல் விழிப்பவென் னுந்துணையுங்கூறியவிவை உருவகமென்னுமலங்காரமென்றுணர்க.

எ - அசை. புள்வாய் முரசமொடு..... ...நனிசிறந்தது.

(இ - ள்.) பொய்கை கண்மலர்விழிப்பப் புள்ளொலியாகிய முரசுடனே கோழியும் சங்கமும் முறைமுறையார்ப்பக் கடல்போலும் பரப்பையும் ஒலியையுமுடைய ஊரைத் துயிலெழுப்பி அல்லற்காலே வந்துபுக்க இருள் இவ்விடத்துநின்று நீங்கும் வைகறையாமமளவும் முன்சென்ற அரையிருளினும் ஓர்யாமத்தினும் அரையாமத்தினும் ஒருகணப்பொழுதுந்துஞ்சாராம்படி காமன் ஏந்தித் திருதருதலானே இந்நகரம் மிகவும் காவல்சிறந்ததென்க.

[2] "நடுநாள் யாமத்தும் பகலுந் துஞ்சான்" என்றார் புறத்தினும்; [3] "கைச்சிலை கணையோ டேந்திக் காமனிக் கடையைக் காப்பான்" என்றார் சிந்தாமணியினும்.

முள்வாய் - கூர்த்தவாய். முறைமுறையார்ப்ப - தத்தம் இனமரபினுர்ப்ப; இன், உவமருபு. [4] "துயிலெடை" என்பவாகலின், எடுப்பியென்றார்; பிரிந்தார்க்கும் புணர்ந்தார்க்கும் துயிலின்மை காமனுல் வருதலின். இரவு தலைப்பெயருமென்பதனை இரவுத்தலையென்றார்; [5] "இளந்தவல்ல" என்னுமதிகாரப்புறனடையால்; "தடவுத்திரை" போல வல்லெழுத்துப்பெற்றது. தலை - இடம். பெயரும்-நீங்கும். காறும்-அளவும். அரையிருள் - இரண்டாம் யாமம்; யாமம்-ஓர்யாமம்; அரையிருள்யாமம் - உம்மைத்தொகை; இருபெயர்க்கண் வந்தது. பகல் - அரையாமம். [6] "மற்றை யாமம் பகலுறக் கழிப்பி" என்றார் மதுரைக்

---

[1] கதை - உதயனன்கதை. [2] புறநானூறு, கஅசு. [3] சீவகசிந்தாமணி, உ0கூ0.

[4] "சூத் பேரத்திய துயிலெடைநிலையும்", (தொல். , புறத்திணை. சூ. நகஅ;) "பயில்பூம் பள்ளித் துயிலெடை மாக்கள்" (பெருங்கதை, சு: ஞவிஉத்தி.)

[5] தொல்காப்பியம், குற்றியலுகரப்புணரியல், சூ. எஅ. [6] மதுரைக்காஞ்சி, சுஙுசு.

காஞ்சியுள்ளும்; பகுத்தலிற் பகலாயிற்று. நனி - மிகுதி.

ஆர்ப்ப எடுப்பித் தல்லப்பெயரும் வைகறைகாறும் துஞ்சாராம்படி காமன் எந்திக் திரிதருதலான் நகரம் காவல் மிகச்சிறந்ததென்க.

இனித் துஞ்சானென்றுபாடமோதி, [1] காமன் துஞ்சாளுய்த் திரிதருத லின், நகரம் காவல் சிறந்ததெனினுமமையும்.

என், அசை.

இது, முதல் நடு இறுதி அளவடியான்முடிதலின், 'நிலமண்டில ஆசிரியப்பா.

வெண்பா.

கூடினார் பானிழலாய்க் கூடார்பால் * வெய்யதாய்க்
காவலன் வெண்குடைபோற் காட்டிற்றே - கூடிய
மாதவிக்குங் கண்ணகிக்கும் வானூர் மதிவிரிந்து
போதவிழ்க்குங் கங்குற் பொழுது.


சு.—அந்திமாலைச்சிறப்புச்செய்காதை முற்றிற்று.

---

[1] "பூமென் கணையும் பொருசிலையுங் கைக்கொண்டு, காமன் றிரியுங் கருஞரா" (சிலப். நி: சசு, அடியார். மேற்) (பி - ம்.) * 'வெய்தாய்த்தங்காவலன்'

ஐந்தாவது

இந்திரவிழவூரெடுத்தகாதை.



அலைநீ ராடை மலைமுலை யாகத்
தாரப் பேரியாற்று மாரிக் கூந்தற்
கண்ணகன் பரப்பின் மண்ணக மடந்தை
புதையிருட் படாஅம் போக நீக்கி
யுதைய மால்வரை யுச்சித் தோன்றி
யுலகுவிளங் கவிரொளி மலர்கதிர் பரப்பி
வேயா மாடமும் வியன்கல விருக்கையு
மான்கட் காலதர் மாளிகை யிடங்களுங்
கயவாய் மருங்கிற் காண்போர்த் தடுக்கும்
பயனற வறியா யவன ரிருக்கையுங்
[2] கலந்தரு திருவிற் புலம்பெயர் மாக்கள்
கலந்திருந் துறையு மிலங்குநீர் வரைப்பும்

க - உ. மலையாகியமுலையையுடைய ஆகத்துப் பேரியாறுகிய ஆரம்.

(க) நீரை ஆடையாகவும், மலையை முலையாகவும், (உ) யாற்றை ஆரமாகவும், மாரியைக் கூந்தலாகவுமுடைய (ங) மண்ணகமடந்தையுடைய (ச) இருளாகிய படாத்தை நீக்கியென்க.

ரு. உலகுவிளங்குதற்குக்காரணமான ஒளி - ஆதித்தன் ; கதிரைப்பரப்ப.

எ. வேயாமாடம் - தட்டோடிட்டுச் சாந்துவாரப்பட்டன; நிலாமுற்றமுமாம். கலவிருக்கை - பண்டசாலை.

அ. மான்கட்காலதர் = மான்கண்போன்ற சாளரம்.

கூ. கயவாய் - புகார். கஅ. யவனர் = சோனகர்.

கக. புலம்பெயர் மாக்கள் = கடலோடிகள்.

கஉ. இலங்குநீர்வரைப்பு - அவர்களிருக்கும் அலைவாய்க்கரை.

---

[1] "மணிமலைப் பணைத்தோண் மாநில மடந்தை, யணிமுலைத் துயல்வரூஉ மாரம் போலச், செல்புன லுழந்த சேய்வரற் கான்யாற்று" (சிறுபாண். க - ங.)

[2] சிலப்பதிகாரம், சூ: கஙஅ.

வண்ணமுஞ் சுண்ணமுங் தண்ணறுஞ் சாந்தமும்
பூவும் புகையு மேவிய விரையும்
கடு பகர்வனர் திரிதரு நகர வீதியும்
பட்டினு மயிரினும் பருத்தி நூலினுங்
கட்டு நுண்வினைக் காருக ருருக்கையுந்
தூசுந் துகிரு மாரமு மகிலு
மாசறு முத்து மணியும் பொன்னு
உ0 மருங்கல வெறுக்கையோ டளந்துகடை யறியர்
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகும்
பால்வகை தெரிந்த பகுதிப் பண்டமொடு
கூலங் குவித்த கூல வீதியுங்
[1] காழியர் கூவியர் கண்ணுடை யாட்டியர்
உடு மீன்விலைப் * பரதவர் வெள்ளுப்புப் பகருநர்
பாசவர் வாசவர் † மைந்திண விலைஞரோ
டோசுநர் செறிந்த வூன்மலி யிருக்கையுங்

கஙு. வண்ணம் - தொய்யிலெழுதுவன.

கச. புகை - மயிருக்குப் புகைக்கும் அகின்முதலாயின; - அவையாவன:— "அஞ்சனக் கட்டி யரியாசம் பச்சிலை, யார மகிலுறுப்போ ரைந்து."
விரையாவன:— "கோட்டம்.....விரை."

கள. காருகர் - நெய்வோர்; அச்சுக்கட்டிகள் முதலாயினேருமாம்.

உ0. அருங்கலம் - ஆபரணம். வெறுக்கை-அத்தம். அளந்துகடையறியா- இவ்வளவென முடிவறியாத.

உக. வளம் தலைமயங்கிய - பலவளங்களும் தலைமயங்கிய.

உஉ. பகுதிப்பண்டமொடு - இங்ஙனஞ்சொன்ன பலபண்டங்களுடனே.

உங. கூலம் - கருஞ்சரக்கு. கூலவீதி - அங்காடி.

உச. காழியர் - பிட்டுவிற்பார்; வண்ணருமரம். கூவியர் - அப்பம்சுடுவார்.

உசு. பாசவர் - வெற்றிலைகட்டுவோர்; சூட்டிறைச்சிவிற்பாருமாம். வாசவர் - பஞ்சவாசம் விற்போர்; அவை:— "தக்கோலம்.....ஐந்து:"
பன்னிண விலைஞர் - ஆட்டுவாணிகர்.

உள. ஓசுநர் - பரவர்; மீகாமர், எண்ணெய்விற்பாருமாம்.

---

[1] இவ்வடிமுதலியவற்றுடன் "பன்மீன்விலைஞர்" (மணி. உஅ : ஆம் காதை, அடி. ஙக.) என்பதுமுதலியவற்றைஒப்பிடுக.

(பி - ம்.) * 'பரவர்' † 'பன்னின விலைஞர்', 'பைந்திண விலைஞர்.'

கஞ்ச காரருஞ் செம்புசெய் குநரு
மரங்கொண் றச்சருங் கருங்கைக் கொல்லருங்
கண்ணுள் விஞைஞரு மண்ணீட் டாளரும்
பொன்செய் கொல்லரு நன்கலந் தருநருந்
துன்ன காரருந் தோலின் றுன்னருங்
கீழியினுங் கிடையினுங் * தொழில்பல பெருக்கிப்
பழுதில் செய்வினைப் பால்கெழு மாக்களுங்
குழலினும் யாழினுங் குரன்முத லேழும்
வழுவின் றிசைத்து வழித்திறங் காட்டு
மரும்பெறன் மரபிற் பெரும்பா ணிருக்கையுஞ்
சிறுகுறுங் கைவினைப் பிறர்வினை யாளரொடு
மறுவின் றி விளங்கு மருவூர்ப் பாக்கமுங்
கோவியன் வீதியுங் கொடித்தேர் வீதியும்
பீடிகைத் தெருவும் பெருங்குடி வாணிகர்
மாட மறுகு மறையோ ரிருக்கையும்

உஅ. கஞ்சகாரர் - வெண்கலம்விற்பார்; கன்னர். (பா) செம்புசெய்ஞ்ஞர் - செம்பு கொட்டுவார்.

உக. கருங்கை - வலியையுடைய கை.

ஈ0. கண்ணுள்விஞைஞர் - சித்திரகாரிகள். மண்ணீட்டாளர் - சுதையாற் பாவையுள்ளிட்டன பண்ணுவார்; மண் - சுதை; [1] "மண்ணே டியைந்த மரத்தினையர்" என்றாராகலின்; குயவருமாம்.

ஈக. (பா) பொன்செய்புலவர் - உருக்குத் தட்டார்; அரிப்பாருமாம். நன்கலம்தருநர் - இரத்தினப்பணித்தட்டார்.

ஈஉ. துன்னகாரர் - பாணர். தோலின்றுன்னர் - செம்மார்.

ஈங. கிழி - சீலை. கிடை - கிடேச்சு.

ஈச. பழுதில்செய்வினைப்பால்கெழுமாக்கள் - இவையிற்றுற்பொய்க்கொண்டை முதலியன செய்பவர்.

ஈசு. வழித்திறம் - பண்வழிப்பிறக்குந்திறம்.

ஈள. பெரும்பாண் - குழலர்முதலோர்.

ஈஅ-கூ. (பா) சிறுகுறு.....பாக்கமும் - இங்ஙனங்கூறின இவர் ஒழிந்த பிறதொழில்களையுடையவர்களோடும் விளங்கிய மருவூர்ப்பாக்கமுமென்க.

ஊ0. கோவியன்வீதி - செண்டுவெளிப்புறத்தெரு; இராசமார்க்கமெனினுமாம்.

ஊக - உ. வாணிகர் மாடமறுகு - வணிகர்குடியிருப்பு, மறையோரிருக்கை - பஞ்சக்கிராமிகளிருப்பு.

---

[1] திருக்குறள், இளசு. (பி - ம்.) * 'கழிபலபெருக்கி.'

வீழ்குடி யுழவரொடு விளங்கிய கொள்கை
யாயுள் வேதரும் காலக் கணிதரும்
பால்வகை தெரிந்த பன்முறை யிருக்கையுங்
திருமணி குயிற்றுநர் சிறந்த கொள்கையொ
டணிவளை போழுந ரகன்பெரு வீதியுஞ்
சூதர் மாகதர் * வேதா ளிகரொடு
நாழிகைக் கணக்கர் நலம்பெறு கண்ணுளர்
காவற் கணிகைய ராடற் கூத்தியர்
பூவிலை மடந்தைய ரேவற் சிலதியர்
பயிறெழிற் குயிலுவர் பன்முறைக் கருவியர்
நகைவே ழம்பரொடு வகைதெரி யிருக்கையுங்
கடும்பரி கடவுநர் களிற்றின் பாகர்
நெடுந்தே ரூருநர் கடுங்கண் மறவ
ரிருந்துபுறஞ் சுற்றிய பெரும்பா யிருக்கையும்

சச. ஆயுள்வேதர் - கோயிலார். காலக்கணிதர் - கணியர்; காலத்தை எண்ணியிடுவார்.

சசு. திருமணிகுயிற்றுநர் - முத்துக்கோப்பார்; வேகடிகளுமாம்.

சள. வளைபோழுநர் - சங்கறுப்பார்.

சஅ. சூதர் - கைவாரிகள்; நின்றேத்துவார். மாதகர் - இருந்தேத்துவார்; பட்டுக்கள். வேதாளிகர் - வைதாளியாடுவார்.

சகூ. நாழிகைக்கணக்கர் - கடிகையார். கண்ணுளர் - சாந்திக்கூத்தர்.

ருo. காவற்கணிகையர் - இராக்கடைவேசையர். ஆடற்கூத்தியர் - அகக் கூத்துமுதலியன ஆடுவார்.

ருக. பூவிலைமடந்தையர் - பரிசங்கொள்வார். ஏவற் சிலதியர் - குற்றேவன் மகளிர்.

ருஉ. குயிலுவர் - தோற்கருவி துளைக்கருவி நரப்புக்கருவி உருக்குக்கருவியா ளர். பன்முறைக்கருவியர் - படைக்கும் விழுவுக்கும் கொட்டுவார்.

ருங. நகை வேழம்பர் - [சாரமாணிகள்.]

ருச. பரிகடவுநர் - அசுவவாரியர்; பண்ணுவாருமாம். களிற்றின்பாகர் - யானைப்பாகர்.

ருடு. தேரூருநர் - தேர்ப்பாகர். மறவர் - வீரர்.

ருசு. பாயிருக்கை - பரந்தவிருப்பு.

(பி - ம்.) * 'வேதாளியர்.'

பீடுகெழு சிறப்பிற் பெரியோர் மல்கிய
பாடல்சால் சிறப்பிற் பட்டினப் பாக்கமு
மிருபெரு வேந்தர் முனையிடம் போல
விருபாற் பகுதியி * னிடைநில மாகிய
கடைகால் யாத்த மிடைமரச் † சோலைக்
கொடுப்போ ரோதையுங் கொள்வோ ரோதையு
நடுக்கின்றி நிலைஇய நாளங் காடியிற்
சித்திரைச் [1] சித்திரைத் திங்கள் சேர்ந்தென
[2] வெற்றிவேன் மன்னற் குற்றதை யொழிக்கெனத்
தேவர் கோமா னேவலிற் போந்த
காவற் பூதத்துக் கடைகெழு பீடிகைப்
[3] புழுக்கலு நோலையும் விழுக்குடை மடையும்
பூவும் புகையும் பொங்கலுஞ் சொரிந்து

நெள. இவற்றையுடைய பீடுகெழுசிறப்பிற் பெரியோரென்க.

நெள - அ. பெருமையையுடைய பெரியோர்திரண்ட பாடலமைந்த சிறப்பிற் பட்டினப்பாக்கமுமென்க.

நெசு - சுரு. மருவூர்ப்பாக்கமும் பட்டினப்பாக்கமுமென இருவகைத்தாகிய ஊரின்நடுவிடத்தை முனையிடம்போலவென்றது, அவற்றிற்கு இடைநிலம் வெளிப்பட்டுப் பொதுப்படக் கிடத்தல்கருதி.

சுக. கடை கால்யாத்த - கடை ஒழுங்காகயாத்த. மிடைமரச் சோலை - மர நெருங்கின சோலை.

சுக - ங. கடைகளே மரத்தடியிலே கட்டப்பட்ட மரச்சோலையையுடைய நாளங்காடியென்க.

சுச. (பா) சித்திரைச்சித்திரைத் திங்கள் சிறந்தென - சித்திரைமாதத்துச் சித்திரைநாள் சிறந்ததென்கையால்; சித்திராபூரணையென்க.

சுரு. உற்றதை - இடையூற்றை.

சுள. பூதத்துக்கடை - பூதவாசல். பீடிகை - பலிபீடிகை.

சுஅ. புழுக்கல் - அவரை துவரை முதலியன. நோலை - எள்ளுருண்டை. விழுக்குடைமடை - மாங்கிசத்துடனே விரவினசோறு.

சுக. பொங்கல் - கள்ளு.

---

[1] நன்னூல், மயிலை. சூ. களடு - மேற். [2] சிலப்பதிகாரம், நெ: எசு.
[3] சிலப்பதிகாரம், கூடீ: சுள. (பி - ம்.) * 'இடைநிலத்தாக.' † 'சோலையுள்.'

எ0 துணங்கையர் குரவையு ரணங்கெழுந் தாடிப்
பெருநில மன்ன னிருநில மடங்கலும்
[1] பசியும் பிணியும் பகையு நீங்கி
வசியும் வளனுஞ் சுரக்கென வாழ்த்தி
மாதர்க் கோலத்து வலவையி னுரைக்கு
எரு மூதிற் பெண்டி ரோதையிற் பெயர
மருவூர் மருங்கின் மறங்கொள் வீரரும்
பட்டின மருங்கிற் படைகெழு மாக்களு
மூந்தச் சென்று முழுப்பலி பீடிகை
வெந்திறன் மன்னற் குற்றதை யொழிக்கெனப்
அ பலிக்கொடை புரிந்தோர் வலிக்குவரம் பாகெனக்
கல்லுமிழ் கவணினர் கழிப்பிணிக் கறைத்தோற்
பல்வேற் பரப்பினர் மெய்யுறத் தீண்டி
யார்த்துக் களங்கொண்டோ ராரம ரழுவத்துச்
சூர்த்துக் கடைசிவந்த சுடுநோக்குக் கருந்தலை

எ0. துணங்கை - சிங்கி; என்னே? "பழுப்புடை யிருகை மூடக்கி யடிக்கத், தொடக்கிய நடையது துணங்கை யாகும்." குரவை - கைகோத்தாடுதல்; "குரவைக் கூத்தே கைகோத் தாடல்." அணங்கெழுந்தாடி - தெய்வமேறியாடி.

எக - கூ. (பரி) நிலமடங்கலும் பசியும் பிணியும் பகையுநீங்கி மன்னனுக்கு வசியும் வளனும் சுரக்கவெனவாழ்த்தி. வசி-வசீகரம்.

எச. மாதர்க்கோலம் - எல்லாரும் காதலிக்கப்பட்ட ஒப்பனை. வலவையின் - சமத்தால்; நாணிலிகள்போல வென்றுமாம்.

எரு. மூதிற்பெண்டிர் - மறக்குடிமகளிர். ஓதையின் - ஆரவாரத்துடனே. பெயர - அவர் பலியிட்டுப் போனவளவிலே.

(சு) அவிரொளி கதிர்பரப்பாநிற்பப் (சுஅ) புழுக்கல்முதலாயினவற்றைப் (சுஎ) பீடிகையிலே (சுக) சொரிந்து (எக) நிலமடங்கலும் (எஉ) பசியும் பிணியும் பகையுநீங்கி (எக) மன்னனுக்கு (எகூ) வசியும் வளனும் சுரக்கவெனப் (எரு) பெண்டிர்நின்று (எஈ) வாழ்த்திப் (எரு) பெயரவென்க.

எசு - கூ. வீரரும் மாக்களும் ஒருவரிருவர் முற்படப்போய் முழுப்பலி பீடிகையிற் பலிகொடுத்து ஒழிப்பாயாகவென்று பூதத்துக்குச்சொல்லி.

அ0. வலிக்குவரம்பாகெனல் - வலிக்கு எல்லையாகென வஞ்சினங்கூறல்.

அக. கறைத்தோல் - கருங்கடகு.

அஉ. பல்வேற்பரப்பு - பலவேலையுமுடைய பரப்பு.

அகூ. களங்கொண்டோர் - வென்றோர். அழுவம் - பரப்பு.

அசு - கூ. சூர்த்து.....வைத்து - அச்சத்தைச்செய்து கடைசிவந்த கண்ணினையுடைய தலையை அறுத்து நற்பலிபீடிகையிலேவைத்தென்க.

---

[1] மணிமேகலை, க: எ0 - எகூ; மூ.

வெற்றி வேந்தன் கொற்றங் கொள்கென
நற்பலி பீடிகை நலங்கொள வைத்தாங்
குயிர்ப்பலி யுண்ணு முருமுமக்குரன் முழக்கத்து
மயிர்க்கண் மூரசொடு வான்பலி யூட்டி
பிருநில மருங்கிற் பொருநரைப் பெறுஅச்
செருவெங் காதலிற் [1] றிருமா வளவன்
வாளுங் குடையு மயிர்க்கண் மூரசு
நாளொடு பெயர்த்து நண்ணுர்ப் பெறுகவிம்
மண்ணக * மருங்கினென் வலிகெழு தோளெனப்
புண்ணிய திசைமுகம் போகிய வந்நா
ளசைவி லூக்கத்து நசைபிறக் கொழியப்
பகை†விலக் கியதிப் பயங்கெழு மலையென
விமையவ ருறையுஞ் சிமையப் பிடர்த்தலைக்
கொடுவரி ‡ யொற்றிக் கொள்கையிற் பெயர்வோற்கு
மாநீர் வேலி வச்சிர நன்னாட்டுக்
கோனிறை கொடுத்த கொற்றப் பந்தரு
மகதநன் னாட்டு வாள்வாய் வேந்தன்
பகைபுறத்துக் கொடுத்த பட்டிமண் டபமு
மவந்தி வேந்த னுவந்தனன் கொடுத்த
நிவந்தோங்கு மரபிற் றோரண வாயிலும்

இனி அரசன்செய்தி கூறுகின்றது:—

கூச. புண்ணியதிசை - வடக்கு.

கூரு. நசைபிறக்கொழிய - என்னினைவு மேற்போகாது பின்னிட்டொழிய.

கூசு. பகை விலக்கியது - பகையாய்த் தடுத்தது.

கூஅ. கொடுவரியொற்றி - புலியைப்பொறித்து. பெயர்வோற்கு - மீள்வோனுக்கு.

க00. இறைகொடுத்த - திறையாகக்கொடுத்த. பந்தர் - முத்தின்பந்தர்.

க0உ. பகைபுறத்து - பகையிடத்து; புறம் - இடம்; பகைப்புறமென்பதனைப் பகைபுறமென்றது விகாரம். கொடுத்த - மூன்பகையாய்ப் பின்திறையிட்ட. பட்டிமண்டபம் - ஓலக்கமண்டபம்.

க0கூ. உவந்தனன்கொடுத்த - § மித்திரனுய்க்கொடுத்த.

க0சு. தோரணவாயில் - தோரணத்தையுடையவாசல்.

---

[1] பட்டினப்பாலை, உகூக.

(பி - ம்.) * 'வலரப்பினென்' † 'விலங்கியது' ‡ 'எழுதி', 'ஏற்றி' § 'மித்துரு'

கo0 பொன்னினு மணியினும் புனைந்தன வாயினு
நுண்வினைக் கம்மியர் காணு மரபின
துயர்நீங்கு சிறப்பினவர் தொல்லோ ருதவிக்கு
மயன்விதித்துக் கொடுத்த மரபின விவைதா
மொருங்குடன் புணர்ந்தாங் குயர்ந்தோ ரேத்து
கக0 மரும்பெறன் மரபின் மண்டப மன்றியும்
வம்ப மாக்க டம்பெயர் * பொறித்த
கண்ணெழுத்துப் படுத்த வெண்ணுப் பல்பொதிக்
கடைமுக வாயிலுங் கருந்தாழ்க் காவலு
முடையோர் காவலு † மொரீஇய வாகிக்
ககடு கட்போ ருளரெனிற் கடுப்பத் தலையேற்றிக்
கொட்பி னல்லது கொடுத்த லீயா
துள்ளுநர்ப் பனிக்கும் வெள்ளிடை மன்றமுங்
கூலுங் குறளு மூமுஞ் செவிடு
மழுகுமெய் யாளரு முழுகின ராடிப்

கo0டு - கூ. இவைதாம் பொன்னனும் மணியானுஞ்செய்யப்பட்டனவாயினும் கம்மியராற் காணப்படாதன; இவர்களுடைய முன்னோர்செய்த உதவிக்குப் பிரதியுபகாரமாக மயன்கிருமித்துக்கொடுத்தன; இவை தனித்தனி இத்தன்மையவாயினும் தம்மிற்புணர்ந்து ஏத்தப்படுமென்க.

கக0. அன்றியும் - இங்ஙனம் சொல்லப்படுமூன்றிடமன்றியும்.

ககக. வம்பமாக்கள் - புதியோர். தம்பெயர்பொறித்த-தமதுபெயரெழுதிய.

ககஉ. கண் - அவ்விடத்து. எழுத்துப்படுத்த - இன்னாரது பொதியென எழுதி இலச்சினையிட்ட.

ககஉ - ங. பொதியினையுடைய கடைமுக்த்துவாயிலும் கருந்தாழாகிய காவலும்.

ககச. உடையோர்காவல் - இவற்றையுடையோர்காவல். ஓரீஇயவாகி - நீங்கினவாகி.

ககடு. கட்போர் - களவுகாண்போர். ககள. பனிக்கும் - நடுக்கும்.

ககக - எ. புதியோர் தம்முடைய பெயர்பொறித்த தனத்தைக் களவு கொள்ளுவோருண்டாலுல் எடுத்ததனத்தைத் தங்கள் தலையிலேவைத்துச்சுமந்து திரிகிறதன்றிக் கொண்டுபோகக் கொடாமையான் நினைத்த கள்ளரைநடுக்கும் வெள்ளிடைமன்றமென்க.

(பி - ம்.) * 'பொறித்துக்' † 'ஓரீஇயதாகி'

கஉ0 பழுதில் காட்சி நன்னிறம் பெற்று
வலஞ்செயாக் கழியு மிலஞ்சி மன்றமும்
வஞ்ச முண்டு மயற்பகை யுற்றோர்
நஞ்ச முண்டு நடுங்குதுய ருற்றோர்
ழுழல்வாய் நாகத் தாரெயி றழுந்தினர்
கஉஇ கழல்கட் கூளிக் கடுநவைப் பட்டோர்
சூழல வந்து தொழுத்துயர் நீங்கு
நிழல்கா னெடுங்க னின்ற மன்றமுந்
தவமறைந் தொழுகுந் தன்மை யிலாள
ரவமறைந் தொழுகு * மலவைப் பெண்டி
கஙo ரறைபோ கமைச்சர் பிறர்மனை நயப்போர்
† பொய்க்கரி யாளர் புறங்கூற் றுளரென்
கைக்கொள் பாசத்துக் கைப்படு வோரெனக்
காத நான்குங் கடுங்குர லெடுப்பிப்

கஉக. இலஞ்சி – மடு.

ககஅ – உக. கூனர் குறளர் ஊமர் செவிடர் வியாதியாளர் முழுகிவலஞ் செய்ய நன்னிறம்பெறும் இலஞ்சிமன்றமென்க.

கஉஉ. வஞ்சமுண்டு – வஞ்சனைப்பட்டு. மயற்பகையுற்றோர் – மயக்கமாகிய பகையையுற்றோர்.

கஉச. அழுந்தினர் – அழுந்தப்பட்டோர். கஉள. நிழல் – ஒளி.

கஉஉ – எ. வஞ்சமுண்டு மயக்கமும் துயருமுற்று அழுந்திப் பட்டோர் சூழ்ந்து வணங்க நீங்கும் ஒளிகாலப்பட்ட கல்லுகின்றமன்றமென்க.

கஉஅ. தவமறைந்தொழுகல் – தவத்திலே மறைந்து தவமின்றி ஒழுகுதல்.

கஉகூ. அவமறைந்தொழுகும் அலவைப்பெண்டிர் – மறைந்து அவமேயொழுகும் அலவைப்பெண்டிர்.

கஙo. அறைபோகமைச்சர்-கீழறுக்கும் அமைச்சர். பிறர்மனைநயப்போர் – பிறர்மனைவியை விரும்பினோர்.

கஙக. பொய்க்கரியாளர் – பொய்ச்சாட்சிக்காரர். புறங்கூற்றாளர் – புறங்கூறுவோர்.

கஙஉ. பாசத்துக்கை – பாசத்திடத்து.

கஙஙு. காதநான்கும் – ஊர்சூழ்ந்த நாற்காதவட்டமுகையும்.

(பி – ம்.) * 'அவலப்பெண்டிர்' † 'பொய்க்கரிமாக்கள்'

பூதம் புடைத்துணும் பூத சதுக்கமு
கஙரு மரைசுகோல் கோடினு மறங்கூ றவையத்
துரைதூல் கோடி யொருதிறம் பற்றினு
நாவொடு நவிலாது நவைநீ ருகுத்துப்
பாவை நின்றமூஉம் பாவை மன்றமு
மெய்வகை யுணர்ந்த விழுமியோ ரேத்து
கசஂ [2] மைவகை மன்றத்து மரும்பலி யுறீஇ
வச்சிரக் கோட்டத்து மணங்கெழு மூரசங்
கச்சை யாஅனப் பிடர்த்தலை யேற்றி
வால்வெண் களிற்றரசு வயங்கிய கோட்டத்துக்
கால்கொள் விழவின் கடைநிலை சாற்றித்
கசரு தங்கிய கொள்கைத் தருநிலைக் கோட்டத்து
மங்கல நெடுங்கொடி வானுற வெடுத்து

கஙச. பூதசதுக்கம் - பூதம் திரிகின்ற நாற்சந்தி.

கஉஅ - ஙசு. தன்மையிலாளர்முதல் ஆறுவகையாகிய இவர்களைப் பாசத்திலகப்படுத்திப்பூதம் புடைத்துண்ணும் சதுக்கமென்க.

கஙசு. ஒருதிறம் - ஒருபக்கம்.

கஙள. நாவொடு நவிலாது - நாவினுலுரையாமல். நவை - குற்றம். குற்றத்துக்காகக் கண்ணீருகுக்கையால் நவைநீரென்றார்; நவைநீரென்றுபாடமோதிப் புதியநீரென்பாருமுளர்.

கஙரு - அ. கோல்கோடினும் உரைதூல்கோடி வாரம்பற்றினும் வாய்திறந்துசொல்லாமல் அழுதுகாட்டும் பாவையையுடையமன்றமென்க.

கஙள - சஂ. இவ்வைந்துமன்றத்திலும் பலியிட்டென்க.

அச - கசஂ. பீடத்திலே தலையைவைத்து மூரசு முழக்கி மண்டபமுதலிய வற்றிலும் மன்றங்களிலும் பலியிட்டென்க.

கசக. வச்சிரக்கோட்டம் - வச்சிராயுதமிருக்குங்கோயில்; இவ்விடத்திருக்கிற மூரசு.

கசஉ. கச்சை - கீழ்வயிற்றுக்கச்சை. பிடர்த்தலை - பிடராகியதலை.

கசஙு. களிற்றரசுவயங்கியகோட்டம் - ஐராபதநிற்குங்கோயில்.

கசருி. தருநிலைக்கோட்டம் - கற்பக நிற்குங்கோயில்.

கசக - கூ. வச்சிரக்கோட்டத்திலிருந்தமூரசை, ஐராபதநிற்குங்கோட்டத்திலே கொண்டுவந்து யானையிலேயேற்றி விழவின் முதலுமுடிவுமறிவித்துக் கற்பகநிற்குங் கோயிலிலிருந்தகொடியை வானிலேசெல்லவெடுத்தென்க.

---

[1] "பூதமுண்டது புடைத்துண்ணும்" (சூளா. சுயம். சசு); "பூதம்புடைத்தது" (தொல். இளவி. சூ. நிஅ - இளம். சே. நூ.) [2] சிலப். கூ: கள.

மரகத மணியொடு வயிரங் குயிற்றிய
பவளத் திரள்காற் பைம்பொன் வேதிகை
நெடுநிலை மாளிகைக் கடைமுகத் தியாங்கணுங்
கநிஎ கிம்புரிப் பகுவாய்க் கிளர்மூத் தொழுக்கத்து
மங்கலம் பொறித்த மகர வாசிகைத்
தோரண நிலைய தோமறு பசும்பொற்
பூரண கும்பத்துப் பொலிந்த பாலிகை
பாவை விளக்குப் பசும்பொற் படாகை
கநிஅ தூமயிர்க் கவரி [1] சுந்தரச் சுண்ணத்து
மேவிய கொள்கை வீதியிற் செறிந்தாங்
[2] கைம்பெருங் குழுவு மெண்பே ராயமு
மரச குமரரும் பரத குமரருங்
கவர்பரிப் புரவியர் களிற்றின் றொகுதிய
கசுஎ ரிவர்பரித் தேரின ரியைந்தொருங் கிண்டி
யரைசுமேம் படூஇய வகனிலை மருங்கி

கசஎ. குயிற்றிய - செய்த. கசஅ. காலியுடைய.

கசஎ - அ. மரகதமணியொடு வயிரத்தைக் குயிற்றிய திண்ணை.

கநிஎ. கிம்புரிப்பகுவாய் - மகரவாய். கிளர்மூத்து - அதன்வாயினின்றும் புறப்பட்டமுத்து.

கநிக. மங்கலம்-அட்டமங்கலம்;[3] "செங்கய லிரட்டைதிரு வார்சுடர் கண்ணடி, பொங்கு கொடி வார்முரசந் தோட்டிபுணர் கும்பம், மங்கலங்க ளெட்டும்."

கசஎ - நிசு 'மரகதமணியொடு' என்றதுமுதலாக 'மேவியகொள்கை என்றது' ஈறுக வீதிக்குச்சிறப்பு.

கசக - நிசு. கடைமுகமெல்லாம், கிம்புரிப்பகுவாயினின்றும் புறப்பட்டதாகப்பண்ணின முத்தொழுக்கத்தினையுடைய தோரணம் நிலைபெற்ற பொற்கும்பம் பாலிகை விளக்குப் படாகை கவரி சுண்ணம் இவற்றையுடைய வீதியென்க; சினையின்றொழில் முதன்மேலேறிற்று.

கநிஎ. ஐம்பெருங்குழுவுமெண்பேராயமும்:—"சாந்துபூக் கச்சாடை பாக்கிலை கஞ்சுகநெ, யாய்ந்த விவரெண்ம ராயத்தார் - வேந்தர்க்கு, மாசணம் பார்ப் பார்மருத்தர் வாழ்நிமித்த ரோடமைச்ச, ராசி லைவைக்களத்தா ரைந்து."

---

[1] சிலப்பதிகாரம், சு: சஉ.

[2] மணிமேகலை, க. கள; பெருங்கதை, உ: நி.சு; தொல். கிளவி.சூ. நிள - ந.மேற்.

[3] சீவகசிந்தாமணி, உசஅஎ.

உரைசான் மன்னன் கொற்றங் கொள்கென
மாயிரு ஞாலத்து மன்னுயிர் காக்கு
மாபிரத் தோரெட் டரசுதலைக் கொண்ட
கசுடு தண்ணறுங் காவிரித் தாதுமலி பெருந்துறைப்
புண்ணிய நன்னீர் பொற்குடத் தேந்தி
மண்ணக மருள வானகம் வியப்ப
விண்ணவர் தலைவனை விழுநீ ராட்டிப்
[1] பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலு
கஎ0 மறுமுகச் செவ்வே ளணிதிகழ் கோயிலும்
வால்வளை மேனி வாலியோன் கோயினு
நீல மேனி நெடியோன் கோயிலு
மாலை வெண்குடை மன்னவன் கோயிலு
* மாமுது முதல்வன் வாய்மையின் வழாஅ
கஎடு நான்மறை மரபிற் றீமுறை யொருபா
[2] னல்வகைத் தேவரு மூவறு கணங்களும்
பால்வகை தெரிந்த பகுதித் தோற்றத்து
வேறுவேறு கடவுளர் சாறுசிறந் தொருபா
லறவோர் பள்ளியு மறனெம் படையும்

கசுஅ. ஆட்டி - ஆட்ட.

(கசுக) அகநிலைமருங்கில் தம்மரசனை மேம்படுத்தற்கு (கசு0) ஈண்டி (கசுஉ) வேந்தன் கொற்றங்கொள்வானுகவெனவாழ்த்தி (கசுச) அரசுதலைக் கொண்ட (கசுசு) குடத்தினீரை (கடுசு) இவ்வீதியிலே அடையச்செறிந்து (கசஉ) ஏற்றிச் (கசச) சாற்றி (கசசு) எடுத்துப் (கடுக) புரவியர் களிற்றின் தொகுதியர் (கசு0) தோனராய் (கடுஅ) அரசகுமரரும் வணிககுமரரும் (கசுஅ) ஆட்டவென்க.

கசுக. பெரியோன் - மகாதேவன்.

கஎக. வால்வளை மேனி வாலியோன் - பலதேவன்.

கஎடு. தீ முறை - ஓமம்.

கசுக - எடு. இக்கோயில்களிலே ஓமஞ்செய்யாகிற்க. ஒருபால் - ஒருபக்கம்.

கஎசு. நால்வகைத் தேவர் - வசுக்கள், திவாகரர், உருத்திரர், மருத்துவர்; ஆதியங்கடவுளர்.

கஎக. அறவோர் பள்ளி - அருகர்தானம். அறனெம்படை - தருமம்பாது காக்கிறவிடம்.

---

[1] "ஐத்லீழி நாட்டத் திறையோன் கோயிலும்" (சிலப். கச: எ,);
[2] முருகு. கசுஎ. (பி - ம்.) * 'மாமறை'

கஅ0 புறநிலைக் கோட்டத்துப் புண்ணியத் தானமும்
* திறவோ ருரைக்குஞ் செயல்சிறந் தொருபாற்
கொடித்தேர் வேந்தனொடு கூடா மன்ன
ரடித்தலை நீக்க வருள்சிறந் தொருபாற்
கண்ணு ளாளர் கருவிக் குயிலுவர்
கஅரி பண்ணியாழ்ப் புலவர் பாடற் பாணரொ
டெண்ணருஞ் சிறப்பி னிசைசிறந் தொருபான்
முழவுக்கண் டுயிலாது முடுக்கரும் வீதியும்
விழவுக்களி சிறந்த வியலு ளாங்கட்
காதற் கொழுநனைப் பிரிந்தல ரெய்தா
கஉ0 மாதர்க் கொடுங்குழை மாதவி தன்னை
டில்வளர் மூல்லை மல்லிகை மயிலை
[1] தாழிக் குவளை † சூழ்செங் கழுநீர்
பயில்பூங் கோதைப் பிணையலிற் பொலிந்து

கஅ0. புறநிலைக்கோட்டம் - புறம்புள்ள திருக்கோயில்.

கஉ0 - அ0. (பா) அறவோர் பள்ளியிடத்து அறங்காத்தலையும், சத்திரமுதலான சாலைகளிலே புண்ணியதானங்களையும் நல்லோருரைக்கும் செயல்சிறந்தது ஒருபக்கமென்றுமாம்.

கஅரி. பாடற்பாணர் - புணர்க்கும் பாணர்.

கஅசு. இசைசிறந்தொருபக்கம்.

கஉஅ-அஅ. சிறக்க விழுநீராட்ட விழவுக்களிசிறந்த வியலுளெனக்கூட்டுக.

சிறக்கவென அடையத் திரிக்க.

கஅஅ. வியலுள் ஆங்கண் - அகன்றவூரிடத்து.

(கஅக) 'காதற் கொழுநனை' என்றது முதல் (ககக) 'நன்மொழி தெளித்து' என்றது இறுதியாகக் கோவலனோடு மாதவத்துக்கு ஒத்தபண்பு.

கஅங - கூ0. காதற்கொழுநனை..... .....மாதவியென்றது சிலேடை; காதலிக்கப்பட்ட தன் கொழுநனைப் பிரிந்துவேறுபட்டு அலருறுத அழகிய வளர்ந்த மகரக்குழையையுடைய மாதவியென்றும், எல்லாரும் காதலிக்கும் கொழுவிய நலனையாந்தன்மையைவிட்டு முதிர்ந்து அலராகாத வளர்ந்த தளிரையுடைய குருக்கத்தியென்றுஞ்சொல்லுக.

மாதவி - குருக்கத்தி. கண்ணகி பிரிந்து அலரெய்தலாற் பிரிந்து, அலரெய்தா மாதவியென்றார். குருக்கத்தி அலருறுமை செவ்வியழியாமை.

ககக - கூ. முல்லை, மல்லிகை, மயிலை, குவளை, கழுநீர் இவை பயின்ற கோதையாகிய பிணையல்.

---

[1] "தாழியுண் மலர்ந்த தண்செங் குவளை, நூழை நுழும்போ தொருகையிற் பிடித்து" பெருங்கதை, உ: டு. அ - அ; "தாழிவாய்க்குவளை" (சீவக. அசுக.)

(பி - மீ.) * 'துறவோர்' † 'தண்செங்கழுநீர்'

காமக் களிமகிழ் வெய்திக் காமர்
கசூரி பூம்பொதி நறுவிரைப் பொழிலாட் டமர்ந்து
நாண்மகி ழிருக்கை நாளங் காடியிற்
பூமலி கானத்துப் புதுமணம் புக்குப்
புகையுஞ் சாந்தும் புலராது சிறந்து
நகையா டாயத்து நன்மொழி திளைத்துக்
உ00 குரல்வாய்ப் பாணரொடு நகரப் பரத்தரொடு
திரிதரு மரபிற் கோவலன் போல
விளிவாய் வண்டினை டின்னிள வேனிலொடு
மலய மாருதந் திரிதரு மறுகிற்
கருமுகில் சுமந்து குறுமுய லொழித்தாங்
உ0ரி கிருகருங் கயலோ டிடைக்குமி ழெழுதி
யங்கண் வானத் தரவுப்பகை யஞ்சித்
திங்களு மீண்டித் திரிதலு முண்டுகொ
னீர்வாய் திங்க ணீணிலத் தமுதின்
சீர்வாய் தவலைத் திருநீர் மாந்தி
உகo மீனேற்றுக் கொடியோன் மெய்பெற வளர்த்த
வான வல்லி வருதலு முண்டுகொ
லிருநில மன்னற்குப் பெருவளங் காட்டத்
திருமகள் புகுந்ததிச் செழும்பதி யாமென
வெரிநிறத் திலவமு மல்லியு மன்றியுங்

ககள. பூவின் மிகுதிபற்றிக் கானமென்றார்.

ககரி - எ. பொழில்வினையாட்டு விரும்பி நாடோறும் மகிழ்ந்திருக்கும் இருப்பையுடைய நாளங்காடியிற் பூவிற்குமிடங்களிற் செவ்விமணத்திலேபுக்கு.

ககஅ. புலராது - புலராமை. ககக. ஆயத்து - ஆயத்தோடே.

உ00. பரதர் - தூர்த்தர்.

கஅஅ - உ0க. வியலுளாங்கண் மாதவிதன்னெடுபொலிந்து எய்தி அமர்ந்து புக்குச் சிறந்து திளைத்துப் பரத்தரொடு பாணரொடு திரிதரும் கோவலன் போல மாருதம் திரிதருமதுகென்க.

உகo. மெய் - வடிவு.

உ0அ - கo. திங்களாகிய நிலத்திலே அமுதமாந்தி மெய்பெறவென்க;

உகக. ஆமென - ஆமெனக்கருதி.

உகஉ - ங. இப்பதியிலே திருமகள் புகுந்தகாரணம் மன்னனுக்கு வளங் காட்டவென்க.

உகச. அன்றி - இவையேயன்றி.

உகடு கருநெடுங் குவளையுங் குமிழும் பூத்தாங்
குள்வரிக் கோலத் துறுதுணை தேடிக்
கள்ளக் கமலந் திரிதலு முண்டுகொன்
மன்னவன் செங்கோன் மறுத்த லஞ்சிப்
[1] பல்லுயிர் பருகும் பகுவாய்க் கூற்ற

உஉ0 மாண்மையிற் றிரிந்துத னருந்தொழி றிரியாது
நாணுடைக் கோலத்து நகைமுகங் கோட்டிப்
பண்மொழி நரம்பிற் றிவவியாழ் மிழற்றிப்
பெண்மையிற் றிரியும் பெற்றிய முண்டென
[2] வுருவி லாள னொருபெருஞ் சேனை

உஉடு பகலம ராட்டி யெதிர்நின்று விலக்கியவ
ரெழுதுவரி கோல முழுமெயு முறீஇ
விருந்தொடு புக்க பெருந்தோட் கணவரொ
டுடனுறைவு மரீஇ யொழுக்கொடு புணர்ந்த
வடமீன் கற்பின் மனையுறை மகளிர்

உஙo மாதர்வாண் முகத்து மணித்தோட்டுக் குவளைப்
போதுபுறங் கொடுத்துப் போகிய செங்கடை
விருந்திற் றீர்ந்தில தாயின் யாவது

உகசு - எ. உள்வரிக்கோலம் - திருத்திரிமவேடம். கோலத்து - கோலத்தோடே. உறுதுணை - திருமகள். தாமரையானது தன்வடிவொழிய வேறொரு வடிவுகொள்ளுதல்.

உஉஉ. பண்மொழி நரம்பின் - பண்ணைச்சொல்லுகின்ற யாழ்நரம்பு போல.

உஉஙு. உண்டுகொலென வேறோரிடைச்சொல் வருவிக்க.

உஉச - டு. (பா) ஒருபெருஞ்சேனை.....விலங்கி - பரத்தையரை மாறுபட்ட பூசற்கண்ணே அஞ்சித் எதிரே நின்று தடுத்து.

அன்றியும், விலங்கி விலக்கி; புலவியாலே கூடாதமகளிரைப் போகாமலெதிரே நின்று தடுத்து இங்ஙனம் புகழ்ந்து புலவியைத் தீர்த்தென்றுமாம்.

உஉடு - சு. (பா) அவரெழுதுவரிக்கோலம் - தொய்யில். முழுமெய்யு முறுத்தியென்க. முழுமெய்யு முறுத்தியென்றது - புணர்ந்தென்பதாயிற்று.

உஙo - ஙக. குவளைப்போது தான் தோற்றுப்போகிய.

உஙஉ. யாவதும் - சிறிதும்.

---

[1] சிலப்பதிகாரம், எ: கo. [2] சிலப்பதிகாரம், உ: சச.

மருந்துந் தருங்கொலிம் மாநில வரைப்பெனக்
கையற்று நடுங்கு நல்வினை நடுநா
உருடு ளுள்ளக நறுந்தா துறைப்ப மீதழிந்து
கள்ளுக நடுங்குங் கழுநீர் போலக்
கண்ணகி கருங்கணு மாதவி செங்கணு
முண்ணிறை கரந்தகத் தொளித்துநீ ருகுத்தன
வெண்ணுமுறை யிடத்தினும் வலத்தினுந் துடித்தன
உசஎ விண்ணவர் கோமான் விழுவுநா ளகத்தென்.

உகூக. மாநிலவரைப்பு - பூமியிலுள்ளார். உகூச. நல்வினை - விழா.

(உஎக) மறுகிடத்துத் (உஎள) திங்களுமுண்டோ; (உகக) வல்லிவருதலு முண்டோ; (உகள) கமலம் திரிதலுமுண்டோ; (உஉக) பெற்றியுமுண்டோ வெனச்சொல்லிச் (உஉச) சேணியாகிய பரத்தையரிடத்துப் போகாமல் (உஉரு) விலங்கிப் பின்பு தம்மனைகளிலே புக்கு (உஉசு) எழுதுவரிக்கோலத் தைத் தம்மேனிமுழுவதும் உறுவித்துப் பின்பு (உஉஅ) ஒழுக்கொடுபுணர்ந்த (உஉக) மனையுறைமகளிர் (உஉஅ) (பா) உடனுறைவு மருவுதற்கு (உஉள) விருந்தொடுபுக்க கணவர் (உகூச) கையற்றுநடுங்கும் நடுநாளென்க.

உகூரு. (பா) நறுந்தாது எறிப்ப - தாது ஒளிவிட.

உகூள - கூ. கருங்கணென்றது, கண்ணகிக்குப் புணர்ச்சியில்லாமையால்; நிறைகரந்து துன்பத்தாற் கண்கள் நீருகுத்தன; செங்கணென்றுரைத்தது, மாதவிக்குப் புணர்ச்சிவிழும்பலால்; அகத்து நிறைகரந்தொளித்து இன் பத்தாற் கண்கள் நீருகுத்தன. கண்ணகிக்கு நிறைகரத்தல் - கற்பாற் பரிகாரப் பட்டதாதல்; ஆற்றுமை மிகுதி கூறிற்று. மாதவிக்கு.....நிறுத்தலைக்கரந்து காமத்தாலே நீருகுத்தன. கண்ணகிக்கு அழுகைக்கண்ணீர்; மாதவிக்கு உவ கைக்கண்ணீர்; எண்ணுமுறை - எண்ணினவடைவே. பின்பு கண்ணகிக்குக் கூட்டமுண்டாகையால் இடக்கண்டுடித்தன; மாதவிக்குப் பின்பு பிரிவுண்டா கையால் வலக்கண் துடித்தன.

க - சூ. அலைநீ ராடை.....மலர்கதிர் பரப்பி

(இ - ள்.) கடலாகிய ஆடையினையும் மலையாகியமுலையினையும் அம்முலை யாகத்துப் பெரிய யாருகிய ஆரத்தினையும் மாரியாகிய கூந்தலினையுமுடைய இட மகன்ற பரப்பினையுடைய [1] அரசுகெடுத்தலம்வரும் நிலமடந்தை அல்லற்கா லைப் பசந்துவாரப் பனித்துப் போர்த்த இருளாகிய படாத்தைத் தன் கதிர்க்கை களாணீக்கி அவிரொளி உதயமால்வரையுச்சிக்கட்டோன்றி விரிந்தகதிர்களைப் பரப்பவென்க.

மலை - பொதியிலும், இமயமும். இவற்றைச் சாதியொருமையாற்கூறி னார்; ''பொதியிலு மிமயமும் புணர்முலை யாக'' என்றார்கதையினும். ஆரப்பேரி யாற்று, பேர்யாற்றாரமெனப் பாடமாற்றுக; ஆரம் - முத்துவடம். மாரி - முகில். அகன்பரப்பு, வினைத்தொகை. புதைத்தல் - போர்த்தல்; மலைநாட்டு வழக்கு. போக - அகல. உலகுவிளங்கவிரொளி - உலகுவிளங்குதற்குக்காரண மாகத் தான் விளங்குமொளி; ஆவது ஞாயிறு. மலர்தல் - விரிதல். பரப்பி, பரப்பவெனத்திரிக்க. வாளாது மண்மடந்தையென்னுது கண்ணகன்பரப்பின் மண்ணகமடந்தையென்று மிகுத்துக்கூறினார், அத்தன்மையாளைப் போர்த்த நீலப்படாத்தைத் தன்தேசினால் நீக்கிய ஒளியெனற்கு. எனவே செம்பியன் மரபுயர்ச்சி கூறியவாருயிற்று.

படாத்தைநீக்கித் தோன்றிப் பரப்பவென்க.

எ. வேயாமாடமும்—(இ - ள்.) நிலாமுற்றமும்,

வியன்கல விருக்கையும்—(இ - ள்.) வேற்றுமைப்பட்ட அணிகலம் பெய்த சரக்கறையும்,

வியல் - மிகுதியுமாம்.

அ. [2] மான்கட் காலதர் மாளிகை யிடங்களும் - (இ - ள்.) மானின் கண்போலக் கோணஞ்செய்த சாளரங்களையுடைய மாளிகையிடங்களும்,

காலதர் - சாளரம்.

கூ - கஎ. கயவாய் மருங்கில்.....யவன ரிருக்கையும்

(இ - ள்.) புகார்முகப்பக்கங்களில் தம்மைக்காண்போர்கண்களே மேற்போக விடாமற்றடுக்கும் பயன் தொலைதலியறியாத மிலேச்சரிருக்குமிடங்களும்,

கக - உ. கலந்தரு திருவின்..... ..இலங்குநீர் வரைப்பும்

(இ - ள்.) மரக்கலந்தரும் செல்வப்பொருட்டால் தாம்பிறந்த நிலத்தை விட்டுப்போந்த பரதேசிகள்பலரும் ஒருநிலத்தாரைப்போலக் கலந்து செறிந் திருக்கும் அலைவாய்க்கரையிருப்பும்,

கஙு. வண்ணமும்—(இ - ள்.) தொய்யிற்குழம்பு முதலியவும்,

---

[1] இங்கே தந்துரைத்தவற்றை அந்திமாலைச்சிறப்புச்செய்ளுதை அ - ஆம் அடி முதலியவற்றிற் காணலாம். [2] சீவகசிந்தாமணி, உஉகூ - ந. மேற்.

எழுதுவண்ணமுமாம்.

சுண்ணமும்—(இ - ள்.) பூசுசுண்ணமும்,

தண்ணறுஞ் சாந்தமும்—(இ-ள்.) குளிர்ந்த நறியபசுங்கூட்டும்,

கசை. பூவும்—(இ - ள்.) விடுபூத் தொடைப்பூக் கட்டுப்பூவென்னும் மூவகைப்பூவகையும்,

புகையும்—(இ - ள்.) புகையுறுப்பும்,

ஆவன: [1] ''நேர்கட்டி செந்தே னிரியாசம் பச்சிலை, யார மகிலுறுப்போ டாறு'' எனவிவை.

மேவிய விரையும்—(இ - ள்.) தம்மிற்பொருந்திய விரையும்,

ஆவன : [2] ''கொட்டங் குருக்கந் தகர மகிலார, மொட்டிய வைந்தும் விரை'' எனவிவை.

கநி. பகர்வனர் திரிதரு நகர வீதியும் - (இ - ள்.) இவற்றை விற்ப வராய்த் திரிதருதலைச்செய்யும் நகரத்தெருவு மென்க.

மாடமும், இருக்கையும், இடங்களும், இருக்கையும், வரைப்பும், வண்ண முதல் விரையீறுவுள்ளனவற்றை விற்பவராய்த் திரிதருதலைச்செய்யும் நகரத் தெருவுமென்க.

கசு - எ. பட்டினு மயிரினும்.....காருக ருக்கையும்

(இ - ள்.) பட்டுநூலானும் எலிமயிரானும் பருத்திநூலானும் நுண்ணிய தொழில்களோ ஊசியாற் பிணிக்கும் பட்டுச்சாலியிருக்குமிடங்களும்,

* அச்சுக்கட்டிகளென்பாருமுளர். காருகத்தொழில் இருவகைத்து ; [3] ''பருத்திநூல் பட்டுநூலமைத்தாடை யாக்கலுஞ், சுமத்தலும் † பிறவுங் காருக வினைத்தொழில்'' என்றாராகலின். இவற்றுள் ஈண்டுக் கூறியோர் முன்னோர்.

கஅ - உக. தூசுந்துகிரும்.....நனந்தலை மறுகும்

(இ - ள்.) பட்டும் பவளமும் சந்தனமும் அகிலும் குற்றமற்ற முத்தும் ஒழிந்தமணிகளும் பொன்னுமாகிய இவற்றைப் பொற்பணியோடே இலக்கங் காண்டோர் ஒரெண்ணினும் எண்ணிக் கரைகாணவரிய வளம் தம்மிடந்தோறும் மயங்கப்பட்டனவற்றையுடைய இடமகன்ற மறுகுகளும்,

உஉ - ங. பால்வகை தெரிந்த.....கூல வீதியும்

(இ - ள்.) பகுதிவேறுபடத்தெரிந்த முதிரைமுதலிய பண்டத்தோடு எண் வகைக்கூலமும் குவித்தலிற்கும் கூலக்கடைத்தெருவும்,

---

1 ''நேர்கட்டி செந்தே னிரியாசங் கப்பூர, மார மகிலுறுப்போ டைந்து.'' எனக்காட்டுவர் நச்சினார்க்கினியர் (சீவக. திருச.)

2 பிங்கலந்தை ஐயர்வகை. எஅ. 3 திவாகரம் கூ - வது.

(பி - ம்.) * 'அச்சுக்கொட்டிகள்.' † 'அகழ்தலும்.'

எண்வகைக்கூலமாவன : "நெல்லுப் புல்லு வரகுதிலை சாமை, யிறுங்கு *தோரையொடு கழைவிளை நெல்லே" எனவிவை. இனிக் கூலம் பதினெண் வகைத்தென்பர் கூத்தநூலாசிரியர்; என்னை? [1] "பதினெண் கூலமு முழவர்க்கு மிகுக" என்றாராகலின்; பலசரக்கென்பாருமுளர்.

உசு. காழியர்—(இ - ள்.) பிட்டுவாணிகரும்,

வண்ணருமாம்; [2] "காழியர், கௌவைப் பரப்பின் வெவ்வுவர்ப் பொழிப்ப" என்றார் அகப்பாட்டினும்.

கூவியர்—(இ - ள்.) அப்பவாணிகரும்,

[3] "காரகற் கூவியன் பாகொடு பிடித்த" என்றார் பெரும்பாணாற்றினும்.

கண்ணெடையாட்டியர்—(இ - ள்.) கள்ளைவிற்கும் வலைச்சியரும்,

நொடை-வினை; [4] "மீனெடுத்து நெற்குவையி" என்றார் புறப்பாட்டினும்.

உரு. மீன்விலைப்பரதவர்—(இ-ள்.) மீன்விலையையுடையபட்டினவரும்,

வெள்ளுப்புப்பகருநர்—(இ - ள்.) உமணரும் உமட்டியரும்; அளவருமாம்.

உசு. பாசவர்—(இ - ள்.) [5] இலையமுதிடுவாரும்,

அன்றிக் கயிறுதிரித்து விற்பாருமாம்; பச்சிறைச்சி சுட்டிறைச்சி விற்பாருமாம்.

வாசவர்—(இ - ள்.) பஞ்சவாசம்விற்பாரும்,

அவை, "தக்கோலந் தீம்பூத் தகைசா லிலவங்கங், கப்பூரஞ் சாதியோ டைந்து" எனவிவை.

உசு - எ. மைந்நிண விலைஞரோடு.....இருக்கையும்

(இ - ள்.) ஆட்டுவாணிகருடனே பரவருஞ் செறிந்த ஊன்மிக்க இருப்பிடங்களும்,

ஓசுநர் - எண்ணெய்வாணிகருமென்ப.

உஅ. கஞ்சகாரரும்—(இ - ள்.) வெண்கலக் கன்னரும்,

செம்புசெய்குநரும்—(இ - ள்.) செம்புகொட்டிகளும்,

உஆ. மரங்கொறச்சரும்—(இ - ள்.) மரத்தைவெட்டுந்தச்சரும்,

கொல்லல் - வெட்டல்.

கருங்கைக் கொல்லரும்—(இ-ள்.) வலிய கையையுடைய கொல்லரும்,

---

[1] மதிவாணர்நாடகத்தமிழ்நூல். [4] புறநானூறு, ஙசஞ.
[2] அகநானூறு, அசு. [5] இலையமுது - வெற்றிலை.
[3] பெரும்பாணாற்றுப்படை, ளஎள. (பி - ம்.) * 'தோரையிராகியென்கூலம்.'

கருங்கை இருவகைத்து ; என்னே ? ''கொன்றுவாழ் தொழிலினும் வன் பணித் தொழிலினுங், கன்றிய தொழிற்கை கருங்கை யெனப்படும்' என்றாரா கலின். ஈண்டு வலிய கையையுடைய கொல்லருமென்பதாயிற்று.

சுஅ. [1] கண்ணுள் வினைஞரும்—(இ - ள்.) சித்திரகாரிகளும்,

மண்ணீட்டாளரும்—(இ - ள்.) சிற்பாசாரிகளும்.

அன்றிச் சுதையாற் பாவையுள்ளிட்டன பண்ணுவாரென்றுமாம் ; குய வருமென்ப. மண் - ஈண்டுச் சுதை; [2] ''மண்ணே டியைந்த மரத்தினையர்'' என்றாராகலின்.

சுக. பொன்செய் கொல்லரும்—(இ - ள்.) உருக்குத்தட்டாரும்,

நன்கலந் தருநரும்—(இ - ள்.) இரத்தினப்பணித்தட்டாரும்,

சுஉ. துன்ன காரரும்—(இ - ள்.) [3] சிப்பியரும்,

தோலின் றுன்னரும்—(இ - ள்.) உறைகாரரும்,

பறம்பர் முதலாயினருமாம்.

சுங - ச. கிழியினுங் கிடையினும்.....பால்கெழு மாக்களும்

(இ - ள்.) கிழி கிடையென்பவற்றுற் புட்பம் வாடாமாலை பொய்க் கொண்டைமுதலிய உருப்பிறக்குந்தொழில்களே மிகுத்துக்காட்டிக் குற்றமற்ற கைத்தொழிலால் வேறுபட்ட இயல்பையுடையோரும்,

கிழி - சீரை. கிடை - கிடேச்சு.

இனி, கிழியாற் படிமை படமுதலியவும், கிடையால் விலங்கு பறவை பூ பூங்கொத்துமுதலியவும் அமைப்போருமாம்.

சுஙு - எ. குழலினும் யாழினும்.....இருக்கையும்

(இ - ள்.) தூலக்கருவியானும் நரப்புக்கருவியானும் சுரன்முதலாயுள்ள ஏழிசையினையும் சரிகமபதநி யென்னும் ஏழெழுத்தினையும் மூவகைவங்கியத் தினும் நால்வகையாழினும் பிறக்கும் பண்களுக்கு இன்றியமையாத மூவேழு திறத்தையுங்குற்றமின்றுக இசைத்துக்காட்டவல்ல பெறுதற்கு அரிய இசை மரபையறிந்த குழலர் பாணர்முதலாய பெரிய இசைக்காரரிருக்குமிடங்களு மென்க.

உம்மையால் எழுத்துக்களுங்கொள்ளப்பட்டன.

சுஅ - கூ. சிறுகுறுங் கைவினை.....பாக்கமும்

(இ - ள்.) ஒழுக்கத்திற்சிறியராய்ச் சிறுதொழிலைப் பிறர்க்குச்செய்து அதனான்வரும் பொருளையுண்ணும் கைவினையாளரோடே முற்கூறிய யவனர் முதல் பெரும்பாணரையுள்ளாரோடு குற்றமின்றிவிளங்கும் மருவூர்ப்பாக்கமு மென்க.

---

[1] கண்ணுள்வினைஞரென்பதற்கு நோக்கினர். கண்ணிடத்தே தந்தொழிலை நிறுத்துவோரென்பர் நச்சினர்க்கினியர்; (பத். பக். உகக.)

[2] திருக்குறள், இஎசு. [3] சிப்பியர் - தையற்காரர்.

சo. கோவியன் வீதியும்—(இ - ள்.) இராசப்பெருந்தெருவும், செண்டுவெளிப்புறத்தெருவென்பாருமுளர்.

கொடித்தேர் வீதியும்—(இ - ள்.) கொடியணிந்த தேரோடும் விழா வீதியும்,

சக. பீடிகைத் தெருவும்—(இ - ள்.) கடைத்தெருவும்,

சக - உ. பெருங்குடி வாணிகர் மாட மறுகும் (இ - ள்.) [1] பெரிய குடிப்பிறப்பையுடைய வாணிகரது மாடமாளிகைத்தெருவும்,

சஉ. மறையோ ரிருக்கையும்—(இ - ள்.) பஞ்சக்கிராமிகளிருக்குமிடமும்,

சஙு - நி. வீழ்குடி யுழவரொடு.....இருக்கையும்

(இ - ள்.) உழவின்மேல்விருப்பும் குடிகளோடும் உழவரோடும் மருத்துவ நூலோரும் சோதிடநூலோரும் வேறுவேறு வகைப்படத்தெரிந்த பலமுறைமை யோடிருக்கும் இருப்பிடங்களும்,

வீழ்குடி - காணியாளர்; [2] "பகடு புறந்தருநர் பார மோம்பிக், குடிபுறந் தருகுவை யாயின்" என்றார் பிறரும்; யாவரும் விரும்புங்குடியென்றுமாம். [3] "உழுதுண்டு.....செல்பவர்" என்பதனைக் கொள்க; குடியொடும் உழவரொடு மென்க; அன்றி உழவில்விருப்புங்குடியெனவுமாம்; [4] "உழவின்கட் காமுற்று வாழ்தல்" என்றாராகலின்; வேளாண் [5] சாமந்த ரென்பாருமுளர்.

சசு. திருமணி குயிற்றுநர்—(இ - ள்.) முத்துக்கோப்பாரும், [வரிசையான] வேகடிகளுமாம்.

சசு - எ. சிறந்த கொள்கையொடு.....அகன்பெரு வீதியும்

(இ - ள்.) தமக்குச்சிறந்த கோட்பாட்டால் அழகிய வீளகளையுப்பாரும் வாழ்கின்ற அகன்ற பெரிய வீதியும்,

வீளபோழுநரென்றது-சங்கறுப்பாரை. அணிவீளை, வினைத்தொகையுமாம்.

வீழ்குடிமுதல் போழுநரீறுள்ளவர் மிக்க செருக்கோடிருக்கும் வீதியுமெனினுமமையும்.

சஅ. சூதர்—(இ - ள்.) நின்றேத்துவார்,

மாகதர்—(இ - ள்.) இருந்தேத்துவார்,

வேதாளிகரொடு—(இ - ள்.) வைதாளியாடுவாரென்று சொல்லப்பட்ட இவரோடே,

---

[1] பெருங்குடி வாணிகர் - மூவகைவாணிகருள் ஒருபாலார்; "பெருங்குடி வாணிகன் பெருமட மகளே" என்றார் முன்னும்; சிலப். உ: எசு.

[2] புறநானூறு, ஙஙி.

[3] திருக்குறள், கoஙங.

[4] திரிகடுகம், சஉ.

[5] சாமந்தர் - சிற்றரசர்.

[மிட்டையகண்டருமென்ப.]

சகூ. நாழிகைக் கணக்கர்—(இ - ள்.) [1]கடிகையார்,

அவர் அரசனுக்குச் சென்றநாழிகைக்குக் கவிசொல்லுவார்; "பூமென் கூணையும் பொருசிலையுங் கைக்கொண்டு, காமன் றிரியுங் கருவூரா - யாமங்க, ளொன்றுபோ யொன்றுபோ யொன்றுபோய் நாழிகையு, மொன்றுபோ யொன்றுபோ யொன்று" என; நாழிகைவட்டிலிடுவாருமென்ப; [2] "சூதர்வாழ்த்த மாகதர் றுவல, வேதா லிகரொடு நாழிகை யிசைப்ப" என்றூர் பிறரும்.

நலம்பெறு கண்ணுளர்—(இ - ள்.) தாம் கொண்ட கோலத்தானும் கூத்தானும் நலம்பெறும் சாந்திக்கூத்தர்,

என்னே? "வாசிகை வைத்து மணித்தோ டணியணிந்து, மூசிய சுண்ண முகத்தெழுதித் - தேசுடனே, யேந்துசுடர் வாள்பிடித்திட் டீசனுக்குங் காளிக் குஞ், சாந்திக்கூத் தாடத் தகும்." என்பதனானறிக; மதங்கரென்பாரு மூளர்.

நிo. காவற் கணிகையர்—(இ - ள்.) களத்தாடுங் கூத்திகள்,

* இராக்கடைப் பெண்டிகளென்பாரு மூளர்.

ஆடற்கூத்தியர்—(இ - ள்.) அகக்கூத்தாடும் பதியிலார்,

நிக. [3] பூவிலை மடந்தையர்—(இ - ள்.) அற்றைப்பரிசங்கொள்வார்,

ஏவற் சிலதியர்—(இ - ள்.) மடைப்பள்ளியாரடியார்,

நிஉ. பயிறெழுதிற் குயிலுவர் - (இ - ள்.)' தோற்கருவி இசைப்பார்,

பன்முறைக் கருவியர்—(இ - ள்.) படைக்கும் உற்சவத்துக்குங் கொட்டுவார்,

யாழ்முதலாகிய நரப்புக்கருவிகளையுடையாருமென்ப.

நிந. நகைவேழம்பரொடு— (இ - ள்.) [சாரமாணிகளோடே,]

சிரிக்கும்பரியாசகருடனுமென்ப.

வகைதெரி யிருக்கையும்—(இ - ள்.) சூதர்முதல் வேழம்பரீறாக எண் ணப்பட்ட இவர்கள் தத்தம் இனத்தின்வகைதெரிந்த இருப்பிடங்களுமென்க.

நிச. கடும்பரி கடவுநர்—(இ - ள்.) கடிய பரிகளைக் கடவுவாராகிய † அச்சுவவாரியர்,

களிற்றின் பாகர்—(இ - ள்.) யானைப்பாகர்,

இன் - சாரியை.

நிடு. நெடுந்தே ரூருநர்—(இ - ள்.) தேர்ப்பாகர்,

---

[1] "கடிகையர்கவிதையோதை" கம்ப. எழுச்சி. எக.

[2] மதுரைக்காஞ்சி, சுஎo - எக.

[3] சீவகசிந்தாமணி, உஎஉடு - ந. மேற்.

(பி - ம்.) * 'இராக்கிடை' † 'அச்சுவவாதியர்'

கடுங்கண் மறவர்-(இ-ள்.) சினக்கண்ணையுடைய காலாட்படைத்தலைவர்,

கடுமை - சினம். இனி முன்னர்க்கூறிய மூப்படைக்கும் தறுகண்மையையுடைய வீரரென்றுமாம்.

நிசு. இருந்துபுறஞ் சுற்றிய பெரும்பா யிருக்கையும் - (இ - ள்.) என்று கூறப்பட்ட வீரர்கள் அரசன்கோயிலைச் சூழவிருக்கும் பெரியபரந்த இருப்புக்களுமென்க.

நிஎ - அ. பீடுகெழு சிறப்பின்.....பாக்கமும்

(இ - ள்.) கோவியன் வீதி முதலாக இருக்கையிறுதியாகிய இருப்பிடங்களையுடைய பெருமையமைந்த சிறப்பினையுடைய பெரியோர்திரண்ட பாடலமைந்த சிறப்பினையுடைய பட்டினப்பாக்கமுமென்க.

நிக - சுஎ. இருபெரு வேந்தர்.....கடைகெழு பீடிகை

இதில், (சுசு) ''சித்திரைச் சித்திரைத் திங்கள் * சேர்ந்தென'' என்பதனைப் புழுக்கன்முதலிய சொரிந்தென்பதனோடு முடிக்க.

(இ - ள்.) பெரியவேந்தரிருவர் போர்குறித்து வந்துவிட்ட பாசறையிருப்புக்கு நடுப்பட்டநிலம் போர்க்களமானற்போல முற்கூறிய மருவூர்ப்பாக்கமும் பட்டினப்பாக்கமுமென இரண்டுகூறுபட்ட ஊர்க்குநடுப்பட்ட பொதுநிலமாகிய நாளங்காடி; அஃது எத்தன்மையதாகிய நாளங்காடியெனின், நிரைபடச்செறிந்த சோலியின்மரங்களிற் கால்களே தூணுகக் கட்டப்பட்ட கடைகளையுடைய கொடிப்போர் கொள்வோரோதை இடையறாது நிலைபெற்ற நாளங்காடியென்க. அந்நாளங்காடித்தெருவின்கண்ணே பூதத்து வாயிற் பீடிகையென்க. அஃது எத்தன்மையதாகிய பூதமெனின், வெற்றிபொருந்திய வேலையுடைய முசுகுந்தனென்னும் மன்னனுக்குவரும் இடையூற்றை ஒழிப்பாயெனத் தேவர்கோன் ஏவுதலானே அத்தேவருலகினின்றும் போந்து அந்நாண்முதலாகப் பலிகொண்டு போதும் [1] பூதமென்க. அப்பூதத்து நாளங்காடிக்கட் பலிபீடிகையிடத்தே யென்க.

அல்லங்காடியுமுண்டாதலின், இதனை நாளங்காடியென்றார்.

சுஅ - எநி. புழுக்கலு நோலையும்.....ஓதையிற் பெயர

(இ - ள்.) சித்திரைமாதத்துச் சித்திரைநாளிலே நிறைமதிசேர்ந்ததாக அந்நாளிலே நாணிலிகளைப்போல வாய்சோர்ந்துரைக்கும் மாதர்க்கோலத்து மறக்குடிப்பெண்டிர் அப்பீடிகைக்கண்ணே புழுக்கல்முதலியவற்றையுகுத்து எம்மன்னனுடைய நிலமுழுதும் பசிமுதலியன நீங்கி வசிமுதலியனசுரக்கவென வாழ்த்தித் துணங்கையராய்க் குரவையராய் அணங்கெழுந்தாடிக் கொக்கரிப் போடே பெயரவென்க.

---

[1] இந்தப்பூதம் முசுகுந்தன்பொருட்டுத் தேவருலகினின்றும் இந்திரனேவலால் இந்நகரில் வந்துபலியுண்டிருத்தலை, இந்நூல், சு - ஆம் காதை எ - ஆம் அடிமுதலிய வற்றாலும் அவற்றின் உரையாலுமுணர்க. (பி - ம்.) * 'சேர்ந்தெனவந்தாள்.'

புழுக்கல் - முதிரைப்பண்டம்; அவரை துவரை முதலியன; "புழுக்குவ புழுக்கல்" என்றுராகலின். நோலை - * எட்கசிவு. விழுக்குடைமடை - நிணச் சோறு; பொங்கல் - கள்ளு; பொங்கற்சோறுமென்ப. தூணங்கை - தூணங்கைக் கூத்து; என்னை? [1] "முடக்கிய விருகை பழுப்புடை யொற்றித் - தொடக்கிய நடையது தூணங்கை யாகும்" என்றுராகலின். இதனைச் சிங்கியென்பாருமுளர். சூரவை-கைகோத்தாடுங்கூத்து. அணங்கெழுந்தாடி-தேவரேறியாடி. பிசை-உட்பகை. வசி - மழை; [2] "வசித்தொழி லுதவ மாதிரங் கொழுப்ப." என்றுர் பிறரும்; வசியமுமாம். மாதர்க் கோலம் - கண்டு எவருங்காதலிக்கப்படும் ஒப்பனை. வல வையின் - நாணிலிகளைப்போல; [3] வலவைக ளல்லாதார்" என்றுர் பிறரும்; வல்லபத்தாலென்பாருமுளர். மூதிற்பெண்டிர் - மறக்குடிமகளிர்.

சேர்ந்தார்க அந்நாள் ஒளி கதிர்பரப்பாநிற்பப் புழுக்கல் முதலியன பீடிகை யிலே சொரிந்து பெண்டிர் வாழ்த்தி ஆடிப் பெயரவென்க.

இவர் அரசன்கோயில் அகப்பரிசாரமகளிர்.

எசு - அஅ. மருவூர் மருங்கின்.....வான்பலி யூட்டி

(இ - ள்.) அந்த முசுகுந்தன் இருவகைப் பாக்கத்தோரும் அக்காலத்துப் பூதத்திற்குப் பலிகொடுப்பதற்கு முன்பினென்று தந்தமில் முந்துகூற வலிய வரவோர் நெருங்கிச்சென்று தம்மைத் தாமேயிடும்பலியை உண்ணும் பீடிகை யிலே மன்னற்கு உற்றதை ஒழிப்பாயாகெனப் பூதத்திற்குச்சொல்லிப் பலிகொ டுத்தலைப் புரிந்தோர் அப்பலிக்கும் வலிக்கும் வரம்பாகக்கடவரென அவ்வர சன்குழுவும் ஆயமும் அக்காலத்தே நிருமித்தலாலே இக்காலத்து வீரரும் மாக் களும் கவணினராய்த்தோலோடு வேற்பரப்பினராய் அமர்க்களப்பரப்பிலே உடற் கரித்து ஆர்த்துக் களங்கொண்டவீரர் பார்த்தோரை அச்சமுறுத்துக் கடை சிவந்த சுடுங்கொள்ளிபோலும் பார்வையையுடைய தமது பசுந்தலை வேந்தன் கொற்றங்கொள்ளெனப் பேசும்படி அரிந்து ஒப்பித்துப் பீடிகையிலேவைத்த அப்பொழுதே அக்குறையுடல்கள் தமக்கு வாயின்மையின் தத்தந்தோளிற் பூண்ட மயிர்க்கண்முரசின்வாயால் உயிர்க்கடன்தந்தோம்; கொண்மினென்று நின்று பலியூட்டியென்க.

கழி - ஊன். பிணி - பிணித்தல். கறை - கறுப்பு. தோல் - பரிசை; [4] "மழை யென மருளும் பஃறோல்" என்றுராகலின்; கருங்கடலென்பாருமுளர். மெய் யுறத்தீண்டி - உடற்கரித்து. அழுவம் - பரப்பு. சூர்த்து - அச்சமுறுத்து. என் றது [5] "நீண்டபலி பீடத்தி லறுத்து வைத்த நெறிக்குஞ்சித் தலையைத்தன் னினமென் றெண்ணி, யாண்டலைப்புள் ளருகணைந்து பார்க்கு மாலோ வணைதலு மச் சிரமச்ச முறுத்துமாலோ" என்றுற்போல்வரும்; [விருத்திச்செய்யுள்;] சுழன்றென்பாருமுளர். சுடுநோக்கு - சுடுவதுபோலுநோக்கு; என்றது கொள் ளிக்கண்; [6] "கண்ணுட் டீயாற் சுட்டுநீ முக்கி" என்றுர் பிறரும். கருந்தலை -

---

[1] திவாகரம், ஒன்பதாவது. [4] புறநானூறு, கள.

[2] மணிமேகலை, கச: இஎ. [5] கலிங்கத்துப்பரணி, கோயில் பாடியது, ககு.

[3] தாலடியார், நன்றியில்செல்வம், அ. [6] சீவகசிந்தாமணி. அoஎ.

(பி - ம்.) * 'எட்கசி.'

பசுந்தலே. நலங்கொளவைத்தென்றது - தமது அரிந்த தலேயிற் குலேந்தமயிரை யும் கோதிமுடித்துக் குருதித்திலதத்தையும் நுதலிலே அணிந்துவைத்தென்ற வாறு ; என்னே ? "மோடி முன்றலேயை வைப்ப ரேமுடி குலேந்த குஞ்சியை முடிப்பரே, யாடி நின் றுகுரு திப்பு துத்திலத மம்மு கத்தினி லமைப்பரே" என் பது ; (கவிச் சக்கரவிருத்தி.) உருமு - இடி. மயிர்க்கண்மூரசம் - புலியைப்பொ ருது கொன்றுநின்று சிலேத்துக் கோட்டுமண்கொண்ட ஏறு இறந்துழி அதன் உரிவையை மயிர்சீவாமற் போர்த்தமுரசு ; என்னே ? [1] "புனமருப் பழுந்தக் குத்திப் புலியோடு பொருது வென்ற, கனைகுர லுருமுச் சீற்றக் கதழ்விடை யுரிவை போர்த்த, துனைகுரன் முரசத் தானேத் தோன்றலேத் தம்மி னென்று, னனமல ரலங்கற் கண்ணி நந்தனுந் தொழுது சேர்ந்தான்" எனவும், [2]"கொல் லேற்றுப் பசுந்தோல் சீவாது போர்த்த, மயிர்க்கண் முரச மோவில கறங்க" எனவும் சொன்னர் பிறரும். முரசொடுவான்பலியூட்டி - முரசத்தால் உயிர்ப் பலியூட்டி ; என்றது [3] "அடிக்கழுத்தி னுடன்சிரத்தை யரிவ ராலோ வரிந்த சிர மணங்கின்கைக் கொடுப்ப ராலோ, கொடுத்தசிரங் கொற்றவையைத் துதி க்குமாலோ குறையுடலங் கும்பிட்டு நிற்குமாலோ" எனவும், "மண்ணிலு ளற வறுத்த தங்கடலே வைத்த பீடிகை வளங்கொள, விண்ணி லுயிர்தன் யாக சாலேதொறு மீள வுஞ்சிலர் மிறைப்பரே" எனவும்வரும் ; இவற்றுற்சொல்லி யவை, [4] அவிப்பலியென்னும் புறப்பொருட்பகுதியும், காப்பியத்துக்கு அங்க மான நவச்சுவையுள் வீரச்சுவையவிநயமுமென்க.

வரம்பாகெனக் கவணினர் பரப்பினராய்த் தீண்டிக் கொண்டோர் கருந்தலே கொள்கென வைத்து ஊட்டவென விணமுடிக்க.

ஊட்டவென்றிரிக்க.

இனி, மூன்னுட் கரிகாலன் செய்தசெயல் கூறுவார்:—

அக - கூச. இருநில மருங்கில்.....போகிய வந்நாள்

(இ - ள்.) தமிழ்நாட்டெல்லேயுள் தன்னேடி எதிர்த்துப் பொருமரசரை இரண்டுதிசையினும்பெறுத கரிகாலன் போரிலே பேராசையுடையவனுதலின், வடதிசை பெருந்திசையாதலிற் பகைபெறலாமெனக்கருதி ஆண்டுச்சேறற்கு விரும்பி வாளும் குடையும் முரசும் நாளொடுபெயர்த்து என்வலிகெழுதோள் இத்திசையிலாயினும் நண்ணுரைப் பெறுவதாகவேண்டுமென்று தான் வழிபடு தெய்வத்தை மனத்தான்வணங்கி அவ்வடதிசையைநோக்கிப் போகிய அந்நாளி லென்க.

பொருநரை இருநிலமருங்கிற் பெரு வளவன் பெயர்த்துப் பெறுக என் தோளெனப் போகிய அந்நாளிலென்க.

[5] இருநிலமருங்கினென்றது - இவன் ஆளும் நிலவெல்லேப்புறத்தென்பதாயி ற்று ; ஆகவே மேற்கும் தெற்குமெனக்கொள்க ; என்றது சேர பாண்டிய ருடையநாடுகளே.

---

[1] சீவகசிந்தாமணி, உஅகூக.
[2] மதுரைக்காஞ்சி, எகூஉ - கூ.
[3] கலிங்க. கோயில். கஇ.
[4] பு - வெ. வாகைப்படலம், கூ0.

இனி இருநிலமருங்கினென்றதற்குத் தமிழ்ப்பூமி இருகூற்றினெனினுமமையும். வாளும்குடையும் முரசும்பெயர்த்தல் - வாணுட்கோள், குடைநாட்கோள், முரசுநாட்கோ ளென்பன; இவை நாட் கொண்டுபெயர்த்தல். இவற்றுள், வாணுட்கோடல்:—[1]"செற்றார்மேற் செலவமர்ந்து,கொற்றவா ணுட்கொண்டன்று." வரலாறு: "அறிந்தவ ராய்ந்தரா ளாழித்தோ் மன்ன, னெறிந்திலங் கொள்வா ளியக்க-மறிந்திகலிப், பின்பகலேயன் றியும் பேணு ரகநாட்டு, நன்பகலுங் கூகை நகும்." குடைநாட்கோடலென்றது:—[2] "பெய்தாமஞ் சூரும்பிமிரப் பெரும்புல வர் புகழ்பாடக், கொய்தார் மன்னவன் குடைநாட் கொண்டன்று." வரலாறு: "மூன்னர் முரசிரங்க மூரிக் கடற்றானை, துன்னருந் துப்பிற் றொழுதெழா - மன்ன, ருடைநா ளுலந்தனவா லோதநீர் வேலிக், குடைநா ளிறைவன் கொள." முரசுநாட்கோடலென்றது: [3] "மாசற விசித்த.....ஈங்கிதுசெயலே." பிறவும் வந்த வழிக்காண்க. மண்ணகமருங்கின் - இந்நிலவெல்லையுள். புண்ணியதிசை - வடதிசை. முகம் - இடம்.

கூநி - அ. அசைவி லூக்கத்து.....பெயர்வோற்கு

(இ - ள்.) அங்ஙனம் பொருவாரைப்பெறவேண்டி வடதிசைநோக்கிப் போகின்றநாளிலே இமையவருறையும் இமயமலை பகையாகக் குறுக்கிட்டு விலக்கிற்றுகலின்,மனஞ்சலித்து மீளுகின்றவன்,மடிதலின்றிமேலுஞ்செல்லமுயலும் என்னுசை பின்னிட்டொழிய இம்மலை எனக்குப் பகையாகக் குறுக்கிட்டு விலக்கிற்றென முணிந்து அதன்பிடரிடத்தே தனதுபுலியைப்பொறித்துத் தான் வேட்டதுபெறுத கோட்பாட்டால் மீள்கின்ற கரிகாலற்கென்க.

அசைவு - மடிதல். ஊக்கம் - மனவெழுச்சியும் முயற்சியுமாம். பிறக்கு - பிருதக்கென்னும் வடமொழிச்சிதைவென்க; வேறுகவென்றபடி. பிடர் - புறக்கழுத்து. தலை - இடம். ஒற்றி - பொறித்து. பிடர்த்தலையொற்றியென்றது-தன்னோடெதிர்த்துவிலக்குதலின் அதனைப் புறங்காண்டற்கும் அதன்வடபாலும் தனது ஆணைசேறற்கும் சாத்தனதருளால் தான்பெற்ற செண்டினாலே அதனை அடித்துத் திரித்துப் பொறித்து மறித்து நிறுத்தானெனவுணர்க; என்னை? [4] "செண்டு கொண்டுகரி காலினெரு காலி லிமையச் சிமைய மால்வரை திர்த்தருளி மீள வதனைப், பண்டு நின்றபடி நிற்கவிது வென்று முதுகிற் பாய்பு லிப்பொறி குறித்தது மறித்தபொழுதே" எனவும், "கச்சி வளைக்கைச்சி காமக்கோட் டங்காவன், மெச்சி யினிதிருக்கு மெய்ச்சாத்தன் - கைச்செண்டு, கம்பக் களிற்றுக் கரிகாற் பெருவளத்தான், செம்பொற் கிரிதிரித்த செண்டு" எனவும் கூறினராகலின்.

---

[1] புறப்பொருள் வெண்பாமாலை, வஞ்சிப்படலம், சு.

[2] " " " கூ.

[3] புறதாரணை, இ.

[4] கலிங்கம் இராசகு, 'இலங்கு வேற்கரி காற்பெரு வளத்தோன், வன்றி றற்புவி யிமயமால் வரைமேல் வைக்க வேசுவோன்" என்றார்; பெரிய. திருக்குறிப்பு. அடி.

கூகூ - க00. மாநீர் வேலி.....பந்தரும்

(இ - ள்.) கடலே அரணாகவுடைய வச்சிரநாட்டுக்கோன் தான் இடக்கடவ முறைமையில் திறையாகவிட்ட அவனது முத்தின்பந்தரும்,

வேலி - அரண். வச்சிரநாடு - [1] * சோணைக்கரை. இறை - திறை. கொற்றப்பந்தர் * அவன்றனக்குக் கொற்றத்தான்வந்த பந்தர்; அது மேற்கூறுப. அன்றி அக் கொற்றவன்முன்னர் நிற்கும்பந்தரெனினுமமையும். இவன் [2] உதாசீனன்.

க0க - உ. மகதநன் னாட்டு.....பட்டிமண் டபமும்

(இ - ள்.) வாட்போர் வாய்ப்புடையனாகிய மகதவேந்தன் பகையாற் பொருது தாங்கமாட்டாது அப்பகையிடத்துத் தரப்பட்ட பட்டிமண்டபமும்,

[3] பட்டிமண்டபம் - வித்தியாமண்டபம்; ஓலக்கமண்டபமுமென்ப. புறம் - இடம். இவன் சத்துரு.

க0ங - ச. அவந்தி வேந்தன்.....வாயிலும்

(இ - ள்.) அவந்திநாட்டுவேந்தன் உவந்தனனாய்க் கொடுத்த மிகவுயர்ந்த தொழின்மரபையுடைய வாயிற்றோரணமும்,

அவந்தி - உஞ்சை. தொழின்மரபு; "சூலப்புடைவை" என்றாற்போல நின்றது. இவன் மித்திரன்.

க0ஙி - க0. பொன்னினு மணியினும்.....மண்டபம்

(இ - ள்.) இப்பந்தரும் மண்டபமும் தோரணமுமென்னுமிவை பொன்னும் மணியானுஞ்செய்யப்பட்டனவாயினும் நுண்ணிய தொழிலெல்லாம் கம்மியராற்பண்ணப்படாதன; ஆயின் இவை யாராற் பண்ணப்பட்டனவெனின், இவற்றை அக்காலத்துக் கொடுத்த அம்மூவருடைய தொல்லோர் ஓரோர்காலத்து ஓரோவிடத்துச்செய்த உதவிக்குக் கைம்மாறாக மயனால் நிருமித்துக்கொடுக்கப்பட்டன. இவை ஒன்றற்கொன்று சேய்நாட்டனவாய்க் கூடப்படாதன; இவ்வாணையான் ஒருநாட்டு ஒருநின்கண்ணே கூடுதலானும் மயன் நிருமித்தலானும் பெரியோரான் ஏத்தப்படும் இந்த * மண்டபத்தும்,

காண்டல் - பண்ணுதல்; "கோயில் குளங்காண" என்றாற்போல நின்றது.

---

[1] சோணை - ஓர் யாறு. [2] உதாசீனன் - பகைநட்பில்லாதான்; அயலான்.

[3] "பட்டி மண்டப மேற்றினை யேற்றினே"(திருவா. சதகம். சசு;)"ஓட்டிய சமயத்துறைபொருள் வாதிகள், பட்டிமண் டபத்துப் பாங்கறிந் தேறுமின்" (மணிமேகலை, கா. கூ0 - சுக.) "பன்னருங் கலைதெரி பட்டி மண்டபம்" (கம்ப. நகர. சூ.)

* இவற்றை உட்கொண்டே "வச்சிர மவந்தி மகதமொடு சூழியல, சித்திரமண்டபம்" என்பர், மேல் நடுகற்காதையிலும்; அசு - எ. * (பி - ம்.) 'சோணைக்கரை'

ககo. அன்றியும்—(இ - ள்.) இதுவொழிந்தும்,

ககக - எ. வம்ப மாக்கள்.....வெள்ளிடை மன்றமும்

(இ - ள்.) அளவும் நிறையும் எண்ணுமாகிய இலக்கங்கள் தம்மிடத்து இடப்பட்ட பெயர்பொறித்த பொதிகள் பண்டசாலேவாயிலேயும் பற்முயத்துக் கருந்தாழாகிய காவலேயும் உடையோர் காத்திருக்குங்காவலேயும் விடப்பட்டவாகலான் இங்ஙகர்க்குப் புதியமாக்கள்சிலர் கட்போருளராயின் அவர்கழுத்துக் கடுக்கப் பொதியைவைத்து ஊரைச்சூழ்விப்பினல்லாது அவர்க்கே அவற்றைக் கொடுத்து விடாதாதலாற் களவென்பதனே மனத்தாற் கனவில்நினேப்பினும் நினேப்போரை நடுங்குவிக்கும் வெளியான இடத்தையுடைய மன்றமுமென்க.

எண்ணெழுத்துப்படித்தவென்க எண் - இலக்கம். பலபண்டங்களேயும் பொதிந்தனவற்றைப் பொதியென்றது ஆகுபெயர். வம்பமாக்கள் கட்போருள ராயினென்முர், இங்நாட்டு இவ்வூரில்வாழ்வோரெல்லாம் செல்வராதலாற் செய்யாரெனவும் புறநாட்டிற்சிலர் இம்மன்றின் தன்மையையறியாது களவுசெய்யக் கருதுவரெனவும் புலப்படுத்தற்கு. தலேயேற்றியென்பதற்குத் தாம்தாம் தலேமே லேற்றிக் கொண்டெனினுமமையும். பொதிகள் ஒரீஇயவாதலான் உளரெனின் அவரைக் கொட்பினல்லது ஈயாது பனிக்குமன்றமென்க. பனிக்குமன்றமென இடத்துநிகழ்பொருளின்மேழில் இடத்தின்மேனின்றது. வம்பமாக்களாகிய உடையோரெனினுமமையும்.

ககஅ - உக. கூனுங் குறளுந்.....மன்றமும்

(இ - ள்.) கூனர்முதலாயுள்ளோரும் தொழுநோயால் அழுகுமெய்யையுடையோரும் புக்குமுழுகினவளவிலே பழுதில்லாத தோற்றத்தையுடைய நல்ல நிறம் பெறுகையினுலே தன்னேவலஞ்செய்து தொழுது ஆடி நீங்கும் பொய்கையையுடைய மன்றமுமென்க.

பெற்று வலஞ்செய்து ஆடிக் கழியுமென்க. முழுகினராடியென இருபெயரொட்டுப் பண்புத்தொகையாக்கினுமமையும். இலஞ்சியை மகிழென்பார்க்குக் காவிரியில் நீராடிவந்து மகிழைச் சூழ்ந்தென்னவேண்டுதலின், மகிழினும் மன்றினும் பயமின்முமாதலின், அங்ஙனங்கூறல் பொருத்தமின்றென்றெழுதிக்க.

கஉஉ - எ. வஞ்ச முண்டு.....மன்றமும்

(இ - ள்.) வஞ்சனேயாற் சிலர் மருந்தூட்டவுண்டு பித்தேறினரும், நஞ்சையுண்டு நடுங்குதுயரமுற்முரும், அழலும் விடத்தையுடைய அரவின்வாயிற் கூர்த்த எயிறழுந்தக் கடியுண்டாரும், [1]பிதுங்கின கண்ணேயுடைய பேய்பிடிக்கப் பட்டாருமென்னுமிவர்கள் ஒருகாற் சூழ்வந்துதொழ அதனுடனே அத்துயர்கள் நீங்குதற்குக் காரணமாகிய ஒளியைக்கால்வதோரு நெடிய கல் நாட்டிநிற்கு மன்றமுமென்க.

---

[1] "கழல்கண்" முருகு. சசு - ந.

மயற்பகை - மயலாகிய பகை. ஆர்-கூர்மை. கழல்கட்கூளி, விகாரமாக்கிப் பச்சைக்கழல்போலும் கண்ணேபுடைய கூளியெனினுமமையும்; கூளி - பூதமுமென்ப. நிழல் - ஒளி; [1] "நிழன்மணி" என்றுற்போல.

கஉஅ - ஙச. தவமறைந் தொழுகும்.....பூத சதுக்கமும்

(இ - ள்.) தம்மைப் பிறர்நம்புவதற்குத் தவவேடத்தில் மறைந்துநின்று அத்தவத்திற்கு இழுக்கானவற்றின்கணெழுகும் பொய்வேடத்தாரும், தம்மைத் தம்கணவர் நம்புதற்குப் பொய்யொழுக்கத்தின்மறைந்துநின்று வசீகரிப்பினெழுகும் அலவற்பெண்டிரும், தம்படைகுடி முதலியஐந்தினெறி உயிருறுப்புரிமைக்குத் தம்மைத் தேறியளித்த அரசரைக் கீழறையெண்ணுமமைச்சரும், தமதுமனைவியர் தனிப்பத் தனித்த பிறர்மனைவியரை விரும்பும் தூச்சாரிகளும், தமதுநெஞ்சறிபொருளே வஞ்சித்துப்-பொய்ச்சான்றேறுவாரும், சிறப்புச்செய்தழி உழைநின்றுபுகழ்ந்து அவர் புறக்கொடையிற் பழிதூற்றுவாருமாகிய இவர்களே என்கையிற்கொண்ட இப்பாசத்திடத்து அகப்படும்பெயரென அவ்வூர் நாற்காதவெல்லையுங்கேட்கும்படி தனது கடியகுரலாலுணர்த்திப் பின் அங்ஙனஞ்செய்வாரைப் பாசம்கட்டிவர நிலத்திற் புடைத்துண்ணும் பூதநிற்றலான் அப்பெயர்பெற்ற பூதசதுக்கமும்,

சதுக்கம் - நாற்சந்தி. தன்மை - தவத்தோடொற்றுமைப்படுந்தன்மை; அதனையில்லாமையாவது கூடாவொழுக்கம். [2] அலவல்; விகாரம். அறைபோதல் - கீழறுத்தல். பொய்க்கரி - பொய்ச்சான்று. கை - இடம். காதநான்குமென முற்றும்மைகொடுத்தலானே ஊர் நாற்காதவட்டகையென்பதுணர்க. குரலெடுப்பி - குரலாலுணர்த்தி. [3] "துயிலெடுப்பி" என்றுற்போலநின்றது.

கஙஙு - ஆ. அரைசுகோல் கோடினும்.....பாவை மன்றமும்

(இ - ள்.) அரசனுடைய செங்கோன்மையிற் சிறிதுகோடிற்றுயினும் தருமநூன்முறைமையின் அறங்கூறும் தருமாசனத்தார் உரைக்கும் நடுவுநிலைமை கோடி ஒருமருங்குபற்றினும் நாவாற்கூறுது நீருகுத்துக் கண்ணுற்கூறும் பாவைநிற்றலான் அப்பெயர்பெற்ற பாவைமன்றமும்,

அறங்கூறவையம் - தருமாசனத்தார் வழக்குரைக்குமிடம். நாவொடு - நாவால்.

கஙஙூ - சஂ. மெய்வகை.....பலி யுறீஇ

(இ - ள்.) முற்கூறப்பட்டனவாகிய வெள்ளிடைமன்றமுதற் பாவைமன்றமீறுவுள்ள உண்மைத்திறத்தையுணர்ந்த சீரியோராலேத்தப்படும் ஐவகைப்பட்டமன்றத்தும் அரும்பலியுறீஇயென்க.

ஒளி உச்சித்தோன்றிப் பரப்பச் சொரிந்து ஆடிப் பெயர வைத்து ஊட்டமண்டபமன்றியும் மன்றத்தும் பலியிட்டென்க.

---

[1] சீவகசிந்தாமணி, கூஉக. [2] சிலப்பதிகாரம். சு: எகூ. * (பி - மீ.) 'அலவை'

அன்றியுமென்றவும்மையும் மன்றத்துமென்றவும்மையும் இறந்தது
தழீஇயவெச்சவும்மையாகலானும் அரும்பலியென்றமையானும் இவையும்
அப்பலியானமையுணர்க.

கசக - சு. வச்சிரக் கோட்டத்து.....கடைநிலை சாற்றி

(இ - ள்.) [1] வச்சிரக்கோட்டத்திலிருக்கும் முரசையெடுத்துக் கச்சை யணிந்த யானையின்மீது பிடாரிடத்தேயேற்றி என்றும் இளைய வெள்ளிய ஐராவத நிற்குங்கோயிலிலேசென்று விழவின் முதலும் முடிவுஞ் சாற்றியென்க.

மணமுரசு - விழாமுரசு ; மண்ணென்றுதி மார்ச்சனையென்பாருமுளர். கச்சை - கீழ்வயிற்றிற்கச்சை. தலை - இடம். வயங்குதல் - விளங்குதல். கால்கோள் விழவின் கடைநிலை சாற்றி - விழவின் தொடக்கமும் முடிவுமறிவித்து. களிற்றரசிற்குச்சாற்றி, அஃது இந்திரனைக்கொணர்தற்கு.

வாங்கி ஏற்றிச் சாற்றியென்க.

கசஞ - சுஎ. தங்கிய கொள்கை.....எடுத்து

(இ - ள்.) பூமியிற்றங்கிய முறையையுடைய தருக்கோட்டத்தின்முன்னர் அட்டமங்கலத்தோடு ஐராவதமெழுதியகொடியைத் துறக்கத்தேசெல்லவெடுத் தென்க.

இந்திரன்றங்கிய செருக்கையுடைய தருவெனினுமமையும்.

கசள - நிசு. மரகத மணியொடு.....வீதியில்

(இ - ள்.) மரகதம் வயிரமென்னுமிவற்றைப் புருவம்பிறக்க ஆயப்பலகை யாகப்படுத்து அதன்மீதே செம்பவளத்தூண்களைநிரைத்த பைம்பொற்றிண்ணை களையுடைய மாளிகைவாயிலிடந்தோறும் இம்புரிசெறித்த கொம்பினையும் அங் காந்தவர்யாற்கான்ற முத்தொழுங்கையும் அட்டமங்கலங்களையும்பொறித்த வாசி கைவடிவாகவளையச்செய்த மகரதோரணங்கள் நிலைபெறநிறுத்தின வீதி; பசிய பொன்னூற்செய்த நிறைகுடமும் பாலிகையும் விளக்கும் கொடியும் கவரியும் ஒழிந்தனவும் சுண்ணத்தோடேமேவிய வீதியிலென்க.

குயிற்றுதல் - அழுத்துதல். முகம் - இடம். இம்புரி - கொம்பிலணியும் பணி. இளர்முத்து - பருமுத்து. ஒளிஇளருமுத்தெனினுமமையும். இளம்பாடமாயினை, கொத்தாகத்தோன்றுமுத்தென்க. வாசிகைத்தோரணம், உவமத்தொகை. தோம் - ஈண்டு ஓட்டம். குயிற்றிய பாடமாயின், வயிரங்குயிற்றியகால்களையுடைய வேதிகையென்க.

அவ்வேதிகையையுடைய மாளிகைக் கடைமுகத்தியாங்கணும் தோரணநிலை பெற்ற மேவியகொள்கைவீதியென்க.

கநிசு. செறிந்து—(இ - ள்.) அவ்வீதியிலேநிறைந்து.

ஆங்கு—(இ - ள்.) அங்ஙனம் பலியிட்ட அப்பொழுதே,

---

[1] கசக - உ—ம்: மேகலை. கி. உள - அ.

ககூஎ - சூ0. ஐம்பெருங் குழுவும்.....ஒருங்கீண்டி.

(இ - ள்.) ஐம்பெருங்குழுவும் ஆயமூஞ்செறிந்து வீதிக்கண்ணே புரவியர் களிற்றினர் தேரினரான அரசகுமரரும் பரதகுமரரும் தம்மிற்பொருந்தி ஒன்று படத்திரண்டென்க.

ஐம்பெருங்குழு:— ''அமைச்சர் புரோகிதர் சேனை பதியர், தவாத்தொழிற் தூதுவர் சாரண ரென்றிவர், பார்த்திபர்க் கைம்பெருங் குழுவெனப் படுமே'' எனுமிவர்.

எண்பேராயம்:— ''கரணத் தியலவர் கருமகாரர், கனகச் சுற்றங் கடைகாப் பாளர், நகர மாந்தர் நளிபடைத் தலைவர், யானை வீர ரிவுளி மறவ, ரினைய ரெண்பே ராய மென்ப'' எனுமிவர். இனி [1] ''சாந்துபூ.....அவைக்களத்தாரைந்து'' எனக்காட்டுவர், அரும்பதவுரையாசிரியர். பரதர் - வணிகர், கவர்பரி - பகுத்துவிரையும் செலவு. இவர்தல் - தேரைக்கொண்டெழுதல்.

ககூக - அ. அரைசுமேம் படஇய.....விழுமீ ராட்டி

(இ - ள்.) மிகப்பெரிய ஞாலத்தின்கண்ணே தமதான அரசியல் மேம்படுவான்வேண்டி மன்னுயிர்காக்கும் ஆயிரத்தோரெட்டரசு தலையிற் சுமப்பித்துக் கொண்ட காவிரியிற் பூவின்ருதுமலிந்த பெரிய சங்கமத்துறையிற் குளிர்ந்த நறிய தீர்த்தநீரை,மண்ணகமும்வானகமுமருள வியப்ப எம்மன்னன் கொற்றங் கொள்வர்ஞகவெனச்சொல்லிப் பொற்குடத்தேந்தி விண்ணவர்தலைவனே இந் நகரிடத்தே சிறப்புடைத்தர்ம்படி முற்கூறிய அரசகுமரரும் பரதகுமரரும் மஞ்சனமாட்டவென்க.

ஆட்டாநிற்பவெனத்திரிக்க. அகனிலை - ஊர். உரை - புகழ். சால் - அமைதி. மன், ஆக்கத்தின்வந்தது. பொற்குடம் - அபிடேககலசம். மண்ணகமருள - மண்ணகம் விண்ணகமாய் மாறுட; அன்றி மண்ணினுள்ளோர் * இப்படியே அவ் விண்ணகமிருப்பதென ஒப்புக்காணவென்க. வானகம்வியப்ப - வானகத்துள் ளோர் தம் துறக்கத்தினும் ஈது சிறப்புண்டத்தென்று வியக்க. இனி மருள மருளுதலாலெனக்கூறி இருநிறத்தோரும் ஐயுற்றுத் தெளிந்து வியப்பவென்றலு மொன்று. விண்ணவர்தலைவன் - ஈண்டு அவன்வச்சிரம். மானதத்தால் ரோட்டியென்னவுமாம். அரசு மேம்படஇய அகனிலையென நின்றவாறே ஏனை நகர்கட்கு அரசாய் மேம்பட்ட நகரென உரைப்பினுமமையும்.

ஏற்றிச் சாற்றி எடுத்துச் செறிந்து ஈண்டி ஏந்தி ஆட்டவென்க.

ககூக. [2] பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்

(இ - ள்.) என்றும் பிறவாத யாக்கையையுடைய இறைவன்கோயிலும்,

இனி யாக்கையிற்பிறவாப் பெரியோனெனினுமமையும்; என்றது அருகி யென்றபடி.

---

[1] இப்புத்தகம், ககஎ - ஆம் பக்கம் பார்க்க.

[2] ககூக - எஅ - ''முதல்வித நாட்டத் திறையோன் முந்நாட், பதிவாழ் சதுக்கத்துத் தெய்வமீரு, வேறுவேறு சிறப்பின் வேறுவேறு செய்வினை, யாறறி மரபி னறிந்தோர் செய்மின்'' (மணி. க: நிச - எ.) (பி - ம்.) * 'இப்படியோ'

களo. அறுமுகச் செவ்வே ளணிதிகழ் கோயிலும்

(இ - ள்.) ஆறுமுகத்தையும் செய்யநிறத்தையுமுடைய முருகவேள்கோயிலும்,

[1] ''மூன்று மாறு நெடுமுதல் குறுகும்'' என்பதனுல் அறுமுகமாயிற்று.

களக. வால்வளை மேனி வாலியோன் கோயிலும் (இ - ள்.) வெள்ளிய வளைபோலு நிறத்தையுடைய வெள்ளைமூர்த்திகோயிலும்,

என்றது பலதேவரை; [2] ''வலியொத் தீயே வாலியோனே'' என்னுர் பிறரும்.

களஉ. நீல மேனி நெடியோன் கோயிலும்

(இ - ள்.) நீலமணிபோலும் நிறத்தையுடைய நெடியமால்கோயிலும்,

மேனியென்னுர், ஆகுபெயரால் நிறத்தை.

களங. மாலை வெண்குடை மன்னவன் கோயிலும்

(இ - ள்.) முத்தமாலையணிந்த வெண்கொற்றக் குடையையுடைய வாசவன் கோயிலும்,

செவ்வேள், வாலியோன், நீலமேனியோனென்பவற்றுள் தொடர்நிலைஇன்பமும் அலங்காரச்சுவையுமுணர்க.

களச - ஞ. மாமுது முதல்வன்.....தீமுறை யொருபால்

(இ - ள்.) மிக்க முதுமையையுடைய முதல்வனுகிய வேதாவினுடைய வாய்மையிற்றப்பாத நாலாகிய வேதங்கள்சொன்னநெறி ஓமங்கள் நடந்தன ஒருபக்கமென்க.

களசு - அ. நால்வகைத் தேவரும்.....சாறுசிறந் தொருபால்

(இ - ள்.) நால்வகைப்பட்ட தேவரும் பதினெண்வகைப்பட்ட கணங்களுமென வேற்றுமைப்படத் தெரிந்துவகுக்கப்பட்ட தோற்றத்தையுடைய கடவுளரது விழவுசிறக்க ஒருபக்கமென்க.

நால்வகைத்தேவராவார் - முப்பத்துமூவர்; அவர் வசுக்களெண்மரும், திவாகரர் பன்னிருவரும், உருத்திரர் பதினொருவரும், மருத்துவர் இருவருமெனவிவர்.

மூவாறுகணங்களாவார் - ''இன்னரர் கிம்புருடர் விச்சாதரர்கருடர், பொன்னமர் பூதர் புகழியக்கர் - மன்னு, முரகர் சுரர்சாரணர்முனிவர் மேலாம், பரகதியோர் சித்தர் பலர்'', ''காந்தருவர் தாரகைகள் காணுப் பசாசகண, மேந்து புகழ் மேய விராக்கதரோ - டாய்ந்ததிறற், போகா வியல்புடைய போகபூமியோருடனே, யாகாச வாசிகளா வார்'' எனவிவர்; ஆகாசர் நாகர் சித்தர் காந்தருவர் விஞ்சையர் பசாசர் தாரகை போகபூமியோர் கிம்புருடர் சுரர் அசுரர் பூதம் முனி தேவர் கருடர் இராக்கதர் இயக்கர் சாரணர் எனவுங்கொள்க.

---

[1] தொல்காப்பியம், குற்றியலுகரப்புணரியல், சூ. ஙடு.

[2] புறநானூறு, கசு.

கஎக - அக. அறவோர் பள்ளியும்.....செயல்சிறந் தொருபால்

(இ - ள்.) அறவோர்பள்ளிமுதலிய எல்லாவற்றிலும் தருமம்போதித்தலும் புராணம்படித்தலும் பிறவுமாகிய செய்கைகள் மிக ஒருபக்கமென்க.

அறவோர்பள்ளி - அருகர்பள்ளி, புத்தர்பள்ளி. அறவேம்படை - தருமம் போதிக்குமிடம். புறநிலைக்கோட்டத்து - புறம்புள்ள ஸ்ரீகோயிலுடனே. புண்ணியத்தானமும் - மற்றுமுள்ள புண்ணியத்தானங்களும். திறவோருரைக்குஞ் செயல் - புராணம்.

கஅஉ - ஙூ. கொடித்தேர்.....ஒருபால்

(இ - ள்.) கூடாமன்னரொடு ஏணியோரும் அடித்தளைக்குதற்குக் கொடித் தேர்வேந்தன் அருள் சிறக்க ஒருபக்கம்;

ஓடிவை அசையாக்கினுமமையும்.

கஅச - சூ. கண்ணுளாளர்.....இசைசிறந் தொருபால்

கண்ணுளாளர் - மதங்கர்; ஆவார் பெரும்பாணர்; சூழலருமென்ப. கருவிக் குயிலுவர் - தோற்கருவிவாசிப்பார். பண்ணியாழ்ப்புலவர் - கட்டப்பட்ட யாழ்வாசிக்கவல்ல அறிஞர்.

(இ - ள்.) சூழலும் தோலும் நரம்பும் கண்டமுமென்னுமிவற்றை இசைக்க வல்ல இவர்களாலே அளந்தறிதலரிய சிறப்பையுடைய இசைகள் மிக ஒருபக்க மென்க.

இவற்றையெல்லாம் சிறக்கவெனத் திரித்துக்கொள்க.

கஅள - அ. முழவுக்கண்.....ஆங்கண்

(இ - ள்.) கங்குலும் பகலும் இங்ஙனநடக்கலான், முழவின்கண்கள் அடங்குதலின்றிக் குறுந்தெருக்களும் நெடுந்தேர்வீதிகளும் விழவாற் களிப்பு மிக்க அகன்ற ஊரிடத்தென்க.

சிறக்க நீராட்டக் களிசிறந்தவியலுளென்க.

(கஅக) "காதற்கொழுநனே" என்பதுமுதல் (உ0கூ) "மறுகில்" என்னுந் தனையும் சிலேடை.

கஅசு - ஙo. காதற் கொழுநனே.....மாதவித்தன்னொடு

(இ - ள்.) மாதவிமேற் சொல்லுமிடத்துத் தான் காதலிக்கப்பட்ட கொழு நனைப்பிரிந்து வேறுபாட்டால் அலருறுத அழகிய வளைந்த மகரக்குழையை யுடைய மாதவியென்றும், குருக்கத்திமேற் சொல்லுமிடத்து எல்லாரும் காத லிக்குங்கொழுவியநனையாந்தன்மையைவிட்டு முதிர்ந்து அலராகாத வளைந்த அழகிய தளிரையுடையமாதவியென்றும் பிரிக்க.

நனை - அரும்பு. கண்ணகிபிரிந்து அலரையெய்துதலால் அலரெய்தாத மாதவி யென்றார். குருக்கத்தியை அலரெய்தாவென்றார், செவ்வியழியாமை பற்றி.

கஙக - நி. இல்வளர் முல்லை.....பொழிலாட் டமர்ந்து

(இ - ள்.) முற்கூறியமாதவியுடனே முல்லைமுதல் கழுநீரீறாயுள்ள பூப் பயின்ற பிணையலாலே பொலிவுபெற்றுக் காமத்தாற்களித்து மகிழ்ச்சியெய்தி அழகிய நறிய விரைபடு பூம்பொழிலில் விளையாட்டை விரும்பியென்க.

இல்வளர்தலை முல்லைமுதல் மூன்றுக்குமேற்றுக. மயிலை - இருவாட்சி. சூழ்தல், வண்டின்றொழில். இதனை விரித்து எங்கும் ஓட்டுக. கோதையாகிய பிணையலெனப் பண்பொட்டுவிரிக்க; ஒழுங்குமாம்; [1] 'கோதையாருவி" போல. பூம்பொதி நறுவிரைப் பொழில் - நறியவிரையைப் பொதிந்த பூவையுடைய பொழில்; விகாரம். ஆட்டு - விளையாட்டு; ஆவது புணர்ச்சி.

கஙஙசு - எ. நாண்மகி ழிருக்கை.....புதுமணம் புக்கு

(இ - ள்.) நாடோறும் மகிழ்ந்திருக்கும் இருப்பையுடைய நாளங்காடியிற் பூவிற்குமிடங்களிற் பலபூமணமாகிய புதியமணத்தின் உள்புக்கு,-

பூவிற்குமிடங்களைப் பூவின்மிகுதியாற் காணமென்றார்.

கஙஙஅ - கூ. புகையும்.....நன்மொழி திளைத்து

(இ - ள்.) அகிற்புகை சாந்தென்னுமிவற்றின் செவ்விவாய்ப்புமிக்கு நகைத்து விளையாடும் திரளோடே காமக்குறிப்பாகிய மகிழ்ச்சிமொழியிலே இடைவிடாது பயின்றென்க.

புலராது - புலராமல்; செவ்விமாறுமலென்றபடி. திளைத்தல் - ஒரு தொழிலே இடைவிடாதுபயிறல்; [2] ''திளைத்தவர் பருகிய'' என்றார் பிறரும்.

உ00 - உ0ங குரல்வாய்.....திரிதரு மறுகில்

(இ - ள்.) குரலென்னுமிசையைப்பாடும் வாயையுடைய பாணரோடும் பரத்தரோடுந்திரிகின்ற ஒழுக்கத்தையுடைய கோவலனைப்போல இளியென்னுமிசையைப்பாடும் வாயையுடைய வண்டிலோடும் இளவேனிலோடும் இந்நகரிடத்து மந்தமாருதம் உலாவுதலைச்செய்யும் மறுகிடத்தென்க.

குரலுக்கு இளிகூறினார்; இயைபாதலைக்கி. * பரத்தர் - கழிகாமுகர். திரிதருதல் - உலாத்துதல்.

மாதவிதன்னெடும் பயில்பூம்பிணையலாற் பொலிந்து எய்தி அமர்ந்து புக்குச் சிறந்து திளைத்துப் பாணரொடும் பரத்தரொடுந்திரிகின்ற ஒழுக்கத்தையுடையகோவலனைப்போல வண்டினெடும் இளவேனிலொடும் மாருதம்திரிதரு மறுகினென்க.

இச்செய்தென்னும் வினையெச்சங்களைத் திரிதருமென்னும் வினையொடு முடித்து அச் செய்யுமென்னும் பெயரெச்சத்தையும் கோவலனென்னும் பெயரொடு முடித்து அவனைப்போலத் திரிதருமென்க.

---

[1] சீவகசிந்தாமணி, நிஉநி. [2] சீவக. நிo. (பி - ம்.) * 'பரதர் - பழிகாமுகர்'

பாணர்க்கு வண்டும், பரத்தர்க்கு வேணிலும், கோவலற்கு மாருதமும்உவமம்.

இனி, வீதிவருணனைகூறுவார்.

உ0ச - எ. கருமுகில் சுமந்து.....உண்டுகொல்

(இ - ள்.) அழகிய வானத்திடத்தே திரியும் அரவாகிய பகை செறுமென் றஞ்சி ஆண்டித் திரியாமல் ஒரு பெரிய மூஞ்சூச்சுமந்து சிறியமுயலையொழித்து இருமருங்கினும் இரண்டு கருங்கயலினையும் இடையே ஒரு குமிழமலரையு மெழுதி இங்ஙனம் [1] உள்வரிக்கோலங்கொண்டு திங்களும் இந்நிலத்தே திரிதரு கின்றதுகொல்லோவெனவும்,

உம்மை, சிறப்பு. கருமை - பெருமை.

உ0அ - கக. நீர்வாய் திங்கள்.....உண்டுகொல்

(இ - ள்.) காமன்மூன், முன்பு இறைவன் நுதல்விழியானிழந்த மெய் பெறுதற்காக ஈரம் வாய்ப்புப்பெற்ற திங்களாகிய பெரியநிலத்தே சீர்மைவாய்ப் புப்பெற்ற துவலையையுடைய அமிர்தகலையினீரை மாந்தி வளரவளர்த்த வான வல்லி இந்நிலத்தே வருதலுமுண்டாயிற்றோதானெனவும்,

வளரவென ஒருசொல் வருவிக்க. மாந்தி மெய்பெறவெனினுமமையும். இதனை வானவல்லி என்றார், காமவல்லியுமுண்மைதோன்ற; வானவல்லி - மின் னுக்கொடி. உம்மை, சிறப்பு.

உகஉ - எ. இருநில மன்னற்கு..... .....உண்டுகொல்

(இ - ள்.) வளத்தையுடைய இப்பதியிடத்தே திருமகள் வந்துபுகுதற்குக் காரணம் மிக்கநிலத்தையுடைய கரிகாலற்குத் தனதுவளங்காட்டவாயிருந்தது தப்பாதெனக்கருதி எரிபோலும் நிறத்தையுடையதோர் இலவமலரையும் பல முல்லைமுகையையும் ஒழித்தும் இரண்டு கரிய பெரிய குவளைமலரையும் ஒரு குமிழமலரையும் பூத்து இங்ஙனங்கொண்ட உள்வரிக்கோலத்தோடு தனது அன்பு மிக்கதுணையைத் தேடிக் கமலம் திரிதலும் உண்டாயிற்றோதானெனவும்,

கள்ளக்கமலமென்றார், உருமாறித்திரிதலின்; கள்ளையுடைய அக்கமலமென் பது இயல்பு. ஆங்கு - பூத்த அப்போதே. வளம் - செல்வமும் அழகும்.

உகஅ - உரு. மன்னவன்.....பெற்றியு முண்டென

இதற்குக் கொல்லென்னும் இடைச்சொல் வருவிக்க.

(இ - ள்.) முன்பு ஓடியொளித்த பகுவாய்க் கூற்றம் தான் ஆணுருவோடு திரிந்து பல்லுயிரைப்பருகின் அரசன்செங்கோலே மறுத்ததாமென்று அதற்கு அஞ்சி மறைந்துநின்று பருகவேண்டிக் கடுத்தமுகமும் இடித்தகுரலுமொழித்து வாணகைமுகமும் யாழிசைமொழியுங்கொண்டு நகைத்து மிழற்றிப் பெண்ணுரு வோடு இந்த வீதியிற்றிரியுந்தன்மையும் உண்டாயிற்றோதானெனவும்,

---

[1] உள்வரிக்கோலம் - பாண்டவர்போல வேற்றுருக்கொண்டு நடிக்குங்கோலம்; (சிலப். அ: அகஉ - அடியார்.)

பருகுங்கூற்றம் - பலவுயிரையும் ஒருவாயிற் பருகுங்கூற்றம்; ப்ருவாய் - அங்ஙன் பருகுங்கால் அங்காக்கும்வாய். தன் அருந்தொழில் திரியாது ஆண்மையிற்றிரிந்து பெண்மையிற்றிரியுமெனினுமமையும். இதன்கருத்து :—கூற்றம் தன் கொலைத்தொழில்கெடாமல் ஆணுருக்கெடப் பெண்ணுருவால் திரியுமென்றபடி. அருந்தொழில் - கொலைத்தொழில். நாணுடைக் கோலத்து நகைமுகங் கோட்டியென்றது—ஒருருவைக் கோட்டுவார்க்கு நாணுடைமைகோட்டல் அரிதாகலின், முதலில் அதனைக்கோட்டிப் பின்பு அதனோடு நகைமுகத்தையும் கோட்டியென்பதாயிற்று.

கூற்றம் அஞ்சித் திரியாமற் கோட்டி மிழற்றிப் பெண்மையிற்றிரியும் பெற்றியென்க

மாருதம் திரிதருமுறுகில் திங்களும் வல்லியும் கமலமும் கூற்றமும் திரிதலு முண்டுகொல் ? வருதலுமுண்டுகொல் ? திரிதலுமுண்டுகொல் ? பெற்றியுமுண்டு கொலெனக் கூறியென்க.

இது, திங்கள்முதலியவற்றைப் பொதுமகளிருறப்போடும் தொழிலோடு முறுவித்துக் காமுகர் புகழ்ந்து கூறுதலெனக்கொள்க.

உஉச - நசு. உருவி லாளன்.....நடுநாள்

(இ - ள்.) காமனுடைய ஒப்பிலாத பெரியசேனையாகிய பொதுமகளிர் ஊடலாலுகிய மாறுபட்ட அமரை இங்ஙனம்புகழ்ந்துசொல்லி வென்று அவர்போகாமல் எதிர்நின்றுவிலக்கிப் புணர்தலின் அவருடைய முலைமுதலியவற்றிலெழுதிய தொய்யின்முதலிய பத்திக்கிற்றுத் தமதுமார்பமுழுதும் உறுதலானே விருந்தொடுபுக்க கணவரோடே உடனுறைதலே மருவி வழிபாட்டோடும்பொருந்திப்புணர்ந்த அருந்ததிபோலும் கற்பையுடைய இல்லறமகளிரை அப்பெருந்தோட்கணவரே இம்மாதருடைய ஒளிபொருந்தியமுகத்து நீலமணிபோலும் இதழையுடைய குவளைப்போதுகள் புறங்கொடுத்துப்போதற்குக் காரணமாகிய கரியகண்களின் கடைச்சிவப்பு அல்விருந்தால் தீர்ந்ததில்லையாயின் இப்பெரிய நிலவெல்லை இதற்கு ஒரு மருந்தையும் தரவற்றேவெனத் தமதுநெஞ்சொடு கூறிச் செயலற்றுநடுங்கும் விழா நடுநாளினென்க.

இகலமராட்டி - மாறுபட்ட அமரைச்சமித்து; ஆடி - வென்றி; என்றது புலவியாலே கூடாதமகளிரை இங்ஙனம்புகழ்ந்து புலவியைத்தீர்த்தென்றபடி. எதிர் நின்று விலக்கி - போகப்புக்கவர்களைப் போகாமல்விலக்கி. வரிகோலம், வினைத்தொகை. முழுமெயும் - மார்பமுழுதும்; [1] "முழுமெயும் புன்கணீர்க்கு" என்றார் பிறரும். உறீஇ-உறுவித்து ; புணர்ந்தென்றபடி. தீர்ந்திலது, விகாரம். யாவதும் - சிறிதும்; உம்மை, சிறப்பு. மருந்தும் தருங்கொல் இம்மாநில வரைப்பெனத் தருதலே வரைப்புக்கேற்றுக. வரைப்பென்றார், வரைப்பி னுள்ளாரை. நல்விழா - விழா.

ஆட்டி விலக்கி உறீஇப் புக்க கணவர் நடுங்குநாளென்க.

---

[1] சீவகசிந்தாமணி, அகக.

நிலவரைப்புத் தருங்கொலென்றூர், சல்லியகரணி சந்தானகரணி சுமனிய கரணி மிருதசஞ்சீவினி யென்னும் இவைமுதலிய மருந்துகளைத்தரும் நில வரைப்பு இவ்வூடன்முதலியவற்றிற்கு மருந்து தரமாட்டாதென்றற்கு.

இனி, திங்கள் வானவல்லிமுதலியவற்றைக் கூறுதலைக் கண்டோர்கூற் றுக்கு அவர் அங்ஙனங்கூற அக்காமன்சேனையாகியமகளிர் மாறுபட்டுத் தம் உறுப்புக்களால் அமரைச்செய்வித்து வீதியிற்போவாரைப் போகாமல் தடுத்த லின் அவருடைய முலையிலெழுதிய தொய்யிலுறுதலின் விருந்தொடுபுக்கவெனி னுமமையும். 'இனி, இம்மகளிர் நெருங்குதலாலே மாந்தர் மார்பாற்றள்ளிப் பெயர்கின்றவர் தம் மார்பிற் பொறித்தலாலெனவுமாம். இஃது, "உறுத்தலு மொன்றலும்" என்னும் ஆலிங்கனவிகற்பம்; [1] பூசுசாந் தொருவர் பூசிற் றெழு வர்த மகலம் பூசி, மாசன மிடம்பெ றுது வண்கடை மலிந்த தன்றே" என்றூர் பிறரும். உடனுறைவுமாதியெனவே ஊடற்றீர்தலும் ஒழுக்கொடுபுணர்ந்த வெனவே காட்டிற்றுஞ்செய்து கதம்படாராதலிற் புலவி தனியிற் செல்லாது ஊடலுணர்ந்தமையும் விளங்கிநின்றன.

உகுநி - சஅ. உள்ளக நறுந்தா.....விழவுநா ளகத்தென்

(இ - ள்.) [2] இந்திரனுடைய விழாநாளகத்து உள்ளுள்ள நறிய தாதுகள் மதுவையூறிப் பிலிற்றுதலால் அகநிறைந்து மீது அழியப்பொழிய நின்றுநடுங் கும் கழுநீரினைப்போலக் கண்ணகியுடைய கருங்கண்ணும் மாதவியுடைய செங் கண்ணும் உண்ணிறை கரத்தலானே இதயத்தையொளித்து நீரையுகுத்தன; அவையே முன் எண்ணியமுறையே இடமும் வலமும் துடித்தனவென்க.

அழிந்து, அழிய.

'தாதெறிப்ப' என்றுபாடமோதித் தாது ஒளிவிடவெனப் பொருளுரைப் பாருமுளர். கழுநீர்போலவென்றது, ஊறி நிறைந்து இதழினின்றும்வழிந்து சிந்துதலின். நடுங்குமென்றூர், மல்கிநின்று அலைந்துசிந்துமாகலின். கருங்கண் செங்கணென்றூர், இருவர்க்கும் கூட்டமின்மையும் உண்மையுமுணர்த்தற்கு. இடத்தினும் வலத்தினுந்துடித்தனவென்றூர், மேல் இருவர்க்கும் கூட்டமும் பிரிவு முணர்த்தற்கு. விழவுநாளகத்தென்றூர், தீர்த்தத்தின்முன்னுளென்பது உணர்த்தற்கு

---

[1] சீவகசிந்தாமணி, ககசு.

[2] பண்டைக்காலத்தில் என்னகரத்து விழாக்கொண்டருள வேண்டுமென்றிரந்த ஒருசோழன் வேண்டுகோளுக்கு இந்திரன் உடன்பட்டானென்பதும், அதுதொடங்கி இவ்விந்திரவிழா இக்காவிரிப்பூம்பட்டினத்து நடைபெற்றுவருகின்றதென்பதும் மணி மேகலை விழாவறைகாதையால் விளங்குகின்றன. இந்திரவிழாவுண்டென்பதை வான் மீகி, காளிதாசர் முதலியோர் தத்தம் நூல்களிற் குறிப்பித்திருக்கின்றனர்; நச்சினார்க் கினியரும், "மருதநிலத்திற்குத்தெய்வமாக 'ஆடலும்பாடலும் ஊடலும்உணர்தலும்' உள்ளிட்ட இன்பவிளையாட்டு இனிதினுகருமிமையோர்க்கும் இன்குரலெழிலிக்கும் இறைவனுகிய இந்திரனை ஆண்டையோர்விழவுசெய்து அழைத்தவின், அவன்வெளிப் படுமென்றூர்; அது "வையைப் புதுப்புன லாடத் தவிர்ந்தமை, தெய்வத்திற் றேற்றித் தெளிக்கு" எனஇந்திரனைத் தெய்வமென்றதனுலும் இந்திரவிழவூரெடுத்தகாதையானு மூணர்க" என்றுஎழுதியிருக்கின்றனர் (தொல். அகத். சூ. நி. உரை.)

(ரு) மடந்தை (சு) போர்த்த படாத்தைப் போகரீக்கி (சூ) ஒளி (டு) உச்சித்தோன்றிப் (சூ) பரப்பச் (சுரு) சொரிந்து (எ0) ஆடிப் (எடு) பெயர (அசு) நலங்கொளவைத்து (அஅ) ஊட்ட (கக0) மண்டபமன்றியும் (கச0) மன்றத்தும் பலியுறீஇ (கசஉ) ஏற்றிச் (கசச) சாற்றி (கசசு) எடுத்து (கசு0) ஈண்டிக் (கசுஉ) கொள்கென (கசுஅ) ஆட்டக் (கஅஅ) களிசிறந்த வியலுளாங்கண் (உ0ரு) திரிதருமறுகில் (உஉரு) உண்டுகொலென்று (உஉச) சேனை (உஉடு) ஆட்டி விலக்கி (உஉசு) உறீஇப் (உஉஎ) புக்க கணவர் (உரூச) நடுங்குநாள் (உரூஅ) உருத்தனவாகிய (உரூஎ) கருங்கண்ணும் செங்கண்ணும், (உச0) விழாநாளகத்து (உரூரு) இடத்தினும் வலத்தினும் துடித்தனவென வினைமுடிக்க.

இஃது, எல்லாவடியும் அளவடியாய் வந்துமுடிதலின், நிலைமண்டில ஆசிரியப்பா.

நு—இந்திரவிழவூரெடுத்தகாதை முற்றிற்று.

ஆறுவது

கடலாடு காதை.

வெள்ளி மால்வரை வியன்பெருஞ் சேடிக்
கள்ளவிழ் பூம்பொழிற் காமக் கடவுட்குக்
கருங்கய னெடுங்கட் காதலி தன்னெடு
விருந்தாட் டயருமோர் விஞ்சை வீரன்
றென்றிசை மருங்கினோர் செழும்பதி தன்னு
ளிந்திர விழவுகொண் டெடுக்குநா ளிதுவெனக்
கடுவிசை யவுணர் கணங்கொண் டுண்டிக்
[1] கொடுவரி யூக்கத்துக் * கோநகர் காத்த
தொடுகழன் மன்னற்குத் தொலைந்தனராகி
நெஞ்சிருள் கூர நிகர்த்துமேல் விட்ட
வஞ்சம் பெயர்த்த மாபெரும் பூதந்
திருந்துவே லண்ணற்குத் தேவ னேவ

க. வியன்பெருஞ்சேடி - அகன்று உயர்ந்த வடசேடி.

உ. காமக்கடவுள் - காமதேவன்.

ச (பா) விருந்தாட்டமரும் - விழாக்கொண்டாடிப்போதும். விஞ்சை வீரன் - வித்யாதரவீரன்.

ஞ செழும்பதி - காவிரிப்பூம்பட்டினம். கூ. கொண்டு - கருதி.

அ. கொடுவரியூக்கத்து - புலிவலியால். கோநகர் - அமராபதி.

கூ. (பா) அண்ணல் - சோழன். எ - கூ. அவுணர் தொலைந்தனராகி.

கo. இவனெஞ்சு இருண்டுமயங்க. நிகர்த்து - தம்மிலொத்து.

கக. வஞ்சம்-இருளாகவரவிட்டவஞ்சம்; என்பது அந்தகாரத்தைப்பண்ணி வருவதோராயுதம்; தாமசாத்திரம். அவன்மேல் அசுரர்விட்ட வஞ்சத்தைமாற்றி பூதமென்க.

கஉ. திருந்துவேலண்ணற்கு - சோழன்பொருட்டாக.

---

[1] எ - கஙூ=சிலப். ஞி: கூடு - எ; "கொடித்தேர்த்தானைக் கொற்றவன் முயரம், விடித்தபூதம்" (மணி. கீ: கக - உo)
(பி - ம்.) * 'கோனகர்',

விருந்துபலி யுண்ணு மிடனுங் காண்கு
மமரா பதிகாத் தமரனிற் பெற்றுக்
கரு தமிழ்ற் * றந்து தகைசால் சிறப்பிற்
பொய்வகை யின்றிப் பூமியிற் புணர்த்த
வைவகை மன்றத் தமைதியுங் காண்குது
நாரதன் வீணைநயந்தெரி பாடனுங்
தோரிய மடந்தை வாரம்பாடலு
உ0 மாயிரங் கண்ணோன் செவியக நிறைய
நாடக முருப்பசி நல்கா ளாகி
மங்கல மிழப்ப வீணை மண்மிசைத்
தங்குக விவளெனச் † சாபம் பெற்ற
மங்கை மாதவி வழிமுதற் ரோன்றிய
உரு வங்கர் வல்லு லாடலுங் காண்குதுந்
துவரிதழ்ச் செவ்வாய்த் துடியிடை யோயே

கஙு. இருந்துபலியுண்ணுமிடனும் காண்போமென்க.

கச. அமராபதிகாத்து - தேவலோகத்தைக்காத்து. அமரனிற்பெற்று - அமரனிடத்திலேபெற்று.

கரு. தமிழ்றந்து - சோழன்மரபினுள்ளாரால் தரப்பட்டு.

கள. ஐவகைமன்றத்தமைதி - ஐந்துவகைப்பட்ட மன்றத்தின் சிறப்பு.

அமராபதிக்கு அசுரரால்வந்த இடர்நீக்கி இந்திரனுலேபெற்று இவன்மரபினுள்ளோராற்றரப்பட்டுக் காவிரிப்பூம்பட்டினத்திலேபெறவைத்த ஐவகைமன்றமும் காண்போமென்க.

கஅ. நாரதன்வீணை - நாரதமுனிவீணை நயந்தெரிபாடலும் - நயந்தெரியப்பட்டபாடலும்.

கக. தோரியமடந்தை - பற்றுப்பாடுவாள்.

உ0. ஆயிரங்கண்ணோன் - இந்திரன். செவியகநிறைய - செவியிடம் நிறையும்படி.

உக. நாடக முருப்பசி நல்காளாகி - நாடகமாடுமுருப்பசி பாடி ஆடலே விரும்பாளாதலால்.

உஉ-ங. அதற்குக்காரணமான சயந்தனிடத்தே புகுஞ்சாபத்தால் வீணை சாபம்பட்டு அம்பணமாயதென்க; வீணை மங்கலமிழப்பச் சாபம்பட்டென்றுமாம்.

உச. அவள்வழி வந்தமையின், இவள் பெயரும் மாதவியாயிற்றென்க.

(பி - ம்.) * 'தந்த'. † 'சாபமேற்ற'.

யமரர் தலைவனை வணங்குதும் யாமெனச்
சிமையத் திமையமுஞ் செழுநீர்க் கங்கையு
முஞ்சையம் பதியும் [1]விஞ்சத் தடவியும்
கூ0 வேங்கட மலையுந் தாங்கா விளையுட்
காவிரி நாடுங் * காட்டிப் பின்னர்ப்
பூவிரி படப்பைப் புகார்மருங் கெய்திச்
சொல்லிய † முறைமையிற் றொழுதனன் காட்டி
மல்லன் மூதூர் மகிழ்விழாக் காண்போன்
கூடு மாயோன் பாணியும் வருணப் பூதர்
நால்வகைப் பாணியு நலம்பெறு கொள்கை
வாணூர் மதியமும் ‡ பாடிப் பின்னர்ச்
சீரியல் பொலிய நீரல நீங்கப்
பாரதி யாடிய பாரதி யரங்கத்துத்
சு0 திரிபுர மெரியத் தேவர் வேண்ட
வெரிமுகப் பேரம் பேவல் கேட்ப
அமையவ ளொருதிற ஞக வோங்கிய
விமையவ ணுடிய கொடுகொட்டி யாடலுக்
தேர்மு னின்ற திசை முகன் காணப்
சடு பாரதி யாடிய வியன்பாண்ட ரங்கமுங்
கஞ்சன் வஞ்சங் கடத்தற் காக

உள. இங்குப் பூசைகொள்ளுகின்ற இந்திரனைவணங்குதுமென்று.

கூ0. தாங்காவிளையுள் - நிலம்பொறுத விளைச்சல்.

கூகூ. தொழுதனன்காட்டி - இந்திரனைத்தொழுது பின்றைக்காட்டி.

கூடு. மாயோன்பாணி - திருமாலைப்பாடுந் தேவபாணி. வருணப்பூதர் - நால்வகைவருணத்துப்பூதர்.

கூள. வாணூர்மதியம் - சந்திரனைப்பாடுந்தேவபாணி. பாடி - இம்மூவகைப் பாணியும்பாடி.

கூஅ. சீரியல்பொலிய - தாளவியல்பு பொலிவுபெற. நீரலநீங்க - நீரல்லாதனநீங்க; நீரல்லாதன - அவதாளம்.

கூகூ. பாரதி - பைரவி. அரங்கம் - சுடுகாடு. இவளாடுதலாற் பாரதியரங்கென்று சுடுகாட்டுக்குப் பேராயிற்று.

சு0. திரிபுரமெரியத் தேவர்வேண்டுதலால்.

சக. ஏவல்கேட்ப - சுட்டவளவிலே. சஉ. ஒருதிறனக - ஒருபக்கமாக.

சஎ. தேர்முன் - தேரிடம். தேர்த்தட்டே அரங்கமாக.

---

[1] பெருங். இ. கூ: இஉ. (பீ - ம்.) * 'காட்டிய' † 'முறையிற்' ‡ 'பாடியபின்னைச்'.

வஞ்சன வண்ண ணுடிய வாடலு
ளல்லியத் தொகுதியு * மவுணற் கடந்த
மல்லி னுடலு மாக்கட னடுவ
மே0 ணீர்த்திரை யரங்கத்து நிகர்த்துமுன் னின்ற
சூர்த்திறங் கடந்தோ ணுடிய துடியும்
படைவீழ்த் தவுணர் பையு ளெய்தக்
குடைவீழ்த் தவர்மு ணுடிய குடையும்
வாணன் பேரூர் மறுகிடை நடந்து
மூ நீணில மளந்தோ ணுடிய குடமு
மாண்மை திரிந்த பெண்மைக் கோலத்துக்
காம ணுடிய பேடி யாடலுங்
காய்சின வவுணர் கடுந்தொழில் † பொரு அண்
மாயவ ளாடிய மரக்கா லாடலுஞ்
கூ0 செருவெங் கோல மவுணர் நீங்கத்
திருவின் செய்யோ ளாடிய பாவையும்
வய லுழை நின்று வடக்கு வாயிலு
ளயிராணி மடந்தை யாடிய கடையமு
மவரவ ரணியுட னவரவர் கொள்கையி
கூமு னிலையும் படிதமு நீங்கா மரபிற்

சஎ. அஞ்சனவண்ண ணுடியவாடல் பத்துள்.

சஅ. அல்லியத்தொகுதி-அல்லியவாடல்; யானையைமருப்பொசித்தாடல்.

நிசு. குடைவீழ்த்து - குடையைத்தாழ்த்து.

நிச - நி. உலோகங்களாலும் மண்ணாலும் குடங்கொண்டு வாசுதேவ ணுடினது.

நிஅ - கூ. அவுணர் பாம்புந்தேரும்விடத் தூக்கை மரக்காலின்மேனின் முடிஞள்.

கூ0 - கூக. திருமகள், செருக்கோலம் அவுணர்நீங்கப் பாவையாகவாடியது.

கூஉ - கூ. ‡ வாணபுரத்து வடக்குவாயிலிடத்துநின்று கடைசியர்வடிவு கொண்டு அயிராணியாடிய கடையுமும்.

[1]"கடையமயி.....பதினோர்கூத்து." இவை, நிலைநின்முடல், பதம்வீழ்ந் தாடலென இருவகைய. அவை: "அல்லியம்.....ஆறு." "துடி.....ஐந்து"

---

[1] சிலப். பக். அகூ.

(பி - ம்.) * 'அவுணரைக்கடந்தோன்'. † 'பொருஅமாயவள்', ‡ 'வாணுபுரத்து'

பதிஞ்ஞே ராடலும் பாட்டின் பகுதியும்
விதிமாண் கொள்கையின் விளங்கக் காணுய்
தாதவிழ் பூம்பொழி லிருந்தியான் கூறிய
மாதவி மரபின் மாதவி யிவளெனக்
எ0 காதலிக் குரைத்துக் கண்டுமகிழ் வெய்திய
மேதகு சிறப்பின் விஞ்சைய * னன்றியு
மந்தரத் துள்ளோ ரறியா மரபின்
வந்து காண்குறூஉம் வானவன் விழவு
மாடலுங் கோலமு மணியுங் † கடைக்கொள
எஅ ஊடற் கோலமோ டிருந்தோ னுவப்பப்
பத்துத் துவரினு மைந்து விரையினு
முப்பத் திருவகை யோமா லிகையினு

எஉ. அந்தரத்துள்ளோர் - தேவர்கள்.

எஉ - ங. அறியாமரபின்... . விழவு - பிறரறியாமல் வந்துகாணும் விழவு.

(ச) விஞ்சைவீரன், தெய்வயாக்கையை மறைத்துவந்து (உள) வணங்குது நாமெனச்சொல்லிக் (ஙக) காட்டிப் பின்னர்ப் (ஙஉ) புகாரெய்தி (ஙச) விழாக் காண்போன் இவற்றைக் (சுள) காணுயென்று (எ0) காதலிக்குரைத்துக் கண்டு மகிழ்வெய்திய (எக) விஞ்சையனென்க.

(ஙஅ) நீரலநீங்க (சுச) அவரவரணியுடனுடிய (சுரு) நிலையும் படிதமும் நீங்காமரபினையுடைய (சுசு) பதிஞ்ஞேராடலுமெனக்கூட்டுக.

எச. (பா) ஆடற்கோலம் - மாதவி பதிஞ்ஞேராடலுக்குங்கொண்ட கோலம். அணி - ஆடுங்காலத்துப் பிறக்குமணி; பாவரசம். கடைக்கொள - முடிந்தவள விலே.

எரு. ஊடற்கோலமோடிருந்தோன் - கோவலன். அவனூடுதற்குக் காரணம், திருநாள்முடிதலான்வந்தவெறுப்பு; இவள் ஆடலிற் காலநீட்டித்தலாலும் பலரும் இவளைப்பற்றிப்பார்த்தலிற் பொருமையாலும் வந்தவெறுப்புமாம். உவப்ப - அவனூடறீர்ந்து உவகையெய்தும்படி.

எசு. பத்துத்துவராவன:—"பூவந்தி திரிபலை புணர்செங் கருங்காலி,..... துவரே."; "மாந்தளிர்.....முப்பழஞ் சீர்த்த முத்தக்காசு" எனவுங்கொள்க. ஐந்துவிரையாவன:—"நறும்பிசி ஞகண நற்கோட்ட மாஞ்சி, வெறுங்கண்டில் வெண்ணே விரை."; "கோட்டம்.....விரை" எனவுங்கொள்க.

எள. முப்பத்திருவகை ஓமாலிகையாவன:—"இலவங்கம் பச்சிலை..... நண்ணு மரத்தை நறும்பிசி - னெண்ணும், குடசம் வசுவாசி தீம்பூ..... சண்பகமுகையோ, டெண்ணுன்கு மோமா லிகை"

(பி - ம்.) * 'அன்றியத்தரம்' † 'கடை கொள,'

மூறின நன்னீ ருரைத்தநெய் வாச
நாறிருங் கூந்த னலம்பெற வாட்டிப்
அ0 புகையிற் புலர்த்திய பூமென் கூந்தலை
வகைதொறு மான்மதக் கொழுஞ்சே றூட்டி
யலத்தக மூட்டிய வஞ்செஞ் சீறடி
நலத்தகு மெல்விர னல்லணி செறீஇப்
[1] பரியக நூபுரம் பாடகஞ் சதங்கை
அரி யரியகங் காலுக் † கமைவுற வணிந்து
குறங்கு செறிதிரள் ‡ குறங்கினிற் செறித்துப்
பிறங்கிய முத்தரை மூப்பத் திருகாழ்
நிறங்கிளர் பூந்துகி னீர்மையி னுடுஇக்
காமர் கண்டிகை தன்னொடு பின்னிய
கூ0 தூமணித் தோள்வளை தோளுக் கணிந்து
மத்தக மணியொடு வயிரங் § கட்டிய
சித்திரச் சூடகஞ் செம்பொற் கைவளை

எஅ. உரைத்த - தேய்த்த. நெய்வாசம் - புழுகுநெய்.

இவற்றின் (எஅ) ஊறியதோலே (எகூ) ஆட்டியென்க.

அ0. புகையிற்.....கூந்தலை - அகிற்புகையாலுலர்த்தியகூந்தலை.

அஉ. அலத்தகம் - செம்பஞ்சி; அரத்தகமெனவுமாம்.

அங. மெல்விரனல்லணி - கான்மோதிரம்.

அச. பரியகம் - காற்சவடி. நூபுரம் - சிலம்பு.

அரி. அரியகம் - பாதசாலம்.

அசு. (பா) குறங்குசெறியணி - கவான்செறியாபரணம்.

அள. முத்தரை - அரையின்முத்துவடம்; பிறங்கியமுத்து - பெரியமுத்து.

அள - அ. மூப்பத்திரண்டுவடத்திலுற்செய்த விரிசிகையென்கின்ற மேகலையைப் பூந்துகிலுள்ளுடுத்து; உடுத்தல் - சூழுதல். பெரிய முத்துவடம் மூப்பத்திரண்டையுடைய அரையிலே பூந்துகிலையுடுத்தென்றுமாம்.

அங - கூ0. காமர் கண்டிகை.....தோள்வளையென்றது - கழுத்துவடத்தின்பின் தாலிக்கு இரண்டுபக்கமும் பகுத்துப்போந்து வாகுவலயத்தோடு தொடக்கிக்கிடப்பதோராபரணம்; காமர்கண்டிகையுடனே மணிகெருங்கின தோள்வளையைத் தோளுக்கணிந்தென்றுமாம்.

கூக. மத்தகமணி - உச்சியிலேவைத்த மாணிக்கம்; மத்தகத்தையுடைய சூடகத்துச்சியிலேயுள்ளமணியோடு வயிரங்கட்டுதலுமாம்.

கூஉ. கைவளை - சந்துக்காரை.

---

[1] அச - நி:—நன். சூ. சஞ்ஞ - மயிலைநாதருரை, மேற்.

(பி - ம்.) * 'ஊறிய.' † 'அமைவர' ‡ 'குறங்கினுக்கமைத்து' § 'குயிற்றிய.'

பரியகம் வால்வளை பவழப் * பல்வளை
யரிமயிர் மூன்கைக் கமைவுற வணிந்து
வாளைப் பகுவாய் வணக்குறு மோதிரங்
கேழ்கிளர் செங்கேழ் கிளர்மணி மோதிரம்
வாங்குவில் வயிரத்து [1] மரகதத் தாள்செறி
காந்தண் மெல்விரல் கரப்ப வணிந்து
சங்கிலி நுண்டொடர் பூண்ஞாண் புனைவினை
யங்கழுத் தகவயி ணரமோ டணிந்து
† கயிற்கடை யொழுகிய காமர் தூமணி
செயத்தகு கோவையிற் சிறுபுற ‡ மறைத்தாங்
கிந்திர நீலத் திடையிடை § திரண்ட
சந்திர பாணி || தகைபெறு கடிப்பிணை
யங்கா தகவயி னழகுற வணிந்து
தெய்வ வுத்தியொடு செழுநீர் வலம்புரி

கூகூ. பரியகம் [=பாசித்தாமணி]; கைச்சரியுமாம். வால்வளை - சங்க வளை. இதுவும் ஒரோவொன்றிலிவார்கள். பவழப்பல்வளை - கடகவளை.

கூடு. [2] வாளைப்பகுவாய் மோதிரம் - மூடக்குமோதிரம்.

கூசு. கேழ்கிளர் செங்கேழ் கிளர்மணிமோதிரம் - செங்கேழ்மணியை யுடையமோதிரம்; அவை இரத்தினங்கட்டின அடுக்காழி. முன்னிற்கேழ் மோதிரத்திற்கேற்றுக.

கூஎ. வாங்குவில்வயிரம் - நுடங்கின ஒளியையுடைய வயிரம். மரகதத் தாள்செறி - மரகதத்தையுடைய தாள்செறி. இவை மரகதநாயகமாகிய வட்டப்பூ.

கூஅ. விரல்கரப்ப - விரல்மறைய.

கூக. சங்கிலி - வீரச்சங்கிலி. (பா) நுழைவினை நுண்ஞாண் - நுண்ணிய தொழிலையுடைய ஞாண்.

கoக - உ. கயிற்கடையொழுகிய கோவை - கழுத்தாபரணங்களிற் கொக்கி வாய்முத்தாரமாகச் செய்ததிலே நவரத்தினங்களைக் கோத்து முதுகுமறைய விடும் பின்முலி.

கoகூ - சு. இந்திரநீலக்கடிப்பிணை - நீலக்குதம்பை. இடையிடை திரண்ட சந்திரபாணியென்னும் நாமவேறுபாட்டையுடைய வயிரம்முழுதுங் கட்டின கடிப்பிணை; இவை இரண்டும் இரண்டுகாதிலணிவன.

கoசு. தெய்வவுத்தி - சீதேவி.

---

[1] "மரகதமணித் தாள்செறிந்த மணிக்காந்தண் மெல்விரல்கள்" (சிலப். எ: க.)

[2] "சுருவேடெறழுதியமோதிரந்தொட்டாள்" (கலி. அசு.)

(பி - ம்.) * 'பல்வடம்' † 'கயிற்படை' ‡ 'மறைஇ யிந்திர்' § 'சிறந்த' || 'தகைமணிக்'

தொய்யகம் புல்லகந் * தொடர்ந்த தலைக்கணி
மையீ ரோதிக்கு மாண்புற வணிந்து
கூடலு மூடலுங் கோவலற் களித்துப்
கக) பார்டமை சேக்கைப் பள்ளியு ளிருந்தோ
ளுருகெழு மூதூ ருவவுத்தலை வந்தெனப்
பெருநீர் போகு மிரியன் மாக்களொடு
மடலவிழ் கானற் கடல்விளை யாட்டுக்
காண்டல் விருப்பொடு வேண்டின ளாகிப்
ககடு பொய்கைத் தாமரைப் புள்வாய் புலம்ப
வைகறை யாமம் வாரணங் காட்ட
வெள்ளி விளக்க நள்ளிருள் கடியத்
தாரணி மார்பனொடு பேரணி யணிந்து
வான வண்கையன் அத்திரி யேற
கஉ0 மானமர் நோக்கியும் வையம் மேறிக்
கோடிபல வடுக்கிய கொழுநிதிக் குப்பை
† மாடமலி மறுகிற் பீடிகைத் தெருவின்
மலரணி விளக்கத்து மணிவிளக் கெடுத்தாங்
கலர்கொடி யறுகு நெல்லும் வீசி

கo௭. தொய்யகம் தலைப்பாளை. புல்லகம் - தென்பல்லி வடபல்லி தொடர்ந்ததலைக்கணி - இவைமுதலிய தொடர்ந்ததலைக்கணிகளை.

கo௮. மாண்புறவணிந்து - அழகுபெறவணிந்து.

ககக. உவவுத்தலை - உவவுக்காலம்; ஏழாவது இடமும்பொருளும் காலத் துடன்மயங்கும்.

ககஉ. பெருநீர்போகும், ஏழாவதிரண்டாவதுடனே மயங்கிற்று. பெரு நீர் - கடல். இரியன்மாக்கள் - தீர்த்தமாடவிரைந்து போம்பொழுது விளையாடு சனம்.

ககங. விளையாட்டு - பிறர்விளையாடல். ககடு. புள்வாயொலிப்ப.

ககசு. யாமம் - யாமத்தை. ககள. வெள்ளியெழுந்தவிளக்கம்.

ககக. வண்கையன் - கோவலன். அத்திரி - கோவேறுகழுதை. அஃதாவது குதிரையில் ஒருசாதி.

கஉ0. வையம் - தேர்; கொல்லாவண்டியுமாம்; கூடாரப்பண்டியுமாம.

கஉங. மலரணிதல் (பா) அகல்விளங்கியவிடத்திலே.

கஉச. வீசி - தூவி.

(பி - ம்.) * 'தொடருந்' † 'மாடம்மலிற்'.

கஉடு மங்கலத் தாசியர் தங்கல ஞெலிப்ப
விருபுடை மருங்கினுந் திரிவனர் பெயருந்
திருமக ளிருக்கை செவ்வனங் கழிந்து
மகர [1] வாரி வளந்தந் தோங்கிய
நகர வீதி * நடுவட் போகிக்

கஙo [2] கலந்தரு திருவிற் புலம்பெயர் † மாக்கள்
வேலை வாலுகத்து விரிதிரைப் பரப்பிற்
கூல மறுகிற் கொடியெடுத்து நுவலு
மாலைச் சேரி மருங்குசென் றெய்தி
‡ வண்ணமுஞ் சாந்து மலருஞ் சுண்ணமும்

கஙஙு § பண்ணியப் பகுதியும் பகர்வோர் விளக்கமுஞ்
செய்வினைக் கம்மியர் கைவினை விளக்கமுங்
காழியர் மோதகத் தூழுறு விளக்கமும்
கூவியர் காரகற் குடக்கால் விளக்கமு
நொடைநவின் மகடூஉக் கடைகெழு விளக்கமு

கசo மிடையிடை மீன்விலை பகர்வோர் விளக்கமு
[3] || மிலங்குநீர் வரைப்பிற் கலங்கரை விளக்கமும்
விலங்குவலைப் பரதவர் மீன்றிமில் விளக்கமு
மொழிபெயர் தேத்தோ ரொழியா விளக்கமுங்

கஉள. திருமகளிருக்கை - ஸ்ரீதேவிகுடியிருப்பான பீடிகைத்தெருவென்க. இவை பட்டினப்பாக்கம்.

கஉக. நகரவீதி - மருவூர்ப்பாக்கவீதி.

கஙஉ. கொடியெடுத்துநுவலும் - இன்னவுளவென்று கொடிக்கட்டியெடுத்துச் சரக்குக்களது நன்மையையறிவிக்கும்.

கஙங. மாலைச்சேரி - ஒழுங்குபட்ட பரதேசிகளிருப்பு.

கஙள. காழியர் - பிட்டுவாணிகர். ஊழுறுதல் - குடைதல்.

கஙஅ. (பா) கூவியர் காரகற் குடைகால்விளக்கு - அப்பவாணிகர் காரகலொன்றத் தண்டைக்கடைந்திட்ட விளக்கு.

கஙக நொடைநவில்.....கடை - பலபண்டமும் விற்பார்கடை;

கசo. [பாரடைவலியுமாம்.]

கசக. கலங்கரைவிளக்கம்-திக்குக்குறிகாட்டிக்கலத்தைஅழைக்கிறவிளக்கம்.

கசங. (பா) மொழிபெயர் - தேசத்தோர் - பரதேசிகள். ஒழியாவிளக்கு - விடிவிளக்கு.

---

[1] 'வாரிவளம்.' திருக். கச. [2] சிலப். இ: கக. [3] "இரவின் மாட்டிய விலங்குசுடர்ஞெகிழி யுரவுநீ ரழுவத் தோடுகலங் கரையுந்துறை" (பெரும்பாண். நகசு - நுக.)

(பி - ம்.) * 'நடுவட்' † 'மாக்கள் கலந்திருந்துறையும் விலங்குநீர்வரைப்பின்வேலை' ‡ 'வண்ணமுஞ் சுண்ணமுந்தண்ணறுஞ் சாந்தமும்'. § 'பண்ணியத்தொகுதியும்'. || 'விலங்குநீர்.'

கழிபெரும் பண்டங் காவலர் * விளக்கமு
கசடு மெண்ணுவரம் பறியா வியைந்தொருங் கீண்டி
யிடிக்கலப் பன்ன வீரயிர் மருங்கிற்
கடிப்பகை காணுங் † காட்சிய தாகிய
விரைமலர்த் தாமரை ‡ வீங்குநீர்ப் பரப்பின்
மருத வேலியின் மாண்புறத் தோன்றுங்
கரூ கைதை வேலி நெய்தலங் கானற்
பொய்த லாயமொடு பூங்கொடி பொருந்தி
நிரைநிரை § யெடுத்த புரைதீர் காட்சிய
மலைப்பஂ சூரமுங் கடற்பஂ சூரமும்
வளந்தலை மயங்கிய துளங்குகல விருக்கை
கருடு யரசிளங் குமரரு மூரிமைச் சுற்றமும்
பரத குமரரும் பல்வே றுயமு
மாடுகள மகளிரும் பாடுகள மகளிருந்
தோடுகொண் மருங்கிற் || சூழ்தர லெழினியும்
[1] விண்பொரு பெரும்புகழ்க் கரிகால் வளவன்

கசடு எண்ணுவரம்பறியா - அளவறியா.

கசசு. இடிக்கலப்பு - மாவைத்தம்மிற்கலத்தல். அயிர் - நுண்மணல்.

கஙஎ. சிறுகடுகுகாணுங்காட்சியையுடையதாகி.

கஙரு - ரூ0. விளக்கங்களீண்டி நுண்மணலில்வீழ்ந்த வெண்சிறுகடுகைப் பலரும்காணும் காட்சியதாக; இதனுலே தாமரைபூத்த மருதநிலம்போலத் தோன்றும் நெய்தனில்ம்; கைதைவேலியையுடைய நெய்தலங்கானல்; விளக்குக்களீண்டிக் கடிப்பகைகாணுங்காட்சியையுடைத்தாய் மருதவேலிபோலத் தோன்றுமென்ற இஃது இடத்தினிகழ்பொருளின்வினையை இடத்திலேயேற்றிற்று.

கரூக. பொய்தல் - விளையாட்டு.

கரூ0 - ரூக. விளையாட்டாயத்துடனேசென்று கானலைப்பொருந்தி.

கரூஉ. (பா) நிரை தலை யெடுத்த - நிரையாக இடத்திற்குவித்த.

கரூங. தாரம் - பலபண்டம்.

(கரூஉ) நிரையாகக்குவித்த (கரூங) மலைவளமும் அலைவளமுமென்க.

கரூச. துளங்குகலவிருக்கை - கலமசைகிற இருக்கை.

கரூஅ. தோடுகொண்மருங்கு - தொகுதலையுடைய கடற்பக்கம்.

---

[1] கரூசு - சூ0. "கழாஅர் முன்றுறைக், கலிகொள் சுற்றமொடு கரிகால் காணுந், தண்யதங்கொண்டு" (அகநா. ஙஎசு.)

(பி - ம்.) * 'விளக்கமு, நுண்வினைக்கம்மியர் செய்வினைவிளக்கமு, மெண்ணு'. † 'காட்சியதாகி'. ‡ 'விளங்குநீர்'. § 'அடுத்த'. || 'சூழ்கால்.'

ககூ0 [1] றண்பதங் கொள்ளுந் தலைநாட் போல
வேறுவேறு கோலத்து வேறுவேறு கம்பலை
[2] சாறயர் களத்து வீறுபெறத் தோன்றிக்
கடற்கரை மெலிக்குங் காவிரிப் பேரியாற்
றிடங்கெட வீண்டிய நால்வகை வருணத்
ககூஇ தடங்காக் கம்பலை யுடங்கியைந் தொலிப்பக்
கூற்புலவு கடிந்த மடற்பூந் தாழைச்
சிறைசெய் வேலி * யகவயி னுங்கோர்
புன்னை நீழற் புதுமணற் † பரப்பி
லோவிய வெழினி சூழுடன் போக்கி
கள0 விதானித்துப் படுத்த வெண்கா லமளிமிசை
வருந்துபு நின்ற வசந்த மாலைகைத்
திருந்துகோ னல்லியாழ் செவ்வனம் வாங்கிக்
கோவலன் றண்ணெடுங் கொள்கையி னிருந்தனண்
மாமலர் நெடுங்கண் மாதவி தானென்.

ககூ0. தண்பதங்கொள்ளும் - புதுப்புனலாடும்.

கஇஅ - சூஇ. எழினிக்கணுண்டாகிய வேறுவேறுகம்பலையானது வீறு பெறத்தோன்றி அடங்காக் கம்பலையோடுகூடி ஒலியாநிற்கவென்க.

ககூக. கடற்கரையை மெலிவிக்குமென்க.

ககூக. ஓவியவெழினி - சித்திரப்பணி யெழுதினதிரை; ஆவது ‡ மசகாரி.

களக. வருந்துபுநின்ற - வழிவந்ததனால் வருந்திநின்ற. வசந்தமாலை - மாதவியின் சேடி.

களஉ. செவ்வனம் [=வாதசெபம்.]

(எஐ) ஊடற் கோலமோடிருந்தவனுவப்பக் (க0கூ) கூடலும் ஊடலுமளித்துப் (ககo) பள்ளியுளிருந்தோள் (ககக) உவவுத்தலைவந்ததாகக் (ககஙு) கடல் விளையாடல் (ககச) காண்டல்வேண்டி (ககஅ) அணிந்து (கஉ0) வையமேறித் (கஉஉ) தெருவினைக் (கஉஎ) கழிந்து (கஉக) நடுவட்போகி (கஙுக) எய்திக் (கஐ0) கானலில் (கஐக) ஆயமொடுபொருந்திப் பின் (ககூஅ) மணற்பரப்பிலே (கள0) அமளிமீதே (களஉ) யாழ்வாங்கிக் (களஙு) கோவலன்றண்ணெடிருந்தாளைக் கூட்டுக.

---

[1] "தண்பதங்கொள்விழவர்" சிலப். எ: சு. [2] முருகு. உஅஙுமூ; புறநா. உஉ.

(பி - மி.) * 'அகவயிற்பூத்த' † 'பரப்பியோவிய' ‡ 'மசகரி'

க - ச. வெள்ளி மால்வரை.....விஞ்சை வீரன்

(இ - ள்.) வெள்ளியம் பெருமலைக்கண் அகன்றுயர்ந்த வடசேடிக்கண்ணே மதுவொழுக மலர்கின்ற பூக்களையுடையதோர் பொழிலிடத்தே கரிய கயல்போலும் நெடிய கண்களையுடைய தனது காதலியுடனேயிருந்து காமக்கடவுட்கு விழவை விரும்பிச்செய்வானேர் விச்சாதரவீரனென்க.

வியன்பெருஞ்சேடி - அகன்றுயர்ந்த வடசேடி. அவிழ்பூ, விஞ்சைத்தொகை. காமக்கடவுள் - காமதேவன். விருந்தாட்டு - நித்தல்விழாவன்றி யாண்டுதோறும் விரும்பும் விழவு.

காதலிதன்னொடு அமருமென்க.

ந - கூ. தென்றிசை.....நாளிதுவென

(இ - ள்.) வீரன் பங்குனித்திங்கள் இருபத்தொன்பதிற் சித்திரைநாளிலே அவ்விழாமுடிதலின், தென்றிசைப்பக்கத்து ஒரு வளவியநகரிடத்து இந்திரவிழவிற்குக் கால்கொண்டு கொடியெடுக்குநாள் மேலைமாதத்து இந்தச் சித்திரை காணெனச் சொல்லியென்க.

இதுவெனச் சுட்டிஞன், அன்றும் சித்திரையாகலின். ஈண்டுத்திங்களும் திதியுங்கூறியது என்னையெனின், கோவலனும் மனைவியும் ஊரினின்றும் போந்த திங்களும் திதியும் வாரமும் நாளும் வழிச்செலவும் ஒழிவும், மதுரையிற் சென்றபுக்கு இவன் இறந்துபட்ட திங்கள் முதலாயுள்ளவற்றோடு மாறுகொள்ளாது முடிதற்கெனக்கொள்க. அதுயாண்டுமோவெனின், வேனிற்காதையினும் நாடுகாண்காதையினும் காடுகாண்காதை கட்டுரைகாதையென்னும் இவற்றுள்ளுமெனக்கொள்க.

எ - கஉ. கடுவிசை யவுணர்.....இடனுங் காண்கும்

(இ - ள்.) மிக்கவேகத்தினையுடைய அசுரர் கூட்டமாகவந்துநெருங்கி, இந்திரனது நகரைக்காத்த புலிபோன்ற வலியையுடைய முசுகுந்தனுக்குத் தோற்றுப் பின்பு தம்மில் ஒத்துக்கூடி அம்முசுகுந்தனது நெஞ்சமும் இருள்கூரும்படி பிரயோகித்த அத்திரத்தைப்போக்கிய பெரிய பூதத்தை அவ்வண்ணஞ் பொருட்டு இந்திரனேவப் போந்து அப்புகாரிலிருந்து அது பலியுண்ணும் நாளங் காடியிடமும் காண்பேமென்றுனென்க.

இதனை, ''முன்னுளிந்திரன்.....,காவ லழித்துச் சேவல் கொண் டெழுந்த,வேட்கை யமுத மீட்க வெழுவோ, னின்நகர் காப்போர் யாரென நினைதலு, நேரிய னெழுந்து நீவரு காறும், தார்கெழு மார்ப தாங்கலென் கட னெனை, வுவந்தனன் கேட்டுப் புகழ்ந்தவிப் பூத, நின்வழி யாகென நிறீஇப் பெயர்வுழிக், கடுவிசை யவுணர் கணங்கொண் டீண்டிப், பொருதுபோர் தொலைந் தனராகிப் பெரிதழிந், தாழ்ந்த நெஞ்சிற் சூழ்ந்தனர் நினைத்து; வஞ்ச மன்றிது வஞ்சத் தல்லது, வேற லரிதெனத் தேறினர் தேறி, வளைத்துத் தொடித்த வல்வா யம்பி, னயின்முகங் கான்ற வாரிருள் வெயிலோ, னிருகணும் புதையப்

பாய்தலி னெருகணு, நெஞ்சங் காணு நிற்ப நின்ற, வஞ்சம் பெயர்த்த மாபெரும் பூதம்" என்பதனுமுணர்க.

என்சொல்லியவாறுவெனின், அங்ஙனம்விட்ட அம்பு கண்ணையும் மனத்தையும் புதைத்தலாற் போர்த்தொழிலொழிந்துநின்ற முசுகுந்தற்கு அவ்விருளுடைதற்குக் காரணமாயதோர் மந்திரத்தையருள அதனுன் வஞ்சங்கடிந்து அவுணரைக் கொன்றுருவித்து நின்றுணைக்கண்ட இந்திரன் அவரை எங்ஙனம் கொன்றுருவித்தாயென்றற்கு அவன் இப்பூதத்தின்செயலெனைக் கேட்ட இந்திரன் அப்பூதத்தை அவன்பொருட்டு மெய்காவலாக ஏவுதலின் ஆங்குநின்றும் போந்து ஈங்குப் புகாரினுளிருந்து பலியுண்ணும் நாளங்காடியிடமும் காண்பேமென்பதாம்.

ஏவப் போந்தென ஒருசொல் வருவிக்க.

கொடுவரி - புலி. ஊக்கம் - வலி. கோநகர் - அமராவதி. மன்னன் - முசுகுந்தன். நெஞ்சிருள்கூர - உள்ளக்கண்ணையும் அவ்விருள் மறைப்ப ; சிறப்பும்மை தொக்கது. நிகர்த்து - தம்மிலொத்துக்கூடி. வஞ்சம் - தாமதாத்திரம்; ஆவது அந்தகாரத்தைப் பண்ணுவதோரம்பு. பெயர்த்த - போக்கின. பூதம் - பூதத்தை. அண்ணற்கு - அண்ணல்பொருட்டு. தேவன் - இந்திரன்.

தேவர் பாடமாயின் ஒருவரைக்கூறும் பன்மைக்கிளவியென்க. காண்கும், உளப்பாட்டுத்தன்மை; உம், ககரமூர்ந்துவந்தது.

கணங்கொண்டு ஈண்டித் தொலைந்தனராகி நிகர்த்து விட்ட வஞ்சமென்க.

கச - எ. அமராபதி.....காண்குதும்

(இ - ள்.) முன் அசுரரால்வந்த இடர்நீங்க அமராவதியைக்காக்கலான் அவ்விந்திரனுற்பெற்று இவன்மரபிலுள்ளாராலே கொண்டுவந்து பொய்க்கும் பகுதியின்றிப் பூமியிலே நிலைபெறவைத்த அழகுமிக்க சிறப்பினையுடைய ஐந்து வகைப்பட்ட மன்றங்களின் பெருமையையும் காண்பேமென்றனென்க.

அமரனின் - அமரனுலே. தமர் - முசுகுந்தன் முன்னோர்; அன்றிக் கரிகாலன் மரபிலுள்ளாரெனினுமமையும். பொய்வகையின்றி - இம்மன்றிற்கு ஆண்டுள்ள செய்கை ஈண்டும் பொய்த்தலின்றி. புணர்த்த - அங்ஙனங்கொடுத்த இந்திரன்காலமன்றிப் பின்னுள்ளகாலங்களும் புணரும்படி செய்த. ஐவகைமன்றம் - முன்னர் இந்திரவிழவூரெடுத்தகாதையிற்கூறிய மன்றங்கள். அமைதி - பெருமை.

கஅ - உரு. நாரதன் வீணை.....ஆடலுங் காண்குதும்

(இ - ள்.) யாழாசிரியனுகிய நாரதமுனிவன் யாழின் ஏழிசையின்பமும் தெரியப்பாடும் பாடலையும், தோரியம்படந்தை வாரம்பாடலையும், நாடகத்தினையும் உருப்பசி இந்திரனுடைய செவியாரப்பாடிக் கண்ணுர ஆடுதலும் விரும்பாளாதலின் வீணை மங்கலமிழக்க; மண்மிசைத்தங்குக ; இவள் மண்ணிற்போய்ப் பிறக்கவெனச்சபித்தலின், அதனைப்பெற்றுவந்துபிறந்த மங்கையாகிய மாதவி

வழியிற்றோன்றிய அரவுபோலும் அல்குலையுடைய மாதவியுடைய ஆடலையும் அவ்விடத்துக் காண்பேமென்றுனெண்க.

தோரியமடந்தையென்பாள் - ஆடிமுதிர்ந்தாற் பின்பு ஆடன்மகளிர் காலிற்கு ஒற்றறுத்துப்பாடுமவள்; என்னே ? [1] ''இந்நெறி வகையால்..... தோரிய மகளே'' எனவும், [1] ''தலைக்கோ லரிவை.....தோரிய மகளே'' எனவும் கூறியவாற்றுனறிக வாரம் - ஒருொற்றுவாரமும், ஈருொற்றுவாரமுமென்னும் செய்யுள். அவை தாளத்து ஒருமாத்திரையும் இரண்டு மாத்திரையும் பெற்று வரும்.

உருப்பசியின் சாபவரலாறு என்னையோவெனின், [3] ''வயந்த மாமலை நயந்த மூனிவர, னெய்திய வவையி னிமையவர் வணங்க, விருந்த விந்திரன் திருந்திழை யுருப்பசி, யாட னிகழ்க்க பாடலோ டேங்கென, [4] வோவியச் சேனன் மேவின னெழுந்து, கோலமுங் கோப்பு நூலொடு புணர்ந்த, விசையு நடமு மிசையத் திருத்திக், கரந்துவர லெழினியொடு புகுந்தவன் பாடலிற், பொரு முக வெழினியிற் புறந்திகழ் தோற்றம், யாவரும் விழையும் பாவனை யாகலி, னயந்த காதற் சயந்தன் மூகத்தி, னேக்கெதிர் நோக்கிய பூக்கமழ் கோதை,நாடிய வேட்கையி னுட னெகிழப், பாடன் முதலிய பல்வகைக்கருவிக, ளெல்லா நெகிழ் தலி னெல்லா மூனிவர, னெருதலை யின்றி யிருவர் நெஞ்சினுங், காமக் குறிப் புக் கண்டனன் வெருண்டு, சுந்தர மணிமுடி யிந்திரன் மகனை, மாணு விறலோய் வேணு வாகென, விட்ட சாபம் பட்ட சயந்தன், * சாப விடையரு டவத்தோய் நீயென, மேவினன் பணிந்து மேதக வுரைப்ப, வோடிய சாபத் தருப்பசி தலைக் கட்டுங், காலைக் கழுயு நீயே யாகி, மலையமால் வரையின் வந்துகண் ணுற்றுத், தலையரங் கேறிச் சார்தி யென்றவன், கலக நாரதன் கைக்கொள் வீணை, யலகி லம்பண மாகெனச் சபித்துத், தந்திரி யுவப்பத் தந்திரி நாரிற், பண்ணிய வீணை மண்மிசைப் பாடி, யீண்டு வருகெனப் பூண்ட சாப, மிட்டவக் குறுமுனி யாங் கே, விட்டன னென்ப வேந்தவை யகத்தென்'' என்பதனுனறிக.

இதனுற்சொல்லியது: நாரதன் கலகப்பிரியனுதலால் தனது யாழைப் பகை நாம்புபட இசைத்தலின், தான் இங்ஙனமிசைத்தற்குக் காரணமின்றுகவும் இவள் கலங்கினமைதான் நமக்கறிவித்து நம்மால் இவளை முனிவிப்பான்வேண்டி நம்மை மதியாளுயினுனென அவளொடும் சாபமிடுகின்றவன் வீணை மங்கல மிழக்க; மண்மிசைத்தங்குக; இவள் மண்ணிற்போய்ப் பிறக்கவெனச் சாபம் இட்டானென்பது. வீணை மண்மிசைத் தங்குகவெனவே இவளை நீங்காவரத்தின் வந்ததாகலான் இவனும் மண்மிசைத் தங்குகவென்பதாயிற்று; எனவே இவன் மண்ணிற் பிறவானுதலுணர்க.

இவ்வீணையை உருப்பசிகையில் வீணையென்பாருமுளர்; அது பொருத்த மின்று. அங்ஙனம் இவள் மண்மிசைப்பிறக்கவெனச் சபித்தலின் அதனைப் பெற்று வந்துபிறந்த மங்கையாகிய மாதவிவழிப்பெயராய் அவ்வழியிற்றோன்

---

[1] சிலப்பதிகாரம், பக். கஅஅ. [3] வயந்தமாமலை - பொதியின்மலை; வயந்தம் - தென்றல். [4] ஓவியச்சேனன் - சித்திரசேனனென்னுங்கந்தருவன்.

(பி - ம்.) * 'சாபவிடையெமக்கருடவத்தோயென்று'

றிய அரவுபோலுமல்குலையுடைய மாதவியுடைய ஆடலையும் அவ்விடத்துக் காண்பேமென்றுணைன்க. ஈண்டுச் சயந்தன்சாபமும் விடையுங் கூறுதது, அரங்கேற்றுகாதை கண்ண [1] "இந்திர சிறுவனொடு, தலைக்கோற் றானத்துச் சாப நீங்கிய" என்றாகலினைனக்கொள்க. இனி வீணையைச் சாரீரவீணையாக்கி மங்கலமிழப்ப என்பதற்கு இவள் இக்கடவுள் யாக்கையொழிந்து மக்கள்யாக் கையில் தங்குகவெனச் சபித்தானென்பதுங்கொள்க. இனி உருப்பசிக்குச் சயந்தன்மேற்சென்ற காதன்மை புதல்வர்மேற்செல்லும் கண்ணோட்டமென் பார்க்கு அங்ஙனம் புதல்வரைநோக்கி மகிழ்வார்க்கு அன்பு சிறத்தலொழிந்து நிலைகலங்கி ஆடல் பாடல் நெகிழ்தலும் மூன்றுகாலமுமுணர்ந்த முனிவன் அதனை அறியாது சபித்தானென்றலும் பொருந்தாமையின் அங்ஙனமுரைத் தல் குற்றமென்க. மண்மிசைத்தங்குகவென்றதை வீணைக்குமேற்றுக.

உசு - எ. துவரிதழ்.....வணங்குதும் யாமென

(இ - ள்.) (க) வடசேடியிற் (உ) பொழிற்கண் கடவுட்குக் (ங) காரிகை யோடு (ச) விருந்தாட்டமரும் வீரன் (ஞ) இதுவெனக்கூறி (கங) இடனுங்காண் கும்; (கஎ) அமைதியுங்காண்குதும்; (உடு) ஆடலுங்காண்குதுமாதலால், துடி யிடையாய்! யாமும் தலைவனை வணங்குவேம்; வருவாயாகவெனச் சொன்ன அப் பொழுதேயென்க.

துவர் - செம்மைநிறம். ஓய், [2] "ஆயென் கிளவியு மவற்றொடு கொள் ளும்" என்பதனுன் முடிந்ததாம். ஏகாரம், இசைநிறை. யாமுமென்னுமும் மை தொக்கது. இனி எனவென்பதனை [3] "எனவெ னெச்சம் வினையொடு முடிமே" என்பதனுன், என்றுசொல்லிப்போந்தெனச் சொல்லெச்சமாக்கி முடிப்பினுமமையும்.

உஅ - ஙச. சிமையத் திமையமும்..... விழாக் காண்போன்

(இ - ள்.) அவன், கொடுமுடியையுடைய இமயமலையையும் வளைவிய நீரை யுடைய கங்கையாற்றினையும் அவந்தியென்னும் பதியினையும் விந்தமலைசூழ்ந்த அடவியினையும் வேங்கடமென்னுமலையினையும் நிலம்பொருத விளையுளினையுடைய காவிரிநாட்டினையும் தன்காதலிக்கு இஃதுஇன்னது இஃதுஇன்னதென்றுகாட்டி ஆண்டாண்டுள்ள பயனுகர்தற்கு வேண்டுநாட்டங்கிப் பின்பு சிலநாளிற் படப் பையையுடைய புகாரென்னு நகரிடத்தேவந்து முன்புசொன்ன முறைமையால் இடனும் அமைதியும் இவையென்று தொழுதனனுய்த் தன்காதலிக்குக் காட்டி வளைவிய தேவருமகிழும் மூதூர்க்கண் நடக்கின்ற விழவைத் தானும் காண்கின் றவனென்க.

சிமையம் - உச்சி. அடவி - காடு. தாங்காவிளையுள் - நிலம்பொருதவினைத் தல்; [4] "வேலி யாயிரம் விளையுட் டாக" என்றாகலின். விளைத்தலென்பது விளையுளென மருவிற்று; புலிப் [5] பாய்த்துள், தேரைப்பாய்த்துளென்பதுபோல.

---

[1] சிலப். அரங்கேற்றுகாதை, உ - ங.
[2] தொல்காப்பியம், வினையியல், சூ. கடு.
[3] ,, எச்சவியல், ,, சஉ.
[4] பொருநராற்றுப்படை, உசசு - எ.
[5] பாய்த்துள் - பாய்தல்.

பட்டப்பை - தோட்டக்கூறு. புகார், ஆகுபெயர். மணிவிழாப் பாடமாயின், அழகிய விழாவென்க. காண்போன், தொழிற்பெயர்.

கூடு. மாயோன் பாணியும்—(இ-ள்.) திருமாலேப்பரவுந்தேவபாணியும்,

இனிப் பதினேராடல் கூறுவான் எடுத்துக் கொண்டார்; அவற்றுள், கொடுகொட்டியென்பது இத்தன்மைத்தென்கின்றது.

மாயோன் - திருமால். பாணி - தேவபாணி. பாணியென்றது - பாட்டு. அது தேவர்ப்பராவுதலாயிற்று; என்னே? [1] "ஏனே யொன்றே, தேவர்ப் பராவு தன் முன்னிலைக் கண்ணே" என்றாராகலின். அது முத்தமிழ்க்கும் பொது. அஃது இயற்றமிழில்வருங்காற் கொச்சகவொருபோகாய் வரும். வரும்வழியும் பெருந்தேவபாணி, சிறுதேவபாணியென இருவகைத்தாய் வரும். என்னே? "கூறிய வுறுப்பிற் குறைபா டின்றித், தேறிய விரண்டு தேவ பாணியும்" என்றாராகலின். அங்ஙனம் வரும் [2] தரவினே நிலையெனவடக்கி முகத்திற்படுந் தரவினே முகநிலையெனவும், இடைநிற்பனவற்றை இடைநிலையெனவும், இறுதியினிற்பனவற்றை முரிநிலையெனவும் பரவுதற்பொருண்மையாற் பெயர்கொடுத்தார் செய்யுளியலின்கண்ணுமெனக் கொள்க.

இனி, இசைத்தமிழில்வருங்கால், முகநிலை கொச்சகம் முரியென்ப ஒரு சாராசிரியர். அன்றி இசைப்பா, இசையளவுபாவென்னும் இருபகுதியுள் இஃது இசைப்பாவின் பகுதியென்ப. அது பத்துவகைப்படும்: செந்துறை, வெண்டுறை, பெருந்தேவபாணி, சிறுதேவபாணி, முத்தகம், பெருவண்ணம், ஆற்றுவரி, கானல்வரி, விரிமுரண், தலைபோகுமண்டிலமென. என்னே? "செந்துறை, வெண்டுறை தேவபா ணிய்யிரண்டும், வந்தன முத்தகமே வண்ணமே - கந்தருவத், தாற்றுவரி கானல் விரிமுரண் மண்டிலமாத், தோற்று மிசையிசைப்பாச் சுட்டு" என்றார் இசைநுணுக்கமுடைய சிகண்டியாரென்க.

இன்னும் சுத்தம் சாளகம் தமிழென்னும் சாதியோசைகள் மூன்றினுடனும் [3] கிரியைகளுடனும் பொருந்தும் இசைப்பாக்கள் ஒன்பதுவகையென்ப; அவை:—சிந்து, திரிபதை, சவலை, சமபாதவிருத்தம், செந்துறை, வெண்டுறை, பெருந்தேவபாணி, சிறுதேவபாணி, வண்ணமெனவிவை. என்னே? "செப்பரிய சிந்து திரிபதை சீர்ச்சவலை, தப்பொன்று மில்லாச் சமபாத-மெய்ப்படியுஞ், செந்துறை வெண்டுறை தேவபாணி வண்ணமென்ப, பைந்தொடியா யின்னிசையின் பா" என்றார் பஞ்சமரபுடைய அறிவனரென்னுமாசிரியரென்க.

இனி, நாடகத்தமிழில் தேவபாணிவருங்காற் பெருந்தேவபாணி பலதேவரையும், சிறுதேவபாணி வருணப்பூதரையும் மூவடிமுக்கால் வெண்பாவால் துதிக்கின்றுழி, அவரணியும் தாரும் ஆடையும் நிறனும் கொடியுந்துதித்து அவராற் பெறவேண்டுவனவுந் துதிக்கப்படும்; என்னே? "திருவள ரரங்கிற்

---

[1] தொல்காப்பியம், செய்யுளியல், சூ. கசுஅ.

[2] ,, ,, கசுஉ - பேர். உரை.

[3] கிரியை - தாளக்கிரியை; படித்தல் முதலியன.

சென்றினி தேறிப், பரவுந் தேவரைப் பரவுங் காலை, மணிதிகழ் நெடுமுடி மாணிபத் திரனை, யணிதிகழ் பளிங்கி ஞெளியினை யென்றுங், கருந்தா துடுத்த கடவுளை யென்று, மிரும்பனைத் தனிக்கொடி யேந்தினை யென்றுங், கொடுவாய் நாஞ்சிற் படையோ யென்றும், கடிமலர் பிணைந்த கண்ணியை யென்றுஞ், சேவடி போற்றிச் சிலபல வாயினு, மூவடி முக்கால் வெள்ளையின் மொழிப'' என்றார் மதிவாணரென்க. இவை ஈண்டுரைப்பிற் பெருகும். பிறவும் வந்த வழிக் காண்க.

இனி, மூற்கூறிய பதிஞ்ஞராடற்கும் முகனிலையாகிய தேவபாணி மாயோன் பாணி. அது வருமாறு: ''மலர்மிசைத் திருவினை வலத்தினி லமைத்தவன் மறிதிரைக் கடலினை மதித்திட வடைத்தவ, னிலகொளித் தடவரை கரத்தினி லெடுத்தவ னினதிரைத் தொகைகளை யிசைத்தலி லழைத்தவன், மூவுலகுண்ட் தருமவ ணலத்தினை முடித்தவன் முடிகள்பத் துடையவ னுரத்தினை யறுத்தவ, னுலகனைத் தையுமொரு பதத்தினி லொடுக்கின ஞெளிமலர்க் கழறரு வதற்கினி யழைத்துமே.'' இஃது எண்சீரான்வந்த கொச்சகவொருபோகு. பண் - கௌசிகம். தாளம் - இரண்டொற்றுடைத் தடாரம். சிறுதேவபாணி ஈண்டுக்கூறிற் றிலரெனினும் இனம்பட்டுவருதலிற் கூறல்வேண்டுவதாயிற்று. அது வருமாறு: ''வண்ணமலர்ச் சரங்கோத்து மதனவேண் மிகவெய்யக், கண்ணளவோர் புலனல்லாக் கனல்விழியா லெரித்தனையா, லெண்ணிறந்த தேவர்களு மிருடிகளு மெழுந்தோட, வொண்ணுதலாள் பாகங்கொண் டொருதனியே யிருந்தனையே'' என்பது.

இதனுள் இறைவனை மூற்கூறுது மாயோனை மூற்கூறியதென்னையோவெனின், மாயோன் காவற்கடவுளாய் அருளை அருத்தலானென்க.

நூநி - சூ. வருணப் பூதர் நால்வகைப் பாணியும்—(இ - ள்.) வருணப்பூதர் நால்வரையும்பரவும் நால்வகைத் தேவபாணியுமென்றவாறு.

அவை வருமாறு: ''அந்தணர் வேள்வியோ டருமறை மூற்றுக, வேந்தன் வேள்வியோ டியாண்டுபல வாழ்க, வாணிக நிருநெறி நீணிதி தழைக்க, பதினெண் கூலமு முழவர்க்கு மிகுக, வரங்கியற் கூத்து நிரம்பிவினை முடிக, வாழ்க நெடுமுடி கூர்கவென் வாய்ச்சொலென், றிப்படிப் பலிகொடுத் திறைவனிற் றொக்குச், செப்பட வமைத்துச் செழும்புகை காட்டிச், சேவடி தேவரை யேத்திப் பூதரை, மூவடி முக்கால் வெண்பா மொழிந்து, செவியிழுக் குறுமை வேந்தனை யேத்திக், கவியொழுக் கத்து நின்றுழி வேந்தன், கொடுப்பன கொடுப்ப வடுக்கு மென்ப'' என்றார் மதிவாணரென்க.

நூசு - எ. நலம்பெறு.....பின்னர்—(இ - ள்.) பல்லுயிர்களும் தன்னலியால் நன்மைபெறுந் தன்மையையுடைய வானின் ஊர்ந்துசெல்லும் மதியமும்பாடியென்க.

எனவே சந்திரனைப்பாடும் தேவபாணியென்பதாயிற்று. ஆதித்தனை மூற்கூறுது இறைவனை மூற்கூறியவாற்றுற் கொள்க. இதற்குச் செய்யுள்: ''குரைகடன் மதிக்கு மதலையை குறுமுய லொளிக்கு மரணினை, யிரவிரு ளகற்று நில

வினை யிறையவன் முடித்த வணியினை, கரியவன் மனத்தி னுதித்தனை கயிரவ மலர்த்து மவுணனை, பரவுநர் தமக்கு நினதிரு பதமலர் தபுக்க வினையையே" எனவரும்; பண்ணும் தாளமும் முற்கூறியன.

ங.அ. சீரியல் பொலிய நீரல நீங்க—(இ - ள்.) அவதாளநீங்கத் தாள வியல்பு பொலிவுபெறவென்றவாறு.

இதனை நீரலநீங்கச் சீரியல் பொலியவென மாறுக. அன்றி அவதாள நீங்குதலால் தாளவியல்பு பொலிவுபெறுகிற்கவெனவுமாம். இவற்றை மேல் மாதவிக்கு அடையாக்கி முடிக்க.

இனி, பதிஞ்ஞராடல் கூறுவார்:—அவை இருவகைப்படும்: [1] "அல்லியங் கொட்டி.....ஆறு"; [2] "துடிகடையம்.....ஐந்து" என்பவாகலின்.

ங.கூ - சஙஉ. பாரதி யாடிய.....கொடுகொட்டி யாடலும்

பாரதி - பைரவி; அவளரங்கம் - சுடுகாடு; அவளாடுதலாற் பெற்றபெயர்.

(இ - ள்.) தேவர் புரமெரியவேண்டுதலால் வடவையெரியைத் தலையிலே யுடைய பெரியவம்பு ஏவல்கேட்டவளவிலே அப்புரத்தில் அவுணர் வெந்து விழுந்த வெண்பலிக்குவையாகிய பாரதியரங்கத்திலே உமையவள் ஒருகூற்றினளாய் நின்று பாணி தூக்குச் சீரென்னும் தாளங்களைச் செலுத்தத் தேவர்யாவரினுமுயர்ந்த இறைவன் சயானந்தத்தாற் கைகொட்டிநின்று ஆடிய கொடுகொட்டியென்னுமாடலும்.

மூகம் - தலை. பேரம்பு - பரமபுருடன். ஏவல்கேட்ப - சுட்டவளவிலே திரிபுரம் தீமடுத்தெரியக்கண்டு இரங்காது கைகொட்டிநின்று ஆடுதலிற் கொடுமையுடைத்தாதலைக்கிக் [3] கொடுகொட்டியென்று பெயர்கூறினர்.

[4] "கொட்டி.....நான்காமெனல்."

சஎ - நெ. தேர்மு னின்ற.....பாண்டரங்கமும்

(இ - ள்.) வானோராகிய தேரில் நான்மறைக் கடும்பரிபூட்டி நெடும்புற மறைத்து வார்துகின்முடித்துக் கூர்முட்பிடித்துத் தேர்முனின்ற திசைமுகன் காணும்படி பாரதிவடிவாய இறைவன் வெண்ணீற்றை அணிந்தாடிய பாண்டரங்கக்கூத்தும்,

'நின்று' பாடமாயிற் காண நின்றுடியவென்க; [5] "பாண்டரங்கம்.....ஆறுமெனல்."

சஅ - அ. கஞ்சன்.....தொகுதியும்

(இ - ள்.) அஞ்சனவண்ணன் ஆடியஆடல்பத்துள், கஞ்சன்வஞ்சத்தின் வந்த யானையின்கோட்டை ஒசித்தற்கு நின்றுடிய அல்லியத்தொகுதியென்னுங் கூத்தும்,

---

[1], [2], [4], [5] சிலப்பதிகாரம், பக். அகூ.

[3] கொடுங்கொட்டி கொடுகொட்டியென விகாரமாயிற்றென்பர் நச்சினார்க்கினியர்; (கலி. கடவுள்.)

தொகுதியென்றூர், முகம் மார்பு கை கால்களின் வட்டணை அவிநயமுதலி யன விருந்தும் தொழில்செய்யாதுநிற்றலின்; "ஆட லின்றி நிற்பவை யெல்லா மாயோ னூடும் வைணவ நிலையே" என்றூர்; அல்லியமென் பதனை அல்லிப்பேடென் பாருமுளர்; [1] "அல்லியம்.....ஆரு மெனல்."

சஅ - கூ. அவுணற் கடந்த மல்லி னடலும் —(இ - ள்.) வாணனு டைய அவுணனை வேறற்கு மல்லனுய்ச் சேர்ந்தாரிற்சென்று அறைகூவி உடற் கரித்தெழுந்து அவனைச் சேர்ந்தவளவிலே சடங்காகப்பிடித்து உயிர்போகநெரித் துத் தொலைத்த மல்லாடலும்,

அவுணற்கடந்த - அவுணனெண்ணத்தைக் கடந்த; [2] "நெடியவன்..... ஐந்தாம்."

சக - நிக. மாக்கட னடுவண்.....ஆடிய துடியும்

(இ - ள்.) கரிய கடலினடுவுநின்ற சூரனது வேற்றுருவாகிய வஞ்சத்தை யறிந்து அவன்போரைக்கடந்த முருகன் அக்கடனடுவண் திரையே அரங்கமாக நின்று துடிகொட்டியாடிய துடிக்கூத்தும்,

நிகர்த்து - நேரொத்து; [3] "துடியாடல்.....ஐந்தாம்."

நஉ - ங. படைவீழ்த் தவுணர்.....ஆடிய குடையும்

(இ - ள்.) அவுணர் தாம் போர்செய்தற்கு எடுத்த படைக்கலங்களைப் போரிற்கு ஆற்றுது போகட்டு வருத்தமுற்றவளவிலே முற்கூறியமுருகன் தன் குடையை முன்னேசாய்த்து அதுவே ஒருமுகவெழினியாக நின்றாடிய குடைக் கூத்தும்,

பையுளெய்த ஆடியவெனவியையும்; [4] "அறுமுகத்தோன்... ....எனல்."

நச - நு. வாணன் பேரூர்.....ஆடிய குடமும்

(இ - ள்.) காமன்மகன் அநிருத்தனைத் தன்மகள் உழைகாரணமாக வாணன் சிறைவைத்தலின், அவனுடைய சோவென்னும் நகரவீதியிற்சென்று நிலங் கடந்த நீனிறவண்ணன் குடங்கொண்டாடிய குடக்கூத்தும்,

இது பஞ்சலோகங்களாலும் மண்ணுலும் குடங்கொண்டாடினது; [5] "குடத் தாடல்.....ஆய்ந்து." இது விநோதக்கூத்து ஆறினுளொன்றென் றுணர்க; என்னை? "பரவிய சாந்தி யன்றியும் பரதம், விரவிய விநோதம் விரிக் குங் காலைக், குரவை கலிநடங் குடக்கூத் தொன்றிய, கரண நோக்குத் தோற்பா வைக்கூத், தென்றிவை யாறு நகைத்திறச் சுவையும், வென்றியும் விநோதக் கூத்தென விசைப்ப" என்றூராகலின்.

நசு - எ. ஆண்மை.....பேடி யாடலும்

(இ - ள்.) ஆண்மைத்தன்மையிற்றிரிந்த பெண்மைக்கோலத்தோடு காம முடிய பேடொன்றுமாடலும்,

---

[1], [2], [3], [4], [5] சிலப்பதிகாரம், பக். அக.

ஆண்மைத்தன்மையிற் றிரிதலாவது விகாரமும் வீரியமும் நுகரும்பெற்றி யும் பத்தியும் பிறவுமின்றுதல்; ஆண்மை திரிந்தவென்பதனால் தாடியும், பெண் மைக்கோலத்தென்பதனால் முலைமுதலிய பெண்ணுறுப்புப் பலவுமுடையது ஆண்பேடென்று பெயர்பெறுமெனக்கொள்க; என்னை? [1] "சூரியற் றூடி மருள் படு பூங்குழற், பவளச் செவ்வாய்த் தவள வொண்ணகை, யொள்ளரி நெடுங் கண் வெள்ளிவெண் டோட்டுக், கருங்கொடிப் புருவத்து மருங்குவிளை பிறை நுதற், காந்தளஞ் செங்கை யேந்திள வனமுலை, யகன்ற வல்கு லந்நுண் மரு ங்கு, லிகந்த வட்டுடை யெழுதுவரிக் கோலத்து, வாணன் பேரூர் மறுகிடை நடந்து, நீணில மளந்தோன் மகன்முன் ஞடிய, பேடிக் கோலத்துப் பேடுகாண் குநரும்" என்றாராகலின்.

இது தனதுமகன் அநிருத்தனைச் சிறைமீட்டுக் காமன் சோணகரத்தாடியது; [2] "காமனதாடல்.....நான்கு."

நிஅ - கூ. காய்சினவவுணர்.....[3] மரக்கா லாடலும்

(இ - ள்) காயும் சினத்தையுடைய அவுணர் வஞ்சத்தாற்செய்யும் கொடுந் தொழிலைப் பொருளாய் மாயோளால் ஆடப்பட்ட மரக்காலென்னும் பெயரை யுடைய ஆடலும்,

மாயவள் - துர்க்கை. அவுணர் உண்மைப்போரான் வேறலாற்றாது வஞ் சத்தான் வேறல்கருதிப் பாம்பு தேள் முதலியவாய்ப் புகுதலையுணர்ந்து அவள் அவற்றை உழக்கிக் கொல்லுதற்கு மரக்கால்கொண்டு ஆடுதலின், மரக்காலாடலா யிற்று; [4] "மாயவளாடல்.....நான்கு."

சுஅ - சுக. செருவெங் கோலம்.....ஆடிய பாவையும்

(இ - ள்.) அவுணர் வெவ்விய போர்செய்தற்குச் சமைந்த போர்க்கோலத் தோடு மோகித்துவீழும்படி கொல்லிப்பாவைவடிவாய்ச் செய்யோளாகிய திரு மகளால் ஆடப்பட்ட பாவையென்னுமாடலும்,

கோலநீங்கவென்றார், அதற்கேற்பப் பொராது அஞ்சி யவிதலின்; [5] "பாவை .....ஒன்று."

சுஉ - சுங. வயலுழை.....ஆடிய கடையமும்

(இ - ள்.) வாணனுடைய மூற்கூறிய பெரியநகரின் வடக்குவாயிற்கண் உளதாகிய வயலிடத்தேநின்று அயிராணியென்னுமடந்தை ஆடிய கடைய மென்னு மாடலும்,

அயிராணி - இந்திராணி. கடையம் - கடைசிக்கூத்து; [6] "கடையம்..... ஆறு."

சுச - எக. அவரவ ரணியுடன்.....விஞ்சைய னன்றியும்

(இ - ள்.) அங்ஙனங்கூறப்பட்ட அவரவருடைய அணிகளுடன் அவரவரு டைய கொள்கையாற் பொருந்தி நின்றாடலும் வீழ்ந்தாடலுமாகிய அவரவரை

---

[1] மணி. சுகக-உசு. [2,4,5,6] சிலப்பதிகாரம், ப. சுஎ. [3] "மாயஞ்செய் வாளவுணர் வீழ நங்கை மரக்கான்மேல் வாளமலை யாடும் போலும்" என்பர்பின்னும்; சிலப். கஉ.

நீங்காத மரபினையுடைய பதினெருவகைப்பட்ட ஆடலும் அவ்வாடல்கட்கேற்ற பாடல்களின் வேறுபாடும் அவற்றிற்குவித்த மாட்சிமைப்பாட்டோடு அவற்றைப் புலப்படக் காண்பாயாக; அன்று கள்ளவிழ்பூம்பொழிற்கண்ணேயிருந்து நின்னோடு யான் கூறப்பட்ட மாதவிமரபின்வந்த மாதவி இவள்காணென்று தன் காதலிக்குச் சொல்லித் தானுங்கண்டு மகிழ்ச்சிமிக்க மேம்பாடுதக்க மரபினையுடைய விஞ்சையனும், அவனன்றியும்,

எஉ - நி. அந்தரத் துள்ளோர்.....இருந்தோனுவப்ப

(இ - ள்.) சுவர்க்கத்திலுள்ளாராகிய தேவரெல்லாம் உள்வரிகொண்டு வந்து காணப்படும் இந்தவிழவும் மாதவியாடலும் அவ்வாடற்குச் சமைந்த கோலமும் ஆடுதலாற்பிறந்தவழகும் முடிதலின் அதனாற்பிறந்த வெறுப்போடிருந்த கோவலனுவக்கும்படி,

அந்தரத்துள்ளோர் - விச்சாதரருமாம். மானிடர் தம்மைக்காண்டல் பொருமையின் அறியாமரபினென்றார். இனி, இவளாடலும் கோலமும் தனது அறிவு நிறை ஓர்ப்புக் கடைப்பிடிகளைக் கைக்கொண்டு விடுதலாலே பிறர்க்கும் இவ்வாறுமென்னும் வெறுப்போடிருந்தானெனினுமமையும். ஊடலோடென்னுது கோலமோடென்றார், மனத்தினிகழ்ந்த ஊடலை முகம் காட்டுதலின்.

எசு - கூ. பத்துத் துவரினும்.....நலம்பெற வாட்டி

(இ - ள்.) வாசநெய்யுரைத்த மணங்கமழும் கரிய கூந்தலைப் பத்துவகைப்பட்ட துவரினாலும் ஐந்துவகைப்பட்ட விரையினாலும் மூப்பத்திருவகைத்தாகிய ஓமாலிகையானும் ஊறிக்காயப்பட்ட நன்னீராலே நிறம்பெறவாட்டியென்க.

இருமை - கருமை. பத்துத்துவராவன :—"பூவந்தி திரிபலை புணர்கருங்காலி, நாவலோடு நாற்பான் மரமே" ஐந்துவிரையாவன:—[1] "கொட்டம்.....விரை." மூப்பத்திருவகை ஓமாலிகையாவன : "இலவங்கம் பச்சிலை கச்சோல மேலம், குலவிய நாகணங் கோட்ட - நிலவிய, நாக மதாவரிசி தக்கோல நன்னாரி, வேகமில் வெண்கோட்ட மேவுசீர் - போகாத, கத்தூரி வேரி யிலாமிச்சங் கண்டிலவெண்ணை, யொத்தகடு நெல்லி யுயர்தான்றி - துத்தமொடு, வண்ணக்கச் சோல மரேணுக் மாஞ்சியுட, னெண்ணுஞ் சயிலேக மின்புழுகு - கண்ணுறும், புன்னைநறுந் தாது புலியுகிர் பூஞ்சாரளம், பின்னு தமாலம் பெருவகுளம் - பன்னும், பதுமுக நுண்ணேலம் பைங்கொடி வேரி, கதிர் நகையா யோமாலி கை" என்னுமிவையெனக்கொள்க; என்னை? "ஓரை விரையினு மீரைத் துவரினு, மாறைந்தின் மேலிரண் டோமா லிகையினு, நாறைங் கதுப்பி னனமுநன்குரைஇ, யூறின நன்னீ ருவந்தன ளாட்டி" என்பராகலின்.

அ0 - அக. புகையிற் புலர்த்திய.....சேறாட்டி

(இ - ள்.) அங்ஙனமாகிய நீராட்டிப் பொலிவினையுடைய புகையிற் புலர்த்திய கூந்தலை ஐந்துவகைபெறவகுத்த வகைதோறும் மாண்மதத்தின் கொழுவிய சேற்றை ஊட்டியென்க.

[1] சிலப்பதிகாரம். பக். கஉஅ.

மான்மதச்சேறு - கத்தூரிக்குழம்பு ; சுவாதுமாம்.

அஉ - ங. அலத்தக மூட்டிய.....நல்லணி செறீஇ

(இ - ள்.) செம்பஞ்செழுதிய அழகிய சிவந்த சீறடிக்கேற்ற நலத்தகும் மெல்லிய விரலிடத்தே செறிக்கப்படும் நல்லணிகளைச்செறித்து,

விரலணி - மகரவாய்மோதிரம், பீலி, கான்மோதிரமுதலியன.

அச - நி. பரியகம்.....அணிந்து

(இ - ள்.) பாதசாலமும் சிலம்பும் பாடகமும் சதங்கையும் காற்சரியு மென்னும் இவற்றைக் காலுக்குப் பொருத்தமுறும்படி அணிந்தென்க.

பரியகமாவது - "பொன்னிதழ் பொதிந்த பன்னிற மணிவடம், பின்னிய தொடரிற் பெருவிரன் மோதிரந், தன்னொடு தொடக்கித் தமனியச் சிலம்பின், புறவாய் சூழ்ந்து புணரவைப் பதுவே." என்னை? "அவ்வாய் மகரத் தணிகிளர் மோதிரம், பைவாய் பசும்பொற் பரியக நூபுர, மொய்ம்மணி நாவின் மூல்லை யங்கிண்கிணி, கௌவிய வேனவுங் காலுக் கணிந்தாள்" என்றார்.

அசு. குறங்கு செறிதிரள் குறங்கினிற் செறித்து - (இ - ள்.) குறங்குசெறியென்னும் பணியைத் திரண்ட குறங்கிடத்தே செறித்தென்க.

குறங்குசெறி - கவான் ஆபரணம்.

அஎ - அ. பிறங்கிய.....உடீஇ

(இ - ள்.) பருமுத்தக்கோவை முப்பத்திரண்டாற்செய்த விரிசிகையென்னுங்கலையை நீலநிறங்கிளரும் பூத்தொழிலையுடைய நீலச்சாதருடையின்மீதே உடுத்தென்க.

என்னை? "குறங்கு செறியொடு கொய்யலங் கார, நிறங்கிளர் பூந்துகி னீர்மையி னுடீஇப், பிறங்கிய முத்தரை முப்பத் திருகா, முறிந்த தமைவர வல்குற் கணிந்தாள்" என்றார்.

அங - கூ. காமர் கண்டிகை.....அணிந்து

(இ - ள்.) காமஞ்செய்யும் மாணிக்க வீளையுடன் நீங்காமற் பொற்றொட ராற்பிணித்த முத்தவீளையைத் தோளுக்கு அணிந்தென்க.

காமம், காமரென விகாரம். தூமணி - முத்து. என்னை? "ஆய்மணி கட்டி யமைந்தவிலைச் செய்கைக், காமர் கண்டிகைக் கண்டிரண் முத்திடைக், காமர்பொற் பாசங் கொளுத்திக் கவின்பெற, வேய்மருண் மென்றோள் விளங்க வணிந்தாள்" என்றார்.

அக - ச. மத்தக மணியொடு.....அணிந்து

(இ - ள்.) முகப்பிற்கட்டிய மாணிக்கத்தோடே பத்திகளில் வயிரங்களழுத் தப்பட்ட சித்திரத்தொழிலையுடைய சூடகமும் செம்பொன்னுற்செய்த வீளையும் நவரத்தினவீளையும் சங்கவீளையும் பவழவீளைகளும் என்னுமிவற்றை ஐதான மயிரையுடைய முன்கைக்குப் பொருத்தமுற அணிந்தென்க.

பரியகம் - சரியுமாம். வால்வளை - வெள்ளிவளையுமாம். பவழப்பல்வளை - கைவடமுமாம். என்னை? "புரைதபு சித்திரப் பொன்வளை போக்கி, லெரிய விர் பொன்மணி யெல்லென் கடகம், பரியகம் வால்வளை பாத்தில் பவழ, மரி மயிர் முன்கைக் கமைய வணிந்தாள்" என்றார். அரியகை முன்கைக்கென்ப தூஉம் பாடம்.

ஙஞ - அ. வாளைப் பகுவாய்.....அணிந்து

(இ - ள்.) வாளைமீனினது அங்காந்தவாயை வணங்குதலுறுவிக்குகெளரியும் சிவந்தஒளி உச்சமாகக் கதிராரும் மாணிக்கப்பீடமும் பக்கத்தேவளைந்து திரையும் ஒளியையுடைய வயிரஞ்சூழ்ந்த மரகதக் கடைசெறியும் பிறவுமாகிய இவற்றைக் காந்தண் மலர்போலும் மெல்லிய விரல்கள் மறையும்படியணிந்து,

பகுவாய்மோதிரமுமாம்; ஒப்பிலுகியபெயர். கேழ்கிளர்மணி, அஃது, எக்கேழெனிற் செங்கேழ்கிளர்மணியென்க. வாங்குவில் - வளைத்துக்கொள்ளும் ஒளி.

ஙஙஅ - கஂ. சங்கிலி.....அணிந்து

(இ - ள்.) வீரசங்கிலியும் நேர்ஞ்சங்கிலியும் பூணப்படுஞாணும் என்னுமிவற்றோடு கைபுனையப்பட்ட தொழில்களையுடைய சவடி சரப்பளிமுதலாயுள்ள பிறவற்றையும் அழகிய கழுத்திடத்தே முத்தாரத்தோடணிந்தென்க.

கஂக - உ. கயிற்கடை.....மறைத்தாங்கு

(இ - ள்.) முற்கூறிய சங்கிலிமுதல் ஆரமீறுயுள்ள அணிகட்கெல்லாம், தலையொன்றுய்க் * கொக்குவாய்ப் படுகண்தொடக்கிய பன்மணிக்கோவையால் தூக்கமாகச் செய்யப்பட்ட பின்றூலியாற் சிறுபுறத்தை மறைத்தென்க.

கயிற்கடை - கொக்குவாய். ஒழுகியகோவையென்க. சிறுபுறம் - பிடர்; "சங்கிலி நூண்டொடர் பூண்ஞாண் புனைவினைத், தொங்க லருத்தித் திருந்துங் கயிலணி, தண்கடன் முத்தின் றகையொரு காழெனக், கண்ட பிறவுங் கழுத்துக் கணிந்தாள்" என்றார். ஆங்கு, அசை.

கஂங - டு. இந்திர நீலத்து.....அணிந்து

(இ - ள்.) முகப்பிற்கட்டின இந்திரநீலத்திடையிடையே பயிலக்கட்டின வயிரங்களால் அழகுபெற்ற நீலக்குதம்பையை வடிந்த காதினிடத்தே அழகுமிகும்படி அணிந்தென்க.

என்னை? "நூலவ ராய்ந்து நூவலருங் கைவினைக், கோலங் குயின்ற குணஞ்செய் கடிப்பினை, மேலவ ராயினு மெச்சும் விறலொடு, காலமை காதிற் கவின்பெறப் பெய்தாள்" என்றார்.

கஂச - அ. தெய்வ வுத்தியொடு.....அணிந்து

(பி - ம்.) * 'கொக்கிவாய்': கோக்குவாய், கோக்கிவாயென்றும் படித்தற்கு இடமுண்டு.

(இ - ள்.) சேதேவியாரென்னும் பணியுடனே வலம்புரிச்சங்கும் பூரப்பாளையும் தென்பல்லி வடபல்லியென்னுமிவையும் தம்மில் தொடர்ந்து ஒன்றுன தலைக்கோலத்தைக் கரிய பெரிய ஓதிக்கு அழகுறும்படி யணிந்தென்க.

செழுநீர், வலம்புரிக்கு அடை. என்னே ? "கேழ்கிளர் தொய்யகம் வாண்முகப் புல்லகஞ், சூளா மணியொடு பொன்னரி மாலையுந், தாழ்தரு கோதையுந் தாங்கி முடிமிசை, யாழின் கிளவி யரம்பையர் சொத்தாள்" என்றார்.

ஊடற்கோலமோடிருந்தோனுவப்ப ஆட்டி ஊட்டிச் செறீஇ அணிந்து செறித்து உடீஇத் தோளுக்கணிந்து அமைவுறவணிந்து கரப்பவணிந்து ஆரமோடணிந்து சிறுபுறமறைத்து அழகுறவணிந்து மாண்புறவணிந்தென்க.

கஅக - கஅ. கூடலும்.....இருந்தோள்

(இ - ள்.) கூடலையும் பின்னர் ஊடலையும் கோவலற்களித்துப் படுக்கையமைந்த சேரும்பள்ளியிடத்தே இருந்தவளென்க.

பின்னர் ஊடலளித்தலாவது, [1] எண்ணில்காமமெரிப்பினுமேற்செலாப் பெண்மையும் நாணும் அழிந்துவந்து குறையுற்றுக் கூடிந்துணையும் நீயிர் பிரிவாற்றியிருந்தீர் ; அன்பிலீரென ஊடுவது. ஊடலையளித்தல் - அதனுன்வருந்தன்பத்தை யளித்தல்.

ககக - ச. உருகெழு மூதூர்.....வேண்டின ளாகி

(இ - ள்.) விழவிற்குக் கொடியெடுத்தநாண்முதல் நாலேழ்நாளும் விழவு நடந்து பிற்றைஞான்று கொடியிறங்கி விழாவாற்றுப்படுத்த பிற்றைஞான்று உவாத் தலைவந்ததாக மாற்றூர்க்கு உட்குதலைப் பொருந்துவிக்கும் மூதூரினின்றும் கடற்கடைக்கண் இடம்பிடிக்க விரைந்துசெல்லுமாக்களோடு தானும் மடலவிழாநின்ற கைதை புன்னைமுதலியவற்றையுடைய கழிக்கானல்பொருந்திய கடல்விளையாட்டைக் காண்டலை விருப்பத்தோடே வேண்டினளாகியென்க.

பெருநீர் - கடல். இரியல் - விரைவு. காண்டல் - நீர்ப்போரில் வெற்றி தோல்விகாண்டல். வேண்டினள் - காண்டற்குத் தானும்போகக் கோவலனே வேண்டிக்கொண்டாள்; எனவே அவனும் உடம்பட்டமை உணர்த்திற்று.

ககஞ - உ0. பொய்கைத் தாமரை.....வையமேறி

(இ - ள்.) அங்ஙனம் வேண்டி அவனும் உடம்பட்டவளவிலே பொய்கைகளில் தாமரைப்பூஞ்சேக்கையில் துயில்கின்ற புட்கள் அச்சேக்கையை நீங்குதலான் வாய்விட்டுப் புலம்பாநிற்ப வைகறைப்பொழுதென்பதனை வாரணங்கள் அறிவிக்க வைகறைக்காலத்துச் செறிந்தவிருளை வெள்ளியவிளக்கம் கடியாநிற்க அக்காலத்தே மதாணிமுதலிய பேரணிகலங்களையணிந்து முகில்போலும் வண்கையையுடைய கோவலன் இராசவாகனமாகிய அத்திரியேற அத் தாரணிமார் பலரோடு போதற்கு மானின் பார்வைத்தன்மைபொருந்திய நோக்கினையுடையாரும் வையத்தின் ஏறியென்க.

---

1 - " எண்ணில் காம மெரிப்பினு மேற்செலாப், பெண்ணின் பிக்கது பெண்ணல லில்லையே " (சீவக. ககக அ.)

புலம்பக் காட்டக் கடியவென்னும் செயவெனைச்சங்கள் ஏற ஏறியென்னும் வினைகொண்டுமுடிந்தன. வாளாது வாரணமென்றமையால் [1] இருவகை வாரணமுங்கொள்க. அத்திரி-கோவேறுகழுதை. வையம்- * கொல்லாப்பண்டி.

கஉக - எ. கோடிபல வடுக்கிய.....செவ்வனங் கழிந்து

(இ - ள்.) கோடியென்னுமிலக்கத்தைப் பலகோடிமேலடுக்கப்பட்ட வளவிய நிதித்திரளையுடைய மாடங்கண்மலிந்த மறுகினையுடைய பீடிகைத்தெருவின் கண் மலரணிதற்குக் காரணமாகிய மைவிளக்கோடே மாணிக்கவிளக்குக்களையுமெடுப்ப அவ்விடத்தே தாசியர் மலரையும் அறுகையும் நெல்லையும் மங்கலமாகச் சிந்தி இருமருங்கினிடத்தும் தம் கலஞ்ஞெலிப்பத் திரிந்துபெயர்தலைச்செய்யும் திருமகளுக்கு இருப்பிடமாகிய அவ்விடத்தை வேறுகக்கழிந்தென்க.

குப்பை - குவியல். மாடம் - சரக்கறைகள். மறுகு - ஏனைத்தெரு. மணி-அழகுமாம். கொடி, அறுகுக்கு அடை. அரைமென்னுமும்மை தொக்கது. மங்கலம் - அழகுமாம். அங்காடியின் செல்வமிகுதிகூறுவார் திருமகளிருக்கையென்றார். கழிதற்கருமையிற் கழிந்தென்றார்.

தாசியர் கலஞ்ஞெலிப்பத் திரிவனர்பெயருமிருக்கை யென்க.

கஉஅ - கூ. மகரவாரி.....போகி

(இ - ள்.) கடலினதுவளத்தைக் கொணர்தலான் உயர்ச்சிபெற்ற நகரத் தெருவினூடே போயென்க.

கடல்வளம் - முத்தும் பவளமும் சங்குமுதலியன.

கஙஎ - ஙஙூ. கலந்தரு திருவின்.....சென்றெய்தி

(இ - ள்.) மரக்கலங்கள் தந்த திருவினையுடைய தமதுதேசங்களைவிட்டுப் போந்த பரதேசிகள் திரைகளிட்ட வெண்மணலையுடைய அலைவாயிருப்பிற் பல வகைக்கூலமுங் குவித்தமறுகில் இன்ன சரக்கு ஈண்டுளதென்று கொடிகளெடுத்துச்சொல்லும் ஒழுங்குபட்ட சேரிகளைப்போய் நெய்தலங்கானலை யெய்தி யென்க.

வாலுகம் - வெண்மணல். வேலை விரிதிரைப்பரப்பின் வாலுகத்தையுடைய மறுகென்க. எடுத்துரைவலும் - எடுத்தலாற்சொல்லுமென்றுமாம்.

கஙச - ஙு. வண்ணமும்.....விளக்கமும்

(இ - ள்.) எழுதுவண்ணமும் சாந்தும் மலரும் சுண்ணமும் பண்ணிகார வருக்கங்களுமென்னும் இவற்றை விற்போர்வைத்த விளக்குக்களும்,

கஙசு. செய்வினைக் கம்மியர் கைவினை விளக்கமும்

(இ - ள்.) திண்ணகத்தாற் செய்யுந்தொழில்களைவல்ல பணித்தட்டார் பணிபண்ணுமிடங்களில்வைத்த விளக்கங்களும்,

---

[1] இருவகை வாரணம் - சங்கு, கோழி; (சிலப். சு: எள - அ.), பி - மி.) * 'கோவாலவண்டி.'

கங.ஏ. காழியர் மோதகத் தூழுறு விளக்கமும்

(இ - ள்.) பிட்டுவாணிகர் பிட்டுவிற்றற்கு முறைமுறையாகவைத்த விளக்குக்களும்,

மோதகம் - ஈண்டுப் பிட்டு.

கங.அ. கூவியர் காரகற் குடக்கால் விளக்கமும்

(இ - ள்.) காரகலையுடைய அப்பவாணிகர் குடத்தண்டில்வைத்த விளக்குக்களும்,

கங.கூ. நொடைநவின் மகடூஉக் கடைகெழு விளக்கமும்

(இ - ள்.) பலபண்டமும் விற்கும் மிலேச்சமகளிர் தம்கடைகளில்வைத்த விளக்குக்களும்,

கசo. இடையிடை மீன்விலை பகர்வோர் விளக்கமும்

(இ - ள்.) இடையிடையே மீன்விற்போர் விளக்குக்களும்,

கசக. இலங்குநீர் வரைப்பிற் கலங்கரை விளக்கமும்

(இ - ள்.) பாடைவேறுபட்டதேயத்து நிலையறியாது ஓடுங்கலங்களை அழைத்தற்கு இட்ட விளக்குக்களும்,

கசஉ. விலங்குவலைப் பரதவர் மீன்றிமில் விளக்கமும்

(இ - ள்.) மீன்களைக் குறுக்கிட்டு மறித்துப்படிக்கும் வலையையுடைய பரதவர் திமிலில்வைத்த விளக்குக்களும்,

[1] "மூங்கீர் நாப்பட் டிமிற்சுடர் போலச், செம்மீ னிமைக்கு மாக விசும்பின்" என்றார் பிறரும்.

கசங. மொழிபெயர் தேத்தோ ரொழியா விளக்கமும்

(இ - ள்.) பாடை வேறுபட்டதேயத்து மிலேச்சர் பிறதுறைகளிற்போகாமற் பிணைகளைக் காலாகநாட்டி அதன்மீதே மண்ணிட்டெரிக்கும் தீநாவென்னும் விளக்குக்களும்,

கசச. கழிபெரும் பண்டங் காவலர் விளக்கமும்

(இ - ள்.) மிக்க பெரிய பண்டங்களையுடைய பண்டசாலைகாப்போரிட்ட விளக்குக்களும்,

கசஞ - ஞo. எண்ணுவரம் பறியா.....நெய்தலங் கானல்

(இ - ள்.) வரம்பறியப்படாவாய் இச்சொல்லப்பட்ட விளக்குக்களெல்லாம் எண்ணுதற்கியைந்து ஒன்றிமிகுதலாலே இடியைக்கலந்தாலொத்த மணலின்மீது இட்டவெண்சிறுகடுகும் புலப்படக்காணுங் காட்சியையுடையதாகிய, மிக்க நீர்ப்பரப்பில் விரைமலர்த்தாமரையை வேலியாகவுடைய மருதநிலத்தினும், அழகுறத்தோன்றும் கைதையை வேலியாகவுடைய நெய்தனிலத்தில் கழிக்கானற்கண்ணேயென்க.

---

[1] புறநானூறு, சுo.

எண்ணுவரம்பு - எண்ணின்பெருமைக்கு வரம்பு. ஈண்டுதல் - மிகுதல். இடி - மா. இடிக்கலப்பென்றார், தெள்ளாதமாவை. ஈரயிர் - மிகவும் தூண்ணிய மணல். வீங்குநீர்ப்பரப்பில் தாமரைவேலிமருதத்திற்றோன்றும் கைதைவேலி நெய்தலங்கானலென்க

கநிக. பொய்த லாயமொடு பூங்கொடி பொருந்தி

(இ - ள்.) அங்ஙனமாகிய கானலிடத்தே தனது விளையாட்டுமகளிருடனே பூங்கொடிபோல்வாள் விளையாடச் சென்றுபொருந்தியென்க.

கநிஉ - சு. நிரைநிரை.....கலவிருக்கை

(இ - ள்.) நிரைநிரையாகக் குவித்த குற்றமற்ற காட்சியையுடைய மலை தரும் பலபண்டமும் கடல்தரும் பலபண்டமுமாகிய வளம் இடந்தோறும் மயங் கிக்கிடக்கின்ற கலங்களைசுமின்ற கடற்றுறைமுகங்களிற் சோலைசூழ்ந்த இருப் பிடத்தே,

துளங்குதல் - அசைதல்.

கநிஙி - அ. அரசிளங் குமரரும்.....மருங்கில்

(இ - ள்.) அரசகுமாரரும் அவருடைய உரிமைச்சுற்றமும் பரதகுமாரரும் அவருடைய பல்வேறுவகைப்பட்ட ஆயமகளிரும் ஆடன்மகளிரும் பாடன்மகளி ரும் தொகுதிகொண்ட இடங்கடோறும்,

வணிகருமரர்க்கு உரிமையென்றதனை அவர் புனலாடல் மரபன்மையின். பரிசனமகளிரும் சிலதியர்மும்தலாயினோருமென்பார் பல்வேறுயமென்றார். ஆடு களம் - அரங்கு; பாடுகளம் - கண்டம்; இவை அடை. தோடு - தொகுதி; இதழையுடைய பொழிலிடத்தனவுமாம்.

கநிஅ - சுஉ. சூழ்தர லெழினியும்.....தோன்றி

(இ - ள்.) சூழ்தருதலையுடைய எழினியும் மூற்கூறிய தொகுதியும் வேறு வேறுகோலமும் வேறுவேறு கம்பலையும் விண்ணிலேசென்றுபொரும் பெரிய புகழையுடைய இக்கரிகால்வளவன் புதுப்புனல்விழவுகொண்டாடும் தலைநாட் போலே இவ்விழவினிறுதிக்கட் புனலாடிடங்களும் வீறுபெறத்தோன்றுநிற்க வென்க.

தோடு கம்பலையும், எழினி கோலமும்தோன்றவென எதிர்நிரனிறை; எழி னிக்கோலம் - உருக்கள். தோன்றி, தோன்றவெனத்திரிக்க.

கசுஙு - நி. கடற்கரை.....ஒலிப்ப

(இ - ள்.) அலையேயன்றிக் கடலினது கரையைக் குத்தியிடிக்கும் காவேரிப் புகார்முகமெங்கும் வறிதிடமின்றுகச் சேரநெருங்கியி நால்வகைவருணத்தி லுள்ளாருடைய அடக்கப்படாத கம்பலையெல்லாங்கூடி ஓரோசையாய் நின்றொ லிப்பவென்க.

கசுசு - எஅ. கடற்புலவு.....மாதவி தானென்.

(இ - ள்.) அங்ஙனந்தோன்ற ஒலியாநிற்ப, கடலினது புலால் நாற்றத்தைக் கெடுத்த மடலவிழும் பூவையுடைய கைதையாற் சிறையாகச்சூழப்பட்ட நடுவணளவாகிய புன்னீழலில் அழுக்கற்ற மணல்பரந்தநிலத்தே சித்திரத்திரையை வீழ்த்து மேற்கட்டுங்கட்டியிடப்பட்ட வெண்கால் அமளிமிசையே, வருந்தி நின்ற வயந்தமாலைகையதாகிய நல்லயாழை வாங்கிப் பெரிய மலர்போலும் நெடுங்கண்ணையுடைய மாதவி கோவலன்றன்னெடும் சேரவிருந்தாளென்க.

வெண்கால் - மருப்புக்கால். திருந்துகோனல்யாழ் - இன்பத்தைவிளைத்தற்குக் காரணமாகிய கோலையுடைய யாழ்; எனவே, மேல் துன்பத்தை விளைவிக்குமென்பது கருத்து. செவ்வனம்வாங்கியென்னூர், பின்னர் ஊடலோடு வாங்குதலின்.

வெள்ளிமால்வரைச்சேடிக்கண் விருந்தாட்டயரும் விஞ்சைவீரன் இடனுங்காண்கும்; அமைதியுங்காண்குதும்; ஆடலுங்காண்குதும்; வணங்குதும் யாமெனக்காட்டிப் பின்னர்ப் புகார்மருங்கெய்திக் காட்டிக் காண்போன், காணுய்; மாதவி இவளெனவுரைத்து மகிழ்வெய்திய அவ்விஞ்சையனன்றியும் அந்தரத்துள்ளோர் வந்துகாண்குறுஉம் விழவும் ஆடலும் கோலமும் அணியும் கடைக்கொள இருந்தோனுவப்ப ஆட்டி ஊட்டிச் செறீஇ அணிந்து செறித்து உடீஇத் தோளுக்கணிந்து அமைவுறவணிந்து கரப்பவணிந்து ஆரமோடணிந்து சிறுபுற மறைத்து அழகுறவணிந்து மாண்புறவணிந்து அளித்து இருந்தோள் உவவுவற்தென வேண்டினளாகிப் புலம்பக் காட்டக் கடிய அணிந்து ஏற ஏறிச் செல்வனங்கழிந்து நடுவட்போகி மருங்குசென்றெய்திப் பொருந்தி வாங்கிக் கோவலன்றன்னெடும் மாதவி வெண்காலமளிமிசை இருந்தனளென விணைமுடிக்க.

இது, நிலைமண்டிலவாசிரியப்பா.

வேலை மடற்றுழை யுட்பொதிந்த வெண்டோட்டு
மாலைத் துயின்ற மணிவண்டு—காலைக்
களிநறவந் * தாதூதத் தோன்றிற்றே காமர்
தெளிநிற வெங்கதிரோன் றேர்.

சூ.—கடலாடுகாதை முற்றிற்று.

(பி - ம்.) * 'தாதுதிர்ப்பத்'

ஏழாவது

கானல்வரி.

கட்டுரை.

க. சித்திரப் * படத்துட் புக்குச் செழுங் † கோட்டின் மலர்புனைந்து
[1] மைத்தடங்கண் மணமகளிர் கோலம்போல் வனப்பெய்திப்
பத்தருங் கோடு மாணியு நரம்புமென்
றித்திறத்துக் குற்றநீங்கிய யாழ்கையிற் றெழுது வாங்கிப்
பண்ணல் பரிவட்டணை யாராய்த றைவரல்

க. சித்திரப்படம் - உறை. கோடு - யாழ்க்கோடு.

மணமகளிர் - கலியாணமகளிர்.

முன்பிற்காதையில் [2] "யாழ் செவ்வனம் வாங்கி" என்று வைத்து இக் காதையிலும் 'யாழ்கையிற்றெழுதுவாங்கி' என்றது கதைத்தொடர்பு அறிவித் தற்கும், யாழின் அலங்காரம் கூறுதற்குமென்க.

குற்றமாவன :—ஆதவவாதவயசாயையென்பன; என்னை? சிந்தாமணியி லும், [3] "நோய் நான்கு நீங்கி" என்றார்.

இசையெழுவும் எண்வகையாவன:—பண்ணல்முதலாயின ; அவற்றுள்,—

பண்ணலாவது :—"வலக்கைப் பெருவிரல் குரல்கொளச் சிறுவிரல், விலக் கின் றிளிவழி கேட்டும்..., இணைவழி யாராய்ந் திணைகொள முடிப்பது, விளைப் பரு மரபிற் பண்ணலாகும் ", "பரிவட் டணையி னிலக்கணந் தானே, மூவகை நடையின் முடிவிற் றுகி,வலக்கை யிருவிரல் வனப்புறத் தழீஇ, யிடக்கை விரலி னியைவ தாகத், தொடையொடு தோன்றியுந் தோன்று தாகியு, நடையொடு தோன்று நயத்த தாகும்.", "ஆராய்த லென்ப தமைவரக் கிளப்பிற், குரன்முத லாக விணைவழி கேட்டு, மிணையி லாவழிப் பயனெடு கேட்டுந், தாமு மூழை யுந் தம்மிற் கேட்டுந், குரலும் விளியுந் தம்மிற் கேட்டுந், தத்தமும் விளரியுந் தன்னறக் கேட்டும், விளரி கைக்கிளை விதியுளிக் கேட்டுந், தளரா தாகிய தன் மைத் தாகும்.", "றைவர லென்பது சாற்றுங் காலை, மையறு சிறப்பின் மன

---

[1] "மணங்கமழ் மாதரை மண்ணி யன்ன" (பொருந. கசூ.)

[2] இ-கடு. 'பாடற்றெழில்களாவன:—யாழின்கண் வார்தல்முதலிய வெட்டும் பண் ணல்முதலிய எட்டும்' (குறள். திளை - பரிமேல்); 'கலைத்தொழில்களாவன:—பண்ணல் ..... குறும்போக்கென்ற எட்டும்' (சீவக. கூடுஎ - ந.)

[3] சிலப்பதிகாரம், க: களஉ. [4] சீவகசிந்தாமணி, எஉ0.

(பி - ம்.) * 'படாம்' † 'கோட்டுமலர்' ‡ 'இத்திறத்தகுற்றம்'

கண்ணிய செலவு விளையாட்டுக் கையூழ்
நண்ணிய குறும்போக் கென்று நாட்டிய
வெண்வகையா லிசையெழீஇப்
பண்வகையாற் பரிவுதீர்ந்து
[1] மரகதமணித் * தாள்செறிந்த மணிக்காந்தண் மெல்விரல்கள்
பயிர்வண்டின் கிளைபோலப் பன்னரம்பின் † மிசைப்படர
[2] வார்தல் வடித்த லுந்த லுறழ்தல்
சீருட னுருட்ட றெருட்ட லள்ள

மகிழ்வெய்தித், தொடையொடு பட்டும் படாஅ தாகியு, நடையொடு தோன்றி யாப்புநடை யின்றி, யோவாச் செய்தியின் வட்டணை யொழுகிச், சீரேற் றியன்று மியலா தாகியும், சீர வாகு நிறைய தென்ப.", "செலவெனப் படுவதன் செய்கை தானே, பாலை பண்ணே திறமே கூடமென, நால்வகை யிடத்து நயத்த தாகி, யியக்கமு நடையு மெய்திய வகைத்தாய்ப், பதினே ராடலும் பாணியு மியல்பும், விதிநான்கு தொடர்ந்து விளங்கிச்செல் வதுவே.", "விளையாட் டென்பது விரிக்குங் காலைக், கிளவிய வகையி னெழுவகை யெழாலு, மளவிய தகைய தாகு மென்ப.", "கையு ழென்பது கருதுங் காலை, யெவ்விடத் தானு மின்பமுஞ் சுவையுஞ், செவ்விதிற் றோன்றிச் சிலைத்துவர லின்றி, நடைநிலை திரியாது நண்ணித் தோன்றி, நாற்பத் தொன்பது வனப்பும் வண்ணமும், பாற்படத் தோன்றும் பருதித் தாகும்.", "துள்ளற் கண்ணுங் குடக்குத் துள்ளுந், தள்ளா தாகிய வுடனிலைப் புணர்ச்சி, கொள்வன வெல்லாங் குயப்போக் காகும்." இவை யெல்லாம் ஈண்டு விரித்துரைப்பிற் பெருகும்.

பண்வகையாற் பரிவுதீர்ந்து - பண்கூற்றிற் குற்றந்தீர்ந்து.

மரகதமணி.....போல - மரகதமணிமோதிரங்கள் - செறிந்த விரல்கள் பாடுகின்ற வண்டின்கிளைகளை யொப்ப.

வார்தல் வடித்தல்.....செவியினுணர்த்து:—வார்தலென்றது - சுட்டு விரற்செய்தொழில்; வடித்தலென்றது - சுட்டுவிரலும் பெருவிரலுங்கூட்டி நரம்பை அகமும் புறமும் ஆராய்தல்; உந்தலென்றது - நரம்புகளை உந்தி வலிவிற்பட்டதும் மெலிவிற்பட்டதும் நிரல்பட்டதும் நிரலிழிபட்டதுமென் றறிதல்; உறழ்தலென்றது - ஒன்றிடையிட்டும் இரண்டிடையிட்டும் ஆராய் தல்; உருட்டலென்றது - இடக்கைச்சுட்டுவிரல் தானேயுருட்டலும் வலக் கைச் சுட்டுவிரல் தானேயுருட்டலும் சுட்டொடு பெருவிரற்கூட்டியுருட்டலும் இருபெருவிரலும் இயைத்துடனுருட்டலுமெனவரும்; "தெருட்ட லென்றது செப்புங் காலை, யுருட்டி வருவ தொன்றே மற்ற, வொன்றன் பாட்டு'மடை யொன்ற நோக்கின், வல்லோ ராய்ந்த நூலே யாயினும், வல்லோர் பயிற்றுங்

---

[1] "மரகதத் தாள்செறி காந்தண் மெல்விரல் கரப்பவணிந்து" (சிலப். சு: கூ-அ.)

[2] "வாரியும் வீடித்து முந்தியு முறழ்த்தும்" (பொருந. உசு.)

(பி - ம்.) * 'தாள்செறித்த' † 'மிசைப்படாதது வார்தல்'

லேருடைப் பட்டடையென விசையோர் வகுத்த
வெட்டு வகையி னிசைக்கர ணத்துப்
* பட்டவகைதன் செவியினேர்த்
தேவலன் † பின் பாணியாதெனக்
கோவலன் கையாழ் நீட்ட வவனுங்
காவிரியை நோக்கினவுங் கடற்கானல் வரிப்பாணியு
மாதவிதன் மனமகிழ வாசித்த றெடங்குமன்.

வே று.

உ. [1]திங்கண்மாலைவெண்குடையான்சென்னிசெங்கோலதுவோச்சிக்
கங்கை தன்னைப் புணர்ந்தாலும் புலவாய் வாழி காவேரி

கட்டுரை யாயினும், பாட்டொழிந் தலகினி லொழிந்த செய்கையும், வேட்டது கொண்டு விதியுறநாடி" எனவரும்.....இவை இசைத்தமிழ்ப் **பதினோபடலத்** துட் காணவோத்துட்காண்க.

கோவலன்கை யாழ்நீட்ட: யாழைத்திருத்தித் தான் முற்படவாசியாதே அவன் தலைமைதோன்ற கொடுத்தாள்.

ஏவலன் பின்பாணியாதெனவென்றது-இப்பொழுது இதனைவாசியென்று விதிக்கின்றேனல்லேன்; வாசிக்குந்தாளமியாதென்று யான்அறியலுறுகின்றே னென்பாள்போலக் கொடுத்தாளென்க; ஏவலன், தன்மையொருமை.

பட்டவகை தன் செவியினேர்த்து நீட்டவென்க.

இனி வரிப்பாடலாவது:—பண்ணும் திறமும் செயலும் பாணியும் ஒரு நெறியன்றி மயங்கச் சொல்லப்பட்ட எட்டனியல்பும் ஆறனியல்பும்பெற்றுத் தன் முதலும் இறுதியும்கெட்டு இயல்பும் முடமுமாகமுடிந்து கருதப்பட்ட சந்தியும் சார்த்தும், பெற்றமும் பெறுதும்வரும். அதுதான், தெய்வஞ்சுட்டியும் மக்களைப்பழிச்சியும்வரும்.

அவற்றுள், தெய்வஞ்சுட்டிய வரிப்பாட்டுவருமாறு:— "அழலணங்கு தாமரை யருளாழி யுடையகோனடிக்கீழ்ச்சேர்ந்து, நிழலணங்கு முருகுயிர்த்து நிரந்தலர்ந்து தோடேந்தி நிழற்றும் போலும், நிழலணங்கு முருகுயிர்த்து நிரந் தலர்ந்து தோடேந்தி நிழற்றுமாயிற், றெழலணங்கு மன்புடையார் சூழொளி யும் வீழ்கரியுஞ் சொல்லா வன்றே." இது கூடைச்செய்யுள்; "கூடை யென் பது கூறுங் காலை, நான்கடி யாகி யிடையடி மடக்கி, நான்கடி யஃகி நடத்தற்கு முரித்தே.", "வார மென்பது வகுக்குங் காலை, நடையினு மொலியினு மெழுத்தினு நோக்கித், தொடையமைந் தொழுகுந் தொன்மைத் தென்ப." இவை அடிவரையிட்டன.

இனி மக்களைச்சுட்டிய வரிப்பாட்டு வருமாறு:—"திங்கண் மாலை..... காவேரி" என்பதுபோல வருவது.

---

[1] "திங்கள்... ...காவேரி" என்பது, நடைமிகுத் தேத்திய குடைநிழன்மரபிற்கும் செங்கோலிற்கும் மேற்கோள்; தொல். புறத்திணை. சூ. நகூ - நி.

(பி - ம்.) * 'பட்டவகை செவியோர்த்து' † 'பின்பணியாதெனக்'

கங்கை தன்னைப் புணர்ந்தாலும் புலவா தொழிதல் கயற்கண்ணுய்
மங்கை மாதர் பெருங்கற்பென் றறிந்தேன் வாழி காவேரி. (க)

கூ. மன்னு மாலை வெண்குடையான் வளையாச் செங்கோ லதுவோச்
கன்னி தன்னைப் புணர்ந்தாலும் புலவாய் வாழி காவேரி [இக்
கன்னி தன்னைப் புணர்ந்தாலும் புலவாதொழிதல் கயற்கண்ணுய்
[1] மன்னு மாதர் பெருங்கற்பென் றறிந்தேன் வாழி காவேரி.(உ)

சு. [2] உழவ ரோதை மதகோதை யுடைநீ ரோதை [3]தண்பதங்கொள்
விழவ ரோதை சிறந்தார்ப்ப நடந்தாய் வாழி காவேரி
விழவ ரோதை சிறந்தார்ப்ப நடந்த வெல்லாம் வாய்காவா
மழவ ரோதை வளவன்றன் வளனே வாழி காவேரி. (ரு)

வேறு.

ரு. [4] கரியமலர்நெடுங்கட்காரிகைமுன்கடற்றெய்வங்காட்டிக்காட்டி
யரியசூள்பொய்த்தாரறனிலென்றேதையபம்யர்ங்*கறிகோமைய

உ. கயலாகியகண்ணையுடையாய்; புலவாதொழிந்தது மாதர் பெருங் கற்பு; அதனை நானறிந்தேன்.

கூ. கன்னி - குமரி

சு. தண்பதங்கொள் விழவர் - புதுப்புனலாடுவார். வாய்காவாமழவர் - [ஏறி ஆங்குத் தானென்று] நாயகனை நெருங்கும் வீரர்.

இவை மூன்றும் ஆற்றுவரி. வண்ணம், ஒழுகுவண்ணம்.

இனி வரியாவது:—மூகமுடைவரி, முகமில்வரி, படைப்புவரியென மூன்று வகைப்படும். வரிப்பாட்டுக்கு முகமாக நிற்றலின், முகமெனப்படும்; என்னை? "நிலமுத லாகிய வுலகியல் வரிக்கு, முகமாய் நிற்றலின் முகமெனப் படுமே" என்றாராகலின். அம்முகமுடைவரி மூன்றடிமுதலாக ஏழடியீறாக வரும்; "ஈந்து நெடிலுஞ் சேரினும் வரையார்." முகமில்வரியாவது - முகமொழிந்து ஏனையுறுப்புக்களான் வருவது. படைப்புவரியாவது - எல்லாவுறுப்பும் ஒன்றினும் பலவானும் வெள்ளையானும் ஆசிரியமானும் கொச்சகம்பெற்றும் பெறுதம் வேறுவேறாகி.....வருவது.

இவற்றுள்; "திங்கண்மாலை" முதலாயினமூன்றும் முகமுடைவரி. இவை கண்டனகூறிற்றாக யாழினிட்டபாட்டு. [ரென்க.

ரு. பொய்த்தாரென்றது, முன்னிலைப் படர்க்கை; காட்டிப்பொய்த்தா

---

[1] 'மன்' மிகுதிப்பொருளில் வந்ததற்கு இவ்வடி மேற்கோள்; நன். சூ. சங்கமயிலை; இ - வி. சூ. உசுஈ. (சூ. உ)

[2] இது, குறின்மெல்விசை யேற்றிசை வண்ணத்திற்கு மேற்கோள்; யா-வி. ஒழிபு.

[3] "தண்டதங்கொள்ளுந் தீலைநாள்" செய்.. கூ: கசுo.

[4] இ - ள: "கரியமலர்.....புகாரேயெம்மூர்"—இதுமுதலிய மூன்றும் புகாரிற் றெய்வியெனக் கூறியவாறு காண்க; (தொல். புறத்திணை. சூ. கூஉ-த); "கரியமலர்..... காரிகைமுன்...' எனச்செய்யுட்கட் பலதொகையும் வீராய்வந்து ஒருசொன்னடைய வாய்த் தம்மை முடிபீடனவற்றேறி முடிந்தன." (தொல். எச்ச. சூ. உசு - ந.)

(பி - ம்.) * 'அறிகோமைய'

விரிகதிர்வெண்மதியுமீன்கணமுமாமென்றேவிளங்கும்வெள்ளைப்
புரிவளையுமுத்துங்கண் * டாம்பல்பொதியவிழ்க்கும்புகாரேயெம்மூர்.

சு. காதல ராகிக் கழிக்கானற் கையுறைகொண் டெம்பின் வந்தா
ரேதிலர் தாமாகி யாமிரப்ப நிற்பதையாங் † கறிகோமைய
மாதரார் கண்ணு மதிநிழனீ ரிணைகொண்டு மலர்ந்த நீலப்
போது ‡ மறியாது வண்டே ளாடும் புகாரே யெம்மூர். (உ)

எ. [1]மோதிமுதுதிரையான்மொத்துண்டுபோந்தசைந்தமுரல்வாய்ச்சங்க
மாதர் வரிமணன்மேல் வண்ட லுழுதழிப்ப மாழ்கியைய
கோதைபரிந்தசையமெல்விரலாற்கொண்டோச்சுங்குவளைமாலைப்
போது § சிறங்கணிப்பப்போவார்கண்போகாப்புகாரேயெம்மூர்.

சு. எம்பின்வந்தார் ஏதிலர் தாமாகியென முன்னிலையைப் படர்க்கை வாய்ப்பாட்டாற் கூறினர்.

எ. பரிந்து - அறுத்து. அசையக் கொண்டோச்சுமென்க. குவளைமாலைப் போது சிதறினவை சிறங்கணித்துப் பார்த்தாற்போலக் கிடக்க அவ்வூரிலுள் ளார்கண்கள் கண்ணெண்ணு ஐயுற்றுப் போகாத புகாரென்க. அன்றிக் கடைக் கணிக்கவென்றது - குவளையானது மாலைக்காலம்பகையாதலால் அஞ்சிப் பார்க்கப் போவார்கண் போகாது இங்குவாழ்வாரைச் சிறங்கணித்த கண்ணென்று தம் பேதைமையாற் பார்த்து நிற்றலான் நாங்களும் பேதையமென்றுமாம்.

இவைமூன்றும் தோழி தலைமகன் முன்னின்று வரைவுகடாயவை ; கையுறைமறையெனினுமமையும்.

இவை கார்த்துவரி:—"பாட்டுடைத் தலைவன் பதியொடும் பேரொடுஞ், சார்த்திப் பாடிற் சார்த்தெனப் படுமே" இங்குப்பாட்டுடைத் தலைவன் - சோழன். அஃதான் முகச்சார்த்து முரிச்சார்த்து கொச்சகச்சார்த்தென மூவகைப்படும். அவற்றுள், முகச்சார்த்து:—மூன்றடி முதல் ஆறடியீறாக வரும்; இடை நான் கடியானும் ஐந்தடியானும்வரும். முரிச்சார்த்தாவது :—"முரிந்தவற....., குற்றெழுத்தியலாற் குறுகிய நடையாற், பெற்ற வடித்தொகை மூன்று மிரண் டிங், குற்ற மில்லெனக் கூறினர் புலவர்." கொச்சகச்சார்த்து :—கொச்சகம் போன்றுமூடியும்.

இவற்றுள், இவை மூன்றும் முகச்சார்த்து.

---

[1] இச்செய்யுளின்பின், "கரியமலர் நெடுங்கண் ', "காதலராகி" என்பவை சில பிரதிகளில் முறையே காணப்படுகின்றன.

(பி - மீ.) * 'ஆம்பன்மலரும் புகாரே' † 'அறிகோவைய' ‡ 'அறியாமல் வண்டு' § 'புறங்கணிப்ப'

வேறு.

அ. [1]துறைமேய்வலம்புரி தோய்ந்து மணலுழுத தோற்ற மாய்வான்
பொறைமலிபூம்புனனீப்*பூவுதிர்ந்துதுண்டர்துபோர்க்குங்கான
†னிறைமதி வாண்முகத்து நேர்கயற்கண் செய்த
வுறைமலியுய்யாநோயூர்சுணங்குமென்மூலையேதீர்க்கும்போலும்

கூ. [2]கிணங்கொள்‡புலாலுணங்கனின்றுபுள்ளோப்புத §றலைக்கீடாகக்
கணங்கொள்வண்டார்த்துலாங்[3]கன்னிநறுஞாழல் ‖கையிலேந்தி
மணங்கமழ் பூங்கானன் மன்னிமற் றுண்டோ
ரணங்குறையு மென்ப தறியே னறிவேனை லடையேன்மன்னே

கo. [4] வலைவாழ்நர் சேரி வலையுணங்கு முன்றின் மலர்கை யேந்தி
விலைமீனுணங்கற்பொருட்டாகவேண்டிருவங்கொண்டுவேறூர்
கொலைவே னெடுங்கட் கொடுங்கூற்றம் வாழ்வ
தலைநீர்த்தண் கான லறியே னறிவேனை லடையேன் மன்னே.

அ. மணலிலேதோய்ந்து. உறைமலி - மலியுறையால்; உறை உய்யாநோய் - மருந்தாற்போக்கமுடியாதநோய். போலும், ஒப்பில் போலி.

இது, குறியிடத்துச்சென்ற பாங்கன் தலைமகளது காதன்மிகுதி குறிப்பினறிந்து கூறியது.

இது முகமில்வரி.

கூ. தலைக்கீடு - ஒருவியாசம். இது கழற்றெதிர்மறை.

கo. இதுவுமது.

இவை கானல்வரி.

---

[1] இச்செய்யுள், தலைவியின்கண்ணுண்டாகிய நோய்க்குக் கண்ணேமருந்தாம் (திருச்சிற். ஈஅக) என்பதற்கும், தலைவனே வியந்துரைத்தபாங்கன் மீன்னர்ச் சித்தித்தற்கும் (இறை. சூ. ஈ-உரை), பாங்கன் தலைவியை வியந்தற்கும் (நாற்கவி. களவு. சூ. உக உரை; இ - வி. சூ. இoஇ-உரை) மேற்கோளாக வந்துள்ளது; தக்கயாகப்பரணி, கடைதிறப்பில், உள-ஆம் தாழிசையுரையிலும் மேற்கோளாகக் காட்டப்பெற்றுள்ளது.

[2] இச்செய்யுள், இயலிடங்கூறலென்னுந் துறைக்கும் (இறை. சூ. ஈ - உரை), இடையடி குறைந்து வந்ததற்கும் (தொல். செய். சூ. கஇசு - பேர்), சுற்றயலடி குறைந்து வந்ததற்கும் (ஈ ஊ ஊ கஇஇ - ந) மேற்கோள்;

[3] 'கன்னிதாழுஞாழல்': தொல். இளவி. சூ. உ - சே. ந. மேற்.

[4] "பல்லுயிர் பருகும்.....உன்டென" (சிலப். இ: உகஈ - உஈ) என்பதும், "கன்னி நீர் ஞாழல் கமழ்பூங் கானல் யான்கண்ட, பொன்னங் கொடியை யீன்றோரில்லை போலுமால், மன்னன் காக்கு மண்மேற் கூற்றம் வரவஞ்சி, யின்ன தொன்று படைத்தி தாயி னெவன்செய்கோ" என்னும் பழம்பாட்டும் இச்செய்யுளுடன் ஒப்புநோக்கற் பாலன.

(பி - ம்.) * 'பூவுதிர்துண்' † 'நிறைமதிவாண்முகத்துநீள் கயற்கண்' ‡ 'பபி புலாலுணங்கிப்புள்' 'புலாவுணங்கு முன்றினின்று' § 'தலைக்கீடாக்கணங்கொள்' ‖ 'கையிலுன்றி'

வேறு.

கக. கயலெழுதி வில்லெழுதிக் காரெழுதிக் காமன்
செயலெழுதித் தீர்ந்தமுகந் திங்களோ காணீர்
திங்களோ காணீர் திமில்வாழ்நர் சீறூர்க்கே
யங்கணேர் வானத் தரவஞ்சி வாழ்வதுவே. (க)

கஉ. எறிவளைக * ளார்ப்ப விருமருங்கு மோடுங்
கறைகெழுவேற் கண்ணே கடுங்கூற்றங் காணீர்
கடுங்கூற்றங் காணீர் கடல்வாழ்நர் † சீறூர்க்கே
மடங்கெழுமென் சாயன் மகளா யதுவே. (உ)

கஙு. புலவுமீன் வெள்ளுணங்கற் புள்ளோப்பிக் கண்டார்க்
‡ கலவநோய் செய்யு மணங்கிதுவோ காணீ
ரணங்கிதுவோ காணீ ரடும்பமர்த்தண் கானற்
பிணங்குநே ரைம்பாலோர் பெண்கொண் டதுவே. (ங)

வேறு.

கச. பொழிறரு நறுமலரே புதுமணம் விரிமணலே
பழுதறு திருமொழியே பணையிள வனமுலையே
முழுமதி புரைமுகமே மூரிபுரு வில்லிணையே
§ யெழுதரு மின்னிடையே யெனையிடர் **செய்தவையே. (க)

கடு. திரைவிரி தருதுறையே திருமணல் †† விரியிடமே
விரைவிரி நறுமலரே மிடைதரு பொழிலிடமே

கக. காமன்செயலெழுதி - பிறரைவருத்தும் தொழிலெழுதி. தீர்ந்தமுகம்- பணிக்குறையற்றுக் கைவிட்டமுகம். ஓ, வியப்பு. காணீர் - பாரீர்.

கஉ. எறிவளை - அறுக்கும்வளை; அன்றிக் கரையிலே திரையெறிகிறவளை யுமாம்; வளைகள்முழங்க, இவையிற்றைப்பார்த்து ஓடும் கண்ணையுடையாள். வேற்கண் - வேற்கண்ணையுடையாள்; ஆகுபெயர். அன்றியும்,.....“நீள்கட லிடை யலவன்வழி யுழவா” என வளையாபதியினுங்கூறினர்.

கஙு. அலவ - அலந்தலைப்பட. பிணங்குமைம்பால் - செறிந்தமயிர். பெண் - பெண்வடிவு.

இவைமூன்றும் தமியளாக இடத்தெதிர்ப்பட்ட தலைவியைநோக்கித் தலை மகன் கூறியவை.

இவை நிலைவரி; “முகமு முரியுந் தன்னெடு முடியு, நிலையை யுடையது நிலையெனப் படுமே.”

(பி - ம்.) *. ‘ஆர்ப்பவெம்மருங்குமோடும்’ †. ‘சீறூர் மடங்கெழு’ ‡. ‘அலவ னெய்’, ‘அலவநோய்’. §. ‘எழுதரிய மின்னிடை’ **. ‘செய்த்லிவையே’ ††. ‘விரி விடமே விரைவிரி தருமலரே’

* மருவிரி புரிகுழலே மதிபுரை திருமுகமே
யிருகய லிணைவிழியே யெனையிடர் † செய்தவையே. (உ)

ககூ. வளைவளர் தருதுறையே மணம்விரி தருபொழிலே
தளையவிழ் நறுமலரே தனியவ டிரியிடமே
முளைவள ரிளநகையே முழுமதி புரைமுகமே
‡ யிளையவ ரிணைமுலையே யெனையிடர் செய்தவையே. (ரு)

வேறு.

கஎ. [1] கடல்புக் குயிர்கொன்று வாழ்வர்நின் னோய
ருடல்புக் குயிர்கொன்று வாழ்வைமன் னீயு
மிடல்புக் கடங்காத வெம்முலையோ பார
§ மிடர்புக் கிடுகு மிடையிழவல் கண்டாய். (க)

கஅ. கொடுங்கண் வலையா || லுயிர்கொல்வா னுந்தை
நெடுங்கண் வலையா ** லுயிர்கொல்வை மன்னீயும்
வடங்கொண் முலையான் †† மழைமின் னுப் போல
‡‡ தடங்கி யுகுமென் னுசுப்பிழவல் கண்டாய். (உ)

ககூ. [2] ஓடுந் திதில்கொண் §§ டுயிர்கொல்வர் நின்னோயர்
கோடும் புருவத் ||| துயிர்கொல்வை மன்னீயும்

கச - சூ. ஏகாரம், எண்ணேகாரம்.

இவைமூன்றும் தலைமகன் பாங்கன்கேட்ப உற்றதுரைத்தவை.

இவைழிவரி; "எடுத்த வியலு மிசையுந் தம்மின், முரித்துப் பாடுதன் முரியெனப் படுமே."

கஎ. மிடல்புக்கு - வலியிலே புக்குநின்று. இடர்புக்கு - இடரிலேகிடந்து; இடையிழவல் - இடையிழவாதேகோள்; என்றது நின்தமரும் நீயுஞ்செய்கிற கொடுமையாலே இடை முரியவுங்கூடும்; அதற்கு உட்பகையாய்த் துணைக் காரணமாகிய முலைகளுமுளவாதலால் இடையைப் பரிகரியென்றவாறு; என் வருத்தத்தைத் தீரென்பதாம். இவை மூன்றற்குமொக்கும்.

ககூ. பீடு பிறரெவ்வம்பார்த்தல் - உனக்குப் பெருமையாவது பிறரெவ்வம் பார்த்தல்; 'பாரர்' எனப் பாடமாயின், தான் பெருக்கமுறுமதனாற் பிறரெவ்வ மும்பாராத முலையென்றும்; எவ்வமுமென் னுமும்மை தொக்கது.

---

[1] பொய் பாராட்டற்கு இச்செய்யுள் மேற்கோள்; (தொல். களவு. சூ. கக - நச்.); இச்செய்யுள்முதலிய மூன்றும் சாயல்வரியென்று சில மூலப்பிரதிகளில் மட்டும் எழுதப்பெற்றுள்ளன.

[2] இரந்துபின்னிலை நிற்றற்கு இது மேற்கோள்; நாற்கவி. சூ. கஉஎ - உரை.

(பி - ம்.) * 'மருவிரி தருகுழலே' † 'செய்தவிலையே' ‡ 'இளவளரிளமுலையே யெனையிடர் செய்தலிவையே' § 'இடர்புக்குருமின்னிடையே' || 'உயிர்கொள்வா னுந்தை' ** 'உயிர்கொள்வை நீயும்' †† 'மறைமின்' ‡‡ 'தடங்குமிளமென்னுசுப்பு' §§ 'உயிர் கொள்வர்' ||| 'உயிர்கொள்வை நீயும்'.

பீடும் பிறரெவ்வம் * பாராய் முலைசுமந்து
வாடுஞ் சிறுமென் மருங்கிழவல் கண்டாய். (கூ)

வேறு.

உ(ரு). [1] பவள வுலக்கை கையாற் பற்றித்
தவள முத்தங் குறுவாள் செங்கண்
தவள முத்தங் குறுவாள் செங்கண்
குவளை யல்ல கொடிய கொடிய. (சு)

உக. புன்னை நீழற் புலவுத் திரைவா
யன்ன நடப்ப நடப்பாள் செங்க
ணன்ன நடப்ப நடப்பாள் செங்கண்
கொன்னே வெய்ய கூற்றங் கூற்றம். (ரு)

உஉ. கள்வாய் நீலங் கையி னேந்திப்
புள்வா யுணங்கல் கடிவாள் செங்கண்
புள்வா யுணங்கல் கடிவாள் செங்கண்
வெள்வே லல்ல வெய்ய வெய்ய. (ஙூ)

வேறு.

உரு. சேரன் மடவன்னஞ் சேர னடையொவ்வாய்
சேரன் மடவன்னஞ் சேர னடையொவ்வா

இவைமூன்றும் புனர்ச்சிநீட இடந்தலைப்பாட்டிற் புணர்தலுறுவான் ஆற்றுமைக் கூறியவை.

உ(ரு). குவளையல்ல - நிறம்பற்றிக் குவளையென்னவேண்டா.

உக. அன்ன நடப்ப - அன்னம் இந்நடையைப்பார்த்து நடக்கும்படி; அன்றி, நடைக்கு அஞ்சி ஓடவென்றுமாம். கொன் - மிகுதியும் கூர்மையும். நீழனடப்பாள் கண்கள் மிகவெய்ய; ஆகலாற் கூற்றமென்க.

உஉ. புள்வாயுணங்கல் - உணங்கலிடத்துப்புள்.

இவைமூன்றும் குறியிடத்துக்கண்ட பாங்கன்சொல்லியவை; புனர்ந்து நீங்குவான் விடுத்தலருமையான் ஆற்றுளுய்த் தன்னெஞ்சிற்குச் சொல்லியவையுமாம்.

உரு. விளையாட்டு விருப்பினால் ஓடுவாளைக்கண்டு இன்னடையுடனெனக்கு மென்று சொல்லுவர் புலவராயினும் இவள் விளையாட்டொழிந்து தன்னியல் .....னீயொவ்வாய்; அதனுற் சேராதேகோள்.

இது [2] காமஞ்சாலா இளமையோள்வயின் ஏமஞ்சாலா இடும்பையெய்தியோன் சொல்லியது.

---

[1] இச்செய்யுள்முதலிய மூன்றும் நிலவரியென்றும், தள்ளல்வரியென்றும், தள்ளலோசையென்றும் மூலமட்டும்உள்ள சிலபிரதிகளில் எழுதப்பெற்றுள்ளன.

[2] தொல்காப்பியம், அகத்திணையியல், சூ. (பி - ம்.) * 'பாரமுலை'

* யூர்திரைநீர் வேலி யுழக்கித் திரிவாள்பின்
† சேரன் மடவன்னஞ் சேர னடையொவ்வாய்.

கட்டுரை.

உச. ‡ ஆங்குக், கானல்வரிப் பாடல்கேட்ட மானெடுங்கண் மாதவியு
மன்னுமோர் குறிப்புண்டிவன் றன்னிலை மயங்கிஞனெனக்
§ கலவியான் மகிழ்ந்தாள்போற் புலவியால் யாழ்வாங்கித்
தானுமோர் || குறிப்பினள்போற் கானல்வரிப் பாடற்பாணி
நிலத்தெய்வம் வியப்பெய்த நீணிலத்தோர் மனமகிழக்
கலத்தொடு புணர்ந்தமைந்த ¶கண்டத்தாற் பாடத்தொடங்குமன்

வேறு.

உடு. மருங்கு வண்டு சிறந்தார்ப்ப மணிப்பூ வாடை யதுபோர்த்துக்
கருங்க யற்கண் விழித்தொல்கி நடந்தாய் வாழி காவேரி
கருங்க யற்கண் விழித்தொல்கி நடந்தவெல்லா நின்கணவன்
றிருந்து செங்கோல் வளையாமை யறிந்தேன்வாழி காவேரி. (க)

உசு. பூவர் சோலை ** மயிலாலப் புரிந்து குயில்க ளிசைபாடக்
காமர் மாலை †† யருகசைய நடந்தாய் வாழி காவேரி
காமர் மாலை ‡‡ யருகசைய நடந்த வெல்லா நின்கணவன்
நாம வேலின் றிறங்கண்டே யறிந்தேன் வாழி காவேரி. (உ)

உஎ. வாழி யவன்றன் வளநாடு மகவாய் வளர்க்குந் தாயாகி
யூழி யுய்க்கும் பேருதவி யொழியாய் வாழி காவேரி

கள - உசு. இவையேழும் தீணைநிலவரி.

உச. ஆங்கு - அவ்விடத்து.

கோவலன் வாசித்த உருக்கள் களவில் தலைமகன் கூற்றுதலால் இவன் தன்மேல் அன்பிலனென உட்கொண்டு புலந்து அது தோன்றுமல் மனமகிழ்ந் தாள்போலத் தன்பக்கல் வேறுகுறிப்பிலளாயினும் வேறுகுறிப்புடையாள் போல இவனுக்குத் தோன்றத் தானும் கானல்வரிப்பாணி பாடத்தொடங்கினனென்க. கலம் - யாழ். கண்டம் - மிடறு.

உடு. ஒல்கி - பெண்மையாலேயொதுங்கி. வளையாமையேயெனத் தேற்றேகாரம் வருவிக்க; (உசு - எ) மற்றைய ஏகாரங்களும் இன்னவெனக்கொள்க. அதனை யறிந்தேனென்க.

உசு. வேலின்திறங்கண்டென்றது, பிறரால்வருத்தம் இல்லையென்றவாறு.

உஎ. பகல்வெய்யோனென்றது, சூரியவங்கிசத்தவனுதலால்; நடுவை விரும்புவானென்றுமாம். இவை மூன்றும் ஆற்றுவரி.

(பீ - ம்.) * 'ஊர்திரை நீரோதமுழக்கி' † 'சென்மட' ‡ 'ஆங்குத்தினைநில வரிக்கானல்வரிப்பாணிகேட்டு' § 'கலவியாழின்' || 'குறிப்பினளாய்க்கானல் வரிப்பா டற்பால்' ¶ 'கண்டத்தாள் பாடுமென்' ** 'மயிலாடப்புரிந்து குழல்களிசை பாட' †† 'அருகலைய' ‡‡ 'அருகாட'

யூழி யுய்க்கும் பேருதவி * யொழியா தொழுக லுயிரோம்பு
மாழி யாள்வான் பகல்வெய்யோ னருளே வாழி காவேரி. (ஙூ)

வேறு.

உஅ. தீங்கதிர் வாண்முகத்தாள் செவ்வாய் மணிமுறுவ லொவ்வா வேனும்
வாங்குநீர் முத்தென்று வைகலு மான்மகன் போல் வருதிரைய
வீங்கோதந் தந்து†விளங்கொளியவெண்முத்தம்விரைசூழ்கானற்
பூங்கோதை கொண்டு விலைஞர்போன் மீளும் புகாரே யெம்மூர்.

உக. மறையின் மணந்தாரை வன்பரதர் பாக்கத்து மடவார் செங்கை
யிறைவளைக டேற்றுவதை ‡யேழைய மெங்ஙனம்யாங் கறிகோ
நிறைமதியு மீனு மெனவன்ன நீள்புன்னை யரும்பிப்பூத்த[மைய
பொறைமலிபூங்§கொம்பேறவண்டாம்ப லூதும்புகாரேயெம்மூர்

‘ஙூ. உண்டாரைவென்னமுலூஞெளியாப்பாக்கத்துளுறையொன்றின்றித்
தண்டாநோய் மாதர் தலைத்தருதி||யென்பதியாங் கறிகோமைய
வண்டா திரையழிப்பக் கையான் மணன்முகந்து மதிமேனீண்ட
புண்டோய்வே னீர்மல்க மாதர் கடலூர்க்கும் புகாரே யெம்மூர்.

உஅ. மணிமுறுவல் - நல்லமுறுவல். செவ்வாய்முறுவலொவ்வாவேனும். வாங்கும் - கொள்ளும். மான்மகன்போல் - மயங்கினமகன்போல; காமன் போலென்பாருமுளர். வீங்கோதம் வெண்முத்தத்தைத்தந்து பூங்கோதையைக் கொண்டு; ஓதம், எழுவாய்.

இது கையுறைமறை.

உக. மறையின்மணந்தாரை - அப்படிமணந்த மடவாரை. அன்னம் அரும்பிப்பூத்த புன்னையிலே ஏறியிருக்க நிறைமதியும் மீனுமெனக்கருதி ஆம்பல் மலருமென்க. வண்டு ஊதுமெனவே மலர்தல்பெற்றும். இங்ஙனம்கூறிற்று, மதிகண்டு ஆம்பல் மலருமாதலால்; [1] ‘‘உடைதிரை முத்தஞ் சிந்த வோசனிக் கின்ற வன்னம்.....ஆம்பல்’’ என்றூர் பிறரும்.

மதியும் மீனுமென்று கண்டார்கருதப் புன்னையிலே ‘அன்னமேறிற்றுக வண்டு ஆம்பலூதுமென்க.

ஙூ. உண்டாரை வெல் நரு - உண்டவர்களைக் கடிமைசெய்யு நரு. ஊணெளியா. - உண்டஊணைமறையாத; [இன்றியொளியாத.]

இவையிரண்டும் தோழியிற் கூட்டங்கூடிப் பின்பு வாரா வரைவென்றுற்ற தோழிகூறியவை. இவை மூன்றும் சார்த்துவரி.

---

[1] சீவகசிந்தாமணி, உசுடுஉ.

(பி - ம்.) * ‘ஒழியாதொழிதலுலகோம்பும்’ † ‘விளங்கொளிர்’ ‡ ‘ஏழையரெங்ஙனம் யாங்கறிகோவைய’ § ‘கொம்பேறி’ || ‘என்பதையாங்கறிகோவ்வய’

வேறு.

கூக. [1] புணர்துணையோ டாடும் பொறியலவ னேக்கி
யிணர்ததையும் பூங்கான லென்னையு நோக்கி
யுணர்வொழியப் போன வொலிதிரைநீர்ச் சேர்ப்பன்
* வணர்சுரி யெம்பாலோய் வண்ண முணரேனுல். (க)

கூஉ. [2] தம்முடைய தண்ணளியுந் தாமுந்தம் மான்றேரு
மெம்மை நினையாது † விட்டாரோ விட்டகல்க
வம்மெ னிணர வடும்புகா ளன்னங்கா
ணம்மை மறந்தாரை நாமறக்க மாட்டேமால். (உ)

கூகூ. [3] புன்கண்கூர் மாலைப் புலம்புமென் கண்ணேபோற்
றுன்ப முழுவாய் துயிலப் பெறுதியா
‡ லின்கள்வாய் நெய்தானீ யெய்துங் கனவினுள்
வன்கணர் கானல் வரக்கண் டறிதியோ. (கூ)

கூக. ஆடும் - வீளையாடும். உணர்வொழிய - உணர்வு தன்னைவிட. சேர்ப்பன் வண்ணம்.

இஃது, அறியேனென்று வலிதாகச்சொல்லிக் குறைநயப்பித்தது.

கூஉ. விட்டாரோ: ஓகாரம், ஒழியிசை. தண்ணளியும் தாமும் தேருமெனப் பின்பு சிலசொல்லப்புக்கு அதனைக் காதன்மிகுதியாற் கலங்கி விட்டாரென்றுள். உயர்திணையையும் அஃறிணையையுமெண்ணி உயர்திணையான்முடித்தார் தண்ணளியும் தேரும்விடுக; அவற்றிற்கு என்ன உறவுண்டு. மறக்கமாட்டேமென்றது ஒருசொல்.

கூகூ. துயிலல் - மொட்டித்தல். இன்கள்வாய் நெய்தாலென்றுள், தன்கண் துயிலாதுவருந்த அது கவற்சியின்றித்துயிறலின். கள்ளுண்டுமயங்கினுயாதலாற் கேட்டும் சொல்ல மாட்டாயாயினுய். எய்துங் கனவினுளென்றுள், உறங்குவார்க்குக் கனவுமுண்டென்று.

---

[1] இது, வன்மொழியாற் கூறல்முதலியவற்றிற்கு மேற்கோள். (இறை. சூ. கo. உரை; தொல். களவு. சூ. உங - இளம். ந.) "நீ கண்டனையெனின்" (திருச்சிற். அச) என்பதும், "பாடுஞ்சிறை வண்டு" (இறை. சூ. கo - உரை. மேற்) என்பதும் இச்செய்யுளுடன் ஒப்புநோக்கற்பாலன.

[2] தன்மைமைப்பொருளையும் தன்மையில்பொருளையுமென்னைத் தன்மைப்பொருள் வினையால் முடித்ததற்கும் (தொல். எளெ. சூ. நிக - சே; பிர. ககூ - உரை; இ - வி. சூ. உகூஅ - உரை), கௌதினவற்றைக் கேட்பனபோலக் கூறியதற்கும் (தொல். செய். சூ. உoo - ந.) இதுமேற்கோள்.

[3] தொல். களவு. சூ. ககூ - நி; இறை. சூ - கo - உரை; நாற்கவி. சூ. ககூச - உரை மேற்கோள்.

(பி - ம்.) * 'வணரொலியைம்பாலாய்' † 'விட்டனரே' ‡ 'இன்கண்வாய்'

கூசு. [1] * புள்ளியன்மான் றேராழி போன வழியெல்லாந்
தெள்ளுநீ ரோதஞ் சிதைத்தாய்மற் றென்செய்கோ
தெள்ளுநீ ரோதஞ் சிதைத்தாய்மற் றெம்மோடுங்
குள்ளாரோ டுள்ளா † யுணராய்மற் றென்செய்கோ. (சு)

கூடு. [2] நேர்ந்தநங் காதலர் ‡ நேமி நெடுந்திண்டே
ரூர்ந்த வழிசிதைய வூர்கின்ற வோதமே
பூந்தண் பொழிலே புணர்ந்தாடு மன்னமே
யீர்ந்தண் டுறையே யிதுதகா தென்னீரே. (டு)

கூசு. [3] நேர்ந்தநங் காதலர் ‡ நேமி நெடுந்திண்டே
ரூர்ந்த வழிசிதைய வூர்ந்தாய்வாழி கடலோத
மூர்ந்த வழிசிதைய வூர்ந்தாய்மற் றெம்மொடு
தீர்ந்தாய்போற் றீர்ந்திலையால் வாழி கடலோதம். (சூ)

வேறு.

கூஎ. [4] நன்னித்திலத்தின் பூணணிந்து § நலஞ்சார்பவளக் கலையுடுத்துச்
செந்நெற்பழனக் கழனிதொறுந் திரையுலாவு கடற்சேர்ப்ப
புன்னைப்பொதும்பர் மகரத்திண் கொடியோனெய்த புதுப்புண்க
ளென்னைக்காணு வகைமறைத்தா ‖ லன்னைக்காணி னென்செய்கோ.

கூசு. புள்ளின் இயல்பையுடைய குதிரை; இது மாவின்கடுமைகூறிற்று; * "புள்ளியற் கலிமா வுடைமை யான" என்றார் பிறரும். ஈங்குள்ளார் - அயலாராகிய அலர்தூற்றுவார்; என்மனம் விட்டுப்போகாத தலைவரென்றுமாம். உள்ளாய் - அவர்கூற்றிலே நிற்கின்றாயாதலால்என்னையறியாய்; என்செய்வே னென்றுள். ஓகாரம், ஈற்றசை.

கூடு. நேர்ந்த - நம்மோடுபொருந்தின. ஓதங்களூராநின்றன.

கூசு. தீர்ந்தாய்போற்றீர்ந்திலை - உறவுபோலிருந்து உறவாயிற்றிலை; காரியத்தால் வேறுபட்டாய்.

இவ்வைந்தும் காமமிக்க கழிபடர்கிளவி.

இவை தோழிநிலைவரி.

கூஎ. புதுப்புணென்றது, தலைவி மேன்மேல் வருந்துகின்றவருத்தத்தை. என்செய்கு - என்செய்வேன்.

---

[1] இது "நேர்ந்தநங்காதலர்" என்னுமுதற்குறிப்பையுடைய இரண்டு செய்யுட்களுக்கும் பின்னர்ச் சிலபிரதிகளில் காணப்படுகின்றது.

[2] தொல்காப்பியம், செய்யுளியல், சூ. உ00 - இளம். ந. மேற்.

[3] இறையனாரகப்பொருள், சூ. எ - உரை, மேற்.

[4] தொல்காப்பியம், கற்பியல், சூ. நிஉ.

(பி - ம்.) * 'புள்ளிமான்றேர்' † 'உணர்ந்தாய்' ‡ 'நேமியொடிந் திண்டேர்' § 'நலஞ்சால்' ‖ 'அன்னைக்காண்கில்'

கூஅ. வாரித்தரள நகைசெய்து வண்செம்பவள வாய்மலர்ந்து
சேரிப்பரதர் வலைமுன்றிற் றிரையுலாவு கடற்சேர்ப்ப
[1] மாரிப்பீரத் தலர்வண்ணை மடவாள்கொள்ளக் கடவுள்வரைந்
*தாரிக்கொடுமை செய்தாரென் றன்னேயறியி னென்செய்கோ.

கூக. புலவுற்றிரங்கி யதுநீங்கப் பொழிற்றண்டலையிற் புகுந்துதிர்ந்த
கலவைச்செம்மன் மணங்கமழத் திரையுலாவு கடற்சேர்ப்ப
பலவுற் †றுருநோய் துணியாத படர்நோய்மடவா ரனியுழப்ப
வலவுற்றிரங்கி யறியாநோ யன்னேயறியி னென்செய்கோ. (கூ)

வேறு.

சஎ. இளையிருள் பரந்ததுவே யெற்செய்வான் மறைந்தனனே
களைவரும் புலம்புநீர் ‡ கண்பொழி யுகுத்தனவே
தளையவிழ் மலர்க்குழலாய் தணந்தார்நாட் டுளதாங்கொல்
வளைநெகிழ வெரிசிந்தி வந்தவிம் மருண்மாலை. (ச)

சஅ. கதிரவன் மறைந்தனனே காரிருள் பரந்ததுவே
யெதிர்மலர் § புரையுண்க ணெவ்வநீ ருகுத்தனவே
புதுமதி புரைமுகத்தாய் ‖ போனார்நாட் டுளதாங்கொன்
மதியுமிழ்ந்து கதிர்விழுங்கி வந்தவிம் மருண்மாலை. (ஞ)

கூஅ. வாரித்தரளம் - கடல்முத்து. கடவுள்வரைந்து - கடவுளரைவழி பட்டு. அறியின் - ஆராய்ந்தறியின்.

கூக. புலவுற்றிரங்கியது - புலாலுற்றமுற்றுவருந்தியது; தினையால் இரங்குதலுமாம். நீங்க - புலாலுற்றநீங்க. கலவை - பலவுங்கலந்தது. செம்மல் - பழம்பூ. பலவுற்று - பலநோயிலே பொருந்தி, பல துன்பங்களுமுறுதலால், ஒருநோயிற்றுணியவொண்ணுத நினைவையுடைய நோயை மடவாள் தானே யறிந்து அனுபவிக்க; படர் - நினைவு. அலவுறுதலும் இரங்கலும் ஒருவரறியப் படாத நோயை. அன்னேயறியாத நோய். நோய் காரணமாக அலவுற்றென்க.

இவைமூன்றும் அலரறிவுறீஇ வரைவுகடாவியவை.

சஎ. இளையிருள் - இளையவிருள்; விகாரம். களைதற்கரிய வருத்தத்தால் வந்தீர்.

சஅ. எதிர்மலர் - செவ்விமலர்; எதிர்த்துப் பிணைத்த மலரென்றுமாம். தோற்றுகின்றமலரென்றுமாம்.

---

[1] "மாரிப் பீரத் தலர்கில கொண்டே" குறுந். கூஅ.

(பி - ம்.) * 'ஆரிக்கொடுநோய்செய்தார்' † 'ஒருநீர்' ‡ 'கண்பொழி' § 'புரையுங்கண்' ‖ 'புனர்ந்தார்நாட்டு'

சஉ. பறவைபாட் டடங்கினவே * பகல்செய்வான் மறைந்தனனே
நிறைநிலா நோய்கூர நெடுங்கணீ ருகுத்தனவே
துறுமல ரவிழ்குழலாய் துறந்தார்நாட் டுளதாங்கொன்
[1] மறவையா யென்னுயிர்மேல் வந்தவிம் மருண்மாலை. (சு)

வேறு.

சஎ. கைதை வேலிக் கழிவாய் வந்தெம்
பொய்த லழித்துப் போனு ரொருவர்
பொய்த லழித்துப் போனு ரவர்நம்
மையன் மனம்விட் டகல்வா ரல்லர். (க)

சஅ. கானல் வேலிக் கழிவாய் வந்து
நீநல் கென்றே நின்று ரொருவர்
நீநல் கென்றே நின்று ரவர்நம்
மானேர் நோக்க மறப்பா ரல்லர். (உ)

சஇ. அன்னந் துணையோ டாடக் கண்டு
† நென்ன லேக்கி நின்று ரொருவர்
† நென்ன லேக்கி நின்று ரவர்நம்
பொன்னேர் சுணங்கிற் போவா ரல்லர். (ங)

வேறு.

சஈ. அடையல் குருகே யடையலெங் கான
லடையல் குருகே யடையலெங் கான
லுடைதிரைநீர்ச் சேர்ப்பற் குறுநோ யுரையா
யடையல் குருகே யடையலெங் கானல். (க)

சஉ. பாட்டடங்கின - ஒலித்தலடங்கின. நிறைநிலா - நிறுத்தனில்லா வாய். நோய்கூர-நோயுண்டாகாகிற்க. மறவை - மறத்தையுடைத்தாய். [தவை.

இவை மூன்றும் பொழுதுகண்டு ஆற்றுளாகிய தலைமகள் தோழிக்குரைத்து இவை ஆறும் மயங்குதிணைநிலைவரி..

சஙு. பொய்தலழித்து - விளையாட்டைமறப்பித்து; [2] நற்றிணைப்பாட்டில் "சேர்ப்பே நீரலை யலவற் பார்க்குஞ், சிறுவிளை யாடலு மழுங்க, நினைக்குறு பெருந்துயர மாகிய நோயே" என்றாற்போல.

சஞ. என்றேநிற்கை - என்றுசொல்லியேநிற்கை. நம்பார்வையென்றுள், வேற்றுமையின்மையால். மானேர்நோக்கம் - மானையொத்தபார்வை.

சடு. பொன்னேர்சுணங்கின் - பொன்தோற்றுகின்ற சுணங்குபோல.

இவைமூன்றும் மெலிதாகச்சொல்லிக் குறைநயப்பித்தல்; ஆற்றுவித்தற் பொருட்டுத் தோழி இயற்பழிக்கத் தலைமகள் இயற்படமொழிந்ததாமாம்.

இவை மூன்றும் சாயல்வரி.

சஈ. நோயுரையாயென்றது, முற்று. ஆதலால், எம்கானலில் வந்தடையாதேகோளென்றுள். இது காமமிக்க கழிபடர்கிளவி.

---

[1] "மறவை" புறநா. சச. [2] நற்றிணை, கூஉங.

(பி - ம்.) * 'பகற்செய்வான்' † 'நின்னேர்நோக்கி நின்றூர்'

வேறு.

சஎ. ஆங்கனம் பாடிய வாயிழை பின்னருங்
காந்தண் மெல்விரற் கைக்கிளை சேர்குரற்
றீந்தொடைச் செவ்வழிப் பாலை யிசைபெழீஇப்
பாங்கினிற் பாடியோர் பண்ணுப் பெயர்த்தாள்.

வேறு.

சஅ. தூளியர் விளரி நொடிதருந் தீம் பாலை
யிளிகிளையிற் கொள்ள விறுத்தாயான் மாலை
யிளிகிளையிற் கொள்ள விறுத்தாய்மன் னீயேற்
கொளவல்லா யென்னுவி கொள்வாழி மாலை. (க)

சஉ. பிரிந்தார் பரிந்துரைத்த பேரருளி னீழ
லிருந்தேங்கி வாழ்வா ருயிர்ப்புறத்தாய் மாலை
யுயிர்ப்புறத்தாய் நீயாகி லுள்ளாற்ற வேந்த
னெயிற்புறத்து வேந்தனே டென்னுதி மாலை. (உ)

சஏ. * பையுணெய் கூரப் பகல்செய்வான் போய்வீழ
வையமோ கண்புதைப்ப வந்தாய் மருண்மாலை
மாலைநீ யாயின் மணந்தா ரவராயின்
† ஞாலமோ நல்கூர்ந் ததுவாழி மாலை. (ங)

சஎ. ஆங்கனம்பாடிய - அவன்பாடினாற்போலப்பாடிய. மெல்விரல் - மெல்விரலாலே. பண்ணு - பண்ணை.

சஅ. விளரியென்றார், விளரி இரங்கினார்பாடும் பண்ணுதலால். இது, [1] "விளரிப்பண் கண்ணினார் பாணர்' என்று வந்ததுபோலும்; நெய்தற்கு இரங்கலும் இரங்கணிமித்தமும் உரிப்பொருள். விளரி நொடிதரும்பாலை - விளரிப்பாலை; நொடிதருதல் - சொல்லுதல். இளி கிளையிற்கோடல்: நின்றநரம்பிற்கு ஆறு நரம்புபகை; அது கூடமென்னுங்குற்றம்; இளிமுதலாகக் கைக்கிளையாருவதாம்; இளிக்குக் கைக்கிளை பகையென்றது. தங்கண்மயக்கத்தாலே பகைநரம்பிலே கைசென்று தடவ. கொளவல்லாய் - கொள்ளுதலை வல்லாய் நீ.

சஉ. ஏங்கி - வருந்தி. உயிர்ப்புறத்தாய் - உயிரைச்சூழ்ந்தாய். உள்ளாற்ற வேந்தன் - நொச்சியான். எயிற்புறத்துவேந்தன் - உழிஞையான். வேந்தனை - வேந்தற்கு.

சஏ. இவ்வையத்துள்ளார் கண்புதைப்ப. நீயென்றதும், அவரென்றதும் கொடுமைகுறித்து. ஞாலம் நல்கூர்ந்ததென்றுள், தன்னெய் எல்லார்க்கும் ஒக்குமாகத் தனக்குத்தோற்றுதலால்; 'தான்சாக உலகு கவிழும்' என்னும் பழமொழிபோல.

இவைமூன்றும் மாலைப்பொழுது கண்டு தலைவி கூறியவை.

---

[1] பு - வெ. தும்பை. கக. (பி - ம்.) * 'பைதீஞெய்' † 'ஞாலமே'

வேறு.

ருக. தீத்துழைஇ வந்தவிச் செல்லன் மருண்மாலை
* தூக்காது துணிந்தவித் துயரெஞ்சு கிளவியாற்
பூக்கமழ் கானலிற் † பொய்ச்சூள் பொறுக்கென்று
மாக்கடற் றெய்வநின் மலரடி வணங்குதும்.

ருஉ. எனக்கேட்டு,

கானல்வரி யான்பாடத் தானென்றின்மேன் மனம்வைத்து
[1] மாயப்பொய் பலகூட்டி மாயத்தாள் பாடினளென
‡ யாழிசைமேல் வைத்துத்த னூழ்வினைவந் துருத்ததாகலி
னுவவுற்ற திங்கண்முகத்தாளைக் கவவுக்கை ஞெகிழ்ந்தனனுய்ப்
பொழுதீங்குக் கழிந்ததாகலி னெழுதுமென் றுடனெழா
தேவலாள ருடன்சூழ்தரக் கோவலன்முன் போனபின்னர்த்
தாதவிழ் மலர்ச்சோலை யோதையாயத் § தொலியவித்துக்
கையற்ற நெஞ்சினளாய் வையத்தி னுள்புக்குக்
காதலனுட னன்றியே ¶ மாதவிதன் மனைபுக்காள்
ஆங்கு,
மாயிரு ஞாலத் தரசு தலைவணக்குஞ்
சூழி யானைச் சுடர்வாட் செம்பியன்
மாலை வெண்குடை கவிப்ப
** வாழி மால்வரை ** யகவையா வெனவே.

ருக. மாலை - மாலையை. தூக்காது - நம்மைவருத்துமென்று கருதாது. துணிந்தவித்துயரெஞ்சுகிளவியால் - துணிதற்குக்காரணமான நல்ல வார்த்தையோடே; ஆவது நின்னிற்பிரியேனென்றல். இது, வரைவுநீட்டித்தவிடத்துத் தலைமகன் சிறைப்புறத்தாளுகக்கூறியது. இது கொச்சகம். முகனிலை மூரிகளாற் பயந்த வேறுபடுபொருண்மையெல்லாம் தன்னகத்தடக்கி ஒருதெறிப்படுத்தலாற் கொச்சகமெனப்படும். அது, வெள்ளையானும், அகவலானுமுடியும். இவை, முதமில்வரி.

ருஉ. என்றிவள் பாடக்கேட்டு[ச் சொல்லுவான்]:—நான் கானல்வரி பாடத்தான் அப்படிப்பாடாதேஎன்னையொழியப்பிறிதொருபொருண்மேல்மனம் வைத்து, மாயஞ்செய்வாளாகலின், இப்படிப் பாடினளென்று.

ஆங்கு, அசை. ஆழிமால்வரை - சக்கரவாளம்; இஃது உள்ளேயகப்படும்படி கவிப்பவென்று புக்காளென்க.

எ.—கானல்வரி முற்றிற்று.

---

[1] "மாயப்பொய்ம்மொழி" அகநா. சு.

(பி - ம்.) * 'தூக்காயது துணிந்த துயரெஞ்சு' † 'பொய்ச்சூளுறுக்கென' ‡ 'யாழ் மேல்வைத்து' § 'ஒலியவித்த' ¶ 'மாதவிதன்மனைபுக்கனள்' 'மாயிரு' ** 'அகவயினுங்கென்'

எட்டாவது.

வேனிற்காதை.



நெடியோன் குன்றமுந் தொடியோள் பௌவமுந்
தமிழ்வரம் பறுத்த தண்புன னன்னாட்டு
மாட மதுரையும் பீடா ருறந்தையுங்
கலிகெழு வஞ்சியு மொலிபுனற் புகாரு
மரைசுவீற் றிருந்த வுரைசால் சிறப்பின்
மன்னன் மாரன் மகிழ்துணை யாகிய
[1] * வின்னிள வேனில் வந்தன னிவணென்
வளங்கெழு பொதியின் மாமுனி பயந்த
விளங்காற் றூத னிசைத்தன னுதலின்
மகர வெல்கொடி மைந்தன் சேணை
புகரு றுகோலங் கொள்ளுமென் பதுபோற்
கொடிமிடை சோலைக் குயிலோ னென்னும்
படையுள் படுவோன் † பணிமொழி கூற
மடலவிழ் கானற் கடல்விளை யாட்டினுட்
கோவல னூடக் கூடா தேகிய
மாமலர் நெடுங்கண் மாதவி விரும்பி
வானுற நிவந்த மேனிலை மருங்கின்
வேனிற் பள்ளி யேறி மாணிழை

க. நெடியோன்குன்றம் - வேங்கடமலை. தொடியோள்பௌவம் - குமரிக் [கடல்.
க - உ. இவை தமிழை எல்லைப்படுத்தினநாடு.
ங - சு. நகரம் நான்கினுமாக வீற்றிருந்த மன்னனுகிய மாரன்.
எ. வேனில் - வேனிலரசன்; அஃதிணை உயர்திணையாகக்கூறிற்று.
ஙு. இளங்காற்றுகியதூதன். குயிலோனுக்கு இசைத்தனன்.
கo. காமன்சேணை - மகளிர்.
கஉ. கொடி - படர்கொடி. குயிலோன், உயர்த்துக்கூறிற்று.
கங. படையுள்படுவோன் - காமன் படைச்சிறப்பிள்ளை; படைக்கிழவன் சிறுக்கன்; காளமுகி. பணிமொழி - மாருததூதன் பணித்தமொழி.

---

[1] இலப்பதிகாரீம். அ: இவ; பிரயோக. சசு - உரை, மேற்.
(பி - ம்.) * 'இன்னிளவேனில் வந்திவணென' 'வந்தனனுக' † 'பண்மொழி'

[1] * தென்கடன் முத்துந் தென்மலைச் சந்துந்
உ0. தன்கட னிறுக்குந் தன்மைய † வாதலிற்
கொங்கை முன்றிற் குங்கும வளாகத்து
மையறு சிறப்பிற் கையுறை யேந்தி
யதிரா மரபின் யாழ்கை வாங்கி
மதுர கீதம் பாடினண் மயங்கி
உரு. யொன்பான் விருத்தியுட் டலைக்கண் விருத்தி
நன்பா லமைந்த விருக்கைய ளாகி

ககூ - உ0. தன்கடனிறுக்குந் தன்மையவாதல் - முத்தும் சந்தும் வேனிற் காலத்துப் பூண்பனவும் பூசுவனவுமாய்ப் பயன்படச்செய்தல்.

உக. முன்பு குங்குமத்தால் அலங்கரிக்கப்பட்ட கொங்கைமுன்றிலாகிய பரப்பு; முலைக்கு முற்றம், மார்பெனினுமொக்கும்.

உக - உ. (எ) வேனிலரசனுக்குக் கையுறையாக வளாகத்தேந்தி; பூண்டும் பூசியும்மென் றபடி; கையுறை - பாகுடம்.

உங. பின்பு அதிராமரபின்யாழ்கை வாங்கினளென்க; அதிர்தல் - துளங்குதல்; அதிராமரபு - கோவைகலங்காத முறைமை.

உச. மதுரகீதம்பாடினள் - மிடற்றுக் கருவியாலே முந்துறப்பாடிப் பின்பு யாழ்க்கருவியோடு பாடத்தொடங்கினளென்க.

மதுரகீதம் பாடினண் மயங்கி: தாரங்குரலான மேற்செம்பாலையென்னும் பண்ணைக் கண்டத்தாற்பாடி மயங்கி அப்பண்ணையே யாழினும்பாடினளென்றவாறு.

இதனாற்போந்த பொருள்:—நிலம் கலம் கண்டமென்னும் நெறி மூன்றினும், "கண்ட மல்லது நிரம்பக் காட்டக், கருவிக் கின்பங் கொடுப்பதுமது..., பொருவரு நிலத்தைப் புணர்ப்ப ததுவே" என்னுஞ் சொல்லதிகாரச்சூத்திரத்தானும் முற்படக் கண்டத்தாலே பாடியெனவும் செம்பாலைப்பண்ணை யாழினும் பாடினளெனவுங்கொள்க.

உரு. ஒன்பான் விருத்தியுட் டலைக்கண் விருத்தியாவது - இருபத்தொரு கோவைமுதலாக நானூற்கோவையீறுகக்கிடந்த கோவைகளுள் ஒன்பான்கோவையில் மேற்செம்பாலை தாரமுதலென்பது, 'தலையின தாரஞ் செய்யுந் தாரம்' என்பதனாற்பெற்றும். ஒன்பான்கோவை: "தொண்டு படு திவவின் முண்டக நல் யாழ்" என ஆசிரியமாலையுள்ளுங் கண்டுகொள்க.

---

[1] தஞ்சைவாணன்கோவை, கூக - உரை, மேற்.
(பி - மீ.) * 'தெண்கடன்' † 'ஆகவின்'

* வலக்கைப் பதாகை கோட்டொடு சேர்த்தி
யிடக்கை நால்விரன் மாடகந் தழீஇச்
செம்பகை யார்ப்பே † கூட மதிர்வே
கூ0. வெம்பகை நீக்கும் விரகுளி யறிந்து
பிழையா மரபி னீரேழ் ‡ கோவையை
யுழைமுதற் கைக்கிளை யிறுவாய் கட்டி
யிணைகிளை பகைநட் பென்றிந் நான்கி
னிசைபுணர் குறிஞ்சி யெய்த நோக்கிக்

உரை - கூ. ஒன்பான்.....விருக்கைய ளாகி: "ஆதிப்பா.....ஒன்பான் விருத்தி." அவற்றுள், தலைக்கண் விருத்தியாவது - "முதற்க ணெதிர்...தோற்றமும்." யாழ்வாசித்தற்குச் சூத்திரம்:—"நல்லிசை மடந்தை.....வினய மாட்டுதல் கடனே" என்பது; வினயம் - தேவபாணி.

உள - அ. வலக்கையைப் பதாகையாகக் கோட்டின்மிசை வைத்து இடக்கை நால்விரலளவால் மாடகத்தைத் தழுவியென்றவாறு.

பதாகையாவது - "பெருவிரல் குஞ்சித் தேனைய நான்கு, நிரலே நிமிர்த்தல் பதாகை யாகும்"

"மாடக மென்பது வகுக்குங் காலைக், கருவிளங் காழ்ப்பிணை நால்விரல் கொண்டு, திருவியல் பாலிகை வடிவாக் கடைந்து, சதுரமூன் முகத் தமையிடற் குரித்தே."

உசு - கூ0. செம்பகை.....அறிந்து: இப்பகைநரம்புகள் படாமல் வாசிக்கு முறைமையையறிந்து. இவற்றுள், செம்பகை - நரம்பிற்கலப்பு; ஆர்ப்பு - நரம்பின் முழக்கம்; கூடம் - பகைநரம்பு; அதிர்வு - கம்பித்தல்.

கூக - உ. பிழையாமரபின்.....கட்டியென்றது - உழைமுதலாகக் கைக்கிளையீறாகப் பண்ணியென்றவாறு. இளி விளரி தாரம் குரல் துத்தம் கைக்கிளை உழையென்று முறையே எழுநரம்பியன்றபின்னர், "கண்ணிய கீழ்மூன் றுரி மேலு, நண்ணல் வேண்டு மீரிரண்டு நரம்பே." "குரலே துத்த மிளியிவை நான்கும், விளரி கைக்கிளை மும்மூன் றுரித், தளராத் தார முழையிவை யீரிரண், டெனவெழு மென்ப வறிந்திசி னோரே."

கூக - ச. இணைகிளை.....நோக்கியென்றது: இணை - இரண்டுநரம்பு; "இணையெனப்.....அளவினவென்ப." கிளை - ஐந்துநரம்பு; "கிளையெனப் படுவ.....ஆகுமென்ப." பகையென்றது - ஆறும் மூன்றும்; "நின்ற.....கூடமாகும்." கூடமெனினும் பகையெனினுமொக்கும். நட்பென்றது - நாலா நரம்பு. இங்ஙனம் இசைபுணருங் குறிஞ்சி யெய்தநோக்கியென்க.

(பி - ம்.) * 'வீலக்கைபதாகை' † 'அதிர்வே கூட்டம்' ‡ 'கோவையுமுழை முதற் கைக்கிளை யீரேழ்காட்டியிணை'

ங௫. குரல்வா யிளிவாய்க் * கேட்டன ளன்றியும்
வரன்முறை மருங்கி † னைந்தினு மேழினு
முழைமுத லாகவு முழையீ றாகவுங்
குரன்முத லாகவுங் குரலீ றாகவு
மகநிலை மருதமும் புறநிலை மருதமு
ச௦. மருகியன் மருதமும் பெருகியன் மருதமு
நால்வகைச் சாதியு நலம்பெற நோக்கி

ங௫. குரல்வாய்... .....கேட்டனள்: குரன்முதலாகவெடுத்து இளி குரலாக வாசித்தாள்.

கேட்டனள் - செவியாலே ஆளந்தாள்.

(ங௬) வரன்முறைமருங்கிற் (ங௫) கேட்டனளென்க.

ங௬. வரன்முறையாவது - முன்கூறினவகையே ஐந்தாநரம்பா முறைமையின், இளி குரலாக ஏழுநரம்பும் வாசித்தாளென்க.

ங௭. குரல் குரலாகவும் குரல் தாரமாகவும் வாசித்தாளென்றவாறு.

ங௯ - சக. அகநிலைமருதமும்.....நோக்கியென்றது:—

அகநிலை மருதமாவது - "ஒத்த கிழமை யுயர்குரன் மருதந், துத்தமும் விளரி யுங்குறைவுபெற னிறையே." இதன்பாட்டு:—"ஊர்க திண்டே ரூர்தற் கின்னே, நேர்க பாக நீயா வண்ணம்." நரம்புக்குமாத்திரை பதினாறு.

"புறநிலை மருதங் குரலுழை கிழமை, துத்தங் கைக்கிளை குரலா மேனைத், தாரம் விளரி யிளிநிறை வாகும்." இதன்பாட்டு:—"அங்கட் பொய்கை யூரன் கேண்மை, திங்க ளோர்நா ளாகுந் தோழி." நரம்பு பதினாறு.

"அருகியன் மருதங் குரல்கிழமை கைக்கிளை, விளரி யிளிகுர னிறையா மேனைத், துத்தந் தார மிளியிவை நிறையே." இதன்பாட்டு:—"வந்தா னூரன் மென்றோள் வீயை, கன்றுய் போது காணுய் தோழி." நரம்பு பதினாறு.

"பெருகியன் மருதம் பேணுங் காலை, யகநிலைக் குரிய நரம்பின திரட்டி, [1] நிறை குறை கிழமை பெறுமென மொழிப." இதன்பாட்டு:—"மல்லூர்..... நோவலெம்முன், சொல்லற் பாண சொல்லுங் காலை, யெல்லி வந்த நங்கைக் கெல்லாஞ், சொல்லுங் காலைச் சொல்லு நீயே." நரம்பு முப்பத்திரண்டு. "மூன்னு மளிகண் மலர்தேடி மதுவை யுண்டு வரைதோறும், பன்னு சார லவையெங்கும் பற்றி யார்க்கும் வகையேபோன், முன்ன மோசை பலவாகி முழுதும் வேறுய் மிடறொன்றுய்த், தென்ன வென்னு மிசைவளர்த்துப் பண்ணு மாறு தேன்போல."

அகநிலைமருதத்துக்கு நரம்பணியும்படி:— உழை இளி விளரி உழை கைக்கிளை குரல் உழை குரல் தாரம் இளி தாரம் துத்தம் இளி உழை. இவை உரைப்பிற்பெருகும்.

---

[1] பரிபாடல், கள: கஅ.

(பி - ம்.) * 'கொண்டனள்' † 'ஐந்தினுமெட்டினுங்குரல் குரலாகவும்'

மூவகை * யியக்கமு முறையுளிக் கழிப்பித்
திறத்து வழிப்படூஉந் † தெள்ளிசைக் கரணத்துப்
புறத்தொரு பாணியிற் பூங்கொடி மயங்கிச்

தாரத்துட்டோன்றும் உழை ; உழையிற் குரல்பிறக்கும்; குரலுள் இளி பிறக்கும்; இளியுள் துத்தம்பிறக்கும்; துத்தத்துள் விளரிபிறக்கும்; விளரியுட் கைக்கிளைபிறக்கும். "தாரத்துட்டோன்று.....தோன்றும்பிறப்பு."

சஉ. மூவகை.....கழிப்பி யென்றது:—மூவகையியக்கமாவன - வலிவு மெலிவு சமம்;....."சமமெனப் படுவது தேசிக்கு வருமே."

சச. புறத்தொரு..... ...மயங்கியென்றது - புறநிலைமருதப்பண்ணில் மயங்கியென்றவாறு. அன்றியும், திறத்துள் புறநீர்மையில் மயங்கியென் றுரைப்பாருமுளர்.

சக - ச. திறப்பண்பாடுகின்ற எல்லை அப்பண்ணுக்கு அடைத்தபாட்டின் புறத்தொருபாணியென்பது - நால்வகைச்சாதியாகிய பெரும்பண்களையாக்கி அதன்வழிப்பிரிந்த திறப்பண்பாடுகின்ற அளவிலே பிரிவிண்கண் வேனிற்பாணி பாடநிறுத்தாள்; பொழுது கண்டு கலங்கிஞளாதலாலே காலப்பண்ணுக்குஅமைத்த பாட்டுமொழிய வேறுசில விரவினவென்க.

முற்பட மிடற்றிற் பாடியபண்ணே யாழின்மேல் வைப்பதாகலின், ஈண்டு மிடற்றுப்பாடல் சொல்லிற்றிலர்; அது [1] "பருந்து மதனிழலும் பாட்டு மெழுவும்" என்பதனுற்கொள்க.

(எ) வேனிற்காலம் வந்தது; (கo) காமனுக்குப் பரிகரமாயுள்ளோர் (கக) போர்க்கோலங் கொள்ளுமென்று காமனுக்குப் படையழைக்குங் (கஉ) குயிலோனென்னும் (கங) படைச்சிறுக்கன்கூறக் (கச) கானலந்தண்டுறைக்கண் கடலாடப்போயிருந்தழிக் (கரு) கோவலனூடப் பிரிவாளாயத் தன்மனையின்கணிருந்த (கசு) மாதவியும் விரும்பி (கள) மாலிகையின் (கஅ) வேனில்கொண்டாடும் பஞ்சரத்தினிருந்து (கக) மூத்தையும் சந்தனத்தையும் (உக) வளாகத்துக் (உஉ) கையுறையாகவேந்தி (உங) இயல்பின் வழாத யாழை வாங்கி[த் தொழுது கைக் கொண்டு] வேனிற்கால்த்துக் கடைத்த பண்ணை (சஉ) இயக்கி (உச) மிடற்றி னுற்பாடுதலும் (சச) பண்முறைமைகெட மயங்கிஞளென்று கூட்டுக.

இனி (உள) 'வலக்கைப் பதாகை கோட்டொடு சேர்த்தி' என்பதுமுதலாக (சச) 'புறத்தொரு பாணியிற் பூங்கொடி மயங்கி' என்பதீறாக முன்னர்ப்பாடிய ஒன்பான்கோவையின் மேற்செம்பாலைப் பண்ணெழிந்து பதினற்கோவையாகிய சகோடயாழை வாங்கி வலக்கையைப் பதாகையாக்கி அக்கையால் கோடு அசையாதபடிபிடித்து இடக்கைகாலுவிரலும் மாடகத்தை யுறப்பிடித்துச் செம்பகையும் ஆர்ப்பும் கூடமும் அதிர்வுமாகிய பகைகீங்க முறைமையிற்பிழையாதீ ரம்பினுற் பதினலு ரம்பினையும் உழைமுதற் கைக்கிளையிறுவாயாக "மெலிவிற்

[1] சீவகசிந்தாமணி, எஉo.

(பீ - மீ.) * 'இயக்கிமுறை' † 'தென்திசைக்காணத்து'

சடு. சண்பக மாதவி தமாலங் கருமுகை
வெண்பூ * மல்லிகை வேரொடு மிடைந்த
வஞ்செங் கழுநீ ராயிதழ்க் கத்திகை
யெதிர்பூஞ் செவ்வி † யிடைநிலத் தியாத்த
முதிர்பூந் தாழை முடங்கல்வெண் டோட்டு

சுo. விரைமலர் வாளியின் வியனில மாண்ட
வொருதனிச் செங்கோ லொருமக ணீணையி
னிருமுக ‡ மன்றி யுலகுதொழு திறைஞ்சுந்
திருமுகம் போக்குஞ் செவ்விய ளாகி
§ யலத்தகக் கொழுஞ்சே றீஇ || யயலது

சுடு. பித்திகைக் கொழுமுகை யாணி கைக்கொண்டு
மன்னுயி ரெல்லா ¶ மகிழ்துணை புணர்க்கு
மின்னிள வேனி லிளவர சாள
** னந்திப் போதகத் தரும்பிடர்த் தோன்றிய

கெல்லே மந்தக் குரலே" என்பதனுன் உழை குரலான மந்தமும், "வலிவிற் கெல்லே வன்கைக் கிளையே" என்பதனுற் கைக்கிளையிறுவாயான வலிவும் இணை கிளை பகை நட்பின்வழிகளிலே பொருந்தப்பார்த்துக் குரல்நரம்பினையும் யாழிற்கு அகப்பட்ட நரம்பாகிய இளிநரம்பையும் முற்பட ஆராய்ந்து இசை யோர்த்து அதன்முறையே அல்லாத நரம்புகளையும் ஆராய்ந்து இசையோர்த்துத் தீதின்மையறிந்து உழைமுதலாகவும் உழையிறுகவுமென மந்தமுதலாகவும் மந்தமிறுகவும் குரல்நரம்பு மந்தமானபோது குரல்நரம்பே முதலுமுழுவுமாக வும் அகநிலைமருதமும் புறநிலைமருதமும் அருகியன்மருதமும் பெருகியன்மருத மூமென நால்வகைச் சாதிப்பெரும்பண்கள் (பா) விளைநிலம் பெற வலிவு மெலிவு சமமென்னும் மூவகை இயக்கும்முறைமையிலே ஆராய்ந்துபாடிப் பின்னர் மாத்திரைகுறைந்ததிற் பண்ணைப்பாடுமேல்வைக்கண் அப்பண்ணை இனி தாகப்பாடி நெகிழ்வுற்ற மனத்தினளாய் அயர்ந்தாளெனவுமாம்.

சடு. தமாலம் - பச்சிலை.

சஎ. கத்திகை - தொடைவிசேடம். சஅ. இடைநிலம் - தொடைநடு.

சஎ - கூ. கத்திகையாகிய பூஞ்செவ்வியில் இடையிடையிற் கட்டித் தொடுத்த தாழைத்தோட்டிலே.

சுஉ. ஒருமுகமன்றி - ஒருங்கிக்கன்றி.

சுஉ - ஙு. உலகெலாந்தொழும் திருமுகமென்றது, காமனுணையாதலால்.

சுஎ. அலத்தகம் - அரத்தகம் ; சாதிலிங்கம். சேறு - குங்குமமும் அகிலும் தேய்த்த குழம்பு. [கொண்டு

சுஎ - சுஅ. அத்தோட்டுக்கையதான பித்திகைமுகையதனை எழுத்தாணியாகக்

சுஅ. இளவரசாளன் - நெறிப்பட்டுச்செய்யாத ஒருவன்.

(பி - ம்.) * 'மல்விகை விரியலொடு' † 'இடைநிலத்து' ‡ 'அன்றியுழுலகு' § 'அத்தகக்' || 'அல்லது' ¶ 'மகிழ்துணைப் புணர்க்கும்' ** 'அத்தியம்போதகம்'

திங்கட் செல்வனுஞ் செவ்விய னல்லன்
கூ0. புணர்ந்த மாக்கள் பொழுதிடைப் படுப்பினுந்
தணந்த மாக்க டந்துணை மறப்பினு
நறும்பூ வாளியி னல்லுயிர் கோட
லிறும்பூ தன்றிஃ தறிந்தீ மின்னென
வெண்ணெண் கலையு மிசைந்துடன் போகப்
கூஇ. பண்ணுந் திறனும் புறங்கூறு நாவிற்
றளாவா யவிழ்ந்த தனிப்படு காமத்து
விளையா மழலையின் விரித்துரை யெழுதிப்
பசந்த மேனியள் படருறு மாலையின்
* வசந்த மாலையை வருகெனக் கூஉய்த்
எ0. தூமலர் மாலையிற் றுணிபொரு ளெல்லாங்
† கோவலற் களித்துக் கொணர்க வீங்கென
மாலை வாங்கிய ‡ வேலரி நெடுங்கண்
கூல மறுகிற் கோவலற் களிப்பத்
திலகமு மளகமுஞ் சிறுகருஞ் சிலையுங்
எஇ. § குவளையுங் குமிழுங் கொவ்வையுங் கொண்ட
மாதர் வாண்முகத்து மதைஇய நோக்கமொடு

நிகூ. செவ்வியனல்லன் - கோட்டமுடையான்.

கூ0. பொழுதிடைப்படுத்தல் - கூடியிருக்கிற இல்லிலே புணர்ந்து ஊடன் முதலாயினவற்றுள் விட்டிருத்தல்.

கூக. தணத்தல் - நாடிடையிட்டும் காடிடையிட்டும் நீங்குதல்.

கூஉ. (பா) நறும்பூ வாளி நல்லுயிர் கோடல்:—நறும்பூவாளி, எழுவாய்.

கூங. அறிந்தீமின் - அறிமின்.

கூஙி. இவையிற்றைப்பழிக்கும். [தன்றுதல்.

கூசு. தளவாயவிழ்ந்த - தளை கட்டவிழ்ந்துகுலைந்த ; என்றது தன்வரைத்

கூசு - எ. காமத்தையுடைய மழலை ; விளையாமழலை - வெளிப்பட்டாமழலை. முற்றுமழலையோடெழுதலாவது பேசிப்பேசியெழுதுகை.

(சகூ) தாழைப்பூந்தோட்டிற் (ஙிஙி) பித்திகைமுகையை எழுத்தாணியாகக் கொண்டு (கூஎ) எழுதினளென்க.

கூஅ. படருறுமாலை - நினைவுகூரும் மாலைப்பொழுது.

கூக. வசந்தமாலை - சேடி.

கூஎ - எக. இத்தன்மையளாய் ஊடல்தவிர்ந்து, கோவலனுக்கு ஓலையும் ஸ்ரீயும் விடுத்தாளென்க.

எஉ. நெடுங்கண் - வசந்தமாலை.

(பி - ம்.) * 'வயத்தமரிவருதென' † கோவலர்க்குணர்த்திக்கொணர்க' ‡ 'வேலெறி' § குழையுங்குமிழும்'

காதலிற் ரூன்றிய கண்கூடு வரியும்
புயல்சுமந்து * வருந்திப் பொழிகதிர் மதியத்துக்
கயலுலாய்த் திரிதருங் காமர் செவ்வியிற்
அ0. பாகுபொதி பவளந் திறந்தூகிலா வுதவிய
நாகிள முத்தி னகைநலங் காட்டி
[1] வருகென வந்து போகெனப் போகிய
கருநெடுங் கண்ணி காண்வரிக் கோலமு
மந்தி மாலை வந்ததற் கிரங்கிச்
அரு சிந்தைநோய் கூருமென் சிறுமை நோக்கிக்
கிளிபுரை கிளவியு மடவன நடையுங்
களிமயிற் சாயலுங் கரந்தன ளாகிச்
செருவே னெடுங்கட் சிலதியர் கோலத்
தொருதனி வந்த வுள்வரி யாடலுஞ்
கூ0. சிலம்புவாய் புலம்பவு மேகலை யார்ப்பவுங்
† கலம்பெரு துகுப்பினள் காத லேக்கமொடு
திறத்துவே ரூயவென் சிறுமை ‡ நோக்கியும்
புறத்துநின் ரூடிய புன்புற வரியுங்
கோதையுங் குழலுந் தாதுசே ரளகமு
கூரு மொருகாழ் § முத்தமுந் திருமுலைத் தடமு
மின்னிடை || வருத்த நன்னுத ரூன்றிச்
சிறுகுறுந் தொழிலியர் மறுமொழி யுய்ப்பப்

எஎ. கண்கூடுவரி - பிரதமதசைத்தில் நடித்தநடிப்பு; இஃது ஒருவர்கூட்ட வன்றித் தானேவந்து நிற்குநிலைமை.

அஉ - கூ. அழைக்கவந்து போகச்சொல்லிப் போகியநடம்;

பல்காலும்வந்து காணும்படி நடித்தநடம்.

அரு - க. வருத்தமறிந்து தன்வடிவுகரந்து சிலதியர்வடிவுடன் தமரறி யாமல்வந்து நடித்தநடிப்பு. உள்வரி - வடிவுமறைத்தல்.

கூஉ. திறத்துவேரூகிய சிறுமை : இவள் கீக்கத்து ஆற்ரூமை கூறின தென்க.

கூகூ. புறவரி - இவனுடனணையாது வாயிற்புறம்பேநின்ரூடியே நடிப்பு.

கூசு. தோன்றி - வந்தணுகாதே புறவாயிலிலேநின்று.

கூஎ. சிறுகுறுந்தொழிலியர் - சிலதியர். மறுமொழியுய்ப்ப - மறுமாற்றம் சொல்ல.

---

[1] அஉ - ரு. தக்கயாகப்பரணி, உசo - உரை, மேற்.

(பி - ம்.) * 'வருந்தியபொழி' † 'கலம்பொருதுகுப்பு' ‡ 'நோக்கிப்புற த்து § 'முத்தமுஞ்செழுமுலே' || 'வருந்தி'

புணர்ச்சியுட் பொதிந்த கலாந்தரு * ளிளவியி
னிருபுற மொழிப்பொருள் கேட்டன ளாகித்
தளர்ந்த சாயற் றகைமென் கூந்தல்
கிளர்ந்துவே ருகிய கிளர்வரிக் கோலமும்
பிரிந்துறை † காலத்துப் பரிந்தன ளாகி
யென்னுறு ‡ கிளைகட்குத் தன்னுறு துயரந்
தேர்ந்துதேர்ந் துரைத்த தேர்ச்சிவரி யன்றியும் .
§ வண்டலர் கோதை மாலையுண் மயங்கிக்
கண்டவர்க் குரைத்த காட்சி || வரியு
மடித்தடித் தவர்முன் மயங்கிய மயக்க
மெடுத்தவர் தீர்த்த வெடுத்துக்கோள் வரியு
மாடன் மகளே யாதலி னுயிழை
பாடுபெற் றனவப் பைந்தொடி தனக்கென
வணித்தோட்டுத் திருமுகத் தாயிழை யெழுதிய
மணித்தோட்டுத் திருமுக மறுத்ததற் கிரங்கி
வாடிய வுள்ளத்து வசந்த ¶ மாலை

கூஅ - கஅக. புணர்ச்சி நிமித்தமாகப் புலந்து தன் சிலதியர்க்குச் சொல்லி விட்ட வார்த்தையைக்கேட்டு அப்படியன்றிப் புலந்து சொன்னேனாகக்கொண்டு தான் நடித்துப்போன நடம்.

கஅசு - ச. தேர்ச்சிவரியாவது-தன்னுறவுமுறையார்க்குத் தன்விதனங்களை விசாரித்துச்சொன்ன நடம்.

கஅசு. கண்டவர்க்கு-கண்டவரெல்லார்க்கும், உரைத்தல்-தன்விதனத்தைச் சொல்லுதல். காட்சிவரியாவது - தன்வருத்தம் பலருங்காணும்படி நடித்த நடம்.

கஅஅ. எடுத்துக்கோள்வரியாவது - கையறவெய்திவீழ்ந்தாளாக வீழ்ந்து பிறர் எடுத்துக்கொள்ளும்படி நடித்த நடம்.

எ - கஅஅ. "வரியெனப் படுவது .....நெறித்தே", "அவற்றுள், தன் கூடென்பது.....தன்மைத் தென்ப", "காண்வரியென்பது.....தன்மைய தாகும்", "உள்வரியென்பது.....ஆடிதற்குரித்தே", "புறவரி யென்பது... .....விடைபெறு வதுவே", "இளர்வரியென்பது.....நிற்பதுவே", "தேர்ச்சி யென்பது... ....தேர்ச்சிவரி யாகும்", "காட்சி யென்பது.....பரிந்துநிற் பதுவே", "எடுத்துக் கோள... .....எடுத்துக்கோளே."

வரியென்றது, நடத்தை.

கஅக. (ப।) மகள: ஐ, இடைச்சொல். ஆயிழையென்றது, கூனியை; இவள் வசந்தமாலை; அண்மைவிளி.

(பி - ம்.) *'இளியிருபுறம்' † 'காலத்தும்' ‡ 'இளைஞர்க்குத்' § 'வண்டமர்கோதை' || 'வரியன்றியுமடித்தடித்து' ¶ 'மாலையுந்தோடலர்'

தோடலர் கோதைக்குத் தூனைந்துசென் றுரைப்ப
ககடு [1] மாலை வாரா ராயினு மாணிழை
காலைகாண் குவமெனக் கையறு நெஞ்சமொடு
பூமல ரமளிமிசைப் பொருந்தாது வதிந்தனண்
மாமலர் நெடுங்கண் மாதவி தானென்.

வெண்பா.

க. செந்தீ மணிரவிரியத் தேமாங் கொழுந்தொழுக
* மைந்தா ரசோக மடலவிழக்—கொந்தா
ரிளவேனல் வந்ததா லென்னுங்கொ லின்று
வளவேனற் கண்ணி மனம்.

உ. ஊடினீ [2] ரெல்லா முருவிலான் றன்னுணை
† கூடுமி னென்று குயில்சாற்ற—நீடிய
வேனற்பா ணிக்கலந்தாண் மென்பூந் திருமுகத்தைக்
கானற்பா ணிக்கலந்தாய்: காண்.

ககள பொருந்தாது - கூடாது.

(கஅ) வேனிற்பள்ளியேறி (உக) யாழ் கைவாங்கி (உச) மயங்கி (சஅ) மாலையின் நடுவுவைத்துத் தொடுத்த (சக) தாழைப்பூந்தோட்டிலே (சுஎ) எழுந்து (சுக) அம்மாலையை வசந்தமாலைகைக்கொடுத்து (எக) அவளைக்கொண்டுவருக வென, (எஉ) அவள் (எக) சென்று கொடுத்துழி, கோவலன் வரியைப்பராட்டி இப்பண் (ககஎ) பாடுபெற்றனவென்று சொல்லக்கேட்டு (ககஉ) இரங்கிச் (ககச) சென்றுரைப்ப (ககடு) வாராராயினும் (ககசு) காலைகாண்போமெனச் செயலற்றுப் (ககள) பாயலிற் பொருந்தாது வதிந்தனளெனக் கூட்டுக.

க. மைந்து - அழகு. கொத்து, கொந்தென, மெலிந்தது.

இது, கூனி ஓலைகொண்டு செல்லுகின்றகாலத்துத் தன்னுள்ளே சொல்லியது; கோவலனுக்கு அவள் சொல்லியதூஉமாம்.

உ. இக்காதையில் அவள் செய்தபடியைக் கோவலனுக்கறிவிக்கின்றுள்:—

சாற்ற நீடிய கானலிற் பாட்டிலே வருந்தினுய்; இதனைக்காணென்று கோவலன் கையிலே ஓலையைநீட்டினுள்.

---

[1] சீவகசிந்தாமணி, சுஅசு, ந. மேற்.

[2] எல்லாமென்பது, சிறுபான்மை முன்னிலைக்கண்வருமென்பதற்கு இதுமேற்கோள்; தொல். பெயர். சூ. கக :- நி, இ - வி. சூ. ககக - உரை; "பொதும்புதோறல்லும் பூங்கணிருங்குயில், கவறுபெயர்த்தன்ன நில்லாவாழ்க்கையிட், டகறலோம்பு மினறிவுடையீரெனக், கையறத்துறப்போர்க் கழறுவபோல.....நுவல" (நற். உசக) என்பது இங்கே அறிதற்பாலது. (பி - ம்.) * 'மத்தாரசோகம்' † 'கூடிதீரென்று'

க - உ நெடியோன் குன்றமும்.....புனனன்னாட்டு

நெடியோன் குன்றம் - வேங்கடமலை. தொடியோள் - பெண்பாற்பெயராற் குமரியென்பதாயிற்று. ஆகவே தென்பாற்கண்ணதோர் ஆற்றிற்குப் பெயராம். ஆனால், நெடியோன்குன்றமும் தொடியோள் நதியுமென்னுது பௌவமுமென்றது என்னையெனின், முதலூழியிறுதிக்கண் தென்மதுரையகத்துத் தலைச் சங்கத்து அகத்தியனுநும் இறையனுநும் தமாவேளும் * முரஞ்சியூர் முடிநாகராயரும் நிதியின்கிழவனும் என்றிவருள்ளிட்ட நாலாயிரத்து நானூற்று நாற்பத்தொன்பதின்மர் எண்ணிறந்த பரிபாடலும் முதுநாரையும் முதுகுருகும் களரியாவிரையுமுள்ளிட்டவற்றைப் பூண்ந்து தெரிந்து நாலாயிரத்து நானூற்று நாற்பதிற்றியாண்டு [1] இரீயினூர் காய்சினவழுதிமுதற் கடுங்கோனீறாயுள்ளார் என்பத்தொன்பதின்மர்; அவருட் கவியரங்கேறினூர் எழுவர் பாண்டியருள் ஒருவன் சயமாகீர்த்தியனுகிய நிலந்தருதிருவிற்பாண்டியன் தொல் காப்பியமும் புலப்படுத்தி இரீயினன். அக்காலத்து அவர்நாட்டுத் தென்பாலி முகத்திற்கு வடவெல்லையாகிய பஃறுளியென்னுமாற்றிற்கும் குமரியென்னுமாற்றிற்குமிடையே எழுநூற்றுக் காவதவாறும் இவற்றின் நீர்மலிவானெனமலிந்த ஏழ்தெங்கநாடும் ஏழ்மதுரைநாடும் ஏழ்முன்பாலைநாடும் ஏழ்பின்பாலைநாடும் ஏழ்குன்றநாடும் ஏழ்குணகாரைநாடும் ஏழ்குறும்பனைநாடுமென்னும் இந்த நாற்பத்தொன்பதுநாடும் குமரி கொல்லுமுதலிய பன்மலைநாடும் காடும் நதியும் பதியும் தடநீர்க்குமரி வடபெருங்கோட்டின்காறும் கடல்கொண்டொழிதலாற் குமரியாகிய பௌவமென்றுரைத்துணர்க. இஃது என்னை பெறுமாறெனின், [2] "வடிவே லெறிந்த வான்பகை பொருது, பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக், குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள" என்பதனுலும், கணக்காயனர்மகனர் நக்கீரனருரைத்த இறையனர்போருளுரையானும், உரையாசிரியராகிய இளம்பூரணவடிகள் முகவுரையானும் பிறவாற்றானும்பெறுதும். அஃது அற்றாக, வடக்கின்கண் வேங்கடமலை தெற்கின்கட் குமரிக்கடலெனக் குறியாற் கூறினவர் கிழ்பான் மேல்பாற்கு எல்லைகூறுதது என்னையோவெனின், நெடுந்திசையாகிய வடபாற்கெல்லை குன்றமென்றும் தென்பாற்கெல்லை குமரிப் பௌவமென்றுங் கூறினமையான் ஒழிந்ததிசைகட்கு ஒழிந்த பௌவம் எல்லையென்பதாயிற்று; என்னை? "வேங்கடங் குமரி தீம்புனற் பௌவமென், றிந்நான் கெல்லை தமிழது வழக்கே" என்றூர் சிகண்டியாருமாகலின். அன்றியும் [3] வடதிசைக்கண் வடுகொழிந்த திரிபுடைமொழி பலவுளவாகலான் மலையெல்லை கூறி ஒழிந்த திசைமூன்றிற்கும் திரிபின்மையாற் கடலெல்லைகூறினரெனினு மமையும்.

(இ - ள்.) வடக்கின்கண் வேங்கடமலையும் தெற்கின்கட் குமரிக்கடலும் கிழக்கின்கண்ணும் மேற்கின்கண்ணும் ஒழிந்த கடல்களுமே தமிழ்நாட்டிற்கு எல்லையென்று கூறுபடுத்த மூவேந்தருடைய குளிர்ந்த புனலியுடைய நல்ல நாட்டிடத்தென்க.

---

[1] இரீயினூர், பிறவினை. [2] சிலப்பதிகாரம், ககo. கஅ - உo. [3] "வடதிசை மருங்கின் வடுகு வரம்பாக." (பி - ம்.) * 'மூரிஞ்சியூர்'

கூ - எ. மாட மதுரையும்.....வந்த திவணை

இந்த நகரம் நான்கிற்கும் மாடமுதலிய நான்கும் அடை.

(இ - ள்.) மதுரையும் உறந்தையும் வஞ்சியும் புகாருமென்னும் நான்கு நகரிற்கும் அரசனுய்த் தன் தேரும் புரவியும் யானையும் சேனையும் இச்சொன்ன முறையே வைத்து வீற்றிருந்த புகழமைந்த செற்பியினையுடைய மாரனுகிய மன்னனுக்கு மனமகிழ்ந்தினையாகிய இன்பத்தைத்தரும் இளவேனிலென்னும் இளவரசன் இப்பொழுது இங்கே வந்துவிட்டானென்றென்க.

வந்தது, வருமென்னும் எதிர்காலத்தை இறந்தகாலத்தாற் கூறினர்; விரைவு; என்னை ? [1] "வாராக் காலத்து நிகழுங் காலத்து, மோராங்கு வருஉம் வினைச்சொற் கிளவி, யிறந்த காலத்துக் குறிப்பொடு கிளத்தல், விரைந்த பொருள வென்மனுர் புலவர்" என்றுராகலின். இஃது என்சொல்லியவாறே வெனின், காமனுக்குத் தேர் தென்றலும், புரவி கிள்ளையும், யானை அந்தியும், சேனை மகளிருமாதலால் தேர் தென்னர்காவலும், புரவி [2] கிள்ளிகாவலும், யானை சேரமான்காவலுமாக்கித் தானும் தன்சேனையும் புகாரில் வீற்றிருந்தானென்பது கருத்து. அஃது, [3] "உருவி லாள னெருபெருஞ் சேனை, யிலகம ராட்டி யெதிர் நின்று விலக்கி" என்பதனுலும், [4] "மகர வெல்கொடி மைந்தன் சேனை, புகரு கோலங் கொள்ளுமென் பதுபோல்" என மேற்கூறுதலானுமுணர்க, "திண்பரித் தென்றலந் தேருந் தார்புனை, வண்பரிக் கிள்ளையு மாலி யானையுங், கண்கடைப் படுகொலைக் காமர் சேனையு, மெண்படப் புகுந்தன னிரதி காந்தனே" என்றுர் பிறருமெனக்கொள்க.

அ - கஙு. வளங்கெழு பொதியில்.....பணிமொழி கூற

(இ - ள்.) வளமைபொருந்திய பொதியத்து முனிபயந்த இளங்காலாகிய தூதன் குயிலோனுக்கு இசைத்தனுதலானே காமன்சேனையாயுள்ளாரெல்லாம் கோலங்கொண்மினென்னும் பொருள்பயப்பப் பூங்கொடிகண்மிடைந்த சோலையென்னும் பாசறையிலிருக்கும் அக்குயிலோனென்னும் சின்னமூதி காற்றூதன் தனக்குப் பணித்தமொழியைச் சேனைக்குக் கூறவென்க.

இளங்காற்றூதன் - தென்றலாகியதூதன்; இளையகாற்றூதனென்று மாயிற்று; [5] காற்றூதன் - ஓட்டன் சேனை - மகளிர். கோலங்கோடல் - அக்காலத்திற்கேற்பனவுடுத்து முடித்துப் பூசிப் பூணுதல்; போர்க்கோலமென்றுமாயிற்று. படையுள்படுவோன் - சின்னமூதி; "சேனையுள் படுநரை யானையினேவி" என்றுர் கதையிலும், பணிமொழி - காற்றூதன் பணித்தமொழி. பணித்தல் - அருளிச்செய்தல்; திசைச்சொல்; [6] "மண்டல மேபணி யாய்" என்பதுபோல; பணிவிடையென்னும் வழக்குமது.

கச - அ. மடலவிழ் கானல்.....பள்ளி யேறி

---

[1] தொல்காப்பியம், வினையியல், சூ. ச.ச.

[2] கிள்ளி - சோழன்.

[3] சிலப்பதிகாரம், இ: உஉச-இ.

[4] சிலப். அ: கo - கக.

[5] ,, உகூ:உஇo.

[6] திருச்சிற்றம். களு.

(இ - ள்.) கடலாடுகாதையாகிய விளையாட்டின்கண்ணே மடலவிழுங்கான லிடத்துக் கோவலனோடு ஊடுதலாலே தமியளாய்த் தன்மனையிற்புக்க கரிய மலர்போலும் நெடியகண்ணையுடைய மாதவி அதற்குவிரும்பிப் பருவத்திற்குப் பொருந்த, வானிலேயுறவுயர்ந்த மேனிலையில் ஒருபக்கத்து நிலாமுற்றத்தே யேறியென்க.

விளையாட்டினுளென்றார், விளையாட்டுப்பூசல் வினையாயிற்றென்னும் வழக் குப்பற்றி.

கஅ - உஉ. மாணிழை.....கையுறை யேந்தி

(இ - ள்.) அந்த மாட்சிமைப்பட்ட இழையினையுடையாள் முத்தும் சந் தும் அக்காலத்திற்கு ஏப்பொழுதும் தான் கடனுகை இடக்கடவ திறையாகலான் முன்சென்ற பின்பனிக்காலத்திற் குங்குமத்தால் அலங்கரிக்கப்பட்ட முலைமுற்ற மாகிய பரப்பிலே அம்முத்தையும் சந்தையும் கையுறையாக ஏந்தியென்க.

கையுறை - காணிக்கை. ஏந்தியெனவே பூண்டும் பூசியுமென்பதாயிற்று. காணிக்கைகாட்டுவார் காண்பார்முன்நிலிற்கொணர்ந்து காட்டுவாராகலிற் கொங்கைமுன்நிலில் ஏந்தியென்றார். முலைக்குமுற்றம் மார்பு.

உஙு - கூ. அதிரா மரபின்.....இருக்கைய ளாகி

(இ - ள்.) மாதவி பணிமொழிகூற, அதற்குவிரும்பி ஏறிப் பூண்டு பூசி ஒன்பது வகைப்பட்ட இருப்பினுள் முதற்கண்ணதாகிய பதுமாசனமென்னும் ஆசனத்திருந்து கோவைகலங்காமரபினையுடைய யாழைக் கையில்வாங்கிக் கண் டத்தால் முந்துற மதுரகீதமாகப்பாடி அதுமயங்கிக் கலத்தாற் பாடத் தொடங் கினவளென்க.

இதனுள் விருத்தியென்பது இருப்பு; ஒவியநூலுள் நிற்றல் இருத்தல் கிடத்தல் இயங்குதலென்னும் இவற்றின்விகற்பங்கள் பலவுள. அவற்றுள் இருத்தல்:—திரிதரவுடையனவும்திரிதரவில்லனவுமென இருபகுதிய. அவற்றுள் திரிதரவுடையன:— யானே தேர் புரவி பூனைமுதலியன; திரிதரவில்லன ஒன்பது வகைப்படும். அவை:—பதுமுகம், உற்கட்டிதம், ஒப்படியிருக்கை, சம்புடம், அயமுகம், சுவத்திகம், தனிப்புடம், மண்டிலம், ஏகபாதம் எனவிவை; என்னை? "பதுமுக முற்கட் டிதமே யொப்படி, யிருக்கை சம்புட மயமுகஞ் சுவத்திகந், தனிப்புட மண்டில மேக பாத, முளப்பட வொன்பது மாகுந், திரிதர வில்லா விருக்கை யென்ப" என்றாராகலானும், [1] "பன்னுள் கழிந்த பின்னர் மூன்னு, ளெண்மெய்ப் பாட்டினு ளிரக்க மெய்ந்நிலீஇ, யொண்விளை யோவியர் கண் ணிய விருத்தியுட், டலையத னும்பர்த் தான்குறிக் கொண்ட, பாவை நோக்கத் தாரணங் கெய்தி" எனப் பெருங்கதையுட் கூறினமையானுங்கொள்க.

இனி நாடகநூலார் இவ்விருப்பை ஐம்பதென விரிவரையறையாற்கூறித் தொகைவரையறைகூறுவார், அவற்றை ஒன்பதினடக்கிறுரெனவுணர்க; என்னை? "ஆதிப்பா விருத்தி யைம்பதிற் புலவோ, ரோதிக் கொண்டன ரொன்பான் விருத்தி" என்றாராகலின்.

---

[1] பெருங்கதை, தருமதத்தம்பந்தம், சச - அ.

அவற்றுள், தலைக்கண்விருத்தியாவது - பதுமாசனம். இதனுற்சொல்லியது, அதிராமரபினையுடைய யாழைக் கையின்வாங்கிப் பதுமாசனமாகவிருந்தவள் தனக்கு நாயகனின்மையால் தியாதநாயகனுக மானதத்தாலேக்கி எதிர்முகமாகவிருந்து வாசித்தலைக் கருதினுளென்பது. என்னை? "முதற்க ணெதிர்முக நோக்கி நயத்தக, வொருவ ஞகிய தோற்றமும்" என்றுராகலின்.

யாழ்வாசிக்குமுறையை, "நல்லிசை மடந்தை நல்லெழில் காட்டி, யல்லியம் பங்கயத் தயனினிது படைத்த, தெய்வஞ் சான்ற தீஞ்சுவை நல்யாழ், மெய்பெற வண்ங்கி மேலொடு கீழ்புணர்த், திருகையின் வாங்கி யிடவயி னிரீஇ, மருவிய வினய மாட்டுதல் கடனே" என்பதனுனறிக; வினயம் - தேவபாணி.

உஎ - அ. வலக்கைப் பதாகை.....மாடகந் தழீஇ

(இ - ள்.) வலக்கையைப் பதாகையாகக் கோட்டின்மிசையேவைத்து இடக்கைநால்விரலான் மாடகத்தைத் தழுவியென்க.

பதாகைக்கையாவது பெருவிரல்குஞ்சித்து ஒழிந்த விரலெல்லாம் நிமிர்த்தல்; என்னை? "எல்லா விரலு நிமிர்த்தினை யின்றிப், பெருவிரல் குஞ்சித்தல் பதாகை யாகும்" என்றுராகலின். மாடகம் - வீக்குங்கருவி. அது முன்னர் [1] ஆணியென்பதனுட்கூறினும்.

உக - ஙo. செம்பகை யார்ப்பே.....விரகுனி யறிந்து

செம்பகை ஆர்ப்பு கூடம் அதிர்வென்னுதான்கினும் செம்பகை தாழ்ந்த விசை=இன்பமின்றியிசைத்தல்; ஆர்ப்பு மாத்திரையிறந்த சுருதி=ஓங்கவிசைத்தல்; கூடம் இசைநிறவாதது=தன் பகையாகிய ஆருநரம்பினிசையிற் குன்றித் தன்னேசைமழுங்கல்; அதிர்வு நரம்பைச்சிதறவுந்தலெனைக்கொள்க. இதனை, "இன்னிசை வழிய தன்றி யிசைத்தல்செம் பகைய தாகுஞ், சொன்ன மாத் திரையி னேங்க விசைத்திடுஞ் சுருதி யார்ப்பே, மன்னிய விசைவ ராது மழுங்குதல் கூட மாகு, நன்னுதால் சிதற வுந்த லதிர்வென நாட்டி னூரே" என்பதனுற்கொள்க; இது பஞ்சபாரதீயம்.

அன்றி, [2] "செம்பகை யென்பது பண்ணே ளெரா, வின்பமி லோசை யென்மனுர் புலவர்", "ஆர்ப்பெனப் படுவ தளவிறந் திசைக்கும்", "கூடமென் பது குறியுற விளம்பின், வாய்வதின் வராது மழுங்கியிசைப் பதுவே", "அதிர் வெனப்படுவ திழுமென லின்றிச், சிதறி யுரைக்குந ருச்சரிப் பிசையே" எனக் கூறினுருமுளர். இவைநான்கும் மரக்குற்றத்தாற் பிறக்கும்; என்னை? "நீரிலே நிற்ற லழுகுதல் வேத னிலமயக்குப், பாரிலே நிற்ற லிடிவீழ்த நேய்மரப் பாற் படல்கோ, ணேரிலே செம்பகை யார்ப்பொடு கூட மதிர்வுநிற்றல், சேரினேர் பண்க ணிறமயக்குப் படுஞ் சிற்றிடையே" என்றுர்.

(இ - ள்.) இச்சொல்லப்பட்ட பகைநரம்புநான்கும் புகாமல் நீக்கும்விரைக் கடைப்பிடித்தறிந்தென்க.

ஙக - உ. பிழையா மரபின்.....இறுவாய்க் கட்டி

[1] இலப்பதிகாரம், கானல்வரி, பக். உoங.

[2] சீவகசிந்தாமணி, எகசு - கூ. உரை. மேற்.

(இ - ள்.) மயங்காமரபினையுடைய இப்பதிகத்திற்கோவையாகிய சகோட யாழை உழைகுரலாகக் கைக்கிளைதாரமாகக் கட்டியென்க.

இக்குரன்முதலெழினும் முற்றுரைன்றியது தாரம்; "தாரத்துட் டோன்று மூழையுழை யுட்டோன்று, மோருங் குரல்குரலி னுட்டோன்றிச் - சேருமிளி, யுட்டோன்றுந் தத்தத்துட் டோன்றும் விளரியுட், கைக்கிளை தோன்றும் பிறப்பு" என்பதனால், தாரத்தில் முதற்பிறப்பதாகிய உழைகுரலாய்க் கைக்கிளை தாரமாகிய கோடிப்பாலை முதற்பிறக்கக் கட்டியென்க.

உக - ச. இணைகிளை.....எய்த நோக்கி

இணை கிளை பகை நட்பென்றுசொல்லப்பட்ட நான்கினும்; இணை-இரண்டு நரம்பு; என்னை? "இணையெனப் படுவ கீழு மேலு, மணையத் தோன்று மளவின வென்ப."

கிளை-ஐந்துநரம்பு; என்னை? "கிளையெனப் படுவ கிளக்குங் காலைக், குரலே யிளியே தத்தம் விளரி, கைக்கிளை யெனவைந் தாகு மென்ப."

பகை - ஆறும்மூன்றும்; "நின்ற நரம்பிற் காறு மூன்றுஞ், சென்றுபெற நிற்பது கூடமாகும்." கூடமெனினும் பகையெனினுமொக்கும்.

நட்பு - * நாலுநரம்பு.....

(இ - ள்.) இந்நான்கனுள் இசைபுணருங்குறிலையைப் பொருந்தநோக்கி யென்க.

உநி. குரல்வா யிளிவாய்க் கேட்டனள்—(இ - ள்.) குரல்முதலாக எடுத்து இளிகுரலாக வாசித்தாளென்க.

இனி வட்டப்பாலை இடமுறைத்திரிபு கூறுகின்றார்: "குன்றுக் குரற்பாதி தாரத்தி லொன்று, நடுவ ணிணைகிளை யாக்கிக் - கொடியிடையாய், தாரத்தி லொன்று விளரிமே லேறடவந், நேரத் ததுகுரலா நின்று." என் - னின், உழை குரலாகிய கோடிப்பாலைநிற்க இடமுறைதிரியுமிடத்துக் குரல்குரலாயது செம்பாலை; இதனிலே குரலிற்பாதியும் தாரத்திலொன்றும் இரண்டின் அந் தரத்திலே கிளையாக்கித் தாரத்திலே நின்ற ஓரலகை விளரியின்மேலேறடவிளரி குரலாய்ப் பிறிமலைப்பாலையாம். இம்முறையே தத்தம் குரலாயது செவ்வழிப் பாலையாம். † இளி குரலாயது அரும்பாலையாம். கைக்கிளை குரலாயது மேற் செம்பாலையாம். தாரம் குரலாயது விளரிப்பாலையாம். என அந்தரமைத்து நீக்கி உறழ்ந்து கண்டுகொள்க. இவ்விடத்தில் தாரநரம்பின் அந்தரக்கோலைத் தாரமென்றது "தன்னமுந் தாரமுந் தன்வழிப்படர" என்னுஞ்சூத்திரவிதியா னென்க. இவ்வேழு பெரும்பாலையினையும் முதலடித்து நூற்றுமூன்று பண்ணும் பிறக்கும்; அவற்றுள் செம்பாலையுட்பிறக்கும் பண்கள்:—பாலையாழ், நாகராகம், ஆகரி, தோடி, கௌடி, காந்தாரம், செந்துருத்தி, உதயகிரியெனவிவை. பிறவும் விரிப்பின் உரைபெருகுமாதலின் அவற்றை வந்தவழிக்கண்டுகொள்க. "நாற்பெரும் பண்ணுஞ் சாதி நான்கும், பாற்படு திறனும் பா ணெனப் படுமே" என்றார்.

(பி - ம்.) * 'நாலாநரம்பு; கிளை ஐந்தாநரம்பு, பகை ஆறுநரம்பு.' † 'விளரிகுரலாயது'

நடு - சூ. அன்றியும்.....ஏழினும்

(இ - ள்.) அங்ஙனம் இளிகுரலாக வாசித்தலேயன்றி முற்கூறியவகையே ஐந்து நரம்பானமுறைமையின் ஏழுநரம்பும் வாசித்தாளென்றவாறு.

நடை - சக. உழைமுதலாகவும்.....நலம்பெற நோக்கி

உழை குரன்முதல் உழை குரலீறுவுள்ள நான்கிற்கும் அகநிலைமருதமுதற் பெருகியன்மருதம் ஈறுவுள்ளநான்கும் நிரனிறை.

(இ - ள்.) முன் அணிந்தமுறையே உழைகுரலாய கோடிப்பாலே அகநிலை மருதமாகவும், உழைகுரலாய்க் கைக்கிளைகுரலாய மேற்செம்பாலே புறநிலைமருத மாகவும், குரல்குரலாய செம்பாலை அருகியன்மருதமாகவும், குரல்தாரமாய்த் தாரங்குரலாயவிளரிப்பாலே பெருகியன்மருதமாகவும் இச்சொல்லப்பட்டசாதிப் பெரும்பண்ணையும் ஓசையினிமைபெற நோக்கியென்றவாறு.

சஉ. மூவகை யியக்கமு முறையுணிக் கழிப்பி

(இ - ள்.) வலிவும் மெலிவும் சமனுமென்னும் மூவகைப்பட்டசுருதியும் நிற்குநிலைமையிலே நிறுத்தி முறையானே அத்தொழிலைக் கழித்தென்க.

சஙு - ச. திறத்து வழிப்படூஉம்.....பூங்கொடி மயங்கி

(இ - ள்.) திறங்கட்குப் பிறப்பிடமாயுள்ள இச்சாதிப்பெரும்பண்களுட் புறநிலைமருதப்பண்ணை வாசித்தலிலே மயங்கியென்க.

அன்றி அத்திறங்களுட் புறநீர்மையென்னும் திறத்தில் மயங்கியென்றுமாம்.

சஙு - எக. சண்பக மாதவி.....கொணர்க வீங்கென

(இ - ள்.) அங்ஙனம் கண்டத்தினும் கலத்தினுமயங்கிய மாதவியாகிய பூங்கொடி பசந்தமேனியளாய் நறியவாளியாலே பெரியநிலமுழுதையுமாண்ட ஒப்பில்லாத தனிச்செங்கோலையுடைய ஒருவனுகிய காமராசனுணையாலே ஒரு முகமன்றி உலகமெல்லாம் எதிர்கொண்டு தொழுதிறைஞ்சப்படும் அவன்திரு முகத்தைப் போகவிட்க்கடவோமென்னும் நினைவாற்பிறந்த செவ்வியையுடைய ளாகிச் சண்பகமுதலியவற்றுல் நெருங்கத்தொடுத்த பூவின் மணமாறுபடும் செவ்வியையுடைய மாலையினிடையே தொடுத்த செவ்வி எதிர்கொள்ள முதிர்ந்த தாழைப்பூவினது முடக்கத்தையுடைய வெள்ளியதோட்டிலே அதற்கு அயல தாகியதோர் பித்திகையினது கொழுவியமுகையாகிய எழுத்தாணியைக் கையில் வாங்கிக்கொண்டு அதனைச்செம்பஞ்சின்குழம்பிற்றேய்த்து உதறி எழுதுகின்ற வள் உலகின்மிக்க உயிர்ப்பன்மைகளைத் தாம் மகிழ்ந்துணையோடு புணர்விக்கும் இனிய இளவேனிலென்பான் இளவரசன்; ஆதலால் நெறிப்படச்செய்யான்; அவனேயன்றியும், அந்திப்பொழுதின்கண்ணே அரும்புகின்ற விரகவிதனத்தின் மேலே வந்துதோன்றிய திங்களாகிய செல்வனும் இன்றுண்டான பண்பன்றிப் பிறப்பினும் கோட்டமுடையன்; ஆதலாற் புணர்ந்தோர் இடைப்படுப்பினும் தணந்தோர் மற்றப்பினும் நறிய பூவாளியாலே இன்பநுகருமியைக்கொண்டு விடுதல் அவற்குப் புதியதொன்றன்று; இதனை அறிமினென்றுகொண்டு அறு

பத்து நால்வகைக்கலைகளும் வழிபட்டுப் புகழ்ந்தொழுக அவற்றுட் பண்களும் திறங்களுமாகிய அவை புறங்கூறப்படுகாவில் முற்றுத மழலைச்சொல்லோடே அப்பாசுரத்தைப் பேசிப்பேசியெழுதி நீணவுமிகும் மாலைக்காலத்தே வசந்த மாலையை வருகவெனவழைத்து இம்மாலையிலெழுதிய பொருளையெல்லாம் கோவலற்கேற்பச்சொல்லி இப்பொழுதே இங்கே கொணர்வாயாகவென்று ளென்க.

தமாலம் - பச்சிலை. கருமுகை - பித்திகை. கத்திகை - தொடைவிசேடம். இடைநிலம் - தொடைநடு. தாழைமுடங்கல், இருபெயரொட்டுமாம். போக்கும் - போக்விடும். செவ்வி - மனோரதமுமாம். அலத்தகச்சேறு - செம்பஞ்சுக் களி.

[1] திங்கட்செல்வன் - "கால முலகம்" என்னுஞ்சூத்திரத்துள் ஞாயிறு திங்களென்பன உயர்திணைமேலனவாய்ப் பால்பிரிந்திசையாவென்னும், "நின்றுங் கிசைத்த லிவணியல் பின்று" எனவே நின்றமுறையானே ஈறுபெற்றுநின்று உயர்திணையாயிசைத்தல் இவணியல்பின்றெனவுங்கூறிய ஆசிரியர், "இசைத்தலு முரிய வேறிடத்தான" எனக் காலமுதலாகியசொல் உயர்திணையாயிசைத்தலு முரிய; ஈறுதிரிந்து வாய்பாடு வேறுபட்டவழி யென்றராகலின், இதுவும் ஈறு திரிந்து திங்கட்செல்வனென்றுயிற்றென்க. மேலும் இவ்வாறு வருவனவற்றிற் கும் இவ்விதிகொள்க. திங்களாகிய செல்வனைப் பண்பொட்டுவிரிக்க.

செவ்வியனல்லன்: செம்மை - நடுவு நிலைமை; [2] "செவ்வியான் கேடும்" எனவும், [3] "செவ்விய ரல்லார்" எனவுங்கூறினமையின். பொழுதிடைப் படுப் பினும் - சிறிதுபொழுதை இடையே பயமின்றுகக் கழிப்பினும்; என்றது ஊடல் நீட்டிப்பினுமென்றபடி. தணத்தல் - ஒதன் முதலியவற்றுற்சென்று குறித்துக் கூறும் பருவம் பொய்த்தல். வாளியின்: இன், ஆன்; உருபுமயக்கம். நல்லுயிர் - காமவின்பத்தைதருமுயிர். இறும்பூது - புதுமை. அறிந்தீமின் - அறி மின்; பகுதிப்பொருள் விகுதி. புறங்கூறுநர் - புறங்கூறுதற்குக்காரணமான நர்; புறங்கூற்று - நிகரல்லார் தம்பொருமையான் அவரில்வழி இகழ்ந்துகூறு பவாகலின் இவையுங்கூறின; இவற்றைப் பழிக்குநாவெனவுமாம். தீவாய யவிழ்ந்த - கட்டுக்குலைந்த; என்றது தன்வரைத்தன்றுதல்; என்னே? [4] "பஞ் சிறை கொண்ட பைம்பொற் கலபுறஞ் சூழ வைத்து, நஞ்சிறை கொண்ட நாகப் படம்பழித் தகன்ற வல்குல், வெஞ்சிறைப் பள்ளி யாக விழுமுலைத் தடத்து வைகத், தஞ்சிறைப் படுக்க லாதார் தம்பரி வொழிக வென்றுள்" என்றர் பிறரும். தணிப்படுகாமம் - சிறந்தார்க்கும் உரைக்கலாவதன்றுய் அரிதாய் அகத்தே சுட் டிருக்குங்காமம். விளைதல் - முற்றுதல். மழலையின் - மழலையோடே. படருறு மாலை - நீணவுமிகுமாலை; படர் - துன்பமுமாம். தூணிபொருள் * மறத்தலால் வருந்தண்டம்; திருவாணைக்குமேலாய ஆணை இல்லையென்பதுவழக்கு. அளித்து - இணைமையாற்கொடுத்து; "உணர்த்தியு மண்ட மாணையி னிறைஞ்சும்" என்ப. கத்திகையிடைநிலத்தில்லாத்த தாழைவெண்டோட்டின் எழுதியென்க.

---

[1] சிலப்பதிகாரம். பக். கடக, பார்க்க. [2] திருக்குறள், ககக.

[3] தாலடியார், 'புல்லறிவாண்மை, உ. [4] சீவகசிந்தாமணி, கடுகஅ.

* (பீ - ம்.) 'இமைத்தலால்'

தணிபொருளென்பதற்குத் தீர்ந்தபொருளெனினுமமையும். அளிக்கவென்னுது அளித்துக் கொணர்கவென்றுரை, இது காமன் திருமுகமாதலானும் முன்னம் இவன்பிரிவது அறியாமையானுமெனக்கொள்க. இனி இவ்வாறன்றி அந்திப் போதகமென்பதனை யானையாக்கி அதன்புறக்கழுத்திற்றேன்றிய திங்களெனினுமாம்; ஆகவே நாடுகாண்காதையுள் [1] "வைகறை யாமத்து, மீன்றிகழ் விசும்பின் வெண்மதி நீங்கக், காரிரு ணின்ற கடைநாட் கங்கு, லூழ்வினை கடைஇ யுள்ளந் துரப்ப.....,....நெடுங்கடைகழிந்து" என்பதனுற் பூருவபக்கத்துப் பதினைஞ்சாம்பக்கமாதலான் அதனோடும், [2] "ஆடித் திங்கட் பேரிருட் பக்கத், தழல்சேர் சூட்டத் தட்டமி ஞான்று, வெள்ளி வாரத் தொள்ளெரி யுண்ண, வுரைசான் மதுரையோ டுரைசுகே டுறுமென, முரையு முண்டு" என்பதனோடும் பிறவற்றோடும் மாறுகொள்ளுமாதலான் அவ்வாறுகூறுதல் பொருந்தாதென வுணர்க. இனி இவ்விழவின் முதலும் முடிவும் கடலாட்டும் புலவியும் புறப்பாடும்வதிச்செலவும்பொறையுயிர்த்திருப்பும் நிறைபதிப்புகலும் தீதுறுநாளும் ஊர்தீப்பாடும் முதனடுவிறுதியாகக் கட்டுரைகாதையுள் விரியக்கூறுவாம்; அதனுட் கண்டுகொள்க. இனி இதன்பிறப்பை இகழ்ந்துகூறுவாள், தந்தைதாயரிடத்தன்றி அலித்தன்மையதாகிய மாலையென்னும்யானையின் பிடரிற்பிறந்த செல்வனென்றுரைனினுமமையும். செவ்வியனல்லன் - புணர்ந்தார்க்கும் பிரிந்தார்க்கும் ஒருதன்மையனல்லனெனினுமமையும்.

பூங்கொடி இருக்கையளாகிச் சேர்த்திக் கழீஇ அறிந்து கட்டி நோக்கிக் கேட்டனள்; கேட்டு நோக்கி இயக்கிக் கழிப்பி மயங்கிச் செவ்வியளாகி அனைஇக் கைக்கொண்டு எழுதிக் கூஉய் அளித்துக் கொணர்க ஈங்கென்றுரைன வினை முடிக்க.

எஉ - ங. மாலை வாங்கிய.....கோவலற் களிப்ப

(இ - ள்.) இங்ஙனம் மாதவிகூற அம்மாலையைவாங்கிய வசந்தமாலை போய் எண்வகைக் கூலங்கள்செறிந்த மறுகினையுடைய கோவலனைக்கண்டு அவனுக்கு அம்மாலையைக் கொடுப்பவென்க.

போயெனவும் கண்டெனவும் வருவிக்க

எச - எ. திலகமு மளகமும்.....கண்கூடு வரியும்

இனிக் குரவையும் வரியுமென்னுமிரண்டனுள், வரிகூறுவார், அதனை இவள் தொழிலாகச் சார்த்திக்கூறுகின்றார்:—

வரியாவது - அவரவர் பிறந்தநிலத்தன்மையும் பிறப்பிற்கேற்றதொழிற்றன்மையும் தோன்ற நடித்தல்; என்னை? "வரியெனப்படுவது.....வழங்கல்" என்றாராகலின்.

அவ்வரி எட்டுவகைப்படும்:—கண்கூடிவரி, காண்வரி, உள்வரி, புறவரி, கிளர்வரி, தேர்ச்சிவரி, காட்சிவரி, எடுத்துக்கோள்வரியென; என்னை? "கண்கூடு.....நெறித்தே" என்பவாகலின்.

---

[1] சிலப்பதிகாரம், கo: க - அ. [2] சிலப்பதிகாரம், உஅ: கஉஉ - சு.

அவற்றுட் கண்கூடாவது பிரியதரிசனம் ; அஃதாவது காட்சி ; அஃது ஒருவர்கூட்டவன்றித் தானே வந்துநிற்குநிலைமை; என்னை ? "கண்கூடென்பது கருதுங் காலை, யிசைப்ப வாராது தானே வந்து, தலைப்பெய்து நிற்குந் தன்மைத்தென்ப" என்றுராகலின்.

(இ - ள்.) சிலைமுதலியவற்றை உறுப்பாகக்கொண்ட திலகமுதலியவற்றையுடைய மாதர்முகத்தின் மதர்த்தநோக்கத்தோடே என்மேற் காதலையுடையாள் போற் றோன்றி முதற்கண் எதிர்முகமாகநின்றுநடித்த நடிப்பும்,

எஅ - அஙூ. புயல்சுமந்து.....காண்வரிக் கோலமும்

"காண்வரி யென்பது காணுங் காலை, வந்த பின்னர் மனமகிழ் வுறுவன, தந்து நீங்குந் தன்மைய தாகும்."

(இ - ள்.) புயல்சுமந்துவருந்திக் கதிரைப்பொழியும் மதியிடத்தே கயல்களாலாவித்திரிகின்ற செவ்வியோடே பாகைப்பொதிந்த பவளத்தைத்திறந்து ஒளியைத்தருகின்ற முத்தையொத்த நகைநலத்தைக்காட்டி வருகவெனவந்து போகவெனப்போகிய கரிய நெடிய கண்ணுடைய காண்வரியென்னுங்கோலமும்,

இளமுத்தென்றூர்,ஒளிபெறுதல்கருதி. இளநாகின்றமுத்தெனினுமமையும்.

அச - கூ. அந்தி மாலை.....உள்வரி யாடலும்

உள்வரியென்றது - வேற்றுருக்கொண்டுநடித்தல் ; என்னை ? "உள்வரி யென்ப தணர்த்துங் காலை, மண்டல மாக்கள் பிறிதோ ருருவங், கொண்டுங் கொள்ளாது மாடுதற் குரித்தே" என்றுராகலின் ; பாண்டவர் பிறிதுருவங் கொண்டதுவுமது. மண்டலமாக்களாவார், அரசர்.

(இ - ள்.) யான் ஊடிப் பிரிந்தகாலத்து அந்திமாலைவந்ததாகப் பிரிவாற்றுமலிரங்கி என்சிந்தைநோய்மிகும் வறுமையைத் தானறிந்து கிளியொத்த கிளவியையும் மடப்பம்பொருந்திய அன்னத்தையொத்த நடையினையும் களித்த மயில்போலுஞ் சாயலினையுங்கரந்தனளாகி வேல்போன்ற கண்ணையுடைய தனது சிலதியர் கோலத்தைக்கொண்டு தான் தனிவந்து நின்றுநடித்த உள்வரியென்னு நடிப்பும்.

கூ0 - கூஙூ. சிலம்புவாய் புலம்பலும்.....புன்புற வரியும்

புறவரியாவது - தலைவனுடனணையாது புறத்துநின்று விளையாடுவது ; என்னை ? "புறவரி யென்பது புணர்க்குங் காலை, யிசைப்ப வந்து தலைவன்மூற் படாது, புறத்துநின் றாடி விடைபெறு வதுவே" என்றுராகலின்.

(இ - ள்.) கலங்களைப் பூணையவும்பெறுத நுசுப்பினையுடையாள் சிலம்புவாய்விட்டுப் புலம்பலும் மேகலை வாய்விட்டார்ப்பலும் என்றகாதலையுடையாள் போல்வந்து நோக்கிய நோக்கோடே தன்னைப்பிரிதலால் தன்மைதிரிந்த எனது வறுமையையறிந்தும் என்னுடனணையாது புறம்பேநின்றுநடித்தநடிப்பும்,

நுசுப்பினள் புலம்பலும் ஆர்ப்பலும் நோக்கமொடு நோக்கியும் நின்றாடிய புறவரியுமென்க.

கூச - கூக. கோதையுங் குழலும்...கிளர்வரிக் கோலமும்

கிளர்வரியென்றது - நடுநின்றார் இருவருக்கும் சந்துசொல்லக் கேட்டுநிற் பது; என்னை? "இளர்வரி யென்பது இளக்குங் காலை, யொருவ ருய்ப்பத் தோன்றி யவர்வா, யிருபுற மொழிப்பொருள் கேட்டுநிற் பதுவே" என்றாரா கலின்.

(இ - ள்.) நன்னுதல் கோதைமுதலியன மின்னிடையைவருத்தத் தோன்றி வந்தணுகாதே புறவாயிலேவந்துநின்று சிலதியர் வார்த்தைகேட்டு மறுமாற்றஞ் சொல்லப் புணர்ச்சியை உட்பொதிந்திருக்கின்ற எனது புலவிச்சொல்லைக் கேட்டு அதனை இருபுறமொழிப்பொருளாகக்கொண்டு தளர்ந்தமேனியினையும் அழகியகூந்தலினையுமுடையாள் புலவியாற்போகின்றுள்போல நடித்துப்போன நடிப்பும்,

இதனுற்கூறியது: யான்புணர்ச்சிநிமித்தமாகப் புலந்து தன்சிலதியர்க்குச் சொல்லிவிட்ட மொழியைக்கேட்டு அப்படியன்றிப் புலந்துசொன்னேனை நடித்துப்போன நடிப்பென்றபடி.

கo உ - சு. பிரிந்துறை காலத்து.....தேர்ச்சிவரி யன்றியும்

தேர்ச்சிவரியென்றது - நாயகன்இளகட்குத் தன்றுன்பங்களைத் தேடித் தேடிச்சொல்லுதல்; என்னை? ["தேர்ச்சி யென்பது தெரியுங் காலைக்,] கெட்ட மாக்கள் இளகண் டவர்முன், பட்டது முற்றது நினை இ யிருந்து, தேர்ச்சியோ டிரைப்பது தேர்ச்சிவரி யாகும்" என்றாராகலின்.

(இ - ள்.) நான் பிரிந்துறைபொழுதில் தான் பிரிவாற்றாது வருந்தின னாகப்பாவித்து எனது மிக்க இளகட்குத் தனது மிக்க துயரத்தைத் தன்மயக் கத்தாலே தேர்ந்துதேர்ந்து சொல்கின்றுளாகநடித்த நடிப்பும்; அதுவன்றியும்,

கo ஙு - சு. வண்டலர் கோதை .....காட்சி வரியும்

காட்சிவரியென்றது - தன்வருத்தத்தைப் பலருங்காணும்படி நடித்தல்; என்னை? "காட்சிவரி யென்பது கருதுங் காலைக், கெட்ட மாக்கள் இளகண் டவர்முனர்ப், பட்டது கூறிப் பரிந்துநிற் பதுவே" என்றாராகலின்.

(இ - ள்.) வண்டலர்த்துங்கோதையையுடையாள் மாலைக்காலத்தின்கண் ணேமயங்கிக் கண்டோரெவர்க்கும் தன்விரகத்தைச்சொல்லிநடித்த நடிப்பும்,

கo எ - அ. அடுத்தடுத் தவர்முன்.....எடுத்துக்கோள் வரியும்

எடுத்துக்கோள்வரியென்றது - தான் கையறவெய்தி வீழ்ந்தாளாகவீழ்ந்து பிறர் எடுத்துக்கொள்ளும்படி நடித்தல்; என்னை? "எடுத்துக் கோளி யிசைக் குங் காலை, அடுத்தடுத் தழிந்து மாழ்கி யயலவ, ரெடுத்துக் கோள்புரிந்த தெடுத் துக் கோளே" என்றாராகலின்.

(இ - ள்.) அவர் முன்பு தான் மேன்மேலுமயங்கியமயக்கத்தை அவர் எடுத்துத்தீர்த்த எடுத்துக்கோள்வரியென்னுநடிப்பும்,

கoஞ - கo. ஆடன் மகளே.....பைந்தொடி தனக்கென

(இ - ள்.) ஆயிழாய்! பைந்தொடி நாடகமகளாதலான், இங்ஙனநடித்தல் அவட்கு இயல்பன்றேவென்றுகூறவென்க.

இவற்றுற்கூறியது: முன்பு தான் இவளோடு கூடியும் ஊடியும் செல்கின்ற காலத்து இங்ஙனநடித்தநடிப்பை நாடகவழக்குப்பாகிய கண்கூடுமுதல் எடுத்துக் கோளிறுயுள்ள வரி எட்டினுலேனும் சிலேடித்துக்கூறிய கோவலன் நாடகமகளிர்க்கு இந்நாடகம் பிறந்துடைமை யன்றுவெனச் சொல்லி ஓலையை மறுத்தானென்பது.

ககக - ச. அணித்தோட்டு.....சென்றுரைப்ப

(இ - ள்.) அழகினையுடைய பொற்றுடணிந்த திருமுகத்தையுடைய ஆயிழையெழுதிய அழகிய தாழந்தோட்டித் திருமுகத்தைக் கோவலன் மறுப்பத் தான் அதற்குவருந்தி வாடிய உள்ளத்தையுடைய வசந்தமாலை மாதவிக்கு விரைந்து சென்று உரைப்பவென்க.

அணியும் மணியும் அழகு. தோடு - பொற்றோடும், தாழந்தோடும். தூணை-விரைவு.

ககஙி - அ. மாலை வாரா ராயினும்.....மாதவி தானென்.

தூணைந்துசென்றுரைப்பவென்றதனுன் ஆற்றுளாகியதலைவியை ஆற்றுவித்தற்பொருட்டுத் தலைவனே இயற்பழித்ததோழிக்குத் தலைவி இயற்படமொழிகின்றுளாகலின், இன்னும் இம்மாலைப்பொழுதினுள்வருவார்; வாராராயினும் காலைப்பொழுதில் ஈண்டு நாம் காண்போமெனச்சொன்னுள்; சொன்னவள் தானிருந்தமலரமளிக்கண்ணே செயலற்ற நெஞ்சத்தோடு வீழ்ந்தாள்; வீழ்ந்தவள் அமளிமிசையே இமைபொருந்தாமற் கிடந்தனள்; அவள் யாரெனிற் கரிய மலர்போலும் நெடியகண்ணையுடைய மாதவிதானென்க

இனி, தான் அசையுமாறம். அளிப்ப அவன் பாடுபெற்றனவென்றுசொல்லி மறுப்ப அதனைக்கட்டுரைத்தவளுக்குக் காண்குவமெனச்சொல்லிப் பொருந்தாதவதிந்தனனென்க. வதிதல் - தங்குதல்; பொருந்தாவதிதல் - தன்கொழுநனைக் கூடாவதிதலுமாம்.

இது, நீலமண்டில ஆசிரியப்பா.

ஊடினீ ரெல்லா .....காண்.

(இ - ள்.) உலகில் ஒருவனும் ஒருத்தியுமாயுள்ளோரில் ஊடினவர்களே! கீயிரெல்லாம் அநங்கன்றிருவாணையே; கூடுமினென்று குயிற்குலங்கள் சாற்ற, இங்ஙனம்பிரிந்து சாலநீடுதலால் ஆற்றுளாகி இளவேனிற்பொழுதில் நின்னைடுகலந்தாளுடைய மெல்லிய பூவிலெழுதிய திருமுகத்தை, கானலிடத்து அவள் பாடியபாட்டிற்கு அலந்தோனே! காண்பாயாகவென்று ஓலையைீட்டினுனென்க.

அ.—வேனிற்காதை முற்றிற்று.

ஒன்பதாவது

கனத்திறமுரைத்தகாதை.

[1] அகனக ரெல்லா மரும்பவிழ் முல்லை
[2] நிகர்மலர் நெல்லொடு தூஉய்ப் பகன்மாய்ந்த
மாலை மணிவிளக்கங் காட்டி யிரவிற்கோர்
கோலங் கொடியிடையார் தாங்கொள்ள மேலோர்நாண்
[3] மாலதி மாற்றுண் மகவுக்குப் பாலளிக்கப்
பால்விக்கிப் பாலகன் றுன்சோர மாலதியும்
பார்ப்பா ளெடுமணையா ளென்மேற் படாதனவிட்
டேற்பன கூறுரென் றேங்கி மகக்கொண்
டமரர் தருக்கோட்டம் வெள்யானைக் கோட்டம்
கஎ புகர்வெள்ளை நாகர்தங் கோட்டம் பகல்*வாயி
லுச்சிக் கிழான்கோட்ட மூர்க்கோட்டம் வேற்கோட்டம்
வச்சிரக் கோட்டம் புறம்பணையான் வாழ்கோட்ட

உ. நிகர்மலர் - ஒளிமலர்.

உ - ங. தூவி விளக்கேற்றியென்க.

ங - ச. இரவிற்கோர்கோலம்-இராப்பொழுதைக்குஆம்படி நொய்தானவை உடித்தும் புணர்ந்தும் ஒப்பித்தகோலம்.

ச. (பா) மேலோர்நாள் - முன்னோர்நாள்.

சு. சோர - சாய.

எ. படாதன - இல்லாதன.

கூ. அமரர் தருக்கோட்டம் - கற்பகம் நிற்குங்கோயில்; சாந்திகரைக் கோட்டமெனினுமாம்.

கஎ. வெள்ளைநாகர் - பலதேவர். பகல்வாயில் - பகற்பொழுதுதிறவாயில்; கீழ்த்திசை.

கஎ - கக. உச்சிக்கிழான் - சூரியன்; அன்றி, பகல்வாயில் உச்சிக்கிழான்-பகற்பொழுதுக்குவழியான உச்சிக்கிழானென்றுமாம். ஊர்க்கோட்டம் - ஸ்ரீகை லாயம்நிற்கும்கோயில். வேற்கோட்டம் - முருகன்கோயில்.

கஉ. வச்சிரக்கோட்டம் - வச்சிராயுதமிருக்கிறகோயில். புறம்பணையான்-மாசாத்தன்; புறம்பு அணைந்தவிடம் புறம்பணையாயிற்று.

---

[1] க - உ: முல்லை. அ - கஎ. [3] இ - ஙசு: சிலப். ஙஎ: எஅ - ஙஏ.
[2] சிலப். கூ: சசு. (பி - மீ.) * 'வாயிலுச்சி'

[1] நிக்கந்தக் கோட்ட நிலாக்கோட்டம் புக்கெங்குந்
தேவிர்கா ளெம்முறுநோய் * தீர்மென்று மேவியோர்
கடு பாசண்டச் சாத்தற்குப் பாடு கிடந்தாளுக்
கேசும் படியோ ரிளங்கொடியா † யாகிலாய்
[2] செய்தவ மில்லோர்க்குத் தேவர் வரங்கொடார்
பொய்யுரையே யன்று பொருளுரையே கையிற்
படுபிணந்தா வென்று பறித்தவள்கைக் கொண்டு
உ0 சுடுகாட்டுக் கோட்டத்துத் தூங்கிருளிற் சென்றுங்
கிடுபிணந் தின்னு மிடாகினிப்பேய் வாங்கி
மடியகத் திட்டாண் மகவை யிடியுண்ட
மஞ்ஞைபோ லேங்கி யழுதாளுக் கச்சாத்த
[3] ‡ னஞ்ஞைநீ யேங்கி யழலென்று முன்னீ
உடு யுயிர்க்குழவி காணுயென் றக்குழவி யாயோர்
குயிற்பொதும்பர் நீழற் குறுக வயிர்ப்பின்றி
மாயக் குழவி யெடுத்து மடித்திரைத்துத்
தாய்கைக் கொடுத்தாளத் தையலா யே
மறையோன்பின் மாணியாய் வான்பொருட் கேள்வித்

கசு. நிக்கந்தக்கோட்டம்-நிக்கந்தத்தேவரான அருகர்கோயில். நிலாக்கோட்டம் - சந்திரன்கோயில்.

கடு. பாசண்டச்சாத்தற்கு - சாத்தனென்கிற ஐயன்கோயிலிலே.

கசு. எசும்படி-அழகால் எல்லாரையும் இகழும்படி. ஓர் இளங்கொடியாய்-ஒரு பெண்கொடியாகி.

கஅ. பொருளுரை - மெய்யுரை.

கக. படுதல் - உண்டாதல். (பா) பறித்தாள் - பறித்து.

உஉ. மடியகம் - வயிற்றிடம்; [4] 'படியை மடியகத் திட்டான்'' என்றுராதலால்.

(கசு) பிணந்தாவென்றுசொல்லிப் பறித்து (உஉ) வயிற்றிடத்திட்டாளென்க.

உஎ. மடித்திரைத்து - வயிற்றிலே அணைத்து; மடியாகியபுடைவையையுடைய ஒக்கலையிலே திரைத்தென்றுமாம்.

---

[1] தொல்காப்பியம், தொகை. சூ. கக - ந. மேற்
[2] செவ்வைச்சூடுவார்பாகவதம், கo-ஆம் கந்தம், கக. கு-ஆம் செய்யுளைப் பார்க்க.
[3] அஞ்ஞை - அன்னை; தணிகை. சீபரி. கிசுக.
[4] நான்மணிக்கடிகை, கடவுள்வாழ்த்து.
(பி - ம்.) * 'தீர்மினெனமேவி' † 'ஆகிலாச்செய்' ‡ 'அன்னை'

ஙூ0 துறைபோ யவர்முடிந்த பின்ன ரிறையோனுந்
தாயத்தா ரோடும் வழக்குரைத்துத் தந்தைக்குந்
தாயர்க்கும் வேண்டுங் * கடன்கழித்து மேயநாட்
டேவந்தி யென்பாண் மனைவி யவளுக்குப்
பூவந்த வுண்கண் பொறுக்கென்று மேவித்தன்
ஙூஙூ † மூவா விளநலங் காட்டியெங் கோட்டத்து
நீவா வெனவுரைத்து நீங்குதலுந் ‡ தூமொழி
யார்த்த கணவ னகன்றனன் போயெங்குந்
தீர்த்தத் துறைபடிவே னென்றவனைப் பேர்த்திங்ஙன்
மீட்டுத் தருவா யெனவொன்றன் மேலிட்டுக்
சஙூ கோட்டம் வழிபாடு கொண்டிருப்பாள் வாட்டருஞ்சீர்க்
கண்ணகி நல்லாளுக் குற்ற குறையுண்டென்
றெண்ணிய நெஞ்சத் தினையளாய் நண்ணி
யறுகு சிறுபூவி னெல்லொடு தூஉய்ச் சென்று
பெறுக கணவனே டென்றுள் பெறுகேன்

ஙூ0. அவர் - மாதாபிதாக்கள். முடிதல் - மரித்தல்..

ஙூக. தாயத்தார் - ஞாதிகள்.

ஙூஉ. கடன் - உதகக்கிரியை; பலிகன்மம் (பி.ரி) மேவினுள் - மேயினவள்.

ஙூசு. பூவந்தவுண்கண் - பூப்போலுமுண்கண். பொறுக்கென்று - பொறுப்பனவாகவென்று; தெய்வயாக்கையாதலாற் பொருதென்று பொறுப்பித்தானென்க. மேவி - கூடி.

ஙூஎ. கங்கைநீர்த்துறைபடிவேனென்று அகன்றவனெனக. .

ஙூஅ - சஙூ. கணவன் துறைபடிவேனென்று அகன்றனனுதலால், அவனைப் பெயர்த்து இங்ஙனம் மீட்டுத்தருவாயென்று உலகத்து ஒன்றன்மேலிட்டுச் சாத்தற்குப் பூவும் நீருந் தூவியிருப்பாள்.

சஉ. இனையளாய் - வருத்தத்தளாய்; இனைதல், ரகுறைந்து இனையாயிற்று.

சஙூ. தூஉய்ச் சென்று - இதற்குப்பரிகாரமாகச் சாத்தற்குத்தூவிப் பின்பு கண்ணகிபாற்சென்று; கண்ணகியிடத்தே தூவியென்பாருமுளர்.

சஙூ - சு. சென்று பெறுக கணவனேடென்றுள்: கூட்டமென ஒரு சொல் வருவிக்க; கணவனெனுங்கூட்டம் பெறுக; உருபுநிற்கப் பொருடொக்கது; தெய்வத்தை வழிபாடுசெய்த அதுகொண்டு பெறுகவென்றுள்.

(பி - மீ.) * 'கடன்செய்து' † 'மூவாவெழினலம்' ‡ 'தூமெழியாளார்த்தகண வனகன்றனனுப்போய்'

சநி கடிக்குமென் னெஞ்சங் கனவினு லென்கை
பிடித்தனன் போயோர் பெரும்பதியுட் பட்டேம்
பட்ட பதியிற் படாத தொருவார்த்தை
யிட்டன ரூரா ரிடுதேளிட் டென்றன்மேற்
கோவலற் குற்றதோர் தீங்கென் றதுகேட்டுக்

நிo காவலன் மூன்னர்யான் கட்டுரைத்தேன் காவலனே
நோக்குற்ற தீங்குமொன் றுண்டா லுரையாடேன்
றீக்குற்றம் போலுஞ் செறிதொடீஇ தீக்குற்ற
முற்றேனெ டுற்ற வுறுவனே டியானுற்ற
நற்றிறங் கேட்கி னகையாகும் பொற்றொடீஇ

நிந கைத்தாயு மல்லை கணவற் கொருநோன்பு
பொய்த்தாய் * பழம்பிறப்பிற் போய்க்கெடுக வுய்த்துக்
கடலொடு காவிரி † சென்றலைக்கு முன்றின்

சநி. கடிக்கும் - ஐயுறும். கனவினல் - கனவினிடத்து.

சசு. பிடித்தனன்போய் - பிடித்துப்போக. போய்ப்பட்டேமென்று இருவர் தொழிலுமாம்.

சஅ. இடிதேளிட்டு - தேள்கொட்டப்படுவார் காணுமல் தேளல்லாத தொன்றை மறைய மேலே போகட்டுப் பயப்படப்பண்ணுதல்; தேளென்று பொய்யே ஒன்றை இட்டாலொப்ப.

சஙு. கோவலற்குற்றதென்றது, பழிமொழியாதலால்.

சஅ - கூ. என்றன்மேற் கோவலற்கு உற்றதோர்தீங்கென்று சொல்ல; சொல்லவென ஒருசொல் வருவிக்க.

நிo - நிக. காவலனேநீர்க்குற்றதீங்குமொன்றுண்டால் - காவலன்பாடும் ஊர்தீப்பாடும் உண்டாகையால். உரையாடேன் - பொல்லாக் கனவாதலால் உனக்குச்சொல்லேன்; [1] "உரையா, நிழிதக்க காணிற் கனவு" என்றாதலின்.

நிஉ. தீக்குற்றம் - கொடியகுற்றம்; அஃதாவது முலைதிருகியெறிதல்.

நிஙு. உறுவன் - மிக்கோன்; என்றது கோவலனை.

நிச. நற்றிறம் - இருவரும் தேவலோகம்புகுதவுள்ள நன்மை. நகையாகு மென்றுள், அதன்மிகுதிகினைந்து. எனவென ஒருசொல்வருவிக்க.

நிந. கைத்தல் - அவனுல் வெறுக்கப்படுதல்.

நிசு. உய்த்து - நீரையுய்த்து.

சஉ - நிசு. என்றது: நீசொன்னபடியே கூட்டம்பெறுவேன்; ஆயினும் ஓரையமுண்டு, கண்டகனவாலேயென்று கண்ணகிசொல்ல, நீகண்டகனக் கொண்டு வருந்தவேண்டா; நீ அவனுல் வெறுக்கப்பட்டாயுமல்லை.

---

[1] பழமொழி, கசஉ. (பி - ம்.) * 'மதுபிறப்பிற்' † 'தின்றலைக்கும்'

மடலவிழ் நெய்தலங் கானற் றடமுள
சோமகுண்டஞ் சூரிய * குண்டந் துறைமூழ்கிக்
சுஎ காமவேள் கோட்டந் தொழுதார் † கணவரொடு
தாமின் புறுவ ருலகத்துத் தையலார்
போகஞ்செய் பூமியினும் போய்ப்பிறப்பர் யாமொருநா
‡ ளாடிது மென்ற வணியிழைக்கவ் வாயிழையாள்
§ பீடன் றெனவிருந்த பின்னரே நீடிய
சுஅ காவலன் போலுங் கடைத்தலையான் வந்துங்
கோவல னென்றுளோர் குற்றிளையாள் கோவலனும்
பாடமை சேக்கையுட் புக்குத்தன் பைந்தொடி
வாடிய மேனி வருத்தங்கண் || டியாவுஞ்
சலம்புணர் கொள்கைச் சலதியொ டாடிக்
எ() குலந்தரு வான்பொருட் குன்றந் தொலைந்த
[1] விலம்பாடு நாணுத் தருமனைக் கென்ன

இஅ - கூ. சோமகுண்டமும் சூரியகுண்டமுமென்னும் பேரையுடையன ; முற்று.

இடு - சுகூ. முற்பிறப்பிற் கணவன்காரணமாக ஒருநோன்பு தப்பினஞ்ஞ் ; அதற்குப் பரிகாரமாவது இந்தக்குண்டம் படிந்தாடிக் கோட்டந்தொழுதல் ; தொழுவார் கணவரொடுகூடி இன்புறுவரென்றுசொல்ல, கண்ணகியும்.

சுஉ. பீடன்றெனவிருந்த பின்னர் - குலத்திற்பிறந்தார்க்குப் பெருமையன்றென இருந்தகாலை.

சுடு - சு. காவலன்போலுங் கோவலன் கடையிடத்தானென்று மாறியுரைக்க; அன்றித் தூரத்தே பார்த்து ஐயுற்று நங்காவலன்போலுமென்று அவன் அணுகினவிடத்து ஐயந்தீர்ந்து கோவலனென்றுளெனினுமாம்; கோவலன்வந்து நங்கடைத்தலையான் ; அவன்றன் நெடுங்காலம் நம்மை நீங்காக் குறிப்பினையுடையனென்றுளெனினுமமையும்.

சுஎ - எ. சிலதிகூறுதலும் கோவலன் உட்புகுந்து.

(சு) கொடியிடையார்தாம் கோலங்கொள்ளாநிற்க, அக்காலத்தே (சுஎ) கோவலன் (சுஎ) பாடமைசேக்கையுட்புக்கென்க.

சுஉ. சலம் - பொய். சலதி - பொய்ச்சி. ஆடி - அனுபவித்து.

எ(. குலந்தருவான்பொருள் - தாயத்தாரால் தரப்பட்டபொருள்.

எக. இலம்பாடு - வறுமை.

---

[1] தொல். புள்ளி. சூ. உக - நி; கூ. உரிச். சூ. சுஉ - நி; இ - வி. சூ. கஉக, உஅக - உரை, மேற்.

* (பி - மீ.) 'குணடத்துறை' † 'கணவனொடு' ‡ 'ஆடுதுமோவென்ற'
§ 'பீடன்றெனவுரைத்தபின்னரே' || 'யாதும்'

நலங்கேழ் முறுவ னகைமுகங் காட்டிச்
* சிலம்புள கொண்மெனச் சேயிழை கேளிச்
சிலம்பு முதலாகச் சென்ற கலனே

எடு † டுலந்தபொரு ளீட்டுத லுற்றேன் மலர்ந்தசீர்
மாட மதுரை யகத்துச்சென் றென்னுடிங்
கேடலர் கோதா ‡ யெழுகென்று நீடி
விணைகடைக் கூட்ட வியங் § கொண்டான் கங்குற்
கணைசுடர் கால்சீயா முன்.

வெண்பா.

காதலி கண்ட கனவு கருநெடுங்கண்
மாதவிதன் சொல்லை || வறிதாக்க—மூதை
விணைகடைக் கூட்ட வியங் ¶ கொண்டான் கங்குற்
கணைசுடர் கால்சீயா முன்.

எஉ. நகை - ஒளி.

எச. சிலம்பு முதலாகவென்றுன், வாணிகஞ்செய்வதற்கு; முதலீடென்ப ராகலான். சென்ற கலன் - முன்பு வாங்கியழித்த ஆபரணம்.

எடு. உலந்தபொருள் - கெட்டபொருள்.

(எசு) மதுரையிடத்துச்சென்று (எடு) ஈட்டுதலுற்றேனென்க.

எள. நீடி - நெடுங்காலநின்று.

எஅ. வியங்கொண்டான் - விணையினது எவலைக் கொண்டான்.

எள - அ. எழுகென்று வியங்கொண்டானென்க.

எஅ - கூ. கங்குலை இடத்துநின்றும் சுடர் போக்குவதன் முன்னென்க; என்றது, இருளிலேபோதல்பற்றி.

"காதலிகண்ட" மாதவிதன்சொல்லை வறிதாக்கவென்றது, வேனிற்காதையிற் [1] 'காலைகாண்குவம்' என்றவார்த்தையை. மூன்றை மூதையாயிற்று.

---

[1] சிலப்பதிகாரம், அ: ககசு.

(பி - ம்.) * சிலம்புகொண் மோவெனச் சேயிழைகே ளிந்தச் சிலம்பு' † உலந்த பெரும்பொருளீட்டுதல்' 'எழுகென்னமூதை' § 'கொண்டார்' || 'வறிதாக்கி', ¶ 'கொண்டார்'

க - ச. அகனகர்.....தாங்கொள்ள

(இ - ள்.) கொடியிடையார், அகன்ற மனையிடமெங்கும் கதிரோன்மறைந்த மாலைக்காலத்தே அரும்பு புரிநெகிழ்ந்த முல்லையினது ஒளிமலரை நெல்லோடே தூவி இல்லுறைதெய்வத்தை வணங்கி மாணிக்கவிளக்கை மைவிளக்கோடே எடுத்து அம்மாலைக்காலத்தே இராப்பொழுதைக்கு ஆம்படி கொழுநர்மார்பைத் தமது முலையாற் பொருந்துதற்கேற்ற கோலங்களைக் கொள்ளாநிற்பவென்க.

என்றது, மகரக்குழைமுதலிய மணியும் பூணும் மதாணியுமுதலிய அணியும் இரட்டையங்கண்ணி பிணையன்முதலிய பணியுங்களைந்து நொய்யனவே பூண்தும் பூண்டும் மூடித்துஞ்செய்தல். அகனகர் - பட்டினப்பாக்கமெனினுமமையும். நிகர் - ஒளி; [1] "நீர்வார் நிகர்மலர் கடுப்ப" என்றார் கதையினும். பகல், ஆகுபெயர். மாய்தல் - மறைதல்; [2] "களிறுமாய்க்குங் கதிர்க்கழனி" என்றாற்போல. மணிவிளக்கம், உம்மைத்தொகை; இருபெயர்க்கண்வந்தது; மணி - அழகுமாம். கோலம் - ஒப்பனை; தமது கொழுநரோடெதிர்க்கும் போர்க்கோலமுமாயிற்று. தாம் - அங்ஙனம் தூவியமகளிர்தாம். [3] "நெல்லு மலருந் தூஉய்க் கைதொழுது, மல்ல லாவண மாலை யயர" என்றார் நெடுநல்வாடையினும்.

ச - சு. மேலோர்நாள்.....பாலகன் ருன்சோர

(இ - ள்.) முன்னொருநாளிலே மாலதியென்பாள் ஒருபார்ப்பனி தனது மாற்றாள் குழவிக்குத் தன்முலைசுரந்தபாலைச் சங்காலூட்ட அப்பால் விக்குதலாலே தன் கையிலே அக்குழவி மரிக்கவென்க.

பால் - ஆன்பாலுமாம். பாலகனென்பது காலவழக்கு. சோர்தல்-மரித்தல்.

சு - அ. மாலதியும்.....மகக்கொண்டு

(இ - ள்.) அங்ஙனம் பாலகன் மரித்தலானே, அம்மாலதியும் பார்ப்பானெடு அவன்மனைவியும் என்மேல் அடாப்பழிசூறுதலொழித்து ஏற்பனசூறாதலால் இதற்கு என்செய்கேனென்றேங்கி அம்மகவைக்கொண்டென்க.

உம்மை, இழிவுசிறப்பு. ஒடி, எண்ணெடு. படாதன - அடாதன. விட்டு-ஒழிந்து.

கூ. அமரர்தருக்கோட்டம்—(இ - ள்.) தேவர்தரு நிற்குங்கோயில்,

வெள்யானைக்கோட்டம்—(இ - ள்.) ஐராவதநிற்குங்கோயில்,

கo. புகர்வெள்ளோகர்தங் கோட்டம்—(இ - ள்.) அழகியயுடைய பலதேவர்கோயில்,

புகர் - அழகு. வெள்ளோகர் - பலதேவர்.

---

[1] இந்தவாக்கியம், அகநானூறு, கக - ஆம் பாடலில் கஉ - ஆம் அடியாகவும் காணப்படுகின்றது.

[2] மதுரைக்காஞ்சி, உசஎ. [3] நெடுநல்வாடை, சசு - ச.

கo - கக. பகல்வாயிலுச்சிக்கிழான்கோட்டம்— (இ - ள்.) கீழ்த் திசையிற்றோற்றுகின்ற சூரியன்கோயில்,

பகல்வாயில் - பகற்றோற்றுகிறவாயில்; ஆவது கீழ்த்திசை. உச்சிக்கிழான் - பகற்பொழுதிற்குரியோன்; இனிப் பகற்பொழுதிற்கு வருவாயாயுள்ளவனென்றுமாம்; சூரியன்கோயிலென்றபடி.

கக. ஊர்க்கோட்டம்—(இ - ள்.) இறைவனூராகிய கைலாயநிற்குங் கோயில்,

வேற்கோட்டம்—(இ - ள்.) முருகவேள்நிற்குங்கோயில்,

வேல், ஆகுபெயர்.

கஉ. வச்சிரக் கோட்டம்—(இ - ள்.) வச்சிரப்படைநிற்குங்கோயில்,

[1] புறம்பணையான் வாழ்கோட்டம்—(இ-ள்.) சாதவாகனன்கோயில்,

புறம்பு அணைந்தவிடம் புறம்பணையாயிற்று; [2] "புறம்பணை யியம்பு மோசை" என்றார் சிந்தாமணியினும்.

கங. நிக்கந்தக் கோட்டம்—(இ - ள்.) அருகன்கோயில்,

என்னை? "துக்கந் துடைக்குந் துளபந் காட்சிய, நிக்கந்த வேடத் திருடி கணங்களீள், யொக்க வடிவீழ்ந் துலகியல் செய்தபி, னக்கதை யாழ்கொண் டமை வரப் பண்ணி" என்றார் வளையாபதியினும்.

நிலாக்கோட்டம்—(இ - ள்.) சந்திரன்கோயில்,

இவை செவ்வெண்.

புக்கெங்கும்—(இ - ள்.) இக்கூறிய கோயில்களெங்கும்புகுந்து,

கச - கூ. தேவிர்காள்.....பாடு கிடந்தாளுக்கு

(இ - ள்.) இங்ஙனம் எங்கும்புக்கவள், தெய்வங்களே! எமது மிக்க இன்னோயைத் தீர்மினென்று இரப்பவும் ஒருவரும் தீராமையின் ஆண்டுப் பொருந்தாது போந்து ஈண்டுச்சாத்தனிடத்தேபொருந்தி அவன்பால் வரங்கிடந்தாளேயென்க.

தேவும் தெய்வத்திற்கொருபெயர்; [3] "தேவாதி தேவ னவன்சேவடி" என்றாராகலின். தேவிர்: இர் முன்னிலைப்பன்மை. தீர்மென்று, ஈற்றுமிசையுகரம் கெட்டது. [4] பாசண்டம் - தொண்ணூற்றறுவகைச் சமய சாத்திரத்தருக்கக் கோவை; என்னை? "பண்ணற் றிறத்திற் பழுதின்றி மேம்பட்ட, தொண்ணூற்

---

[1] "சூடுமிப் பருவத்தே கோதை புனைந்த, இடுமுத்தப் பூதை னிருப்பட்-டமுழ்த்தம், புன்னை யரும்பும் புகாஅர்ப் புறம்பணையாய்க், கென்ன முறைய ளிவள்" என்னும் பழஞ் செய்யுளின்பொருள் (தொல். செய். சூ. ககஅ - உரை, மேற்.) ஈண்டு அறியற்பாலது.

[2] சீவகசிந்தாமணி, அடு. [3] சீவகசிந்தாமணி, க.

[4] "பாசண்டத் துறையு மிவற்றுட் பலவாம், டேசிற் றெண்ணூற் றறுவகைப் பமே" திவாகரம், கஉ - வது.

றறுவகைக் கோவையும் வல்லவன், விண்ணு றியங்கும் விறலவ ராயினுங், கண் ணுறி நோக்கிக் கடிங்கை செய்வான்" என்றார் வளையாபதியினுமாகலின் இவற்றிற்குமுதலாயுள்ள சாத்திரங்களைப் பயின்றவனுதலின், * மகாசாத்திர னென்பது அவற்குப் பெயராயிற்று. சாத்தற்கு, உருபுமயக்கம்; இது, [1] "மணற் கேன்ற" என்றற்போலுகின்றது. கிடந்தாளுக்கு - கிடந்தாளை; இயல்புமாம். இப்பொருட்கு ஆகிலாயென்றுசொல்லியென ஒருசொல் வருவிக்க.

கசு - உஉ. ஏசும்படியோர்.....மகவை

(இ - ள்) சுடுகாட்டுக்கோட்டத்து இடுபிணந்தின்னும் இடாகினிப்பேய் ஏசும்படி ஓரிளங்கொடியாய்த் தூங்கிருளிற்சென்று அங்குப் பாடுகிடந்தாளை நோக்கி ஒன்றினும் குற்றமற்றவளே, கேளாய்; முற்பவத்தில் தவஞ்செய்யா தோர்க்குத் தேவரும் வரங்கொடார்; அது பொய்யன்று; மெய்யெனச்சொல்லி அங்ஙனம்பட்ட நின் பிள்ளைப்பிணத்தைப்பார்க்கத் தந்துகாணெனச்சொல்லா நின்று பறித்து அவள்வாங்கி மடியகத்திட்டாளென்க.

ஏசல் - பழித்தல். படி - வடிவு. பிறரைப்பழிக்கும் வடிவையுடையதொரு பெண்வடிவுமாம். சுடுகாட்டுக்கோட்டம் - [2] சக்கரவாளக்கோட்டம். தூங்கிருள் - செறிந்தவிருள்; யாவரும் துஞ்சுமிருளுமாம். இடுபிணம் - குழியிலிடுபிணம். மடி - வயிறு; [3] "படியை மடியகத் திட்டான்" என்பதனானுமுணர்க. மடி யகத்திட்டாள் - விழுங்கினாள். மக, [4] "குழவியு மகவு மாயிரண் டல்லவை, கிழவ வல்ல மக்கட் கண்ணே" என்பதனாற் கூறப்பட்டது; பாலகனென்பது காலவழக்கு.

உஉ - அ. இடியுண்ட.....தையலாள்

(இ - ள்.) இடிக்குரல்கேட்ட மயில் அகவுமாபோல ஏங்கியழுகின்ற தைய லாளுக்கு அச்சாத்தன் அன்னாய், நீசெல்கின்ற வழிமுன்னர்ப் பொதும்பரி டத்து உயிரோடுகிடக்கின்ற குழவியைக் காண்கின்றிலையோவென, அவள் அது செய்ய, ஏங்கி அழுகின்றாய்! அழாதொழியென்று தான் அக்குழவியாய் அவ்வி டத்துச்சென்று கிடப்ப, அவள் வஞ்சக்குழவியை ஐயமின்றித் தன்குழவி யென்றெடுத்து வயிற்றிலே அணைத்துக் கொடுபோய்த் தாய்கையிற் கொடுத் தாள்; அங்ஙனம் ஏங்கியழுத அத்தையலாளென்க.

அடிக்கப்பட்டதனை அடியுண்டதென்றுற்போல இடிக்கப்பட்டதனை இடி யுண்டதென்றார்; உண்டல் - உறுதல்.

உஅ - ஙஉ. தூய.....மேயநாள்

(இ - ள்.) அக்குழவியாய இறையோனும் இருமரபுந்தூயமறையோனுக்குப் பின்செல்லும்பிள்ளையாய் மிக்க கல்விகளையும் அவற்றின் பொருட்கேள்வி களையுங் கற்றும் தரித்தும் துறைபோய்த் தந்தைதாயரிறந்தபின்னர் அவர்க்கு

---

[1] அக்நாஹூ; உகஉ.

[2] இது காலிரிப்பூம்பட்டினத்திற் பண்டைக்காலத்து மயனால் நிருமிக்கப்பட்டது; இதன்வரலாற்றை மணிமேகலை, ஆறாவது காதையிற்காண்க.

[3] நான்மணிக்கடிகை, கடவுள்வாழ்த்து, உ. [4] தொல்காப்பியம், மரபியல், சூ. உசு. (பி - ம்.) * 'மகாசாத்தனென்பது.'

நீர்க்கடன் முதலியவுஞ்செய்து தன்தாயத்தாரோடும் [1] வெல்வழக்குரைத்து எட்டியாண்டு தன் மனைவியோடுகூடிநடந்தபின் ஒருநாளிலென்க.

வான்பொருட்கேள்வி-மறைநூலும் அங்கமும். துறைபோதல் - [2] அதற்குத் தகநிற்றல். மாணியாயெனவே சௌளமும் உபநயனமும், துறைபோயெனவே கல்விகேள்விமுதலிய பிரமசரியங்காத்தலுங்கூறி, மேல், "தேவந்தியென் பாண்மனைவி" என்பதனுன் விவாகமும் காருகத்தமுங் கூறினமையுமுணர்க. இறையோனும்: உம்மை சிறப்பு. வழக்குரைத்தெனவே, தன்மனைவிக்குப் பொருட்குறைபாடில்லாமற்செய்து என்பதாயிற்று. இறையோனும் அவர் மடிந்த பின்னர்க் கடன்கழித்து வழக்குரைத்தென்க. தாயரென்றூர் மாலதியையும் கூட்டி. மேயநாள் - மேவியநாள்; இவளைத் தீவலஞ்செய்து [3] நாலீராண்டு கழிந்த பின்னர்; 'மேவினாள்' என்று பாடமோதித் தன்னை மேவினவளென்று பொருளுரைப்பாருமுளர்.

நூநூ - சு. தேவந்தி யென்பாள்.....நீங்குதலும்

(இ - ள்.) அங்ஙனம் கூடிநடந்த தன்மனைவியாகிய தேவந்தியென்று பெயர்கூறப்படுவாளுடைய பூவின்றன்மை தலைவந்த மையுண்டகண்கள் இதனைப் பொறுப்பனவாகவென நிருமித்துக்கொண்டு பின்பு அவளைமேவித் தனது எக்காலத்தும் முதிராத இளைய அழகினதாலத்தை வெளிப்படுத்தி அவன் அவள் குறிப்பினையறிந்து அதற்கேற்ப அவட்கு நீ எம்கோட்டத்து வாவெனச்சொல்லிப் பிறர்க்கெல்லாம் தீர்த்தத்துறைபடிவேனெனச்சொல்லி நீங்கினளுகவென்க

மக்கள்கண்ணிற்குத் தெய்வயாக்கை காணப்பொறுதாகலின் இவள்கட்குப் பொறுக்கக்கடவதென்று நிருமித்துக்கொண்டான்; [4] "அந்தரத்துள்ளோ ரறியா மரபின், வந்து" என இதனுள்ளும், [5] "கரந்துரு வெய்திய கடவு ளாளரும்", [6] "தேவரு மக்களு மொத்துடன் றிரிதரு, நாலேழ் நாளினும்" என மணிமேகலையுள்ளுங் கூறினமையானுமுணர்க. இனி உண்கணென்பதனை முன்னிலை விளியாக்கி இம்மறையை நீ பொறுக்கவென்று சொல்லிக்காட்டினுனெனினுமமையும்.

நூசு - சo. தூமொழி.....கொண்டிருப்பாள்

(இ - ள்.) அங்ஙனமாகிய தூமொழி, என்னெஞ்சிற்பிணித்தகணவன் தீர்த்தத்துறைகளெங்கும்போய்த் தீர்த்தமாடிவேனென்று என்னைவிட்டகன்றனன்; மறுத்தும் இவ்விடத்தே அவன்மனத்தைத் திரும்பப்பண்ணி அழைத்துத் தருவாயென்று ஒருபெயரிட்டுக்கொண்டு அவன்கோட்டத்தை வழிபடுதலை நாடோறும் கடனுகக்கொண்டிருக்கின்றவளென்க.

சo - சச. வாட்டருஞ்சீர்.....கணவனை டென்றுள்

---

[1] "தோற்பது கொண்டு புகாஅ ரவை" பழமொழி, சு.
[2] திருக்குறள், நுசுக.
[3] சிலப்பதிகாரம், நo: அடி.
[4] " சுo: எஉ - நு.
[5] மணிமேகலை, க: கடி.
[6] " " சுசு - எ.

(இ - ள்.) நிறைந்த சிருடைய கண்ணகியாகிய நல்லாளுக்குக் கொழுநன் பிரிதலால் உற்றதோர் துன்பமுண்டென்றுணர்ந்த நெஞ்சின்வருத்தத்தையுடையளாய்க் கோட்டத்தைநண்ணி அறுகுமுதலியவற்றை இவள் கணவனைப்பெறல் வேண்டுமெனத் தூவிப் பின்னர்க் கண்ணகிபாற்சென்று ஆண்டு ஆகிகூறுவாள் கணவனைப் பெறுவாயாகவென்றாளென்க.

இனி, கண்ணகிபானண்ணிச் சென்று தூவிக் கணவனோடு வாழ்வுபெறுக வென்றாளெனினுமமையும். வாடு வாட்டென விகாரம்; வாடுதல் - குறைதல்; குறைதலரியவெனவே நிறைந்தவென்பதாயிற்று; பிறரால் வாட்டுதலரியவெனவுமாம். இனைதல் இனையாயிற்று; விகாரம். கணவனோடு - கணவனை.

சச - டுச. பெறுகேன்.....நகையாகும்

(இ - ள்.) செறிதொடீஇ, நீ இங்ஙனங்கூறுதலாற் பெறுவேனாயினும் என் னெஞ்சம் ஐயுறுகின்றதுகாண்; அஃது எற்றாலெனின், நெருநற் கங்குற் கனவின் கண் என்கொழுநன் என்னைக் கைப்பற்றினனாய்ப்போக யாங்கள் ஒரு பெரிய பதிக்கட்புக்கோம்; அங்ஙனம்புக்க பதியிடத்தே எங்கட்கு ஏலாததோர் படிற்று ரையை அவ்வூரார் இடுதேளிடுமாறுபோல என்மேலிட்டனர்; அங்ஙனம் அவரிடப்பட்ட அப்படிற்றாற் கோவலற்கு ஓர் தீங்குற்றதென்று பிறர் சொல்லக் கேட்டு அதுபொறாது அவ்வூரரசன்மூன்னர், செல்லாதேன்சென்று வழக்குரையாதேன் வழக்குரைத்தேன்; ஆதலால் அவ்வரசனோடு அவ்வூர்க்கும் உற்றதோர்தீங்குண்டு; ஆனாலும் அவை தீக்கனவாதலான் நினக்குரையேன்; இங்ஙனம் தீவினையுற்ற என்னோடு பொருந்திய மிக்கோனுடனே யான்பெற்ற நற்றிறங்களை நீகேட்பாயாயின் அது நினக்கு நகையைத்தருமென்றுசொல்ல வென்க.

கடிக்கும் - ஐயுறும்; கடியென்னுமுரிச்சொல் ஈறுதிரிந்தது; [1] "போற்றினரியவை போற்றல் கடித்தபின், றேற்றுதல் யார்க்கு மரிது" என்றாற்போல. அது, [2] "ஐயமுங் கரிப்பு மாகலு முரித்தே" என்பதனுன்முடிந்தது. கனவினுற் கடிக்குமெனினுமமையும். இடுதேளிடுதல் - தேளிடப்படுவார் காணுமே தேளல்லாததொன்றை மறையக் கொடுவந்து மேலேயிட்டு அவரைக் கலங்கப்பண்ணுதல்; பாய்ச்சுத்தேளென்பாருமூளர். என்றன்மேல்: தன், அசை. என்றன்மேலென்றாள், பெண்பாற்றன்மையான்; அன்றி இப்பழியைத் தான்சுமந்துநிற்றலானெனினுமமையும். தீங்கென்று அது கேட்டு - தீங்கென்றுசொல்ல அதுகேட்டு; சொல்லவென ஒருசொல்வருவிக்க. ஒடி, எண்ணெடு; வேறுவினை ஒடிவுமாம்; ஆவது காவலன் மரணமும் ஊர்தீப்பாடும். உம்மை, இறந்ததழீஇயவெச்சவும்மை. உரையாடேனென்றாள்; [3] "உரையா நிழித்தக்க காணிற் கனி" என்பது பழமொழியாகலின். தீக்குற்றம் - கடிதானகுற்றம்; ஆவது மூலதிருகியெறிதல். நற்றிறம் - இருவரும் சுவர்க்கம்புகுதல். நகையாகுமென்றாள், இது கிட்டாததொன்றாகலின். எனவென ஈண்டும் ஒருசொல் வருவிக்க.

---

[1] திருக்குறள், சுகூசு.

[2] தொல்காப்பியம், உரிச்சொல்லியல், சூ. அசு.

[3] பழமொழி, கஅஉ.

நிச - சுஉ. பொற்றொடீஇ.....பின்னரே

(இ-ள்.) பொற்றொடீஇ, நீகண்டகனைக்கொணர்டு வருந்தவேண்டா; நீ அவனால் வெறுக்கப்பட்டாயுமல்லை; நின்கணவன்காரணமாக ஒருநோன்பு மூற்பிறப்பிலே தப்பினாய்; அதனால் உள்ளதீங்குமிக்கன; அத்தீங்கும் கெடுவனவாக; காவிரி தன்னீரைக்கொண்டுசென்று கடலோடெதிர்த்து அலைக்கும் சங்கமுகத் தியலதாகிய பூவினிதழவிழும் நெய்தற்காலையிடத்து இரண்டு தடாகமுள்ளன; அவை யாவையெனின் [1] சோமகுண்டம் சூரியகுண்டமென்னும் பெயரையுடை யன; அவற்றின் துறைகளின்மூழ்கிக் காமவேள்கோட்டத்திற்புக்கு அவனைத் தொழுதாராயின், அவர் இப்பிறப்பிலுள்ள நாளெல்லாம் தம்கணவரோடும் பிரி வின்றியிருந்து இவ்வுலகத்து இன்பமுறுவர்; மறுமைக்கும் போகபூமியிலேயும் போய்ப்பிறந்து கணவரோடும் பிரிவின்றி மூன்றுபல்லங்காலம் இன்பதுகர்வ ராதலான் அவற்றை யாமும் ஒருஞான்று ஆடக்கடவேமென்று சொன்ன தேவந் திக்குக் கண்ணகி அங்ஙனம் துறைமூழ்கித் [2] தெய்வந்தொழுதல் எங்கட்கு இயல்பன்றென்று சொல்லி இருந்தபின்னுகவென்க.

[3] "காமனை யென்றுஞ் சொல்லார் கணவற்கை தொழுது வாழ்வார்" என்ற ராகலின், இங்ஙனங்கூறினள். இக்குண்டமிரண்டிற்கும் இவ்வுலகத்தின்புற லும், போகபூமியிற்பிறத்தலும் நிரனிறையாக்கலுமொன்று; அவற்றை, [4] 'இரு காமத்தினையேரி" என்றார் பட்டினப்பாலையிலும்

சுஉ - சு. நீடிய காவலன்.....குற்றிளையாள்

(இ - ள்.) அங்ஙனஞ்சொல்லி அவரிருக்கின்றவளவிலே குறுந்தொழிலிளை யாள் காவலன்போலுங் கோவலன் நீடிய நம்கடையிடத்தானென்றுளென்க.

அன்றித் தூரத்தேபார்த்து ஐயுற்று நம்காவலன்போலுமென்று அவனுடை னைவிடத்து ஐயந்தீர்ந்து கோவலனென்றுளெனினுமமையும் இனி, நம்கோவ லன் வருகின்றவரத்து நம்மை நெடுங்காலம் காப்பான்போலே இராகின்றதென் றுளெனினுமமையும்.

சுசு - எக. கோவலனும்.....தருமெனக்கென்ன

(இ - ள்.) அங்ஙனங் கடைத்தலையாளனை கோவலனும், [5] கொடியிடையார் தாம் விளக்கங்காட்டிக் கோலங்கொள்ளாநிற்ப, அக்காலத்தேவந்து பெருமை யமைந்த சயனத்திடத்தேபுக்கு அவன் தனது பைந்தொடியுடைய மேனிவாட்ட மும் நெஞ்சுவருத்தமுங்கண்டு எல்லாப்பொருளிலும் பொய்யை மெய்யாகப் பொருந்துவித்தொழுகும் பொய்த்தியோடுங்கூடி ஆடிய ஒழுக்கத்தினாலே நம் மூலத்திலுள்ளார் தேடித்தந்த மிக்க நிதிக்குன்றமெல்லாம் அவள்பொருட்டால் தொலைந்தன; அதனால் இல்லாமையுண்டாதல் எனக்கு நாணத்தருகின்றது காணென்னவென்க.

---

[1] இங்கேகூறிய சோமகுண்டமும் சூரியகுண்டமும் முறையே திருவெண்காட்டி லுள்ள சோமதீர்த்தமும் சூரியதீர்த்தமுமாமென்று சிலபெரியோர் கூறுகின்றனர்.

[2] "தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள், பெய்யெனப் பெய்யுமழை", திருக்குறள், டுடு.

[3] சீவகசிந்தாமணி, கஎகூஅ.

[4] பட்டினப்பாலை, ங்கூ.

[5] இக்காதை அடி, ங - சு.

பாடு - படுக்கையுமாம். சலம் - பொய். சலதி - பொய்த்தி. ஆடுதல்- உடனுதல். குலந்தருவான்பொருள் - தொன்றுதொட்டுவருகின்றபொருள். இன்று நாணுத்தருமென்றது, 'கெட்டால் மதிதோன்றும்' என்னும்வழக்கு.

எஉ - ங. நலங்கேழ்.....கொண்மென

(இ - ள்.) இவ்வாறு அவன் தன்னைப்போற்றி இலம்பாடு நாணுத்தருமென்றதனை மாதவிக்குக்கொடுக்கும் பொருட்குறைபாட்டால் தளர்ந்து கூறினளாகக் கருதி ஒளிபொருந்தியமுகத்தே நலம்பொருந்திய சிறிய முறுவலிலைத்து இன்னும் சிலம்பு ஓரிணையுள; அவற்றைக் கொண்மினென்றுளென்க.

சிலம்புளவென்றுள், இவையொழிந்த கலனெல்லாம் தொலைதலால். இவை அணியாதிருத்தலின் அவனறியாளாகக்கருதினும் அவன் தளர்ச்சிகூறுதலால் தான் இவையுண்மைநினைந்து கூறினளென்க. புலந்துகூறினளெனிற் கற்பின்றன்மையன்றும்.

எங - கூ. சேயிழை கேள்.....கால்சீயா முன்.

(இ - ள்.) இங்ஙனம் கருதியசேயிழாய்! கேள்; நீசொன்ன இச்சிலம்பை நான் வாணிகமுதலாகக்கொண்டு முன்பு நான்வாங்கியழித்தகலனையும் கெட்ட பொருளையும் தேடித்தொகுத்தலைத் துணிந்தேன்; அஃது எவ்விடத்தே சென்றெனின், விரிந்த புகழையுடைய மதுரையென்னுநகரிடத்தேசென்று; ஆதலால், நோதாய்! அதற்கு நீ இப்பொழுதே இங்குநின்றும் என்னைவிடை எழுவாயாகவென்று சொல்லி முற்பவத்தில் தான்செய்த தீவினை நெடுங்காலநின்று நெஞ்சை ஒருப்படுத்துதலானே அவ்வினையினது ஏவலைக்கொண்டான்; எப்பொழுது போதற்கெனிற் கங்குலே அவ்விடத்தினின்றும் சுடர் போக்குவதன்முன்னேயென்க.

சீத்தல் - விளக்குதல். சிலம்புமுதலா.....உற்றேனென்பதற்குக் கலனைச் சிலம்பானும் பொருளை முதலானும் ஈட்டுதலுற்றேனென்றுளெனினு மமையும்.

இது, கனவென்னும் பொருளையேகருதாது மாலதிகதையையும் தேவந்தி கதையையும் கலந்துகூறிற்றேனும், உறுப்பழிவின்றி நடந்ததேனும் மூன்றான் கடியினிறந்துவருதலான் நெடுவெண்பாட்டாகாது கலிவெண்பாட்டாதலுணர்க.

வெண்பா.

காதலிகண்ட.....கால்சீயாமுன்.

இவட்கு மேற்கூட்டமின்மையாற் [1] கருநெடுங்கண்ணென்றார்; கனவு சொல்லே வறிதாக்க வினைகடைக்கூட்ட வியங்கொண்டானென்க. சொல்லேவறிதாக்குதல் - வேனிற்காதையிற் காலைகாண்குவமென்றசொல்லைப் பயனின்றுக்குதல்.

கூ.—கலித்திறமுரைத்தகாதை முற்றிற்று.

---

[1] சிலப்பதிகாரம், நீ: உஅஎ.

பத்தாவது.

நாடுகாண்காதை.



வான்கண் விழியா வைகறை யாமத்து
மீன்றிகழ் விசும்பின் வெண்மதி நீங்கக்
காரிரு ணின்ற கடைநாட் கங்கு
லூழ்வினை கடைஇ யுள்ளந் துரப்ப
நி. வேழகத் தகரு மெகினக் கவரியுந்
தூமயி ரன்னமுந் துணையெனத் திரியுந்
* தாளொடு குயின்ற தகைசால் சிறப்பி
னீணெடு வாயி னெடுங்கடை கழிந்தாங்
கணிகிள ரரவி னறிதுயி லமர்ந்த
கo. † மணிவண்ணன் கோட்டம் வலஞ்செயாக் கழிந்து
பணையைந் தோங்கிய பாசிலைப் போதி

க. வான்கண் - ஆதித்தன். விழித்தல் - விளங்குதல்.

உ. வெண்மதி நீங்க - வெண்மதி நீங்கின அளவிலே.

ங. காரிருணின்ற கடைநாள் - காரிருள் கடையிலே நின்றநாள்; ஆவது பூருவபக்கம்.

ச. ஊழ்வினை கடாவுதலால் உள்ளந்தன்னைத் துரப்ப; வினைசெலுத்தி நெஞ்சை ஓட்ட வெனவுமாம்.

ஞ. ஏழகத்தகர் - மேழகம். எகினமாகிய கவரி.

எ. தாளொடு குயின்ற தகைசால் சிறப்பெனவே தாள்முதலான உறுப் பெல்லாமடங்கின; தாளொடுகுயிற்றுதல் - போர்க்கதவு பண்ணும்போதே தாளோடே பண்ணுதல்.

அ. வாயிலென்றது, ஆகுபெயராற் கதவை. வாயினெடுங்கடையாவது - முதலான தோரணவாயில்.

(சு) துணையெனத்(பா)திரிதருமென்றது - இவை ஒன்றோடொன்று இன மல்லவாயினும் பழக்கத்தத்திரியும் (அ) வாயில்.

கo. வலஞ்செயா - வலத்திலேயிட்டு.

கக. மாபோதிக்கு ஐந்துகொம்பாதலாற் பணையைந்தோங்கியவென்றார்.

(பி - ம்.) * 'தாளொடு குயிற்றியதகை' † 'மணிவணன்'

யணிதிகழ் நீழ லறவோன் றிருமொழி
யந்தர சாரிக ளறைந்தனர் சாற்று
மிந்திர விகார மேழுடன் * போகிப்
கரு. [1] புலவுண் டுறந்து பொய்யா விரதத்
தவல நீத்தறிந் † தடக்கிய கொள்கை
மெய்வகை யுணர்ந்த விழுமியோர் ‡ குழீஇய
வைவகை நின்ற வருகத் தானத்துச்
[2] சந்தி யைந்துந் தம்முடன் கூடி
உ0. வந்து தலைமயங்கிய வான்பெரு மன்றத்துப்
[3] பொலம்பூம் பிண்டி நலங்கிளர் கொழுநிழ
னீரணி § விழவினு நெடுந்தேர் விழவினுஞ்
சாரணர் வருஉங் || தகுதியுண் டாமென
வுலக நோன்பிக ளொருங்குட னிட்ட

கஉ. திருமொழி - தருமம்.

கங. அந்தரசாரிகள் - ஆகாயசாரிகள். அறைந்தனர் சாற்றல்-ஆகமத்தைச் சொல்லி விளங்கப் பொருள் சொல்லுதல்.

கச. இந்திரவிகாரம் - இந்திரன் நிருமித்தது. ஏழுடன்போகி என்றது - இவர் அன்று கழிந்தபடியாலே அவற்றையடைவே கழிந்துபோயென்றவாறு.

கரு. (பா) புலவுண் - மச்சமாங்கிசம்.

கரு - எ. (பா) விரதத்தோடே அடங்கிய. கொள்கையையுடைய விழுமியோரென்க.

கஎ. ஐவகைநின்ற கோயில் - ஐந்து சந்திக்கும் ஐந்துகோயிலாய்நின்ற கோயில்.

கஙு. சந்தியைந்து - ஐஞ்சந்தி; அவையாவன: பஞ்சபரமேட்டிகள் தெரு. அவர்:—அருகர், சித்தர், ஆசாரியர்கள், உபாத்தியாயர்கள், சாதுக்கள்.

உ0. இவர்கள் கூடினமன்று.

உஉ. நீரணிவிழவு - திரு அபிடேகவிழவு; அயனம், சங்கிரமம், புதுப்புனலாட்டெனவுமாம். தேர்விழவு - திருநாள்.

உச. உலகநோன்பிகள் - உலகவழக்கொடு பொருந்தின நோன்பிகள்; அவர் இல்லறத்தையுடைய சாவகர்.

---

[1] 'புலவுத்துறந்த நோன்புடையாராகலாற் பொய்கூறார்' தொல். மரபு. சூ. கூச - பேர்.

[2] கஙு - உ0: "சதுக்கமுஞ்சந்தியும்" முருகு. உஉடு.

[3] சிலப். பதிகம், ச; உக - டு=சிலப். கடு: கடுஉ - ச.

(பி - ம்.) * 'போக்கிப் புலவூண் டுறந்த' † 'அடங்கிய' ‡ 'குழீஇயவைவகை' § 'விழுவினும்' || 'தகுதியுண்டாகவிலுக'

உரு. விலகொளிச் சிலாதலந் தொழுது வலங்கொண்டு
மலைதலைக் கொண்ட பேர்யாறு போலு
[1] மூலக * விடைகழி யொருங்குட னீங்கிக்
கலியி லாளன் காமர் வேனிலொடு
மலய மாருத † மன்னவற் கிறுக்கும்
ஈ0. பன்மல ரடுக்கிய நன்மரப் பந்த
[2] ரிலவர் திகையி னெயிற்புறம் போகித்
தாழ்பொழி லுடுத்த தண்பதப் பெருவழிக்
காவிரி வாயிற் ‡ கடைமுகங் கழிந்து
குடதிசைக் கொண்டு கொழும்புனற் காவிரி
ஈடு. வடபெருங் கோட்டு மலர்ப்பொழி லுழைந்து
காவதங் கடந்து § கவுந்திப் பள்ளிப்
பூமரப் பொதும்பர்ப் பொருந்தி யாங்க
ணிறுங்கொடி துகிலுப்போ டிணைந்தடி வருந்தி
நறும்பல் கூந்தல் குறும்பல வுயிர்த்து

(உ0) இம்மன்றிற் (உக) பிண்டிநிழலிலே (உச) இட்ட (உரு) சிலாதல மென்க.

உசு - எ. வாயிலுக்குவமம் மலை; தெருவுக்குவமம் யாறு. உலகவிடை கழி - உலகத்தாரெல்லாரும் போகலான ஊர்வாயில்; தெருவொழுங்குக்கு இடையே கழிதலால் இடைகழி.

உஅ. கலை - சரீரம்; அன்றிக் கலையிலாளனென்றது, கலைகளினின்றுன் காமனென்றவாறுமாம்.

உக. மன்னவன் - சோழன். இறுக்கும் - இறையிடும்.

ஈ0. மரப்பந்தர் - சோலை.

உஅ - ஈக. காமன் வேனிற்காலத்தையும் தென்றலையும் சோழனுக்குத் திறையிடும் பொழிலையுடைய எயில்; இலவந்திகை - நீராவி; எயில் - சுற்று மதில்; சோலையையும் பொய்கையையுமுடைய எயில்.

ஈஉ. தண்பதப்பெருவழி - புனலாட்டுக்குப்போம் பெருவழி; திருமஞ்சனப்பெருவழியுமாம்.

ஈஈ. காவிரிக்கரையிடத்து வாயில்.

ஈச. குடதிசைக்கொண்டு - மேற்கு நோக்கி.

ஈரு. வடபெருங்கோடு - வடகரை.

ஈசு - எ. கவுந்தியடிகள் பள்ளியையுடைய காவிற்பொருந்தி.

---

[1] உலகவிடைகழி: புறநா. களரி.

[2] இலவந்திகை: சிலப். கச : எசு - அஉ அடியார். விசேட்வுரையைப்பார்க்க.

(பி - ம்.) * 'இடைகழியொருங்கு' † 'மன்னவர்க்கு' ‡ 'கடை முகங்கு குடதிசைக்கொண்ட' § 'கவுந்திபள்ளியோர் பூமரப்'

சo. முதிராக் * கிளவியின் முள்ளெயி றிலங்க
மதுரை மூதூர் யாதென வினவ
வாறைங் காதநம் மகளுட் டும்பர்
நாறைங் கூந்த னணித்தென நக்குத்
தேமொழி தன்னெடுஞ் சிறையகத் திருந்த
சரு. † காவுந்தி யையையைக் கண்டடி தொழலு
மூருவுங் குலனு முயர்பே ரொழுக்கமும்
பெருமகன் றிருமொழி பிறழா நோன்பு
மூடையீ ரென்னே வுறுக ஞளரிற்
கடைகழிந் திங்ஙனங் கருதிய வாறென
ரூo. வுரையாட் டில்லே ‡ யுறுதவத் தீர்யான்
மதுரை மூதூர் வரைபொருள் வேட்கையேன்
பாடகச் சீறடி பரற்பகை யுழவா
காடிடை யிட்ட நாடுநீர் கழிதற்
கரிதிவள் செவ்வி யறிகுநர் யாரோ

சஉ. ஆறைங்காதம் - மூப்பதுகாதம்; ஆறைங்காதமென்றான், அவட்கு அறுகாதம் ஐங்காதமென்றற்போலத் தோன்ற.

சங. கூந்தல், பெயர். நக்கு - நகைத்து; நகுதல் சோக கருணதசை தொக்கதாற்பிறந்த விகாரம்.

சச. சிறையகம் - ஸ்ரீகோயிலின் ஒருபக்கத்தே பள்ளியகம்.

சள. பெருமகன் - அருகதேவன்.

சஅ. உறுகளுளரின் - துன்பமுறும் பாவமுடையார்போல; மிடியாளரைப்போலவென்றுமாம்.

சகூ. கடைகழிந்து - வாசலிலிவிட்டு.

ரூo. உரையாட்டில்லே - சொல்லலாவதொன்றில்லே; ஒன்று - ஒருவாசகம்.

ருக. மூதூர்க்கண்ணே பொருளீட்டும் வேட்கையேன்; பொருள்வரைதல் வேட்கையென்க; வரைதல் - தன்னிடத்து ஆக்குதல்; இன்னதற்கு மேற்பட்டது தானத்துக்கேயென்று வரைந்திடுதலுமாம்.

மேற் கவுந்தியடிகள் வார்த்தை :—

ருஉ. பரற்பகை உழக்கமாட்டா. ருங. காடும் நாடுமாகிய வழிகடக்க.

ருச. அரிதிவள் செவ்வியென்றது - இவள் செவ்வியின் மென்மையால் நடக்குந்தன்மையிலளென்றதாம். அறிகுநர்யாரோ-வல்லளாகவுமடிக்குமன்றே.

(பி - ம்.) * 'இளிமுள்ளெயிறு' † 'காவுந்திகையைக்கண்டு' ‡ 'உயர்தவத்தீர்'

உரு. வுரிய தன்றீங் கொழிகென வொழியீர்
[1] மறவுரை நீத்த மாசறு * கேள்வியர
றவுரை கேட்டாங் கறிவினை யேத்தத்
தென்றமிழ் நன்னாட்டுத் தீதுதீர் மதுரைக்
கொன்றிய வுள்ள முடையே † னகலிற்

சுரு. போதுவல் யானும் போதுமி னென்ற
காவுந்தி யையையைக் கைதொழு தேத்தி
யடிக ணீரே யருளுதி ராயினித்
தொடிவளைத் தோளி துயர்தீர்த் தேனென்னக்
கோவலன் காணுய்க் கொண்ட விற்நெறிக்

சுரு. கேதந் தருவன யாங்கும்பல கேண்மோ
வெயினிறம் பொரூஅ மெல்லியற் கொண்டு
பயில்பூந் தண்டலைப் ‡ படர்குவ மெனினே
[2] மண்பக வீழ்ந்த கிழங்ககழ் குழியைச்
சண்பக நிறைத்த § தாதுசோர் பொங்கர்

எரு. பொய்யறைப் படுத்துப் போற்ரு மாக்கட்குக்
கையறு தன்பங் காட்டினுங் காட்டு
முதிர்பூஞ் செம்மலி னெதுங்கினர் கழிவோர்
முதிர்தேம் பழம்பகை முட்டினு முட்டு
மஞ்சளு மிஞ்சியு மயங்கரில் வலயத்துச்

ருஅ - கூ. மதுரைக்கு ஒன்றியவென்றதற்குப் போகவென ஒருசொல் வருவிக்க.

சுரு. எனை - என்று கோவலன் சொல்ல.

சுசு. காணுய் - பாராய். கொண்டநெறி - வழிக்கொண்ட நெறியிடத்து; இன்நெறி - காவிரி வடகரைவழி.

சுரு. யாங்கும்பலவுள - யாங்கும் மிகவுள்ளன.

சுள. (பா) படர்குவமாயினென்ரூள், தன்னையும் உளப்படுத்தி.

சுஅ - எக. சண்பகம் குழியைநிறைத்த பொங்கர். போற்ரு மாக்கள் - பரிகரித்துப்போகாதமாக்கள்.

குழியைச் சண்பகநிறைத்த தாதுசோர் பொங்கர் பரிகரியாமாக்கட்குத் தன்பந்தரினுந்தரும்; பழம்பூவானிறைத்தல் பெற்ரும், தாதுசோர் பொங்க ரென்றலின்; பொங்கர் - சோலையுமாம்.

எசு. (பா) மேல்தூங்குகிற பழமாகியபகையிலே முட்டினுமுட்டுவர்.

எச. வலயம் - தோட்டம்.

---

[1] இசு - எ - சிலப். கசு: கச - டு. [2] ஜீவக. கசகசு - ந. மேற். பி - ம்.) * 'கேள்வியறவுரை:' † 'ஆதலின்.' ‡ 'படர்குவமாயின்.' § 'தாதுசோ.'

எரி. செஞ்சுளைப் பலவின் பரற்பகை யுறுக்குங்
கயனெடுங் கண்ணி காதற் கேள்வ
வயலுழைப் படர்குவ மெனினே யாங்குப்
பூநா றிலஞ்சிப் பொருகய லோட்டி
நீர்நாய் கௌவிய நெடும்புற வாளை

அo. மலங்குமிளிர் செறுவின் விலங்கப் பாயிற்
கலுங்கலு முண்டிக் காரிகை யாங்கட்
கரும்பிற் றெடுத்த பெருந்தேன் சிதைந்து
சுரும்புசூழ் பொய்கைத் தூநீர் கலக்கு
மடங்கா வேட்கையி னறிவரு ரெய்திக்

அரி. குடங்கையி லெண்டு கொள்ளாவுங் கூடுங்
குறுந ரிட்ட குவளையம் போதொடு
பொறிவரி வண்டினம் பொருந்திய கிடக்கை
நெறிசெல் வருத்தத்து நீரரு ரெய்தி
யறியா தடியாங் கிடுதலுங் கூடு

கo. மெறிநீ ரடைகரை யியக்கந் தன்னிற்
பொறிமா ணலவனு நந்தும் போற்ரு
தூழடி யொதுக்கத் துறுநோய் காணிற்
ரூழ்தரு துன்பந் தாங்கவு மொண்ணு
வயலுஞ் சோலையு மல்ல தியாங்கணு

கரி. மயல்படக் கிடந்த நெறியாங் கில்லை
நெறியிருங் குஞ்சி நீவெய் யோளொடு
குறியறிந் தவையவை குறுகா தோம்பெனத்

எஎ. யாற்றங்கரையைவிட்டு வயல்வழியேபோகில்.

எக. நீர்நாய், எழுவாய். அo. விலங்க - குறுக்காக.

அச. வேட்கை - தண்ணீர்த்தாகம். அறிவருரெய்தி - அறிவுமயங்கி.

அசு. குறுதல் - பறித்தல்.

கo. எறிநீரடைகரை - நீர்க்கரை; கடற்கரையென்பாருமுளர்.

கக. துன்பம் - நமக்கு வருந்துன்பம்.

கக - க. அலவனையும் நத்தையையும் போற்றுது முறையாகஇதிற்கிற அடியொதுக்கத்திலுலே உறுநோய் அவையிற்றுக்கு உண்டாமாயின், அப்பாவம் தாங்கவொண்ணு.....தடியால் கடற்கரைவழியன்று.

கரி. அயல்பட்- வேறுபட. கள. ஓம்புகவென்சொல்லி.

தோமறு * கடிஞையுஞ் சுவன்மே லறுவையுங்
காவுந்தி யையைகைப் பீலியுங் கொண்டு
கoo. மொழிப்பொருட் டெய்வம் வழித்துணை யாகெனப்
பழிப்பருஞ் சிறப்பின் வழிப்படர் புரிந்தோர்
கரியவன் புகையினும் புகைக்கொடி தோன்றினும்
விரிகதிர் வெள்ளி தென்புலம் படரினுங்
கால்பொரு நிவப்பிற் கடுங்குர லேற்றெடுஞ்
கoஉ. சூன்முதிர் கொண்மூப் பெயல்வளஞ் சுரப்பக்
குடமலைப் பிறந்த கொழும்பஃ றூரமொடு
கடல்வள னெதிரக் கயவாய் நெரிக்குங்
காவிரிப் புதுநீர்க் கடுவரல் வாய்த்தலை
யோவிறந் தொலிக்கு மொலியே † யல்ல
கoo. தாம்பியுங் கிழாரும் வீங்கிசை யேத்தமு
மோங்குநீர்ப் பிழாவு மொலித்தல் செல்லாக்
கழனிச் செந்நெற் கரும்புசூழ் மருங்கிற்
பழனத் தாமரைப் பைம்பூங் கானத்துக்
[1] கம்புட் கோழியுங் கூஉங்குர லுரையுஞ்
கoஉ. செங்கா லன்னமும் பைங்காற் கொக்குங்
கானக் கோழியு நீர்நிறக் காக்கையு
முள்ளூ மூரலும் புள்ளும் புதாவும்

கூஅ. அறுவை - தோளிலிடும் உறி.

கoo. மொழிப்பொருட்டெய்வம் - மொழியாகிய தெய்வம்; பொருண்மொழி - உபதேசமந்திரம்; பஞ்சமந்திரம்.

கூஎ - கoக. குறுகாதோம்பெனக் காவுந்தி கொண்டு மொழிப்பொருட் டெய்வம் நமக்கு வழித்துணையாகவென் றுசொல்ல வழிபோகப் புரிந்தோர்.

கoஉ. கரியவன் - சனி. புகைக்கொடி - தூமகேது. சனிதூமனெடுகூடினும்.

கoசு. தாரம் - சந்தனம் அகில்முதலாயின.

கoஎ. கடல்வளன் - "ஓர்க்கோலை.....ஐந்து." எதிர - வளத்தோடு எதிர்க்கையாலே; கடல்வளன் காவிரியோடெதிர. கயவாய் - புகார்.

கoசு. ஓவுதல் தவிர்ந்து.

ககo. ஆம்பி - பத்தர். கிழார் - பூட்டை. ககக. பிழார - இடார.

ககச. கம்புட்கோழி - ஒருசாதி. ககசு. நீர்நிறக்காக்கை - நீர்க்காக்கை.

ககஎ. உள்ளூமூரலும் - உள்ளலும் ஊரலும். புதா - பெருங்காரை; மரக்காலுரையுமாம்.

---

[1] ககச - கூ: பூட்களின் குரல்=பதிற். அச.

(பீ - மீ.) * 'கடிகை' † 'அன்றியுமாம்பியும்'

வெல்போர் வேந்தர் முனையிடம் பேர்லப்
பல்வேறு குழூஉக்குரல் பரந்த வோரையு

கஉo. முழாஅ நுண்டொளி யுள்புக் கழுந்திய
கழாஅமயிர் யாக்கைச் செங்கட் காரான்
சொரிபுற முரிஞ்சப் புரிஞெகிழ் புற்ற
சுமரிக் கூட்டிற் கொழும்பல் லுணவு
கவரிச் செந்நெற் காய்த்தலைச் சொரியக்

கஉஙி. கருங்கை விலினஞருங் களமருங் கூடி
யொருங்குகின் ரூர்க்கு மொலியே யன்றியுங்
கடிமலர் கலைந்து முடிநா றழுத்தித்
தொடிவளைத் தோளு மாகமுந் தோய்ந்து
சேறுடு கோலமொடு வீறுபெறத் தோன்றிச்

கஙo. செங்கய னெடுங்கட் சின்மொழிக் கடைசியர்
வெங்கட் டொலைச்சிய விருந்திற் பாணியுங்
கொழுங்கொடி யறுகையுங் குவளையுங் கலந்து
விளங்குகதிர்த் தொடுத்த விரியல் சூட்டிப்
பாருடைப் பனர்போற் பழிச்சினர் *கைதொழ

கஙஙி. வேரொடு நின்ரூ ரேர்மங் கலமு
மரிந்துகால் குவித்தோ ரரிகடா வுறுத்த
[1] † பெருஞ்செய்ந் நெல்லின் முகவைப் பாட்டுந்
தெண்கிணைப் பொருநர் செருக்குட னெடுத்த
மண்கணை முழவின் மகிழிசை யோதையும்

கஉo. உழாநுண்டொளி - தானேபட்டசேறு. கஉக. காரான் - எருமை.

கஉஉ. சொரிபுறம் - தினவையுடைய முதுகு.

கஉங. குமரிக்கூடு - அழியாக்கூடு. கொழும்பல்லுணவு - பலவர்க்குத் தணவு; அவரை துவரையுள்ளிட்டன.

கஉஙி. கருங்கைவினைஞர் - பள்ளர், பறையர். களமர் - உழுகுடிவேளாளர்.

கஙஉ - ஙி. அறுகையும் குவளையையுங்கலந்து கதிரோடு தொடுத்தமாலை யை வரிலே சூட்டிப் பாருடைப்பனர்போல் ஏரொடுநின்ரூர்; குட்டக்கலப்பை யிலே சூட்டியென்றுமாம்.

* கஙங. அரி - அரிந்திடு சூடு.

கஙஎ. முகவைபாடுதல் - பொலிபாடுதல்; முகவையென்ரூர், நெல்லு முகந்துகொடுக்கப்படுதலாலே; [2] "புகர்முகமுகவை" போல.

---

[1] 'பெருஞ்செய்ந்நெல்லின்: புறநா. ஙஙஙி: ஙடி; நன். சூ. உஅசு-மயிலை. மேற்.

[2] புறநானூறு, ஙஎக. (பி - ம்.) * 'கைதொழுது'; † 'பெருஞ்செந்நெல்லின்'

கசஂ. பேர்யாற் றடைகரை நீரிற் கேட்டாங்
கார்வ நெஞ்சமோ டவலங் கொள்ளா
ருழைப்புலிக் கொடித்தே ருரவோன் கொற்றமொடு
மழைக்கரு வுயிர்க்கு மழற்றிக முட்டின்
மறையோ ராக்கிய * வாவுதி நறும்புகை

கசடு. யிறையுயர் மாட மெங்க ணும்போர்த்து
மஞ்சுசூழ் மலையின் மாணத் தோன்று
மங்கல மறையோ ரிருக்கை யன்றியும்
பரப்புநீர்க் காவிரிப் பாவைதன் புதல்வ
[1] ரிரப்போர் சுற்றமும் புரப்போர் கொற்றமு

கஙஂ. முழவிடை விளைப்போர் பழவிற லூர்களும்
பொங்கழி யாலைப் புகையொடும் பரந்து
மங்குல் வானத்து மலையிற் றோன்று
மூரிடை யிட்ட நாடுடன் கண்டு
காவத மல்லது கடவா ராகிப்

கஙடு. பன்னாட் டங்கிச் சென்ற லொருநா
ளாற்றுவீ யரங்கத்து † வீற்றுவீற் றுகிக்

கசஂ. யாற்றடைகரைகளிலே இவ்வோசைகளை முறையிற்கேட்டு. நீரின் - நீர்மையுடனே; உருவக் கேட்டுப்போதுகையுமாம்.

கசக. கேட்ட வுவகையால் அவலங்கொள்ளாராய்.

கசஉ. உழைப்புலிக்கொடி - புலியை இடத்திலேயுடையகொடி.

கசஙு. மழைக்குக் கருப்பமாவது தூமம். அட்டில் - ஓமசாலை.

கசஉ-ங. கொற்றத்துடனே மழைக்கருவையும் தோற்றுவித்து அவ்வள விலே விளங்கிய சாலையென்க.

கசச. (பா) வானவருண் - சோற்றுவி; அவியிடுகிற ஆவி.

கசடு. இறை - இறப்பு.

கசஅ. காவிரிப்பாவைதன்புதல்வர் - வேளாளர்.

(கடுஂ) விளைப்போரான (கசஅ) புதல்வர் (கடுஂ) பழவிறலூர்களும்.

கசஙு. புரப்போர் - காக்குமரசர்.

கடுக. பொங்கழி - தூற்றுப் பொலி. பரந்து - பரக்க.

கடுஉ. மங்குல் - இருட்சி.

(கசஎ) மறையோரிருக்கையும் (கடுஂ) பழவிறலூர்களும் (கடுஉ) மலையிற் றோன்றும் (கடுங) நாடென்க.

(கஂக) வழிப்படர்புரிந்தோர் (கடுடு) செல்லுநாளுள் ஒருநாளென்க.

கடுசு. ஆற்றுவீயரங்கம் - ஆற்றை மறைக்குமரங்கம்; ஆவது சூறை; அது சோரங்கம்; ஆற்றுவியென்பாருமுளர்.

---

[1] திருக்குறள். கஂஙச - பரி. மேற்.

(பி - ம்.) * 'வானவிநறும்புகை' † 'வீற்றுவீற்றுகி.'

குரங்கமை யுடித்த மரம்பயி லடுக்கத்து
வானவ ருறையும் பூநா றிருசிறைப்
பட்டினப் பாக்கம் விட்டனர் நீங்காப்

கசுo. பெரும்பெய ரைய ரொருங்குட னிட்ட
விலங்கொளிச் சிலாதல மேலிருந் தருளிப்
பெருமக னதிசயம் பிறழா வாய்மைத்
தருமஞ் சாற்றுஞ் சாரணர் தோன்றப்
பண்டைத் தொல்வினை பாறுக வென்றே

கசுரு. கண்டறி கவுந்தியொடு காலுற வீழ்ந்தோர்
வந்த காரணம் வயங்கிய கொள்கைச்
சிந்தை விளக்கிற் றெரிந்தோ ளுயினு
மார்வமுஞ் செற்றமு மகல நீக்கிய
வீர ருகலின் விழுமங் கொள்ளான்

களo. கழிபெருஞ் சிறப்பிற் கவுந்தி காணு
[1]யொழிகென வொழியா தூட்டும் வல்வினை
யிட்ட வித்தி னெதிர்ந்துவந் தெய்தி
யொட்டுங் காலை யொழிக்கவு மொண்ணு
கடுங்கா னெடுவெளி யிடுஞ்சுட ரென்ன

களரு. வொருங்குட னில்லா வுடம்பிடை யுயிர்க
ளறிவ னறவோ னறிவுவரம் பிகந்தோன்
செறிவன் சினேந்திரன் சித்தன் பகவன்
றரும முதல்வன் றலைவன் தருமன்
பொருளன் புனிதன் புராணன் புலவன்

கசுo. சினவரன் றேவன் சிவகதி நாயகன்
பரமன் குணவதன் பரத்தி லொளியோன்

கருள. மரம்பயில் அடுக்கம் - மரச்செறிவு ; அடுக்கம் அரங்கத்துக்கு அடுத்தவிடமுமாம்.

கருஅ. ஒருசிறை - ஒருபக்கத்திலே.

கசுo. ஐயர் - மூன்சொன்ன உலகநோன்பிகள்.

கசுக. மூன்புசொன்ன சாரணர்தோன்ற.

[1]ஐயர் [2]பட்டினப்பாக்கத்திலிட்ட சிலாதலத்திருந்து தருமஞ்சாற்றுதல் சாரணர்க்கு அடையாக்கி அவர் இங்கேதோன்றவென்க.

கசுள. சிந்தைவிளக்கு - அவதிஞானம்; என்றது திரிகாலஞானத்தை.

களஉ. வித்தின் - வித்துப்போல.

---

[1] சிலப். பதிகம், இள. [2] இக்காதை உசு - ஆம் அடிமுதலியவற்றைப்பார்க்க.

றத்துவன் சாதுவன் சாரணன் காரணன்
சித்தன் பெரியவன் செம்ம றிகழொளி
யிறைவன் குரவ னியல்குண னெங்கோன்
கஅடு. குறைவில் புகழோன் * குணப்பெருங் கோமான்
சங்கர னீசன் சயம்பு சதுமுக
னங்கம் பயந்தோ னருக னருண்முனி
பண்ணவ னெண்குணன் பாத்தில் பழம்பொருள்
விண்ணவன் வேத முதல்வன் விளங்கொளி
கஙo. யோதிய வேதத் தொளியுறி னல்லது
போதார் பிறவிப் பொதியறை யோரெனச்
சாரணர் வாய்மொழி கேட்டுத் தவமுதற்
காவுந்தி கைதன் கைதலை மேற்கொண்
டொருமூன் றவித்தோ ணேதிய ஞானத்
கசடு. திருமொழிக் கல்லதென் செவியகந் திறவா
காமனை வென்றே ஞயிரத் தெட்டு
நாம மல்லது நவிலா தென்ஞ
வைவரை வென்றே னடியினை யல்லது
கைவரைக் காணினுங் காஞ வென்க
உoo. ணருளறம் பூண்டோன் றிருமெய்க் கல்லதென்
பொருளில் யாக்கை பூமியிற் பொருந்தா
தருக ரறவ னறிவோற் கல்லதெ
னிருகையுங் கூடி யொருவழிக் குவியா
மலர்மிசை நடந்தோன் மலரடி யல்லதென்
உoடு. றலைமிசை யுச்சி தானணிப் பொறுஅ
திறுதியி லின்பத் திறைமொழிக் கல்லது

கஅஅ. எண்குணமென்றது: அநந்தஞானம், அநந்ததரிசனம், அநந்தவீரியம், அநந்தசுகம், அநந்தநாமம், நிட்களம், நிராயுஷ்யம், சற்பாவனையெனவிவை.

கஙக. பிறவிப்பொதியறை - பிறவியாகிய துவாரமில்லாத அறை.

கசச. ஒருமூன்று - காமம் வெகுளி மயக்கம்.

கசஅ. ஐவர் - பஞ்சேந்திரியங்கள்.

கசஆ - க. மற்றைத்தேவர் இணையடிகளைக் கையிடத்தே காணினும்; அந்நியமார்கிய சமயதேவர்களைக் காணினுமென்றுமாம்.

உoo. திருமெய்க்கு - திருமெய்ப்பொருட்டு.

உoஉ. (பா) அருகனறவோர் - இருடிகள். உoடு. தலையிடத்து.

உoசு. இறுதியிலின்பம் - அநந்தசுகம்.

(பி - ம்.) * 'குணப்பொருட்'.

மறுதர வோதியென் மண்புடை பெயர்ர
தென்றவ ணிசைமொழி யேத்தக் கேட்டதற்
கென்றிய மாதவ ரூர்மின்ச யோங்கி
உக0. நிவந்தாங் கொருமுழ நீணில நீங்கிப்
பவந்தரு பாசங் கழுந்தி கெடுகென்
றந்தர மாரூப் படர்வோர்த் தொழுது
பந்த மறுகென்ப் பணிந்தனர் போந்து
காரணி பூம்பொழிற் காவிரிப் பேர்யாற்று
உகரு. நீரணி மாடத்து நெடுந்துறை போகி
மாதருங் கண்வனு மாதவத் தாட்டியுங்
தீதுதீர் நியமத் தென்கரை யெய்திப்
போதுசூழ் கிடக்கையோர் பூம்பொழி லிருந்துழி
[1] வம்பப் பரத்தை வறுமொழி யாள்ளெடு
உஉ0. [2] கொங்கலர் பூம்பொழிற் குறுகினர் * சென்றோர்
காமனுந் தேவியும் போலு மீங்கிவ
ராரெனக் கேட்டிவீர் கிறிகுவ மென்றே
நோற்றுணல் யர்க்கைக் நொசிதவத் தீருட
னூற்றுவழிப் பட்டோ ராரென வின்வவென்
உஉரு. மக்கள் காணீர் மானிட யர்க்கையர்
பக்க நீங்குமின் பரிபுலம் பின்றென்
றுடன்வயிற் றோர்க ளொருங்குடன் வாழ்க்கை
கடவது முண்டோ கற்றறிந் தீரெனத்

உ0க. உயர்மிசை - சிலாவட்டம். ஓங்கி - எழுந்திருந்து.

உகக. பந்தம் - ஸம்ஸாரம்.

உகரு. நீரணிமாடம் - பள்ளியோடம்; போகி - அதனுலேபோந்து.

உகக. வம்பப்பரத்தை: வம்பு - புதுமை; பரத்தைத்தன்மைக்கும் புதிய வள். வறுமொழியாளன் - பயனிலசொல்லுவான்.

உஉக - உ. காமனும் தேவியும்போலும் இவராரெனக்கருதி; போலும், ஒப்பில்போலி.

உஉக. நோற்றுணல் - பட்டினிவிட்டிணல்.

உஉச. ஆற்றுவழி - நெறியிடத்து.

உஉரு. மானிடயாக்கையரென்றது - நீங்கள் நினைத்த காமனும் தேவியு மல்லரென்றவாறு.

உஉசு. பரிபுலம்பினர் - செலவால் வருந்தினர்.

---

[1] சிலப்பதிகாரம், கசு: சுக. [2] தொல். முதற்சூத்திரவிருத்தி, மேற். (பி - ம்.) * சென்றுழி

தீமொழி கேட்டுச் செவியகம் புதைத்துக்
உகo. காதலன் முன்னர்க் கண்ணகி நடுங்க
வெள்ளுகர் போலுமிவ ரென்பூங் கோதையை
முள்ளுடைக் காட்டின் முதுகரி யாகெனக்
கவுந்தி யிட்ட தவந்தரு சாபங்
கட்டிய தாதலிற் பட்டதை யறியார்
உகஉ. குறுகரி நெடுங்குரற் கூவினி கேட்டு
நறுமலர்க் கோதையு நம்பியு நடுங்கி
நெறியி னீங்கியோர் நீரல கூறினு
மறியா மையென் றறியல் வேண்டுஞ்
செய்தவத் தீர்துந் திருமுன் பிழைத்தோர்க்
உசo. குய்திக் கால முரையீ ரோவென
வறியா மையினின் றிழிபிறப் புற்றீ
ருறையூர் நொச்சி யொருபுடை யொதுங்கிப்
பன்னிரு மதியம் படர்நோ யுழந்தபின்
முன்னீ யுருவம் பெறுகவீங் கிவரெனச்
உசஉ. சாபவிடை செய்து தவப்பெருஞ் சிறப்பிற்
காவுந்தி யையையுந் தேவியுங் கணவனு
[1] முறஞ்செவி வாரண முன்சம முருக்கிய
புறஞ்சிறை வாரணம் புக்கனர் புரிந்தென்.

உசுக - கo. புதைத்து நடுங்காநிற்ப.

உகச. பட்டதையறியார்-மனத்தில் இவர் (கவுந்தியடிகள்) நினைத்ததாதலால் அறிந்திலர்.

உகஉ - சo. பின்பு அறிந்தபடி: அவர் கண்முன்னே நரியானபடியாலும், பொல்லாங்கு கூறினமையாலும், அவ்விடத்து இவரல்லது வேறுசாபமிட வல்லாரில்லையாகலானும், இச்சாபம் இவராலேவந்ததென்று இவர் (கோவலனும் கண்ணகியும்) அறிந்தார்; அறிந்து உய்திக்காலம் உரையீரோவென்றார்.

உசஉ. நொச்சி - மதில்; பதணமுமாம்; என்றது காவல்வேண்டாத அரணென்றவாறு.

உசக. படர்நோய் - உறழ்ச்சியாலுண்டான நோய்.

உசள - அ. முறம் - சுளகு. வாரணம் - யானை, கோழி; புறத்தே சிறையையுடைய கோழி - உறையூர்; வாரணம், ஆகுபெயர். யானையைக் கோழிமுருக்கலால் கோழியென்று பெயராயிற்று. யானையைச் சயித்த கோழி தோன்றினவிடம் வலியுடைத்தென்று கருதி அவ்விடத்து அதன்பெயராலே சோழன் ஊர்காண்கின்றபொழுது சிறையும் கழுத்துமாக ஆக்கியவதனால் புறம்பே சிறையையுடைய கோழியென்றுயிற்று.

---

[1] முறஞ்செவி வாரணம்: கவி. சஉ.

கட்டுரை.

முடியுடை வேந்தர் மூவ ருள்ளுந்
தொடிவிளங்கு தடக்கைச் சோழர்குலத் துதித்தோ
ரறனு மறனு மாற்றலு மவர்தம்
பழவிறன் மூதூர்ப் பண்புமேம் படுதலும்
நி. விழவுமலி சிறப்பும் விண்ணவர் வரவு
* மொடியா வின்பத் தவருறை நாட்டுக்
குடியுங் கூழின் பெருக்கமு மவர்தந்
தெய்வக் காவிரித் தீதுதீர் சிறப்பும்
பொய்யா வானம் புதுப்புனல் பொழிதலு
கo. மரங்கு மாடலுந் தூக்கும் வரியும்
பரந்திசை † யெய்திய பாரதி விருத்தியுந்
திணைநிலை வரியு ‡ மிணைநிலை வரியு
மிணைபுறக் கிடந்த யாழின் றெருதியு
மீரேழ் சகோடமு மிடைநிலைப் பாலையுந்

கூ. அறன் - தருமாசனம். மறன் - இமயத்துப்புலிபொறித்தது; (சிலப். நி: கூள-அ;) ஆற்றல் - அமராபதிகாத்தது. (சிலப். சூ: கச.)

ச. மூதூர்ப்பண்பு - காவிரிப்பூம்பட்டினத்துப்பண்பு.

நி. விழவு - இந்திரவிழவு. விண்ணவர்வரவு - தேவர்கள்வரவு.

எ. கூழின் பெருக்கம்-கவரிச்செந்நெற்காய்த்தலையிற் கூட்டின் நெற்சொரிதல்; (சிலப். கo: கஉ-கூ-ச.)

சூ - எ. நாட்டுக்குடி - உழவிடைவிளைப்போர்; (சிலப். கப: கநo.)

அ. காவிரிச்சிறப்பு - ஆற்றுவரி; (சிலப். எ: உ-ச; ஷெ ஷெ உநி - எ.)

கூ. பொய்யா வானம் புனற்புனல் பொழிதல் - மழைக்கருவுயிர்த்தல்; (சிலப். கo: கசகூ.)

கo. அரங்கு மாடலும் - அரங்கேற்றுகாதையிற்கூறின.

(பா) தலைவரியியல்பு - "திங்க ஃ மாலை" முதலான முகழடைவரிகள்; சிலப். எ: உ - ச.)

கக. பாரதிவிருத்தி - கடலாடுகாதையிற்கூறிற்று; (பதிஞ்ஞோடல்)

கஉ. திணைநிலைவரி - "புணர்துணையோடாடும்" என்றன்முதலாயின; (சிலப். எ: ஙக.)

இணைநிலைவரி - அல்லாத.....நிலைவரிமுதலாயின.

கங. (பா) யாழின்பகுதி - வேனிற்காதையிற்சொன்ன "உழைமுதற் கைக்கிளை" (ஙஉ) முதலாயின.

கச. (பா) இடைநிலைப்பாலை-"கோடிவிளரி மேற்செம் பாலை" முதலாயின; (சிலப். கூ: அஅ.)

(பி - ம்.) * 'ஓழியாவின்பத்தவருடை' † 'ஏத்தியர்' ‡ 'திணைநிலை'

கடி. தாரத் தாக்கமும் தான்றெரி பண்ணு -
மூரகத் தேரு மொளியுடைப் பாணியு
மென்றிவை யனைத்தும் பிறபொருள் வைப்போ
டொன்றித் தோன்றுந் *தனிக்கோ னிலைமையு
மொரு பரிசா நோக்கிக் கிடந்த
உ0. புகார்க்காண்டம் முற்றிற்று.

வெண்பா.

காலை யரும்பி மலருங் கதிரவனு
மாலை மதியமும்போல் வாழியரோ—வேலை
யகழா லமைந்த வவனிக்கு மாலைப்
புகழா லமைந்த புகார்.

கடி. தாரத் தாக்கமும் தான்றெரி பண்ணும் : "புறத்தொரு பாணியிற் பூங்கொடி மயங்கி" என்றதுமுதலாயின; (சிலப். அ: சச.)

கசு. ஊரகத்தேர் - இந்திரவிழவூரெடுத்தகாதையிற்சொன்ன ஊரின் வண்ணம்.

ஒளியுடைப்பாணி - "வெங்கட்டொலிச்சிய விருந்திற் பாணி" முதலாயின;—(சிலப். கo: கசுக.)

கள. பிறபொருள்வைப்பு - .....முதலாயின.

முதலாவது

புகார்க்காண்டம் அரும்பதவுரையுடன் முற்றிற்று.

(பி - ம்.) * 'தன்கோனிலைமையும்'

க - கூ. வான்கண் விழியா.....கடைநாட் கங்குல்

(இ - ள்.) உலகிற்குக் கண்ணுகிய ஆதித்தன் தோன்றிவிளங்காத வைகறை யென்னும் யாமத்திடத்து மீமிசை அழகுபெற்றெழுகும் வெண்மதியானது விசும்பினின்றும் நீங்கிற்றுக் கரிய இருள் கடைக்கணின்ற கங்குற்பொழுதி லென்க.

என்பது அந்தச் சித்திரைத்திங்கட் புகுதி நாள் - சோதி, திதி - மூன்றும் பக்கம், வாரம் - ஞாயிறு. இத்திங்களிருபத்தெட்டிற் சித்திரையும் பூரணையுங் கூடிய சனிவாரத்திற் கொடியேற்றி [1] "நாலேழ் நாளினும்" என்பதனுன் இருபத்தெட்டுநாளும் விழாநடந்து கொடியிறக்கி வைகாசி இருபத்தெட்டினிற் பூருவபக்கத்தின் பதின்மூன்றும் பக்கமும் சோமவாரமும்பெற்ற அனுடத்தில் நாட்கடலாடி ஊடுதலின் வைகாசி இருபத்தொன்பதிற் செவ்வாய்க்கிழமையும் கேட்டையும் பெற்ற நாசயோகத்து நிறைமதிப் பதினாலாம்பக்கத்து வைகறைப் பொழுதினிடத்து நிலவுபட்ட அந்தரத்திருளிலேயென்றவாறு. அது பூருவ பக்கமென்பது தோன்றக் 'காரிருணின்ற கடைநாட் கங்கு' லென்றார்; [2] "குண முதற் றோன்றிய வாரிருண் மதியிற், றேய்வன கெடுகதின் றெவ்வ ராக்கம்', என இருண்மதியென்றார் மதுரைக்காஞ்சியுள்ளும். கண் - இறைவன்கண் ணென்பாருமுளர். விழித்தல் - விளங்குதல்; அது செய்யாத வைகறை, ஆகு பெயர்; வைகல் - தூயிறல்; அறல் - அறையாயிற்று; [3] "பொறியறை" போல.[4]

ச. ஊழ்வினை கடைஇ யுள்ளந் துரப்ப:—(இ - ள்.) முன்செய்த தீவினை முறையானேவந்து இவனுள்ளத்தைச் செலுத்துதலானேயென்க.

கடைஇ - செலுத்தியென்றுமாம்.

ஞ - அ. ஏழகத் தகரும்.....நெடுங்கடை கழிந்து

(இ - ள்.) ஏழகமாகிய தகரும் எனினமாகியகவரியும் தூய மயிரினையுடைய அன்னமுமாகியவிவை ஒன்றோடொன்று இனமல்லவாயினும் இனம்போலே விடாது திரியும் தாளோடுகூடப் பண்ணப்பட்ட பெருமைபொருந்திய சிறப்பினை யுடைய மிகவும் பெரிய கதவையுடைய இடைகழியைக் கழிந்தென்க.

நெடுவாயிற்கடை - பெரிய கதவையுடைய தலைக்கடை. தகர்முதலியன இவள் வளர்த்தனவாகலின், இவளைத் தம்மினமென்றுகருதித் திரியுமெனவு மாம்; வாயிற்கணெழுதினவற்றை இனமெனக்கருதித்திரியுமெனவுமமையும். தாளொடுகுயின்றவென்றார், போர்க்கதவாகலின் இனியிளகாமற் பண்ணுகின்ற போதே கூடப்பண்ணுதலான். ஏழகத்தகர்முதலியன இருபெயரொட்டுப் பண் புத்தொகை. வாயில் - கதவு. கடைகழிந்தென்றார், மனையின்பெருமையும் காவன்மிகுதியுந்தோன்ற. இனி, இவன் அன்று கழிந்தானெனினுமமையும்.

---

[1] மணிமேகலை, க: அ. [2] மதுரைக்காஞ்சி, ககஙடு - கூ. [3] திரிக்டிகம், கடு.

[4] இவ்விடத்தேஉரையியலுள்ள காவுவரையறை பொருத்தமாகத்தோற்ற வில்லை; ஆயினும் பிரதிகளிலுள்ளவாறே பதிப்பிக்கப்பட்டது.

அ - க௦. ஆங்கு.:.....வலஞ்செயாக்கழிந்து

(இ - ள்.) அங்ஙனம் வாயில்கழிந்தபொழுதே அரவணையின்மீதே அறி வோடுதுயில்கொள்ளும் மணிவண்ணனென்னும் திருநாமத்தையுடைய திருமால் கோயிலே வலஞ்செய்து கழிந்தென்க;

ஆவது வலத்திட்டேகுதல். அணி - அழகு. அறிதுயில் - யோகநித்திரை. மணிவண்ணன், பெயர்.

கக - ச. பணையைத் தோங்கிய.....ஏழுடன் போகி

(இ - ள்.) ஓங்கிய ஐந்துபணையினையும் பகிய இலையினையுமுடைய [1] மா போதி நிழலிலெழுந்தருளிய அறவோனுகிய புத்தன் அருளிச்செய்த ஆகமத்தை ஆகாயசாரிகள் மறையிருந்தோதி யாவர்க்கும் விளங்கப்பொருளுணர்த்தப்படும் [2] இந்திரனுணர்மிக்கப்பட்ட விகாரங்களேழினையும் அடைவேகண்டு அவற்றைக் கழிந்துபோயென்க.

அவை அவ்வூர்ப் [3] புத்தசைத்தியத்து இந்திரன் நிருமித்தனவாகிய ஏழ ரங்கு. மாபோதி ஐந்துபணையது... ... ... இயல்பு. திருமொழி - ஆகமம். அறை ந்து சாற்றுதல் - [4] பாடமோதிப் பொருளுரைத்தல். விகாரம் - கையாற் கருவி யாற்பண்ணுது மனத்தால் நிருமித்தல்.

கடு - உடு. புலவுண்டுறந்து.....தொழுது வலங்கொண்டு

(இ - ள்.) புலாலாகிய ஊணைத்துறந்து பொய்கூறுமையாகிய விரதத்தோடு பொருந்தி [5] அழுக்காறு அவாமுதலியவற்றைக் கைவிட்டு அறநூன்முதலியவற் றையறிந்து ஐம்புலனையுமடக்கிய கோட்பாட்டையுடையராய் உண்மைவகை யுணர்ந்த சீரியோர்திரண்ட ஸ்ரீகோயிலில் பஞ்சபரமேட்டிகள் நிலைபெற்ற ஐந்து சந்தியுங்கூடிவந்து தலைமயங்கியிருக்கின்ற மிக்க பெரிய மன்றிற் பூவையுடைய பிண்டியினது அழகுகளிரும் நிழற்கண்ணே விழு அயனுதிகளிலும் விழுவுகளி லும் ஆகாயசாரிகள் வரத்தருமென்று சாவகரெல்லாம் கூடியிடப்பட்ட விளங் காநின்ற ஒளியையுடையசிலாவட்டத்தை இவர்களொழுது வலங்கொண்டென்க.

புலவுண் - புலாலோடே உண்ணுமுணுமாம்.

புலையுண் பாட்டமாயிற் புலையருண்ணுமுணென்க. விரதத்து - விரதத்தோ டே. அவலம் - அழுக்காறு அவாமுதலியன. அறிந்து - அறியப்படும் அறநூல் களே அறிந்து. - பஞ்சபரமேட்டிகளாவார்:—அருகர், சித்தர், உபாத்தியாயர், ஆசிரியர், சாதுக்களெனவிவர்.

இனி, ஐவகை நின்ற வருகத் தானத்துச்சந்திமன்றென்பதற்கு ஐந்து ஸ்ரீகோயிற்சந்திகூடிய மன்றென்பாருமுளர். பொன் பொலிவாதலன்றிப்

---

[1] மாபோதி = மஹாபோதி; கௌதமபுத்தருக்கு ஞானோதயமான இடத்துள்ள அரசமரம்; "போதிமூலம்" (மணி. உ௦ : க0) என்பதன் குறிப்பைப்பார்க்க.

[2] சிலப். உ௭: கூ௨.

[3] புத்தசைத்தியம் - பௌத்த வித்தியாசாலை; புத்தஞலயமுமாம்.

[4] பாடமோதல் - மூலத்தைச் விளங்கச்சொல்லுதல்.

[5] "அழுக்கா றவாவெகுளி யின்னுச்சொ னான்கு, மிழுக்கா வியன்ற தறம்" திருக் குறள், கடு.

பொலம் பொலிவாகாமையின் அருகஞ்ஜையான் எப்பொழுதும் பொற்பூவைப் பூக்கும் பிண்டியென்க. சிலாதலம் - சந்திரகாந்தக்கல்லாற் படுத்தது. நீரணி விழவு - அபிடேகவிழவெனினுமமையும்.

உசு - எ. மலைதலைக் கொண்ட.....ஒருங்குட னீங்கி

(இ - ள்.) மலையிடத்தே தலையையுடையதோர் பெரியயாறுபோலும் உலகி லுள்ளோராயவர் போக்குவரவு செய்தற்கு அமைந்த ஊர்வாயிலை அக்காலத்துப் போவாரோடு கலந்துபோய் அதனைவிட்டுநீங்கியென்க.

உலகவிடைகழி - ஊர்வாயில். இடையேகழிதலின், அவ்வாயில் இடைகழி யாயிற்று. கோயிற்கோபுரத்தை மலையாகவும் அதனெடு மணந்துகிடந்ததெரு வை ஆறுகவும் உவமித்தார்.

உஅ - ஙக. கலையி லாளன்.....எயிற்புறம் போகி

(இ - ள்.) மன்னவற்குக் காமன் வேனிலோடு தென்றலையும் திறையாக இடுதற்குப்பொருந்திய பலமலர்களை நிரைத்த நல்ல மரநிழலையுடைய இலவந் திகையினது எயிற்குப் புறத்திலேபோயென்க.

கலையிலாளன் - அநங்கன்; கலை - சரீரம். காமர் - அழகு. பந்தர் - நீழல். இலவந்திகை - நீராவியைச்சூழ்ந்த வயந்தச்சோலை. அஃது அரசனும் உரிமையு மாடுங் காவற்சோலை; [1] "இலவந் திகையி னெயிற்புறம் போகி, னுலக மன்னவ னுழையோ ராங்குளார்" என்றார் மணிமேகலையிலும்.

ஙஉ - ஙஃ. தாழ்பொழி லுடுத்த .....கடைமுகங் கழிந்து

(இ - ள்.) இருமருங்கும் சோலைசூழ்ந்த புதுப்புனலாடப்போம் பெரிய வீதியையுடைய காவிரிக்கரையில் திருமுகத்துறைகழிகின்ற வாயிலையும் கழிந் தென்க.

கடைமுகங்கழிந்தென்றார்; காலையில் நாணீராடுவோர் பிறர்முகநோக்காது போதற்கு மறைந்துகழிவர்; இவரும் அவ்வாறுகழிந்தாரென்றற்கு.

ஙசு. குடதிசைக்கொண்டு:—(இ - ள்.) மேற்றிசையை நோக்கிக் கொண்டு,

ஙசு - ஙந. கொழும்புனற் காவிரி.....பொழினுழைந்து

(இ - ள்.) வளவிய புனலையுடைய காவிரியினது பெரிய வடகரையிற் பொழிலைக்கழிந்தென்க.

கோடு - கரை. நுழைதல் - கழிதல்; அன்றி இளமரக்காவாதலால் தாழ்ந்த கோட்டிடை நுழைந்துபோயெனவுமாம்.

ஙஙசு - சக. காவதங் கடந்து.....வினவ

(இ - ள்.) நறிய ஐவகைக் கூந்தலையுடையாள் அங்ஙனம் காதமென்று சொல்லப்படும் எல்லையைக்கடந்துசென்று கவுந்தியடிகளிருக்கின்ற பள்ளிக்கு

[1] மணிமேகலை, கः சஙி - சுo.

அயலதோர் பொலிவினையுடைய செறிந்த இளமரச்சோலையளவுஞ்சென்று பொருந்தி அவ்விடத்தே இனி இஃது இறுமெனத்தக்க கொடிபோலும் இடையும் அடியும் மிகவும்வருந்தி மேல் இளைப்பாற் குறுகவுயிர்த்து முற்முத மழலை மொழியாலே கூர்த்த எயிறிலங்க மதுரையென்னுமூதூர் யாதுதானென்று கேட்பவென்க.

காவதம் - காதம்; பகுதிப்பொருள்விகுதி. பொதும்பர் - மரச்செறிவு; கோடரமென்றுமாம்.

சஉ - ங. ஆறைங் காதம்.....நக்கு

(இ - ள்.) நீ கூறிய மதுரை நம் அகன்றநாட்டிற்குமேல் ஆறைங்காவதங் காண், இனி அண்ணிதென்றுகூறி நக்கென்க.

யாதென்றவட்கு மூப்பதென்னும் பொருள்மறைந்து காதம் ஆறு காதம் ஐந்தென்றுற்போலிருத்தற்கு ஆறைங்காதமென்றான். நகுதல் - [1] தன்பாலை. கூந்தல், விளி.

சச - ஙி. தேமொழி.....தொழுவும்

(இ - ள்.) அங்ஙனம்வினவின தேமொழிதன்னோடுசென்று தவவேலிக்கணிருந்த கவுந்தியடிகளைக்கண்டு அடிதொழுதலுமென்க.

சிறை - பள்ளியென்றுமாம்; ஸ்ரீகோயிலின் ஒருபக்கமுமாம்.

அ - சரு. கழிந்து கழிந்து போகிக் கொண்டு நீங்கிப் போகிக் கழிந்து தழைந்து கடந்து பொருந்தி நக்குக் கண்டு அடிதொழலுமென்க.

சசு - ஙூ. உருவுங் குலனும்.....கருதிய வாறென

(இ - ள்.) இவர்கள் தொழுதார்களாக, அழகும் குடிப்பிறப்பும் ஒழுக்கமும் இறைவனூலிற்கூறிய விரதந்தப்பாமையுமென்னும் இவற்றையெல்லாம் ஒரு தலையாகவுடைய நீங்கள் தீவினையாளரைப்போல நுமதிடத்தைக்கழிந்து வருவதற்குக் கருதியதென்னோவென்று கேட்பவென்க.

பெருமகன் - அருகதேவன். திருமொழி - அவனருளிச்செய்த ஆகமம். உறகணுளர் - மிடியாளரென்பாருமுளர். கடைகழிதல் இவர்க்கு மரபன்மையிற் கழிந்தென்றார்.

இவ்வும்மைகள் எண்ணுக்குறித்தனவெனினும் சிறப்புப்பொருண்மை தோன்றநின்றன.

ஙo - நிக. உரையாட்டில்லை.....வேட்கையேன்

(இ - ள்.) மிக்க தவத்தினையுடையீர், இவ்வினாவிற்கு ஓர்உத்தரமில்லை; ஆயினும் யான் கருதியதொன்றுண்டு; அதுயாதெனின், மதுரையாகிய மூதூரிற் சென்று நிருமித்தபொருளைத் தேடக்கடவோமென்னும் வேட்கையையுடையேனையினேனென்று சொல்லவென்க.

முன்னர்க்கோதையில் [2] "சென்ற கலனே, தலந்தபொரு ளீட்டுத லற்றேன்" என்றாளாகலின், அத்தினை வரைபொருளென்றான். இனி நியாயத்திற்

[1] "இடுக்கண்வருங்காலநகுக" திருக்குறள், சுஉக. [2] சிலப்பதிகாரம், கூ: எச - இ.

றேடும்பொருளெனினுமமையும்; அன்றி, இதற்கு இத்துணைப்பொருட்கு மேற் பட்டதே தானம்பண்ணக் கடவேனென வரைந்தபொருளென்பாருமுளர். என வென ஒருசொல்வருவிக்க.

இனிக் கவுந்தியடிகள் கூறுவார்:—

நிஉ - ச. பாடகச்சீறடி.....அறிகுநர் யாரோ

(இ - ள்.) இனி அங்ஙனங்கருத்தாயின், இவள்சீறடிகள் பருக்கையாகிய பகையை வெல்லமாட்டா; ஆதலால் நீர் காடுநாடுமென்னும் இவ்வழியைக்கடத் தற்குஇவள் செவ்வி ஏற்றதன்று; இனி ஊழ் என்செய்துமுடிக்குமோ? அதனை அறிவாராரென்றுரைன்க.

என்றகருத்து: அடி பரற்பகையுழவா; வழி காடிடையிட்டநாடு; இவள் அதற்கேற்றதன்மையளல்லள்; இனி ஊழ் என்செய்யுமோ? இதனை யார்தியவல் லரெனப் பரிவுறல்தோன்றநின்றது.

நிஇ. உரிய தன்றீங் கொழிகென வொழியீர்:—(இ - ள்.) இவையே யன்றியும் குடிப்பிறப்பிற்கும் இவளை ஒருங்குகொண்டு சேறல் எளாதாகலின் இனிச் செலவை ஒழிமினென்று யாமொழிப்பவும் ஒழிகின்றிலீராயினீரென்று ரைன்க.

ஒழிகெனவொழியீரென்பதற்கு இவர்க்கு எதிர்வதறிந்து கூறினுரெனின், [1] தவந்தரு சிறப்பிற் கவுந்தி.....உண்ணு நோன்போ டுயிர்பதிப் பெயர்த்த தும்" என நீர்ப்படையுள் மாடலன் கூறுதலானும், அடைக்கலக்காதையில், [2] "தன்குல வாண,ரரும்பொருள் பெறுநரின் விருந்தெதிர் கொண்டு, கருந்தடங் கண்ணியொடு கடிமனைப் பதித்துவ, ருடைப்பெருஞ் செல்வர் மனைப்புகு மளவு, மிடைக்குல மடந்தைக் கடைக்கலந் தந்தேன்" எனவும், [3] "தாயு நீயே யாகித் தாங்கு" எனவும், [4] "மிகப்பே ரின்பந் தருவது கேளாய்" எனவும் ஒருபொழு திற்கு இத்துணை ஒம்படையெல்லாம் கூறவேண்டாவாகலானும் இவர்க்குத் தவப் பயனுலே சபித்தலன்றிக் காலவுணர்ச்சியின்மையுணர்க.

நிசு - சுஙு. மறவுரை நீத்த.....தீர்த்தனென

(இ - ள்.) மறவுரைகளை நீத்திருக்கும் குற்றமற்ற பொருட்பயனையுடைய வர்தம் நூலைக்கேட்டு அந்த ஆகமப்படியே அறிவனையேத்துதற்குத் தெற்கின் கணுள்ள தமிழ்நாட்டின்கண்ணதாகிய குற்றந்தீர்ந்த மதுரைக்குப்போதற்கு முன்னே ஒருப்பட்ட உள்ளமுடையேனுதலின், யான்போதுவேன்; நீரும் போது மினென்ற கவுந்தியடிகளைக் கையாற்றொழுது நாவானேத்தி, அடிகளே! நீரே இங் ஙனம் அருள்செய்வீராயின், இவ் வுலகொருந்திய தோளினையுடையாருடைய தயரெல்லாம் இப்பொழுதே போக்கினேனன்றுவென்று சொல்லவென்க.

நீயிரே இதுசெய்வீராயினென்றது ஒரு வழக்கு. எகாரத்தை இசைநிறை யாக்கலுமொன்று. தொடி - வளவு; [5] "தொடிக்கட் பூவை" என்றுராகலின்.

---

[1] சிலப். உள: எசு - அசு. [4] சிலப். கடு: கடுo.
[2] ,, கடு: கஉசு - சுo. [5] சீவகசிந்தாமணி, சுசுஉ.
[3] ,, ,, கசுசு.

நீத்தென்றும் பாடம்.

சுசு - நி. கோவலன் காணுய் ...பலகேண்மோ

(இ - ள்.) கோவலனே! நாம் போவதாகவுட்கொண்ட இந்நெறியிடத்து வருத்தத்தைத் தருவன எவ்விடத்தும் பலவுள; அவற்றை நீயறியாய்; ஆதலால், யான் சொல்லக் கேட்பாயாகவென்றுரைன்க.

காணுய் - நீ முன்பு அறியாய். இந்நெறி - வடகரைவழி. மோ, முன்னிலையசை.

சுசு - எக. வெயினிறம் பொரு அ.....காட்டினுங் காட்டும்

(இ - ள்.) வெயிலினது நிறத்தைக் கண்ணுற்பார்க்கவும் பொருத இம்மெல்லிய இயல்பினையுடையாளைக்கொண்டு நாம் பூப்பயிலும் தண்டலையூடு போகக் கடவேமென்பேமாயின்; அவ்விடத்து நிலம்பிளக்கும்படி இடங்கொண்டு கீழ் வீழ்ந்த வள்ளிக்கிழங்கை அகழ்ந்துகொண்டகுழிகளைச் சண்பகமரங்கணிறைத்த பூந்தாதுசேர்ந்த்பொங்கர் பொய்க்குழிப்படுவித்து அவ்விடங்களை அறிந்து பாதுகாத்துச்செல்லாதமாக்கட்குச் செயலறுதியாகிய துன்பத்தைக் காட்டுதலைச் செய்யினுஞ் செய்யுமென்றுரைன்க.

பொங்கர் - ஈண்டு வாடாப்பூ. அதுபோர்த்தலாற் பொய்யறைப் படுத்தென்றார்; [1] "பொங்கர் வெண்பொரி சிந்தின புன்கு" என்ப மேலும். கையறுதுன்பம் - மீளாத்துன்பமுமாம். காட்டல் - தருதல். பொங்கர் படுத்துக் காட்டுமென்க.

எஉ - நி. உதிர்பூஞ் செம்மலின்.....முட்டினு முட்டும்

(இ - ள்.) அங்ஙனமுதிர்ந்த செம்மற்பூ மறைத்த குழியுள்ளவழி நாடுதற்கு நிலஞ்சேர்ந்து ஒதுங்கிச்செல்வோரை முற்றிப் பழுத்து விண்டு தேஞ்சுழும் பலாப்பழங்கள் தாழ்ந்தகோட்டின்கணிருந்து பகைபோல முட்டுதலைச் செய்யினுஞ் செய்யுமென்றுரைன்க.

இனித் தேமென்பதனை இனிமையாக்கித் தெங்கம்பழம் முட்டுமெனினு மமையும்; பழம்பகையாயெனப் பண்பொட்டுவிரிக்க.

முட்டினுமுட்டுவரென்றது பாடமாயின், கழிவோர்செய்யினுஞ்செய்வாரென்க; உம்மையை ஐயவும்மையாக்கிப் பொருளுரைக்க. படர்குவமெனினே யெனக் கழிவோர்கருத்தைக் கொண்டு கூறினர், உலகியலாகலான்.

எச - நி. மஞ்சளுமிஞ்சியும்.....பகையுறுக்கும்

(இ - ள்.) அவ்வாறன்றி வெள்ளிடைப் போவோமெனின், ஆண்டு மஞ்சள் முதலியன தம்மில் தலைமயங்கிய பிணக்கத்தையுடைய தோட்டங்களிற் பாத்தி தோறும் பலவின் செஞ்சுளைகளினுள்ள வெண்காழாகிய பருக்கைகள் இவள் மெல்லடிக்குப் பகையாய் உறுத்தலைச் செய்யுமென்றுரைன்க.

வலயம் - பாத்தி. வலயத்தோடு பரலும் பகையாயுறுக்குமெனினுமமையும்; உறுக்கும் = உறுத்தும்.

[1] சிலப்பதிகாரம், வேட்டுவவரி, "செம்பொன்வேங்கை"

என்றகருத்து: மஞ்சள் முதலியன நிலவண்மையான் முற்றிப் பருவஞ் செய்தமூலை சருகின்மறைந்துகிடந்தவற்றோடு பரலும் உறுத்துமென்றதாம்.

எசு - எ. கயனெடுங் கண்ணி.....படர்குவ மெனினே

(இ - ள்.) கயல்போலும் கண்ணிணையுடையாள் காதலிக்கப்பட்ட கேள்வ னே! அங்ஙனம் சோலையும் தோட்டமுமாகிய கரைவழியன்றி வயல்வழியே போகக்கடவேமென்பேமாயின்,

எஎ - அக. ஆங்கு.....காரிகை

(இ - ள்.) தம்மிடத்துமலர்ந்த பூக்களின்மணம்கமழாகின்ற குளங்களில் நீர்நாய் பொருகின்றகயல்கள் வெருவியோடவோட்டிக் கௌவப்பட்ட நீண்ட முதுகையுடையவாளை மலங்குகள் நெளியுஞ்செறுவிற் குறுக்கிடப்பாயுமாயின், இக்காரிகை கலங்குதலை அடையவுங் கூடுமென்றுரைக்க.

நீர்நாய் கௌவியவாளை பொருகயலோட்டிப் பாயினெனினுமமையும். இதனுற்சொல்லியது: மீனிரைதேரும் நீர்நாய்காணினும், இடையே பொருகயல்கள் உளக்காணினும், வாளை பாயக்காணினும், மலங்கு மிளிரக்காணினும் மனத்திற் கலங்கலுமுண்டு இக்காரிகையென்றதாம்.

அக - ரி. ஆங்கண்.....கொள்ளவுங் கூடும்

(இ - ள்.) அஃதன்றியும், [1] கரும்பல்லது காடின்மையான் அவ்விடத்து உளதாய கரும்பின்வைத்த பெருந்தேனடைகள் முற்றி நெருங்குதலானே தேன் அழிந்தொழுகிச் சுரும்புசூழப்பட்ட பொய்கையின் நல்லநீரோடு சென்று கலந்துவிடும்; ஆதலான் அதனை அறியாமல் தணியாத நீர்வேட்கையான் இவ்ள் தன்குடங்கையான் முகந்துகொண்டு பருகவுங்கூடுமென்றுரைக்க.

குடங்கையாவது ஐந்துவிரலுங்கூட்டி உட்குழிப்பது; என்னை? [2] ''குடங் கை.....உட்குழிப்பதுவே'' என்றாராகலின். இதனுற்சொல்லியது: நமது [3] தரிச னத்துக் கடியப்பட்டவாற்றுல் தேனுண்டலைப் பரிகரிக்கவென்றதாம். எனவே ஊனையும் உடன்கூறிற்றும். மேலும் இவ்வாறு வருவனகொள்க.

அசு - கூ. குறுந ரிட்ட.....இடுதலுங் கூடும்

(இ - ள்.) கலபறிப்பார் பறித்து வரம்பிலிட்ட குவளைப்பூவுடனே தம் மெய்யிற் பொறியையும் வரியையுமுடைய வண்டினம் மதுமயக்கத்தாற் போக அறியாது உள்ளொடுங்கிக்கிடப்பனவற்றை வழிச்செல்வருத்தத்தாலே நீர் உணர்வுமயங்கி வறும்பூவெனக்கருதி அவற்றின்மேல் அடியிடவுங் கூடுமென்று ரைக்க.

இதனுற்சொல்லியது உயிர்க்கொலைபுகாமற் பரிகரிக்கவென்பதாம்.

கூo - கூஉ. எறிநீ ரடைகரை.....ஒண்ணு

(இ - ள்.) எறியுநீரையுடைய பெருவாய்க்காலினது அடைகரைவழியே போகக்கடவேமென்பேமாயின், அவ்வடைகரை நீரிலுள்ளனவாகிய பொறி

---

[1] ''கரும்பலாற் காடொன் றில்லாக் கழனிசூழ் பழனநாடும்'' சிவக. உசுoஉ.

[2] நிலப். பக். கூச. [3] தரிசனம் - சாஸ்திரம்.

களினழகையுடைய அலவனும் நந்தும் உள்ளவழியறிந்து பாதுகாவாது முன்பு நடக்கு முறைமைய'ான் அடியிட்டுநடக்குநடையின் அவைதாம் உறக்கடவ நோயை நம்மாலுறுமாயின் அதனால் நமக்குவரும் கொலைப்பாவம் நம்மால் தாங்கவுமொண்ணாது;

எறிநீர் - வாய்த்தலையினின்றும் குதித்துவரும் வாய்க்கானீர். இயக்கம் - வழி. நந்து - ஈண்டு நத்தை. ஊழ் - முறைமை. ஒதுக்கம் - நடை. நோயென்றார்; கொலையென்று வாக்காற்கூறவுமாகாமையின். இக்கொலைப்பாவம் ஒன்றானும் கழுவப்படாது; அதுவேயுமன்றி மறுமைக்கண் நரகத்திலுறுந்துன்பமும் நம்மால்தாங்கலாமளவிற்றன்றென்பதனால்,உம்மை எச்சவும்மையாயிற்று. அடைகரை - கடற்கரையென்பாருமுளர்.

கூச - எ. வயலுஞ் சோலையும்.....குறுகா தோம்பென

சோலையுமெனவே ஒருசார்வுபற்றித் தோட்டமுமடங்கிற்று. வயலும் சோலையுமென்பனவற்றைக் கூறியமுறையானே எதிர்நிரனிறையாகக்கொள்ளு வாருமுளர்.

(இ - ள்.) ஈண்டுக்கூறியவயலும் ஆண்டுக் கூறியசோலையுமல்லது வேறு படக்கிடக்குநெறி மேல் நாம்செல்லுகின்ற இடத்தில்இல்லை; ஆதலான், நெறித்த குஞ்சியையுடையாய்! நீ நின்னைவிரும்பிய மனைவியோடே அவ்வவ்விடங்களைக் குறிப்பானறிந்து அவை *அபகாரங்களுமறும் பாதுகாப்பாயாகவென்றுரென்க.

வெய்யோளுக்குக் குறுகாமலெனினுமமையும்.

காட்டினுங்காட்டும்; முட்டினுமுட்டும்; பரற்பகையுறுக்கும்; கலங்கலுமுண்டு; கொள்ளவுங்கூடும்; இடுதலுங்கூடும்; தாங்கவுமொண்ணு; ஆகலாற் குறியறிந்து அவையவை குறுகாதோம்பென்றுரென்க.

இங்ஙனம் மென்மைத்தன்மைகூறுவார், வருணனைகளையும் உடன்கூறினரென்க. இத்துணையும் கவந்தியடிகள் தமது பள்ளிக்கணிருந்துகூறினரென வுணர்க. வயலுமெனவே வாய்க்காலுமடங்கிற்று.

கூஅ - கoக. தோமறு கடிஞையும்.....வழிப்படர் புரிந்தோர்

(இ-ள்.) கவந்தியடிகள் கடிஞைமுதலியவற்றைக்கொண்டு பஞ்சமந்திரமே நமக்கு வழித்துணையாகவெனச்சொல்லிச்செல்ல, அவரோடு பழித்தலரிய ஒழுக்கத்தோடு வழிச்செலவைப்புரிந்தவரென்க.

தோம் - குற்றம். கடிஞை - [2] ஐயக்கடிஞை. அறுவை - தோலிலிடுமுறி மொழிப்பொருட்டெய்வம் - பொருண்மொழியாகியதெய்வம்; ஆவது [1] பஞ்சமந்திரம்; ஈ வஸி சூ உ வஸா=அ சி ஆ உ சா.

இனிக் கொண்டென்றதனைக் கொள்ளவெனத்திரித்து அடிகளிதுசெய்ய இவர்கள் துணையாகவென்றுரெனினுமமையும்.

---

[1] இத்தப் பஞ்சமந்திரத்தைப் பஞ்சநமஸ்காரமென்பர் சைனர்.

[2] "ஐயம்புகூஉந்தவசிகடிஞை" நாலடியார், ஈகை. கூ. (பி - ம்) * 'அபசாரங்கள்'

கoஉ - ககo. கரியவன் புகையினும்...ஒலித்தல் செல்லா

(இ - ள்.) கோள்களிற் சனிக்கோள் இடபம் சிங்கம் மீனமென்னுமிவற்றி லேறி மாறுபடினும், ஆகாயத்தே தூமக்கோளெழினும், விரிந்த கதிரையுடைய வெள்ளிக்கோள் தென்திசைக்கண்ணே பெயரினும் காற்றுப்பொரும் குடகவரையினது உச்சிக்கண்ணே கடிய குரலையுடைய உருமேற்றேறி சூன்முதிர்ந்த பருவப்புயல் தன்பெயலாகிய வளத்தைச் சுரத்தலானே அவ்வரையிற்பிறந்த பலபண்டத்தோடி கடுகிவருதலையுடைய காவிரியினீர், முகத்தைக்குத்தியிடிக்குங் கடல் தன் வளத்தைக்கொண்டு எதிர்தலானேதேங்கி, வாய்த்தலைக்கிட்ட கதவின்மீதெழுந்து குதிக்கின்ற அப்புதுப்புனலொலியல்லது ஆம்பிமுதலாயின ஒலித்தல்செல்லாவென்க.

கரியவன் - சனி. புகைக்கொடி - வட்டம், சிலை, நுட்பம், தூமமென்னும் [1]கோட்களுன்கினும் தூமக்கோள்; [2]"மைம்மீன் புகையினுந் தூமந் தோன்றினுந், தென்திசை மருங்கின் வெள்ளி யோடினும்" என்றார் பிறரும். கால்பொருவிவப்பு - குடகினுச்சி. ஏறு - இடியேறு. பஃறூரம் - பல்தாரம்; பலபண்டம். எனவே மலைவளனுயிற்று; ஆவன [3] "தக்கோலந்.....சாதியோ டைந்து."

கடல்வளனுவன: "ஓர்க்கோலை சங்க மொளிர் பவளம் வெண்முத்த, நீர்ப்படி மூப்பிலே டைந்து"

கடுவரல் - முடுகிவரும்வரவு. ஓ - தூம்பிற்கதவு; இனி ஓவுதல், விகாரத்தால் ஓவெனநின்றதெனவுமாம்; இதற்கு இறத்தல் ஈண்டித் தவிர்தன்மேற்று. ஆம்பி - பன்றிப்பத்தர். கிழார்-பூட்டைப்பொறி. பிழா- [4] இடா, [5] "நீர்த்தெவ்வு நிரைத்தொழுவர், பாடுசிலம்பு மிசையேற்றத், தோடுவழங்கு மகலாம்பியிற், கயமகைய வயனிறைக்கு, மென்றுடை வன்கிழாஅர்" என்றார் பிறரும்,

இனிக் கரியவன்புகையினுமென்பதற்குச் சனிவாரம் புகையினுமெனவுமாம். இனிப் புகையினும் தோன்றினும் படரினும் சுரப்ப எதிர நீர் வாய்த்தலை ஓவிறந்தொலிக்குமொலியல்லது ஆம்பிமுதலிய ஒலித்தல்செல்லாமைக்குக் காரணமாகிய காவிரியென முடிப்பினுமமையும். புகையினும் தோன்றினும் படரினுமென்ற உம்மைகள், மழை பெய்தொழில்மாற இவற்றில் ஒன்றே அமையுமாகவும் இவையெல்லாம் சேரினும் கடல்வளனெதிர நெரிக்குமெனக் காவிரியின்சிறப்பை விளக்கிநிற்றலிற் சிறப்பும்மைகள்.

ககஉ - ங. கழனி.....கானத்து

(இ - ள்.) அங்ஙனம் ஒலித்தல்செல்லாக் கழனியிற் செங்நெலும் கரும்புஞ்சூழ்ந்த இடத்தையுடைய நீர்நிலைச்செறுவிலுண்டாகிய தாமரைக்காட்டிலென்க.

---

[1] இவற்றைக் கரந்துறைகோட்களென்பர். [4] இடா - இறைகூடை.

[2] புறநானூறு, ககள. [5] மதுரைக்காஞ்சி, அசு - கூரு.

[3] சிலப். பக். கடுடு.

ககச - கூ. கம்புட் கோழியும்.....பரந்த வோதையும்

(இ - ள்.) கம்புட்கோழிமுதலியன வெல்லும்போரைவல்ல அரசரிருவர் பொருமிடம்போலப் பலவேறுவகைப்பட்ட திறத்தையும் ஒலியையுமுடையன வாய் ஒலிக்கும் மிக்க ஓசையுமென்க.

கூக்குரலும் பாடம். கம்புள் - சம்பங்கோழி. கானக்கோழி-காஞ்சங்கோழி; நிலவண்மையாக்கிக்காட்டுக்கோழியென்பாருமுளர். நீர்நிறக்காக்கை-நீர்க்காக்கை. உள்ளுர - உள்ளான். ஊரல் - குளுவை; நீர்மேலூர்தலினுல், ஆகுபெயர். புள்ளுகணந்துட்புள். போதா - பெருங்காரை, மரக்காளரை; புதா, விகாரம். வெல் போரும், முனையிடமும் வினைத்தொகை. குழூஉக்குரல் - பலவாயொன்முன ஓசையுமாம்.

கஉ0 - உச. உழாஅ நுண்டொளி.....காய்த்தலைச் சொரிய

(இ-ள்.) உழவராலுழப்படாத சேட்டுக்குழியிற் சேற்றினுட்புக்கு அழுந்திய கழுவாதமயிரையுடைய யாக்கையையும் சிவந்தகண்ணையுமுடைய எருமை தன் தினவையுடையமுதுகை உரிஞ்சுதலாலே புரிதேய்ந்து அற்றுச்சரிதலுற்ற அழி வற்ற புரிக்கூட்டினின்ற வளவிய பலவருக்கத்துநெல்லுக் கவரித்தொங்கல்போல விளைந்துகிடக்கின்ற செந்நெற்கதிர்த்தலையிடத்தே சொரியவென்க.

தொளி - சேறு.

கஉடு - சு. கருங்கை.....ஒலியே யன்றியும்

(இ - ள்.) அங்ஙனம் நெற்சொரிதலானே வினைஞரும் களமருங்கூடி ஒன்றுபட நின்றெலிக்கும் ஒலியும், அதுவேயன்றியுமென்க.

கருங்கை - வலியகை. வினைஞர் - பறையர், பள்ளர் முதலாயினர். களமர்-உழவர்கீழ்க்குடிமக்கள். கருங்கை இருவர்க்கும்பொது.

கஉஎ - ஙக. கடிமலர் கலிந்து.....விருந்திற் பாணியும்

(இ - ள்.) காலையின்முடித்த பூக்களிந்து முடித்தமுடியிலே முடியினுற்றை நறுக்கிச் சூடிக்கொண்டு வினைந்தவினையையுடைய தோளும் மூலையாகமுந்தோய்ந்து சேறுடுகோலத்தொடு அழகுபெறத்தோன்றிச் சிவந்த கயல்போலும் பெரிய கண்ணையும் சிறியமொழியையுமுடைய கடைசியர் கடுகமயக்கும் கள்ளே உண்டு தொலைத்ததனுலுண்டான பண் நிறத்திற்சேர்ந்து பழகிப்போதாத பாட்டுமென்க.

என்றது, மதுமயக்கத்தாற் பஞ்சலித்து மயங்கப் பாடினுரென்றபடி. இனிக் கடிமலர்களிந்து முடிநாறழுத்தியென்பதற்குப் போகாப்புல்லாகிய கழு நீர்முதலைப்பறித்து மறித்து அதன்மீதே முடியினுற்றைப் பகுந்துகட்டினு மமையும். தோளும் ஆகமும் தோய்ந்துசேறுடுதல் - களித்து ஒருவர்மேல் ஒருவர் சேற்றை இறைத்துக்கோடல். வீறுபெறத்தோன்றலாவது - முலைமேற்றெறித்த சேறு கோட்டுமண் கொண்டாற்போன்றிருத்தல்; * ''வாரிய..... கொள்ளா முலை'' என்றுற்போல. சின்மொழி - இழிந்தமொழி; சிலவானமொழியுமாம்.

* முத்தொள்ளாயிரம்: ''வாரிய பெண்ணை வருகுரும்பை வாய்த்தினைபோ, லேரிய வாயினு மென்செய்வுங்—கூரிய, கோட்டாணைத் தென்னன் குளிர்சாந் தணியகலங், கோடுமண் கொள்ளா முலை''

விருந்திற்பாணி - தம் இசையிற் புதுமையுண்டாகப்பாடும் பாட்டினினுமை யும்; இதனைப் பெருமூளையென்பாருமுளர்.

கஙஉ - நி. கொழுங்கொடி.....ஏர்மங்கலமும்

(இ - ள்.) செந்நெற்கதிரோடே அறுகையும் குவளையையும் கலந்து தொடுத்தமாலையை மேழியிலேசூட்டிப் பாரை இரண்டாகப் பிளப்பாரைப் போலப் போற்றுவார்தொழப் பொன்னேர்பூட்டிநின்றோர் ஏரைப்பாடும் ஏர் மங்கலப்பாட்டுமென்க.

சூட்டித் தொழநின்றோர் பாடும் ஏர்மங்கலமுமென்க.

கஙசு - எ. அரிந்துகால்.....முகவைப் பாட்டும்

(இ - ள்.) நெல்லையரிந்து போரிட்டார் சூட்டைக்கடாவிடுதலானுண்டான முகவைப்பாட்டும்;

ஆவது பொலிபாடுதல். முகக்கக் கொடுத்தலின், முகவையாயிற்று.

கஙஅ - கூ. தெண்கிணைப் பொருநர்.....மகிழிசை யோதையும்

இது களவழிவாழ்த்து; என்னை? [1] "தண்பணை வயலுழவனைத், தெண்கிணை வன் றிருந்துபுகழ் கிளந்தன்று." வரலாறு: "பகடுவாழ் கென்று பணிவயலு ளாமை, யகடுபோ லங்கட் டடாரித்—துகடுடைத்துக், குன்றுபோற் போர்விற் குருசில் வளம்பாட, வின்றுபோ மெங்கட் கிடர்" எனவரும். கிணை - தடாரி; புட் பறையென்பதுங்கொள்க.

(இ - ள்.) தெளிந்த ஓசையையுடைய கிணைப்பொருநர் செருக்குதலோ டெடுத்த மார்ச்சனைய்யுடைய திரண்டமுழவினது கேட்டோர்மகிழும் இசை யினதுஒலியும்,

கசo - சக. பேர்யாற்று.....அவலங் கொள்ளார்

(இ - ள்.) பெரிய யாற்றடைகரையிலே இவ்வோசைகளே முறையிற்கேட்டு நெஞ்சம்விரும்புதலாலே வழிநடத்தலினுண்டான வருத்தத்தை நெஞ்சிற் கொள்ளாராயென்க.

பரந்தவோதையும் ஆர்க்குமொலியும் விருந்திற்பாணியும் ஏர்மங்கலமும் முகவைப்பாட்டும் மகிழிசையோதையுமென்னுமிவற்றைப் பேர்யாற்றடைகரைக் கண்ணே நீர்மைபெறக்கேட்டலாலுண்டான விருப்பத்தானே நெஞ்சில் அவலங் கொள்ளாராயென்க.

கசஉ - எ. உழைப்புலிக்கொடி.....இருக்கை யன்றியும்

(இ - ள்.) புலியைத் தன்னிடத்தேயுடைய கொடியையுயர்த்த தேரை யுடைய உரவோனுடைய கரிகாலனது கொற்றத்துடனே மழைக்கும் கருப்பத் தைத் தோற்றுவிக்கும் அழலை விளக்குகின்ற சாலையினுண்டான மறையோரா லுக்கப்பட்ட தேவருணவின் ஆவி இறையுயர்ந்த மாடமாகிய அகங்களெங்கும்

[1] புறப்பொருள்வெண்பாமாலை, வாகைப்படலம், கூஉ.

போர்த்தலானே மஞ்சுசூழ்ந்த மலைபோல மாட்சிமைப்படத்தோன்றும் மங்கல மறையோரிருப்பிடங்களும், அவையன்றியும்,

கசஅ - நடுக. பரப்புநீர்.....சென்ற ளொருநாள்

(இ - ள்.) இரப்பவர்சுற்றத்தையும் புரப்பவர்கொற்றத்தையும் தம் உழவினிடத்தே விளைப்போருடைய பழைய வலிபொருந்திய ஊர்களுமாகிய இவ்விருவகையூர்களையும் இடையிட்ட நாடெல்லாங்கண்டு நடக்குநாட் காதமென்னும் எல்லையல்லது நடந்துதொலைக்கமாட்டாராய்ப் பலநாட்டங்கி நடக்கின்ற நாளிலே ஒருநாளென்க.

தூற்றுப்பொலி ஆலியிற் பாகுகாய்கின்ற புகையாற் பரக்கப்பட்டு இருட்சியையுடைய முகிறவழ்ந்த மலைபோலத்தோன்றும் பழவிறலூர்களுமென்க.

கொற்றத்தையும் கருவையும், சுற்றத்தையும் கொற்றத்தையும் அழலினும் உழவினும் விளைப்போரது இருக்கையும் ஊர்களுமென்க.

[1] காவிரிநீர் கங்கைநீராதலிற் கங்கையின் புதல்வரைக் காவிரியின் புதல்வரென்றார்; அன்றியும் [2] "மகவாய் வளர்க்குந் தாயாகி" என்பதனானுங்கொள்க. தோன்றுமிருக்கையும் தோன்றுமூர்களுமெனவியையும். அவ்வூர்களே இடையிட்ட நாடென்க. உடன்கண்டென்றார், இந்நாட்டுச்சிறப்பெல்லாம் கண்டு தொலைத்துக் கழிதலருமையின். புதல்வராகி உழவிடைவிளைப்போரென்க.

கருசு - சுஙூ. ஆற்றுவீ யரங்கத்து.....சாரணர் தோன்ற

(இ - ள்.) ஆற்றை மறைக்கும் அரங்கத்தில் வேறிடத்தில்லாத தன்மைத் தாய் வளைந்த மூங்கின்முள்ளால் வளைக்கப்பட்ட வேலியையுடைய மரம்பயின்ற செறிந்தசோலையில் தேவருறைதற்கொத்த பூப்பொருந்தியதொருபக்கத்தே பட்டினப்பாக்கத்து [3] வான்பெருமன்றத்துப் பிண்டிநீழற்கண்ணே உலகநோன்பிகளிடப்பட்ட சிலாதலத்தின்மேலிருந்தருளிப் பெருமகனுற்செய்யப்பட்ட அதிசயங்கள்மூன்றுந் தப்பாத ஆகமநூலினுண்மைத்தன்மையையுடைய தருமவொழுக்கத்தை யாவருங்கேட்கும்படி அருளிச்செய்யும் [4] சாரணர் அப் பட்டினப்பாக்கத்தைவிட்டு நீங்கிவந்துதோன்றவென்க;

அதிசயமூன்றுவன: சகசாதிசயம், கர்மக்ஷயாதிசயம், தெய்வீகாதிசயமென்பன.

வீற்றுவீற்றாகி உடுத்த ஒருசிறைச் சாரணர்தோன்றவென்க.

---

[1] 'கங்கையாருழைச்சென்று காவிரியாரை வாங்கி' என்று கூறினார் நச்சினார்க்கினியரும்; தொல்காப்பியப், பாயிரவுரையிற்காண்க.

[2] சிலப்பதிகாரம், எ: உஎ.

[3] வான்பெருமன்றமென்பதுமுதலாக இங்கே தந்துரைத்தவற்றை, இக்காதை உo-ஆம் அடி முதலியவற்றிற்காண்க.

[4] சாரணர்-சமணமுனிவர். அவர், தலசாரணர் சலசாரணர் பலசாரணர் புட்பசாரணர் தந்துசாரணர் சதுரங்குலசாரணர் சங்கசாரணர் ஆகாசசாரணரென என்வகையர்; இவ்விருவராகச்சென்று தருமோபதேசஞ்செய்தல் அவர்கட்கு இயல்பென்பர்.

கசுச - கூ. பண்டைத் தொல்வினை.....கொள்ளான்

(இ - ள்.) முன்செய்த பழவினையெல்லாம் கெட்டோடுகவென்று உட்கொண்டு அவர்வந்தமையைக் கண்டறிந்த கவுந்தியடிகளுடனேசென்று அவரடியிலே தலையுறவீழ்ந்தார்; அங்ஙனம்வீழ்ந்தவர் ஈண்டுவந்தது தனது விளங்கிய கோட்பாட்டையுடைய [1] அவதிஞானத்தால் தெரிந்தவளுயினும் ஆர்வமும் செற்றமும் தன்னைவிட்டுப்போம்படி நீக்கிய [2] வீரளுகலாலே இவர்க்குவரும் துன்பத்திற்குத் தான்வருந்தாளுகியென்க.

[3] கண்டறிகவுந்தியென்பதனுனும் காலவுணர்ச்சியின்மையுணர்க.

ஓடி, ஒரு வினையொடு.

கஎo - எக. கழிபெரு.....வல்வினை

(இ - ள்.) மிக்க பெரிய தவச்சிறப்பையுடைய கவுந்தி, யாவரானும் ஒழிக்க ஒழியாததாய் நுகர்விக்க வந்துநிற்கின்ற தீவினையைக் காணுயென்றுரைன்க.

காணுய் - பாராய். ஒழிகெனவொழியாதென்பதற்கு, நீ [4] 'உரிய தன்றீங் கொழிக' எனவும் ஒழியாது ஊட்டுந்தீவினையையெனினுமமையும்.

கஎஉ - ங. இட்ட வித்தின்.....ஒண்ணு

(இ - ள்.) வினைநிலத்திட்ட வித்துப்போலப் பயனெதிர்ந்து கண்கூடாக நல்வினைவந்து நுகர்விக்குங்காலத்தும் ஒழிக்கவொண்ணு; அதுபோல இதுவும் ஒழிக்க வொழியாதென்றுரைன்க.

[5] "உறற்பால.....தணிப்பாருமில்" என்றுராகலின், தீவினைதன்னையேகூறினுமமையும். உம்மை, எச்சவும்மை.

கஎச - நி. கடுங்கால்.....உடம்பிடை யுயிர்கள்

(இ-ள்.) கடியகாற்றையுடைய நெடியவெளியிலிடப்பட்ட விளக்கென்னும்படி மாயினல்லது கூடி உடனில்லா, உடம்பினின்ற உயிர்களுமென்றுரைன்க.

நல்வினை தீவினைப்பயனுகிய இன்பமும் துன்பமும் வருங்கால் யாவரானும் ஒழிக்கவொண்ணுவென்பதூஉம், யாக்கைநிலையாமையும் இவர்தம்பால் உறுவது கண்டு கவுந்தியடிகட்குச் சாரணர்கூறினுரெனவுணர்க. விளக்கு உவமித்தார்; நினைவற அழிவதற்கும், புக்குழிப் புலப்படாமைக்கும்.

கஎசு - ஙக. அறிவு னறவோன்.....பொதியறை யோரென

---

[1] அவதிஞானம் - அதீதகதமானபரிஞ்ஞானம்; அஃதாவது தன்னுடைய முற்பிறப்பையறியுமறிவு.

[2] வந்தசாரணரிருவருள், உபதேசிப்போர் மூத்தோரேயாதலின், வீரனென ஒருமையாற்கூறினுர்.

[3] இஃது, 'உரிய தன்றீங் கொழிகென வொழியீர்' (இக்காதையில் நிஎ - ஆம் அடி) என்பதன் உரையிற்கூறியதை வற்புறுத்தற்கு.

[4] சிலப்பதிகாரம், கo: நிஎ. [5] நாலடியார், பழவினை, ச:

கஎசு. அறிவன்—(இ - ள்.) எல்லாப்பொருளையுமறியும் அறிவையுடையோன்,

அறவோன்—(இ - ள்.) அறஞ்செய்தலையே தொழிலாகவுடையோன்,

அறிவுவரம்பிகந்தோன்—(இ - ள்.) யாவருமறியப்படும் அறிவெல்லையைக் கடந்தோன்;

கஎள. செறிவன்—(இ - ள்) எல்லாவுயிர்கட்கும் இதனுள்ளவன்; சலியாதவனென்றுமாம்.

சினேந்திரன்—(இ - ள்.) எண்வகைக் கன்மங்களையும் சயித்தவன்,

அவையாவன [1] ஞானவரணீயம், தரிசனவரணீயம், வேதநீயம், மோகநீயம், ஆயுஷ்யம், நாமம், கோத்திரம், அந்தராயமெனவிவை.

சித்தன்—(இ - ள்.) கிருதகிருத்தியன் = செய்யவேண்டுவனவற்றைச்செய்துமுடித்தவன்,

கன்மங்களைக் கழுவினவனுமென்ப.

பகவன்—(இ - ள்.) [2] கேவலஞானி,

கஎஅ. தரும முதல்வன்—(இ ள்) தருமங்களுக்கு அடியாயுள்ளவன்,

தலைவன்—(இ - ள்.) எல்லாத்தேவர்க்கும் தலைவனாக எண்ணப்பட்டவன்,

தருமன்—(இ - ள்.) தருமம் தானாயுள்ளவன்,

கஎக. பொருளன்—(இ - ள்.) ஆகமத்தின் பொருளாயுள்ளவன்; உண்மைப்பொருளாயுள்ளவனெனவுமாம்.

புனிதன்—(இ - ள்.) சுத்தன்; புதியவனுமென்ப.

புராணன்—(இ - ள்.) பழையவன்,

புலவன்—(இ - ள்.) எல்லார்க்கும் அறிவாயுள்ளவன்,

கஅ0. சினவரன்—(இ - ள்.) சினத்தைக் கீழ்ப்படுத்தியவன்,

தேவன்—(இ - ள்.) தேவர்களுக்கு ஆதியாகிய தேவன்,

---

[1] ஞானவரணீயமுதலியவெட்டும் காதி அகாதியென இருவகைப்பட்டு, நாற்பத்தாற்பத்தெட்டாக விரியுமென்பர்.

[2] கேவலஞானம் - ஐந்துஞானத்துள்ளுஞ்சிறந்தது. ஐந்து ஞானங்களாவன:—க. மதிஞானம் - கூடாவறிவு; உ. சுருதஞானம் - நூலுணர்ச்சி; ங. அவதிஞானம் - தன்னுடைய முற்பிறப்பையறியுமறிவு; ச. மனப்பரியயஞானம் - தன்னுடைய முற்பிறப்பையும் பிறருடைய முற்பிறப்பையும் அறியுமறிவு; ஞ. கேவலஞானம் - திரிகால வுணர்ச்சி.

சிவகதி நாயகன்—(இ-ள்.) வீட்டிலகிற்கு நாயகனுயுள்ளவன்,

கஅக. பரமன்—(இ - ள்.) மேலானவன்,

குணவதன்—(இ - ள்.) குணத்தையுடையவன்; வதம் - [1] விரத மூமாம்.

பரத்தி லொளியோன்—(இ-ள்) மேலாய உலகிற்கு விளக்காயுள்ளவன்,

கஅஉ. தத்துவன்—(இ - ள்.) தத்துவங்களையுடையோன்,

சாதுவன்—(இ - ள்.) ஒடுங்கினவன்,

சாரணன்—(இ - ள்.) ஆகாசவாசி,

காரணன்—(இ - ள்.) எல்லாவற்றிற்கும் காரணமாயுள்ளவன் =காரணபூதன்,

கஅங. சித்தன்—(இ-ள்.) எண்வகைச் சித்திகளையுமுண்டாக்கினவன்,

பெரியவன்—(இ - ள்.) எல்லாவற்றினும் பெரியவன்,

செம்மல்—(இ - ள்.) நாயகமூர்த்தி,

திகழொளி—(இ - ள்.) விளங்கும் ஒளியாயுள்ளவன்,

கஅச. [2] இறைவன்—(இ - ள்.) எப்பொருளினும் தங்குகின்றவன்,

குரவன்—(இ - ள்.) குருமூர்த்தியாயுள்ளவன்,

இயல்குணன்—(இ - ள்.) இயல்பையே குணமாகவுடையவன்,

எங்கோன்—(இ - ள்.) எம்முடையசுவாமி,

கஅஙி. குறைவில் புகழோன்—(இ - ள்.) நிறைந்த புகழையுடையோன்,

குணப்பொருட் கோமான்—(இ - ள்.) குணங்களைச் சம்பத்தாகவுடையவன்,

கஅசு. சங்கரன்—(இ - ள்.) சுகத்தைப்பண்ணுகின்றவன்,

ஈசன்—(இ - ள்.) ஐசுவரியவான்,

சயம்பு—(இ - ள்.) தானேதோன்றினவன்,

சதுமுகன்—(இ - ள்.) நான்குமுகன் = அதிசயத்தோடுநான் முகன்,

---

[1] விரதம் - அணுவிரதம், குணவிரதம், சிக்ஷாவிரதமென மூன்றுவகைப்படும்; அவற்றுள், குணவிரதம்:—திக்குவிரதம், தேசவிரதம், அநர்த்தத்தண்டவிரதமென மூன்றுவகைப்படும்.

[2] இறை - தங்குதல்,

கஅள. அங்கம் பயந்தோன்—(இ - ள்.) [1] அங்காகமத்தை யுண்டாக்கினவன்,

அருகன்—(இ - ள்.) பூச்சியன்,

அருண்முனி—(இ - ள்.) சிவபர மூர்த்தி,

கஅஅ. பண்ணவன்—(இ - ள்.) கடவுள்,

எண்குணன்—(இ - ள்.) எட்டுக்குணங்களையுடையோன்,

எண்குணமாவன:-அநந்தஞானம், அநந்தவீரியம், அநந்தசரிசனம், அநந்த சுகம், நிர்நாமம், நிர்க்கோத்திரம், நிராயுஷ்கம், அழியாவியல்பெனவிவை.

பாத்தில் பழம்பொருள்—(இ - ள்) பகுத்தற்கரிய புராணப் பொருளாயுள்ளவன்; ஒட்டமற்ற பொன்னேயொப்பானென்றுமாம்.

கஅக. விண்ணவன்—(இ - ள்.) சுவர்க்கவாசி,

வேத முதல்வன்—(இ - ள்.) [2] ஆகமமூன்றிற்கும் முதலாயுள்ளவன்,

விளங்கொளி—(இ-ள்.) அஞ்ஞானவிருணீங்க விளங்குமொளி,

கஙo - ஙக. ஓதிய வேதத்து.....பொதியறை யோரென

(இ - ள்.) இந்நாமங்களையுடையோனுலோதப்பட்ட ஆகமமாகிய விளக்கொளியைப் பெற்றுற்போன்றேறுவதல்லது யாவரும் பிறவியாகிய சிறையினின்றும் போகமாட்டாரென்றுரைக்க.

[3] பொதியறை - துவாரமில்லாத கீழறை.

கஙஉ - ஙட. சாரணர்.....மேற்கொண்டு

(இ - ள்.) இங்ஙனம் சாரணரருளிச்செய்த உண்மைமொழியைக்கேட்டுத் தவத்திற்கு முதல்வியாகிய கவந்தியடிகளும் தமது கைகளைத் தலைமேல்வைத்துக் கொண்டு நின்றுகூறுவார்:—

கஙச - ஙஞ. ஒருமூன்று.....செவியகந் திறவா

(இ - ள்.) எனதுசெவிகள் காமவெகுளிமயக்கங்களைக் கெடித்தவனுலோதப்பட்ட ஞானபாதமாகிய திருமொழியைக்கேட்டற்குத் திறப்பினல்லது பிறிதொன்றற்குத் திறப்பனவல்லவென்றுரைக்க.

அவித்தல் அடக்குதலுமாம்.

---

[1] அங்காகமம், கஉ பகுப்புடைத்து. அவைவருமாறு:—க. ஆசாராங்கம், உ. சூத்திரகிருதாங்கம், ங. ஸ்தானாங்கம், ச. ஸமவாயாங்கம், ஞ. வியாக்கியாப் பிரஜ்ஞப்த்யங்கம், ஈ. ஞாத்ருகதாங்கம், எ. உபாஸகாத்தியயனாங்கம், அ. அந்தக்கிருததசாங்கம், கூ. அநுத்தரோபபாதிகதசாங்கம், கo. பிரச்நவியாகரணாங்கம், கக. விபாகசூத்திராங்கம், கஉ. திருஷ்டிவாதாங்கம்.

[2] ஆகமமூன்றுவன: அங்காகமம், பூர்வாகமம், பகுசுருதியாகமமென்பன.

[3] இது புழுக்கறையெனவும் வழங்கும்; மணி. ங: கூஞ; உங: சுo.

கஉசு - எ. காமனை.....நவிலா தென்னு

(இ - ள்.) என்நாவும் காமன்செயலே வென்றவனுடைய ஆயிரத்தெட்டு வகைப்பட்ட நாமம் நவிலினல்லது பிறிதொன்றனை நவிலாதென்றுரென்க.

கஉஅ - ஙு. ஐவரை வென்றோன்.....காணு வென்கண்

(இ - ள்.) எனதுகண்களும் ஐவகைப்பட்ட இந்திரியங்களையும் வென்றவனுடைய அடியிணைகளைக் காணினல்லது பிறிதொரு தேவரடியிணைகளைக் கையகத்தேகாணினும் காணுவென்றுரென்க.

ஐவர், செறலின்கண் திணைமயக்கம். இனிக் கைவரைகாணினும் பாடமாயின், கைவரைகாணல் கண்விழித்தலாக்கி விழித்திருப்பினும் காணுவென்க.

உ00 - உ0க. அருளறம் பூண்டோன்.....பொருந்தாது

(இ - ள்.) எனது பயனற்றயாக்கை அருளால் அறத்தைப்பூண்டோனுடைய திருமேனிப்பொருட்டுப் பூமியிற்பொருந்தினல்லது பிறிதொன்றற்குப் பொருந்தாதென்றுரென்க.

அருளறம், உம்மைத்தொகையுமாம்.

உ0உ - ஙு. அருக நறவன்.....குவியா

(இ - ள்.) எனது இருகையும் அருகர்க்கு அறத்தைக்கூறுவோனுடைய அறிவன்பொருட்டு என்சிரத்தின்மிசையே குவியினல்லது பிறிதொரு தேவர் பொருட்டுக் குவியாவென்றுரென்க.

அருகர் - இருடிகள்.

உ0ச - ஙு. மலர்மிசை.....பொறுஅது

(இ - ள்.) எனது தலையினுச்சியும் பூவின்மீதே நடந்தோனுடையமலரடியாகிய அணியை அணியப் பொறுப்பினல்லது பிறிதொன்றணியும் அணியப் பொறுதென்றுரென்க.

உ0சு - எ. இறுதியி லின்பத்து.....பெயராது

(இ - ள்.) என்மனமும் ஈறிலின்பமாகிய அநந்தசுகத்தையுடைய இறைவனருளிச்செய்த ஆகமமாகியமொழியை உருவேற ஓதிப் புடைபெயரினல்லது பிறிதொருமொழியையோதிப் புடைபெயராதென்றுரென்க.

மறுதர - மீளவும்.

உ0அ - கஙு. என்றவ னிசைமொழி.....பணிந்தனர் போந்து

(இ - ள்.) தம் கையைத் தலைமேற்கொண்டுநின்று, கவுந்தியடிகள், திறவா; நவிலாது; காணு; பொருந்தாது; குவியா; பொறுது; பெயராதென்றுகொண்டு அவன்புகழ்மொழிகளை ஏத்தக்கேட்டு அதற்குப் பொருந்தியசாரணர் அவ்விடத்திடப்பட்ட சிலாவட்டத்தினின்றுமெழுந்து அதற்கு ஒருமுழவுயரம் மேலாகின்று பிறப்பைத்தரும்பாசம் கவுந்திக்குக் கெடுவதாகவென்றுகூறி அந்தரவழியாக விரைந்துசெல்கின்றவரைநோக்கித் தொழுது பாசங்கள் அறுகவென்று பணிந்தனராய்ப் போந்தென்க.

உகச - அ. காரணி பூம்பொழில்.....பூம்பொழி லிருந்தூழி

(இ - ள்.) முகிலேயணிந்த பொழிலேயுடைய காவிரியாகிய பெரியயாற் றிற்கு மாதரும் கணவனும் கவுந்தியடிகளும் பள்ளியோடத்தேதிப்போய்த் தென்கரையைச்சென்றெய்திப் போதுகள் சூழ்ந்துகிடக்கின்றதோர் பொலி வினேயுடைய பொழிலிடத்தே சென்றிருந்தபொழுதிலென்க.

உகஙு - உ0. வம்பப் பரத்தை.....சென்றோர்

(இ - ள்.) [1]இடங்கழிகாமத்தளாகிய குண்டக்கணிகையொருத்தியும் ஒருவ னுங்கூடி இவர்களிருக்கின்ற மணம்பரந்தோர் பொழிலிடத்தே அணுகின ராய்ச் சென்றவரென்க.

வம்பப்பரத்தை - புதிய பரத்தைத்தன்மையையுடையாள்; குண்டமென்ற படி. இனி மனவெழுச்சியால் தோன்றினப்படி சொல்லித்திரியும் பரத்தை யென்றுமாம். வறுமொழியாளன் - பயனில்சொல்லாளன்; விடனென்றபடி.

உஉக - உ. காமனுந் தேவியும்.....அறிகுவ மென்றே

(இ - ள்.) இவ்விடத்துவந்திருக்கின்ற காமனேயும் இரதியையுமொக்கு மிவர்களே யாரென்றுகேட்டு அறியக்கடவோமென்று சொல்லியென்க.

இனி, இவ்விடத்துவந்தவிவர் காமனும் தேவியுமே; அல்லராயின், யாரெ னக் கேட்டறிகுவமென்றுரைனினுமமையும். இப்பொருட்குப் போலி ஒப்பில் போலி. ஈங்கிவர்: ஈங்கு - இவ்விடத்து. கேட்டீங்கு: ஈங்கு - இப்பொழுது.

உஉங - ச. நோற்றுணல் யாக்கை.....வினவ

(இ - ள்.) [2] உவாமுதலிய விரதநாட்களிற் பட்டினிவிட்டுண்டலான் மெலி ந்தயாக்கையையும் நுண்ணிய தவத்தையுமுடையீர்! நும்மொடுகூடி வழிவந்த இவர் யாரென்று வினவவென்க.

ஆற்றுவழிப்பட்டோர் - வழியிற் கூடிவந்தோர்.

உஉச - சு. என்மக்கள்.....[3] பரிபுலம் பினரென

(இ - ள்.) அவ்விருவரும் இவ்விருவரையும் வினவுதல்கண்ட கவுந்தியடிகள் இவர் என்மக்கள்காணும்; நீர்சொன்ன காமனும் தேவியுமல்லர்; மாணிடயாக் கையர்; வழிவரும் வருத்தத்தால் மிகவும் வருந்தினர்; அவருழைச்செல்லாதே விடப்போமினென்றுரைக்க.

பரி - மிகுதி; பரிபுலம்பினர், ஒருசொல்லுமாம்.

உஉஎ - அ. உடன்வயிற்றோர்கள்.....கற்றறிந் தீரென

(இ - ள்.) நூல்களேயுங்கற்று அதன்பயனேயுமறிந்தவரே! ஒருவயிற்று உடன்பிறந்தோர் கொழுகனும் மனேவியுமாய்க் கூடிவாழக்கடவதென்று நீர் கற்றநூல்களிற் சொல்லிக்கிடப்பதுமுண்டோ? உண்டாகிற் சொல்லுமென்று ரைக்க.

---

[1] இடங்கழிகாமம் - மிக்ககாமம்; மணிமேகலை கஅ - வது காதை, ககக.

[2] "ஓவா திரண்டுவவு மட்டமியும் பட்டினிவிட்டு" சீவகசிந்தாமணி, கடுசஎ.

[3] "பரிபுலம் பினனிவன், றனே தமியன் வந்தனன்" மணி. கசு : நுஎ - அ.

கற்றறிந்தீரென்றது இகழ்ச்சி; இவ்வாறே கீர் கற்றனவுமென்பதாம்.

உஉக - சo. தீமொழி கேட்டு..... .....உரையீரோவென

(இ - ள்.) இங்ஙனம் இவரிகழ்ந்தமொழியைக் கேட்டலாற் செவியைப் புதைத்துக் கண்ணிகுறுங்க, என்பூங்கோதைபோல்வாளே இவரிகழ்கின்றனர்; இவ்விகழ்ச்சியால் துடக்குமுட்களையுடையகாட்டில் தழைந்ததிரியும் மூதூரி யாகக்கடவரெனக் கவுந்தியடிகளிட்டசாபம் தவத்தின்விளைவாகிய சாபமாதலால் அவரைச் சென்று பூண்டதாதலின், அங்ஙனம் விளைந்தபடியையறியாராகிய கோதையும் நம்பியும் குறியநரியினது நெடியகுரலாகக்கூவும் விளியைக் கேட்டு நடுங்கிச்சென்று ஒழுக்கநெறியினின்றும் நீங்கியோர் கீர்மையல்லாதனவற் றைச்சொல்லினும் இஃது அவர் அறிவின்மையாற் கூறியதன்றேவென்று உயர்ந்தோர் தமதறிவான் உணரவேண்டும்; செய்தவத்தீர், உம்முடைய திரு மூன் பிழைத்த இவர்க்கு இனிச் சாபநீங்கி உய்தலுடைத்தாங்காலத்தை உரைத் தருளீரென்றுகூறவென்க.

போலும், ஒப்பில்போலி. முதூரி - ஓரி. நடுங்கியென்றார், தம்பொருட் டாகவினைதலின். ஓகாரம், இசைநிறை. அடிகள் மனத்தால் நினைத்திட்டசாப மாதலாற் பட்டதையறியாரென்றார். இங்ஙனம் அறியாதவர்கள் அவர்சொன்ன இகழ்ச்சியாலும் இதற்கு இவரல்லது வேறு சபிக்கவுரியாரின்மையானும் உய்திக்காலமுரையீரென்றார். விளி - ஓரிக்குரல். 'நெறியி னீங்கியோர் கீரல கூறினு, மறியா மையென் றறியல் வேண்டும்' என்னுந்துணையும் அவருட் கோள். பின்னதை அடிகட்குக் கூறினர்.

உசக - நூ. அறியாமையினின்று.....சாபவிடை செய்து

(இ - ள்.) தமது மூப்பொறிகளான்வரும் துன்பமென்பதனை அறிந்து கூறுமையானே இன்று இழிபிறப்பையுற்றவிவர் உறையூர் மதிற்புறமாகிய காவற்காட்டிற்றிரிந்து பன்னிரண்டுதிங்கள் இங்ஙனம் துன்பமுழந்தபின்னர் முன்னைப்பிறப்பைப் பெறுவாராகவெனச் சாபவிடைசெய்தென்க

இன்று இழிபிறப்புற்றேரென்றது நெடுங்காலம் தவஞ்செய்துபெற்ற மக் கட்பிறப்பை ஒருவர்ர்த்தையினிழந்து இழிபிறப்புற்றேரென்றவாறு; எனவே [1] யாகாவாராயினும் நாகாத்தல் வேண்டுமென்பதாயிற்று; ''ஆக்கப்படுக்கும்..... வெல்லுமாறே'' என்பதனாலுமாயிற்று. நொச்சியொருபுடையென்றது வேறு அரண்வேண்டாமை விளக்கிற்று; [3] ''நொச்சி வேலித் திந்த னுறந்தை'' என் றதுமது. இழிபிறப்பு - விலங்கின்பிறப்பு. முன்னையுருவம் - வம்பப்பரத்தை யும் வறுமொழியாளனுமெனவுமாம்.

உசஞ - அ. தவப்பெருஞ் சிறப்பின்.....புக்கனர் புரிந்தென்.

(இ - ள்.) தவத்தான்மிக்க சிறப்பையுடைய கவுந்தியடிகளும் தேவியும் கணவனும் மூறம்போலுஞ்செவியையுடைய யானையைச் சமரிடத்துக்கெடுத்த

---

[1] திருக்குறள், கூடூ.

[2] ''ஆக்கப் படுக்கு மருந்தாளவாய்ப் பெய்விக்கும், போக்கப் படுக்கும் புலைநரகத் துய்ப்பிக்கும், காக்கப் படுவன வித்திய மைந்தினு, நாக்கல்ல நில்லை நளீவெல்லு மாறே'' (வளையாபதி.) [3] அகநானூறு, கூடூ.

புறத்தே சிறையையுடைய கோழியென்னுநகரின்கண்ணே விருப்பத்தோடு புக்காரென்க.

வாரணம் - கோழி; ஆவது உறையூர். முற்காலத்து ஒருகோழி யானையைப் போர்தொலைத்தலான் அந்நிலத்திற்செய்த நகர்க்குக் கோழியென்பது பெயராயிற்று. அந்நகர் காண்கின்றபொழுது சிறையும் கழுத்துமாக ஆக்கியவதனாற் புறம்பே சிறையையுடைய கோழியென்றுயிற்றென்பாருமுளர்; அற்றன்று; புறஞ்சிறைவாரணமென்பது சிலேடை: புறத்தே சிறையையுடைய கோழியும், புறஞ்சேரியையுடைய உறையூரும்; [1] "புறஞ்சிறைப் பொழிலும்" என்ப மேலுமாகலின்.

பணிந்தனர்போந்து எய்தி இருந்துழிச் சென்றோர் வினவப் பரிபுலம்பின ரெனக் கடவதுமுண்டோ கற்றறிந்தீரெனச் செவியகம்புதைத்து நடுங்க முதுநரியாகெனக் கட்டியதாதலின் உரையீரோவெனப் பெறுக ஈங்கிவரெனச் சாபவிடைசெய்து கவுந்தியும் தேவியும் கணவனும் புரிந்துபுக்காரென்க.

இஃது எல்லாவடியுந் தம்முளொத்துமுடிதலின் நிலையுண்டிலவாசிரியப்பா.

கo.—நாடுகாண்காதை மூற்றிற்று.

கட்டுரை.

க - உ. முடியுடை.....உதித்தோர்—மூவேந்தருள்ளும் சோழர் குலத்து உதித்தோருடைய; மூவர் - சோழர் பாண்டியர் சேரர்.

ங. அறன்—"அறனெம்படை" என்றது; [இந்திர. களகூ.] தருமாசனமென்பாருமுளர்.

மறன்—"இமையவ ருறையுஞ் சிமையப் பிடர்த்தலைக், கொடுவரி யொற்றி" என்றது; [இந்திர. கள - அ.]

ஆற்றல்—"கோநகர் காத்த" என்றது; [கடலாடு. அ.)

ச. மூதூர்ப்பண்பு மேம்படுதல்—"புகாரேயாயினும்" என்றது; [மங்கல. கசு.]

ஞ. விழுமமலிசிறப்பு—"விண்ணவர் தலைவனை விழுநீ ராட்டி" என்றது; [இந்திர. கசுஅ.]

விண்ணவர்வரவு—"அந்தரத் துள்ளோ ரறியா மரபின், வந்துகாண் குறூஉம் வானவன் விழவு" என்றது; [கடலாடு. எஉ - கூ.]

எ. குடி—"இரட்போர் சுற்றமும் புரப்போர் கொற்றமு, முழவிடை விடாப்போர்" என்றது; [நாடுகாண். கசக - ஞ.]

---

[1] சிலப்பதிகாரம், கசு:. க.

கூழின்பெருக்கம்— "குமரிக் கூட்டிற் கொழும்பல் லினவு, கவரிச் செந்நெற் காய்த்தலைச் சொரிய" என்றது; [நாடுகாண். கஉங - ச.]

எ - அ. அவர்தம் தெய்வக்காவிரித் தீதுதீர்சிறப்பு— "கரியவன் .....ஒலிக்கும்" என்றது; [நாடுகாண். கஎஉ - கூ.]

கூ. பொய்யா வானம் புதுப்புனல் பொழிதல்—"மழைக்ருவியிர்க்கு மழற்றிக முட்டின் மறையோர்" என்றது; [நாடுகாண். கசஙு - ச.]

க0. அரங்கு—"நூனெறி மரபி னரங்கம்" என்றதும், "தோற்றிய வரங்கில்" என்றதும். [அரங்கேற்று. கூகூ, க0சு.]

ஆடல்—"ஆடலும்" என்றது; [அரங்கேற்று. கசு.]

தூக்கு—"தூக்கும்" என்றது; [,, கசு.]

வரி—கண்கூடுவரிமுதல் எடுத்துக்கோள்வரியிறுதியாகவுள்ள எட்டு வரியும்; [வேனிற். எச - க0அ.]

கக. பாரதி விருத்தி—நாடகவுறுப்பாகிய பாரதிவிருத்தி; அது கடலாடுகாதையிற் கூறப்பட்டுள்ள பதினோராடலும்; [கடலாடு. ஙக - சுஙு.]

கஉ. திணைநிலைவரி—"கடல்புக்கு" என்னுங் கவிமுதல் "சேரன் மடவன்னம்" என்பதிறுதியாகவுள்ள ஏழும்; [கானல். கள - உகூ.]

இணைநிலைவரி—சார்த்துவரி முதலாகிய பலவரிகளால்வருவன. [கானல்வரியிற்காண்க.]

கங. யாழின்றெருகுதி—"சித்திரப்படம்" முதல், "பட்டடை" ஈறாகவுள்ளன; [கானல்வரி, க.]

கச. ஈரேழ்சகோடம்—"ஈரேழ் தொடுத்த செம்முறைக் கேள்வி" என்றது; [அரங்கேற்று. எ0.]

இடநிலைப்பாலை—"குரல்வா யிளிவாய்க் கேட்டனள்" என்றது; [வேனிற். கூறு.]

கடு. தாரத்தாக்கம்—"குரலீறுகவும்" என்பதனால், தாரம் குரலாகிய விளரிப்பாலைபிறக்குங்கால் தாரம் ஆக்கம்பெறுதல்காண்க; [வேனிற். கூஅ.]

தான்றெரிபண்—அகநிலைமருதம், புறநிலைமருதம், அருகியன்மருதம், பெருகியன்மருதமென்னும் பண் நான்கும் தெரியுந்திறன்; [வேனிற். கூக - ச0.]

கசு. ஊர்சுத்தேர்—"மகர வாசிகை.....வீதி" என்றது; [இந்திர. கடுக - சு.]

ஒளியுடைப்பாணி—"சீரியல் பொலிய" என்றது; [அரங்கேற்று. கசுறு.]

கள. என்றிவையினைத்தும்—என்றுசொல்லப்பட்ட இவைகள் யாவும்,

கள - அ. பிறபொருள்.....நிலைமையும்

சொல்லாதொழிந்த பிறபொருள்கள்வைத்த வைப்போடே பொருந்திச் சோன்றும் ஒப்பற்ற முறைமை நிலைபெறலும்,

கக - உo. ஒருபரிசா நோக்கிக்கிடந்த புகார்க்காண்டம் முற்றிற்று—ஒருபடிப்பட நோக்கிக்கிடந்த புகார்க்காண்டம் முற்றியது.

முதலாவது

புகார்க்காண்டத்தின்

அடியார்க்குநல்லாருரை முற்றிற்று.

இரண்டாவது

மதுரைக்காண்டம்.

ககஉ.—காடுகாண்காதை.

திங்கண்மூன் றடுக்கிய திருமுக் குடைக்கீழ்ச்
செங்கதிர் ஞாயிற்றுத் திகழொளி சிறந்து
கோதைதாழ் பிண்டிக் * கொழுநிழ லிருந்த
வாதியி றோற்றத் தறிவனை வணங்கிக்
(இ). † கந்தன் பள்ளிக் கடவுளர்க் கெல்லா
மந்தி லரங்கத் தகன்பொழி லகவயிற்
சாரணர் கூறிய தகைசா னன்மொழி
மாதவத் தாட்டியு மாண்புற மொழிந்தாங்
கன்றவ றுறைவிடத் தல்கின ரடங்கித்
கo. தென்றிசை மருங்கிற் செலவுவிருப் புற்று
வைகறை யாமத்து ‡ வாரணங் கழிந்து
வெய்யவன் குணதிசை விளங்கித் தோன்ற

க. திங்கள்மூன்றடுக்கிய - மூன்றுதிங்களை அடுக்கினாலொத்த.

ச. அறிவனென்றது - உறையூர் ஸ்ரீகோயில் நாயனாரை.

உ - ச. (பா) ஞாயிற்றைப்போல ஒளிகிறந்த அறிவன்; கிறந்தகோதை யெனக்கூட்டினுமாம்.

இ. கந்தன்பள்ளி - உறையூர் ஸ்ரீகந்தன்பள்ளி.

சு. அந்தில், அசைநிலை. அரங்கம் - திருவரங்கம்; ஆற்றின்குறையென் பாருமுளர்.

கo. அல்கினரடங்கி - விட்டு அங்குத் தங்கி. கச. இருக்கை - இருப்பிடம்.

(சு) அரங்கத்திற்கண்ட (ஏ) சாரணர்சொன்ன தருமவுரையைக் (இ) கடவுளர்க்கு (அ) மொழிந்து (கக) வாரணங்கழிந்துவழிக்கொண்டு (கச) இளமரக்கானத்துப் புக்குழியென்க.

(பி - ம்.) * 'குளிர்நிழல்' † 'கந்தம்பள்ளி' ‡ 'வாரணங்காட்டவெய்யவன்'

வளநீர்ப் பண்ணையும் வாவியும் பொலிந்ததோ
ரிளமரக் கானத் திருக்கை புக்குழி

கரு. வாழ்க வெங்கோ மன்னவர் பெருந்தகை
யூழிதொ * றூழிதொ றுலகங் காக்க
[1] வடியிற் றன்னள வரசர்க் † குணர்த்தி
வடிவே லெறிந்த வான்பகை பெற்றது
[2] பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத் துக்

உ0. குமரிக் ‡ கோடுங் கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையு மிமயமுங் கொண்டு
தென்றிசை யாண்ட தென்னவன் வாழி
திங்கட் செல்வன் றிருக்குலம் விளங்கச்
செங்கண் யிரத்தோன் றிறல்விளங் காரம்

உரு. பொங்கொளி மார்பிற் பூண்டோன் வாழி
மூடிவலீ யுடைத்தோன் முதல்வன் சென்னியென்
றிடியுடைப் பெருமழை § யெய்தா தேகப்
பிழையா || விளையுட் பெருவளஞ் சுரப்ப
மழைபிணித் தாண்ட மன்னவன் வாழ்கெனத்

நூ0. தீதுதீர் சிறப்பிற் றென்னனீ வாழ்த்தி
மாமுது மறையோன் வந்திருந் தோனை
யாது நும்மூ ரீங்கென் வரவெனக்
கோவலன் கேட்பக் குன்றுச் சிறப்பின்
மாமறை யாளன் வருபொரு ளுரைப்போ

(சு) வணங்கி (அ) மொழிந்து (கசு) கானத்திருக்கை புக்குழியென்க.

கள. அடியில் தன்னளவு அரசர்க்கு உணர்த்தி - கடலினளவை அடியாலே இன்ன அளவினது இதுவென்று அரசர்க்குக்காட்டி; அன்றி அடியினாலே தன்பெருமையை அரசர்க்கு அறிவித்தென்பாருமுளர்.

கஅ. வேலானுமெறிந்தபடை.

கக. பஃறுளியாறு - குமரிப்பக்கத்ததோர் யாறு. [ஞலே.

உ0. கோடு - கரை. கொடுங்கடல்கொள்ள - வளைந்தகடல்கொள்ளுகையி

உரு. முதல்வன் - இந்திரன்; இந்திரன்சென்னிமுடியிலே வலியுடைத் தோனென்க.

---

[1] கள - உஉ: "மலிதிரை யூர்த்ததன் மண்கடல் வௌவலின், மெலிவின்றி மேற் சென்று மேவார்நா டிடம்படப், புலியொடு வின்னீக்கிப் புகழ்பொறித்த இளர்கெண் ணை, வலியினுன் வணக்கிய வாடாச்சீர்த் தென்னவன்" கலித்தொகை, கoச.

[2] பஃறுளியாறு: புறநானூறு, உ.

(பி - ம்.) * 'ஊழியுலகங்' † 'உணர்த்திய' ‡ 'கோடுகொடுங்' § 'பெய்யாதேக' || 'வினையுள்'

நூறு. நீல மேக நெடும்பொற் குன்றத்துப்
பால்விரிந் தகலாது படிந்தது போல
[1] வாயிரம் * விரித்தெழு தலையுடை யருந்திறற்
பாயற் பள்ளிப் பலர்தொழு தேத்த
விரிதிரைக் காவிரி வியன்பெருந் † துருத்திக்
சுo. திருவமர் மார்பன் கிடந்த வண்ணமும்
வீங்குநீ ரருவி வேங்கட மென்னு
மோங்குயர் மலையத் துச்சி மீமிசை
[2] விரிகதிர் ஞாயிறுந் திங்களும் விளங்கி
யிருமருங் கோங்கிய விடைநிலைத் தானத்து
சுறு. மின்னுக்கோடி யுடுத்து விளங்குவிற் பூண்டு
நன்னிற மேக நின்றது போலப்
பகையணங் காழியும் பால்வெண் சங்கமுந்
தகைபெறு தாமரைக் கையி னேந்தி
நலங்கிள ரார மார்பிற் பூண்டு
நூo. பொலம்பூ ‡ வாடையிற் பொலிந்து தோன்றிய
செங்க ணெடியோ னின்ற வண்ணமு
மென்கண் காட்டென் றென்னுளங் கவற்ற
வந்தேன் குடமலை மாங்காட் டுள்ளேன்
றென்னவ ணுட்டுச் சிறப்புஞ் செய்கையுங்
நூறு. கண்மணி குளிர்ப்பக் கண்டே னுதலின்
வாழ்த்திவந் திருந்தே னிதுவென் வரவெனத்
தீத்திறம் புரிந்தோன் செப்பக் கேட்டு
மாமறை § முதல்வ மதுரைச் செந்நெறி
கூறு நீயெனக் கோவலற் குரைக்குங்
கூo. கோத்தொழி லாளரொடு கொற்றவன் கோடி
வேத்திய லிழந்த வியனிலம் போல

நூஉ. (பா) கண்கள் என்னுள்ளத்தைக்கலக்குதலாலே; கண், எழுவாய்.

நூஎ. தீத்திறம் - அக்கினிகாரியம். கூo. தொழிலாளர் - மந்திரிகள்.

---

[1] "மின்னவிர் சுடர்மணி யாயிரம் விரித்த, கல்வநா வருந்தலைக் காண்பின் சேக்கைத், துளவஞ் சூடிய வறிதுயி லோனும்" பரி. கஙு.

[2] சஙு - நிக. "பருவம் வாய்த்தவி னிருவிசும் பணிந்த, விருவேறு மண்டிலத் திலக்கம் போல, நேமியும் வாளும் மேந்திய கையாற், கருவி மின்னவி ரிலங்கும் பொலம்பூ, ணருவி யுருவி னுரமொ டணிந்தநின், றிருவரை யகலம்." பரி. கஙு.

(பி - ம்.) * 'விரிந்ததலை' † 'துருத்தியுட்டிருவமர்' ‡ 'ஆடைபொலிந்துதோன் றிச்' § 'முதல்வன்'

வேனலங் கிழவனெடு வெங்கதிர் வேந்தன்
றானலந் * திருகத் தன்மையிற் குன்றி
[1] முல்லையுங் குறிஞ்சியு முறைமையிற் றிரிந்து
சுடு. † நல்லியல் பிழந்து நடுங்குதுய ருறுத்துப்
பாலை யென்பதோர் படிவங் கொள்ளுங்
காலை யெய்தினிர் காரிகை ‡ தன்னுட
னறையும் பொறையு மாரிடை மயக்கமு
நிறைநீர் வேலியு முறைபடக் கிடந்தவிந்
எ0. நெடும்பே ரத்த நீந்திச் சென்று
கொடும்பை நெடுங்குளக் கோட்டகம் புக்காற்
பிறைமுடிக் கண்ணிப் பெரியோ னேந்திய
வறைவாய்ச் சூலத் தருநெறி கவர்க்கும்
வலம்படக் கிடந்த வழிநீர் துணியி
எடு. § னலறுதலை மராமு முலறுதலை யோமையும்
பொரியரை யுழிஞ்சிலும் புன்முளி மூங்கிலும்
வரிமரற் றிரங்கிய கரிபுறக் கிடக்கையு
நீர்நசைஇ வேட்கையின் மானின்று விளிக்குங்
கானமு மெயினர் கடமுங் கடந்தா
அ0. லிவன வெண்ணெலு || மறைக்கட் கரும்புங்
கொய்பூந் தினையுங் கொழும்புன வரகுங்

சுசு நலந்திருக - நலம்வேறுபட.

சுஅ. அறை - கற்பாறை. பொறை - பொத்தைமலை; சிறுமலை. ஆரிடை - அருவழி.

சுக. நிறைநீர் வேலி - நிறைந்த நீர்க்கு வேலியான எரிகரை.

எக. கொடும்பை - கொடும்பாளூர்; அவ்வூரிலே நெடுங்குளக்கரைக்கு உள்ளாகப்புக்கால்.

எசு. அறைவாய் - அற்றவாய்; சூலம்போலக் கவர்க்கும்.

எடு. அலறுதலை - வீரிந்ததலை.

எசு. புல்முளி மூங்கில் - தீண்டுலர்ந்த மூங்கில். எக. கடம் - வழி.

அ0. அறுத்தலையுடைய கண்ணையுடையகரும்பு.

---

[1] கச - சு: மதுரை. சுகச - ந; தொல். அகத்திணை. சூ. உ0 - இளம்; கடி சூ. உ - ந; தொல். முதற் சூத்திரவிருத்தி, மேற்; கருத்து: சீவக. உகஅசு.

(பி - ம்.) * 'நீருகி' † 'நல்லியல்பழித்து', 'நல்லியல்பிறந்துநடுங்குதுயருறுத்து' ‡ 'தன்னெமெறையும்' § 'அலர்தலை', 'அலந்தலை' || 'அறைகட்'

காயமு மஞ்சளு மாய்கொடிக் கவலையும்
வாழையுங் கமுகுங் * தாழ்குலைத் தெங்கு
மாவும் பலாவுஞ் † சூழுடித் தோங்கிய
அடு. தென்னவன் சிறுமலை ‡ திகழ்ந்து தோன்று
மம்மலை வலங்கொண் டகன்பதிச் செல்லுமி
னவ்வழிப் § படரீ ராயி னிடத்துச்
செவ்வழிப் பண்ணிற் சிறைவண் டரற்றுங்
தடந்தாழ் வயலொடு || தண்பூங் காவொடு
கூ0. கடம்பல கிடந்த காடுடன் கழிந்து
திருமால் குன்றத்துச் செல்குவி ராயிற்
பெருமால் கெடுக்கும் பிலமுண் டாங்கு
விண்ணே ரேத்தும் வியத்தகு மரபிற்
புண்ணிய சரவணம் ¶. பவகா ரணியோ
கூடு. டிட்ட சித்தி யெனும் பெயர் போகி
விட்டு நீங்கா விளங்கிய பொய்கை
மூட்டாச் சிறப்பின் மூன்றுள வாங்குப்
புண்ணிய சரவணம் பொருந்துவி ராயின்
விண்ணவர் கோமான் விழுநூ லெய்துவிர்
க00. ** பவகா ரணிபடிந் தாடுவி ராயிற்
†† பவகா ரணத்திற் பழம்பிறப் பெய்துவி
ரிட்ட சித்தி யெய்துவி ராயி

அஉ. காயம் - வெள்ளுள்ளி.

அடு. சிறுமலையென்றது - ஒருமலை.

அசு. வலங்கொண்டு - வலத்திட்டு. அகன்பதி - மதுரை.

அள. இடத்து - இடப்பக்கத்து. கூ0. கடம் - பாலைநிலத்துவழி.

கூக. திருமால்குன்றம் - அழகர்திருமலை. கூஉ. ஆங்கு - அப்பிலத்துவாய்.

கூசு. விட்டுநீங்கா - தம்மினீங்கா.

கூள. சிறப்பு - விசேடம்; இத்விசேடம் எக்காலத்துமுள. மூன்றுள - மூன்றுபொய்கையுள.

கூஅ. பொருந்துதல் - ஆடுதல்.

கூக. விழுநூல் - ஐந்திரவியாகரணம். எய்துவிர் - உணர்விர்.

(பி - ம்.) * 'சூழ்குலைத்' † 'சூழுடித்தோங்கித்' ‡ 'திகழத்' § 'படஇராயி னிடத்தருசெவ்' || 'தண்பெருங்கா' ¶ 'பவகாரணிய மிட்டகிந்தியெனப்பெயர்' ** 'பவகாரணியம்படிந்தாடிவிர்' †† 'பவகாரணத்துப்'

னிட்ட சித்தி யெய்துவிர் * நீரே
யாங்குப் பிலம்புக வேண்டுதி ராயி
கo. ஞெங்குயர் மலையத் துயர்ந்தோற் றொழுது
சிந்தையி லவன்றன் சேவடி வைத்து
வந்தீன் மும்முறை மலிவலஞ் செய்தா
னிலம்பக வீழ்ந்த சிலம்பாற் றகன்றலைப்
பொலங்கொடி மின்னிற் புயலெங் கூந்தற்
கக. கடிமல ரவிழ்ந்த கன்னிகா ரத்துத்
தொடிவளைத் தோளி யொருத்தி தோன்றி
யிம்மைக் கின்பமு மறுமைக் கின்பமு
மிம்மையு மறுமையு மிரண்டு † மின்றியோர்
செம்மையி னிற்பதுஞ் செப்புமி ‡ னீயிரிவ்
கஙி. § வரைத்தாள் வாழ்வேன் வரோத்தமை யென்பே
னுரைத்தார்க் குரியே னுரைத்தீ ராயிற்
றிருத்தக் கீர்க்குத் திறந்தேன் கதவெனுங்
கதவந் திறந்தவள் || காட்டிய நன்னெறிப்
புதவம் பலவுள ¶ போகிடை கழியன
கஉo. வொட்டுப் புதவமொன் றுண்டத னும்பர்
வட்டிகைப் பூங்கொடி வந்து தோன்றி
யிறுதியி லின்ப மெனக்கீங் ** குரைத்தாற்

கoஎ வந்தீன - வந்தீரேயோடே.

கoஅ. சிலம்பாறென்றது - ஓராறு. அகன்றலை - அகன்றவிடம்.

கoக - கக. பொற்கொடிபோன்ற ஒளியினையும், புயல்போலும் ஐங்கூந்தலையுமுடைய தொடிவளைத்தோளாள் ஒருத்தி கன்னிகாரம்போலத் தோன்றி;

'கன்னிகாரம்போல'வென்றார், மதாணியணிந்திருத்தலின். கோங்கடியிலே தோன்றியென்றுமாம்,

ககஉ. இம்மைக்கின்பம் - பொருள். மறுமைக்கின்பம் - புண்ணியம்.

ககங - ச. இரண்டுமின்றிச் செம்மையினிற்பது - வீடுபேறு.

ககசு. உரியேன்-தொழில்செய்வேன். ககள. திறந்தேனென்றது, விரைவு.

ககஙு. போகிடைகழியன - நீண்ட இடைகழியிலுள்ளன.

கஉo. ஒட்டுப்புதவம் - இரட்டைக்கதவம்.

கஉக. வட்டிகையிலெழுதிய கொடிபோல்வாள்.

கஉஉ. இறுதியிலின்பம் - வீடு.

(பி - ம்.) * 'நீரென' † 'இன்றிச்செம்மை' ‡ 'நீவிர்' §. 'வரைத்தாழ்' || 'காட்டியவந்தெழில்' ¶ 'போகிடைகழியின' ** 'உரைத்தீர்'

பெறுதிர் போலுநீர் பேணிய பொருளெனு
முரையீ ராயினு மும்முகண் செய்யே
கஉடு. னெடுவழிப் புறத்து நீக்குவ னும்மெனு
முரைத்தா ருளரெனி னுரைத்த மூன்றின்
கரைப்படுத் தாங்குக் காட்டினள் பெயரு
மருமறை மருங்கி னோந்தினு மெட்டினும்
வருமுறை யெழுத்தின் மந்திர மிரண்டு
கஙo. மொருமுறை யாக வுளங்கொண் டோதி
வேண்டிய தொன்றின் * விரும்பினி ராடிற்
காண்டகு மரபின வல்ல மற்றவை
மற்றவை நினையாது † மலைமிசை நின்றோன்
பொற்ற மரைத்தா ளுள்ளம் பொருந்துமி
கஙடு. னுள்ளம் பொருந்துவி ராயின் மற்றவன்
[1] புள்ளணி ‡ நீள்கொடி புணர்நிலை தோன்றுந்
தோன்றிய பின்னவன் றுணைமலர்த் தாளிணை
யேன்று துயர் கெடுக்கு § மின்ப மெய்தி
மாண்புடை மரபின் மதுரைக் || கேகுமின்
கசo. காண்டகு பிலத்தின் காட்சி யீதாங்
கன்றெறிப் படரீ ராயி னிடையது
செந்நெறி யாகுந் தேம்பொழி லுடுத்த

கஉக. பேணியபொருள் - மூன்றி னுளொன்றுய் நினைத்தகாரியம்.

கஉடு. நெடுவழிப்புறம் - நீங்கள்போகின்ற பெருவழியிடம்.

கஉஅ. ஐந்தும் எட்டுமாவன:—பஞ்சாக்கரம், அட்டாக்கரம்.

கஙக - உ. வேண்டியதொருபொய்கைக்கண் ஆடினால் ஏனையிரண்டும் தோன்றும் மரபினவல்ல.

கஙச. உள்ளம்பொருந்துமின் - நினையுங்கோள்.

கஙசு. புள்ளணிநீள்கொடி நின்ற நிலைமைதோன்றும்; கொடிபுணர்நிலை - கொடிமரநிற்கும் திருவாசலுமாம்.

கஙஎ. (பா) துணைமலர்த்தாமரை - திருவடி.

கஙஅ. கெடுக்குமென்றது, முற்று; கெடுத்தலால் இன்பமெய்தியென ஒரு சொல் வருவிக்க.

கசஉ. செந்நெறி - செவ்வியவழி.

---

[1] திருமுருகாற்றுப்படை, கடுக

(பி - ம்.) * 'விரும்பினராயின்' † 'மலர்மிசை' ‡ 'நீள்கொடிப்புணர்நிலை' § 'இன்புமெய்துவிர்' || 'எய்துமின்'

ஊரிடை யிட்ட காடுபல கடந்தா
லாரிடை யுண்டோ ராரஞர்த் தெய்வ
கசடு. நடுக்கஞ் * சாலா நயத்திற் றேரன்றி
யிடுக்கண் செய்யா தியங்குநர்த் தாங்கு
மடுத்துடன் கிடக்கு மதுரைப் பெருவழி
நீணிலங் கடந்த நெடுமுடி யண்ண
லுடொழு தகையேன் போகுவல் யானென
கஙo. மாமறை யோன்வாய் வழித்திறங் கேட்ட
† காவுந்தி யையையோர் கட்டுரை சொல்லு
நலம்புரி கொள்கை நான்மறை யாள
பிலம்புக வேண்டும் பெற்றியீங் கில்லை
கப்பத் திந்திரன் காட்டிய நூலின்
கஙடு. மெய்ப்பாட் ‡ டியற்கையின் விளங்கக் காணு
[1] பிறந்த பிறப்பி னெய்திய வெல்லாம்
பிறந்த பிறப்பிற் காணு யோநீ
வாய்மையின் வழாது மன்னுயி § ரோம்புநர்க்
கியாவது மூண்டோ வெய்தா வரும்பொருள்
கசo. காமுறு தெய்வங் கண்டடி பணிய
நீபோ யாங்கஞ் நீணெறிப் ‖ படர்குது
மென்றம் மறையோற் கிசைமொழி யுணர்த்திக்
குன்றுக் கொள்கைக் கோவலன் றன்னுட
னன்றைப் பகலோ ரரும்பதித் தங்கிப்
கசடு. பின்றையு மவ்வழிப் பெயர்ந்து**செல் வழிநாட்
கருந்தடங் கண்ணியுங் கவுந்தி யடிகளும்
†† வருந்துசெல் வருத்தத்து வழிமருங் கிருப்ப

கசச. ஆரஞர்த்தெய்வம் - வருத்துந்தெய்வம்.

கசசு. (பா) இயங்குநர்த்தடுக்கும் - வழிபோவாரைப் போக்குவிலக்கும்.

கசஎ. இவ்வகைச்சென்றுகிடக்கும்.

கஙச. கற்பம் கப்பமெனநின்றது; பிராகிருதம்.

கஙடு. மெய்ப்பாட்டியற்கை - பரமாகமம்; பரமாகமத்தில் இந்திரன் நூலினைக் காணலாம்.

---

[1] "இறந்த பிறப்பிற்றுஞ் செய்த வினையைப், பிறந்த பிறப்பா லறிக-பிறந்திருந்து, செய்யும் வினையா லறிக வினிப்பிறந், தெய்துஞ் வினையின் பயன்" அறநெறி. கஎ.

(பி - ம்.) * 'சோரா நலத்திற்' † 'காவுந்திகையோர்' ‡ 'இயற்கை' § 'ஓம்பினர்க்கு' 'படர்குவம்' ** 'செல்வுழிநாட்' †† 'வருந்துசெல்'

விடைநெறிக் கிடந்த * வியவுகொண் மருங்கிற்
புடைநெறிப் போயோர் பொய்கையிற் † சென்று

களஎ. நீர்நசை வேட்கையி னெடுந்துறை நிற்பக்
காணுறை தெய்வங் காதலிற் சென்று
நயந்த காதலி னல்குவ னிவனென
‡ வயந்த மாலை வடிவிற் றோன்றிக்
கொடிநடுக் குற்றது போல வாங்கவ

களடு. னடிமுதல் வீழ்ந்தாங் கருங்கணீ ருகுத்து
வாச மாலையி னெழுதிய மாற்றங்
தீதிலேன் பிழைமொழி செப்பினை யாதலிற்
கோவலன் செய்தான் கொடுமையென் றென்முன்
மாதவி மயங்கி வான்றுய ருற்று

கஅ஢. மேலோ ராயினு நூலோ ராயினும்
பால்வகை தெரிந்த பகுதியோ ராயினும்
பிணியெனக் கொண்டு பிறக்கிட் டொழியுங்
கணிகையர் வாழ்க்கை கடையே போன்மெனச்
செவ்வரி யொழுகிய செழுங்கடைட் மழைக்கண்

கஅடு. வெண்முத் துதிர்த்து வெண்ணிலாத் திகழுந்
தண்முத் தொருகாழ் § தன்கையாற் பரிந்து
‖ துனியுற் றென்னையுந் துறந்தன ளாதலின்
மதுரை மூதூர் மாநகர்ப் ¶ போந்த
தெதிர்வழிப் பட்டோ ரெனக்காங் குரைப்பச்

ககூஅ. இடைநெறி - முன்சொற்றவழிமூன்றினும் நடுவில்வழி; நெறியிடையிலேயென்றுமாம். இயவுகொள் - செலவுகொண்ட.

களஉ. நயந்தகாதலுடையனாதலால், யான்சொல்லுகின்றவற்றற்கு இவன் நல்குவானென.

களசு - எ. யான் மாற்றம் தீதிலேன்; நீபிழைக்கச்செப்பினாய்.

கஅ(). மேலோர் - அருந்தவர். நூலோர் - கற்றோர்.

கஅக. பால்வகைதெரிந்தபகுதியோர் - ஒதாது நன்மைதீமையறிவோர்; ஞானிகளில் உயர்ந்த கூற்றோரென்றுமாம்.

கஅஉ. பிறக்கிடுகை - பின்னிடுகை; என்றது முகம்பாராமை

கஅ0-அசு. அவர்கள் இது பிணியெனக்கருதிக் கழிந்துபோம் கணிகையர்.

(பி - ம்.) * 'இயவுக்கொண்' † 'பொருந்தி' ‡ 'வசத்த' § 'தன்கையிற்' ‖ 'துனிவுற்று' ¶ 'போந்தீங்கு'

கஙூ0. சாத்தொடு போந்து தணித்துய ருழந்தேன்
பாத்தரும் பண்பின் * பணிமொழி யாதென
மயக்குந் தெய்வமிவ் வன்காட் டுண்டென
வியத்தகு மறையோன் விளம்பின னுதலின்
வஞ்சம் பெயர்க்கு மந்திரத் தாலிவ்

கஙூரு. வைஞ்சி லோதியை † யறிகுவென் யானெனக்
கோவல னுவிற் கூறிய மந்திரம்
பாய்கலைப் பாவை மந்திர மாதலின்
வனசா ரிணியான் மயக்கஞ் செய்தேன்
புனமயிற் சாயற்கும் புண்ணிய மூதல்விக்கு

உ00. மென்றிற மூரையா தேகென் றேகத்
தாமரைப் பாசடைத் தண்ணீர் ‡ கொணர்ந்தாங்
கயர்வுறு மடந்தை யருந்துயர் தீர்த்து
மீதுசெல் வெங்கதிர் வெம்மையிற் றொடங்கத்
தீதியல் கானஞ் செலவரி தென்று

உ0ரு. கோவலன் றன்னெடுங் கொடுங்குழை மாதொடு
மாதவத் தாட்டியு மயங்கத ருழுவத்துக்
குரவமு மரவமுங் கோங்கமும் வேங்கையும்
விரவிய பூம்பொழில் விளங்கிய விருக்கை
யாரிடை யத்தத் தியங்குந ரல்லது

உகo. மாரி வளம்பெரு § வில்லே ருழவர்
கூற்றுறழ் ‖ முன்பொடு கொடுவி லேந்தி
வேற்றுப்புலம் ¶ போகிநல் வெற்றங் கொடுத்துக்
கழிபே ராண்மைக் கடன்பார்த் திருக்கும்
விழிதுதற் குமரி விண்ணோர் பாவை

உகரு. **மையறு சிறப்பின் வான நாடி
யையைதன் கோட்ட †† மடைந்தன ராங்கென்.

கஙூக. பாத்தரும்பண்ப - பகுத்தலரியபண்பனே! என்றது, பிறர்க்கில்லாத, பண்டையாயென்றபடி.

கஙூரு. அறிகுவெனென்றுகருதி. உ0ரு. ஒடி, எண்ணெடுவுமாம்.

உ0க - க0. ஆரிடையத்தத்தியங்குநருடைய வளமல்லது மழைவளம் பெருமறவர்.

உ0அ - கஙூ. பொழில் விளங்கிய இருக்கையிடத்து ஐயைகோட்டமென்க.

(பி - ம்.) * 'பழிமொழி' † 'அறிகுவெனென்று' ‡ 'கொணர்ந்து வய்யாவுமடந்தைக்கு வருத்துயர்' § 'வல்லேருழவர்' ‖ 'மொய்ம்பொழி' ¶ 'போகில்வெற்றங்' ** 'மறவறு' †† 'உறைந்தனரங்கென்'

க - ச. திங்கண்மூன்று.....அறிவனை வணங்கி

(இ-ள்.) கோதைகள் தாழ்ந்த பிண்டியினது வளவிய நிழற்கண்ணே மூன்று திங்களையடுக்கிஞ்ஞாற்போலும் திருமுக்குடையினதுகீழ் இளநாயிற்றினது ஒளியினும் ஒளிசிறப்பவிருந்த அறிவனை வணங்கியென்க.

திங்கண்முதலிய [1] மூன்றெனினுமாம். முக்குடையாவன: சந்திராதித்தம் நித்தியவிஞ்ஞதம், சகலபாசனமென்பன. இன்னுருபு தொக்கது; பொருவாம் பொருண்மை தந்தது. திகழ்தல் - விளங்குதல். சிறந்து - சிறப்ப. 'கோதைதாழ் பிண்டி' என்றார்; [2] அவன்பிண்டி கடவுட்டன்மையான் எஞ்ஞான்றும் மாலையாகப் பூக்குமாதலின். ஆதியி ஞேற்றத் தறிவனென்றது ஆதியின்மையைத் தோற்றமாகவுடையனென்றதாம்; எனவே இனஞ்செப்பி அந்தமின்மையை மூடிவாகவுடையனென்பதூஉமாம்; ஆகவே ஆதியும் அந்தமும் இல்லாதவனென்றவாறும்; எனவே தனக்குப் பிறிதொருவர் முதலாதலில்லாதவனென்பதாம். இன்னும் இதற்கு யாவர்க்கும் தானேமுதலாயவனென்றுரைப்பினுமமையும். ஆதியிற்ஞேற்றம் பாடமாயின், ஆதிக்காலத்தினும் முற்ஞேன்றியவனென்க. என்றகருத்து காலத்தின்முற்ஞேன்றும்பொருள்கள் யாவுமின்மையின், அதனினும் முற்ஞேன்றியவனென்பதாம். அறிவன் - உறையூரிலருகன். வணங்கி - முதனூட் (கo: உசஅ) புரிந்து புக்கவர் வணங்கியென்க.

ஞ - அ. கந்தன் பள்ளி.....மாண்புற மொழிந்து

(இ - ள்.) முற்கூறிய நிக்கந்தனுடைய பள்ளியிடத்துள்ள [3] கடவுளர்க்கெல்லாம் ஆற்றிடைக்குறையாகிய அவ்விடத்து அகன்றபொழிலின்கட் சாரணர்கூறியமொழியைக் கவுந்தியடிகளும் இனிமையுறமொழிந்தென்க.

[4] நிக்கந்தனைக் கந்தனென்றார். அந்தில், அசையுமாம். அரங்கம் - முற்கூறிய ஆற்றுவீயரங்கம்; திருவரங்கமுமாம். அகன்பொழில் - அம் மரம்பயில்தற்கிடம். சாரணர் - [5] பெரும்பெயரையரிட்ட சிலாதலத்துத் தருமஞ்சாற்றுஞ் சாரணர்; அவர்கூறியமொழி - [6] "ஒளியுறி னலலது, போதார் பிறவிப் பொதியறையோர்" என்றமொழி; அதனைக் கவுந்தியடிகளும் மொழிந்தென்க.

அ - கூ. ஆங்கு.....அடங்கி

(இ - ள்.) அன்று [7] சாவகருறைவிடத்து விட்டுத் தங்கியென்க.

---

[1] மூன்றுவன:—சந்திரன், சூரியன், அக்கினி.

[2] இவ்வசோகு மாலையாகப் பூக்குமென்பதை, "முழாத்திரண் மொய்ம்மலர்த் தாமந் தாழ்ந்துமேல், வழாத்திரு மலரெலா மலர்த்து வண்டினங், குழாத்தொடு மிறை கொளக் குனிந்து கூம்குயில், வீழாக்கொள விரிந்தது வீரன் பிண்டியே" என்னும் ஜீவகசிந்தாமணி, ஈ0கஉ - ஆம் செய்யுளாலுணர்க.

[3] கடவுளர் - ஈண்டு முனிவர்; "தொன்முது கடவுட் பின்னர் மேய" எனவும் (சக) மதுரைக்காஞ்சியுள்ளும், "இப்போழ்து போழ்தென் றதுவாய்ப்பக் கூறிய, வெக்கடவுள்" எனவும் (கூஈ) கலித்தொகையுள்ளுங்கூறினர்.

[4] நிக்கந்தன் - அருகன்.

[5] சிலப்பதிகாரம், கo: ககo.

[6] ,, கo: ககo - ஙக.

[7] சாவகர் - சைனர்களில் இல்லறத்தார்; இவர்களை ஸ்ராவகரென்பர்.

என்றது காலைப்பொழுதில் வாய்மொழிகேட்டு மாடப்புறஞ்சோகித் தென் கரையெய்திப் பூம்பொழிலிருந்துழிச் சாபவிடைசெய்து மாலைப்பொழுதின் கட் புறஞ்சிறைவாரணம் புரிந்துபுக்கனரெனவே அற்றைஞான்றுதங்குதல் கூற வேண்டாதுமுடியும்; முடியவே வழிநாட்சாவகருறகின்றவிடத்தே தங்கினு ராய் ஒடுங்கியென்க. அவரெனக் கடவுளரைச்சுட்டின், அவருறைவிடம் கந்தன் பள்ளியாமாகலானும், ஆண்டு அடங்காமை சொல்லவேண்டாவாகலானும் அவ ரென்றது சாவகரையென்க. கடவுளர்க்கெல்லாம் மாதவத்தாட்டி மாண்புற மொழிந்தெனவே கவுந்தியடிகள் கந்தன்பள்ளியுட் புக்கமையுணர்க. இங்ஙனங் கூறியது, [1] "ஆறைங்காதம்" என்றமையானும் [2] "காவதமல்லது கடவா ராகிப், பன்னுட னங்கிச் சென்ற லொருநாள்" என்றமையானும், ஈண்டும் "அன்றவ ருறைவிடத் தல்கின ரடங்கி" என்றமையானும் சிலநாட்சென்றவழிச் செலவொழிந்தொழிந்து ஆண்டாண்டிருந்து ஆறிச்சென்றமை உணர்த்தற்கெ னக்கொள்க.

கo - கச. தென்றிசை மருங்கிற்.....புக்குழி

(இ - ள்.) தென்றிசைக்கண்ணேசெல்லுதலே விருப்பமுறுதலானே கோழி யூரை வைகறையாமத்தே கழிந்து செல்லாநின்றுழி வெய்யோன்வந்து முன் னர்க் குணதிசையை விளக்கிப் பின்னர்த் தான் தோன்றிஞனுக, வளைய நீர் நிறைந்த மருதநிலமும் வாவியுஞ்சிறந்ததோர் இளமரக்காவின்மண்டபத்தே சென்று புக்கவிடத்தென்க.

வாரணம் - கோழியூர். வணங்கி மொழிந்து அல்லினரடங்கி விருப்புற்று வாரணங்கழிந்து தோன்றினவளவிலே இருக்கைபுக்குழியென்க. விளங்கி - விளக்கி; விகாரம்.

கநி - சு. வாழ்க வெங்கோ.....உலகங் காக்க

(இ - ள்.) மன்னர்யாவரினும் மிக்க பெரியதகையினையுடைய எங்கோ வாழ்வானுக; ஊழிதோறும் ஊழிதோறும் இவ்வுலகை அவனே காப்பானுக வென்க.

கள - உஉ. அடியிற் றன்னளவு.....தென்னவன் வாழி

(இ - ள்.) முன்னொருகாலத்துத் தனது பெருமையினதளவை அரசர்க் குக் காலான்மிதித்துணர்த்தி வேலானெறிந்த அந்தப் பழம்பகையினைக் கடல் பொருது பின்னொருகாலத்து அவனது தென்றிசைக்கண்ணதாகிய [3] பஃறுளி யாற்றுடனே பலவாகிய பக்கமலைகளையுடைய குமரிக்கோட்டையும் கொண்ட தனல் வடதிசைக் கண்ணதாகிய கங்கையாற்றினையும் இமயமலையினையும் கைக் கொண்டு ஆண்டு மீண்டும் தென்றிசையையாண்ட தென்னவன் வாழ்வானுக வென்க.

---

[1] சிலப்பதிகாரம், கo: சஉ. [2] சிலப்பதிகாரம், கo: கநிச - நி.

[3] "எங்கோ வாழிய... ... ...முந்நீர் விழவி னெடியோ, னன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே" எனப்பஃறுளியாற்றைப் பாராட்டிக்கூறினர் புறப்பாட்டினும்; சு.

அடியில் - அடியால் தன்னளவென்றதனைக் கட்டன்மேலேற்றலுமொன்று. அரசர்க்கு - உலகிலரசரெல்லார்க்குமென்க. வான்பகை - முன்புசெய்த பகைமை. பஃறுளியென்னும் ஆற்றின்றன்மை [1] வேனிற்காதையிற்கூறிப் போந்தாம். கோடு - மலை. கொடுங்கடல் - இவ்வளவெல்லாந்தந்ததடல். கடல் எறிந்துகொண்ட எல்லையளவும் வடபால் தனதாக்கி மீண்டும் தென்றிசையை யாண்டவென ஒப்பாக்கலுமொன்று. அடியாலுணர்த்தி எறிந்த பகைபொருது கொள்ளத் தானுங்கொண்டு ஆண்ட தென்னவனென்க.

என்றது: அங்ஙனமாகிய நிலக்குறைக்குச் சோழநாட்டெல்லையிலே முத்தூர்க்கூற்றமும் சேரமானாட்டுக் குண்டூர்க்கூற்றமுமென்னுமிவற்றை இழந்த நாட்டிற்காகவாண்ட தென்னவன் வாழ்வானுகவென்றவாறு.

உங - நி. திங்கட் செல்வன்.....பூண்டோன் வாழி

(இ - ள்.) திங்களாகிய செல்வனுடைய மரபு மேம்படுதற்கு இந்திரன் பூட்டிய வலிவிளங்கிய ஆரத்தை ஒளிபொங்கிய தனமார்பத்தேபூண்ட பாண்டியன் வாழ்வானுகவென்க.

விளங்கவென்பதனை விகாரவகையான் வியங்கோளாக்குவாருமுளர். விளங்கப்பூண்டோனென இயைக்க. [2]திங்கட்செல்வனென்பதற்கு வேனிற்காதையில் உரைத்ததுரைக்க.

உசு - ஙக. முடிவலை யுடைத்தோன்.....வந்திருந் தோனை

(இ - ள்.) இவன் நம்முடைய முதல்வனது சென்னிமுடியிலே வலையை யுடைத்தோனென்று இடியையுடைய பருவமழை தனதுநாட்டிற் பெய்தற்றொழிலெய்தாது ஏகிற்றுகத் தப்பாத வினையுளாகிய மிக்க வளஞ்சுரக்கும்படி அதனை [3]விலங்கிட்டாண்ட மன்னவன் வாழ்வானுகவெனக் குற்றந்தீர்ந்த சிறப்பினையுடைய தென்னவனை இங்ஙனம் எதிர்வந்திருந்த முதுமறையோனையென்க.

ஙஉ - ஙஎ. யாது நும்மூர்.....கோவலன் கேட்ப

(இ - ள்.) அம்மறையோனைநோக்கி, ஆண்டு, நும்மூர்யாது? ஈண்டு நும் வரவு என்னையெனக் கோவலன்வினவவென்க.

ஙஙு - சு. குன்றுச் சிறப்பின்..... உரைப்போன்

(இ - ள்.) மிக்க சிறப்பினையுடைய அம்மறையோன் தான் வருகின்றபொருளை உரைக்கின்றவனென்க.

வருபொருளென்ற பொதுமையான் வருதற்குக் காரணமும் ஊரின்பெயரு மென்பதர்யிற்று.

---

[1] சிலப்பதிகாரம், பக். உஙக. [2] சிலப்பதிகாரம், பக். உங்சு.

[3] வேலையெறிந்து கடலே வற்றச்செய்ததும், இந்திரன்பூட்டிய ஆரத்தைப்பூண்டதும், இந்திரன்முடிமேல் வளையைச்செலுத்தியதும், மேகத்தைச் சிறைப்படுத்தியதும் பாண்டியன் உக்கிரவன்மன் செயலென்று திருவிளையாடற்புராணமுதலியன கூறும்.

கூ - சி. நீல மேகம்.....கிடந்த வண்ணமும்

(இ - ள்.) நீலமேகம் ஒங்கிய பொன்மலைமீதே பக்கங்களில் விரிந்து மிகா மல் ஒக்கப் படிந்ததுண்டாகில் அதனையொப்பத் தனது படம்விரித்தெழுந்த ஆயிரத்தலையையும் கிட்டுதற்கரிய திறலையுமுடைய பாம்பணைப்பள்ளிமீதே தேவர்கள் பலரும் தொழுதேத்தத் திரைவிரியும் காவிரியாற்றிடைக்குறையிலே திருமகள்பொருந்திய திருமார்பையுடையோன் கிடந்தகோலமுமென்க.

மேகம் படிந்ததுபோலக்கிடந்தவென்க.

சக - நிக. வீங்குநீரருவி.....நின்ற வண்ணமும்

(இ - ள்.) கொடிவழித்தீர்த்தமுதலிய மிக்க அருவிநீரையுடைய வேங்கட மென்று பெயர்கூறப்படும் மலையினுச்சிமீதே ஞாயிறும் திங்களும் இருமருங்கும் ஒங்கிவிளங்கிய இடைப்பட்டவிடத்தே நல்ல நீலநிறத்தையுடையமேகம் தன் மின்னுகிய புதுப்புடைவையையுடுத்துத் தன்வில்லாகிய பணியைப்பூண்டுநின் ரூற்போலப் பகையைவருத்தும் ஆழியையும் சங்கையும் அழகிய தாமரைக்கையு கத்தே வலனுமிடனுமேந்தி அழகுகிளருமாரத்தைத் திருமார்பிற்பூண்டு பொற் பூவாடையையுடுத்து வெளிப்பட்ட சிவந்த திருக்கண்மலரையுடைய நெடி யோன் நின்ற கோலமுமென்க.

மேகம் இடைநிலைத்தானத்து உடுத்துப் பூண்டு நின்றதுபோல ஏந்திப் பூண்டு பொலிந்து உச்சிமீமிசைத்தோன்றிய நெடியோன் நின்றவண்ணமு மென்க. இது மயக்கநிரனிறை உச்சிமீமிசையென ஒருபொருட்பன்மொழி சிறப்பின்கண்வந்தன.

நிஉ - ஈ. என்கண் காட்டென்று.....உள்ளேன்

(இ - ள்.) இங்ஙனமாகிய இரண்டுவண்ணத்தையும் காட்டுவாயாகவென்று என்கண் என்னுள்ளத்தைக் கவலைசெய்தலாலே ஈண்டுவந்தேன்; ஆண்டுக் குடக மலைப்பக்கத்து மாங்காடென்னுமூரின்கண் உள்ளவன் நானென்றுணென்க.

என்கண், எழுவாய். [1] "கண்ணுந் தோளும்" என்பதனுற் கண்ணென்றார். உள்ளேன் - உள்ளவன் நான்.

நிச - எ. தென்னவ னாட்டு.....செப்பக் கேட்டு

(இ - ள்.) அத்தென்னவனுடைய நாட்டிலுள்ளசிறப்பும், அவன் கொடை அளிமுதலிய செய்கைகளும் கேட்டலன்றிக் கண்கள்குளிரக் கண்டேனுகலான், அவன் புகழை நாவால்வாழ்த்திவந்திருந்தேன்; என்வரவு இதுவென்றுகொண்டு மூத்தியின்றிறத்து மனம்புரிந்தோன் சொல்லக்கேட்டென்க.

நிஅ - கூ. மாமறை முதல்வ.....கோவலற் குரைக்கும்

(இ - ள்.) கோவலன் பெரிய மறைமுதல்வனே! அதுநிற்க; மதுரைக்குச் செல்லும் செவ்வியநெறியை எங்கட்குக் கூறுவாயாகவென, அவற்கு அவன் இதனைக் கூறுமென்க.

---

[1] தொல்காப்பியம், இளையாக்கம், சூ. கூஉ.

அது மேற்கூறுவார் :—

சுo - சுஎ. கோத்தொழி லாளரொடு.....காரிகை தன்னுடன்

(இ - ள்.) வன்கண்மையன்றிக் குடியோம்பாத அமைச்சரோடே, நாடோறும் நாடி மூறைசெய்யாது அரசனும் கோல்கோடலானே, அரசியலிழந்த அகன்றிலம்போல முதிர்ந்த வேனிலாகிய உரிய அமைச்சனேடே வெவ்விய விளக்கத்தோடேயமைந்த [1] வேந்தன்மூனும் வெம்மைமிகுதலானே தமது இயற்கை கெட்டு முல்லை குறிஞ்சியென்னும் இருதிணையும் முறைமைதிரிந்து தமது நல்லியல்பையிழந்து தம்மைச் சேர்ந்தோரை நடுங்குந்துயரையுறுவித்துப் பாலையென்பதோர் வடிவைக்கொள்ளும் இந்தக்காலத்து இக்காரிகையோடு வந்தீர்நீரென்றனெனக.

பாலைக்கு நிலமின்மையும் முல்லையும் குறிஞ்சியும் பின்பு பாலையாதலும் முன்னர்ப் [2] பதிகச்செய்யுளுரையிற் கூறப்பட்டன. அன்றியும், [3] 'வான மூர்ந்த வயங்கொளி மண்டில, நெருப்பெனச் சிவந்த வுருப்பவி ரங்காட், டிலையில மலர்ந்த மூகையி லிலவம்" என முல்லை முறைமைதிரிந்து பாலையாயினவாறும், [4] 'நீறருங் கணிச்சியோன்... ... ...வரைபிளந் தியங்குந, ராறுகெட விலங்கிய வழலவி ராரிடை"எனக் குறிஞ்சி முறைமைதிரிந்து பாலையாயினவாறுங்காண்க.

கோடி இழந்த நிலம்போலக் கிழவனெடு வேந்தன்றிருகக் குன்றித் திரிந்து இழந்து உறுத்துக் கொள்ளுங்காலையெனக்கூட்டுக. காரிகைதன்னுடன் காலையெய்தினிரென மாறுக. காலை - காலம்.

சுஅ - எஙு. அறையும்..... .....கவர்க்கும்

(இ - ள்.) பாறையும் துறுகலும் அருவழியின் நெறிமயக்கமும் பேய்த் தேருமென்னுமிவை அடைவுபட்க்கிடந்த இந்தத் தொலையாத பெரிய சுரத்து நெறியைத் தொலைத்துப்போய்க் கொடும்பாளூர் நெடுங்குளமென்னும் இரண்டீர்க்கும் பொதுவாகிய ஏரியினது கரையைக் கழிந்துசென்றால் முடிக்குப் பிறையைக் கண்ணியாகச்சூடிய இறைவனேந்திய கண்ணறையாகிய வாயையுடைய சூலவேலைப்போல மூன்றுவழி அறிதற்கரியவாம்படி கவர்க்குமென்றனெனக.

பொறையைப் பொத்தையென்பாருமுளர்; ஆவது மட்சிறுமலை யாரிடை - அரியவழி; ஆவது ஆறலைப்போரும் ஊறுசெய்விலங்குமுடைத்தாய் ஏற்றிழிவும் கவலைச்சின்னெறியுமாயிருப்பது. நிறைநீர்வேலியென்றூர், பேய்த்தேரை; நீர்போலத் தோன்றுதலின்; உடைகுளங்களுமாம். இவை இணைப்பெயர்பெற்றவூர். இனிக் கொடும்பைக்கோட்டகநெடுங்குளமெனவுமாம். கோட்டகம் - கரை; பள்ளமுமாம். நீந்திப் புகவரிதென்பதுதோன்றப் புக்காலென்றூர். சூலத்து - சூலம்போல; சாரியை நிற்க உருபும் உவமவுருபும் தொக்கன.

* நெறியருமைகூறினன்.

எச. வலம்படக் கிடந்த வழிநீர் துணியின்—(இ - ள்.) அங்ஙனம் கவலைப்படுநெறியினுள் வலப்பக்கத்ததாய்க் கிடந்த வழியில் நீர் போகத்துணிவீராயினென்றனெனக.

---

[1] வேந்தன் - சூரியன், [2] சிலப். பக். கஎ. [3] அகநா, கக. [4] கலித், உ.

எநி - அசு. அலறுதலே மராமும்.....பதிச் செல்லுமின்

(இ-ள்.) விரிந்த தலைகளையுடைய வெண்கடம்பும், உறிய தலைகளையுடைய ஓமையும் பொரிந்த தாளையுடைய வாகையும், தண்டுமுரிந்த புறக்காழாகிய மூங்கிலும், வரியையுடையமரல் நீர்வற்றித் திரங்கிய கரிந்துகிடக்கின்ற இடங்களும், அவ்விடத்தே நீருண்டலைவிரும்பி அவ்விருப்பத்தாலே உழைமான் நின்று உலக்குங்காடும், எயினரூரையடித்தவழியுமாகியவவை கடத்தற்கரிய; அவற்றைக்கடந்து போனால், அவ்விடத்து மலைச்சாரலில்வினையும் நெற்பயிரும் மூறிக்கும்பருவத்தைத் தன்னிடத்துடைய கரும்பும் கொய்யும்பருவத்தையுடைய தினையும் வளைய புனத்தில்வினைந்தவரகும் வெள்ளுள்ளியும் மஞ்சளும் அழகிய கொடியையுடைய கவலையும் தலைதாழ்ந்த குலையையுடைய வரைவாழையும் கமுகும் தெங்கும் மாவும் பலாவுமென்னுமிவை தனக்குச் சுற்றெங்கும் சூழப்பட்டு ஓங்கிய தென்னுடைய சிறுமலையென்னும் பெயரையுடைய மலை விளங்கித் தோன்றும்; அம்மலையை வலப்பக்கத்துக்கொண்டு இடப்பக்கத்து நெறியிற் சென்று மதுரையிற்புகுமினென்றுனைக்க.

உலறுதல் - தலைமுரிதல். உழிஞ்சில் - உன்னமுமாம். புல் - புறக்காழ். திரங்கியவென்பதற்கு வில்லுக்கு சுவைத்தலால் திரங்கியவென்றுமாம்; [1] ‘மரையா மரல்கவர” என்றாராகலின். எயினர் - மறவர். அறைக்கண் - வரைந்தகண்ணுமாம். பூந்தினை - பொலிவினையுடையதினை. காயம் - வெள்ளுள்ளி. சிறுமலை, பெயர். அகன்பதி - மதுரை.

அள - கூஉ. அவ்வழி.....பிலமுண்டு

(இ - ள்.) அங்ஙனமாகிய வலப்பக்கத்துநெறியைப் போதீராயின் இடப்பக்கத்துச் சிறையையுடையவண்டுகள் செவ்வழியாழ்ப்பண்ணினைப்பாடும் தாழ்ந்த தடத்தோடும் தாழ்ந்தவ்யலோடும் குளிர்ந்தபூங்காவினூடும் அருஞ்சுரங்கள் பலவும் இடைக்கிடந்த காட்டுநெறியையுங்கழிந்து திருமால்குன்றத்துச் செல்லக்கடவீராயின், அவ்விடத்தே மிக்க மயக்கத்தைக்கெடுக்கும் பிலத்துநெறியுண்டென்றுனைக்க.

திருமால்குன்றம் - அழகர்திருமலை.

கூஉ. ஆங்கு—(இ - ள்.) அப்பிலத்துக்குள்ளே,

கூங - எ. விண்ணே ரேத்தும்.....மூன்றுள

(இ - ள்.) தேவர்களாலேத்தப்படுதலின் யாவரும் வியக்கத்தகும் மரபினையுடைய புண்ணியசரவணம் பவகாரணி இட்டசித்தியென்னும்பெயர் எங்கும் பரக்கப்பட்டு இடையறுத சிறப்பினையுடையவாய்த் தம்மிற்சேர்ந்திருக்கின்ற மூன்றுபொய்கைகளுளவென்றுனைக்க.

கூஎ. ஆங்கு—(இ - ள்.) அவற்றுள்,

கூஅ - கூ. புண்ணிய சரவணம்.....எய்துவிர்

---

[1] கலித்தொகை, கூ.

(இ - ள்.) புண்ணியசரவணமென்றுகின்ற பொய்கையில் ஆடிவிராயின் இந்திரனுற்செய்யப்பட்ட ஐந்திரியாகரணமென்னும் இலக்கணத்தை உணர்வீரென்றுனென்க.

இது நினைவின்றிப் பெறும்பேறு.

பொருந்துதல் - ஆடுதல். எய்துதல் -உணர்தல்.

க00 - க0க. பவகாரணி.....எய்துவிர்

(இ - ள்.) அதுவன்றிப் பவகாரணியென்னும் பொய்கைக்கண் ஆடுவீராயின் இப்பிறப்பிற்குக் காரணமாகிய பழம்பிறப்பை யுணர்வீரென்றுனென்க.

முன்னும்பின்னுமாகிய இருபிறப்பையும் உய்த்துணர்தற்குக் காரணமாகிய இப்பிறப்பிலே எப்பிறப்பையும் எய்த்வுணர்வீரென்றுனெனினுமமையும். இனிப் பவமென்பதனை விகாரமாக்கிப் பாவத்தான்வரும்பிறப்புக்களெனலுமாம்.

க0உ - ங. இட்டசித்தி.....நீர்

(இ - ள்.) அதுவன்றி இட்டசித்தியென்னும் பொய்கையில் ஆடுவீராயின் நீர் நினைத்தவெல்லாம் எய்துதலையுடையீரென்றுனென்க.

இனி எண்வகைச்சித்திகளையும் தவஞ்செய்து வருந்திப்பெறுமல் நினைத்தழிப் பெறுவீரென்றுனெனினுமமையும்.

கஎச. ஆங்குப் பிலம்புக வேண்டுதி ராயின்—(இ - ள்.) அங்ஙனமாகிய அப்பிலத்துக்கட்புகுதலை விரும்புவீராயினென்றுனென்க.

க0நி - எ. ஓங்குயர் மலையத்து.....மலைவலஞ் செய்தால்

(இ - ள்.) மிகவுமுயர்ந்த அத்திருமலைக்கண்ணுள்ள பெரியோன்சேவடிகளைக் கையாற்றொழுது மனத்தானினைந்து வாக்காற்றுதித்தலுடனே அம்மலையை மும்முறை வலஞ்செய்தாலென்க.

அத்து, சாரியை. வைத்தல் - நினைத்தல் = தியானம். வந்தனை - ஈண்டுத் துதித்தல். தொழுது வைத்து வந்தனையோடு வலஞ்செய்தாலென்க.

க0அ - கக. நிலம்பக வீழ்ந்த.....ஒருத்தி தோன்றி

(இ - ள்.) பாதாளகங்கைக்கு மேலுள்ள நிலம் கூறுபடும்படி அறுத்துத் தாழ்ந்த [1] நிலம்பாதென்னும் அகற்சியையுடைய ஆற்றினது கரைக்கண்ணதாகிய விளக்கத்தையுடைய முகைகளவிழ்ந்த மலரையுடையதோர் கோங்கினிழற்கண்ணே ஒரு பொற்கொடிபோலவும், மின்போலவும் புயல்போலும் ஐவகைக்கூந்தலையும் வளைந்த தொடியுனைந்த தோளினையுமுடையாளொருத்தி தோன்றியென்க.

நிலம்பாறு - அவ்வியாற்றின்பெயர். தலை - இடம். இன், உவமவுருபு. கன்னிகாரம் - கோங்கு. தொடி - வளைவு. ஒருத்தி - ஓரியக்கி.

ககஉ - எ. இம்மைக் கின்பமும்.....கதிவெனும்

(இ-ள்.) அங்ஙனம் தோன்றினவள் இப்பிறப்பிற்கின்பமும் மறுபிறப்பிற்கு மின்பமும் இவையிரண்டுமொழிந்து எக்காலத்தும் ஒன்றுந்தன்மையாய்க் கோட்

[1] நிலம்பாற்றினை நாபுரகங்கையென்பர்.

டமின்றி அழிவதநிற்குமின்பமுமாகியபொருள்கள் யாவை? அவற்றை நீயிருரைமின்; யான் இத்[1] தாள்வரைக்கண்ணே வாழ்வேன்; வரோத்தமையென்றுகூறப்படுவேன்; யான் வினைய இவற்றை உரைத்தாருளராயின், அவர்க்கு எத்தொழிற்குமூரியேன்; ஆதலின், திருத்தக்கீர், உரைத்தீராயின், உமக்கு இப்பொழுதே இப்பிலவாயிற்கதவம் திறந்துதருவேனென்று சொல்லுமென்றுனென்க.

இம்மைக்கின்பம் - புகழ்; மறுமைக்கின்பம் - புண்ணியம்; செம்மையினிற்பது - மோக்கம்; இனி, ஒருவர்க்கு இம்மைமறுமைகட்கு இன்பத்தைத்தந்து பூமியுள்ளளவும் நிற்பதுபுகழெனலுமாம்; [2] ''ஒன்ரு வுலகத்.....தொன்றில்'' எனவும், [3] ''இவணிசை யுடையோர்க் கல்ல தவண, துயர்நிலை யுலகத் துறையு ளின்மை, விளங்கக் கேட்ட மாறுகொல்'' எனவுங்கூறினராகலின். கதவந்திறத்தற்குரியேனெனவுமாம். திறந்தேன், காலமயக்கம்; விரைபொருட்கண்வந்தது.

ககஅ - உங. கதவந் திறந்தவள்.....பேணிய பொருளெனும்

(இ - ள்.) அவருரைப்பின், அவள் கதவைத்திறந்து இதுவென்றுகாட்டிய நல்ல வழியில்நீண்ட இடைகழிவாயில்கள் பலவுள; அவைகழிந்தால், இரட்டைக்கதவையுடைய வாயிலொன்று உண்டு; அதற்கு மேலாகச்சென்றால் வட்டிகையிலேயெழுதின பாவைபோல்வாளொருத்தி வெளிப்பட்டு ஈறில்லாத இன்பம் யாது? அதனை உரைத்தீராயின் நீயிர் இம்மூப்பொருளினும் விரும்பியபொருளைப் பெறுவீரென்னுமென்றுனென்க.

புதவம் - வாயில். போகு - நெடுமை. ஓட்டுப்புதவம் - இரட்டைக்கதவம். உம்பர் - மேல். பூங்கொடி, உவமப்பெயர்; அன்றித் துவாரவட்டிகையிற் பூங்கொடி அங்ஙனம் கேட்குமெனவுமாம். இறுதியிலின்பம் - வீடு. பெறுதிர், முன்னிலைப்பன்மை. போலி, ஒப்பில்போலி.

ககச - நி. உரையீ ராயினும்.....நீக்குவ னும்மெனும்

(இ - ள்.) வினையவள், யான்வினையதனை நும்பேதைமையான் உரையீராயினும் நுமை வருத்தஞ்செய்யேன்; நீர் போகக்கடவ நெடுநெறிக்கண்ணே நும்மைப்போக்குவலென்னுமென்றுனென்க.

ககசு - எ. உரைத்தா ருளர்.....பெயரும்

(இ - ள்.) அவள் அங்ஙனங்கேட்டபொழுது உரைத்தாருளராயின், முற்கூறப்பட்ட பொய்கைமூன்றின் கரைக்கட்செலுத்தி அவை இவையென்று காட்டி மீளுமென்றுனென்க.

ஆங்கு, அசை.

ககஅ - ஙச. அருமறை மருங்கின்.....மற்றவை

(இ - ள்.) ஓதவும் உணரவுமரிய மறையிடத்தனவர்கிய ஐந்தானும் எட்டானும் வருமுறைமைப்பட்ட எழுத்தினையுடைய மந்திரமிரண்டையும் ஒருதன்

---

[1] அடிமலையைப் பாதசைலமென்று வடநூலார் கூறுதலின், தாள்வரையென்றார்.
[2] திருக்குறள், உகங. [3] புறநானூறு, நிக.

மையாக மனத்தானினைந்து வாக்காற்றுதித்து அவற்றுள் வேண்டியதியா தொன்று அதனில் விரும்பினீராயாடின், அவற்றின்பயனுயவை, தவங்களைச் செய்தோர்க்கும் காணத்தகும் மரபினையுடையவல்லவென்றுனென்க.

இனி, அங்ஙனமாகிய பொய்கைகளின்பயனே விரும்பினீராய் ஒன்றினுடின் அதன்பயனே நுகர்ந்தநெஞ்சம் பிறிதொன்றினையும் காதலியாதென்றுமாம். இன்னும் மற்றவை காண்டகுமரபினவல்லவென்பதற்கு இவையொழிந்ததீர்த் தங்கள் இவைபோலக் கைமேற் காணத்தகும் மரபினையுடையவல்லவெனினு மமையும்.

கஙூ கூ - அ. மற்றவை நினையாது.....துயர் கெடுக்கும்

(இ - ள்.) அங்ஙனமாகிய பொய்கைகளின்பயனே விரும்பீராயின், அவற் றை நினையாதே அம்மலிநீதுகின்றேனுடைய பொலிவுபொருந்திய தாமரை மலர்போலும் தாள்களே நினைமின்கள்; அங்ஙனநினைப்பீராயின், அப்பொழுதே அவனது கருடப்புள்ளெழுதிய கொடித்தண்டு பொருந்திநிற்குநிலையிடத்தைக் காண்பீர்; கண்ட வளவிலே அவன்றிருவடிநிலை நுமமை எடுத்துக்கொண்டு பிற வித்துன்பத்தைக் கெடுக்குமென்றுனென்க.

நீயிர் ஆண்டுச்சென்று அதுகாண்பீரென்பான் தோன்றுமென்றுன். கெடுக்கும், முற்று.

கஙூ அ - கூ. இன்ப மெய்தி.....ஏகுமின்

(இ - ள்.) அங்ஙனம் அதுகாண்டலிற் பின்னர்ப் பரமபதத்திற்குச்சேறலு மெய்யென்று இன்பமெய்தி மாட்சிமைபொருந்திய மரபினையுடைய மதுரைக் குச் சென்மின்களென்றுனென்க.

கசo. காண்டகு பிலத்தின் காட்சி யீது

(இ - ள்.) கண்கூடாகக் காணத்தகும் பிலத்தின்றன்மை இத்தன்மையா யிருக்குமென்றுனென்க.

கசo - சகூ. ஆங்கு.....யானென

(இ - ள்.) அத்தன்மையவாகிய இரண்டு பக்கவழிகளிற் போதீராயின், இடைப்பட்டநெறி செவ்வியநெறி; அதனிடத்து இனிய பொழில்சூழ்ந்த ஊரும் ஊர்களே இடையிட்ட பலகாதங்கடந்தாற் கடத்தற்கரியதோர் மிக்க வழிக்கண் மிக்க துயரைத்தருவதோர் தெய்வமுண்டு; அத்தெய்வந்தோன்றி வழிப்போவாரை இடுக்கண்செய்யாது; செய்வதியாதெனின், நடுக்கஞ்சாலா நயத்தாலே போவார்போக்கைத் தடுக்கும்; அங்ஙனமாகிய அதனைத்தப்பின், அப் பெருவழி போவார்யாவர்க்கும் முகஞ்செய்துகிடக்கும்; ஆதலால் நீயிருஞ்சென் மின்; யானும் நிலங்கடந்த நெடுமுடியண்ணலுள்ளத் தொழுதகையையுடையே னுகலிற் போகுவலென்னவென்க.

தாங்கும் - தடுக்கும். மடித்துடன்கிடக்கும் - இம்மூன்றுவழியும் ஒரு படிப்பட முகஞ்செய்துகிடக்குமெனினுமமையும்.

கநo - நிக. மாமறை யோன்.....கட்டுரை சொல்லும்

(இ - ள்.) அங்ஙனம் போகுவலென்ற முதுமறையோன்வாக்கால் வழியின் திறங்களைக்கேட்ட கவுந்தியடிகள் ஒருபொருள்பொதிந்தவுரையை உரைக்கும்; அஃதியாதெனின்:—

கநிஉ - சூச. நலம்புரி கொள்கை.....அரும்பதித்தங்கி

(இ - ள்.) நல்லொழுக்கத்தைப்புரிந்த கோட்பாட்டையுடைய மறைவல்லவனே! தேவர்களிறும்வைத்து ஆயுக்கற்பத்தினை மிகவுடைய இந்திரன்முற்றுவித்த வியாகரணத்தினை எம்முடைய அருகுமரனருளிச்செய்த பரமாகமங்களிற் காண்கின் றிலையோ? அஃதுளதாக, நின் புண்ணியசரவணம்பொருந்துதல் வேண்டா; அஃதன்றி முற்பிறப்பிற்செய்தவற்றை இப்பிறப்பிற் காண்கின் றிலையோ? ஆகலான் நின்பவகாரணி படியவேண்டா; அஃதன்றி வாய்மையும் கொல்லாமையுமென்னும் இரண்டினையும் வழுவாதோம்புவார்க்குக் கடைகூடாதிருக்கும்பொருள் யாவதுமில்லை; ஆகலின், நின் இட்டசித்தியெய்துதல் வேண்டா; இவை இங்ஙனம்பெறுதலின், பிலம்புகவேண்டுமுறைமை எங்கட்கு இல்லைகாண்; நீ காமுற்றுவந்ததெய்வத்தைச் சென்று கண்டு அடிபணிதற்குப் போவாயாக; யாங்களும் எங்கட்கு ஏற்ற நெறியே செல்வோமென்று அந்தமறையோனுக்குப் பொருந்துவனவாகிய மொழிகளையுணர்த்திக் குன்றுத ஒழுக்கத்தினையுடைய கோவலனுடனே அற்றைநாள் தங்குதற்கரியதொரு பதியிற்றங்கியெங்க.

நலம்புரிகொள்கை நான்மறையாள, இகழ்ச்சி. கற்பமென்பதனைப் பிராகிருதத்தாற் கப்பமென்றார்; தேவர்களிடைச்சென்று கற்பிக்குமிந்திரனென்றுமாம். மெய்ப்பாட்டியற்கை - பரமாகமம்; அதில் ஐந்திரவியாகரணம் காணலாம். நூலினையென்னுமுருபு தொக்கது. இந்தப்பிறப்பில்நுகர்வன முற்பிறப்பிற்புரிந்த வினைப்பயனென்பதுகருத்து.

கநிஅ - கூ. வாய்மை...பொருள்:—[1] "யாமெய்யா.....பிற" எனவும், [2] "கொல்லான் .....தொழும்" எனவும் உட்கொண்டவாறெனக்கொள்க. இனிக் காமுறுதெய்வம் - காமமுறுந்தெய்வம்; எனவே காமக்குரோதாதிகளெல்லாமுடைய தெய்வமென்பதுஉமாயிற்று; கண்டு - கண்டுவைத்துமென்க.

கசுரு - எ. பின்றையும்.....துறை நிற்ப

(இ - ள்.) முன்னுட்போலப் பின்பும் தங்கி அப்பதியினின்றும் பெயர்ந்து செல்கின்றபின்னுட் கரிய பெரிய கண்ணையுடையாளும் கவுந்தியடிகளும் வழிநடை வருத்தத்தினாலே வழிப்பக்கத்தேயிராநிற்க, முற்கூறிய இடைநெறிக்கிடந்த செலவைக்கொண்ட பக்கநெறியைக் கடந்துபோய் ஒருபொய்கைக் கரையிற்சென்று நீரையுண்ணவிரும்பிய வேட்கையோடே கோவலன் ஒரு பெரியதுறையிடத்தே நின்றானுகவென்க.

பின்றை - பின்னே. வழிநாள் - மற்றைநாள். வருத்து-வழி. இடைநெறி - நெறியிடையென்று மாறிணுமமையும். இயவு - செலவு. நீர்நசைவேட்கை - நீர்மேல்மிக்கவிருப்பம். இது கூறவே பாலைத்தினையின் தன்மைச்சிறப்பு மாயிற்று.

---

[1] திருக்குறள், கoo. [2] திருக்குறள், உசூo.

களக - நி. காணுறை தெய்வம்.....நீருருத்து

(இ - ள்.) அம்மறையோன்கூறிய ஆரஞர்த்தெய்வமாகிய வனதெய்வம் தனது காதன்மிகுதியாற் சென்று கூடக்கருதி மாதவிமேல் நயந்தகாதலால் நம்மேல் இவன் அன்புறுவனென்றெண்ணி அவடோழியாகிய வசந்தமாலையது வடிவைக்கொண்டு வந்து வெளிப்பட்டு ஒருகொடி காற்றால் நடுக்கமுற்றதென்னும்படி அவனுடைய தாளிணைக்கண்ணேவீழ்ந்து பொய்க்கண்ணீரையுருத்தென்க.

அருங்கண்ணீர் - அன்பின்மையின் உருத்தமை தோன்ற நின்றது. சென்று தோன்றி வீழ்ந்து உருத்தென்க.

களசு - கூ. வாச மாலை.....வான்றுய ருற்று

(இ - ள்.) இனி மாதவிகூற்றாகக் கொண்டுகூறுகின்றவள், வாசத்தையுடைய மாலையிலெழுதிய ஓலைப்பாசுரத்தில் தவறுடையேனல்லேன்; நீகூறிய மாற்றங்களிற் சிலதவறுண்டுபோலும்; அதனானன்றே கோவலன் எனக்குக் கொடுமை செய்தானென்று என்முன்னே மாதவி மயங்கிவீழ்ந்து மிக்கதுயரமுற்றென்க.

கஅ0 - கூக. மேலோராயினும்.....பணிமொழி யாதென

(இ - ள்.) முனிவரும் கற்றோரும் கல்லாது நன்மைத்தன்மையறிவோரும் இது நெஞ்சையொறுக்கும்பிணியென்று உட்கொண்டு முகம்பாராது விட்டு நீங்கப்பட்ட இப்பொதுமகளிருடைய செய்தொழில் கடையானதொழிலென்று சொல்லித் தனது சிவந்த அரிபரந்த வளவியகடையையுடைய கண்களால் வெண்முத்தத்தைச்சொரிந்து விரும்பி முலைக்குப்பூட்டிய வெள்ளிய நிலாவிளங்கும் குளிர்ந்த தனிமுத்துவடத்தையுற்வெறுத்துப் பூட்டிய தன்கையாற் பரிந்து சிந்தித் துறவாவென்னையுந்துறந்தனள்; ஆதலான் நீங்கள் மதுரையென்னு மூதூராகிய நகரைநோக்கிப்போந்ததனே வழியிலெதிர்ப்பட்டோர் எனக்குரைத்தலானே [1] வாணிகச்சாத்தோடுபோந்து தனிமையால் யான்றுய ருழந்தேன்; பருத்தலரிய பண்பையுடையோனே! அதற்கு நீயருளிச்செய்யுமாற்றம் யாதென்றுகேட்பவென்க.

பிறக்கிடுதல் - பின்னிடுதல்; ஆவது முகம்பாராமை. வாழ்க்கை - பொய்த்தொழில். ஏகாரம், தேற்றம். போன்ம - போலும்; [2] ''செய்யு ளிறுதிப் போலி மொழிவயி, னகார மகார மீறொற் றாகும்'' என்பதனாற்கொள்க. மேலோர் - முனிவர். நூலோர் - கற்றோர். பால்வகை தெரிந்தபருதியோர் - மதிநுட்பமுடையோர்.

கஙஉ - உ00. மயக்குந்தெய்வம்.....எனென்றேக

(இ - ள்.) இங்ஙனம் இயக்கிநடிக்கக்கண்ட கோவலன் மதியை மயக்குவிக்குந் தெய்வம் இவ் வலிய காட்டிலுண்டென்று அம்மறையோன் கூறினனுத

---

[1] வாணிகச்சாத்து - வாணிகஞ்செய்வோர்திரள்; ''சாத்தொடு வழங்கு முல்லைதடைப் பெருவழி'' (அ0) எனப்பெரும்பாணாற்றுப்படையிலும், ''தாளி னூக்குபு சாத்தி னெழுந்தவே'' (களவு) எனச் சிந்தாமணியிலும் கூறினர்.

[2] தொல்காப்பியம், மொழிமரபு, சூ. கஅ.

லான் மந்திரத்தால் இந்த ஐவகைப்பட்ட சிலவாகிய ஓதியையுடையாளைத் தெய்வமகள் மானிடமகளென்பதறிவேனைனக்கருதி அவன் நாவிற்கூறியமந்திரம் அந்தரிமந்திரமாதலானே, அஞ்சி, யான் இவ்வனத்திற்றிரிகின்றவியக்கி; நின்றணை விரும்புதலான் மயக்கஞ்செய்யப் புக்கேன்; யான்செய்த இப்பிழையை நின்மனைவிக்கும் கவுந்தியடிகட்கும் மொழியாது போவாயாகவென்று சொல்லித் தானும் தன்னிடமே போகவென்க.

தவத்தினும் கற்புச்சிறந்ததாகலின், முற்கூறினார். இவர் சாயலும் அறனுமுடையாரேனும் தவறுகண்டுழிக் கணத்தின் வெகுண்டு சுவிப்பரென்றஞ்சி அவர்க்கு உரையாதொழியென்று இரந்தாளென்க.

உ0க - உ. தாமரைப் பாசடை.....துயர் தீர்த்து

(இ - ள்.) அங்ஙனம் அவள்போனபின்பு தாமரைப்பொதியுள் தான் அந்த விடத்திற் குளிர்ந்தநீரைக் கொண்டுசென்று நீர்வேட்கையான்வருத்தமுற்ற மடந்தையது வருத்தத்தைத் தீர்த்தென்க.

உ0ங - சு. மீதுசெல் வெங்கதிர்.....அழுவத்து

(இ - ள்.) எழுகின்றகதிர் வெம்மைசெய்தலைத் தொடங்குதலாலே பாலைத் தன்மைநிகழ்கின்ற இக்கானம் இனி வழிச்சேறற்கு அரிதென்று கோவலனுடனும் வளர்ந்த மகரக்குழையையுடைய மாதினுடனும் மாதவத்தாட்டியும் வழிமயக்கத்தையுடைய பாலைநிலப்பரப்பின்கண்ணென்க.

தீதியல்கானம் - தீங்காலியன்றகானமுமாம்.

உ0எ - ஙசு. குரவமும்.....ஆங்கென்.

(இ - ள்.) குராவும் வெண்கடம்பும் கோங்கும் வேங்கையும் தம்மிற் தலைமணந்தபொழில்சூழ்ந்த இருப்பிடத்து அரியவழிகளின் இயங்குவார்க்கைப்பொருளாகிய வளத்தை விரும்பினல்லது மழைவளத்தைவிரும்பாத விற்றொழிலையே உழவுத்தொழிலாகவுடைய மறவர் கூற்றத்தையொத்த வலியோடே வில்லையேந்திப் பகைவர்மூணியிடத்தேபுக, அவர்க்குவென்றியைக்கொடுத்து அதற்கு விலையாகிய மிக்க ஆண்மைத்தன்மையையுடைய அவிப்பலியைத் தான்பெறுதற்கு வழிபார்த்திருக்கும் நெற்றிக்கண்ணையுடையகுமரி, விண்ணோர்பரவும்பாவை, குற்றமற்ற சிறப்பினையுடைய சுவர்க்கநாட்டையுடையாளாகிய ஐயைகோட்டத்தைச் சென்றடைந்தார் அப்பொழுதேயென்க.

போகி - போக. இனிப் போகவெனத்திரியாது ஏந்திப் போகி வெற்றங் கொடித்துப் பார்த்திருக்குமென்பதும் பொருள். அதற்கு உழவர்க்கென நான்கனுருபு விரிக்க. முன்பொடுவெற்றங்கொடுத்தென்க. மயங்கதரழுவத்து விளங்கிய இருக்கைக்கட் கோட்டமென்க; அஃது ஏந்திப் போகிக் கொடித்து இருக்கும் குமரி பாவை நாடி ஆகிய ஐயைகோட்டமென்க. கழிபேராண்மைக்கடன் - தன்னேத்தானிடும்பலிக்கடன். விழிதூதல் - தூதல்விழியென்க.

இஃது, எல்லாவடியும் நேரடியாவருதலின், நிலையடிலவாசிரியப்பா.

நக.—காடுகொண்காதை முற்றிற்று.

பன்னிரண்டாவது

வேட்டுவவரி.



கடுங்கதிர் திருகலி னடுங்கஞ ரெய்தி
யாறுசெல் * வருத்தத்துச் சீறடி சிவப்ப
நறும்பல் கூந்தல் குறும்பல வுயிர்த்தாங்
கையை கோட்டத் தெய்யா வொருசிறை
இ. வருந்துநோய் தணிய விருந்தன † ருப்பால்
வழங்குவிற் றடக்கை மறக்குடித் தாயத்துப்
‡ பழங்கட னுற்ற முழங்குவாய்ச் சாலினி
§ தெய்வ மூற்று மெய்ம்மயிர் நிறுத்துக்
கையெடுத் தோச்சிக் கானவர் வியப்ப
கஎ. விடுமுள் வேலி யெயினர்கூட் டுண்ணு
நடுவூர் மன்றத் தடிபெயர்த் தாடிக்
கல்லென் பேரூர்க் கணநிரை சிறந்தன
வல்வி லெயினர் மன்றுபாழ் பட்டன
[1] மறக்குடித் தாயத்து வழிவளஞ் சுரவா

க. திருகலின் - முறுகலின்.

ச. எய்யாவொருசிறை - பலரும் அறியாத ஒருபக்கம்.

இ. உப்பால் - மேல்.

ரு. வழங்குவிற்றடக்கை - வில்வழங்குதடக்கை; வழங்குவில் - அம்பை வழங்கும்வில்லென்றுமாம். தாயம் - உரிமை.

எ. பழங்கடன் - முன்புகொடுத்துப்போதுங்கடன்; அஃது கொடுத்துப் போந்தாள். சாலினி - தேவராட்டி.

கக. நடுவூர் மன்றம் - ஊர்நடுமன்றம்.

கஉ. கல்லென்பேரூர் - கரந்தையூர்கள்.

கங. நிரைகவர்ந்து வாராதபடியால் எயினர்மன்றுகள் பாழ்பட்டன.

கச. மறக்குடித் தாயமாகிய வழிவளஞ்சுரவாது; வழிவளம் - போவாரை அடித்துப்பறித்தல்.

---

[1] கச - இ. கருத்து: கவி. ஙகங: கஉ - ச.

(பி - ம்.) * 'வருத்தஞ்சீறடி' † 'இப்பால்' ‡ 'பழங்கணுற்ற', 'பழங்கட னிறுத்த' § 'தெய்வமுற்றெழுத்து மெய்ம்மையினிறுத்துக்'

கரு. அறக்குடி போலவிந் தடங்கின ரெயினருங்
[1] கலியமர் செல்வி கடனுணி னல்லது
சிலையமர் வென்றி கொடுப்போ ளல்லண்
மட்டீண் வாழ்க்கை † வேண்டுதி ராயிற்
கட்டீண் மாக்கள் கடந்தரு மெனவாங்

உ0. கிட்டுத் தலையெண்ணு ‡ மெயினர் ல்லது
சுட்டுத் தலைபோகாத் தொல்குடிக் குமரியைச்
[2] சிறுவெள் ளரவின் குருளைநாண் சுற்றிக்
§ குறுநெறிக் கூந்த னெடுமுடி கட்டி
யிளைசூழ் படப்பை யிழுக்கிய வேனத்து

கரு. அறக்குடி - அறஞ்செய்யுங்குடிகள். அவிந்தடங்குதல் - நிரைகோடலும் ஆறலைத்தலுமொழிதல்; இது 'மறக்குடி அறஞ்செய்யக் கெடும்' என்னும் வழக்கு.

கஅ. மட்டீண்வாழ்க்கை - கள்ளுண்டுகளிக்கும்வாழ்க்கை.

கக. கட்டீண்மாக்கள் - களவேகட்டு உணவாகவுண்ணுமாக்கள். கடந்தரு மென்றது சாலினிகூற்று; தாருமென்றது விகாரத்தாற் தருமென்பதாயிற்று. ஆங்கு - அவ்விடத்தில்.

இனி, தம் குடியில் ஒருபெண்ணை ஒப்பிக்கிறபடி கூறுகின்றார்:—

உ0. தலையறுத்திட்டு எண்ணப்படும் எயினரல்லது.

உக. சுட்டுத்தலைபோகா - நோயாற்செத்துச் சுட்டுப்போகாத; என்றது மறங்கூறியதாம்.

உ0-உக அன்றியும், மாற்றூர்தலையைத் தாங்கள் வெட்டியிட்டு எண்ணுமதல்லது பிறராற் கருதலானவிடத்தைப்போகாதவென்றுமாம். அன்றியும், மறத்திற்கு முற்படவிட்டெண்ணுமெயினர், தாங்கொள்ளச்சுட்டினல்லது பிறர் கொள்ளச் சுட்டுமுடிவுபோகாத தொல்குடியிற் குமரியென்றுமாம்.

உஉ. அரவின்குருளைநாணென்றது - பொன்னற்பண்ணின பாம்பு; [''அராப்போத்து'' என்பதுபோல உருவமாறிநின்றது.]

உஉ - கூ. சுற்றிக்கட்டி.

உசு. இளைசூழ்படப்பை - காவல்சூழ்ந்த கொல்லைத்தோட்டம். இழுக்கியபட்ட.

---

[1] கருத்து: சிலப்பதிகாரம், கக; உகக - கூ. [2] குறுந்தொகை, ககக.
(பி - ம்.) * 'இலதரு' † 'வேண்டுவிராயிற்' ‡ 'எயினர்க்கல்லது' § 'குறிமுறி'

உரு. வலைவெண் கோடு பறித்து மற்றது
மூலைவெண் டிங்க ளென்னச் * சாத்தி
மறங்கொள் † வயப்புலி வாய்பிளந்து பெற்ற
மாலை வெண்பற் ருலிங்கிரை பூட்டி
வரியும் புள்ளியு ‡ மயங்கு வான்புறத்
ஈ௦. துரிவை மேகலை § யுடீஇப் பரிவொடு
கருவில் வாங்கிக் || கையகத்துக் கொடுத்துத்
திரிதரு கோட்டுக் கலைமே லேற்றிப்
பாவையுங் கிளியுந் தூவி யஞ்சிறைக்
கானக் கோழியு நீனிற மஞ்ஞையும்
ஈரு. பந்துங் கழங்குந் தந்தனர் ¶ பரசி
வண்ணமுஞ் சுண்ணமுந் தண்ணறுஞ் ** சாந்தமும்
[1] புழுக்கலு †† நோலையும் விழுக்குடை மடையும்
பூவும் புகையு மேவிய விரையு
மேவ லெயிற்றிய ‡‡ ரேந்தினர் பின்வர [2]
சஅ. வாறெறி பறையுஞ் சூறைச் சின்னமுங்
கோடுங் குழலும் பீடுகெழு மணியுங்
கணங்கொண்டு துவைப்ப வணங்கு மூன்னிறீஇ

உஅ. மாலை - ஒழுங்கு.

உஎ - அ. நிரைபுலிப்பற்ருலி - நிரைத்த புலிப்பற்ருலி.

உஈ - ஈ௦. வான்புறத்துரிவை - தூயபுறத்தினையுடைய புலியுரிவை.

ஈஉ திரிதருகோடு - புரிந்தகொம்பு. ஈஈ. தூவி - சிறகின்மயிர்.

ஈரு. பந்தும் கழங்குங்கொண்டு சேவித்து.

[3] ஈஈ - சஅ. (பா) பீடிகையிற் சென்று நிலைப்பலிசெய்து.

சஅ. ஆறெறிபறை - வழிபறித்துக்கொட்டும்பறை. சூறைச்சின்னம் - சூறைகொள்ளுமிடத்து ஊதுஞ்சின்னம்.

சஉ. (பா) அணங்கு மெய்ந்நிறீஇ - அக்ருமரிமேல் அணங்கையேற்றி.

---

[1] சிலப்பதிகாரம், பி: ஈஉஅ.

[2] 'பின்வர' என்றதன்பின், "மலர்ப்பலிப் பீடிகை நிலைப்பலி செய்தாங்கு" என்ற ஓரடி சிலபிரதிகளில் அதிகமாக எழுதப்பட்டுள்ளது.

[3] மிகுதியாகக்காணப்பட்ட ஓரடியின் பொருள் இது; இஃது அடியார்க்குநல்லா ருரையிற்காணப்படவில்லை.

(பி - ம்.) * 'சேர்த்தி' † 'இரும்புலி' ‡ 'மயங்கியவான்' § 'உடீத்தி' || 'கையிற் கொடுத்து' ¶ 'பின்வர' ** 'சாந்தும்' †† 'நொலையலும்' ‡‡ 'ஏந்தினர்சூழ்ந்து'

விலேப்பலி யுண்ணு மலர்ப்பலி பீடிகைக்
கலேப்பரி யூர்தியைக் கைதொழு தேத்தி
சடு. யிணைமலர்ச் சீறடி * யினைந்தனள் வருந்திக்
கணவனே டிருந்த மணமலி கூந்தலே
† யிவளோ, கொங்கச் செல்வி குடமலே யாட்டி
தென்றமிழ்ப் பாவை ‡ செய்த தவக்கொழுந்
தொருமா மணியா யுலகிற் கோங்கிய
ரூ0. திருமா மணியெனத் தெய்வமுற் றுரைப்பப்
பேதுறவு மொழிந்தனண் மூதறி வாட்டியென்
றரும்பெறற் கணவன் பெரும்புறத் § தொடுங்கி
விருந்தின் மூர லரும்பின ணிற்ப
மதியின் வெண்டோடு சூடுஞ் சென்னி
ரூரு. நுதல்கிழித்து விழித்த விமையா நாட்டத்துப்
பவள வாய்ச்சி தவளவா ணகைச்சி
நஞ்சுண்டு கறுத்த கண்டி வெஞ்சினத்
தரவுநாண் பூட்டி || நெடுமலே வளைத்தோ
டுளேயெயிற் றுரகக் கச்சுடை முலேச்சி
சுரு. வளேயுடைக் கையிற் சூல மேந்தி
[1] கரியி னுரிவை போர்த்தணங் காகிய
வரியி னுரிவை மேகலே யாட்டி

சகூ. விலேப்பலி - வெற்றிகொடித்தண்ணும்பலி. (பா) மலர்ப்பலிபீடிகை யென்றது - கோட்டத்தை.

சகூ - சு. உண்ணுமூர்தி.

பீடிகைக்கு அருகேகிற்கிறகலேப்பரியூர்தியைக் கைதொழுதேத்தி; ஏத்தி - ஏத்த. கலேப்பரியூர்தியென்றது - தெய்வமேறப்பட்டாளே. கலேப்பரி - பரிக்கலே யென்க.

சஎ. 'கொங்கச் செல்வி குடமலே யாட்டி' என்றது - மேற்பட்டு இவளைத் தெய்வமாகக்கொண்டாடுமிடங் கூறினபடியாலே, இவள் துர்க்கையாகவே பிறந் தாளென்றவாறு.

(எ) சாலினிதானும் (சஉ) அணங்கு மெய்ந்நிறீஇ (சச) ஏத்தப் பின்னும் (ரூ0) தெய்வமுற்று.

(சஎ) 'கொங்கச் செல்வி' என்றதுமுதலாக, (ரூ0) 'திருமாமணி' என்ப தீறுகக் கண்ணகிக்கு நிகழ்வது கூறினாள்.

---

[1] இவ்வடி., தக்க. தாழிசை, கூசு - உரை, மேற்கோள்.

(பி - ம்.) * 'இனைந்தடிவருந்த' † 'இவளோர்' ‡ 'செய்தவக்' § 'ஒதுங்கி' || 'நெடுவரை'

சிலம்புங் கழலும் புலம்புஞ் சீறடி
வலம்படு கொற்றத்து வாய்வாட் கொற்றவை
சுரு. யிரண்டுவே றுருவிற் றிரண்டதோ ளகுணன்
றலைமிசை நின்ற தையல் பலர்தொழு
மமரி குமரி கவுரி சமரி
* சூலி நீலி மாலவற் கிளங்கிளை
யையை செய்யவள் வெய்யவாட் டடக்கைப்
எ0. பாய்கலைப் பாவை பைந்தொடிப் பாவை
யாய்கலைப் பாவை † யருங்கலப் பாவை
தமர்தொழ வந்த குமரிக் கோலத்
தமரிளங் குமரியு மருளினள்
வரியுறு செய்கை வாய்ந்ததா லெனவே
உரைப் ‡ பாட்டுமடை.

சுரு. இரண்டுவேறுரு - தலை கடாவானவடிவு. அவுணன் - மகிடாசுரன்.

சுஅ. சூலி - சூலத்தையுடையாள். மாலவற்கிளங்கிளை - மாலின் தங்கை.

எக. ஆய்கலைப் பாவை - கலைக்கியானப்பெண். அருங்கலப் பாவை - இரத்தினப்பாவை.

எஉ. தமர்தொழ வந்த குமரி - எயினர் தொழவந்த குமரி.

எங. அமரிளங் குமரி - குமரிமாதேவி.

(எச) வாய்ந்தென்று கண்டார்கூற (எங) அருளினளென்க.

சாலினி சொல்லி ஓப்பித்துப் பந்துமுதலாயின கொண்டு சிலர் பின்வாராநிற்பப் பறைமுதலியன நின்று துவைப்பப் படிசெய்து அப்பலியிட்ட அப்படிமத்தாள் தெய்வத்தைத்தொழுதேத்த, அத்தெய்வம் இவண்மேற்பொருந்தி அங்கிருந்த கண்ணகியைப்புகழ, அதுகண்டு கண்ணகி நாணி மயக்கத்தான்மொழிந்தாளென்று தன்கணவன்புறத்து ஒடுங்கி நகைத்துநிற்பத் தமர்தொழவந்த குமரிக்கோலத்தமர்ந்த இளங்குமரியும் கொண்ட வரிக்கோலம் வாய்ந்ததென்று கண்டார்சொல்ல அருளினளெனக்கூட்டுக.

அன்றியும், மதியின் (பா) வெண்கோடுமுதலாயின இப்பொழுது பிரதிவிம்பமானது தனக்கேயாக்கி, ஆய்கலைப்பாவை.....வரியுறுசெய்கைவாய்ந்ததாலெனத் தமர்தொழவந்த குமரியும் அருளினளென்றுரைப்பாருமுளர்.

பண்டு அருளாக்குமரியும் அருளினளென்க.

உரைப்பாட்டுமடை - உரைச்செய்யுள் இடையிலே மடித்தல்.

(பி - ம்.) * 'சூரி' † 'அருங்கலைப்பாவை' ‡ 'பாட்டுமடையாங்தாக'

வேறு.

நாக நாறு நரந்தை நிரந்தன
* ஆவு மாரமு மோங்கின வெங்கணுஞ்
சேவு மாவுஞ் செறிந்தன கண்ணுதல்
பாக மாளுடை யாள்பலி முன்றிலே

செம்பொன் வேங்கை சொரிந்தன சேயிதழ்
கொம்பர் நல்லில வங்கள் குவிந்தன
பொங்கர் வெண்பொரி சிந்தின புன்கிளர்
திங்கள் வாழ்சடை யாடிரு முன்றிலே

மரவம் பாதிரி † புன்னை மணங்கமழ்
குரவங் கோங்க மலர்ந்தன கொம்பர்மே
லரவ வண்டின மார்த்துட னியாழ்செயுந்
திருவ மாற்கிள யாடிரு முன்றிலே

வேறு.

[1] கொற்றவை கொண்ட வணிகொண்டு நின்றவிப்
பொற்றொடி மாதர் தவமென்னை கொல்லோ
பொற்றொடி மாதர் பிறந்த குடிப்பிறந்த
விற்றொழில் வேடர் ‡ குலனே குலனும்

ஐயை திருவி னணிகொண்டு நின்றவிப்
பையர வல்கு றவமென்னை கொல்லோ
பையர வல்குல் பிறந்த குடிப்பிறந்த
§ வெய்வி லெயினர் குலனே குலனும்

"நாகநாறு"—நாகம் - சுரபுன்னை. (பா) நாறுநரந்தம் - நாரத்தி. ஆ - ஆச்சா. ஆரம் - சந்தனம்; ஆத்தியுமாம். சே என்பது ஒருமரம்; உழிஞ் சிலுமாம்; அழிஞ்சிலுமாம்

" செம்பொன் "—செம்பொன்னை வேங்கை சொரிந்தன. குவிந்தன - குவித்தன.

"மரவம்"—மரவம் - கடம்பு; குங்கும மரமுமாம்.

"கொற்றவை"—கொற்றவை - ஐயை.

---

[1] இச்செய்யுள் முதலியமூன்றும் ஆகிநார்ப்புகழ்ந்தலென்று சில மூலப்பிரதிகளில் எழுதப்பட்டுள்ளது.

(பி - ம்.) * 'யாவும்' † 'வேங்கை' ‡ 'குலமேகுலமும்' § 'வெய்யவெயினர்'

பாய்கலைப் பாவை யணிகொண்டு நின்றவிவ்
வாய்தொடி நல்லா டவமென்னை கொல்லோ
வாய்தொடி நல்லாள் பிறந்த குடிப்பிறந்த
வேய்வி லெயினர் குலனே குலனும்

வேறு.

ஆனைத்தோல் போர்த்துப் புலியி னுரியுடுத்துக்
கானத் தெருமைக் கருந்தலைமே னின்றுயால்
வானோர் வணங்க மறைமேன் மறையாகி
ஞானக் கொழுந்தாய் நடுக்கின்றி யேநிற்பாய்

வரிவளைக்கை வாளேந்தி மாமயிடற் செற்றுக்
கரியதிரி கோட்டுக் † கலைமிசைமே னின்றுயா
லரியரன்பூ மேலோ ‡ னகமலர்மேன் மன்னும்
விரிகதிரஞ் சோதி விளக்காகி யேநிற்பாய்

சங்கமுஞ் சக்கரமுந் § தாமரைக் கையேந்திச்
செங்க ணரிமான் சினவிடைமே னின்றுயாற்
கங்கை முடிக்கணிந்த ‖ கண்ணுதலோன் பாகத்து
மங்கை யுருவாய் ¶ மறையேத்த வேநிற்பாய்

வேறு.

ஆங்குக்,
கொன்றையுந் துளவமுங் குழுமத் தொடுத்த
துன்று மலர்ப்பிணைய றேண்மே லிட்டாங்
கசுரர் வாட வமரர்க் காடிய
குமரிக் கோலத்துக் கூத்துள் படுமே

"பாய்கலை"—(பா) ஏவில் - ஏவையுடையவில்.

"ஆனைத்தோல்"—நடுக்கின்றியே நிற்பாய், நீ இப்பொழுது இங்ஙனே நின்று யென்க.

"வரிவளை"—செற்றென்றது, இப்பொழுது மிதித்துநிற்கின்ற நிலையை. பூமேலோன்—பிரமன். அகமலர் - இதயகமலம்.

"கொன்றை"—கூத்துள்படும் - கூத்தாடுமென்கின்றது.

---

[1] இக்கவிமுதலிய மூன்றும், முன்னிலைப்பரவலாய் மூன்றடுக்கி நான்கடியான் வந்தனவென்பர்; தொல். செய். சூ. கசகூ - ந.

(பி - ம்.) * 'யானைத்தோல்' † 'கலைமிசை நின்றுயால்' ‡ 'அகன்மலர்' § 'தாமரைக்கைமேலேத்தி' ‖ 'கண்ணுதறன்' ¶ 'மலைறபோற்றவே நிற்பாய் கொன்றையுமரவமுந்'

வேறு.

[1] ஆய்பொன் னரிச்சிலம்புஞ் சூடகமு மேக்கலையு மார்ப்ப வார்ப்ப
மாயஞ்செய் வாளவுணர் வீழ நங்கை மரக்கான்மேல் வாளமலை யாடும் போலு
மாயஞ்செய் வாளவுணர் வீழ நங்கை மரக்கான்மேல் வாளமலை யாடுமாயிற்
காயா மலர்மேனி யேத்தி வானோர் கைபெய் மலர்மாரி காட்டும் போலும்

[2] உட்குடைச் சீறூ * ரொருமகனு னிரைகொள்ள வுற்ற காலை
வெட்சி மலர்புனைய வெள்வா ளுழத்தியும் வேண்டும் போலும்
வெட்சி மலர்புனைய வெள்வா ளுழத்தியும் வேண்டின் வேற்றார்க்
கட்சியுட் காரி கடிய குரலிசைத்துக் காட்டும் போலும்

[3] கள்விலை யாட்டி மறுப்பப் பொருமறவன் † கைவி லேந்திப்
புள்ளும் வழிப்படரப் புல்லார் நிரைகருதிப் போகும் போலும்
[4] புள்ளும் வழிப்படரப் புல்லார் நிரைகருதிப் ‡ போகுங் காலைக்
கொள்ளுங் கொடியெடுத்துக்கொற்றவையுங் § கொடுமரமுன்செல்லும்போலும்.

வேறு.

[5] இளமா வெயிற்றி யிவைகாணின் னையர்
தலைநாளை வேட்டத்துத் தந்தரல் லானிரைகள்
கொல்லன் றுடியன் கொளைபுணர் சீர்வல்ல
நல்லியாழ்ப் பாணர்த முன்றி னிறைந்தன

"ஆய்பொன்"—[6] மரக்கால் - அசுரர் தன்மேல் பாம்பும் தேளும் மாயத்தி னாலே வரவிடுகையாற் காலிலே மரத்தைக்கட்டி வாளையெடுத்து நின்றாடுங் கூத்து. வானோர்கை மலர்பெய்மாரியைக் காட்டும்

"உட்குடை"—வேண்டும் - விரும்பும். காரி - கருங்குருவி. கடியகுரல் - நிமித்தம்.

"கள்விலை"—கொள்ளுங்கொடி - தான் தெரிந்துகொள்ளும் ஆளிக்கொடி. கொடுமரம் - வில். கொற்றவையும் கொடியெடுத்துச்செல்லுமென்க. அன்றியும் எடுத்தென்றதனை எடுப்பவென்றுதிரித்து இவள் வில்லையெடுப்பச் செல்லுமென்பாருமுளர்.

இத்தாழிசைகளிற் போலுமென்றது ஒப்பில்போலி.

"இளமா"—இளமாவெயிற்றி - மாமை நிறத்தையுடைய இளவெயிற்றி.

---

[1] எல்லாப்பிரதிகளிலும் முதலடி அறுசீராயும் மற்றையடி எண்சீராயும் உள்ளன.
[2] புறப்பொருள் வெண்பாமாலை, வெட்சிப்படலம், கூ.
[3] " " உ. [4] சிலப். கக: உகo - கஉ.
[5] இச்செய்யுள் கொடைக்குமேற்கோள்; தொல். புறத்திணை சூ; ங - ந; இது முதலிய மூன்றும் தாழிசையோசையின்றி அடுக்கிவந்தனவென்பர்; தொல். செய். சூ. கசஉ - ந.
[6] சிலப்பதிகாரம், கூ: நிஅ - கூ.

(பி - ம்.) * 'ஓருமகனுகொள்ள' † 'கைவேலேந்திப்புள்ளுவழிப்' ‡ 'போகு மாயின்' § 'கொமெரமுஞ்'

முருந்தே ளிளநகை காணுய்நின் னீயர்
கரந்தை யலறக் கவர்ந்த வினநிரைகள்
கள்விலை யாட்டிநல் வேய்தெரி கானவன்
[1] * புள்வாய்ப்புச் சொன்னகணி மூன்றி னிறைந்தன

கயமல ருண்கண்ணுய் காணுய்நின் னீய
ரயலா ரலற † வெறிந்த நிரைக
ணயனின் மொழியி னரைமூது தாடி
யெயின ரெயிற்றியர் மூன்றி னிறைந்தன
துறைப்பாட்டுமடை.

வேறு.

[2] சுடரொடு திரிதரு மூனிவரு மமரரு
மிடர்கெட வருளுநி னீணையடி தொழுதே
மடல்வலி யெயினர்நி னடிதொடு கடனிது
மிடறுகு குருதிகொள் விறறரு விலையே

அணிமுடி யமரர்த மரசொடு பணிதரு
மணியுரு வினநின மலரடி தொழுதேங்
கணநிரை ‡ பெறுவிற லெயினிடு கடனிது
நிணனுகு குருதிகொ § ணிகரடு விலையே

"முருந்தேர்"—வேய்தெரி கானவன் - ஓற்றன்.

"கயமலர்"—நயனின்மொழி - நயப்பாடில்லாதமொழி (பா) நரைமுதிர் தாடியையுடைய எயினர்.

துறைப்பாட்டு - வெட்சித்துறை சொன்னபாட்டு.

"சுடரொடு"—[3] சுடரொடுதிரிதருமுனிவர் - ஆதித்தன்வெப்பம் தணி தல் காரணமாக அவனுடனே கூடித் திரியுமுனிவர். நின் அடிதொடு கடனிது - சூளுற்றகடனிது. விறறருவிலை - நீகொடுத்த வெற்றிதந்த விலை.

"அணிமுடி"—அமரர், எழுவாய்.

---

[1] புறப்பொருள் வெண்பாமாலை, வெட்சி, கசு.

[2] "சுடரொடு", "அணிமுடி", "துடியொடு"—இவை மூன்றுமிக்கி முடிஇலாய் வந்த தாழிசைக் கொச்சகவொருபோதென்பர்; தொல். செய். சூ. கசகூ. நச்.

[3] புறநானூறு சசு - ஆம் செய்யுளானும், அதன் உரையானும் திருமுருகாற்றுப் படை, கூஎ - ஆம் அடியானும் அதன் விசேட உரையானுமறியலாகும்.

(பி - ம்.) * 'புள்வாய்ப்புட்' † 'எறிந்தநல்லாக்கள்' ‡ 'பெறும்' § 'திகர்நடு'; சக

தடியொடு சிறுபறை வயிரொடு துவைசெய
வெடிபட * வருபவ ரெயினர்க ளரையிரு
ளடுபுலி யஞ்சியவர் குமரிநி [1] னடிதொடு
படுகட னிதுவகு பலிமுக மடையே

வே று.

வம்பலர் பல்கி வழியும் † வளம்பட
வம்புடை வல்வி லெயின்கட னுண்குவாய்
சங்கரி யந்தரி நீலி சடாமுடிச்
செங்க ணரவு ‡ பிறையுடன் சேர்த்துவாய்

தூண்ணென் றுடியொடு துஞ்சூ ரெறிதரு
கண்ணி லெயின ரிடுகட னுண்குவாய்
விண்ணே ரமுதுண்டுஞ் சாவ வொருவரு
முண்ணுத னஞ்சுண் டிருந்தருள் செய்குவாய்

[2] பொருள்கொண்டு § புண்செயி னல்லதை யார்க்கு
மருளி லெயின ரிடுகட னுண்குவாய்
மருதி னடந்துநின் மாமன்செய் வஞ்ச
வருளுஞ் சகட முதைத்தருள் செய்குவாய்

வே று.

|| மறைமுது முதல்வன் பின்னர் மேய
பொறையுயர் பொதியிற் பொருப்பன் பிறர்நாட்டுக்
கட்சியுங் கரந்தையும் பாழ்பட
வெட்சி சூடுக விறல்வெய் யோனே.

"தடியொடு"—படுகட னிதுவென்றது - தடிமுதலாகிய வாச்சியங்க ளுடனே செய்யும் பூசையை. பலிமுக.....மடை - சோறு.

"வம்பலர்"—(பா) உண்குவை - உண்பாயாக.

"பொருள்கொண்டு"-மருதினடந்து-மருதிடைநடந்து. செய்குவாய், விளி.

இத்தாழிசைகள் கொற்றவையைப் பரவுவார் வார்த்தை.

"மறைமுது"—[3] மறைமுது முதல்வன் - மாதேவன். இவன்பின்னர் - அகத்தியனுகிய கடவுள். பொருப்பன் - பாண்டியன்; இவன் வெய்யோன்; விறல்வெய்யோன் - வெற்றியை விரும்புதலையுடையோன். கட்சி - காடு கரந்தை - அவர் மீட்குந்தொழில்.

---

1 பரி. அ: ஈ0; கலி. கூஉ; மணி. கஅ: களக.

2 "பொருள்கொண்டு புண்செயி னல்லதையன்போ, டருள்புற மாறிய" கலி. கஙி.

3 இக்கருத்தைத் மதுப்பர் நச்சினர்க்கினியர்; மதுரை. சி0 - சஉ - உரை.

(பி - ம்.) * 'வருமவரெயினர்கணையமிலர்' † 'வளஞ்சுரப்ப' ‡ 'பிறையொடு' § 'தொய்செயின்' || 'மறங்கெழு நிறப்பின் வாய்வாட் டென்னவன், புறங்காத் தோம்பு கழுங்கொடி பிறர்நாட்டு'

க. கடுங்கதிர் திருகலின்—(இ - ள்) அங்ஙனமடைந்தவர் வெங்கதிர் முறுகுதலாலே,

தண்கதிருமண்டாதலின், வெங்கதிரென்பதுதோன்றக் கடுங்கதி'ரென்றார்.

க - நி. நடுங்கஞரெய்தி.....இருந்தனர்

(இ - ள்.) நறிய பலவகைக்கூந்தலையுடையாள், கடுங்கதிர் அங்ஙனமுறுகுதலின் வெம்மைவிளக்கும் பாலைத்தன்மையையுடைய நெறியைச்செல்லுதலால் நடுங்குதற்குக்காரணமான அருஞ்சுரத்தி மெய்வருத்தத்தோடே அடிகள் கொப்புளங்கோடலின் வல்லாநடையோடும் பலகாலுயிர்த்தலின், மேற்செல்லாராய் நோய்தணிய அவ்விடத்துளதாகிய முற்கூறிய ஐயை கோட்டத்துப் பலரும்புகுந்தறியாததோர் பக்கத்தே புக்கிருந்தார்களாகவென்க.

நி. உப்பால்—(இ - ள்.) மேலே,

சு - எ. வழங்குவிற்றடக்கை..... ..சாலினி

(இ - ள்.) அம்பைவழங்கும் வில்லைக் கையிலேயுடைய மறவர்குடியிற் பிறந்த உரிமையையுடைய சாலினியானவள்,

பழங்கடன் - முன்புநேர்ந்தகடன். முழங்குவாய் - கொக்கரிப்பையுடைய வாய். சாலினி - தேவராட்டி.

அ - கக. தெய்வமுற்று.....அடிபெயர்த்தாடி

(இ - ள்.) ஆச்சாலினி, தனதூர்நடுவாகிய மன்றின்கண்ணே தான் தெய்வத்தன்மையுற்று மெய்ம்மயிர்சிலிர்த்து மூரிநிமிர்த்த கைகளை ஒற்றையும் இரட்டையுமாக்கி அவிநயத்தோடேகூட்டித் தாளத்திற்கு ஒப்ப அடிபெயர்த்துக் காண்வர்விடப்ப ஆடியென்க.

கூட்டிண்ணுமெயினரூர்; வேலியையுடைய ஊர்.

கஉ - ங. கல்லென் பேரூர்.....மன்றுபாழ் பட்டன

அங்ஙனம் ஆடியவள் கூறுவாள் :—

(இ - ள்.) முன்புசொல்லிய நுங்கடன்கொடாமையின், வலியவில்லையுடைய எயினர்மன்றுகள் இன்று பாழ்பட்டன; பகைவருடைய ஊர்களில் திரண்டநிரைகள் மிக்கன.

கல் - அணுகரணம். சிறத்தல் மிகுதி. பட்டது பாடமாயின், ஒருமை பன்மைமயக்கமென்க.

கச - நி. மறக்குடித் தாயத்து.....எயினரும்

(இ - ள்.) அங்ஙனம் அவட்குக் கடன்கொடாமையின், இம்மறக்குடியில் தாயம்பற்றிவருகின்ற எயினரும் தமக்கு முறைமையாகிவருகின்ற ஆறெறிசூறை ஆகோள் முதலியவற்றுல்விளையும் வளங்குன்றி அறக்குடிகளைப்போலச் சினங்குறைந்து செருக்கு அடங்கிவிட்டார்கள்;

இது முன்னிலைப்புறமொழி.

ககூ - எ. கலியமர் செல்வி.....கொடுப்போ ளல்லள்

(இ - ள்.) கலியாகிய ஊர்தியைப்பொருந்திய செல்வி தான்கொடுத்த வென்றிக்கு விலையாகிய உயிர்ப்பலியை உண்ணக்கொடுப்பினல்லது நுஞ் சிலைக்குப்பொருந்திய வென்றியைக் கொடுப்பாளொருத்தியல்லள் ;

கஅ - கூ. மட்டீண் வாழ்க்கை.....தரு மெனவாங்கு

(இ - ள்.) களவுகண்டுண்ணும் ஊணையுடையமாக்கள், நுஞ்சுற்றத்தி னுள்ளார் மதுவுண்டுசெருக்கும் இல்வாழ்க்கையை நீர் விரும்புவீராயின், செல் விக்குநேர்ந்த கடனைக் கடிதிற் கொடுமின்களென்று சாலினி சொல்லவென்க.

தாருமென்றது தருமென விகாரமாகிக் கொடுமென்பதாயிற்று.
ஆங்கு. அசை.

உ0 - உக. இட்டுத் தலை.....குமரியை

(இ - ள்.) தாஞ்சுட்டிய பகைஞர்தலையைத் தாமேயறுத்திட்டு எண்ணுமை தல்லது பகைஞர் சுட்டியெண்ணுதல் அவரிடத்து முடிவுபோகாமைக்குக் காரண மாகிய எயினர் தொல்குடிக் குமரியையென்க.

இனித் தலைகள் அரிந்து வைக்கவைக்கப் பிறர் எண்ணப்படுமதல்லது ஈமத் திற்சுடப்பட்டு அவம்போகாக்குடியென்றுமாம். இன்னும் அரசன்சுட்டியமாற் றரசர் தலையைப் பிறரிடத்துப்போகவிடாவென்றுமாம். சுட்டு - குறிப்புமாம்.

உஉ - கூ. சிறுவெள் ளரவின் குருளை.....என்னச் சாத்தி

(இ - ள்.) அங்ஙனம் கேட்டவெயினர், தமது குடிப்பிறந்த குமரியுடைய குறிதாக நெறித்தகூந்தலைச் சடையாகக்கட்டி அம்மூடியிலே சிறிய வெள்ளிய அரவினது குருளையாகப் பொன்ஞாணினை வளையக்கிடத்திக் காவற்காடுசூழ்ந்த தோட்டப்பயிரையழித்த எனத்தினது கோட்டைப்பறித்து அதனை இளைய வெள்ளிய பிறையென்னும்படிசாத்தி,

வெள்ளரவென்றார், சாதிபற்றி. குருளையென்றார், அச்சடையிற்பிறந்தமை தோன்ற. சடைமூடி பாம்பாற்கட்டிதலான், நாண் பாம்பாயிற்றென்றுமாம். இளை - கட்டுவேலியுமாம்.

உஎ - ஙo. மறங்கொள் வயப்புலி.....மேகலை யுடீஇ

(இ-ள்.) கடுங்கண்மையையுடைய வலியபுலியை வாயைக்கிழித்து உதிர்த்த பல்லொழுங்கை வெள்ளிய நிரைத்தாலியாகக் கட்டி, அதனது வரியும்புள்ளியும் தம்முள் மயங்குதலையுடைய உரிவையை மேலே மேகலையாகவுடுத்தி,

வான் - பெருமை. புலி ஆக்கொள்ளுமுயற்சியான் வாயங்காந்துவருதலின், 'வாய்பிளந்' தென்றார்.

ஙo - ஙக. பரிவொடு.....கொடுத்து

(இ-ள்.)வயிரவில்லை வருத்தத்தோடுவளைத்து அவள் கையகத்துக்கொடுத்து,

பரிவு - அன்புமாம்.

கூஉ. திரிதரு கோட்டுக் கலிமே லேற்றி—(இ - ள்.) முறுக்குண்ட கோட்டையுடைய கலியின்மீதேயிருத்தி,

ஊரிற்றிரிதருமென் றுமாம்.

கூகூ - நி. பாவையுங் கிளியும்.....தந்தனர் பரசி

(இ - ள்.) பாவைமுதலியவற்றைக்கொண்டு சேவித்துத் துதித்தனராய், பாவை - மதனப்பாவைமுதலியன. தூவி - சூட்டு. நீனிறம் - நீலநிறம்.

கூசு - கூ. வண்ணமுஞ் சுண்ணமும்.....ஏந்தினர் பின்வர

(இ - ள்.) வண்ணமுதல் விரையீறுயவற்றை ஏவல்செய்யுமெயிற்றியர் ஏந்தினராய்ப் பின்செல்ல,

வண்ணம் - தோள் முலைகளின் எழுதுமவண்ணம். புழுக்கல் - அவரை துவரைமுதலியன. நோலை - எட்கி. விழுக்குடைமடை - நினைச்சோறு.

சஅ - சஉ. ஆறெறி பறையும்.....அணங்குமுன் னிறீஇ

(இ - ள்.) வழிபறிக்குங்காற் கொட்டும் பறையும் சூறைகொள்ளுங்கால் ஊதுஞ்சின்னமும் துத்தரிக்கொம்பும் குழிக்குழலும் எறிமணியுமாகியவிவை தம்மிற்கூடியொலிப்ப இவ்வணத்தையும் அணங்கின்முன்னே நிறுத்தவென்க.

நிறீஇ - நிறுத்த.

சகூ - ச. விலேப்பலி யுண்ணும்.....கைதொழு தேத்தி

(இ - ள்.) தான்கொடுத்த வென்றிக்கு விலையாகிய உயிர்ப்பலியையுண்ணும் விரிந்த பலிபீடத்தை மூந்துறத்தொழுது பின்னர்ச் செலவையுடைய கலியாகிய ஊர்தியையுடையாளைக் கையாற்றொழுதேத்தியென்க.

மலர்தல் - விரிதல்.

சஎ - ஙஅ. இணைமலர்ச் சீறடி.....தெய்வமுற் றுரைப்ப

(இ - ள்) இணையான மலர்போலும் சிறிய அடிகளைநெருங்களாய் வருந்தி அவ்வருத்தந்தீரக் கணவனுடனேயிருந்த கண்ணகியைநோக்கி, இங்கிருக்கின்ற விவள் கொங்கநாட்டிணையாளும் செல்வி; குடநாட்டிணையாளுஞ்செல்வி; தென்தமிழ்நாட்டிணையாளும்பாவை; இங்ஙனமாதற்கு முற்பவத்திற்செய்த தவத்தின் கண்முளைத்த கொழுந்துபோல்வாள்; இவ்வுலகிற்கு முழுமாணிக்கம்போன்று உயர்ச்சிபெற்ற பெண்ணுருக்கொண்டதோர் திருமணியெனச் சாலினி தன்தெய்வத்தன்மையான் இங்ஙனம் இவளை மிகுத்துரைப்பவென்க.

கண்ணகி அன்னளாதலை, [1] 'கொங்கிளங் கோசர்' என்றதுமுதலியவற்றுனறிக.

ஙக - ஙூ. பேதுறவு மொழிந்தனள்.....அரும்பின னிற்ப

(இ - ள்.) இங்ஙனம் சாலினிபுகழ்ந்துகூறிய அதனைப் பொறுதகண்ணகி இம்மூத்திவாட்டி தெய்வமயக்கத்தாற் கூறினளெனக்கருதி நாணினால் தன்

[1] சிலப். ஙஅ - ஆம் பக்கத்திற்காண்க.

கணவனது புறத்தே மறைந்து அவளறிவின்மையையிகழ்ந்த புதிய சிறுநகை யோடு நிற்பவென்க.

நிசை - நி. மதியின்வெண் டோடு.....இமையா நாட்டத்து

(இ - ள்.) மதியாகிய வெள்ளிய இதழைச்சூடும் சென்னியையும், நுதலில் திறந்துவிழித்த இமையாதநாட்டத்தினையுமுடைய,

நிசு - எ. பவள வாய்ச்சி.....கறுத்த கண்டி

(இ - ள்.) பவளம்போற்சிவந்த வாயினையும் வெள்ளிய நகையினையும் கரிய கண்டத்தினையுமுடையாள்,

நிள - அ. வெஞ்சினத்து.....மலை வளைத்தோள்

(இ - ள்.) கடிய சினத்தையுடைய வாசுகியை நாணுகப்பூட்டி மேருவரை யை வில்லாகவளைத்தோள்,

இவள் கிரியாசத்தியானமையிற் கூறினர்,

நிஙூ. துளையெயிற் றுரகக் கச்சுடை முலைச்சி—(இ - ள்.) நஞ்சு ஊறும் துளையெயிற்றையுடைய பாப்புக்கச்சாற்பிணித்த முலையையுடையாள்,

சுஎ. வளையுடைக் கையிற் சூல மேந்தி—(இ - ள்.) வளையணிந்த கையாலே சூலத்தையேந்தினாள்,

சுக - உ. கரியி னுரிவை.....மேகலை யாட்டி

(இ - ள்.) சிங்கத்தையுரித்து அதன்மேலே மேகலையாகவுடுத்துக் கரியை யுரித்து அதன்மேலே [1] ஏகாசமாகவிட்டோள்,

அணங்காகிய அரி கரியினுரிவையை உடுத்துப் போர்த்தோளென்க. அணங்கு - வருத்தமுமாம்.

சுஙூ - ச. சிலம்புங் கழலும்.....கொற்றவை

(இ - ள்.) இடப்புறத்துச் சிலம்பும் வலப்புறத்து வீரக்கழலுமொலிக்கும் சிறிய அடிகளையுடைய மேலானவெற்றியையுடைய வாட்டொழில் வாய்ப்புப் பெற்ற கொற்றவை,

சுநி - சு. இரண்டுவே றுருவின்.....தையல்

(இ - ள்.) உடலுக்குத்தலைவேறான வடிவினையும் திரண்டதோளினையு முடைய [2] விக்கிரமாசுரன்றலையைத்துணித்து அதன்மீதே நின்ற தையல்,

சுசு - அ. பலர்தொழும்.....இளங்கிளை

(இ - ள்.) தேவரும் முனிவரும்வணங்கப்பெறும் அலங்கரித்தலில்லா தோள், அழியாதோள், கௌரநிறத்தையுடையோள், சமரைவல்லாள், சூலத்தை யுடையோள், நீலநிறத்தையுடையோள், மாலானவனுக்குத் தங்கையாயுள்ளாள்,

இளை - இளியையொப்பாளெனவுமாம்.

---

[1] ஏகாசம் - உத்தரீயம்.

[2] 'மெலிச்சென்னி விக்கிரமன்' திருவாதவூரர், திருவம்மல, நகூ.

சுகூ - எக. ஐயை செய்யவள்.....அருங்கலப் பாவை

(இ - ள்.) வெய்ய மழுவாளைக் கையிலேயுடைய சயமகள், திருமகள், பாயும் கலையையுடையபாவை, ஆயும் கலையையுடையபாவை, அழகிய தொடியையும் கலங்காளையுமுடைய பாவைபோல்வாள்,

எஉ - சு. தமர்தொழ வந்த.....வாய்ந்ததா லெனவே

(இ - ள்.) மாலும் அயனும் தொழத்தோன்றிய கன்னிக்கோலத்தினையுடையாளாய்ப் பொருந்திய அக்குமரியும் இச்சாலினிகொண்டகோலம் வாய்ப்புடைத் தென்றருளினளென்க.

சாலினி உற்று நிமுத்து ஓச்சி வியப்ப ஆடி, பட்டன; சிறந்தன; அடங்கினர்; ஆதலிற் கடனுணினல்லது கொடுப்போளல்லள்; கடன்முருமென, குமரியைக்கட்டிச் சுற்றிச் சாத்திப் பூட்டி உடலிக் கொடுத்து ஏற்றிப் பரசிப் பின்வரத் துவைப்ப நிமுத்தி, தானேத்திப் பின்னர்க் கூந்தலே, செல்வி, ஆட்டி, பாவை, கொழுந்து, மணியெனத் தெய்வமுற்றுரைப்ப, கண்ணங் ஒடுங்கி நிற்ப, சென்னியையும் நாட்டத்தையுமுடைய வாய்ச்சி, நகைச்சி, கண்டி, வீரத்தோள், முலைச்சி, ஏந்தி, உடுத்துப் போர்த்தோள், கொற்றவை, தையலாகிய குமரியும் அருளினளென வினைமுடிக்க.

உரைப்பாட்டுமடை - உரைப்பாட்டை நடுவேமடித்தல்.

நாக நாறு.....பலி முன்றிலே

(இ - ள்.) கண்ணுதலுடைய பாகத்தை ஆளுதலுடையாளுடைய பலி கொள்ளுமுன்றிலில் எவ்விடத்தும் மண்ணாறும் சுரபுன்னையும் நரந்தையும் நிரல்படப் பூத்தன; ஆச்சாவும் சந்தமும் உயர்ந்துபூத்தன: சேமரமும் மாமரமும் செறிந்து பூத்தனவென்க.

செம்பொன் வேங்கை .....திரு முன்றிலே

(இ - ள்.) பிறை நீங்காதவாழும் சடைமுடியினையுடையாளுடைய திரு முன்றிலில், வேங்கைகள் செம்பொன்னைப்பூத்துச் சொரிந்தன; கல்லிலவங்களின் கொம்புகள் செவ்விதழைப்பூத்துச் சொரிந்துகுவித்தன; புன்கு பொங்காகிய வெள்ளியபொரிகளைச் சிந்தினவென்க.

குவித்தன, விகாரம். பொங்கர் - கொம்புமாம்; பொதளுமாம்.

மரவம் பாதிரி.....திரு முன்றிலே

(இ - ள்.) திருமாற்கு இளையாளது திருமுன்றிலில், மணங்கமழும் வெண்கடம்பும் பாதிரியும் புன்னையும் குராவும் கோங்குமாகியவிவை மலர்ந்தன; இக்கொம்பரின் மீதே வண்டினம் தேனினத்தோடே யாழினகரவம்போலப் பாடுமென்க.

அ, இடைச்சொல். இவைமூன்றும் முன்றிற்சிறப்பு.

கொற்றவை கொண்ட..... .....குலனே குலனும்

(இ - ள்.) இறைவி அணியாகக்கொண்டனவற்றைக் கொண்டிருக்கின்ற இச் சாலினி முன்செய்த தவம் எத்தவங்கொல்லோ, இவள்பிறந்த குடியின்கட் பிறந்த விற்றொழிலேவல்ல மறவர்குலமே குலமென்பதூஉமென்க.

ஐயை திருவின்.....குலனே குலனும்

(இ - ள்.) இந்த ஐயையுடைய அழகிய கோலத்தைக் கொண்டிருக்கின்ற இவ் வரவின்படம்போலும் அல்குலையுடையாள் முன்செய்த தவம் எத்தவங்கொல் லோ, இவள்பிறந்த குடியின்கட்பிறந்த அம்பைச்செலுத்தும் வில்லையுடைய எயினர் குலமே குலமென்பதூஉமென்க.

திரு - அழகு.

பாய்கலைப் பாவை.....குலனே குலனும்

(இ - ள்.) கலைப்பாவையின் கோலத்தைக் கொண்டிருக்கின்ற அழகியதொடி யையுடைய இச்சாலினி முன்செய்த தவம் எத்தவங்கொல்லோ, இவள்பிறந்த குடியின்கட்பிறந்த மூங்கில்வில்லையுடைய எயினர்குலனே குலமென்பதூஉ மென்க.

இவைமூன்றும், [1] "வாடா வள்ளி வயவ ரேத்திய" என்பதனுள், வள்ளிக் கூத்து; என்னே ? [2] "மண்டம ரட்ட மறவர் குழாத்திடைக், கண்ட முருகனுங் கண்களித்தான்—பண்டே, குறமகள் வள்ளிதன் கோலங்கொண் டாடப், பிறமக ணேற்றுள் பெரிது" எனவரும்.

ஆனைத்தோல் போர்த்து.....நடுக்கின்றியேநிற்பாய்

(இ - ள்.) தேவர்கள்வணங்க நான்மறைக்கும் மறைப்பொருளாய்த் தன்னை வழிபடுவோர் ஞானத்தின்கண் எழுந்தொழுந்தாய்ச் சலிப்பின்றிநிற்கின்றதீ புலித்தோலையுடுத்தி யானைத்தோலைப்போர்த்துக் கானத்தின்மீதே எருமையின் பசுந்தலைமேல் நின்றாய்; இஃது என்னமாயந்தானென்க.

கானவெருமையெனினுமமையும் எருமை, சாதிப்பெயர்.

வரிவளைக்கை வாளேந்தி.....விளக்காகி யேநிற்பாய்

(இ - ள்.) அரியும் அரனும் அயனுமாகிய இவர்களிதயகமலத்தே நிலைபெற நின்றுவிளங்கும் விரிந்த கதிர்களையுடைய விளக்காகிநிற்கின்றதீ வளையணிந்த கையாலே வாளையேந்திப் பெரிய மயிடாசுரனைச்செற்றுக் கரிய முறுக்குண்ட கொம்பையுடைய கலையின்மீதே நிலைபெற்றாய்; ஆகையால் இஃது என்னமாய மோவென்க.

சங்கமுஞ் சக்கரமும்.....மறையேத்த வேநிற்பாய்

(இ - ள்.) கங்கையைச் சடைமுடியின்மீதணிந்த இறைவனது இடப்பக் கத்திற்குரிய இறைவிகொண்டவுருவாய் மறைகள்போற்ற அவற்றிற்குந்தோன் றாமல் நிற்கின்றதீ சங்குசக்கரங்களைக் கையிலேந்திச் சிவந்தகண்ணையுடைய

---

[1] தொல்காப்பியம், புறத்திணையியல், சூ. டு.

ந. மேற்.

அரிமாஞ்சிய சினவிடையின்மீதேறின்றாய் ; ஆகையால், இஃது என்னமாயமோ வென்க.

இவைமூன்றும் முன்னிலைப்பரவல்.

ஆங்கு—(இ - ள்.) அவ்விடத்து,

கொன்றையுந் துளவமும்.....கூத்துள் படுமே

(இ - ள்.) கொன்றைமலரையும் துளபத்தையும் கலந்துதொடுத்த மலர் செறிந்த மாலையை உத்தரீயமாகவிட்டு அசுரர் போரின்கண்ணேவாடும்படி அமரர்போரின்கண் ஆடிய கூத்து ஆடுதற்கு ஈண்டு உள்படுமென்க.

இது வென்றிக்கூத்து.

ஆய்பொன்னரிச்சிலம்பும்.....மலர்மாரிகாட்டும்போலும்

(இ - ள்.) அழகிய பொன்னற்செய்த அரிபொருந்தியசிலம்பும் சூடகமும் மேகலையும் ஆர்ப்ப ஆர்ப்ப வஞ்சித்துப்பொரும் போரைவல்ல வாளவுணர் போர் சாயும்படி நங்கை மரக்கான்மேனின்று வாட்கூத்தை ஆடாநிற்கும்; அங்ஙன மாடுமிடத்து வானோர் இவளுடைய காயாமலர்போலுமேனியை எத்துகையாற் பொழியும் மலர்மழையை அக்கூத்துக் காட்டாதிராதென்க.

இது கூத்துள்படுதல்.

உட்குடைச் சீறூர்.....காட்டும் போலும்

(இ - ள்.) மாற்றூர்க்கு உட்குதலைக்கொடுக்கும் சீறூரிடத்துத் தனக்கிணையில்லாதவீரன் நிரைகொள்ளத் தலைப்பட்டவிடத்து அவற்குப் போர்ப்பூவாகிய வெட்சி மலரைச்சூட்டுதற்கு வெள்ளிய வாளுழத்தியும் வேண்டும்; அங்ஙனம் அவளும் உடன் செல்லக்கருதியவழிப் பகைவரூர்சூழ்ந்த காட்டிடத்துள்ள காரியென்னும்புள் தனது கடியகுரலாலே அவர்க்குவருங்கேட்டினை முன்னறிவித்து நிற்குமன்றேவென்க.

வாளுழத்தி - கொற்றவை. இது கொற்றவைநிலை. அஃதாவது [1] "ஆளி மணிக்கொடிப் பைங்கிளிப் பாய்கலைக், கூளி மலிபடைக் கொற்றவை - மீளி, யரண்முருங்க வாகோள் கருதி னடையார், முரண்முருங்கத் தான்முந் துறும்" எனவரும். இது வெட்சி.

கள்விலை யாட்டி.....செல்லும் போலும்

(இ - ள்.) கள்விற்குமவள் இவன் பழங்கடன்கொடாமையிற் பின் கட்கொடாது மறுப்ப, அதுபொறாதவீரன் அந்நிலையே வில்லைக்கையிலேந்திப் புண்ணிமித்தமும் தன்கருத்திற்கேற்பச்சேறலிற் பகைவர்நிரைகொள்ளுதலைக்கருதிப் போகுதலைச்செய்யும்; அங்ஙனம் போங்கால் தான்கைக்கொண்ட ஆனிக்கொடியையுயர்த்துக் கொற்றவையும் வில்லின்முன்னே செல்லுமன்றேவென்க.

என்பது, [2] "அறுஅ நிலைச்சாடி யாடுறு தேறன், மறுஅன் மழைத்தடங் கண்ணி - பொறுஅன், கடுங்கண் மறவன் கழல்புணைந்தான் காலை, நெடுங்கடைய நேரார் நிரை" எனவரும். இது தன்னுறுதொழில். இதுவும் கொற்றவை

---

[1] புறப்பொருள் வெண்பாமாலை, வெட்சிப்படலம், உ.

நீலப்பாற்படும்; என்னை? [1] "மறங்கடைக் கூட்டிய துடிநிலை சிறந்த, கொற்ற வை நிலையு மத்திணைப் புறனே" என்பதனுனென்க. இது வெட்சிப்புறநடை.

இளமாவெயிற்றி.....முன்றினிறைந்தன

(இ - ள்.) சிமத்தையுடைய இளையவேட்டுவமகளே! முன்னுளில் நின்னையன் மார் கவர்ந்துகொணர்ந்த நல்லாணிரைகள், [2]வேல்வடிக்குங்கொல்லனும் துடி கொட்டும்புலையனும் பாடவும் புணர்க்கவும் அடைக்கவும்வல்ல யாழ்ப்பாணரும் என்னுமிவரது முன்றிலின்கணிறைந்தன; நீ இவற்றைக் காண்பாயாகவென்க.

முருந்தேரிளநகை.....கணிமுன்றினிறைந்தன

(இ - ள்.) முருந்துபோலும் முற்றுநகையையுடையாய்! நின் ஐயன்மார் முன்னுட் கரந்தையாரலும்படி கைக்கொண்டுவந்த இனநிரைகள், கள்விற்கும வனும் நல்ல வேய்த்தொழிலி ஆராயுமவனும் புண்ணிமித்தங்கூறுமவனும் என்று சொல்லப்பட்ட இவர்கள் முன்றிலின்கணிறைந்தன; நீ இவற்றைக் காணுயென்க.

கயமலருண் கண்ணுய்.....முன்றினிறைந்தன

(இ - ள்.) பெரிய மலர்போலும் கண்ணையுடையாய்! நின் ஐயன்மார் அயலவூர் அலறும்படி தலைநாளிற் கைக்கொண்டுபோந்த நல்ல ஆனிரைகள், கயமில்லாதமொழியையும் நரைத்து நீண்டதாடியையுமுடைய எயினரும் அங்ஙனமூத்த எயிற்றியருமாகிய இவர்கள் முன்றிலின்கண் நிறைந்தன; இவற்றைக் காணுயென்க.

இவைமூன்றும் [3] கொடையென்னுந்துறை. கண்டார்கூற்று.

துறைப்பாட்டுமடை - துறைப்பாட்டுக்களே நடுவேமடுத்தல்.

சுடரொடு திருதரும்.....விலையே

(இ - ள்.) கதிரவனுடையவெம்மை உயிர்களை வருத்தாமல் அதனைத்தாங்கி அவனுடனே சுழன்றுதிரிதருதலைச்செய்யும் தெய்வவிருடிகளும் தேவர்களும் ஆகிய இவர்கள் இடர்கெடும்படி அருள்செய்யும் நினதடியிணையைத் தொழுதேம்; கொலையையும் வலியையுமுடைய எயினர்பெறும் வெற்றிக்கு விலையாக நின்னடியைத்தொட்டுச் சூளுற்ற கடனுடைய மிடற்றினின்றுமிழும் சூருதியாகியவிதனைக் கொள்ளுவாயாகவென்க.

அணிமுடி யமரர்தம்.....அடிவிலையே

(இ - ள்.) அழகிய முடியையுடைய அமரர் தம்மரசனுடுவந்து பணிதலைச்செய்யும் நீலமணிபோலும் உருவினையுடையாய்! நின் மலரடியைத்தொழுதேம்; நிரைத்திரளைப்பெறும் விறலியுடைய எயினர்கள் பகையையடுதற்குக் காரணமான விலையாக இடுங்கடனுடைய நினைத்தொடுகலந்து உகாநின்ற சூருதிப் பலியாகிய இதனைக் கொள்ளுவாயாகவென்க.

துடியொடு சிறுபறை.....பலிமுக மடையே

(இ-ள்.) துடியுடனே சிறுபறையும் கொம்பும் வெடித்தலுண்டாகமுழங்க அரையிருளில் எயினர் இருப்பிடத்தினின் றுவருகின்றவர் கொல்லும்புலியினை

---

[1] தொல்காப்பியம், புறத்திணையியல், சூ. ச.

[2] "வேல்வடித்துக்கொடுத்தல் கொல்லற்குக்கடனே" புறநா. ஙகக.

[3] கொடையென்னுந்துறையாவது:—தாம் கொண்டதிரையை இரவலர்க்கு வரையாதுகொடுத்து மனமகிழ்தல்.

யவர் முன்னுளில் நின்னடியைத்தொட்டுச் சூளுற்ற கடனுகிய மிடற்றினின் றுஞ்சொரிகின்ற குருதியாகியபலியைக் கொள்ளுவாயாகவென்க.

இவ்வுமன்றும் அவிப்பலி ; தருதிப்பலியென்பாருமுளர்; என்னை ? "நச்சிலைவேற் காளைக்கு நாளையே கொற்றவை, கைச்சிலையு நல்கும்யாங் காணேங் கொன்—மிச்சில்கூர், வாளின்வாய்த் தீண்டாத வார்குருதி மெய்சாய்ப்பத், தாளின்வாய் வீழ்த்தான் றலை" என வருமாதலின்.

வம்பலர் பல்கி.....பிறையுடன் சேர்த்துவாய்

(இ - ள்) சங்கரி, அந்தரி, நீலி, சடையாகிய மூடிமீதே பாம்பைப் பிறையோடேமுடித்தோய் ! வழிப்போவார்மிக்கு அவரை நலிந்துகொள்ளும் பொருளாகியவளம் வழிதோறுமுண்டாவதாக; அதற்கு விலையாக இப்பலிக்கடனே உண்பாயாவென்க.

துண்ணென் றுடியொடு..... ...இருந்தருள் செய்குவாய்

(இ - ள்.) தேவர்கள் அமுதத்தையுண்டும் சாவ ஒருவருமுண்ணுத நஞ்சையுண்டும் சாவாதிருந்தருள்கின்ற நீ கேட்டார் துட்கென்றிடத் துடிகொட்டு தலோடே பகைவர்துஞ்சுதலுற்றபொழுதில் ஊர்க்கொலைசெய்யும் கண்ணோட்டமில்லாதமறவர் நினக்கிடும் கடனுகிய இதனை உண்பாயாகவென்க.

பொருள்கொண்டு..... .....செய்குவாய்

(இ - ள்.) நின்மாமன்செய்த வஞ்சமாகிய மருதின்மீதேநடந்து அதனைச் சாய்த்து உருளுதலையுடைய சகடத்தையும் உதைத்தலைச்செய்யுந் வழிப்போவார்பொருளைக்கொண்டு அவர்க்குப் புண்ணைக்கொடுப்பினல்லது அவர்மாட்டு அருளுதல் சிறிதுமில்லாத எயினரிடும் கடனுகிய இதனை உண்பாயாகவென்க.

இவைமூன்றும் பலிக்கோடை.

மறைமுது முதல்வன்.....விறல்வெய் யோனே.

(இ - ள்.) முதியமறையையுண்டாக்கிய பிரமன்பின்னுளுகிய குறுமுனி பொருந்திய சந்தனம் அகில்முதலிய மரங்களாற் சுமைமிக்குயர்ந்த பொதியிற் பொருப்பனுகிய வெற்றியைவிரும்புபாண்டியன் பலகவருடைய முனையிடமும் அவர்மீட்குந்தொழிலும் பாழ்படும்படி வெட்சியைச் சூடுவாளுக வென்க.

[1]'துறை'என முற்கூறியவதனுல், கொற்றவைக்குப் பரவுக்கடம்பூண்டலும் கொள்ளப்படும்; என்னை? [2] வந்த நிரையி னிருப்பு மணியுட, னெந்தலை நின்றலை யாந்தருதல—மூந்துநீ, மற்றவை பெற்று வயவேந்தன் கோலோங்கக், கொற்றவை கொற்றங் கொடி."

இது, கூத்தாற்பேற்றபெயர்.

இது, பஃறழைசைக் கோச்சதக்கலிப்பா.

கஉ.—வேட்டுவவரி முற்றிற்று.


---

[1] இதனை நகo-ஆம் பக்கத்திற்காண்க.

[2] பெரும்பொருள் விளக்கம்; இது புறத்திரட்டிற்காண்டது.

பதின்மூன்றாவது

புறஞ்சேரியிறுத்தகாதை.



பெண்ணணி கோலம் பெயர்ந்தபிற் பாடு
புண்ணிய முதல்வி திருந்தடி பொருந்திக்
கடுங்கதிர் வேனிலிக் காரிகை பொருஅள்
படிந்தில சீறடி பரல்வெங் கானத்துக்

ரு. கோள்வ ளுளியமுங் * கொடும்புற் றகழா
[1] வாள்வரி வேங்கையு மான்கண மறலா
வரவுஞ் சூரு மிரைதேர் முதலையு
முருமுஞ் சார்ந்தவர்க் குறுகண் செய்யா
செங்கோற் † றென்னவர் காக்கு நாடென

கo. வெங்கணும் போகிய விசையோ பெரிதே
பகலொளி தன்னினும் பல்லுயி ரோம்பு
நிலவொளி ‡ விளக்கி னீளிடை மருங்கி
னிரவிடைக் கழிதற் கேத மில்லெனக்
குரவரு நேர்ந்த § கொள்கையி னமர்ந்து

கரு. கொடுங்கோல் வேந்தன் குடிகள் போலப்
படுங்கதி ரமையம் பார்த்திருந் தோர்க்குப்
பன்மீன் முணையொடு பாற்கதிர் பரப்பித்
தென்னவன் குலமுதற் செல்வன் முன்றித்
தாரகைக் கோவையுஞ் சந்தின் குழம்புஞ்

ரு. உளியம் - கரடி. கஉ. நீளிடை - காடு.

கச. குரவர் - கவுந்தியடிகள்.

கசு. படுங்கதிரமையம் பார்த்திருந்தாராக.

கசு. தாரகைக்கோவை - தாரகைபோலுங்கோவை; என்றது ஏகாவலி வடம்.

---

[1] "உருமு முரறு தரவுந் தப்பா, காட்டு மாவு முழுகண் செய்யா" பெரும் பாண். சஉ - ங.

(பி - ம்.) * 'கொம்புற்' † 'தென்னவன்காக்கு நாடென்றெங்கணும்' ‡ 'விளக்கு நீளிடை' § 'கொள்கையிருந்தழி'

உ0. சீரிள வனமுலை சேரா தொழியவுந்
தாதுசேர் கழுநீர்த் தண்பூம் பிணையல்
போதுசேர் பூங்குழற் பொருந்தா தொழியவும்
பைந்தளிர் ராரமொடு பல்பூங் குறுமுறி
செந்தளிர் மேனி சேரா தொழியவு

உஇ. மலயத் தோங்கி மதுரையின் வளர்ந்து
[1] புலவர் நாவிற் பொருந்தியா தென்றலொடு
பானிலா வெண்கதிர் பாவைமேற் சொரிய
வேனிற் றிங்களும் * வேண்டுதி யென்றே
பார்மக ளயா † வுயிர்த் தடங்கிய பின்ன

ஈ0. ராரிடை யுழந்த மாதரை நோக்கிக்
கொடுவரி மறுகுங் குடிஞை கூப்பிடு
மிடிதரு மூளியமு ‡ மினையா தேகெனத்
தொடிவளைச் செங்கை தோளிற் § காட்டி
[2] மறவுரை || நீத்த மாசறு கேள்வி

உ0. வனமுலைசேராதொழிய - வண்ணமுலையைச் சேராதொழியவென்க.

உஉ. பைந்தளிர் : தளிர், முதலுக்கு அடை.

உஈ - உச. தாரகைக்கோவை முதலான மூன்றுபகுதியும்.....[தன்மத் திடனே கொள்க.]

(கஅ)தோன்றிப்(உஎ)பாவைமேற்சொரியவென்றார், கதைசொல்லுகிறவர்.

நிலாவைச் சொரிந்தவளவிலே இவளுக்குப் பிரியமாகப் பண்டை வேனிற் காலமும் வேண்டுதியேயென்று மாதரைநோக்கிக்கூறினாள்; அன்றியும், சந்தனத்தளிரோடே அல்லாத தளிரும் மேனியைச்சேராதொழியவும்;.....இது முதுவேனிற்காலம்.

இவை இவை பெருந்தொழியவும் நிலவின்பசுங்கதிரும்தென்றலும் பாவை மேற்சொரியச்செல்வன்றேன்றப் பார்மகள் அயாவுயிர்த்து அடங்குகின்றாள் இவை இவ்வாறெழியவும் பானிலா வெண்கதிரைச்சொரிதற்குவேனிற்றிங்களும் விரும்புவதாயிற்றன்றேவென் றடங்கினளென்பதுங்கொள்க.

'தென்றலெடு' என்பது வேறுவினையொடு.

ஈக. மறுகும் - திரியும். குடிஞை - கோட்டான்; பேராந்தை.

ஈஎ - உ. உளியமும் இடிக்கும். மறுகும், கூப்பிடும், இடிதரும் முற்று.

ஈஏ. செங்கை தோளிற்காட்டி - அவள்கையைத் தன்றோளிலே சேர்த்தி.

ஈஐ - ரு. கேள்வியுறவுரை - கேள்வியையுடையாரது அறவுரை.

---

[1] உஇ - சு: நிலப்பதிகாரம், கஈ: ஈ0 - ஈக.

[2] ஈஐ - ரு: ,, கo: ஙசு - எ.

(பி 7 ம்.) * 'வேண்டியின்றே' † 'உயிர்ப்படங்கிய' ‡ 'இனையாது' § 'கொட்டி' || 'நீர்த்த'

நாடு. பறவுரை கேட்டாங் * காரிடை கழிந்து
† வேனல்வீற் றிருந்த வேய்கரி கானத்துக்
கான வாரணங் கதிர்வர வியம்ப
வரிநவில் ‡ கொள்கை மறைநூல் வழுக்கத்துப்
புரிநூன் மார்ப நுறைபதிச் சேர்ந்து

நாஅ. மாதவத் தாட்டியொடு காதலி தன்னையோர்
தீதுதீர் சிறப்பிற் சிறையகத் திருத்தி
யிடுமுள் வேலி நீங்கி யாங்கோர்
நெடுநெறி மருங்கி னீர்த்தலைப் படுவோன்
காதலி தன்னெடு § கானகம் போந்ததற்

நாடு. கூதலைக் குருகி னுயிர்த்தனன் கலங்கி
யுட்புலம் புறுதலி னுருவந் || திரியக்
கட்புல மயக்கத்துக் ¶ கௌசிகன் றெரியான்
கோவலன் பிரியக் கொடுந்துய ரெய்திய
மாமலர் நெடுங்கண் மாதவி போன்றிவ்

நூ0. வருந்திறல் வேனிற் கலர்களைந் துடனே
வருந்தினை போலுநீ மாதவி யென்றோர்
பாசிலைக் குருகின் பந்தரிற் பொருந்திக்

நூஎ. கானவாரணம் - காட்டுக்கோழி. நூஅ. வரி - பாட்டு.

நூஅ - நூ. மறைநூல் வழுக்கத்துப் புரிநூன்மார்பர் - அம்பணவர்; வழுக்கம் - தப்புதல்.

நாக. சேமமுள்ளதோரிடத்து இருத்தி.

நாஉ. இடுமுள்வேலி - சுற்றும் வேலியையுடைய இவர்களிருக்கிறவிடம்.

நாங. நீர்த்தலைப்படுகை - சுத்திபண்ணுகை.

நாஎ. கட்புலமயக்கத்து - கண்ணிற்பிரபையற்றதாதலால்; தன் அறிவு மயக்கத்தாலென்றுமாம். கவுசிகன் - கோசிககோத்திரத்தான்; பெயருமாம். இவன் மாதவி கடையாயினுனோரந்தணன்; தெரியான் - அவனே அல்லனே வென்று அயிர்த்து.

நூஉ. குருகு - குருக்கத்தி.

நாங - நூஉ. கோடையால் எழுந்தபூவெல்லாம் உதிர்ந்து பொலிவழிந்து நின்றதனைக்கண்டு மாதவியைப்போலப் பொலிவழிந்தனையென்று குருக்கத்தி நீழற்பொருந்தினன்; மாதவி - குருக்கத்தி.

(பி - ம்.) * 'ஆவிடை' † 'வேனில்' ‡ 'கொன்கையின்மறை' § 'கானம்' || 'திரிவாக்' ¶ 'கோசிகன்றெரியான்'

கோசிக மாணி கூறக் * கேட்டே
யாதுநீ கூறிய வுரையீ † திங்கெனத்
நடு. தீதிலன் கண்டே னெனச்சென் றெய்திக்
கோசிக மாணி கொள்கையி னுரைப்போ
[1] னிருநிதிக் கிழவனும் பெருமனைக் கிழத்தியு
மருமணி யிழந்த நாகம் போன்றது
மின்னுயி ரிழந்த யாக்கை யென்னத்
கூ0. துன்னிய சுற்றந் துயர்க்கடல் வீழ்ந்தது
மேவ லாளர் யாங்கணுஞ் ‡ சென்று
கோவலற் றேடிக் கொணர்கெனப் பெயர்ந்ததும்
பெருமக னேவ லல்ல § தியாங்கணு
மரசே தஞ்சமென் றருங்கா னடைந்த
கூடி. வருந்திறல் பிரிந்த வயோத்தி போலப்
பெரும்பெயர் மூதூர் பெரும்பே துற்றதும்
வசந்த || மாலைவாய் மாதவி கேட்டுப்
பசந்த ¶ மேனியள் படர்நோ யுற்று
நெடுநிலை மாடத் திடைநிலத் தாங்கோர்
எ0. படையமை சேக்கைப் பள்ளியுள் வீழ்ந்ததும்
வீழ்துய ருற்றோள் விழுமங் ** கேட்டுத்
தாழ்துய ரெய்தித் தான்சென் றிருந்தது
மிருந்துய ருற்றோ ளிணையடி தொழுதேன்
வருந்துயர் †† நீக்கென மலர்க்கையி னெழுதிக்

நடு. தீதிலன்கண்டேன் - கோவலனே இவன் கண்டேனென்று பொருந்தினன்; கண்டேனென்றவார்த்தையால் அயிர்த்து.

நஎ. (பா) பெருமனைக்கிழாள் - கோவலன் மாதா.

கூங. பெருமகன் - தயரதன்.

கூஎ. இவர்கள் பெயர்ந்தபடியை வசந்தமாலை சொல்லக்கேட்டு.

கூஅ. மேனியள் - மேனியையுடையளாய்.

எக. துயருற்றோள் - மாதவி. எஉ. தான் - கோசிகன்.

எங. இணையடி - கோசிகனது அடிகள்.

---

[1] நஎ - கூ0 = மணிமேகலை, எ: கஙக - ங.

(பி - ம்.) * 'கேட்டேன்யாது' † 'இன்னெனத்' ‡ 'போகிக்' § 'யாவது மரசே' || 'மாலைமாதவி' ¶ 'மேனியொடெட்' ** 'கண்டு' †† 'தீர்க்கென'

எடு கண்மணி யனையாற்குக் காட்டுக வென்றே
மண்ணுடை முடங்கன் மாதவி யீத்தது
* மீத்த வோலைகொண் டிடைநெறித் திரிந்து
தீத்திறம் புரிந்தோன் சென்ற தேயமும்
வழிமருங் கிருந்து மாசற வுரைத்தாங்

அ0. கழிகுடை யுள்ளத் தாரஞ ராட்டி
போதவிழ் புரிகுழற் பூங்கொடி நங்கை
மாதவி யோலை †மலர்க்கையி னீட்ட
கூடனுறை காலத் துரைத்தநெய் வாசங்
குறுநெறிக் கூந்தன் மண்பொறி யுணர்த்திக்

அடு. காட்டிய ‡தாதலிற் கைவிட லீயா
னேட்டகம் விரித்தாங் கெய்திய துணர்வோ
னடிகண் முன்னர் யானடி வீழ்ந்தேன்
வடியாக் கிளவி § மனக்கொளல் வேண்டுங்
குரவர்பணி யன்றியுங் குலப்பிறப் பாட்டியோ

கூ0. டிரவிடைக் || கழிதற் கென்பிழைப் பறியாது
[1] கையறு நெஞ்சங் கடியல் வேண்டும்
பொய்தீர் காட்சிப் புரையோய் போற்றி
யென்றவ ளெழுதிய விசைமொழி யுணர்ந்து
தன்றீ கிலளெனத் தளர்ச்சி நீங்கி

எசு. மண்ணுடைமுடங்கல் - இலச்சினையையுடைய.....

அங. கூடனுகாலத்துப் பூசின புழுகுநெய். இலச்சினையிடுவார்..... யாலிடுவதும் ஒருகுறி; நாற்றம் அறிவிக்குமாதலின்.

அச. கூந்தல் மண்பொறி - கூந்தலாலிட்ட இலாஞ்சனை.

அரு. நாற்றம் அறிவித்ததாதலால் தான் விடுகலையுய்.

அஅ. மனக்கொளல்வேண்டும் - திருவுளத்து அடைக்கவேண்டும்.

கூ0 - கூக. இரவிடைக்கழிதற்கு யான் செய்தகுற்றம் ஈதென்றறியாது நெஞ்சம் கையறுகின்றது; அதனைப் பொறுக்கவேண்டும்; இது மாதவிகருத்து. இனிப்பிரிதாவுக்கு, இரவிடைக்கழிதல் காரணமாக யான்செய்தகுற்றம் பாராது கையறுநெஞ்சம் கடியல்வேண்டுமென்க.

கூங. இசைமொழி - வாசகம்.

அசு - கூங. உணர்வோன் இசைமொழி யுணர்ந்தெனக்கூட்டுக.

---

[1] கூக - உ: இ - கொ. சூ. கூக - உரை, மேற்.

(பி - ம்.) * 'சீத்த' †'மலர்க்கைநீட்ட' ‡'காதலிற்' §'மனங்கொளல்' 'கழிதற்கியான்'

கூடி. யென்றீ தென்றே யெய்திய துணர்ந்தாங்
* கெற்பயந் தோற்கிம் மண்ணுடை முடங்கல்
பொற்புடைத் தாகப் பொருளுரை பொருந்தியது
மாசில் † குரவர் மலரடி தொழுதேன்
கோசிக மாணி ‡ காட்டெனக் கொடுத்து

கஂ. நடுக்கங் கழிந்தவர் நல்லகம் § பொருந்திய
விடுக்கண் கழிதற் கீண்டெனப் போக்கி
மாசில் கற்பின் மனைவியொ டிருந்த
வாசில் கொள்கை யறவிபா லணைந்தாங்
காடியல் || கொள்கை யந்தரி கோலம்

கஂடி. ¶ பாடும் பாணரிற் பாங்குறச் சேர்ந்து
செந்திறம் புரிந்த செங்கோட் டியாழிற்
றந்திரி கரத்தொடு திவவுறுத் ** தியாஅத்
தொற்றுறுப் புடைமையிற் பற்றுவழிச் சேர்த்தி
†† யுழைமுதற் கைக்கிளை யிறுவாய்க் கட்டி

கஂஂ. வரன்முறை வந்த மூவகைத் தானத்துப்
பாய்கலைப் பாவை பாடற் பாணி
யாசான் றிறத்தி னமைவரக் கேட்டுப்
பாடற் பாணி யளவி யவரொடு
கூடற் காவதங் கூறுமி னீரெனக்

கூடி. (பா) எய்தியதுரைத்தல் - தான்போந்தகாரணஞ்சொல்லுதல்.

கஂ. நடுக்கங்களைந்து - நீ நடுங்குகிற நடுக்கத்தைவிட்டு. அவர் நல்லகம் பொருந்திய - மாதாபிதாக்கள் இதயம் பொருந்தின.

கஂ. விதனம்களைதற்கு எழுவாயாகெனப்போக்கி.

கஂசு. அந்தரி - கொற்றவை. கஂடி. பாடும்பாணர் - அம்பணவர்.

கஂசூ. செங்கோட்டியாழ் - அம்பணவர்யாழ்.

கஂஅ. ஒற்றுறுப்பு - நரம்பினும் பத்திரினும் தாக்குவதோர் கருவி.

கஃஉ. ஆசான்றிறம் - காந்தாரம்; ஆசானென்று ஒருபண்ணிற்குப் பேராவும் இசைத்தமிழிற்கூறுப.

கஃகூ. பாணி - பாட்டு. (பா.) அளவி - கலந்து.

(பி - ம.) * 'ஏற்பயந்தார்க்கிம்' † 'குரவர் மாண்புடையினையடிக்கோகை' ‡ 'கொடுக்கெனக்கொடுத்து' § 'பொருந்தியவ்விடுக்கண்களைதற்கீண்டென்' 'கொள்கையின்' ¶ 'பாடுபாணரிற்பாங்குறப்பொருந்தி' ** 'யார்த்து' †† 'முன்முதற்'

கஙடு. காழகிற் சாந்தங் கமழ்பூங் குங்கும
நாவிக் குழம்பு நலங்கொ டேய்வை
மான்மதச் சாந்த மணங்கமழ் தெய்வத்
தேமென் கொழுஞ்சே றுடி யாங்குத்
தாதுசேர் கழுநீர் சண்பகக் கோதையொடு

கஉ0. மாதவி மல்லிகை [1] மௌவளர் மூல்லைப்
போதுவிரி தொடையற் பூவணை பொருந்தி
யட்டிற் புகையு * மகலங் காடி
முட்டாக் கூவியர் மோதகப் புகையு
மைந்தரு மகளிரு மாடத் தெடுத்த

கஉடு. வந்தீம் புகையு மாகுதிப் புகையும்
பல்வேறு பூம்புகை யளாஇ வெல்போர்
விளங்குபூண் மார்பிற் பாண்டியன் கோயிலி
னளந்துணர் வறியா வாருயிர் பிணிக்குங்
கலவைக் கூட்டங் காண்வரத் தோன்றிப்

கங0. புலவர் செந்நாப் பொருந்திய நிவப்பிற்
பொதியிற் றென்றல் போலா † தீங்கு
மதுரைத் தென்றல் வந்தது காணீர்
நனிசேய்த் தன்றவன் றிருமலி மூதூர்
[2] தனிநீர் கழியினுந் தகைக்குந ரில்லென

ககசு. தெய்வை - சந்தனக்குழம்பு. ககள. மான்மதம் - கத்தூரி.

ககஅ. இவையாகிய தேமென்கொழுஞ்சேறென்க; வாசம்பொருந்திய மெல்லிய அழகிய குழம்புகலந்து; ஆடி - களைந்து.

கஉ 0 - உக. இவையாகிய போதுவிரிதொடையல்.

கஉஉ - சு. ஆகிய பல்வேறு பூம்புகையளாஇயென்க.

கஉஅ. உணர்வறியா - உணர்வால் அறியா.

கஉசு. கலவைக்கூட்டம் - பரிமளக்கூட்டம்.

கஉஅ - கூ. அளத்தற்கரியகலவை வெளிப்படத்தோன்றி.

கஉசு - ஙஉ. தோன்றிவந்ததென்க. கஙச. நில்லென்பாரில்லை.

---

[1] "மௌரத், தெல்லுறுமௌவல்" (குறுந். ககஙு); "இல்லெழு மூல்லையொடு மல்லிகைமயங்கி" (பெரும். க. ஙசு: எசு.) [2] பெரும்பாணாற்றுப்படை, ஙக - சக. (பி - ம்.) * 'ஆலங்காடி' † 'சங்கோர்'

கஈடு. முன்னுண் முறைமையி னிருந்தவ முதல்வியொடு
*. பின்னையு மல்லிடைப் பெயர்ந்தனர் பெயர்ந்தாங்
கருந்தெறற் கடவு ளகன்பெருங் கோயிலும்
பெரும்பெயர் மன்னவன் பேரிசைக் கோயிலும்
பால்கெழு சிறப்பிற் பல்லியஞ் சிறந்த

கசo. காலை முரசக் கனைகுர † லோதையு
[1] நான்மறை யந்தணர் நவின்ற ‡ வோதையு
மாதவ ரோதி மலிந்த வோதையு
மீளா வென்றி வேந்தன் சிறப்பொடு
வாளோ ரெடுத்த நாளணி முழவமும்

கசடு. போரிற் கொண்ட பொருகரி முழக்கமும்
வாரிக் கொண்ட வயக்கரி முழக்கமும்
பணைநிலைப் புரவி யாலு மோதையுங்
[2] கிணைநிலைப் பொருநர் வைகறைப் பாணியுங்
கார்க்கட லொலியிற் கலிகெழு கூட

கஉo. லார்ப்பொலி யெதிர்கொள வாரஞர் நீங்கிக்
குரவமும் வகுளமுங் கோங்கமும் வேங்கையு
மரவமு நாகமுந் திலகமு மருதமுஞ்
சேடலுஞ் செருந்தியுஞ் செண்பக வோங்கலும்
பாடலந் தன்னொடு பன்மலர் விரிந்து

கஈடு. முன்னுண் முறைமையின்-நிலவிலே வைகறைக்காலத்தேபுறப்பட்டு.

கஈஎ. (பா.) அருந்திறற்கடவுள் - ஆலவாயான்முதலிய தெய்வங்கள்.

கசo. காலைமுரசம் - பள்ளியெழுச்சி முரசு.

கசக. முனிவர் [3] சத்திர மோதுகிற வோசை.

கசஉ. .....இருடிகளுடைய சிறுகாலை அனுட்டானவோசை.

கசஈ - சு. வேந்தன்சிறப்புடையராய் வாளோரெடுத்தமுழவு ; வாளோர் - வீரர்; வீரர்க்கு அரசன் வரிசையாகக் கொடுத்தமுழவு.

கசஎ. பணை - பந்தி. கசஅ. பொருநர் - வைகறைபாடுவார்.

கசo - உo. ஆகிய ஆர்ப்பொலி.

கஉஉ. திலகம் - மஞ்சாடிமரம்.

கஉக - சு. மரவமுதலியன கோட்டுப்பூ.

---

[1] பரி. பக். கஎஇ: "நான்மறை" [2] பு - வெ. பாடாண். கஅ.

[3] சத்திரம் - யசுர்வேதசாகையில் அருணத்தில் ஐந்தாம்பிரிவு, கo அ.

(பி - ம்.) * 'பின்னரும்' † 'ஓசையும்' ‡ 'ஓசையொடு'

கரூடு. குருகுந் தளவமுங் கொழுங்கொடி முசுண்டையும்
விரிமல ரதிரலும் வெண்கூ தாளமுங்
குடசமும் வெதிரமுங் கொழுங்கொடிப் பகன்றையும்
பிடவமு மயிலையும் பிணங்கரின் மணந்த
கொடுங்கரை மேகலைக் கோவை யாங்கணு

கசூo. மிடைந்துசூழ் போகிய வகன்றேந் தல்குல்
வாலுகங் குவைஇய மலர்ப்பூந் துருத்திப்
பால்புடைக் கொண்டு பன்மல ரோங்கி
யெதிரெதிர் விளங்கிய கதிரிள வனமுலை
கரைகின் றுதிர்த்த கவிரிதழ்ச் செவ்வா

கசூடு. * யருவி முல்லை யணிநகை யாட்டி
விலங்குமிமிர்ந் தொழுகிய கருங்கய னெடுங்கண்
விரைமலர் நீங்கா வவிரறற் கூந்த
† லுலகுபுரந் தூட்டு முயர்பே ரொழுக்கத்துப்
புலவர் நாவிற் பொருந்திய பூங்கொடி

கரூசு. அதிரல் - காட்டுமல்லிகை. கூதாளம் - கூதாளி, தாளி, நறுந்தாளி.

கரூஎ. குடசம் - வெட்பாலை. கரூஅ. மயிலை - கொடிமல்லிகை.

(கரூச) பன்மலர்விரிந்து (கரூக) கோவை யாங்கணும் (கசூo) சூழ்போகிய அகன்றேந்திய (கரூக) கொடுங்கரையாகிய (கசூo) அல்குல்.

கரூக - சூo. வேனிற்பூ அன்றியும், இப்பிணங்கரின்மணந்த மேகலைக் கோவை சூழ்போகிய கரையாகிய அல்குல்.

கசூக - கூ. துருத்தியாகிய முலை; பால்புடைக்கொண்டு பன்மலரோங்கி எதிரெதிர்விலங்கிய வாலுகங்குவைஇய மலர்ப்பூந்துருத்தியாகிய கதிரிளமுலை. *பக்கம்புடைக்கொண்டு மலரோங்கி ஒன்றையொன்று நெருங்குகின்ற துருத்தி.

பால்புடைகொள்ளுகையும் பன்மலரோங்குகையும் ஒன்றையொன்று நெருங்குகையும் முலைக்குமொக்கும்; பால்புடைக்கொண்டு பன்மலரோங்கி எதிரெதிர் (பா.) விலங்கியவென்பதனை இரண்டிற்குமேற்கவுரைக்க. பால்புடைக் கோடல் - சுற்றுப்புடை கொள்ளுதல்.

கசூஉ. பன்மரமோங்கியெனவும் பாடம்.

கசூச. கவிர் - முருக்கு; மதிலுக்குப் புறமாதலால்.

கரூக - எகூ. கொடுங்கரையாகிய அல்குலையும் துருத்தியாகிய முலையினையும் கவிராகிய வாயையும் முல்லையாகிய நகையையும் கயலாகிய கண்ணையும்

(பி - மி.) * 'அரும்பவிழ்முல்லை' † 'உலகுபுரிந்து'

களo. வையை * யென்ற பொய்யாக் குலக்கொடி
தையற் குறுவது தானறிந் தனள்போற்
புண்ணிய நறுமல ராடை போர்த்துக்
கண்ணிறை நெடுநீர் கரந்தன ளடக்கிப்
† புனல்யா றன்றிது பூம்புனல் யாறென
களரு. வனநடை மாதரு மையனுந் தொழுது
பரிமுக வம்பியுங் கரிமுக வம்பியு
மரிமுக வம்பியு மருந்துறை யியக்கும்
பெருந்துறை மருங்கிற் ‡ பெயரா தாங்கண்
மாதவத் தாட்டியொடு மரப்புணை போகித்
கஅo. தேமலர் நறும்பொழிற் றென்கரை யெய்தி
வானவ ருறையு மதுரை வலங்கொளத்
தானனி பெரிதுந் தகவுடைத் § தென்றூங்
கருமிளை யுடுத்த வகழிசூழ் போகிக்
கருநெடுங் குவளையு மாம்பலுங் கமலமுந்
கஅரு. தையலுங் கணவனுந் தனித்துறு துயர
மைய ‖ மின்றி யறிந்தன போலப்
பண்ணீர் வண்டு ¶ பரிந்தினந் தெங்கிக்
கண்ணீர் கொண்டு காலுற நடுங்கப்
போருழுந் தெடுத்த வாரெயி னெடுங்கொடி

அறலாகிய கூந்தலையுமுடைய வையையென்னுமகள் மலராகிய ஆடையை முட்டாக்கிட்டு.

களக. கண்ணிறைநெடுநீரடக்கி - கண்ணிடத்து நிறைந்த நெடுநீரை யடக்கி; இடம்நிறைந்த மிக்கநீரையடக்கி; கண்ணீரென்றுந்தெரிவது.

களச. இது நீராறன்று பூவாறு. களள. அரிமுகவம்பி - சிங்கமுகவோடம்.

களள - அ. இயக்குந்துறை - நீருள்ளகாலத்து ஓடம்விடுந்துறை.

களக. மரப்புணை - கட்டுப்புணையில்; ஓடத்திற் பலருமேறுவாராதலால் தாங்கள்மூவரும் தனியே மரப்புணையிலே போனரெனக்கொள்க.

கஅஅ. கள்நீர்கொண்டு - கள்ளாகிய நீரைக்கொண்டு.

(பி - ம்.) * 'என்னும்' † 'புனலாறன்றிது பூம்புனலாறெ' ‡ 'பேராது' § 'என்றேயருமிளை' ‖ 'அன்றி' ¶ 'பரிந்துணைந்து'

கஙூ. * வாரலென் பனபோன் மறித்துக்கை காட்டப்
புள்ளணி கழனியும் பொழிலும் பொருந்தி
வெள்ளநீர்ப் பண்ணையும் விரிநீ ரோரியுங்
காய்க்குலத் தெங்கும் வாழையுங் கமுகும்
வேய்த்திரட் † பந்தரும் விளங்கிய விருக்கை

கஙூஙி. [1] யறம்புரி ‡ மாந்த ரன்றிச் சேராப்
புறஞ்சிறை மூதூர் புக்கனர் புரிந்தென்.

கஅசு - கூ. ஓரெயில் நெடுங்கொடி மேல்காற்றடிக்க அசைகின்றவை, வாராதேயென்பனபோல மறித்துக் கைகாட்ட; கோவலனை இங்குவாராதே போவென்று கைகாட்டினற் போன்றன.

(கஅஉ) தகவுடைத்தென்று (கஅங) சூழ்ந்த அகழைப்போகிப் (கஙூசு) புக்காரென்க.

கஙூசு. புறஞ்சிறை - புறஞ்சேரி. புறஞ்சிறைமூதூர் - புறத்தமூதூர்.

அவ்விடத்தில் இருடிகள் யோகமிருக்கும் பொழில்முதலியவற்றுல் விளங்கிய இருக்கையிலே சென்றுபுக்கனர்.

---

[1] கஙூஙி - சூ=சிலப். கஙி: ள - அ; கஙஙி - சூ.

* 'வாரலென்பது போன்மறித்துகைகாட்டிப்' † 'பத்திரும்' ‡ 'மாதவரன்றி'

க. பெண்ணணி கோலம் பெயர்ந்தபிற் பாடு :—(இ - ள்.) முற் கூறிய சாலினியாகிய பெண் அணிந்தகோல்மும் கூத்தும் முடிந்தபின்னை யென்க.

பிற்பாடு, ஒருசொல். கோலமெனவே கூத்தும் அடங்கிற்று.

உ. புண்ணிய முதல்வி திருந்தடி பொருந்தி :—(இ - ள்.) தவத் திற்கு முதல்வியாகிய கவுந்தியடிகளுடைய திருந்திய அடியைச்சென்று சேர்ந் தென்க.

ஈ - ச. கடுங்கதிர் வேனில்.....கானத்து

(இ - ள்.) இவ்வழகு நீர்மையையுடையாள் இந்தக் கடிய கதிரின்வெம் மையைத் தன் மெய்யிற்படப்பொருள்; அதுவுமன்றி இவள் சிற்றடியும் வெய்ய பருக்கையையுடைய இப்பாலைநெறியிற் படிந்திலவென்க.

உள்ளடி கொப்புளித்தலிற் குஞ்சித்து நடந்தமை கூறினான்.

நி - சு. கோள்வ லுளியமும்.....மான்கண மறலா

(இ - ள்.) நேரிட்டாரைக் கைக்கொள்ளுதற்குவலிய கரடியும் தாம் அக ழக்கடவபுற்றினை அகழா ; ஒளிபொருந்திய வரியையுடைய புலியும் தாம் மாறுபடக்கடவ மானினத்தோடு மாறுபடாவென்க.

பாம்புறைதலிற் கொடும்புற்றென்றார்.

எ - கo. அரவுஞ் சூரும்.....இசையோ பெரிதே

(இ - ள்.) முற்கூறியவையன்றி, இரைதேருமுதலியும் பாம்பும் சூரும் உருமும் ஆகிய இவை தம்மைநலிந்தவர்க்கு வருத்தஞ்செய்யத் தகுவனவாயி னும் செய்யா ; செங்கோன்மையையுடையதென்னர் ஆணையாற்காக்கு நாடெ ன்று திசையெங்கும் பரந்த இசை மிகப் பெரிது ; ஆகலானென்க.

இவற்றுள், இவனுணையும் ஐவகைநிலத்திற்குரிமையுங்கூறினார். ஐவகை நிலனென்பது எவற்றுற்பெறுதுமெனின்,—கானமென்பதனால் முல்லையும்,சூர் கரடியென்பவற்றுற் குறிஞ்சியும், வேங்கையென்பதனாற் பாலையும், உருமுவென் பதனால் மருதமும், முதலையென்பதனால் நெய்தலும் பெறுதும். இவ்வகையான் இவனுட்டு இக்காலத்துவருத்துவது இவ்வெயிலொன்றுமேயென்பதாயிற்று.

கக - ச. பகலொளி தண்ணினும்.....கொள்கையி னமர்ந்து

(இ - ள்.) அங்ஙனம் வருத்தும் பகற்கதிர்விளக்கத்தினும் பல்லுயிர்க்கும் அருள்செய்யும் இராக்கதிர்விளக்கத்தோடே நெடிய வழியிடையைக் கழிதற்கு வரும் ஏதப்பாடு ஒன்றுமில்லையென்று கோவலன்சொல்லக் கவுந்தியடிகளும் ஒக்குமென்று உடன்பட்ட கோட்பாட்டோடேமேவியென்க.

கஙி - சு. கொடுங்கோல் வேந்தன்.....பார்த்திருந் தோர்க்கு

(இ - ள்.) கொடுங்கோன்மையையுடைய வேந்தன்குடிகள் அவன்போம் காலத்தையும் தண்ணளிவேந்தன் வருங்காலத்தையும் நோக்கியிருக்குமா று

போல வெங்கதிர் படுமமயத்தையும் தண்கதிர் எழுமமயத்தையும் பார்த்திருந்த இவர்கட்கென்க.

கள - அ. பன்மீன் நுனையொடு.....செல்வன் றோன்றி

(இ - ள்.) [1] அத்தென்னவன் குலத்திற்கு முதல்வனுகிய திங்கட்செல்வன் பலவகைப்பட்ட மீன்நுனையுடனே தண்ணளிப்பகுதியவாகிய கதிர்களைப்பரப்பித் தோன்றவென்க.

தோன்றி - தோன்ற. மீன்நுனை - கயற்கொடித்தானையுமாம்.

கஙூ - உஙூ. தாரகைக் கோவையும்.....அடங்கிய பின்னர்

வேண்டுதி, முன்னிலவினை.

(இ - ள்.) பார்மகள், பாவாய், முன்னுள் நின்கொழுநன் நின்னைப்பிரிந்த இளவேனிற்காலத்தில், வான்மீனெழுங்குபோன்ற முத்துவடமும் சந்தனக் குழம்பும் சீர்மைபொருந்திய அழகிய இளையமூலைகளைச் சேரப்பெறுவாய் ஒழியவும், பலவகைப்பூந்தாதும் கமழுநீர்ப்பினையலும் முல்லைமலர்பற்றறுத பூங்குழலிற் பொருந்தாவாயொழியவும், அழகிய சந்தனத்தளிரோடே பலபூக்களினிதமும் சிவந்த தளிர்போலும் மேனியைச் சேரப்பெறுவாயொழியவும், மலயத்தே மூன்றாத மதுரையிலேவளர்ந்து புலவர்நாவிலேபூத்து நிலைபெற்ற தென்றலோடே வெள்ளிய ஒளியையுடைய திங்களின்கதிர் நின்மெய்யிற் சொரிதலொழியவும்வேண்டி இப்பொழுது வேனிற்றிங்கள் இவ்வெண்கதிரை நின்மெய்யிற் சொரியவும் விரும்பியிருப்பையே; இராயெனச்சொல்லி வருந்தி நெட்டுயிர்ப்புக்கொண்டு அவள் துயின்றபினென்க.

ஏகாரம், எதிர்மறை. சிலசொற்கள்வருவிக்க. இத்துணையும் இவள் புணர்ச்சியின்பம் பெருமைநோக்கிப் பார்மகள் இரங்கிக்கூறினுள். என்னை புணர்ச்சியில்லாதவாறெனின்,—மாதவியோடு புலந்துபோதலானும், மதுரைக்குச்சேறற்கு ஒருப்பட்ட நெஞ்சினளுதலானும், மேற் கவுந்தியடிகளுடன் வழிச்சேறலானும் யாண்டும் மெய்யுறன்மாத்திரமல்லது புணர்ச்சியில்லெனவுணர்க.

ஙூ - ஙூ. ஆரிடை யுழுந்த.....இனையா தேகென

(இ - ள்.) கோவலன் அரியவழியிடைத் துயருழந்த கண்ணகியைநோக்கி, இவ்விரவில் நாஞ்செல்கின்றகெறியிடைப் புலிமறுகும்; பேராந்தை குழறும்; காடி இடிக்கும்; இவற்றிற்குத் துணுக்கென்னுது எகுவாயாகவென்றென்க.

மறுகும் - வாய்விடும்; குறுக்கிடுமெனினுமமையும். இடிப்பு - அதிர்ப்பு; உற்றட்ட டட்டெனப் பற்பறைகொட்டல்.

ஙூ - நி. தொடிவளை.....ஆரிடை கழிந்து

(இ - ள்.) அங்ஙனங்கூறியகோவலன் இவட்குக் கண்துயில் மயங்குதலானும் குஞ்சித்துத் தளர்ந்துடத்தலானும் வளைவையுடைய வளைபொருந்திய செங்கைக்குத் தன்றோள் ஆதாரமாதலை அங்ஙனங்கூறிக்காட்டி இவள்மனத்

[1] சிலப்பதிகாரம். சு: உ.

அயரநீங்குதற்பொருட்டு [1] மறவுரைகளினின்றுநீங்கிய மாசற்ற கேள்வியை யுடையாள்கூறும் அறவுரைகளைக்கேட்டு அதனுனே தொலைத்தற்கரிய வழியைத் தொலைத்தனக.

தொடி - வளை ; [2] "தொடிக்கட் பூவை" என்றுராகலின். 'கேள்வி' என் றூர், அதனையுடைய கவுந்தியடிகளை; ஆகுபெயர்.

நசு - எ. வேனல்வீற் றிருந்த.....கதிர்வர வியம்ப

(இ - ள்.) வேனல் நிலைபெறுதலாலே வெந்துகரிந்துகிடக்கின்ற மூங்கிற் காட்டிலே கரட்டுக்கோழிச்சேவல்கள் கதிரெழுச்சியை அறிவிக்கவென்க.

ஆனித்திங்கட் கடைநாளாகலின், 'வீற்றிருந்த' என்றார்.

நஅ - கூ. வரிநவில்.....பதிச் சேர்ந்து

(இ - ள்.) நாவால் மறைநூல்நவிலாது வரிப்பாட்டைநவிலும் கோட்பாட் டையுடைய நூலணிமார்பருறைவதோர் பதியைச்சேர்ந்தனக.

புக்கென்னுது சேர்ந்தென்றதனுல், [3] அந்தப்பார்ப்பார் இழுக்கியவொழுக்க மூடைமை தமது சாவகநோன்புக்கேலாமையின், ஊர்க்கயலதோர் நகரிற் கோயிற்பக்கத்தில் சேர்ந்தாரென்க.

சஎ - சநூ. மாதவத் தாட்டியொடு.....நீர்தலைப் படுவோன்

(இ - ள்.) அந்தப் புலரிக்காலத்தே கவுந்தியடிகளுடனே கண்ணிஞையையும் ஓரொதுக்கமானிய நல்ல அடைப்பகத்தேவைத்து அவ்வேலியில் இடுமுள் ளொன்றைப்பிரித்து அதனைநீங்கிக் காலைக்கடன்கழித்தற்கு நீணெறிக்கண்ணை தோர் நீர்நிலைக்கண் தலைப்படுகின்றவனென்க.

நெடுநெறி - பெருவழி.

சச - எ. காதலி தன்னொடு.....கௌசிகன் றெரியான்

(இ - ள்.) அங்ஙனம் சென்றுநின்ற கோவலன், தன் காதலியோடு கான கத்தின்கட்போந்ததற்கு உலையிலூதுந்துருத்திபோல நெட்டுயிர்த்து உள் வெதும்பிக் கலங்கித் தனிமையுற்று நிறம்வேறுபடுதலாற் கௌசிகன் கட்புல மயக்கத்தான் அறியானுயென்க.

உலக்குருகு, வெளிப்படை.

சஅ - நிநூ. கோவலன் பிரிய.....கூறக் கேட்டே

(இ - ள்.) அங்ஙனம் அவன் நிறம்வேறுபடுதலானும் தான் சேய்மைக் கணிற்றலானும் ஐயுற்று அவ்வையந்தீர்வான் கோவலன்பிரிவிற்காற்றுது காமத் தீயால் துயரமுற்று அலரைப்பொறுது அப்பொழுதேவருந்தின்ற மாதவி யைப்போன்று நீயும் இளவேனினீங்க அப்பொழுதே அதற்காற்றுது பொறுத் தற்கரிய வெம்மையையுடைய முதுவேனிற்காலத்துவெயிலால் துயரமுற்று அலரைப்பொறுது களைந்து அக்காலவணிமையோடேவருந்தினுய்; மாதவியென்

[1] அறநெறி. ககச. [2] சீவகசிந்தாமணி, நூகூ. [3] திருக்குறள், ககக.

னும் பெயர்வாசிக்கோவென்று ஓர்பசிய இலையையுடைய குருக்கத்திபடர்ந்த நிழலையுடைய இடத்திலே சென்றுநின்று அக்கோசிகனென்கிற மறையவன் கூறக்கேட்டென்க.

கோசிகன் - * பந்திகோசிகன். 'பாசிலை' என்றார், இளவேனிற்கட் செந்தளிராயது முதுவேனிற்கு முற்றிப் பாசிலையாயிற்றென்பதுதோன்ற.

நிசு - நி. யாதுநீ கூறிய வுரை.....சென்றெய்தி

(இ - ள்.) இங்ஙனம் கோசிகன்கூறக்கேட்டகோவலன் நீ இங்குக்கூறிய இக்கூற்றிற்குப் பொருள்யாதென அசதியாட, இனி ஐயமுடையேனல்லேன், கோவலனெனவறிந்தேனென உட்கொண்டு சென்றுசேர்ந்தென்க.

நிசு. கோசிக மாணி கொள்கையி னுரைப்போன்—(இ - ள்.) கோசிகன் தான்வந்த கருமக்கோட்பாட்டினைக் கூறுகின்றவன்,

நிஎ - அ. இருநிதிக் கிழவனும்.....நாகம் போன்றதும்

(இ - ள்.) இருநிதிக்கிழவனும் அவன்மனைக்கிழத்தியும் அரிய மணியையிழந்த நாகம்போல அழகும் ஒளியுமிழந்து ஒடுங்கியதும்,

நிகூ - சுஎ. இன்னுயி ரிழந்த.....வீழ்ந்ததும்

(இ - ள்.) நெருங்கியகிளைஞர் இனியவுயிரையிழந்த யாக்கைபோலச் செயன்மாண்டு துயர்க்கடலிலேயழுந்துகின்றதும்,

இனி யாக்கையிழந்த இன்னுயிரெனமாறி வீடுபெறற்குரியவுயிர் இளமைக் காலத்தே யாக்கையையிழத்தலில் தவஞ்செய்யப்பெறாது பிறவிக்கடலகத் தழுந்துமாறுபோல வெனவுமாம்.

சுக - உ. ஏவ லாளர்.....பெயர்ந்ததும்

(இ - ள்.) இருநிதிக்கிழவன் தன்சிலதரை நோக்கி எத்திசைக்கண்ணுஞ் சென்று கோவலனைத்தேடிக் கொண்டுவருகவென்றலுக அவர் எத்திசைகளி லுஞ்சென்றதும்,

'போந்ததும்' பாடமாயின், இத்திசையினும் சிலர்போந்ததுவுமென்க.

சுஙூ - சு. பெருமக னேவல்.....பெரும்பே துற்றதும்

(இ - ள்.) எத்துணைச் சிறுதொழிலாயினும் பெருமகனேவிய பணிவிடையைச்செய்தலே அரியபொருளாதலல்லது பணிவிடையன்றுயின் அரசாட்சி என்றும் எண்மைப்பொருட்டாமென்று கருதி அடைதற்கரிய வெங்கானிலே சென்றடைந்த இராமன் நீங்கப்பட்ட அயோத்தியின்கணுள்ளார் செயலற்று மயங்கினாற்போலப் பெரிய புகழையுடைய புகாரின்கணுள்ளார் யாவரும் மிகவும் அறிவுமயங்கியசெய்தியும்,

பெருமகன் - தசரதன். தஞ்சம் - எண்மை. அருந்திறல் - இராமன்; அன்மொழித்தொகையாகுபெயர். பேதுறவு - அறிவின்றிரிவு.

(பி - ம்.) * 'பந்தகௌசிகன்'

சுஎ - எ0. வசந்த மாலைவாய்.....பள்ளியுள் வீழ்ந்ததும்

(இ - ள்.) திருமுகத்தை மறுத்துக்கூறியமாற்றத்தை வசந்தமாலைவாய்க் கேட்டுப் பசந்தமேனியளாய் நினைவாகிய வருத்தமுற்று உயர்ந்த எழுநிலத்தையுடைய மாடத்து நாலாநிலத்து ஓர்படுக்கையமைந்த சேக்கையிடத்தே மாதவி மயங்கி வீழ்ந்தசெய்தியும்,

ஆங்கு, அசை. பள்ளி - இடம்.

எக - உ. வீழ்துயருற்றோள்.....இருந்ததும்

(இ - ள்.) அங்ஙனம் விரகநோயுற்றவள் இடும்பையைக்கேட்டுச் செருக்கடங்கித் தாழ்ந்த துயரமெய்தித் தான் சென்றிருந்தசெய்தியும்,

வீழ்துயர் - விருப்பத்தான்வருந்துயர்.

எங - சு. இருந்துய ருற்றோள்.....மாதவி யீத்ததும்

(இ - ள்.) அங்ஙனம் மிக்கதுயரமுற்ற மாதவி, நின்னினையடியைத்தொழுதேன்; எனக்கு இங்ஙனம்வருந்துயரைத் தீர்ப்பாயாகெனச்சொல்லித் தன்கையாலெழுதி இவ்வோலையை என்கண்ணிற் கருமணிபோல்வாளுக்குக் காட்டுவாயாகவென்று தன்கையிற்றந்தசெய்தியும்,

இது தன்மைக்கண் தரலாய் வந்தது.

எச - அ. ஈத்த. வோலைகொண்டு.....சென்ற தேயமும்

(இ-ள்.) அங்ஙனந்தந்த ஓலையைக்கொண்டு இடைநெறியெங்கும் திரிந்து தேடியுங்காணுமற் முன்சென்றதேயங்களும்,

எக - அஉ. வழிமருங் கிருந்து.....மலர்க்கையி னீட்ட

(இ - ள்.) முற்கூறிய நெடுநெறியாகிய வழிப்பக்கத்தேயிருந்து செய்திகளெல்லாம் ஒழிவற வுரைத்தபின்பாக அழிதலைத்தருகின்ற உள்ளத்தையும் நிறைந்த காமநோயையுமுடையாளாகிய போது அவிழப்பட்ட புரிந்த குழலையுடைய மாதவிதந்த வோலையைக் கோவலன்கையிலே கொடுத்தானுக;

போதவிழ், குழலுக்கு அடை.

அங - சு. உடனுணை காலத்து.....உணர்வோன்

உணர்வோன், தொழிற்பெயர்.

(இ - ள்.) அங்ஙனங்கொடுத்த ஓலைமடிப்புறத்துமண்மேல் மாதவி குறுநெறிக்கூந்தலாலொற்றியபொறி தன்னுடனே கூடியுறைகின்றகாலத்தே வாசநெய்யுரைத்த தன்மையைத் தனக்கு உணர்த்திக்காட்டியதாதலான் அதனைக் கையாற் கடிதின் விடுவியானுப்பின்னர் விடுவித்து ஏட்டை விரித்து அதனுட்கிடந்த வாசகத்தின் பொருண்மையுணர்கின்றவனென்க.

குறுநெறி - செறிந்த அறல். வாசனையின் செவ்வியின்மையைப் பொறிகாட்டிற்றெனவுமாம். கூந்தற்பொறியென்க. உரைத்தல் - பூசுதல். கைவிடலியான் - மெய்ம்மறந்தும் ஓலைத்தலையை நெகிழவிட்டிலனென்னுமாம்.

எழுதியதூஉம், பாடம்.

அஎ. அடிகண் முன்னர் யானடி வீழ்ந்தேன்

அடித்தலத்தில்வீழ்தல் - வணக்கம்.

(இ - ள்.) தேவரீர்திருவடிகளைத் திக்குநோக்கித் தண்டம்பண்ணினேன்; இதனைத் திருவுளத்திலே கண்டருள்க;

கண்டருள்கவென இவ்விடத்து ஒருசொல்வருவிக்க. இஃது ஓலிமுகப் பாசுரம். இனி அக்காரிகைபாசுரம்.

அஅ - கூஉ. வடியாக் கிளவி.....புரையோய் போற்றி

(இ - ள்.) வடிமொழியுணர்ந்து குற்றந்தீர்ந்த நற்காட்சியையுடைய உயர்ந்தோனே, இருமுதுகுரவர் பணிவிடையொழிந்ததன்மேலும் குலத்திற் பிறந்து கற்பையாளுதலுடையவளுடனே இரவின்கண் நகரிடையைக் கழிந்து போதற்கு வந்த பிழைப்பெண்ணே? அஃது அறியாது என்பிழைப்போவென்று அவலித்து அரற்றிக்கவலித்துக் கையாற்றின்கண் நெஞ்சழுங்காநின்றது; என் பிழைப்பெனினும் மகளிர்சொல் குற்றமறுதலென்று திருவுளம்பற்றல் வேண்டும்; இதுவேயுமன்றி எனக்கு இப்பொழுதுநடக்கின்ற இச்செயலறவு நன்றன்று; அதனைக்கடியல்வேண்டும்; ஆதலால் இவ்வாற்றான் நினக்கு ஓர் புகழ்க்குறைபாடின்றுகப் போற்றுவாயாக.

முன்னர், [1] "கங்கை தன்னீப்புணர்ந்தாலும்" எனவும், [2] "மங்கைமாதர் பெருங்கற்பு" எனவும் ஆண்டுக் கூறினமையின், ஈண்டுக் குலப்பிறப்பாட்டி யெனத்தோற்றுவாய்செய்து தன்பிழைப்பின்மைகூறினள். இதுவன்றியும், இருவரிருமுதுகுரவரும் ஏவலாளர் மேவலகூறின் இறந்துபடுவரென்பதூஉம், தேசுடைக்குலத்திற்கு மாசுவருமென்பதூஉம், தானிறந்துபடிற் சிறிதுபுகழே குறைபடுமென்பதூஉம் உணர்த்தியவாறுயிற்று.

கூஉ - ரு. என்றவ ளெழுதிய... .....என்றீ தென்றே

(இ - ள்.) இவ்வாறு பலவகை ஏதம்பயக்குமென்று அவளெழுதிய ஓலிப் பாசுரத்திற் பொருளெல்லாமுணர்ந்து மனங்குழைந்து அவள் தன்னுற்செய் யப்பட்ட தீதிலள்; இஃது என்னுற்செய்யப்பட்ட தீதேயெனத்தெளிந்து தளர்ச்சிநீங்கியென்க.

என்தீது - என்றீவினை.

கூரு - எ. எய்திய துணர்ந்தாங்கு.....பொருந்தியது

(இ - ள்.) அவ்வோலியிற்பொருந்திய வாசகத்தையுணர்ந்து இவ்வோலை தானே என்றந்தைக்கும் பொலிவுடைத்தாம்படி வாசகங்களும் பொருளும் பொருந்திற்று;

அஃது எங்ஙனம் பொருந்திற்றெனின், அடிவீழ்ந்தேனென்னுந்துணையும் முற்கூறியவாறேகொள்க. [3] 'வடியா... .....போற்றி' எனவர்பணி விடைகளைத்தவிர்ந்ததொருதவறன்றியும் குலத்திற்பிறந்தாளோடு இரவிடைக்

---

[1], [2] சிலப், எ: உ. [3] சிலப், கக: அஅ - கூஉ.

கழிந்த தவறு ஒன்று; இவையிரண்டிற்கும் வரக்கடவதுன்பங்காரணமாகத் திருவுளத்திற் தளர்ச்சி சிறிதுண்டாயினும் அதனைக் கடிந்தருளுக; இங்ஙனம் என்பிழைப்பறியாது யான் முதுக்குறைவாகச்சொல்லிய இவற்றை எருவின் ணப்பமாகத் திருவுளம்பற்றுதொழிக; பேதைமைச்சொல்லென்றே திருவுளம் பற்றல்வேண்டும்; போற்றியென்றனென்க.

[1] குரவர்க்குக் காப்புக்களைக்குறித்துப் போற்றியென்றன்மரபு. ஈண்டு இவ்வோலை குரவர்க்குப் பொருந்தியவாறுணர்க.

கஅ - கo. மாசில் குரவர்.....ஈண்டெனப் போக்கி

(இ - ள்.) அங்ஙனம் பொருந்தியதென உட்கொண்டகோவலன், கோசிக மாணி, எங்குரவர் மாசில்மலரடியைத் திசைநோக்கித் தொழுதேனெனச் சொல்லி இவ்வோலையைக் காட்டெனக்கொடுத்து, என்பொருட்டாக அவர் நடுங்குநடுக்கத்தைக் களைந்து அகத்தினிகழ்கின்ற இடுக்கணும் நீக்குதற்கு விரைந்துசெல்வாயாகவெனப் போகவிட்டனென்க.

ஈண்டுதல் - விரைதல். காட்டெனக்கொடுத்துக் களைதற்கீண்டெனப் போக்கியென்க. எனச்சொல்லியென்று ஒருசொல்வருவிக்க.

கoஉ - கூ. மாசில் கற்பின்.....அறவிபா லணைந்து

(இ - ள்.) குற்றமற்ற கற்பினையுடைய தன்மனைவியுடனிருந்த குற்றமற்ற கோட்பாட்டையுடைய கவுந்தியடிகளிருக்கின்ற இடத்தைச்சேர்ந்தனென்க.

ஒடி, ஒருவினையொடு; உயர்பின்றியதன்வழிக்கண் நின்றது.

கoஙூ - ஙூ. ஆங்கு.....பாங்குறச் சேர்ந்து

(இ - ள்.) அவ்விடத்துத் தர்க்கையது வெற்றிபொருந்திய அசுரரோடு பொருதபோர்க்கோலத்தைப்பாடும் பாட்டாண்மையையுடைய அம்பணவரில் தானுமொருவனுகக் கலந்தனென்க.

[2] "பாண ரொக்கல்" என்றார். ஆடி - வெற்றி. பாண் - பாட்டு.

கoசு. செந்திறம் புரிந்த—(இ - ள்.) தன்பண்ணியல் அத்திறமாய்த் தனக்கினமான செந்திறத்தோடுபுரிந்தவென்க.

என்றது: பண் * பண்ணியற்றிறம் திறம் திறத்திறமென்னுமிவை; சம்பூரணம், சாடவம், ஔடவம், சகிர்த்தமென வடமொழிப்பெயரானும் இவை வழங்கும்; அவற்றுட்செந்திறமென்றவாறு.

செங்கோட்டி யாழில்—(இ - ள்.) நாற்பெரும்பண்ணிற்கும் முதலாகிய நால்வகையாழினுள்ளுஞ் செங்கோட்டியாழென்னும் யாழினதுப்பினு ளென்க.

---

[1] சீவகசிந்தாமணி, கஅஙூ. [2] திருச்சிற்றம்பலக்கோவையார், சoo.

(பி - ம்.) * 'பண்ணியம்'

கo௭. தந்திரி கரத்தொடு திவவுறுத்தியாஅத்து—(இ - ள்.) அச் செங்கோட்டியாழினது அறுவகையுறுப்பினுள் தந்திரிகரம் திவவென்னும் இரண்டையும் உறுதிபெறக்கட்டி,

அவற்றுள் தந்திரிகாரமென்பது நரம்புதுவக்குதற்குத் தகைப்பொழிய இருசாணுல்விரல் நீளமாகக் குறுக்கிடத்துச்சேர்த்தும் ஐம்பத்தோருறுப்பு; என்னை? "தந்திரி கரமே தகைப்பற விலங்கி, வந்த விருசா ணுல்விர லாகும்" .....என்றுராகலின். திவவென்பது - நரம்புகளை வலிபெறக்கட்டும் வார்க்கட்டு.

கo அ. ஒற்றுறுப் புடைமையிற் பற்றுவழிச் சேர்த்தி—(இ - ள்.) அவ்வியாழ் ஒற்றென்னு முறுப்பை யுடைத்தாகலானே அவ்வுறுப்போடே பற்றைப்பிறப்பிக்கும் நெறிப்படச்சேர்த்தியென்க.

"செங்கோட்டி யாழே செவ்விதிற் றெரியி, னறுவகை யுறுப்பிற் முரு மென்ப", "அவைதாம், கோடே திவவே யொற்றே.....தந்திரி கரமே நரம்பேர் டாறே" என்றுர்.

கo கூ. உழைமுதற் கைக்கிளை யிறுவாய்க் கட்டி—(இ - ள்.) உழை சூரலாகவும் கைக்கிளை தாரமாகவும் நரம்புகளைநிறுத்தியென்க.

என்றது அரும்பாலையென்னும் இசையைப்பிறப்பித்தென்றவாறு. இது குலமுதற்பாலைத்திரிவெனக்கொள்க.

ககo - கஉ. வரன்முறை.....அமைவரக் கேட்டு

(இ - ள்.) உழைமுன்னர்க்கூறிய நூல்களின் வரலாற்றுமுறைமையான் வந்த மூவகைத்தானத்தானும் சதிபாய்ந்துசெல்லும் கலையையுடைய பாலை போல்வாளது பாடற்பண்ணை ஆசானென்னும் பண்ணியலாகிய நால்வகைச் சாதியினும் பொருந்துதல்வரச் செவிப்புலத்தானறிந்தென்றவாறு.

* ஆசான்சாதி நால்வகையாவன: ஆசானுக்கு அகச்சாதி காந்தாரம், புறச்சாதி சிகண்டி, அருகுசாதி தசாக்கரி, பெருகுசாதி சுத்தகாந்தாரமெனக் கொள்க.

பண் நூற்றுமூன்று; அவை நால்வகைப்படும்; பண், பண்ணியல், திறம், திறத்திறமென. அவற்றுள் இது திறங்கூறிற்று. மூவகைத்தானம் எழுத்தும் அசையும் சீருமெனினுமமையும்; என்னை? "எழுத்தே யசையே சீரே யென்றிவை, யிழுக்கி லவைமூன் றிற்கு மென்ப" என்றுராகலின்.

ககங. பாடற் பாணி யாளனி யவரொடு—(இ - ள்.) இங்ஙனமாகிய பண்ணையும் திறத்தையும் அவரோடு கலந்துவாசித்தென்க.

ககச. கூடற் காவதங் கூறுமி னீரென—(இ - ள்.) இங்ஙனம் யாழ் வாசித்தகோவலன், இவ்விடத்திற்கு மதுரை எத்தனைக்காவதம், அதனை நீர் கூறுமினென்றுகேட்பவென்க.

ககஙி - அ. காழகிற் சாந்தம்.....சே ரூடி

(இ - ள்.) அகிற்சாந்தும் கமழும் குங்குமப்பூங்குழம்பும் நாவிக்குழம்பும் குளிர்ச்சிநலத்தைக்கொண்ட சந்தனச்சாந்தும் கத்தூரிச்சாந்துமாகிய இத் தெய்வமணங்கமழுகின்ற வளவிய சேற்றையணிந்து.

ககஅ - உக. ஆங்கு.....பூவணை பொருந்தி

(இ - ள்.) தேன்சேர்ந்த கழுநீர்மலர் சண்பகமலரென்னுமிவற்றுலாகிய மாலையோடு குருக்கத்தியும் மல்லிகையும் மணியின்கண்வளர்ந்த முல்லையுமென்னும் இவ்வவிழ்ந்த பூக்களால்நிரைத்த பொலிவினையுடைய அணையிலேபொருந்தி,

கஉஉ - சூ. அட்டிற் புகையும்.....பூம்புகை யளஇ

(இ - ள்.) அடுக்களைகளில் தாளிப்புமுதலியபுகையும் அகன்ற அங்காடியிடத்து அப்பவாணிகர் முட்டாமற் சுடுகின்ற அப்பவகையிற்புகையும் மைந்தரும் மகளிரும் மயிர்க்கும் அகிற்கும் மாலைமுதலியவற்றிற்குமெடுத்த அழகிய இனிய அகிற்புகையும் யாகசாலைதோறும் ஆகுதிபண்ணுதலாலெழுந்தபுகையும் ஆகிய இப்பலவாகிய வேறுபட்ட பொலிவினையுடைய புகையையளவி,

கஉசு - கூ. வெல்போர்.....காண்வரத் தோன்றி

(இ - ள்.) இந்திரனூற்பூட்டப்பட்ட விளங்காநின்ற ஆரத்தையுடைய மார்பாலே வெல்லும்போரைவல்ல பாண்டியனது கோயிற்கண் யாவராலும் அளவிட்டறியப்படாவாய. இக்கலவைத்தொகுதி தன்மெய்யெல்லாம் கமழும்படி தோன்றியென்க.

அவை எத்தன்மையவாகிய கலவையெனின், தம்மைப் புலன்கள் ஒருகாலுகருமாயிற் பின்னை வீட்டுலகங்கருதித் துறவிற்செல்லவொட்டாது மனத்தைப்பிணித்துக்கொள்ளும் கோயிலிற்கலவையென்க. அவை முன்னர்க்கூறியனவும் பிறவும்.

கஙூ0 - ஙூஉ. புலவர் செந்நா.....வந்தது காணீர்

(இ - ள்.) சங்கப்புலவரது செந்நாவாலே புகழப்பட்ட இச்சிறப்புக்களையுடைத்தாகலிற் பொதியிற்றென்றல் தன்னை ஒவ்வாமைக்குக்காரணமாகி இந்த மதுரைத்தென்றல்வந்தது; இதனைக் காணீரென்க.

ஆடிப் பொருந்தி அணைஇத் தோன்றித் தென்றல் வந்ததென்றுரைக்க.

கஙூங - ச. நனிசேய்த் தன்றவன்.....தகைக்குந ரில்லென

(இ - ள்.) காவதங்கூறுமினென்றுற்குக் காணீர்; அதனால் மிக்க தூரிதன்று அப்பாண்டியனது செல்விமிக்கமூதூர்; அதுவன்றியும் ஆண்டுச் செல்வார் இந்நீர்மையாரன்றி வேறுபட்டநீர்மையாரொருவர்செல்லினும் நில்லென்பாரில்லையென்று சொல்லவென்க.

கஙூஙி - சூ. மூன்னுண் முறைமையின்.....பெயர்ந்தனர்

(இ - ள்.) அற்றைஞான்று ஆண்டுத்தங்கிப் பிற்றைஞான்று செல்லக்கருதியவர் முன்னைஞான்றை முறைமைபோலே இரவிடையிலே கவுந்தியடிகளுடனே பெயர்ந்தனரென்க.

கடலாடு - கா0. பெயர்ந்தாங்கு.....குரலோதையும்

(இ - ள்.) அரிதாகிய அரித்தற்றொழிலேவல்ல கடவுளது அகன்ற பெரிய கோயிலிடத்தும் மிக்க புகழையுடைய மன்னவன்கோயிலிடத்தும் வேறுபட்ட பகுதிபொருந்திய சிறப்பையுடைய காலமுரசமாகிய பேரிசைப்பல்லியம் பெயர்ந்து கூடியொலிக்குமொலியும்,

பெயர்தல் - தாளமறுதல். கனைதல் - செறிதல்.

கடலாடு - கஉ. நான்மறை யந்தணர் நவின்ற வோதையும்—(இ - ள்.) அந்தணர் நான்மறைநவில்விக்குமவைக்களந்தோறும் மறைக்குவிதித்த மரபினையுடைய சுருதிகுன்றாமல் உச்சரிக்குமோதையும்,

கடலாடு - கக. மாதவ ரோதி மலிந்த வோதையும்—(இ - ள்.) மாதவர்கள் சிறுகாலையில் மந்திரமோதுதலால் மிக்க ஓதையும்,

கடலாடு - கா. மீளா வென்றி.....நாளணி முழவமும்

(இ - ள்.) மடங்காத வென்றியையுடைய வேந்தனுற்பெற்ற சிறப்போடே வாள்வீரர் தத்தம்வீரத்திற்கு எடுத்த வரிசையையுடைய முரசுமுதலியவற்றின் நாளணியோதையும்,

நாள்—குடைநாட்கோள் முதலியவுமாம்.

கடலாடு - கஎ. போரிற் கொண்ட பொருகரி முழக்கமும்—(இ-ள்.) மறப்பகைமன்னரைப் போரில்வென்று கொண்டுவந்த போர்க்களிற்றின்முழக்கமும்,

கடலாடு - கஅ. வாரிக் கொண்ட வயக்கரி முழக்கமும்—(இ - ள்.) காட்டிற் பிடித்துக்கொண்டுவந்த வலிய யானையின்முழக்கமும்,

கடலாடு - கஉ. பணைநிலைப் புரவி யாலு மோதையும்—(இ - ள்.) பந்திதோறு நின்ற புரவிகள் போர்நினைந்து ஆலிக்குமோதையும்,

கடலாடு - கக. கிணைநிலைப் பொருநர் வைகறைப் பாணியும்—(இ - ள்.) கிணைப்பறையையுடைய மள்ளர் மருதநிலந்தோறும் வைகறைக்காலத்தே கொட்டுமோதையும்,

கிணை - மருதப்பறை; கூத்தர்பறையுமாம்.

கடலாடு - நி0. கார்க்கடல்.....ஆரஞர் நீங்கி

(இ - ள்.) இவையும்பிறவுமாகிய அக்கூடலித்து ஆர்க்குமொலியெல்லாம் கார்க்கடலொலிபோல ஒலித்து எதிர்கொள்ளுதலாலே முன்புழந்த வருத்தமெல்லாம் நீங்கி,

கலிக - கா. குரவமும்.....பன்மலர் விரிந்து

(இ - ள்.) கரையின்புறவாயெங்கும், குரவும் மகிழும் கோங்கும் வேங்கையும் வெண்கடம்பும் சுரபுன்னையும் மஞ்சாடிமரமும் மருதும் உச்சிச்செலுந்திலும் செருந்தியும் சண்பகமரமும் ஆகியவிவை பாதிரியுடனே பலவகைமலரும்விரிந்துசூழ்ந்தவை மீதுமித்த பூந்துகிலாகவும்,

கதிரி - கூ. குருகுந் தளவமும்.....அல்குல்

(இ - ள்.) அகவாயெங்கும், குருக்கத்தியும் செம்முல்லையும் முசுட்டையும் மோசிமல்லிகையும் வெள்ளாதுந்தாளியும் வெட்பாலையும் மூங்கிலும் இவற்றிற் படர்ந்த பெருங்கையாலும் குட்டிப்பிடவமும் இருவாட்சியுமாகிய பலமலரும் விரிந்து பூங்கொடிகள் நிரைபடநெருங்கிப் படர்ந்துமன்னினவை தன்னை மிடைந்துசூழ்ந்த கோவையாகியமேகலையாகவுமுடைய கொடுங்கரையாகிய அகன்றேந்தியவல்குலையும்,

அல்குலென்பதற்கேற்பக் கொடிமைகூறினர். மேகலைக்கோவை, வேற்று மைத்தொகையுமாம். கொழுங்கொடி விரிமலரென்னுமடைகளை ஏற்புழி எங்கும் ஓட்டுக. அம், சாரியை.

ககூக - கூ. வாலுகங் குவைஇய.....கதிரிள வனமுலை

(இ - ள்.) அகற்சியையும் பொலிவையுமுடைத்தாகிய இடைக்குறையிலே பக்கங்கள் புடைக்கொண்டு கோங்கு வேங்கையென்னும் பலமலராகியசுணங் கால் உயர்ச்சிபெற்று ஒன்றுக்கொன்று மாறுபடவிளங்கிய மணற்குன்றுகளி னிறத்தமுலையினையும்,

ககூச. கரைகின் றுதிர்த்த கவிரிதழ்ச் செவ்வாய்—(இ - ள்.) கரைக் கணின்று உகுத்த முருக்கிதழாகிய செவ்வாயினையும்,

ககூநி. அருவி முல்லை யணிநகை யாட்டி—(இ - ள்.) அருவிநீரோடு இடையறாதுவந்த முல்லையாகிய நகையினையுமுடையாள்,

ககூசு. விலங்குநிமிர்ந் தொழுகிய கருங்கய னெடுங்கண்—(இ-ள்) குறுக்கேமறிந்தும் நெடுகவோடியுந்திரிகின்ற கயலாகிய நெடியகண்ணினையும்,

ககூஎ. விரைமலர் நீங்கா வவிரறற் கூந்தல்—(இ - ள்.) இருமருங் கும் நிரைகளரித்த மணமலர்நீங்காத விளங்குகின்ற அறலாகிய கூந்தலினையும்,

ககூஅ - ஏ. உலகுபுரந் தூட்டும்.....பொய்யாக் குலக்கொடி

(இ - ள்.) உலகைப் பாதுகாத்தற்குப் பலபொருள்களையும்விளைத்து நுகர் வித்தலான மிக்க பெரிய ஒழுக்கத்தினையுமுடையாள்; புலவர்நாவிற் புகழ்பொ ருந்தியவள்; சேர்ந்தோர்க்கு வரைவின்றி இன்பமளித்தலின் திருமகளையொப் பாள்; வையையென்று பெயர்கூறப்படுவாள்; பருவம்பொய்யாமையானும் வேற்றுவேந்து அணுகாமையானும் தென்னர்குலக்கொடியாயுள்ளவள்;

களக - கூ. தையற் குறுவது.....கரந்தன னடக்கி

(இ - ள்.) கண்ணகிக்கு மேல்வரும் துன்பங்களைத் தான் முன்னறிந்தாள் போலத் தன்னைக்கொண்டு அருச்சித்தார்க்குப் புண்ணியங்களைக்கொடுக்கும் நறியபூவாடையால் தனது மெய்ம்முழுதும்போர்த்துத் தன்கண் மல்கிநின்ற நீரைப் புறத்திடின் அதுகண்டு வருந்துவாரென்று உள்ளடக்கி,

நெடுநீர் - மிக்கநீர். அடக்கவெனத்திரிக்க.

களச - டு. புனல்யா றன்றி து.....தொழுது

(இ - ள்.) அங்ஙனம்போர்த்த பூவாற் புனல்மறைதலின் இது புனல் யாறன்று பூவாறென்றுபுகழ்ந்து மாதரும் கொழுநனும் தொழுது,

களசு - அ. பரிமுக வம்பியும்.....தென்கரை யெய்தி

(இ - ள்.) ஓடக்கோலுக்கு நிலத்தலரியதுறையிற் சென்றேரைச்செலுத்தும் குதிரைமுகவோடமும் யானைமுகவோடமும் சிங்கமுகவோடமென்னும் இவற்றினேறிப் பலர்போகும் துறையிற்போகாது அதற்கயலதாகிய துறையிலே கவுந்தியடிகளுடனே மரப்புணையிலேபோகி மதுராபுரமலையுடைய சோலை பொருந்திய தென்கரையிற் பலர்செல்லாததோரிடத்தே சென்றெய்தியென்க.

முன்னர், [1] வம்பப் பரத்தை வறுமொழி யாளனெடு சாபமுறுதலின், ஈண்டு மருங்கிற்பெயராதென்றார்.

பரிமுகமுதலியவற்றைத் தொழிற்பெயராக்கினுமமையும்.

கஅக - ங. வானவ ருறையும்.....அகழிசூழ் போகி

(இ - ள்.) தேவர்களுறையும் மதுரையை வலங்கொண்டுசென்றால் மிகவும் பெரியதாகிய புண்ணியத்தையுடைத்தென்றெண்ணி அழித்தற்கரிய மிளை சூழ்ந்த இடங்கின்புறத்தைச் சூழ்போந்தென்க.

மிளை - காவற்காடு; கட்டுவேலியுமாம்.

கஅச - அ. கருநெடுங் குவளையும்.....நடுங்க

(இ - ள்.) குவளையும் ஆம்பலும் கமலமும், தையலும் கணவனும் மேல் தனித்துறுத்துயரத்தைத் தாம் தெளிய அறிந்தனபோல வண்டுகள் இரங்கும் பண்ணீர்மையைக்கொண்டு பரிந்தேங்கியழுது கண்ணீரைக்கொண்டு காலற நடுங்காநிற்கவென்க.

பண்ணீர்மையன்றிப் பண்ணீரென்றமையால் திறம் பன்னிரண்டனுள் நோதிறமெனவுமாம். கண்ணீர் - கள்ளாகிய நீரெனவுமாம். காலற - காலி லேயுறவெனவும், காற்று உற்றதலாலெனவுமாம். அறிந்தனபோல நடுங்க வென்க. எங்கியென்னும் செய்தெனெச்சம் நடுங்கவென்னும் பிறவினை கொண்டு முடிந்தது.

கஅகூ - கூ0. போருழந் தெடுத்த.....மறித்துக்கை காட்ட

(இ - ள்.) மாற்றூர்வருந்தப் போர்தேய்த்தெடுத்த [2] புறமதிற்றலையின்கொடிகள் இவரை இந்நகரில் வாராதொழிமினென்பனபோல் தம்கையின் மறித்துக் காட்டவென்க.

---

[1] சிலப்பதிகாரம், க0: உகக.

[2] "கண்டிதீ வரிலு மெங்க ளெழிலுடை யெழிவி வ்ண்ணன், பாண்டவர் தங்கட் கல்லாற் படைத்துணை யாக மாட்டான், மீண்டுபோ கென்றென் றந்த வியன்மதிற் குடுமி தோறுங், காண்டகு பதாகை யாடை கைகளாற் றடுப்ப போன்ற" (வி பாரதம். வாசுதேவனை. சு.) என்பது இக்கருத்தைப் பின்பற்றியிருத்தல் காண்க.

அன்றி, வாரலென்பார்கையின் தன்மைபோலெனவுமாம்.

கஙக - கூ. புள்ளணி கழனியும்.....புக்கனர் புரிந்தென்.

(இ - ள்.) புட்களாலழகுசெய்யப்பட்ட ஏரியும் பண்ணையும் கழனியும் சோலையும் தெங்கும் கமுகும் வாழையும் வேழத்திரளாலிடப்பட்ட தண்ணீர்ப் பந்தர்களும் பொருந்திவிளங்கிய மூதூர்ப்புறமதிலிடத்ததாகி அறத்தைப்புரியும் தபோதனரன்றிப் பிறர்சேரப்படாத புறஞ்சேரிக்கண்ணே தாம் கருதிவந்த கோட்பாட்டிலே மனம்புரிந்து புக்காரென்க.

இது கீழ்த்திசைவாயிற்கு அயலதோர் முனிவரிருப்பிடம். புரிந்துபுக்காரெனப் பொதுமையாற்கூறினமையின், முன்னர் நாகர்நாதைக்கண்ணே, [1] "அறிவனே யேத்த.....ஒன்றிய வுள்ள முடையேன்" என்பதனுற் கவுந்தியடிகளும் அறிவனைப் புரிந்துபுக்காரென்க. பண்ணை - தோட்டங்களும், ஓடைகளும்.

இது, நீலமண்டிலவாசிரியப்பா.

கங.—புறஞ்சேரியிறுத்தகாதை முற்றிற்று.

---

[1] சிலப்பதிகாரம், கo: இ - கூ.

பகிலன்காவது

ஊர்காண்காதை.

[1]புறஞ்சிறைப் பொழிலும் பிறங்குநீர்ப் பண்ணையு
[2]மிறங்குகதிர்க் கழனியும் புள்ளெழுந் தார்ப்பப்
புலரி வைகறைப் பொய்கைத் தாமரை
மலர்பொதி யவிழ்த்த [3] வுலகுதொழு மண்டிலம்
ரு. வேந்துதலை பனிப்ப வேந்துவாட் செழிய
னேங்குயர் கூட லூர்துயி லெடுப்ப
[4] நூதல்விழி நாட்டத் திறையோன் கோயிலு
முவணச் சேவ லுயர்த்தோ னியமமு
மேழி வலனுயர்த்த வெள்ளை [5]நகரமுங்
கo. கோழிச் சேவற் கொடியோன் கோட்டமு
மறத்துறை விளங்கிய வறவோர் பள்ளியு
[6] மறத்துறை விளங்கிய மன்னவன் கோயிலும்
வால்வெண் சங்கொடு வகைபெற் றேங்கிய
காலை முரசங் கனைகுர லியம்பக்

க - உ. பொழிலிலும் பண்ணையிலும் கழனியிலும் ஆர்ப்பவென்க.

ங. புலரிவைகறை - புலருகின்றதாகிய வைகறை.

ச. மலர்பொதி - பெரும்பொதி; மலர் பொதியவிழ்தற்குக் காரணமான மண்டிலமுமாம்.

ஞ. (பா.) பணித்தவாள் - பனித்தற்குக்காரணமான வாள்.

எ. நூதலிலேவிழித்த நாட்டத்தையுடைய.

அ. நியமம் - கோயில்.

கூ. மேழி வலனுயர்த்த வெள்ளை - மேழியைக் கையாயுதமாக வலனுயர்த்த பலதேவர்.

---

1 க - உ=சிலப்பதிகாரம். கக: ககக - உ.

2 "இறங்குகதிர் சலம்வரு கழனி" புறநா: கூஅ.

3 "பலர்புகழ்ஞாயிறு" முருகு. உ.

4 மணி. ஞ: ஞச.

5 சிலப். கூ: கo.

6 எ - கக=சிலப். ஞ: ககக - எஉ; புறநா. ஞசு: க - கo; மதுரை: சஞஞ - அ; மணி. க: ஞச - ஞ; இன்னு. க.

கடு. கோவலன் சென்று கொள்கையி னிருந்த
காவுந்தி யையையைக் கைதொழு தேத்தி
[1] நெறியி னீங்கியோர் நீர்மையே ணுகி
நறுமலர் மேனி நடுங்குதுய ரெய்த
வறியாத் தேயத் தாரிடை யுழந்து

உ0. சிறுமை யுற்றேன் செய்தவத் தீர்யான்
முன்னகர் மருங்கின் மன்னர் பின்னோர்க்
கென்னிலை யுணர்த்தி யான்வருங் காறும்
பாதக் காப்பினள் பைந்தொடி யாகலி
னேத முண்டோ வடிகளீங் கென்றலுங்

உடு. கவுந்தி கூறுங் காதலி தன்னொடு
தவந்தீர் மருங்கிற் றனித்துய ருழந்தோய்
[2] மறத்துறை நீங்குமின் வல்வினை யூட்டுமென்
றறத்துறை மாக்க டிறத்திற் சாற்றி
நாக்கடிப் பாக வாய்ப்பறை யறையினும்

கூ0. யாப்பறை மாக்க ளியல்பிற் கொள்ளார்
தீதுடை வெவ்வினை யுருத்த காலைப்
பேதைமை கந்தாப் பெரும்பே * துறுவ
ரொய்யா வினைப்பய னுண்ணுங் காலைக்
கையா றுகொள்ளார் கற்றறி மாக்கள்

கூடு. பிரிதற் றுன்பமும் புணர்தற் றுன்பமு
† முருவி லாள னொறுக்குந் துன்பமும்

கள. நெறியி னீங்கியோர் - இல்லற நெறியினீங்கிய வேசையர்பதிகள்.

உசு - சு. உன்னுடைய பாதமாகிய துணையை யுடையவளாதலால், இவளுக்கு ஏதமுண்டோ; இல்லையென்றதாம்; பாதமாகிய காவலுண்டாக இவளுக்கு ஏதமுண்டோவென்றுமாம்.

உசு. தவம் - புண்ணியம்; தவந்தீர்மருங்கின் - புண்ணியமுடிந்த கூற்றால்.

கூ0. அறை - அறுதல். இயல்பில் - நன்மைக்கூற்றில்.

கூஉ. அறியாமைதுணையாக மிக்க மயக்கமுறுவர்.

கூகூ. ஒய்யாவினை - போக்கவொண்ணாத வினை.

கூடு - சு. பிரிதற்றுன்பம் - பிரிதலால்வருந்துன்பம். புணர்தற்றுன்பம் - புணர்தல் காரணமாக வருந்துன்பம். இரண்டுகாலத்தும் காமன் ஒறுக்குந் துன்பம்.

---

[1] சிலப்பதிகாரம், கo: உகள.
[2] உள - கூ=மணி. உடு: சக - ஙக.
(பி - ம்.) * 'உறுவாரெய்யா' † 'உருவில்வில்லியொறுக்குந்'

புரிகுழன் மாதர்ப் புணர்ந்தோர்க் கல்ல
தொருதனி வாழ்க்கை யுரவோர்க் கில்லை
பெண்டிரு முண்டியு மின்பமென் றுலகிற்
சக. கொண்டோ ருறாஉங் கொள்ளாத் துன்பங்
கண்டன ராகிக் * கடவுளர் வரைந்த
காமஞ் சார்பாக் காதலி னுழந்தாங்
கேமஞ் சாரா விடும்பை யெய்தின
ரின்றே யல்லா லிறந்தோர் பலராற்
சஙி. றொன்று படவரூஉந் † தொன்மைத் காதலிற்
றுதை யேவலின் மாதுடன் போகிக்
காதலி நீங்கக் கடுந்துய ருழந்தோன்
வேத முதல்வற் பயந்தோ னென்பது
நீயறிந் திலையோ நெடுமொழி யன்றே
ஞ. வல்லா டாயத்து மண்ணர சிழந்து
மெல்லிய றன்னுடன் வெங்கா னடைந்தோன்
காதலிற் பிரிந்தோ னல்லன் காதலி
[1] தீதொடு படூஉஞ் சிறுமைய ரல்ல
ளடவிக் கானகத் தாயிழை தன்னை

கூஅ. உரவோர் - இருடிகள்.

கூக - சஉ. மனத்து இன்பமென்று கொண்டோர் உறும் தம்மளவல்லாத துன்பத்தைக்கண்டு தவத்தினர் நீக்கினகாமம்.

சச. (பா) இறந்தனர் - முற்காலத்திற் கழிந்தார்.

சஙி. தொன்றுபட வரூஉந் தொன்மைத்து - அடிப்பற்றி வருகின்ற பழமைத்து; மூற்று. ஆதலாலென்று மேற்சொல்லுகின்றார்.

சகூ. நெடுமொழி - பெருவார்த்தை.

பழைதாகப் போதுகின்ற வார்த்தையன்றேவென்றுமாம்.

ஞ. வல்லாடாயம் - சூதாடுந்தாயம்.

ஞக. மெல்லியல் - தமயந்தி. வெங்கானடைந்தோன் - நளன்.

ஞஉ. காதலிற் பிரிந்தோ னல்லன் - அவள் காதல்காரணமாகப் பிரியக் கருதியவனல்லன்.

ஞஉ - கூ. அவளும் இவனிடத்துப் பிரியவேண்டிப் பிரிவாளுமல்லள்.

---

[1] தீது - பிறர்நெஞ்சுபுகுதல்; இலப். க: உஎ; மணி. உஉ: சகூ - ஆம் அடிகளுரை விபவத்தையும் அவற்றின் உரைகளையும் பார்க்க.

(பி - ம்.) * 'கடவுள்வரைத்தனர்' † 'தொன்மையதாகலிற்'

நூடு. யிடையிருள் யாமத் திட்டு * நீக் கியது
வல்வினை யன்றே மடந்தைதன் பிழையெனச்
சொல்லலு முண்டேற் சொல்லா யோநீ
யனையையு மல்லை யாயிழை தன்னொடு
பிரியா வாழ்க்கை பெற்றனை யன்றே
கூ0. வருந்தா தேகி மன்னவன் கூடற்
† பொருந்துழி யறிந்து போதீங் கென்றலு
மிளைசூழ் மினையொடு ‡ வளைவுடன் கிடந்த
விலங்குநீர்ப் பரப்பின் § வலம்புண ரகழியிற்
பெருங்கை யானை யினநிரை பெயருஞ்
கூடு. [1] சுருங்கை வீதி மருங்கிற் போகிக்
கடிமதில் வாயில் காவலிற் சிறந்த
வடல்வாள் யவனர்க் கயிராது புக்காங்
காயிரங் கண்ணே னருங்கலச் செப்பு
வாய்திறந் தன்ன மதிலக வரைப்பிற்
எ0. குடகாற் றெறிந்து கொடிதுடங்கு மறுகிற்
கடைகழி மகளிர் காதலஞ் செல்வரொடு
வருபுனல் [2] வையை மருதோங்கு முன்றுறை
விரிபூந் துருத்தி வெண்மண லடைகரை
யோங்கு || நீர் மாடமொடு நாவா யியக்கிப்

நிஅ. அனையையு மல்லை - அவர்களைப்போல மனைவியைவிட்டுப் பிரிந்தா யுமல்லை.

கூஉ. இளை - அரண்காவல்; மினை - அதனைச் சூழ்ந்த காவற்காடு.

கூச - டு. யானைபோகலாம்படி கீழ்சுருங்கையாக அதனை மேலிட்டவீதி. சுருங்கை - கரந்துறை; ஒழுகுநீர் புகுகையைத் தடுத்தாலும் மறைத்துப்படித்த வீதிவாய்த்தலை.

கூஎ. அயிராமற்புக்கு. எ0. எறிந்து, எறிய; கோடை எறிதலால்.

எக. கடைகழிமகளிர் - பரத்தையர்.

எஉ. மருதோங்கு துறை - திருமருதந்துறை.

எச. நீர்மாடம் - பள்ளியோடம்.

---

[1] பரி. உ0: க0ச; சீவக. கசஉ; மணி. உஎ: டு. [2] பரி. கக: கூ0; கலி. உசு: கங.

(பீ - ம.) * 'நீங்கியது' † 'பொருத்துவழியறிந்து போதீங்கென்றபின்' ‡ 'வளைபுறக்கிடந்த' § 'வலம்புரியகழி' || 'நீசோடமொடு'

எடு. பூம்புனை தழீஇப் புனலாட் டமர்ந்து
தண்ணறு முல்லையுந் தாழ்நீர்க் குவளையுங்
[1] * கண்ணவிழ் நெய்தலுங் கதுப்புற வடைச்சி
வெண்பூ மல்லிகை விரியலொடு தொடர்ந்த
† தண்செங் கழுநீர்த் தாதுவிரி பிணையல்

அ0. கொற்கையம் பெருந்துறை முத்தொடு பூண்டு
தெக்கண மலயச் செழுஞ்சே றுடைப்
பொற்கொடி மூதூர்ப் பொழிலாட் ‡ டமர்ந்தாங்
கெற்படு பொழுதி னிளநிலா மூன்றிற்
றுழ்தரு § கோலந் தகைபா ராட்ட

அடு. வீழ்பூஞ் சேக்கை மேலினி திருந்தாங்
கரத்தப் பூம்பட் டரைமிசை யுடீஇக்
குறற்றலைக் கூந்தற் குடசம் பொருந்திச்
சிறுமலைச் சிலம்பிற் செங்கூ தாளமொடு
நறுமலர்க் குறிஞ்சி நாண்மலர் வேய்ந்து

கூ0. குங்குமம் வருணங் கொங்கையி னிழைத்துச்
செங்கொடி வேரிச் செழும்பூம் பிணையல்
சிந்துரச் சுண்ணஞ் சேர்ந்த மேனியி
லந்துகிர்க் கோவை யணியொடு பூண்டு
|| மலைச்சிற கரிந்த வச்சிர வேந்தற்குக்

எடு. புனை - தெப்பம்.

எசு. தாழ்நீர்க் குவளை - [2] தங்கின நீரையுடைய குவளை; ஆழ்ந்த நீர்க் குவளை யென்றுமாம்.

எஅ. வெண்பூமல்லிகை, முதல். விரியல் - பூ.

அக. (பா.) மலயச் செழுஞ்சேறு - சந்தனக்குழம்பு.

அசை - தகை - கொழுநன்.

(அசை) தகைமையைக்(எக) காதலஞ்செல்வரொடு (அசை) பாராட்டச் (அடு) சேக்கைமேலேயிருந்து.

அஎ. குரல் - கொத்து. அஅ. சிறுமலையாகிய சிலம்பு.

(அசு) 'அரத்தப் பூம்பட்டு' முதலாக, (கூ) 'துகிர்க்கோவை' ஈறுகச் சொன்னவை கார்காலத்துப் பரக்க அணிவன.

கூசை. மலைச்சிறகரிந்த - மலையைச் சிறகரிந்த.

---

[1] முருகு. எடு. [2] "நீர்கால்யாத்த நிரையிதழ்க் குவளை" (குறுந், கஅஅ.)
(பி - ம்.) * 'கண்ணெஇழ்' † 'தண்பூங்கழுநீர்' ‡ 'மஇழ்த்தாங்கு'
§ 'கோலர்தகை' || 'மலைச்சிறையரிந்த'

கூடு. கலிகெழு கூடற் செவ்வணி காட்டக்
காரர சாளன் வாடையொடு வருஉங்
கால மன்றியு நூலோர் சிறப்பின்
முகிழ்முலை மாடத் தகிறரு விறகின்
மடவரன் மகளிர் தடவுநெருப் * பமர்ந்து
கஂ. நறுஞ்சாந் தகலத்து நம்பியர் தம்மொடு
குறுங்க ணடைக்குங் கூதிர்க் காலையும்
வளமனை மகளிரு மைந்தரும் விரும்பி
யிளஞிலா முன்றிலி னிளவெயி னுகர
விரிகதிர் மண்டிலந் தெற்கோர்பு வெண்மழை
கஂடு. [1] யரிதிற் றோன்று மச்சிரக் காலையு
† மாங்க தன்றியு மோங்கிரும் பரப்பின்
வங்க வீட்டத்துத் தொண்டியோ ரிட்ட
வகிலுந் துகிலு மாரமும் வாசமுந்
தொகுகருப் பூரமுஞ் சுமந்துடன் ‡ வந்த

கூசு. கார்ரசாளன் = கார்காலம்.

கூள. நூலோர் - சிற்பர்; அவர்புகழ்ச்சியையுடைய (கூஅ) மாடமென்க.

கூள : அ. நூலோர்.....மாடம் - [2]மயமதமறிவாராற் புகழ்ச்சியையுடைய மாடமென்றுமாம்.

கூக. தடவு - இந்தளம். கஂஂ. [3] சாந்து - அகிலெய்.

கஂக. குறுங்கண் - சாளரம்.

கஂச. மண்டிலம் - ஆதித்தன்; இவன் தெற்கே மிதுனவீதியிலே இயங்குதலானே. வெண்மழை - வெள்ளமேகம்.

கஂடு. அரிதாகத் தோன்றும் முன்பனிக்காலம்.

கஂசு. பரப்பு - கடல். கஂள. வங்கஈட்டத்தாலே.

கஂஅ. தகில் - பட்டுவர்க்கம்; நாற்றங்கொளுவுதலால் இவற்றுடன் எண்ணினர். வாசம் - தக்கோலம் சாதிக்காய்முதலியன.

கஂகூ. சுமந்து - அவற்றின் நாற்றத்தைச்சுமந்து.

---

[1] 'அருகித்தோன்றும்' என்று பாடங்கொண்டு, "அருகுதிசை" என்னும் (தக்க. கசு.) தாழிசையுரையில் இதனை மேற்கோள் காட்டினர்.

[2] மயமதம் - ஒருவகைச் சிற்பநூல்.

[3] சீவக. உசுஎடு - ஆம் பாட்டினுரையைப் பார்க்க.

(பி - மீ.) * 'அயர்ந்து' † 'ஆங்கனமன்றி' ‡ 'வந்து'

கக0. கொண்டலொடு புகுந்து கோமகன் கூடல்
வெங்க ணெடுவேள் [1] வில்விழாக் காணும்
பங்குனி முயக்கத்துப் பனியர சியாண்டுளன்
கோதை மாதவி கொழுங்கொடி யெடுப்பக்
காவுங் கானமுங் கடிமல ரேந்தத்

கஉ0. தென்னவன் பொதியிற் றென்றலொடு புகுந்து
மன்னவன் கூடன் மகிழ்துணை தழுஉ
மின்னிள வேனில் யாண்டுளன் கொல்லென
றுருவக் கொடியோ ருடைப்பெருங் கொழுநரொடு
பருவ மெண்ணும் படர்தீர் காலைக்

கஉ0. கன்றம ராயமொடு களிற்றின நடுங்க
வென்றூழ் நின்ற குன்றுகெழு நன்னாட்டுக்
காடுதீப் பிறப்பக் * கனையெரி பொத்திக்

கக0 - கக. கூடலிடத்துக் காமனுக்குச்செய்யும் வில்விழவு.

(க0எ) வங்கவீட்டத்தாலே தொண்டியிலுள்ளோரிட்ட (க0அ - கூ) பல சரக்குக்களைச் சுமந்துவந்து புகுந்த (கக0) கீழ்காற்றேடுபுகுந்து தென்னவன் கூடலெடுக்கும் (ககக) வில்விழாக்காணும் (ககஉ) பங்குனிமாதத்தோடுபொருந்தின பனியரசென்க; என்றது பின்பனிக்காலம்.

இவ்விழாவைக்கொண்டலொடுபுகுந்து காணும் பங்குனிமாதம்பொருந்திய பின்பனிக்காலமாகிய அரசன் யாண்டுளன்.

ககூ. கோதை - ஒழுங்கு. ககள. யாண்டுளன் - எங்கேயுள்ளான்.

(ககள) எங்கேயுள்ளானென்று(ககக)போனகாலங்களைக்குறித்து எண்ணும்.

ககஅ. உருவக்கொடியோர் - கொடியுருவத்தினோர்; வல்லியாகவெழுதும் கொடியுமாம். உடைப்பெருங்கொழுநரொடு - தம்மையுடையகொழுநருடன்.

(ககஅ) தம்மையுடைய கொழுநருடனே (அறு) வீழ்பூஞ்சேக்கையிலிருந்து (ககசு) இப்பருவங்களோ (ககஉ - எ) எங்குளவென்று எண்ணுகிற காலையென்று சேர்க்க. காலம் கோடைக்காலமாகையாலே, அல்லாத காலங்களை நினைத்தென்னினர்.

ககஅ-கூ. ஐந்துகாலமுங்கழிந்தது கூறுகின்றார், 'உடைப்பெருங் கொழுநரொடு பருவமெண்ணும் படர்தீர் காலை' என்றார்; என்றது, வேனிற்காலத்தை.

கஉ0. ஆயம் - நிரை. கஉக. கோடைத்தன்மை (பா) கீடியகுன்று.

கஉஉ. (பா) பொத்திய - பொதிந்த.

---

[1] வில்விழா: திணைமா. சுஉ; குறுந். ககூ.

(பி - ம்.) * 'கனைவெரி'

கோடையொடு புகுந்து கூடலாண்ட
[1] வேனில் வேந்தன் வேற்றுப்புலம் படர
கஉரு. வோசனிக் கின்ற வுறுவெயிற் கடைநாள்
வையமுஞ் சிவிகையு மணிக்கா லமளியு
[2] மூய்யா னத்தி னுறுதுணை மகிழ்ச்சியுஞ்
சாமரைக் கவரியுந் தமனிய வடைப்பையுங்
கூர்நுனை வாளுங் கோமகன் கொடுப்பப்
கஙஂ. பெற்ற செல்வம் பிறழா வாழ்க்கைப்
பொற்றொடி மடந்தையர் புதுமணம் புணர்ந்து
செம்பொன் வள்ளத்துச் சிலதிய ரேந்திய
வந்தீந் தேறன் மாந்தினர் மயங்கிப்
பொறிவரி வண்டினம் புல்லுவழி யன்றியு
கஙரு. நறுமலர் மாலையின் வறிதிடங் கடிந்தாங்
கிலவிதழ்ச் செவ்வா யிளமுத் தரும்பப்
புலவிக் காலத்துப் போற்று * துரைத்த

(எக) 'காதலஞ்செல்வரொடு' என்றதுமுதல் (அரு) 'வீழ்பூஞ் சேக்கை மேலினி திருந்து' என்றது இறுதியாக முதுவேனிற்காலங் கூறினபடி.

கஉங. கோடை - மேல்காற்று. கஉச. படர - படர்கை காரணமாக.

கஉச - ருி. ஓசனித்தல் - வெக்கையால் தலையெடுத்தல்; கடைநாள் - வேனிற் பின்னுளென்றுமாம். வேற்றுப்புலம் படர்தற்கு எடுத்துப்பார்க்கின்ற முதுவேனில் கழிகிறநாளிலே; சிந்தாமணியினும், [3] "ஓசனிக்கின்ற வன்னம்" என்றார்.

கஉள. உய்யானத்து மகிழ்ச்சி - சோலையிலே சேவிப்பாருடனிருந்து விளையாடுங்காண்டல்; உய்யானங்களில் உறுதுணையோடு மகிழுமகிழ்ச்சியுமாம்.

கஉஅ. சாமரையிடப்பெறுகையும், பொன்னுற்செய்த வெற்றிலைப்பெட்டி பிடித்திடப்பெறுகையும் வரிசை.

கஉக. கோமகன் - இராசராசன்; பாண்டியன்.

கஙஂ. அப்படிப்பெற்று உடையராதல் - சிலதியர் சூழ்ந்து வாட்பிடிக்கப் போதல் முதலியன.

(ககஅ) கொழுநரொடு (கஙக) புதுமணம்புணர்ந்தென்றுகூட்டுக.

கஙச - ருி. வண்டுபொருந்தின இடமன்றியே களிப்பாலே வறிதிடத்திலும் மாலைகொண்டோச்சி.

---

[1] தக்கயாகப்பரணியில், ருிஎஉ - ஆம் தாழிசையுரையில் இவ்வடிமேற்கோள்.
[2] மணிமேகலை, ஙஃ: ருிஎ. [3] சீவகசிந்தாமணி. உகூருிஎ.
(பி - ம்.) * 'உணர்த்திக்காவி'

காவியங் கண்ணூர் கட்டுரை * யெட்டுக்கு
[1] நாவொடு நவிலா நகைபடு கிளவியு
கசஂ. மஞ்செங் கழுநீ † ரரும்பவிழ்த் தன்ன
செங்கய னெடுங்கட் செழுங்கடைப் பூசலுங்
கொலைவிற் புருவத்துக் கொழுங்கடை சுருளத்
திலகச் சிறுநுத லரும்பிய வியருஞ்
செவ்வி பார்க்குஞ் செழுங்குடிச் செல்வரொடு
கசடு. வையங் காவலர் மகிழ்தரு வீதியுஞ்
[2] ‡ சுடுமை ணேரு வடுநீங்கு சிறப்பின்
மூடியர சொடுங்குங் கடிமனை வாழ்க்கை
[3] வேத்தியல் பொதுவிய லெனவிரு திறத்து
மாத்திரை யறிந்து § மயங்கா மரபி

கசுஅ. கட்டுரை (பா) எடுக்குநர் - வார்த்தைசொல்லப் புகுகின்றவர்.

கசுசு. நகைபடு கிளவி - களியாற் கேட்டாரை மகிழ்ச்சிபிறப்பிக்கும் வார்த்தை; கேட்டோர்க்கு நகைவினைவிக்கும் நாவாற்சொல்லாத கிளவியுமாம்.

கசூஉ. சுருளல் - புருவம் கோபத்தால் ஏறுவது இழிவதாகை.

கசூசு. செழுங்குடிச்செல்வர் - அரசரல்லா ஏனையோர்.

கசூசு - எ. ஒடுவேயாது பொற்றகடுவேய்ந்தமனை; அன்றியும், சாதிக்குற்றப்பட்டால் தலையிலே செங்கலேற்றி ஊர்சூழ்வித்துக் கழித்துவிடுதல் மரபு; இன்னும், சுடுமண் - மட்பாத்திரமுமாம். மூடியரசு ஒடுங்குங் கடிமனை - [4] ஆசைப்பட்டு அரசுவைகுமனை; அரசர் ஆர்வத்தாலடைங்குமனையென்றுமாம். அரசொடுங்குமனை; அரசர்புகுந்தாலும் தெரியாதபோரிடமானமனையென்றுமாம்.

கசூஅ. வேத்தியல் - அரசர்க்கு ஆடுங்கூத்து. பொதுவியல் - எல்லார்க்கும் ஒப்ப ஆடுங்கூத்து.

---

[1] "நாவொடு நவிலா நகைபடுதீஞ்சொல்" (அகநா. கசு.)

[2] பெருங். க. கசு: கடுகு; மணி. கஅ: நஉ.

[3] "வேத்தியல் பொதுவியலென்றிருதிறத்து" மணி. உ. கஅ. [4] சீவக. கoகூ.

(பி - மீ.) * 'எடுக்கும்' † 'அரும்பவிழ்த்தன்ன' ‡ 'சுடுமனைங்குவடு' § 'மகிழ்தருமரபின்'

கரூ0. ஞடலும் வரியும் பாணியுந் தூக்குங்
* கூடிய குயிலுவக் கருவியு முணர்ந்து
நால்வகை மரபி னவினயக் களத்தினு .
† மேழ்வகை நிலத்தினு மெய்திய விரிக்கு
மலைப்பருஞ் சிறப்பிற் றலைக்கோ லரிவையும்
கரூரு. [1] வாரம் பாடுந் தோரிய மடந்தையுந்
தலைப்பாட்டுக் கூத்தியு மிடைப்பாட்டுக் கூத்தியு
நால்வேறு வகையி ‡ னயத்தகு மரபி
னெட்டுக் கடைநிறுத்த § வாயிரத் தெண்கழஞ்சு
முட்டா || வைகன் முறைமையின் வழாஅத்
கசுo. தாக்கணங் கனையார் நோக்குவலைப் ¶ பட்டாங்
கரும்பெற ** றறிவும் பெரும்பிறி தாகத்
தவத்தோ ராயினுந் தகைமலர் வண்டி
னகைப்பதம் பார்க்கு மிளையோ ராயினுங்
காம விருந்தின் மடவோ ராயினு
கசுரு. மேம வைக லின்றுயில் வதியும்

கரூ0. ஆடல் - இப்படிப்பட்டகூத்து. வரி - வரிப்பாட்டு. பாணி - தாளம். தூக்கு - வாச்சியம்.

கரூஉ. அவினயம்: ''நிற்றலியங்கலிருத்தல் கிடத்தலென், றத்தகுநான்கே யவினயக் களனே.'' களன் - அரங்குமாம்.

கரூங. எழுவகை நிலத்தினுமெய்தியவரியாவது - ஆற்றுவரி, சார்த்துவரி, தினைநிலைவரி, மயங்குதினைநிலைவரி, முகமுடைவரி, முகமில்வரி, படைப்புவரி யென்பனவாம்; அன்றிக் குரன்முதலான ஏழுசுரம்பென்றுமாம்.

கரூச. தலைக்கோ லரிவை - கூத்தாடுமவள்..... ..

கசுo. தாக்கணங்கு - தீண்ட வருத்தஞ்செய்யும் தெய்வம்; சீதேவியுமாம். நோக்காகிய வலையிலேபட்டு.

கசுக. பெரும்பிறிதாகை - கையற்றுப்போகை.

(கசுஉ) தவத்தோர்களாயினும் வண்டுபோல (கசுங) இவர்கள் நகையின் செவ்விபார்க்கும் காமுகராயினும் (கசுச) காமத்துக்குப் புதியமடவோராயினும் (கசுரு) தங்கியேபோகவேண்டும் (கசுள) வீதி.

(கசுக) அரும்பெறலறிவும் பெரும்பிறிதாக (கசுo) நோக்குவலைப்பட்டுத் (கசுஉ) தவத்தோர்முதலாயினுர் (கசுரு) இன்றுயில்வதியும் (கசுள) வீதியென்க.

---

[1] தொல். மரபு. சூ. கoள - பேர். மேற். டீ. (பா) 'தோரிய மகளிருந்.'

(பீ - மு.) * 'கூடிசைக்குயிலுவ' † 'எழுவகை நிலத்தினுமெய்தியது' ‡ 'நலத்தகு' § 'ஆயிரக்கழஞ்சு' || 'வைகலின்' ¶ 'பட்டங்கு' ** 'அறிவுபெரும்'

பண்ணுங் * கிளையும் பழித்த தீஞ்சொ
[1]லெண்ணெண் கலையோ டிருபெரு வீதியும்
வையமும் பாண்டிலு மணித்தேர்க் கொடுஞ்சியு
மெய்புகு கவசமும் வீழ்மணித் தோட்டியு
களஎ. மதள்புனை யரணமு மரியா யோகமும்
வளைதரு குழியமும் வால்வெண் கவரியு
மேனப் படமுங் கிடுகின் படமுங்
கானப் படமுங் † காழூன்று கடிகையுஞ்
செம்பிற் செய்நவுங் கஞ்சத் தொழிலவும்
களரு. வம்பின் மூடிநவு மாலையிற் புனைநவும்
‡ வேதினத் துப்பவுங் கோடுகடை தொழிலவும்

கசுசு. கிளை - கிள்ளை; கிள்ளையைக் கிளையென இடைக்குறைத்தார். கிளை - பண்ணின் றிறமுமாம்.

கசுள. எண்ணெண்கலையோர் - தளியிலார். இருபெருவீதி - சிறுதனம் பெருந்தனம்பெறுவார்வீதி.

கசுஅ. [2] பாண்டில் - இரண்டுருளையையுடைய சகடம்; கொல்லாப்பாண்டில்; பாண்டியென்றுபாடமோதிக் கூடாரப்பண்டியென்பாருமுளர். கொடுஞ்சி-தேர்மொட்டு.

கசுக. கவசம் - கைத்தளம். விரும்பப்பட்ட அழகிய தோட்டி.

களஎ. அதள்புனை யரணம் - தோற் கைத்தளம். அரியாயோகம் - விசாதி கட்குக் கொடுக்குமருந்து; சன்னகமுமென்ப; அரித்தல்-கெடுத்தல்; பிணையைக் கெடுத்தலையுடைய ஆராயப்பட்ட ஔடதமென்றுமாம்.

களக. குழியம் - வாசவுண்டை; கட்டுக்குழியமுமென்ப.

களஉ. ஏனப்படம் - பன்றிமுகக்கடகு; பன்றிவலியுமாம். கிடுகின்படம் - சிறுகடகு.

களங. கானப்படம் - காடெழுதினகடகு; யானை சிங்கமுதலிய சித்திர மெழுதினகடகுமாம்; இடத்துங்கிழ்பொருளின்றெழுதிலே இடத்திற்கேற்றினார்; பெருவாரல்வலியுமாம். கர்ழூன்று கடிகை - காழாற்பிணித்த கடகு; படங்குமாம்.

இவை நான்கும் கிடுகின்விசேடம்.

களரு. மாலையிற்புனைந - கிடேச்சுமாலை.

களசு. வேதினத் துப்பவும் - ஈர்வாளால் வலியப்பெற்றனவும்; என்றது ஈருங்கருவியாற் பண்ணப்பட்டன. கோடு - தந்தம்.

---

[1] சிலப்பதிகாரம், உஉ: கஅ - கூ; மணி. உ: உகூ; பெருங். க. ஙடு: அச - டி.
[2] பிரபுலிங்கலீலை, மாயையுறப்பத்திகதி, களஎ.

(பி - ம்.) * 'கிளையும்' † 'காழூன்று' ‡ 'வேதினத்தீர்ப்பவுங்கோடு கடைத் தொழிலவும்'

புகையவுஞ் சாந்தவும் பூவிற் பூணவும்
வகைதெரி வறியா வள்ந்தலை மயங்கிய
வரசுவிழை திருவி னங்காடி வீதியுங்
கஅ0. காக பாதமுங் களங்கமும் * விந்துவு
மேகையு நீங்கி † யியல்பிற் குன்ற
நூலவர் நொடிந்த நுழைநுண் கோடி
நால்வகை வருணத்து நலங்கே ழொளியவு
மேகையு மாலையு மிருளொடு துறந்த
கஅரு. பாசார் மேனிப் பசுங்கதி ரொளியவும்
பதுமமு நீலமும் விந்தமும் படிதமும்
விதிமுறை பிழையா விளங்கிய சாதியும்
பூச வருவிற் பொலந்தெளித் தணியவுந்
தீதறு கதிரொளித் தெண்மட் டிருவவு

களள. பகையவுமென்றது, புகைக்குறுப்பான நேர்கட்டிமுதலான ஐந்தும். சாந்தவும் - சாந்துக்குறுப்பான மூப்பத்திரண்டிறுப்பும். (பா) பூவிற்பூணுஞ் - மாலைவிகற்பங்கள்.

களசு - எ. தந்தத்தாற் கடைந்தவை - இரதத்திற்குச் செய்தவை சந்தனத் தாற்செய்தவை - கலைவகூட்டின. பூவிற்பூணந்தவை - மாலை.

களஅ. வேறுபாடுதெரியாவளமென்றார், மூன் எண்ணியவற்றை. (பா) மயங்கி - மயங்கப்பட்டு.

கஅ0 - அகூ. காகபாதம், களங்கம், விந்து, இரேகையென்னும் இந்நான்கு குற்றமுமின்றிக் கோடியும் பலகையுமுள்ளன நல்லவயிரம்.

கூஅச - ரு. ஏகையும் மாலையும் இருளும் மரகதத்துக்குக் குற்றம்; இக்குற்ற மற்றுப் பசுங்கதிரொளியையுடையன மரகதம்.

கூஅசு - எ. பதுமமும் நீலமும் விந்தமும் படிதமுமாகிய விதிமுறையிற் சொல்லுகிற குற்றமின்றி விளங்குகின்றவை சாதிமாணிக்கம்.

கூஅஅ. (பா) பூணைக்கண்போன்று பொன்னைத் தேய்த்தாற்போன்றவை புருடராகம்; பூசை - பூணை.

கூஅகூ. ஒளியினையுடைய மட்டிநிறமாயிருப்பன கோமேதகம்.

(பி - ம்.) * 'விந்துவு' † 'இயற்பிற்'

ககூ0. மிருடெளித் தனையவு மிருவே றுருவகூ
மொருமைத் தோற்றத் தைவேறு வனப்பி
னிலங்குகதிர் விடூஉ * நலங்கெழு மணிகளுங்
காற்றினு மண்ணினுங் கல்லினு நீரினுந்
தோற்றிய குற்றந் துகளறத் துணிந்தவுஞ்
ககூடு. சந்திர குருவே யங்கா ரகனென
வந்த நீர்மைய வட்டத் தொகுதியுங்
கருப்பத் துளையவுங் † கல்லிடை மூடங்கலுங்
திருக்கு நீங்கிய ‡ செங்கொடி வல்லியும்
வகைதெரி மாக்க டொகைபெற் § றேங்கிப்
உ00. பகைதெற லறியாப் பயங்கெழு வீதியுஞ்
சாத ரூபங் கிளிச்சிறை யாடகஞ்
சாம்பூ நதமென வோங்கிய கொள்கையிற்
பொலந்தெரி மாக்கள் கலங்களு ரொழித்தாங்
கிலங்குகொடி யெடுக்கு || நலங்கிளர் வீதியு

ககூ0. இருள் தெளித்தனைய நிறத்தினையுடையன நீலம். இருவேறுருவினையுடையன வயிரியம்.

ககூக. ஒருமைத்தோற்றம் - ஓரிடத்தே தோற்றல்; ஓரிடமென்றது, பளிங்கை.

ககூங - ச. காற்றுமுதலான இக்குற்றம் நீங்கினவும். குற்றமென்றது, முன்புசொன்ன குற்றங்களை.

ககூடு. சந்திரகுரு - வெண்முத்து. அங்காரகன் - செந்நீர்முத்து. வட்டத்தொகுதி - ஆணிமுத்து.

ககூஎ. கருப்பத் துளை - உள்ளே துளையாகை. (பா) கல்லுடை மூடங்கல் - கல்லே உள்ளேயுடைய வளைவு.

ககூஅ. திருக்கு - திருகல்; இவை மூன்றுகுற்றமுநீங்கிய செங்கொடிவல்லி - பவளம்.

உ0க - ங. சாதரூபம் கிளிச்சிறை ஆடகம் சாம்பூநதமென்னும் இவை நான்கும் பொன்னின்சாதி. பொலந்தெரி மாக்கள் - செட்டியர்.

உ0ச. கொடியெடுத்தல், பொருளெல்லைக்கு.

(பு - ம்.) * 'தலங்கேழ்மணிகளும்' † 'கல்லுடைமூடங்கருத்' ‡ 'செழுங் கொடிவல்லியும்' § 'ஓங்கிய' || 'தலத்தருவீதி'

நூலினு மயிரினு நுழைநூற் பட்டினும்
பால்வகை தெரியாப் பன்னூ றடுக்கத்து
நறுமடி செறிந்த வறுவை வீதியு
நிறைக்கோற் றுலாத்தர் * பறைக்கட் பராரைய
ரம்பண வளவைய ரெங்கணுந் திரிதரக்
கால மன்றியுங் கருங்கறி மூடையொடு
கூலங் குவித்த கூல வீதியும்
பால்வேறு தெரிந்த நால்வேறு தெருவு
[1] மந்தியுஞ் சதுக்கமு மாவண வீதியு
மன்றமுங் கவலையு மறுகுந் திரிந்து
விசும்பகடு † திருகிய வெங்கதிர் நுழையாப்
பசுங்கொடிப் ‡ படாகைப் பந்தர் நீழற் [2]
காவலன் பேரூர் கண்டுமகிழ் வெய்திக்
கோவலன் பெயர்ந்தனன் கொடிமதிற் புறத்தென்.

நூற்பட்டு - பட்டுநூல். எ. பலமடி.

அ - கூ. (பா) பறைக்கட்பராரை யம்பணமென்றது, பட்டமணிந்த வாயையும் பரிய அரையையுமுடைய அம்பணவளவை; ஆவது அளக்கும் பறைமுதலியன.

கறிமூடை - மிளகுபொதி.

பால்வேறு தெரிந்த - பகுதி வேறு தெரிந்த. நால்காய் வேறு படுந் தெரு.

அந்தி - மூச்சந்தி. சதுக்கம் - நாற்சந்தி.

கவலை - பலவாய் ஒன்றான முடுக்கு. மறுகு - குறுந்தெரு.

விசும்பகடு திருகிய - விசும்பிடத்து முறுகிய.

(அ) தூசிற்கொடிகீழலிலே (அ) திரிந்து.

(ச) மண்டிலம் (சு) தியிலெடுப்ப (சூ) யவனர்க்கு அயிராதுபுக்கு (அ) நகரிகண்டு (அ) திரிந்து (அ) மகிழ்ந்து (அ) மதிற்புறத்துப் பெயர்ந்தனனெனக்கூட்டுக.

---

[1] "சதுக்கமுஞ்சந்தியும்" முருகு. உ.

(பி - ம்.) * 'பறைக்கணைப்பர' † 'திரிதிர' ‡ 'பதாகை'

சூ

க - உ. புறஞ்சிறைப் பொழிலும்.....புள்ளெழுந் தார்ப்ப

(இ - ள்.) முன்னர்ப் புரிந்துபுக்க மூதூர்ப் புறஞ்சேரியிடத்துளவாகிய பொழில்களிடத்தும் விளங்காகின்ற நீர்நிறைந்த பண்ணையிடத்தும் வளைந்த கதிரையுடைய கழனியிடத்தும் உளவாகிய புட்கள் துயிலெழுந்து, ஆரவாரியா நிற்பவென்க.

பிறங்குதல் - மிகுதலுமாம்.

கூ - சு. புலரி வைகறை.....துயி லெடுப்ப

(இ - ள்.) வைகறைக்காலக்கழிவும் புலருதன்முன்னுமாகிய அக்காலத்தே பொய்கைகளில் தாமரைப்பூவின்முகைகளைப் புரிநெகிழ்த்து மலர்வித்த [1] உலகமெல்லாந்தொழப்படும் ஆதித்தமண்டிலமான து பகைவேந்தர் தலைகள் நடுங்க விதிர்த்தேந்திய வாளையுடைய செழியனது புகழானேங்கி வண்மையானுயர்ந்த கூடலாகியவூரைத் துயிலெடுப்பாநிற்பவென்க.

ஆர்ப்ப அவிழ்த்த மண்டிலம் எடுப்பவென்க.

எ. நுதல்விழி நாட்டத் திறையோன் கோயிலும்—

(இ - ள்.) இறைவி கண்புதைத்தபொழுது நெற்றியிற்புறப்படவிட்ட கண்ணையுடைய இறைவனதுகோயிலும்,

விழிநாட்டம், விழைத்தொகை; இனி நுதலில் இமையாநாட்டமென்றுமாம்; காமனைவிழித்த நாட்டமெனவுமாம்.

அ. உவணச் சேவ லுயர்த்தோ னியமமும்—

(இ - ள்.) உவணப்புட் சேவலைப் பதாகையாகவுயர்த்த திருமால்கோயிலும், உவணம் - கருடன்.

கூ. மேழி வலனுயர்த்த வெள்ளை நகரமும்—

(இ - ள்.) மேழியாகியபடையை வலமாகவேந்திய பலதேவர்கோயிலும், வலன் - வென்றியுமாம். மேழி - ஆகுபெயராற் கலப்பை. வெள்ளை - வெள்ளையோனெனப் பண்புகொள்பெயர்.

கக. கோழிச் சேவற் கொடியோன் கோட்டமும்—

(இ ள்.) கோழிப்புள்ளாகிய சேவற்கொடியையுடைய முருகவேள்கோயிலும், சேவற் கொடியெம்மூர், படைக்கொடியைவிலக்குதற்கு.

கஉ. அறத்துறை விளங்கிய வறவோர் பள்ளியும்—

அறத்துறை - அறமும் அறத்தின்துறையுமென உம்மைத்தொகை. அறமாவது இருவகைத்து; இல்லறமும் துறவறமுமென. அவற்றுள் இல்லறமென்பது கற்புடைமனையியோடு இல்லின்கணிருந்துசெய்யுமறம்.

அதன்துறையாவன: [2] தன்னையொழிந்த மூவர்க்கும் துறந்தார்க்கும் அவ்வாதவர்க்கும் இறந்தார்க்கும் தேவர்க்கும் முனிவர்க்கும் விருந்தினர்க்கும்

---

[1] முருகு. க. [2] திருக்குறள், சக - ஆம் செய்யுள்முதலியவற்றைப் பார்க்க.

சுற்றத்தார்க்கும் பிறர்க்கும் துணையாதலும், வேள்விசெய்தலும், சிலங்காத்தல் முதலியனவும், அருளுடன்புமுடையனுதலும், பிறவும்.

இனித் துறவறமாவது, [1] நாகம் தோலுரித்தாற்போல அகப்பற்றும் புறப் பற்றுமற்று இந்திரியவசமறுத்து மூற்றத்துறத்தல்.

அதன் றுறையாவன :—சரியை, கிரியை, யோகம், ஞானமென்பன.

அவற்றுள், சரியை அலகிடல்முதலியன.

கிரியை பூசைமுதலியன.

யோகம் எண்வகைய; அவை :—இயமம், நியமம், ஆசனம், வளிநிலை, தொகைநிலை, பொறைநிலை, நினைதல், சமாதியென்பன.

அவற்றுள், [2] "பொய்கொலை களவே காமம் பொருணசை, யிவ்வகை யைந்து மடக்கிய நியமம்" எனவும், "பெற்றதற் குவத்தல் [3] பிழம்புநனி வெறுத்தல், கற்பன கற்றல் கழிகடிந் தூய்மை, பூசனைப் பெரும்பய மாசாற் களித்தலொடு, பயனுடை மரபி னியம மைந்தே" எனவும், "நிற்ற லிருத்தல் கிடத்த னடத்தலென், றெற்ற நான்கி னெல்கா நிலைமையொ, டின்பம் பயக்குஞ் சமய முதலிய, வந்தமில் நிறப்பி னாசன மாகும்" எனவும், "உந்தியொடு புணர்ந்த விருவகை வளியுங், தந்த மியக்கந் தடுப்பது வளிநிலை" எனவும், "பொறியுணர் வெல்லாம் புலத்தின் வழாமை, யொருவழிப் படுப்பது தொகை நிலை யாமே" எனவும், "மனத்தினை யொருவழி நிறுப்பது பொறைநிலை" எனவும், "நிறுத்திய வம்மன நிலைதெரி யாமற், குறித்த பொருளொடு கொளுத்து வது நினைவே" எனவும், "ஆங்வனங் குறித்த வம்முதற் பொருளொடு, தான்பிற னாகாத் தகையது சமாதி" எனவும் வருவனவற்றாலறிக.

ஞானம் .....

(இ - ள்.) அறமும் அதன் றுறைகளும் விளங்குதற்குக் காரணமாகிய அறவோர்களுடைய இருப்பிடங்களும்,

ஈண்டுப் பள்ளியென்றது, அவ்விடங்களை.

கஉ. மறத்துறை விளங்கிய மன்னவன் கோயிலும்—

(இ - ள்.) மறமும் அதன் றுறைகளும் விளங்குதற்குக் காரணமாகிய மன்னவனது கோயிலும்,

இதுவும் உம்மைத்தொகை.

அதன் றுறையாவன எழுவகைய; அவை :—வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பையெனவிவை. இனி விரிப்பினகலும். "தொகை மறவரதுதறுகண்" என்பதனுன் இவையும் இவற்றின் றுறைகளும் வந்தவழிக் கண்டுகொள்க.

கோயில் நியமம் நகரம் கோட்டம் பள்ளியென்பனவற்றின்வந்த பரியாய அலங்காரமுணர்க.

---

[1] "படநாகந் தோலுரித்தாற் போற்றுறந்து கண்டவர்மெய் பணிப்ப தோற்றிட், டினுக வைம்பொறியும் வென்றுரிக்கு" (கடிசூ) என்றுரித்தாமணியிலும்.

[2] இச்சூத்திரமுதலிய எட்டும், "நாவிருவழக்கிற்றுபதபக்கமும்" (தொல். புறத். சூ. உ0. ந.) என்பதன் உரையிலும் எடுத்துக்காட்டப்பெற்றுள்ளன. இவை பதஞ் சலியோகசூத்திரக்கருத்துக்களை ஒத்திருக்கின்றன. [3] பிழம்பு - கூட்டம்.

கஙூ - ச. வால்வெண் சங்கொடு.....கணைகுர லியம்ப

(இ - ள்.) மூற்கூரியவிடங்களிற் பலவகையாற்பொருந்திய சிறப்பினையுடைய காலிப்போதின்முழவம் சங்கத்தோடும் கொம்போடுமியம்பவென்க.

இயம்பவெனப் பொதுமரபாற்கூறினர். வால்வெண்சங்கு, இருபெய ரொட்டுப் பண்புத்தொகை. ஓடி, எண்ணெஞ்சுவாய்க் [1] கொம்பினெழிலை உணர்த்திநின்றது.

கஙி - சூ. கோவலன் சென்று.....கைதொழு தேத்தி

(இ - ள்.) அக்காலத்தே கோவலன்சென்று கவந்தியடிகளைக் கையாற் றொழுது நாவானேத்தியென்க.

சென்றென்பதனால், அவர் வேறிடத்திருந்தமையும் கொள்கையினென்பதனால் தியானத்தோடிருந்தமையுங்கூறினர். கொள்கையினிருந்தவென்பதற்கு இவர்களுறும் தன்பமுறுதிருந்தவெனவுமாம்.

கள - உ0. நெறியி னீங்கியோர்.....செய்தவத் தீர்யான்

(இ - ள்.) செய்ததவத்தினையுடையீர், தவஞ்செய்யாதயான் ஒழுக்கத்தினின்று நீங்கினேனீர்மையையுடையேனெனி மலர்போலும் மெல்லிய மேனியையுடைய இவள் நடுங்கித் துயரமுறும்படி முன்னம் கனவினும் நினைந்தறியாததெய்த்தே அருவழியிடை எங்ஙந்திரிந்து தன்பமுழந்து சிறுமையுற்றேனென்றனென்க.

ஒழுக்கமுடைய விழுக்குடிப்பிறந்தோர் நாணுடைமகளிரொடு நீணெறிக் செல்லாரென்பதுகருதி, 'நெறியினீங்கியோர் நீர்மையேனெ' என்றனென்றுணர்க அன்றி, நாடுகாண்காதைக்கண், [2] "வம்பப்பரத்தை வறுமொழியாளனெடு,.....சென்றோர், காமனுந் தேவியும் போலு மீங்கிவரார்" எனவும், [3] "உடன்வயிற் றோர்க ளொருங்குடன் வாழ்க்கை, கடவது முண்டோ" எனவுங் கூறுதலும், அதனால் அவர்க்குச் சாபம்வருதலும்போல்வன இவளை உடன்கொண்டு வருதலான்வந்தனவென்று தன் அறிவின்மையை வெறுத்து நொந்துகூறினனெனினுமாம். சிறுமை - ஈண்டு அறிவின்மை.

உக - ச. தொன்னகர் மருங்கின்.....அடிகளீங் கென்றலும்

(இ - ள்.) [4] அடிகளே, இத்தொன்னகரிடத்துள்ள வணிகர்க்கு என்றன்மையுணர்த்திவருந்துணையும் இவட்கு ஏதமின்றுகக் காத்தருளவேண்டுமெனக்கூறக்கருதியவன் தெளிந்து, [5] "போதுவல் யானும் போதுமின்" என்றவன்றே இவள் நும் பாதமாகிய காவலியுடையாளாதலின், இவட்கு இனி ஓதேதமுண்டோ; இல்லையென்று கையடித்துக் கூறினனெனவென்க.

---

[1] கொம்பென்னும் வாத்தியம் சங்குடன்சேர்த்துக் கூறப்படும்; "சங்குங்கருங் கோடும்" பு - வெ. கரந்தை. ங.

[2] சிலப்பதிகாரம், க0: உகங - உஉ, [3] சிலப்பதிகாரம், க0: உஉள - அ.

[4] அடிகளென்பது பெண்பாலார்க்கும் வருதலை, "அடிகளுமுளரோ" (சீவக. கஎஅச.) என்பதனாலும் அறிக. [5] சிலப்பதிகாரம், க0: சூ0.

எண்ணிலை - மாசாத்துவாணிகன்மகனுகியும் இங்ஙனமாகிய தன்மை. காறு - அளவு. பைந்தொடி, அன்மொழித்தொகை. ஈங்கு ஏதமுண்டோவென்றன், மூன்னர் இவர் வழித்துயர் கீக்கி இவ்விடம் தலைப்படுத்தமைதோன்ற.

உரை - சூ. கவுந்தி கூறும்.....துயருழந்தோய்

(இ - ள்.) அங்ஙனங்கூறிய கோவலற்குக் கவுந்தியடிகள் கூறுவார்: முற்பிறப்பில் நல்வினையைமிகச்செய்தநீ அதனையொழிந்து பின்பு சிறிது தீவினையுஞ் செய்த பக்கத்தானே நின்னினையையும் தந்தைசெல்வத்தையும்விட்டு நின்காதலியோடும் தனித்துத் துயரத்தையுழந்தோனே,

இனிப் பேரின்பத்தைத்தரும் தவத்தினின்றேர் அதனைவிட்டு இழிதலின் வினைவாகிய நிரயத்துன்பத்தையுறுதலுமாம். தனித்துயர் - ஒப்பற்றதுயருமாம். [1] தீர்தல், விடுதற்பொருட்டு உழத்தல் - அனுபவித்தல்.

உள - ஙஉ. மறத்துறை நீங்குமின்.....பெரும்பே துறுவர்

(இ - ள்.) எவ்வுயிர்க்கும் யாவரும் மறஞ்செய்தற்றெழிலினின்றும் நீங்குமின்; நீங்கீராயின், அதன்விளைவாகிய துன்பத்தைத் தீவினையூட்டுமென்று அறங்கூறையுணர்த்தும்பெரியோர் ஒக்குந்திறங்களானே நாவாகிய கடிப்பான் வாயாகியபறையை அறைந்துசாற்றினும் புண்ணியத்தினுறுதியற்றேர் அதனை உறுதியாக உட்கொள்ளாராகிப் பின்னர்த் தீங்கையுடைய வெய்ய வினைதோன்றித் துன்பத்தை நுகர்விக்குங்கால் தாது பேதைமைபற்றுக மிகவும் செயலற்று அழியாநிற்பர்.

மறம் - அஞ்சம். அறம் - இதம். திறம் - நீதிநன்றென்னுந்திறம். [2] செயலறவு, எதிரதுபோற்றலென்னுமுத்தியாற் கொள்ளப்பட்டது.

ஙஙு - ச. ஒய்யா வினைப்பயன்.....கற்றறி மாக்கள்

(இ - ள்.) கற்கப்படுவனவற்றைக்கற்று அவற்றின் பயனையுணர்ந்தபெரியோர் போக்கப்படாத தீவினைப்பயனுகிய துன்பத்தைநுகருங்கால் அதற்கிரங்கிச் செயலறவை நெஞ்சிற்கொள்ளார்; இது நாம்செய்யவந்ததென்று கொள்ளுவரென்க.

ஒய்தல் - போக்குதல்.

இனி, இன்பமும் பொருளும் சிறிது இன்பம்பயந்து பெரிது துன்பம் விளைக்குமென்பதூஉம், அறம் சிறிது துன்பம்பயந்து பெரிது இன்பம்விளைக்குமென்பதூஉங்கூறுவார்:—

ஙநி - சநி. பிரிதற் றுன்பமும்.....தொன்மைத் தாதலின்

இன்பத்தையும் பொருளையும் ஆகுபெயராற் பெண்டிரும் உண்டியுமென்றராகலிற் பிரிதலையும் புணர்தலையும் இரண்டற்குமேற்றக.

இனி நிறுத்தமுறையானே கூறுவார்:—

---

[1] "தீர்தலுந் தீர்த்தலும் விடற்பொருட் டாகும்" தொல். உரி. சூ. உஉ.

[2] அடி, நச பார்க்க.

(இ - ள்.) மகளிரைப் புணர்தற்பொருட்டு முயற்சியான்வருந்துன்பமும் அங்ஙனம் புணர்ந்தபின்னர்ப் பிரிதலான்வருந்துன்பமும் அவை நீட்டித்த விடத்து அங்ஙனெறுத்தலான்வருந்துன்பமுமென முழுவதும் துன்பமேயாம்; இனிப் பொருள்புணர்தற்பொருட்டு முயற்சியான்வருந்துன்பங்களும் அங்ஙனம்புணர்ந்தபொருள் பிரிதலான் வருந்துன்பமும் அவையிரண்டும் நீட்டித்த விடத்துக் கட்புலனுகாத வறுமை ஒறுத்தலான்வருந்துன்பமுமென முழுவதும் துன்பமே; ஆகலின், இவ்விருதிறத்தினுந்தோன்றும் துன்பமனைத்தும் மகளிரைப் புணர்ந்து மயங்கினோர்க்குளதாவதல்லது பற்றற்ற தனிவாழ்க்கையையுடைய பெரியோரிடத்தில்லை; அங்ஙனமாகிய துன்பங்களை இன்பமெனக்கொண்டோர் உறக்கடவ இடங்கொள்ளாத்துன்பங்களை மனத்தானுணர்ந்தனராகி முனிவரால் நீக்கப்பட்ட இவ்விருவகைக்காமமே சார்பாகப் பற்றுள்ளத்தினின் றழந்து துன்பக்கடலிலழுந்திக் கரைகாண்பபடாத இடும்பையையெய்தினோர் இன்று நின்னளவினோரல்லர்; முன்னும் எண்ணிறந்தோராவர்; பழகிப்போந்த முறைமையதாதலானன்றேயென்றுரைக்க.

பிரிதற்றுன்பம் பெரிதாகலின் முன்வைத்தாரேனும் புணர்தற்பின்னரது பிரிவாக்கின், மாற்றிக்கொள்ளப்பட்டது. உருவிலாளனென்பதைக் காமன் மேலும் கட்புலனுகா வறுமைமேலுமேற்றுக. இல்லை, முற்று. இறந்தோர் - கழிந்தோருமாம். பலரென்றார், தேவரினுமுண்டென்பதுதோன்ற. ஆல், அசை.

இனி, அப்பலருள், தேவரிற்சிறந்தோனொருவனையும், மக்களுட்சிறந்தோனொருவனையும் எடுத்துக்காட்டுவார் :—

சுசு - கூ. தாதை யேவலின்.....நெடுமொழி யன்றே

(இ - ள்.) தன்தந்தையேவலானே மனைவியோடும் வனத்திற்போய் அவள் தன்னைப்பிரிதலானே கடிய துன்பத்தையுழந்தவன் வேதத்திற்குமுதல்வனுகிய நான்முகனைப் பயந்தோனென்பதனை உலகமெல்லாமறியவும் நீ யறிந்திலையோ ? அஃது உலகினடக்கின்ற புராணகதையன்றேவென்றுரைக்க.

அறிந்தனையாயின் இரங்காயென்பதுகருதி அறிந்திலையோவென்றார். நெடுமொழி - புகழுமாம். இதனுள், இராமன் சீதைபொருட்டாக வில்லேற்றல் முதலிய புணர்தற்றுன்பமும், பின்னர் அவள் பிரிதலான்வருந்துன்பமும், தசரதன் தனக்கு முடிசூட்டத்தொடங்கிய பொருள் புணர்தற்பொருட்டு வருந்துன்பமும், பின்னர் அதனைக் கைகேசிவிலக்க அப்பொருள் பிரிதலான்வருந்துன்பமும் ஈண்டுவந்தவாறுணர்க. இது தேவரிற் சிறந்தோனொருவனைக் காட்டியது.

கூ - திஎ. வல்லா டாயத்து.....சொல்லாயோநீ

(இ - ள்.) நளன்முன் முன் புட்கரனெடுபொருத சூதினையத்தான் மண்ணையும் அரசாட்சியையுமிழந்து தன்மனைவியொடு வெய்யகானகத்தேசென்றடைந்தவன் பிறிதொருபொருண்மேற்சென்ற காதலான் அவளைப் பிரிந்தானல்லன்; அவ்வளும் வீறின்மையொடு பொருந்தப்பட்டதனற் சிறுமையுறுவாளுமல்லள்; ஆகவும் அடவியாகிய காட்டகத்து அரையிருள்யாமத்தே அவளை உறக்கிடை

நீத்து நீக்கியது முன்செய்ததீவினையன்றி அம்மடந்தைபிழையானென்று சொல்லுதற்கு வேறுகாரணமுண்டாயின் நீ சொல்லென்றுரைக்க.

இல்லையென்பது கருத்து. இனி, அவனும் காதலினீங்கிப் பிரிந்தானல்லன்; அவளும் காதலியே; அதனும் பிரிவாற் சிறுமையுறுவாளுமல்லளெனினுமமையும். ஆயம் - தாயம். மண்ணரசு, உம்மைத்தொகை அடவி - மலை சேர்ந்தகாடு. ஆயிழை - தமயந்தி. இட்டுநீக்கியதெனவே துயிலிடைநீத்தல் பெற்றும். நீக்கியது, ஏவற்சொல். ஓகாரம், இடைச்சொல். இதனுள் நளன் தமயந்தியை வதுவைசெய்து புணர்தற்பொருட்டு வருந்துன்பமும் பிரிதற்பொருட்டுவருந்துன்பமும், சூதாடுகின்றுழி அச்சூதுவென்று பொருள் புணர்தற்பொருட்டு வருந்துன்பமும் மண்ணும் அரசுமாகியபொருள்கள் பிரிதலான்வருந்துன்பமும் ஈண்டுவந்தவாறுணர்க. இது மக்களிற்சிறந்தோரெருவனைக் காட்டியது.

"நெறியி னீங்கியோர் நீர்மையே ஞெகிச், சிறுமை யுற்றேன்" என்றதற்கு [1] வினைதடைக் கூட்ட வியங்கொண்டான்", [2] "ஊழ்வினை கடைஇ யுள்ளந் துரப்ப" என்பவற்றுற் கோவலனை வினை ஏவுதல்பெறப்படலானும், இராமனைத் தாதையேவுதலானும், நளனைப் புட்கரனேவுதலானும், இவர் மனைவியரோடு அறியாத்தேயத்தாரிடையுழத்தலும், சிறுமையுறுதலும் ஒத்தபண்பினராதலின் உவமைகூறி, இவரினும் உனக்கு ஒருமுதியுண்டென்றுகூறுவார்:—

நெஅ - கூ. அனையையு மல்லை.....பெற்றனை யன்றே

(இ - ள்.) இங்ஙனம் பலவகைத்தாய துன்பமுழுதலின், அவரோடு ஒத்த தன்மையையாயினும் அவரின் நீ வேறுபட்ட பெரிய நன்மையையுடையை; அஃதியாதெனின், நின்காதலி பிரியாதுவாழும் வாழ்க்கையைப் பெற்றனையன்றேவாதலானென்று தேற்றினரென்க.

உம்மை, சிறப்பு. அன்றே, அசையுமாம்.

நெ0 - நெக. வருந்தா தேகி.....போதீங் கென்றலும்

(இ - ள்.) இனி நீ இங்ஙனம் வருந்தாதே இம்மன்னவன்கூடற்சென்று சாவகநோன்பு நிகழ்த்தற்கேற்ற இடமிதுவென்றறிந்து ஈண்டுவருவாயாகவென்று சொல்லலுமென்க.

பொருந்துழியறிந்து - விருந்தெதிர்கொள்வாரிடத்தை யறிந்தென்றுமாம். ஏகிப்போதென இயையும்.

நெஉ - நெ. இளஞ்சூழ் மிளையொடு.....மருங்கிற் போகி

(இ - ள்.) கட்டுவேலிசூழ்ந்த காவற்காட்டோடு தானும் நகரைச்சூழ்ந்தலை உடன்பட்டுக்கிடந்த வலத்திலேபொருந்திச்சுழலும் இலங்குநீர்ப்பரப்பையுடைய அகழிக்குப் பெரிய கையையுடைய யானையினமாகிய பலநிரைகள் போக்குவரத்துச் செய்தற்குப்படித்த சுருங்கையையுடைய வீதியைக் கழிந்து போகியென்க.

---

[1] சிலப்பதிகாரம், கூ: எஅ. [2] சிலப்பதிகாரம், கo: ச.

வலம் - வெற்றியுமாம். இனநிரை - நிரையினம். சுருங்கை - கரந்துபடை.

சூசு - எ. கடிமதில் வாயில்.....அயிராது புக்கு

(இ - ள்.) இங்ஙனமாகிய இவ்வூர்முதலியசூழ்ந்த உயர்ந்த மதில்வாயிலைக் காக்குந் தொழிலான்மிக்க கொல்லும்வாளையுடைய யவனரால் இவன் புதிய னென்றுயிர்க்கப்படாததன்மையாற்புக்கென்க.

கடி - மிகுதி. யவனர் - துருக்கர். போகிப் புக்கென்க.

சூஎ. ஆங்கு—(இ - ள்.) அவ்விடத்து,

சூஅ - கூ. ஆயிரங் கண்ணோன்.....மதிலக வரைப்பின்

(இ - ள்.) ஆயிரங்கண்ணையுடைய இந்திரனது பெறுதற்கரிய மணிக்கலம் பெய்த பணிப்பெட்டகத்தைத் திறந்துவைத்தாலொத்த மதில்வட்டத்தை யுடைய அகநகர்வரைப்பின்கண்ணென்க.

முன்னர்ப் புறநகர்ச்சிறப்புக்கூறி ஈண்டு அகநகர்ச்சிறப்புக்கூறுவார், மதிலக வரைப்பினென்றார்.

எ0 - எநி. குடகாற் றெறிந்து.....புனலாட் டமர்ந்து

(இ - ள்.) மேற்றிசைக்காற்று வீசத்தெறிதலானே மாடங்களிலெடுத்த கொடிகளெழுந்து ஊடங்கும் மழகின்கண்ணுள்ளாராகிய பொதுமக்களிர் தாம் காதலிக்குஞ் செல்வத்தையுடைய காமுகரோடுகூடி [1] இடையருதுபெருகும் புனலையுடைய வையையாற்றுத் துறைமுன்னர்ப் பொலிந்துபரந்த இடைக் குறையில் வெளியமணலையுடைய அடைகரைக்கண்ணே உயர்ந்தபள்ளியோடத் தோடு நாவாய்முதலியவற்றை ஏறிச்செலுத்தியும் பொலிவையுடைய புணை களைத்தழுவி நீந்தியும் இவ்வாறு புனல்விளையாட்டைவிரும்பியும்,

ஆடிதிங்களென்பதுதோன்றக் குடகாற்றுக்கூறினார். காணும் மடனும் பெண்மைபவாதலின் இவற்றைக்கழிந்தே கடைகழியவேண்டுதலிற் கடைகழி மகளிரெனப் பொதுமகளிர்க்குப் பெயர்கூறினார் இவர்க்குக் காதல் பொருளின் கண்ணதாகலிற் காதலஞ்செல்வரென்றார்; தம்மேற் காதலையுடைய செல்வரோ டெனவுமாம்; அம், சாரியை. நாவாய் - தோணிமுதலாயுள்ள சலசரங்கள்.

இது, சிறுகாலமாறினும் காலப்பொழுதிற் பொழுதுபோக்குக் கூறிற்று.

எசு - அஉ. தண்ணறு முல்லையும்.....அமர்ந்தாங்கு

(இ - ள்.) குளிர்ந்த நறிய முல்லைமலரும் காழ்ந்த நீரிற்பூத்த குவளை மலரும் தம் கண்போலமலர்ந்த நெய்தன்மலருமென்னுமிவற்றைத் தமது கொண்டைகளிலே மிகவைத்துப் புரைக்கச்செருகி மல்லிகையின் மலர்ந்த வெளியபூவோடே குளிர்ந்தசெங்கழுநீரிதழ்களையும் கால்நெருங்கக்கட்டுதலால் தலைமலர்ந்தபிணையலைக் கொற்கைத்துறையிற்படும் பெருமுத்தாற்செய்த வடத் தோடேபூண்டு தென்றிசைக்கண்ணதாகிய மலயவரையிற்பிறந்த சந்தனக் குழம்பை மேனிமுழுதும் மட்டித்துப் பொன்னாற்செய்த கொடிகளையுடைய மூதூர்க்கு அயலதாகிய பொழிலிடத்து விளையாடும் விளையாட்டைவிரும்பி,

[1] "வையையன்ன வழக்குடைவாயில்" மதுரை, கூடுக.

தாணீர்க்குவளை பாடமாயின், தாளையுடைய நீர்மைக்குவளையென்க. பிணையல் - மார்பிலிடுவன. உற - மிக. மல்லிகை விரியல்வெண்பூவென்க. தெக்கணம், வடசொற்றிரிபு. சேரமுடியென்றார், மெய்ம்முழுதும்பூசினமைதோன்ற. மூதூர்ப்பொழில் - [1] இலவந்திகைச்சோலை. ஆங்கு, அசை. அடைச்சிப் பூண்டு ஆடி அமர்ந்தென்க. காரை எதிர்பருவமாதலின் முல்லைகூறினார்.

இது, நண்பகற்பொழுதிற் பொழுதுபோக்குக் கூறிற்று.

அஈ - நி. எற்படு பொழுதின் .....மேலினிதிருந்தாங்கு

(இ - ள்.) எற்பாடாகியகாலத்தே ஆண்டின்றும்போந்து இளநிலாமுன்றிற்கண்ணே முன்னர்ப் புனலினும் பொழிலினும் ஆடியிளைத்தகோலத்தைத் தம் கொழுநர் பாராட்டித்தீர்க்கக் கண்டோர்விரும்பப்படும் பூஞ்சேக்கையிடத்தே இனிமையோடிருந்து,

ஆங்கு, அசை. புணர்ச்சிகூறுவார், இனிதிருந்தென்றார். தகை, ஆகுபெயராற் கொழுநர். தத்தம் மனத்திற்றங்கிய கோலத்தைப்புனைந்து பாராட்டவெனினுமமையும்.

இஃது எற்படுபொழுதிற் பொழுதுபோக்குக் கூறிற்று.

அசு - ஈஎ. அரத்தப் பூம்பட்டு.....கால மன்றியும்

(இ - ள்.) அங்ஙனம் பாராட்டச் சேக்கைமேலிருந்து, பூத்தொழிலையுடைய செம்பட்டை மேகலைமீதேயுடுத்துப் பூங்கொத்தை இடத்தேயுடைய கூந்தலிலே செங்குடசப்பூவைமுடித்துத் [2] தென்னவனது சிறுமல்லியென்னுஞ் சிலம்பின்கட்பூத்த செந்நறந்தாளிப்பூவுடனே நறியமலரையுடைய குறிஞ்சியினது நாட்பூவைச்சூடிக் குங்குமநிறத்தையுடைய செஞ்சந்தனத்தைக் கொங்கையினெழுதிச் சிவந்த சுண்ணமட்டிய ஆகத்தே செங்கொடுவேரியின் வளவிய பூவாற்கட்டப்பட்ட பிணையலை அழகிய பவளக்கோவையோடுபூண்டு பறந்திரியுமலைகளைச் சிறகையரிந்த வச்சிரத்தையுடைய இந்திரனுக்குக் கூடலைச் செவ்வணியணிந்துகாட்டுதற்குக் காரையாளுமரசன் வாலடைக்காற்றேடுவருங் காலமும், அக்காலமன்றியும்,

அரை, ஆகுபெயரான் மேகலை. குடசம் - வெட்பாலைவிசேடம். சிறுமல்லை, அதன்பெயர். மலர்க்குறிஞ்சி, முதற்கேற்றவடை; [3] "கனிவிளவின்காய்" போல. குங்குமநிறத்தையுடையவற்றை யென்றுமாம். இழைத்து - வரித்து; எனவே எழுதியென்பதாயிற்று. சுண்ணம், மேனிக்கடை. குடசமும், குறிஞ்சியும், கொடுவேரியுமென்னுமிவை கார்காலத்துப்பூவாய்த் தான்விழைந்தனவாதலாற் காரரசாளன் காட்டவென்றார். கார் - ஈண்டு முகில்; அதனையாளுமரசு - காலம். காலமும் கடவுளாதலால் தன்வேந்தனுக்குக் கையுறைகாட்டுவான் கூடன்மகளிரான ஏந்துவித்துக்காட்டினான்; அவற்கு மகளிர்மேல் மிக்க காதலுடைமையறிதலின். [4] "காலமுலகம்" என்பன உயர்திணைமேலனவாய்ப்

[1] இலவந்திகை - யந்திரவாவி; சிலப்பதிகாரம், கo: ஙக; மணி. ஈ: சச - நி; "நிறைக்குறினிறைத்துப் போக்குறிற்போக்கும், பொறிப்படையமைந்த பொங்கிவ்வந்திகை" (பெருங், க. சo: ஙகக - உ.)

[2] சிலப்பதிகாரம், ஙக: அநி.

[3] மூல்லைப்பாட்டின் இரண்டிலெண்பா, க.

[4] தொல்காப்பியம், இளவி. சூ. நிஅ.

பால்பிரிந்திசையாவெனவும், [1]"நின்றுங்கிசைத்த லிவணியல் பின்று" எனவும் கூறிவழுவமைக்கின்றவர், [2] வேறிடத்து இசைத்தலுமுரிய வென்பதனும் காரசாளனென உயர்திணையாற்கூறினர். இவ்விதி மேல்வருவனவற்றிற்குங்கொள்க.

கூஎ - கo௫. நூலோர் சிறப்பின்.....கூதிர்க் காலையும்

(இ - ள்.) சிற்பநூல்வல்லோரானே சிறப்பித்துச்செய்யப்பட்ட முகிழ்முய உயர்ந்த மாடங்களிலே மரகலந்தந்த அகிலாகியவிறகாலே மடப்பம்வருதலையுடைய மகளிர் தடாக்களிலிடப்பட்ட இந்தனம் காய்தலிலிரும்பி நறிய சாந்தினோந்தமார்பையுடைய மைந்தரோடுகூடிக் குறிய கண்களையுடைய சாளரங்களை அடைக்கும் கூதிராகியகாலமும்,

நூலோர் சிறப்பினகிலனெனவியைத்து, நூலோர் சிறப்பித்துக்கூறப்பட்ட நேர்கட்டிமுதலாகிய அறுவகைக்கூட்டெனினுமமையும்; மடவரன்மகளிர்தருமகிலனெனவுமாம். அமர்ந்து அடைக்குமெனவியையும். நம்பியர் - காதலஞ்செல்வர். குறுங்கண், ஆகுபெயர். இதுவும் மேற்கூறிய அச்சிரக்காலமும் உயர்திணைச் சொல்லடுத்தோதாது அஃறிணையியல்பாற்கூறுவன.

கoஉ - நு. வளமனை மகளிரும்.....அச்சிரக் காலையும்

(இ - ள்.) மகளிரும் மைந்தரும் வளமனையில் இளநிலாமுன்றிற்கண்ணேயிருந்து இளவெயிலைநுகருமும்படி விரிந்தகதிரையுடைய ஆதித்தமண்டலம் மிதனவீதியிலே எழுந்து இயங்குதலானே வெண்முகில் அரிதாகத்தோன்றும் முன்பனிக்காலமும் எவ்விடத்துள்ளன ?

மகளிரை முற்கூறினர், இன்பத்திற்கு முதல்வராகலின். இளநிலா - மாலைப்பொழுதினிலா; அன்றிச் சுதைநிலாவென முன்றிற்கடையாக்கினுமமையும். நுகர்தல் - பயன்கோடல். ஏர்பு - எழுதலான். வெண்மழை - பனிமாசுமாம். எவ்விடத்துள்ளனவென்று ஒருசொல் வருவிக்க.

கoசு. ஆங்கதன்றியும்—(இ - ள்.) அந்த முன்பனிக்காலமன்றியும்,

கoசு - கஉ. ஓங்கிரும் பரப்பின்.....பனியரசியாண்டுளன்

(இ - ள்.) குணதிசைக்கண் தொண்டியென்னும் பதியிலுள்ள அரசரால் வங்கத்திரளோடு திறையிடப்பட்ட அகிலும் பட்டும் சந்தனமும் வாசமும் கருப்பூரமுமென்னுமிவற்றை அவ் வங்கத்திரளோடு சுமந்துவந்த கொண்டற் காற்றென்று நண்பனோடு கோமகனது கூடற்கட்புகுந்து காமவேளுடைய வில்வெற்றி நிகழாநின்ற விழவுகாணும் பங்குனித்திங்களீறுகப்பொருந்திய பின்பனிக்காலமாகிய அரசன் எவ்விடத்துளன் ?

ஓங்கிரு, இருபெயரொட்டு; பரப்பென்பதனை விசேடித்து வங்கத்திற்கு அடையாயிற்று. ஈட்டத்து - ஈட்டத்தோடு. இனி 'தொகு' என்பதனை இறுதிவிளக்காகக்கொண்டு பொருளுரைக்க. உரைக்குமாறு :—

அகில் : [3] அருமணவன் தக்கோலி கிடாரவன் காரகிலென்றுசொல்லப்பட்ட பலவகைத்தாய தொகுதியும்,

---

[1] தொல்காப்பியம், இளவி. சூ. நிக. [2] தொல்காப்பியம், இளவி. சூ. சுo.

[3] இங்குக்கூறப்படும் பெயர்கள் இக்காலத்து வழங்காமையாற், புலப்படவில்லை.

துகில்: கோசிகம் பீதகம் பச்சிலை அரத்தம் - நுண்டுகில் சுண்ணம் வடகம் பஞ்சு இரட்டி பாடகம் கோங்கலர் கோபம் சித்திரக்கம்மி குருதி கரியல் பேடகம் பரியட்டக்காசு வேதங்கம் புங்கர்க்காழகம் சில்லிகை தூரியம் பங்கம் தத்தியம் வண்ணடை கவற்றுமடி நூல்யாப்பு திருக்கு தேவாங்கு பொன்னெழுத்து குச்சரி தேவகிரி காத்தூலம் இறஞ்சி வெண்பொத்தி செம்பொத்தி பண்பொத்தியென்று சொல்லப்பட்ட பலவகைத்தாகிய தொகுதியும்,

ஆரம்: மலையாரம் தீமுரன்பச்சை இழான்பச்சை பச்சைவெட்டை அரிசந்தனம் வேரச்சுக்கொடி யென்றுசொல்லப்பட்ட பலவகைத்தாயதொகுதியும்,

வாசம்: அம்பர் எச்சம் கத்தூரி சவாது சாந்து குங்குமம் பனிநீர் புழுகு தக்கோலம் நாகப்பூ இலவங்கம் சாதிக்காய் வசுவாசி நிரியாசம் தைலமென்று சொல்லப்பட்ட பலவகைத்தாகியதொகுதியும்,

கருப்பூரம்: மலைச்சரக்கு கல்லை அடைவுசரக்கு மார்பு இளமார்பு ஆரூர்க்கால் கையொட்டிக்கால் மாரப்பற்று வராசான் குமடெறிவான் உருக்குருக்கு வாழைசு சூடன் சீனச்சூடனென்று பெயர்கூறப்பட்ட பல வகைத்தாகிய தொகுதியுமெனத் தொகுத்தும் விரித்தும் பொருளுரைக்க.

கொண்டல்-கீழ் காற்று. இறுதியாகிய பின்பனியென்பார் வேள் வில்விழாக் காணும் பங்குனியென அதற்கு அடைகூறினார்; காணும் பனியரசெனவியைக்க; வேள்காணும் பங்குனியெனினுமமையும். [1] தொண்டியோர் - சோழருலத்தோர்.

ககஙு - எ. கோதை மாதவி.....யாண்டுளன் கொல்லென்று

(இ - ள்.) மாதவி கொடியெடுப்பக் காவும் கானமும் மலரேந்தித் தென்னவனுடைய பொதியிற்றென்றலோடே அம்மன்னவனுடைய கூடனகரின்கட் புகுந்து தாம் மகிழுந்துணைகளைத் தழுவுவிக்கும் இனிய இளவேனிலென்னு மரசன் எவ்விடத்துளன்றுனென்று,

கோதைமாதவி - மரலோபோலப் பூக்கும் குருக்கத்தி. கானம் - நந்தனவனம்; காடுமாம். தழூஉம் - தழுவுவிக்கும்.

ககஅ - ஊ. உருவக் கெர்டியோர்.....படர்தீர் காலை

(இ - ள்.) கொடியுருவினோர் இங்ஙனமாகிய இன்பங்களைக்கருதி அவற்றவற்று இன்பங்களைநுகர்தற்குவிரும்பித் தம்மையுடைய பெரியகொழுநரோடிருந்து அப்பருவவரவை எண்ணும் வருத்தநீங்கியகாலத்தே,

தம்முருவிற் கோலக்கொடியோரென்றுமாம். இவர் புறவீதிமகளிராய் மூற்கூறிய கடைகழிமகளிர். இவர் ஆண்டுக்கூறிய காதலஞ்செல்வரோடிருந்து பருவமெண்ணுங்காலையென்க.

---

[1] இதனால், கீழ்கடற்கரைக்கணுள்ள தொண்டியென்னும் பட்டினம் பண்டைக்காலத்திற் சோழர்களுடைய ஆட்சிக்குட்பட்டிருந்ததென்று தெரிகின்றது; சேரர்க்கு உரித்தாய் மேல்கட்கரைக்கணுள்ள தொண்டியென்பது வேறு; புறநா. கஎ, சஅ - பார்க்க.

கஉ0 - உநி. கன்றம ராயமொடு.....உறுவெயிற் கடைநாள்

(இ - ள்.) கன்றுகண்மேவியபிடித்திரளோடே அவற்றைக்காக்கும் களிற் றினமும் கண்டுநடுங்கும்படி வெயில் நிலைபெற்ற மலைசார்நாட்டுக் காடெங்கும் தீப்பட்டெரியும்படி மூழங்கும் ஆழிமூட்டிக் கோடைக்காற்றேறுவந்துபுகுந்து கூடலைத்தாளுண்ட வேனிலரசன் தனக்குப்புகலிடமாகிய வேற்றுப்புலன்களிற் சேறற்கு முயலாநின்ற வெயிலையுடைய கடைநாளிலென்க.

கடைநாள் - பருவத்தின்கடைநாள். என்றாழ்நின்றவென்னூர், காலெதொ டங்கி மாலையளவும் ஒருதன்மையாகக்காய்தலின். ஓசனித்தல் - போதற்கு ஒருப்பட்டு முயறல்; [1]"உடைதிரை முத்தஞ் சிந்த வோசனிக் கின்ற வன்னம்" என்னூர் சிந்தாமணியினும். [2] ஓரோர்தேயத்திற்கு ஓரொருகாலம் மாறிநிகழ்த லின் வேற்றுப்புலம்படரவென்னூர்.

கஉசு - நக. வையமுஞ் சிவிகையும்.....மணம் புணர்ந்து

(இ - ள்.) கூடாரப்பண்டியும் கடகத்தண்டும் பல்லக்குமென்னும் இவ்வரி சைகள்பெற்றதேயன்றி நீராவிச்சோலைக்கண்ணே தமக்கு உற்றதுணைவனுகிய அரசனேடுமேவி மெய்தொட்டு விளையாடுமகிழ்ச்சியும் கவரியும் அடைப்பையும் உடைவாளுமெடுக்கும்வரிசையும் தம் கோமகன்கொடுப்ப அவை எக்காலத்தும் மாறுதவாழ்வையுடைய மடந்தையர் நாடோறும் புதியாரோடு மணம்புணர்ந்து,

புதியவரியமறிந்து புணர்தலருமையிற் புணர்ந்தென்று அவர்வல்லபங் கூறினர். இன்னும், புணர்ந்தெனவே இப்புணர்ச்சிமுன்னர் இன்பம் விளைத் தற்கு ஊடனிகழ்ந்தமையுணர்க. உய்யானம் - அரசர் விளையாடும் காவற்சோலை. சாமரைக்கவரி, இருபெயரொட்டு. புதுமணம்புணர்தல் - கரணவிசேடமுமாம்.

கஙஉ - நஉ. செம்பொன் வள்ளத்து.....மாந்தினர் மயங்கி

(இ - ள்.) அங்ஙனம்புணர்ந்த புணர்ச்சியானுண்டாய வருத்தமகற்றிச் செருக்கு விளைத்தற்குச் சிலதியர் பொன்வள்ளத்தேந்திய அழகிய இனிய கட் டேறலைப் பருகினராகிப் பின்னுமயங்கி,

சிலதியர் - ஏவன்மகளிர்.

கஙச - சநி. பொறிவரி வண்டினம்.....வீதியும்

(இ - ள்.) அங்ஙனமாகிய காவியங்கண்ணார் மதுமயக்கத்தான் இதழின் மறைகின்றவிழிகளைப் பூவினிதழின்மறைகின்ற தமதினமெனக்கருதிச் சேர்ந்த பொறியையுடைய வரிவண்டினத்தைப் பரிந்தமாலையாற் கடியக்கருதியவர் அவசத்தாற் கைசோர்தலின் அவைமொய்யாத இடங்களைக் கடிந்து முன்னர்ப் புலவிக்காலத்தே இலவிதழ்போலும் செவ்வாயின்மீதே இளமுத்துப்போலும் எயிறுகள் அரும்பும்படி தம் கேள்வரைக் கவவுக்கொண்டு நெருக்கிய புலவிக்

---

[1] சீவகசிந்தாமணி, உகூடுஉ.

[2] ஓரோர்தேயத்திற்குக் காலம் ஓரொரு காலம் மாறிநிகழுமென்பது, "ஊன் றலைப்பொடித்தாங்கு" (சீவக. உகஅசு) என்பதன் விசேடவுரையால் உணரப்படும்.

குறை நெஞ்சிற்கிடந்தது கூறக்கருதிய கட்டுரையை [1] எண்வகைத்தானத் தோடு நாவால் நவிலப்பெறுது குழறுதலாற் கேட்டோர்க்கு நகைவரத்தக்கவிள வியும், அழகிய செங்கழுநீரின் நீர்க்கீழ்நும்பை நெகிழ்த்துப்பார்த்தாலொத்த சிவந்த கயல்போலும் நெடிய கண்ணின் செழித்த கடையாற் செய்தபூசலும், கொலைசெய்த விற்போலும் புருவத்தின்கோடிகள் உள்வளையத் திலகம்பொருந் திய சிறியநுதற்கணரும்பிய வியருமாகியவிவை நீருஞ்செவ்வி பார்த்துவருந் தும் மேம்பட்ட குடிப்பிறந்த செல்வரோடே வையத்தைக்காக்கும் அரசரும் விரும்பப்படும்வீதியும்,

வரி - வரிப்பாட்டு. புல்லுதல் - இனமென்று புல்லுதல். என்னை ? [2] "ஒருத்தி, கணங்கொண் டவைபூசக் கையாற்றுள் பூண்ட, மணங்கமழ் கோதை பரிவுகொண் டோச்சி" எனவும், [2] "ஒருத்தி, பிறந்த களிய னிதழ் மறைந்த கண்ணள், பறந்தவை மூசக் கடிவாள் கடியு, மிடந் தேற்றுள் சோர்ந் தனள் கை" எனவும் பிறருங்கூறினர். கட்டுரை - புலவிக்குறையெல்லாம் பொதிந்தவுரை. நாவொடு - நாவால். 'குதைவில்' என்பாருமுளர். இளவியும், பூசலும் வியரும் நீருஞ்செவ்விபார்க்குஞ் செல்வரென்க. இவர் அரசனைக் காக்குமகளிர்.

கசசு - எ. சுடுமண்ணை ....கடிமனை வாழ்க்கை

(இ - ள்.) கொடுங்கோன்மையாகிய வடுநீங்கும் செங்கோற்சிறப்பினை யுடைய மூடிசூடிய அரசரொடுங்குங் கடிமனை ; அஃது எத்தன்மையதாகிய கடிமனையென்னின்,—சுடுமண் ஏறுத மனை ; அம்மனையில்வாழும் வாழ்க்கை யென்க.

சுடுமண் - ஓடு. ஒடுங்குதல் - பிறரறியாமலடங்குதல். கடி - வரைவு ; மிகுதியுமாம். வாழ்க்கையையுடைய எண்ணெண்கலையோரென்க. இனி, வடு நீங்கிய சிறப்பினையுடைமையாற் சுடுமண் ஏறப்படாத மூடியரசொடுங்குங்கடி மனையெனப் பொருள்கூறினும் பொருந்தும். ஈண்டு, சுடுமணென்றது செங் கலை. வடு - குடிக்குற்றம் ; ஆவது [3] பதியிலாரிற் குடிக்குற்றப்பட்டாரை ஏழுசெங்கற்சுமத்தி ஊர் சூழ்வித்துப் புறத்திடுதல்மரபு.

கசஅ - நிஎ. வேத்தியல் பொதுவியல்.....ஆடலும்

(இ - ள்.) வேத்தியல் பொதுவியலென்று சொல்லப்பட்ட இருவகைக் கூத்தின் தாளவறுதிகளையறிந்து அவை மயங்காதமரபானே ஆடுமாடலும்,

இவையிரண்டும் நகைத்திறச்சுவைபற்றிநிகழும் விதூடகக்கூத்து. இவற் றை வசைக்கூத்துமென்ப ; "பல்வகை யுருவமும்..... .....வசையெனப் படுமே" என்றுராகலின்.

---

[1] எண்வகைத்தானம் - தலை, மிடறு, நெஞ்சு, பல், இதழ், நா, மூக்கு, அண்ணை மென்ப; தொல். பிறப்பு. சூ. க - பார்க்க.

[2] கலித்தொகை, கூஉ.

[3] மணி. கஅ: நக - சு.

கஙிo. வரியும்—(இ - ள்.) எண்வகையாகிய வரிக்கூத்துக்களும்,

அவையாவன:—கண்கூடுவரி, காண்வரி, உள்வரி, புறவரி, கிளர்வரி, தோச்சிவரி, காட்சிவரி, எடுத்துக்கோள்வரியெனவிவை; என்னை? "கண்கூடு காண்வரி..... .....எண்வகை நெறித்தே" என்றாராகலின். இனி, இவ்வரியென்பதனை, நிலனும் தொழிலும் தோன்ற நடிக்கும் விஞ்தைக்கூத்தென்பாரு மூளர்; என்னை? "வரியெனப் படுவது..... .....வழங்கல்" என்றாராகலின். இவற்றின்பகுதி விரிப்பிற் பெருகும்; வந்தவழிக் காண்க.

பாணியும்—(இ - ள்.) தாளங்களும்,

அவை, கொட்டும் அசையும் தூக்கும் அளவுமெனவிவை; என்னை? "கொட்டுமசையும்.....பாணி யாகும்" என்றாராகலின். அவற்றுள், கொட்டென்பது அரைமாத்திரை, வடிவு க; அசையென்பது ஒருமாத்திரை, வடிவு எ; தூக்கென்பது இரண்டுமாத்திரை, வடிவு உ; அளவென்பது மூன்றுமாத்திரை, வடிவு ஃ; என்னை? "ககரங் கொட்டே.....ஆய்தம்" என்றாராகலின். இனி இவற்றின்றொழில்:—கொட்டாவது அமுக்குதல்; அசையாவது தாக்கியெழுதல்; தூக்காவது தாக்கித்தூக்குதல்; அளவாவது தாக்கினவோசை நேரே மூன்றுமாத்திரைபெறுமளவும் வருதலெனக் கொள்க.

தூக்கும்—(இ - ள்.) தூக்குக்களும்,

அவையாவன:—இத்தாளங்களின்வழிவரும் செந்தூக்கு, மதலைத்தூக்கு, துணிபுத்தூக்கு, கோயிற்றூக்கு, விவப்புத்தூக்கு, கழாற்றூக்கு, நெடிந்தூக்கெனப்பட்ட எழுதூக்குக்களும்; என்னை? "ஒருசீர் செந்தூக்கு..... .. என்மனார் புலவர்" என்றாராகலின்.

கஙிக. கூடிய குயிலுவக் கருவியு மூணர்ந்து—

(இ - ள்.) முற்கூறிய ஆடன்முதலியவற்றோடுங்கூடியிசைக்கும் நால்வகை உத்தமத் தோற்பெருங்கருவிக் கூறுபாடுகளையுமுணர்ந்து,

நால்வகை உத்தமத் தோற்பெருங்கருவிகளாவன:—மத்தரம், தண்ணுமை, இடக்கை, சல்லிகையென்பன; என்னை? "மத்தளந் தண்ணுமை யிடக்கை சல்லிகையென, வைத்த நான்கு முத்தமக் கருவி" என்றாராகலின். தண்ணுமை - குடமுழா.

கஙிஉ - ச. நால்வகை மரபின்.....தலைக்கோ லரிவையும்

(இ - ள்.) அங்ஙனம் பிழையாமலுணர்ந்து நால்வகைப்பட்ட மரபினையுடைய அவினயநிலத்தினும் எழுவகைப்பட்டநிலத்தினும் சென்றெய்தும்படி கோப்புக்களைவிரிக்கும் மலைத்தற்கரிய சிறப்பினையுடைய [1] தலைக்கோற்பட்ட மெய்திய அரிவையும்,

---

[1] சிலப்பதிகாரம், கஃ. ககக.

அவற்றுள், அவினயநிலம் நான்காவன:—நிற்றலும், இயங்கலும், இருத்தலும், கிடத்தலுமென்பன ; என்னை ? "நிற்றல் லியங்கல்..... அவினயக் களனே" என்றாராகலின். ஏழுவகைநிலமாவன :—சரிகமபதநி என்னுமெழுவகைப்பட்ட எழுத்தடியாகப்பிறக்கும் குரன்முதலாகிய ஏழும்.

கநிந. வாரம் பாடுந் தோரிய மடந்தையும்—

(இ - ள்.) வாரப்பாட்டினைப்பாடும் தோரியமடந்தையும்,

இவள் ஆடிமுதிர்ந்தபின்பு பாடன்மகளாய்; ஆடன்மகளிர்காலுக்கு ஒத்தறுத்துப்பாடுங்கால் இடத்துரண்சேர்ந்தியலுமவள் ; என்னை ? "இங்கெறி வகையால்.....மரபிற் றோரிய மகளே", * "தலைக்கோ லரிவை.....தோரிய மகளே" என்பனவற்றுணர்க. வாரமாவது - பற்று. அஃது இருவகைப்படும்; ஒரொற்றுவாரம், ஈரொற்றுவாரமென. அவை தாளத்து ஒரு மாத்திரையும், இரண்டுமாத்திரையும் பெற்று வருமெனக்கொள்க.

கநிசு. தலைப்பாட்டுக் கூத்தியும்—

(இ - ள்.) தலைப்பாட்டைப்பாடுங்கூத்தியும்,

இடைப்பாட்டுக் கூத்தியும்—

(இ - ள்.) இடைப்பாட்டைப்பாடுங்கூத்தியும்,

தலைப்பாட்டாவது உகம்; இடைப்பாட்டாவது ஒள்கம். இவர் கூட்டக் கூத்தியர். இவையெல்லாம் முன்னம் அங்கேநிறுத்தாத முதலியவற்றுள் விரித்துக்கூறினவாதலின், ஈண்டும் விரித்துக்கூறுதல் 'கூறியது கூறல்' என்னுங்குற்றமாமெனின், ஒக்கும்; ஆண்டுக்கூறிய அடிகளே ஈண்டும் கூறுதலானும், இக்காதை ஒன்றனையுமே கற்றுணர்வார்க்குப் புலப்படவேண்டுதலானும் ஈண்டும் விரித்துரைக்கப்பட்டன.

கநிஎ - கூ. நால்வேறு வகையின்.....முறைமையின் வழா

(இ - ள்.) மேற்கூறிய தலைக்கோலரிவைமுதலான நால்வேறுவகையோடுங் கூடியாவரும் விரும்பத்தகும் முறைமையினால் ஒன்றுமுதல் ஆயிரத்தெண் கழஞ்சீறுக நாடோறும்பெறும் முறைமையினின்றும் வழுவாத,

என்றது தத்தம் ஆடல் பாடல் அழகென்னுமிவற்றாற்பெற்ற சிறப்பினால்வழித் தாகிய ஒன்றுமுதல் ஆயிரத்தெண்கழஞ்சீறுக நிச்சயிக்கப்பட்ட முறைமை; [1] "ஒப்ப வொன்றுதி யாக வாயிரத் தோரெட் டீறுச், செப்பி" என்றார்பிறரும்.

---

[1] சீவகசிந்தாமணி, கஎ - பார்க்க; "ஒன்று முதலாக வோரெட் டிறுத்த, வாயிரங் காறுமாத்த பரிசந்து...ஏரிள மகளிர்" (பெருங். க., நடு: அஉ - டு.)

(பி - ம்.) * "தலைக்கோ லரிவை தாளத்தொடு பொருந்த, மலைத்தரு பாடலும் மாடலு மிக்கோ, யெம்படு கோலைத் தோரிய மகளே"

ககூ0 - சூள. [1] தாக்கணங் கனையார்.....இருபெரு வீதியும்

(இ - ள்.) தீண்டவருத்தும் அணங்குபோல்வாருடைய கண்ணுகிய வலையி லகப்பட்ட அப்பொழுதே பெறுதற்கரிய தமது அறிவுமுதலியனகெடத் தவத் தோராயினும் நல்ல அவிழ்ந்த மலர்தோறுஞ்சென்று அவற்றின்றேனீப்பருகிப் பின்பாராதுசெல்லும் வண்டுபோல ஒருவழித்தங்காது புதுவோர்ப்புணர்ந்து செல்லும் காமுகராயினும் காமவின்பத்திற்குப்புதியோராய் முன்புநுகர்ந்தறி யாத பேதையோராயினும் நாடோறும் புணர்ச்சிமயக்கத்தோடுகூடிய இனிய துயிலோடே தங்குவிக்கப்படும் பண்களையும் அவற்றின் திறங்களையும்பழித்த இனியசொல்லையுடைய அறுபத்துநான்கென்றுதொகுத்த கலைகளைவல்லோரா கிய பதியிலாருடைய இருவகைப்பட்டவீதிகளும்,

அணங்கு - தெய்வமகள். ஆங்கு, அசையுமாம். நகை, ஆகுபெயராகிய இடக்கர்; அன்றி அவர் காமக்குறிப்புநிகழநகைக்கும் நகையுமாம். பண் நான் காவன:—பாலை குறிஞ்சி மருதம் செவ்வழியென்பன. அவற்றின்திறங்களா வன:—பாலைக்குப் புறம் - தேவாளி; அருகு - சீர்கோடிகம்; பெருகு - நாகராகம். குறிஞ்சிக்குப் புறம் - செந்து; அருகு - மண்டிலம்; பெருகு - அரி. மருதத்திற் குப் புறம் - ஆகரி; அருகு - சாயவேளாகொல்லி; பெருகு - கின்னரம். செவ் வழிக்குப் புறம் - வேளாவளி; அருகு - சீராகம்; பெருகு - சந்தி. பிறவும் வந்த வழிக் கண்டுகொள்க.

இருபெருவீதியாவன:—சிறுதனம் பெருந்தனம்.

இத்துணையும் வீதிகளைச் சிறப்பித்துக்கூறி, இனி அங்காடிவீதிகூறுவார், கம்மியர்முதலாயினர் பண்ணிவிற்பன கூறுகின்றார்:—

ககூ அ. வையமும்—(இ - ள்.) கொல்லாப்பண்டியும்,

பாண்டிலும்—(இ - ள்.) தேர்வட்டையும்,

மணித்தேர்க் கொடுஞ்சியும்-(இ-ள்.) அழகிய தேர்மொட்டும்

ககூக. மெய்புகு கவசமும்—

(இ - ள்.) மெய்புகுதற்கிடமாகிய கவசமும்,

வீழ்மணித் தோட்டியும்—

(இ - ள்.) விரும்பப்படும் மணிகளழுத்தின அங்குசங்களும்,

கஎ0. அதள்புனை யரணமும்—(இ - ள்.) தோற்கைத்தளமும்,

அரியா யோகமும்—

(இ - ள்.) கருவிவிலக்காகப் புனைந்த அரைப்பட்டிகையும்,

அரிதல்செய்யாத யோகமென்க; வியாதிகளைக்கெடுக்கும் மருந்தென்று மாம்.

---

[1] தாக்கணங்கு: குறள், கஎ0அஉ

களக. வலைதரு குழியமும்—(இ - ள்.) கட்டிக்குழியமும்,
வால்வெண் கவரியும்—(இ-ள்.) மிகவும் வெள்ளிய சாமரமும்,
களஉ. ஏனப் படமும்—(இ - ள்.) பன்றிமுகக்கடகும்,
கிடுகின் படமும்—(இ - ள்.) தோற்கடகும்,
களங. கானப் படமும்—(இ - ள்.) கான்மாகியகடகும்,
கானத்துள்ளனவெல்லாம் எழுதுதலிற்கானமாயிற்று.
காழுன்று கடிகையும்—(இ - ள்.) குத்துக்கோல்களும்,
களச. செம்பிற் செய்நவும்—(இ - ள்.) செம்பாற்செய்தனவும்,
கஞ்சத் தொழிலவும்—(இ - ள்.) கஞ்சத்தாற்செய்தனவும்,
களஞ. வம்பின் மூடிநவும்—(இ - ள்.) புதுமையாக மூடிவனவும்,
என்றது, அல்லிக்கயிறு குசைக்கயிறு முதலியன ; வம்பு - கயிறுமாம்.
மாலையிற் புனைநவும்—(இ - ள்.) மாலையின்வர்க்கமாகப் புனைவனவும்,
என்றது தூக்குவர்க்கம் ; இடையான் மாலைவிசேடங்களாகப் புனைந்துவிற்பனவும் பூமாலைவர்க்கமுமென்ப.

களட. வேதினத் துப்பவும்—
(இ - ள்.) ஈர்வாட்டொடக்கத்தனவாகிய கருவிகளும்; துப்பு - கருவி.
கோடுகடை தொழிலவும்—
(இ - ள்.) ஆனைக்கோடுமுதலியவறைக்கடையும் தொழிற்குரிய கருவிகளும்,
களள. புகையவும்—(இ - ள்.) அகிற்புகைக்குறப்பாயுள்ளனவும்,
அவை "நேர்கட்டி செந்தே.....ஆறு" என்பன.
சாந்தவும்—
(இ-ள்.) மயிர்ச்சாந்துக்கு உறப்பாயுள்ளனவும்; மெய்ச்சாந்துறப்புமாம்.
பூவிற் புனைநவும்—
(இ - ள்.) பூவாற்புனையப்படும், மாலைவிசேடங்களாயுள்ளனவும்,
களஅ - கூ. வகைதெரி வறியா.....அங்காடி வீதியும்
(இ - ள்.) இச்சொல்லப்பட்ட வகைகள் இன்னதற்கு இவையெனத் தெரிதற்கரிய இவ்வளங்கள் தலைமயங்கியிருக்கின்ற அரசரும் காண்டற்குவிரும்பப்படும் செல்வத்தையுடைய அங்காடித்தெருவுமென்க.

இங்ஙனம் பெரியகடை ஒருவாற்றாற்கூறி, இரத்தினக்கடையும் பொற்கடையுங்கூறுவார்.

கஅ0 - அங. காக பாதமும்.....நலங்கே ழொளியவும்
இனி அம்மணிகளொன்பதிலும் வயிரத்திற்குக் குற்றமும் குணமுங்கூறுவார்.

(இ - ள்.) நூலோராற் குன்றுதலையுடையவென்று வகைந்துசொல்லப் பட்ட குற்றம் பன்னிரண்டினுள், காகபாதமும் களங்கமும் விந்துவும் ஏகையு மென்னும் இக்குற்றங்கள் நான்கும். நீங்கிக் குன்றுவாகிய குணங்களேந்தையும் வருணநான்கினிறங்களையும் இந்திரசாபம்போலும் ஒளியையுமுடைய வயிரச் சாதியும்,

இவற்றுட் குற்றம் பன்னிரண்டாவன :—[1] சரைமலம் கீற்று சப்படி பிளத்தல் தூளி கரி விந்து காகபாதம் இருத்து கோடியில்லன கோடிமுரிந்தன தாரைமழுங்கலென்னிவை; [1] 'சரைமலங் கீற்றுச் சப்படி பிளத்த, றூளிகரி விந்து காக பாத, மிருத்துக் கோடிக ளில்லாதன முரித், றுரை மழுங்க றன்னே, டீராறும் வயிரத் திழிபென மொழிப" என்றாகலின். இனிக் குணங்களேந் தாவன: எட்டுப்பலகையும், ஆறுகோடியும், தாரையும், சுத்தியும், தராசமு மெனவிவை; [1] "பலகை யெட்டுங் கோண மாறு, மிலகிய தாரையுஞ் சுத்தியுந் தராசமு, மிலந்துங் குணமென் றறைந்தனர் புலவ, ரிந்திர சாபத் திகலொளி பெறினே" என்றார். நால்வகைவருணத் தொளியாவன: [1]"அந்தணன் வெள்ளை யரசன் சிவப்பு, வந்த வசியன் பச்சை சூத்திர, னந்தமில் கருமையென் றறைந்தனர் புலவர்." இனி மிக்ககுற்றங்கள் நான்கின் பயனுவன: "காக பாத நாகங் கொல்லும்." "மலம்பிரி யாதது நிலந்தரு கிளைகெடும்" "விந்து சிந்தை யிற் சந்தா பந்தரும்" "கீற்று வரலீ யேற்றவர் மாய் வர்" எனவரும். இனி வருணநான்கின்பயனுவன :—"மறையோ ரணியின் மறையோ ராகிப், பிறவி யேழும் பிறந்துவாழ் குவரே" "மன்னவ ரணியின் மன்னவர் சூழ, விந்நில வேந்த ராவ ரெழுபிறப்பும்" "வணிக ரணியின் மணிபொன் மலிந்து, தணிவற வடைந்து தரணியில் வாழ்வர்" "சூத்திர ரணியிற் றோகையர் கனகமெல், வாய்ப்ப மன்னி மகிழ்ந்துவாழ் குவரே" எனவரும் ஏகை - இரேகை. இயல் பெனவே பலகை எட்டென்பதூஉம், கோடி ஆறென்பதூஉம் பெறுதும். குன்று வென்பதனை அருத்தாபத்தியாக்கிக் குன்றுதலையுடையவெனக் குற்றநான்கிற்கு மேற்றுக. றுழைறுண்கோடி - இருபெயரொட்டாய் மிகவும் கூர்த்தகோடி யென்பதாயிற்று. ஒளியவெனவே குறிப்பெச்சமாய் வலனென்பாயிற்று.

முன்னர் வலனென்பாகிய வயிரச்சாதிகூறி, இனி அவன் * வயிற்றிற்பித் தத்தைக் கொத்திவிழுங்கியகருடன் நகைத்தலானுமிழ, அஃது இமவான்முதலிய பன்மலைகளினும் ஊறிப்பிறத்தலிற் கருடோற்காரமென்று பெயர்பெற்ற மரக தச்சாதிகூறுவார்.

கஅச - நிஃ. ஏகையு மாலையும்.....கதிரொளியரும்

(இ - ள்.) ஏகையும் மாலையுமென்னும் குற்றங்களே இருளென்னும் குற்றத் தோடேநீக்கின பசுமைநிறைந்த மெய்மையுடைய பசிய கதிரொளிபரந்த மரகதச் சாதியும்,

---

[1] திருவால. உரு : கஅ.

(பி - ம்.) * 'வயிற்றின்புறத்தைக்'

இதற்குக்குற்றமெட்டினள்; அவை:—[1] கருங்கல் வெள்ளை கல் மணல் *கீற்று பொரிவு தராசம் இறுகுதலெனவிவை; என்னை? ''கருகுதல் வெள்ளை கன் மணல் கீற்றுப், பொரிவு தராச மிறுகுதன் மரகதத்த், தெண்ணிய குற்ற மிவை யென மொழிப'' என்றுராகலின். இவற்றுள், மிக்க குற்றமுடையன இம் மூன்றுமென்றுரென்க. ஏகை - இரேகை=கீற்று; .மால் - தார்; இருள் - கருகுதல். பாசார் மேனிப் பசுங்கதி ரொளியென்ற மிகையானே குணங்களும் எட்டென்பதேபெறுதும்; ''நெய்த்தல்கிளி மயிற்கழுத் தொத்தல்பைம் பயிரிற், பசுத்தல் பொன்மை தன்னுடன் பசுத்தல், †பத்தி பாய்தல் பொன்வண் டின் வயி, றொத்துத் தெளிதலொ டெட்டுங் குணமே'' என்றுராகலினெனக்கொள்க.

கஅசு - எ. பதுமமு நீலமும்.....விளங்கிய சாதியும்

(இ - ள்.) நூல்களில்விதித்த முறையிற்பிழையாவாய் விளங்கிய பதும மும் நீலமும் விந்தமும் படிதமுமென்னும் நால்வகைச்சாதி மாணிக்க வருக்கமும்.

விதிமுறைபிழையாவெனவே பிறப்பிடமும், வருணமும், பெயரும், குண மும், குற்றமும், நிறமும், விலையும், பத்தியுமென்னுமிவையும் பிறவுமடங் கின; என்னை? [2] ''மாணிக் கத்தியல் வகுக்குங் காலைச், சமஞெளி சூழ்ந்த வொருநான் கிடமு, நால்வகை வருணமு நவின்றவிப் பெயரும், பன்னிரு குண மும் பதினறு குற்றமு, மிருபத் தெண்வகை யிலங்கிய நிறமு, மருவிய விலையும் பத்தி பாய்தலு, மிவையென மொழிப வியல்புணர்ந் தோரே'' என்றுராகலின். இவற்றுள், பதுமம் - பதுமராகம்; சாதுரங்கமென்பதுமது. நீலம் - நீலகந்தி; சௌகந்தியென்பதுமது. விந்தம் - குருவிந்தம்; இரத்தவிந்துவென்பதுமது. படிதம் - கோவாங்கு; என்னை? ''வண்ணியிற் கிடக்கும் வருணநாற் பெயரு, மூன்னிய சாதுரங்க மொளிர்குரு விந்தஞ், சௌகந்தி கோவாங்கு தானு கும்மே.'' எ-ம், [3] ''தாமரை கழுநீர் சாதகப் புட்கண், கோப மின்மினி கொடுங்கதிர் விளக்கு, மாதுளைப் பூவிதை வண்ணியீ ரைந்து, மோதுசா துரங்க வொளியா கும்மே'' எ - ம். 'திலக முலோத்திரஞ் செம்பருத் திப்பூக், கவிர் மலர் குன்றி முயலுதி ரம்மே, சிந்துரங் குக்கிற் கண்ணென வெட்டு, மெண் ணிய குருவிந்த மன்னிய நிறமே'' எ - ம், 'கோகிலக்கண் செம்பஞ்சு கொய்ம் மலர்ப் பலாசு, மசோக பல்லவ மணிமலர்க் குவளை, யிலவத் தலர்களென்றிது குணமுஞ், சௌகந்திக்குச் சாற்றிய நிறனே'' எனவும், ''கோவைநற் செங்கல்

---

[1] திருவால. உடுரி: உ0, உக - ஆம் பாடல்களைப் பார்க்க.

[2] திருவால. உடுரி: கக - ஆம் பாடல் முதலியவற்றைப் பார்க்க.

[3] ''சாதகப் புட்கண் டாமரை கழுநீர்; கோப மின்மினி கொடுங்கதிர் விளக்கு, வன்னி மாதுளம் பூவிதை யென்னப், பன்னுசா துரங்க வொளிக்குணம் பத்துஞ், செம்பஞ் சரத்தந் திலக முலோத்திர, முயலின் சோரி சிந்துரங் குன்றி, கவிரல ரென்னக் கவர்நிற மெட்டாங், குருவிந் தத்திற் குறித்தன நிறமு, மசோக பல்லவ மலரிசெம் பஞ்சு, கோகிலக் கண்ணீ ளிலவலர் செம்பொனத், தருசௌ கந்தி தன்னிற மாறுஞ், செங்கல் குராமலர் மஞ்சள் கோவை, குங்கும மஞ்சிற் கோவாங்கு நிறமும்,... .....இவையெனக் கூறிய நிறையருட் கடவுள்'' என்றுர் கலிலாடத்தினும்.

(பி - ம்.) * 'காற்று' † 'வத்தி'

குராமலர் மஞ்சளெனக், கூறிய நான்குங் கோவாக்கு நிறனே" எனவும் சொன்னார். ஒழிந்தனவும் விரிப்பின் உரைபெருகும்; வந்தவழிக்கண்டுகொள்க.

கஅஅ. பூசு வருவிற் பொலந்தெளித் தணியவும்;—

(இ - ள்.) பூசத்தினது உருவினையுடைய பொன்னை மாசறத் தெளிய வைத்தாலொத்த புருவங்களுக்கழகும்,

கஅகூ. தீதறு கதிரொளித் தெண்மட் டிருவவும்;—

(இ - ள்.) குற்றமற்ற ஞாயிற்றொளியெனத் தேன்துளியெனச் சொல்லப்பட்ட வயிரியவருக்கழகும்,

கஈ. இருடெளித் தணியவும்—(இ - ள்.) இருளைத் தெளியவைத்தாலனைய நீலமணிவருக்கழகும்,

இதற்குச் சாதிநான்கும், குணம் பதினொன்றும், குற்றம் எட்டுமெனக் கொள்க; எண்ணே? [1] "நீலத் தியல்பு நிறுக்குங் கூலை, நால்வகை வருணமு ணண்ணுமா காமுங், குணம்பதி னொன்றுங் குறையிரு நான்கு, மணிவோர் செயலு மறிந்திசி னோரே" என்றாராகலின்; "வெள்ளை சிவப்புப் பச்சை கருமையென், றெண்ணிய நாற்குலத் திலங்கிய நிறமே", "கோகுலக் கழுத்துக் குவளை சுரும்ப, ராகுலக் கண்க ளவிரிச் சாறு,..... காயா நெய்தல் கனத்தல் பத்தி, பாய்த லெனக்குணம் பதினொன் றுமே" என்பன. இனிக் குற்றம் வந்தவழிக் கண்டுகொள்க.

இருவே றுருவவும்—(இ - ள்.) மஞ்சளும் சிவப்பும் கலந்தாலொத்த நிறத்தையுடைய கோமேதகவருக்கழகும்,

கஈக - உ. ஒருமை.....மணிகளும்

(இ - ள்.) ஒருமுதலிற்றோன்றி வேறுபட்ட ஐந்துவனப்பினையுடைய மாணிக்கம் புருடராகம் நீலம் கோமேதகம் வயிரியமென்னும் ஒளிவிடுமணிகளும்,

இவை ஒருவயிற் பல்பிறப்பு.

கஈஙூ - சு. காற்றினு மண்ணினும்.....தொகுதியும்

(இ - ள்.) காற்றினும் மண்ணினும் கல்லினும் நீரினுமுண்டாய்த் தோற்றிய மிக்ககுற்றங்கள் ஒருதுகளளவும் இல்லையாதலாலே தெளிந்த ஒளியையுடையனவும் * வெள்ளி அங்காரகன்போல வெண்ணீர்மை செந்நீர்மையையுடைய வாய் உருண்டனவுமான முத்தவருக்கழகும்,

காற்றேறு மணலேறு கல்லேறு நீர்நிலையென்பன மிக்ககுற்றங்கள்; பிறவும் குற்றங்கள்பலவுளவாயினுமென்க. சந்திரகுரு - வெள்ளி; வெள்ளி, அங்காரக னென்பன மிக்க குணமுடையன; பிறவும் குணங்களுளவாயினுமெனக்கொள்க. வட்டம் - † கவடிவட்டம்.

---

[1] திருவால. உரை: ஈஈ - ஆம் பாடலைப் பார்க்க.

பி - ம்.) * 'சந்திரன் வெள்ளி' † 'நடுவட்டம்'

கஙஎ - அ. கருப்பத் துளையும்.....செங்கொடி வல்லியும்

(இ - ள்.) கருப்பத்தே துளைபட்டனவும் கல்லிடுக்கிற்புக்கு முடங்குபட்டனவும் திருக்குமுறுக்குண்டெழுந்தனவுமென்னும் இக்குற்றங்களிங்கிய செம்மைமிக்குக் கொழுவிதாகவளர்ந்த கொடிப்பவளவருக்கமும்,

இவை மிக்ககுற்றங்கள்; பிறவும் குற்றங்களுளவாயினுமெனக்கொள்க. இனிக் குணமிக்குக் குற்றங்களிங்கியன, நிறமும் உருட்சியும்[1] சிந்துரமும் ஈச்சங்காயும் முசுமுசுக்கைக்கனியும் தூதுவழுதுணம்பழமும் போல்வனவெனக்கொள்க.

**கஙஙங

பறைக்கட்பராரை - பராரைக்கட்பறையென்க. என்றது பரிய அரையையும் இரும்பால் வாய்மட்டாகக்கட்டின கண்ணுபுமுடைய பறையென்றபடி. அம்பணம் - தாகரளக்குமரக்கால். காலமென்றியுமென்றற்கு இரவும் பகலுமெனவுமாம். கருமை - பெருமை. இதனை மூடைக்கேற்றுக; கறிக்கேற்றினு மமையும்; மூடை - பொதி. ஓடி, எண்ணெடுவாய்ப் பின்னும் சிலபண்டங்களினெழுதிய உணர்த்தினின்றது. கூலம் - ஈரெண்வகைத்து; எண்ணே? "நெல்லுப் புல்லு வரகு.....இராகியென் கூலம்" எனவும், "எள்ளுக் கொள்ளுப் பயறுழுந் தவரை, கடலை துவரை மொச்சை பென்றாங், குடனிவை முதிரைக் கூலத் தனவே" எனவும் சொன்னாகலின்.

உகஉ - அ. பால்வேறு தெரிந்த.....கொடிமதிற் புறத்தென்.

(இ - ள்.) சூலம் நான்காகப்பகுத்தவகையால் தெரிந்த அந்தணர் அரசர் வணிகர் வேளாளரெனச்சொல்லப்பட்டாரிருக்கும் நான்காய்வேறுபட்ட தெருக்களும் முச்சந்தியும் நாற்சந்தியும் கோயிலங்காடியும் பலிபெறும் மன்றிடங்களும் கவர்க்கு நெறிகளும் தேர்வீதிகளுமாகிய இவ்விடங்களில் ஞாயிறு விசும்பினூடாக நின்று முணுகி ஓடுதலின் அதனுடைய வெங்கதிர்கள் றுழையப்படாத புதிய கொடியும் படாகையுமென்னும் இவற்றின்பந்தர்நிழலிலேதிரிந்து காவலனது பெரிய நகரியைக்கண்டு மகிழ்ச்சியெய்துதலாலே பொருந்துழியறிதலே மறந்து போந்தானென்க.

கவலை - முடிக்குவழிகள். கதிர் மேடவிதியின் தீங்குதலின் விசும்பகடி திருகிய வென்றூர். அகடு - நடு. திருகுதல் - முறுகுதல்; [1] "தெறுகதிர் ஞாயிறு நடுநின்று காய்தலின்" என்றூர் பிறரும். கொடி - சிறுகொடி. படாகை - பெருங்கொடி.

ஆர்ப்ப அவிழ்த்தமண்டிலம் துயிலெடுப்ப இயம்பச் சென்று எத்திச் சிறுமையுற்றேனென்றலும், கவுந்தியடிகள், அனையையுமல்லை; பெற்றனையன்றே; வருந்தாதேகிப் போதீங்கென்றலும் மருங்கிற்போகி அயிராதுபுக்கு மகிழ்தரு வீதியும் இருபெருவீதியும் அங்காடிவீதியும் பயங்கெழுவீதியும் நலங்கிளர்வீதியும் அறுவைவீதியும் கூலவீதியும் நால்வேறுதெருவும் அந்தியும் சதுக்கமும் ஆவணவீதியும் மன்றமும் கவலையும் மறுகுமாகிய இவ்விடங்களில் பந்தர்நீழலிற்றிரிந்து காவலனூரைக் கோவலன்கண்டு மகிழ்வெய்திப் பெயர்ந்தானென விணைமுடிக்க.

இது நிலைமண்டிலம்.

---

[1] அகநானூறு, அக.

பதினேந்தாவது

அடைக்கலக்காதை.



[1] நிலந்தரு திருவி னிழல்வாய் நேமி
[2] கடம்பூண் டுருட்டுங் கௌரியர் பெருஞ்சீர்க்
கோலின் செம்மையுங் குடையின் றண்மையும்
வேலின் கொற்றமும் விளங்கிய கொள்கைப்
ரு. [3] பதியெழு வறியாப் பண்புமேம் பட்ட
மதுரை மூதூர் மாநகர் கண்டாங்
[4] கறந்தரு நெஞ்சி னறவோர் பல்கிய
புறஞ்சிறை மூதூர்ப் பொழிலிடம் புகுந்து
தீதுதீர் மதுரையுந் தென்னவன் கொற்றமு
க. மாதவத் தாட்டிக்குக் கோவலன் கூறுழித்
தாழ்நீர் வேலித் தலைச்செங் கானத்து
[5] நான்மறை மூற்றிய நலம்புரி கொள்கை
மாமறை முதல்வன் மாடல னென்போன்
மாதவ மூனிவன் மலிவலங் கொண்டு
உரு. குமரியம் பெருந்துறை கொள்கையிற் படிந்து
தமர்முதற் பெயர்வோன் ழுழ்பொழி லாங்கண்
வகுந்துசெல் வருத்தத்து வான்றுயர் நீங்கக்
கவுந்தி யிடவயிற் புகுந்தோன் றன்னைக்
கோவலன் சென்று சேவடி வணங்க

க. நிலந்தருதிரு - விளைவு. நேமி - நேமியை.
உ. கடம்பூண்டு - முறைமையைமேற்கொண்டு. கவுரியர் - பாண்டியர்.
சு ஆங்கு - அப்பொழுதே. (சு) விளங்கிய (சு) மூதூர்.
கசு. மூனிவன் - அகத்தியன்.

---

[1] "நிலந்தருதிருவினெடியோன்" (மதுரை. எசுசு); "நிலந்தரு திருவிற்பாண்டியன்" (தொல். பாயிரம்.)
[2] கடம்பூணல்: மணி. சுக: எ0.
[3] "பதியெழுவறியாப்பழங்குடி" சிலப். க: கடு; மலைபடு. சளசு.
[4] சிலப். கசு: ககடு - சு; டெ கடு: ககடு-சு.
[5] "நான்மறைமூற்றியவதங்கோட்டாசான்" தொல். பாயிரம்.

உ0. [1] நாவ லந்தணன் முனவின் றுரைப்போன்
வேந்துறு சிறப்பின் விழுச்சீ ரெய்திய
மாந்தளிர் மேனி மாதவி மடந்தை
பால்வாய்க் குழவி பயந்தன ளெடுத்து
* வாலா மைந்நா ணீங்கிய பின்னர்

உரி. மாமுது கணிகையர் மாதவி மகட்கு
நாம நல்லுரை நாட்டுது மென்று
தாமின் புறூஉந் தகைமொழி கேட்டாங்
[2] கிடையிருள் யாமத் தெறிதிரைப் பெருங்கட
[3] லுடைகலப் பட்ட வெங்கோன் மூன்றுட்

நூ0. புண்ணிய தானம் புரிந்தோ ளகலி
னண்ணுவழி யின்றி நாள்சில நீந்த
விந்திர னேவலி னீங்கு வாழ்வேன்
வந்தே னஞ்சன் மணிமே கலையா
லுன்பெருந் தானத் துறுதி யொழியாது

நூரி. துன்ப நீங்கித் துயர்க்கட லொழிகென
விஞ்சையிற் பெயர்த்து விழுமந் தீர்த்த

உ0. நவின்றுரைத்தல் - பலகாற்சொல்லுகை.

உசு. வாலாமை - தூய்மையின்மை.

உரி. முதுகணிகையராவார்-பாட்டிமார், தாய்மார்.

உக - நூ0. எங்கோனென்றது, கோவலன் மரபினுள்ளானொருவனே; புண்ணியதானம் முன்பு செய்து ஒழுகினனாதலால்.

நூக. நண்ணுவழியின்றி - கரையைக் கிட்டுமிடமின்றி.

(உஅ) கடலின் இடையிருள்யாமத்துக் (நூக) கரைகாணாது சிலநாள் நீந்திச்செல்ல.

நூஉ. இந்திரனேவலால் இத்தீவிலுள்ளாரை அசுரர் வாதியாமற் காத்து இங்கு வாழ்வேன்.

நூசு. நீ முன்புசெய்த தான்னங்களால் வந்தபுண்ணியம் உன்னைவிடாது; உறுதி யொழியாது, முற்று.

நூரி. ஒழிகவென்சொல்லி.

---

[1] "நாவலந்தணரருமறைப்பொருளே" பரி. க, உ.

[2] மணி. எ: நஙு - ரி; பெ. உக: கஅக - உ; பெ. உகூ: கசு-நூக.

[3] உடைகலப்பட்டல்: மணி. கசூ: உ0; பெ. கஅ: சுசு.

(பி - ம்.) * 'வாலாமைநாணீங்கிய'

வெங்குல தெய்வப் பெயரீங் கிடுகென
வணிமே கலையா ராயிரங் கணிகையர்
மணிமே கலையென வாழ்த்திய ஞான்று

சஅ. மங்கல மடந்தை மாதவி தன்னெடு
செம்பொன் மாரி செங்கையிற் பொழிய
ஞான நன்னெறி நல்வரம் பாயோன்
ரூனங் கொள்ளுங் தகைமையின் வருவோன்
[1] றளர்ந்த நடையிற் றண்டுகா லூன்றி

சஉ. வளைந்த யாக்கை மறையோன் றன்னைப்
[2] பாகுகழிந் தியாங்கணும் பறைபட வரூஉம்
வேக யானை வெம்மையிற் கைக்கொள
வொய்யெனத் தெழித்தாங் குயர்பிறப் பாளனைக்
கையகத் தொழித்ததன் கையகம் புக்குப்

ரூ. [3] பொய்பொரு மூடங்குகை வெண்கோட் டடங்கி
[4] மையிருங் குன்றின் விஞ்சைய னேய்ப்பப்
பிடர்த்தலை யிருந்து பெருஞ்சினம் பிறழாக்
கடக்களி றடக்கிய கருணை மறவ
பிள்ளை நகுலம் பெரும்பிறி தாக

ரூஉ. வெள்ளிய மனையோ ளிணைந்துபின் செல்ல
வடதிசைப் பெயரு மாமறை யாளன்

ஈஎ. எங்குல தெய்வமென்றூன்; அவ்வுதவிபற்றி. என - என்று கோவலன்சூற.

சக. பொழிய - பொழியாநிற்க.

(சஈ) வருவோனுகிய (சஉ) மறையோனை.

சசு. பாகு - பாகர்.

சஅ. ஒய்யென - விரைய. தெழித்து - உரப்பி.

ரூ. பொய்பொருந்து கை - பொய்பொருந்தின துதிக்கை. கோட்டடங்கி- கொம்புகளுக்கு நடுவே புக்கு.

ரூஈ. கருணைமறவ - இருபாவீரனே.

ரூச. பிள்ளைநகுலம் - [5] கீரிக்குட்டி. பெரும்பிறிதாகை - மரிக்கை.

ரூஉ. எள்ளியமனையோள் - அவனுல் இகழப்பட்ட மனையாள்.

---

[1] சசு - ஞி. மூ. மணி. கச; ஈ - கக; நாலடி. கச.
[2] மணி. சு: சக. [3] மலைபடு. கஎ. [4] சீவக. கஅகஅ.
[5] குட்டியென்னும் இவ்வமைப்பெயர் கீரிக்குமுரித்தென்பர், மயிலைநாதர்; நன். சூ. கஅஎ.

கடவ தன்றுநின் [1] கைத்தூண் வாழ்க்கை
வடமொழி வாசகஞ் செய்த நல்லேடு
கடனறி மாந்தர் கைந்நீ கொடுக்கெனப்
சூ0. பீடிகைத் தெருவிற் பெருங்குடி வாணிகர்
மாட மறுகின் மனைதொறு மறுகிக்
கருமக் கழிபலங் கொண்மி னெவெனு
மருமறை * யாட்டியை யணுகக் கூஉ
யாதுநீ யுற்ற விடரீ தென்னென
சூஙி மாதர்தா னுற்ற வான்றுயர் செப்பி
யிப்பொரு ளெழுதிய விதழிது வாங்கிக்
கைப்பொரு டந்தென் கடுந்துயர் கழிகென
வஞ்ச னுன்ற னருந்துயர் கழிகே
னெஞ்சுறு துயர † நீங்குக வென்றுந்
எ0. கோத்துடை யந்தண ருரைநூற் கிடக்கையிற்
தீத்திறம் புரிந்தோள் செய்துயர் நீங்கத்
தானஞ் செய்தவ டன்றுயர் நீக்கிக்

நுஎ. நின்கைத்தூண் வாழ்க்கை - நின் ஒழுக்கத்திலுல் நான் உண்டு வாழும் வாழ்க்கை; நீ இட்டதனை உண்டுவாழ்தல் கடவதன்றென்றுமாம்.

நுஅ. வடமொழி வாசகமாவது ஒருகிரந்தம்; அது, "அபரீக்ஷ்யநகர்த்த வ்யங்கர்த்தவ்யம் ஸுபரீக்ஷிதம், பச்சாத் பவதி ஸந்தாபம் ப்ராஹ்மணீ நகுலம் யதா" என்பது.

நுகூ. கொடுக்கென - கொடுக்கவென.

சூஉ. கருமக் கழிபலங் கொண்மின் - இவ்வேட்டைவாங்கிப் பாவத்தைக் கழிக்கும் புண்ணியஞ்செய்து கொண்மின்; என்றது, காரியமாயிருப்பதொரு நிமித்த பலமென்றவாறு; அஃதாவது, தான்கொன்ற கொலைத்தொழினீங்கப் போனகணவன் வரும்படி தானம்பண்ணவேண்டும் பொருளளிக்குங் காரிய மாயிருப்பதொரு நிமித்தபலம்.

சூகூ. (பா) கூவி - அழைத்து.

சூச. நீயுற்ற இடர்யாதென; ஈது என்னென - இவ்வேடு என்னென்று சொல்ல.

எ0. நூற்கிடக்கை - வேதவிதி. எக. தீத்திறம் - கொலைத்திறம்.

---

[1] "கைத்தூணல்க" மணி. சுரு: சூ.

(பி - ம்) * 'ஆட்டியையழைத்தனன் கூஉ, யாதுநீயுற்றனை யிடரீங்கென்னென'

† 'நீங்குகென்றுங் கோத்துடையந்தணனுரை'

கானம் போன கணவனைக் கூட்டி
யொல்காச் செல்வத் துறுபொருள் கொடுத்து
எடு. நல்வழிப் படுத்த செல்லாச் செல்வ
பத்தினி யொருத்தி படிற்றுரை யெய்த
மற்றவள் கணவற்கு வறியோ னெருவ
[1] னறியாக் கரிபொய்த் தறைந்துணும் பூதத்துக்
கறைகெழு பாசத்துக் கையகப் படலும்
அ0. பட்டோன் றவ்வை படுதுயர் கண்டு
கட்டிய பாசத்துக் கடிதுசென் றெய்தி
யென்னுயிர் கொண்டீங் கிவனுயிர் தாவென
நன்னெடும் [2] பூத நல்கா தாகி
நரக னுயிர்க்கு நல்லுயிர் கொண்டு
அடு. பரகதி யிழக்கும் பண்பிங் கில்லை
யொழிகஎன் கருத்தென வுயிர்மூன் புடைப்ப
வழிதரு * மூள்ளத் தவளொடும் போந்தவன்
† சுற்றத் தோர்க்குந் தொடர்புறு கிளைகட்கும்
பற்றிய கிளைஞரிற் பசிப்பிணி யறுத்துப்
கூ0. பல்லாண்டு புரந்த வில்லோர் செம்ம
[3] லிம்மைச் ‡ செய்தன யானறி நல்வினை
யும்மைப் பயன்கொ லொருதனி யுழந்தித்

எச. செல்வத்துறுபொருள்-செல்வத்திலேயுற்றபொருள்; செல்வத்தாலே யுற்றவென்றுமாம்.

எடு. செல்லாச்செல்வ - தொலையாச்செல்வ.

எசு. படிற்றுரை - பொய்ப்பழி. எள. வறியோன் - அறிவில்லான்.

எக. கறைகெழுபாசம் - கரியபாசம். அடு. இழக்கும் - நழுவும்.

அசு. உயிரென்றது, ஆகுபெயரான் உடம்பை.

அக. கிளைஞரின் - கிளைஞரைப்போல.

கூ0. இல்லோர் - வறியோர். செம்மல் - தலைவன். இல்லோர்செம்மலென் பதற்கு இல்லறத்தார் தலைவனென்றுமாம்.

---

1 "அறிகரிபொய்த்தலான்றேர்க்கில்லை" குறுந். கஅச.

2 சிலப். டு: கஉஅ - கச; மணி. க: உசு-ச; ஙி உஉ: சகூ - டுசு.

3 கக-ங. திருக்குறள், ஙகூஙூ - பரிமேல். மேற்.

(பி - ம்.) * 'உள்ளத்தளொடு' † 'சுற்றத்தோர்க்குந்தொடர்' ‡ 'செய்தயானறி'

திருத்தகு மாமணிக் கொழுந்துடன் போந்தது
விருத்தகோ பால நீயென வினவக்
கூறு. கோவலன் கூறுமோர் குறுமகன் றன்னைற்
காவல் வேந்தன் கடிநகர் தன்னி
னுறைங் கூந்த னடுங்குதுய ரெய்தக்
கூறைகோட் பட்டுக் கோட்டுமா வூரவு
மணித்தகு புரிகுழ லாயிழை தன்னெடும்
கஂ0. [1] பிணிப் * பறுத் தோர்த்தம் பெற்றி யெய்தவு
மாமலர் வாளி வறுநிலத் தெறிந்து
[2] காமக் கடவுள் கையற் றேங்க
வணிதிகழ் [3] போதி யறவோன் றன்முன்
† மணிமே கலையை மாதவி யளிப்பவு
கஂறு. நனவு போல நள்ளிருள் யாமத்துக்
கனவு கண்டேன் கடிதீங் குறுமென
வறத்துறை மாக்கட் ‡ கல்ல திந்தப்
புறஞ்சிறை யிருக்கை பொருந்தா தாகலி
னரைசர் பின்னே ரகநகர் § மருங்கினின்

கூச. விருத்தகோபால - ஞானவிருத்தகோபாலனே. வினவ → (கூஉ) 'உம்மைப்பயன்கொல்' என்றலால் மாடலன்வினவவென்க.

கூறு. குறுமகன் - கீழ்மகன்.

கூஅ. கோட்டுமா - பன்றி; எருமைக் கடாவுமாம்.

கஂ0. பிணிப்பு - பற்று. பெற்றி - பெருமை=சுவர்க்கம்.

கஂக. வாளி - வாளியை. கஂஉ. கையறவு - செயலறவு.

கஂங. போதியறவோன் - புத்தன்.

கஂசு. கடிதீங்குறும் - பொல்லாததொன்று இவ்விடத்தே வரும்.

கஂக. அகநகர்மருங்கில் அரசர்பின்னேரென்க.

---

[1] "பிணிப்பறுமாதவன்" மணி. உகி. கசு. [2] மணி. ங: உங.

[3] போதியறவோன்: மணி. கக: எங - சு; கஉ: கஂக - உ, ககக; கடு: உசு, உசு; உஅ: கஏச; உக: உங-சு; கஂ0: கஂ.

(பி - ம்.) * 'அறுத்தோர்பெற்றியை' † 'மணிமேகலையொடு மாதவிதுறப்பவு நனவேபோலும்' ‡ 'அல்லதை யிந்தப் புறத்துறைவாழ்க்கை' § 'மருங்கி னரைசிற்'

கக0. னுரையிற் கொள்வரிங் கொழிகளின் னிருப்புக்
காதலி தன்னெடு கதிர்செல் வதன்முன்
மாட மதுரை மாநகர் புகுகென
மாதவத் தாட்டியு மாமறை முதல்வனுங்
கோவலனீ றனக்குக் கூறுங் காலை

கஉடு. [1] * யறம்புரி நெஞ்சி னறவோர் பல்கிய
புறஞ்சிறை மூதூர்ப் பூங்க ணியக்கிக்குப்
பான்மடை கொடுத்துப் பண்பிற் பெயர்வோ
ளாயர் முதுமகண் மாதரி யென்போள்
† காவுந்தி யையையைக் கண்டடி தொழுது

கஉ0. மாகாத் தோம்பி யாப்பய னளிக்குங்
கோவலர் வாழ்க்கையோர் கொடும்பா டில்லை
தீதிலண் முதுமகள் செவ்விய ளெளியண்
மாதரி ‡ தன்னுடன் மடந்தையை யிருத்துதற்
கேத மின்றென வெண்ணின ளாகி

கஉடு. மாதரி கேளிம் மடந்தைதன் கணவன்
றுதையைக் கேட்கிற் § றன்குல வாண
ரரும்பொருள் பெறுநரின் விருந்தெதிர் கொண்டு
கருந்தடங் கண்ணியொடு கடிமனைப் ‖ படுத்துவ
[2] ருடைப்பெருஞ் செல்வர் மனைப்புகு மளவு

கஎக - கஎ. நின் உரை - மாசாத்துவானென்னும் பிரகாசம்; வணிகர் நின்பிரகாசத்தாலே நின்னை அகநகர்மருங்கில் வைத்துக் கொள்வரென்றுமாம்.

(கஎஅ) ஆதலால் (ககஉ) மதுரையிலே போவென்று (ககங) மாடலனும் கவுந்தியும் (ககச) கூறுநிற்கையில்.

ககள. பான்மடை - பாற்சோறு.

கஉஅ. கடிமனைப் படுத்துவர் - காவலையுடைய தங்கள் வீடுகளிலே வைத்துக்கொள்வர்.

---

[1] ககடு - சு: சிலப். கங: ககஙடு - சு: ஙெ கடு: எ - அ.

[2] "உடைப்பெருஞ் செல்வத் துயர்ந்த பெருமை" பழ. உ0ட.

(பி - ம்.) * 'அறத்தரு' † 'காவுந்திகையைக் கண்டடிவணங்க வாகாத் தோம்பியாபயன்' ‡ 'தன்னெடு மடத்தையையிருத்தற்கு' § 'தங்குலவாழ்நர்' ‖ 'படுக்குவர்'

நகூ0. மிடைக்குல மடந்தைக் கடைக்கலந் தந்தேன்
மங்கல மடந்தையை நன்னீ ராட்டிக்
செங்கய னெடுங்க * ணஞ்சனந் தீட்டித்
தேமென் கூந்தற் சின்மலர் பெய்து
தூமடி யுடீஇத் தொல்லோர் சிறப்பி

நகூடு. ஞயமுங் காவலு மாயிழை தனக்குத்
தாயு நீயே யாகித் தாங்கிங்
கென்னெடு போந்த விளங்கொடி நங்கைதன்
வண்ணச் சிறடி மண்மக ளறிந்திலள்
கடுங்கதிர் வெம்மையிற் காதலன் றனக்கு

நசஅ. நடுங்குதுய ரெய்தி நாப்புலர வாடித்
தன்னுயர் காணுத் தகைசால் † பூங்கொடி
யின்றுணை மகளிர்க் கின்றி யமையாக்
[1] கற்புக்கடம் பூண்ட வித்தெய்வ மல்லது
பொற்புடைத் தெய்வம் யாங்கண் டிலமால்

நசடூ. வானம் பொய்யாது வளம்பிழைப் பறியாது
நீணில வேந்தர் கொற்றஞ் சிதையாது
பத்தினிப் பெண்டி ரிருந்தநா டென்னு
மத்தகு நல்லுரை யறியா யோநீ
தவத்தோ ரடைக்கலந் தான்சிறி தாயினு

நடூ0. மிகப்பே ரின்பந் தருவது கேளாய்
[2] காவிரிப் படப்பைப் பட்டினந் தன்னுட்
பூவிரி பிண்டிப் பொதுநீங்கு திருநிழ

நகூஅ. அவளைப் புறப்படவிடாமையாலே அவளடியைப் பூமிதேவியும் கண்டறியாள்; இனி, கொப்புளங் கொண்டதென்பாள், 'மண்மகளறிந்திலள்' என்றுள் என்றும், காலின்மென்மைக்குத்* தக்கபடி தானும் மெல்கிற்றில னென்றுமாம்.

நடுக. காவிரிப் படப்பைப் பட்டினம் - காவிரிப்பூம்பாக்கத்துப் பட்டினம்.

நடுஉ. பொதுநீங்கு திருநிழல் - பிறிது மரம்போல ஆதித்தனுடன் திரியாதுநிற்குநிழல்; ஆவது ஆதித்தன் கிரணத்தாற் சாயாதேநிற்றல்.

---

[1] "கற்புக்கடம்பூண்டு காதலன் பின்போந்த...நங்கை" (சிலப். உகூ: "திற்பயத் தாள்"); "கற்புக்கடம்பூண்டு நுங்கடன்முடித்தி" மணி. உசு: அ.

[2] "காவிரிப்பட்டினை நன்னகர்" மணி. உடு: ககூ.

(பி - மி.) * 'அஞ்சனமூட்டி' † 'பூங்கொடிகற்பு'

[1] லுலக நோன்பிக ளொருங்குட னிட்ட
* விலகொளிச் சிலாதல மேலிருந் தருளித்
கரு. தருமஞ் சாற்றுஞ் சாரணர் தம்முன்
[2] றிருவி லிட்டுத் திகழ்தரு மேனியன்
[3] ரூரன் மாலையன் றமனியப் பூணினன்
பாரோர் காணுப் பலர் † தொழு படிமையன்
கருவிரற் குரங்கின் கையொரு பாகத்துப்
கசூ. ‡ பெருவிறல் வானவன் வந்துநின் றேணைச்
சாவக் ரெல்லாஞ் சாரணர்த் தொழுதீங்
§ கியாதிவன் வரவென [4] விறையோன் கூறு
மெட்டி சாயல னிருந்தோன் றனது
பட்டினி நோன்பிகள் பலர்புகு மனையிலோர்
கசூ. மாதவ மூதல்வனை மனைப்பெருங் கிழத்தி
யேத நீங்க வெதிர்கொ ளமயத்
தூர்ச்சிறு குரங்கொன் றேதுங்கி யுள்புக்குப்
பாற்படு மாதவன் பாதம் பொருந்தி
யுண்டொழி மிச்சிலு முகுத்த நீருந்
களo. தண்டா வேட்கையிற் றன்சிறி தருந்தி
யெதிர்முக நோக்கிய வின்பச் செவ்வியை

---

[1] கரு. உலக நோன்பிகள் - சாவகர்.

கரு. (பா) திருவில் விட்டு - நல்ல ஒளியை விட்டு.

(கரு.அ) பாரோர்கண்டறியா (கசூo) வானவன் நின்றேணை.

(கரு.க) ஒருபாகத்துக்கை குரக்குவடிவாயிருக்கின்ற (கசூo) வானவன் வந்து நின்றேணைக் (கசூ.உ) கேட்க இறையோன்கூறும்.

கசூ. எட்டிசாயலனென்போன் ஒருவாணிகன்; எட்டி - பட்டப்பெயர். இருந்தோனென்றார்; தன்மஞ்செய்தவன்றானும் இங்கேயிருந்தானென்றற்கு.

[1] கசூ.அ. தன்பாற்பட்ட மாதவத்தை யுடையவன்.

களo. தண்டாவேட்கை - பசி.

களo - எக. பசிகெட்டுநோக்கிய முகச்செவ்வி.

---

1. மூ. கரு.க - சு: சிலப்.களo: உசு - தி. [2] மூ. மணி. சூ: களo.
[3] மூ. கரு.எ-அ: மணி. சூ: ஈகசூ - எ.
[4] இப்புத்தகத்தின் உஅக - ஆம் பக்கத்தின் அடிக்குறிப்பைப் பார்க்க.
(பி - ம்.) * 'இலங்கொளிச்' † 'தொழுகிறப்பினன்' ‡ 'பொருவிறல்' § 'யாதிவர்வரவென'

யதிராக் கொள்கை யறிவனு * நயந்துநின்
மக்களி னேம்பு மனைக்கிழத் தியென
மிக்கோன் கூறிய † மெய்ம்மொழி யோம்பிக்
களரு. காதற் குரங்கு கடைநா ‡ ளெய்தவுந்
தானஞ் செய்வுழி யதற்கொரு கூறு
தீதறு கென்றே செய்தன ளாதலின்
மத்திம நன்னாட்டு வாரணந் தன்னு
ளுத்தர கௌத்தற் கொருமக ளாகி
கஅ(). யுருவினுங் திருவினு மூணர்வினுந் தோன்றிப்
பெருவிறற் றூனம் பலவுஞ் செய்தாங்
கெண்ணி லாண்டி னிறந்த பிற்பாடு
§ விண்ணோர் வடிவம் பெற்றன ளுதலிற்
பெற்ற செல்வப் பெருமம்பய னெல்லாந்
கஉரு. தற்காத் தளித்தோ ‖ டானச் சிறப்பெனப்
பண்டைப் பிறப்பிற் குரங்கின் ¶ சிறுகை
கொண்டொரு பாகத்துக் கொள்கையிற் ** புணர்ந்த
சாயலன் மனைவி தானந் தன்னு
ளாயின னிவ்வடி வறிமி னேவெனச்
கக. சாவகர்க் கெல்லாஞ் †† சாற்றினன் காட்டத்
‡‡ தேவ குமரன் றோன்றின னென்றலுஞ்
[1] சாரணர் கூறிய தகைசா னன்மொழி
யாரணங் காக வறந்தலைப் பட்டோ
ரன்றப் §§ பதியு ளருந்தவ மாக்களுந்

களச. மொழி – மொழியை. களரு. கடைநாளெய்த – மரிக்க.

களசு. தானமென்றது, முன்பு சாரணர்க்குச் செய்துபோதுகிற தானம்.

களஅ. வாரணம் – ஸ்ரீவாரணசி.

களக. (பா) கவிப்பன் – பசுமறையத் தேடின பொருளுடையவன்.

ககக. ஆரணங்காக – மந்திரவுபதேசமாகக்கொண்டு; மிக்க தெய்வப் பிரார்த்தியமாகக் கொண்டென்றுமாம்.

---

[1] மூ. சிலப்பதிகாரம், கக: எ.

(பி - ம்.) * 'நயந்தமக்களின்' † 'மிகுமொழி' ‡ 'எய்தத்தானஞ்' § 'வின் ணோருருவம்' ‖ 'தானப்பயனென' ¶ 'சிறுவிரற்' ** 'புணர்த்து' †† 'சாற்றிக் காட்ட' ‡‡ 'தேவர்குமரன்' §§ 'பதியிலருந்தவ'

ககூடி. தன்றெறல் வாழ்க்கைச் சாவக மாக்களு
மிட்ட தானத் தெட்டியு மீனவியு
மூட்டா வின்பத்து * முடிவுல கெய்தினர்
கேட்டனே † யாயினித் தோட்டார் குழலியொடு
நீட்டித் திராது நீபோ கென்றே

உ00. கவுந்தி கூற வுவந்தன ளேத்தி
வளரிள வனமுலை வாங்கமைப் பணைத்தோண்
[1] முளையிள வெண்பன் முதுக்குறை நங்கையொடு
சென்ற ஞாயிற்றுச் செல்சுட ரமயத்துக்
கன்றுதே ராவின் கனைகுர லியம்ப

உ0ஙி. மறித்தோ ணவியத் [2] துறிக்கா வாளரொடு
[3] செறிவளை யாய்ச்சியர் சிலர்புறஞ் சூழ
மிளையுங் கிடங்கும் [4] வளைவிற் பொறியுங்
‡ கருவிர லூகமுங் கல்லுமிழ் கவணும்
§ பரிவுறு வெங்நெயும் பாகடு குழிசியுங்

உக0. காய்பொன் னுலையுங் கல்லிடு கூடையுந்
தூண்டிலுங் || தொடக்கு [5] மாண்டலை யடுப்புங்

ககூடி. தன்றெறல் வாழ்க்கை - தன்மத்துக்குள்ளானோர்க்கெல்லாம் பொதுப்பட்டவாழ்க்கை; பொதுநிலப்பட்டோராகிய சாவகர்.

ககூஅ. தோடார்குழலி, தோட்டார் குழலியென விகாரம்.

உ0உ. முதுக்குறைநங்கை - பெரிய அறிவினையுடைய நங்கை.

உ0ங. சென்ற ஞாயிறு - உவ்வின் ஞாயிறு; செல்சுட ரமயம் - இதனையுடைய மாலைப்பொழுது; விழுந்தஞாயிற்றுச் சுடர் செல்லுகின்ற பொழுதின்கண்.

உ0அ. (பா) கருவிறல் - கொடியவெற்றி.

உ0கூ. பாகடு குழிசி - செம்புருக்கும்மிடா; சாணைகங்கரைத்துக் காய்கிற மிடாக்களுமாம்.

உகப. இருப்புவட்டுக்கள் காய்கிற உலை. கல்லிடுகூடை - இடங்கணிக்கல் வீசுங் கூடை.

உகக. தொடக்கு - கயிற்றுத்தொடக்கு. ஆண்டலையடுப்பு - ஆண்டலைப் புள்ளின்வடிவாகிய அடுப்பு.

---

[1] "முளைவளரிளநகையே" (சிலப் எ: ககூ); "முளையெயிறரும்பி" மணி. ச: க00.
[2] "உறிக்காவூர்ந்த மறுப்படு மயிர்ச்சுவல்" பெரும்பாண். களக.
[3] "செறிவளையாய்ச்சியர்" சிலப். ககூ: எ.
[4] உ0எ-ககூ: இவ்வடிகள், திருக்குறள், எசஉ - பரிமேல். மேற்கோள்; "வந்தெறி பொறிகள் வகைமாண்புடைய கடிமதில்" மணி. உஅ; உங - சீ.
[5] "ஆண்டலையணங்கடுப்பின்" மதுரை. உங.
(பி - ம்.) * 'உயருலகு' † 'ஆயிற்றேட்டலர்' ‡ 'கருவிரற்கூகையுங்' § 'பரிவுறுநெய்யும்' || 'துடக்குமாண்டலையடக்கலுங்'

கவையுங் கழுவும் புதையும் புழையு
மையவித் துலாமுங் கைபெய ரூசியுஞ்
சென்றெறி சிரலும் பன்றியும் பணையு
உகடு. [1] மெழுவுஞ் சீப்பு முழுவிறற் கணையமுங்
கோலுங் குந்தமும் வேலும் பிறவு
ஞாயிலுஞ் சிறந்து நாட்கொடி நுடங்கும்
வாயில் * கழிந்துதன் மனைபுக் கனளாற்
† கோவலர் மடந்தை கொள்கையிற் புணர்ந்தென்.

உகஉ. கவை - கவைக்கோல். கழு - கழுக்கோல். புதை - அம்புக்கட்டு; மண்ணிற்புதைத்த இரும்பாணியுமென்ப. புழை - ஏவறை.

உகங. ஐயவித்துலாம் - கதவை அணுகாதபடி கற்கவிதொடங்கி நாற்றுந் துலாம்; அப்புப்பற்றுக்கை தூக்கிற்றென்பாருமுளர்; சிற்றம்புகளை வைத்து எய்யும் இயந்திரமுமாம்.

கைபெய ரூசி - கையின்கட் [2] பொதுக்கும் ஊசி; பொய்யூசியென்று பாட மோதி, மாற்றுரைக் கையைப் பொய்யாக்குமூசியென்பாருமுளர்.

உகச. சிரல் - சிச்சிலி. பணை - வேய்வடிவாகப்பண்ணி வைப்பது; மூர சென்பாருமுளர்; குதிரைப்பந்தியுமாம்.

உகடு. எழுவுஞ்சீப்பு - கதவுக்குவலியாக உள்வாயிற்படியிலே வீழாது எடுக்கவிடுமரங்கள்; [சீப்பு=விசை]; கதவோடு பொருந்தின மேலிற்றூமாம்; நிரைத்த கதவுமாம். திறக்குங்காலத்து மேலேயெழுப்புகையால், எழுவுஞ் சீப்பென்றார். கணையம் - சீப்பு அகப்படக்குறுக்கே போடக்கடவ மரம்.

உகசு. கோல் - விட்டேறு. குந்தம் - சிறுசுவளம்.

உகள. நாட்கொடி - நல்லநாளிலே கட்டின கொடி; நாள்தோறுஞ்செய்த வெற்றிக்குக்கட்டின கொடியுமாம்.

உகக. கோவலர்மடந்தை - இடைச்சியான மாதரி.

(உகக) கோவலர்மடந்தை அடைக்கலங்கொண்டகொள்கையொடு* (உகஅ) வாயில்கடந்து தன்மனை புக்காளென்க.

---

[1] "ஏணியுஞ் சீப்பு மாற்றி, மாண்வினை யானையு மணிகளைத் தனவே" (புறநா. நஅடு); "சீப்புள் ஞமுத்துத் தின்னெழுப் போக்கிக், காப்புள் ஞமுத்தி கடிமதில் வாயில்" பெருங். க. சிங: ககூஉ - ச.

[2] பொதுக்கும் - தூக்கும்; "அண்டத்தைப்பொதுத் திப்புறத் திப்பிலு லாமும்" கம்ப. இரணிய. ச.

(பி - ம.) * 'கடந்துதன்' † 'கோவலன்மடந்தையொடு கொள்கையிற் றெற்தென்'

தமர்முதல் - தமரிடம். வகுந்து - வழி ; [1] "வரைசேர் வகுந்திற் கானத் துப் படினே" என்றார் மலைபடுகடாத்தினும். இடவயின் - இடத்தில்.

வான் றுயர்தீங்கத் தாழ்பொழிலாங்கட் கவுந்தியிடவயிற் புகுந்தோனென்க.

உo. நாவ லந்தணன் றூவின் றுரைப்போன் :—

(இ - ள்.) நாவாற் சொல்வன்மையையுடைய அந்தணன், நீ இங்ஙனம் வரு தற்குக் காரணம் யாதென்று இவனினவித் தானுரைக்கின்றவனென்க.

உக - எ. வேந்துறு சிறப்பின்.....தகைமொழி கேட்டாங்கு

(இ - ள்.) கரிகாலன்கோடித்த மிக்க தலைவரிசையாற் சிறந்தபுகழினைப் பெற்ற மாவின்றளிர்போலும் மேனியையுடைய மாதவியாகியமடந்தை மேற் பெறக்கடவ நல்ல பகுதியைத் தன்னிடத்தேயுடைய குழவியைப் பயந்தெடுத்து வாலாமையாகிய நாட்கணீங்கியபின் மிகவும் பிராயமுதிர்ந்த கணிகையர் மாதவி மகட்கு நாமகரணம்பண்ணுவோமென்று தாம் மகிழ்வுற்றுச்சொல்லிய மங்கல மொழியைக் கேட்டு அப்பொழுது,

வாலாமை - ஆசௌசம். முதுகணிகையர் - தாயத்தாராயபெண்டிர் ; அவர் [2] சித்திராபதிமுதலாயினர். முன்னர்க் குழவியென்றதன் பொதுமை நீங்க 'மகட்கு' என்றார். நாட்டுதும், பன்மைத்தன்மை. நாட்டுதல் - நிறுத்தல்.

உஅ - ஙஎ. இடையிருள் யாமத்து.....பெயரீங்கிடுகென

(இ - ள்.) முன்னளிலே எறியுந்திரைகளையுடைய கடலிடத்து இடையிருள் யாமத்தில் தன்மரக்கலம் உடையப்பட்ட எங்கோன் முற்பவத்திற் புண்ணியத் தையும் தருமதானத்தையும் செய்தோனுதலின் தன்னையணுகும் இடையூறு ஓரிடத்துமின்றி அக்கடலிடையே [3] சிலநாணீங்காழி, ஒருதெய்வந்தோன்றி, இத்தீவினுள்ளாரை அரக்கர் வாதைபண்ணுமல் இந்திரனேவலாலே பாதுகாத்து வாழ்கின்றயான் நின்துயர் கண்டு அதனையொழித்தற்குவந்தேன்; இனி அஞ்சாதொழிக; என்பெயர் மணிமேகலைகாண் ; என்னுலன்றியும் நீ முன்பண்ணிய தானமிருதியான்வரும் புண்ணியமும் நின்னையொழியாதாகலான், நீ இத்துன் பத்தினின்றுநீங்கி இக்கடலினின்றும் ஏறுவாயாகவெனச்சொல்லித் தன்விஞ் சையால் ஒரு திடரிற்பெயர்த்து இடும்பையைத்தீர்த்த [4] எம்குலதெய்வத்தி னுடையபெயரை நீங்கு நீரிமிமினென்று நீ சொல்லவென்க.

கரைகாணக்கடலென்பார் பெருங்கடலென்றார்; எங்கோன் - எம்மரபில் முற்பட்டான். முன்னுளென்பதனை உடைகலப்பட்டவென்பதனோடும் புண்ணிய தானமென்பதனோடுமொட்டுக. நண்ணுவழியின்றியென்பதற்குக் கரைசேரு

---

[1] மலைபடுகடாம், உசஉ. [2] சித்திராபதி - மாதவியின்தாய்; மணி. உ: எo - எக.

[3] சிலதாளென்றது எழுதானை; மணி. உக: ககக.

[4] இதனை, "திரையிரும் பௌவத்துத் தெய்வமொன் றுண்டெனக், கோவலன் கூறியிக் கொடியிடை தன்னையென், னுமஞ் செய்த நன்னு ணள்ளிருட், காமன் கையிற் கடுநவை யகற்கு, மாபெருந் தெவ்கொடி யின்றனை யென்றே, நனவே போலக் கனவகத் துரைத்தேன்" (மணி. எ: ஙஙு - அ.) என்பதனுமறிக.

மிடமின்றியென்றுமுரைப்பர். புண்ணியதானம், உம்மைத்தொகை. தானத்தறுதி - தானப்பயன்; ஆவது புண்ணியம். விஞ்சையிற்பெயர்த்தென்பதற்கு இக்கரையிலே மீளவுந்தந்தெனினுமமையும். எங்குலதெய்வம் - எங்குலத்தை யுண்டாக்கியதெய்வம்; இன்னும் விஞ்சையிற் பெயர்த்து விழுமந் தீர்த்தவென்பதற்குத் தன்விஞ்சையினுலே போயபொருளும் [கல்வியும்] வஞ்சமறத்தந்து இடும்பையைத்தீர்த்த எங்குலதெய்வமெனினுமமையும்; [1] 'விஞ்சைகள் வல்லேன் விளிந்தகின் ரூழரொ, டெஞ்சிய வான்பொரு ளெல்லா மிமைப்பினுள், வஞ்சமொன் றின்றி மறித்தே தருகுவ, னெஞ்சிற் குழைந்து நிணையன்மி னென்முன்" என்ருர்பிறரும்.

ஈங்கு - இக்கடலிடத்தெனவும், இந்நகரிடத்தெனவும், இப்படி விபத்தின்றுமெடுப்பதற்கெனவுமாம்.

வந்தேன்; அஞ்சல்; உறுதியொழியாது; நீங்கி ஒழிகெனப் பெயர்த்துத் தீர்த்த எங்குலதெய்வமென்க.

சுஅ - சக. அணிமே கலையார்.....செங்கையிற்பொழிய

(இ - ள்.) அணிந்தமேகலையையுடைய அநேகங்கணிகையர்கூடி மணிமேகலையென்று பெயர்கூறி அரசனையும் நகரையும்வாழ்த்திய அற்றைநாளிலே நிறைந்த அழகையுடைய மடந்தையாகிய மாதவியுடனே செம்பொன்னுகிய மாரியைச் செங்கையாலே நீ பொழியாநிற்கவென்க,

சுஉ - எ. ஞான நன்னெறி.....கைக்கொள

(இ - ள்.) அங்ஙனம்பொழியாநிற்க, [2] வீட்டிலகஞ்சேர்தற்கு நல்லநெறியாகிய ஞானத்திற்குத் தானெல்லையாகிய மறையோனுருவன் தன்மூப்பான் யாக்கைவீளந்து நடைதளர்தலால் தான்பிடித்த தண்டினையே காலாகவூன்றிக் கூனியயாக்கையையுடையனுய்த் தானங்கொள்ளுதற்குத் தன்னேமதித்துவருகின்றவனைப் பாகர்செயலக்கழிந்து எங்கணும் பறைகொட்டவருகின்ற மதவேகத்தையுடைய யானை சினத்தாற் கைக்கொண்டதாகவென்க.

சுஅ - நிரு. ஒய்யெனத் தெழித்தாங்கு.....கருணை மறவ

(இ - ள்.) அங்ஙனம் மறையோனைக்கைக்கொண்டவளவிலே யானையை அவனை நெருங்காதொழியென உரப்பி அக்கணத்திலே சென்றுசேர்ந்து தன்கையாலே மறையோனைநீக்கி அதன்கையில் தான்புக்கவளவிலே யானை கையால் வீளப்பப் புரைபொருந்திய வீளந்த கையினின்றுநீங்கி வெளிய கோட்டிலே யடங்கி அது பற்றுக்கோடாகவேறிக் கரிய பெரிய குன்றின்மேலிருந்த விஞ்சையினைப்போல அதன்பிடரினிடத்திருந்து மிக்கசினநீங்காத மதத்தையுடைய களிற்றை யடக்கிய கிருபாவீரனே!

---

[1] சீவகசிந்தாமணி, நிஉ०.

[2] "தானத்தாற் பேரகந் தவத்தாற் சுவர்க்கமா, ஞானத்தால் வீடாக நாட்டி" (சிறுபஞ்ச. நசு); "ஞான முன்னிய நான்மறை யாளர்கைத், தான மென்னத் தழைத்த நீத்தமே" (கம்ப. ஆற்று. நி.) என்பவை இங்கே அறியற்பாலன.

[1] ஒய்யென்பது யானையைப் பாகர் வையும் ஆரியமொழியெனினுமமையும்; [2] "அண்ணலங் களிற்றை வையா" என்றூர் பிறரும். இனி விரையத் தெழித் தெனினுமமையும்; தெழித்தல் - பிரித்தலுமாம்; குடகாட்டார்வழக்கு. பொய்-புரை. பொரு - பொருந்தின; விகாரம். மூடங்குகையையுடையகோடெனினு மமையும். மை - மஞ்சுமாம்; முகபடாத்துக்குவமையாக்குக. பிறழ்தல் - நீங்குதல்; [3] "மொய்கொளப் பிறழ்ந்து முத்தார் மருப்பிடைக் குளித்து" என்றூர் பிறரும். கருணை - அருள். மறம் - வீரம்.

கைக்கொளத் தெழித்து ஒழித்துப் புக்கு அடங்கி இருந்து அடக்கிய மறவவெண்க.

திசை - எடு. பிள்ளை நகுலம்.....செல்வ

(இ - ள்.) தான்வளர்த்தகீரி தன்பிள்ளையைக்காத்திருந்ததாக, ஒரு பாம்பு ணுக அதனைக் கௌவித்துணித்த குருதிவாயோடு தன்வரவுபார்த்து எதிர்கொண் டதனைத் தன்பிள்ளையைக்கடித்ததெனக்கருதித் தன்கையின்மனையாற்புடைக்க அது மரித்தலாலே வடதிசையையநோக்கிக் கங்கையாடப்போகின்ற கொழுநனை மனைவி பின்செல்லப் பொருதிகழ்ந்து நின்னெழுக்கத்தின் உண்டு மனையறத் தின்கண் வாழும் வாழ்க்கை இனிக் கடவதன்று; ஆதலான், வடமொழிவாசக மெழுகிய இவ்வேட்டினை உணரக்கடவ பொருளையறியும் மாந்தர்கையகத்தே நீகொடுக்கவெனச்சொல்லி அவன்போக, பீடிகைத்தெருவினும் மாடமறுகினும் பிறர்மனைகளினும் போகிமீளத்திரிந்து கருமக்கழிபலங்கொண்மினெனக் கூவும் அருமறையாட்டியைக்கூவி நீ இங்ஙனமாதற்கு நீயுற்றவிடர்யாது? இக்கூறிய தியாதென்று கேட்ப, அம்மாதர் தான் கொலைசெய்தலாற் கொழுநன்பிரிய அவனைக்காணுது மிக்கதுன்பமுற்றதனைக்கூறி இத்திறமாகிய பொருளையெழுதிய ஏட்டினை வாங்கிக்கொண்டு கைப்பொருளைத் தந்து எனது கடுந்துயரைக் களைக வென்றுசொல்ல, அஞ்சாதொழி; நின்துயரை யானேகளைகேன்; நின்னெஞ் சின்மிக்கதுயரத்தை இனி நீங்குவாயாகவெனச்சொல்லி அப்பொழுதே தருமா சனத்தோருரைத்த நூல்வழியே அப் பார்ப்பனிக்குள்ளதாகிய கொலைப்பாவநீங்கு தற்குத் தானத்தையுஞ்செய்து அவள்துன்பநீக்கிக் காட்டுநெறிக்கட்டின கணவனையுங்கூட்டி அவர்க்கு மேலுள்ளகாலத்திற்குத் தளராத [4] பலபடைப்பா கிய செல்வத்தோடே மிக்க கைப்பொருளையுங் [5] கொடுத்தது வேள்வியையுஞ் செய்வித்த தொலையாத செல்வனே!

வடதிசைப்பெயர்தல் - கங்கையாடப்போதல். கை - ஒழுக்கம்; கையா னுண் டொழுகும் இல்வாழ்க்கையெனவுமாம். வடமொழி - ஆரியம். வாசகம் - கவி; ஆவது "சுவரீ கூடு நிகுதி புவு கூதி புவு ஸ்வரீ கூடி தம் - வஸ்ரா ஊவகி ஸஞ்சாவம் *வர் ஹணீ நகுலமயஸ்ரா" [அபரீக்ஷய

---

[1] "ஒய்யெனப் பெறலருங் குஞ்சர மேறவின்" சீவகசிந்தாமணி, கஅஙரு.
[2] சீவகசிந்தாமணி, கூஎஅ. [3] " கூஅசு.
[4] "படைப்புப் பலபடைத்து" புறநா. கூஅஅ.
[5] கோவலன் கொடையிறீறத்தவனென்பது, "கொடைகெழு தாதை கோவலன்" (மணி. உசு: ரு.) என்பதனாலு மறியலாகும்.

(பி - ம்.) * "வர ஹணு நகுலாதிவ" (பிராஹ்மண்யா நகுலாதிவ.)

நகர்த்தவ்யம் கர்த்தவ்யம் ஸுபரீக்ஷிதம், பச்சாத் பவதி ஸந்தாபம் ப்ராஹ்மணீ நகுலம்யதா.] என்பது. ஏடு - இக்கவியையெழுதியவேடு. மறுகி - சுழன்று. கருமக் கழிபலம் - பாவத்தைக்கழிக்கும்புண்ணியம். கருமம் - அவள்கொன்ற கொலை. அதனைக் கழிக்கையாவது போனகணவனைக்கூடுதல். பலங்கொள்கை - அவன் வரும்படி தானம் பண்ணவேண்டும்பொருட்டாதல். தீத்திறம் - கொலைத் திறம். ஒல்காச்செல்வமுடையோனுதலாலே [1] உறுபொருள்கொடுத்தென்றுமாம்.

எசு - கூ0. பத்தினி யொருத்தி.....இல்லோர் செம்மல்

(இ - ள்.) ஒருபத்தினி பொய்ப்பழியெய்துதற்கு அறிவிலாதானொருவன் அவள் கணவனுக்குப் பொய்ச்சான்றேறுதலாலே [2] தவமறைந்தொழுகுவோர் முதலாகிய அறுவகையோரையும் புடைத்துண்ணும் பூதத்தினுடைய காரியபாத்தினிடத்தே அவனகப்பட அங்ஙனம் அகப்பட்டோனுடைய தாய்படாநின்ற துயரத்தைக்கண்டு அவனைக்கட்டிய பாசத்தினுள்ளே விரையத்தான்புகுந்து, பூதநாதனே, நினக்குணவாக என்னுயிரைக்கைக்கொண்டு இவனுயிரைத்தருவாயாகவென்றிரப்பவும், பூதம் நல்காதாய் இக்கீழ்மகனுடைய உயிர்க்கு நினது நல்லுயிரைக்கொண்டு மேலானகதியை இழக்குமுறைமை என்பாலில்லை; ஆதலால் நீ இக்கருத்தை யொழிவாயாக; நின்முன்பே இவனைப்புடைத்துண்பேனெனப் புடைத்து விழுங்கிற்றுக; அதனுல் நெஞ்சழிந்த இடும்பையோடொடு மீண்டுபோந்து அவனுடைய சுற்றத்தினுள்ளார்க்கும் தொடர்புபட்ட [3] இளைகட்கும் நெஞ்சாற்பற்றிய நின்னிளைஞரைப்போல அன்புபட்டுப் புசியாஇயபிணியைத்தீர்த்துப் பல்யாண்டு பாதுகாத்த இல்லத்தோர்தலைவனே!

படிறு - பொய். அறியாக்கரி - பொய்க்கரி. தவ்வை - தாய். நரகன் - நரகிற்கேதுவான வினையையுடையவன்.

தன்னைவணங்கியகோவலனை, மாடலன், கடகளிறடக்கிய கருணை மறவ! நல்வழிப்படுத்த செல்லாச்செல்வ! பல்யாண்டுபுரந்த இல்லோர்செம்மலெனப் புகழ்ந்து மேலுஞ்சொல்லுவான்:—

கூக - சு. இம்மைச் செய்தன.....நீயென வினவ

(இ - ள்.) கோபால! யானறிய இப்பிறப்பிற்செய்த வெல்லாம் நல்வினையாகவும் இம்மாணிக்கக்கொழுந்துடன் நீ போந்து ஒருதனியுழந்தது உம்மைத் தீவினைப்பயனேதானென்று வினவினவளவிலேயென்க.

உம்மை - முற்பிறப்பு. ஒருதனியுழத்தல் - உசாவில்லாத்துன்பம். திருத்தகுமாமணி-முழுமாணிக்கம். கொழுந்தென்றுன்; அவளிளமைபற்றி. விருத்தஞானவிருத்தனே.

கூடு - கஎசு. கோவலன் கூறும்.....கடிதீங் குறுமென

(இ - ள்.) மாடலன் உம்மைப்பயனேவென்றவினவிற்குக் கோவலன்கூறுவான்:—ஒருகீழ்மகனுல் இக்காவல்வேந்தனுடைய இந்நகர்தன்னிலே மணம்

---

[1] திருக்குறள், எகூசு. [2] சிலப். இ: க்ஷஅ - நசை. [3] தாயத்தார்.

பொருந்திய ஐவகைக்கூந்தலையுடைய இவள் நடுங்கித்துயரமுற யான் உடித்த கூறைபிறர்கொள்ளப்பட்டுக் கோட்டிணையுடைய இடாவின்மேலேயேறவும் அணி பெற வகுக்கத்தக்க புரிந்த குழலையுடைய ஆயிழையுடனே பற்றற்றோர்பெறும் பேற்றை யான்பெறவும் காமக்கடவுள் மலர்வாளியை வெறுநிலத்தேயெறிந்து செயலற்றேங்கும்படி போதியறவோனிடத்தே மணிமேகலையை மாதவியளிப்பவும் மெய்போலச் செறிந்த இருளையுடைய வைகறையாமத்தே கனவுகண்டேனுதலான் அது நன்றன்று; இப்பொழுதே வந்துறுமென்று சொல்லவென்க.

சூறுமை, ஈண்டுப்பண்பன்று; சிறுமையென்னும்பொருட்டாய்க் குலத்திற்கடியாய் அதன் உயர்பின்மையுணர்த்திநின்றது. காவல்வேந்தன்கடிநகரென்பதற்கு, இகரச்சுட்டுவருவித்துரைக்க. கோட்படுதல் - பிறராற் கொள்ளப்படுதல். கோட்டுமா - எருமையேற்றை; என்னே ?[1] "சொல்லத் தகுமுகட் டொட்டகம் வெட்டுந் தணைமருப்பா, ரில்லத் தெருமை கழுதைக ளென்றிவை யேறி நின்றே, மெல்லத் தரையி லிழிவதன் முன்னம் விழித்திடுமேற், கொல்லத் தகுவரு மாற்றருஞ் சீற்றத்துக் கூற்றுவனே" என்றுராகலின். இனிப் பன்றியெனவுமாம்; [2] "களிறுமேற் கொள்ளவுங் காழக நீப்பவும்,.....கனவினரியன காணுய்" என்றுர் புறத்தினுமாதலால். களிறென்றது ஈண்டுப்பன்றியை; என்னே ?[3] "மிக்க வெயிற்றின கொம்பின பன்றி விறற்குரங்கு, தொக்கன தம்மைக் கனவினிற் காணிற் சுடர்மகுடச், சக்கர வர்த்திக ளாற்பய மூண்டெனும் தம்மையிர்க, ளுக்கன வாதல்செய் தாற்பொரு டேயும் பயமூடைத்தே" என்றுராகலின். கோட்டுமாவென்பதனே யானையெனின்,—[4] "ஓதும் பசுவு மிடபமும் யானையு மோங்கல்களுஞ், சீர்துன்று கோயிலு மேறிடக் காணினுந் தீமலத்தை, மீதொன்ற மேனியிற் பூசிடக் காணினு மெல்லியலார், சூதொன்று கொங்கை புணரினும் வாழ்வென்று சொல்லினரே" என்பதனுல் யானையன்மையறிக. பிணிப்பு - [5] பற்று; ஆவது அன்பாகிய ஒரு தளை. அதனையறுத்தோர் அருளுடையோர்; அவர்பெற்றியாவது சுவர்க்கமெனக்கொள்க; [6] "அருளிலார்க் கவ்வுலக மில்லே பொருளிலார்க், கிவ்வுலக மில்லா கியாங்கு" என்றுராகலின். வாளி-வாளியை. வறுநிலம் - வெறுநிலம்; [நிலங்கண்டும் அல்லாமைகூறிற்று.] கையற்று - செயலற்று. போதியறவோன் - புத்தன். நள், நளியென்னுமுரிச் சொல் ஈறு திரிபு; செறிவின்கண்வந்தது; எனவே வைகறையாமமென்பதாயிற்று. கடிது - பொல்லாததொன்று. ஈங்குறும் - இவ்விடத்தே வரும். இனி, இக்கனுக் கடையாமத்துக்கண்டதாதலால், இவ்விடத்தே கடிதிற்பலிக்குமென்றுனெனினுமமையும்; [7] "ஆயிடை, வெஞ்சுடர் தோன்றி விடிந்ததை யன்றே" என்றுர் சிந்தாமணியினும். [8] "படைத்தமுற் சாமமோ ராண்டிற் பலிக்கும் பகிரண்டே, யிடைத்தபிற் சாம மிருதிங்க ளெட்டிற் கிடைக்குமென்னு, மிடைப்பட்ட சாமமொர் மூன்றினிற் றிங்களொர் மூன்றென்பவாற், கடைப்பட்ட சாமமு நாள்பத்து ளேபலங் கைபெறுமே." இவை கனநூலாதலாற் கொள்க. இன்னும், கடிதீங்கு-மிக்கதீங்கு; அச்சத்தையுடைய தீங்கெனவுமாம்.

[1] கனநூல், கடு. [4] கனநூல், ச. [7] சீவகசிந்தாமணி, உகக.
[2] புறநானூறு, சக. [5] நிரிகடகம், உஉ. [8] கனநூல், உ.
[3] கனநூல், கo. [6] திருக்குறள், உசஎ.

கoஎ - கச. அறத்துறை மாக்கட்கு.....கூறுங் காலை

(இ-ள்.) துறவறத்தானுறையுமாக்கட்கல்லது இந்தப் புறஞ்சிறையிலிருக்குமிருப்புப் பொருந்தாதாகலின், இவ்வகநகரிடத்துவாணிகர் மாசாத்துவான்மகனென்னும்புகழால் எதிரேற்றுக்கொள்ளுவார்; ஆகலின், இவ்விடத்து நின்னிருப்பையொழிக; இனிக் கதிர்செல்வதன்முன்னே நின்காதலியுடனே மதுரைமாநகர் புகுகவென்று கவுந்தியடிகளும் மாடலனும் கோவலனுக்குக் கூறுகின்றகாலத்தேயென்க.

அறத்துறை - அறத்தின்றுறையெனவும், அறத்தின்கணுறையெனவுமாம். புறஞ்சிறை-புறம்பின்கட்பள்ளி. அகங்கர்மருங்கின் அரசர்பின்ஞெரெனமாறுக. நின்னுரையென்றார், மாசாத்துவான்மகனென்பதனை.

மதுரையாகிய மாநகரென்க.

ககநி - கூ. அறம்புரி நெஞ்சின்.....கண்டடி தொழுதும்

(இ - ள்.) அங்ஙனங்கூறுகின்றழி, ஆயர்குலத்துப்பிறந்து மாதரியென்றுபெயர்கூறப்படுவோள் ஒருமூதாமகள் பூப்போலுங்கண்ணையுடைய [1] இயக்கிக்குப் பான்மடையேற்றி வழிபாட்டோடு வருகின்றவள் அறத்தைப்புரிந்தநெஞ்சினையுடைய அறவோர்பலராயிருக்கின்ற புறமதிற்பள்ளிக்கணிருந்த கவுந்தியடிகளைக்கண்டு வந்து அடிதொழுதவுடனென்க.

இயக்கி - [1] ஆரியாங்கனை. பான்மடை - பாற்சோறு.

கஉo - உச. ஆகாத் தோம்பி.....எண்ணினளாகி

(இ - ள்.) ஆவைக்காத்தோம்பி அவ்வாவின்பயனை யாவர்க்குமளிக்கும் இந்த இடையருடைய இல்வாழ்க்கையில் ஒருகொடுமைப்பாடுமில்லை; அதன்மேலும் இவள் நமதுரைநெறியினிற்றலால் மனத்தில் அழுக்காறிலள்; அதுவுமன்றி மூதாமகள்; ஒளவியமில்லாள்; அளிக்குந்தன்மையையுடையள்; ஆதலான் மாதரியிடத்தே இம்மடந்தையை அடைக்கலமாக இற்றைக்குவைப்பதற்கு வரும் தீங்கு யாதுமில்லையெனத் தன்மனத்தில் எண்ணினளாகியென்க.

ஆக்களைக்காத்து - வெருவும் பிணியுமுற்றுழிக் காத்து. ஓம்பி - புலத்தலைப் புல்லார்த்தி அலைத்தலை நீரூட்டி. ஆப்பயன் - பால்முதலியன. அளிக்குங்கோவலர் - கன்றருத்தி மிக்கதனை யார்வர்க்குமளிக்குங்கோவலரென்க. அழுக்காறுவது மனத்தழுக்கு. செவ்வியள் - ஒளவியமில்லாள்; ஆவது மனக்கோட்டமிலனென்றபடி. அளியள் - யாவராலும் அளிக்கத்தக்காள்.

கஉடு - ஙo. மாதரி கேள்.....அடைக்கலந்தந்தேன்

(இ - ள்.) மாதரி! கேளாய்; இம்மடந்தையுடையகணவன்தந்தையைக் கேட்பாராயின், அவன்குலத்திலுள்ள இவ்வூரில்வாழ்வோர் பெறுதற்கரிய

---

[1] இயக்கி - யக்ஷிதேவதை; உச - தீர்த்தங்கரர்களுள் ஒவ்வொருவருக்கும் பணிசெய்தற்குரியவர்களாக யக்ஷனென்னும் யக்ஷியென்னும் இவ்விருவருள்ளாரென்று சைனநூல்கூறும்; இப்பெயர் கன்னியாகுமரிப்பக்க ஊர்களில் இசக்கியென வழங்கும்.

[1] ஆரியாங்கனை - கணவனிருக்குப்பொழுது துறந்தவள்; "கணவனிற்றுறவின் மன்னுமாரி யாங்கனைகள்" திருவிளை. சூசு: கள.

பொருளைப் பெற்றுரைப்போல நல்கிருந்தாக எதிர்கொண்டு கரிய பெரிய கண்ணினையுடையாளோடு இவளைத் தங்கள் காவலையுடைய மனையகத்தே கொண்டு சென்று வைத்துக்கொள்வார்கள்; அங்ஙனமாகிய உடையபெரிய செல்வரது மனையகத்தே சென்றுபுகுமளவும் இடைக்குலமடந்தாய்! உனக்கு நான் இவளை அடைக்கலமாகத் தந்தேனென்றுளென்க.

கங்க - கூ. மங்கல மடந்தையை.....தாங்கு

(இ - ள்.) இவ்வுயர்குடியிற்பிறந்த இவளை நின்கையில் அடைக்கலமாகத் தந்தேனதலால், இம்மடந்தையை மங்கலநீராலாட்டிச் சிவந்த கயல்போலும் நெடிய கண்ணில் அஞ்சனத்தையுமெழுதி நறிய மெல்லிய கூந்தலிலே சிலவாகிய மலரைப்பெய்து நூய மடிப்புடைவையையுடுத்து இவ்வாயிழைக்கு ஆயமகளிரும் செவிலித்தாயரும் நற்றாயும் நீயேயாய்த் தாங்குவாயாகவென்றுளென்க.

தொல்லோர்சிறப்பிலுயம்-பழையோராகச் சிறப்பித்துக் கூறப்பட்டவாயம்.

ஆட்டினைத் தீட்டிப் பெய்து உடலித் தாங்கென்றுளென்க.

கங்கூ - அ. ஈங்கு.....அறிந்திலள்

(இ - ள்.) இப்படித்தியருற்று என்னேடுபோந்த இவ்வயகொடிபோலும் நங்கையுடைய அழகிய சிறிய அடியை மூன்று மண்மகளும் கண்டறியாள்;

இவளடியைப் பூமிதேவியும் கண்டறியாளென்றது அகம்விட்டுப்புறப்பட்டறியாளென்றவாறு. இனி மண்மகள் இவள் மென்மையைத் தானறிந்து நெஞ்சிற்நிலனென்றுமாம். இன்னும் கால் கொப்புளங்கொண்டு நிலத்திற் பாவாமையிற் கூறிஞளெனினுமமையும்.

கங்க - சஅ. கடுங்கதிர் வெம்மையின்...நல்லுரையறியாயோநீ

(இ - ள்.) கதிரின்வெம்மையால் தன் காதலன்மெய் வருந்தியதென்று நடுங்குதுயரமூற்று நாவும்புல்ல வாடித் தன்றுயரென வேறுகாணுத பெருமையமைந்த பூங்கொடியை ஒப்பாள்; தங்காதலர்க்கு இனியவாழ்க்கைத்துணையாகிய மாதர்க்கு இன்றியமையாத கற்பைக் கடமாகப்பூண்டுகொண்ட இத்தெய்வமேயல்லது வேறு பொலிவினையுடைய தெய்வத்தினை யாம்கண்டிலேம்; அதுவுமன்றிக் காலமழை பொய்த்தறியாது; வளம் பிழைத்தலையறியாது; வேந்தர்கொற்றம் சிதைந்தறியாது; அஃது எந்தநாடெனிற் பத்தினிப்பெண்டிரிருந்த நாடென்று நல்லோர்சொல்லும் அத்தகு மிகுதியையுடைய தருமதா லுரையை நீயறிவையோ அறியாயோவென்றுளென்க.

இன்பதன்பம்[1] தேர்கைக்கும் தோன்றற்கும் ஒன்றுய்வருதலின், தன்றுயர் காணவென்றார். கற்பைக் கடமாகப்பூண்ட பூங்கொடியாகிய இத்தெய்வமென்க.

கசங்க - நி0. தவத்தோ டடைக்கலம்.....கேளாய்

(இ - ள்.) தவத்தினராயுள்ளோர் தாம்கொடுத்த அடைக்கலந்தான் அப்போது சிறிதாயிருப்பினும் பின்பு மிகப்பேரின்பத்தைத்தரும்; அதை யான் நீ கேளாயென்றுளென்க.

---

[1] "தோகைக்குந் தோன்றற்கு மொன்றுய் வருமின்ப துன்பங்களே" திருச்சிற். எக.

ஆய், அசை.

கநிக - நி. காவிரிப் படப்பை.....சாரணர் தம்முன்

(இ - ள்.) காவிரியைத் தோட்டக்கூற்றிற்கு எல்லையாகவுடைய பட்டினத் துள்ளே பூவிரிந்த பொதுமைநீங்கின அழகியநிழலையுடைய பிண்டிமுதற்கண் ணே சாவகர் ஒருங்குகூடியிட்ட விளங்கொளிச்சிலாதலத்தின்மீதேயிருந்து தருமத்தை யாவர்க்கும்போதிக்கும்[1] சாரணர் முன்பாகவென்க.

படப்பை பக்கமுமாம். பொதுநீங்குதிருநிழல் - பிறிதொருமரத்திற்கின் றித் தனக்கேயுரிய நிழல்; ஆவது ஆதித்தன்சாயச் சாயாநிழல். உலகதோன்பி கள் - துறவாது விரதங்காக்குஞ்சாவகர். சிலாதலம் - அப்பட்டினத்துச் சிலாதலம்.

கநிசு - சுஎ. திருவி லிட்டு.....வந்துநின் றேணை

(இ - ள்.) [2] திருவிற்போல ஒளிவிட்டு அழகுதரும் திருமேனியையுடைய னும்த் தாரையுடையனும் மாலையையுடையனும்ப் பொற்பூணினையுடையனும் மக்கள்கண்ணிற்குப்புலப்படாத தேவர்பலருந்தொழும் படிமையுடையவன் ஒரு பாகத்துக்கை கருவிரற்குரங்கின்கையாகவுடைய தேவனொருவன் வந்துநின் றான்; நின்றவணேயென்க.

திருவில் - இந்திரவில். வில்லிட்டென்பதற்குத் தருமத்தானவொளியைப் புறப்படவிட்டென்பாருமுளர்; தார் - பூமாலை. மாலை - மணிமாலை. தாரமாலைய னெனப்பாடமோதி, மந்தாரமாலையையுடையனெனினுமமையும். படிமை - தெய்வ வடிவு. பெருவிறல் - பெரியவெற்றி. நின்றேணை, [3] "ஆவோ வாகும்" என்பதனுன்முடியும்.

கசுக - உ. சாவக ரெல்லாம்.....இறையோன் கூறும்

(இ - ள்.) அச்சிலாதலத்தின்கீழிருந்து அறங்கேட்டசாவகரெல்லாரும் எழுந்து சாரணரைத்தொழுது இவன் இங்ஙனம்வந்தவரவிற்குக் காரணம் யாதெனக்கேட்பச் சாரணன் கூறுவான் :—

கசுஙூ - ஙூக. எட்டி சாயலன்.....தோன்றின னென்றலும்

(இ - ள்.) [4] எட்டிப்பட்டத்தையுடைய சாயலனென்னும் வாணிகன் துற வாது இல்லறத்திருந்தவன்றன துண்ணுவிரதத்தையுடையோர்பலரும் புகும்

---

[1] உஎ0 - ஆம் பக்கத்துள்ள அடிக்குறிப்பைப் பார்க்க.

[2] "மற்றவன் றேவனுகி வானிடு சிலையிற் றோன்றி" (சீவக. கூடுக) என்பதும், 'நால் கள் இந்திரவில் இன்னவாறு தோன்றுமென்று அது தோன்றுமுறைமை கூறுவாக வின், அங்ஙனந் தோன்றுகின்ற தேவர்க்கு அஃது உவமையாயிற்று' என்னுமதன் உரையும், "வானிடுவில்லின் வரவறியா" (நாலடி. கடவுள்) என்பதும் காண்டி அறியற் பாலன.

[3] தொல்காப்பியம், வினையியல், சூ.ககக. [4] எட்டியென்பது அரசனுல் வணிகர் பெறுவதொரு பட்டப்பெயர்; "எட்டிகுமரனிருந்தோன்" (மணி. ச: ஙூஅ); "எட்டிப்பூப்பெற்று" (கூ உஉ: கக்ஙூ); "எட்டிகுமரன்" (பெரும். கி. ச0: ஙூகசு), 'எட்டிகாவிதிப்பட்டம்" (கூ உ. ஙூ: கசச;) "எட்டி, காவிதியென்பன தெய்வழக்காகிய சிறப்புப்பெயர்" என்பர்; (தொல். தொகை. சூ. கஉ - நச்.)

மனையகத்தே அவன்மனைக்கிழத்தி ஒரு பெரிய தவமுதல்வனைத் தன்னினைந்தெதிர்கொள்ளுகின்ற பொழுதின்கண் அவ்வூரிடத்துத் தரப்புண்டு உணவும் பெறுதற்கு சிறுமையுற்றதொரு கருங்குரங்கு அச்சத்தோடு ஒதுங்கிவந்து உள்புக்கு அருளறத்தின்பகுதிப்பட்ட மாதவனுடைய பாத்தின்வணங்கி அவன் உண்டொழிந்த அன்னத்தையும் கைகழீஇய நீரையும் சிறிதருந்திப் பெரும்பகிர்ந்து எதிர்முகநோக்கிய முகச்செவியைக்கண்டு சலியாவுள்ளத்தையுடைய அறிவனும் மனமகிழ்ந்து, இல்லைக்கிழத்தியன்னை, நீ நின்மக்களின் ஒருதன்மையாக ஓம்புகவெனக் கைப்பிடிப்ப, அவளும் மிக்கோஞ்கூறப்பட்ட மெய்ம்மொழியைத் தப்பாமற் பரிகரித்தொழுகாநிற்கின்றழி, அங்ஙனங்காதலித்த அக்குரங்கு மரிக்க, அதனுடைய ஒருகூற்றைத் தானஞ்செய்கின்ற மனைக்கிழத்தி இதன் தீயபிறப்பறுகவெனச் செய்தனளாதலானே மத்திமதேசத்து வாரணவாசியென்னுநகரியின் உத்தரகௌத்தனென்னுமரசனுக்கு ஒருமகளுய் அழகினுடும் மெய்ப்பொறியோடும் உணர்வோடுந்தோன்றி மிக்க தானசூரஞுய்ப் பலவகைப்பட்ட தானங்களுஞ்செய்து அந்த அரசுரிமையிலே மூப்பத்திரண்டாண்டிருந்து பின்பு தெய்வயாக்கைபெற்றனன்; ஆதலானே அங்ஙனம்பெற்ற சீமத்தான பெரும்பயனெல்லாம் தன்னைக்காத்தளித்தவள்செய்த தானத்தாற் பெற்ற சிறப்பென்று உட்கொண்டு முற்பிறப்பிற் கருங்குரங்கானவடிவிற் சிறிய கையைத் தனது பெரிய ஒருபாகத்தேகொண்டு நன்மைக்கூற்றிலேபொருந்திய சாயலனுடைய மனையாள் தலைநாளிற்செய்த தானத்தாலே இத்தவடிவாயினேன்; இதனை நீங்களறிமினென்று சாவகநோன்பிகட்கெல்லாம் விளங்க அறிவித்தற்குத் தேவருமாரன் இங்ஙனந்தோன்றினனென்றுசொல்லுமென்க.

பட்டினிநோன்பிகள் - [1] இரண்டு உவாவும் அட்டமியும் மூட்டுப்பாடும் பட்டினிவிட்டுண்ணும் விரதிகள். சிறுகுரங்கு - மெலிந்தகுரங்கு. கடைநாள் - மரணம். ஒருகூறென்றார், பிள்ளைகளொருபாதியை. உத்தரன் கவிப்பற் கொருமகனுகியெனப்பாடமோதி, இக்குரங்கு உத்தரனென்னும்பெயரோடு கவிப்பனென்னும் வாணிகனுக்கு ஒருமகனுகப் பிறந்தென்பாருமுளர்.

ககஉ -,எ. சாரணர் கூறிய.....முடிவுல கெய்தினர்

(இ - ள்.) அங்ஙனம் சாரணர்கூறிய பெருமையமைந்த நன்மொழியைத் தெய்வவாக்கியமாகக்கொண்டு அறத்தின்கட்டலைப்பட்டு அப்பதியிலிருந்த அருந்தவமாக்களும் தவத்தினர்க்கெல்லாம் பொதுப்பட்டவாழ்க்கையையுடைய சாவகமாக்களும் தானமிட்ட எட்டியும் மனிவியும் முட்டாத இன்பத்தையுடைய வீட்டுலகத்தைப் பெற்றார்கள்காணென்றுளென்க.

'தவத்தோ ரடைக்கலந் தான்சிறி தாயினு மிகப்பேரின்பந் தருவது கேளாய்' என்றவள் இங்ஙனங்கூறினுளென்க. தன்றெறல்வாழ்க்கை - தனதென்னுந் தன்மையில்லாதவாழ்க்கை; [2] "மன்றில் வதியுநர் சேட்புலப் பரிசிலர், வெல்போர்ச் சேஎய் பெருவிற லுள்ளி, வந்தோர் மன்ற வளியர் தாமென" என்றார் மலைபடுகடாத்திலும்.

---

[1] "ஓவா திரண்டுவவு மட்டமியும் பட்டினிவிட் டொழுக்கங் காத்தி, முவாத் தவமென்றார்" சீவக. கஇச எ. [2] மலைபடுகடாம், சகஉ - ச.

ககஅ - உ00. கேட்டனை யாயின்.....ஏத்தி

(இ - ள்.) இவ்வடைக்கலத்தின்பயனை நீகேட்டியாயின் இந்தத் தோடார் குழலினையுடையாளுடனே பொழுதுசெல்லுமளவும் நீட்டித்து இவ்விடத்தி ராது நீ போவாயாகவென்று கவுந்தியடிகள்கூறத் தான்பெற்ற கையடைக்கு உவந்தனளாய்க் கவுந்தியடிகளேயேத்தியென்க.

தோட்டார், விகாரம்.

உ0க - சு. வளரிள வனமுலை.....சிலம்புறஞ் சூழ

(இ - ள்.) வளராநின்ற இளைய அழகிய முலையினையும் அமையினழகை வாங்கிக் கொண்டுபூரித்த தோளினையும் இளைய முளையெயிற்றினையும் சிறிய பருவத்தே பெரிய அறிவினையுமுடைய நங்கையுடனே அத்தகிரிக்கட்சென்ற ஞாயிற்றினது சுருங்கினசுடரையுடைய மாலைப்பொழுதிலே மடிசுரந்து கன்றைத் தேடிவாராநின்ற பசுக்களினுடைய முழங்குகுரல்களியம்ப ஆட்டுமறியையும் கோடாரியையுமுடையதோளிலே உறிகட்டின காவையுடைய இடையருடனே கூடப் பால்சுமந்துவரும் செறிந்த வளையையுடைய இடைச்சியரிற்சிலர் இவளழகுகண்டு புறஞ்சூழ்ந்துவாரா நிற்பவென்க.

உ0ள. மினையும்—(இ - ள்.) காவற்காடும்,

கிடங்கும்—(இ - ள்.) அகழியும்,

வளைவிற் பொறியும்—

(இ - ள்.) வளைந்து தானேயெய்யும் எந்திரவில்லும்,

உ0அ. கருவிர லுகமும்—(இ - ள்.) கரியவிரலையுடைய குரங்குபோலிருந்து சேர்ந்தாரைக் கடிக்கும்பொறியும்,

கல்லுமிழ் கவணும்—(இ - ள்.) கல்லையுமிழுங்கவணும்,

உ0ஆ. பரிவுறு வெந்நெயும்—

(இ - ள்.) காய்ந்திறைத்தலாற் சேர்ந்தாரை வருத்துவதாய நெய்யும்,

பாகடு குழிசியும்—(இ - ள்.) செம்புருக்குமிடாவும்,

அன்றி அங்ஙனமிறைத்தற்குப் பாகுகாயுங்குழிசிகளுமாம்.

உக0. காய்பொன் னுலையும்—

(இ - ள்.) உருகக்காய்ச்சியெறிதற்கு எஃகுபட்டிருக்கும் உலைகளும்,

கல்லிடு கூடையும்—

(இ - ள்.) இடங்கணிப்பொறிக்குக் கல்லிட்டு வைக்குங்கூடையும்,

உகக. தூண்டிலும்—(இ - ள்.) தூண்டில்வடிவாகப்பண்ணிப்போக்டு வைத்துக் கிடங்குநீங்கி மதில்பற்றுவாரைக் கோத்துவலிக்குங்கருவியும்,

தொடக்கும்—

(இ - ள்.) * கழுக்கோல்போலக் கழுத்திற்பூட்டிமுறுக்குஞ்சங்கிலியும்;

கயிற்றுத்தொடக்குமாம்.

ஆண்டலை யடுப்பும்—(இ - ள்.) [1] ஆண்டலைப்புள்வடிவாகப்பண்ணிப் பறக்கவிட உச்சியைக்கொத்தி மூளையைக்கடிக்கும்பொறிகளும்,

உகஉ. கவையும்—

(இ - ள்.) இடங்கிலேறின் மறியத்தள்ளும் இருப்புக்கவையும்,

கழுவும்—(இ - ள்.) கழுக்கோலும்,

கழுகும் பாடம்.

புதையும்—(இ - ள்.) அம்புக்கட்டும்,

"அப்புப் புதையு மணிவரிச் சிலையும்" என்றார் கதையினும்.

புழையும்—(இ - ள்.) ஏவறைகளும்,

உகங. ஐயவித் துலாமும்—

(இ - ள்.) பற்றுக்கை தூக்கிப்போகட்ட விட்டமும்,

அன்றிக் கதவையணுகாதபடி கற்கவிதொடங்கி நாற்றும் துலாமுமாம்; சாணம்புக்கூடென்பாரும், சிற்றம்புகள்வைத்தெய்யும் இயந்திரமென்பாருமுளர்.

கைபெய ரூசியும்—(இ - ள்.) மதிற்றலையைப்பற்றுவாரைக் கையைப் † பொதுக்கும் ஊசிப்பொறிகளும்,

இனிக் கதவொடுசேராதபடிவைத்த நிரைக்கழுவெனினுமமையும்.

உகச. சென்றெறி சிரலும்—(இ - ள்.) மாற்றூர்மேற்சென்று கண்ணைக்கொத்தும் சிச்சிலிப்பொறியும்,

பன்றியும்—(இ - ள்.) மதிற்றலையினேறினருடலைக் கோட்டாற்கிழிக்க இரும்பாற்செய்துவைத்த பன்றிப்பொறியும்,

பணையும்-(இ-ள்.) வேய்வடிவாகப்பண்ணி அடித்தற்கமைத்த பொறியும்,

உகஞ. எழுவுஞ் சீப்பும்—(இ - ள்.) கதவுக்குவலியாக உள்வாயிற்படியிலே நிலத்திலேவீழவிடுமரங்களும்,

திறக்குங்காலத்து மேலேயெழுப்புகையால் 'எழுவுஞ்சீப்பு' மென்றார்; "சீப்புப் படியுறின்" என்றார் கதையினும்.

---

[1] ஆண்டலைப்புள் - ஆண் மகனது தலைபோன்ற வடிவமுள்ள ஒருவகைப்பறவை: * "தீண்டபலி பீடத்தி லரித்து வைத்த நெடுங்குஞ்சித் தலையைத்தன் னினமென் றெண்ணி யாண்டலைப்புள் வருகணத்து பார்க்குமாலோ" கவிங்க. கோயில். கசு.

[1] பெருங்கதை, க. இஉ: கசு.

(பி - ம்.) * 'கழிகோல்'. † 'பொதிர்க்கும்'

முழுவிறற் கணையமும்—(இ - ள்.) கணையமரமும், இனிச் சீப்பு அகப்படக் குறுக்கேபோடக் கடவ மரமுமாம்.

உகசு. கோலும்—(இ - ள்.) விட்டேறும்,

குந்தமும்—(இ - ள்.) சிறுசவளமும்,

வேலும்—(இ - ள்.) வல்லயமும்; ஈட்டிமுதலியனவுமாம்.

பிறவும்—(இ - ள்.) சதக்கினி, தள்ளிவெட்டி, களிற்றுப்பொறி, விழுங்கும்பாம்பு, கழுகுப்பொறி, புலிப்பொறி, குடப்பாம்பு, சகடப்பொறி, தகர்ப் பொறி, அரிநூற்பொறியென்பனவும்,

சதக்கினி - நூற்றுவரைக்கொல்லி.

உகள. ஞாயிலும்—(இ - ள்.) குருவித்தலைகளும்,

இதனை ஏவறையென்பாருமுளர்.

சிறந்து—(இ - ள்.) இவை சிறப்பெய்தப்பட்டு; மிக்கென்றுமாம்.

[1] "மாற்றவர்.....கோண்மா" எனவும், "விற்பொறிகள்..... மரநிலையே" எனவும், "செம்புருகு.....பொறியே" எனவும், "கரும்பொனியல் .....திருந்தின்றே" எனவுஞ்சொன்னூர் சிந்தாமணியிலும்.

உகள - கூ. நாட்கொடி துடங்கும்.....புணர்ந்தென்.

(இ-ள்.) நாடேறும் [2] வென்றுவென்றெடுத்த கொடிதானுடங்கும் மதில் வாயிலைக்கழிந்து மாதரி தன்மனையிடத்தே புக்காளென்க.

இடைக்குலமடந்தைக்கு மனைப்புகுமளவும் அடைக்கலந்தந்தேன்; ஆதலால், ஆட்டி தீட்டிப் பெய்து உடீஇத் தாங்கு; அறியாயோநீ; தருவது கேளாய்; முடிவுலகெய்தினார்; நீபோகென, முதுக்குறைநங்கையொடு கணிகுரலியம்பச் சிலர் புறஞ்சூழக் கோவலர்மடந்தை வாயில்கழிந்து தன்மனைபுக்கனளென்க.

ஆல், அன்றேயென்னும் அசை.

இஃது எல்லாவடியும் முதனடுவிறுதி அளவடியான் முடிதலின், நிலை மண்டில வாசிரியப்பா.

கந்.—அடைக்கலக்காதை முற்றிற்று.

---

[1] சீவகசிந்தாமணி, கடக - கூ.

[2] "செருப்புகன் றெடுத்த சேணுயர் நெடுங்கொடி" (முருகு. கூள) "விசயவெல் கொடியுயரி" (மூல்லை, கூக) "நாடோறெடித்த நலம்பெறு புனைகொடி.....துடங்க" (மதுரை. நகூஅ); "மலைநீர் வென்றெழு கொடியிற் றோன்றும்" (மலைபடு. திஅக - உ); "மலையுறழ்யானை வான்றேய் வெல்கொடி.....துடங்க" (பதிற். கூக.)

பதினேழாவது

கொவலைக்களக்காதை.



அரும்பெறற் பாவையை யடைக்கலம் பெற்ற
விரும்பே ருவகையி னிடைக்குல மடந்தை
[1] யாவிலை யுணவி னுய்ச்சியர் தம்மொடு
மின்னுச்சூழ் கோவல ரிருக்கை யன்றிப்
நி. [2] பூவ லூட்டிய பூணமாண் பந்தர்க்
காவற் சிற்றிற் கடிமனைப் படுத்துச்
[3] செறிவளை யாய்ச்சியர் சிலருடன் கூடி
நறுமலர்க் கோதையை நாணீ ராட்டிக்
கூடன் மகளிர் கோலங் கொள்ளு
கo. மாடகப் பைம்பூ ணாருவிலை யழிப்பச்
[4] செய்யாக் கோலமொடு வந்தீர்க் கென்மக
ளாயை காணீ ரடித்தொழி லாட்டி
[5] பொன்னிற் பொதிந்தேன் பூணபூங் கோதை
யென்னுட னங்கையீங் கிருக்கெனத் தொழுது

கூ. அவை - மோர்.

நி - சு. பூவலூட்டிய சிற்றில் - செம்மணூட்டியசிற்றில்; புனிதாகச் செம்மண்பூசிய சிற்றிலாகிய காவன்மனையிலே இருத்தி.

கூ. கூடலென்றுள்; தான் அறியுமூர் அதுவாகலின்.

கo - கக. ஆபரணத்தின் உயர்ச்சியை அழித்தற்குப் பிறவியழகொடுவந் தீர்க்கு; செய்யாக் கோலம் - பிறவியழகு.

கச. நங்கை - நங்காய்.

---

1 "அவிலை யுணவிற் கிளையுட னருத்தி" பெரும்பாண். கசுஉ.

2 "இல்பூவலூட்டி" கவி. கoச; "மூடக்காற் பந்தர்ப், புதுக்கல்தன்ன செவ் வாய்ச் சிற்றில்" அகநா. நகச.

3 "செறிவளையாய்ச்சியர்சிலர்" சிலப். கஅ: உoசு.

4 கம்ப. கோலங்காண். கூ.

5 "தன்னுடம்பு தாரமடைக்கலத்தான் தன்னுயிர்க்கென், முன்னித்து வைத்த பொருளொடிவைநான்கும், பொன்னினைப் போற்போற்றிக் காத்துய்க்க வுய்யாக்கா, லன்றே விழுமந் தரும்" ஆசார. கூசு.

கடு. மாதவத் தாட்டி வழித்துயர் நீக்கி
யேத மில்லா விடந்தலைப் படுத்தின்
ணைதக வுண்டோ [1] தும்மக னுர்க்கினிச்
சாவக நோன்பிக ளடிக ளாதலி
[2] ஞத்தூ ணங்கையொடு நாள்வழிப் படூஉ

உ0. மடிசி லாக்குதற் கமைந்தநற் கலங்க
ணெடியா தளிமி னீரெனக் கூற
விடைக்குல் மடந்தைய ரியல்பிற் குன்ரு
மடைக்கலந் தன்னெடு மாண்புடை மரபிற்
[3] கோளிப் பாகற் கொழுங்கனித் திரள்காய்

உடு. வாள்வரிக் கொடுங்காய் மாதுளம் பசுங்காய்
மாவின் கனியொடு வாழைத் தீங்கனி
சாலி யரிசி தம்பாற் பயனெடு
கோல்வளை மாதே கொள்கெனக் கொடுப்ப
மெல்விரல் சிவப்பப் பல்வேறு பசுங்காய்

கடு. மாதவத்தாட்டியென்றது கவுந்தியை.

கஅ. அடிகளென்றது கோவலனை.

கக. நாத்தூணங்கை - மாதரிமகள் ஐயை.

ககூ - உ0. நாள்வழிப் படூஉமடிசில் - காலத்திலே ஆக்கும் அடிசில்.

கஅ - உக. சாவகநோன்பிகளாதலின் இரவுண்ணுரென்பது.

உங. மடைக் கலம் - ஆக்குங்கலம்.

உஉ - ங. இயல்பிற் குன்ருக் கலமென்ரூர், புதுக்கலத்தை; மடைமேல் ஏற்றுவாருமூளர்.

உச. கோளிப் பாகல் - பூவாதேகாய்க்கும் பலா; வெளிப்படை; கனிக் காய் - முதாரிக்காய்; கனிக்கு ஆனகாய்.

உடு. (பா) வால்வரிக் கொடுங்காய் - வெள்வரிக்காய். மாதுளங்காய் - கொம்மட்டிமாதுளங்காய்; புளித்தகறி ஆக்குதற்குக் கொம்மட்டிமாதுளங்காய் சிறக்கும்.

உள. (பா) தன்பாற்பயன் - தனக்குள்ள பாலாகிய பயன்.

---

[1] "நினக்கிவன் மகனுத் தோன்றிய தாஉம்" (மணி. உக: உகூ.) எனக்கணவனே மகனென்னு மொழியால் வழங்கியிருத்தல் காண்க.

[2] நாத்தூண் - கணவனுடன்பிறந்தவள்; "தாரணியை யலங்கரிப்பா டலேவியவ ணத்தூண, நாரணி" சேது. தேவிபுர. கி.

[3] "கோளி யுள்ளும் பழமீக் கூறும்பலா" பெரும்பாண். சஎன - அ.

நிகூ

கூ0. கொடுவாய்க் குயத்து விடுவாய் செய்யத்
திருமுகம் வியர்த்தது செங்கண் சேந்தன
கரிபுற வட்டில் கண்டனன் பெயர
வையெரி மூட்டிய வையை தன்னெடு
கையறி மடைமையிற் காதலற் காக்கித்

கூடு. காலப் புல்லின் வால்வெண் டோட்டுக்
கைவன் மகடூஉக் கவின்பெறப் பூணேந்த
செய்வினைத் தவிசிற் செல்வ னிருந்தபின்
கடிமல ரங்கையிற் காதல னடிநீர்
சுடுமண் மண்டையிற் றெழுதனண் மாற்றி

சo. மண்ணக மடந்தையை மயக்கொழிப் பனல்போற்
றண்ணீர் தெளித்துத் தன்கையாற் றடவிக்
* குமரி வாழையின் குருத்தகம் விரித்தீங்
கமுத முண்க வடிக ளீங்கென
வரசர் பின்னோர்க் கருமறை மருங்கி

கூ0. குயம் - அரிவாள். விடுவாயசெய்தல் - அரிதல்.

கூஉ. பெயர - புகைகண்டறியாதபடியாலே திரும்ப.

கூகூ. வை - வைக்கோல்.

(கூஉ) அட்டிலிலக்கண்டு பெயரும்படி (கூகூ) வைக்கோலால் எரிமூட்டிய வென்க; தீமூட்டுவது வைக்கோலாதலால்.... ....

கூச. கையறி மடைமையின் - தன்னைவல்ல ளாவாலே.

(கூ0) விடுவாய்செய்ய (கூக) முகம் வியர்த்தது; (கூஉ) கரிந்த இடத்தை யுடைய அட்டிலிலக்கண்டு பெயர்த்தவளவிலே (கூக) கண்சேந்தன; இவ்வாறுகவும் (கூச) கையறிமடைமையிற் காதலற்கு ஆக்கி.

கூடு. தாலப்புல் - பனையாகிய [1]புறக்காழ்மரம். கூஎ. தவிசு - தடுக்கு.

(கூஅ) அங்கையின் (கூக) மாற்றி.

சo. மயக்கொழித்தல் - இவர்க்கு நிகழ்வனவறிந்து மயங்கின மயக்கம் தீர்த்தல்; அனந்தல்தீர்க்கையுமாம்.

சஉ. குமரிவாழை - ஈளுத வாழை.

சச - டு. அருமறை மருங்கின் உரியவெல்லாம் - பலியிடுதன்முதலியன; வாய்பூசல் முதலாயினவுமாம். தன்னூரிற் செய்வனவெல்லாம் செய்யப்பெறுமையின், 'ஒருமுறை கழித்து' என்றார்.

---

1 "புறக்கா ழீனவே புல்லென மொழிப" தொல். மரபு. சூ. அடு.

(பி - ம்.) * 'குமரி வாழைக் குருத்தகம் விரித்தாய், கமழ்த முண்மி னடிகணீரென'

சடு. ஞுரிய வெல்லா மொருமூறை கழித்தாங்
காயர் பாடியி னசோதைபெற் றெடுத்த
பூவைப் புதுமலர் வண்ணன் கொல்லோ
நல்லமு துண்ணு நம்பி யீங்குப்
பல்வளைத் தோளியும் பண்டுநங் குலத்துத்

நூ. [1] தொழுனை யாற்றினுட் மேணி வண்ணனை
விழுமங் தீர்த்த விளக்குக் கொல்லென
வையையுந் தவ்வையும் விம்மித மெய்திக்
கண்கொளா நமக்கிவர் காட்சி யீங்கென
வுண்டினி திருந்த வுபர்பே ராளற்

நூடு. கம்மென் றிரையலோ டடைக்கா யீத்த
மையீ ரோதியை வருகெனப் பொருந்திக்
[2] கல்லத ரத்தங் கடக்க யாவதும்
வல்லுர கொல்லோ மடந்தைமெல் லடியென
வெம்முனை யருஞ்சுரம் போந்ததற் கிரங்கி

சூ. யெம்முது குரவ ரென்னுற் றனர்கொன்
மாயங் கொல்லோ வல்வினை கொல்லோ
யாதுளங் கலங்கி யாவது மறியேன்
[3] வறுமொழி யாளரொடு வம்பப் பரத்தரொடு
குறுமொழிக் கோட்டி நெடுநகை புக்குப்

நூஉ. தவ்வை - தமக்கை; தாயுமாம்; முறையன்று. விம்மிதம் - வியப்பு. (சடு) ஒருமுறைகழித்து (நூசை) உண்டினிதிருந்தவெனக்கூட்டுக.

நூடு. திரையல் - வெற்றிலைச்சுருள்.

நூஎ - சூ0. கல்லத ரத்தம்.....என்னுற் றனரென்றது, வல்லவோ அடியெனவிரங்கி என்னுற்றனரோவென்றுனைன்க.

சூஉ. நின்னை இவ்வாறு தனியாக்குதற்குக் காரணமாம் என்பொருட்டொலைவால்வந்த பான்மையினை இன்னதென்று ஒன்றுமறிகிலேன்.

சூசு. வறுமொழி - பயனில் சொல். (பர) வம்பமாந்தர் - ஒன்றிற்படாத மாந்தர்.

சூசு. குறுமொழிக்கோட்டி-சிறுசொல்லையுடையார். நெடுநகை-மிக்கநகை.

---

[1] "தொழுனைத் துறைவனே டாடியபின்னை"; "வஞ்சஞ் செய்தான் றெழுனைப் புனலு, ணெஞ்சங் கவர்ந்தாள்" (சிலப். கஎ); "விழுமிழை தல்லார் வெருள்பிண்டோ ணெக்கங், கெழுமிய நாணை மறைக்குந் - தொழுனையுண், மாலையுண் மாலை மயக்குமுந் தாளஞ்தாம், சாலபினைச் சாலபறுக்கு மாறு" பழ. கஉ.

[2] "கல்பிறங்கத்தம்" (சூஉத். சூசு; அகநா. எகஉ); 'கல்லதர்ச் சிறுநெறி" (அக நா. எஉ); "கல்லத ரத்தங் கடவா தின்றுழி" மணி. கந: ககூ.

[3] "வம்பப் பரத்தை வறுமொழி யாளனெடி" சிலப். கo: உகூ.

சுரு. பொச்சாப் புண்டு பொருளுரை யாளர்
நச்சுக்கொன் றேற்கு நன்னெறி யுண்டோ
விருமுது குரவ ரேவலும் பிழைத்தேன்
சிறுமுதுக் குறைவிக்குச் சிறுமையுஞ் செய்தேன்
வழுவென்னும் பாரேன் மாநகர் மருங்கீண்
எ0. டெழுகென வெழுந்தா யென்செய் தீனெனை
[1] வறவோர்க் களித்தலு மந்தண ரோம்பலுந்
* துறவோர்க் கெதிர்தலுந் தொல்லோர் சிறப்பின்
[2] விருந்தெதிர் கோடலு மிழந்த வென்னை நும்
பெருமக டன்னெடும் பெரும்பெயர்த் † தலைத்தாண்
எரு. மன்பெருஞ் சிறப்பின் மாநிதிக் கிழவன்
முந்தை யில்லா முனிவிகந் தனனே

சுரு. பொச்சாப்புண்டு - மறவியிற்பொருந்தி.

சுசு. நச்சப்படுபொருளே நச்சென்றார்.

சுரு - சு. பொருளுரையாளர் நச்சுக்கொன்றேற்கு - மெய்யுரைக்குஞ் சான்றோரால் நச்சப்படுந்தொழிலைக் கெடுத்தேனுக்கு; ஆவது ஆசாரம்.

சுஅ. சிறுமுதுக் குறைவிக்கு - சிறிய வயதிலே பெரிய அறிவினையுடைய உனக்கு. சிறுமை - நோய்.

சுசு. மாநகர்மருங்கு - நம்மாநகர் மருங்கினின்றும். ஈண்டு - இவ்விடத்து; என்றது மதுரையை.

எ0. என்செய்தீனெனன்றது செய்தவருமை என்னென்று வியந்தது.

சுசு - எ0. வழியிடை நினக்குவரும் தீங்கு ஒன்றும் கருதாது எழுக வென்றுயான்சொல்ல.....

எக. 'அறவோர்க்களித்தல்' என்பதுமுதற் கண்ணகிவார்த்தை.

எக. அறவோர் - துறவாது விரதங்காத்தோர்.

எஉ. துறவோர்க்கு - துறந்தோரை. எசு. பெருமகள் - கோவலன்மாதா.

எசு - ரு. பெரிய புகழையும் தலையான உற்சாகத்தையுமுடைய மாநிதிக் கிழவன் - கோவலன்பிதா; பெரிய பொருளைத் தன்னிடத்தேயுடைய மாநிதிக் கிழவனென்றுமாம்.

எசு - கூ. கரந்தொழுகினவாறே அவர்களிருவரும் இக்குணத்தைக்கண்டு அற்புளஞ்சிறந்த.

---

[1] எக - கூ: குறள். அ - ஆம் அதிகாரம், பரிமேலழகருரையின் அவதாரிகையில் இவ்வடிகள் மேற்கோளாக வந்துள்ளன.

[2] 'விருந்து' என்பது உயர்திணையிருபாலையுமுணர்த்துவதற்கு இவ்வடிமேற்கோள்; தொல். எெவி. சூ. இெ - த.

(பி - மி.) * 'துறவோர்க்கேதலும்' † 'தலைத்தாள் வண்பெருஞ்'

வற்புளஞ் சிறந்தாங் * கருண்மொழி யாஇ
யெற்பா ராட்ட யானகத் தொளித்த
நோயுந் துன்பமு நொடிவது போலுமென்
அ0. [1] † வாயன் முறுவற்கவ ருள்ளகம் வருந்தப்
போற்று வொழுக்கம் ‡ புரிந்தீர் யாவது
மாற்று ளுள்ள வாழ்க்கையே ஞதலி
னேற்றெழுந் தனன்யா னென்றவள் கூறக்
குடிமுதற் சுற்றமுங் குற்றிளை யோரு
அடி. மடியோர் பாங்கு மாயமு நீங்கி
நாணமு மடனு நல்லோ ரேத்தும்
பேணிய கற்பும் பெருந்துணை யாக
வெண்ணெடு போந்தீங் கென்றுயர் கிளந்த
பொன்னே கொடியே புனைபூங் கோதாய்
கூ0. நாணின் பாவாய் நீணில விளக்கே
கற்பின் கொழுந்தே பொற்பின் செல்வி
சீறடிச் சிலம்பி னொன்றுகொண் டிபான்போய்

எசு. நோய் - உடம்பின்மெலிவு. துன்பம் - மனத்தளர்ச்சி.

அச-உ. (பா) நீர் போற்றுவொழுக்கத்தை மேவினீராயிருக்கவும் மாற்று வுள்ள வாழ்க்கையையுடையேஞ்தலாலே.

அசு. ஏற்று - உடன்பட்டு.

எசு - அசு. நீர் என்முன் புரிவில்லாமையா லுள்ள வெறுப்பைக் கரந்தொழுகி னேனாக, அதனை அறிந்து அவர்களுடைய உள்ளஞ்சிறந்து ஆங்கு அருண்மொழி யாஇ எற்பாராட்ட யான் நெஞ்சத்தடக்கிய நும்பிரிவையும் அதனல்வந்த ஆற்றுமையையுஞ் சொல்லுவதுபோலும் என் மெய்யல்லாமுறுவல்காரணமாக அவர்வருந்தும்படி போற்றுவொழுக்கத்தை மேவினீர்; மாற்றுத உள்ளத்தேஞ்கை யாலே உடன்பட்டுப் போந்தேன்.

அச. குற்றிளையோர் - குற்றேவன்மகளிர்; எடுத்துக்கை கீடடுவாருமாம்.

அடி. அடியோர்பாங்கு - அடியோர் பகுதி; சேவிக்கும் பெயர். ஆயம் - தோழிமார்; சேவிக்குந்தோழிமாருமாம்.

அசு. நல்லோரேத்து - நல்லோராலே ஏத்தப்படுந்தன்மை.

அச - எ. சுற்றமுதலான நான்குக்கும் நான்கும் துணையாக.

கூ0. நாணினையுடைய பாவாய்; சாரியைகிற்க உருபுதொக்கது.

---

[1] "வறிதகத் தெழுந்த வாய்ன் முறுவலள்" அகநா. இ.

(பி - ம்.) * 'அருமொழி' † 'வாயின் முறுவற்கு' ‡ 'புரிந்தாராவது'

மாறி வருவன் மயங்கா தொழிகெனக்
கருங்கய னெடுங்கட் காதலி தன்னை

கூடு. யொருங்குடன் றழீஇ யுழையோ ரில்லா
வொருதனி கண்டுதன் னுள்ளகம் வெதும்பி
வருபனி காந்த கண்ணை ஞகிப்
பல்லான் கோவல ரில்ல நீங்கி
வல்லா நடையின் மறுகிற் செல்வோ

கஂ. னிமிலே றெதிர்ந்த திழுக்கென வறியான்
றன்குல மறியுந் தகுதியன் முதலிற்
[1] முதெரு மன்றந் தானுடன் கழிந்து
மாதர் வீதி மறுகிடை நடந்து
பீடிகைத் தெருவிற் பெயர்வோ ஞங்கட்

கஂடு. கண்ணுள் விணைஞர் கைவினை முற்றிய
நுண்வினைக் கொல்லர் நூற்றுவர் பின்வர
[2] மெய்ப்பை புக்கு விலங்குநடைச் செலவிற்
கைக்கோற் கொல்லனைக் கண்டன ஞகித்
தென்னவன் பெயரொடு சிறப்புப் பெற்ற

ககஂ. பொன்வினைக் கொல்ல னிவனெனப் பொருந்திக்
காவலன் றேவிக் காவதோர் காற்கணி
* ரீவிலை யிடுதற் காதி யோவென
வடியே னறியே ஞயினும் † வேந்தர்
முடிமுதற் கலன்கள் ‡ சமைப்பேன் யானெனைக்

கூடு. ஒருங்குடன்றழீஇ - மேனிமுழுதும் தழுவி.

கூடு - கூ. தனியில்லாத தனிமையைக்கண்டு விட்டுநீங்கமாட்டாமையால் மனம்வெதும்பி.

கூகூ. வல்லாநடை - மாட்டாநடை.

கஂ0 - கஂக. ஏறு எதிர்தல் இடையரதியும் நிமித்தமாதலின் அறிந்திலன்.

கஂங. மாதர்வீதி - தளிப்பெண்டிகள்தெரு.

கஂடு - கூ. சிற்பத்தொழிலெல்லாம் தறைபோகியகொல்லர்; கம்மாளரது வினையாவது - சிற்பம்.

கஂள. மெய்ப்பை - சட்டை. விலங்குநடைச்செலவு - இழிகுலத்தோரதின், உயர்ந்தோர்வந்தவிடமெங்கும் விலங்கிநடத்தல்.

கஂஅ. கைக்கோல் - பற்றுக்கொடிறு. கஂக. சிறப்பு - வரிசை.

ககஉ. ஆதியோ - ஆவையோ.

---

[1] தாதெருமன்றம்: சிலப். கள; கவி. கஂக.

[2] "மெய்ப்பை புக்க வெருவருத் தோற்றத்து" மூல்லை. கூ0.

(பி - ம்.) * 'நீவிலை தெரிதற்கு' † 'வேந்தற்கு' ‡ 'அமைப்பேன்'

ககடு. கூற்றத் தூதன் கைதொழு தேத்தப்
* போற்றருஞ் சிலம்பின் பொதிவா யவிழ்த்தனன்
மத்தக மணியொடு வயிரங் கட்டிய
பத்திக் கேவணப் † பசும்பொற் குடைச்சூற்
சித்திரச் சிலம்பின் செய்வினை யெல்லாம்

கஉ0. ‡ பொய்த்தொழிற் கொல்லன் புரிந்துட னேக்கிக்
கோப்பெருந் தேவிக் கல்லதை யிச்சிலம்
பியாப்புற வில்லை யெனமுன் போந்து
விறன்மிகு வேந்தற்கு விளம்பியான் § வரவென்
சிறுகுடி லங்க ணிருமி னீரெனக்

கஉடு. கோவலன் சென்றக் குறுமக னிருக்கையோர்
தேவ கோட்டச் சிறையகம் புக்கபின்
கரந்தியான் கொண்ட காலணி யீங்குப்
பரந்து வெளிப்படா || முன்ன மன்னற்குப்
புலம்பெயர் புதுவணிற் போக்குவ னியானெனக்

கஙo. கலங்கா வுள்ளங் கரந்தனன் செல்வோன்
கூடன் மகளிர் நாடற் ரேற்றமும்
பாடற் பகுதியும் பண்ணின் பயங்களுங்
காவல னுள்ளங் கவர்ந்தன வென்றுத
னூட னுள்ள மூள்கரந் தொளித்துத்

ககசு. பொதிவாய் - கட்டினவாய். ககள. மத்தகமணி - தலையான்மணி.

ககஅ. பத்தியாகவருத்த கேவணம்; கேவணம்-கல்லழுத்துங்குழி. குடைச்சூல் - புடைதாழ்த்தல்; உள்ளழுட்டாழ்த்தலுமாம்.

கஉ0. கொல்லன் புரிந்துடனேக்கி - கொல்லன் தான்மறைத்த சிலம்போடி ஒக்கும்படியைப் பார்த்து.

கஉஉ. போந்து - போய்.

கஉச. சிறுகுடிலங்கண் - சிறுகுடிலுக்கு அருகான அவ்விடம்; ஆவது அவனிருக்கையருகான தேவகோட்டம்.

கஉடு - சு. .....அக்கசரலை.....

கஉஅ. மன்னற்கு வெளிப்படாமுன்னென்க.

கஉகூ. புலம்பெயர் புதுவன் - வேறொரு தேசத்தினின் றும்வந்தவன்; பரதேசி.

(பீ - மீ.) * 'பொற்றருஞ் சிறப்பிற் பொதிவாயவிழ்த்து' † 'பசும்பொற்குடைச் சித்திரச்' ‡ 'பொற்றொழிற்கொல்லன் புரிந்துநோக்கி' § 'விருவேன் சிறுகுடி லாங்கண்' || 'முன்னமன்னவற்கு'

கஙூ. தலைநோய் வருத்தத் தன்மே லிட்டுக்
குலமுதற் றேவி கூடா தேக
மந்திரச் சுற்ற நீங்கி மன்னவன்
சிந்தரி நெடுங்கட் சிலதியர் தம்மொடு
கோப்பெருந் தேவி கோயி * லேக்கிக்

கஙூ. காப்புடை வாயிற் கடைகா † ணகவையின்
வீழ்ந்தனன் கிடந்து தாழ்ந்துபல வேத்திக்
‡ கன்னக மின்றியுங் கவைக்கோ லின்றியுந்
துன்னிய மந்திரந் துணையெனக் கொண்டு
வாயி லாளரை மயக்குதுயி லுறுத்துக்

கஙூ. கோயிற் சிலம்பு கொண்ட கள்வன்
கல்லென் பேரூர்க் காவலர்க் கரந்தென்
சில்லோச் சிறுகுடி லகத்திருந் தோனென
[1] வினைவிளை கால மாதலின் யாவதுஞ்
சினையலர் வேம்பன் றேரா னுகி

கஙூ. பூர்காப் பாளரைக் § கூவி யீங்கென்
ரூழ்பூங் கோதை தன்காற் சிலம்பு
கன்றிய கள்வன் கையது தாகிற்
கொன்றச் சிலம்பு கொணர்க வீங்கெனக்
காவல னேவக் கருந்தொழிற் கொல்லனு

கஙூக - சக. அரசனுக்கு ஆடிப் பாடினருள் ஒருத்திமேல் உள்ளஞ்சென்ற தென்று தேவி ஊடி நீங்க மந்திரச்சுற்றம் நீங்கி அரசன் அவள்வயிற் சூறுகின வளவிலே தட்டான் தொழுதேத்தி.

(கஙூ) செல்வோன் (கசக) வீழ்ந்தனன் கிடந்தென்க.

கசஉ. கன்னகம் - அகழ்கருவி. கவைக்கோல் - குத்துக்கோல், கொடியது, மண்வாங்குங்கருவி.

கசஙூ. மந்திரம் - தூயின்மந்திரம். கசஎ. சில்லோ - இழிவு.

கஙூ - ருக. என் கோதை - என்தேவி.

கஙூஉ. கன்றியகள்வன் - களவிற்றழும்பினவன்.

---

[1] இந்நான்பதிகத்தின் உள - ஆம் அடி முதலியவற்றைப் பார்க்க; 'வினை விளைந்தது' (தொல். கிளவி. சூ. இள - சே. ந.) என்பது இங்கே அறிதற்பாலது.

(பி - ம்) * 'நோக்கக்' † 'அகவயின்' ‡ 'கன்னமின்றியும்' § 'கூவினீங்கென்று'

கருடு. மேவ லுள்ளத் தெண்ணியது மூடித்தெனத்
*[1] தீவினை முதிர்வலைச் சென்றுபட் டிருந்த
கோவலன் றன்னைக் குறுகின னுகி
வலம்படு தானை மன்னவ னேவச்
சிலம்பு காணிய வந்தோ ரிவரெனச்

கசுஎ. செய்வினைச் சிலம்பின் செய்தி யெல்லாம்
பொய்வினைக் கொல்லன் புரிந்துடன் காட்ட
விலக்கண முறைமையி னிருந்தோ னீங்கிவன்
கொலைப்படு மகனல னென்று † கூறு
மருந்திறன் மாக்களை யகநகைத் துரைத்துக்

கசுடு. கருந்தொழிற் கொல்லன் காட்டின னுரைப்போன்
மந்திரந் தெய்வ மருந்தே நிமித்தந்
தந்திர மிடனே காலங் கருவியென்
றெட்டுட னன்றே யிழுக்குடை மரபிற்
கட்டுண் மாக்க டுணையெனத் ‡ திரிவது

கஎஅ. மருந்திற் பட்டோ ராயின் யாவரும்
பெரும்பெயர் மன்னனிற் பெருநவைப் பட்டோர்
மந்திர நாவிடை வழுத்துவ ராயி
§ னிந்திர குமரரின் யாங்காண் குவமோ
தெய்வத் தோற்றந் தெளிகுவ ராயிற்

கருடு. எவ னுள்ளத்து - எவ்வப்பட்ட உள்ளத்தோடே. எண்ணியது முடித்தென - எண்ணியது முடித்தேனென்று; முடித்து, தன்மையினை.

கருகூ. தீவினையாகி வந்து நிற்கிற வலை. கருஎ. குறுகினனுகி - குறுகி.

கசுசை. (பா) அருந்திறன் மாக்கட்கு அகநகவுரைத்து - இவனிருந்தபடியாற் கள்வனல்லனென்றுரைத்தவர்கள் மனம் பிரியமாக உடம்படும்படி வார்த்தைகள் சொல்லி.

கசுருடு. காட்டினன் - ஏதுக்களைக்காட்டி.

கஎஅ. மருந்திற் பட்டோராயின் - இவன் மருந்திலுல் தப்பினவிடத்து.

கஎஉ. இந்திரகுமரர் அகப்படாததுபோல்.....நாமும் காணமாட்டோம்.

கஎச - டு. கள்ளர் தங்கள் தெய்வத்தோற்றத்தினை நினைப்பாராயின். கையிலகப்பட்ட பொருளைக் காட்டியும்தப்புவர்; அகங்கையை அவர்க்குக்காட்டியும் பெயர்குவரென்றுமாம்.

---

[1] கருகூ - எ: குறுகுதல், அணுகுதலென்னும் பொருளில் வருமென்பதற்கு இவ்வடிகள் மேற்கோள்; தொல். முதற்சூத்திரவிருத்தி.

(பி - ம்.) * 'தீவினைவலையிற்' † 'கூறவு மருந்திரண் மாக்களைநகை வுரைத்து' ‡ 'திரிவமந்திரநாவிடை வழுத்துவர்' § 'இந்திர திருவின் யாங்காண் குவமோ'

களரி. * கையகத் துறுபொருள் காட்டியும் பெயர்குவர்
மருந்தி னங்கண் மயக்குவ ராயி
னிருந்தோம் பெயரு மிடனுமா ருண்டோ
நிமித்தம் வாய்த்திடி னல்ல தியாவதும்
† புகற்கில ரரும்பொருள் வந்துகைப் புகுதினுங்

கஅ0. தந்திர கரண மெண்ணுவ ராயி
னிந்திரன் ‡ மார்பத் தாரமு மெய்துவ
§ ரிவ்விட மிப்பொருள் கோடற் கிடமெனி
னவ்விடத் தவரை யார்காண் கிற்பார்
காலங் கருதி யவர்பொருள் கையுறின்

கஅரி. || மேலோ ராயினும் விலக்கலு மூண்டோ
கருவி கொண்டவ ரரும்பொருள் கையுறி
னிருநில மருங்கி னியார்காண் கிற்பா
ரிரவே பகலே யென்றிரண் டில்லை
கரவிடங் கேட்பினோர் புகலிட மில்லை

ககo. ** தூதர்கோ லத்து வாயிலி னிருந்து
†† மாதர் கோலத்து வல்லிருட் புக்கு
விளக்கு நிழலிற் றுளக்கில ன் ‡‡ சென்றுங்
கிளங்கோ வேந்தன் றுளங்கொளி §§ யாரம்
வெயிலிடு வயிரத்து மின்னின் வாங்கத்

களசு - எ. நம்மிடத்து மயக்குவரென்றல். இருந்தநாம் எழுந்திருந்து போகலாமிடமுமுண்டோ; இருந்தநாம் பெயர்ந்து போகவுமாட்டோமென்றுமாம்.

களக. புகற்கிலர் - புகார்கள்; பொருள்வந்து கைப்புகுதினும் அதனை விரும்பாரென்றுமாம்.

கஅo. தந்திரகரணம்-கரவடநூல்;களவுநூலிற்சொல்லுகிற கிரியையுமாம்.

கஅரி. மேலோர் - தேவர்.

கஅக. கரவிடம் - களவின்பகுதி. புகலிடம் - ஒளிக்கும்பரப்பு; புகலிட மில்லை - சொல்லின்முடிவில்லையென்றுமாம். (பா) பரவிடமில்லை - புகழ்ந்து முடியவொண்ணுதென்க.

ககங. இளங்கோவேந்தன் - தென்னவன்தம்பி.

ககச. வெயிலிடுவயிரவாரத்தை வாங்கவென்க; ஆரத்தைவயிரத்தொளியே ஒளியாகச் சென்று வாங்கவென்றுமாம்.

(பி - ம்.) * 'கையகத்துப்பொருள்' † 'புகற்கிலரும்பொருள் வந்துகைகூடா' ‡ 'மார்பிலாரமுமெய்துவர்' § 'இவ்விடத்திப் பொருள்' || 'மேலோராயும்' ** 'தூதர்க்கோலத்து' †† 'மாதர்க்கோலத்து' ‡‡ 'சென்றீங்கு' §§ 'ஆரம்வில்லிடு'

கசூ. துயில்கண் விழித்தோன் றோளிற் காணு
னுடைவா ளுருவ வுறைகை வாங்கி
யெறிதொறுஞ் செறித்த வியல்பிற் காற்றுன்
மல்லிற் காண மணித்தூண் காட்டிக்
கல்வியிற் பெயர்ந்த கள்வன் றன்னைக்

உ00. கண்டோ ருளரெனிற் காட்டு மீங்கிவர்க்
குண்டோ வுலகத் தொப்போ ரென்றக்
கருந்தொழிற் கொல்லன் சொல்ல வாங்கோர்
திருந்துவேற் றடக்கை * யிளையோன் கூறு
நிலனக ழுளிய னீலத் தாணையன்

உ0சூ. கலனசை வேட்கையிற் கடும்புலி போன்று
மாரி நடுநாள் வல்லிருண் மயக்கத்
தூர்மடி கங்கு லொருவன் றோன்றக்
கைவா ளுருவவென் கைவாள் வாங்க
வெவ்வாய் மருங்கினும் யானவற் கண்டிலே

உக0. னரிதிவர் செய்தி யலைக்கும் வேந்தனு
மூரியதொன் றுரைமி னுறுபடை யீரொனக்
கல்லாக் களிமக ளொருவன் கையில்
வெள்வா ளெறிந்தனன் விலங்கூ டறுத்தது
புண்ணுமிழ் குருதி பொழிந்துடன் பரப்ப

உகசூ. மண்ணக மடந்தை வான்றுயர் கூரக்
காவலன் செங்கோல் வளைய வீழ்ந்தனன்
கோவலன் பண்டை யூழ்வினை யுருத்தென்.

கசூ - கூ. அவன் உடைவாளுருவ வுறையைத் தன் கையிலேவாங்கி அவ் வாளெறியவாங்குந்தோறும் உறையைச் செறித்தான்; அதிலே அலசிப் பின்பு மல்லாலே காணவினைத்தவரை நின்ற தூணைக்காட்டித் தான்மறைந்தான்.

உ00. இவர்க்கென்றுன், இவனையுங் கள்ளனுக்கி.

உ0உ - கூ. அங்குவந்து இவர்களுடனின்றுளொருவன் சொல்லுவான்:—

உகக. உரியது - இனிச்செய்வது.

உகஉ. கல்லாக்களிமகன் - கல்வியின்மையின் மயங்கினமகன்.

உகசு. வாளெறிந்தனன்.....விலங்கூடறுத்தது - குறுக்காக ஊடறுத்தது அந்தவாளென்க; அறுத்தது, முற்று.

உகசு. அதனுலே விழுந்தான்.

உ0எ - கசு. ஒருகள்ளனை யான்கண்டேன்; கைவாளை உறைவிட்டு நீக்க அவனை ஓரிடத்திலுங்கண்டிலேன்; ஆதலின் இவர்செய்தி தெரியாது; இவனை நாம் கொல்லாதே, தப்பவிடில் அரசன் நம்மை வருத்தும்; இனி உரியது செய்க வென, ஒருவன் வாளாலெறிந்தான்; அது விலங்க ஊடறுத்தது; விழுந்தான்.

உகஏ. உருத்த - உருப்ப.

நேரிசை வெண்பா.

நண்ணு மிருவினையு நண்ணுமின்க ணல்லறமே
கண்ணகி தன்கேள்வன் * காரணத்தான் - மண்ணில்
வளையாத செங்கோல் வளைந்ததே பண்டை
விளைவாகி வந்த வினை.

''நண்ணும்''-கண்ணகிதன் கேள்வன்காரணமாக வளைந்தது; இது பண்டை வினை; இருவினையும் நண்ணும்; ஆதலால் உலகத்தீர், அறஞ்செய்மினென்று இளங்கோவடிகள் அருளிச்செய்தது.

க - உ. அரும்பெறற் பாவையை.....மடந்தை

(இ - ள்.) தனக்குப் பெறுதற்கரிய பாவைபோல்வாளைக் கவுந்தியடிகளால் அடைக்கலங்கொடுக்கப்பெற்ற மிகவும்பெரியதாகிய உவகையையுடைய இடையர்குலத்திற்பிறந்த மாதரியாகியமடந்தை,

மடந்தை, பருவமன்று; பெண்பாற்பெயர்.

ங - சு. அளைவிலை யுணவின்.....மனைப்படுத்து

(இ - ள்.) மோர்விலையை உணவாகவுடைய ஆய்ச்சியரோடு இடையர் குடியிருந்த இல்லினன்றிக் கட்டுவேலிசூழ்ந்த காவலையும் அழகுபெறவிட்ட குளிர்ந்த காவணத்தையுமுடைய செம்மண்பூசப்பட்ட சிறிய இல்லாகிய புதிய மனையிலேயிருத்தியென்க.

அளை - மோர். மிளை - கட்டுவேலி. பூவல் - செம்மண்; [1] ''பூவற் படுவிற் கூவற் றூண்டிய'' என்றார் புறத்தினும்.

எ - அ. செறிவளை யாய்ச்சியர்.....நாணீ ராட்டி

(இ - ள்.) தன்சுற்றத்திலுள்ள செறிந்த வளையையுடைய ஆய்ச்சியர் சிலருடனே தான் நின்று நறிய மலர்க்கோதையினையுடையாளைப் புதுநீரான் மஞ்சனஞ்செய்வித்தென்க.

க - கசு. கூடன் மகளிர்.....தொழுது

(இ - ள்.) இக்கூடல்நகரிடத்து மகளிர்கொள்ளும் அருவிலை ஆடகப்பைம் பூணைச்செய்த கோலமழித்தற்குச் செய்யாக்கோலமொடுவந்த உமக்கு அடித் தொழிலாட்டி இல்லையென்று கருதற்பாலீரல்லீர்; என்மகள் ஐயைகாணும் அடித்தொழிலாட்டி; யான் உம்மைப் பொன்போலப் பொதிந்துகொள்வேன்; பூங்கோதையையுடைய நங்காய், இங்ஙனமாதலான், இனி ஒன்றற்குங்கவலாது இருப்பீராகவென்றுசொல்லித் தொழுவதுஞ்செய்தென்க.

---

[1] புறநானூறு, ககக. (பி - ம்.) * 'காரணமாமண்ணில்'

கூடன்மகளிரென்றுள், தானதியுமூர் அதுவாகலின். இனிக் கூடன் மகளிர்க்கு அழகைக்கொடிக்கும் ஆடகப்பைம்பூணினது அருவிலையையழித்தற்குச் செய்யாக்கோலமொடு வந்தீர்க்கெனினுமமையும். செய்யாக்கோலம் - புனையாதவழகு; ஆவது [1] இயற்கையழகு. வந்தீர்க்கென்றும், காணீரென்றும் உயர்சொல்லால் ஒருவரைக்கூறும் பன்மையாற் கூறினவள் ஈண்டு நங்கையென்றது ஒருமைபன்மை மயக்கமெனின்,—அற்றன்று; நம்பியெனப் [2] பல்லோர்க்குறித்த முறைநிலைப்பெயர். நங்கையென்று புதல்வர்மாவியரைக்கூறும் முறைப்பெயராதலின், நங்கையென்றுளெனக; [3] "நாத்தூணங்கையொடு" என்ப மேலும். இஃது அக்காலவழக்கு. கோவலனைத் தனக்கு மகனாகக் கருதி இங்ஙனங்கூறினள். இனி வந்தாய்க்கெனவும், காணினெனவும் பாடங் கூறுவாருமுளர்.

கஎ - எ. மாதவத்தாட்டி.....மகனுக்கினி

(இ - ள்.) மாதவத்தாட்டி தீங்குள்ளதெறியில் ஒருதீங்குமுறமம் காத்து வருத்தம் சிறிதுமில்லாவிடத்தே கூட்டிளாதலான், இனி நின்கொழுநற்கு இவ்விடத்தில் மனக்கவலையுறுதலுண்டோவென்றுளெனக.

இடந்தலைப்படுத்தல் - கூட்டுதல். [4] புறனடைவிதியான் கோவுதகவு, [5] கோதகவாயிற்று. நும்மகனுக்கு - மகனென்பது ஆண்பாற்பெயர்; நும்மூடையயுருடனுக்கென்பதாயிற்று; [6] "நினக்கிவன் மகனுய்த் தோன்றிய தூஉ, மனக்கினி யாற்குமீ மகளாய தூஉம், பண்டும் பண்டும் பலபிறப் புளவாற், கண்ட பிறவியே யல்ல காரிகை" என்றார் மணிமேகலையிலும். [7] "கண்போன்ற மாமன் மகள்" என்றார் சிந்தாமணியிலும். ஓகாரம், எதிர்மறை.

கஅ - உக. சாவக நோன்பிகள்.....நீரெனக் கூற

(இ - ள்.) அடிகள் சாவகநோன்பிகளாதலின், நங்கையார் நாத்தூணருடனே நீங்களும் பகற்பொழுதே யுண்ணும் அடிசில்சமைத்தற்குப் பொருந்தின நல்ல புதுக்கலங்களை விரையக்கொண்டுவந்து கொடுப்பீராகவென்று சொன்னளாகவென்க.

சாவகநோன்பு - துறவாது விரதங்காத்தல். அடிகளென்றார், கோவலனரை. நாத்தூணங்கை - நங்கைநாத்தூணென்க. நாத்தூணெனு நங்கை அடிசிலாக்குதற்கெனினுமமையும். நாள்வழிப்படுமடிசில் - போசனம். அமைந்த கலமென்றுள், தாங்களாளுங்கலமன்றி மேன்மக்களாளும் மடைக்கலங்களை. நற்கலம் - புதுக்கலம். நெடித்தல் - நீட்டித்தல். நீரளிமினென்றுள், தனக்கு [8] நெய்ம்முறையாதலின்.

---

[1] "உமிழ்சுடர்க் கலன்க ணங்கை யருவினை மறைப்ப தோரார்" (கம்ப. கோலங் காண். ஈ.) என்பது இங்கே அறிதற்பாலது. [2] தொல். பெயர். சூ. கக. [3] அடி, கக
[4] புறனடை வி, தொல். குற்றியலு. சூ. எஅ.
[5] "நோதக லிருங்குயி லாஅ மரோ" கலி. கஉ.
[6] மணிமேகலை, உக: உஙூ - நஉ. [7] சீவகசிந்தாமணி, உசூ.
[8] "நெய்ம்முறை நமக்கின்முமென்" சிலப். கள.

இத்துணையுங்கூறியது, இவர்கள்சென்ற அன்றிரவுசெய்தனவும் மேற் செய்வனவும்.

இனி மற்றைநாளைச்செய்தி கூறுகின்றார்.

உஉ - அ. இடைக்குலமடந்தையர்.....கொடுப்ப

(இ - ள்.) ஐயைமுதலாகிய இடைக்குலமடந்தையர் மாதரிகூறிய இயல் பிற் குன்று மடைக்கலத்துடனே [1] மாட்சிமையுடையோர்கொடுக்கும் மாபு போலப் பூவாதகாய்க்கும் பாகலினுடைய கொழுவிய திரண்டகனிக்காயும் வளைந்த வரியையுடைய வெள்ளரிக்காயும் கொம்மட்டிமாளங்காயும் இனிய மாங்கனியும் வாழைக்கனியும் செந்நெலரிசியும் தம்மிடத்துள்ள பாலும் நெய்யு மென்னுமிவற்றைக் கொண்டுசென்று நேரிய வளையையுடையமாதே, இவற்றைக் கொள்வாயாகவென்று கொடுக்கவென்க.

கோளிப்பாகல், வெளிப்படை; கோளி - பூவாதகாய்க்கும் மரம். என்னை? [2] "கோளி யாலத்து" என்றார்; பாகல் - பலா; "முளிதயிர் மிசைபாகன் மென் பழம்" எனவும், [3] "பைம்பாகற் பழந்துணரிய, செஞ்சுளைய கனிமாந்தி" என வுஞ்சொன்னார் பாட்டினும். கனிக்காய் - [4] * முதாரிக்காய். வால்வரிக்கொடுங்கா யென்று பாடமோதி, வெள்ளரிக்காயென்பாருமுளர்; [5] "அணில்வரிக் கொடுங் காய்" எனப்புறத்தினுங் காட்டினராதலின், கொடுங்காயென்பது பெயர். வரி, அடை. மாதுளங்காய் கூறினார். புளித்தகறி பண்ணுதற்கு. பாற்பயன் - பாலும் பயனும்; எண்ணும்மைதொக்கு ஒடுவிரிந்து உடனிகழ்பொருளாயிற்று.

உக - ஙச. மெல்விரல் சிவப்ப.....காதலற் காக்கி

(இ - ள்.) அங்ஙனம் அவர்கொடுத்த பலவேறுவகைப்பட்ட பசுங்காய்களைக் கொடுவாய்க்குயத்தின் மெல்விரல்சிவப்ப விடுவாய்செய்யத் திருமுகம்வியர்த் தது; செங்கண் சேந்தன; கரிய இடத்தேயுடைய அட்டிலைக் கண்டனளாய் முகமாறிப் பெயரும்வகை வைக்கோலால் எரிமூட்டிய ஐயையுடனே தன் கை வல்ல மாத்திரத்தாலே காதலனுக்கு ஆக்கியென்க.

கொடுவாய்க்குயம் - கோடின வாயையுடைய அரிவாள்; [6] "கூனிக் குயத் தின் வாய்நெல் லரிந்து" என்றார் பொருநராற்றுப்படையினும். விடுவாய் செய்தல் - அரிதரல். திரு - அழகு; பெயருமாம். சேந்தன - சிவந்தன. கரி புறவட்டில் - புறம் கரிதான அட்டில்; புறம் - இடம். வையெரிமூட்டிய - வைக் கோலால் எரியைமூட்டிய. கையறிமடமை பாடமாயின், கை அறிந்ததும் அறியாததுமாகவென்க; மூன்பு ஆக்கிக் கைதேறினற்போலவெனவுமமையும்.

---

[1] மாட்சிமை யுடையோர் கொடுக்குமபு, சொல்லாமலே கொடுத்தல்; "சொல் லாம லேபெரியர் சொல்லிச் சிறியர்செய்வர், சொல்லியுஞ் செய்யார் கயவரே - நல்ல, குலமாலை வேற்கண்ணுய் கூறுவமை நாடிற், பலமாலைப் பாதிரியைப் பார்" (ஔவையார் பாடல்.)

[2] புறநானூறு, நிச: [3] பொருநராற்றுப்படை, ககக - உ.

[4] முதாரி - முதுமை; "முதாரிப்பாண" புறநா. கங-அ; இது வழக்கினுமுள்ளது.

[5] புறநானூறு, உசசு. [6] பொருந. உசஉ.

(பீ - ம்.) * 'உதாயக்காய்'

நடு - சங. தாலப் புல்லின்.....அடிக ளீங்கென

(இ - ள்.) புற்களில் தாலப்புல்லினது மிகவும் வெள்ளியதோட்டாலே கைவன்மையையுடையமகள் அழகுபெறப் பூணந்துசெய்த தொழிலையுடைய தவிசிலே தனதுசெல்வன் வந்திருந்தபின்பு கடிமலரங்கையாற் சுடுமண்மண்டையாற் காதலனடிமலர் கழீஇயநீரைத் தான்தொழுதனளாய்மாற்றி மண்ணகமுன்தையுற்ற மயக்கத்தைத்தான் ஒழிக்கின்றுள்போலத் தன்கையாற் குளிர்ந்த நீரைத்தெளித்துத் தடவி மண்டலமிட்டு ஈஞவாழையினது குருத்தைவிரித்து அதனகத்தே அமுதைப்பெய்து, அடிகள், ஈங்கு அமுதுசெய்தருளுகவென்று சொல்லவென்க.

[1] ''புறக்கா ழனவே புல்லென மொழிப'' என்றுராகலின், தாலப்புல்லென்றார். வால்வெண்டோடு - இலேய வெள்ளிய தோடெனினுமமையும்; [2] ''ஊர்திவால்வெள் ளேறே'' என்றுராகலின். மகடூ - பெண்பாற்பொதுச்சொல். தவிசு - தடுக்கு. அங்கை - அகங்கை; [3] ''அகமென் கிளவிக்குக் கைமுன் வரினே, முதனிலை யொழிய முன்னவை கெடுதலும், வரைநிலை யின்றே யாசிரியற்க, மெல்லெழுத்து மிகுத லாவயி னான'' என்பதனுன்முடிக்க. கழீஇய வென்பதனுஉம், அமுதைப்பெய்தென்பதனுஉம் ''முன்னத்தினுணருங்கிளவி''யாற் குறிப்பாற்கொள்ளப்பட்டன. மண்டையெனினுது சுடுமண்மண்டையென்றார், புதுக்கலமாதலேன்ற. இதனை மண்டையென இழித்துக்கூறினர், முன்னர்ப் பொன் வெள்ளிமுதலியன வழங்குதலின். வழிபாடுதோன்றத் தொழுதனண் மாற்றியென்றார். மண்ணகம், ஒருசொல். மயக்கொழிப்பனள்போல் - மண்மடந்தை தங்கட்கு எதிர்வதுணர்ந்து மயங்கினுளை மயக்கொழிப்பாள்போல. மயக்கம் - அனந்தரென்பாருமுளர். குமரிவாழை - இது பெயரின்வந்த [4] சமாதியென்னுமலங்காரம். உண்க - இரந்துகோடற்குறிப்பின்கண்வந்த ககரவீற்று வியங்கோள். ஈங்கமுதமுண்கவென்றது, இலையும் பொறுக்கவற்றேயென்னுமிரக்கம்.

ஆக்கி இருந்தபின் மாற்றித் தெளித்துத் தடவி விரித்து அமுதமுண்கவென்றுளென்க.

சச - நிங. அரசர் பின்னோர்க்கும்.....காட்சி யீங்கென

(இ - ள்.) ஓதவும் உணரவுமரிய மறையிட்டது அரசர்பின்னோர்க்குரியவாக விதித்த வாய்ப்பூச்சுப் பலியிடுதல் முதலியவெல்லாம் ஒருமுறையாற் கழித்தபின்பு புறத்துநின்ற ஐயையும் மாதரியும் இந்தமதரையில் இவ்வாயர் பாடியில் யாம்பெற்ற இந்நல்லமுதமுண்கின்ற இந்தநம்பி அந்தமதரையில் ஆயர்பாடியில் அசோதைபெற்ற அந்த நல்லமுதமுண்ணும் புதிய காயாம்பூப் போலும் வண்ணத்தையுடைய கண்ணனேதான்; இவன்துயர்தீர்த்த இப் பல்வேளத்தோளியும் காளிந்தியாற்றின்கண் தூய நீலமணிவண்ணனேத் துயர்தீர்த்த

---

[1] தொல். மரபு. சூ. அடு. [2] புறநா. கடவுள்.

[3] தொல்காப்பியம், புள்ளிமயங்கியல், உ0.

[4] ''உரியபொருளன்றி யொப்புடைப் பொருண்மேற், றரும்வினை புணர்ப்பது சமாதியாகும்'' தண்டியலங்காரம்.

பின்னேயென்னும் விளக்கோதானென்று உவகைபொங்கி இவரழகு நம் கண்களி னிடங்காவென்று புகழ்ந்துகூறவென்க.

அரசர்பின்னோர் - வணிகர். தவ்வை - தாய். விம்மிதம் - அதிசயமுமாம்.

இ - சு. உண்டினிதிருந்த.....வருகெனப் பொருந்தி

(இ - ள்.) அங்ஙனம் அவர்புகழ இனிது உண்டிருந்த மிக்கபுகழையுடைய கோவலனுக்கு அழகிய மெல்லிய சுருளோடே பிளவையுங்கொடுத்துநின்ற கரிய பெரிய ஒதியையுடையாளே வருகவென்று அருகணைத்தென்க.

ஒதி, ஆகுபெயர்.

இ - சுஉ. கல்லத ரத்தம்.....யாவது மறியேன்

(இ - ள்.) எம்முடைய முதுகுரவர், பருக்கைபொருந்திய சின்னெறியை யுடைய அருநெறியைக்கடத்தற்குச் சிறிதும் வன்மையையுடையனவோ மடந் தையுடைய அடியென்று இவ்வெம்மையையுடைய எயினர் ஆறலைக்குஞ்சுரத்தி னெறியிற் போந்ததற்கு இரங்கி என்ன இடும்பையுற்றார்களோ! யாம் இங்ஙன மூற்றது கனவோ! கனவாமாயின் முன்செய்த தீவினைப்பயனே! யான் இப்பொ ழுது உள்ளங்கலங்குதலான் இவற்றிரண்டையும் அறிகின்றிலேன்;

என்னுற்றனர்கொல் - இறந்துபட்டார்களோ. மாயம் - கனவு. யாவதும் - யாதும்; பகுதிப்பொருள்விகுதி.

சுஙூ - எ0. வறுமொழியாளரொடு.....என்செய்தனையென

(இ - ள்.) வீணரோடும் பரத்தரோடுங்கூடிப் பிறரைப்புறங்கூறும் அவை யின்கண் வெடிசிரிப்புக்குட்பட்டு மறவியிற்பொருந்தி அமைந்தோர் விரும்பப் படும் பொருளாகிய நல்ல ஒழுக்கத்தைக்கெடுத்தவெனக்கு இனித் தீக்கதியன்றி நற்கதியுண்டாமோ; அதுவேயுமன்றி இருமுதுகுரவர்க்குஞ்செய்யும் ஏவலையும் பிழைத்தேன்; நினக்கும் சிறுமைசெய்தேன்; இவ்வழுவொழுக்கம் இழுக்கமென் பது சிறிதும்பார்த்திலேன்; யான் இங்ஙனமாயும் நம்முடையகரிடத்துநின் றும் இங்கரிடத்துவருதற்கு எழுகவென்றேனை, அது முறைமையன்றென மறுத என்னேடி ஒருப்பட்டெழுந்தாயே; நீ என்னகருமஞ்செய்தாயெனக் கோவலன் இரங்கிக்கூறவென்க.

வறுமொழியாளர் - பயனிலகூறுவோர். வம்பப்பரத்தர் - புதிய காமநுகர்ச் சியைவிரும்புங்காமுகர்; பரத்தையை நுகர்வானும் [1] பரத்தன். சுறுமொழி - சிறுசொல்; ஏவல் பிறரையிகழ்ந்துகூறுதல். வெடிநகைபுக்கு - வெடிசிரிப்புக் குட்பட்டு. பொச்சாப்புண்டு - மறவியிற்பொருந்தி. நச்சு - நச்சப்படும்பொ ருள். இருமுதுகுரவர் - தந்தைதாயர். ஏவல்பிழைத்தல் - மாதவிநட்பை அவ ரொழிக்க ஒழியாமை. சிறுமுதுக்குறைவி - சிறியபிராயத்தே பெரிய அறிவை யுடையாள். வழு - பழிப்புரை. எனும் - சிறிதுமென்றபடி. நகர் - தன்மனை

---

[1] "பரத்தனென்பதற்கு இப்பொருள்கொண்டே, "பெண்ணியலா ரெல்லாருங் கண்ணிற் பொதிவுண்பர், நண்ணேன் பரத்தநின் மார்பு" என்றார்; குறள், கங்கக; "பண்பில் காதலன் பரத்தமை" மணி. எ; கிo.

மாம். ஈண்டு எழுகவென்பதற்கு நாம் போதற்குவிரையென்றுனெனினுமமையும். இத்துணையும் தனது ஒழுக்கத்தைவெறுத்து இவ்வரவிற்கு வியுமுடன்பட்டாயெனத் தனது அறிவின்மையை அவளொடுபடுத்துக்கூறினான்.

இனிக் கண்ணகிகூறுவாள் :

எக - அங. அறவோர்க் களித்தலும்.....என்றவள் கூற

(இ - ள்.) அறவோர் அந்தணர் துறவோர் விருந்தினரென்னுமிவர்கட்கு அளித்தலும் ஓம்பலும் எதிர்தலும் கோடலுமென்னுமிவற்றை இழந்தவென்னோடும் பெருமகளுடனே இருநிதிக்கிழவன்கண்டு, நீர் என்முன்புநில்லாமையான் வந்தவெறுப்பைக் கரந்தொழுகினேனுக, அவர்கள் அதுதெரிந்து தம்முள்ளத்தின்மிக்க அன்போடே அருள்கலந்தமொழியால் என்பொறையைப்பாராட்ட, யான் இதயத்தே மறைத்த மெய்வருத்தமும் மனக்கவலையும்வெளிப்பட்டு வாய்திறந்துசொல்லுவதுபோலேயிருந்ததென்று என் பொய்ம்முறுவல்கண்டு அவர் வருந்த நீர் போற்றுவொழுக்கமேயினீராகவும் உம்முடைய வார்த்தையைச் சிறிதும் மாற்றுத உள்ளவாழ்க்கையையுடையேனுதலாலே யான் அதற்கு உடன்பட்டொழுந்தேனென்று அவள் கூறவென்க.

அறவோர் - [1] சாவகநோன்பிகள். பெருமகள் - கோவலன்மாதா. பெயர் - புகழ் தலைத்தாள் - தலைமையுடையமுயற்சி. மன் - மன்னரால். நீரென ஒரு சொல்வருவிக்க. இகந்தனை - இகந்தேனுக; தன்மை. அற்பு - அன்பு; [2]"மெல்லொற்று.....இவையொற் றுகும்" என்பதனுன் முடிந்தது. சிறத்தல் - மிகுதல். தொடித்தல் - சொல்லுதல். வாயன்முறுவல் - பொய்ந்நகை. 'ஆற்றுள்ள வாழ்க்கையீராதலின்' என்பதூஉம் பாடம்.

அச - கூங. குடிமுதற் சுற்றமும்.....மயங்காதொழிகென

(இ - ள்.) சுற்றமுதலியநான்கினையுநீங்கி நாணமுதலியநான்குந்துணையாக அறிவற்ற என்னெடுபோந்து என் தனிமையைத்தீர்த்த பொன்னே! கொடியே! கோதாய்! பாவாய்! விளக்கே! கொழுந்தே! செல்வி! யான் நின்னீறடிக்கு அணியாகிய சிலம்பில் ஒன்றைக்கொண்டுபோய் விற்றுவருவேன்; வருந்துணையும் நீ தனிமையான் வருந்தாதொழிகவென்றுரைகவென்க.

குடிமுதற்சுற்றம் - தாய்தந்தைமுதலியோர். குற்றேவலோர் - சுற்றேவன் மகளிர். அடியோர்பாங்கு - அடியார்பகுதித்திரள்; என்பார் செவிலித்தாய் முதலிய ஐவர்; [3]"ஐவர் நலனேம்ப" என்றுர் பிறரும். ஆயம் - சேவிக்குந்தோழிமார். மடன் - கொடுத்தக் கொண்டு கொண்டதுவிடாமை. நல்லோரேத்து - மகளிரால் எத்தப்படுமழகு. பேணியகற்பு.....பொன்முதலியவற்றிற் கெல்லாம் உவமம் விரித்துரைக்க.

---

[1] சாவகநோன்பிகள் - சமணரில் இல்லறத்தார்.

[2] தொல்காப்பியம், குற்றியலுகர. சூ. கூ.

[3] சீவக. நகூஉ; ஐவராவார்: ஆட்டுவாள், ஊட்டுவாள், ஓலையுத்துவாள், தொடிபயிற்றுவாள், கைத்தாயென்பார்.

நகு

கூச - கூ. கருங்கய னெடுங்கண்.....மறுகிற் செல்வோன்

(இ - ள்.) கரிய கயல்போலும் நெடிய கண்ணினையுடைய தன தாகாதலியை மெய்முழுதுந்தழுவி அவள் அருகில் யாவருமின்றித் தனியிருக்கின்ற அதனைக் கண்டு உள்ளகம்வெதும்புதலாலே மல்கிய கண்ணினீரை அவள்காணின் வருந்து மென்று அதனைக்கரந்த கண்ணினையுடையனாய்ப் பலபசுக்களையும் பல எருமை களையுமுடைய கோவலரில்லத்தைவிட்டுநீங்கி மாட்டாகடையோடே அத்தெரு விற்செல்கின்றவனென்க.

இதில், 'உழையோரில்லா' எனவும், 'ஒருதனிகண்டு' எனவுங்கூறினார் ஆய்ச்சியரெல்லாம் குரவையாடப்போனமைதோன்ற.

கஂ - கஅ. இமிலேறெதிர்ந்தது.....தகுதியன்றுதலின்

(இ - ள்.) அங்ஙனஞ்செல்கின்றவன் முரிப்பையுடைய கொல்லேறு எதிர்த்துப் பாயவந்ததனை நிமித்தவிரோதமென்று அறிந்திலன்; அஃது இடையர் குலத்தாரன்றித் தன்குலத்துள்ளாரதியும் முறைமையன்மையானென்க.

இமில் - முரிப்பு.

கஂஉ - ச. தாதெரு மன்றம்.....பெயர்வோ னுங்கண்

(இ - ள்.) அம்மறுகில் தாதெருவையுடைய மன்றத்தையெல்லாங்கழிந்து [1]தளிப்பெண்டுகள் தெருவினுடவேபோய்க் கடைத்தெருவிற் பெயர்கின்றவன் அவ்விடத்தே,

கஂந - கஉ. கண்ணுள் வினைஞர்.....ஆதியோவென

(இ - ள்.) உருக்குத்தட்டாரும் கைவினைமுற்றிய பணித்தட்டாருமாகிய நூற்றுவர்பின்வர அரசவரிசையாகிய சட்டையுடனே ஒதுங்கிநடந்து செல்லுஞ்செலவினையும் கையிற்பிடித்த கொடிற்றையுமுடைய பொற்கொல்லனைக் கண்டனனாகிப் பாண்டியன்பெயரோடு வரிசைபெற்ற பொற்கொல்லனிவனெனக்கருதி அணுகச்சென்று, அரசன்றேவிக்குப் பூணலாவதொருசிலம்பினை விலைமதித்தற்கு நீ வல்லையோவென்று கேட்பவென்க.

மெய்ப்பை-சட்டை. விலங்குநடைச்செலவு-மேன்மக்களைக்கண்டு ஒதுங்கி நடத்தல். கைக்கோல் - கொடிறு. ஆதியோ - ஆவையோ; கருத்தறியுமென்றுமாம். ஆதியோவென்றான், தன்சிலம்பினது அருமைகருதி. இவனைக்கண்டாலும் தந்நிமித்தமென்பார் பின்வரமுன் கண்டனனாகியென்றார்.

இனிப் பொற்கொல்லன் கூறுவான்:—

ககந - கூ. அடியேனறியேன்.....அவிழ்த்தனன்

(இ - ள்.) மகளிருடைய அடிக்கலம் விலைமதித்தற்கறியேனாயினும் வேந்தர் முடிக்கலமுதலியன சமைப்பேன்யானெனக் காலனுதனுகவந்த பொற்கொல்லன் கையாற்றொழுது புகழ்தலானே யாவர்க்கும்புகழவரிய சிலம்பினைப் பொதிந்த பொதிவாயை அவிழ்த்தனனுகவென்க.

ககஎ - உ0. மத்தக மணியொடு.....புரிந்துட னேக்கி

---

[1] தளிப்பெண்டுகள்தெரு - கோயிலிற்பணிசெய்யும் மகளிர்தெரு; தளித்தெரு வெனவும் வழங்கும்.

(இ - ள்.) தலையானமாணிக்கத்தோடு வயிரமும் பத்திபடவழுத்திய கேவணத்தையுடைய கிளிச்சிறையென்னும் பசும்பொன்னூற்செய்த புடைபட்டி உட்கருவையுடைய சித்திரத்தொழிலையுடைத்தாகிய சிலம்பின் தொழிலருமையையெல்லாம்.....பொய்ச்செய்திசார்ந்த தொழிலையுடைய பொற்கொல்லன் நெஞ்சம் [1] இடுவந்திகூறுதலைப் புரிந்துநோக்கக் கண்கள் சிலம்பைநோக்க இவ்விருநோக்கும் கண்டார்க்கு ஒருநோக்கம்போலநோக்கியென்க.

மத்தகமணி - சுட்டிகைமணியுமாம். சிலம்பின்மத்தகத்தின்மணியெனினுமமையும். கேவணம் - மணியழுத்துங்குழி. குடைச்சூல் - குடைபடுதலென்பாருமுளர். செய்வினை - கைத்தொழில். பொய்த்தொழில் - பொய்சொல்லுதலே தொழிலாகவுடையவெனினுமாம்.

புரிந்துட னோக்கியென்பதற்குப் பணியும்விலையும்நோக்காது அவனை இடுவந்தியிடுவதற்கு இசைந்து தான் வஞ்சித்துக்கொண்ட சிலம்போடொக்கும்படியைப் பார்த்தென்பாருமுளர்.

கஉக - சு. கோப்பெருந் தேவிக்கு.....சிறையகம் புக்கபின்

(இ - ள்.) அரசனுடைய [2] பெருந்தேவிக்கல்லது இப்பெருவிலைச்சிலம்பு வேறெருவர்க்கும் விலுவில்லையென்றுசொல்லி, முன்னின்றும்போய் வெற்றிமிக்க வேந்தனுக்கு இதனையுணர்த்தி யான்வருந்துணையும் என் புன்குடிலுக்கு அருகாகிய அவ்விடத்தே நீரிருமெனக் கோவலனுஞ்சென்று அக்கீழ்மகனிருப்பிடத்திற்கு அயலதோர் அக்கசாலைப்பள்ளியின் மதிலுக்குள்ளே புக்கபினென்க.

ஐ, இடைச்சொல். யாப்புறவு - வினை; பொருத்தமுமாம். எனை - என்று சொல்லி. முன்போந்து - முன்னின்றும்போய்.

இனி, அவனுட்கோள்கூறுவார் :—

கஉஎ - ஙo. கரந்தியான் கொண்ட.....செல்வோன்

(இ - ள்.) யான் முன்பு வஞ்சித்துக்கொண்டசிலம்பு என்னிடத்ததேயென்பது பலருமறிய மன்னற்கு வெளிப்படுவதன்முன்னே வேறெருதேயத்தினின்றும்வந்த புதியவனேடே போக்குவேன்யானென்று துணிந்தவுளத்தைக்கரந்து செல்கின்றவன்,

யாங்கொண்டவென்றும், போக்குவமென்றுங்கூறற்பாலவற்றை இவன் கீழ்மகனுதலால், தனித்தன்மைகூறினார்.

கஙக - சக. கூடன்மகளிராடல்.....தாழ்ந்துபல வேத்தி

(இ - ள்.) கூடலில் நாடகமகளிருடைய ஆடலிடத்துத்தோன்றும் முகத்தோற்றமும் அவர் ஆடல்விகற்பமும் அவ்வாடல்விகற்பத்துக்கேற்ற பாடலின் வேறுபாடும் யாழிசையின்பயன்களும் காவலனுடைய உள்ளத்தை விரும்புவித்தனவென்றுகருதி ஊடியவுள்ளத்தைத் தன்னுள்ளேகரந்தொடுக்கி வருத்தத்தைச்செய்யும் தலைநாயென்பதனைத் தன்மேலேயிட்டுக்கொண்டு குலப்பிறப்பையுடைய பெருந்தேவி தன்னெடு மேவாதே தனதுகோயிற்கண்ணே அந்தப்

[1] இடுவந்தி - குற்றமில்லாதவன்மேற் குற்றத்தையேற்றுதல். இது இத்தமிழ்நாட்டின் வடபாகத்தே வழங்குகின்றது.
[2] பெருந்தேவி - பட்டத்துத்தேவி.

புரத்திற்சென்று புகுந்துவிடுதலானே அரசன் காமபரவசனாய் அமைச்சர்திரளி னின்றுநீங்கி அரிசிந்திய கண்ணையுடைய சிலதியர்திரளுடனே கோப்பெருந் தேவியுடைய கோயிலேநோக்கிச் செல்வோனைக் காவலையுடைய வாயிற்கடையிடத் தே கண்டவளவிலே வீழ்ந்து தாழ்ந்து பலகால் எத்திச் சொல்கின்றவனென்க.

கலங்கா வுள்ளங் கரந்தனன் செல்வோன், தாழ்ந்து பலவேத்தியென்க.

கசஉ - எ. கன்னக மின்றியும்.....இருந்தோனென

(இ - ள்.) கன்னக்கோலும் கவைக்கோலுமின்றுகவும் தன்மனத்தின்கட் பயின்ற துயின்மந்திரமே களவுக்குத்துணையெனக்கொண்டு வாயில்காவலரை மயக்கமுறுத்தும் துயிலெய்துவித்துக் கோயிற்கணிருந்த சிலம்பினை அபகரித் துக்கொண்ட கள்வன் இந்த ஒலியையுடைய பெரிய ஊர்காவலருடைய கண்ணை மறைத்து அடியேனுடைய புன்குடிலகத்தே வந்திருக்கின்றனென்று அவ்வர சற்குச்சொல்லவென்க.

கன்னகம் - அகழ்கருவி. கவைக்கோல் - கொடிற்றுக்கோல்; ஆவது படைக் கல் இட்டிகைமுதலியவற்றைப் பறிக்குங்கருவி; குத்துக்கோலென்பாருமுளர். [1] சில்லை - இழிவு. இன்றியுமென்னுமும்மை சிறப்பு. துணை - உசா. முன்னுள் தன்னிடத்தில்லையென்று நிலைநின்றதற்கேற்பக் கோயிற்சிலம்புகொண்ட கள்வ னென்றான். விற்கவந்து அகப்பட்டானென்பதுதோன்ற, என் சிறுகுடிலகத் திருந்தானென்றான்.

கசஅ - நாங, விணைவிளை காலம்.....கொணர்கவீங்கென

(இ - ள்.) சிலையலர்வேம்பன் ஊர்காக்கும் காவலாளரையழைத்து இங் ஙனமாகிய எனது தாழ்பூங்கோதையையுடையாடன்னுடைய காலணியாகிய சிலம்பு இவன்சொன்ன களவிற்றழும்பிய கள்வனுடைய கையகத்தாயின், அவனைக்கொல்ல அச்சிலம்போடு ஈங்குக்கொணர்கவெனக்கருதியவன் விணைவிளை கின்ற காலமாதலானே இதனைச் சிறிதும்தேராளுய்த் தெவிகூடாதேசச் சுற்ற நீங்கிச் சிலதியரோடு கோயிலுக்குக் காமபரவசனாய் அவள் கடையிடத்தோ ரகலானே அவனைக்கொன்று அச்சிலம்பை இவளுடைரீர்த்தற்கு உதவியாக இவ் விடத்தே கொணர்வீராகவென்று சொல்லவென்க.

யாவதும் - சிறிதும். சிலை - கொம்பு. அலர்வேம்பு - வேம்பலரென்க; ஆகுபெயரான் மரவியாயிற்று. வேம்பன், [2] "கொன்றையன்" என்பதுபோல நின்றது. கன்றிய - அடிப்பட்டவென்றபடி. கொன்று - கொல்லவெனத் திரிப்பினுமமையும். இனி என்கோதைதன் காற்சிலம்பு அடிப்பட்டகள்வன் கையதாயிற் கொன்று கொணர்கவெனினும் தன்கட் கொடுங்கோன்மையின்மை யுணர்க.

கஙச - எ. காவலனேவ.....குறுகினனென

(இ - ள்.) அங்ஙனங்கூறியகாவலன், வேற்காரரைத் தன்னேடு எவ்தலாலே அருந்தொழிற்கொல்லனும், எவப்பட்டவுள்ளத்தோடே நாம் எண்ணியவெண்

---

[1] "சில்லைக்கணன்பினை" தாலடி. ஈஎள.

[2] திருச்சிற்றம்பலக்கோவையார், ச்ஙஙு; கொன்றைய னென்பதற்குக் கொன்றைப் பூவின் தன்மையனென்பது பொருள்.

ணம் முடிந்ததன்றேவெனக்கருதித் தீவினையாகிய சூழ்ந்த வலைக்குள்ளே சென்று அகப்பட்டிருந்த கோவலனைக் குறுகச்சென்றானென்க.

கருந்தொழில் - கொலைத்தொழில். முடிந்ததென்பது விகாரம். இனி, எதிர்காலத்தன்மைவினையை விரைபொருட்கண் இறந்தகாலத்தாற் கூறினானெனினுமமையும். முதிர்தல் - சூழ்தல். முதிர்வினையெனமாறித் தீய பழவினையாகிய வலைக்குள்ளேயெனினுமமையும்.

கநிஅ - சுக. வலம்படு தானை.....புரிந்துடன் காட்ட

(இ - ள்.) வெற்றிபொருந்திய தானைமன்னவனேவுதலாற் சிலம்புகாணிய இவர் வந்தார்; அதனைக் காட்டுமினெனச்சொல்லி அத்தொழில்பொருந்திய சிலம்பினருமையெல்லாம் கூறுவான்போலப் பொய்ம்மையைத் தொழிலாகவுடைய கொல்லன் அவரை வேறாக அழைத்துக் கோயிலிலிருக்கின்ற தனிச் சிலம்போடே பொருந்தச்சொல்லிக்காட்டவென்க.

காட்டுமினென்பது சொல்லெச்சம். காணிய, வினையெச்சம். புரிந்தெனவே அவனினீங்கியென்பதூம், உடன்காட்டவெனவே அச்சிலம்போடி ஒருதன்மையாக ஒப்புக்கூறியென்பதூம் கொள்ளப்பட்டன.

கசுஉ - நு. இலக்கண முறைமையின்.....உரைப்போன்

(இ - ள்.) இவன், மெய்ப்பொறியானும் இருக்கின்றமுறைமையானும் கள்வனென்று நீ சொல்லப்படுவானுமல்லன்; கொல்லப்படுவானுமல்லனென்று சொல்லும் அரியதிறலையுடைய வேற்காரரை நகைத்து இகழ்ந்துகூறிக் கொலைத்தொழில் புரிந்த பொற்கொல்லன் [1] களவுநூலிலுள்ள ஏதுக்களைக் காட்டினனுய் உரைக்கின்றவனென்க.

இலக்கணமுறைமை - இலக்கணத்தானும் இருந்தமுறைமையானுமென உம்மைத்தொகை. கொலைப்படுமகன் - கள்வன். அகநகை - இகழ்ச்சிநகை.

அகநகையென்றபாடமாயின், நெகவுரைத்தென்க.

கசுசு - ஙூ. மந்திரந் தெய்வம்.....தூணையெனத் திரிவது

(இ - ள்.) பொல்லாவொழுக்கத்தினுற் களவுகண்டுண்ணுமாக்கள் மந்திரமுதலிய எட்டையுமன்றே படையாகக்கொண்டு திரிவதென்றானென்க.

மருந்தே இடனேயென்ற ஏகாரமிரண்டும் எண். அன்றேயென்பது - தேற்றம். கட்டுண்மாக்கள் எட்டுடனன்றே தூணையெனத்திரிவதென்க.

களஅ - எக. மருந்திற் பட்டோ ராயின்.....பெருநகைப் பட்டோர்

(இ - ள்.) இவன் வலியையழித்துத் தப்புவதன்றி இவன்மருந்திற்பட்டோராயின், நும்பெரிய புகழையுடைய வேந்தனுல்வருந்தண்டம் இப்பொழுதே பட்டோரன்றேவென்றானென்க.

---

[1] களவுநூல் ஸ்தேயசாஸ்திரமென்று வழங்கப்படுகின்றதென்றும் அந்நூலைச் செய்தவர், கதரென்பவரின் ஆசிரியராகிய கர்ணீ ஸுதரென்பவரென்றும் வடமொழியாளர்கூறுவர்.

பட்டீர், வினைப்பொருள்; சொன்னேம் சொன்னேமென்னும்வழக்கு. இது முற்கூறினன், அவர் அஞ்சிக் கடிகக் கோறற்கு. இனி மந்திரமுதலிய எட்டின் விளைவு கூறுவான்:—

களஉ - ங. மந்திர நாவிடை.....யாங்காண்குவமோ

(இ - ள்.) தாம் சாதித்தமந்திரத்தை நாவிடத்தே வழுத்துவராயின், தேவகுமாரரைப்போல நாம் காணமாட்டோமென்றனென்க.

வழுத்தல் - அபிமந்திரித்தல். இந்திரகுமரர் காணப்படார்; அவரைப்போல இவருங்காணப்படார். இந்திரர் - தேவர்; [1] "இந்திரர்க்கும் புகழ்வரிதே" எனவும், [2] "இந்திர ரமுத மியைவ தாயினும்" எனவுஞ்சொன்னர் பிறரும்; இனி அந்தர குமரரென்பாருமுளர்.

களச - நி. தெய்வத் தோற்றம்.....பெயர்குவர்

(இ - ள்.) தாங்கள் ஆதரிக்குந்தெய்வம் எப்பொழுதும் தங்களுக்குமுன்னிற்கும்படி மனந்தெளிந்து நினைப்பாராயிற் கையிலேயகப்பட்ட மிக்கபொருளை கமக்குக்காட்டியும் தப்புவரென்றனென்க.

களசு - எ. மருந்தினங்கண்.....இடனுமா ருண்டோ

(இ - ள்.) இவர் மருந்தினுலே கம்மிடத்து மயக்கஞ்செய்வாராயின், இருந்த நாம் புடைபெயருமிடமு முண்டாமோவென்றனென்க.

மார், இடைச்சொல்,

களஅ - ஙை. நிமித்தம் வாய்த்திடின்.....வந்துகைப் புகுதினும்

(இ - ள்.) தாம் ஆண்டநிமித்தம் வாய்ப்புப்பெற்றாலல்லது பெறுதற்கரிய பொருள் தானேவந்து கைப்புகுதினும் புகார்களென்றனென்க.

யாவதும் - எளியவிடத்திலும்.

கஅ0 - அக. தந்திரகரணம்.....எய்துவர்

(இ - ள்.) களவுநூலிற்சொல்லிப்போதுகின்ற தொழில்களையறிந்து எண்ணிச்செய்வாராயின், தாம் மண்ணுலகத்திருப்பினும் விண்ணுலகத்திருக்கும் இந்திரனது மார்பிலணிந்த ஆரத்தை எய்தவேண்டின் அதனையும் எய்துவரென்றனென்க.

தந்திரகரணம் - நூலிற்சொல்லுங்கிரியை. எண்ணுதல் - எண்ணிச்செயல்.

கஅஉ - ங. இவ்விட மிப்பொருள்.....யார்காண்கிற்பார்

(இ - ள்.) இப்பொருள் நாம் கோடற்கு இவ்விடமேயிடமென இவர்துணிவாராயின் அவ்விடத்து அவரை யார் கண்ணுற் காணவல்லாரென்றனென்க.

கிற்றல் - செய்தல்.

கஅச - நி. காலங் கருதி.....விலக்கலு மூண்டோ

(இ - ள்.) அவர்கள் களவுகொள்ளுங்காலம் இதுவென்றுகருதிப் பொருளைக் கைப்பற்றுவாராயின், மேலோராயிருப்பினும் விலக்குதலுண்டாகுமோவென்றனென்க.

---

[1] சீவகசிந்தாமணி, களக. [2] புறநானூறு, கஅஉ.

கஅசு - எ. கருவிகொண்டவர்.....காண்கிற்பார்

(இ - ள்.) கருவிகளைக்கொண்டு பெறுதற்கரியபொருளைக் கைப்பற்றுவ்ராயின், இப்பூமியிடத்து யாவர் கண்கொண்டு காணவல்லாரென்றுனைன்க.

இங்ஙனமாதலாலென ஒருசொல்வருவிக்க.

கஅஅ - கூ. இரவே பகலே.....புகலிடமில்லை

(இ - ள்.) இவர்க்கு இரவுபகலென்று இரண்டில்லை; இக்கரவின்பகுதியை நாம் கேட்பிற் புகன்றுமுடியாது;

இக்களவுநூலை நாம் கேட்பின், ஓடியொளிக்கலாமிடமில்லையென்றுமாம்.

கஙூ - உ0உ. தூதர்கோலத்து.....கொல்லன் சொல்ல

இங்ஙனம் களவுநூற்றுறைகூறி, முன்னுள் இத்தென்னவன்தம்பியிடத்து நிகழ்ந்ததொன்றென்று ஒரு பொய்க்கரிகூறுகின்றுன்;

(இ - ள்.) முன்னுளிலே ஒருகள்வன் தூதருருக்கொண்டுவந்து கொற்றவன் வாயிற்கட் பகற்பொழுதிருந்து இராப்பொழுது மாதருருக்கொண்டு உள்புகுந்து விளக்குமீழலிலே பள்ளியறையினுள் அஞ்சாதுபுக்கு அடங்கி இந்நெடுஞ்செழியற்கு இளங்கோவாகிய வேந்தன் துயில்கின்றவனுடைய மார்பில் வெயிலிடுகின்ற வயிரத்தையுடைய ஆரத்தை விரைய வாங்கினுனாக, துயிலுணர்ந்தவன் தோளிற் காணுனாய் உடைவாளையுருவினுனாக, அதனுறையைக் கள்வன் கையிலே வாங்கி அவன் குத்துந்தோறும் வாளிலேயுறையைச்செறித்தான்; அங்ஙனஞ் செறித்தலின், அதற்கு அரற்றுனாய் மற்போராலே அவன்வலியினெல்லையைக் காண, ஆண்டுநின்றதோர் தூணைத் தானுகக்காட்டிக் கழிந்து தன்களவுநூற்கல்வியால் தப்பியகள்வனைக் கண்டாருண்டாயின் அவர்களைக் காட்டிக்காணீர்; ஆதலான், இவர்க்கு இவரே ஒப்பாதலன்றி இவ்வுலகத்துப் பிறரை ஒப்பாகக் கூறுதலுண்டோவென்று அக்கொலைத்தொழிற்கஞ்சாத பொற்கொல்லன்சொன்னுனகென்க.

வேந்தன் விழித்தோன் காணுன் உருவ வாங்கிச் செறித்த இயல்பிற்கு அரற்றுன் காணைக் காட்டிப் பெயர்ந்த கள்வனென்க.

இதனுல் அரசனெஞ்சுணர்ந்தும் நாவெழாமை கூறினுன். இவர்க்கென்றுன், கள்வரென்றசாதிபற்றி. அ, முன்னதிசுட்டு.

உ0உ - ங. ஆங்கோர்.....கூறும்

(இ - ள்.) அவ்விடத்து அவர்களில் வேலைக் கையிலேயுடையானுனை யவன் சொல்லும்; அஃதியாதெனின்,—

உ0ச - கக. நிலனக ழுளியன்.....உறுபடையீரென

(இ - ள்.) முன்னுளிலே, நிலத்தையகழும் உளியையுடையனுய் நீலநிறத் தாணையையுடையனுய்ப் பலகலன்களையும் நச்சியவேட்கையாற் பற்றியபொருளை விடாமையிற் கொடும்பசியால் ஊணைக்கவ்விவிடாத புலிபோன்று சரற்காலத்து இடையாமமாகிய, இருளாற் கண்கள் மயங்கச்செய்தலையுடைய ஊரெல்லாம் துயிலான் மடிவித்தலைச்செய்யும் இராக்காலத்து ஒருகள்வன்வந்ததோன்ற,

யான் என்கையில் வாளை உறைகழித்தேனுக, அவ்வாளை அவன்வாங்க, அவனை யும் என்வாளையும் எவ்விடத்தும் கண்டிலேன்; ஆதலால் இவர்செய்கை யாவர்க் கும் அறியவரிது; இவனை நாம் கெடுழுவிடின், அரசன் நம்மைவருத்தும்; ஆதலான், இனி இதற்குச் செய்தற்குரியதொன்றைத் துணிந்துகூறுமின்; மிக்க படைக்கலத்தையுடையீரென்றனென்க.

[1] "நிறங்கவர்பு பூணந்த நீலக் கச்சினர், மென்னூல் வேணிப் பன்மாண் சுற்றினர், நிலைக முளியர் கலனசைஇக் கொட்குங், கண்மா முடவ ரொடுக்க மொற்றி" என்றார் மதுரைக்காஞ்சியினும்.

இனி, உளியத்தென்று பாடமோதி, நின்று வந்த தொகைப்பின்னின்ற போன்றென்பதனை இதனோடுகூட்டி முடிப்பினுமமையும். இதற்கு நீலத்தானை யன் நிலனகழ்தலால் உளியம்போன்றும், கலனசை வேட்கையாற் புலிபோன்று மென்க.

உளியன் தானையன் புலிபோன்று ஒருவன்தோன்றவென்க.

உகஉ - எ. கல்லாக் களிமகன்.....ஊழ்வினையுருத்தென்.

(இ - ள்.) இங்ஙனம் இவர்கூறலின், அறிவின்மையாற் கொலையஞ்சான் ஒரு களிமகன் தன்கையில் வெள்வாளாலே வெட்டிஞனுக, அது குறுக்கே துணித்தது; துணித்த உடற்குறைப் புண்வழியே கொப்புளிக்கின்றகுருதி குதித்து எங்கும்பரக்க நிலமடந்தை தனக்கு ஆவதுணர்ந்து மிக்கதுயரமுற அக்காவலனுடைய செங்கோல் வளைய முன்னைத் தீவினைமுதிர்தலாலே கோவலன் வெட்டுண்டுவிழுந்தானென்க.

வெள்வாள் - மாற்றரையெறிந்து குருதிக்கறை தட்டாதவாளெனவுமாம்; போர்மாலை சூழ்ந்து புகர்புகாதவாள். விலங்கூடறுத்தது - அவ்வாள் குறுக்கே துணித்தது; முற்று. உமிழ்தல் - கொப்புளித்தல். வானும் கூர்ப்பும் மிகுதி.

இஃது எல்லாவடியும் அளவடியாய் வந்துமுடிதலின், நிலைமண்டில ஆசிரியப்பா.

நண்ணும்.....வந்தவினை.

(இ - ள்.) பாண்டியன் முன்செய்த தீங்குன்னிவினைவாகிவந்த வினையாலே, மண்ணில் வீழாத செங்கோல் கண்ணகிதன் கேள்வன்முன்னிலையாக வீழ்ந்தது; ஆதலால், செய்தானொருவனை இருவினையும் நண்ணுமென்பதனை யுணர்ந்து, உலகத்தீர்! நல்வினையேசெய்யுமின்களென்று அடிகள்கூறினரென்க.

ஆதலாலென ஒருசொல்வருவிக்க.

கசு;—கொலைக்களக்காதை முற்றிற்று.

---

[1] மதுரைக்காஞ்சி, கூகக - சஉ.

பதினேழாவது

ஆய்ச்சியர் குரவை.

[1] கயலெழுதிய விமய நெற்றியி
னயலெழுதிய புலியும் வில்லு
நாவலந் தண்பொழின் * மன்ன
ரேவல் கேட்டப் பாரரு சாண்ட
மா. மாலை வெண்குடைப் பாண்டியன் † கோயிலிற்
[2] காலை முரசங் கனைகுர லியம்புமாகலி
னெய்ம்முறைநமக் ‡ கின்றுமென்
றையைதன் மகளிக்கூ உய்க்
கடைகயிறு மத்துங்கொண்
கஎ. டிடைமுதுமகள் வந்துதோன் றுமன்

உரைப்பாட்டுமடை

குடப்பா லுறையா குவியிமி லேற்றின்
மடக்கணீர் சோரும் வருவதொன் றுண்டு

உ. அயலெழுதிய புலியும் வில்லுமென்றது, அவற்றையுடைய அரசரை; சோழன் சேரன்.

ங. மன்னர் - மற்றுள்ள குறுநிலமன்னர். சு. இயம்பும், முற்று.

அ. ஐயையாகிய தன்மகளை. கஎ. முதுமகள் - மாதரி.

உரைப்பாட்டுமடை - உரையாகிய பாட்டை இடைப்படுத்தது.

"குடப்பால்"—உறையா - தோயா.

---

[1] க - கஎ: "பாட்டிடைவைத்த குறிப்பினுளும்" (தொல். செய். சூ. கசுடு-இளம்) என்பதற்கு இந்தப்பகுதி மேற்கோள்.

[2] "படுகண் முரசங் காலை யியம்ப" (மதுரை. உசுஉ); "தழங்குரன் முரசங் காலை யியம்ப" (ஐங்குறு. சசஅ); இயம்பலென்பது, ஒலித்தற் றொழிற்பண்பில் வருதற்கு இவ்வடி மேற்கோள்; நன். மயிலை; ந - வி. சூ. சடுஅ, சடுசு.

(பி - ம்.) * 'மன்னரொடேவல் கேட்டவரசர்கண்ட' † 'கோயிற்காலை முரசியம்புமாதலின்,' 'கோயிற்காலை முரசியம்பு' ‡ 'இன்றுகுமெனவையை'

நிசு

உறிநறு வெண்ணெ யுருகா * வுருகு
மறிதெறித் தாடா வருவதொன் றுண்டு
நான்மூலை யாய நடுங்குபு நின்றிரங்கு
மான்மணி வீழும் வருவதொன் றுண்டு

கருப்பம் †

குடத்துப்பா லுறையாமையுங் குவியிமிலேற்றின் மடக்கண்ணீர் சோர்தலு முறியில்வெண்ணெ யுருகாமையு மறிமுடங்கி யாடாமையு மான்மணிநிலத்தற்றுவீழ்தலும் வருவதோர் துன்பமுண்டென மகளைநோக்கி மனமயங்காதே மண்ணின்மாதர்க்கணியாகிய கண்ணகியுந் தான்காண வாயர் ‡ பாடியி லெருமன்றத்து மாயவனுடன் றம்மூனுடிய வாலசரிதை நாடகங்களில் வேனெடுங்கட் பிஞ்ஞையோ டாடிய குரவையாடுதும் யாமென்றுள் கறவைகன்று துயர்நீங்குக வெனவே.

கொளு

க. [1] § காரி கதனஞ்சான் பாய்ந்தாணைக் காமுறுமிவ்
வேரி ‖ மலர்க்கோதை யாள், சுட்டு
உ. நெற்றிச் செஞ்சீலை யடர்த்தாற் குரியவிப்
பொற்றொடி மாதரா டோள்

"உறிநறு"—(பா) உருகி - மெலிந்து. உருகி ஆடா - குழைந்துகிடக்கும்; உருகியென்பது ஆடாமையென்னும் மறையொடுமுடிந்தது.

"நான்மூலை"—நான்மூலையாயம் - பசு; ஆயம் மணிவீழும்; இடத்துநிகழ் பொருளின்றொழில் இடத்திலே முடிந்தது. மான் மணி - பெரியமணி; கழுத்தின்மணி.

கருப்பம் - கேட்டுக்குக்கருப்பம்.

"குடத்துப்பால்"—'உறையாமை' முதலாக எண்ணிய உம்மைகளுக்கு உறையாமையாலுமென்று மூன்றும்வேற்றுமை விரிக்க. மயங்காதே-வருந்தாதே. குரவை - பலர்கூடியாடும்.....யைக்கூத்து. வாலசரிதைநாடகம் - பிள்ளைச் சரிதநாடகம். மாயவன் தொழுனையாற்றிற் பிள்ளைப்பருவத்துப் பலதேவரோடும் பிண்டியோடுமாடின குரவைக்கூத்தைக் கூறுகின்றுள்:—

"குரவையென்பது .....இயல்பிற்றென்ப."

கொளு - குரவைக்குக்கருத்து.

உ. செஞ்சீல் - சிவந்தசுட்டி.

---

[1] "காரிகதனஞ்சான் கொள்பவன்', "காரிகதனஞ்சான் பாய்ந்தபொதுவற்கே' கலி. கo-ச.

(பி - ம்.) *'நறுநெ' † 'ஆங்கு, குடத்து' ‡ 'பாடியினெரு' § 'ஆங்கு, காரி' ‖ 'மலர்க்குழலாணைற்றிச் செஞ்சீலையடர்த்தாற்குரிய திப்பொற்றொடிமாதர்நகை'

க. மல்லன் மழவிடை யூர்ந்தாற் குரியளிம்
மூல்லையம் * பூங்குழ லுன்
ச. [1] துண்பொறி வெள்ளே † யடர்த்தாற்கே யாகுமிப்
பெண்கொடி மாதர்தன் மேள்
டு. [2] பொற்பொறி வெள்ளே ‡ யடர்த்தாற்கே யாகுமிந்
நற்கொடி மென்முலே தான்
கூ. வென்றி மழவிடை யூர்ந்தாற் குரியளிக்
கொன்றையம் பூங்குழ லாள்
எ. [3] § தூநிற வெள்ளே யடர்த்தாற் குரியளிப்
பூவைப் புது ‖ மல ராள்

எடுத்துக்காட்டு

ஆங்கு,
தொழுவிடை யேறு குறித்து வளர்த்தா
ரெழுவ ரிளங் ¶ கோதை யார்
என்றுதன் மகளேநோக்கித்
தொன்றுபடு முறையானிறுத்தி
யிடைமுது மகளிவர்க்குப்
படைத்துக்கோட் ** பெயரிடுவாள்

குடமுத †† லிட்முறை யாக்குர றுத்தங்
கைக்கிளே யுழையிளி விளரி தாரமென
விரிதரு பூங்குழல் வேண்டிய பெயரே

க. மல்லல் - வலி. தான், அசை. [ளென்றல்.
எடுத்துக்காட்டென்பது - இவ்வேறுகொண்டானுக்கு இன்னுள் உரிய
"குடமுதல்"—குடமுதல் - மேற்றிசைமுதலாக. வட்டப்பாலிவருமாறு:-

[4] "ஆழியு மாரும்போற் கீறிச் சிறுதிகைக்க, ணூழி ஞெரோவொன் றுடன் கீறிச்—சூழ, வெருதாதி கீழ்த்திசைக்கொண் டீராறு மெண்ணிக், கருதி நிலக் கயிற்றைக் காண்"; "இளியிடபங் கற்கடக் மாம்விளரி சிங்கம், தளராத தார மதுவாந்—தளராக், குரல்கோற் றனுத்தந்தங் கும்பங் கிளையாம், வரலா வுழை மீன மாம்", "குரறுலே விற்றுத்தங் கைக்கிளேயே கும்பம், பரிய வுழைமீனம்

---

[1] "துண்பொறி வெள்ளேக், கதணஞ்சான் பாய்ந்த பொதுவன்" கலி. கo க.
[2] "செம்மறு வெள்ளையும்" கலி. கo டி.
[3] "பாளிற வண்ணன்போற் பழிதீர்ந்த வெள்ளே" கலி. கo ச.
[4] இனேந்திரமாலே, ஆரூடசக்கரம், க.

(பி - ம்.) * 'பூங்குழலான்' † 'அடர்த்தானுக்காகும்' ‡ 'அடர்த்தாற் குரித்தா மித்தற்கொடிமென்முலேதான்' § 'தூவுறு வெள்ளே' ‖ 'மலரா, ளாங்கு' ¶ 'கோதை யார், எடுத்துக்காட்டு' ** 'பேரிடுவாள்' †† 'இடைமுறை யாகக் குரல்'

மாயவ னென்றுள் குரலே விறல்வெள்ளை
யாயவ னென்று ளிளிதன்னை - யாய்மகள்
பின்னையா மென்றுளோர் துத்தத்தை மற்றையார்
முன்னையா மென்றுண் * முறை

மாயவன் சீருளார் பிஞ்ஞையுந் தாரமும்
வால்வெள்ளை சீரா ருழையும் விளரியுங்
கைக்கிளை பிஞ்ஞை யிடத்தாள் வலத்துளாண்
† முத்தைக்கு நல்விளரி தான்

அவருள், வண்டுழாய் மாலையை மாயவன் மேலிட்டுத்
தண்டாக் குரவைதா னுள்படுவாள் - கொண்டசீர்
வைய மளந்தான்றன் மார்பிற் றிரு ‡ நோக்காப்
பெய்வளைக் கையாணம் பின்னைதா னென்றே
யையென்று ளாயர்மகள்

பாவா—யரிதாரங், கொல்லே றிளிவிளரி கற்கடகங் கோப்பமைந்த, தொல்லே ழிசைநரம்பிற் காம்.'' இப்படி ஏழுநரம்புகளையுநிறுத்தி 'எழுவ ரிளங்கோதை யார்' என்ற எழுபெண்களையும் ஏழுநரம்பாக்கி அவர்கள் நரம்புநிற்குநிலை களிலே நிறுத்தி..... ....

அவருள்.—

''மாயவனென்றுள்''—மாயவ னென்றுள் குரலே; மற்றை வெள்ளையாயவ னென்றுள் இளிநரம்பை; ஆய்மகள் பிஞ்ஞையாமென்றுள் துத்தத்தை; மற்றைப்பெண்களைக் கைக்கிளை உழை விளரி தாரமென்றுள்.

[உழையுளியென்று உழைக்குப் பெயர்.]

''மாயவன்சீர்''—மாயவனென்ற குரன்நரம்பைப் பின்னையான துத்தமும் தாரமும் சேர்கின்றன; பலதேவராகிய இளிநரம்பை உழையும் விளரியும் சேர் கின்றன; கைக்கிளையென்கின்றநரம்பு பின்னைக்கு இடப்பக்கமேகின்றது; மூன் றையுமியைதாரத்துக்கு வலப்பக்கமே நின்றது விளரி.

[''குரன்மருங்கிற் பாகந் தன்மருங்கணைந்து நின்ற வுழைகைக் கிளைகண் மேலொரோவலகு செல்லவு மமைப்பது துத்தங் குரலாகவுக் குரன்முத லேழு வகை யோசையு நிரல்படப் பிரிந்திசைப்பது நேரிசை மண்டிலம்.''] இது திரிபுசூத்திரம்.

''வண்டுழாய்''—மாயவன் - மாயவனுக நிறுத்தினவள், நோக்காத வளைக் கையாள். ஐயெனுருள் - வியந்தாள்.

(பி - ம்.) * ''முறையவருண்மாயவள் சீருள்ளாள் பின்னையுத்' † 'முத்தைக்கு நல்விளரிதான் வண்டு' ‡ 'நோக்கான் பெய்வளைக் கையாளப் பின்னை தானு'

கூத்துள்படுதல்

அவர்தாம், செங்கீலை மண்டிலத்தாற் கற்கடகக் கைகோஎத்
* தங்கீலையே யாடற்சீ ராய்ந்துளார் - முன்னைக்
குரற்கொடி தன்கீளையை நோக்கிப் பரப்புற்ற
கொல்லைப் புனத்துக் குருந்தொசித்தாற் † பாடுதை
முல்லைத்தீம் பாணியென் றூள்
எனக்,
குரன்மந்த மாக வினிசம னுக
வரன்முறையே தூத்தம் வலியா - வுரனிலா
மந்தம் விளரி பிடிப்பா ‡ ளவணட்பின்
பின்றையைப் பாட்டெடுப் பாள்

பாட்டு

க. [1] கன்று குணிலாக் § கனியுதிர்த்த மர்யவ
னின்றுநம் மானுள் வருமே லவன்வாயிற்
[2] கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழீ

உ. பாம்பு கயிறுக் கடல்கடைந்த மாயவ
னீங்குநம் மானுள் வருமே லவன்வாயி
[3] லாம்பலந் தீங்குழல் கேளாமோ தோழீ

கூத்துள்படுதல் - தான்கூத்துக்குள் ஒத்தாடுதல்.

"செங்கீலைமண்டிலம்"—செங்கீலையாவது - சமகீலை. மண்டிலத்தான் - மண்டிலத்தோடே. கற்கடகக்கை - நடுவிரலும் அணிவிரலும் முன்னேநின்று மடித்து மற்றை இரண்டுவிரல்களுங் கோத்தல்.

"இருவிரல் கடம்மையுந் தம்முள்ளே கோத்துப், பெருவிரல்கணீக்காண்டாம்"

க. குணில் - குறுந்தடி. கொன்றையந் தீங்குழலென்றமையான் முன்பி னவையும் பண்ணின்மேற்செலுத்தாது கருவிமேற் செலுத்தக ; பண்களுமாம்.

உ. ஆம்பன்முதலானவை சிலகருவி ; ஆம்பல் - பண்ணுமாம். "மொழியாம் பல் வாயாம்பல் முத்தாம்பல்" என்றுசொல்லுவர் பண்ணுக்கு.

---

[1] "கன்றுகுணிலா", "பாம்புகயிறு", "கொல்லையஞ்சாரல்" என்பவை பின் குறிப்பிட்டுள்ள இடங்களில் மேற்கோள்களாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளன ; தொல். செய். சூ. களச - இளம் ; கூ கூ சூ. கசகூ - பேர். ந ; யா - வி. செய். சூ. உஉ ; யா - கா. செய். சூ. கூ ; இ - வி. சூ. எஙடி.

[2] கொன்றைத்தீங்குழல் : கலித்தொகை, கo சு.

[3] "தீங்குழலாம்பலின்" (ஐங்குறு. உகடி); "ஆம்பற்குழலால்" கலித்தொகை, கo அ.

(பி - ம்.) * 'அந்நீலையா ராடியசீ ராய்ந்துளன்' † 'பாழிகோ முல்லேப்பூம் பாணியென்றுளைக்' ‡ 'இவணடப்பிற் பின்றையோர் பாட்டு' § 'கனியுருத்த'

க. கொல்லையஞ் சாரற் குருந்தொசித்த மாயவ
* னெல்லைநம் மாணுள் வருமே லவன்வாயின்
முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழீ [1]
[1] தொழுனைத் துறைவனே டாடிய பின்னை
யணிநிறம் பாடுகேம் யாம்

உ. இறுமென் சாய னுடங்க நுடங்கி
யறுவை யொளித்தான் வடிவென் கோயா
மறுவைவ் யொளித்தா னயர வயரு
நறுமென் சாயன் முகமென் கோயாம்

ங. வஞ்சஞ் செய்தான் றொழுனைப் புனலு
ணெஞ்சங் கவர்ந்தா ணிறையென் கோயா
நெஞ்சங் கவர்ந்தா ணிறையும் வளையும்
வஞ்சஞ் செய்தான் வடிவென் கோயாம்

ச. தையல் கலையும் வளையு மிழந்தே
கையி லொளித்தாண் முகமென் கோயாங்
கையி லொளித்தாண் முகங்கண் டழுங்கி
மைய † லுழந்தான் வடிவென் கோயாம்

ஒன்றன்பகுதி

கதிர்திகிரி யான்மறைத்த கடல்வண்ண னிடத்துளாள்
மதிபுரையு நறுமேனித் தன்முன்னோன் வலத்துளாள்
பொதியவிழ் மலர்க்கூந்தற் ‡ பிஞ்சைசீர் புறங்காப்பார்
முதுமறைதேர் நாரதனார் முந்தைமுறை நரம்புளர்வார்
மயிலெருத் துறழ்மேனி மாயவன் வலத்துளாள்
§ பயிலிதழ் மலர்மேனித் தன்முன்னோ னிடத்துளாள்
கயிலெருத்தங் கோட்டியநம் பின்னைசீர் புறங்காப்பார்
‖ குயிலுவரு ணாரதனார் கொளைபுணர்சீர் ¶ நரம்புளர்வார்.

"தொழுனை" (பா) "தொழுனைக் கணவனே டாடிய பின்னை, யணிநிறம் பாடுகம் யாம்" என்று ஒரு குறள்வெண்பா இட்டோதுவாருமுளர்.

ஒன்றன்பகுதி - ஒற்றைத்தாளத்தின் கூறு.

---

[1] "கன்று குணிலா" என்பதுமுதலியமூன்றும், இரண்டாமடிகளிரட்டிக்கப் பெற்று நந்நான்கடியினவாக மிதிலைப்பட்டிப்பிரதியிற் காணப்படுகின்றன.

[2] சிலப்பதிகாரம், கசு: இo.

(பீ-ம்.) * 'எலி' † உழந்தான் மனமென்கோ' ‡ 'பின்னைசீர்' § 'பயிலிதழ் மாமேனித் தம்முன்னோன்' ‖ 'குயிலுவ நாரதனார்' ¶ 'நரம்புளர்வார் மாயவன்'

ஆநேர்ப்புகழ்தல்

[1] மாயவன்றன் மூன்னிணைடும் வரிவளைக்கைப் பின்னையொடுங்
கோவலர்தஞ் சிறுமியர்கள் குழற்கோதை புறஞ் * சோர
வாய்வளைச்சீர்க் கடிபெயர்த்திட் டசோதையார் தொழுதேத்தத்
[2] தாதெருமன் றத்தாடுங் † குரவையோ தகவுடைத்தே
எல்லாநாம்,
புள்ளூர் கடவுளைப் போற்றுதும் போற்றுது
முள்வரிப் பாணியொன் றுற்று

உள்வரிவாழ்த்து

க. [3] கோவா மலையாரங் கோத்த கடலாரந்
தேவர்கோன் பூணாரந் தென்னர்கோன் மார்பினவே
தேவர்கோன் பூணாரம் ‡ பூண்டான் செழுந்துவரைக்
கோகுல மேய்த்துக் § குருந்தொசித்தா னென்பரால்

உ. பொன்னிமயக் கோட்டுப் புலிபொறித்து மண்ணுண்டான்
மன்னன் வளவன் மதிற்புகார் வாழ்வேந்தன்
மன்னன் வளவன் மதிற்புகார் வாழ்வேந்தன்
பொன்னந் திகிரிப் பொருபடையா னென்பரால்

---

1 "மாயவன்றன்"—மாயவன், எழுவாய். அசோதையார் - இடைச்சேரியில் வளர்த்த தாய்பெயர்.

எல்லா - தோழி; அன்றி நாமெல்லாமென்றுமாம்.

உள்வரிவாழ்த்தென்பது, - பிறிதோருருவங்கொண்டும் கொள்ளாதும்..... .....வாழ்த்துவது.

க. கோவா மலையாரம் - சந்தனம்; வெளிப்படை. கோ - பசு.

உ. "பொன்னிமய"—.....

---

1 "மாமணி வண்ணனுந் தம்முளும் பிஞ்ஞயு, மாடிய குரவையிற் தாமென தோக்கியும்" மணி. கசு: சுஇ - சு.

2 தாதெருமன்றம்: கலித்தொகை, கoக, சிலப். கசு: கoஉ.

3 "தனகடம் பிறந்த முத்தி ஞரமு, மூனிதிறை கொடுக்குந் துப்பிற் றன்மிசைத், தெறலரு மரபிற் கடவுட் பேணிக், குறவர் தந்த சந்தி ஞரமு, மிருபே ராரமு மெழில் பெற வணியுந், திருவீழ் மார்பிற் றென்னவன்" (அகநா. கசு); "தின்கா ழார நீவிக் கதிர்வீசி, மொன்கா ழாரங் கலவுயி மார்பு" (மதுரை. எகஇ - சு) என்பவை முதலி ரண்டடிகளுடன் ஒப்புநோக்கற்பாலன. "கோவாமலையாரம்" முதலிய மூன்றும் தென்னவன் முதலியோரை மாயோனுக்கூறியதற்கும் (தொல். புறத்திணை. சூ. இ - ந), அரசரைத் தெய்வமென்றே பரவியதற்கும் (டீ செய். சூ. கசசு - ந) மேற்கோள்.

(பி - ம்.) * சோரப் பால்வளைக்கைச் நிறடியாரசோதை' † குரவையோதக வுடைத்தே ஆதேர்ப்புகழ்தல்' ‡ 'பூண்டோன்' § 'ஒசிப்பானென்பரால்'

கூ. மூன்நீரி னுள்புக்கு மூவாக் கடம்பெறிந்தான்
* மன்னர்கோச் சேரன் வளவஞ்சி வாழ்வேந்தன்
மன்னர்கோச் சேரன் வளவஞ்சி வாழ்வேந்தன்
கன்னவிலே லோச்சிக் கடல்கடைந்தா னென்பரால்

முன்னிலைப்பரவல்

க. வடவரையை மத்தாக்கி வாசுகியை நாணுக்கிக்
[1]கடல்வண்ணன் பண்டொருநாட் கடல்வயிறு கலக்கினையே
கலக்கியகை யசோதையார் கடைகயிற்றுற் கட்டுண்கை
மலர்க்கமல வுந்தியாய் மாயமோ மருட்கைத்தே

உ. † அறுபொரு ளிவனென்றே யமரர்கணந் தொழுதேத்த
வுறுபகியொன் றின்றியே யுலகடைய வுண்டனையே
யுண்டவாய் களவினு னுறிவெண்ணெ யுண்டவாய்
வண்டுழாய் மாலையாய் மாயமோ மருட்கைத்தே

கூ. திரண்டமரர் ‡ தொழுதேத்துந் திருமானின் செங்கமல
விரண்டடியான் மூவுலகு மிருடீர நடந்தனையே
நடந்தவடி பஞ்சவர்க்குத் தூதாக நடந்தவடி
மடங்கலாய் மாறட்டாய் மாயமோ மருட்கைத்தே

படர்க்கைப்பரவல்

க. [2]மூவுலகு மீரடியான் § முறைநிரம்பா வகைமுடியத்
தாவியசே வடிசேப்பத் தம்பியொடுங் கான்போந்து

கூ. மூவாக் கடம்பு - வஞ்சத்தால் நின்றதாகலின், மூப்பின்றி ஒருநாளைப் போல நின்றகடம்பு.

இம்மூன்றும் பூவைநிலை.

க. சோவரணம் - அசுரர் நகரம்.

---

[1] வயிறென்பதற்கு நடுவென்று பொருளெழுதி, இவ்வடியை மேற்கோள் காட்டினர்; கல்லாடம், "இருளொடுதாரகை"—மயிலேறும் பெருமான்.

[2] இச்செய்யுள்முதலிய மூன்றையும் படர்க்கைப் பரவலாய் ஒருபொருண்மேல் மூன்றடுக்கி நான்கடி இற்றபின் ஓரடிமிக்குவந்த கொச்சகவொருபோகிற்கு மேற்கோளாகக் காட்டினர்; தொல். செய். சூ. கசகூ - ந.

(பி - ம்.) * 'மன்னர்கோன்சேரன்' † 'அறிபொருள்' ‡ 'தொழுதேத்தித் திருமால்' § 'முறைநிரம்பாவகையன்று தாவியசேவடி வெப்பத்'

[1] சோவரணும் * போர்மடியத் தொல்லிலங்கை கட்டழித்த
[2] சேவகன்சீர் கேளாத செவியென்ன செவியே
திருமால்சீர் கேளாத செவியென்ன செவியே

உ. பெரியவனை மாயவனைப் பேருலக மெல்லாம்
விரிகமல வுந்தியுடை விண்ணவனைக் [3] கண்ணுந்
திருவடியுங் கையுந் † திருவாயுஞ் செய்ய
[4] கரியவனைக் காணுத கண்ணென்ன கண்ணே
கண்ணிமைத்துக் காண்பார்தங் [5] கண்ணென்ன கண்ணே

ரு. [6] மடந்தாழு நெஞ்சத்துக் கஞ்சனூர் வஞ்சங்
கடந்தானை நூற்றுவர்பா ணுற்றிசையும் போற்றத்
‡ படர்ந்தா ரணமுழங்கப் பஞ்சவர்க்குத் தூது
[7] நடந்தானை யேத்தாத நாவென்ன நாவே
நாராய ணவென்ணு நாவென்ன நாவே

---

[1] "சோவி, வருமை யழித்த மகன்" (நான்மணி. கடவுள். உ), "மாயவன் மாய மதுவான் மணிநிரையு, ளாயரு வெண்ண லவனருளான்—காயக், கழலலிழக் கண்கனலக் கைவளையார் சோரச், சுழலழலுள் வைகின்று சோ" (பு - வெ. பாடாண். சo) "சோவரணங் கட்டழித்துத் தொல்விலங்கை குமிமிகொண்டி திருதர்ச் செற்றேய்" (கூர்ம. சுவேதவராக. இ) என்பவற்றிற் சோவரணத்தைக் கட்டழித்தமை கூறப்பட்டிருத்தல் காண்க.

[2] "உவப்பினின் னமுத மூறி யொழுகுமால் சரிதங் கேளாச், செவித்துளை நச்சு நாகஞ் செறிவதோர் துளைமற் றுமால்." பாகவத. சௌனகாதியர். சு.

[3] "கையு மலரடியுங் கண்ணுங் கனிவாயுஞ், செய்ய கரிய திருமாலே" விக்கிரம சோழனுலா, கண்ணி, கடி அ.

[4] "மழைதுளி மறுத்த கானின் வற்றனீண் மரமு மந்தண், குழைதர வன்றின் குன்றுங் குழைதர வழுத மூறுங், கழையிசை வடித்தான் செவ்வி காண்கிலாக் கண்கண் மஞ்ஞைத், தொழுதியங் கலவ மேய துஞ்சலில் வறுங்க ணன்றே" பாகவத. சௌன காதியர். உ.

[5] "மைதவழ் வெற்பன் மணவணி காணுமற், கையாற் புதைதெனூஉங் கண்களுங் கண்களோ" கலி. கக.

[6] வேந்தர் தூதுபோதற்குரியரென்பதற்கு இச்செய்யுள் மேற்கோள்; தொல். அகத்திணை. சூ. உசு - ந; நாற்கவி. சூ. எடு. உரை; இ - வி. சூ. சசந.

[7] "பொடித்தசெங் கதிர்போற் காந்தி பொழிமணிச் சூட்டராவி, னடித்தவ ணுமம் பாடா நாவழங் காத நாவே" பாகவத. சௌனகாதியர். ச.

(பி - ம்.) * 'போய்மடியத்' † 'கனிவாயும்' ‡ 'தொடர்ந்து'

இரு

என்றியாங்
கோத்த குரவையு ளேத்திய * தெய்வந
மாத்தலைப் பட்ட துயர்தீர்க்க வேத்தர்
மருள வைகல் வைகன் மாறட்டு
வெற்றி விளைப்பது மன்னே கொற்றத்
† திடிப்படை வானவன் முடித்தலை யுடைத்த
தொடித்தோட் டென்னவன் கடிப்பிடி முரசே.

"கோத்த"—தெய்வம் நம் ஆத்தலைப் பட்டதுயரைத் தீர்ப்பதாக. முரசம் மாறட்டு முழங்குவதாக.

[1] 'காலைவாய்த்தழுவினுள் மாலைவாய்க் கண்டாள்' என்கையால், குரவை யாடியது கோவலனுர் கொலையுண்ட அன்றேயென்க.

இது குரவைச்செய்யுள்.

கயலெழுதிய.....வந்துதோன்றுமன்

(இ - ள்) இமயமெற்றியில் தானெழுதிய கயலுக்கு அயலெழுதிய புலியையும் வில்லையுமுடைய செம்பியன் சேரனென்னுமன்னரும் நாவலந்தீவின்கண் மன்னரும் மற்றுமுள்ள குறுநிலமன்னரும் தன்னேவல்கேட்டொழுக நிலமுழுதுமாண்ட முத்தமாலைபொருந்திய வெண்கொற்றக்குடையையுடைய பாண்டியனது கோயிற்கண்ணே பள்ளியெழுச்சிமுரசு இயம்பும்; ஆதலாலே, நமக்கு இன்று கோயிலில் நெய்யளக்கும் முறையாமெனநினைந்து ஐயையாகிய தன் மகளையழைத்துக் கலைகையிலும் மத்துங்கொண்டு இடையர்குலத்திற்பிறந்த முதுமகளாகிய மாதரி தயிர்த்தாழியிருக்கின்றவிடத்தே வந்து தோன்றினளென்க.

மன்னருமென்னும் உம்மை தொக்கது; இயம்பும், முற்று. கூஉய் - அழைத்து. அயலென்றது வடக்கும் மேற்கும்; அக்கயலைச்சேவிக்க அயலெழுதிய புலியும் வில்லுமென்க; ஒப்பாகவெழுதிற்றிலரென்பதாம். புலியும் வில்லும் மன்னரும் ஏவல்கேட்ப இப்பாருக்குத் தான் அரசனுயாண்ட பாண்டியனென்க.

அங்ஙனந்தோன்றினவள் கூறுவாள் :—

குடப்பா லுறையா.....வருவதொன்றுண்டு

(இ - ள்.) நாம் பிரையிட்ட தாழிகளிற் பாலும் தோயாதொழிந்தன; அதுவுமன்றி நமது நிரையுள் திரண்ட முரிப்பையுடைய விடையின்கண்களும் நீருகாநின்றன; இவை இங்ஙனமாதலான் நமக்கு வருவதோர் உற்பாதமுண்டென்றுளென்க.

---

[1] சிலப்பதிகாரம், கசு: நசு - எ.
(பி - ம்.) * 'தெய்வதமாத்தலை' † 'இடித்தலைவானவன்'

குடம் - தயிர்த்தாழி. உறைதல் - தோய்தல். குவிதல் - திரளுதல். இமில்-மூரிப்பு. மடம் - ஈண்டு அழகு; "மடவரன் மடமான்" போல.

உறிநறு வெண்ணெய்.....வருவதொன் றுண்டு

(இ - ள்.) அங்ஙனம் பாலுறையாமையின் மூதஞ்சுவெண்ணெய் உருக வைத்தனவும் உருகுகின்றவில்லை; அதுவுமன்றி ஆட்டுமறிகளும் துள்ளிவிளையாடா; குழைந்துகிடக்கும்; ஆதலான் நமக்கு வருவதோர் உற்பாதமுண்டென்றுளென்க.

உருகுதல் - நெகிழ்தல். உருகும் - குழைந்துகிடக்கும்.

நான்முலையாயம்.....வருவதொன் றுண்டு

(இ - ள்.) நாலுமுலையையுடைய பசுத்திரள் மெய்நடுங்கிநின்று அரற்றும்; அதுவுமன்றிப் பசுக்களின்கழுத்திற் பெரியமணிகளும் வீழாகின்றன; ஆதலான் நமக்கு வருவதோர் உற்பாதமுண்டென்றுளென்க.

ஆயம் - பசுத்திரள். நடுங்குபு - நடுங்கி. மாண்மணி - பெரியமணி.

கருப்பம்.—(இ - ள்.) இவைகேட்டிற்குக் கருப்பம்.

குடத்துப்பால்.....நீங்குகவெனவே

(இ - ள்.) உறையாமையானும் சோர்தலானும் உருகாமையானும் ஆடாமையானும் வீழ்தலானும் வருவதொருதுன்பமுண்டென்றுசொல்லி மகண்முகத்தை நோக்கி அஞ்சாதொழி; முன்னர் ஆயர்பாடியில் எருமன்றத்து மாயவன் தமையனோடாடிய பாலசரிதநாடகங்கள் பலவுள; அவற்றுள் வேல்போலும் நெடிய கண்ணினையுடைய பிஞ்ஞையோடாடிய குரவைநாடகத்தை மண்ணின் மாதர்க்கெல்லாம் அணிகலமாகிய இக்கண்ணகியும் கண்டுநிற்க யாம் ஆடக்கடவேம்; இக்கறவையும் கன்றும் பிணிநீங்குகவென்றென்றுளென்க.

உறையாமையும் சோர்தலும் உருகாமையும் ஆடாமையும் வீழ்தலுமென்றெண்ணிய உம்மைகளில் உறையாலமையானுமென மூன்றனுருபுவிரிக்க; [1] "உம்மை யெண்ணி னுருபுதொகல் வரையார்" என்றாராகலின். தான், அசை.

குரவையாவது - எழுவரேனும் ஒன்பதின்மரேனும் கைகோத்தாடுங்கூத்து; "குரவை யென்பது..... .....இயல்பிற் றென்ப", "குரவை யென்பது.....ஆட லாகும்" என்றாராகலின்.

கொளுச்சொல்—(இ - ள்.) குரவைக்கூத்திற்குக் கருத்து.

க. காரி கதனஞ்சான்.....கோதையாள்

(இ - ள்.) இக்காரியெருத்தினது சீற்றத்தை [2] அஞ்சாளைப்பற்றிச் சென்று தழுவினானே விரும்பும்; இந்த மலராற்கட்டிய மாலையையுடையாளென்க.

---

[1] தொல்காப்பியம், இடையியல், சூ. சக.

[2] "கொல்லேற்றுக் கோடஞ்சுவானே மறுமையும், புல்லானே யாயமகள்" (கலி, கூக.) என்பது இங்கு ஒப்புநோக்கத்தக்கது.

சுட்டு—(இ - ள்.) இதுமுதற் சுட்டு.

உ. நெற்றிச்செகிலை.....மாதராடோள்

(இ - ள்.) இச்செகிற்சுட்டியேற்றை வலிதொலைத்தானுக்குரியன ; இம் மாதருடையதோள்களென்க.

நெற்றிச்செகில் - நெற்றியொழிந்த செகில் ; சிவந்தசுட்டியுமாம்.

ஊ. மல்லன் மழவிடை.....பூங்குழலுன்

(இ - ள்.) இவ்வளவிய இளைய ஏற்றைத்தழுவி ஏறிச்செலுத்திஞனுக்கு உரியாள் ; இம்முல்லைப்பூங்குழலாளென்க.

தான், அசை.

எ. தூண்பொறி வெள்ளை.....மார்தன்மேலுள்

(இ - ள்.) இச் சிலமறையினேற்றை வலிதொலைத்தானுக்கே ஆம் ; இப் பெண்கொடியாகிய தன்மையையுடையாளுடைய தோள்களென்க.

ஏ. பொற்பொறி வெள்ளை.....மென்முலைதான்

(இ - ள்.) இம் மறையெருத்தின்கீற்றத்தைக் கெடித்தவனுக்கு மனைவியா கும் ; மென்முலையையுடைய நல்ல கொடிபோலுமிவளென்க.

தான், அசை.

ஐ. வென்றி மழவிடை.....குழலாள்

(இ - ள்.) வென்றியையுடைய இளைய ஏற்றைத் தழுவிச்செலுத்தினுக் குரியள் ; கொன்றைப் பழம்போலும் குழலையுடைய இவளென்க.

"கொன்றைப் பழக்குழற் கோதையர்" என்றார் வள்ளுவனாரினும்.

ஒ. தூநிற வெள்ளை.....மலராள்

(இ - ள்.) இப் பால்வெள்ளையேற்றை வலிதொலைத்தானுக்கு மனைவி யாகும் ; காயாம்பூப்போலும் நிறத்தினையுடைய இவளென்க.

எடுத்துக்காட்டு—(இ - ள்.) இங்ஙனஞ்சுட்டிக் காட்டுதல்.

ஆங்கு—(இ - ள்.) அப்படியே,

தொழுவிடை..... .....கோதையார்

(இ - ள்.) இங்ஙன்மாகிய தொழுவிடத்துண்டாகிய எழுவகையேற்றைக் குறித்து வளர்த்தார் ; இக்கோதையையுடைய ஏழுகன்னியரென்க.

என்றுதன் மகளை.....பெயரிடுவார்

(இ - ள்.) மாதரி இங்ஙனங்கூறியவள் தன்மகள் ஐயையைநோக்கி இம்மக ளிரைப் பழையநாம்புகள் நிற்குமுறைமைகளிலேநிறுத்தி இவர்க்குப் படைத் தக்கோட்பெயரிடுவாள் :—

குடமுத லிடமுறை.....வேண்டியபெயரே

பாலை நான்குவகைப்படும்: ஆயப்பாலை, சதுரப்பாலை, திரிகோணப்பாலை, வட்டப்பாலையென.

என்னை? "ஆயஞ் சதுரந், திரிகோணம் வட்டமெனப், பாய நான்கும் பாலை யாகும்" என்றார்.

அவற்றுள், வட்டப்பாலை வருமாறு: "வட்ட மென்பது வகுக்குங் காலை, யோரேழ் தொடுத்த மண்டல மாகும்.", "சாணளவு கொண்ட தொருவட்டந் தன்மீது, பேணியிரு நாலு பெருந்திசைக்—கோணத், திருகயிறு மேலோட்டி யொன்பானு மூன்றும், வருமுறையே மண்டலத்தை வை." என்பது சூத்திரம் என்னுதலிற்றேவெனின், வட்டப்பாலை மண்டலம் வருமிடத்துச் சாணுக்குச் சாணாக ஒருவட்டங்கீறிப் பெருந்திசைகளின்மேலே இரண்டுவரம்புகீறி மண்டலஞ்செய்து பன்னிரண்டுகோணமாக வகுப்பதுணர்த்துதலிற்று.

"எதிரு மிராசி வலமிட மாக, வெதிரா விடமீன மாக—முதிராத, வீராறி ராசிகளே யிட்டடைவே நோக்கவே, யேராரந்த மண்டலமென் றெண்." என்பது சூத்திரம் என்னுதலிற்றேவெனின், இட்ட பன்னிரண்டுகோணத்திற் பன்னிரண்டிராசிகளே நிறுத்தினால் இவற்றுள் நரம்புடனியல்வன வெழென்பதுணர்த்துதனுதலிற்று.

"ஏத்து மிடப மலவ னுடன்சேங், கோற்றனுக் கும்பமொடு மீனமிவை—, பார்த்துக், குரன்முதற் றூர மிறுவாய்க் கிடந்த, நிரலேழுஞ் செம்பாலை நேர்.' இவ்வேழும் இடபம் கற்கடகம் சிங்கம் துலாம் தனு கும்பம் மீனமென இவற்றுணிற்கும்.

"துலங்கிலைக் குரலுந் தனுநிலைத் துத்தமு, நிலைபெறு கும்பத்து நேர்கைக் கிளியு, மீனத் தழையும் விடைநிலைத் திளியு, மானக் கடகத்து மன்னிய விளரியு, மரியிடைத் தாரமு மிணைவுறக் கொளலே."

இனி இந்நரம்புகளின்மாத்திரைகள்வருமாறு: "குரலுத்த நான்கு கிளை மூன் றிரண்டாங், குரையா வுழையிளி நான்கு—விரையா, விளரியெனின் மூன்றிரண்டு தாரமெனச் சொன்னார், களரிசேர் கண்ணுற் றவர்" எனக் கொள்க.

இவற்றுள், தாரத்து உழைபிறக்கும்; உழையிற் குரல்பிறக்கும்; குரலுள் இளிபிறக்கும்; இளியுள் துத்தம்பிறக்கும்; துத்தத்துள் விளரிபிறக்கும்; விளரியுட் கைக்கிளை பிறக்குமெனக்கொள்க. இவற்றுள் முதலிற்றேன்றியநரம்பு தாரம்; இவை விரிப்பிற்பெருகும்; வந்தவழிக் கண்டுகொள்க.

இனி வட்டப்பாலையிலே நாலுடன்னும் பிறக்கும்; "தாரத் துழைதோன்றப் பாலையாழ் தண்குர, லோருமுழை தோன்றக் குறிஞ்சியாழ்—நேரே, யிளி குரலிற் றேன்ற மருதயாழ் துத்த, மிளியிற் பிறக்கநெய்த லியாழ்." இவற்றுள், பாலையாழுள்ளே ஏழுபாலையிசை பிறக்கும். 'குரலிளியிற் பாகத்தை வாங்கியோ ரொன்று, வரையாது தாரத் துழைக்கும்—விரைவின்றி, யெத்தும் விளரி கிளைக்கிக்க வேந்திழையாய், துத்தங் குரலாகுஞ் சொல்."

இந்நரம்பிற் பாலை பிறக்குமிடத்துக் குரலும் துத்தமும் இளியும் நான்கு மாத்திரைபெறும்; கைக்கிளையும் விளரியும் மூன்றுமாத்திரைபெறும்; உழையும் தாரமும் இரண்டு மாத்திரைபெறும்; இவற்றுட் குரல்குரலாய் ஒத்து நின்றது செம்பாலை; இதனிலே, குரலிற்பாகத்தையும் இளியிற்பாகத்தையும் வாங்கிக் கைக்கிளை உழை விளரி தாரத்திற்கு ஒரோவொன்றைக் கொண்டுசேர்க்கத் துத்தம் குரலாய்ப் படுமலைப்பாலையாம்; இவ்வாறேதிரிக்க இவ்வேழுபெரும் பாலைகளும் பிறக்கும். பிறக்குங்கால் திரிந்தகுரல் முதலாக ஏழும் பிறக்கும்.

அவை பிறக்குமாறு :—குரல்குரலாயது செம்பாலை; துத்தம் குரலாயது படுமலைப்பாலை; கைக்கிளை குரலாயது செவ்வழிப்பாலை; உழை குரலாயது அரும்பாலை; இளி குரலாயது கோடிப்பாலை; விளரி குரலாயது விளரிப்பாலை; தாரம் குரலாயது மேற்செம்பாலையென வலமுறையே ஏழுபாலையுங்கண்டுகொள்க. இதனை *வலமுறையென்றும்; மேற்கேமுகமாக இருந்து திரிதலான். கிழக்கே நோக்கியிருக்கின் இடமுறையாமெனக்கொள்க.

(இ - ள்.) குடதிசையிற் குரல்நரம்புமுதலாகக் குரல் துத்தம் கைக்கிளை உழை இளி விளரி தாரமென இவர்க்கு நிரலேயிட்டபெயரே மாதரிவிரும்பும் பெயரென்க.

படைத்துக்கோட் பெயரிடுவாள் - இனி ஆளுதற்கு இட்ட இடுகுறிப் பெயர் கூறுவாள்.

மாயவனென்றுள்..... .....மூன்றை

(இ - ள்.)... . .....

மாயவன் சீருளார்.....விளரிதான்

(இ - ள்.) மாயவனென்று பெயர்கூறப்பட்ட குரனரம்பைச்சேரப் பின்னை யென்னும் துத்தமும் தாரமுநின்றன; வெள்ளையாயவனென்று பெயர்கூறப் பட்ட இளியென்னுநரம்பைச்சேர உழையும் விளரியும் நின்றன; கைக்கிளை யென்னு நரம்பு பின்னைக்கு இடப்பக்கத்தே நின்றது; † மூந்தையென்னும் தாரநரம்பிற்கு வலப்பக்கத்தே விளரிநின்றதென்க.

மூந்தை - மூத்தை; விகாரம். "முத்தை முதலிய விகடி பிழைத்தர" என்றார் பிறரும்.

அவருள், வண்டுழாய்.....ஆயர்மகள்

(இ - ள்.) வளவிய துழாய்மாலையை மாயவன்றேளிட்டு இசைநாடக நூலோரால் இகலப்படாத குரவைக்கூத்திற்கு உட்பட்டாடுவாள் உலகளந்த மாயவன் தன்னுடைய திருமார்பை இடங்கொண்ட அழகையுடைய திருமகளை நோக்காமைக்குக் காரணமாகிய சிறப்பையுடைய வளைபொருந்திய கையாளாகிய பின்னை தானேயாமென்று மாதரி வியந்தாளென்க.

(பி - ம்.) * 'வரன்முறையென்றார்', 'வலமுறையென்றார்', † 'மூத்தையாகிய அசோதையென்னுந் தாரநரம்பு',

[1] "நீணிரைநம்பின்னை" என்றுர் பிறரும்; நப்பின்னையென்பாருமுளர். ஐயென்றுள் - வியத்தாள்; [2] "ஐவியப் பாகும்" என்றுராகலின். ஆயர் மகள் - மாதரி.

சூத்துள்படுதல்—(இ - ள்.) ஆடத்தொடங்குதல்.

அவர்தாம்—(இ - ள்.) அம்மகளிர்தாம்,

செந்நிலை மண்டிலத்தால்.....பாணியென்றுள்

(இ - ள்.) சமநிலையிலேநின்று நண்டுக்கரத்தைக்கோத்து மண்டலமிருந்து அப்பொழுதே ஆடுதற்குத் தாளவுறுப்பை ஆராய்ந்துள்ளவரில் முதலெண்ணப் பட்ட குரற்றுனத்துநின்ற மாயவனுடைய அவள் தனதுநிலையாகிய தூத்தநரம் பாகிய பின்னையைநோக்கிப் பரந்தகன்ற கொல்லையில் வஞ்சத்தால்வந்துநின்ற குருந்தையொசித்த அவன் முல்லையாகிய இனிய பண்ணுலே பாடியாடக்கடவே மென்றுளென்க.

செந்நிலை - சமநிலை. ஆன், ஒடு. கற்கடகக்கை - நண்டுக்கை; ஆவது நடுவிரலும் அணிவிரலும் முன்னேமடக்கி மற்றையிரண்டுவிரலுங்கோத்தல். அந்நிலையே - அப்பொழுதே.

எனை—(இ - ள்.) என்றிட்டு,

குரன்மந்தமாக.....பாட்டெடுப்பாள்

மந்தோச்ச சமம் கூறுவார்:—

(இ - ள்.) பாட்டெடுக்கின்றவள் குரலென்னுநரம்பு மந்தசுரமாக இளி யென்னு நரம்பு சமசுரமாக வந்தமுறையே தூத்தமென்னுநரம்பு வலிசுரமாக விளரியையும் வலிமையில்லாத மந்தசுரமாகப் பிடிக்கின்றவள் தன்னட்புநரம் பாகிய தூத்தநரம்பாயவட்குப் பற்றுப்பாடுகின்றுள்.

பாட்டு—(இ - ள்.) அங்ஙனம் அவள்பாடுகின்ற பாட்டு.

க. கன்று குணிலா.....கேளாமோதோழீ

(இ - ள்.) தோழீ, நிரைமேய்க்கின்றுழி விளவின்கனியையுதிர்க்கவேண்டி அவ்விடத்தில் மேய்கின்றபசுவின்கன்றைக் குறுந்தடியாகக்கொண்டு உதிர்த்த மாயவன் நம்வழிபாட்டால் இங்குள்ள பசுநிரையிடத்துவருவன்; அங்ஙனம் வந்தால் அவனுதும் கொன்றையங்குழலோசையைக் கேட்போமென்றுளென்க.

உ. பாம்பு கயிறு.....கேளாமோதோழீ

(இ - ள்.) தோழீ, கடலிக் கடைகின்றகாலத்து மேருவரைமத்தத்திற் சுற்றுக்கயிறு வாசுகியென்னும்பாம்பாகச்சுற்றிக் கடைந்த மாயவன் நம்வழி பாட்டால் ஈங்கு நம்மாணிடத்துவருவன்; அங்ஙனம்வந்தால் அவனுதும் இனிய ஆம்பல்குழலோசையைக் கேட்போமென்றுளென்க.

---

[1] சீவகசிந்தாமணி, சுஅஉ. [2] தொல்காப்பியம், உரிச்சொல்லியல், சூ. அள.

கூ. கொல்லையஞ்சாரல்.....கேளாமோ தோழீ

(இ - ள்.) தோழீ, நம்புனக்கொல்லையைச்சார்ந்தவிடத்து வஞ்சனையால் வந்து நின்ற குருந்தைமுறித்த மாயவன் நம்வழிபாட்டாற் பகலே இங்குள்ள நம் ஆனிரையுள்வருவன்; அவன் அங்ஙனம்வந்தால் அவனுதும் இனிய முல்லையங்குழலோசையைக் கேட்போமென்றுளெனக.

கொன்றை ஆம்பல் முல்லை யென்பன சிலகருவி; இனி அவற்றைப் பண்ணென்றுகூறுபவெனின், அங்ஙனங்கூறுவாரும் ஆம்பலும் முல்லையுமே பண்ணுதற்குப் பொருந்தக்கூறினல்லது கொன்றையென ஒருபண்ணில்லையாதலானும் கலியுண் முல்லைத்திணையின்கண் ஆரும்பாட்டினுள், [1] "கழுவொடு சுடுபடை சுருக்கிய தோற்க, ணிமிழிசை மண்டை யுறியொடு தூக்கி, யொழுகிய கொன்றைத் தீங்குழன் முரற்சியர், வழூஉச்சொற் கோவலர் தத்த மினநிரை, பொழு தொடு தோன்றிய கார்நீ வியன்புலத்தர்" எனக் கருவிகூறினமையானும், "அன்றைப் பகற்கழிந் தாளின் றிராப்பகற், கன்றின் குரலுங் கறவை மணி கறங்கக், கொன்றைப் பழக்குழற் கோவல ராம்பலு, மொன்றல் சுரும்பு நரம் பென வார்ப்பவும்" என வளையாபதியுளும் கருவிகூறிப் பண்கூறுதலானும் இவை ஒருபொருண்மேல் முன்றடுக்கிவந்த ஒத்தாழிசையாதலானும் இரண்டு பண்ணும் ஒன்று கருவியுமாகக்கூறின், செய்யுட்கும் பொருட்கும் வழூஉச் சேறலானும் அங்ஙனங்கூறுதல் அமையாதெனக.

இதனுட் குழலென்றது வங்கியத்துப் பொதுப்பெயர். இஃது ஐந்து கூறுபடும்:—

அவை [2] "ஒங்கிய மூங்கில் ..... பார்த்து" என்பன.

நீளம் இருபதுவிரல்; சுற்றளவு நாலரைவிரல்; இது துளையிடுமிடத்து நெல்லரிசியில் ஒருபாதிமரநிறுத்திக் கடைந்து வெண்கலத்தாலே அணைசு பண்ணி இடமுகத்தை அடைத்து வலமுகம்வெளியாகவிடப்படும்;

என்னை? "சொல்லு மிதற்களவு.....வங்கிய மென்" என்றராகலின்.

இனி வங்கியத்தின் துளையளவு: நீளம் இருபதுவிரல்; இதிலே தூம்பு முகத்தின் இரண்டுவிரல் நீக்கி முதல்வாய்விட்டு அம்முதல்வாய்க்கு ஏழங்குலம் விட்டு வளைவாயினும் இரண்டுவிரல்நீக்கி நடுவினின்ற ஒன்பதுவிரலினும் எட்டுத்துளையிடுக. இவற்றுள் ஒன்று முத்திரையென்றுகழித்துநீக்கி நின்ற ஏழினும் ஏழுவிரல் வைத்து ஊதப்படும்; துளைகளின்பரப்பு ஒருவிரலகலங் கொள்ளுக;

என்னை? "இருவிரல்க ணீக்கி.....வங்கியத்தின் கூறு" என்றராகலின்.

இனி வங்கியமூதுமிடத்து வளைவாய்சேர்ந்த துளையை முத்திரையென்று நீக்கி முன்னின்ற ஏழினையும் ஏழுவிரல்பற்றிவாசிக்க.

ஏழுவிரலாவன: இடக்கையிற்பெருவிரலும் சிறுவிரலுநீக்கி மற்றை மூன்றுவிரலும் வலக்கையிற் பெருவிரலொழிந்த நான்குவிரலும் ஆகவேழும்;

---

[1] கலித்தொகை, கூ. [2] சீவகசிந்தாமணி, கூஎடு - ந. மேற்.

என்னை ? "வீளைவாயருகொன்று..... ... ...வைத்து" என்றுராகலின்.

இவ்வேழு ஆளைகளிலும் இசைபிறக்குமாறு : சரிகமபதநி என்னும் எழுமுத்தினும் பிறக்கும் ;

என்னை ? "சரிக மபதநி .... சுத்தத் தாளை" என்றுராகலின்.

எழிசையாவன : சட்சம், ரிடபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிடாதமெனவிவை. இவைபிறந்து இவற்றுள்ளே பண்கள்பிறக்கும். இவற்றுட் கூறியவெல்லாமுணர்ந்து கருவியாதல் கொள்க. அவ்வாறு கொள்ளுங்கால், கருவியென்பதனை இடுகுறியாகக்கோடுமோ காரணக்குறியாகக்கோடுமோவெனிற் காரணக்குறியாகக்கோடும் ; என்னைகாரணமெனிற் கஞ்சத்தாற் குமுதவடிவாக அணைசுபண்ணிச் செறித்தலின் ஆம்பற்குழலாயிற்றெனவும் கொன்றைப்பழத்தைத்துருவித் தூளைத்து ஊதலிற்கொன்றைக்குழலாயிற்றெனவும் மூல்லைக்கொடியால் முப்புரியாகத் தெற்றியவளையை வீளைவாய்க்கட்செறித்தூதலின் மூல்லைக்குழலாயிற்றெனவுங் கொள்க.

தொழுனைத் துறைவனுமி.....பாடுகேம்யாம்

(இ - ள்.)..... .....

க. இறுமென் சாயல்.....முகமென்கோயாம்

(இ - ள்.) கட்புலனுகநோக்குவார் மென்மையாகலின் இப்பொழுது இறுமெனத்தகும் இடைறுடங்கும்படி அசைபவளது தூதிலே ஒளித்தானுடைய வடிவினழகையே புகழக்கடவேமோ ; அன்றி, அங்ஙனம் தூதிலேயொளித்தவன் அவள்தூதிலின்மைகண்டு சோர்கின்றவதனைக்கண்டு சோர்கின்ற நறிய மெல்லிய சாயலையுடையாளது காமக்குறிப்பையுடைய முகத்தினழகையே புகழக்கடவேமோ ;

உ. வஞ்சஞ் செய்தான்.....வடிவென்கோயாம்

(இ - ள்.) தொழுனையாற்றினுள் வஞ்சஞ்செய்தானுடைய நெஞ்சத்தைக் கவர்ந்தாளுடைய அழகையே புகழக்கடவேமோ ; அன்றி அங்ஙனம் தன்னெஞ்சத்தைக் கவர்ந்தாளுடைய அழகையும் வீளையையுமொளித்துக்கொண்டானுடைய வடிவையே புகழக்கடவேமோ ;

ரு. தையல் கலையும்.....வடிவென்கோயாம்

(இ - ள்.) கலையையேயன்றி வீளையையுமிழந்தாளுல் தன்கையிலேமறைந்தாளாகிய தையலுடைய முகத்தினழகையே புகழக்கடவேமோ ; அன்றி அங்ஙனம் கையிலே மறைந்தாளுடைய முகத்தின்றன்மையைக்கண்டு இரங்கி மயக்கத்தையுழந்தானுடைய வடிவையே புகழக்கடவேமோவென்றுரைக்க.

இவை தூவைமருதி கூற்று

ஒன்றன்பகுதி—(இ - ள்.) ஒற்றைத்தாளத்தின் கூறு.

கதிர்திகிரி.....நரம்புளர்வார்

(இ - ள்.) பகற்கதிரைத் தன்கையாழியான்மறைத்த கடல்போலும் வண்ணத்தையுடைய கண்ணன் இடப்பக்கத்துள்ளாள்; மதியையொத்த திருமேனியையுடைய அவன்றமையன் வலப்பக்கத்துள்ளாள்; கட்டவிழ்ந்த மலர்பொருந்திய கூந்தலையுடைய பிஞ்ஞை அவளுடைய தாளவொற்றறுப்பைப் புறங்காக்கின்றவர் முதியவேதத்தின் [1] சிக்கையென்னுமங்கத்தை ஆராயும் முதனரம்பை உருவிவாசிக்கும் நாரதனுமென்க.

சிக்கையென்பது, இசை.

மயிலெருத்து.....நரம்புளர்வார்

(இ - ள்.) மயிலினது புறக்கழுத்தையொத்த திருமேனியையுடைய மாயவன் வலப்பக்கத்துள்ளாள்; பயின்ற வெள்ளிய மலர்போலும் மேனியையுடைய அவன் தமையன் இடப்பக்கத்துள்ளாள்; சிறுபுறமாகிய எருத்தங்கோட்டிய பிஞ்ஞை அவளுடைய தாளவறுதியைப் புறங்காக்கின்றவர் குயிலுவருட் செறிபுப்புணர்ந்திருக்கும் தாளவறுதியையுடைய நரம்பை உருவிவாசிக்கும் நாரதனுமென்க.

கொளையென்பது ஒற்றறுப்பு; அது முன்னர்க்கூறினும்.

மாயவன்றன்...குரவையோ தகவுடைத்தே

(இ - ள்.) மாயவன் தன்தமையனோடும் எழுதிய வளையைக் கையின் கணுடைய பிஞ்ஞையோடும் கோவலருடைய சிறுமியர்களுடைய மணமாலைகள் புறத்தேவீழ்ந்ததையக் கோத்த கைகளிலணிந்த வளைகளொலிக்கின்ற தாளத்துக்கு ஒக்கமிதித்திட்டு அசோதைப்பிராட்டியார் தொழுதேத்தத் துவராபதியில் எருமன்றத்தே அன்றுடிய குரவைக்கூத்து மிகவும் பெருமையையுடைத்தாயிருந்ததென மாதரிவியந்தாள்;

ஒடு இரண்டும் எண்ணுமிடை. சிறுமியர் - சிறுபெண்கள்; சூடநாட்டு வழக்கு. ஓ, வியப்பு.

எல்லாநாம்—(இ - ள்.) நாமெல்லாம்; எல்லா-ஏடீ, தோழியென்றுமாம்.

புள்ளூர் கடவுள்.....பாணியொன்றுற்று

(இ - ள்.) கருடப்புள்ளையூர்கின்ற கடவுள் மிகவும்போற்றுவேம்; இக்குரவையுள் உள்வரியாகிய ஒருபாட்டினுமென்க.

க. கோவா மலையாரம்.....என்பரால்

(இ - ள்.) கோக்கப்படாத தன் பொதியின்மலையிலாரமும் கோக்கப்பட்ட தன் கொற்கைக்கடலிலாரமும் இந்திரன்மூனிந்து இட்ட பூணிய ஆரமும் இம்மூன்று வகையாரமும் தென்னர்கோன் மார்பிடத்தன; அங்ஙனம் தேவர் கோனுரமீருகவுள்ளனபூண்டான் யாவனென்னின், வளைய துவரையிடத்துப் பசுத்திரளேமேய்த்துக் குருந்தையொசித்தானென்றுசொல்லுவர்;

கோவா, கோத்த இரண்டும்வெளிப்படை.

---

[1] இதனை நாரதசிக்ஷையென்பர் வடநூலார்; நாரதசீக்ஷையென்றும் வழங்கும்.

உ. பொன்னிமயக் கோட்டு.....பொருபடையா னென்பரால்

(இ - ள்.) பொன்னுகிய இமயவரைக் கொடுமுடியிலே தன்புலியைப் பொறித்து இப்பாலுள்ள மண்ணெல்லாமாண்டவன் மதில்சூழ்ந்த புகாரில் வாழும் வளவனுகிய வேந்தன்; அவன் யாவனெனின், பொற்றிகிரியைத் தான் பொருதற்குப் படையாகவுடைய மாலென்றுசொல்லுவர்;

கூ. முந்நீரி னுள்புக்கு.....கடைந்தா னென்பரால்

(இ - ள்.) கடலினுள்புக்கு மூவாத கடம்பைவெட்டினவன் வளவிய வஞ்சியில் வாழும் வேந்தனுகியசேரன்; அவன் யாவனெனின், வரையென்றுசொல்லப்பட்ட தனது தோள்களையோச்சிக் கடலைக்கடைந்த மாலென்றுசொல்லுவர்.

[1] முந்நீர் - கடல்; ஆகுபெயர்; ஆற்றுநீர் ஊற்றுநீர் மேனீரென இவையென்பார்க்கு அற்றன்று; ஆற்றுநீர் மேனீராகலானும் இவ்விரண்டுமில்வழி ஊற்றுநீரும் இன்றுமாதலானும் இவற்றை முந்நீரென்றல் பொருந்தியதன்று; முதியநீரெனின், [2] "நெடுங்கடலுந் தன்னீர்மை குன்றும்" என்பதனுல் அதுவும் மேனீரின்றி அம்மையாமையின் ஆகாது; ஆனுல் முந்நீர்க்குப் பொருள் யாதோவெனின், முச்செய்கையையுடையநீர் முந்நீரென்பது; முச்செய்கையாவன மண்ணைப்படைத்தலும் மண்ணையழித்தலும் மண்ணைக்காத்தலுமாம்.

மூவாக்கடம்பு - வஞ்சத்தால் நிற்கின்றதாகலின், மூப்பின்றி ஒருநாள் போலநின்றகடம்பு. மூவா, மூத்தவென்னும் பெயரெச்சத்தெதிர்மறை.

இவைமூன்றும் பூவைநிலை.

இவற்றுட் சேரனை முற்கூறுது பாண்டியனை முற்கூறியதென்னையெனின், இது மதுரைக்காண்டமாதலானும் இக்காப்பியஞ்செய்தவர் விழைவுவெறுப்பற்ற சோழனியாதலானும் [3] "முடிகெழு வேந்தர் மூவர்க்கு மூரியது" எனச் சாத்தர் கூறினமையானுமென்க.

இவை உள்வரிவாழ்த்து.

க. வடவரையை மத்தாக்கி.....மாயமோ மருட்கைத்தே

(இ - ள்.) கடல்வண்ணனே! கமலவுந்தியாய்! நீ முன்பு ஒருநாள் வடவரையை மத்தாகநாட்டி வாசுகியென்னும்பாம்பைக் கடைகயிறுகப்பூட்டிப் பாற்கடலினுவைக் கலக்குவித்தாய்; அங்ஙனம் கடலைக்கலக்கியநின்கைகள் அசோதைப்பிராட்டியாருடைய கடைகயிற்றுலேகட்டுண்டகை; இஃது ஒரு மாயமோ; மிகவும் மருட்கையையுடைத்தாயிராநின்றதென்றுரென்க.

---

[1] "முந்நீர்விழவின்" (புறநா. கூ.) என்பதன் விசேடவுரையையும், "முந்நீர் நாப்பண்" (பெரும்பாண். சசக) என்பதனுரையையும், "முந்நீர்ப்பிறந்த" (சீவக. டு.) என்பதன் விசேடவுரையையும் பார்க்க.

[2] திருக்குறள், கஎ. [3] சிலப்பதிகாரம், பதிகம், சுக.

கடல்வண்ணன், அண்மைவினி;[1] 'அண்மைச் சொல்லே யியற்கை யாகும்" என்பதனால். இது மேலுங்கொள்க.

உ. அறுபொரு ளிவனென்மே றுமருட்கைத்தே

(இ - ள்.) மாலையாய்! ஐயமற்றபொருள் இவனென்றேகொண்டு அமரர் திரளெல்லாம் உன்னைத் தொழுதேத்தாநிற்கவும், நீ மிக்க பசியொன்றுமின்றி யே உலகடங்கலுமுண்டாய்; அங்ஙன முண்டவாய் களவிடத்தே உறிவெண் ணெயைப் பெரும்பசியாலே உண்டவாய்; இஃது ஒருமாயமோ? எங்கட்கு மருட்கையையுடைத்தாயிராநின்றதென்றுரைக்க.

அறுபொருள் - அற்றபொருள்; வினைத்தொகை; ஐயமற்றபொருளென்றுமாம். இனி அறுபொருள் - தீர்த்தபொருளென்றுமாம்; "அற்றகாரியம்" என்றுற்போல. இனி அறுபொருள் - அறுவகைச்சமயத்தாரும் துணிந்த பொருளென்றுமாம்.

ஊ. திரண்டமரர்.....மருட்கைத்தே

(இ - ள்.) திருமாலே! அட்டாய்! அமரர் திரண்டு ஏத்தாநிற்கும் நினது செங்கமலம்போலும் இரண்டடியாலே மூன்றுலகமும் இருணீங்கநடந்தாய்; அங்ஙனம் இருணீங்கநடந்தவடி பஞ்சிபாண்டவர்க்குப் பின்பு தூதாகநடந்தவடி; இஃது ஒருமாயமோ; எங்கட்கு மருட்கையையுடைத்தாயிராநின்றதென்றுரைக்க.

அமர்திரண்டெனமாறுக. மடங்கல் - நரசிங்கம். மாறு - பகை.

இவை மூன்றும் முன்னிலைப்பரவல்.

க. மூவுலகு மீரடியான்.....செவியே

(இ - ள்.) இரண்டடிக்குக்குறைபடும்படி மூவுலகையும் முடியத்தாவிய சேவடி சிவக்கும்படி தம்பியோடுங்கூட வனத்தின்கட்போந்து சோவென்னும் அரணமும் அவ்வரணத்துள்ளாரும் போரின்கண்தொலைந்துமடியவும் அதுவேயு மன்றிப் பழைய இலங்கையையும் காவலழித்த சேவகனுடைய புகழைக்கேளாத செவியும் சில செவியே; அத்திருமாலுடைய புகழைக்கேளாத செவியும் சில செவியேதாமென்றுரைக்க.

உம்மை, எச்சவும்மை. செவியென்னசெவியென்றார்; மண்ணினும் மரத்தினும் கல்லினும் செவியுண்டாகலின். போந்து மடியக்கட்டழித்த சேவகனென்க. ஏகாரம், ஈண்டுப் பிரிநிலை. செவியுஞ்செவியேயென்ற பாடமாயின், செவியுமென்னுமும்மை இழிவுசிறப்பு.

உ. பெரியவனே மாயவனே.....கண்ணே

(இ - ள்.) எல்லாத்தேவரினும் பெரியவனே மாயங்களெல்லவற்றினும் பெரிய உலகனைத்தையும் விரிக்கின்ற கமலவுந்தியையுடைய விண்ணவனைக் கண்முதல்

[1] தொல்காப்பியம், வினைமரபு, சூ. கo.

கனிவாயீருகவுள்ளனவெல்லாம் செய்ய கரியவனைக் காணப்பெறுதகண்கள் என்னகண்களோ ; அங்ஙனம் காணுங்கால் இமையாதுகாண்டலின்றி இடையே இமைத்துக்காண்பார்கண்கள் என்னகண்களோவென்றுரைக்க.

விரிகமலம், விளைத்தெர்கை. செய்ய கரியவனென்பது விரோதமென்னு மலங்காரம். என்னகண்களென்றதற்கு முன்னர்க்கூறியவாறேகூறுக ; பீலிக் கண்ணுமுண்டாகலின் இனி இமைத்துக்காண்பார் கண்ணென்றது மக்கள் கண்ணையெனினுமமையும்.

கூ. மடந்தாழு நெஞ்சத்து.....நாவென்னநாவே

(இ-ள்.) மடந்தங்கிய நெஞ்சத்தையுடைய கஞ்சனுர்செய்த வஞ்சங்களைக் கடந்தவனைத் திசைநான்கினுமுள்ள தேவர்கள்போற்ற ஆரணம்தொடர்ந்து முழங்கப் பஞ்சவர்க்காக நூற்றுவர்பால் தூதுநடந்தவனை எத்தாத நா என்ன நாவோ ; நாராயணனென்றுகூறுத நாவென்னநாவோதானென்றுரைக்க.

மடமை - அறிவின்மை. தாழ்தல் - தங்குதல். கஞ்சனுர், செறலின்கட் பான்மயக்கம்.

என்னநாவோவென்றதுமது ; சிற்சைநாக் கலப்பைநா இவையுமுண்டாகலின்.

இவை மூன்றும் பாரிக்கைப்பாவல்.

என்றியாங்கோத்த.....கடிப்பிகுமுரசே.

(இ-ள்.) என்றுகொண்டு நாம்தொடுத்த குரவைக்கூத்தினுள் நாம் ஏத்தியதெய்வம் நம் ஆவிடத்துத் தலைப்பட்டபிணிகளைத் தீர்ப்பதாக ; கொற்றத்தையுடைய இடியைப்படையாகவுடைய இந்திரனுடைய முடியிடத்தையுடைத்த தொடிபொருந்திய தோளையுடைய தென்னனுடைய கடிப்பாலெறியுமுரசம் வேந்தர்மருள எங்ஙானும் மாற்றுரைவென்று முழங்குவதாகவெனச்சொல்லி வாழ்த்திக் குரவை நாடகத்தை ஆடிமுடித்தாரென்க.

இது கூத்தாற்பெற்றபெயர்.

கள.—ஆய்ச்சியர்குரவை முற்றிற்று.

பதினெட்டாவது

துன்பமாலை.



ஆங்கு,
ஆயர் முதுமக *ளாடிய சாயலாள்
பூவும் புகையும் † புனைசாந்தும் கண்ணியு
நீடுநீர் வையை நெடுமா ‡ லடியேத்தத்
ரு. தூவித் துறைபடியப் போயினுண் மேவிக்
குரவை முடிவிலோ ரூரரவங் கேட்டு
விரைவொடு வந்தா ளுளள்

அவடான்,
சொல்லாடாள் சொல்லாடா னின்றுளந் நங்கைக்குச்
கஎ. சொல்லாடுஞ் சொல்லாடுந் தான்
§ எல்லாவோ,
[1]காதலற் காண்கிலேன் கலங்கிநோய் கைம்மிகு
மூதூலை தோற்க வுயிர்க்குமென் னெஞ்சன்றே

க. ஆங்கு - அவ்விடத்து.

உ. ஆயர் முதுமகள் - மாதரி. ஆடிய - அசைந்த. சாயலாள் - ஐயை.

ச. நீடுநீர்வையைக்கண்ணே. நெடுமால் - ஸ்ரீ இருந்தவளமுடையார்.

ஈ - ரு. பூமுதலாயினவற்றைத் தூவி. துறைபடிய - தீர்த்தமாட; துறை படிதல் - பலியிடுதல். .....

எ. வந்தாளென்றது ஐயையை; வேறொருத்தியென்றுங்கூறுவர்.

கூ. சொல்லாடாமல்நின்றுள் அந்தக்கண்ணைநிக்கு.

கo. சொல்லாடும் - சொல்லுதலைச்செய்யும். தான் - அந்நிலைதான்.

கூ - கo. அன்றிச் சொல்லாடாளாய்நின்ற அந்த நங்கைக்குக் கண்ணகி தான் சொல்லாடுமென்றுமாம்.

கக. எல்லா - தோழீ..... ....

---

1 "காதலர்ப் பிரிந்த மாதர் நோதக, மூதூலைக் குருகி னுயிர்த்தன சொடுங்கி" "காதலற் கெடுத்த நோயொ டெங்கனன், மூதூலைக் குருகி னுயிர்த்தன வுயிர்த்து" (சிலப். ச: இஅ - கூ; உஉ: கடுக - உ); "காதலர்.....பொத்தி, மூதூலைக் குருகி னுயிர்த்தகத் தடங்காது", "செங்கண் ஞெமுத்து நெஞ்சுபுகை யுயிர்த்து", "வஞ்சினஞ் சாற்றி நெஞ்சுபுகை யுயிர்த்து" மணி. உ: சஉ - கூ; அ: இஅ; கஅ: கள.

(பி - ம்.) * 'ஆட்டிய' † 'புலர்' ‡ 'அடியேத்திற்' § 'எல்லா, காதலர்க் காணேன் கலங்குநோய்கைம்மிகவூதூலை'

பூதுலை தோற்க வுயிர்க்குமென் னெஞ்சாயி
கடு. னேதிலார் சொன்ன தெவன் * வாழி யோதோழீ
நன்பகற் போதே † நடுக்குநோய் கைம்மிகு
மன்பணைக் காணு தலகுமென் னெஞ்சன்றே
யன்பணைக் காணு தலகுமென் னெஞ்சாயின்
மன்பதை சொன்ன தெவன்வாழி யோதோழீ

உ0. தஞ்சமோ தோழீ தலைவன் வரக்காணேன்
வஞ்சமோ வுண்டு மயங்குமென் னெஞ்சன்றே
வஞ்சமோ வுண்டு மயங்குமென் னெஞ்சாயி
‡ னெஞ்சலார் சொன்ன தெவன்வாழி யோதோழீ
[1]சொன்னது :—

உடு. அரைசுறை கோயி லணியார் ஞெகிழங்
கரையாமல் வாங்கிய கள்வனு மென்றே
கரையாமல் வாங்கிய கள்வனு மென்றே
குரைகழன் மாக்கள் கொலைகுறித் தனரே
§ எனக்கேட்டு,

கூ0. பொங்கி யெழுந்தாள் விழுந்தாள் பொழிகதிர்த்
திங்கண் முகிலோடுஞ் சேணிலங் கொண்டெனச்
செங்கண் சிவப்ப வழுதாடன் || கேள்வனை
யெங்கணை வென்ற வினைந்தெங்கி மாழ்குவாள்

கடு. எதிலார்சொன்னது யாதென்று ஐயுற்றுரை ; எதிலாரென்றது மறையச்சொன்னவர்களை; எதிலார்-நகரிலுள்ளாருமாம்; தோழியென்றது, ஐயையை.

உ0. (பா) தஞ்சமோகாணேன் — வேறுதுணைகாண்கின்றிலேன்.

உக. வஞ்சமோவுண்டு - கிருத்திரிமமான தொன்றுண்டு. நெஞ்சுமயங்கும், முற்று.

உஉ. ஆயின் - ஆதலால்.

உங. எஞ்சலார் - அயலார். எதனென்றுரை, வருபாட்டைப்பற்றி.

உச. சொன்னது - அவர்கள் சொன்னபடி.

உடு. ஞெகிழம் - சிலம்பு. உசு. கரையாமல் - ஓசைப்படாமல்.

உஅ. கொலைகுறித்தனரென்றுரை, ஐயை.

கூக. திங்கள் முகிலோடு நிலங்கொண்டாற்போல

கூஙு. (பா) எங்கணை - எங்குற்றாய். மாழ்குதல் - மயங்குதல்.

---

[1] உச - கூக : இவை தனிச்சொற்பெற்றுத் தனியேவந்த கொச்சகவொருபோகிற்கு மேற்கோள் ; தொல். செய். சூ. கசசு - நச்.

(பி - ம்.) * 'வாழிதோழி' † 'நடுங்குநோய் கைமிகவன்பிலே' ‡ 'எஞ்சலார் சொன்னதெவன்வாழி தோழி' § 'எனப் பொங்கி' || 'கோவலனே'

இன்புறு தங்கணவ ரிடரெரி யகமூழ்கத்
சுரு. துன்புறு வனநோற்றுத் துயருறு மகளிரைப்போன்
மன்பதை யலர்தூற்ற மன்னவன் றவறிழைப்ப
வன்பணை யிழந்தேன்யா னவலங்கொண் டழிவலோ
நறைமலி வியன்மார்பி னண்பணை யிழந்தேங்கித்
துறை * பல திறமூழ்கித் துயருறு மகளிரைப்போன்
சஎ. மறனெடு திரியுங்கோன் மன்னவன் றவறிழைப்ப
வறனெனு மடவோயா னவலங்கொண் டழிவலோ
தம்முறு பெருங்கணவன் † றழலெரி யகமூழ்கக்
கைம்மைகூர் துறைமூழ்குங் கவலைய மகளிரைப்போற்
செம்மையி னிகந்தகோற் றென்னவன் றவறிழைப்ப
சரு. விம்மையு மிசையொரீஇ யினைந்தேங்கி யழிவலோ

காணிகா,

[1] வாய்வதின் வந்த சுரவையின் வந்தீண்டு
‡ மாய மடமகளி ரெல்லீருங் கேட்டுமி
னைய மடமகளி ரெல்லீருங் கேட்டைக்க
ரூ. பாய்திரை வேலிப் படுபொரு ணீயறிதி
காய்கதிர்ச் செல்வனே கள்வனே வென்கணவன்
கள்வனே வல்லன் கருங்கயற்கண் மாதரா
யொள்ளெரி யுண்ணுமிவ் வூரென்ற தொருசொல்.

சுச. இடரெரி - இடர்செய்யெரி.

சக. அறனென்றது, தருமதேவதையை.

சங. கைம்மையொழுக்கத்தினையுடைய நோன்பு.

சரு. இம்மையுமென்றது, பரலோகத்தையுங்கருதி.

சசு. (பா) காணிகா காணிகா: இகவென்பது ஈறுதிரிந்தது; இரண்டும் விரைவின்கண்வந்தன.

சள. வாய்வதின்வந்தசுரவை - புத்திபூருவமாக எடுத்தசுரவை.

சகு. (பா) கேட்டைக்க கேட்டைக்க - கேட்க கேட்க; இரட்டித்தார், எல்லாரும் கேட்டற்கு

ரூங. ஊருண்ணுமென்றது, மூற்று ஒருசொல் - அசரீரி.

---

[1] சள - இங. ஐந்தடியின்மேல் ஈரடிமிக்கு வந்த ஒருபோகிற்கு இதனைமேற் கோள் காட்டினர்; தொல். செய். சூ. கசகூ. நச்.

(பி-ம்.) * 'பலதொறு ' † 'றழலெரியிடை' ‡ 'ஆயர்மட'

ஆங்கு—(இ - ள்.) அவ்விடத்து,

ஆயர் மூதுமகள்.....வந்தாளுளள்

(இ - ள்.) மாதரி, இங்ஙனம் அவராடிய குரவைமுடிந்தவளவிலே [1] ஒழுக்க முத நீரையுடைய வையையாற்றின்கரையிடத்து நெடுமாலடியைப் பூமுதலிய வற்றைத்தூவி ஏத்துதற்கு நீராடப்போயினளாக; சாயலாள் வேறொருத்தி உண்ணகரத்துப் பிறந்ததொரு வார்த்தைகேட்டுச் சென்றிருந்து கூறுதற்கு விரைவோடுவந்தாளுளளென்க.

ஆடிய சாயலாளெனச் சேர்த்து அசைந்த சாயலாளென்பாருமுளர். புனை சாந்து - மெய்ச்சாந்து. நெடுமால் - அந்தவானத்தெம்பெருமான். துறை படிதல் - நீராடுதல்; அக்காலவழக்கு. மூதுமகள் போயினளுடைய சாயலாள் அரவங்கேட்டு வந்து அவ்விடத்து நின்றுளளென ஐயைமேலேற்றுவாரு முளர். போயினள்கேட்டு வந்தாளுளளெனப் பொருண்மைசுட்டலாகி மாதரி மேலேற்றலுமொன்று. இது புறஞ்சேரியாதலின், ஊரரவ மென்றார்.

அவடான்—(இ - ள்.) அங்ஙனம் விரைவொடுவந்துநின்றவடான்,

சொல்லாடாள்.....சொல்லாடுந்தான்

(இ - ள்.) அங்ஙனங்கேட்டுவந்து கண்ணகிக்குத் தன்வாக்காற்சொல்லா ளாய்க் குரவைமுடித்து நீராடிவந்து நின்ற ஆயர்மகளிர்க்கு மறையிற்கூறி அவரோடுதானும் விம்மூற்றுநின்றவள் அவளழகும் இளமையும் தனிமையுங் கண்டு ஆற்றுளாய் நெஞ்சழிந்து சொல்ல நாவெழாதுதான் நிற்குமென்க.

இனி வாக்காற்சொல்லாதவள் தன்மெய்ப்பாட்டாற் சொல்லுமென்று மாம். இனி அங்ஙனநின்றுளாகிய அந்தங்கைக்குக் கண்ணகி தான்சொல்லாடு மெனினுமமையும். அது மேற்கூறுகின்றார்:—

எல்லாவோ—(இ - ள்.) ஏடீ; ஓ, இரக்கக்குறிப்பு.

காதலற் காண்கிலேன்.....வாழியோதோழீ

(இ - ள்.) தோழீ, என்காதலனை வரக்காண்கின்றிலேன்; அங்ஙனங்காணு மையின் நெஞ்சுகலங்கி நோய் கைம்மிகாநின்றது; அதுவேயுமன்றி உலையி லூதுந்துருத்திமூக்கும் தோற்கும்படி மூச்சும் அழலெழுவுயிராநின்றன; இவை இங்ஙனமாகாநிற்குமாயின் என்னைநோக்கி இவ்வாய்ச்சியர் குறிப்பாற்கூறுகின் றது யாதோவென்றறிகின்றிலேனென இரங்கிக்கூறினளென்க.

அன்றேயென்பது, அசை. எதிலாரென்றுள்; சொன்னவளையும் கேட் கின்றுரையும். வாழி, இடைச்சொல். ஓவென்பது, இரக்கக்குறிப்பு. இவை மேலுங்கொள்க. நெஞ்சு கலங்கிக் கைமிகும் உயிர்க்குமென்க. சொன்ன தெவனென்று அறிதியோவென்னும் வினாப்பொருண்மைதோன்ற உரைப்பினு மமையும்.

---

[1] "வையை யென்னுற பொய்யாக் குலக்கொடி" (சிலப். கங்: கஎ0); "வையை யன்ன வழக்குடை வாயில்" மதுரை. நஞசு.

நன்பகற்போதே.....தோழீ

(இ - ள்.) தோழீ நன்பகற்பொழுதின்கண்ணே நடுக்கமுறுவிக்குநோய் ஒருகாற்கொருகாற் கைம்மிகாநின்றது; அதுவேயுமன்றி என்னுள் அன்புசெய்யப்பட்டானையும் வரக்காண்கின்றிலேனுதலால் என்னெஞ்சு வருந்தாநின்றது; இவை யிங்ஙனமாகாநிற்குமாயின் குறிப்பால் இம்மகளிர்பலரும் கூறுகின்றது யாதோவென்றறிகின்றிலேனென்றுளென்க.

கோவலன் போனபோதே தன்னெஞ்சு கலங்குதலால் நன்பகற்போதே யென்றுள்.

தஞ்சமோதோழீ.....வாழியோதோழீ

(இ - ள்.) தோழீ, இவ்வயலார்சொல்லுகின்றமறை எளிதன்று; அதற்கேற்ப என்றலேவலையும் வரக்காண்கின்றிலேனுகலின், என்னை வஞ்சித்ததொன்றுண்டு; அதுவேயுமன்றி என்னெஞ்சுமயங்காநின்றது; இவை இங்ஙனமாகாநிற்குமாயின், குறிப்பால் இவர்சொல்லுகின்றது யாதோவென்றறிகின்றிலேனென்றுளென்க.

இனி, தோழீ, எனக்கு இனி என்ன தஞ்சமுண்டென அழுகையிற்றேன்றிய மருட்கையென்னும் மெய்ப்பாட்டுக்கினமையும்; தஞ்சமாயல்லவென்பதுபோல நின்றது. தோழியென்றது - ஐயையை.

சொன்னது—(இ - ள்.) அவள்சொன்னபடி;

அரசுறைகோயில்.....கொலைகுறித்தனரே

(இ - ள்.) இங்ஙனம் இவளிரங்காநிற்க ஊரரவங்கேட்டு விரைவொடுவந்து சொல்லாடாளாய்ச் சொல்லாடுகின்றவள் அரசன்விரும்பியுறையும் அந்தப்புரத்திலிருக்கும் அழகுநிறைந்தசிலம்பை வருந்தாமல் தன்கைத்தாக்கிக் கொண்ட கள்வனிவனேயாமென்று ஒலிக்கும் வீரக்கழலையுடைய வேற்காரர் இவளைக் கொலைசெய்தலைக்குறித்தனரென்றுளென்க.

கொன்றார்களெனின், இவளுயிர்க்கு இறுதிபயக்குமெனக்கருதிப் பரியாயத்தாற்கூறினளாம். என்றேயென்ற ஏகாரமிரண்டினும் பிறந்த தேற்றத்தைப் பிரிநிலையால எதிர்மறைத்துக்கூறினள். இதனை ஐயைகூற்றென்பாருமுளர். அரசன் கோயிலென்னுது 'உறைகோயில்' என்றமையான் அந்தப்புரமாயிற்று. கரைதல் - ஓசைப்படுதலுமாம்; அவகாசித்தலுமாம்.

எனக்கேட்டு—(இ - ள்.) என்று அவள்சொல்லக்கேட்டு,

பொங்கியெழுந்தாள்.....மாழ்குவாள்

(இ - ள்.) தனது ஆற்றுமையான் வசமழிந்து நிலத்தினின்றுமெழுந்து மறித்தும் விழுந்துகிடக்கின்றவள் எங்ஙனம்வீழ்ந்துகிடந்தாளெனின், கதிரையுடைய திங்கள், பொழியக் கால்கொண்டுவீழ்ந்த புயலோடு பெரியநிலத்தில் வீழ்தலைக்கொண்டு தெனவிழுந்தாள்; விழுந்தவள் தன்கணவன் முன்னர் வருகெனப்பொருந்துதலாற் செவ்வரிபாய்ந்தகண் கலங்கிச்சிவக்கும்படி கையால்

மோதிக்கொண்டழுதாள்; பின்பு தன்கொழுநனே நீ எவ்விடத்தாய்தானென்னை வருந்திப் பொருமி மயங்கி யாவுந்தோன்றுவென்று அழுதாளென்க.

முகத்திற்கும் குவளைக்குழலுக்கும் திங்களும் புயலுமுவமை. எழுந்தனளாய் விழுந்தவள் மாழ்குவாளாய் அழுதாளென்க. ஆண்டுக் [1] "கண்ணிகிருங் கண்" என்றவர் ஈண்டுச் "செங்கண்" என்றார், காலையில் தலையளியாற்பிறந்த செவ்விதோன்ற. ஆஅ, இரக்கக்குறிப்பு.

இனி மாழ்குவாள் எழுந்தாள் கொண்டென விழுந்தாள்; விழுந்தவள் செங்கண்சிவப்பத் தன்கேள்வனே எவ்விடத்தாயோவென அழுதாளெனவுமாம்.

இன்புறு தங்கணவர்.....கொண்டழிவலோ

(இ - ள்.) அங்ஙனம் மருண்டழுதவள், தம்மோடின்புற்ற தம்கணவர் இடரைச்செய்யும் எரியின்கண்மூழ்க அவரோடு அதனிடைமூழ்காது தன்ப முறுந்தன்மையவாகிய கைம்மைநோன்பைநோற்று இடர்ப்படும் [2] உயவற் பெண்டிரைப்போல மக்கட்பரப்பினுள்ளோரெல்லாம் தண்ணப்பழிதூற்றும்படி பாண்டியன் தவற்றைச்செய்ய அன்பினையிழந்தேனெனிய யான் இருந்தழுவாள் ஒருத்தியோவென்று தெளிந்திரங்கினளென்க.

தன்புறுவனவென்றார்; [3] "வெள்ளொட் சாந்தொடு புளிப்பெய் தட்ட, வேளை வெந்தை வல்சி யாகப், பாற்பெய் பள்ளிப் பாயின்று வதியும்" என்பதனை. இது புறம்.

நறைமழி.....கொண்டழிவலோ

(இ - ள்.) நறைமிக்க அகன்ற மார்பினையுடைய தம்நண்பன் நெருப்பின் மூழ்க அவனையிழந்து எங்கி நீர்த்துறைகள்பலவற்றுள்ளும் தாம்குளிரப்புக் காடித் துயரமுற்றிருந்தழும் உயவன்மகளிரைப்போல, மறத்தொடுபொருந்தி அறத்திற்றிரியுஞ் செங்கோலையுடைய பாண்டியன் தவற்றைச்செய்யப் பார்த்திருந்த அறக்கடவுளென்கின்ற அறிவற்றோய்! யான் அங்ஙனம் வருத்தமுற்றிருந்து இரங்குவாளொருத்தியோ; கூறென்றனளென்க.

மூழ்குதல் - அழுக்கறக் குளிரக் குளித்தல். அறனெனுமடவோயென்றாள்; உன்னீத்துப் பகையாகிய மறனெடுதிரியக்கண்டும் ஆண்டுநின்றுயெனப் புலந்து.

தம்முறு பெருங்கணவன்.....இனைந்தேங்கி யழிவலோ

(இ - ள்.) தம்மோடொத்த அன்பையுடைய தலைமைபொருந்தியகணவன் அழலும் எரியிடத்தேமூழ்கத் தாம் அவனோடு அவ்வெரியிடத்தே மூழ்காது கைம்மை நோன்புமிகும் நீர்த்துறைகளிலே குளிரமூழ்கும் உயவற்பெண்டிரைப்

---

[1] சிலப்பதிகாரம், நி : உசுஎ.

[2] உயவற்பெண்டிர் - வருந்துதலையுடைய் மகளிர்; "உயவர்பெண்டிரேமல்லேம்" புறநா. உசுசு.

[3] புறநானூறு, உசுசு.

போல,செமமையினின் றுகீங்கின கோலையுடைய தென்னவன் தவற்றைச்செய்ய இப்பிறப்பின்கண்ணும் இப்பெயர்படைத்து மிகவருந்தி இங்கிருந்து அழுவா ளொருத்தியோயானென்றுளென்க.

இம்மையுமென்றது, பரலோகத்தையுணர்ந்து. ஆவது இம்மையிற் புகழையும் மறுமையிற் புண்ணியத்தையும் விட்டென்றபடி.

காணிகா—(இ - ள்.) காண்பாயாக;

[1] இகவென்னுமுண்ணிலையசை இகாவென ஈறுதிரிந்து காண்பாயாக வென்பதாயிற்று.

வாய்வதின் வந்த.....இவ்வூரென்ற தொருகுரல்

(இ - ள்.) வாய்ப்புடைத்தாகிய உற்பாதசாந்திப்பொருட்டு ஆடிய இக்குரவையுள் வந்துதிரண்ட ஆயருடைய மகளிர் கீரெல்லீருங்கேண்மின்; அங்ஙனமாகிய மகளிரெல்லீரும் கேட்பீராக; பரந்த திரையையுடைய கடல்சூழ்ந்த இவ்வுலகிலுண்டானபொருளில் கியறியாதபொருளில்லை, ஆதலாற் கதிர்ச்செல்வனே, கியறிய என்கணவன் கள்வனேவென்றுளாக, அவன் அசரீரியாய்கின்று கூறுகின்றவன், கின்கணவனே கள்வனல்லன், அவனைக் கள்வனென்ற இவ்வூரை மாதராய், எரியுண்ணுங்காணென்றுளென்க.

கேட்டீமின் - கேண்மின்; ஒருசொல். கேட்டைக்க - கேட்டையென்னும் வினையசைச்சொல், உடனடுக்கிவரற்பாலது கேட்டீமினென்பதனோடு மொழியிடையடுக்காகி ஈற்றுவியங்கோட்பொருண்மையாற் கேட்கவென்னும்பொருட்டாயிற்று. பாய்திரை-பரந்தகிரை. படுதல் - உண்டாகுதல். ஓகாரம், பிரிநிலை. ஒள்ளெரி - கின்னெவல்கேட்குமெரி. இவ்வூர் - இதுசொன்ன இவ்வூர்.

இனி ஓகாரத்தை இரக்கக்குறிப்பெனினுமமையும். உண்ணுமிவ்வூர் - இவ்வூரையுண்ணும்; முற்றும்மை.

இது, மயங்கிசைக் கொச்சகக்கலிப்பா.

கஅ.—துன்பமாலை முற்றிற்று.

---

[1] பரிமேலழகர், நச்சினார்க்கினியர் கொள்கையும் இதுவே; பரி. கக; கலி. கஅஇ.

பத்தொன்பதாவது

ஊர் சூழ் வரி.

என்றனன் வெய்யோ னிலங்கிர் வளைத்தோளி
நின்றில ணின்ற சிலம்பொன்று கையேந்தி
மூறையி லரசன்ற னூரிருந்து வாழு
*நிறையுடைப் பத்தினிப் பெண்டிர்கா ளீதொன்று

நி. பட்டேன் படாத துயரம் படுகாலை
யுற்றே னுறுத துறுவனே யீதொன்று
[1] கள்வனை வல்லன் கணவனென் காற்சிலம்பு
கொள்ளும் † விலைப்பொருட்டாற் கொன்றாரோ யீதொன்று
மாதர்த் தகைய மடவார்கண் முன்னரே

கo. காதற் கணவனைக் காண்பனே யீதொன்று
காதற் கணவனைக் கண்டா லவன்வாயிற்
றீதறு நல்லுரை ‡ கேட்பனே யீதொன்று
தீதறு நல்லுரை கேளா § தொழிவேனே
னேதக்க செய்தானென் றெள்ள ‖ லிதுவொன்றென்

உ. நின்றசிலம்பு - மற்றைச்சிலம்பு; மற்றைச்சிலம்பைக் கையிலேந்தி நின்றிலனென்க.

நி. ஒருவர்படாத துயரம் யான்பட்டேன். படுகாலை - அந்திப்பொழுது.

சு. ஒருவருறுதலுற்றேன்; நானுறக்கடவேனை. ஈதொன்று - இஃது ஓரநியாயம்.

[ஆதித்தனையுஞ்சான்றுகாட்டி இவன் தீதிலனென்னும் நல்வார்த்தை கேட்பேனென்றமையால், அநியாயஞ்செய்தார்களென்று எல்லோர்க்கும் தோற்றிற்று;]

அ. விலைப்பொருட்டால் - விலைகொடாமைக்காக.

கஉ - ச. தீதிலனென்னும் நல்வார்த்தை கேட்பேன்; கேட்டிலனெனில், பின்பு நோதக்கசெய்தானென்று இகழ்க. எள்ளல், [2] "பயனில்சொற் பூரா ட்டு வானை மகனெனல், மக்கட் பதடி யெனல்" என்பதுபோலக்கொள்க.

---

[1] "கள்வனை...ஈதொன்று: என்றதும் இதுவென்னும் சுட்டுமுதல் உகரவீறுதலின், அது செய்யுளகத்துப் புறனடையான்முடியும்" என்றார்; தொல். உயிர்மயங்கு. சூ. கசு - நா; இ - வி. சூ. அo. [2] திருக்குறள், கக்சு.

(பீ - மீ.) * 'நிறையுடை' † 'விளைப்பொருட்டாற் கொன்றனை யீதொன்று, காதற்கணவனைக் கண்டாலவன்' ‡ 'கேட்பெனே' § 'ஒழிவனேனைதக்க' ‖ 'இது மொவ்வொன்றென்று'

கூ. [1] றல்லலுற் றுற்று தழுவாளைக் கண்டேங்கி
மல்லன் மதுரையா ரெல்லாருந் தாமயங்கிக்
கலையாத துன்பமிக் காரிகைக்குக் காட்டி
வலையாத செங்கோல் வளைந்த திதுவென்கொன்
* மன்னவர் மன்னன் மதிக்குடை வாள்வேந்தன்

உ0. றென்னவன் கொற்றஞ் சிதைந்த திதுவென்கொன்
[2] மண் †குளிரச் செய்யு மறவே னெடுந்தகை
தண்குடை வெம்மை ‡ வினைத்த திதுவென்கொல்
செம்பொற் சிலம்பொன்று கையேந்தி நம்பொருட்டால்
வம்பப் பெருந்தெய்வம் வந்த திதுவென்கொ

உரு. லையரி §யுண்கணழு தேங்கி யரற்றுவா
டெய்வமுற்றுள் போலுந் தகைய ரிதுவென்கொ
லென்பன சொல்லி யினைந்தேங்கி ¶யாற்றவும்
[3] வன்பழி தூற்றுங் குடியதே மாமதுரைக்

(கசு) மதுரையா ரெல்லாரும் (கஅ) வலையாத செங்கோல் வளைந்திது வென்கொலென்றூர்; ஆதித்தனையும் சான்று காட்டி (கச) நோதக்க செய்தா லென்றெள்ளலென்றமையால்.

உசு. நம்பொருட்டால் - நம்மைக்கெடுத்தற்பொருட்டால்; ஆவது, இனி இவளுடைய பிரகடத்தால் மதுரையிலுள்ளாரும் கெடப்புகுந்ததென்று தோன்றிற்றும்.

உசு. தெய்வமுற்றுள் - தெய்வத்தன்மையுற்றுள்; தெய்வமேறினாளென்றுமாம்.

உஎ. என்பனசொல்லி - இன்னசொல்லி.

என்றதனால், (கசு) மதுரையாரெல்லாரும் மயங்கிச் (உஎ) சொல்லி இனைந்து ஏங்கி மிகவும்.

உஎ - அ. (பா) மிகவும் மன்னவனைப் பழிதூற்றுங்குடியது மதுரையென முற்றுவிக்க.

---

[1] கஞ் - சு: திருக்குறளின் உசஎ, ஙகடு, ஙடுஞ் - ஆம்பாடல்களால் இவ்வடிகளின் பொருளை ஆராய்க.

[2] உக - உ: இவ்வடிகளின்பொருளை "மண்குளிர் கொள்ளக் காக்கு மரபொழித் தரசர் தங்கள், விண்குளிர் கொள்ள வோங்கும் வெண்குடை வெதும்பு மாயிற், கண்குளிர் கொள்ளப் பூக்குங் கடிகயத் திடமுங் காவுந், தண்குளிர் கொள்ளு மேனுந் தான் மிக வெதும்பு மன்றே" (சூளா. மந்திரசாலை. உசு.) என்னுஞ்செய்யுள் நன்கு விளக்குதல் காண்க.

[3] "குடிபழி தூற்றுங் கோலனுமல்லன்" சிலப். உங: ஙசு; "குடிபழி தூற்றுங் கோலே னுகுக" புறநா. எஉ.

(பி - ம்.) * 'மன்னவரின் மன்னன் மதிக்குடைவாழ்' † 'குளிர்செய்யு' ‡ 'வினைத்தது' § 'உண்கண்ணழுதேங்கி' ¶ 'அரற்றவுமன்பழி'

[1]'கம்பலை மாக்கள் கணவனைத் தாங்காட்டச்'

உ0. செம்பொற் கொடி *யனையாள் கண்டாளைத் தான்காணன்
மல்லன்மா ஞால மிருளெட்டி மாமலைமேற்
†செவ்வென் கதிர்சுருங்கிச் செங்கதிரோன் சென்றொளிப்பப்
புல்லென் மருண்மாலைப் பூங்கொடியாள் பூசலிட
வொல்லென் ஞெலி‡ படைத்த தூர்

உஉ. வண்டார் பிருங்குஞ்சி மாலைதன் வார்குழன்மேற்
கொண்டா டழீஇக் கொழுநன்பாற் காலைவாய்ப்
புண்டாழ் குருதி புறஞ்சோர மாலைவாய்க்
கண்டா ளவன்றன்னைக் காணுக் §கடுந்துயரம்
என்னுறு துயர்கண்டு மிடருறு மிவளென்னீர்

உ0. பொன்னுறு நறுமேனி §பொடியாடிக் கிடப்பதோ
மன்னுறு துயர்செய்த மறவினை யறியாதேற்
கென்னுறு ||வினைகாணு விதுவென வுரையாரோ

உக. கம்பலைமாக்கள் - வேறுசிலர்.

உஎ. (பா) தான்காணமாட்டாது செங்கதிரோனும் சென்றொளித்தான்.

உஉ - ங. ஒளித்தான் ; ஒளிக்கப் புல்லென்ற மாலைக்கண்ணே.

உசு. தழீஇக்கொழுநன் - ஆயர்பாடியினின்றும் போதுகிறபோது கொழுணைத்தழீஇ.

உள. புறஞ்சோர - அவ்விரத்தம் புறம்பெல்லாம் விழுந்து நனைப்ப.

உஅ. அவன்முன்பு அறியாத துயரத்தை.

உசு - அ. காலைவாய்த் தழீஇக்கொண்டாள் ; கொழுநன்குருதி புறஞ்சோரத் தன்னை அவன் காணுதுகிடக்கின்ற கடுந்துயரத்தினை மாலைவாய்க்கண்டாள்.

உக. என்னுடைய உறுதுயர் கண்டும். என்னீரென்றது, கோவலனை நோக்கி.

'என்னுறுதுயர்' முதலானமூன்றும் ழுதுபாலை.

சo. பொன்னுறுமேனி - பொன்போலுமேனி.

சஉ. என்வினைகாணி தெவென்று ஒருவார்த்தை சொல்லார்களோ சான்றோர்.....வினைகாணுவிது, ஆ, அசை. உரையாரோ - இவ்வழக்கை இந்நாட்டிற் சொல்லார்களோ ; என்றது ஆருமில்லையெனக்கு இந்நாட்டிற் சொல்லார்களோவென்றதாம்.

---

1 "காணியசூழ்ந்தி கம்பலை மாக்களின்" மணி. ங : கசள.

* "காதலனுற்றகடுந்துயர்" "கணவற்குற்ற கடுந்துயர்" மணி. உ: கஅ, இo, கூங. (பி - மி.) * 'அன்னள்' † 'செல்வென்கதிர்', 'செல்லுங்கதிர்' ‡ 'அடைத்தார்' § 'புகையாடிக்கிடப்பவோ' || 'தியர்காணு'

யாருமின் மருண்மாலை யிடருறு தமியேன்முன்
ஞாயிலி * மணிமார்பந் தரைமுழ்கிக் கிடப்பதோ
கரு. பார்மிகு பழிதூற்றப் பாண்டியன் றவறிழைப்ப
வீர்வதோர் வினைகாணு விதுவென வுரையாரோ
கண்பொழி புனல்சோருங் கடுவினை யுடையேன்முன்
புண்பொழி குருதியிராய்ப் பொடியாடிக் † கிடப்பதோ
மன்பதை ‡ பழிதூற்ற மன்னவன் றவறிழைப்ப
ரு. வுண்பதோர் வினைகாணு விதுவென வுரையாரோ
[1] பெண்டிரு முண்டுகொல் பெண்டிரு முண்டுகொல்
கொண்ட § கொழுநருறுகுறை தாங்குறூஉம்
பெண்டிரு முண்டுகொல் பெண்டிரு முண்டுகொல்
சான்றோரு முண்டுகொல் சான்றோரு முண்டுகொ
ரூ. லின்ற குழவி யெடுத்து வளர்க்குறூஉஞ்
சான்றோரு முண்டுகொல் சான்றோரு முண்டுகொல்
தெய்வமு முண்டுகொ றெய்வமு முண்டுகொல்
வைவாளிற் றப்பிய மன்னவன் கூடலிற்
றெய்வமு முண்டுகொ றெய்வமு முண்டுகொல்
கூ. [2] என்றிவை சொல்லி யழுவாள் கணவன்றன்
[3] பொன்றுஞ்சு மார்பம் பொருந்தத் தழீஇக்கொள்ள
நின்ரு னெழுந்து நிறைமதி வாண்முகங்
கன்றிய ¶ தென்றவள் கண்ணீர்கை யான்மாற்ற

சசு. ஈர்வதோர்வினை - வெட்டுவதோர்வினை.

ரூ. வாளிற்றப்பிய - வாளாற்கொன்ற.

ரூக - கூ. "பெண்டிர்", "சான்றோர்", "தெய்வம்"—'உண்டோ' என்றது-உண்டாயின், இப்படிப் பிறவாது ஆதலால் இல்லை என்றவாறு.

கூக. பொன் - சீதேவி. கூக - உ கொண்டவளவிலே எழுந்திருந்து, நின்ரூன் ; நின்ரூன் பெயர்.

---

[1] ரூக - கூ : 'உண்டு' என்னும் வினைக்குறிப்புப் பலர்பாலுக்கும் வருமென்பதற்கு இலை மேற்கோள் ; நன். மயிலை. சூ. ஙஙஅ ; நன் - வி. சூ. ஙஙகூ ; இ - வி. சூ. உசo.

[2] கூo - எடு. "என்றிவை.....வாயின்முன் ; இவை தொடர்ந்த பொருளாய் நான் கிக்கின்" என்பர் ; தொல். செய். சூ. கசசு - நி.

[3] சீவகசிந்தாமணி, கச, கூoஅ, கங்ங்உ, கஙிoச.

(பி - ம்.) * 'நறுமார்பன்றரைமுழ்கிக்கிடப்பதோ' † 'கிடப்பவோ' ‡ 'அலர் தூற்ற' § 'கொழுநருக் குறுதியர்தான்கூறும்' ¶ 'என்று கண்ணீர்கையான் மாற்றியபி, னழுதேங்கிநிலத்துவீழ்ந்தாய்மழையாள் கணவன்றன்'

அழுதேங்கி நிலத்தின்வீழ்ந் தாயிழையா டன்கணவன்
சுடு. றெழுதகைய திருந்தடியைத் துணைவலைக்கை யாற்*பற்றப்
[1] பழுதொழிந் தெழுந்திருந்தான் பல்லமரர் சூழாத்துளா
† னெழுதெழின் மலருண்க ணிருந்தைக்க வெனப்போனன்

மாயங்கொன் மற்றென்கொன்‡மருட்டியதோர் தெய்வங்கொல்
போயெங்கு § நாடுகேன் பொருளுரையோ விதுவன்று
எ0. காய்சினந் தணிந்தன்றிக் கணவனைக் கைகூடேன்
றீவேந்தன் றனைக்கண்டித் திறங்கேட்பல் யானென்றாள்

என்று ளெழுந்தா ளிடருற்ற தீக்கனவு
நின்று ணினைந்தா ணெடுங்கயற்க ணீர் || சோர
நின்று ணினைந்தா ணெடுங்கயற்க ணீர்துடையாச்
எடு. சென்று ளரசன் செழுங்கோயில் வாயின்முன்.

சுசு. பழுதொழிந் தெழுந்திருத்தலாவது - பிணமான தன்மையொழிந்து நிற்றல். பட்டபொழுதே தெய்வலோகம் புகுகையால், அமரர்சூழாத்துள்ளானனென்றார். அப்பழுதும் ஒழிந்து எழுந்தானென்று பொருளாக்குக.

சுஎ. மலருண்கண், அண்மைவிளி. இருந்தைக்க -‡இருக்க.

(சுo) அழுவாள் (சுக) கொண்டவளவிலே (சுசு) எழுந்திருந்தான்; அமரர் சூழாத்துள்ளானுங்கப் (சுஎ) போனன்.

சுஏ. கணவன் உண்டாயிருக்க, எங்குப்போய் ஆராய்வேன்? இது மெய்யுரையன்றென்றது, தன்பின்பு போதாமைபற்றி; போயெங்கும் - எங்கும் போய். 'இது' என்றது, புகார்க்காண்டத்துத் [2] தேவந்திக்குக் கூறினகனவை யென்றுமாம்.

எஉ. என்றெழுந்தாள். இடருற்ற தீக்கனவென்றது, முன்புதான்கண்டு [2] தேவந்திக்குச்சொன்ன கனவினை.

எசு - டு. நின்றுநினைந்தாள், கனவைநினைந்து. இனி அவ்வாறே செய்வ லென்று சென்றாள்—வழிகாண நீர்துடைத்துச் சென்றாள்.

---

[1] "பழுதறுமாதவன்" மணி. கக: கசடு. [2] சிலப். சுo: சடு - டுச.

(பி - ம்.) * 'பற்றி' † 'எழுதுதொழின்மலர்' ‡ 'மருட்டியதோ தெய்வம்' § 'நாடுவேன் பொருளுரையோவிதுவென்று' || 'சோரச் சென்று ளரசன் செழுங் கோயில் வாயில்வாய்'

சுo

க - ச. என்றனன்வெய்யோன்.....பெண்டிர்காளீதொன்று

(இ - ள்.) வெய்யோன் கள்வனல்லனென்றுணக, அவ்வீதித்தோளி, மற்றைச்சிலம்பொன்றைத் தன்கையிலேந்திக்கொண்டு அவ்வாயர்பாடியினின்றும் ஊர்க்குள்ளேபோனவள் ஆண்டுள்ள கற்புடைமகளிரைநோக்கி முறைசெய்தலில்லாத அரசனிருக்கின்ற ஊரின்கணிருந்துவாழும் கற்பையுடையபெண்டிர்காள்! இஃது அதன் மற்றைச்சிலம்பு காணுங்கோளென்றுளென்க.

நின்றிலள் - போனள். நின்றசிலம்பு - மற்றைச்சிலம்பு. முறையில்..... பெண்டிர்காள், இகழ்ச்சி; என்னே? [1] "அருந்திற லரசர் முறைசெயினல்லது, பெரும்பெயர்ப் பெண்டிர்க்குக் கற்புச் சிறவாது" என்பதனானும், [2] "வானம் பொய்யாது வளம்பிழைப் பறியாது, ஈணிலை வேந்தர் கொற்றஞ் சிதையாது, பத்தினிப் பெண்டிரிருந்த நாடு" என்பதனானும் இகழ்ந்தாள். அவனுட்டிலிருந்த மகளிர்க்கும் கற்பின்முமாகலின், அவனிருக்கின்ற ஊரின்கணிருந்துவாழ்கின்ற நுமக்கும் கற்புநிறையுண்டாமோவென்றது இகழ்ச்சி. இலங்கீர்வீ - ஈர்ந்திலங்குவீ. நின்றிலனென்றது ஆதித்தனீச்சான்றுகாட்டினபின் ஆயர்பாடியினின்றிலனென்றவாறு. ஈதொன்று - இஃது அதனிணைச்சிலம்பு; அன்றி இஃதோரதியாயமென்றுமாம்.

கு - சு. பட்டேன் படாத.....ஈதொன்று

(இ - ள்.) உலகிற்பிறந்தாரொருவர் படாத துயரம்பட்டேன்; ஒருவருறுத துயரமுற்றேன்; உறுகின்றயான் மரணவேதனைபோலவுற்றேன்; இங்ஙனமுறக் கடவேன் இனியுறுவதுஒன்றன்றுவென்றுளென்க.

ஏகாரம், ஈற்றசை.

இனி, பகிகாலி - அந்திக்காலத்தெனினுமமையும். உறுவன்: அல்லீறு அன்னீறுயிற்று.

எ - அ. கள்வனே வல்லன்.....கொன்றுரே யீதொன்று

(இ - ள்.) என்கணவன் கள்வனல்லன்; என்காற்சிலம்புபெறும் விலையைக் கைக்கொண்டுவிடுதல்காரணத்தாற் கள்வனென்று, ஒருபெயரையிட்டுக் கொன்றார்களே; இஃதோராச்சரியமிருந்தபடி என்னென்றுளென்க.

என்காற்சிலம்பென்றுள்; தான் அரசன்; யான் ஒருவணிகன்மனைவி; என்காலணியினென்றுபெற்றவிலை தாராமைக் கள்வனென்று ஒருபெயரிட்டுக் கொன்றார்களேயென்று. இஃதோரதியாயமிருந்தபடி என்னென்று தெளிந்து கூறினள். கொன்றுரேயெனப் பன்மைகூறினள்; அரசனேடு அமைச்சரையுங்கருதி. ஓகாரம் பிரிநிலை.

க - கச. மாதர்த் தகைய.....எள்ளலிதுவொன்று

(இ - ள்.) தங்காதலர்காதலிக்கும் கற்பையுடைய மனைவியர்மூன்னே என்னுடையகணவனைப் பண்டுபோலக் காண்பேனே, அங்ஙனங்காண்பேனையின் இஃதொருபுதுமையுன்றே! அங்ஙனம் அவனைக்கண்டால் அவன்வாக்காற்சொல்

---

[1] சிலப்பதிகாரம், உசு: உ0எ - அ. [2] சிலப்பதிகாரம், கடு: கசடு - எ.

லும் குற்றமற்ற நல்லுரையைக்கேட்பேனே? அங்ஙனம் கேட்பேனையின் எனக்கு இஃது ஒருறுதி; அங்ஙனம் தீதற்றவுரையை அவன்வாக்காற்கேளேனையின், நோதக்கசெய்தாளென்று என்னை இகழுமின்கள்; இது நுங்கட்கு ஒருவாய்ப்பு;

கேளாதொழிவேனேலென்றது சவம் எழுந்திருந்து எனக்கு ஒருவார்த்தை சொல்லக்கேளாதொழிவேனேல் எ-று. எள்ளலென்றது ஆதித்தனைச் சான்று காட்டினவதுவுமன்றிப் பட்ட என்கணவன் எழுந்திருந்து எனக்கு வார்த்தை சொல்லக்கேளேனுகில், "நிறையுடைப்பத்தினிப்பெண்டிர்காள்" என்று நும்மை யிகழ்ந்தவென்னைக் கள்வன்மனைவியென்று எள்ளுமின்; எள்ளுதற்கு இது நல்லவிடமென்றுளென்க. எள்ளல், அல்லீற்றுவியங்கோள்; [1] "இற்றெனைக் கிளத்தல்" போல.

கச - அ. என்று, அல்லலுற்று.....வளைந்ததிதுவென்கொல்

(இ - ள்.) என்று வருத்தமுற்று ஆற்றுதழுகின்றவளை மதுரையாரெல்லாருங்கண்டு ஆற்றும்வழிகாணுராய்த் தாமிரங்கி அழுது மயங்கிக் கூறுகின்றவர் இறக்குமளவும் நீங்காததன்பத்தை இக்காரிகைக்குண்டாக்கி அதனுனே ஒரு காலுங் கோடாத செங்கோல் கோடிற்று; இதனுனே மேல் யாதுவினையுங் கொல்லோவென்றுரென்க.

அல்லல் - வருத்தம். மல்லல் - வளன். கிளையாததன்பம் - கணவனை யிழத்தல். இதுவென்றூர், கோடாதசெங்கோல் கோடியவதனை.

கக - உ. மன்னவர் மன்னன்.....இதுவென்கொல்

(இ - ள்.) மன்னர்க்குமன்னன் மதிபோலுங் குளிர்ந்த குடையையும் வெய்யவாளையுமுடைய வேந்தனுகிய தென்னவனுடைய அரசியல் அழிந்தது; இதனுன் மேல் யாதுவினையுங்கொல்லோவென்றுரென்க.

குடையையும் வாளையுமுடையோனென்னவே [2]அளியுந்தெறலுமுடைமை கூறினர். மதிக்குடை, உவமத்தொகை. வாள்வேந்தன், வேற்றுமைத்தொகை.

உக - உ. மண்குளிரச்செய்யும்.....இதுவென்கொல்

(இ - ள்.) உலகிற்கு அறத்தையும் பகைவர்க்கு மறத்தையுஞ்செய்யும் வேலையுடைய நெடுந்தகையுடைய தண்ணளியைச் செய்யுங்குடை வெம்மை யையினைத்தது; இதனுன் மேல் யாதுவினையுங்கொல்லோவென்றுரென்க.

உங - ச. செம்பொற் சிலம்பொன்று.....இதுவென்கொல்

(இ - ள்.) செம்பொன்னுலாகிய சிலம்பொன்றைக் கையிலேந்தி நம்மைக் கெடுத்தற்பொருட்டுப் புதுமையையுடைய பெரியதெய்வம் ஈண்டுவந்தது; இதனுல் இனி யாதுவினையுங்கொல்லோவென்றுரென்க.

ஒன்று கையேந்தியெனவே இஃது அதன் இணைபோலுமென்பது கருத்து. பெருந்தெய்வம் - தெய்வத்திலும் பெரியது; கற்புடைத்தெய்வம்; என்னை? [3] "கற்புக் கடம்பூண்ட வித்தெய்வ மல்லது, பொற்புடைத் தெய்வம் யாங்கண்

---

[1] தொல். இளவி. சூ, கக. [2] பெரும்பாண். ஈஉஉ. [3] சிலப். கடுகு: கசஎ - ச.

டிலமால்" எனவும், [1] "தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுவாளைத், தெய்வந் தொழுதகைமை திண்ணமால்" எனவுங்கூறினமையின். இனி, வம்பு - நிலையின்மையாக்கி, உலாவுந்தெய்வமென்றலுமொன்று. இனி நம்பொருட்டாலென்பதற்கு இவள்கற்பு நாங்கண்டு பாவித்தற்பொருட்டாலென்பதுமொன்று.

உரி - சூ. ஐயரி யுண்கண்.....இதுவென்கொல்

(இ - ள்.) வியப்பையுடைய அரிபரந்த மையுண்ட கண்ணையுடையவள் விம்மிவிம்மி வாய்விட்டரற்றுகின்றவள் தெய்வமேறினாள்போலும் தகைமையுடையவளாயிராநின்றாள்; இதனன் மேல் யாதுவினையுங்கொல்லோவென்றாரென்க.

இவண்மாட்டு மருளுந்தெருளுங்கண்டு தெய்வமூற்றுள்போலுமென்றார். இவ்வையங்களால் அரசனோக்கி இரங்கினார்.

உஎ - ஈ. என்பன சொல்லி.....தான்காணுன்

(இ - ள்.) வினையாதசெங்கோல் வளைந்ததென்றன்முதலியனசொல்லி இவணிலைமைக்கு வருந்தி மன்னன்நிலைமைக்கு ஏங்கி மிகவும் மன்னன் கோல்கோடினதன்மையால் அவனைப் பழிதூற்றுங்குடிமையதாகிய மதுரையிற் கம்பலைமாக்கள் தாம் அவள்கணவன் பட்டவனைக்காட்டச் சிவந்த பொற்கொடியையொத்தவள் தன்னைக்கண்டாளைத் தான்கண்டிலன்;

ஆற்றவும் - மிகவும். கம்பலைமாக்கள் - வேறுசில காட்சிகண்டு திரியுமவர். தான் காணுனென்றார், இறந்தமைதோன்ற. மதுரை கம்பலைமாக்களென்று பாடமோதிக் குடியது மதுரையென முற்றுவித்தலுமாம்.

ஊக - சு. மல்லன்மா ஞாலம்.....படைத்தனூர்

(இ - ள்.) வளப்பத்தையுடைய பெரியஞாலத்தை இருளுக்கூட்டி உயர்ந்த அத்தகிரியிடத்தே தனது சிவந்தகதிர்களைச்சுருக்கி அக்கதிரையுடையோன் சென்றுமறைய அங்ஙனம் அவன்மறைதலாற் புன்மையுண்டாகப்பட்ட [2] இரவுபக்லென்று வரையறுக்கப்படாத மருட்சியையுடைய மாலைக்காலத்தே பூத்து உதிர்ந்த கொடியையொத்த கண்ணகி அரசன்மேலே.....பூசலிலிலைக்க ஒல்லென்னுமோசையைப்படைத்தது அவ்வூரென்க.

ஊட்டி - தானுண்ட இருளை உலகை உண்ணப்பண்ணி. ஒல், அனுகரணம். சுருங்கி, விகாரம். ஊட்டிச் சுருக்கி ஒளிப்பப் புல்லென் மருண்மாலையென்க.

ஊஎ - அ. வண்டா ரிருங்குஞ்சி.....காணைக் கடுந்துயரம்

(இ - ள்.) காலைப்பொழுதின்கண் ஆயர்பாடியிடத்தே தன் கணவனைத் தழீஇ அதற்குக்கைம்மாறுக அவனுடைய வண்டொலிக்குங்குஞ்சியின்மாலையை வாங்கித் தன் வார்குழன்மேற்கொண்ட கண்ணகி மாலைப்பொழுதின்கண்ணே

---

[1] சிலப். உஅ: இறைவெண்பா; "தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள், பெய்யெனப் பெய்யு மழை" குறள், டுடு.

[2] 'மருண்மாலை' என்பதற்கு இவர்செய்திருக்கும் இப்பொருள் அறிந்து இன்புறற்பாலது.

அவன்மெய்யிற் புண்ணினின் றுங்குதிக்கின்ற குருதிப்புனல் இடமெல்லா நனைப்ப அவன் தன்னைக்காணுத துயரத்தைத் தான்கண்டாளென்க.

அவள், கணவன் தன்னைக்காணுததனைத் தான்கண்டாளென்றது மரணத்தை யென்றபடி. காலைவாய்த் தழீஇ மாலைகொண்டவள் மாலைவாய்ப் புறஞ்சோரத் தன்னைக்காணுததுயரத்தைத் தான்கண்டாளென்க.

ஙஉ - சூஉ. என்னுறு துயர்கண்டு.....இதுவென வுரையாரோ

(இ - ள்.) என்னுடைய தனிமைமிக்கதுயரைக்கண்டுவைத்தும் இதற்கு இவள் இடருறுமென நினைக்கின்றிலீர்; அதுநிற்க; நும்முடைய சந்தனஞ்சி களாலாடப்பட்ட பொன்போலுந்திருமேனி பொடியாடிக்கிடக்கத்தகுவதொன் றே; அஃதற்றாயின், மன்னனுற்செய்யப்பட்ட இக்கொலைத்தொழில் இப் பெற்றியான்முடிந்ததென்றறியாத எனக்கு முற்பவத்திற்செய்த என்தீவினைகா ணிதுவென்று இங்ஙட்டிற் சொல்லார்களோவென்க.

இஃது, அழுகையைச்சார்ந்தவெதுளி; மேல் வருவனவற்றிற்குங்கொள்க.

சஙஉ - சூ. யாருமின் மருண்மாலை... ..இதுவென வுரையாரோ

(இ - ள்.) தூணைப்பதிதற்கு ஒருவருமற்ற மருட்சியையுடைய இம்மாலைக் காலத்தே மிக்கதுன்பமுறுகின்ற தனித்தியேன் கண்முன்பே நும்முடைய மாலைத்திரளுக்குள்ளேமுழுகும் திருமார்பம் வெறுநிலத்தே முழுகிக்கிடக்கத் தகுவதொன்றே; அஃதற்றாயின், பாரிலுள்ளார் மிகவும் பழிதூற்றுதற்குக் காரணமாகப் பாண்டியன் தவற்றையெண்ண வெட்டுவிப்பதோர் தீவினைகா ணிதுவென்று இங்ஙாட்டிற் சொல்லார்களோவென்றுளென்க.

வெட்டிக் கவிழ்த்தமைதோன்ற மார்பம் தரைமூழ்கிக்கிடப்பதோவென் றுள்.

சஎஎ - நிஅ. கண்பொழி புனல்.....இதுவென வுரையாரோ

(இ - ள்.) கண்கள் பொழியும்புனலைச் சொரியாநிற்கின்ற தீவினைப்பயனை யுடைய [1] என்னுடையகண்முகப்பே வெட்டுவாயினின் றுங்குதித்துப் பெருகு கின்ற குருதியையுடையீராய்ப் பொடியாடிக்கிடக்கத்தகுவதொன்றே; அஃதற் றாயின், மண்ணிலுள்ளோர்பலரும் பழிதூற்றுதற்குக்காரணமாக மன்னவன் தவற்றையெண்ண நுகர்வதோர்வினைகாணிதுவென்று இங்ஙாட்டிற் சொல்லார் களோவென்றுளென்க.

இர், முன்னிலைப்பன்மைக்கண்வந்து ஈண்டு ஒருவரைக்கூறும் பன்மைக் கிளவியாயிற்று. இடப்பதோ : ஓ, பிரிநிலை. உண்பதோர்வினையென்பதற்கு,உயி ரையுண்பதோர்வினையென்பதும்பொருள்; [2] "ஊழ்வினை வந்திவ னுயிருண்டு கழிந்தது" என்றார்பிறரும்.

இவைழன்றுப் முதுபாலை; என்னை? [3] "நனிமிகு சுரத்திடைக் கணவனை யிழந்து, தனிமகள் புலம்பன் முதுபாலை யாகும்" என்பதனால்.

---

[1] என்னுடையகண்முகப்பே - என்னுடையகண்முன்னே; "எங்கள்கண்முகப்பே" திவ். பெரிய. கo. உ: சு. [2] மணி. சு: கடுஉ. [3] (பா) தொல். புறத்திணை. சூ. உசு.

நிக - ங. பெண்டிரு முண்டுகொல்.....பெண்டிருமுண்டுகொல்

பெண்டிர் - கற்புடைமகளிர். கொண்டகொழுநர் - தம்மை நெஞ்சினுட் கொண்டகொழுநர். அவருறுகுறையைத்தாங்கும் பெண்டிர் - அவருற்றபிணிக் கும் மனத்துயர்க்கும் மெய்யாகத் தாங்கும்பெண்டிர். அன்றி,உறுகுறைதாங்கு தல் - பொதுமகளிரிடைப்பிரிதலும் அவரோடுகலந்தசெவ்வியும் புணர்ச்சிக் குறிகளுங்கண்டுழியும் அவர் தெருட்டத்தெருண்டு குறையுறப்பொறுத்தலு மாம். தாங்குறூஉம், விணைத்திரிசொல்.

நிச - சு. சான்றோரு முண்டு.....சான்றோரு முண்டுகொல்

[ஈன்ற.....வளர்க்குறூஉம்- பிள்ளைப்பேறு...வளர்க்குமென்னும்வழக்கு.]

நிஎ - ஙு. தெய்வமு முண்டுகொல்.....தெய்வமுமுண்டுகொல்

கொல், ஐயம்.

(இ-ள்.) கூர்த்தவாளால் என்கொழுநனைத் தவறுசெய்தலாற்[1] கோல் கோடிய மன்னனுடைய இக்கூடலென்னுநகரிடத்துப் பெண்டிரும் சான்றோரும் தெய்வமுமுண்டோ! உண்டாயின், இவ்வநியாயம்பிறவாது; ஆதலால், இல்லை யென்றுளென்க.

சுஐ - சுஎ. என்றிவை சொல்லி.....எனப்போனான்

(இ-ள்.) என்று இன்னனசொல்லி அழுகின்றவள் தன்கணவனுடைய திருத்துஞ்சுமார்பம் தன்மார்போடுபொருந்தும்படி தழுவிக்கொண்டாளாக; எழுந்திருந்துநின்றவன், நிறைந்தமதியம்போலும் ஒளிபொருந்தியமுகம் கன்றியதே யென்று வாக்காற்சொல்லிக் கையாலே அவள் கண்ணீரை மாற்றினான்; மாற் றியபின்பு அவ்வாயிழையாள் ஏங்கியழுது நிலத்தின்கண்ணேவீழ்ந்து தன்கண வனுடைய தொழுந்தகையையுடைய திருந்திய அடியினை இரண்டுகையாலும் பூண்டுகொண்டாளாக; இப்பொல்லாதவுடம்பைக் கைவிட்டுச் சுவர்க்கம்புகு தற்கு எழுந்திருந்தவன் நீ இருக்கவென்றுசொல்லிப் பல அமரர்குழாத்துள் ளானெனென்க.

பழுது தீதென்ப உடம்புக்குப்பெயர்; [2] "திருந்திய நின்மகன் றீது நீங்கி னான்" என்றுரைப்பாரும். இனி முன்பே பழுதொழிந்தெழுந்திருந்தவன் அமரர் குழாத்துள்ளான் தழீஇக்கொள்ள எழுந்திருந்துநின்றவன் மாற்றப் பின் திருந் தடியைத் தணவலைக்கையாற்பற்ற, உண்கண், இருந்தைக்கவெனப்போனெனக் கூட்டலுமொன்று. எழுந்திருந்தான் குழாத்துள்ளான் நின்றனென்னும்பெயர்கள் அடுக்கிவந்து போனனென்னும் பயனிலைகொண்டுமுடிந்தன.

• சுஅ - எக. மாயங்கொல்.....திறங்கேட்டல் யானென்றுள்

(இ-ள்.) இங்ஙனம் எழுந்திருந்துநின்றது மாயமோதான்? அஃதன்று யிற் பின்னே யாதுதான்? என்மனத்தை மருட்டியதொருதெய்வமோதான்? ஒன் றையுந்தெளிகின்றிலேன், ஆதலால் எங்கும் போயாராய்ந்துகூடுவேன்; அங் ஙனங்கூடுதல் எளிதாயினும் எனது மிக்கசினம் தணிந்தாலன்றிக் கூடேன்;

[1] "கோல்கோடியவனிழல்" கலி. கo. [2] (பா) சீவகசிந்தாமணி, சுஉஎ.

இச்சினந்தணிதற்கு அக்கொடியவேந்தனை யான் சென்றுகண்டு என்கணவனைக்கொன்ற இத்தீத்திறம் யாதென்றுகேட்பேனென்று தன்னெஞ்சொடு கூறினளென்க.

தெய்வங்கொலென்றாள் ; இருதிணியாகிய உடல்கூடி ஒருயிர்பெற்றுநின்றமைபற்றி. பொருளுரையன்றென்றாள் ; தன்பின்போதாமைபற்றி. கேட்பல் யானென்றாள் ; நாணழிபூசல்செயத்துணிந்து.

எஉ - நி. என்று மெழுந்தாள்.....கோயில் வாயின்முன்.

(இ - ள்.) இங்ஙனஞ்சொன்னவள் ஆண்டுப்போதற்கெழுந்தாள் ; எழுந்தவள் தன்னூரிற்கண்டதீக்கனவை நின்றுநினைந்தாள் ; நினைந்தவள் கண் நீர் சோர்தலால் தான்செல்லும்வழிகாண்டற்காக அங்கெடிய கயல்போலுங் கண்களிற்சொரியும் புனலைத்துடைத்து அரசனுடைய வளவிய கோயில்வாயிலிடத்தே சென்றாளென்க.

என்றாளென்னுமெழுவாய்க்குச் சென்றாளென்பதனைப் பயனிலையாக்குக.

இஃது அயன்மயங்கிசைக் கொச்சகக்கலிப்பா.

ககூ—ஊர்சூழ்வரி முற்றிற்று.

இருபதாவது

[1]வழக்குரைகாதை.



ஆங்குக்
குடையொடு கோல்வீழ நின்று நடுங்குங்
[2]* * கடைமணி யின்குரல் காண்பென்கா ணெல்லா
திசையிரு நான்கு மதிர்ந்திடு மன்றிக்
நி கதிரை யிருள்விழுங்கக் காண்பென்கா ணெல்லா
விடுங்கொடி வில்லிர வெம்பகல் வீழுங்
கடுங்கதிர் மீனிவை காண்பென்கா † ணெல்லா
கருப்பம்
செங்கோ லும்வெண்குடையுஞ்
செறிநிலத்து மறிந்து ‡ வீழ்தரு
கo நங்கோன்றன் கொற்றவாயின்
மணிநடுங்க நடுங்குமுள்ள
மிரவுவில்லிடும் பகன்மீன்விழு
மிருநான்கு திசையுமதிர்ந்திடும்
வருவதோர் துன்பமுண்டு
மன்னவற்கியா § மூரைத்துமென

பெருந்தேவிசெய்தி கூறுகின்றார்:—

கூ. காண்பென் - கனவிலேகாண்பன். எல்லாவென்று பாண்டியன்தேவி தான்கருத்தாற்கண்ட கனவின் நிலையுரைக்கும்.

நி. கதிரைவிழுங்குகின்ற இருளைக்காண்பேன்.

சு. கொடிவில் - ஒழுங்குபட்டவில்.

எ. கடுங்கதிர்மீன்-ஒளியின் மிகுதிகூறினார்; கடுங்கதிர் - மிக்க அனலுமாம்.

கூ. செங்கோலும் குடையுமென்று அவற்றையே பின்னுங்கூறினாள்.....

கக. இரவு வில்லிடும்; பகல் மீன்விழும்; இவற்றைக் காண்பேன்.

ககை - உ. அதிர்ந்திடுமாதலால், வருவதோர் துன்பமுண்டென்க. யாமென்றாள், [3] தம்பிராட்டியாதலால்; தன்பெருமிதந்தோன்ற.

---

[1] இக்காதைமுதலிய பதினைந்திற்கும் அடியார்க்குநல்லாருரை அகப்படவில்லை.

[2] சிலப்பதிகாரம், உo: இங.

[3] அரசனைத்தம்பிராவென்றும் அரசர்தேவியரைத்தம்பிராட்டியென்றும் வழங்கும் வழக்கம் மலைநாட்டில் இப்பொழுதும் உள்ளது.

(பி - மி.) * 'கடைகணி' † 'எல்லாசெங்கோலும்' ‡ 'வீழுதங்' § 'உரைத்துமென்றுடி'

வாடியேந்தினர் கலனேந்தின
ரவிர்ந்துவிளங்கு மணியிழையினர்
கோடியேந்தினர் பட்டேந்தினர்
கொழுந் * திரையலின் செப்பேந்தினர்
கடு வண்ணமேந்தினர் சுண்ணமேந்தினர்
மான்மதத்தின் சாந்தேந்தினர்
கண்ணியேந்தினர் பிணையலேந்தினர்
கவரியேந்தினர் † தூபமேந்தினர்
கூலுங்குறளு மூமுங்கூடிய
குறுந்தொழி § லிளைஞர் செறிந்துசூழ்தர
நரைவிரை இய நறுங்கூந்தல
ருரைவிரை இய பலர்வாழ்த்திட
¶ வீண்டுநீர் வையங்காக்கும்
பாண்டியன்பெருந் தேவிவாழ்கென
உ0 வாயமுங் காவலுஞ்சென்
றடியீடு பரசியேத்தக்
கோப்பெருந் தேவிசென்றுதன்
தீக்கனைத் திறமுரைப்ப
[1] வரிமா னேந்திய வமளிமிசை யிருந்தனன்
[2] றிருவீழ் மார்பிற் றென்னவர் கோவே ; இப்பால்
[3] வாயி லோயே வாயி லோயே

கசு. ஆடி - கண்ணாடி.

(கசு) அணியிழையினராகிய (கள) குறுந்தொழிலிளைஞர் (கசு) எந்தினராய்ச் (கள) செறிந்து சூழ்தர.

கக. பெருந்தேவி, அண்மைவிளி.

(கக) பெருந்தேவி, வாழ்கெனப் (கஅ) பலர்வாழ்த்த (உ0) ஏத்தச் (உக) சென்று உரைப்பவென்க.

உசு. தேவியலுண்மையின், திரு விரும்பப்பட்டமார்பு ; திருக்கழிறமார் பென்றுமாம்.

---

[1] உஉ - சு. சிலப்பதிகாரம், உடு : எஅ - சு.

[2] '' திருவீழ்மார்பிற்றென்னவன்'' அகநா. கசு.

[3] மு. புறநா. உ0சு ; வினியேற்கும்பொழுது ஆனீரு.....எனாரம் பெற்றவந்ததற்கு இவ்வடிமேற்கோள் ; தொல். வினி. சூ. கஉ - நா ; நன் - மயிலை. சூ. கo சு ; நன் - வி. சூ. கo எ.

(பி - ம்.) * 'திரையலஞ்செப்பேந்தினர்கண்ணி , † 'சுண்ணமேந்தினர்' ‡ 'கூலமூமுங்குறளும்' § 'இளையர்செறித்து சூழ்வர' ¶ 'நண்டு நீருலகங்'

உடு [1] யறிவறை போகிய * பொறியறு நெஞ்சத்
திறைமுறை பிழைத்தோன் வாயி லோயே
யிணையரிச் சிலம்பொன் றேந்திய கையள்
கணவனை யிழந்தாள் கடையக நாளென்
றறிவிப் பாயே † யறிவிப் பாயே, யென

ஈ0. வாயிலோன்; வாழியெங் கொற்கை வேந்தே வாழி
தென்னம் பொருப்பிற் றலைவ வாழி
செழிய வாழி தென்னவ வாழி
பழியொடு படராப் பஞ்சவ வாழி
யடர்த்தெழு குருதி யடங்காப் பசுந்துணிப்

ஈடு. பிடர்த்தலைப் பீட மேறிய மடக்கொடி
வெற்றிவேற் றடக்கைக் கொற்றவை யல்ல
ளாறுவர்க் கினைய நங்கை யிறைவனை
யாடல்கண் டருளிய வணங்கு சூருடைக்
கானக முகந்த காளி தாருகன்

ச0. பேருரங் கிழித்த பெண்ணு மல்லள்
செற்றனள் போலுஞ் செயிர்த்தனள் போலும்
பொற்றொழிற் சிலம்பொன் றேந்திய கையள்

உடு. அறிவுகீழ்மட்டுப்போகிய. பொறியறு - புண்ணியமற்ற.

உசு. இறைமுறை - இராசநீதி.

ஈ0 - ஈஈ. வாழ்த்துப்பலவாயின; வணங்குந்தோறும் சொல்லுதலின்; [2] "நீணில மன்ன போற்றி" என்றாற்போல.

ஈச - டு. பசுந்துணிப் பிடர்த்தலை - மயிடன்றலை; மயிடம்-கடா. பிடர்த்தலையாகிய பீடம்; அதனைப் பீடமாக ஏறிய மடக்கொடியாகிய (ஈசு) கொற்றவையென்க.

ஈள. ஆறுவர்க்கினையநங்கை - சத்தமாதாக்களில் ஏழாவதினையாள்; அவள் பிடாரி.

ஈள - அ. இறைவனை ஆடல்கண்டருளிய அணங்கு - பத்திரகாளி.

(ஈள) நங்கை (ஈஅ) அணங்கு (ஈக) காளி, பெயர்.

ச0. அவர்களென்னலாம்; அவர்களில் அல்லள்.

சக. செறுதை - முகக்கோட்டம். செயிர்க்கை - மனக்கோபம்.

அன்றி, செற்றனள்போலும் - மாற்சரியமுடையாள்போலும்; செயிர்த்தனள்போலும் - மிக்க கோபமுடையாள்போலுமென்றுமாம்.

---

[1] "அறைபோகு நெஞ்சுடையார்க்கு" கலி. ஈள. [2] சீவக. உசுச.

(பி - ம்.) * 'பொறியறை' † 'அறிவிப்பாயேவாயிலோன்'

கணவனை யிழந்தாள் கடையகத் தாளே
கணவனை யிழந்தாள் * கடையகத் தாளே, யென
சநி. வருக மற்றவட் டருக வீங்கென
வாயில் வந்து கோயில் காட்டக்
[1] கோயின் மன்னனைக் குறுகினள் சென்றுழி
[2] நீர்வார் † கண்ணை யெம்முன் வந்தோ
யாரை யோநீ மடக்கொடி யோயெனத்
நிo தேரா மன்னஞ் செப்புவ துடையே
னெள்ளறு சிறப்பி னிமையவர் வியப்பப்
[3] புள்ளுறு புன்கண் ‡ ஊர்த்தோ னன்றியும்

சஙு - ச. கணவனையிழந்தாளொருத்தியென்க.

(உள) இணையாகிய அரிச்சிலம்பில் ஒன்றையேந்திய கையளாய்க் (சஎ) கடையகத்தாளென்றுசொல்ல.

சநி. மற்றவட்டருக - அவளைப்புகுதவிடுக; அழைப்பாயாகவென்றுமாம்.

சஅ. நீர்வார்கண்ணை - நீர்வார்ந்த கண்ணையுடையையாய்.

சஙு. யாரை : ஐ, இடைச்சொல்.

---

[1] குறுகுதல் - அணுகுதலென்னும் பொருளில் வருமென்பதற்கு இவ்வடி மேற்கோள்; தொல். முதற்சூத்திர விருத்தி.

[2] 'நீர்வார் கண்ணை நீயிவ ணெழிய' குறுந். உஉ.

[3] புள்-புரு; அஃறுற்றபுன்கணைத்தீர்த்தோன் சிபி; (சிலப். உங: டுஅ; டீ உகூ: அம்மானைவரி); 'புள்ளுறு புன்கண் ஊர்த்த வெள்வேற், கினங்கெழு தானைச் செம்பியன் மருக', 'புறவி னல்லல் சொலியக் கறையடி யானை வான்மருப் பெறிந்த வெண்கடைக், கோனிறை துலாஅம் புக்கோன் மருக', 'கொடுஞ்சிறைக், கூருகிர்ப் பருந்தி னேறுகுறித் தொரீஇத்,தன்னகம் புக்க குறுநடைப் புறவின்,றபுதி யஞ்சிச் சீரை புக்க வரையா வீகை யுரவோன் மருக", 'நீயே, புறவி னல்ல லன்றியும் பிறவும், பலவும் விடுத்தோன் மருனே' (புறநா. ஙஎ, ஙசூ, சஙூ, சசு); 'உடல்கலக்கற வரிந்துதசையிட்டு மொருவ, னொருதுலைப்புறவொ டொக்கதிறைபுக்கபுகழும்' (கலிங்க. இராச. கஙு); 'புக்கான், மறு னிறையென்று சரணடைந்த வஞ்சப், புறு நிறைபுக்க புகழோன்' (இராச ராசசோழ னுலா, ஙு - சு); 'கொலையே றுடம்படையக் கொய்தாலு மெய்தாத், துலை யெறி வீற்றிருந்த சோழன்' (குலோத்துங்கசோழனுலா, கள); 'உலகறியக், காக்குஞ் சிறுபுறவுக் காகக் களிகூர்ந்து, தூக்குந் துலைபுக்க தூயோனும்' (விக்கிரமசோழனுலா, கo-கக); 'புறவொன்றின் பொருட்டாகத் துலைபுக்க பெருந்தகை', 'இவர்குலத்தோன் மேற்பறவை, மன்னுயிர்க்குத் தன்னுயிரை மாறுக வழங்கினனுல்', 'புக்கடைந்த புறவொன்றின் பொருட்டாகத் துலைபுக்க, மைக்கடங்கார் மதயானை வாள்வேந்தன்' (கம்ப. திருவவதார. கூஙு; டீ குலமுறை. எ; டீ கும்பகருணன்வதை. கூடுடு); 'என்பும் உரியராதல், 'தன்னகம் புக்க குறுநடைப் புறவின் றபுதியஞ்சிச் சீரைபுக்கோன் முதலாயினுர்கட் காண்க' (குறள், எஉ - பரிமேல்.)

(பி - ம்.) * 'கடையகத்தாளேவருகமற்' † 'கண்ணினை' ‡ 'கெடுத்தோனன்றியும்'

[1] வாயிற் கடைமணி நடுநா நடுங்க
வாவின் [2] * கடைமணி யுகுநீர் நெஞ்சுசுடத் தான்ற
நிஅ. னரும்பெறற் புதல்வனை யாழியின் மடித்தோன்
பெரும்பெயர்ப் † புகாரென் பதியே யவ்வூ
ரேசாச் சிறப்பி னிசைவிளங்கு பெருங்குடி
மாசாத்து வாணிகன் ‡ மகனை யாகி
வாழ்தல் வேண்டி யூழ்வினை துரப்பச்
சுஎ. சூழ்கழல் § மன்ன நின்னகர்ப் புகுந்திங்
கென்காற் சிலம்புபகர்தல் வேண்டி நின்பாற்
[3] கொலைக்களப் பட்ட கோவலன் மனைவி
கண்ணகி யென்பதென் ¶ பெயரேயெனப், பெண்ணணங்கே
கள்வனைக் கோறல் கடிந்தோ லன்று
சுநி. வெள்வேற் கொற்றங் || காணென வொள்ளிழை
நற்றிறம் படராக் கொற்கை வேந்தே

நிசு. நடுங்க - அசைய.

நிச. கடைமணி = கண்மணிக்கடை.

நிசு. புகார் எனக்குப்பதி.

நிஅ. மகனை: ஐ, இடைச்சொல்.

நிஅ - கூ. செல்வத்துக்கு அவன்மகனுயிருக்கச்செய்தே செல்வம்வேண்டி. வாழ்தல் - சீவித்தல்.

சுநி. வெள்வேற்கொற்றம் - இராசநீதி

சுஎ - நி. பெண்ணணங்கே, கள்வனைக்கோறல் வெள்வேற்கொற்றம்.

சுசு. நற்றிறம்படரா - நல்லகூற்றிற்செல்லாத.

---

[1] நிசு - நி. 'கறைவழுவை செய்தோன்', 'கறவை முறைசெய்த காவலன்' (சிலப். உசு: நிஅ; கூ உசு: அம்மானைவரி); 'சால மறைத்தோம்பிச் சான்றவர் கைகரப்பக், காலை கழிந்ததன் பின்றையு - மேலைக், கறவைக் கன் றூர்ந்தானைத் தந்தையு மூர்ந் தான், முறைமைக்கு மூப்பினமை யில்' (பழமொழி, கூசு); 'ஓட்டி - அறவாழிமைந்தன் மே லூர்ந்தோன்' (இராசராச. ங்) ; மருளும் பசுவொன்றின் மம்மர்நோய் தீர, வருளுந் திருத்தே ருரவோன்' (குலோத்துங்க. உ); 'மையல்கூர், சிந்தனை யாவீற்கு முற் றத் திருத்தேரின், மைந்தனை பூர்ந்த மனுவோனும்' (வீக்கிரம. ங-ச); 'முட்டாமற் செல்லுத்தியவாறு : மகனைமுறைசெய்தான் கண்ணும், தன்கை குறைத்தான் கண்ணும் கான்க' (குறள், நிசஎ - பரிமேல்.); 'புகழ்மருவு நிறுத்தலைவந்து பொறியுருவஞ் சரணடைந்த புறவுக் கீந்து, மகவிரதித் திருவியினோர் சுரபியுயர் தணித்திவொன் மழிழ்வுற் றூர்ந்துஞ், சகமுழுது மொருதனிக்கோல் செலுத்துமனு குலவேந்தர் தமிழ்ச்சோ ணாட்டில்' (அரிசமயதீபம், அ:. க.)

[2] 'கடைமணியுகுநீர்' மணி. ங: உஉ. [3] மு. சிலப்பதிகாரம், பதி. ஙக.

(பி - ம்.) * 'கீடையுகுநீர்' † 'புகாரெம்பதியே', 'புகார்நகரப்பதி' ‡ 'மகனே' 'மன்னின்னகர்ப்புகுந்தென்காற்' ¶ 'பெயரேபெண்' || 'கேளென'

* யென்காற் பொற்சிலம்பு மணியுடை யரியே, யெனத்
தேமொழி யுரைத்தது செவ்வை நன்மொழி
யாமுடைச் சிலம்பு முத்துடை யரியே
எ0. † தருகெனத் தந்து தான்முன் வைப்பக்
கண்ணகி யணிமணிக் காற்சிலம் புடைப்ப
மன்னவன் வாய்முதற் றெறித்தது ‡ மணியே, மணிகண்டு
தாழ்ந்த குடையன் றளர்ந்தசெங் கோலன்
[1] பொன்செய் கொல்லன் றன்சொற் கேட்ட
எஅ. யாமே வரசன் யாமே கள்வன்
மன்பதை காக்குந் தென்புலங் காவ
லென்முதற் பிழைத்தது கெடுகவென் னுயிரென
மன்னவன் மயங்கிவீழ்ந் தனனே தென்னவன்
கோப்பெருந் தேவி சூலுந்தன ணடுங்கிக்
அ0. கணவனை § யிழந்தோர்க்குக் காட்டுவ தில்லென்
றிணையடி தொழுதுவீழ்ந் தனளே மடமொழி.

சுஎ. என்காற் பொற்சிலம்பின் அரி மாணிக்கம்; பொற்சிலம்புடைய அரி யென்க.

சுஅ. செவ்வைநன்மொழி - செவ்வியவார்த்தை.

எ0. கொடுவருகவென அழைத்து; அவன் கள்ளஞ்சும்படியே செய்வா ஞை வருகவென அழைத்தென்றுமாம்; தான், அசை. தருகெனவாங்கித் தன் முன்வைப்ப - முத்துடையரியும் மணியுடையரியும் அறிவதாகவாங்கித் தன் முன்னேவைப்பவென்றுமாம்.

எக. மணிக்கால் - மணியை இடத்திலேயுடைய; சிலம்பு - தட்டான்வாங் கிக் கள்ளப்படி செய்வார் கையிற்கொடுத்த பொற்சிலம்பு.

எஉ. வாய்முதற் றெறித்தமணியே - சிலம்பு தானேவிண்டு மணிவாய் முதற்றெறித்ததென்க.

எஎ. என்முதல் - என்னைத்தொடங்கி.

அ0. கணவனை இழந்தோர்க்குக் காட்டுவ தில்லென்றது - தந்தை தாய் முதலாயினோரை இழந்தார்க்கு அம்முறைசொல்லிப் பிறரைக் காட்டலாம், இஃது அவ்வாறு வரக் காணுஞ்சொல்லாகாமையின், காட்டுவதில்லென்றாள்.

---

1. "பொன்செய்கொல்லன்", "பொன்வினைக்கொல்லன்" சிலப். பதி. உஉ; ஒ. கசூ. கக0.

(பி - ம்.) * 'என்காற்சிலம்புமணியுடையரியேதேமொழியுரைத்தனை' † 'தருக வீங்கெனத்தத்துதம்முன்வைத்த மணிக்காற்சிலம்புடைப்ப' ‡ 'மணியேயதுகண்டு' §, 'இழந்தாற்குக்காட்டுவதில்லெனலிணை'

வேண்டா.

க. [1] அல்லவை செய்தார்க் கறங்கூற்ற மாமென்னும்
பல்லவையோர் சொல்லும் * பழுதன்றே—பொல்லா
வடுவினையே செய்த வயவேந்தன் றேவி
கடுவினையேன் செய்வதூஉங் காண்.

உ. காவி யுகுநீருங் கையிற் றனிச்சிலம்பு
† மாவி குடிபோன வவ்வடிவும்—பாவியேன்
காடெல்லாஞ் சூழ்ந்த கருங்குழலுங் ‡ கண்டஞ்சிக்
கூடலான் கூடாயி னென்.

ங. மெய்யிற் பொடியும் விரித்த கருங்குழலுங்
கையிற் றனிச்சிலம்புங் கண்ணீரும்—வையைக்கோன்
கண்டளவே தோற்றனைக் காரிகைதன் சொற்செவியி
லுண்டளவே தோற்று ளுயிர்.

க. கடுவினையேன் - பாவத்தைப் பண்ணினேன். செய்வதூஉம் காணென்க.

இதில், இராசாத்தஞ்சினபின்பு கண்ணகி தனகைச்சிலம்பைத் தேவிமுன் னேயெறிந்தாள்.

உ0.—வழக்குரைகாதை முற்றிற்று.

---

[1] தான்மணிக்கடிகை, அச; மூதுரை, உஎ; குவ்வுருபு பகை தொடர்பொருளில் வந்ததற்கு இவ்வடிமேற்கோள்; நன். சூ. உகஎ-மயிலை.

(பீ - மி.) * 'பழுதன்றுதலைவாய்' † 'ஆவியுகக்காட்டுமவ்' ‡ 'கண்டஞ்சக்'

இருபத்தொன்றுவது

வஞ்சினமாலை.

[கற்புடைமங்கையர் அறுவர்.]

கோவேந்தன் றேவி கொடுவினை யாட்டியே
னியாவுந் தெரியா வியல்பினே னுயினு
[1] * மூற்பகற் செய்தான் பிறன்கேடு தன்கேடு
† பிற்பகற் காண்குறூஉம் பெற்றியகா ணற்பகலே
(தி. [2] வன்னி மரமு மடைப்பளியுஞ் சான்றுக
முன்னிறுத்திக் காட்டிய மொய்குழலாள்பொன்னிக்
கரையின் மணற்பாவை நின்கணவ னுமென்
றுரைசெய்த மாதரொடும் போகா டிரைவந்
தழியாது சூழ்போக வாங்குந்தி நின்ற

க. கோவேந்தன்றேவி, விளி. கொடுவினையாட்டியேன், பேருமாம்.

உ. யாவுந் தெரியா இயல்பினே னுயினும் - ஒன்றுமறியாத தன்மையே னுயினும்.

ச. காண்குறூஉம் பெற்றிய - காணலுறுந்தன்மைய. நற்பகலென்றது, பிரகாசமானபகலென்பதனை.

கூ. சூழ்போக.. ...சூழ்போதலால் உந்திக்கணின்ற; உந்திநின்ற - ஆற்றின் நடுவு குறையாம்படிநின்ற வென்றுமாம்.

---

[1] "பிறர்க்கின்னு மூற்பகற் செய்யிற் றமக்கின்னு, பிற்பகற் றூமே வரும்" (குறள், ஙகக); "மூற்பகற் செய்யிற் பிற்பகல் வினையும்" (கொன்றைவேந்தன்) "மூற்பகல் செய்வினை பிற்பக லறுதரின்" பெருங். க: ஙிசு. உஙிக.

[2] ஒருகற்புடைமங்கைக்கு வன்னிமரமுதலியன சான்றுபகர்ந்தமை, திருப்புறம்பயத்தும், திருமருகலிலும் இன்றும் கன்னபரம்பரையில் வழங்குகின்றது; அந்நிகழ்ச்சியைப்புலப்படுத்தும் சின்னங்களும் அவ்விடங்களில் உள்ளன; திருப்புறம்பயத்துள்ள சிவலிங்கப்பெருமானுக்கு ஸ்ரீ சாட்சிநாதரென்பது திருநாமம்.

(பி - ம்.) * 'முன்பகல்' † 'பின்பகல்:.....பெற்றிய காணன்பகலே'

கo. வரியா ரகலல்குன் மாத ருரைசான்ற
[1] மன்னன் கரிகால் வளவன்மகள் வஞ்சிக்கோன்
றன்னைப் புனல்கொள்ளத் தான்புனலின் பின்சென்று
கன்னவி மேளாயோ வென்னக் கடல்வந்து
முன்னிறுத்திக் காட்ட வவனைத் தழீஇக்கொண்டு
கரு. பொன்னங் கொடிபோலப் போதந்தாண் மன்னி

---

[1] கo-கரு. கரிகால் வளவன்மகள் - ஆதிமந்தியாரென்பார்; இப்பெயர் மத்தியெனவும் வழங்கும்; ஔவையார்க்குக், காலத்தால் இவர் முற்பட்டவர்; நல்விசைப்புலமைவாய்ந்தோர். வஞ்சிக்கோன் - ஆட்டனத்தியென்பான்; இப்பெயர் அத்தியெனவும் வழங்கும். ஆதிமந்தியார், நீர்விழவொன்றில் கழாரென்னும் ஊரைச்சார்ந்த காவிரித்துறையில் கணவனுகிய அத்தியுடன் நீராடுகையில், அவ்வூர்க் காவிரி வெள்ளம் கவர்ந்துகொள்ள, இவர் அவனைக்காணுது பலஇடத்தும் தேடித்தேடிச்சென்று கடற்கரையில், அரற்றிக்கொண்டு நிற்கையில், இவரது கற்பின் பெருமையால் கடல் அவனைக் கரைக்கு அணித்தான இடத்திற் கொணர்ந்துசேர்த்து நிறுத்திக்காட்ட, இவருடைய துயரத்தை அறிந்தவளும், அங்கே நீராடிக்கொண்டிருந்தவளுமாகிய மருதியென்பவள் கண்டு அவனை அழைத்துவந்து இவர்பாற் சேர்த்துப் புகழ்பெற்றனரென்பது பண்டைவரலாறு:—இதனை, "மள்ளர் குழீஇய விழவி னானு, மகளிர் தழீஇய துணங்கையானும், யாண்டுங் காணேன் மாண்டக் கோனை, யானுமோ ராடுகள மகளே யென்னைக், கோடு நிலங்கு வளை நெகிழ்த்த, பீடுகெழு குருகிலு மாடுகள மகனே" (குறுந். ஙக) என்னும் இவர் பாடலானும், "காதலற் கெடுத்த சிறுமையொடு நோய் கூர்ந், தாதி மத்தி போலப் பேதுற், றலந்தனை னுழல்வேன் கொல்லோ", "கச்சினன் கழலினன் றேந்தார் மார்பினன், வகையமைப் பொலிந்த வனப்பமை தெரியற், சுரிய லம்பொருநனைக் கண்டிரோவென, வாதி மத்தி போதுற்றீயைச், சிறைபறைந் தரைஇச் செங்குணக் கொழுகு, மத்தண் காவிரி போலக், கொண்டுகை வலித்தல் சூழ்ந்தி னின் யானே", "கழாஅர்ப் பெருந்துறை விழவி னுடீஇ,மீட்டெழிற் பொலிந்த வேந்த குவவு மொய்ம்பி, னுட்ட னத்தி நலனயந் துரைஇத், தாழிருங் கதுப்பிற் காவிரி வவ்வலின், மாதிரந் தழைஇமதி மருண்டிட ருழந்த, வாதி மத்தி காதலற் காட்டிப், படுகடல் புக்க பாடல்சால் சிறப்பின், மருதி யன்ன மாண்புகழ் பெறீஇயர்", "அணிகிளர் சாந்தி னம்பட் டிமைப்பக், கொடுங்குழை மகளிரி னெடுங்கிய விருக்கை, யறியா மையி னழிந்த நெஞ்சி, னேற்றிய லெழினடைப் பொலிந்த முன்பிற், றேட்டிருஞ் சுரியன் மணந்த பித்தை, யாட்ட னத்தியைக் காணீ ரோவென, நாட்டி னுட்டி னூரி னூரிற், கடல்கொண் டன்றெனப் புனலொளித் தன்றெனக், கலுழ்ந்த கண்ணள் காதலற் கெடுத்த, வாதி மத்திபோல", "ஒலிகதிர்க் கழனிக் கழாஅர் முன்றுறைக், கவிகொள் சுற்றமொடு கரிகால் காணத், தண்பதங் கொண்டு தவிர்ந்த வின்னிசை, யொண்பொறிப் புனைகழல் சேவடிப் புரளக், கருங்கச் சியாத்த காண்பி னெவ்வயிற், றரும்பொலம் பாண்டின் மணியொடு தெளிர்ப்பப், புனையந் தாழி மத்தியணிநயத்து, காவிரி கொண்டொளித் தாங்கு", "மத்தி, னனிவார் கண்ணள் பல புலந் துறையக், கடிந்திற வத்தி யாட்டி நசைஇ, நெடுநீர்க் காவிரி கொண்டொளித் தாங்கு" (அகநா. சடு, எசு, உஉஉ, உகசு, ருஎசு, ஙகஎசு); "மள்ளர்குழீஇய..... னலம்கனே - இது, காதலற்கெடுத்த ஆதிமந்தியார்பாட்டு" என்பர்; தொல். அகத். சூ. நிச—த.

[1] மணன்மலி பூங்கானல் * வருகலன்க ணேக்கிக்
கணவன்வரக் கல்லுருவ நீத்தா † ளிணையாய
மாற்ருள் குழவிவிழத் தன்குழவி யுங்கிணற்று
வீழ்த்தேற்றுக் கொண்டெடுத்த வேற்கண்ணுள்‡வேற்ருருவ

உ0. னீணேக்கங் கண்டு நிறைமதி வாண் § முகத்தைத்
தாணேர் குரக்குமுக மாகென்று போன
கொழுநன் வரவே குரக்குமுக நீத்த
பழுமணி யல்குற்பூம் பாவை விழுமிய
[2] பெண்ணறி வென்பது பேதைமைத்தே யென்றுரைத்த

உ1. நுண்ணறிவி ணேர்நோக்க || நோக்காதே யெண்ணிலேன்
வண்ட லயர்விடத் தியாணேர் ¶ மகட்பெற்ரு
லொண்டொடி நீயோர் ** மகற்பெறிற் கொண்ட
கொழுந னவளுக்கென் †† றியாவுரைத்த மாற்றங்
கெழுமி யவளுரைப்பக் கேட்ட விழுமத்தாற்

உ0. சிந்தைநோய் கூருந் திருவிலேற் கென்றெடுத்துத்
தந்தைக்குத் தாயுரைப்பக் கேட்டாளாய் ‡‡ மூந்தியோர்

உ0. நீணேக்கம் - விடாமற்பார்த்தல்.

உக. பழுமணி - பழுத்தமணி; சிவந்தமணி ; மாணிக்கம்.

உக. கெழுமியவளென்றது, பிள்ளேதாயாகிய தன்ரேழியை.

உசு - உ0. இளங்காலத்து விளேயாட்டிற் சொன்னவார்த்தையை அவள் மெய்யாகக்கொண்டு பேசக்கேட்ட விழுமத்தாலே நோய்கூரும்; இன்னும், யாணுரைத்தமாற்றத்தைப் பொருந்தக்கேட்டவள் உரைப்பக்கேட்ட ..... திருவிலேற் கெனினுமாம் ; சிந்தைநோய் கூரும், முற்று. என்றெடுத்து - பிரகாசிக்க.....

உக. மூந்தி - தந்தைக்கும் தாய்க்கும் முற்பட்டு ; கொடுப்பவும் அடுப்பவு மின்றித் தானேமுற்பட்டென்றுமாம்.

---

[1] கசு-ள. " மணன்மலி.....கல்லுருவநீத்தாள் " என்பதனுல் "குலமடமாதரொடு கலமிசைச்சேறலாகாமையறிக " என்பது, நாற்கவி. சூ. அடி ; இ-வி. சூ. சஅஉ-உரை.

[2] " துண்ணறி வுடையோர் நூலொடு பழகினும், பெண்ணறி வென்பது பெரும் பேதைமைத்தே " இறை. சூ. உசு ; நன். சூ. உசுச - மயிலே ; டெ சூ-உசுஞ-விருத்தி, இ-வி. சூ. கசுள. மேற்.

" நுண்ணறி வுடைய ராகி நூலொடு பழகி னலும்
பெண்ணறி வென்ப தெல்லாம் பேதைமைத் தாத லாலன்
கண்ணறி வுடைமைக் கேற்ற காரிய மூரைத்தாய் மான
மெண்ணறி வுடையோர்க் கெல்லா மிழுக்குடைத் தன்றே மீதால்."
(திருவிளே. சமி : நகச.)

(பி - ம்.) * 'வருகலனேக்கி' † 'இணையான' ‡ 'வேற்ருெருநீணேக்கங்' § 'ழுகத்தாணேர்' || 'நோக்காதவெண்ணிலென' ¶ 'மகட்பெற்ருல்' ** 'மகற்பெறிற்' †† 'யாயுரைத்த' ‡‡ 'முந்தையோர்'.

கோடிக் கலிங்க முடித்துக் குழல்கட்டி
நீடித் தலையை வணங்கித் தலைசுமந்த
வாடகப்பூம் பாவை யவள் * போல்வார் நீடிய

நூறு. [1] மட்டார் குழலார் பிறந்த பதிப்பிறந்தேன்
பட்டாங் கியானுமோர் பத்தினியே யாமாகி
லொட்டே னரசோ டொழிப்பேன் மதுரையுமென்
பட்டிமையுங் காண்குறுவாய் நீயென்னு விட்டகலா
[2] நான்மாடக் கூடன் மகளிரு மைந்தரும்
சo. வானக் கடவுளரு மாதவருங் † கேட்டீமின்

நகூ. நீடித் தலையை வணங்கி - விடாமே நெடிதாகத் தலையைவணங்கி; நீடித்தலைசுமந்தவெனக்கூட்டி, விடாமற்றலையாற்சுமந்தவென்றுமாம்.

நகூ. பட்டாங்காகில் - உண்மையாகில்.

நஎ. ஒட்டேன் - இசையேன்; ஒட்டேனென்பதற்கு இனிதிருக்கவென வருவிக்க. அரசனோடு மதுரையையுமழிப்பேன். நஅ. பட்டிமை - படிறு.

சo. வானக்கடவுளர் - தேவமுனிவர்கள்; [3] "சுடரொடு திரிதரு முனிவ ரும்" என்றாராதலால். இன்னும், வானக்கடவுளர் வெளிப்படையுமாம். மாத வர் - இங்குள்ளோர்.

---

[1] நூ - நஅ. இவ்வடிகளிற் கூறப்பெற்றுள்ள கற்புடைப்பெண்டிர் அறுவருடைய வரலாற்றைப் பட்டினத்துப்பிள்ளையார் புராணத்துப் பூம்புகார்ச்சருக்கத்துள்ளபாடல் களும் ஒருவாறு தெரிவிக்கின்றன; அச்செய்யுட்கள் வருமாறு:—

க. "கரிகாலன் பெருவளவன் மகள்கேள்வன் கடல்புக்கான்
றிருவேயோ வெனவழைத்துத் திரைக்கரத்தாற் றரக்கொண்டாள்
வரைகேள்வன் கலைநோக்கி வருமளவுங் கல்லானுள்
புரைதீரப் பிறந்தபதி பூம்புகார்ப் பட்டினமே.

உ. வன்னிமடைப் பளியோடி சான்றுக வரவழைத்தாள்
பன்னியகா விரிமணல்வாய்ப் பாவையைதுன் கேள்வனெனுங்
கன்னியர்க ளொடும்போகா டிரைகையா வகைகாத்தாள்
பொன்னையாள் பிறந்தபதி பூம்புகார்ப் பட்டினமே.

ங. கூவிளித்போய் மாற்றுள் குழவிவிழத் தன்குழலி
யாவலின்வீழ்த் தேற்றெடுத்தா ளய்ஞ்ஞெக்கம் வேறென்று
மேலினுள் குரக்குமுகம் வீடுடையோன் வரவிடுத்தாள்
பூவின்மேற் பிறந்தபதி பூம்புகார்ப் பட்டினமே.

ச. முற்றுத முலையிருவர் முத்துவண்ட வயர்விடத்துப்
பெற்றுறற்ற மான்பெண் பிறர்மணஞ்செய் யாவண்ணஞ்
சொற்றுர்க்கள் பிறந்தபெண் ணுயகனைத் தலைசுமந்தாள்
பொற்றுலி பிறந்தபதி பூம்புகார்ப் பட்டினமே"

[2] நான்மாடங்களாவன: திருவாலவாய், திருநள்ளாறு, திருமுடங்கை, திருநமிலூர்; கன்னி, கரியமால், காளி, ஆலவாயென்பனவுமாம்; (கலி. கூஉ-ந); "கன்னிதிரு மால்காளி யீசன் காக்குங் கடிமதில்சூழ் மாமதுரை" திருவால. பயன், கூ. [3] சிலப்பதிகாரம், கூஉ.

(பி - ம்.) * 'போல்வாணீடிய' † 'கேட்டீர்மின்'

யானமர் காதலன் றன்னைத் தவறிழைத்த
* கோநகர் சீறினேன் குற்றமிலேன் யானென்
றிடமூலை கையாற் றிருகி மதுரை
[1] வலமுறை மும்முறை † வாரா வலம்ந்து
சஇ. மட்டார் மறுகின் ‡ மணிமூலையை வட்டித்து
§ விட்டா ளெறிந்தாள் விளங்கிழையாள் வட்டித்த
நீல ‖ நிறத்துத் திரிசெக்கர் வார்சடைப்
பால்புரை வெள்ளெயிற்றுப் பார்ப்பனக் கோலத்து
மாலை ¶ யெரியங்கி வானவன் முன்றோன்றி
ரூ0. ** மாபத் தினிகின்னை மாணப் பிழைத்தநாட்
பாயெரி யிற்தப் பதியூட்டப் பண்டேயோ
ரேவ †† லுடையேனு லியார்பிழைப்பா ரீங்கென்னப்
[2] பார்ப்பா ரறவோர் பசுப்பத் தினிப்பெண்டிர்
மூத்தோர் குழவி யெனுமிவரைக் கைவிட்டுத்

சசு. கையாற் றிருகி - வலக்கையாற்றிருகி.

சஇ. வட்டித்து - பிரதிக்ஷிணபண்ணி; சுழற்றியென்றுமாம்; வர்த்தனை - வட்டனையா.....யிற்று.

சசு. விட்டாளெறிந்தாள் - விட்டெறிந்தாள்.

சள. திரிசடை - திரித்தசடை; திரித்தல் - முறுக்கல்.

சக. மாலை - ஒழுங்கு.

(சசு) வட்டித்ததனுல்வந்த (சக) வானவன்; இன்னும், வட்டித்த - எழுதினுலொத்தவென்றுமாம்.

ரூ0. மாண - தின்னிதாக.

ரூஉ. உடையேனுல் - உடையேனுதலால். யார் பிழைப்பார் - யார்தப்புவார்.

---

[1] மணிமேகலை, கூ: ஙி.

[2] ஙிசு - ஙி. 'பார்ப்பார் தவரே சுமந்தார் பிணிப்பட்டார், மூத்தா ரிளையாரீ பசுப் பெண்டிர்'(ஆசார. சுரு); திணைவிராய்என்னி உயர்திணையான் முடிந்ததற்கு இப்பகுதி மேற்கோள்; தொல். இளவி. சூ. ஙிக - ந; நன். சூ. ஈளை-மயிலை; இ-வி. சூ. உகூ-அ.

(பி - ம்.) * 'கோன்வற்குற்றமிலெனியானென்று' † 'வாராவலம்வந்து' ‡ 'வனமூலை' § 'விட்டெறிந்தாளந்தி' ‖ 'நிறத்துநிமிர்செக்கர்' ¶ 'எரியாகி' ** 'மாபத்தினியுன்னை' †† 'உடையேன்மற்றியார்'

ருரு. தீத்திறத்தார் பக்கமே சேர்கென்று * காய்த்திய
பொற்றொடி யேவப் புகை † யழன் மண்டிற்றே
நற்றேரான் கூட னகர்.

வெண்பா.

[1] பொற்பு வழுதியுந்தன் பூவையரு மாளிகையும்
விற்பெல்லியுஞ் சேனையுமா வேழமுங்—கற்புண்ணத்
தீத்தரு வெங்கூட்டற் றெய்வக் கடவுளரு
மாத்துவத் தான்மறைந்தார் மற்று.

ருருஉ. காய்த்திய - சுடவேண்டி; கோவித்தவென்றுமாம்.
ருசு. ஏவ.....

உக.—வஞ்சினமாலை முற்றிற்று.

---

[1] இவ்வெண்பா சில ஏட்டுப்பிரதிகளில் இல்லை.
(பி - ம்.) * 'காய்த்தீயைப்' † 'அழற்பொங்கிற்றே'

இருபத்திரண்டாவது

அழற்பகாதை.

ஏவற் றெய்வத் தெரிமுகந் * திறந்தது
காவற் றெய்வங் கடைமுக மடைத்தன
வரைசர் பெருமா னடுபோர்ச் செழியன்
[1] வளைகோ லிழுக்கத் துயிராணி கொடுத்தாங்
திருநில மடந்தைக்குச் செங்கோல் † காட்டப்
புரைதீர் கற்பிற் றேவி தன்னுட
[2] னரைசு கட்டிலிற் றுஞ்சிய ‡ தறியா
தர்சான் பெருங்கணி யறக்களத் தந்தணர்
காவிதி § மந்திரக் கணக்கர் தம்மொடு
கோயின் மாக்களுங் குறுந்தொடி மகளிரு
|| மோவியச் சுற்றத் துரையவிந் திருப்பக்
காழோர் வாதுவர் கடுந்தே ரூருநர்
வாய்வாண் மறவர் மயங்கினர் மலிந்து
கோமகன் கோயிற் கொற்ற வாயிற்

க. ஏவற்றெய்வம் - அங்கி ; அக்கினியுடைய எரியின்கூறு பிரகாசித்தது ; அங்கி அடக்கம் நீங்கி வெளிப்பட்டதென்றுமாம்.

உ. காவற்றெய்வம் - நகரிகாவற்றெய்வமாகிய நான்கு வருணப்பூதங்கள். கடைமுகமடைத்தன - கோட்டைவாயிலை நோக்குவதொழிந்தன; நகரிகாவற் றெய்வங்கள் கோட்டைவாயில்களைக் காவாவாயினவென்றுமாம்.

ச. வளைகோல் - வளைந்தகோல். இழுக்கத்து - இழுக்கத்தையுற்ற அவ்வள விலே. உயிராணியவாணி - ஆதாரம். ஆங்கு - அவ்விடத்து.

எ. அரசுகட்டில் - சிங்காதனம். தஞ்சியதறியாது - செழியன் தஞ்சி யதை அறியாமல்.

அ. ஆசான் - புரோகிதன். பெருங்கணி - கணிதவிவர்த்தகன். அறக்களத் தந்தணர் - தன்மாசனத்துக் கருத்தாக்கள்.

கூ. காவிதி - வரியிலார். மந்திரக்கணக்கர் - மந்திரவோலையெழுதுவார்.

கக. ஓவியச்சுற்றத்து - சித்திரத்திரள்போல.

கஉ. காழோர் - பரிக்காரர். வாதுவர் - வாசிவாரியர்.

---

[1] சிலப். உரை: கூஅ - கூ.

[2] "அரசுகட்டிலிற் றுஞ்சிய பாண்டியன் றெழுஞ்செழியன்" சிலப். மதுரைக் காண்ட இறுதிக்கட்டுரை.

(பி - ம்.) * 'திறந்தன' † 'காட்டிப்' ‡ 'அறியாராசான்' § 'மத்திரிக்' || 'ஓவியர்'

கடு. நீமுகங் கண்டு தாம்விடை கொள்ள
[நித்திலப் பைம்பூ ணிலாத்திக ழுவிரொளித்
தண்கதிர் மதியத் தன்ன மேனிய
ஞெண்கதிர் நித்திலம் பூணெடு புனைந்து
வெண்ணிறத் தாமரை யறுகை நந்தியென்

உ0. றின்னவை முடித்த நன்னிறச் சென்னிய
[1] னுரையென விரிந்த நுண்பூங் கலிங்கம்
புலரா துடுத்த வுடையினன் மலரா
வட்டிகை விளம்பொரி வண்ணிகைச் சந்தனங்
கொட்டமோ டரைத்துக் கொண்ட மார்பினன்

உடு. றேனும் பாலுங் கட்டியும் பெட்பச்
சேர்வன பெறூஉந் தீம்புகை மடையினன்
றீர்த்தக் கரையுந் தேவர் கோட்டமு
மோத்தின் சாலையு மொருங்குட னின்று
பின்பகற் பொழுதிற் பேணின னூர்வோ

கூ0. னன்பகல் வரவடி யூன்றிய காலினன்
[2] விரிகுடை தண்டே குண்டிகை காட்டம்
பிரியாத் தருப்பை பிடித்த கையின
னுவினு [3] மார்பினு நவின்ற நூலினன்]
முத்தீ வாழ்க்கை முறைமையின் வழூஅ

கூடு. வேத முதல்வன் வேள்விக் கருவியோ
டாதிப் பூதத் ததிபதிக் கடவுளும்

கடு. விடைகொள்ள - அரசனே உட்கொண்டுகூங்க ; அன்றி, மிடை கொள்ள - நெருப்பவித்தற்கு வந்து மிடையவென்றுமாம்.

(கசு) "நித்திலப்பைம்பூண்" முதலாகப் (கூசு) "பூதத் ததிபதிக் கடவுள்" ஈறுகப் பிராமணபூதத்தைக்கூறிற்று; அப்பூதத்துக்கு நிறம் வெள்ளை.

கூடு. வேதமுதல்வன் - பிரமன். கருவி - சமிதைமுதலாயின.

கூச - சு. பிரமன் வேள்விக்குச்சொன்ன உறுப்புக்களோடு முத்தீவாழ்க் கை முறைமையின்வழுவாத ஆதிப்பூதக்கடவுளும்.

(கூடு) கருவியோடு (கூச) முறைமையின் வழுவாவெனக்கூட்டுக.

(கசு) நித்திலக்கோவை நிலாவொளிபோலத் திகழ்கின்ற (கூசு) ஆதிப்பூதம்; (கூச) முத்தீவாழ்க்கை வழுவாத (கூசு) ஆதிப்பூதம்.

---

1 "திம்பா னுரைபோற் றிகழ்வெண்பட் டுடுத்து" (ஜீவக. கo சு); "தூரைபுரை கலிங்கம்" பெருங். உ. டு: அசு.

2 "தண்டொடு பிடித்த தாழ்கமண் டலத்திப், படிவ வுண்டிப் பார்ப்பன மகனே" (குமர். கஞசு); "எறித்தரு கதிர்தாங்கி யேந்திய குடைநீழ, லறித்தாழ்ந்த கரகமு மூதாளன்ற முத்தோலும்" (கலி. கூ) 3 மார்பின் நவின்றநூல் - பூணூல்.

[வென்றி வெங்கதிர் புரையு மேனியன்
குன்று * மணிபுனை பூணினன் பூணெடு
முடிமுதற் கலன்கள் பூண்டனன் முடியொடு
சண்பகங் கருவிளை செங்கூ தாளந்
தண்கமழ் பூநீர்ச் சாதியோ டினையவை
கட்டுங் கண்ணியுந் தொடுத்த மாலையு
மொட்டிய திரணையோ டொசிந்த பூவின
னங்குலி கையெறிந் தஞ்சுமகன் விரித்த
குங்கும வருணங் கொண்ட மார்பினன்
பொங்கொளி யரத்தப் பூம்பட் டுடையினன்
முகிழ்த்தகைச்
சாலி யயினி பொற்கலத் தேந்தி
யேலு நற்சுவை யியல்புளிக் கொணர்ந்து
வெம்மையிற் கொள்ளு மடையினன் செம்மையிற்]
பவளச் செஞ்சுடர் திகழொளி மேனிய
ஞ்கடன் ஞால மாள்வோன் றன்னின்
மூரைசொடு வெண்குடை கவரி நெடுங்கொடி
யுரைசா லங்குசம் வடிவேல் † வடிகயி
றெனவிவை பிடித்த கையின ஞகி
யெண்ணருஞ் சிறப்பின் மன்னரை யோட்டி
மண்ணகங் கொண்டு செங்கோ லோச்சிக்
கொடுந்தொழில் கடிந்து கொற்றங் கொண்டு
‡ நடும்புகழ் வளர்த்து நானிலம் புரக்கு
முரைசால் சிறப்பி [1] னெடியோ னன்ன
வரைச பூதத் தருந்திறற் கடவுளுஞ்

(நுக) "பவளச்செஞ்சுடர்" முதலாக (சுக) 'அருந்திறற்கடவுள்' ஈறுக அரசபூதத்தைக்கூறிற்று. அப்பூதத்துக்குநிறம் பவளம்.

நுஉ. ஞ்ஞாலம் - அருச்சுனன். நுசு. வடிக்கை - புரவியைவசமாக்குகை. நுகு - நு. முரசுமுதலானவேழும் இராசாக்களுக்கும் இப்பூதத்திற்கு [மரியன. நுசு. மன்னர் - தரியோதனாதிகள்.

(நுஉ) இவனிடத்துச் சாரதியாய்நின்று (நுங) முரசுமுதலாகிய (நுஙு) பிடித்தகையினஞகி (நுசு) மன்னரையோட்டி (நுள) ஓச்சிக் (நுஅ) கடிந்து கொற்றங்கொண்டு (நுக) புரக்கும் (சுஎ) உரையமைந்த சிறப்பையுடைய நெடியோனையொத்த கடவுட்பூதமென்க. இவற்றுல்உலகளந்தோனையொத்த பூதமென்க.

[இன்னும்; [1] பாண்டியனுடைய கையிலைக்கணம் பூதத்துக்கும் பிடித்தலையே இருவர்க்கும் ஒத்தபண்பென்றுமாம்.]

நுக - சுக. பவள.....அருந்திறற்கடவுளும் - பவளவொளி திகழ் தருமேனியையுடைய அரசபூதமாகியகடவுளும்.

---

[1] புறநா. கூ-கo ஆம் அடி; மதுரை. சுக.

(பி - ம்.) * 'மணியொடு புனைந்த பூணினன்' † 'வடிக்கயிறு' ‡ 'நெடுப்புகழ்'

* செந்நிறப் பசும்பொன் புரையு.† மேனியன்
மன்னிய சிறப்பின் மறவேன் மன்னவ
[1] ரரைசுமுடி யொழிய வமைத்த பூணினன்
சுடு. வாணிக மரபி னீணில மோம்பி
நாஞ்சிலுந் துலாமு மேந்திய கையின
[னுரைசால் பொன்னிறங் கொண்ட வுடையினன்
வெட்சி தாழை கட்கம ழாம்பல்
சேட னெய்தல் பூவா மருதங்
எ0. கூட முடித்த சென்னிய னீடொளிப்
பொன்னென விரிந்த நன்னிறச் சாந்தந்
தன்னெடு புனைந்த மின்னிற மார்பினன்
கொள்ளும் பயறுந் துவரையு முழுந்து
நள்ளியம் பலவு நயந்துட னளாஇக்
எடு. கொள்ளெனக் கொள்ளு மடையினன் புடைதரு
நெல்லுடைக் களனே புள்ளுடைக் கழனி
வாணிகப் பீடிகை நீணிழற் காஞ்சிப்
பாணிகைக் கொண்டு முற்பகற் பொழுதி
னுண்மகிழ்ந் துண்ணு வோனே யவனே
அ0. நாஞ்சிலம் படையும் வாய்ந்துறை துலாமுற்
சூழொளித் தாலு மியாழு மேந்தி
விளைந்துபத மிருந்து விருந்துபதந் தந்து
மலையவுங் கடலவு மரும்பலங் கொணர்ந்து
விலைய வாக வேண்டுநர்க் களித்தாங்]
அடு. குழவுதொழி லுதவும் ‡ பழுதில் வாழ்க்கைக்
கிழவ னென்போன் கிளரொளிச் § சென்னியி
னிளம்பிறை சூடிய விறையவன் வடிவினோர்
விளங்கொளிப் பூத வியன்பெருங் கடவுளுங்

(சுஉ)"செந்நிறப் பசும்பொன்" முதலாக (அஅ) "வியன்பெருங் கடவுள்" ஈறுக வணிகபூதத்தைக் கூறிற்று. அப்பூதத்துக்குநிறம் பொன்.

* சுச. பூணினன் - பூணினனாய்.
சுடு. மரபின் - மரபால். சுசு துலாம் - துலாக்கோல்.
(சுஉ) பொன்புரையு மேனிக் (அஅ) கடவுள்.
(சுசு) நாஞ்சிலும் துலாக்கோலுமேந்தியகையினனாய் (அடு) வாழ்க்கைக்கு (அசு) உரியோனென்று சொல்லப்படுவோனாகிய (அஅ) பூதக்கடவுளுமென்க.

---

[1] பெருங்கதை, உ. உ: கஙிக்.
(பி - ம்.) * 'செந்தீர்ப்' † 'மேனி' ‡ 'பழுதில்லாடகக்கிழவன்' § 'சென்னியன்'

[கருவிளை புரையு மேனிய னரியொடு
கூ0. வெள்ளரி புனைந்த பூணினன் றெள்ளொளிக்
காழகஞ் செறிந்த வுடையினன் காழகிற்
சாந்துபுலர்ந் தகன்ற மார்பின னேந்திய
[1] கோட்டினுங் கொடியினு நீரினு நிலத்தினுங்
காட்டிய பூவிற் கலந்த பித்தையன்
கூரு. கம்மியர் செய்வினைக் கலப்பை யேந்திச்
செம்மையின் வளருழுஞ் சிறப்புப் பொருந்தி]
[2] மண்ணுறு திருமணி புரையு மேனிய
ணெண்ணிறக் காழகஞ் சேர்ந்த வுடையினை
யுடற் கமைந்த வவற்றொடு பொருந்திப்
க00. பாடற் கமைந்த பலதுறை போகிக்
கலிகெழு கூடற் பலிபெறு பூதத்
தலைவ னென்போன் முனுந் தோன்றிக்
கோமுறை பிழைத்த நாளி லிங்ஙகர்
தீமுறை யுண்பதோர் திறனுண் * டென்ப
க0ரு. தாமுறை யாக வறிந்தன மாதலின்
யாமுறை போவ தியல்பன் றேவெனக்
கொங்கை குறித்த கொற்ற நங்கையு
னுற்பாற் பூதமும் பாற்பாற் பெயரக்
[3] கூல மறுகுங் கொடித்தேர் வீதியும்
கக0. [4] † பால்வேறு தெரிந்த நால்வேறு தெருவு
[முரக்குரங் குயர்த்த வொண்சிலை யுரவோன்]

(கூள) "மண்ணுறுதிருமணி" முதலாகப் (க0க - உ) "பலிபெறுபூதத்தலைவன்" ஈறாக வேளாண்பூதத்தைக்கூறிற்று அதற்குநிறம் நீலம்.

கூள. திருமணி - நீலமணி. க்கூ. ஆடற்கமைந்தவை - வாச்சியம்.

க00. துறைபோகல் - முடியவறிதல்.

(க00) முடியப்போகிப் (க0க) பலிபெறுபூதமென்க.

ஙகூ - க0உ. இந்நால்வருந்தோன்றி.

க0ச. தீமுறையுண்பது - தெருப்பு நியாயமாகவுண்பது.

க0ரு- ஆமுறையாக - ஆவதொரு நியாயமாக; இன்னும், ஆமுறையாக வறிந்தனம் - மேல் வரக்கடவதொர்விதியென்று முன்னேயறிந்தேம்.

கக0. நால்வேறுதெரு - நால்வகை வருணத்தார்தெரு.

---

[1] நால்வகைப்பூக்கள், [2] மூ. புறநா. இசு.

[3] சிலப். சஎ: உகக. [4] சிலப். சஎ: உகஉ.

(பி - ம்.) * 'என்பதியாமுறையாகவறிச்தன மன்றேநாம்பாறி" † 'பால்வகை தெரிந்த நால்வேறு தெருவுங் காவெரி யுண்டநாட்'

[1] காவெரி யூட்டிய நாள்போற் * கலங்க
வறவோர் மருங்கி னழற்கொடி விடாது
மறவோர் சேரி மயங்கெரி மண்டக்
கஅ. கறவையுங் கன்றுங் கனலெரி சேரா
[2] வறவை யாய ரகன்றெரு வடைந்தன
மறவெங் களிறு மடப்பிடி நிரைகளும்
விரைபரிக் குதிரையும் புறமதிற் பெயர்ந்தன
சாந்தந் தோய்ந்த வேந்திள வனமுலை
கஉ. மைத்தடங் கண்ணுர் மைந்தர் தம்முடன்
செப்புவா யவிழ்ந்த தேம்பொதி நறுவிரை
நறுமல ரவிழ்ந்த நாறிரு † மூச்சித்
துறுமலர்ப் பிணையல் சொரிந்த பூந்துகள்
குங்கும மெழுதிய கொங்கை முன்றிற்
கஉ. டைங்கா ழாரம் பரிந்தன பரந்த
தூமென் சேக்கைத் ‡ தனிப்பதம் பாராக்
[3] காமக் கள்ளாட் டடங்கினர் மயங்கத்
திதலை யல்குற் றேங்கமழ் குழலியர்
[4] குதலைச் செவ்வாய்க் குறுநடைப் புதல்வரொடு

கஉஉ. கா - காண்டாவனம்.

கஉங. அறவோரிடத்து அழற்கொடி விடாதாய்.

கஉசு. அறவை - அறத்தையுடைய.

கஉஎ - சு. கனலெரி சேராவாய் ஆயர் தெருவிலடைந்தன.

கஉக. செப்பு வாய்திறந்து சொரிந்தவிரை - சாந்து புழுகுநெய் முதலாயின.

கஉக - ங. [5] செப்பிலேவாயவிழ்ந்த பிணையலெனைக்கூட்டி; நறுவிரையையுடைய பிணையல், முச்சிப்பிணையலென்றுமாம். நறுமலரவிழ்தல், முச்சிக்கடை.

கஉசு. தனியின்செவ்வி பார்க்கவேண்டாத; தனியளவு விட்டிராத வென்றுமாம்; இவர் பிள்ளைபெறுதவர்.

கஉடு - சு. பரிந்தனபரந்த சேக்கை - கையற்றுப்பரந்த சேக்கை

கஉள. அடங்கினர் மயங்க - ஒழிந்து சோர.

---

[1] சிறுபாண். உருஅ. [2] 'அறவையாயர்' சிலப். கஎ: கஉ0 - உக்.

[3] 'திருக்கியகாமக்கள்ளாட்டி' மணி. உடு: ஙக. [4] மூ. மணி. எ: நிள.

[5] செப்பு - மலருமரும்புகள் வைத்திருக்கும் பூஞ்செப்பு; நற். ஙஙள: குறுந். ங; மணி. ச: சுடு; சூளா. மந்திர. நிசு; பெருங். க: ஙஙு, எசு.

(பி - ம.) * 'கலங்கி' † 'முச்சிப்புதுமலர்' ‡ 'தனிடதங்காமக்கடவுள்கள்.

கஙo. * பஞ்சியா ரமளியிற் றுஞ்சுதயி லெடுப்பி
வானரைக் கூந்தன் மகளிரொடு † போத
[1] வருவிருந் தோம்பி மனையற முட்டாப்
பெருமனைக் கிழத்தியர் பெருமகிழ் வெய்தி
யிலங்குபூண் மார்பிற் கணவனை யிழந்து

கஙரி. சிலம்பின் வென்ற சேயிழை நங்கை
கொங்கைப் பூசல் கொடிதோ ‡ வன்றெனப்
பொங்கெரி வானவற் றெழுதன ரேத்தின
[2] ரெண்ணுன் கிரட்டி யிருங்கலை பயின்ற
பண்ணியன் மடந்தையர் பயங்கெழு வீதித்

கசo. தண்ணுமை முழவந் தாழ்தரு தீங்குழல்
[3] பண்ணுக்கினை பயிரும் § பண்ணியாழ்ப் பாணியொடு
நாடக மடந்தைய ராடாங் கிழந்தாங்
கெந்நாட் டாள்கொல் யார்மகள் கொல்லோ
விந்நாட் டிவ்வூ ரிறைவனை யிழந்து

கசரி. தேரா மன்னனைச் சிலம்பின் வென்றிவ்
வூர்தீ யூட்டிய வொருமக ‖ ளென்ன
வந்தி விழவு மாரண வோதையுஞ்
செந்தீ ¶ வேட்டலுந் தெய்வம் பரவலு
மனைவிளக் குறுத்தலு மாலை யயர்தலும்

கஙo. வழங்குகுரன் முரசமு மடிந்த மாநகர்க்
காதலற் கெடுத்த நோயொ டுளங்கனன்
[4] மூதூலைக் குருகி னுயிர்த்தன ளுயிர்த்து
மறுகிடை மறுகுங் கவலையிற் ** கவலு

கஙசு. கொடிதன்று - நியாயம்.

கஙக. பண்ணியன்மடந்தையர் - இசையறிவார்.

கசஉ. நாடகமடந்தையர் - தளியிலார்.

(கஙக) வீதியிடத்து (கசஉ) அரங்கிழந்து.

கசள. அந்திவிழவு - சீபலி.

கசஅ. தெய்வம்பரவல் - தெய்வபூசனை.

கஙஉ. மறுகிடைமறுகும் - மறுகிலேசுழன்றுதிரியும். கவலை - குறுந் தெரு. கவலும்.....போம்.

---

[1] குறள். அசு. [2] 'எண்ணெண்கலையோர்' (சிலப். கசு: கசுள): "யாழ்முத லாகவுபத்தொருநான், கேளிமகளிர்க்கியற்கை" பெருங். க: ஙஇ: அச - நி.

[3] மணி. எ: சசு. [4] "ஊதூலைக்குருகினுயிர்த்தகத்தடங்காது" மணி. உ: சஙு.

(பி - மீ.) * 'பாலாரமளித்', 'பல்லாரமளித்' † 'மயக்க' ‡ 'இன்றென' § 'பணியாழ்ப்பாணரொடு' ‖ 'எனவுமந்தி' ¶ 'வேட்கையின்' ** 'கவலையும்'

[1] மியங்கலு மியங்கு மயங்கலு மயங்கு
கடுடு. [2] மாரலு ருற்ற வீரபத் தினிமுன்
கொந்தழல் வெம்மைக் கூரெரி * பொருஅள்
வந்துதோன் றினண் மதுரா பதியென்.

வெண்பா.

[3] மாமகளு நாமகளு மாமயிடற் செற்றுகந்த
கோமகளுந் தாம்படைத்த கொற்றத்தா—ணுமை-
முதிரா முலைகுறைத்தாண் முன்னமே வந்தாண்
[4] மதுரா பதியென்னு † மாது.

(கங்கு) விலைமடந்தையரது வீதியில் (கசஉ) மடந்தையர் (கசo) தண்ணு மைமுழவு குழல் (கசக) யாழ்ப்பாணி இவற்றுடனே (கசஉ) ஆடும் அரங்கினை யிழந்து (கசசு) இவ்வொருமகள் (கசங) எந்நாட்டாள்கொல்? யார்மகள் கொல் (கசசு) என்ன (கடுo) நகரியிலே (கடுச) இயங்குதலையுஞ் செய்யும்; மயங்கு தலையுஞ்செய்யும்; இவ்வகை (கடுடு) ஆருருற்ற வீரபத்தினிமுன் (கடுசு) ஊர் எரியுண்டதற்குப் பொருளாய் (கடுஎ) வந்து தோன்றினள், மதுராபதியென் னும் தேவதையென்க.

"மாமகளும்":—தாம்படைத்த கொற்றத்தாள் - இவர்கள்படைத்த கொற்ற மெல்லாமுடையாள்; "நாவினும் * * * வாளினும்" என்ற மூவகைவென் றியும்; மாமகள் - சீதேவி. நாமமூலை - அச்சத்தைச்செய்யுமூலை.

உஉ.—அழற்படுகாதை முற்றிற்று.

---

[1] "சுழலஞ்சுழலு, மோடஞ்மோடும்" மணி. ங: ககங - உ.

[2] மு. சிலப். பதி. சஉ.

[3] இச்செய்யுளிலுள்ள முறைப்படியே 'திருவின் செல்வி யொருதனிக் கொழுந, புலமை சான்ற கலைமகள் கணவ, வீரிய மடந்தை பேரிசைக் கிழவ' எனஞானமிருதம், சசு - ஆம் செய்யுளிலும் அமைத்திருத்தல் காண்க.

[4] "மதுராபதியென்னுமாபெருந்தெய்வம்" மணி. உசு: ஙங.

(பி - ம்.) * 'போன்றுள்வந்து' †'மான்'

இருபத்து மூன்றாவது

கட்டுரைகாதை.

சடையும் பிறையுந் தாழ்ந்த * சென்னிக்
குவளை யுண்கட் டவளவாண் முகத்தி
கடையெயி றரும்பிய பவளச் † செவ் வாய்த்தி
யிடைநிலா விரிந்த நித்தில ‡ நகைத்தி
இடமருங் கிருண்ட நீல மாயினும்
வலமருங்கு பொன்னிறம் புரையு மேனிய
னிடக்கை பொலம்பூந் தாமரை யேந்தினும்
வலக்கை யஞ்சுடர்க் § கொடுவாள் பிடித்தோள்
வலக்கால் புனைகழல் கட்டினு மிடக்கா
றனிச்சிலம் பரற்றுந் தகைமையள் பனித்துறைக்
கொற்கைக் கொண்கன் குமரித் துறைவன்
பொற்கோட்டு வரம்பன் பொதியிற் பொருப்பன்
குலமுதற் கிழத்தி யாதலி னலமந்
தொருமூலை குறைத்த திருமா பத்தினி
யலமரு திருமுகத் தாயிழை நங்கைதன்
|| முன்னிலை யியாள் பின்னிலைத் தோன்றிக்
கேட்டிசின் வாழி நங்கையென் குறையென
வாட்டிய திருமுகம் வலவயிற் கோட்டி
¶ யாரைநீ யென்பின் வருவோ யென்னுடை
யாரஞ ரெவ்வ மறிதி யோவென

க. சடையும் பிறையும் - சடையிடத்தேபிறையும்.

ங. கடையெயிறு - பன்றிக்கொம்புபோலப் புறப்பட்ட எயிறு.

அ. கொடுவாள் - மழு.

கஙு. குலமுதலாதலின் - அடியேதொடங்கி இரட்சித்தற்குரியளாதலின்.

கசு. முன்னிலையியாள் - முன்னில்லாள்; அவளுக்கு முன்னிற்றலைச் செய்யாள்.

(பி - ம்) * 'செந்நிறக்' † 'செவ்வா, யிடைநிலா' ‡ 'நகைச்சியிடை' § 'நெடுவாள் பிடித்தன, னிடக்காற் றனிச்சிலம் பரற்றிலும் வலக்காற் புனைகழல் கட்டிந் தகைமையள்' || 'பின்னிலையியாண முன்னிலைத்தோன்றி' ¶ 'யாரிவ ளென்முன் முந்நாளிவளெ ஞரஞ செவ்வ மறியா தாரெனை'

வாரஞ ரெவ்வ மறிந்தே *ணணியிழாஅய்
மாபெருங் கூடன் மதுரா பதியென்பேன்
கட்டுரை யாட்டியேன் † யானின் கணவற்குப்
பட்ட கவற்சியேன் பைந்தொடி கேட்டி

உடு. பெருந்தகைப் பெண்ணென்று கேளாயென் னெஞ்சம்
வருந்திப் புலம்புறு நோய்
தோழிநீ ‡ யீதொன்று கேட்டியெங் கோமகற்
கூழ்வினை வந்தக் கடை
மாதரா யீதொன்று கேளுன் கணவற்குத்

கூ0. தீதுற வந்த வினை ; காதின்
[1] மறைநா வோசை யல்ல தியாவது
மணிநா வோசை கேட்டது மிலனே
யடிதொழு திறைஞ்சா மன்ன ரல்லது
[2] குடிபழி தூற்றுங் கோலனு மல்ல

கூடு. னின்னுங் கேட்டி நன்னுதன் மடந்தையர்
மடங்கெழு நோக்கின் § மதமுகந் திறப்புண்
டிடங்கழி நெஞ்சத் திளமை யானை
[4] கல்விப் || பாகன் கையகப் படாஅ
தொல்கா ¶ வுள்ளத் தோடு மாயினு

சூ0. மொழுக்கொடு புணர்ந்தவிவ் விழுக்குடிப் பிறந்தோர்க்

உங. கட்டுரையாட்டியேன் - ஒருவார்த்தைசொல்லுதலுடையேன்.

உங - சு. நின்கணவற்குப்பட்ட கவற்சியுடையேன்; ஆயினும் நீ கேளென்க.

உள-அ. ஊழ்வினை வந்தபடி கேளாய்; வந்தக்கடை, ககரவொற்றுவிகாரம். (கூ0) வினை (உசு) கேளென்க.

ஙக. மறைநா - அந்தணர்நா ; ஓசை - ஓதினுர்வாயில் வரும் நியமமான வார்த்தை.

ஙங. மன்னர் பழிதூற்றுவதல்லது.

ஙசு. மடங்கெழு நோக்கின் - மகளிருடைய பார்வையாலே..... சிலேடையாக்குக.

---

* "ஓதலந்தணர்வேதம்பாட" (மதுரை. சுருசு) ; "நான்மறைக் கேள்வி நவில்குர லெடுப்ப, வேம வின்றுயி லெழுதல் லல்லதை, வாழிய வஞ்சியுங் கோழியும் போலத், கோழியி னெழாதெம் பேரூர் துயிலே" பரி. ப. களஞ. [2] புறநா. எஉ.

[3] "இடங்கழிகாமமொ டடங்கான்" மணி. கo: உஉ ; கஅ: ககசு.

[4] "கல்விப்பாகரிற் காப்புவலியேரூட்டி' மணி. கஅ: ககஙி.

(பி - மீ.) * 'அணியிழாய், மாபெருங்கூடன் மதராபதியெனுங் கட்டுரையாட்டியேன்' † 'யானுன்' ‡ 'இகதொன்று கேளாயெங்' § 'மதிமுகம்' || 'பாகர்கையகப் படாது' ¶ 'உள்ளமொடோமொயினும்', 'உள்ளமோமொயினும்'

கிழுக்கந் தாரா திதுவுங் கேட்டி
[1] யுதவா வாழ்க்கைக் * கீரந்தை மனைவி
புதவக் கதவம் † புடைத்தன னெருநா
ளரைசு வேலி யல்ல தியாவதும்

சதி. புரைதீர் வேலி யில்லென மொழிந்து
மன்றத் திருத்திச் சென்றீ ரவ்வழி
யின்றவ் வேலி காவா தோவெனச்
[2] செவிச்சூட் டாணியிற் புகையழல் ‡ பொத்தி
நெஞ்சஞ் சுடுதலி னஞ்சி நடுக்குற்று

நி0. [3] வச்சிரத் தடக்கை யமரர் கோமா
னுச்சிப் பொன்முடி யொளிவளை யுடைத்தகை
§ குறைத்த செங்கோற் குறையாக் கொற்றத்
திறைக்குடிப் பிறந்தோர்க் கிழுக்க மின்மை
யின்னுங் || கேட்டி நன்வா யாகுதல்

நிநி. * பெருஞ்சோறு பயந்த திருந்துவேற் றடக்கை

சஉ.. உதவாவாழ்க்கை - பிறர்க்கு உதவமாட்டாத மிடிவாழ்க்கை.

சங. புதவக்கதவம் - கதவில்லாவீடு; குழை..... .....

சசு. மன்றம் [4] அரணில்லாதவீடு. அவ்வழி - நீர் போகின்ற அக்காலத்து.

சஅ. செவிச்சூட்டாணி - செவியைச்சுடுவதாகிய ஆணி; சுடுதலுள்ள இறைச்சி சூட்டிறைச்சியானாற்போல.

நிக - உ. கைகுறைத்தசெங்கோல் - கைகுறைத்தற்குக் காரணமாகிய செங்கோலையும்.

நிச. நன்வாயாகுதல் - நன்றாகிய மெய்யாதல்.

நிநி. பெருஞ்சோறுபயந்த - பாண்டவர்கள்படைக்கும் துரியோதனன் படைக்கும் சேரன் சோறிட்டதனை.

---

[1] சஉ-நிங. பாண்டியன் கைகுறைத்த செய்தியை இப்புத்தகம் உஉ-ஆம் பக்கத்தின் அடிக்குறிப்பாலுணர்க; "கையிரித்தான் மாறன் கதவிடித்த குற்றத்தா, லெய்யுஞ் சிலைக்கை யிரங்கேசா", "கொற்கையான் மாறன் குலசே கரவழுதி, பொற்கையா னைக்தை போதாதோ" என்றார் பிறரும்; திருவால. இள: ங - பார்க்க.

[2] 'சுடுதாராசஞ் செவிசெறித்தாங்கு' பெருங். க. சள: உஙஅ. [3] சிலப். கக: உசு.

[4] நிஙி. 'பெருஞ்சோறு பயந்த' என்றது சேரமான் பெருஞ்சோற்றுதியஞ் சேரலாதன் பாரதயுத்தத்தில் எல்லோர்க்கும் உணவளித்த செய்தியை; "ஓரைவ ரீரைம் பதின்ம ருடன்றெழுத்த, போரிற் பெருஞ் சோறு போற்றுது தானளித்த, சேரன்"; (சிலப். உசு: ஊசல்வரி); "உதியஞ் சேரல், பெருஞ் சோறு கொடித்த ஞான்றை" (அகநா. உஙங); "அலங்குளைப் புரவி யைவரொடு சினீஇ, நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை, யீரைம் பதின்மரும் பொருதுகளத் தொழியப், பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடித்தோய்" (புறநா. உ.) [5] 'அம்பலந்தாழ்பூட்டிவார்' பழ. கசு - கஙடு.

(பி - ம்) * 'கீரத்தன்மனைவி' † 'புடைத்தனெனது' ‡ 'பொங்கிநெஞ்சகம்' § 'குறைத்துச்' || 'கேட்டியோர்தன்'

திருநிலை பெற்ற [1] பெருநா ளிருக்கை
யறனறி செங்கோன் மறநெறி நெடுவாட்
புறவுநிறை புக்கோன் கறவைமுறை செய்தோன்
பூம்புனற் பழனப் * புகார்நகர் வேந்தன்
சுo நுங்கா னிலையு † ணன்னு டதனுள்
வலவைப் பார்ப்பான் பராசர னென்போன்
குலவுவேற் சேரன் கொடைத்திறங் கேட்டு
வண்டமிழ் [2] மறையோற்கு ‡ வானுறை கொடுத்த
திண்டிறல் நெடுவேற் § சேரலற் காண்கெனக்
சுடு. காடு நாடு மூரும் போகி
நீடுநிலை மலயம் பிற்படச் சென்றுங்
[3] கொன்றுபுரி கொள்கை யிருபிறப் பாளர்
[4] மூத்தீச் செல்வத்து நான்மறை முற்றி
யையம்பெரு வேள்வியுஞ் செய்தொழி லோம்பு
எo. மறுதொழி லந்தணர் பெறு || முறை வகுக்க

நிசு. பெருநாளிருக்கை - பெரிய நாளோலக்கத்து இருக்கை.

நிள. மறநெறி நெடுவாள் - மறத்திலே யொழுகின வாள்.

சுசு. நீடுநிலைமலயம் - போகிய நிலையையுடையமலயம்.

சுள. ஒன்று - முத்தி. இருபிறப்பு - உபநயனத்துக்குமுன் னும்பின் னும்.

சுஅ. மூத்தீ - ஆகவனீயம், காருகபத்தியம், தக்கிணக்கினி.

எo. அறுதொழிலாளர் பெறுமுறை - ஓதல் ஓதுவித்தல் வேட்டல் வேட்பித்தல் ஈதல் ஏற்றலென இக்குணங்களையுடையார் பெறுமுறையை. வகுக்க - அவனுக்குக்கூறுபடித்த.

---

[1] பெருநாளிருக்கை :— சேரனுடைய காலையோலக்கம்; 'தண்கட னுடை னெண்பூங் கோதை, பெருநாளிருக்கை' (மதுரை. நிஉச - நி) என. அந்நாளோலக்கம் பாராட்டப் பெற்றிருத்தல் காண்க.

[2] மறையோனென்றது பாலைக்கௌதமனாரை; இவருக்குச் சுவர்க்கங்கொடுத்த சேரன் இமயவரம்பன்றம்பி பல்யானைச் செல்கெழுகுட்டுவனென்பவன்; இதனைப்பதிற் றுப்பத்தின் மூன்றும்பத்திறுதியிலுள்ளதாகிய அடியில்வரும் வாக்கியத்தாலுணர்க; 'பல்யானைச் செல்கெழுகுட்டுவனைப் பாலைக்கௌதமனார் பாடினார் பத்துப்பாட்டு; .....பாடிப்பெற்றபரிசில்; நீர் வேண்டியது கொண்மினென யாணும் என்பார்ப்பனியும் சுவர்க்கம்புகல்வேண்டுமெனப் பார்ப்பாரிற்பெரியோரைக்கேட்டு ஒன்பது பெருவேள்வி வேட்பித்துப் பத்தாம்பெருவேள்வியிற் பார்ப்பானையும் பார்ப்பனியையும் காணராயினர்' சிலப். உஅ: கஙஎ - அ; 'துறக்கமெய்தியதொய்யாநல்லிசை, முதியர்ப் பேணியவுதியஞ்சேரல்' அகநா. உஙங. இச்சரிதை, பழமொழி கஎசு-ஆம் பாட்டி னும், தொல். புறத்திணை. சூ. உடு - கு. உரையினும் வந்துள்ளது.

[3] புறநா. நசுஎ. [4] மூருகு. கஅக-உ.

(பி - ம்.) * 'புகாஅ வேந்தன்' † 'நன்னுட்டதனுள்பலவைப்பாசான்' ‡ 'வான கக்கொடுத்த' § 'சேரற்காண்கென' || 'முறையெய்தி'

நாவலங் கொண்டு நண்ணு ரோட்டிப்
[1] பார்ப்பன வாகை சூடி யேற்புற
நன்கலங் கொண்டு தன்பதிப் பெயர்வோன்
செங்கோற் * றென்னன் றிருந்துதொழின் மறையவர்
எநி. தங்கா லென்ப தூரே யவ்வூர்ப்
பாசிலை பொதுளிய போதிமன் றத்துத்
தண்டே குண்டிகை † வெண்குடை காட்டம்
பண்டச் சிறுபொதி பாதக் காப்பொடு
களைந்தன ணிருப்போன் காவல் வெண்குடை
அ0. விளைந்துமுதிர் கொற்றத்து விறலோன் வாழி
[2] கடற்கடம் பெறிந்த காவலன் வாழி
விடர்ச்சிலை ‡ பொறித்த வேந்தன் வாழி
பூந்தண் பொருநைப் பொறையன் வாழி
மாந்தரஞ் சேரன் மன்னவன் வாழ்கெனக்
அரி. குழலுங் குடமியு மழலைச் செவ்வாய்த்
தளர்நடை யாயத்துத் தமர்முத னீங்கி
விளையாடு சிறுஅ ரெல்லாஞ் சூழ்தரக்

எக. நா வலங்கொண்டி - தருக்கஞ்சொல்லி நாவெற்றியையுடையோனாய் ; நா வலம் - நாவெற்றியென்க.

(எ0.) பெறுமுறைவருத்த (எசு) நன்கலங்கொண்டென்க.

(எக) நாவலங்கொண்டு ஓட்டிச் (எஉ) சூடிக் (எசு) கொண்டு தன்பதிப் பெயர்வோன் ; பெயர்வோன் பெயர்தர.

எச. திருந்துதொழின் மறையவர் - பஞ்சக்கிராமிகள்.

எநி. தங்கால் - திருத்தங்காலூர்.

எசு. அரசுகிற்குமன்று. எள. காட்டம் - சமித்து.

(எக) குடையையும் (அ0) கொற்றத்தையுமுடைய விறலோன்.

அச. வாழ்கென - வாழ்கவென்று சொல்ல.

அள. சிறுர்சூழ்தர - தன்னைச்சிறுரெல்லாம் சூழ்தர.

---

[1] பார்ப்பனவாகையினியல்பை, "கேள்வியாற்சிறப்பெய்தியானே, வேள்வியான்விறன் மிகுத்தன்று," "ஓதங் கரைதவழ்நீர் வேலி யுலகினுள், வேதங் கரைகண்டான் வீற்றி ருக்கு - மேதஞ், சுடுசுடர் தானுகிச் சொல்லவே வீழ்ந்த, விடுசுடர் வேள்வி யகத்து" என்பவற்றாலறிக; பு-வெ. வாகை. சு.

[2] அக - உ. சிலப்பதிகாரம், உஅ: கசுஎ - சு.

(பி - ம்.) * 'தென்னவன்றிருத்தொழில்' † 'ஒண்குடை' ‡ 'பொறித்தவிறலோன் வாழி'

* குண்டப் பார்ப்பீ ரென்னே டோதியென்
பண்டச் சிறுபொதி கொண்டு†போ மின்னெனச்
கூ0. சீர்த்தகு சிறப்பின் வார்த்திகன் புதல்வ
னலமர் செல்வன் ‡ பெயர்கொண்டு வளர்ந்தோன்
பாலூறு செவ்வாய்ப் படியோர் முன்னர்த்
தளர்நா வாயினு மறைவிளி வழூஅ
துளமலி யுவகையோ டொப்ப வோதத்
கூநி. § தக்கிணன் றன்னே மிக்கோன் வியந்து
முத்தப் பூணூ லத்தகு புனைகலங்
கடகந் தோட்டொடு கையுறை யீத்துத்
தன்பதிப் பெயர்ந்தன னக நன்கலன்
புனைபவும் பூண்பவும் பொருஅ ராகி
க00. வார்த்திகன் றன்னைக் காத்தன ரோம்பிக்
கோத்தொழி லிளையவர் கோமுறை || யன்றிப்
படுபொருள் வெளவிய பார்ப்பா னிவனென
விடுசிறைக் ¶ கோட்டத் திட்டன ராக
வார்த்திகன் மனைவி கார்த்திகை யென்போ
க0நி. ளலந்தன ளேங்கி யழுதன ணிலத்திற்
புலந்தனள் புரண்டனள் பொங்கின ளதுகண்டு
மையறு சிறப்பி னையை கோயிற்

அஅ. குண்டப்பார்ப்பீர் - பிழுக்கை மாணிகாள்; சிறுமாணிகாள், சிறு பிள்ளைகாளென்னினுமாம்.

கூக. ஆலமர் செல்வன்பெயர் - தக்கிணமூர்த்தி.

கூஉ. பாலூறுசெவ்வாயையுடைய பிரமசாரிகள்; படிமம் - படியென் றுயிற்று. படியோர் - தன்னே இளமையாலொப்பாருமாம்; படி - வேடமுமாம்.

கூக. புனைவனவும் பூண்பனவுமாக வேறுபடுதலிற் புனைபவும் பூண்பவு மென்றார்.

க0க. கோமுறையன்றி - இராசநீதியன்றி.

க0உ. படுபொருள் - புதையல்; களவுப்பொருளென்றுமாம்.

க0எ. ஐயைகோயில் - மதுரையிற்றுர்க்கைகோயில்.

(பி - ம்.) * 'குண்டைப்பார்ப்பீர்' † 'போமினென' ‡ 'பேர்' § 'தெக்கணன் றன்னே மிக்கென,' 'தக்கன்' || 'அன்றியும்' ¶ 'கோட்டமிட்டனர்'

* செய்வினைக் கதவந் திறவா தாகலிற்
றிறவா தடைத்த திண்ணிலைக் கதவ
கசo. மறவேன் மன்னவன் கேட்டனன் மயங்கிக்
கொடுங்†கோ லுண்டுகொல் கொற்றவைக் குற்ற
விடும்பை யாவது மறிந்தீ மின்னென
வேவ லிளையவர் காவலற் றெழுது
வார்த்திகற் கொணர்ந்த ‡ வாய்மொழி யுரைப்ப
கசரு. நீர்த்தன் றிதுவென நெடுமொழி கூறி
யறியா மாக்களின் முறைநிலை திரிந்தவென்
னிறைமுறை பிழைத்தது பொறுத்தனங் கடனெனத்
தடம்புனற் கழனித் தங்கா றன்னுடன்
மடங்கா விளையுள் வயலூர் நல்கிக்
கஉ0. கார்த்திகைக் கணவன் வார்த்திகன் முன்ன
ரிருநில மடந்தைக்குத் திருமார்பு நல்கியவ
டணியா வேட்கையுஞ் சிறிதுதணித் தனனே
நிலைகெழு கூட னீணெடு மறுகின்
மலைபுரை மாட மெங்கணுங் கேட்பக்
கஉரு. [1] கலையம்ர் செல்வி கதவந் திறந்தது
§ சிறைப்படு கோட்டஞ் சீமின் யாவதுங்
|| கறைப்படு மாக்கள் கறைவீடு செய்ம்மி
¶ னிடுபொரு ளாயினும் படுபொரு ளாயினு

கசரு. நெடுமொழிகூறி - புகழ்ந்துசொல்லி.

கசகூ. வயலூர் - ஊரின்பெயர்.

கசஅ - கூ. இவன் பிறந்த தங்காலுடன் வயலூரென்பதோரூரும் விட்டு.

கஉக. திருமார்புநல்குகை - தண்டனீடுகை. அவளென்றது, நிலமடந்தையை. அவனேப்பணிக்தென்பார், இருநிலமடந்தைக்குத் திருமார்பு நல்கி யென்றார்.

கஉஉ. மார்பினேப்பெறுமையால் தணியாதவேட்கை.

கஉஎ. கறை - கடமை.

கஉஅ. இடுபொருள் - பிறர்வரவிட்ட பொருள். படுபொருள் - புதையல்; அன்றித் தன்தேட்டத்தால் மிக்கபொருளுமாம்; [2] "படுபயன் வெஃகி" என் றுற்போல.

---

[1] 'கலைகாமுறுவி' பெருங். க. இஉ: உச. [2] திருக்குறள், கஎஉ.

(பி - ம்.) * 'செய்வுறு' † 'கோல்கண்டுகொல்.....உற்றதிடும்பையாவது மறிமி னின்றென' ‡ 'வாய்மொழியுரைப்பவறியாமக்களின்' § 'சிறைபடு' || 'கறைபடு' P படு பொருளாயினு மிடுபொருள்'

முற்றவர்க் குறுதி பெற்றவர்க் காமென
கஙூ0. யாஅ னெருத்தத் தணிமுர சிரீஇக்
கோன்முறை யறைந்த கொற்ற வேந்தன்
மூன்முறை பிழைத்த * தகுதியுங் கேணீ
[1] யாடித் திங்கட் பேரிருட் பக்கத்
[2] தழல்சேர் குட்டத் தட்டமி ஞான்று
கஙூஙி. வெள்ளி வாரத் தொள்ளெரி யுண்ண
வுரைசான் மதுரையோ டுரைசுகே டுறுமெனு
முரையு † முண்டே நிரைதொடி யோயே
கடிபொழி லுடித்த கலிங்கநன் னாட்டு
வடிவேற் றடக்கை வசுவுங் குமரனுந்
கசஂ0. தீம்புனற் பழனச் சிங்க புரத்தினுங்
காம்பெழு கானக் கபில புரத்தினு
‡ மரைசாள் செல்வத்து நிரைதார் வேந்தர்
வீயாத் திருவின் விழுக்குடிப் பிறந்த
தாய வேந்தர் தம்முட் பகையுற்
கசஙி. விருமுக் காவதத் திடைநிலத் தியாங்கணுஞ்
செருவெல் வென்றியிற் செல்வோ ரின்மையி
னெரும்பொருள் வேட்கையிற் பெருங்கலன் சுமந்து
கரந்துறை மாக்களிற் காதலி § தன்னொடு

கஉக. உற்றவர்க்கு - எடுத்தார்க்குரித்து. பெற்றவர்க்கு - கொண்டவர்களுக்கு; அவ்விருவர்க்கும் உறுதி ஆமென்க.

ஆதலால், தமக்காகா; உற்றவர்க்குப் பெற்றவர்காமென்றறைவித்தான்.

கஙக. கோன்முறையறைந்த - இராசநீதியாகச்சொன்ன.

கஙங. பேரிருட்பக்கம் - கிருட்டினபக்கம்.

கஙச. அழல்சேர்குட்டம் - [கார்த்திகைபரணி.]

கஙஎ. உரை - சோதிடவார்த்தை; உரையுமுண்டென்றது, எதிரது தழீஇய எச்சவும்மை.

கஙக - சஎ. வசுவும் குமரனுமாகிய வேந்தரிருவர் தம்மில் தாயவேந்தர்.

தசசு. இருவரது மேலவு வெல்வென்றி நிகழுகை காரணமாகச் செல்வோரின்மையால்.

(கசஅ.) கரந்துறைமாக்களைப்போல (கசஎ) ஆபரணங்களைச்சுமந்து போந்து; போந்தென்றுஒருசொல் வருவிக்க.

---

[1] தன். சூ. களவி - மயிலை. மேற். [2] "அழற்குட்டத்தி" புறநா. உஉசு.

(பி - ம்.) * 'தகுதிகேட்டிநீ' † 'உண்டுநிரை' ‡ 'உரைசால் செல்வத்து நிரைதார்வேந்தன்வீயாச்சிறப்பின்' § 'தன்னுடன்கிங்கா'

சிங்கா வண்புகழ்ச் சிங்க புரத்திறை
கநிடு. * ரங்கா டிப்பட் டருங்கலன் பகருஞ்
சங்கம னென்னும் வாணிகன் றன்னை
மூந்தைப் பிறப்பிற் பைந்தொடி கணவன்
† வெந்திறல் வேந்தற்குக் கோத்தொழில் செய்வோன்
பரத னென்னும் பெயரனக் கோவலன்
கநிடு. விரத நீங்கிய வெறுப்பின ஞதலி
னெற்ற னிவனெனப் பற்றினன் கொண்டு
வெற்றிவேன் மன்னற்குக் காட்டிக் ‡ கொல்வுழிக்
கொலைக்களப் பட்ட சங்கமன் மனைவி
நிலைக்களங் காணு ணீலி யென்போ
கசுஎ. ளரசர் முறையோ பரதர் முறையோ
வூரீர் முறையோ சேரியீர் முறையோ வென
மன்றினு மறுகினுஞ் சென்றனள் பூசலிட்
டெழுநா ளிரட்டி யெல்லை சென்றபின்
றெழுநா ளிதுவெனத் தோன்ற வாழத்தி
கசுநி. மலைத்தலை § யேறியோர் மால்வியஞ் பேணியிற்
‖ கொலைத்தலை மகனைக் கூடுபு நின்றே
ளெம்முறு துயரஞ் செய்தோ ரியாவதுந்
தம்முறு துயரமிற் ¶ றுகுக வென்றே

கசக - நி.). சிங்கபுரத்தின் ஓரங்காடியிடத்தாளுகியிருந்த.

கநிஉ. பைந்தொடி, முன்னிலை.

கநிச. பரதனென்றது, கோவலன்து முற்பெயர்.

கநிநி. விரதநீங்கிய - கொல்லாவிரதத்தால் நீங்கிய. வெறுப்பினஞதலின் - வெறுக்கப்படுபவனுதலால்.

கசுநி. வியம்பேணியில் - விசும்பெல்லையில்; [1] "நளியிரு முந்நீ ரேணி யாக" [என்றார்.

கசுந. தலைமகனைக் கூடுவதாகநின்றவள்.

கசுஎ. செய்தோரென்னுமெழுவாய், படுவார்களாகவென்னும் வியங் கோள் வருவித்தலோடு முடிந்தது. யாவதும் - எப்படியானும்.

கசுஅ. தம்முறு துயரமிற்றுகுக - தாங்களும் இப்படிப் படுவார்களாக். நான்பட்டதே படுகவென்றது, பழியிட்ட படியைக்கொண்டு.

(கசுநி) ஏறி (கசுக) விழுவோளென்க.

---

[1] புறநானூறு, கஙி.

(பி - ம்.) * 'அங்காடிப்படவிருந்துகலன்' † 'வெந்தொழில்' ‡ 'கொல்வுழிஇ' § 'ஏறிமால்' ‖ 'குலத்தலை' ¶ 'ஆகுகவென'

விழுவோ னிட்ட வழுவில் [1] சாபம்
களo. பட்டனி ராதலிற் கட்டுரை கேணீ
யும்மை வினைவந் துருத்த காலைச்
செம்மையி லோர்க்குச் செய்தவ முதவாது
[2] * வாரொலி கூந்தனின் மணமகன் றன்னை
யீரேழ் நாளகத் தெல்லை நீங்கி
களரு. வானோர் தங்கள் வடிவி னல்லதை
யீனோர் † வடிவிற் காண்ட லில்லென
மதுரைமா தெய்வ மாபத் தினிக்கு
விதிமுறை சொல்லி யழல்வீடு கொண்டபின்
கருத்துறு கணவற் கண்டபி னல்ல
கஅ0. திருத்தலு ‡ மில்லே னிற்றலு மிலனெனக்
கொற்றவை வாயிற் பொற்றொடி தகர்த்துக்

களக - உ. உம்மைவினை.....புதவாது - மமைபிற்செவ்விய மனமில்லா தோர்க்கு அக்காலத்துச் செய்தவினை வந்து பலிக்குங்காலத்து முன்புசெய்த நல்வினை யாதும் உதவாது; இத்தீவினைவந்து கெடுப்பதற்கு முன்னேவந்து வுதல் பின்புதவுதல் செய்யுமித்தனை; அந்நல்வினையும் உதவாமற்போகாது; பாவமானதும் தனியே அனுபவிக்கவேண்டும்.

களசு-அ. ஈனோர்-ஈங்குள்ளோர். இல்லென்று மதுரைமாதெய்வம்சொல்ல.

கஅக. பொற்றொடி - பொலிவினையுடைய சங்குவளை; துர்க்கைகோயில் வாயிலிலே தன்கைவளையைத் தகர்த்து.

---

[1] களஅ - சுரூ. இச்சாபவரலாற்றை இப்படியே மணிமேகலையில் வஞ்சி மாநகர்புக்க காதையிலும் மணிமேகலைக்குக் கண்ணகிகூறியதாகக் கூறினர்; அது வருமாறு:-'வேட்கை துரப்பக் கோட்டம் புகுந்து,வணங்கி நின்று குணம்பல வேத்தி, யற்புக்கட னில்லாது நற்றவம் படராது, கற்புக்கடன் பூண்டு நுங்கடன் முடித்தி, திருவுளல் வேண்டுமென் றழுதுமுன் னிறப, வொருபெரும் பத்தினிக் கடவுளாங் குரைப் போ, வெம்மிறைக் குற்ற விடுக்கண் பொறுது, வெம்மையின் மதுரை வெவ்வழற் படு தாண், மதுரா பதியெனு மாபெருந் தெய்வ, மிதுநீர் முன்செய் வினையின் பயனுற், காவில் பூம்பொழிற் கவிங்கதன் னுட்டித், தாய மன்னவர் வசுவுங் குமரனுஞ், சிங்க புரமுஞ் செழுநீர்க் கபிலையு, மங்காள் இன்றே ரடற்செரு வுறுநாண், மூவிரு காவத முன்னுத ரின்றி, யாவரும் வழங்கா விடத்திற் பொருள்வேட்டுப், பல்கலங் கொண்டு பலரறி யாம, லெல்லீ யாளோ டரிபுர மெய்திப், பண்டக் கலம்பகர் சங்கமன் றன்னைக், கண்டனர் கூறத் தையனின் கணவன், பார்த்திபன் றெழில்செயும் பரத வென்னுந்,தித்தொழி லாளன் றெற்றெனப் பற்றி,யெற்ற னிவனென வுரைத்துமன் னற்குத், குற்றமி லோனைக் கொலைபுரிந் திட்டன, னுங்கவன் மனைவி யழுதன ளரற்றி, யேங்கி மெய்பெயர்ப்போ ளிறுவரை யேறி, யிட்ட சாபங் கட்டிய தாரு, மும்மை வினைவந் துருத்த லொழியா தெனு, மெய்ம்மைக் கிளவி விளம்பிய பின்னுஞ், சீற்றங் கொண்டு செழுநகர் சிதைத்தீ தென்" (இ-நசு)

[2] களங - சு. மூ: சிலப்பதிகாரம், பதிகம், இ0 - iஇசு.

(பி - மி.) * 'வாருமுகந்தன்மணமகன்' † 'வடிவினிற்' ‡ 'நிலனேபிறத்தலும்'

கிழ்த்திசை வாயிற் கணவனொடு புகுந்தேன்
மேற்றிசை வாயில் வறியேன் * பெயர்கென
விரவும் பகலு மயங்கினள் கையற்
கஅரு. றுகவுநீர் வையை யொருகரைக் கொண்டாங்
† கவல வென்னு ளவலித் திழிதலின்
‡ மிசைய வென்னுண் மிசைவைத் தேறலிற்
கடல்வயிறு கிழித்து மலிநெஞ்சு § பிளந்தாங்
கவுணரைக் கடந்த சுடரிலை நெடுவே
கஙo. னெடுவேள் குன்ற மடிவைத் தேறிப்
பூத்த வேங்கைப் பொங்கர்க் கீழோர்
தீத்தொழி லாட்டியேன் யானென் றேங்கி
யெழுநா ளிரட்டி யெல்லை சென்றபின்
றெழுநா ளிதுவெனத் ‖ தோன்ற வாழ்த்திப்
கஙஉ. பீடுகெழு நங்கை பெரும்பெய ரேத்தி
வாடா மாமலர் மாரி பெய்தாங்
கமரர்க் கரசன் றமர்வந் ¶ தேத்தக்

கஅங. தமியேனுய்ப் பெயராகின்றேனெனைச் சொல்லி.

கஅச. இரவும்பகலுமயங்கினள் - இரவும் பகலும் அறியாதுமயங்கி.

கஅசு. பதறியிழிதலாற் குழியென்று பார்க்கிலள்.

கஙo. நெடுவேள்குன்று - திருச்செங்கோடு. அடிவைத்தேறியென்றார், அதற்குமூன்பு வருத்தத்தாற் கால் நிலத்துப்பாவாமையால்.

கஙங. வேங்கையின்கீழே நின்றெனக.

கஙஉ. குறத்தியர்கேட்கத் தீத்தொழிலாட்டி யேன் யானென்றுசொல்லி ; ஏங்கியென்றது - சொல்லியென்றபடி.

கஙங. எழுநாளிரட்டி - வேங்கை நீழலினின்ற நாளளவு. எல்லையென்றது - பகலை. அவணின்ற நாளளவு, அன்று பதினுலாநாளாயிற்று. பதினுலாநாள் பகற்பொழுது சென்றபினெனக ; பதிகத்திலும் [1] "ஈரேழ் நாளகத்தெல்லை" என்றார்.

கஙச-எ. அமரர்க்கரசன் தமர்வந்து, கண்ணகி தன்கணவனைத் தோன்ற வாழ்த்தித் தொழுநாளிதுவெனக்கருதி இவள்பெயரைச்சொல்லி மலரைத்தூவி ஏத்தினர்; இவள்பெயர் மந்திரோத்தியாதலால்; இன்னும், கண்ணகி கோவலனைத் தோன்றவாழ்த்தி வானவூர்தியேறினளென்றுமாம்.

கஙஉ-ங. பெரும்பெயரேத்திமலர்மாரிபெய்து தமர்வந்தேத்த வானவூர்தியேறினளெனக.

---

[1] சிலப்பதிகாரம், பதிகம், நிக.

(பி - ம்.) * 'பெயர்வனென்று' † 'அவலென்னுளலைத்திழிதலின்' ‡ 'மிசையா மென்னுள்' § 'பிளந்தேயவுணரை' ‖ 'தொழுதுவாழ்த்தி' ¶ 'ஏத்தி'

கோநகர் பிழைத்த கோவலன் றன்னொடு
வான வூர்தி * யேறினண் மாதோ
உ00. கானமர் புரிகுழற் கண்ணகி தானென்.

வேண்டல்.

[1] தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுவாளைத்
தெய்வந் தொழுந்தகைமை † திண்ணிதாற்—‡ றெய்வமாய்
மண்ணக மாதர்க் கணியாய கண்ணகி
விண்ணகமா தர்க்கு விருந்து.

கட்டுரை.

[1] § முடிகெழு வேந்தர் மூவ ருள்ளும்
படைவிளங்கு தடக்கைப் பாண்டியர் குலத்தோ
ரறனு மறனு மாற்றலு மவர்தம்
[2] பழவிறன் மூதூர்ப் பண்புமேம் படுதலும்
நி. விழுமுமலி || சிறப்பும் விண்ணவர் வரவு
மொடியா வின்பத் தவருறை நாட்டுக்
குடியுங் கூழின் பெருக்கமு மவர்தம்
வையைப் பேரியாறு வளஞ்சுரந் தூட்டலும்
பொய்யா வானம் புதுப்பெயல் பொழிதலு
கo மாரபடி சாத்துவதி யென்றிரு விருத்தியு
நேரத் தோன்றும் வரியுங் குரவையு
** மென்றிவை யனைத்தும் பிறபொருள் வைப்போ
டொன்றித் தோன்றுந் †† தனிக்கோ னிலைமையும்
வடவாரியர் ‡‡படைகடந் து
கரு தென்றமிழ்நா டொருங்குகாணப்
புரைதீர் கற்பிற் றேவி தன்னொ ட
னரைசு கட்டிலிற் §§ றுஞ்சிய பாண்டிய
னெடுஞ்செழியனை டொரு பரிசா
நோக்கிக் கிடந்த
உo. மதுரைக் காண்ட முற்றிற்று.

இரண்டாவது, மதுரைக்காண்டம் முற்றிற்று.

'தெய்வந்'—மண்ணகமாதர் - உலகத்துக் கற்புடைமகளிர். விண்ணக மாதர்க்கு விருந்தாஞள்; ஆதலால் தெய்வந்தொழுகை திண்ணிதென்க.

---

[1] குறள், கடு. [2] புறநா. ஊரு, கூடு. [3] "பழவிறன்மூதூர்" மணி. எ: கூஙு. (பி - ம்.) * 'ஏறினள்காணமர்' † 'திண்ணமாற்' ‡ 'தெய்வமா, மண்' § 'முடியுடை" || 'சிறப்பின் வானவர் வரவும் வையைப்பேரியாற்று' ** 'என்றிவ வனைத்தும்' †† 'தன்னோள்' ‡‡ 'படைதந்து' §§ 'துஞ்சிய நெடுஞ் செழியனை டொருபரிசு'.

மூன்றாவது

வஞ்சிக்காண்டம்.

உச. — [1] குன்றக்குரவை.

[2] உரைப்பாட்டுமடை.

குருவியோப்பியுங் கிளிகடிந்துங் குன்றத்துச்சென்று *வைகி
யருவியாடியுஞ் சுணைகுடைந்து † மலவுற்று வருவேமுன்
மலைவேங்கை நறுமிழலின் வள்ளிபோல்வீர் மனைநடுங்க
முலையிழந்து ‡ வந்துநின்றீர் யாவிரோவென முனியாதே
ரு. மணமதுரையோ டரசுகேடுற வல்வினைவந் தருந்தகாலைக்
கணவனையங் கிழந்துபோந்த கடுவினையேன் யானென்ரு
ளென்றலு மிறைஞ்சியஞ்சி யினைவளைக்கை யெதிர்கூப்பி
நின்ற § வெல்லையுள் வானவரு நெடுமாரி மலர்பொழிந்து
குன்றவருங் கண்டு||நிற்பக் கொழுநனெடு கொண்டுபோயினு
கo. ரிவள்போலு ¶ நங்குலக்கோ ரிருந்தெய்வ மில்லையாதலிற்

க. குன்றத்துச்சென்று தங்கிக்குருவியோப்பியுமென்க.

ங. வள்ளி - வல்லி; தங்கள் வள்ளியென்கின்ற பெண்ணுமாம்; என்றது, குமரவேள் தேவியை.

ச. நின்றீர், யாவிர் இவை உயர்த்துக் கூறினர். முனியாதே - அவர்கள் கேட்டதற்கு வெருதே.

ரு. மணமதுரை [3] கலியாணமதுரை.

கூ. போயினர், முற்று.

முன் தேவருடன் போனபடியை விரியக்கூறினது இது.

---

[1] குன்றக்குரவை: நற். உசஉ; அகநா. உகஉ; முருகு. ககசு-எ; மதுரை. சுகஙி; மலைபடு. ஙஉo-உஉ; திருச்சிற். கஉஎ.

[2]. உரைப்பாட்டுமடை - உரையாகிய பாட்டை இடையேயுடையது: சிலப். ப. சசக.

[3]. மணமதுரை - நமுமணத்தையுடைய மதுரையுமாம்; (சிலப். கங. கஙி - ஙக பார்க்க); "நன்றவிழ் பன்மலர் நாற நறைபனிப்பத்,தென்ற லசைவரூஉஞ் செம்மற்றே யம்மதின், குன்றத்தாற் கூடல் வரவு" (பரி. அ.) மணமதுரையோடரசுகேடுற; "ஒட்டேனரசோ டொழிப்பேன் மதுரையும்' சிலப். உகi. ஙஎ.

(பி. ம்.) * 'வைகியுமருவி' † 'அலவுற்றும் வருவேம்' ‡ 'வந்துநின்ற நீரியாவிரோ' § 'எல்லையில்' || 'நிற்கவே கொழுநனெடுங்கொண்டு' ¶ 'நங்குலத்துக்கோரிரு'

சுரு

* சிறுகுடியீரே சிறுகுடியீரே
தெய்வங்கொள்ளுமின் சிறுகுடியீரே
நிறங்கிள ரருவிப் பறம்பின் முழ்வரை
நறுஞ்சினை வேங்கை நன்னிழற் கீழோர்
கஙி. தெய்வங் கொள்ளுமின் சிறுகுடி யீரே
தொண்டகந் தொடுமின் சிறுபறை தொடுமின்
[1] கோடுவாய் வைம்மின் கொடுமணி யியக்குமின்
[2] குறிஞ்சி பாடுமி னறும்புகை யெடுமின்
[3] பூப்பலி செய்ம்மின் காப்புக்கடை † நிறுமின்
உ0. [4] பரவலும் பரகுமின் ‡ விரவுமலர் தூவுமி
னெருமுலை யிழந்த நங்கைக்குப்
பெருமலை துஞ்சாது வளஞ்சுரக் கெனவே

கொளுச்சொல்

ஆங்கொன்று காணு மணியிழா யீங்கிதுகா
[5] ணஞ்சனப் பூழி யரிதாரத் தின்னிடியற்
சிந்துரச் சுண்ணஞ் செறியத்தூய்த் தேங்கமழ்ந்
திந்திர வில்லி னெழில்கொண் டிழுமென்று

கங. பறம்பின்முழ்வரை-நெடுவேள்குன்றமாகிய பறம்பின் தாழ்வரையில்.
கச-ஙி. வேங்கைக்கீழ் ஒரு தெய்வமாகப் பண்ணிக்கொள்ளுமின்.
கசு. தொடித்தல் - வாசித்தல்.
கள. கோடு - கடமாக்கொம்பு. கொடுமணி - ஓசைகடிதானமணி.
கஙு. காப்பு-சுற்றுமதில் கடை-வாயில். சுற்றுமதிலிட்டுவாசலும்செய்ம்மின்
(உஉ.) வளந்துஞ்சாது சுரக்கவென்று (உக) நங்கைக்குச்...(கஙு) செய்மி
னென்று முன்னே கூட்டுக.

கொளுச்சொலென்றது, மேற்சொல்லுகின்ற மூன்று பாட்டின் சொற்களைப் போதந்.....இப்பாட்டின் கருத்தென்றுமாம்

"ஆங்கொன்று"—ஆங்கொன்று காணுயென்றது, தூரநின்று. கிட்டச் சென்று, ஈங்கிதுவென்றுள். இதுவென்றுள், கண்ணுங் அங்கேவந்தளவிலே மழைபெய்தலால் விழுகிற அருவியை. அவ்வருவி தூங்கக்கண்டு தங்களையணுக வந்தபடியே. ... ... செறிய - செறியாநிற்க. ஆடுதுமே: ஏகாரம்,

---

[1] "கோடுவாய் வைத்துக் கொடுமணி யியக்கி" முருகு. உசசு.
[2] "நறும்புகை யெடுத்துக் குறிஞ்சி பாடி" முருகு. உகக.
[3] பூப்பலி: "மலர்ப்பலிதூஉய்", "பூப்பலிசெய்துகாப்புக்கடைநிறுத்தி" (சிலப். உஅ: இ, உகக); "பூப்பலிவிட்டகடவுளே" கலி. கூங.
[4] "பரவியுந் தொழுதும் விரவுமலர் தூவும்" குறிஞ்சி. இ.
[5] "அஞ்சனத்திரளு மணியரி தாரமும்" சிலப். உடு: சo.
(பி- ம்) * 'சிறுகுடீரே' † 'நிறுத்துமின்' ‡ 'விரைமலர்'.

வந்தீங் கிழியு மலையருவி யாடுதுமே
யாடுதுமே தோழி யாடுதுமே தோழி
[1] யஞ்சலோம் பென்று நலனுண்டு *நல்காதான்
மஞ்சுசூழ் சோலை மலையருவி யாடுதுமே

எற்றென்றுங் காணேம் புலத்த லவர்மலைக்
கற்றீண்டி வந்த புதுப்புனல்
கற்றீண்டி வந்த புதுப்புனன் மற்றையா
ருற்றுடி னேந்தோழி நெஞ்சன்றே

என்னென்றுங் காணேம் புலத்த லவர்மலைப்
பொன்னுடி வந்த புதுப்புனல்
பொன்னுடி வந்த புதுப்புனன் மற்றையார்
முன்னுடி னேந்தோழி நெஞ்சன்றே

யாதென்றுங் காணேம் புலத்த லவர்மலைப்
போதாடி வந்த புதுப்புனல்
போதாடி வந்த புதுப்புனன் மற்றையார்
மீதாடி னேந்தோழி நெஞ்சன்றே

பாட்டுமேடை

உரையினி மாதரா யுண்கண் ணிவப்பப்
புரைதீர் புனல்குடைந் † தாடினை மாயி
[2] னூரவுநீர் மாகொன்ற ‡ வேலேந்தி யேத்திக்
குரவை தொடுத்தொன்று § பாடுகம்வா தோழி

தேற்றம். அவன் கொடுமை இடக்கச்செய்தேயும் அவனுடைய மலையருவியை ஆடவேண்டிற்றேயென்றாள். அஞ்சலோம்பு - அஞ்சுதலைப் பரிகரி.

"எற்றென்றும்"—.....அவர் செய்த கொடுமையால் காம் அவர்மலையின்வந்த புதுப்புனலோடு புலத்தற்குச்சிறிதும் காரணமில்லை. மற்றையாரென்றது, அருவி யாடுவாருள் தன்னையொழிய முன் அங்ஙனிற் குளித்த மகளிரை. தனக்கு முற்படவாடினவரோடு நெஞ்சுதான் வேறுபட்டுப் புலத்தற்குக் காரணம் என்னென்றாள். அன்றேயென்றது, இசைநிறைக்கிளவி.

"என்னென்றும்"—எவனென்றும், விகாரம்.

'எற்றென்றும்' என்பதுமுதலாக மூன்றும் சிறைப்புறம்; தோழிக்குத் தலைமகளே சொல்லியது; முன்னிலைப்புறமொழியுமாம்.

"உரையினி"—உரையினீ - இனிச்சொல்.

---

[1] "பெண்டிர் நலம்வௌவித் தண்சாரற் றுஞ்சுண்ணும், வண்டிற் றுறப்பான் மலை" கலி. சு.

[2] "உரவுநீர் மாகொன்ற, வென்வேலான் குன்றின்மேல் வீழ்யாட்டும் விரும்பார் கொல்" கலி. உ.

(பி - ம்.) *'நல்காதார்' †'ஆடினம்' ‡ 'வேலேத்தி' § ' பாடுதும்யாம், பாட்டு, மடை சீர்கெழு'

சீர்கெழு [1] செந்திலுஞ் செங்கோடும் வெண்குன்று
[2] மேரகமு நீங்கா விறைவன்கை வேலன்றே
[3] பாரிரும் பௌவத்தி னுள்புக்குப் பண்டொருநாட்
சூர்மா தடிந்த சுடரிலைய வெள்வேலே

அணிமுகங்க ளோராறு மீராறு கையு
* மிணையின்றித் தானுடையா னேந்திய வேலன்றே
பிணிமுகமேற் கொண்டவுணர் பீடழியும் வண்ண
மணிவிசும்பிற் கோனேத்த மாறட்ட வெள்வேலே

† [4] சரவணப்பூம் பள்ளியறைத் தாய்மா ரறுவர்
திருமுலைப்பா லுண்டான் றிருக்கைவே லன்றே
‡ வருதிகிரி கோலவுணன் மார்பம் பிளந்து
[5] குருகு பெயர்க்குன்றங் கொன்ற நெடுவேலே

"சீர்கெழு"—செந்தில் - திருச்சீரலைவாய். செங்கோடு - திருச்செங்கோடு. வெண்குன்றம் - சுவாமிமலை. ஏரகம் - .....சூர் மா - சூராதியமா. சுடரிலைய; அ, இடைச்சொல்; சுடரிலை வேல், இறைவன் வேலெனக.

"அணிமுகங்கள்"—இவ்வடிவு பிறர்க்கு இல்லாமையாற் பிறரொப்பில்லாதான். [5] பிணிமுகம் - மயில்.

"சரவண"—சரவணப்பூம்பள்ளியறை-சரவணப் பொய்கையில் தாமரையாகிய பள்ளியறை. அறுவர்-கார்த்திகையார். திகிரிகோலவுணன் - மலையைச் சூழவரும் அவுணன். பிளந்து - பிளக்க. குருகுபெயர்க்குன்றம் - கிரவுஞ்சப்பருப்பதம். [பாராயது.

"சீர்கெழுசெந்தில்" முதலிய மூன்றும் வரைவுமுடிவதாகத் தெய்வம்

---

[1] "அலைவாய்ச் சேறலு நிலையிய பண்பு" (முருகு. கஉ-டு); முருகன் நீடுபுன லலைவாய்","பையுண்மாலை"தொல். களவு. சூ. உகூ-த. மேற்.)"திருமிகு விளக்கி னலைவாய்ச் செருமிகு சேய்" (அகநா. உசுசு); "வெண்டலைப் புணரி யலைக்குஞ் செந்தி, னெடுவே னலைஇய ஈமர் வியன்துறை" (புறநா. நிடு); "நஞ்செந்தின்மேய வள்ளிமணாளற்குத் தாதைகண்டாய்" (தே. மறைக்காடு)

[2] ஏரகம்: "ஏரகத் துறைதலு முரியன்" (முருகு. கஅசு) என்றவிடத்து ஏரகம் - மலைநாட்டகத்தொருதிருப்பதியென்றார், நச்சினார்க்கினியர்; பத்து. ப. சஉ - பார்க்க.

[3] "பார்முதிர் பனிக்கடல் கலங்கவுள் புக்குச், சூர்முத றடிந்த சுடரிலை நெடுவேல்" (முருகு. சநி - சுசு); "பாயிரும் பனிக்கடல் பார்துகள் படப்புக்கு" (பரி. டு);"பார்முதிர் பனிக்கடல்" பாகவத. ங: கருத்தின்மன். நிஐ.

[4] சரவணப்பூம்பள்ளி: "நெடும்பெருஞ் சிமையத்து நீலப் பைஞ்சுனை,.....அறுவர் பயந்த வாறமர் செல்வ" (முருகு. உநிசு - நி); "கடவு ளொருமீன் சாலினி யொழிய, வறுவர் மற்றையோரும்.....நிவந்தோங் கிமயத்து நீலப் பைஞ்சுனைப், பயந்தோ ரென்ப பசுமைத்துப் பாயல்" பரி. டு.

[5] "குருகுபெயர்க் குன்றங் கொன்றுன் மடவன்" (சிலப். உச); "குருகொடு பெயர்பெற்ற மால்வரை யுடைத்து, மலியாற்றுப் படித்த மூவிரு கயத்தவே" (பரி. நி); "குன்றங் கொன்ற குன்றுக் கொற்றத்து" (முருகு. உசுசு); "குருகுபெயர்க் குன்றங் கொன்றோன்" (மணி. டு: கசு); "குருகுபெயர்க் குன்றத் துடல்பக வெறிந்த, நெடுவேற் கடவுட்கு" கல். "பொருப்புவளன்"

[6] "பிணிமுக மஞ்ஞை செருமுகத் தேந்திய, மூவிரு திருமுகத் தொருவே லவற்கு" (கல். எ.)பிணிமுகம்-முருகக்கடவுள் ஊரும் யானையுமாம்; "சேயுயர் பிணிமுக மூர்ந்து" (பரி. டு); "பிணிமுக வூர்தி யொண்செய் யோனும்" (புறநா. நிசு); "ஓடாப் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி" (முருகு. உசஎ);

(பி -ம்.) * 'இணையன்றி' † 'சரவணப் பள்ளியிசைத்தாய்மார்' ‡ 'வருதிகிரிபோலவுணன் மார்பம்' 'திகிரியோனவுணன்'

பாட்டமைடை

இறைவளை நல்லா யிதுநகையா கின்றே
கறிவளர் தண்சிலம்பன் செய்தநோய் தீர்க்க
வறியாண்மற் றன்னை யலர்கடம்ப னென்றே
வெறியாட முன்விரும்பி வேலன்வரு கென்றுள் *

ஆய்வளை நல்லா யிதுநகை யாகின்றே
மாமலை வெற்பனெய் தீர்க்கவரும் [1] வேலன்
வருமாயின் வேலன் மடவ னவனிற்
குருகு பெயர்க்குன்றங் கொன்றுன் மடவன்

செறிவளைக்கை நல்லா யிதுநகையா கின்றே
வெறிகமழ் வெற்பனெய் தீர்க்க வரும்வேலன்
வேலன் மடவ னவனினுந் தான்மடவ
[2] ளலமர் செல்வன் புதல்வன் வருமாயின்

நேரிழை நல்லாய் நகையா மலை [3] நாட்டன்
மார்பு † தருவெங்நோய் தீர்க்க வரும்வேலன்
தீர்க்க வரும்வேலன் றன்னினுந் தான்மடவன்
[4] கார்க்கடப்பந் தாரெங் கடவுள் வருமாயின்

பாட்டமைடை

வேலனார் வந்து வெறியாடும் வெங்களத்து
நீலப் பறவைமே னேரிழை தன்னோடு
மாலமர் செல்வன் புதல்வன் வரும்வந் தான்
[5] மால்வரை வெற்பன் மணவணி வேண்டுதுமே

'இறைவளை நல்லாய்' முதல், 'என்றியாம்பாட' இறுதி அறத்தொடுநிலை.

''செறிவளை''—வெற்பனெய் - வெற்பனல்வந்த நோய்.

''வேலனார்''—நீலப்பறவை - மயில்.

---

[1] ''வேலன் வேண்ட வெறிமனை வந்தோய், கடவு ளாயினு மாக, மடவைமன்ற வாழிய முருகே'' நற். ஈசை.

[2] ''ஆலமர் செல்வன் புதல்வன்வரும்'' (சிலப். உசை); ''ஆலமர் செல்வ னணிசால் பெருவிறல்'', ''ஆலமர் செல்வ னணிசான் மகன்'' (கலி. அக, அசை); ''ஆல்கெழு கட வுட் புதல்வ'' (முருகு. உடுசை); ஆலமர் செல்வன் மகன்'' மணி. ஈ : க்சசை.

[3] ''நாடன் மார்புநர வந்த படர்மலி யருநோய்'' நற். ஈசை.

[4] கார்க்கடப்பந்தார் - கார்காலத்திற்குரிய கடம்பின்மாலை : ''கார்கோண் முகந்த .....இருள்படப் பொதுளிய பராரை மராஅத், திருள்பூந் தண்டார் புரளு மார்பினன்'' முருகு. எ - கஅ) ''கார்நறுங் கடம்பின் கண்ணி சூடி.....முருகே'' (நற். ஈசை; ''கார் நறுங் கடம்பின்.....தெரியற், சூர்நவை முருகன்'' (புறநா. உசை); ''காரலர் கடம்பன்'' மணி. சை. சகை.

[5] ''மாமலை வெற்டன் மணவணி வேண்டுதுமே'' சிலப். உசை; ''பாகெம்வா''
(பி - ம்.) * 'பாட்டமைடையாய்வளை' † 'தருநோய்தீர்'

கயிலைநன் மலையிறை மகணினின் மதிறுதன்
மயிலியன் மடவரன் மலையர்தம் மகளார்
* செயலைய மலர்புரை திருவடி தொழுதே
மயன்மண மொழி † யரு ளெவர்மண மெனவே

மலைமகண் மகணினின் மதிறுதன் மடவரல்
குலைமலை யுறைதரு குறவர்தம் மகளார்
நிலையுயர் கடவுணின் னிணையடி தொழுதேம்
[1] பலரறி மணமவர் படுகுவ ரெனவே

குறமக ளெவளெம குலமக ளெவளொடு
மறுமுக வொருவனின் னடியிணை தொழுதேந்
[2] ‡ துறைமிசை நினதிரு திருவடி தொடுநர்
பெறுகநன் மணம்விடு பிழைமண மெனவே

பாட்டுமடை

[3] என்றியாம் பாட மறைநின்று கேட்டருளி
மன்றலங் கண்ணி மலைநாடன் போவான்முன்
சென்றே னவன்றன் திருவடி கைதொழுது
நின்றே னுரைத்தது கேள்வாழி தோழி

"கயிலை"—மகணி: ஐ, இடைச்சொல், அயன்மணம் - பிராசாபத்தியம். ஒழி - இதணி விலக்குவாய்.

"மலைமகள்"—பலரறிமணமென்றார், இதற்குமுன்பு களவாதலால். படுகுவர் - உடன்படுகுவாராக. அவரென்றது தலைவனை.

"குறமகள்"—துறை- கீர்த்துறை; [4] "யாறுங்குளனும்" என்றாதலின். நின் திருவடிதொடுநரென்றது, சூளுற்றதலைவனை.

"என்றியாம்"—மறைநின்று - மறையச் சிறைப்புறமாகநின்று. சென்றேன் - சென்றுநின்றேன்; நின்றேன் - நின்றனான்.

---

[1] "நேரிறை முன்கைபற்றி நுமர்தந்த நாட்டறி நன்மண மயர்கம்" (குறிஞ்சி.உருக-உ); "பல்லா ரறியப் பறையறைந்து நாட்கேட்டுக், கல்யாணஞ் செய்த" நாலடி. அசு.

[2] "ஆலமுங்கடம்பு நல்யாற்று நடுவுங், காலிவழக் கறுதிலைக்குன்றமும் பிறவு,மவ்வ வைமேய வேதுவேது பெயரோ, யெவ்வயி னேயு நீயே" (பரி - சு); "துறையு மாலமுந் தொல்வலி மராமு, முறையுளி பராஅய்" (கலி - கஉக.)

[3] "குன்றக்குரவையுள், 'சீர்கெழுசெந்நில்' என்னுந்தாழிசைமுதற் பல அடுக்கி வந்து பின்னர், 'என்றியாம், பாட.....கேட்டு' என்று அடக்கியதற் பொருள்பெற்று முடிந்தவாறு காண்க." தொல். செய். சூ. கசசு - ந.

[4] திருமுருகாற்றுப்படை, உஉச.

(பி - ம்.) * 'செயலெமென்' † 'அருள்பலர்மணம்' ‡ 'துறையுறைமிசை நினதிருவடிதொழுமவர்பெறுக'

கடம்பு சூடி யுடம்பிடி யேந்தி
மடந்தை பொருட்டால் * வருவ திவ்வூ
ரறுமுக மில்லை யணிமயி லில்லை
குறமக ளில்லை செறிதோ ளில்லை
கடம்பூண் டெய்வ மாக நேரார்
மடவர் மன்றவிச் சிறுகுடி யோரே

பாட்டுமேடை.

என்றீங்
கலர்பாடு பெற்றமை யானுரைப்பக் கேட்டுப்
புலர்வாடு நெஞ்சம் † புறங்கொடுத்துப் போன
மலர்தலை வெற்பன் வரைவானும் போலு
முலையிணுன் மாமதுரை கோளிழைத்தாள் காதற்
றலைவனே வாவேனர் ‡ தமராருங் கூடிப்
பலர்தொழு பத்தினிக்குக் காட்டிக் கொடுத்த
நிலையொன்று பாடுதும் யாம்

[1] பாடுகம் வாவாழி தோழியாம் பாடுகம்
பாடுகம் வாவாழி தோழியாம் பாடுகங்
கோமுறை நீங்கக் கொடிமாடக் கூடலுத்
தீமுறை செய்தாளை யேத்தியாம் பாடுகந்
தீமுறை செய்தாளை யேத்தியாம் பாடுங்கான்
[2] மாமலை வெற்பன் மணவணி வேண்டுதுமே

"கடம்பு"—இப்படிச்சூடி வந்தி இவ்வூர் வருவது, தன்னை முருகனென்று கண்டார் கருதுதல்வேண்டி.....இச்சிறுகுடியோர் தெய்வமாக உடன்படார். ஆதலால், அறியார்; மடவர்-அறியார். அன்றி, இச்சிறுகுடியோராதலால்,..... சொல்லுமாறு : அறுமுகமில்லை ; அணிமயிலில்லையென்று சொல்லுவார்க ளென்று வேறுகாட்டினுள் ; தலைமகன் கடம்புசூடி உடம்பிடியேந்தித் தன்னைக் குமரனென்று பிறர்கருதவந்த காரணம், [3] "பண்டைத்தன்மணங்கமழ்தெய் வத்திளநலங் காட்டி" என்றாராதலால்.

"அலர்பாடு"—புலர்வாடுநெஞ்சம்-புலருநெஞ்சம். புறங்கொடுத்துப்போன-தன்பின்னே இடக்கப்போன; ஒழியப்போனவென்றுமாம். தமராரும் கூடி-தம ரெல்லாருங்கூடி. நிலை - தன்மை.

"பாடுகம்"—அத்தன்மையினை நாம் பாடுமிடத்து இதனை வேண்டிக் கொள்ளுவோ மென்றார்.

---

[1] "பாடுகம் வாவாழி தோழி" கலி. சக.
[2] "மால்வரை வெற்பன் மணவணி வேண்டுதுமே" சிலப். உசா ; "வேலனர்வந்து"
[3] திருமுருகாற்றுப்படை, உசுக-கூ0

(பி - ம்.) * 'வருவதிவ்வூர்க்கடம்பூண்.....குடியேயாரே யறுமுகமில்லையணி..... லில்லை' † 'புறக்கொடுத்து' ‡ 'தமராகக்கூட்டிப்'

பாடுற்றுப்
பத்தினிப் பெண்டிர் பரவித் தொழுவாளோர்
பைத்தர வல்குனம் பைம்புனத் துள்ளாளே
பைத்தர வல்குல் கணவனே வாழ்கென
ஞப்த்துக் * கொடுத்து முரையோ வொழியாரே
வானக வாழ்கை யமரர் தொழுதேத்தக்
† கான நறுவேங்கைக் கீழாளோர் காரிகையே
கான நறுவேங்கைக் கீழாள் கணவனொடும்
வானக வாழ்க்கை ‡ மறுதரவோ வில்லாளே

மறுதர வில்லாளே யேத்திநாம் பாடப்
[1] பெறுகதில் லம்ம § விவ்வூரு மோர்பெற்றி
பெற்றி யுடையதே பெற்றி யுடையதே
பொற்றொடி மாதர் கணவன் மணங்காணப்
பெற்றி யுடையதிவ் வூர்

என்றியாங்
கொண்டு நிலைபாடி யாடுங் குரவையைக்
கண்டுநங் காதலர் || கைவந்தா ராணை
துண்டு மகிழ்ந்தானை வைகலும் வாழியர்
வில்லெழுதிய விமயத்தோடு
[2] கொல்லி யாண்ட [3] குடவர் கோவே.

உசை—குன்றக்குரவை முற்றிற்று.

பாடுற்று - பெருமையுற்று.

''பத்தினி''—வாளோர் கொடுத்தபின்பும் அவளைப் புகழலொழியார்.

''மறுதரவு''—மறுதரவு-மீட்சி. இவ்வூரும் ஒருவிரதம்பெறுக. கணவன் மணம் - வரைவு.

''கொண்டுநிலை''—[4] கொண்டுநிலை-பொருளைக் கொண்டுநிற்குநிலை. கைவந்தார் - அவன் பிரசாதத்தாலே நம்வழியிலே புகுந்தார். உண்டு - வீரபானத்தையுண்டு. ஆனைவகையெறும் வாழ்வானுக.

இவ்வுறுப்புக்களையுடைய கொச்சகப்பாத் தலைமகட்குத் தோழிவரைவு கூறியது.

---

[1] ''பெறுகதிலம்மயானே'' குறுந். கச.

[2] ''கொல்லிப் பொருந'' (பதிற். எசு); ''மூள்ளூர் மன்னன் கழுமுடிக் காரி, செல்லா நல்லிசை நிறுத்த வல்லி, லோரிக் கொன்று சேரலற் கீத்த, செவ்வேர்ப் பலவின் பயங்கெழு கொல்லி'' (அகநா - உஅசு); ''ஓங்கு கொல்லியோ ரடுபொருந'' (புறநா. உஉ) என்பவற்றும் கொல்லிமலை சேரபரம்பரையினர்க்குரித்தாதல்காண்க.

[3] ''குடவர் கோவே கொடித்தேரண்ணல்'' பதிற். நிஅ.

[4] கொண்டுநிலை - ஒருவகைச் செய்யுளென்பர்; ''குரவை தழீஇயா மாடுங் குரவையுட், கொண்டுநிலை பாடிக்காண்'' (கலி. நகூ.) என்பதன் உரையைப்பார்க்க.

(பி - ம்.) * 'கொடுத்தவுரை' † 'கானனு' ‡ 'மறுதரலோ' § 'இவ்வூர் பெற்றியுடையதே' || 'கைவந்தா, ருண்டு'

இருபத்தைந்தாவது

காட்சிக்காதை.

[1] மாநீர் வேலிக் கடம்பெறிந் [2] திமயத்து
வானவர் மருள மலைவிற் பூட்டிய
வானவர் தோன்றல் வாய்வாட் கோதை
விளங்கில வந்தி வெள்ளி மாடத்
நி [3] திளங்கோ வேண்மா ளுடனிருந் தருளித்
[4] துஞ்சா முழவி னருவி யொலிக்கு
மஞ்சுசூழ் சோலை மலைகாண் குவமெனப்
* பைந்தொடி யாயமொடு பரந்தொருங் கீண்டி
[5] வஞ்சி முற்ற நீங்கிச் செல்வோன்
கo வளமலர்ப் பூம்பொழில் வானவர் மகளிரொடு
விளையாட்டு விரும்பிய விறல்வேல் வானவன்
பொலம்பூங் காவும் புனல்யாற்றுப் பரப்பு

க. மாநீர் வேலிக் கடம்பு - இருண்டநீரை வேலியாகவுடைய கடம்பு.

ச. இலவந்தி - நீராவி.

நி. இளங்கோவேண்மாள் - பெயர்; 'நன்னன்வேண்மாள், உதியன் வேண்மாள்' என்பனபோல; வேண்மாளுடனிருந்து, இளங்கோவை அருளிப்பாடிட்டென்றுமாம்.

---

1. கடம்பெறிந்தமை: "வலம்படு முரசிற் சேரலாதன், முந்நீர் ரோட்டிக் கடம்பறுத் திமையத்து, மூன்றேர் மருள வணங்குவிற் பொறித்து", "சால்பெருந் தானைச் சேரலாதன், மால்கட லோட்டிக் கடம்பறுத் தியற்றிய, பண்ணமைமுரசு" (அகநா. கஉள, நசள); "பலர் மொழிந் தோம்பிய திரள்பூங் கடம்பின், கடியுடை முழுமுத மமிய வேஎய், வென்றெறி...சேர வீரத", "அரசுதலை பனிப்பக், கடம்புமுத றடிந்த கடுஞ்சின வேந்தே", "மாக்கட னீக்கிக், கடம்பறுத் தியற்றிய, வலம்படு வியன்பணை... தொடித்தோளியவ", "இருமுந்நீர்த் துருத்தியுண், முரணியோர்த் தலைச்சென்று, கடம்புமுத றடிந்த கடுஞ்சின முன்பி, னெடுஞ்சேர லாதன்" (பதிற். கக, கஉ, கள, உo)

2. இமயத்து விற்பொறித்தமை: "விற்றலைக் கொண்ட வியன்பேரிமயத்து" (சிலப். உநி: ககஅ); 'இமயம் விற்பொறித்து" (பதிற். உ-ஆம் பத்துப்பதிகம்) "ஓரிய ரலறத் தாக்கிப் பேரிசைத், தொன்மூதிர் கடலவரை வணங்குவிற் பொறித்தும், வெஞ்சின வேந்தரைப் பிணித்தோன் வஞ்சி" (அகநா. நகக.)

3. "வதுவை வேண்மாண் மங்கல மடந்தை" சிலப். உஅ: நிக.

4. "முழவின்னிசைமூரிமுழங்கருவி" சீவக. ககக

5. "வளந்தலைமயங்கிய வஞ்சி முற்றம்" சிலப். உநி: நச.

(பி - ம்) * 'பஞ்சடியாயமொடு'

மிலங்குநீர்த் துருத்தியு மிளமரக் காவு
மரங்கும் பள்ளியு மொருங்குடன் பரப்பி
யொருநூற்று நாற்பதி யோசனை * விரிந்த
பெருமால் களிற்றுப் பெயர்வோன் போன்று
கோங்கம் வேங்கை தூங்கிணர்க் கொன்றை
நாகந் திலக நறுங்கா ழார
† முதிர்பூம் பரப்பி னெழுகுபுன லொளித்து
மதுகர ஞிமிறெடு வண்டினம் ‡ பாட
[1] நெடியோன் மார்பி லாரம் § போன்று
பெருமலை விலங்கிய பேரியாற் றடைகரை
யிடுமண லெக்க ரியைந்தொருங் கிருப்பக்
குன்றக் குரவையொடு கொடிச்சியர் பாடலும்
வென்றிச் செவ்வேள் வேலன் பாணியுந்
தினைக்குறு வள்ளையும் புனத்தெழு விளியு
நறவுக்கண் ணுடைத்த குறவ ‖ ரோதையும்
[2] பறையிசை யருவிப் பயங்கெழு மோதையும்
புலியொடு பொருஉம் புகர்முக வோதையுங்
[3] கலிகெழு மீமிசைச் சேணெ ணெதையும்

கச. அரங்கு - நாடகசாலை. பள்ளி - மண்டபம்.

(கூ) செங்குட்டுவன் (எ) மலைகாண்குவமென்றுசொல்லி (கக) இந்திரன் (கசு) பெயர்வோன்போன்று.

கஉ - சு. பூங்காமுதலானவற்றை யானைமேலுளவாகவிருமித்து.

(கசு) களிற்றிலே (கஉ - ச) இவற்றைப் பரப்பி (கசு) பெயர்வோனென்க.

(கஅ) கோங்கமுதலியனவுதிர்ந்த (கக) பூம்பரப்பாற் புனல் ஒளித்து.

உஉ. மலையைவிலங்கியயாறு ; பேர்யாறு; இஃது ஓர்யாற்றின் பெயர்.

உகூ. எக்கர் - எக்கரிடத்து. இயைந்தொருங்கிருப்ப - மூவருங்கூடியிருப்ப.

உஞ. செவ்வேள் வேலன் - செவ்வேளுடைய வேலன் ; வேலன் - படி [மத்தான்.

கூ0. சேணென் - பரணின்மேலோன்.

---

1. "மாயோன் மார்பி ஞாரம் போல" தொல். செய். சூ. கஞ, எஅ-பேர். மேற்.

2. "பறையிசை யருவி முள்ளூர்ப் பொருந", "பறையிசை யருவி நன்னாட்டுப் பொருந" (புறநா. கஉசு, உஉகூ); "பறைக்குர லருவி" பதிற். எ0.

3. "கலிகெழுமரமிசைச்சேணெண்" குறிஞ்சி. சு0

(பி - ம்.) *"விலங்கு பருமால் களிற்றிற் பெயர்வோன்' † 'முதுபூஞ்செம்மலி லொழுகுபுனல்' ‡ 'ஆர்ப்ப' § 'போலப்' ‖ 'ஓதையும் புலியொடு'

பயம்பில்வீழ் யானைப் பாக ரோதையு
மியங்குபடை யரவமோ டியாங்கணு மொலிப்ப
வளந்துகடை யறியா வருங்கலஞ் சுமந்து
வளந்தலை மயங்கிய வஞ்சி * முற்றத்
நூடு. திறைமகன் செவ்வி யாங்கணும் பெறுது
திறைசுமந்து † நிற்குந் தெவ்வர் போல
யானைவெண் கோடு மகிலின் குப்பையு
மான்மயிர்க் கவரியு மதுவின் குடங்களுஞ்
சந்தனக் குறையுஞ் சிந்துரக் கட்டியு
சஅ. [1] மஞ்சனத் திரளு மணியரி தாரமு
மேல வல்லியு மிருங்கறி வல்லியுங்
[2] ‡ கூவை நூறுங் கொழுங்கொடிக் கவலையுந்
§ தெங்கின் பழனுந் தேமாங் கனியும்
[3] பைங்கொடிப் படலையும் பலவின் பழங்களுங்
சநு. காயமுங் கரும்பும் பூமலி கொடியுங்
|| கொழுந்தாட் கமுகின் செழுங்குலைத் தாறும்
பெருங்குலை வாழையி னிருங்கனித் தாறு
மாளியி னணங்கு மரியின் குருளையும்
வாள்வரிப் பறழு மதகரிக் களபமுங்

நக. பயம்பு - யானையைப்படுக்குங்குழி. நஉ. ஒலிப்ப - ஒலியாநிற்க.

நந. 'அளந்துகடை யறியா' என்பது முதல் திறையிடுவார்க்கு அடை.

நஅ. மான்மயிராகிய வெண்சாமரை. மதுவின்குடம் - தேன்குடம்.

சஉ. கூவைநூறு - கூவைக்கிழங்கினீறு.

சந. பைங்கொடிப்படலை - பச்சிலைமாலை.

சநு. காயம் - வெள்ளுள்ளி. பூமலிகொடி - பூங்கொடி.

சஅ. அணங்கு - குட்டி.

சந. வாள்வரி - புலி. கரிக்களபம் - யானைக்கன்று.

---

1. "அஞ்சனப் பூழி யரிதாரத் தின்னிடியல்" சிலப். உச. "ஆங்கொன்று":—

2. "நாறெடு குழீஇயின கூவை" (மலைபடு. கசுஎ); "பாவை யிஞ்சியுங் கூவைச் சுண்ணமும்" பெரும். க. நிக. உசு.

3. "பைங்கொடி—பச்சிலைக்கொடி; எல்லாவற்றினும் பசுத்திருத்தலிற் பச்சிலை யென்ற பெயர் பெற்றது; பச்சிலையென்றது சினையினை முதன்மேலேற்றிப் பைங்கொடி யென்றார்" (முருகு. கசுஅ-ந) என்பது காண்டு அறியற்பாலது.

(பி - ம்.) * 'மன்றத்து' † 'நிற்குமன்னர்' ‡ 'கூவைநீறும்', 'கூலிக்கிழங்குங்கொடி' 'தெங்கம்பழனும்' || 'கருந்தாட்கமுகின்'

நிஅ. குரங்கின் குட்டியுங் [1] குடாவடி யுளியமும்
[2] வரையாடு வருடையு மடமான் மறியுங்
காசறைக் கருவு மாசறு நகுலமும்
பீலி மஞ்ஞையு ஈவியின் பிள்ளையுங்
கானக் கோழியுங் * தேன்மொழிக் கிள்ளையு

நிஆ. [3] மலைமிசை மாக்க டலைமிசைக் கொண்டாங்
[4] கேழ்பிறப் படியேம் வாழ்கஞின் கொற்றங்
கான வேங்கைக் கீழோர் காரிகை
தான்முலை யிழந்து தனித்துய ரெய்தி
வானவர் போற்ற † மன்னெடுங் கூடி

சுஅ. வானவர் போற்ற வானகம் பெற்றன
ளெங்காட் டாள்கொல் யார்மகள் கொல்லோ
கின்னுட் டியாங்க ணினைப்பினு மறியேம்
பன்னூர் முயிரத் தாண்டுவா ழியரென
மண்களி நெடுவேன் மன்னவற் கண்டு

நிஅ. குடாவடியுளியம் = பிள்ளைக்கரடி; திசைச்சொல்; கரடிக்குட்டி.
நிஉ. காசறைக்கரு = கத்தூரிக்குட்டி. நிக. மன் = கணவன்.

---

[1]. குடாவடி—வளைந்தி அடிகளையுடையது; மலைபடு. நிஅக-ந.

[2]. வரையாடுவருடை-மலையிற் பாய்ந்து வீளையாடுகின்ற வருடைமான்; "நிலம்பு பாய்வருடையொடி", "குன்றின்மேல்வருடை பாய்ந்துழக்கவின்" (சீவக. கஉசுஅ' கஅசுசு); வருடைக்குக் கால்கள் முதுகிலுமுள்ளனவென்றும் கால்கள் எட்டென்றும் வேறு நூல்களால் தெரிகின்றன; "மீமிசைக் கொண்ட கவர்பரிக் கொடிந்தாள், வரை வாழ் வருடை வன்றலை மாத்தகர்" (மலைபடு. நிஅஉ-ங) என்பதனுரையின் அடிக்குறிப் பைப் பார்க்க; "எட்டுக் காலுடையன வருடை; ஆறுகாலுடையன கழிப்பாம்பு" நீல. தரும. செய். நிசு-உரை.

[3]. நிநி-சுஅ. சிலப்பதிகாரம், பதி. ஈ-அ.

[4]. ஊள-நிசு. "குழிப்படி வேழக் கூன்மருப் பிரட்டையும், வரைப்படி தேனுஞ் இனைப்படி கனியும், வீணைத் தண்டும் வேய்படி முத்துங், கானத் தகிலு மேனத் தெறி யும், பொறிப்புலித் தோலு மதுப்பிய ஓகமு, மந்திப் பிணையொடு மற்றவை பிறவுந், தந்திறை தந்து முந்து நிறைப் பட்ட, வற்ற காலத்தி முற்ற நோக்கி, யடியுறை செய் தொழிற் குடிமுதல் பிழைத்த, லிருநிலம் பெயரினு மெம்மாட்டிலவெனப், பெருமகன் றமரொடு தெளிவனர் தேற்றி" பெருங். க. நிஅ: அ்ங-ஊங; மலைபடுகடாம், நிஐ-ஆம் அடி முதலியனவும் இந்தப் பகுதியை ஒத்துள்ளன.

(பி - ம்.) * 'தேமொழி' † 'தன்மகிழ்நனெடுகூடின னென்னுட்டாள்', 'கூடிப் போயினளெந்தாட்'

சுரு. [1] கண்களி மயக்கத்துக் காதலோ டிருந்த
[2] தண்டமி ழாசான் சாத்தனிஃ துரைக்கு
மொண்டொடி மாதர்க் குற்றதை யெல்லாந்
திண்டிறல் வேந்தே செப்பக் கேளாய்
[3] தீவினைச் சிலம்பு காரண மாக

எ0. வாய்தொடி யரிவை கணவற் குற்றதும்
வலம்படு தானை மன்னன் முன்னர்ச்
சிலம்பொடு சென்ற சேயிழை வழக்குஞ்
செஞ்சிலம் பெறிந்து தேவி முன்னர்
வஞ்சினஞ் சாற்றிய மாபெரும் பத்தினி

எரு. யஞ்சி லோதி யதிகெனப் பெயர்ந்து
முதிரா முலைமுகத் தெழுந்த தீயின்
மதுரை மூதூர் மாநகர் சுட்டது
[4] மரிமா னேந்திய வமளிமிசை யிருந்த
திருவீழ் மார்பிற் றென்னர் கோமான்

அ0. [5] தயங்கிணர்க் கோதை தன்னுயர் பொருஅன்
மயங்கினன் கொல்லென மலரடி வருடித்
தலைத்தா ணெடுமொழி தன்செவி கேளாள்

சுரு. கண்களிமயக்கம் - கண்களித்தற்குக்காரணமான ஆச்சரியம்; மயக்கம் - கண்டாரைமயங்கப்பண்ணுதல்.

சுசு - ரு. காண்டலின், விசாரமில்லேமென்று.

(சுரு) வேடர்சொன்னவளவிலே (சுஎ) உற்றதையெல்லாம் (சுக) ஒழிவின்று (சுசு) உரைக்குமென்க; உரைக்குமென்றது, மூற்று.

சுகூ. தீவினைச்சிலம்பு - இவர் தீவினை பலித்தற்குக்காரணமான சிலம்பு.

(எ0) உற்றதும், (எஉ) வழக்குஞ், (எஎ) சுட்டதும் சொல்லியென ஒருசொல் வருவிக்க.

அ0 - அக. இணர்க்கோதை - கண்ணிகி. பொருஞய்மயங்கினனே.

அஉ. தலைத்தாணெடுமொழி - கண்ணகிசொல்லிய வீரமொழி; மரித்தபடியால், அவள்சொல்லியது முடியக்கேட்டிலள்.

---

1. "கண்களி கொள்ளுங் காட்சியை" சிலப். உசு: எசு.

2. "அவனுழை யிருந்த தண்டமிழ்ச் சாத்தன்" சிலப். பதி. க0.

3. "சூழ்வினைச் சிலம்பு காரண மாக" சிலப். பதி. டுஅ.

4. "அரிமா னேந்திய வமளிமிசை யிருந்தனன், திருவீழ் மார்பிற் றென்னவர் கோவே" சிலப். உ0:உஉ-சு.

5. "தயங்கிணர்க் கோதை" மணி: எ. க0ரு.

கலக்கங் கொள்ளாள் * கடுந்துயர் பெருஅண்
மன்னவன் [1] செல்வுழிச் செல்க யானெனத்
அஇ. தன்னுயிர் கொண்டவ னுயிர்தே டினள்போற்
[2] பெருங்கோப் பெண்டு மொருங்குடன் † மாய்ந்தனள்
கொற்ற வேந்தன் கொடுங்கோற் றண்மை
யிற்றெனக் காட்டி யிறைக்குரைப் பனள்போற்
றண்ணுட் டாங்கட் டனிமையிற் செல்லா
கூ0. ணின்னுட் டகவயி னடைந்தன ணங்கை ‡ யென்
றெழுவின் றுரைத்தீண் டேழி யூழி
[3] வழிவழிச் சிறக்கநின் வலம்படு கொற்றமெனத்
தென்னர் கோமான் றீத்திறங் கேட்ட
மன்னர் கோமான் வருந்தின னுரைப்போ
கூடு. னெம்மோ ரன்ன § வேந்தற் குற்ற
செம்மையி ‖ னிகந்தசொற் செவிப்புலம் படாமு
[4] னுயிர்பதிப் ¶ பெயர்த்தமை யுறுக வீங்கென
[5] வல்விரை வஞ்சித்த கோலே மன்னவன்
செல்லுயிர் நிமிர்த்துச் செங்கோ லாக்கிய து

அகூ. கலக்கங் கொள்ளாளென்றார், கடுகமரித்தாளென்றதுதோன்ற.

அஅ. இறை, முன்னிலைப்பெயர்.

கூடு. எம்மோரன்னவென்றது, உட்கோள்.

கடு - எ. பாண்டியனது உயிரை உடம்பினின்று நீக்கினமை இப்பொழுது கடுகிச்சென்று உற வேண்டுமென.

ககூ. ஆக்கியது, முற்று.

---

[1]. மெய்யீற்று முன் உயிர்வருங்கால் உடம்படுமெய்யன்றெனப்படுமே வகரம் தோன்றுமென்பதற்கு, 'செல்வுழிச் செல்க' என்பது மேற்கோள்; நன்-வி. சூ. ககூடு.

[2]. எஅ-அசு. "காதல நிறப்பிற் கிணையெரி பொத்தி, யூதுலைக் குருகி னுயிர்த்தகத் தடங்கா தின்னுயி ரீவர்.....பத்தினிப் பெண்டிர்" (மணி. உ: சஉ-அ) என்பது இவ் வடிகளுடன் ஒப்புநோக்கற்பாலது.

[3]. "வழிவழிச் சிறக்கநின் வலம்படு கொற்றம்" மதுரை. ககூச.

[4]. உயிர்பதிப் பெயர்த்தல் - உயிரை உடம்பினின்றும் நீக்குதல்; "உண்ணு நோன்போ யுயிர்பதிப் பெயர்த்ததும்," (சிலப். உஎ:அங); "உண்ணு நோன்போ யுயிர்பதிப் பெயர்ப்புழி" மணி. கச:கூடு.

[5]. கூஅ - கூ. "வஞ்சகோ விழுக்கத் துயிராணி கொடுந்தாங், கிருநில மடந்தைக்குச் செங்கோல் காட்ட" சிலப். உஉ:சு-டு.

(பி - ம்.) * 'கடுந்துயருறுள்மன்னன்' † 'அமர்ந்ததும்' ‡ 'எனவொழி' § 'வேந்தர்க்கிற்றெனச்' ‖ 'இழந்தகொல்செவி' ¶ 'பெயர்ந்தமை'

கஅ0. மழைவளங் கரப்பின் வான்பே ரச்சம்
பிழையுயி ரெய்திற் பெரும்பே ரச்சங்
குடிபுர வுண்டுங் கொடுங்கோ லஞ்சி
[1] மன்பதை காக்கு நன்குடிப் பிறத்த
றுன்ப மல்லது தொழுதக வில்லெனத்
கஅரு. துன்னிய துன்பந் * துணிந்துவந் துரைத்த
[2] நன்னூற் புலவற்கு நன்கன முரைத்தாங்
குயிருடன் சென்ற வொருமக டன்னினுஞ்
செயிருடன் வந்தவிச் சேயிழை தன்னினு
நன்னுதல் வியக்கு நலத்தோ ரியாரென
கக0. மன்னவ னுரைப்ப மாபெருந் தேவி
காதலன் றுன்பங் காணுது † கழிந்த
மாதரோ பெருந்திரு வுறுக ‡ வானகத்
தத்திற நிற்கநம் மகனு டடைந்தவிப்
பத்தினிக் கடவுளைப் பரசல் வேண்டுமென
ககரு. மாலை வெண்குடை மன்னவன் விரும்பி
நூலறி புலவரை நோக்க வாங்கவ
ரொற்கா மரபிற் பொதியி லன்றியும்
[3] விற்றலைக் கொண்ட வியன்பே § ரிமயத்துக்

கஅக. பிழையுயிரெய்தின் - உயிர்கள் யாதானுமொன்றுல் வருந்தின்.

கஅரு. துன்னியதுன்பம் - கண்ணகிக்குத் துன்னியதுன்பத்தை.

கஅச - ரு. தொழுதகவில்லென வந்துரைத்த.

கஅக. நன்னுதல், முன்னிலைப்பெயர். ககக. காதலன் - பாண்டியன்.

ககஉ - ச. மாதர் - அவன்தேவி; அவள் வாணிலே திருவுறுக; அதுசூற வேண்டா; இவளைக்கொண்டாடவேண்டுமென்று தேவிசொல்ல.

ககசு. [4] நூலறிபுலவர் - அமைச்சர்.

ககள - உக. இமயக்கல்லுக்குக்கங்கை; பொதியிற்கல்லுக்குக் காவிரி.

---

[1] "ஒருமைமந்தன் றன்குலத்துக் குள்ளானென் பதுமுணரான், மருமந்தன் வழிச் செல்லை கடனென்று தன்மைமந்தன், மருமந்தன் றேராழி யுறவூர்ந்தான் மனுவேந்த, னருமந்த வரசாட்சி யரிதோமற் றெளிதோ தான்" பெரிய. திருவாரூர். சச.

[2]. நன்னூற்புலவன்—சாத்தனார்; மணிமேகலைநூலாசிரியர்.

[3]. "விற்றலைக் கொண்ட வியன்பே ரிமயத்தொர், கற்கொண்டு பெயருமெங் காவலன்" (சிலப். உரு:கஅங-ச); "கடவுட் பத்தினிக் கற்கோள் வேண்டி" பதிற். இ-ஆம் பத்துப் பதிகம்.

[4]. "நூலவர்பாகமாக" சூளா. மந்திர. எ.

(பி - ம்.) * 'தூனைந்து' † 'கரந்த' ‡ 'வானத்' § 'இமயத்தங்'

கற்கால் கொள்ளினுங் கடவு * ளாகுங்
கஉ0. கங்கைப்பேர் யாற்றினுங் காவிரிப் புனலினுந்
தங்கிய நீர்ப்படை தகவோ வுடைத்தெனப்
பொதியிற் குன்றத்துக் † கற்கால் கொண்டு
முதுநீர்க் காவிரி முன்றுறைப் படுத்தன்
‡ மறத்தகை நெடுவா ளெங்குடிப் பிறந்தோர்க்குச்
கஉஇ. சிறப்பொடு வரூஉஞ் § செய்கையோ வன்று
புன்மயிர்ச் சடைமுடிப் [1] புலரா வுடுக்கை
முந்நூன் ‖ மார்பின் முத்தீச் செல்வத்
திருபிறப் பாளரொடு பெருமலை யரசன்
மடவதின் மாண்ட மாபெரும் பத்தினிக்
கஙு0. ¶ கடவு ளெழுதவோர் கற்று ராணெனின்
வழிகின்று பயவா மாண்பில் வாழ்க்கை
[2] கழிந்தோ ரொழிந்தோர்க்குக் காட்டிய காஞ்சியு
முதுகுடிப் பிறந்த முதிராச் செல்வியை
மதிமுடிக் களித்த [3] மகட்பாற் காஞ்சியுங்
கஙுஇ. தென்றிசை யென்றன் வஞ்சியொடு வடதிசை
[4] நின்றெதி ரூன்றிய நீள் [5] பெருங் காஞ்சியு

கஉஅ. இருபிறப்பாளர் - தேவவிருடிகள்.

கஉஅ - கஙு0. பார்ப்பாருடனே மகட்டருதலுக்கு இருபிறப்பாளரோடு கல் தாராளுயினென்றன். கஙு0. [6] எழுத - பண்ண.

கஙுக - உ. நிலைநின்று பயன்படாத வாழ்க்கையை மரித்தோர் இருந்தோர்க்குக் காட்டிய நிலையாமையும்.

கஙுச. மதிமுடி - தேவன். மகட்பாற் காஞ்சி - தான் இனியனுய்க்கொடுத்த காஞ்சியும். [தான்.

கஙுஞ - சு. தென்றிசைக்கண்ணே மேற்செலவு. அவன் எதிரூன்றலையுயர்த்

---

1. "ஒன்பது கொண்ட மூன்றுபுரி நூன்ஞாண், புலராக் காழகம் புலர வுடீஇ" முருகு. கஅங-ச.

2. "கழிந்தோ ரொழிந்தோர்க்குக் காட்டிய முதுமையும்" (தொல். புறத்திணை. சூ. உச) என்பதையும் அதன் உரைகளையும் பார்க்க.

3. 'ஏந்திழையாட் டருகென்னும், வேந்தனுழை வேறுநின்றன்று' பு-வெ.சா:உச.

4. "எதிரூன்றல் காஞ்சி" : "வெட்சிநிரை கவர்தல்"—

5. "தாங்கு திறன்மறவர் தீத்த மாறல், வீங்கு பெரும்படையின் வெளிப்படுத் தன்று" பு-வெ. சா:சு.

6. "கடவு ளெழுதவோர் கற்கே யாதலின்", "கடவு ளெழுதவோர் கற்கொண் டலது" (சிலப். உரு: கசுகூ; உசு: கச); "கந்துடை நெடுநிலைக் காரணங் கர்ட்டிய, வந்தி லெழுதிய வற்புதப் பாவை" "கடவுளெழுதிய, வந்திற்பாவை"(மணி. எ: கூச-ருு; கரு: கங-ச.)

(பி - ம்.) * 'ஆகுமெனக்கங்கை' † 'கற்கொண்டுபெயர்த்தமுது' ‡ 'மறத்திகு தெறி' § 'செய்தியோ' ‖ 'மார்பத்திமுத்தீ' ¶ 'கடவுளாகவோர்'

[1] நிலவுக்கதி ரகன்ற நீள்பெருஞ் சென்னி
யலர்மந் தாரமோ டாங்கயன் மலர்ந்த
வேங்கையொடு தொடுத்த விளங்குவிறன் மாலை
கசஎ. மேம்பட மலைதலுங் * காண்குவ லீங்கெனக்
[2] குடைநிலை வஞ்சியுங் [3] கொற்ற வஞ்சியு
நெடு [4] மா ராய நிலைஇய வஞ்சியும்
வென்றோர் விளங்கிய வியன் [5] பெரு வஞ்சியும்
பின்றுச் சிறப்பிற் [6] பெருஞ்சோற்று † வஞ்சியுங்
கஅடு. குன்றுச் சிறப்பிற் [7] கொற்ற வள்ளீயும்
[8] வட்கர் போகிய வான்பனந் தோட்டுடன்

கசுஎ - எ. சென்னியிலே மந்தாரமாலையோடு வேங்கைப்பூ இடையிட்டுத் தொடுத்த மாலையைத் தான் சூடிநிற்கு மதுவுங் காண்பேன்; [அவையும் வெட்டிவனென்பதாம்.]

கசசு. வட்கர் போகிய - இடையில் மூரியில்லாத; நேராதார் போகைக்குக் காரணமாகிய போந்தையென்றுமாம்.

---

1. "நிலவுக்கதிர் மூடித்த நீளிருஞ் சென்னி" சிலப். உசு: இச.

2. குடைநிலைவஞ்சி-குடைநாட்கோடல்; "பெய்தாமஞ் சுரும்பிமிரப் பெரும்புல வர் புகழ்பாடக், கொய்தார் மன்னவன் குடைநாட் கொண்டன்று" பு-வெ. கூ:க.

3. கொற்றவஞ்சி-அரசனது வெற்றியின் மிகுதி; "வையகம் வணங்க வாளோச் சினனெனச், செய்கழல் வேந்தன் சீர்மிகுத் தன்று" பு-வெ. ஙு: எ.

4. மாராயவஞ்சி-அரசனுறை சிறப்பெய்துநிலை; "மாராயம் பெற்ற தெடுமொழி யானும்" (தொல். புறத்திணை. சூ. அ - இளம். த.) "மறவேந்தனிற் சிறப்பெய்திய, விறல்வேலோர் நிலையுரைத்தன்று" பு-வெ. கூ:க.

5. பெருவஞ்சி - பகைவர்நாட்டைக்கொளுத்தல்; "முன்னடையார் வளநாட்டைப், பின்னருமுடன் றெரிகொளீஇயன்று" பு-வெ. ஙு: உஉ.

6. பெருஞ்சோற்றுவஞ்சி - வீரர்களுக்குப் பெருஞ்சோறளித்தல்; "பிண்டமேய பெருஞ்சோற்று நிலையும்" (தொல். புறத்திணை. சூ. அ- இளம். த); "திருந்தார் தெம்முனை தெறுகுவ ரிவரெனப், பெருஞ்சோ றுடவர் பெறுமுறை வகுத்தன்று" பு-வெ. ஙு: உஙு.

7. கொற்றவள்ளை - அரசன் பிரதாபத்தைக் கூறுவதுடன் பகைவர்நாடு அழிந்த தற்கு இரங்கல்; "குன்றுச் சிறப்பிற் கொற்ற வள்ளையும்" (தொல். புறத்திணை. சூ.அ— இளம். த); "மன்னவன் புகழ்விளந், தொன்னார் நாடழிபிரங்கின்று" பு-வெ. ஙு: அ.

8. (க) "வட்கர் போகிய வளரிளம் போந்தை" (புறநா. கo.) (உ) கசசு-எ. அரசர் தமக்குரிய அடையாளப் பூக்கள் முதலியவற்றுடன் புறத்திணைப் பூக்களையும் விரவித் தொடுப்பித்துத் தாம்சூட்டிக்கொள்ளுதலும், வீரர்க்குச் சூட்டுதலும் மரபு; இதனை, "பொலந்தோட்டுப் பைந்தும்பை, மிசையலங் குளைய பனட்டோழ் செரீஇ", "வேம்பி னெண்டொளிர், நெடுங்கொடி யுழிஞைப் பவரொடு மிலைத்து", "போந்தை, யுச்சிக் கொண்ட வூகிவெண் டோட்டு, வெட்சி மாமலர் வேங்கையொடு விரைஇச், சுரியிரும் பித்தை பொலியச் சூடி" (புறநா. உஉ, எஎ, கoo); "இளவரிக்கவட்டிலே யாரொடோர்பெறத், துளவியறும்படையுஞ் சூழியச்சூடினன்" (கம்ப. முதற்போர். கஎஅ) என்பவற்றுலு முணர்க.

(பி - ம்.) * 'காண்குவ மீங்கெனக்கொடை' † 'வஞ்சியும்வட்கார்வான்பனைத் தோட்டொடுட்டகை'

புட்கைச் சேனை பொலியச் சூட்டிப்
[1] பூவா வஞ்சிப் பொன்னகர்ப் புறத்திதன்
வாய்வாண் மழலந்த வஞ்சிசூ டுதமெனப்
கநி0. பல்யாண்டு வாழ்கநின் கொற்ற மீங்கென
வில்லவன் கோதை வேந்தற் குரைக்கு
நும்போல் வேந்தர் நும்மோ டிகலிக்
கொங்கர்செங் களத்துக் கொடுவரிக் கயற்கொடி
* பகைபுறத்துத் தந்தன ராயினு மாங்கவை
கநிநி. திகைமுக வேழத்தின் செவியகம் † புக்கன
கொங்கணர் கலிங்கர் கொடுங்கரு நாடர்
‡ பங்களர் [2] கங்கர் பல்வேற் கட்டியர்
வடவா ரியரொடு வண்டமிழ் மயக்கத்துண்
கடமலை வேட்டமென் கட்புலம் பிரியாது
கசu0. கங்கைப் பேர்யாற்றுக் கடும்புன னீத்த
மெங்கோ மகளை யாட்டிய § வந்நா
ளாரிய மன்ன ரீரைஞ் ஞூற்றுவர்க்
கொருநீ யாகிய செருவெங் கோலங்
கண்விழித்துக் கண்டது கடுங்கட் கூற்றே

கசள. பூட்கை - மேற்கோள்; புட்கை, விகாரம்.

(கசக) 'குடைநிலவஞ்சி' முதலாக, (கசச) 'பெருஞ்சோற்றுவஞ்சி' ஈறுகத் தன்சேனைக்குச் (கசள) சூட்டி.

கசஅ. பூவாவஞ்சி - கருவூர்.

கநo - நிக. 'பல்யாண்டு வாழ்க' என்று இனிச் சொல்லுகின்றான், வில்லவன்கோதையென்னுமந்திரி.

கநஉ. நும்மையொக்கும்வேந்தரென்றான், குலம்பற்றி.

கநந - நி. புலிக்கொடியும் கயற்கொடியும் பகைக்களத்திலே உனக்குத் தந்து ஓடினராயினும் அவை எங்கும் பரந்து திக்கயங்களின் செவியகம் புக்கன.

கநஅ. தமிழ்ப்படைமயங்கிய செருக்களம்.

கநக. கடமலை வேட்டமென் கட்புலம் பிரியாது - நீ நின்யானையை விட்ட படி என் கண்ணினின்றும் போகாது.

கசுக. எங்கோமகளென்றது, செங்குட்டுவன்மாதாவை; அவளை இவன் கொண்டுபோய்த் தீர்த்தமாட்டினதொருகதை.

கசுஉ - ச. ஆரியவரசராயிரவர்க்கு நீயொருவனுகச்செய்த போர்க்கோலங் கண்டது கூற்றமன்றே.

---

[1]. "பூவா வஞ்சியிற் பூத்த வஞ்சி" (சிலப். உசு: நி0); "பூவா வஞ்சியுந் தருவன்" (புறநா. நஉ); "பூத்த வஞ்சி பூவா வஞ்சியில்" மணி. உசு:எஅ.

[2]. கங்கர் கட்டியர் - தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொரு சிற்றரசர் மரபினர்; "தன்னேற்றை நறும்பூணாதி, தன்னருங் கடுத்திறற் கங்கன் கட்டி" அகநா. சச.

(பி - மீ.) * 'கைப்புறத்து' † 'புக்கெனகொங்கர்' ‡ 'வங்களர்கங்கர்வல்வேற்' § 'தன்னுள்'

கசுரு. [1] மீமிழ்கடல் வேலியைத் தமிழ்நா டாக்கிய
[2] விதுநீ கருதினை * யாயி னேற்பவர்
மூதுநீ ருலகின் முழுவது மில்லை
யிமய மால்வரைக் கெங்கோன் செல்வது
[3] கடவு ளெழுதவோர் கற்கே யாதலின்
கஎ0. வடதிசை மருங்கின் மன்னர்க் கெல்லாந்
தென்றமிழ் நன்னுட்டுச் செழுவிற் † கயற்புலி
மண்டலே யேற்ற வரைக வீங்கென
நாவலந் தண்பொழி னண்ணு ரொற்றுநங்
காவல் வஞ்சிக் கடைமுகம் பிரியா
கஎறி. வம்பணி யானே வேந்த ரொற்றே
தஞ்செவிப் படுக்குந் தகைமைய வன்றே
வறைபறை யென்றே * யழும்பில்வே ளுரைப்ப
[5] நிறையருந் தானே வேந்தனு நேர்ந்து
கூடார் வஞ்சிக் கூட்டுண்டு சிறந்த
கஅ0. வாடா வஞ்சி மாநகர் புக்கபின்

கசுஅ. செல்வது - செல்லுகிறபடியை.

கசுரு - எஉ. இமிழ்கடல்வேலியைத் தமிழ்நாடாக்கவேண்டி இமயத்தே கற்கால்கொளக்கருதின், ஏற்பார் யாரென்று அரசனுக்குச்சொல்லி ஓலையெழுதுகவென்றான்.

கஎக - உ. வில்லுக் கயல் புலி இவையிற்றினையுடைய இலச்சினைமண் ணேற்ற ஓலைகளே மன்னர்க்கெல்லாம் வரைகவென.

மேல் அழும்பில்வேள் கூற்று:—

கஎசு - எ. நண்ணர் வரவிட்ட ஒற்றுப் பிரியா; ஆகையாலே அவ்வொற்றே அரசர்செவிக்கு அறிவிக்குந்தன்மையையுடைய; வடதிசைக்குச்செலவு ஆனை மேல் இங்கே பறையறைய அடுக்குமென்றான். [பட்டு.

கஎஅ. பகைமேற்செல்பொழுது நிறுத்ததலரியதானை. நேர்ந்து = உடன்

கஎக - அ0. வஞ்சிக்கூட்டு - ஏடுத்துச்செலவாற்கொண்டதிறை; அதனற் பொலிவுபெற்ற கருவூரிலே திரியச்சென்று புக்கபின்.

அரசன் பேராற்றங்கரையினின்றும் போந்துபுக்கபினென்க.

---

1. சிலப். சு: சுஎ; பதிற். உ: பதி; மணி. கஎ: சுஉ.

2. கசுசு-எ. "இதுநீ கண்ணிய தாயி னிருநிலத், தியார்கொ லளியா தாமே" புறநா. இஉ.

3. மூ: சிலப். உசு:கடுக.

4. "அழும்பில் வேளோ டாயக் கணக்கரை" (சிலப். உஅ: உ0இ); "டெரும்பூட் சென்னி, யழும்பி லன்ன வருஅ யாணர்" (அகநா. சச); "மானவிறல்வே, ளழும்பில்" மதுரை. சுசு-இ.

5. 'நிறையருந்தானையொடு" மணி. சு. உசு.

(பி - ட்.) * 'ஆகவெனதிர்ப்பவர்' † : கயல்புலிமண்டலமொற்றுவரு'

[1] வாழ்க வெங்கோ மன்னவர் பெருந்தகை
யூழிதொ றூழி யுலகங் * காக்கென
[2] விற்றலைக் கொண்ட வியன்பே ரிமயத்தோர்
கற்கொண்டு † பெயருமெங் காவல னுதலின்
கஅடு. வ்டதிசை மருங்கின் மன்ன ரெல்லா
மிடுதிறை கொடுவந் தெதிரீ ராயிற்
[3] கடற்கடம் பெறிந்த கடும்போர் வார்த்தையும்
விடர்ச்சிலை பொறித்த வியன்பெரு வார்த்தையுங்
கேட்டு வாழுமின் கேளீ ராயிற்
கஙo. ரூட்டுணை துறக்குந் துறவொடு வாழுமின்
ரூழ்கழன் மன்னன் றன்றிரு ‡ மேனி
வாழ்க சேனு முகமென வாழ்த்தி
யிறையில வியானை யெருத்தத் தேற்றி
யறைபறை யெழுந்ததா லணிநகர் மருங்கென்.

கஅக. 'வாழ்க' என்றதுமுதல் பறையறைகின்றீர் வார்த்தை.

கஅச. எங்காவலன் பெயருமென்பதை முற்றுருக்கி ஆதலினென்க.

கஅசு - கூ. எதிரேற்றுக் காணீராயின், கடலுட்புக்கும் மலையிலேறியும் உறைமினென்பார், இரண்டுவார்த்தையும் கேட்டுவாழுமினென்றார்.

[அவ்விடத்துப்படை அதன்புகழேயாதலான், அவ்விடங்களிற்செல்லாது ரண்டே உறைமினென்பார், அரசன் போர்கருதினதிசையிற் போம்படியைக் கேளீராயினென்றார்.]

கஙo. தோட்டுணை - மகளிர். துறவு - தவம்.

கஙக - உ. திருமேனியாயிய சேனுமுகம்; சேனுமுகம் அரசனுக்குச் சிறந்த மையின், 'திருமேனி' என்றார்.

கஙஙு. இறையிலவியானை - பட்டவர்த்தனம். கஙச. பறை - பறையொலி. காட்சி - கற்கொள்ள மனத்தால் நிச்சயித்தல்.

உரு—காட்சிக்காதை முற்றிற்று.

---

[1]. கஅக-உ. "வாழ்க வெங்கோ மன்னவர் பெருந்தகை, யூழிதொ றூழிதொ றுலகங் காக்க", "வாழ்க வெங்கோ மன்னவர் பெருந்தகை, யூழிதொ றூழி யுலகங் காக்கென", "ஊழிதொ றூழி யுலகங் காத்து, வாழ்க் வெங்கோ வாழிய பெரிதென", "ஊழியோ ழேழி யுலகங் காத்து, நீவோ ழியரோ" சிலப். கக: கஙி-கூ; உரு: கஅக-உ; உள: கஙகூ-சo; உஅ: கஅஙி-சூ.

[2]. "விற்றலைக் கொண்ட வியன்பே ரிமயத்துக், கற்கால் கொள்ளினுங் கடவு ளாகும்" சிலப். உரு: கஙஅ-கக:

[3], சிலப்பதிகாரம், உக: அக - உ; உஅ: கஙஙி - கூ.

(பி - ம்.) * 'காக்கவில்' † 'பெயருங்காவலன்' ‡ 'மேனியாயசேனு'

இருபத்தாறுவது

கால்கோட்காதை.

அறைபறை யெழுந்தபி னரிமா னேந்திய
முறைமுதற் கட்டி லிறைமக னேற
வாசான் பெருங்கணி யருந்திற லமைச்சர்
தானைத் தலைவர் தம்மொடு குழீஇ
நி. மன்னர் மன்னன் வாழ்கென் றேத்தி
முன்னிய * திசையின் முறைமொழி கேட்ப
† வியம்படு தானை விறலோர்க் கெல்லா
முயர்ந்தோங்கு வெண்குடை யுரவோன் கூறு
[1] மிமையத் தாபத ரெமக்கீங் ‡ குணார்த்திய
கo. வமையா வாழ்க்கை யரைசர் வாய்மொழி
நம்பா § லொழிகுவ தாயி னுங்கம்
தெம்போல் வேந்தர்க் கிகழ்ச்சியுந் தரூஉம்
வடதிசை மருங்கின் மன்னர்த முடித்தலைக்
கடவு ளெழுதவோர் கற்கொண் டல்லது
கரி. வறிது மீளுமென் வாய்வா ளாகிற்
|| செறிகழல் புனைந்த செருவெங் கோலத்துப்
[2] பகையர சடுக்காது பயங்கெழு வைப்பிற்

கூ - கூ. தானைத்தலைவர் தம்மொடு ஆசான் பெருங்கணி அருந்திறலமைச்சர்கூடி ஏத்திக் கேட்ப.

(ஏ) ஏவப்பட்ட தானைத்தலைவர்க்கெல்லாம் (அ) கூறுமென்க.

கூ. தாபதர் - தீர்த்தமாட இமயத்தினின்றும் வந்த தாபதர்.

கo. அமையாவாழ்க்கை - நிரம்பாத உயிர்வாழ்க்கை ; பலமில்லாத வாழ்க்கையெனினுமாம். அங்ஙனுள்ள ஆரியமன்னர் சொன்ன வார்த்தை.

கக - உ. நம்பால் ஒழிகுவதாயின் - அது நம்மிடத்தே கிடப்பதொரு வார்த்தையாயின் ; [அவர்க்குப் பலியாது] நம்மிடத்தே கிடந்துவிடிற் சோழ பாண்டியரிடத்தில் இகழ்ச்சியுந்தரும்.

---

1. கூ-கநி. "தென்றமிழ்நாடாளும் வேந்தர்.....தங்கைதன்னை தீர்ப்படுத்தி வெஞ்சினந்தரு வெம்மைதீங்கி" நிலப். உசு: உரைப்பாட்டுமடை.

2. க்ள-அ. "பழியொடு படராப் பஞ்சவ வாழி", "படர்த்தெழு குருதி யடங்கா' நிலப். உo: நங; உசு: கஉள.

(பி - ம்.) * 'திசைமென்மூறைமொழி' † 'வீயன்படு' ‡ 'உரைத்தவமையா § 'ஒழிவதாயின்' || 'செருக்கழல் புனைந்தசெரு'

[1] * குடிநடுக் குறூஉங் கோலே னெனென
வார்புனை தெரியலு மலர்தார் வேம்புஞ்
உ0. சீர்கெழு மணிமுடிக் கணிந்தோ ரல்லா
லஞ்சினர்க் களிக்கு மடுபோ ரண்ணனின்
வஞ்சினத் தெதிரு மன்னரு முளரோ
விமைய வரம்பனின் னிகழ்ந்தோ ரல்ல
ரமைகனின் சினமென வாசான் கூற
உடு. [2] வாறிரு மதியினுங் காருக வடிப்பயின்
† றைந்து கேள்வியு மமைந்தோ னெழுந்து
வெந்திறல் வேந்தே வாழ்கனின் கொற்ற
மிருநில மருங்கின் மன்ன ‡ ரெல் லாநின்
றிருமலர்த் தாமரைச் சேவடி பணியு
ங0. முழுத்த மீங்கிது முன்னிய திசைமே
லெழுச்சிப் பாலை § யாகென் றேத்த
மீளா வென்றி வேந்தன் கேட்டு
[3] வாளுங் குடையும் வடதிசைப் பெயர்க்கென
வுரவுமண் சுமந்த வரவுத்தலை பனிப்பப்

கஎ. ஆகவென்று சொல்ல.

கசு - உச. இமயவரம்ப! சோழபாண்டியரையல்லது நின்னே இகழ்ந்து கூறினரல்லர்; அடுபோரண்ணலே! நீ வஞ்சினங்கூறுதற்கு நின்னுடன் எதிர்க்கும் மன்னருமுளரோ; ஆதலால், நின்சினந்தணிகவென்றான்; இது புரோகிதன் வார்த்தை.

உடு. ஆறிருமதியினும் - இராசி பன்னிரண்டினும். காருகவடி - ஐர்கலில.

உசு. ஐந்து கேள்வி - திதி வாரம் நக்ஷத்திரம் யோகம் கரணம்; நட்பு ஆட்சி உச்சம் பகை நீசக்கோளுமாம். அமைந்தவன் - [4] மௌத்திகன்.

ங0 - ஙக. இது [5] முழுத்தம்; எழும் பக்கத்தையாக வெனச் சொல்ல.

ஙச. உரவுமண் - உரத்தமண்.

---

1. 'சிலப்பதிகாரம், கசு: உஅ-ஆம் அடியின் கீழ்க்குறிப்பைப்பார்க்க.

2. 'வாளுங் குடையு மயிர்க்கண் முரசு, நாளொடு பெயர்த்து', 'மறமிகு வாளு மாலை வெண் குடையும், புறநிலைக் கோட்டப் புரிசையிற் புகுத்தி" (சிலப்., இ: கக - உ; உக: சக-இ.) "குடைநாட்கொளல் வாளுட்கொளல் குறியாவத சவுண, னுடைநாளழி வறி யாதவ னுரனென்றிய வாழிப்,படைநாரணன் மகன்வெண்குடை பற்றக்குடை யேயா, யடையாவமர் வுற்றுலன முடிமீக்குடை நிழல்" தணிகை. பரி. சுக.

3. உடு-ஙக = முல்லைப்பாட்டு, இடு-அ

4. மௌகூர்த்திகன். 5. முகூர்த்தம்; இது முகிழ்த்தமெனவும் வழங்கும்.

(பி - ம்.) * 'குடிநடுக்குறுங்' † 'ஆறறிந்து' ‡ 'னல்லாரிரு' § 'ஏகென்று'

நடு. பொருந ராரப்பொடு மூரசெழுந் * தொலிப்ப
விரவிடங் கெடுத்த † நிரைமணி விளக்கின்
விரவுக்கொடி யடுக்கத்து நிரயத் தாணையோ
[1] டைம்பெருங் குழுவு மெண்பே ராயமும்
‡ வெம்பரி யாளை வேந்தற் கோங்கிய

சஅ. கரும விளைஞருங் கணக்கியல் விளைஞருந்
தரும விளைஞருந் தந்திர விளைஞரு
[2] மண்டிணி ஞால மாள்வோன் வாழ்கெனப்
பிண்ட முண்ணும் பெருங்களிற் றெருத்தின்
மறமிகு வாளு மாலைவெண் குடையும்

சடு. புறநிலைக் கோட்டப் புரிசையிற் புகுத்திப்
புரைதீர் [3] வஞ்சி போந்தையிற் றெடுப்போ
[4] னரைசுவிளங் கவைய § முறையிற் புகுதர
வரும்படைத் தானை யமர்வேட்டுக் கலித்த
பெரும்படைத் தலைவர்க்குப் [5] பெருஞ்சோறு வகுத்துப்

நஅ. [6] பூவா வஞ்சியிற் பூத்த வஞ்சி
வாய்வா ணெடுந்தகை மணிமுடிக் கணிந்து

நகக. இரவிடங்கெடுத்த விளக்கிலேயென்றதி.....விடுகிறபடி யாலே.....

நகள. [1] நிரயத்தாணை - மாற்றூர்க்கு நரக வேதனையைச் செய்யுந்தானை.

சஅ. கருமவினைஞர் - புரோகிதர்.

சஙக. பிண்டமுண்ணும் பெருங்களிறு - .....பிண்டத்துக்குரிய களிறு; பட்டவர்த்தனம்.

சடு. புகுத்தி - புகவிட்டு. சகக. தொடுப்போன் - சேரன்.

---

[1]. சிலப். இ: கடுவ; மணி. க: கள; பெருங். உ: இ. சு; கூ கூ கக. ங; தொல். இளவி. சூ. இள-த. மேற்.

[2]. "மண்டிணிந்த நிலம்" புறநா. உ.

[3]. அரசர், தம்க்குரிய அடையாளப்பூ முதலியவற்றையும் வீரவுவித்து அணித்துகொள்ளுதல் மரபு: உஇ-ஆம் காதையிலுள்ள, சசடு-சு-ஆம் அடிகளின் குறிப்பைப் பார்க்க.

[4]. "அரசுவிளங் கவையத்து" சிலப். உகங்: கூஇ.

[5]. சிலப். உடு: கசகூ - ஆம் அடிக்குறிப்பைப்பார்க்க; "பெருஞ்சோறுவகுத்தற் றெறியுங், கடுஞ்சின வேந்தே" பதிற். ஈ0.

[6]. சிலப். உடு: கச அ-ஆம் அடிக்குறிப்பைப் பார்க்க.

[7]. நிரைய வொள்வா ளிளையர் பெருமகன்" (சூளா. உடுஅ); "நிரைகளி றெழு நிய நிரையவெள்ளம்" பதிற். கடு.

(பி - ம்.) * 'ஆர்ப்ப' † 'மாமணி' ‡ வெம்பரித்தானை வேந்தர்க்கு' §'முறைமையிற்'

ஞாலங் காவலர் நாட்டிறை பயிருங்
[1] காலே முரசங் கடைமுகத் தெழுதலு
[2] நிலவுக்கதிர் முடித்த நீளிருஞ் சென்னி
நிஎ. யுலகுபொதி யுருவத் [3] துயர்ந்தோன் சேவடி
மறஞ்சேர் வஞ்சி மாலே யொடு * பூணுந்
திறஞ்சாச் சென்னி யிறைஞ்சிவலங் கொண்டு
† மறையோ ரேந்திய வாகுதி நறும்புகை
நறைகெழு மாலேயி னல்லகம் வருத்தக்
சுஎ. கடக்களி யானைப் பிடர்த்தலே யேறினன்
குடக்கோக் குட்டுவன் கொற்றங் கொள்கென
[4] வாடக மாடத் தறிதுயி ‡ லமர்ந்தோன்
சேடங் கொண்டு சிலர்தின் § றேத்தத்
தெண்ணீர் கரந்த செஞ்சடைக் கடவுள்
சுஅ. வண்ணச் சேவடி மணிமுடி வைத்தலி
னுங்கது வாங்கி யணிமணிப் புயத்துத்
தாங்கின னுகித் தகைமையிற் செல்வுழி
[5] நாடக மடந்தைய ராடரங் கியாங்கணுங்
கூடையிற் பொலிந்து கொற்ற வேம்பே

நிஉ - ங. அரசரிடுந்திறையை அழைக்கும் முரசம்.

நிஅ. ஏந்திய - எடுத்த. புகை - அக்கினிகோத்திரம்.

நிஎ - அ. அக்கினிகோத்திரங்களையும் நமக்காரித்து.

சுஉ. ஆடகமாடம் - திருவனந்தபுரம்; இராவிபாமென்பாருமுளர்.

(சுஎ) ஏறினன் (சுஎ) தாங்கினனுகிச் செல்வுழி.

சுஙு. கூடையிற் பொலிந்து-குவித்த கையுடனே பொலிந்து; கூடைக்கை-இரட்டை ஒற்றைக்கை.

---

[1]. சிலப்பதிகாரம், கள: நி-சு ஆம் அடிகளின் கீழ்க்குறிப்பைப் பார்க்க.

[2]. "திலவுக்கதி ரணிந்த நீள்பெருஞ் சென்னி" சிலப். உரி: கஙஎ.

[3]. நிஇ-எ. "பணியிய ரத்தைதின் குடையே முனிவர், முக்கட் செல்வர் நகர் வலஞ் செயற்கே" புறநா. சு.

[4]. "ஆடக மாடத் தரவணைக் கிடந்தோன்" (சிலப். சுஉ: நிக); 'ஆடகமாடம்' நிறை. சூ. உசு-மேற்.

[5]. "கழங்காடு மகளி ரோதை யாயத்து,'வழங்குதொடி முன்கை மலர வேந்தி, வானவன் வந்தான் வள்ரிவ வனமுலே, தோணல முணீஇய துய்ப்பை போந்தையொடு, வஞ்சி பாடுது மடவீர் யாமெனு, மஞ்செர்ற் இளவிய ரந்திப் பாணியும்" சிலப், உஎ: உசடி-டுஉ.

பி - ம்.) * 'பொருத்தியூரஞ்சாச்' † 'மறையோராக்கிய வாகுதி நறும்புகை நறைகெழுமாலேதல்லகம்' ‡ 'அமைந்தோன்' § 'ஏத்தநாடக் மடைந்தையர்'

எ0. [1] வாகை தும்பை மணித்தோட்டுப் போந்தையோ
டோடை யாணெயி னுயர்முகத் தோங்க
வெண்குடை நீழலெம் வெள்வேள * கவர்ந்து
கண்களி கொள்ளுங் காட்சியை யாகென
[2] மாகதப் புலவரும் † வைதா ளிகருஞ்
எஅ. சூதரு நல்வலந் தோன்ற வார்த்த
[3] யானை வீரரு மிகுளித் தலைவரும்
வாய்வாண் மறவரும் வாள்வல னேத்தத்
தானவர் தம்மேற் றம்பதி நீங்கும்
வானவன் போல வஞ்சி நீங்கித்
அ0. ‡ தண்டலைத் தலைவருந் தலைத்தார்ச் சேணியும்
[4] வெண்டலைப் § புணரியின் விளிம்புசூழ் போத
மலைமுதுகு நெளிய நிலைநா டதர்பட
உலக மன்னவ ரிருங்குடன் சென்றுங்
காலும் புரவி யணித்தேர்த் தானையொடு
அடி. நீல கிரியி னெடும்புறத் திறுத்தாங்
காடியல் யானையுந் தேரு மாவும்
பீடுகெழு மறவரும் பிறழாக் காப்பிற்
பாடி யிருக்கைப் பகல்வெய் யோன்ற
னிருநில மடந்தைக்குத் திருவடி யளித்தாங்

எ0 - எக. அரசர்சூடுவன யாணைக்குஞ் சூட்டுதலின், வாகையும் தும்பை யும் போந்தையோடு நின்யாணைமுகத்து ஓங்கித் தோன்றவென்றார்.

(சுஅ) நாடகமடந்தையர் (எசு) காட்சியை யுடையை யாகவென வாழ்த்தாநிற்க.

எஅ. நல்வலம் - களவெற்றி. எஆ. தானவர் - அசுரர்.

அ0. தார் - தூசிப்படை. அக. கடற்கரை அருகே போத.

அடி. நீலகிரி - ஒருமலை. அஅ. நடுவுநிலை விரும்புவோன்.

அஅ - கூ. சேரன் தானுள்ளின்ற பூமிதேவிக்குத் திருவடியளித்து; அங்கே யாணையினின்றிழிந்து கால்நிலம் தோயச்செய்தலால்.....

---

1. "போந்தையொடு தொடுத்த பருவத்தும்பை", 'தோடார் போந்தை தும்பை யொடு முடித்து" சிலப். உசுஃ உக்கு; உஎ. சடு.

2. "சூதர் மாகதர் வேதா ளிகரொடு" (சிலப். நீ: சுஅ); சூத ரேத்த மாகதர் துவல, வேதா ளிகரொடு" மதுரை. சுஎ0-எக.

3. எஎ. "வான்பீக் கூற்றத்து வயவ ரேத்த" [illegible]

4. "வெண்டலைப் புணரி", "வெண்டலை

உ. நக.

(பி - ம்.) * 'கவருங்கண்' † 'வேதாளியரு

§ 'புணரிலிசும்புசூழ்போக'

ஞாலங் காவலர் நாட்டிறை பயிருங்
[1] காலை முரசங் கடைமுகத் தெழுதலு
[2] நிலவுக்கதிர் முடித்த நீளிருஞ் சென்னி
நிநி. யுலகுபொதி யுருவத் [3] துயர்ந்தோன் சேவடி
மறஞ்சேர் வஞ்சி மாலை யொடு * புனைந்
திறைஞ்சாச் சென்னி யிறைஞ்சிவலங் கொண்டு
† மறையோ ரேந்திய வாவுதி நறும்புகை
நறைகெழு மாலைபி னல்லகம் வருத்தக்
சுஂ. கடக்களி யானைப் பிடர்த்தலை யேறினன்
குடக்கோக் குட்டுவன் கொற்றங் கொள்கென
[4] வாடக மாடத் ததிதுயி ‡ லமர்ந்தோன்
சேடங் கொண்டு சிலர்நின் § றேத்தத்
தெண்ணீர் கரந்த செஞ்சடைக் கடவுள்
சுநி. வண்ணச் சேவடி மணிமுடி வைத்தலி
னுங்கது வாங்கி யணிமணிப் புயத்துத்
தாங்கின னுகித் தகைமையிற் செல்வுழி
[5] நாடக மடந்தைய ராடரங் கியாங்கணும்
கூடையிற் பொலிந்து கொற்ற வேந்தே

நிஉ - ஈ. அரசரிடந்திறையை அழைக்கும் முரசம்.

நிஅ. ஏந்திய - எடுத்த. புகை - அக்கினிகோத்திரம்.

நிஎ - அ. அக்கினிகோத்திரங்களையும் நமக்கரித்து.

சுஉ. ஆடகமாடம் - திருவனந்தபுரம்; இவிபுரமென்பாருமுளர்.

(சுஂ) ஏறினன் (சுஎ) தாங்கினனுகிச் செல்வுழி.

சுசு. கூடையிற் பொலிந்து-குவித்த கையுடனே பொலிந்து; கூடைக்கை-இரட்டை ஒற்றைக்கை.

---

1. சிலப்பதிகாரம், கள: நி-சு ஆம் அடிகளின் கீழ்க்குறிப்பைப் பார்க்க.

2. "நிலவுக்கதி ரளைந்த நீள்பெருஞ் சென்னி" சிலப். உநி: கசுஎ.

3. நிநி-எ. "பணியிய ரத்தைதின் குடையே முனிவர், முக்கட் செல்வர் நகர் வலஞ் செயற்கே" புறநா. சுசு.

4. "ஆடக மாடத் தரவணைக் கிடந்தோன்" (சிலப். சுஂ: நிக); 'ஆடகமாடம்' இறை. ஞ. உசு-மேற்.

5. "கழங்காடு மகளி ரோதை யாய்த்து,'வழங்குதொடி முன்கை மலர வேந்தி, வானவன் வந்தான் வள்ளிவ னமுலே, தோணல முணீஇய தும்பைப் போந்தையொடு, வஞ்சி சூடிது மடவீர் யாமெனு, மஞ்செற்ற் இளவிய ரந்திப் பாணியும்" சிலப், உள: உசடு-டுஂ.

பி - ம்.) * 'பொருந்தியிறைஞ்சாச்' † 'மறையோராக்கிய வாகுதி நறும்புகை நறைசெழுமாலைதல்லகம்' ‡ 'அமைந்தோன்' § 'ஏத்தஆடக மலைந்தையர்'

எ0. [1] வாகை தும்பை மணித்தோட்டுப் போந்தையோ
டோடை யாணெயி னுயர்முகத் தோங்க
வெண்குடை கீழலெம் வெள்வளை * கவர்ந்து
கண்களி கொள்ளுங் காட்சியை யாகென
[2] மாகதப் புலவரும் † வைதா லிகருஞ்
எஅ. சூதரு நல்வலந் தோன்ற வாழ்த்த
[3] யானை வீரரு மிவுளித் தலைவரும்
வாய்வாண் மறவரும் வாள்வல னேத்தத்
தானவர் தம்மேற் றம்பதி நீங்கும்
வானவன் போல வஞ்சி நீங்கித்
அ0. ‡ தண்டலைத் தலைவருந் தலைத்தார்ச் சேனையும்
[4] வெண்டலைப் § புணரியின் விளிம்புசூழ் போத
மலைமுதுகு நெளிய நிலநா டதர்பட
வுலக மன்னவ ரொருங்குடன் சென்றுங்
காலும் புரவி யணித்தேர்த் தானையொடு
அஇ. நீல கிரியி னெடும்புறத் திறுத்தாங்
காடியல் யானையுந் தேரு மாவும்
பீடுகெழு மறவரும் பிறழாக் காப்பிற்
பாடி யிருக்கைப் பகல்வெய் யோன்ற
னிருநில மடந்தைக்குத் திருவடி யளித்தாங்

எ0-எக. அரசர்சூடுவன யாணைக்குஞ் சூட்டுதலின், வாகையும் தும்பை யும் போந்தையோடு நின்யானைமுகத்து ஓங்கித் தோன்றவென்றார்.

(சுஅ) நாடகமடந்தையர் (எசு) காட்சியை யுடையை யாகவென வாழ்த்தாநிற்க.

எஇ. நல்வலம் - களவெற்றி. எஅ. தானவர் - அசுரர்.

அ0. தார் - தாங்கிப்படை. அக. கடற்கரை அருகே போத.

அஇ. நீலகிரி - ஒருமலை. அஅ. நடுவுநிலை விரும்புவோன்.

அஅ-கூ. சேரன் தானுள்ளின்ற பூமிதேவிக்குத் திருவடியளித்து; அங்கே யானையினின்றிழிந்து கால்நிலந் தோயச்செய்தலால்.....

---

1. "போந்தையொடு தொடுத்த பருவத்தும்பை", 'தோடார் போந்தை தும்பை யொடு முடித்து" சிலப். உசு: உக்கு; உள: சஇ.

2. "சூதர் மாகதர் வேதா லிகரொடு"(சிலப். இ: சஅ); சூத ரேத்த மாகதர் நுவல, வேதா லிகரொடு" மதுரை. சுஎ0-எக.

3. ஏள. "வாண்மீக் கூற்றத்து வயவ ரேத்தி" இறுபான். உகஉ.

4. "வெண்டலைப் புணரி", "வெண்டலைப் புணரிதின் மான்குளம் பலைப்ப" புறநா. உ, நக.

(பி-ம்.) * 'கவருங்கண்' † 'வேதாளியரும்' ‡ 'தண்டத்திலைவருந்தலைச்சார்ச்சேனை § 'புணரிவிசும்புசூழ்போக'

கூ0. கருந்திறன் மாக்க ளடியீ டேத்தப்
பெரும்பே ரமளி யேறிய பின்னை
ரியங்குபடை யரவத் தீண்டொலி யிசைப்ப
விசும்பியங்கு முனிவர் வியனில மாளு
மிந்திர திருவனைக் * காண்குது மென்றே

கூரி. யந்தரத் திழிந்தாங் கரசுவிளங் கவையத்து
மின்னெளி மயக்கு மேனியொடு தோன்ற
மன்னவ னெழுந்து வணங்கினின் றோனைச்
[1] செஞ்சடை வானவ னருளினில் விளங்க
வஞ்சித் தோன்றிய † வானவ கேளாய்

கoo. மலயத் தேகுதும் வான்பே ரிமய
நிலயத் தேகுத னின்கருத் தாகலி
னருமறை யந்தண ராங்குளர் வாழ்வோர்
‡ பெருநில மன்ன காத்தனின் கடனென்
றுங்கவர் வாழ்த்திப் போந்ததற் பின்னர்

கoடி. [2] வீங்குநீர் ஞால மாள்வோன் வாழ்கெனக்
[3] கொங்கணக் கூத்தருங் கொடுங்கரு நாடருந்
§ தங்குலக் கோதிய தகைசா லணியின
[4] ரிருள்படப் பொதுளிய சுருளிருங் குஞ்சி
மருள்படப் பரப்பிய வொலியன் மாலையர்

ககo. வடஞ்சுமந் தோங்கிய வளரிள வனமுலைக்
கருங்கய னெடுங்கட் காரிகை யாரோ
டிருங்குயி லால வினவண் டியாழ்செய

கூஉ. இயங்குபடை - சேனை; வெளிப்படை. இசைப்ப - இசைத்தலால்.

கoக. நிலயத்து - நிற்கிறவிடத்து.

கoஉ - ச. 'அங்கு அந்தணர்வாழ்வாருளர்; அவர்கள் நலியாதகாத்தல் நினது கடனென்று பெயர்ந்தபின்.

கoசு. கொங்கணதேசத்துக்கூத்தர்.

கoஎ. குலத்திற்கு ஓதிய ஒப்பனையினராய். கoஅ. குஞ்சியிடத்து.

கoகூ. ஒலியன்மாலை - தழைத்தமாலை.

---

1. கூஅ-கூ. "ஆனே ரார்ந்தோ னருளிற் றோன்றி, மாநிலம் விளக்கிய மன்னவன்" சிலப். கo: கசக - உ. 2. மு. சிலப்பதிகாரம், உசு: கடுடி, களசு.

3 பிரயோக. உ: உரை, மேற். 4. முருகு. கo.

(பி - ம்.) * காண்குவம், † 'வானவன்' ‡ 'பெருநில' § 'தன்குலக்கெழுதிய'

வரும்பவிழ் வேனில் வந்தது வாரார்
காதல ரென்னு மேதகு சிறப்பின்
ககடு. மாதர்ப் பாணி வரியொடு தோன்றக்
கோல்வளை மாதை கோலங் கொள்ளாய்
காலங் காணுய் கடிதிடித் துரறிக்
காரோ வந்தது காதல ரேறிய
தேரோ வந்தது செய்வினை முடித்தெனக்
கஉ0. காஅர்க் குரவையொடு கருங்கய னெடுங்கட்
கோற்றொடி மாதரொடு குடகர் தோன்றத்
தாழ்தரு கோலத்துத் * தமரொடு சிறந்து
வாள்வினை முடித்து மறவாள் வேந்த
னூழி வாழியென் றேவர் தோன்றக்
கஉடு. கூத்துள் † படுவோன் காட்டிய முறைமையி
னேத்தின ரறியா விருங்கல ‡ னல்கி
[1] வேத்தின நடுக்கும் வேலோ னிருந்துழி
நாடக மகளிரீ ரைம்பத் திருவருங்
§ கூடிசைக் குயிலுவ ரிருநூற் றெண்மரும்
கஉ0. [2] தொண்ணூற் றறுவகைப் பாசண் டத்துறை
நண்ணிய நூற்றுவர் [3] நகைவே ழம்பருங்
கொடுஞ்சி நெடுந்தே ரைம்பதிற் றிரட்டியுங்
கடுங்களி யானை யோரைஞ் ஞூறு
மையீ ராயிரங் கொய்யுளைப் புரவியு
கஉடு. மெய்யா வடவளத் திருபதி னூயிரங்
[4] || கண்ணெழுத்துப் படுத்தன கைபுனை சகடமுஞ்

ககடு. பாணிவரி - இப்பொருள்வைத்த உரு.

(கஉ0) கார்காலத்தைப் பாடின பாட்டோடு (கஉக) இவர்கள் தோன்ற; இவர் குடகர்.

கஉச. ஓவர் - எத்தாளர். கஉடு. கூத்துள்படுவோன் - ஆடலாசிரியன்.

கஉடு. எய்யாவளம் - புறம்பு ஓரிடத்தும் கண்டறியாவளம்; அதுதான் வடக்கிற் பாகுடம்.

கஉஎ. இன்னசரக்கென்று எழுத்துப்படுத்தன; சகடம்-கொல்லாப்பண்டி.

---

[1]. சிலப். உசு: கள - அ.

[2]. இந்நூல் கூ-ஆம் காதை கச - நிஆம் அடிகளின் உரையையும், அவற்றின் வேற்றுமைப்பாட்டையும்பார்க்க; ப. உசஅ. [3]. சிலப்பதிகாரம், நிஉ: நிஉ.

[4]. கண்ணெழுத்துப் படுத்த வெண்ணூப் பல்பொதி" சிலப். நிஉ: ககஉ.

(பி - ம்.) * 'தமரொடுஞ்சிறந்து வாழ்வினை' † 'படுவோள்' ‡ 'நல்கவேத் தினர் நடுக்கும்' § 'கூடைக்குயிலுவர்' || 'கண்ணெழுவுடையன கைபுனைசகடமும்'

சஞ்சயன் முதலாத் தலைக்கீடு பெற்ற
கஞ்சுக * முதல்வரீ ரைஞ்ஞூற் றுவருஞ்
சேயுயர் விற்கொடிச் செங்கோல் வேந்தே

கசா0. வாயி லோரென வாயில்வர் திசைப்ப
நாடக மகளிரு நலத்தகு மாக்களுங்
† கூடிசைக் குயிலுவக் கருவி யாளருஞ்
சஞ்சயன் றன்னெடு வருக வீங்கெனச்
செங்கோல் வேந்தன் றிருவிளங் கவையத்துச்

கசநி. சஞ்சயன் புகுந்து தாழ்ந்துபல வேத்தி
யாணையிற் ‡ புகுந்தவீ ரைம்பத் திருவரொடு
மாண்வினை யாளரை வகைபெறக் காட்டி
வேற்றுமை யின்றி நின்னெடு கலந்த
நூற்றுவர் கன்னருங் § கோற்றொழில் வேந்தே

கநி0. [1] வடதிசை || மருங்கின் வானவன் பெயர்வது
கடவு ளெழுதவோர் கற்கே ¶ யாயி
னேங்கிய விமயத்துக் கற்கால் கொண்டு
வீங்குநீர்க் கங்கை நீர்ப்படை செய்தாங்
கியாந்தரு மாற்றல மென்றன ரென்று

கநிநி. [2] வீங்குநீர் ஞால மாள்வோய் வாழ்கென
வடல்வேன் மன்ன ராருயி ருண்ணுங்
கடலுள் தாணைக் காவல னுரைக்கும்
பால குமரன் மக்கண் மற்றவர்
[3] காவா நாவிற் கனகனும் விசயனும்

கசுவ. சஞ்சயன் - தூதரிற்றலையாயவன். தலைக்கீடு - மயிர்க்கட்டு.

கசுஅ. கஞ்சுகமுதல்வர் - சட்டையிட்டபிரதானர்.

கசசு. ஆணையிற் புகுந்த ஈரைம்பத்திருவரென்றது, முன்சொன்ன நாடக மகளிரை; கன்னரென்பார் வரக்காட்டினர்.

கநிஅ. - கூ. பாலகுமரன் மக்கள் - கனகனும் விசயனுமென்பார்.

---

[1] கநி0 - நிகூ. "இமய மால்வரைக் கெங்கோன் செல்வது, கடவு ளெழுதவோர் கற்கே யாதலின்" சிலப். உரை: கசுஅ-கூ. [2] "வீங்குநீர் ஞால மாள்வோன்" களவி.

[3] "யாகாவா ரா்யினு நாகாக்க காவாக்காற், சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு" (குறள், கூடா); "ஆக்கப் படுக்கு மருந்தாவாய்ப் பெய்விக்கும், போக்கப் படுக்கும் புலைநரகத் துய்ப்பிக்கும், காக்கப் படுவன விந்திய மைந்தினு, நாக்கல தில்லை நனி வெல்லு மாறே" வளையாபதி.

(பி - மி.) * 'முதல்வ ரைஞ்ஞூற் றுவரும்' † 'கூடிய குயிலுவக்' ‡ 'புகுந்த வைம்பதி.....னரம்ன்வினை' § 'கோத்தொழில்' || 'மருங்குவான்பேரிமை யத்துக்' ¶ 'ஆகிலோங்கியர்'

கசூ0. விருந்தின் மன்னர் தம்மொடுங் கூடி
யருந்தமி ழாற்ற லறிந்திலர் ராங்கெனக்
* கூற்றக் கொண்டிச் சேணை செல்வது
நூற்றுவர் கன்னர்க்குச் சாற்றி யாங்குக்
கங்கைப் பேர்யாறு கடத்தற் காவன

கசூஇ. வங்கப் பெருநிரை செய்க தாமெனச்
சஞ்சயன் போனபின் கஞ்சுக மாக்க
ளெஞ்சா நாவின ரீரைஞ் ஞூற்றுவர்
[1] சந்தின் குப்பையுந் தாழ்நீர் முத்துந்
தென்ன ரிட்ட திறையொடு கொணர்ந்து

கஎ0. † கண்ணெழுத் தாளர் காவல் வேந்தன்
[2] மண்ணுடை ‡ முடங்கலம் மன்னவர்க் களித்தாங்
காங்கவ ரேகிய பின்னர் மன்னிய

கசூ0. விருந்தின் மன்னர் - தமிழ்வேந்தர் ஆற்றலறியாத புதிய அரசர்.

கசூ0 - சுக. இவருடன்கூடித் தமிழ்வேந்தரை இகழ்ந்து உரைத்தார்.

கசூஉ. கூற்றம்போலும் கொடிச்சேணை. 'கூற்றங் கொண்டிச் சேணை செல்வது' என்று பாடமாயின், கூற்றம் பின்செல்ல இப்படை செல்லுகிறபடியையென்க.

கசூக-உ. அருந்தமிழ் ஆற்றல் அறிந்திலரென்று சேணை செல்வதெனச் சேணைமேலிட்டுக்கூறினன் ; தனக்கு அவர் நிகரன்மையின்.

கசூசு. கஞ்சுகமாக்கள் - தன்றூதர்.

கசூஎ. எஞ்சா நாவினர் - வார்த்தை தப்பாத நாவினர் ; அரசன் நினைவு தப்பாத நாவினரென்றுமாம்.

கசூஅ. தாழ்நீர் - தங்குநீர்மை.

கசூஅ-கூ. சந்தும் முத்துமாகிய தென்னரிட்ட திறை.

கசூகூ. கொணர்ந்து - கொணர.

கஎ0. கண்ணெழுத்தாளர் - திருமுகமெழுதுவார்.

கஎ0 - எஉ. இவ்வரைந்து இலச்சினையிட்டு அவர் கைக்கொடுப்பத் திருமுகங்கொண்டு அவர்போயபின்.

கஎக. அளித்து - அளிப்ப.

---

[1]. சந்தனமும் முத்தும் தென்னர்க்கு உரியனவென்பதை, "கோவாமலையாரம் .....தென்னர்கோன் மார்பினவே" (சிலப். கள: உள்வரிவாழ்த்து,க) என்பதனாலும் அதன் கீழ்க்குறிப்பாலும் அறிக; ப. சசள.

[2]. "மண்ணுடை முடங்கன் மாதவி யீத்ததும்" சிலப். கஙஃ: எசூ.

(பீ - மீ.) * 'சீற்றங்கொண்டு' † 'கண்ணெழுத்தாளொடுகூவல்' ‡ 'முடங் கன்மன்னவற்கு'

வீங்குநீர் ஞால மாள்வோ னேங்கிய
நாடாள் செல்வர் நல்வல னேத்தப்
களரி. பாடி யிருக்கை நீங்கிப் பெயர்ந்து
கங்கைப்பே ரியாற்றுக் கன்னிநீற் பெற்ற
வங்கப் பரப்பின் வடமருங் * கெய்தி
யாங்கவ ரெதிர்கொள வந்நாடு கழிந்தாங்
கோங்குநீர் வேலி யுத்தர மீதிப்
கஅ0. பகைப்புலம் புக்குப் பாசறை † யிருந்த
தகைப்பருந் தானை மறவோன் றன்மு
னுத்தரன் விசித்திர னுருத்திரன் பைரவன்
சித்திரன் சிங்கன் ‡ றனுத்தரன் சிவேதன்
வடதிசை மருங்கின் மன்னவ ரெல்லாந்
கஅரி. தென்றமி ழாற்றல் § காண்குதும் யாமெனக்
கலந்த கேண்மையிற் கனக விசயர்
[1] நிலந்திரைத் தானையொடு நிகர்த்து மேல்வர
விரைதேர் வேட்டத் தெழுந்த வரிமாக்
கரிமாப் பெருநிரை கண்டுளஞ் சிறந்து
கக0. பாய்ந்த பண்பிற் பல்வேன் மன்னர்
காஞ்சித் தானையொடு காவலன் மலைப்ப
‖ வெயிற்கதிர் விழுங்கிய துகிற்கொடிப் பந்தர்
வடித்தோற் கொடும்பறை வால்வளை நெடுவயி

களக. உத்தரம் - வடபூமி.

கஅஉ-ச. உத்தரன் விசித்திரன்முதலான மன்னவர்கள், கனகவிசயர்க்குத் தானையான அரசர்.

கஅரி - எ. தமிழாற்றலைக் காண்டுமெனக் கனகவிசயர் தானையுடனே ஒத்துவர.

கக0. பாய்ந்த பண்புபோல.

ககக. காஞ்சித்தானை · எதிரூன்றியதானை.

---

[1]. "நிலத்திரைக்குங் கடற்றானை" புறநா. கள.

(பி - ம்.) * 'ஏறியாங்கவரெதிர்கொளவவரநாடுகழிந்தோங்குநீர்' † 'இராஅத் தகைப்பெருந்தானை' ‡ 'தனுத்திரன்' § காண்குவதாமென' ‖ 'வெயிற்கொடி'

ரிடிக்குரன் முரச மிழுமென் பாண்டி
கஉடு. [1] லுயிர்ப்பலி யுண்ணு முருமுக்குரன் முழக்கத்து
மயிர்க்கண் முரசமொடு மாதிர மதிரச்
† சிலைத்தோ ளாடவர் செருவேற் படக்கையர்
கறைத்தோன் மறவர் கடுந்தே ரூருநர்
வெண்கோட் டியானையர் ‡ விரைபரிக் குதிரையர்
உ00. மண்கண் கெடுத்தவிம் மாநிலப் பெருந்துகள்
களங்கொள் யானைக் கவிழ்மணி நாவும்
§ விளங்குகொடி நந்தின் வீங்கிசை நாவு
நடுங்குதொழி லொழிந்தாங் கொடுங்கியுள் செறிபத்
தாருந் தாருந் || தாமிடை மயங்கத்
உ0டி. தோளுந் தலையுந் துணிந்துவே ருகிய
சிலைத்தோண் மறவ ருடற் ¶ பொறை யடுக்கத்
தெறிபிணை மிடறிய குறையுடற் கவந்தம்
[2] ** பறைக்கட் பேய்மகள் பாணிக் காடப்
[3] பிணஞ்சுமந் தொழுகிய நிணம்படு குருதியிற்
உக0. கணங்கொள் பேய்மகள் கதுப்பிகுத் தாட
†† வடுந்தேர்த் தானை யாரிய வரசர்

கஉச. பாண்டில் - கஞ்சதாளம்.

கஉசு. மாதிரமதிர்தல் - இவை அதிரத் தானுமதிர்தல்.

கஉச-சு. முரசமுதலிய இவையிற்றோடி. கஉஅ கறைத்தோல்-கருங்கடகு.

உ0உ. கொடிநந்து - கொடியும் சங்கும் முகத்துக்கட்டுவர்போலும்; 'சங்கின்நா' என்றார், பேசுதலால்; ஒலிபற்றி.

உ0ஙு. ஒழிந்து - ஒழிய. உள்ளே துகள்செறிய.

உ0சு. உடற்பொறை- உடற்பாரம். உ0எ. எறிபிணம்-வெட்டுண்டபிணம்.

உ0அ. பேய்மகள் தாளத்துக்கு ஆட.

---

[1] கஉடு-சு. "உயிர்ப்பவியுண்ணு முருமுக்குரன்முழக்கத்து, மயிர்க்கண்முரச" (சிலப். இ: அர - அ); "கொல்வேற்றுப் பைந்தோல் சீவாதுபோர்த்த, மயிர்க்கண் முரச மோலிய கறங்க" (மதுரை. எகஉ-ங.); "உருமிடி முரசமொடி" (முருகு. கஉஎ); "ஏற்றுரி போர்த்த.....முரசு" (மணி. க; உசு - ஙக; "சாற்றிடங்கொண்ட வேற்றுரி முரசம்", "ஏற்றுரி முரசி னிறைவன் மூதூர்க்கு" (பெருங். க. ஙஅ: க00; டெ சக: கஉடு:); "ஏற்றுரிமுரசநாண" ஜீவக. உகசஉ.

[2] "பேய்க்க ணன்ன பிளிறுகடி முரசம்" பட்டினப். உஙசு.

[3] "கணங்கொள் கூளியொடு கதுப்பிகுத் தசைஇப், பிணந்தின் யாக்கைப் பேய்மகள்" பட்டினப். உடுக - சுo.

(பி - மி.) * 'இடிக்கண்' † 'சிலைக்கோளாடவர்' ‡ 'விடுபரி' § 'விளங்கொளி நந்தின்' || 'தம்மிடை' ¶ 'பொறியடுக்கத்' ** 'பறைக்குரற்பேய்' †† 'நெடுந்தேர்த்தானை'

கடும்படை மாக்களைக் கொன்று களங் * குவித்து
நெடுந்தேர்க் கொடுஞ்சியுங் கடுங்களிற் றெருத்தமும்
விடும்பரிக் குதிரையின் வெளிதும் பாழ்பட

உகடு. [1] வெருமைக் கடும்பரி யூர்வோ னுயிர்த்தொகை
யொருபக லெல்லையி னுண்ணு மென்ப
[2] தாரிய வரச ரமர்க்களத் தறிய
தூழி லாட்டிய சூழ்கழல் வேந்தன்
போந்தையொடு தொடுத்த பருவத் தும்பை

உஉ0. [3] யோங்கிருஞ் சென்னி மேம்பட † மலைய
வாய்வா ளாண்மையின் வண்டமி ழிகழ்ந்த
காய்வேற் றடக்கைக் கனகனும் விசயனு
மைம்பத் திருவர் கடுந்தே ராளரொடு
செங்குட் டுவன்றன் சினவலைப் ‡ படுதலுஞ்

உஉடு. [4] சடையின ருடையினர் சாம்பற் பூச்சினர்
பிடிகைப் பீலிப் பெரு § நோன் பாளர்
பாடு பாணியர் பல்லியத் தோளின
ராடு கூத்த ராகி யெங்கணு
மேந்துவா ளொழியத் தாந்துறை போகிய

உசுஅ. விச்சைக் கோலத்து வேண்டுவயிற் || படர்தரக்
கச்சை யானைக் காவலர் நடுங்கக்

உகடு; எருமையாகிய பரியூர்வோன் - கூற்றுவன்.
உகஅ. [5] தூழிலாட்டுவதாக.
உஉக. வாய்வாளாண்மை - வாய் வறிது இராமை.
உஉடு. உடையினர் - காஷாயமுதலிய உடையினர் = சங்கியாசிகள்.

---

[1]. உகடு - அ. "மன்னுயிர்ப் பன்மையுங் கூற்றத் தொருமையு, நின்னெடு தூக்கி யெ வென்வேற் செழிய" புறநா. கசு.

[3]. உகஉ - அ. "ஆரிய ரவறத் தாக்கிப் பேரிசைத், தொன்றுமுதிர் வடவரை வணங்குவிற் பொறித்து, வெஞ்சின வேந்தரைப் பணித்தோன் வஞ்சி" அகநா. கசுசு.

[3]. "ஓங்கிருஞ் சென்னி மேம்பட மிலைந்த" பொருந. கசடு.

[4]. உஉடு - அ. "மீனுய் வேலையை யுற்றுர் சிலர்சிலர் பசுவாய் வழிதொறு மேய்வுற்று, ஞனர் பறவையின் வடிவுற் றுர்சிலர் சிலர்நான் மறையவ ருருவாஞர், மானுர் கண்ணின மடவா ராயினர் முன்னே தங்குழல் வகிர்வுற்று, ரானுர் சிலர்சில ரையா தின்சர ணென்றுர் நின்றவ ரரியென்றுர்" (கம்ப. அக்க. சம) என்னுஞ் செய்யுள் இவ்வடிக் குடன் ஒப்புநோக்கற்பாலது.

[5]. தூழிலாட்டு - கொன்று குவித்தல்; மலைபடு. அஎ - ந.

(பி - ம்.) * 'குவித்து தூழிலாட்டிய' † 'மலைந்துவாய் வாளாண்மையின்' ‡ 'படித்தலும்' § 'தோன்பாளிற்பாடு' || 'படர்ந்தகச்சை'

* [1] கோட்டுமாப் பூட்டி வாட்கோ லாக
† வாளழி வாங்கி யதரி திரித்த
வாளே ருழவன் மறக்களம் வாழ்த்தித்
உசுரு. தொடியுடை நெடுங்கை தூங்கத் தூக்கி
முடியுடைக் கருந்தலை ‡ முந்துற வேந்திக்
[2] கடல்வயிறு கலக்கிய ஞாட்புங் கடலக
நிலங்கையி லெழுந்த சமரமுங் கடல்வணன்
றேரூர் செருவும் பாடிப் பேரிசை
உசo. முன்றேர்க் குரவை முதல்வனை வாழ்த்திப்
பின்றேர்க் குரவைப் பேயாடு பறந்தலை
[3] முடித்தலை யடுப்பிற் பிடர்த்தலைத் தாழித்
தொடித்தோட் டுடுப்பிற் றுழைஇய வூன்சோறு
மறப்பேய் வாலுவன் வயினறிந் தூட்டச்

உசுஉ. யானை எருதாக வாள் பிடிக்குங் கோலாக.

உசுக. ஆளழிவாங்கி - ஆளாகிய பேரை இறங்கவிட்டு. அதரிதிரித்த - கடாவிட்ட.

உசுரு. தொடிக்கை - பேய்க்கை. தூங்க - அசைய.

உசுசு. முந்துற - முன்னுக.

உசுள-க. கடல்வயிறு கலக்கிய போர்முதல் மூன்றும் மாயவன் செய்தன. இவன் மேலேற்றிப் பூவைநிலையாற்பாடுதல்.

உசo - சக. முன்றேர்க்குரவையிலே முதல்வனை வாழ்த்திப் பின்றேர்க்குரவையிலே ஆடுதலிற் பேய்க்குரவையாயிற்று.

உசஉ. பிடர்த்தலையாகிய தாழி.

உசச. பேய்வாலுவன் - பேய்க்குச்சோறிடு மடையன்.

---

[1]. "யானையெருத்தின் வாண்மட லோச்சி, யதரி திரித்த" புறநா. உளக.

[2]. உசுள-கூ. நிசள-ம் பக்கத்து, அ-க0-அடிகளின் கீழ்க்குறிப்பைப்பார்க்க.

[3]. "ஆண்டலை யணங்கடுப்பின், வயவேந்த ரொண்குருதி, கினத்தியிற் பெயர்பு பொங்கத், தெறலருங் கடுந்துப்பின், விறல்விளங்கிய விழுச்சூர்ப்பிற், றெடித்தோட் கை துடுப்பாக, வாடுற்ற வூன்சோறு, நெறியறிந்த கடிவாலுவ, னடியொதுங்கிப் பிற் பெயராட், படையோர்க்கு முருகயர" (மதுரை. உகூ - கூஅ); "முடித்தலை யடுப்பாகப் புனற்குருதி யுலைக்கொளீஇத், தொடித்தோட் டுடுப்பிற் றுழந்த வல்சி" புறநா. உசு.

(பி - ம்.) * 'கோட்டுமாபூட்டி' † 'வாளரிவர்ங்கியததிரிதிரித்த' ‡ 'முன்னுற வேந்தி'

உசஇ. சிறப்பூண் கடியினஞ் செங்கோற் கொற்றத்
தறக்களஞ் செய்தோ ணூழி வாழ்கென
மறக்கள முடித்த வாய்வாட் குட்டுவன்
[1] வடதிசை மருங்கின் மறைகாத் தோம்புநர்
தடவுத்தி யவ்யாத் தண்பெரு வாழ்க்கை

உரு0. காற்றா தாளரைப் போற்றிக் காமினென
வில்லவன் கோதையொடு வென்றுவினை முடித்த
பல்வேற் றுணைப் படைபல வேவிப்
பொற்கோட் டிமயத்துப் * பொருவறு பத்தினிக்
கற்கால் கொண்டனன் காவல னுங்கென்.

உசசு. வாழ்க்கையென்றது, முன்புவந்த ஆகாசசாரிகள் சொன்ன வார்த்தையை நினைந்து.

உரு0. காற்றுதாளரை நீர் போற்றிக் காமினெனச் சொல்லி.

உருச. கால்கொள்கையாவது - கடவுள் வடிவெழுதத்தொடங்குதல்.

(உருக) வில்லவன் கோதையோடே (உருஉ) படையையேவிக் (உருச) கற்செய்தலே அடிக்கொண்டான்.

உசு.— † கால்கோட்காதை முற்றிற்று.

---

1. உசஎ - கூ. "அருமறை யந்தண ராங்குளர் வாழ்வோர், பெருநில மன்ன பேணனின் கடனென்று" சிலப். உசுஎ: கoஉ-கூ.

(பீ - மீ.) * 'பொதுவறு' † 'கற்கால்கொள்காதை'

இருபத்தேழாவது

நீர்ப்படைக்காதை.



வடபே ரிமயத்து வான்றரு சிறப்பிற்
கடவுட் பத்தினிக் கற்கால் கொண்டபின்
சினவேன் மூன்பிற் செருவெங் கோலத்துக்
கனக விசயர்தங் கதிர்மூடி யேற்றிச்
செறிகழல் வேந்தன் றென்றமி ழாற்ற
லறியாது மலிந்த வாரிய மன்னரைச்
செயிர்த்தொழின் முதியோன் செய்தொழில் பெருக
வுயிர்த்தொகை * யுண்ட வொன்பதிற் றிரட்டியென்
றியாண்டு மதியு நாளுங் கடிகையு
மீண்டுநீர் ஞாலங் கூட்டி யெண்கொள
வருபெருந் தானை மறக்கள மருங்கி
னெருபக லெல்லை யுயிர்த்தொகை யுண்ட
செங்குட் டுவன்றன் † சினவேற் றுணையொடு
கங்கைப் பேர்யாற்றுக் கரையகம் புகுந்து
பாற்படு மரபிற் பத்தினிக் கடவுளை
நூற் ‡ றிறன் மாக்களி னீர்ப்படை செய்து

உ. கடவுட்பத்தினி - பத்தினியாகிய கடவுள்.

எ. செயிர்த்தொழின் முதியோன் - கூற்றுவன்.

அ - கo. [1] உயிர்த்தொகை உண்டனவாகிய ஆண்டும் மதியும் நாளும் கடிகையும் ஒன்பதிற்றிரட்டியென்று அவற்றோடே கூட்டியெண்ணை = தேவாசுர யுத்தம் பதினெட்டாண்டிலும், இராமராவண யுத்தம் பதினெட்டுமாதத்திலும், பாண்டவ துரியோதன யுத்தம் பதினெட்டு நாளிலும், செங்குட்டுவனும் கனகவிசயரும் செய்த யுத்தம் பதினெட்டு நாழிகையிலும் முடிந்தவென் றெண்ண.

(சு) மன்னரை (கஉ) உயிர்த்தொகையுண்ட (கரு) செங்குட்டுவன்.

---

1. 'இவ்வுரைக்குறிப்பு' "எண்கொண்டஞாட்பு" (சீவக. உகுடுங) என்னும் மூலத்தானும், அதற்கு, 'தேவாசுரம் இராமாயணம் மாபாரதம் என்கின்றபோர்" என்றெழுதிய உரையானும், "தேவாசுர ராமாயண மாபாரத முளவென், றேவாவுரை யோயும் படி யுளதட்பொரு ளளமே" (கலிங்க. களம். க) என்பதனாலும் அழகுற்றுப் பொருட் டொடர்புபெற்று விளங்குதல் காண்க.

(பி - ம்.) * 'உண்டனனென்பதிற்' † 'செருவேல்' ‡ 'திறமாக்கள்'

மன்பெருங் கோயிலு மணிமண் டபங்களும்
பொன்புனை பரங்கமும் புனைபூம் பந்தரு
முரிமைப் பள்ளியும் விரிபூஞ் சோலையுங்
உ0. திருமலர்ப் பொய்கையும் வரிகா ணரங்கமும்
பேரிசை * மன்னர்க் கேற்பவை பிறவு
மாரிய மன்ன ழகுற வமைத்த
தெள்ளுநீர்க் கங்கைத் தென்கரை யரங்கண்
வெள்ளிடைப் பாடி வேந்தன் புக்கு
உஅ. நீனில † மன்னர் நெஞ்சுபுக் கழித்து
‡ வானவ மகளிரின் வதுவைகூட் டயர்ந்தோ
ருலையா வெஞ்சம மூர்ந்தம ருழக்கித்
தலையுந் தோளும் விலைபெறக் கிடந்தோர்
காள்விலைக் கிளையு ணல்லம ராழுவத்து
கூ0. வாள்வினை முடித்து மறத்தொடு § முடிந்தோர்
குழிகட் பேய்மகள் குரவையிற் றொடுத்து
வழிமருங் கேத்த வாளொடு மடிந்தோர்
இளைக டம்மொடு கிளர்பூ ணுகத்து
வளையோர் மடிய மடிந்தோர் மைந்தர்
கூஉ. மலத்துத் தலைவந்தோர் வாளொடு மடியத்
தலத்தார் வாகை தம்முடிக் கணிந்தோர்
திண்டேர்க் கொடுஞ்சியொடு தேரோர் வீழப்
புண்டோய் குருதியிற் பொலிந்த மைந்தர்
மாற்றருஞ் சிறப்பின் மணிமுடிக் கருந்தலைக்

உசு. வெள்ளிடைப்பாடி - வெளியான நிலத்துப் பாசறை. [டவர்.
உசு. தெய்வமகளிரால் மாலைசூட்டப் பட்டோராவார் - வீரஞ்செய்துபட்
உள. ஊர்ந்து - அடர்ந்து.
உஎ. விலைபெற - அரசர் கண்டு நேயத்தோராம்படி.
உக. அமரழுவம் - சமரபூமிப்பரப்பு.
கூ0. வாளாற்செய்யும் வினைகளெல்லாவற்றையுஞ் செய்துமுடித்து.
கூஉ. வழிமருங்கேத்த - வழியிலுள்ளாரையேத்த.
கூக. இளைகள் - போரில் உடனின்று பட்டவர்கள்.
கூகூ-சு. உறவான வீரர் தம்மொடு மடிந்தோர்; ஸ்திரீகள்மடிய மடிந்தோர்.
கூசு. தலைத்தார் - தூசி. வாகையணிந்தோர் - மாற்றூர் புறத்தைத் தாங்கள் பெற்றவளவிலே மீண்டோர்.

(பி - ம்.) * 'மன்னற்கொப்பவை' † 'மறவர்நெஞ்சு' ‡ 'வானவர்மகளிரின்' § 'மடிந்தோர்'

சஎ. [1] கூற்றுக்கண் ணேடை வரிந்துகளங் கொண்டோர்
நிறஞ்சிதை கவயமொடு நிறப்புண் கூர்ந்து
புறம்பெற வந்த போர்வாண் மறவர்
வருக தாமென [2] வாகைப் பொலந்தோடு
பெருநா ளமயம் பிறக்கிடக் கொடுத்துத்
சநி. தோடார் போந்தை தும்பையொடு முடித்துப்
[3] பாடுதுறை முற்றிய கொற்ற வேந்த
னுடுகொண் * மார்போ டரசுவிளங் கிருக்கையின்
மாடல மறையோன் வந்து தோன்றி
வாழ்க வெங்கோ மாதவி மடந்தை
நஅ. கானற் பாணி கனக விசயர்த்த
முழித்தலே † நெரித்தது முதுநீர் ஞால
மடிப்படுத் தாண்ட வரசே வாழ்கெனப்
பகைப்புலத் தரசர் ‡ பலரீங் கறியா
நகைத்திறங் கூறினை நான்மறை யாள
நுடு. யாதுநீ கூறிய § வுரைப்பொரு ளீங்கென
மாடல மறையோன் மன்னவற் குரைக்குங்
கானலந் தண்டுறைக் கடல்விளை யாட்டினுண்
மாதவி மடந்தை வரிசுவில் பாணியோ
டேற்ற காலத் தூழ்வினை யுருத்தெழக்

சச. பெரியநாளிற் கொடுக்கும் பொழுது ஒழிய நெடும்பொழுதிருந்து கொடுத்து; 'பெருநாள்' என்றார், கொடுக்கிறநாளாதலால்.

(உசு) 'வதுவை சூட்டயர்ந்தோர்' முதல் (ஈச) 'வளையோர் மடியமடிந், தோர்' இறுதி பட்டவர்களையெண்ணி இவர்கள் மைத்தரென ஒரெண்ணுக்கி, மேல் படாதபொருது வென்றவர்களையுங்கூட்டியெண்ணி இவர்களுக்கு(சஈ-ச) வாகைகொடுத்தென்றார்.

சசு. வீரரைப்பாடும் புறத்துறையெல்லா முடித்துப் பாட்டுண்ட வேந்
சஎ. வெற்றிகொண்ட மார்போடே. [கன்.

நிசு - ச. மாற்றரசர் பலரும் அறியாத சிரிப்பின்கூறென்றது, (நிக) நெரித்ததென்றதனை. 'ஞானறியாத நகை' என்னுது 'மன்னர் பலருமறியாத' என்றான், இராசபாவத்தாலே.

---

1. 'கூற்றுக்கண்ணேடிய வெருவருபடறந்தலை'' புறநா. கசு.
2. சிலப். உசு: எ0-எக - ஆம் அடிகளையும் அவற்றின் அடிக்குறிப்பையும் பார்க்க.
3. ''பாடுதுறை முற்றிய பயன்றெரி கேள்வி'' சிறுபாண். உஉஅ.

(பி - ம்.) * 'மகளிரோடரசு' † 'ஏற்றி' ‡ 'பரிசிங்கறியாது' § 'உரையீங் கென்னென'

கூ0. கூடாது * பிரிந்து குலக்கொடி தன்னுடன்
மாட மூதூர் மதுரை புக்காங்
கிலேத்தார் வேந்த † னெழில்வா னெய்தக்
[1] கொலேக்களப் பட்ட கோவலன் மனேவி
[2] குடவர் கோவே நின்னடி புகுந்து

கூஎ. வடதிசை மன்னர் மணிமுடி ‡ பேறின
ளின்னுங் கேட்டரு ளிகல்வேற் றடக்கை
மன்னர் கோவே யான் § வருங் காரண
மாமுனி பொதியின் மலேவலங் கொண்டு
குமரியம் பெருந்துறை யாடி மீள்வே

எ0. னூழ்வினைப் பயன்கொ லுரைசால் சிறப்பின்
வாய்வாட் டென்னவன் மதுரையிற் சென்றேன்
வலம்படு தானே மன்னவன் றன்னேச்
சிலம்பின் வென்றனள் சேயிழை பென்றலுங்
[3] தாதெரு மன்றத்து மாதரி யெழுந்து

எடு. கோவலன் றீதிலன் கோமகன் பிழைத்தா
னடைக்கல மிழந்தே னிடைக்குல மாக்காள்
குடையுங் கோலும் பிழைத்த வோவென்
விடையிரு னியாமத் தெரியகம் புக்கதுக்
தவந்தரு சிறப்பிற் || கவுந்தி சிற்ற

அ0. நிவந்தோங்கு செங்கோ னீணில வேந்தன்
போகுயிர் ¶ தாங்கப் பொறைசா லாட்டி
** யென்னே டிவர்வினே யுருத்த தோவென
[4] வுண்ணு நோன்போ †† டுயிர்பதிப் பெயர்த்ததும்
பொற்றேர்ச் செழியன் மதுரை மாநகர்க்

அடு. குற்றது மெல்லா மொழிவின் றுணர்ந்தாங்

எஎ. 'பிழைத்தவோ' என்றுள், முன் பிழையாமைபற்றி.
எகூ. சிற்றம் - சிற்றத்தை.
அக. சபியாதபடி தணித்தது அவன் மரணம்.
அசு. ஊணும் மாற்றிப்போய்.

---

1. சிலப்பதி. கக. 2. "குடக்கோச் சேரலன் குட்டுவர் பெருந்தகை" மணி. உஅ: கoக.
3. தாதெருமன்றம்: சிலப். ப. சசஎ.
4. "உயிர்பதிப் பெயர்த்தமை யுமக்" (சிலப். உடு: கூஎ); "உண்ணு தோன்போ டுயிர்பதிப் பெயர்ப்புழி" மணி. கச: கூடு

(பி - ம்.) * 'பிரிந்த' † 'உயர்வானெய்த' ‡ 'ஏறினே' § 'வருகாரணமமரமுனி வனமலே' || 'கவுந்தியடிகணிவந்து' ¶ 'தாங்காப்பொறை' ** 'என்னெடுவர்வினே' †† 'உயர்பதிப் பெயர்த்ததும்'

கென்பதிப் பெயர்ந்தே னென்றுயர் * போற்றிச்
செம்பியன் மூதூர்ச் சிறந்தோர்க் † குரைக்க
மைந்தற் குற்றது மடந்தைக் குற்றதுஞ்
செங்கோல் வேந்தற் குற்றதுங் கேட்டுக்
கூ0. கோவலன் ரூதை கொடுந்துய ரெய்தி
‡ மாபெருந் தானமா வான்பொரு ளீத்தாங்
[1] இந்திர விகார மேழுடன் புக்காங்
கந்தர சாரிக ளாறைம் § பதின்மர்
பிறந்த யாக்கைப் பிறப்பற மூயன்று
கூஙி. துறந்தோர் தம்மூன் றுறவி யெய்தவுந்
துறந்தோன் மனைவி மகன்றுயர் பொரூஅ
|| ளிறந்ததுய ரெய்தி யிரங்கிமெய் விடவுங்
கண்ணகி தாதை கடவுளர் கோலத்
தண்ணலம் பெருந்தவத் [2] தாசீ வகர்மூன்
கஙூ. புண்ணிய தானம் புரிந்தறங் கொள்ளவுந்
தானம் புரிந்தோன் றன்மனைக் கிழத்தி
** நாள்விடூஉ நல்லுயிர் நீத்துமெய் விடவு
மற்றது கேட்டு [3] மாதவி மடந்தை

கூஉ. இந்திரவிகாரம் - இந்திரனுல் நிருமிக்கப்பட்ட அரங்கு.

கூக - நி. ஆறைம்பதின்மர், அவர் தாம் முன்பு பிறந்து வருகிற யாக்கை யது பிறப்பறமூயன்று அறந்தாரென்று விசேடணம்.

கஙஉ. நாள்விடூஉ - நாளைவிட்டு; வினையெச்சம்.

---

[1]. கூஉ-கூ: "அந்தர சாரிக ளாறைந்தனர் சாற்று,மிந்திர விகார மேழுடன் போதி" (சிலப். கஙி: கூ - ச): "இந்திர விகார மேழுமேத் துதலின்", "அந்தர சாரிக ளமர்த் தினி துறையு, மிந்திர விகார மெனவெழில் பெற்று" மணி. உசு: நிஙி; உஅ: கூக-எ0.

[2]. ஆசீவகம் - சமணமதத்தின் பாகுபாடுகளுள் ஒன்று; இம்மதத்தினர்க்குத்தெய் வம் 'மற்கலி' என்றும், நூல் 'தவகதிர்' என்றும் கூறுவர்; "என்றது மற்கலிதானே யிறையினி, யொன்பது வாங்கதிர் நூல்யா முடையன, மன்பெரு துண்பொரு ளேத்தி யல் பாயலை, யின்ப நிகழ்ச்சியுங் காழ்ப்பா டெனச் சொல" நீலகேசி. ஆசீவக. கூ.

[3]. கஙூ - அ. கோவலன் இறந்தமை கேட்டு மாதவி பௌத்தப்பள்ளியை யடைந்து அறவு பூண்டமை, "போதியின்கீழ் மாதவர்முன் புண்ணியத்தா னம் புரிந்த, மாதவி தன்னறவுங் கேட்டாயோ தோழி" (சிலப். உகூ. "காதலன்றன்"); "ஈங்கிம் மாதவ ருறைவிடம் புகுந்தேன், மறவண நீத்த மாசறு கேள்வி, யறவண வடிகள டிமிசை வீழ்ந்து, மாபெருந் துன்பங் கொண்டுள மயங்கிக், காதலனுற்ற கடுந் துயர்கூற.....உரவோ னருளினன்", "கோவல னிறந்தபின் கொடுந்துய ரெய்தி, மாதவி மாதவர்பள்ளியு ளடைந்தன்றும்" (மணி. உ: நிகூ - கூகூ; கஅ: எ - அ.) என்னு மிடங்களினும் கூறப்பட்டுள்ளது.

(பி - ம்.) * 'போலச்' † 'உரைப்ப' ‡ 'மாபெருந்தான மான்பொருளீத் தாங்கு' § 'பதின்மர்முன்பிறத்த' || 'இறந்துயிர்நீங்கி' ** 'நாள்வீடு'

* நற்றாய் தனக்கு நற்றிறம் படர்கேன்

கஎநி. [1] மணிமே கலையை வான்றுய ருறுக்குங்
கணிகையர் கோலங் காணுந் தொழிகெனக்
கோதைத் தாமங் குழலொடு களைந்து
போதித் தானம் புரிந்தறங் கொள்ளு
மென்வாய்க் கேட்டோ ரிறந்தோ ருண்மையி

கஎ0. னன்னீர்க் கங்கை † யாடப் போந்தேன்
மன்னர் கோவே வாழ்க வீங்கெனத்
தோடார் போந்தை தும்பையொடு மூடித்த
வாடா வஞ்சி வானவர் பெருந்தகை
மன்னவ னிறந்தபின் வளங்கெழு சிறப்பிற்

கஎஅ. ‡ றென்னவ னுடு செய்தநீங் குறையென
நீடு வாழியரோ நீணில || வேந்தென
மாடல மறையோன் மன்னவற் குரைக்குநின்
மைத்துன வளவன் கிள்ளியொடு பொருந்தா
வொத்த ¶ பண்பின ரொன்பது மன்ன

கஉ0. ரிளவர சுபொறுஅ ரேவல் ** கேளார்
வளநா டழிக்கு மாண்பின ராதலி
[2] னொன்பது குடையு மொருபக லொழித்தவன்

கஎசு. நற்றிறம்படர்கேன் - நற்றிறம் படரக்கடவேன்.

கஎநி - சு. மணிமேகலையைக் கணிகையர்கோலங் காணுதொழிகவென்று நற்றாய்க்குச் சொல்லி, துன்பத்தைச் செய்யும் கணிகையர் கோலமென்றாள், அக்கோலத்தால் தான் துன்பமுறுதலால்.

கஉ0 - கஎ0. அவர்கள் இப்படிச் செய்யா நிற்க அவரின் இறந்தோருண்டாகையாற், கங்கையாடப்போந்தேனென்றாள்.

கஎக. ஈங்கு - இப்பூமியின். கஎச. மன்னவன் - பாண்டியன்.

கஎக. தவற்றால் ஒத்தபண்பினையுடையர்.

---

[1]. கஎநி - அ. "மணிமேகலை அருந்தவப் பயித்த லல்ல தியாவதுந், திருந்தாச் செய்கைத் தீத்தொழிற் படாஅள்" மணி. உ: நிநி - எ.

[2]. "ஆர்புனை தெரிய லொன்பது மன்னரை, நேரி வாயி னிலேச்செரு வென்று" (சிலப். உஅ: கஎசு-எ); "ஆராச் செருவிற் சோழர்குடிக்குரியோ, ரொன்பதின்மர் வீழ வாயிற்புறத் நிறுத்து, நிலைச்செருவி னுற்றலை யறுத்து" பதிற். நி-ஆம்பத்துப்பதிகம்.

(பி - ம்.) * 'நற்றவர் தமக்கு நற்றவம் படர்கென' † 'காணுயதேர்கென' ‡ 'ஆடியபோந்தேன்' § 'தென்னவநன்னெடி' || 'வேந்தென்றுமாடல' ¶ 'பண்பி னொன்பது' ** 'கொள்ளார்'

பொன்புனை திகிரி யொருவழிப் படுத்தோய்
[1] பழையன் காக்குங் குழைபயி னெடுங்கோட்டு
கஉடு. வேம்புமுத றடிந்த வேந்துவாள் வலத்துப்
போந்தைக் கண்ணிப் பொறைய கேட்டருள்
[2] கொற்கையி லிருந்த * வெற்றிவேற் செழியன்
பொற்றொழிற் கொல்ல † ரிரைஞ் ஞூற்றுவ
ரொருமூலை குறைத்த திருமா பத்தினிக்
கஉ0. கொருபக லெல்லை யுயிர்ப்பலி யூட்டி
யுரை ‡ செல வெறுத்த மதுரை மூதூர்
[3] ரரைசுகெடுத் தலம்வரு மல்லற் காலைத்
தென்புல மருங்கிற் றீதுதீர் சிறப்பின்
மன்பதை காக்கு முறைமுதற் கட்டிலி
கஉடு. னிரைமணிப் புறவி யோரேழ் பூண்ட
வொருதனி யாழிக் கடவுட் டேர்மிசைக்
காலைச் செங்கதிர்க் கடவுளே தினனென
மாலைத் திங்கள் வழியோ னேதின
[4] னூழிதொ ஞாழி புலகங் காத்து
கசo. வாழ்க வெங்கோ வாழிய பெரிதென
மறையோன் கூறிய மாற்ற மெல்லா
மிறையோன் கேட்டாங் கிருந்த வெல்லையு
ளகல்வாய் ஞால மாரிருள் விழுங்கப்

கஉச - டு. பழையன் - குறுநிலமன்னன்; அவன் வேம்பு.
கஉஅ. ஈரைஞ்ஞூற்றுவர் - ஆயிரவரை.
கஉக. புகழ் எங்கும் பரக்கும்படி மிக்க மதுரை.

---

1. "பழையன்காக்குங் கருஞ்சினவேம்பின், முரசை முழுமுத மமியப் பண்ணி" (பதிற். டு-ஆம் பத்துப் பதிகம்); "மோகூர்ப், பணியா மையிற் பகைதலை வந்தென; மாகெழு தானை வம்ப மோரியர், பூவேத்தேம் புருளிய குறைத்த" (அகநா. உடுக,) 'பழையன்மோகூர்" மதுரை. டுoஅ.

2. "கொற்கையிலிருந்த வெற்றிவேற்செழியன் நங்கைக்குப் பொற்கொல்லராயிர வரைக்கொன்று களவேள்வியால் விழவெடுப் சாந்திசெய்ய நாடுமலிய மழைபெய்து தோயுந்துன்பமுநீங்கியது" இலப். உரைபெறுகட்டுரை, க.

3. மூ: இலப்பதிகாரம், சு: அ. 4. இலப்பதிகாரம், கo: கசடு.

(பீ - ம்.) * 'இளங்கோச்செழியன்' † 'ஈரைந்நூற்றுவரை' ‡ 'செலவுறுத்த'

பகல்செல * முதிர்ந்த படர்கூர் மாலைச்
கசஎடு. செந்தீப் பரந்த திசைமுகம் விளங்க
வந்திச செக்கர் வெண்பிறை தோன்றப்
பிறையோர் வண்ணம் பெருந்தகை நோக்க
விறையோன் செல்லியிற் கணியெழுந் தூரைப்போ
னெண்ணுன்கு மதியம் வஞ்சி நீங்கியது
கரிஎ. மண்ணுல் வேந்தே வாழ்கென் றேத்த
[1] நெடுங்காழ்க் கண்ட நிரல்பட நிரைத்த
கொடும்பட நெடுமதிற் † கொடித்தேர் வீதியுட்
[2] குறியவு நெடியவுங் குன்றுகண் டன்ன
வுறையுண் முடுக்க ரொருதிறம் போகி
கரிடு. ‡ வித்தகர் கைவினை விளங்கிய கொள்கைச்
சித்திர விதானத்துச் செம்பொற் பீடிகைக்
கோயி லிருக்கைக் கோமக னேறி
வாயி லாளரின் மாடலற் § கூஉ
யீளங்கோ வேந்த || நிறந்ததற் பின்னர்
கசுஅ. வளங்கெழு நன்னுட்டு மன்னவன் கொற்றமொடு
செங்கோற் றன்மை தீதின் றேறெனை
வெங்கோ வேந்தே வாழ்கென் றேத்தி
மங்கல மறையோன் மாடல னுரைக்கும்
வெயில்விளங்கு மணிப்பூண் விண்ணவர் வியப்ப

கசஎ - சு. தன்னியல்பு முதிர்ந்த மாலையாகிய செந்தீப்பரந்த மேலைத் திசை விளங்கப் பிறைதோன்ற.

கசஎ. பிறையெழுந்தபடியை. கரிக. நிரல் - ஒழுங்கு.

கரிஉ. படம் - படங்கு. படங்கை மதிலாகவுடைய வீதி.

கரிச. உறையுள் - உறைபுமிடம். கரிசு. பீடிகை - சிங்காதனம்.

கரிக. இளங்கோவேந்தர் - பட்ட ஒன்பதின்மர்.

---

[1]. "நெடுங்காழ்க் கண்டங் கோலி" (முல்லை. சச); "கண்டப் பூந்திரை காழ் முதற் கொளீஇ" பெருங். உ. ச: கஙசு.

[2]. "குறியவு நெடியவுங் குன்றுகண் டன்ன" மணி. சு: இ.அ.

(பி - மி) * 'முரஞ்சிய' † 'கொடித்தெங்கோவீதியிற்' ‡ 'வித்தகன்' § 'கூவி' || "இளந்தபின்னர்"

கசுடு. [1] வெயில்மூன் * றெறிந்த விகல்வேற் கொற்றமுங்
[2] குறுகடைப் புறவி னெடுந்துயர் தீர
வெறிதரு பருந்தி னிடும்பை நீங்க
வரிந்துடம் பிட்டோ னறந்தரு கோலுந்
திரிந்துவே முகுங் காலமு முண்டோ

களஏ. தீதோ வில்லைச் செல்லற் காலியுங்
[3] காவிரி புரக்கு நாடுகிழ வோற் † கென்
றருமறை முதல்வன் சொல்லக் கேட்டே
பெருமகன் மறையோற் பேணி யாங்கவற்
காடகப் ‡ பெருநிறை யையைந் திரட்டித்

களடு. தோடார் போந்தை வேலோன் றன்னிறை
மாடல மறையோன் கொள்கென் § றளித்தாங்
[4] காரிய மன்ன ரையிரு பதின்மரைச்
சீர்கெழு நன்னுட்டுச் செல்கவென் || றேவித்
[5] தாபத வேடத் துயிருய்ந்து பிழைத்த

கஷ0. மாபெருந் தானை மன்ன குமரர்

களச. ஐம்பது லாம்பாரம் பொன்.

களள. ஐயிருபதின்மர் - மூன்சொன்னகன்னகர்.... ..

---

1. "தூங்கெயின் மூன்றெறிந்த சோழன்" (சிலப். உகூ: "வீங்குநீர்")— "ஒன்னு ருட்குத் தின்னருங் கடுந்திறற், தூங்கெயி லெறிந்தநின் னூங்கணேர்" (புறநா. நகூ.); "வீங்குதோட் செம்பியன் சீற்றம் விறல்விசும்பிற், தூங்குமெயிலுந் தொலைத்தலால்," (பழ. சகூ); "ஒன்னு, ரோங்கெயிற் கதவ முருமுச்சுவல் சொறியுந், தூங்கெயி லெறிந்த தொடிவினங்கு தடக்கை, நாடா நல்லிசை நற்றேர்ச் செம்பியன்" (சிறுபாண். எகூ-அஉ); "தூங்கெயி லெறிந்த தொடித்தோட் செம்பியன்" (மணி. க: ச); "தேங்கு தூங்கெயி லெறிந்த வடிவுடம்" (கலிங்கத்து. இராச. களு); "வாங்குந் திருக்கொற்ற வாளொன்றின் வாய்வாய்ப்பத், தூங்கும் புரிசை துணித்த கோன்" (இராசராசசோழ னுலா, கஉ); "தூங்கு மெயிலெறிந்த சோழனும்" விக்கிரமசோழனுலா, கூ

2. புறவின் துயர்தீர்த்த குறிப்பின்விரிவை, இப்புத்தகம் சஅஉ-ஆம் பக்கத்தி னின்ள ங-ஆம் அடிக்குறிப்பிற்காண்க.

3. "காவிரி புரக்கு நாடுகிழ வோனே" பொருந. உசஅ.

4. சிலப்பதிகாரம், உசு: சகூஉ. 5. சிலப்பதிகாரம், உசு: உஉடு-கூ.

(பி - ம்.) * 'எறிந்தவியறெர்க்கொற்றக்' † 'எனவருமறை' ‡ 'பசுநிரை' § 'அளித்தாங்கு' || 'ஏவிக், கருங்கயனெடுங்கட் கவின்பெறுகாதில் விரிவெண்'

[1] சுருளிரு தாடி மருள்படி பூங்குழ
லரிபரந் தொழுகிய கெழுங்கய னெடுங்கண்
விரிவெண் டோட்டு வெண்ணகைத் துவர்வாய்ச்
சூடக வரிவளை யாடமைப் பணைத்தோள்
கஅடு. வளரிள வனமுலைத் * தளரியன் மின்னிடைப்
பாடகச் சீறடி யாரியப் பேடியோ
டெஞ்சா † மன்ன றிறைமொழி மறுக்குங்
கஞ்சுக முதல்வ ரீரைஞ் ஞூற்றுவ
ரரியிற் போந்தை பருந்தமி ழாற்ற
கஅ0. றெரியாது மலைந்த கனக விசயரை
யிருபெரு வேந்தர்க்குக் ‡ காட்டிட வேவித்
திருந்துதுயில் கொள்ளா வளவை யாங்கணும்
பரம்புநீர்க் கங்கைப் பழனப் பாசடைப்
பயிலிளந் தாமரைப் பல்வண் டியாழ்செய
கஅடு. வெயிலிளஞ் செல்வன் விரிகதிர் பரப்பிக்
குணதிசைக் குன்றத் துயர்மிசைத் தோன்றக்
குடதிசை யாளுங் கொற்ற வேந்தன்
வடதிசைத் தும்பை வாகையொடு § முடித்துத்
தென்றிசைப் || பெயர்ந்த வென்றித் தானையொடு
உ00. கிதிதுஞ்சு வியனகர் நீடுநிலை நிவந்து

கஅக. தாடி - மோவாய்.

கஅங. வெண்டோடு - சங்கினாற் செய்த காதாபரணம்.

கஅஎ. எஞ்சாமன்னர் - மறத்திறலொழியாத மன்னர்.

கஅஎ - அ இறைமொழிமறுக்குங் கஞ்சுகமுதல்வர் - மேலான வார்த்தை பொருது மறுத்துரைக்குந் தூதர்.

கஅக. அரியில்-அரிதரலில். ஆற்றல்-இவர்களெவென்று கைக்கொண்டவலி.

கஅஅ - கக. தூதர் காட்டிட வேவி.

ககஉ. கொள்ளாவளவை, கடுமைகூறிற்று.

ககஙு. கங்கையைச்சூழ்ந்த பழனம் உ00. நகர் - கோயில்.

---

[1] கஅக-கூ. பேடி: "சுரியற் முடி மருள்படி பூங்குழற், பவளச் செவ்வாய்த் தவள வாணகை, யொள்ளரி நெடுங்கண் வெள்ளிவெண் டோட்டுக், கருங்கொடிப் புருவத்து மருங்குவரை பிறைதுதற், காந்தளஞ் செங்கை யேந்திள வனமுலை, யகன்ற வல்குலத் துண் மருங்கு, விகந்த வட்டிடை யெழுதுவரிக் கோலத்து, வாணன்பேரூர் மதுரைடைத் தோன்றி. நீணில மளந்தோன் மகன்முன் ஞடிய, பேடிக் கோலத்துப் பேடி" மணி.

ங: ககக - உடு.

(பி - ம.) * 'தளரிளமின்னிடை' † 'மன்னர்க்கிறைமொழியிறுக்கும்' ‡ 'காட்ட வேவி' § 'முடித்தோன்' || 'பெயர்த்தனன்'

கதிர்செல வொழித்த * கனக மாளிகை
முத்து † நிரைக் கொடித்தொடர் முழுவதும் வளைஇய
சித்திர விதானத்துச் செய்பூங் கைவினை
யிலங்கொளி மணிநிரை யிடையிடை வகுத்த
உ0இ. ‡ விலங்கொளி வயிரமொடு பொலந்தகடு போகிய
மடையமை செறிவின் வான்பொற் கட்டிற்
புடைதிர டமனியப் பொற்கா § லமளிமிசை
[1] யிணைபுண ரெகினத் || திளமயிர் செறித்த
துணையணைப் பள்ளித் துயிலாற்றுப் படுத்தான்
உக0. கெறிந்துகளங் கொண்ட வியறேர்க் கொற்ற
மறிந்துரை பயின்ற வாயச் செவிலியர்
தோட்டுணை துறந்த துயரீங் கொழிகெனப்
பாட்டொடு தொடுத்துப் பல்பாண்டு வாழ்த்தச்
[2] சிறுகுறுங் கூனுங் குறளுஞ் சென்று
உகஇ. பெறுகதின் செல்வி பெருமகன் வந்தா
னறுமலர்க் கூந்த லுளணி பெறுகென
வமைவினை தேறன் மாந்திய கானவன்
கவண்விடு புடையூஉக் ** காவல் கைவிட
வீங்குபுன முணீஇய வேண்டி வந்த
உஉ0. †† வோங்கியல் யாணை தூங்குதுயி லெய்த
வாகை தும்பை வடதிசைச் சூடிய
வேக யாணையின் வழியோ நீங்கெனத்

உ0க. மாளிகை - அந்தப்புரம். கதிர்செலவொழித்தல் - உயர்தல்.

உ0உ. கொடித்தொடர் - சல்லியும் தூக்கும்.

உ0இ. விலங்கொளி - பக்கமோடுகிற ஒளி. பொலந்தகடு - பொற்றகடு. போகிய - ஒழுகிய.

உ0க. துயிலேப்போக்கி.

உகசு. கூந்தல் நாளொப்பணைபெறுக. என - என்று சொல்ல.

---

1. சிலப். சு: கசு; நெடுநல். கசஉ; கலி. எஉ.

2. "கூனுங் குறளு மூமுங் கூடிய குறுந்தொழி லிளைஞர்". "கூனுங் குறளுங் கொண்டன" (சிலப். உ0: களி, உஅ: நிஅ) பெருங். ப. க0சு: உநிசு - சுசு.

(பி - ம்.) * 'தமனியமாளிகை' † 'நிரைத்தொடர் முழுவதும் வளைஇச்
‡ 'விளங்கொளி.....தகடுபோக்கி மடையமை செறிவனவான பொற்றகட்டிற்'
§ 'அமளியிணை' || 'இனமயிர்' ** 'காவலன்' †† 'வாங்குநிலையாணைதூங்குதுயில்'

திறத்திறம் பகர்ந்து சேணுயர் கிதணத்துக்
குறத்தியர் பாடிய குறிஞ்சிப் பாணியும்
உஉடு. வடதிசை மன்னர் மன்னெயின் முருக்கிக்
[1] கவடி வித்திய கழுதையே ருழவன்
குடவர் கோமான் வந்தா ஞூளப்
படுமகம் பூணுய் பகடே மன்ன
ரடித்தலை நீக்கும் வெள்ளணி யாமெனுந்
உசுo. [2] தொடுப்பே ருழவ ரோதைப் பாணியுந்
* தண்ணுன் பொருநை யாடிந ரிட்ட
வண்ணமுஞ் சுண்ணமு மலரும் பரந்து
விண்ணுறை விற்போல் விளங்கிய பெருந்துறை
வண்டுண மலர்ந்த மணித்தோட்டுக் குவலை
உசுடு. முண்டகக் கோதையொடு முடித்த † குஞ்சியின்
முருகுவிரி தாமரை முழுமலர் ‡ தோயக்
குருகலர் தாழைக் கோட்டுமிசை யிருந்து
வில்லவன் வந்தான் வியன்பே ரிமயத்துப்
பல்லா னிரையொடு படர்குவிர் நீரெனக்
உசo. காவல ஞனிரை நீர்த்துறை § படீஇக்
கோவல ரூதுங் குழலின் பாணியும்
வெண்டிரை பொருத வேலை வாலுகத்துக்
குண்டுநீ ரடைகரைக் குவையிரும் புன்னை
வலம்புரி யீன்ற நலம்புரி முத்தங்

(உகஅ) காவல்கைவிடுதலாற் (உகக) புனமுண்ணவந்த (உஉo) யானை தயிலெய்தப் (உஉச) பாடிய குறிஞ்சிப்பாடலும்.

உஉஅ. பூணுய் - பூண்டல் செய்வாய். பகடே, விளி.

உஉக. வெள்ளணி - பிறந்தகாலொப்பனை. [சொல்.

உசo. தொடுப்பே ருழவர் - விளாக்கொண்டு உழுமுழவர்; ஏருழவர், ஒரு

உசக. பல்லாணிரை - வடக்கு நின்றும் கொண்டு போந்த நிரை; அவற் றோடு நீருஞ்சேர்வீர்.

உசo. படீஇ - படுத்தி. உசக. புன்னை - புன்னையிடத்தே.

---

1. பதிற். எடு; புறநா. கடு, நகஉ; பு-வெ. உழிஞை. உசு.

2. தொடுப்பு - விதைப்புமாம்; 'தொடுப்பினுயிரம் வித்திய துவியை' (மதுரை கக); "தந்துநீ ரடைகரைச் சங்குழுதொடுப்பின் முத்துவிளைகழனி' மணி. அ: - க.

(பி - ம்.) * 'தண்ணம்பொருநை' † 'குஞ்சியன்' ‡ :தேய' § 'படியாக் கோவலர்'

உசடு. கழங்காடு மகளிர் ரோதை யாயத்து
வழங்குதொடி முன்கை மலர வேந்தி
வானவன் வந்தான் வளரிள வனமுலை
தோணல * முணீஇய தும்பை போந்தையொடு
வஞ்சி பாடுது மடவீர் யாமெனு

உசுo. மஞ்சொற் † கிளவிய ரந்தீம் பாணியு
மோர்த்துட னிருந்த கோப்பெருந் தேவி
வால்வளை செறிய வலம்புரி வலனெழ
மாலைவெண் குடைக்கீழ் வாகைச் சென்னியன்
வேக யானையின் மீமிசைப் பொலிந்து

உருடு. [1] குஞ்சர வொழுகையிற் கோநகர் திர்கொள
‡ வஞ்சியுட் புகுந்தனன் செங்குட் டுவனென்.

(உசசு) 'ஏந்தி' என்னும் வினையெச்சம் (உசகூ) 'எனும்' என்னும் பெய ரெச்ச வினையோடு முடிந்தது.

உசஅ. உணீஇய = உண்ணும்படி.

(உசஅ) உண்ணும்படி (உசகூ) பாடுதுமென்க.

பாட்டால் தம்மிடத்து வருவானென்று (உஉச - ருo) குறிஞ்சி முதலாக நாலுநிலத்துப் பாணியும் (உருக) ஓர்த்து உறங்காததேவியென்றது நாலுநில அணிமையுங் கூறிற்று.

(கசுஅ) வடதிசைக்கண் தும்பைத்துறையையும் வாகைத்துறையையும் முடிவு செய்து (உருக) தன்றேவி (உருஉ) கைவளைசெறிய வலம்புரிமுழங்க (உருசு) வாகைச்சென்னியனாய் (உருச) யானைமிசைப்பொலிந்து (உருரு) திரு நகரெதிர் கொள்ளத் (கசுகூ) தானையொடு (உருசு) வஞ்சியிற் புகுந்தனனெனக் கூட்டுக.

உஎ.—நீர்ப்படைக்காதை முற்றிற்று.

---

1. "களிறுபல பூட்டி யொழுகையுய்த்த" பதிற். சச.

(பி - ம்.) * 'உண்ணியதும்பை' † 'இளியத்திம்' ‡ 'வஞ்சியிற்'

இருபத்தெட்டாவது

நடுகற்காதை.



தண்மதி யன்ன தமனிய நெடுங்குடை
மண்ணக * நிழற்செய மற்றவர் ஏந்திய
[1] நிலந்தரு திருவி னெடியோன் † றனது
வலம்படு சிறப்பின் வஞ்சி மூதூர்

இ. [2] ரொண்டொடித் தடக்கையி ணெண்மலர்ப் பலிதூஉய்
[3] வெண்டிரி விளக்க மேந்திய மகளிர்
ருலக மன்னவன் வாழ்கென் றேத்திப்
பலர்தொழ வந்த மலரவிழ் மாலை
[4] போர்வைக் கண்ணிப் பொலம்பூந் தெரியல்.

கo. ‡ வேந்துவினை முடித்த வேந்துவாள் வலத்தர்
யாணை வெண்கோ டழுத்திய மார்பு
நீள்வேல் கிழித்த நெடும்புண் § ணுகமு
மெய்கணை கிழித்த பகட்டெழி லகலமும்
வைவாள் கிழித்த மணிப்பூண் || மார்பமு

கநி. மைம்மல ருண்கண் மடந்தைய ரடங்காக்

சு. தமனிய நெடுங்குடை யென்றது காம்பும் முகப்பும் பொன்னுதலால்.

உ. மறம் = வீரம்.

---

1. "நிலந்தரு திருவி னெடியோய்" (பதிற். அஉ); "நிலந்தரு திருவி னெடியோன்" மதுரை. எசுரு.

2. இ - அ. "அகநக ரெல்லா மரும்பவிழ் முல்லை, நிகர்மலர் நெல்லொடு தூஉய்ப், பகன்மாய்ந்த மாலை". (சிலப். கூ: க-ங) என்பதையும் அதன் கீழ்க் குறிப்பையும் பார்க்க.

3. "கன்னியர் கைவிளக் கேந்தக் காவலன், பொன்னியல் வளநகர் பொலியத் தோன்றினர்" சூளா. சீய. உசச.

4. கூ-கo. "வேந்துவினை முடித்த வேந்துவாள் வலத்துப், போர்வைக் கண்ணிநி னோங்கணோர்" சிலப். உஅ: கஙஞ - ச.

(பி - ம்.) * 'நிழற்ற மறவர்' † 'மூனது' ‡ 'வேய்ந்துவினை' § 'அகமும்' || 'புய முமைம்மலர்'

[1] கொம்மை வரிமுலை வெம்மை * வேதுறீஇ
† [2] யகிலுண விரித்த வம்மென் கூந்தன்
முகிலுழை மதியத்து ‡ மூரிகருஞ் சிலைக்கீழ்
மகரக் கொடியோன் மலர்க்கணை துரந்து
உ0. சிதரரி பரந்த § செழுங்கடைத் தூது
மருந்து மாயதிம் மாலையென் ‖ றேத்த
விருங்கனித் துவர்வா யிளநிலா விரிப்பக்
கருங்கயல் பிறழுங் காமர் செவ்வியிற்
றிருந்தெயி றரும்பிய விருந்தின் மூரலு
உஇ. மாந்தளிர் மேனி ¶ மடவோர் தம்மா
லேந்துபூண் ** மார்பி னினையோர்க் களித்துக்
காசறைத் திலகக் கருங்கறை கிடந்த
மாசில்வாண் முகத்து வண்டொடு சுருண்ட
[3] குழலுங் கோதையுங் கோலமுங் காண்மார்
நூ0. [4] நிழல்கான் மண்டிலந் தம்மெதிர் நிறுத்தி
வணர்கோட்டுச் சீறியாழ் †† வாங்குபு தழீஇப்
புணர்புரி நரம்பிற் பொருள்படப் பத்தர்க்
குரல்குர லாக வருமுறைப் ‡‡ பாலையிற்

(நசு) உறீஇ (உக) ஏத்தவென்னுமெச்சம், (உசு) அரும்பியவென்னும் பெயரெச்சத் தொழிலோடு முடிந்தன.

(நூ) நெடியோன் (சு) மூதூரில் (அ) வந்த மாலை, (கூ) தெரியல் (கo) வேந்து வாள்வலத்தர் (கக - சு) மார்பை (கநி) மடந்தையர்தம் (கசு) முலையால் வேதுகொண்டு இவருடைய (உo) கட் கடையாகியதூது (உக) முன் பாசறைக்கண் நமக்கு வருத்தஞ் செய்ததேயன்றி இம்மாலைக்கண் அதற்கு மருந்து மாகியதென்று (உசு) இளையர் (உக) ஏத்த (உசு) அரும்பியமுரலையும் (உசு) அவ்விளையோர்க்கு (உநி) அம்மடவோராலே (உசு) அளிப்பதுஞ் செய்தென்க.

---

1. "கொம்மை வருமுலை வெம்மையிற்றடைஇ" (நெடுநல். நூசு); "தங்குகண் வேல்செய்த புண்களைத் தடமுலை வேதுகொண் டொற்றியுஞ், செங்களி வாய்மருத் தாட்டியீர் செம்பொனெடுங்கடை நிறமிலே" கலிங்க. கடை. நநி.

2. "அகிலுண விரித்த வம் மென் கூந்தலின்" சிறுபாண். உசூசு.

3. உசு - நo. "மாசறக் கண்ணாடி வயக்கி வண்ணமுத், தேசு மொளியுந் திகழ தோக்கி" பரி. கஉ.

4. "நிழல்கான் மண்டில தோக்கி யழல்புனை, யவிரிழை திருத்து வாள்" (பரி-உக); "நிழல்கான்மண்டிலத்து" அநுநா. எக.

(பி - ம்.) * 'வெய்துறீஇ' † 'அகிலுணவிருந்த' ‡ 'மூரிவெஞ்சிலை' § 'செங் கடைத்தூது' ‖ 'ஏத்தி' ¶ 'மடவோர்த்தமேந்து' ** 'மார்பினினியோர்க்கு' †† 'வாங்குபுடைத்தழீஇப்புரிபுரி' ‡‡ 'பாலைதுத்தங்குரலாற்றொன்முறையியக்கி யத்தின்'

றுத்தங் குரலாத் தொன்முறை யியற்கையி
கூடு. னந்தீங் குறிஞ்சி யகவன் * மகளிரின்
மைந்தர்க் கோங்கிய வருவிருந் தயர்ந்து
முடிபுற முரிஞ்சுங் கழற்காற் † குட்டுவன்
குடிபுறந் தருங்காற் றிருமுகம் போல
வுலகுதொழத் தோன்றிய மலர்கதிர் மதியம்
சுo. பலர்புகழ் ‡ மூதூர்க்குக் காட்டி நீங்க
மைந்தரு மகளிரும் வழிமொழி கேட்ப
வைங்கணை நெடுவே ளரசுவீற் றிருந்த
வெண்ணிலா முன்றிலும் வீழ்பூஞ் சேக்கையு
மண்ணீட் டரங்கமு மலர்ப்பூம் பந்தரும்
சுஙி. [1] வெண்கா லமளியும் விதானவே திகைகளுந்
தண்கதிர் மதியந் தான்கடி கொள்ளப்
படுதிரை சூழ்ந்த பயங்கெழு மாநிலத்
திடைநின் றேங்கிய நெடுநிலை மேருவிற்
கொடிமதின் மூதூர் நடுநின் றேங்கிய
ஞo. [2] தமனிய மாளிகைப் பூமணி யரங்கின்
வதுவை வேண்மாண் மங்கல மடந்தை
மதியேர் வண்ணங் காணிய வருவழி

(கூo) நிறுத்திச் (கக) தழீஇயென்னுமெச்சங்கள், (கூடு) அகவன்மகளி ரென்னும் பெயரில் அகவுதற்றொழிலோடு முடிந்தன.

(உகூ) போகத்தாற் குலைந்த குழல் முதலியன திருத்திக் காணவேண்டிக் (கூo) கண்ணுடிபார்த்து (கக) யாழைத்தழீஇக் (கூடு) குறிஞ்சியை அகவுதலைச் செய்யும் மகளிராலே (கூசு) மைந்தர்க்கு விருந்தயர்ந்தென்க.

(அ) பலர்தொழ வந்த மலரவிழ் மாலை, (உசு) இளையோர்க்கு (உடு) மட வோராலே (உச) மூரலையும் (உசு) அளித்து (கூசு) மைந்தர்க்கு (கூடு) அகவன் மகளிராலே (கூசு) விருந்துமயர்ந்து (சo) மூதூரிடத்து (சுக) மதியத்தைக் (சo) காட்டி நீங்க, அந்தமதியம் (சகூ) வெண்ணிலாமுன்றில் முதலானவற் றை (சுசு) விளக்காநிற்க (ஞஉ) அம்மதியத்தெழுச்சியை (ஞக) வேண்மாள்(ஞஉ) காண்டற்கு வருவழி (ஞo) அரங்கின்.....பெற்றன ஒருபக்கமென்க.

---

1. "விதானித்துப் படுத்த வெண்கா லமளி" பெருங். க கூஙo: சுஙக.

2. ஞo - ஞக. "விளங்கில வந்தி வெள்ளி மாடத், திளங்கோ வேண்மா ளுடனிருந் தருளி" சிலப். உடு: சo - ஞ.

(பி - ம்.) * 'மகளிர், மைந்தர்க் கோங்கிய வருவிருந்தயரமுடி' † 'குடவன்' ‡ 'மூதூர்காட்டியாங்கு'

[1] யெல்வளை மகளிர் சேந்திய * விளக்கம்
பல்லாண் டேத்தப் பரந்தன வொருசார்
நிநி. மண்கனை முழவும் வணர்கோட் டியாழும்
பண் † கனி பாடலும் பரந்தன வொருசார்
மான்மதச் சாந்தும் வரிவெண் ‡ சாந்தும்
[2] கூலமுங் கூறலுங் கொண்டன வொருசார்
வண்ணமுஞ் சுண்ணமு § மலர்பூம் பிணையலும்
சுஅ. [3] பெண்ணணிப் பேடிய சேந்தின வொருசார்
[4] பூவும் புகையு மேவிய விரையும்
தூவியுஞ் ‖ சேக்கை சூழ்ந்தன வொருசா
ராடியு மாடையு மணிதரு கலன்களுஞ்
சேடியர் ¶ செவ்வியி னேந்தின வொருசா
சுநி. ராங்கவ டன்னுட னணிமணி யரங்கம்
[5] வீங்குநீர் ஞால மாள்வோ னேறித்
[6] திருநிலைச் சேவடிச் சிலம்புவாய் புலம்பவும்
* பரிதரு செங்கையிற் படுபறை யார்ப்பவுஞ்
செங்க ணுயிரந் திருக்குறிப் பருளவுஞ்

சுநி. மணியரங்கம் - நிலாமுற்றம்.

---

1. "பஞ்சிலங்கு மல்குலார் பலாண்டுகூற" "தீழம்லர்க்கோதைதல்லார் பலாண்டிசை தீதும்பவாழ்த்த", "பங்கயமுகத்தவர்பலாண்டிசைபராவ" சூளா. தூது. சுநி; கல்யாண. கசக, உசுஎ.

2. சிலப். உஎ: உகச - ஆம் அடியையும் அதன் கீழ்க் குறிப்பையும் பார்க்க.

3. "பெண்ணவா யாணிழந்த பேடி யணியாளோ" நாலடி. உநிக.

4. மூ. "பூவும் புகையு மேவிய விரையும்" சிலப். நி: கச; கஉ: கூச; சுஅ: கநிக.

5. "வீங்குநீர் ஞால மாள்வோன்" (சிலப். உசு: கஅநி, களசு); "வீங்குநீர்ஞால மான்வோய்" சிலப். உசு. கநிநி; மணி. நி: சுக.

1. சுஎ - எநி. "திரிபுர மெரியத் தேவர் வேண்ட, வெரிமுகப் பேரம் பேவல் கேட்ப, வுமையவ ளொருதிற ஞக வோங்கிய, விமையவ ளுடிய கொடுகொட்டி யாட லும்"(சிலப். சு: சஅ-சசு); "கொட்டி கொடுவிடையோ ளுடற் றதற்குமட், பொட்டிய நர்ன்கா மெனல்" (டி சு; கச-மேற்); "படுபறை பலவியம்பப் பல்லுருவம் பெயர்த் துநீ, கொடுகொட்டி யாடுங்கால்.....கொண்டசீர் தருவாளோ" (கலி. கடவுள்); "கொட்டி யாடற் கேற்ற மொட்டிய, வுமையவ ளொருபா வாக வொருபா, விமையா தாட்டத் திறைவ ளுகி, யமையா வுட்கும் வியப்பும் விழைவும், பொலிவும் பொருந்தி நோக்கித் தொக்க, வவுண ரின்னுயி ரிழப்ப வக்களம், பொவிய வாடின னென்ப"டெ. டெ - மேற்.

(பி - ம்.) * 'விளக்கமொடு பல்யாண் டெத்தப் பரந்தனர்' † 'கனிப்பாடலும்' ‡ 'கல்வையுங்' § 'மலர்ப்பூம்' ‖ 'சேக்கைத்தந்தனர்' ¶ 'செல்லியின்' ** 'புரிதரு'

எ0. [1] செஞ்சடை சென்று திசைமுக மலம்பகும்
பாடகம் பதையாது சூடகந் துளங்காது
மேகலை யொலியாது மென்முலை * யசையாது
வார்குழை யாடாது மணிக்குழ லவிழா
துமையவ ளொருதிற ஞை வோங்கிய

எஇ. விமையவ ணுடிய † கொட்டிச் சேதம்
பாத்தரு நால்வகை மறையோர் பறையூர்க்
[2] ‡ கூத்தச் சாக்கைய ணுடலின் மகிழ்ந்தவ
னேத்தி நீங்க விருநில மாள்வோன்
§ வேத்தியன் மண்டப மேவிய பின்னர்

ஆ0. நீலன் முதலிய கஞ்சுக மாக்கண்
மாடல மறையோன் றன்னெடுந் தோன்றி
வாயி லாளரின் மன்னவற் கிசைத்தபின்
கோயின் மாக்களிற் கொற்றவற் றொழுது
தும்பை வெம் || போர்ச் சூழ்கழல் வேந்தே

அஇ. செம்பியன் மூதூர்ச் சென்றுபுக் காங்கு
[3] வச்சிர மவந்தி மகதமொடு ¶ குழீஇய
சித்திர மண்டபத் திருக்க வேந்த
னமரகத் துடைந்த வாரிய மன்னரொடு
தமரிற் சென்று தகையடி வணங்க

எஇ. கொட்டிச்சேதம் - கொடுகொட்டிக்கூத்து.

எசு - எ. இதனை, பகுத்தலரிய நான்மறையோரது பறையூரிற் கூத்தச் சாக்கையன் ஆதிதலின் மகிழ்ந்தென்க.

எகூ. வேத்தியன் மண்டபம் - அரசிருப்பாய பேரோலக்கமண்டபம்.

அசு - எ. வச்சிரம் அவந்தி மகதமொடுதிரண்ட மண்டபம் - இந்நாடு மூன்றுமுடையோர் திறையிட்ட பந்தர் தோரணவாயில் பட்டிமண்டபம், இவைகூடியமண்டபம்;.....ஆகலான், ஆகுபெயர்; பிறந்தவழிக்கூறல்.

அகூ. தமரிற்சென்று - சுற்றோசபரிவாரத்துக்குக் கடவாருடன் சென்று.

---

1. "எண்டிக்களந்துகொண்டனவென்னப், புரிந்த செஞ்சடை நிமிர்ந்து முழல" கல். உழைநின்றீரும்"—

2. சாக்கையரென்னு மொருவகைச்சாதியார் இப்பொழுதும் கூத்துநிகழ்த்தும் தொழிலையுடையராய் மலைநாட்டிலுள்ளாரென்று தெரிகின்றது.

3. அசு - எ. "வச்சிரநன்னுட்டுக், கோனிறை கொடுத்த கொற்றப் பந்தரு, மகத நன்னுட்டு வாள்வாய் வேந்தன், பகைபுறத்துக் கொடுத்த பட்டி மண்டபமு, மவந்தி வேந்தனுவந்தனன் கொடுத்த, நிவந்தோங்கு மரபிற் றேரண வாயிலும்" சிலப். இ: கூகூ-கூஅ

(பி - ம்.) * 'இயங்காது' † 'கொடுகொட்டிச்சேதம்' ‡ 'கூத்தைச்சகையோ ணுடலின்' § 'வேத்தியன் மண்டபமேறிய' || 'போர்சூழ்' ¶ 'குழீஇச்சித்திர'

கூ0. நீளம ரழுவத்து நெடும்பே ராண்மையொடு
வாளுங் குடையு மறக்களத் * தொழித்துக்
[1] கொல்லாக் கோலத் துயிருய்ந் தோரை
வெல்போர்க் கோடல் வெற்ற மன்றெனத்
தலைத்தேர்த் தானைத் தலைவற் குரைத்தனன்
கூரி. சிலைத்தா ரகலத்துச் செம்பியர் பெருந்தகை
யாங்குகின் றகன்றபி னறக்கோல் வேந்தே
யோங்குசீர் மதுரை மன்னவற் காண
† வாரிய மன்ன ரமர்க்களத் தெடுத்த
[2] சீரியல் வெண்குடைக் ‡ காம்புநனி சிறந்த
கூ00. [3] சயந்தன் வடிவிற் றலைக்கோ லாங்குக்
கயந்தலை யாணையிற் § கவிகையிற் காட்டி
யிமையச் சிமையத் திருங் || [4] குயி லாலுவத்
துமையொரு பாகத் தொருவனே வணங்கி
[5] யமர்க்கள ¶ மரசன தாகத் துறந்து
கூ0டி. [6] தவப்பெருங் கோலங் கொண்டோர் தம்மேற்

கூங. போரிடத்துப் பிடித்துக்கோடல். கூள. காண - கண்டவளவிலே.

கூ0உ. குயிலாலுவம் - இமவான்பக்கத்து ஒருபகுதி.

(கூஅ) ஆரியமன்னரென்னுந் தொகுதி யொற்றுமைபற்றிக் (கூ0க)காட்டி (கூ0ங) வணங்கிக் (கூ0டி) கொண்டோரெனச் சிலர்வினை வேறுசிலர்வினையொடு முடிந்தது.

1, "சடையின ருடையினர் சாம்பற் பூச்சினர், பிடிகைப்பீலிப் பெருந்தான்பா ளர்", "தாபத வேடத் துயிருய்ந்து பிழைத்த, மாபெருந் தானை மன்னகுமரர்", "தவப் பெருங்கோலங்கொண்டோர்" சிலப். உசுர: உஉடி - சுர; உள: களசு-அ0; உஅர: கூ0டி.

2. கூஅ - கூ. "பேரிசைமன்னர் பெயர்புறத் தெடுத்த, சீரியல் வெண்குடைக் காம்புநனிகொண்டு" சிலப். கூ: கூகள - டி.

3. "தெய்வ மால்வரைத் திருமுனியருள, வெய்திய சாபத் திந்திர சிறுவனெடி, தலைக்கோற் றானைத்துச்சாபம்", "மன்னவன் கோயி, லிந்திர சிறுவன் சயந்தனெனை" சிலப். கூ: க-ங; ககசு.

4. நீலகேசி. மொக்கலவாதச்சருக்கம் கசுஎ - ஆம் பாட்டுரையில், 'குயிலாலபுரம்' என்று ஓரிடப்பெயர் காணப்படுகின்றது.

5. "தேன்மிடைந்த தாரிளஞ் செங்களஞ் சிறந்தது" (சீவக. உஎக) என்பதை யும், "இத்துணையும் இவன் வெற்றியாதலின் இவன் களம் என்றார்" என்னும் அதன் விசேட வுரையையும், "ஒன்றி விரண்டாய்ந்து மூன்றடக்கி நான்கிலுவி, வென்று களங்கொண்ட வேல்வேந்தே" (பு—வெ. கூ: கள.) என்பதையும்பார்க்க.

6. இக்காதையின் கூஉ - ஆம் அடிக்குறிப்பைப்பார்க்க.

(பி - ம்.) * 'ஒளித்து' †.'ஆரியமாக்களமர்' ‡ 'காம்பினித்சிறந்த' § 'கவிகை காட்ட' || 'கயிலாயத்து' ¶ 'அரசாணைத்துறந்து'

கொதியழற் சீற்றங் கொண்டோன் கொற்றம்
புதுவ தென்றனன் போர்வேற் செழியனென்
றேணை மன்ன ரிருவருங் கூறிய
நீண்மொழி யெல்லா நீலன் கூறத்
ககo. தாமரைச் செங்கண் டழுனீறங் கொள்ளக்
கோமக னகுதலுங் குறையாக் கேள்வி
மாடல னெழுந்து மன்னவர் மன்னே
வாழ்கநின் கொற்றம் வாழ்கவென் றேத்திக்
கறிவளர் சிலம்பிற் றுஞ்சும் யானையிற்
ககநி. சிறுகுர னெய்தல் * வியலூ ரெறிந்தபி
[1] னர்புனை தெரிய லொன்பது மன்னரை
நேரி வாயி னிலைச்செரு வென்று
நெடுந்தேர்த் தானையொ † டிடும்பிற்புறத் திறுத்துக்
கொடும்போர் கடந்து [2] நெடுங்கட லோட்டி
கஉo. யுடன்றுமேல் வந்த வாரிய மன்னரைக்
கடும்புனற் கங்கைப் பேர்யாற்று வென்றோய்
நெடுந்தார் வேய்ந்த பெரும்படை வேந்தே

கூஅ - கoள. ஆரியமன்னர் அமர்க்களத்தில் தங்களுக்கெடுத்த குடையிற் காம்பைக் கையிலே பிடித்து ஆனைக்கழுத்திலிருத்திய ஆசிரியன் கையில் தலைக்கோலாகக் காட்டியும், குயிலாலுவமென்னும்..... ..அமர்க்களம் அரசனதாகத் துறந்தும், தவப்பெருங்கோலங் கொண்டாராயினர் தம்மேற் சீற்றங்கொண்டோன் கொற்றம் புதிதென்றான்.

ககச - நி. யானையினையுடைய வியலூர்.

ககள. நேரிவாயில் - உறையூர்த் தெற்கில்வாயிலதோரூர்.

கஉo. ஆரியமன்னரென்றது-முன்னெருகால் இவனுக்குத் தோற்றார்சிலர்.

---

[1]. ககசு - எ. "நின் மைத்துன வளவன் கிள்ளியொடு பொருந்தா, வொத்த பண்பினை ரொன்பது மன்ன, ரிளவரசு பொறுஅ ரேவல் கேளார், வளநா டழிக்கு மாண்பின ராதலி, னென்பது குடையு மொருபக லொழித்தவன், பொன்புனை திகிரி யொருவழிப் படுத்தோய்" சிலப். உள. ககள - உசு.

[2]. ககசு - உக. "மறத்துறை முடித்த வாய்வாட் டானையொடு, பொங்கிரும்பரப் பிற் கடலிபிறக் கோட்டிக், கங்கைப் பேர்யாற் றுக்கரை போகிய, செங்குட்டுவன்" (சிலப். சுo. கட்டுரை, ககo - நி); "கோடுநரல் பௌவங் கலங்க வேலிட், டிடைதிரைப் பரப்பிற் படுகட லோட்டிய, வெல்புகழ்க் குட்டுவற் கண்டோர்", "கெடலருஞ் பல்புகழ் நீலஇ நீர்புக்குக், கடலொ டிழந்த பணித்துறைப் பரதவ" (பதிற். சசு, சஅ); "மட்டலிழ்தெரியன் மறப்போர்க் குட்டுவன்.....செருச்செய் முன்பொடு முந்நீர் முற்றி யோங்குதிரைப் பௌவ நீங்க வோட்டிய, நீர்மா ணெஃக நிறத்துச் சென்றமுந்தி" (அகநா. உகஉ); புறநா: சுசுகூ - ஆம்பாட்டிஅம் இக்கருத்து வந்துள்ளது.

(பி - ம்.) * 'வீயலூர்' † 'இடும்பியாத்திறத்துக்கடம்போர்'

புரையோர் * தம்மொடு பொருந்த வுணர்ந்த
வரைச ரேறே யமைகநின் சிற்ற
கஉடு. மண்ணுள் வேந்தே † நின் [1] வா ணுட்க
[2] டண்ணுன் பொருநை மணலினுஞ் சிறக்க
வகழ்கடன் ஞால மாள்வோய் வாழி
யிகழா தென்சொற் கேட்டல் வேண்டும்
வையங் காவல் பூண்டநின் னல்யாண்
கஙo. டையைங் திரட்டி சென்றதற் பின்னு
மறக்கள வேள்வி செய்யர் தியாங்கணு
மறக்கள வேள்வி செய்வோ யாயினை
[3] வேந்துவினை முடித்த வேந்துவாள் வலத்துப்
போந்தைக் கண்ணிநி ‡ னூரங்கணேர் மருங்கிற்
கஙடு. [4] கடற்கடம் பெறிந்த காவல னுயினும்
விடர்ச்சிலை பொறித்த விறலோ னுயினு
[5] நான்மறை யாளன் செய்புட் கொண்டு
மேனிலை யுலகம் § விடுத்தோ னுயினும்
போற்றி மன்னுயிர் ‖ முறையிற் கொள்கெனக்
கசo. கூற்றுவரை நிறுத்த கொற்றவ னுயினும்
[6] வன்சொல் யவனர் வளநா டாண்டு
பொன்படு நெடுவரை புகுந்தோ னுயினு

கஉகூ. புரையோர் - உயர்ந்தோர்.

1. "நீ, நீடு வாழிய தெறிந்தகை தாழ்நீர், வெண்டலைப் புணரி யலைக்குஞ் செந்தி, னெடுவே ணிலைஇய காமர் வியன்றுறைக், கடிவளி தொகுப்ப வீண்டிய, வடிவா ழெக்கர் மணலினும் பலவே" புறநா. நிநி.

2. ஆன்பொருநை—சேரநாட்டிலுள்ள தொருநதி; இஃது ஆன்பொருந்தமெனவும் வழங்கும்; "வாழிவருபுனனீரான்பொருநை சூழ்தரும் வஞ்சியார் கோமான்" சிலப். உகூ; "மலையரையன்"—பதிற்றுப்பத்தில் நிo - ஆம் செய்யுளின் உரையைப் பார்க்க; "தண்ணன்பொருனை மணலினும் பலவே" (அகநா. கூஙo.); "தண்பொருனைப், புனல்பாயும், விண்பொருபுகழ் விறல்வஞ்சி", "தண்ணுன் பொருனை வெண்மணல்", "வஞ்சிப் புறம்நி லலைக்குங் கல்லென் பொருனை" (புறநா. ககo. ஙகூ, ஙஎஅ) "ஆன் பொருனையும் வையையும் போலும் யாற்றினும்" தொல் - கற்பு. சூ. நிo - நo.

3. கஙஙo - சு. சிலப்பதிகாரம், உஎ: கூ - கo.

4. சிலப்பதிகாரம் உஙo: அக - உ; உடு: க - உ ஆம் அடிகளையும் அவற்றின் அடிக் குறிப்பையும் பார்க்க; "குடக்கோச் சேரலன் குட்டுவர் பெருந்தகை, விடர்ச்சிலை பொறித்த வேந்தன்" மணி. உஎ: கoங - சு.

5. சிலப்பதிகாரம், உஙo: கூஙு - ஆம் அடியின் கீழ்க்குறிப்பைப்பார்க்க.

6. "வன்சொல் யவனர்வளநாடு வண்பெருங்கறை, றென்குமரியாண்ட" சிலப். உகூ.

(பி - ம்.) * 'தம்மொழி பொருந்தா துணர்ந்த' † 'நீதின்வாழ்நாடண்ணூர் பொருனை' ‡ 'ஊரங்கணூர் மருங்கும்' § 'கொடுத்தோன்' ‖ 'முறைமையிற்'

* மிகப்பெருந் தானையோ டிருஞ்செரு வோட்டி
[1] யகப்பா வெறிந்த வருந்திற லாயினு

கசுநி. முருகெழு மரபி [2] னயிரை மண்ணி
யிருகட னீரு மாடிஞே ஞயினுஞ்
சதுக்கப் பூதரை வஞ்சியுட் டந்து
மதுக்கொள் வேள்வி வேட்டோ ஞயினு
மீக்கூற் முளர் யாவரு மின்மையின்

கஙிo. யாக்கை நில்லா தென்பதை யுணர்ந்தோய்
மல்லன்மா ஞாலத்து வாழ்வோர் † மருங்கிற்
செல்வ நில்லா தென்பதை வெல்போர்த்
தண்டமி ழிகழ்ந்த வாரிய மன்னரிற்
கண்டனை யல்லையோ காவல் வேந்தே

கஙிஙி. யிளமை நில்லா தென்பதை யெடுத்தீங்
‡ குணர்வுடை மாக்க ளுரைக்கல் வேண்டா
திருவெமி ரகலத்துச் செங்கோல் வேந்தே
நரைமூதிர் யாக்கை நீயுங் கண்டனை
விண்ணே ருருவி னெய்திய நல்லுயிர்

கசுo. மண்ணே ருருவின் § மறிக்கினு மறிக்கு
மக்கள் யாக்கை பூண்ட || மன்னுயிர்
மிக்கோய் விலங்கி னெய்தினு மெய்தும்
விலங்கின் யாக்கை ¶ விலங்கிய வின்னுயிர்
கலங்களுர் நரகரைக் காணினுங் காணு

கசுஙி. [3] மாடுங் கூத்தர்போ லாருயி ரொருவழிக்
கூடிய கோலத் தொருங்குகின் றியலா தது

கசுநி. அயிரை - ஓர்யாறு. அதிலே குளித்து.
கசுஎ. சதுக்கப்பூதர் - அமராபதியிற் பூதங்கள்.
கசுசு. மீக்கூற்முளர் - மேற்பட்ட வார்த்தையையுடையவர்கள்.

---

1. "அண்ணலம் பெருங்கோட் டகப்பா வெறிந்த, பொன்புனை யுழிஞை வெல் போர்க் குட்டுவ" (பதிற். உஉ); "அகப்பா வெறிந்து பகற்றீவேட்டு" கூ-ஆம்பத்துப்பதிகம்.

2. அயிரையை ஒருமலையென்றுங் கூறுவர்; "இருகட னீரு மொருபக லாடி, யயிரை பரைஇ" (பதிற். கூ-ஆம் பத்துப் பதிகம்); "கடவு ளயிரையி னீலஇ" "உருகெழு மரபி னயிரை பரைஇ.', "உருகெழு மரபி னயிரை பரவி" கூ. எகூ, அஅ, கூo.

3. கசுஙி - சூ. "ஆடுகூத்த ரணியே போல, வேற்றே ணியொடி வந்தீரோவென' மணி. கஉ: நிக - உ.

(பி - ம்.) * 'மிகற்பெரும்' † 'மருங்கு' ‡ 'உரனுடைமாக்களுரைக்கவேண்டா' § 'மறிக்குமமிக்கும்' || 'இவ்வுயிர்மிக்கோர்' ¶ 'எய்துமிவ்வுயிர்'

[1] செய்வினை * வழித்தா யுயிர்செலு மென்பது
[2] பொய்யில் காட்சியோர் பொருளுரை யாதலி
[3] னெழுமுடி மார்பரீ யேந்திய திகிரி
களஎ. வழிவழிச் சிறக்க வயவாள் வேந்தே
யரும்பொருட் † பரிசிலே னல்லே னியானும்
பெரும்பே ரியாக்கை பெற்ற நல்லுயிர்
மலர்தலை யுலகத் [4] துயிர்போகு பொதுநெறி
[5] புலவரை யிறந்தோய் போகுதல் ‡ பொறேனென்
களஙி. வானவர் போற்றும் வழிநினைக் களிக்கு
ஈ நான்மறை § மருங்கின் வேள்வித் பார்ப்பா
|| னருமறை மருங்கி னரசர்க் கோங்கிய
பெருநல் வேள்வி நீசெயல் வேண்டு

கசூஅ. பொருளுரை - மெய்யுரை.

கசூக. எழுமுடி - எழுமுடியாற் செய்த ஆரம்.

களக. பொருள் பரிசிலாக வருவேனல்லேன்; அதுகாரணமாகச் சொல்ல லுற்றேனல்லேன்.

களகூ. பொதுநெறி - பிறந்திறப்போரெல்லாரும் போம்வழி.

களச. [5] புலவரையிறந்தோய் - அறிவெல்லை கடந்தோய்.

களஙி. வானவர் போற்றும்வழி - மோட்சமார்க்கம்.

(களஙி) அளிக்கும் (களசூ) வேள்விப்பார்ப்பானென்க.

களஅ. வேள்வி - இராசசூயம்.

---

[1]. ககூன - அ, "ஐய முண்டோ வாருயிர் போலும், செய்வினை மருங்கிற் சென்று பிறப் பெய்துதல்" மணி. சுஃ கஙிஅ - கூ.

[2]. "பொய்யில் புல்வன் பொருளுரை" மணி. உஉ: சூக.

[3]. "எழுமுடி கெழீஇய திருவெம ரகலத்து, நோன்புரித் தடக்கைச் சான்றோர் மெய்ம்மறை", "எழுமுடி கெழீஇய திருமவெம ரகலத்துப், புரையோர்", "எழுமுடி மார்பி னெய்திய சேரல்" (பதிற். கச, ககூ - சஙி.) என்பவற்றாலும், 'எழுமுடியென்பது, அரசரைவென்று அவர்கள் எழுமுடியாலுஞ் செய்ததோராரமாம்' (பதிற். கச - உரை) என்பதனாலுமுணர்க.

[4]. "உயிர்வழங்கு பெருநெறி" மணி. கஉ: சூஉ.

[5]. "புலவரை பிறந்த புகார்" மணி. இ: கஐக.

(பி - ம்.) * 'வழியே, வழிவழிசிறக்கவாய்வாள்' † 'பரிசிலல்லேன் யானுன் பெரும் பெயர்' ‡ 'போற்றேன்' § 'மரபின் வேள்வி' || 'அருமறை மரபினரசர்க் கோக்கிய'

[1] நாளைச் செய்குவ * மறமெனி னின்றே
கஅ0. கேள்வி நல்லுயிர் நீங்கினு நீங்கு
மிதுவென வரைந்து வாழுநா ளுணர்ந்தோர்
முதுநீ ருலகின் முழுவது மில்லை
வேள்விக் கிழத்தி யிவளொடுங் கூடித்
[2] தாழ்கழன் மன்னர் நின்னடி போற்ற
கஅடு. [3] ஊழியோ டூழி யுலகங் காத்து
† நீடுவா ழியரோ நெடுந்தகை யென்று
மறையோன் மறைநா ‡ வுழுது வான்பொரு
ளிறையோன் செவிசெறு வாக வித்தலின்
வித்திய பெரும்பதம் விளைந்துப தமிகுத்துத்
கஉ0. துய்த்தல் வேட்கையிற் சூழ்கழல் வேந்த
னுன்மறை மரபி னயந்தெரி நாவிற்
கேள்வி முடித்த வேள்வி மாக்களை
மாடல மறையோன் சொல்லிய முறைமையின்
§ வேள்விச் சாந்தியின் விழாக்கொள வேவி
கஉடு. யாரிய || வரசரை யருஞ்சிறை நீக்கிப்
[4] பேரிசை வஞ்சி முதூர்ப் புறத்துத்
தாழ் ¶ நீர் வேலித் தண்மலர்ப் பூம்பொழில்
** வேளா விக்கோ மாளிகை காட்டி
††நன்பெரு வேள்வி ‡‡ முடித்ததற் பின்னுட்

.....ஆரியமன்னர்க்காட்டி விடுதலீரும்.....

கஅ0. கேள்வியளவேயான நல்லுயிர்.

கஅஉ. உலகில் ஓரிடத்திலுமில்லை.

கஅஙு. வேள்விக்கிழத்தி - வேண்மாள். கஅக. பதம் - உணவு.

கஉஅ. வேளாவிக்கோமாளிகை - வேள்ஆவிக்கோமந்திரம்.

---

1. 'நாளைச்செய் வோமென் றறத்தைக் கடைப்பிடித்துச்,சாலச்செய் வாரே தலைப் படுவார் - மாலைக், கிடந்தா னெழுத லரிதான்மற் றென்கொ, லறங்காலைச் செய்யாத வாறு" அறநெறி. கூள.

2. "தாழ்கழன் மன்னர் தன்னடி போற்ற" சிலப். கo: கஉகூ.

3. சிலப்பதிகாரம், கo: கசடு - கூ.

4. கஉகூ - அ. புறநானூறு, கஙு - அவதாரிகை

(பி - ம்.) * 'அறனென் றெண்ணிற், கேள்வி யின்னுயிர் நீங்கென நீங்கும்' † 'நீவா ழியரோ' ‡ 'உழுதவான்' 'வேட்கைச் சாந்தியின் விழாக்கோள் செய்கென' || 'அரச ரருஞ்சிறை' ¶ 'நீர்க் கேணி' ** 'வேள்விக் கான மாளிகை காட்டி' †† 'நம்பெரு' ‡‡ 'முடித்தபின்னுட்'

உ00. டம்பெரு நெடுநகர்ச் சார்வதுஞ் * சொல்லியம்
மன்னவர்க் கேற்பன செய்க நீயென
வில்லவன் கோதையை விருப்புட னேவிச்
[1] சிறையோர் கோட்டஞ் † சீமின் யாங்கணுங்
கறைகெழு நாடு கறைவீடு செய்ம்மென
உ0டு. [2] வழும்பில் வேளோ டாயக் கணக்கரை
முழங்குநீர் வேலி மூதூர் ரேவி
[3] யருந்திற ‡ லரசர் முறைசெயி னல்லது
பெரும்பெயர்ப் பெண்டிர்க்குக் கற்புச் சிறவாதெனப்
பண்டையோ ருரைத்த § தண்டமிழ் நல்லுரை
உக0. பார்தொழு தேத்தும் பத்தினி யாகலி
னுர்புனை சென்னி யரசற் களித்துச்
[4] செங்கோல் வளைய வுயிர்வா ழாமை
தென்புலங் காவன் மன்னவற் களித்து
வஞ்சினம் வாய்த்தபி னல்லதை யாவதும்
உகடு. வெஞ்சினம் விளியார் வேந்த || ரென்பதை
வடதிசை மருங்கின் மன்னவ ரறியக்
குடதிசை ¶ வாழுங் கொற்றவற் களித்து
மதுரை மூதூர் மாநகர் கேடுறக்
[5] கொதியழற் சீற்றங் கொங்கையின் ** விளைத்து
உஉ0. நன்ன டுணைந்து †† ளளிர்சினை வேங்கைப்
பொன்னணி புதுநிழற் பொருந்திய நங்கையை
யறக்களத் தந்தண ராசான் பெருங்கணி

(ககூச) விழாக்கொளவேவி (உ0உ) வில்லவன்கோதையையேவியென்க.

உ0டு - சூ. அழும்பில்வேள்.....மூதூர்களிலே இப்படிச்செய்யுமென்று எவியென்க. உஉஉ. ஆசான் - புரோகிதன்.

---

1. "சிறைப்படு கோட்டஞ் சீமின் யாவதுங், கறைப்படு மாக்கள் கறைவீடு செய்ம்மின்" (சிலப். உகூ: கஉசூ - எ); "கறையோ நில்லாச் சிறையோர் கோட்டம்" (மணி. ககூ: கசூகு;) "தம்பியை முகத்துநோக்கி, பூர்ப்பிணிகோட்டஞ் சீப்பித்துறுதவ ணெண்டாட்டைப், பார்ப்பிணிகறையினீங்கப் படாமுரசறைவியென்றன்" சீவக. உகளஉ.

2. சிலப். உடு: களஎ; "விளங்குபெருந் திருவின் மான விறல்வே, ளழும்பில்" மதுரை. ஙசஉ-டு.

3. மார்தவர் நோன்பு மடவார் கற்புங், காவலன் காவ லின்றெனி னின்றுல்" மணி: உஉ: உ0அ - கூ; குறள், நிசஙு - பரிமேல். வீசேடவுரையைப்பார்க்க.

4. "செங்கோல் வளைய வுயிர்வாழார் பாண்டியர்" சிலப். உகூ.

5. சிலப்பதிகாரம், பதிகம், சஉ.

(பி - ம்.) * சொல்லி மன்னியற் கொப்பன செய்க நீரென' † 'சீமி னெங்கணும் கறைகெழு நல்லூர்க்' ‡ 'அரசன்' § 'தண்டா தல்லுரைப்' || 'என்பது' ¶ 'ஆரும்' ** 'வீழ்த்து' †† 'தளிசினை'

சிறப்புடைக் கம்மியர் தம்மொடுஞ் சென்று
மேலோர் விழைபு நூனெறி மாக்கள்
உஉடு. பால்பெற வகுத்த பத்தினிக் கோட்டத்
திமையவ ருறைபு மிமையச் செவ்வரைச்
சிமையச் சென்னித் * தெய்வம் பரசிக்
கைவினை முற்றிய [1] தெய்வப் படிமத்து
[2] வித்தக ரியற்றிய விளங்கிய கோலத்து
உஙஂ. முற்றிழை † நன்கல முழுவதும் பூட்டிப்
[3] பூப்பலி செய்து காப்புக்கடை நிறுத்தி
[4] வேள்வியும் விழாவு நாடொறும் வகுத்துக்
[5] கடவுண் மங்கலஞ் செய்கென வேவினன்
[6] வடதிசை வணக்கிய மன்னவ ரேறென்.

உ அ.—நடுகற்காதை முற்றிற்று.

உஉச. நூனெறிமாக்கள் - ‡ தபதிகள்.

(உஉச) இவர் (உஉஉ - ங) அந்தணர் முதலாயினோடு சென்று (உஉடு) வகுத்த பத்தினிக்கோயிலில் (உஉஅ) கைத்தொழின் மிகுத்த படிமத்திலே (உஙஂ) ஆபரணங்கள் பூட்டி.

உஙக. பூப்பலி - அருச்சனை. காப்பு - திக்கிற்றேவதைகள்; கடை நிறுத்தி - கடைவாயிலினிறுத்தி.

உஙஉ. வேள்வி - ஓமம். விழா - உற்சவம்.

உஙங. கடவுள் மங்கலம் - பிரதிட்டை.

.....(உஉக) நங்கையைப் (உஉடு) பத்தினிக்கோட்டத்துத்(உஉஅ) தெய்வப்படிமத்திலே (உஙஂ) கடவுள்மங்கலம் செய்கெனவேவினனென்க.

---

[1]. "கடவு ளெழுதிய படிமங் காணிய, வேட்கை" மணி. உசு: ச-டு.

[2]. "வித்தக ரியற்றிய விளங்கிய கைவினைச், சித்திரம்" மணி. ங: கசுஎ-அ; கசூ:டு-சூ.

[3]. சிலப்பதிகாரம், உச: கக-ஆம் அடிக்குறிப்பைப்பார்க்க; "கலம்பகர் பீடிகைப் பூப்பலி கடைகொள" மணி. எ: கஉஉ.

[4]. "விழவொலியும் வேள்வொலியு மாஞன் கண்டாய்" (தேவாரம், நா. மழபாடி) "சாறும் வேள்வியுந் தலைமயங்குமே" கம்ப. நாடு. இசு.

[5]. "கடவுண் மங்கலஞ் செய்த பின்னுள்" சிலப். உசு. உரைப்பாட்டுமடை.

[6]. வடதிசை வணக்கிய வானவர் பெருந்தகை" சிலப். கo: க.

(பி - ம்.) * 'தெய்வம் பாச்சக், கைவினை.....படிவத்து' † 'நன்கலன் முழுவதும்' ‡ 'சம்பந்திகள்'

இருபத்தொன்பதாவது

வாழ்த்துக்கதை.

உரைப்பாட்டுமடை.

[1] குமரியொடு வடவிமயத் தொருமொழிவைத் தலகாண்ட சேர லாதற்குத் திகழொளிஞாயிற்றுச் சோழன்மக ளீன்றமைந்தன் கொங் கர்செங் களம்வேட்டுக் [2] * கங்கைப்பேர்யாற்றுக் கரைபோகிய செங் குட்டுவன் சினஞ்செருக்கி வஞ்சியுள்வந் திருந்தகாலை வடவாரிய மன் னராங்கோர் மடவரலை மாலைசூட்டி யுடனுறைந்த விருக்கைதன்னி லொன்று †மொழிநகையினராய்த் தென்றமிழ்நாடாளுமும்வேந்தர் செரு வேட்டுப் புகன்றெழுந்து மின்றவழு மிமயநெற்றியில் விளங்குவிற் புலி கயல்பொறித்தநா ளெம்போலு முடி ‡ மன்னரீங் கில்லைபோலு மென்றவார்த்தை யங்குவாழுமாதவர்வந் தறிவுறுத்த விடத்தாங்க ணுருள்கின்ற மணிவட்டைக் குணில்கொண்டு துரந்ததுபோ லிமய மால்வரைக் கற்கடவுளா மென்றவார்த்தை யிடந்துரப்ப வாரியநாட்

குமரியினும் வடவிமயத்தினு மெனவே இடைசொல்லவேண்டாவாயிற்று.

ஒருமொழி - தன் ஆணையினை.

ஞாயிற்றுச்சோழன் - சூரியவங்கிசத்துச் சோழன்.

சோழன்மகள் மைந்தனாகிய செங்குட்டுவன்.

சினஞ்செருக்கி - ஆரியமன்னரிடத்தே சினத்தைமிகுத்து.

அதனைவிட்டு வஞ்சியிலே வந்திருந்த காலை.

ஒன்றுமொழி நகையினராய் - தம்மில் ஒத்தவார்த்தையுடனே சிரிப் பினராய்.

இடந்துரப்ப - இடத்தினின்றும் துரப்ப.

---

1. "ஆரியர் துவன்றிய பேரிசை யிமயத், தென்னங் குமரியொ டாயிடை மன் மீக்கூறநர் மறந்தபக் கடந்தே", "வடதிசை யெல்லை யிமய மாகத், தென்னங் குமரி யொ டாயிடை யரசர், முரசுடைப் பெருஞ்சமந் தழைய வார்ப்பெழ.....குட்டுவ" பதிற். கக, சசு.

2. "கங்கைப் பேர்யாற்றுக்கரைபோகிய செங்குட்டுவன்" சிலப். கo. கட்டுரை கங - ச.

(பி - ம்.) * 'கங்கையாற்றுக்கரை' † 'மொழியுந்தகை' ‡ 'மன்னரில்லைபோலு மீங்கென்ற'

டரசோட்டி யவர்முடித்தலை யணங்காகிய பேரிமயக் கற்சுமத்திப் பெயர்ந்துபோந்து நயந்தகொள்கையிற் கங்கைப்பேர் யாற்றிருந்து நங்கைதன்னை * நீர்ப்படுத்தி வெஞ்சினந்தரு வெம்மைநீங்கி வஞ்சிமா நகர்புகுந்து நிலவரசர் நீண்முடியாற் பலர்தொழு † படிமங்காட்டித் தடமுலைப் பூசலாட்டியைக் [1] கடவுண்மங்கலஞ் செய்தபின்னுட் கண்ணகி தன்கோட்டத்து மண்ணரசர் திறைகேட்புழி யலம்வந்த மதி ‡ முகத்திற் சிலசெங்கய னீருமிழப் பொடியாடிய கருமுகிறன் புறம் புதைப்ப வறம்பழித்துக் கோவலன்றன் வினையுருத்துக் குறுமகனுற் கொலையுண்ணக் காவலன்ற னிடஞ்சென்ற கண்ணகிதன் கண்ணீர் கண்டு மண்ணரசர் பெருந்தோன்ற லுண்ணீரற் றுயிரிழந்தமை மாமறையோன் வாய்க்கேட்டு [2] மாசாத்துவான் § முன்றுறப்பவு மீனக்கிழத்தி யுயிரிழப்பவு மெனைப்பெருந் || துன்பமெய்திக் காவற் பெண்டு மடித்தோழியுங் கடவுட்சாத்த னுடனுறைந்த தேவந்தியு மூடன்கூடிச் சேயிழையைக் காண்டுமென்று மதுரைமா நகர்புகுந்து முதிராமுலைப் பூசல் ¶ கேட்டாங் கடைக்கலமிழந் துயிரிழந்த விடைக் குலமக ளிடமெய்தி ** யையையவண் மகளோடும் வையையொரு வழிக்கொண்டு மாமலீ மிசையேறிக் கோமகடன் கோயில்புக்கு நங் கைக்குச் சிறப்பயர்ந்த செங்குட்டுவற்குத் திறமுரைப்பர்மன்.

அணங்கென்றூர், சிலா தெய்வமாதலால்.

'வடவாரியர்' என்றதுமுதலாக, 'கடவுண்மங்கலஞ் செய்தபின்னுள்' என்பதீறுக முன்பு செய்ததனைக் கொண்டுகூறியதாக்கி யுரைக்க.

அறம்பழித்து - தன்மதேவதையை யிகழ்ந்து; [3] "அறனென்னு. மடவோய்" என்றுவைதது. காவற்பெண்டு - செவிலித்தாய்.

முதிராமுலைப்பூசல் - ஊர்வெந்தபடி.

இஃது உரைப்பாட்டு; இதனை முன்னே மடித்தலான் மடையாயிற்று.

---

1. சிலப்பதிகாரம், உஅ: உகஙு.

2. "சோவலன் றுதை மாதவம் புரிந்தோன்" மணி. உஅ: எகு.

3. சிலப்பதிகாரம். கஅ: "தறைமலி"

(பி - ம்.) * 'நீர்ப்படுத்துவெஞ்சினவேல் வேட்கைநீங்க' † 'படிவம்' ‡ 'முகத்துச்சில' § 'தான்றுறக்கவும்.....இழக்கவும்' || 'துயரெய்தி.....மடிந்தொழியுங்' ¶ 'கண்டாங்கடைக்கல மிழந்துயிருலந்த' ** 'ஐயையிவண் மகளோடுவையை ... மலிமிசை'

தேவந்திசோல்

மூடிமன்னர் மூவருங் * காத்தோம்புந் தெய்வ
வடபே ரிமய மலையிற் பிறந்து
கடுவரற் கங்கைப் புனலாடிப் போந்த
தொடிவளைத் தோளிக்குத் தோழிநான் கண்டீர்
சோணுட்டார் பாவைக்குத் தோழிநான் கண்டீர்

† காவற்பெண்டுசோல்

மடம்படு சாயலாண் மாதவி தன்னைக்
கடம்படாள் காதற் கணவன் ‡ கைப் பற்றிக்
[1] குடம்புகாக் கூவற் கொடுங்கானம் போந்த
தடம்பெருங் கண்ணிக்குத் தாயர்நான் கண்டீர்
தண்புகார்ப் பாவைக்குத் தாயர்நான் கண்டீர்

அடித்தோழிசோல்

§ தற்பயந்தாட் கில்லைத் தன்னைப் புறங்காத்த
வெற்பயந் தாட்கு மெனக்குமோர் சொல்லில்லைக்
[2] கற்புக் || கடம்பூண்டு காதலன் பின்போந்த
பொற்றொடி நங்கைக்குத் தோழிநான் கண்டீர்
பூம்புகார்ப் பாவைக்குத் தோழிநான் கண்டீர்

"மூடிமன்னர்" மூடிமன்னர் மூவரும் காத்தோம்புமலை - தமது இலாஞ் சினையிட்டுக்காத்த மலை.

"மடம்படு"—மடம்படு சாயலாள் - கண்ணகி. கடம்படாள் - கோபித்து வெகுளாள். நீரின்மையின், குடம்புகாக்கூவலென்றார்.

"தற்பயந்தாட்கு"—சொல்லில்லை, முற்று. இவ்வாறு கற்பைக் கடனுக மேற்கொண்டி.

---

1. "குடம்புகாக் கூவல் குடிகாக்கும்" தொல். அகத்திணை. சூ. சஉ. நி. மேற்.

2. "கற்புக் கடம்பூண்ட வித்தெய்வ மல்லது, பொற்புடைத் தெய்வம் யாங்கண் டிலமால்" (சிலப். கடு: கசஎ - ச; என்பதையும் அதன் அடிக்குறிப்பையும் பார்க்க.

(பி - ம்.) * 'காத்தோம்புதெய்வ' † 'காவற்பெண்டிர்பாட்டு' ‡ 'கைபற்றி' § 'தற்பயந்தார்க் கில்லைத் தன்புறங் காத்த வெற்பயந் தார்க்கு' || 'கடன்'

தேவந்தியரற்று

செய்தவ மில்லாதேன் றீக்கனாக் கேட்டனா
ளெய்த வுணரா திருந்தேன்மற் * றென்செய்தேன்
மொய்குழன் மங்கை முலைப்பூசல் கேட்டனா
ளவ்வை யுயிர்வீவுங் கேட்டாயோ தோழீ
யம்மாமி தன்வீவுங் கேட்டாயோ தோழீ

† காவற்பெண்டரற்று

கோவலன் றன்னைக் குறுமகன் ‡ கோளிழைப்பக்
காவலன் றன்னுயிர் நீத்ததுதான் கேட்டேங்கிச்
சாவதுதான் வாழ்வென்று தானம் பலசெய்து
ம்ராசாத்து வான்றுறவுங் கேட்டாயோ வண்ணா
மாநாய்கன் § றன்றுறவுங் கேட்டாயோ வண்ணா

அடித்தோழியரற்று

‖ காதலன் றன்வீவுங் காதலிநீ பட்டதுவு
மேதிலார் தாங்கூறு மேச்சுரையுங் கேட்டேங்கிப்
போதியின்கீழ் மாதவர்முன் புண்ணியதா னம்புரிந்த
மாதவி தன்றுறவுங் கேட்டாயோ தோழீ
மணிமே கலைதுறவுங் கேட்டாயோ தோழீ

தேவந்தி ¶ ஐயையைக்காட்டியரற்றியது

** ஐயந்தீர் காட்சி யடைக்கலங் காத்தோம்ப
வல்லாதேன் பெற்றேன் மயலென் றுயிர்நீத்த
வவ்வை †† மகளிவ்டா னம்மணம் பட்டிலா
வையெயிற் றையையைக் கண்டாயோ தோழீ
மாமி மடமகளைக் கண்டாயோ தோழீ

"கோவலன்"—இவ்வாழ்வு கெடுவதாகவென்று.

"ஐயந்தீர்"—ஐயந்தீர்காட்சி - கவுந்தியடிகள். உயிர்நீத்த ஔவை - உன் மேல்வன்பால் உயிர்விட்ட மாதரி. மணம்பட்டிலா ஐயையென்றது, மாதரியிறந் தமையால் மணம்பபித்தவாரின்மையின்.

(பி - ம்.) * 'என்செய்கோ' † 'காவற்பெண்டிரரற்று' ‡ 'றீங்கிழைப்பக், காவலன் றன்னுயிர் நீத்ததுங் கேட்டஞ்சிச் சாவதிவ்' § 'தன்னுறவும்' ‖ 'காதல னீன்னுயிரும்' ¶ 'ஐயையைக்காட்டியது' ** 'கவ்வைதீர்' †† 'மகளிவ டான்மணம் பட்டிலான்'

செங்குட்டுவன் கூற்று *

என்னேயிஃ தென்னேயிஃ தென்னேயிஃ தென்னேகொல்
பொன்னஞ் சிலம்பிற் புனேமே கலேவஸேக்கை
நல்வயிரப் பொற்றேட்டு நாவலம் பொன்னிழைசேர்
மின்னுக் கொடியொன்று மீவிசும்பிற் றேன்றுமால்

செங்குட்டுவற்குக் கண்ணகியார் † கடவுணல்லணி காட்டியது.

தென்னவன் றீதிலன் றேவர்கோன் றன்கோயி
னல்விருந் தாயினு னனவன் றன்மகள்
[1] வென்வேலான் குன்றில் விளேயாட்டு ‡ யானகலே
னென்னேடுங் § தோழிமீ ரெல்லீரும் வம்மெல்லாம்

வஞ்சிமகளிர்சொல்

வஞ்சியீர் வஞ்சி யிடையீர் மறவேலான்
பஞ்சடி யாயத்தீ ரெல்லீரும் || வம்மெல்லாங்
கொங்கையாற் கூடற் பதிசிதைத்துக் கோவேந்தைச்
செஞ்சிலம்பால் வென்றுளேப் பாடுதும் || வம்மெல்லாந்
தென்னவன் றன்மகளேப் பாடுதும் வம்மெல்லாம்
[2] செங்கோல் வளேய வுயிர்வாழூர் பாண்டியரென்
றெங்கோ ¶ முறைநா வியம்பவிந் நாடடைந்த
பைந்தொடிப் பாவையைப் பாடுதும் வம்மெல்லாம்
பாண்டியன் றன்மகளேப் பாடுதும் வம்மெல்லாம் **

"என்னே"—என்னேயிஃது என்னே யென்பது செங்குட்டுவன் கூற்று. மின்னுக்கொடி - கண்ணகி.

"தென்னவன்"—முன் மாணிடையாக்கையிற்கொண்ட சிவப்பாறித் தெய்வ யாக்கை பெறுதற்குக் காரணமாயினனென்பதுபற்றி, நான் அவன்மகளென் றுரை. வென்வேலான் குன்று - செங்கோடு. நான் குன்றில்வந்து விளேயாடி வேன்; நீங்களும் அங்கே வாருங்கோளென்றுரை.

"வஞ்சியீர்"—செங்குட்டுவன் பரிகரத்தின் மகளிர்.

"செங்கோல்"—எங்கோ - சேரன். முறைநா - முறையையுடைய நா. முன் அவன் மரித்ததற்கு இவன் புகழ்ந்தடியோடு கூறினர்.

---

1. "வென்வேலான் குன்றின்மேல் விளேயாட்டு வீரும்பார்கொல்" கலி. உள.

2. "செங்கோல் வளேய வுயிர்வா ழாமைத், தென்புலங் காவன் மன்னவன்" சிலப். உஃ: உகூ - கூ.

(பி - மீ.) * 'நோதகோ, என்னேயீ தென்னேயீ தென்னேயீ தென்னேகொல்' † 'கடவுண்மங்கலங் காட்டியது. வாளேர்ச்சரவு' ‡ 'நான்' § 'தோழீ செல்லீரும்... என்று செங்குட்டுவற்கு.....காட்டியது' || 'வம்மெலாம்' ¶ 'மனிதா' ** 'வேறு ஆயத்தார்'

ஆயத்தார்சொல்

[1] வானவ னெங்கோ * மகளென்றும் வையையார்
கோனவன்றன் பெற்ற † கொடியென்றுள் - வானவனை
வாழ்த்துவோ நாமாக வையையார் கோமானை
வாழ்த்துவா ‡ டேவ மகள்

வாழ்த்து

தொல்லை வினையாற் றுயருழந்தாள் கண்ணினீர்
கொல்ல வுயிர்கொடுத்த கோவேந்தன் வாழியரோ
வாழியரோ வாழி வருபுனனீர் வையை
சூழ மதுரையார் கோமான்றன் றெல்குலமே

மலையரையன் பெற்ற மடப்பாவை தன்னை
§ நிலவரசர் நீண்முடிமே லேற்றினுன் வாழியரோ
[2] வாழியரோ வாழி வருபுன || னீ ரான்பொருநை
சூழ்தரும் வஞ்சியார் கோமான்றன் றெல்குலமே

எல்லாநாம்:
காவிரி நாடனைப் பாடுதும் பாடுதும்
பூவிரி ¶ கூந்தல் புகார்

அம்மானைவரி

வீங்குநீர் வேலி யுலகாண்டு விண்ணவர்கோ
னேங்கரணங் காத்த வுரவோன்யா ரம்மானை
யோங்கரணங் காத்த ** வுரவோ னுயர்விசும்பிற்
* றூங்கெயின் மூன்றெறிந்த சோழன்கா ணம்மானை
சோழன் புகார்நகரம் பாடேலோ ரம்மானை

"வானவன்"—எங்கோனுகியவன் பிரதிட்டித்தமையால் நாம் இவ்வாறு கூறினேம்.

எல்லாநாம் - தோழிநாம்.

"காவிரி"—கூந்தல் - கூந்தால். புகார் பாடுவேம்.

---

1. இவ்வெண்பா, சிலபிரதிகளிற் காணப்படவில்லை.
2. சிலப்பதிகாரம், உஅ: கஉசு ஆம் அடிகளின் குறிப்பைப்பார்க்க.
3. ,, உள: கசுடு-ஆம் அடிக்குறிப்பைப்பார்க்க.

(பி - ம்.) * 'மகனென்றுள்' † 'கொம்பென்றுள்' ‡ 'தேவர்மகள்' § 'நிலவரச னீண்முடி' || 'நீர்த்தண்பொருநை சூழ்தருவஞ்சி' ¶ 'சோலைப்புகார்' ** 'உர வோனெனிவிசும்பு'

[1] புறவுநிறை புக்குப் பொன்னுலக மேத்தக்
குறைவி லுடம்பரிந்த கொற்றவன்யா ரம்மானே
குறைவி லுடம்பரிந்த கொற்றவன்முன் வந்த
[2] கறவை முறைசெய்த காவலன்கா ணம்மானே
காவலன் பூம்புகார் பாடேலோ ரம்மானே

கடவரைக ளேர்பெட்டுங் கண்ணிமையா காண
[3] வடவரைமேல் வாள்வேங்கை யொற்றினன்யா ரம்மானே
வடவரைமேல் வாள்வேங்கை யேற்றினன்றிக் கெட்டுங்
குடைநிழலிற் கொண்டளித்த கொற்றவன்கா ணம்மானே
* கொற்றவன்றன் பூம்புகார் பாடேலோ ரம்மானே

அம்மனே தங்கையிற் கொண்டங் கணியிழையார்
தம்மனையிற் பாடுந் தகையேலோ ரம்மானே
தம்மனையிற் பாடுந் தகையெலாந் தார்வேந்தன்
கொம்மை வரிமுலைமேற் கூடவே யம்மானே
கொம்மை வரிமுலைமேற் † கூடிற் குலவேந்த
னம்மென் புகார்நகரம் பாடேலோ ரம்மானே

கந்துகவரி

பொன்னிலங்கு பூங் ‡ கொடி பொலஞ்செய்கோதை வில்லிட
மின்னிலங்கு மேகலை ளார்ப்பவார்ப்ப வெங்கணுந்
தென்னன்வாழ்க வாழ்கவென்று சென்று § பந் தடித்துமே
தேவராள மார்பன்வாழ்க வென்றுபந் தடித்துமே

''கடவரைகள்''—திக்கயமெட்டும்.

அம்மனே முன்னிலையாகக் கூறியது; தம்வேட்கை மிகுதியால்.

"அம்மனே''—அம்மனையாடுகின்றுரைக் கண்டபின்பு தாமும் அம்மனை யாடுகின்றூர் சொல்லியது.

ஏனம்ஒருபும் அசை. பாடி . வியங்கோள்.

''பொன்னிலங்கு''—பொன்னிலங்கு பூங்கொடி, பெயர். பந்து - தெறிக் கும்பந்து.

---

[1]. சிலப்பதிகாரம், உ0: நெஉ - ஆம் அடியின் கீழ்க்குறிப்பைப்பார்க்க.

[2]. ,, உ0: நிசு-நி ஆம் அடிகளின் கீழ்க்குறிப்பைப்பார்க்க.

[3]. "இமையவ ருறையுஞ் சிமையப் பிடர்த்தலைக், கொடுவரி யொற்றி" (சிலப். ஙு: கூஎ - அ) என்பதையும் அவற்றின் உரைகளையும்பார்க்க.

(பி - ம்.) * 'கொற்றவன் பூம்' † 'கூடிக்குலவேந்தன் வம்மென்' ‡ 'கொடிப் பொலம்' § 'பந்தடிக்குமே'

பின்னுமுன்னு மெங்கணும் பெயர்ந்துவந் தெழுந் * துலாய்
மின்னுமின் னிளங்கொடி † வியனிலத் திழிந்தெனத்
தென்னன்வாழ்க வாழ்கவென்று சென்றுபந் தடித்துமே
தேவரார மார்பன்வாழ்க வென்றுபந் தடித்துமே

தூண்னிவந்து கைத்தலத் திருந்ததில்லை நீணிலந்
தண்ணினின்று மந்தரத் தெழுந்ததில்லை தானெனத்
தென்னன்வாழ்க வாழ்கவென்று சென்றுபந் தடித்துமே
தேவரார மார்பன்வாழ்க வென்றுபந் தடித்துமே

ஊசல்வரி

வடங்கொண் மணியூசன் மேலிரீ இயையை
யுடங்கொருவர் கைகிமிர்த்தாங் கொற்றைமே லூக்கக்[1]
கடம்பு முதறடிந்த காவலனைப் பாடிக்
குடங்கைநெடுங் கண்பிறழ வாடாமோ வூசல்
‡ கொடுவிற் பொறிபாடி யாடாமோ வூசல்

[2] ஓரைவ ரீரைம் பதின்ம ருடன்றெழுந்த
போரிற் பெருஞ்சோறு போற்றுது தானளித்த
சேரன் பொறையன் மலையன் றிறம்பாடிக்
கார்செய் § குழலாட வாடாமோ வூசல்
கட்டம்பெறிந்த வாபாடி யாடாமோ வூசல்

[3] வன்சொல் யவனர் வள ‖ நாடு வன்பெருங்கற்
றெண்குமரி யாண்ட செருவிற் * கயற்புலியான்
மன்பதைகாக் குங் ¶ கோமான் மன்னன் றிறம்பாடி
மின்செ யிடைதுடங்க வாடாமோ வூசல்
வீறல் ** விற் பொறிபாடி யாடாமோ வூசல்

"பின்னு முன்னும்"—பெயர்ந்து உலாவி. மின்னுமின் - ஒளிவிடுகிற மின். நிலத்து - நிலமீது.

"தூண்னிவந்து"—கைத்தலத்திருந்ததில்லை, நிலமீதெழுந்ததில்லை; என்றது, விரைவுபற்றி.

"வடங்கொள்"—உடன்கொருவர் - ஐயையுடன் நின்றாரிலொருவர். ஒற்றை - ஒற்றைத்தாளம்.

---

1. சிலப்பதிகாரம், உஎ: ஙஙஙி - ரு ஆம் அடிகளின் குறிப்பைப்பார்க்க.
2. ,, உஙஃ: நிநி - ஆம் அடியின் குறிப்பைப்பார்க்க.
3. "வன்சொல் யவனர் வளநா டாண்டு"(சிலப். உஎ: கச்க); "நயனில் வன்சொல் யவனர்ப் பிணித்து" பதிற். உ-ஆம் பத்தின் பதிகம்.
4. சிலப்பதிகாரம், உஙஃ: ளக - ஆம் அடியைப் பார்க்க.

(பி - ம்.) * 'உராய்' † 'மீதிலத்து' ‡ 'கோவிற்' § 'குழலசைய' ‖ 'நாட்டு வடபெருங்கற்' ¶ 'செங்கோலான் றிறம்பாடி' ** 'வீற்றிறம்பாடி'

வள்ளைப்பாட்டு

தீங்கரும்பு நல்லுலக்கை யாகச் செழுமுத்தம்
பூங்காஞ்சி நீழ லவைப்பார் புகார்மகளிர்
ராழிக் கொடித்திண்டேர்ச் செம்பியன் வம்பலர்தார்ப்
பாழித் தடவரைத்தோட் பாடலே பாடல்
பாவைமா * ரார்க்கும் பாடலே பாடல்

பாடல்சான் [1] முத்தம் பவழ வுலக்கையான்
மாட மதுரை மகளிர் குறுவரே
வானவர்கோ னூரம் வயங்கியதோட் பஞ்சவன்றன்
மீனக் கொடிபாடும் பாடலே பாடல்,
வேப்பந்தார் நெஞ் † சுணக்கும் பாடலே பாடல்

சந்துரற் பெய்து தகைசா லணிமுத்தம்
வஞ்சி மகளிர் குறுவரே வான்கோட்டாற்
‡ கடந்தடுதார்ச் சேரன் கடம்பெறிந்த வார்த்தை
§ படர்ந்த நிலம்போர்த்த பாடலே பாடல்
பனந்தோ டுளங்கவரும் பாடலே பாடல்

ஆங்கு, நீணில மன்னர் நெடுவிற் || பொறையனற்
றொடோழார் வாழ்த்த றமக்கரிது சூழொளிய
வெங்கோ மடந்தையு மேத்திஞ் ணீடோழி
செங்குட் டுவன்வாழ்க வென்று.

உகூ.—**வாழ்த்துக்காதை முற்றிற்று.**

வள்ளை - உலக்கைப்பாட்டு.

---

[1]. "பவள வுலக்கை கையாற் பற்றித், தவள முத்தங் குறுவாள்" சிலப். எ: உ0.

(பி - ம்.) * 'ஆர்க்கும்' † 'உவக்கும்பாடலே' ‡ 'கடந்தடுபோர்ச்' § 'படர்ந்து' || 'பொறியாற்குத்தான்'

முப்பதாவது

வரந்தருகாதை.

[1] வடதிசை வணக்கிய * வானவர் பெருந்தகை
கடவுட் கோலங் கட்புலம் புக்கபின்
† றேவர் திகையைச் செவ்விதி னேக்கி
வாயெடுத் தரற்றிய மணிமே கலையார்
[2] யாதவ றுறத்தற் கேதுவீங் குரையெனக்
கோமகன் கொற்றங் குறைவின் றேங்கி
நாடு பெருவளஞ் சுரக்கென் றேத்தி
யணிமே கலையா ராயத் தோங்கிய
மணிமே கலைதன் வான்றுற வுரைக்கு
மிமயீ ரோதி வகைபெறு வனப்பி
னேவகை வகுக்கும் பருவங் ‡ கொண்டது
செவ்வரி யொழுகிய செழுங்கடை மழைக்க
ணவ்விய மதிந்தன வதுதா § னறிந்திலை
லொத்தொளிர் பவளத் துள்ளொளி சிறந்த
நித்தில விளநகை நிரம்பா வளவின
புணர் மூலை விழுந்தன புல்லக மகன்றது
தளரிடை ¶ நுணுகலுந் தகையல்குல் பரந்தது
குறங்கிணை திரண்டன கோலம் பொருஅ
றிறங்களர் சீறடி நெய்தோய் ** தளிரின
தலைக்கோ லாசான் பின்னுள னுகக்

க. வடதிசை வணக்கிய - வடதிசையி லுள்ளாரை வணக்கிய.

உ. கட்புலம் புகுகை - கண்ணு றிவிற்கு வெளிப்படுகை.

சு. விழுந்தன-நேராகவெழுந்தனவில்லை. புல்லகம் - புல்லப்படுகிறமார்பு.

கஅ. ஆபரணம் பொருவென்றது, இளமையால்.

கக. அடிதளிர் நெய்தோய்த்தன்மையாயினை.

உ0. தலைக்கோலாசானென்றது, நட்டுவனை.

---

1. "வடதிசை வணக்கிய மன்னவ ரேறென்" சிலப். உஅ: உசு.

2. "மணிமேகலை துறவுங் கேட்டார்யோ தோழீ" சிலப். உசு. "காதலன்"

(பி - ம்.) * 'மன்னவர்' † 'தேவந்திசையைச்' ‡ 'கொண்டிலசெவ்வரி'
§ 'அறிந்திலவொத்து' || 'மூலையுருத்தன' ¶ 'துடங்கினதகை' ** 'தளிரன'

குலத்தலை மாக்கள் கொள்கையிற் * கொள்ளார்
யாது நின்கருத் தென்செய் கோவென
மாதவி நற்றாய் மாதவிக் குரைப்ப
வருக † வென் மடமகண் மணிமே கலையென்
உரு. [1] உருவி லாள னொருபெருஞ் சிலையொடு
விரைமலர் வாளி வெறுநிலத் தெறியக்
[2] கோதைத் தாமங் குழலொடு கலைந்து
போதித் தானம் புரிந்தறம் படுத்தன
ளாங்கது கேட்ட வரசனு நகரமு
கூ0. [3] மோங்கிய நன்மணி யுறுகடல் வீழ்த்தோர்
தம்மிற் றுன்பந் தானனி யெய்தச்
செம்மொழி மாதவர் சேயிழை நங்கை
தன்னுற வெமக்குச் ‡ சாற்றின ளென்றே
யன்புறு நன்மொழி யருளொடுங் கூறினர்
கூரு. பருவ மன்றியும் பைந்தொடி நங்கை
§ திருவிழை கோல நீங்கின ளாதலி
னரற்றினை னென்றுங் கரசற் குரைத்தபிற்

உ0–உக. பின்னுளளைக் - சிரமஞ்செய்து முடியாமையாலே தலைக்கோற் சரம்பெறுந் தன்மையில்லை; ஆதலால், குலத்தலைமாக்கள் கொள்ளாமைக் கின்றாரில்லை.

உரு - சு. இவளாலே தவசிகளையும் சயிக்க நினைத்திருந்த காமன் கையற வென்க.

கூ0 - கூக. வீழ்த்தோர் தம்மையொப்ப.

கூஉ. செம்மொழிமாதவர் - தவம்படுத்தின சங்கத்தாரான் அறவண வடிகள். சேயிழை - மணிமேகலை.

கூரு. துறவுசொல்லுதல் - வைராக்கியஞ்சொல்லுதல்.

(நி) யாதவதிறத்தற் கேதுவீங் குரையெனச் (கூ) சொல்லுகின்றாள், (கூசு) திருவிழைகோலம் நீங்கினபடியாலே (கூஎ) அரற்றினேனென்றாள்.

---

1. "உருவி லாள னொருபெருங் கருப்புவில்" சிலப். உ: சக.

2. "கோதைத் தாமங் குழலொடு களைந்து, போதித் தானம் புரிந்தறங் கொள்ளவும்" சிலப். உள: கஎ-அ.

3. "கூ0 - கூக. அரும்பெறன் மாமணி, யோங்குதிரைப் பெருங்கடல் வீழ்த்தோர் போன்று, மைய னெஞ்சமொடு" மணி. உ: எஉ - சு.

(பி - மீ.) * 'கொள்ளாளியாது' † 'னன்மகண்மணிமேகலையெனவுருவிலாளன்' ‡ 'சாற்றினி தொன்றே, யன்புட னன்மொழி யருளுடன் கூறினள், பருவ மன்றிப்' § 'திருவீழ்கோலம்'

[1] குரற்றலைக் கூந்தல் குலைந்துபின் வீழத்
[2] * துடித்தனள் புருவந் துவரிதழ்ச் செவ்வாய்
மடித்தெயி றரும்பினள் வருமொழி மயங்கின
டிருமுகம் † வியர்த்தனள் செங்கண் சிவந்தனள்
கைவிட் டோச்சினள் கால்பெயர்த் தெழுந்தனள்
பலரறி வாராத் தெருட்சியண் மருட்சிய
ருலறிய நாவின ளுயர்மொழி ‡ கூறித்
தெய்வமுற் றெழுந்த தேவந் திகைதான்
கொய்தளிர்க் குறிஞ்சிக் கோமான் றன்மூன்
கடவுண் மங்கலங் காணிய வந்த
§ மடமொழி நல்லார் மாணிழை யோரு
[3] ளரட்டன் செட்டித னுயிரைழை யீன்ற
விரட்டையம் பெண்க ளிருவரு மன்றியு
[4] மாடக மாடத் தரவணைக் கிடந்தோன்
[5] || சேடக் குடும்பியின் சிறுமக ளீங்குளண்
மங்கல மடந்தை ¶ கோட்டத் தாங்கட்
செங்கோட் டியாவரைச் சேணுயர் சிலம்பிற்
பிணிமுக நெடுங்கற் பிடர்த்தலை நிரம்பிய

கூஅ. குரற்றலைக் கூந்தல்-கொத்துக்களைத் தன்னிடத்திலேயுடையகூந்தல்.

சடு. தெய்வமுற்று - தெய்வமேறி.

சகூ - டுஉ. அரட்டன்செட்டி .....மாகிய.....கைக்கொண்டு...குடும்பத்தையுடையான் ; திருவடிபிடிப்பான்.

டுகூ. மங்கலமடந்தை - [6] மங்கலாதேவி

டுசு. செங்கோடு - செவ்விதானகோடு.

டுடு. பிணிமுகநெடுங்கல் [முளம்பின்முகம் ; இது வில்முகம்.]

---

1. "குரற்றலைக் கூந்தற் குடசம் பொருந்தி" (சிலப். கச: அள); "குரற்றலைக் கூத்தல் குலைத்துபின் வீழ" மணி. அ: கசு.

2. கசு-சடு. "தெய்வமுற்றேனவிதயம்...உணர்ந்தோரே" சிலப். ப. அசு.

3. சகூ-டுஐ = சிலப். கூ: கஉ-கக.

4. சிலப். உசு: சுஉ-ஆம் அடியின் குறிப்பைப்பார்க்க.

5. சிலப், கூ: கசுடு.

6. மங்கலா தேவியென்றது, கண்ணகியை; மங்கலாபுரம் அல்லது மங்களூரென்பது இத்தேவி காரணமாகவந்த பெயரென்பர்.

(பி - ம்.) * 'துடித்தனபுருவம்' † 'லியர்த்தனசெங்கண் சிவந்தனகை' ‡ 'கூறினடெய்வ' § 'வடமொழி' || 'சேடக்குடும்பியன் சிறுமகளங்கு', 'சேடக்குடுமியன்' ¶ 'பீடத்தாங்கட்'

வணிகமம் பலவுள வாங்கவை யிடையது
கடிப்பகை * நுண்கலுங் கவிரிதழ்க் குறுங்கலு
[1] மிடிக்கலப் பன்ன விழைந்துகு நீரு
முண்டோர் சுணையத னுள்புக் காடினர்
சுஎ. பண்டைப் பிறவிய ராகுவ ராதலி
னுங்கது † கொணர்ந்தாங் காயிழை கோட்டத்
தோங்கிருங் கோட்டி ‡ யிருந்தோ யுன்கைக்
குறிக்கோட் டகையது கொள்கெனத் தந்தை
[2] னுறித்தாழ் கரகமு முன்கைய தன்மே
சுஙி. கதிரொழி காலுங் கடவுட் டன்மை
முதிரா தந்நீர் முத்திற மகளிரைத்
தெளித்தனை § யாட்டினிச் சிறுகுறு மகளி
[3] ரொளித்த பிறப்பின ராகுவர் காணுய்
பாசண் டன்யான் பார்ப்பனி தன்மேன்
ஏ0. மாடல || மறையோய் வந்தே னென்றலு
மன்னவன் விம்மித மெய்தியம் மாடலன்
றன்முக நோக்கலுந் தானனி மகிழ்ந்து
கேளிது ¶ மன்னு கெடுகநின் றீயது
[4] மாலதி யென்பாண் மாற்றுள் குழவியைப்
ஏஙி. பால்சுரந் தூட்டப் பழவினை யுருத்துக்
கூற்றுயிர் கொள்ளக் குழவிக் கிரங்கி

நிஎ. கடிப்பகை நுண்கல் - வெண்சிறுகடுகுபோன்ற நுண்ணி யகல். கவி ரிதழ்க் குறுங்கல் - முருக்கம்பூப்போன்ற நிறத்தையுடையகுறியகல்.

நிஅ. இடிக்கலப்பன்ன - மாவைக்கரைத்தாலொத்த. இழைந்துகு.....

சுக. ஆயிழை கோட்டம் - மங்கலாதேவிகோயில்.

சுஉ. கோட்டி - கோயில்வாயில்.

சுடு-சுஎ. சந்திராதித்தருள்ள அளவும் அதன் கடவுட்டன்மையொழியாது.

சுசு - அ. உண்கையதாகிய கரகத்துநீரை இம்மூவர் பெண்கள்மேலும் தெளித்தறியென்று தெய்வஞ்சொல்லுதலும்.

---

1. சிலப். சு: கசசு; "இடியினுங் கொடியினு மயங்கி" (சீவக. கசுசு); "இழை யினுங் கொடியினு மிடியினும் பிணங்கி" பெருங். க. ருஉ: சசு.

2. சிலப். கூ0: கூ; "உறித்தாழ்ந்த கரகமு முரைசான்ற முக்கோலும்" கலி. கூ.

3. "ஒளித்த பிறப்புவந் துற்றதை யாதவின்" சிலப். கூ0: கூஎ.

4. எச - அஎ. சிலப். சு: நி-சுஎ ஆம் அடிகளே இப்பகுதியுடன் ஒப்பிடுக.

(பி - ம்.) * 'நனுகலுங் கவரிதழ் குறுகலும்', 'நுணுகலும்' † 'கொணர்த்தங்கு' 'இருந்தோயினைகைக் குறிக்கோட டகையது' ‡ 'ஆட்டிச் சிறிய மகளிரொளித்த பிறப்பு முணர்குவர் காணுய்' || 'மறையோன்' ¶ 'மன்னே'

யாற்றுத் தன்மைய ளாகஞ * ரெய்திப்
பாசண் டன்பாற் [1] பாடு கிடந்தாட்
காசில் குழவி யதன்வடி வாகி
அ0. வந்தன னன்னீ வான்றுய ரொழிகெனச்
செந்திறம் புரிந்தோன் செல்ல னீக்கிப்
பார்ப்பனி தன்னெடு † பண்டைத் தாய்பாற்
[2] காப்பியத் தொல்குடிக் கவின்பெற வளர்ந்து
தேவந் திகையைத் தீவலஞ் செய்து
அரு. நாலீ ராண்டு நடந்ததற் பின்னர்
மூவா விளநலங் காட்டியென் கோட்டத்து
நீவா வென்றே நீங்கிய சாத்தன்
மங்கல மடந்தை கோட்டத் தாங்க
‡ ணங்குறை மறையோ னுகத் தோன்றி
கூ0. யுறித்தாழ் § கரகமு மென்கைத் தந்து
குறிக் || கோள் கூறிப் போயினன் வாரா
னுங்கது கொண்டு போந்தே னுதலி
¶ னீங்கிம் மறையோ டன்மேற் றோன்றி
யங்நீர் தெளி ** யென் றறிந்தோன் கூறினன்
கூரு. மன்னர் கோவே மடந்தையர் தம்மேற்
றெளித்தீங் †† கறிகுவ மென்றவன் றெளிப்ப
வொளித்த பிறப்புவந் துற்றதை யாதலிற்
புகழ்ந்த காதலன் போற்றூ வொழுக்கி
னிகழ்ந்ததற் கிரங்கு மென்னையு நோக்கா
க00. யேதி னன்னுட் டியாருமி லொருதனிக்
காதலன் றன்னெடு சுடுந் ‡‡ துய ருழந்தா
யான்பெறு மகளே யென்றுணைத் தோழீ

கூசு - எ. நீரை அப்பெண்கண்மேலே தெளித்தலும், கழிந்த பிறப்பு வந்து உற்றது அவர்க்கு.

(கூஅ) 'புகழ்ந்தகாதலன்' என்னுஞ் சொன்முதலாக (க0கூ) 'மாதே வாராய்' என்னுந்துணையும் கண்ணகிதாய்கூற்று.

---

1. பாடுகிடத்தல் - வரங்கிடத்தல்; "பாசண்டச்சீ சாத்தற்குப் பாடுகிடந்தாஞக்கு" (சிலப். கூ: கடி); 'பன்னு ளாயினும் பாடு கிடப்பேன்' மணி. கஅ: கடிஅ.

2. காப்பியக்குடியென்பது சீகாழிக்குத் தென்கிழக்கிலுள்ளதோரூர்.

(பி - ம்.) * 'எய்துபாசாண்டன்' † 'பண்டை மரபாற்' ‡ 'நங்குல மறையோ னுகித்' § 'கரக மென்கை' || 'கோட்கூறிப்' ¶ 'நீங்கியமனோயோடன்' ** 'என வறிந்தோன்' †† 'அறிகுவன்' ‡‡ 'துயரெய்தியயான்'

வான்றுயர் நீக்கு மாதே வாரா
யென்னே டிருந்த விலங்கிழை நங்கை
கo நி. தன்னே டிடையிருட் டணித்துய ருழந்து
* போனதற் கிரங்கிப் புலம்புறு நெஞ்சம்
யானது பொறேஎ னென்மகன் † வாராய்
வருபுனல் வையை வான்றுறைப் பெயர்ந்தே
னுருகெழு மூதூ ரூர்க்குறு மாக்களின்
ககo. வந்தேன் கேட்டேன் மணியிற் காணே
னெந்தா யிளையா யெங்கொளித் தாயோ
வென்றுங் காற்றி ‡ யினைந்தினைந் தேங்கிப்
பொன்றா ழகலத்துப் § போர்வெய் யோன்முன்
குதலைச் செவ்வாய்க் குறுந்தொடி மகளிர்
ககநி. ‖ முதியோர் மொழியின் முன்றி னின்றழத்
¶ தோடலர் போந்தைத் தொடுகழல் வேந்தன்
மாடல மகறியோன் றன்முக நோக்க
மன்னர் கோவே வாழ்கென் றேத்தி
முந்நூன் மார்பன் முன்னிய துரைப்போன்
கஉo. [1] மறையோ னுற்ற வான்றுயர் நீங்க
வுறைகவுள் வேழக் கையகம் புக்கு
வானோர் வடிவம் பெற்றவன் பெற்ற
காதலி தன்மேற் காதல ராதலின்
மேனிலை யுலகத் தவருடன் போகுந்

(கoஎ) 'என்னேடிருந்த' ஆதி (கoள) 'என்மகன்வாராய்' இறுதியாகக் கோவலன்மாதாவார்த்தை.

(கoஅ) 'வருபுனல் வையை வான்றுறைப் பெயர்ந்தேன்' என்பதுமுதலாக (ககக) 'எங்கொளித்தாயோ' என்பதீறுக மாதாவார்த்தை.

ககo. குதலை - இளமொழி.

கஉக. உறை கவுள் - மதந்துளிக்கின்றகவுள்.

கஉஉ. வானோர்வடிவம் பெற்றவன் - கோவலன்.

கஉக. காதலி - கண்ணகி.

---

[1]. கஉo - உஉ. இச்செய்தி, "மறையோன் றன்னைப், பாகுகழித் தியாங்கணும் பறைபட வருஉம், வேகயானை வெம்மையிற் கைக்கொள, வொய்யெனத் தெழித்தாங் குயர்பிறப் பாளனைக்,கையகத் தொழித்ததன் கையகம் புக்கு...அடக்கிய கருணைமறவ" (சிலப். கநி: சடு - நிக) என்பதனாலும் விளங்கும்.

(பி - ம்.) * 'போந்ததற்கிரங்கிப்' † 'வாரான், வருபுனல் வையை வாவறைப் பெயர்ந்தே, யுருகெழு' ‡ 'இனைந்துளைந்தேங்கி' § 'போர்வேந் தன்முன்'. ‖ 'முதிராமொழி' ¶ 'தோடார்'

கஉரு. தாவா நல்லறஞ் செய்திலர் தமரு
லஞ்செஞ் சாய * லஞ்சா தணுகும்
வஞ்சி மூதூர் மாநகர் மருங்கிற்
பொற்கொடி தன்மேற் பொருந்திய காதலி
னற்புளஞ் சிறந்தாங் † கரட்டன் செட்டி
கஙஂ. மடமொழி நல்லாண் மனமகிழ் சிறப்பி
[1] னுடன்வயிற் றோரா யொருங்குடன் றோன்றின
ராயர் மூதுமக ளாயிழை தன்மேற்
போய பிறப்பிற் பொருந்திய காதலி
னுடிய குரவையி னரவணைக் கிடந்தோன்
கஙரு. சேடக் ‡ குடும்பியின் சிறுமக ளாயின
ணற்றிறம் புரிந்தோர் பொற்படி யெய்தலு
மற்புளஞ் சிறந்தோர் பற்றுவழிச் சேறலு
[2] மறப்பயன் விளைதலு மறப்பயன் விளைதலும்
§ பிறந்தவ ரிறத்தலு மிறந்தவர் பிறத்தலும்
கசஂ. [3] புதுவ || தன்றே தொன்றியல் வாழ்க்கை
[4] யானே னூர்ந்தோ னருளிற் றோன்றி
மாநிலம் விளக்கிய மன்னவ னுதலிற்
செய்தவப் பயன்களுஞ் சிறந்தோர் படிவமுங்
கையகத் தனபோற் கண்டனை யன்றே

கஉ-ங - ஙக. காதலராகையாலே அறஞ்செய்திலர் ; அதனாற் காதலியாகிய அஞ்செஞ்சாயல் அஞ்சாதணுகும் வஞ்சிமூதூரிற் பிறந்தார்.

கஙஉ - ரு. ஆடியகுரவையின்பயத்தால் திருவடிபிடிப்பான் குலத்திற் பிறந்தாள் மாதரி.

ஆதலால்,

கஙசு. பொற்படி - பொன்னுலகம்.

கஙள. அற்புளம் - அன்புடையவுள்ளம். பற்றுவழிச்சேறல் - பூமியிற் பற்றுள்ளவிடத்தேபிறத்தல்.

---

[1]. சிலப்பதிகாரம், கஂ: உஉள.

[2]. " பிறந்தோர் றிறத்தலு மிறந்தோர் பிறத்தலு, மறந்தரு சால்பு மறந்தரு துன்பமும்" மணி. உகி: ஙஙு - உஂ.

[3]. "புதுவ தன்றே புலனுடை மாந்திர்" (கலி. உஉ); "புதுவ தன்றிவ் வுலகத்தியற்கை" புறநா. எசு.

[4]. கசக-உ. "செஞ்சடை வானவ னருளினில் விளங்க, வஞ்சித் தோன்றிய வானவ" சிலப். உசு: ஙஅ - ஙு.

(பி - ம்.) * 'அகலா தணுகும்', 'அருகாதணுகும்' † 'அருட்டன்' ‡ 'குடும்பிான்' § 'பிறந்தவர் சாதலு மிறந்தவர்' || 'அன்றே யொன்றியல்'

கசநி. [1] யூழிதோ றூழி யுலகங் காத்து
நீடுவா ழியரோ நெடுந்தகை யென்ற
மாடல மறையோன் றன்னெடு மகிழ்ந்து
பாடல்சால் சிறப்பிற் * பாண்டிநன் னுட்டுக்
கலிகெழு கூடல் கதழொரி மண்ட
கநி0. முலைமுகந் திருகிய மூவா மேனிப்
[2] பத்தினிக் கோட்டப் படிப்புறம் வகுத்து
நித்தல் விழாவணி நிகழ்கென் றேவிப்
[3] பூவும் புகையு மேவிய விரையுந்
தேவந் திகையைச் செய்கென் றருளி
கநிஇ. வலமுறை மும்முறை வந்தனன் வணங்கி
[4] யுலக மன்னவ னின்றேன் முன்ன
ரருஞ்சிறை நீங்கிய [1] வாரிய மன்னரும்
பெருஞ்சிறைக் கோட்டம் [2] பிரிந்த மன்னருங்
† [3] குடகக் கொங்கரு [4] மாளுவ வேந்தரும்
கசூ0. கடல்சூ ‡ ழிலங்கைக் [5] கயவாகு வேந்தனு
மெந்நாட் டாங்க § ணிமைய வரம்பனி
னன்னுட் செய்த நாளணி வேள்வியில்
வந்தீ கென்றே வணங்கினர் வேண்டத்
தந்தேன் வரமென் றெழுந்த || தொருகுர

கநிக. படிப்புறம் - அர்ச்சனைபோகம்.

கநிஅ. சிறைக்கோட்டம் பிரிந்தமன்னர் - பண்டேவஞ்சியிற் சிறைகிடந்த மன்னர்.

கசூஉ - கூ. வேள்வியில் வரவேண்டுமென்றூர்.

---

1. சிலப். உரு: கஅக - உ-ஆம் அடிகளின் குறிப்பைப் பார்க்க.

2. 'பத்தினிக் கோட்டமுஞ் சமைத்து, நித்தல் விழாவணி நிகழ்வித் தோனே' சிலப். உரைபெறு கட்டுரை, சா; பக்கம், கூ0:

3. சிலப். உஅ: சுக - ஆம் அடியின் குறிப்பைப் பார்க்க.

4. கநிசூ - சூ0. "அதுகேட்டுக், கொங்கிளங் கோசர் தங்கணைட டகத்து, நங் கைக்கு விழவொடு சாந்தி செய்ய, மழை தொழி லென்னும் மாறுதாயிற்று", "அது கேட்டுக், கடல்சூ ழிலங்கைக் கயவாகு வென்பான், நங்கைக்கு, நாட்பலி பீடிகைக் கோட்டமுந் துறுத்தாங்கு, அரந்தைகெடுத்து வரந்தரு மிவளென, ஆடித் திங்க ளகவையி னுங்கோள், பாடி விழாக்கோள் பன்முறை யெடுப்ப, மழைவீற் றிருந்து வளம்பல பெருகிப், பிழையா விளையு ணாடா யிற்று" சிலப். உரைபெறுகட்டுரை; பக்கம், கூ0.

(பி - ம்.) * 'பாண்டியன் றன்னுட்டு' † 'குடகருங் கொங்கரும்' ‡ 'இலங் கைக் காவல் வேந்தன்' § 'இமையவர் திம்மி னன்னுட் செய்த நாளணி வேள்வியுள்' || 'ஓர்குரல்'

ககூடி. லாங்கது கேட்ட வாசனு மாசரு
மோங்கிருந் தானைய மூரையோ டேத்த
வீடுகண் டவர்போன் மெய்ந்நெறி விரும்பிய
மாடல மறையோன் றன்னொடுங் கூடித்
[1] தாழ்கழன் மன்னர் தன்னடி போற்ற
களo. [2] வேள்விச் சாலையின் வேந்தன் போந்தபி
னியாளுஞ் * சென்றே னென்னெதி ரெழுந்து
தேவந் திகைமேற் றிகழ்ந்து தோன்றி
வஞ்சி மூதூர் மணிமண் டபத்திடை
நுந்தை தாணிழ லிருந்தோய் நின்னை
களடு யரைசுவீற் றிருக்குந் திருப்பொறி யுண்டென்
றுரைசெய் தவன் † மே லுருத்து நோக்கிக்
கொங்கவிழ் நறுந்தார்க் கொடித்தேர்த் தானைச்
செங்குட் டுவன்றன் செல்ல னீங்கப்
பகல் ‡ செல் வாயிற் படியோர் தம்மு
கஅo. னகலிடப் § பார மகல நீக்கிச்
சிந்தை செல்லாச் சேணெடுந் தூரத்
தந்தமி ழின்பத் || தரசாள் வேந்தென்
றென்றிற முரைத்த விமையோ ரிளங்கொடி
தன்றிற முரைத்த தகைசா னன்மொழி

களo. யாகசாலைக்கண் அரசன்போந்தபின்.

களக. யானென்றது, இளங்கோவடிகளை.

களகூ. ஆதித்தன்றோன்றுகிற குணக்காகிய திக்கினுலே பேருடைய குண வாயில். படிமமென்றது பூதம்; அது கடைகுறைந்து படியெனநின்று அதனை யுடையோர்க்குப் படியோராயிற்று.

(களக) 'வஞ்சிமூதூர்' என்றதுமுதலாக (கஅஉ) 'அந்தமி ழின்பத் தரசாள் வேந்து' என்பதீறுக இளங்கோவடிகள் தெய்வஞ்சொன்னதனைக் கொண்டு கூறினர்.

களச - அடி. நுந்தையாகிய சேரலனிடத்தே நீயிருக்க, ஒருநிமித்திகன் வந்து நின்னைப்பார்த்து அரசுவீற்றிருக்கும் இலக்கணமுண்டென்று சொல்ல,

---

1. "தாழ்கழன் மன்னர் தின்னடி போற்ற" சிலப். உஎ: கஅச.

2. களo - அக. "குணவாயிற் கோட்டத் தரசுறைந் திருந்து, குடக்கோச் சேர வினங்கோ வடிகள்" (சிலப். பதி. க-உ) என்பதையும் அதன் உரைகள் முதலிய வற்றையும் பார்க்க; பக்கம், டு, கஉ, கங.

(பி - மி.) * 'சென்றே னெதிரேன்றெழுந்து' † 'மேற்கருத்து நோக்கிய' ‡ 'செய்வாயிற்' § 'பாரமகன்று போந்துநிந்தை' || 'அரசாயினை வேந்தென வென்'

கஅநி. தெரிவுறக் கேட்ட திருத்தகு நல்லீர்
பரிவு மிடுக்கணும் பாங்குற * நீங்குமின்
றெய்வந் தெளிமின் றெளிந்தோர்ப் பேணுமின்
பொய்யுரை யஞ்சுமின் புறஞ்சொற் போற்றுமி
னூனூண் டுறமி னுயிர்க்கொலை நீங்குமின்
ககூ0. ஈனஞ் செய்ம்மின் றவம்பல தாங்குமின்
செய்ந்நன்றி கொல்லன்மின் றீநட் பிகழ்மின்
பொய்க்கரி போகன்மின் பொருண்மொழி நீங்கன்மி
னறவோ ரவைக்கள மகலா தணுகுமின்
பிறவோ ரவைக்களம் பிழைத்துப் பெயர்மின்
ககூநி. பிறர்மனை யஞ்சுமின் பிழையுயி ரோம்புமி
னறமனை காமி னல்லவை கடிமின்
[1] கள்ளுங் களவுங் காமமும் பொய்யும்
வெள்ளைக் கோட்டியும் விரகினி லொழிமி
[2] னிளமையுஞ் செல்வமும் யாக்கையு நிலையா
உ00. வுளநாள் வரையா தொல்லுவ தொழியாது
[3] செல்லுந் தேவத்துக் குறுதுணை தேடுமின்
மல்லன்மா ஞாலத்து வாழ்வீ ரீங்கென்.

கூ0.—வரந்தருகாதை முற்றிற்று.

என்தமையனுகிய செங்குட்டுவனிருக்க இவ்வாறு முறைமைகெடச் சொன்னு யென்று அங்கிமித்திகனை வெகுண்டுநோக்கிச் செங்குட்டுவனுக்குத் துன்பம் வாராதபடி குணவாயிலிடத்துத் துறந்திருக்கின்ற கடவுளர்முன்வந்து இராச் சியபாரத்தை விட்டுநீங்கி மோட்சமாகிய இராச்சியத்தை ஆளக்கடவ வேந்த னல்லையோவென்று முன்பினிகழ்ந்ததும் மேல் நிகழ்வதுமாகிய என்றிற முரைத்த இமையோரிளங்கொடி தன்றிறமுரைத்த கதையைத் தெரிவுறக்கேட்ட திருத்தகுநல்லீரெனக்கூட்டுக.

கஅஅ. புறஞ்சொற் சொல்லாதபடி பரிகரியின்
ககூஉ. பொருண்மொழி - மெய்வார்த்தை.
ககூநி. பிழையுயிர் - மரிக்கிறவுயிர். ககூசு. அறமனை - மனையறம்.
ககூஅ. வெள்ளைக்கோட்டி - பயனிலுரைக்கோட்டி ; கோட்டிதவிர்மின்.
உ0ஈ. உள்ளநாள் [4] வீழ்நாள் படாமை இயலுமதனைக் கைவிடாது.
உ0உ. மல்லன்மா ஞாலத்துவாழ்வீ ரீங்கென்.....

சிலப்பதிகார அரும்பதவுரை முற்றிற்று.

---

1. "கள்ளும் பொய்யுங் கமாமுங் கொலையு, முள்ளக் களவுமென் றுரவோர் துறந்தவை" மணி. உச: எஎ - அ.
2. "இளமையுநில்லா யாக்கையுநில்லா, வளமிய வான்பெருஞ் செல்வமு நில்லா" மணி. உஉ; ககூடி - சூ.
3. "தன்னெடு செல்வது வேண்டி னறஞ்செய்க" நான்மணி. கஇ.
4. "வீழ்நாள் படாஅமை நன்றுற்றி னஃதொருவன், வாழ்நாள் வழியடைக்குங் கல்" குறள், ஙஅ

(பி - ம்.) * 'நீங்குதிர்'

கட்டுரை.

[1] முடியுடை வேந்தர் முரவு ருள்ளுங்
* குடதிசை யாளுங் கொற்றங் குன்று
வார மார்பிற் † சேரகுலத் துதித்தோ
[2] ரறனு மறனு மாற்றலு மவர்தம்
நி. பழவிறன் மூதூர்ப் ‡ பண்புமெம் படுதலும்
விழவுமலி § சிறப்பும் விண்ணவர் வரவு
மொடியா வின்பத் தவருறை நாட்டுக்
குடியின் செல்வமுங் கூழின் பெருக்கமும்
வரியுங் குரவையும் விரவிய கொள்கையிற்
கo. ¶ புறத்துறை மருங்கி னறத்தொடு பொருந்திய
மறத்துறை முடித்த வாய்வாட் டானையொடு
[3] பொங்கிரும் பரப்பிற் கடல்பிறக் கோட்டிக்
[4] ** கங்கைப் பேர்யாற் றுக்கரை போகிய
†† செங்குட் டுவனே டொருபரிசு நோக்கிக்
கூ. கிடந்த வஞ்சிக் காண்ட ‡‡ முற்றிற்று.

மூன்றாவது
வஞ்சிக்காண்டம் முற்றிற்று.

---

[1]. மு. சிலப்பதிகாரம், ப. உசுஎ, நிகூ.

[2]. சு - அ. " " " "

[3]. கக - நி. "கொடும்போர் கடந்து தெடுங்கட லோட்டி, யுடன்றுமேல் வந்த வாரிய மன்னரைக், கடும்புனற் கங்கைப் பேர்யாற்று வென்றோய்" (சிலப். உஅ: ககூ - உக) என்பதையும் அதன் அடிக்குறிப்பையும் பார்க்க.

[4]. "கங்கைப் பேர்யாற்றுக் கரைபோகிய செங்குட்டுவன்" சிலப். பக்கம், நிஎசு.

(பி - ம்.) * 'குடகருங்கண்டுகொற்றங்' † 'சேரர்குலத்து' ‡ 'பண்புண்டாதலும்' § 'சிறப்பின் வானவர்வரவுமொழியா' || 'குடியுங்கூழின் பெருக்கமுமவர் தம்வரியும்' ¶ 'புறத்திறை மருங்கிற்...பொருந்திய மறத்துறைமுடித்த' ** 'கங்கையாற்றுக்கரை' †† 'செங்குட்டுவனோடொருபரிசு நோக்கி' ‡‡ 'முற்றும்'

நூற்கட்டுரை

குமரி வேங்கடங் குணகுட கடலா
மண்டிணி மருங்கிற் றண்டமிழ் வரைப்பிற்
செந்தமிழ் கொடுந்தமி ழென்றிரு பகுதியி
னைந்திணை மருங்கி னறம்பொரு ளின்ப
நி மக்க டேவ ரெனவிரு சார்க்கு
மொத்த மரபி ஞெழுக்கொடு புணர
வெழுத்தொடு புணர்ந்தசொல் லகத்தெழு பொருளே
யிழுக்கா யாப்பி னகனும் புறனு
மவற்று வழிப்படூஉஞ் செவ்விசிறந் தோங்கிய
கo பாடலு மெழாலும் பண்ணும் பாணியு
மரங்கு விலக்கே யாடலென் றனைத்து
மொருங்குடன் றழீஇ யுடம்படக் கிடந்த
வரியுங் குரவையுஞ் சேதமு மென்றிவை
தெரிவுறு வகையாற் செந்தமி ழியற்கையி
கநி 1 லாடிகன் னிழலி னீடிருங் குன்றங்
காட்டி வார்போற் கருத்துவெளிப் படுத்து
மணிமே கலைமே லுரைப்பொருண் முற்றிய
சிலப்பதிகா முற்றும்.

சிலப்பதிகாரம் முற்றிற்று.

---

